ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ணசகாயம்

ஸ்ரீமகாபாகவதம்.

நெல்லிநகர் - அருளாளதாசரென்னும்

மதுரகவி

வரதராஜஐயங்காரருளியது.

இஃது

திரிசிரபுரம் - மகாவித்துவான்

கோவிந்தப்பிள்ளை அவர்களாலும்

பசங்கிப்பேட்டை

இலட்சுமணப்பிள்ளை அவர்களாலும்

பார்வையிடப்பட்டு.

புங்கத்தூர் - கந்தசாமிமுதலியாரவர்களால்

சென்னை:

ஸ்ரீவரகூஷாமிர்த அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1885.

முதற் புத்தகம்.

Coppy-Right (Reserved.)

𑌶𑍍𑌰𑍀

𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

𑌭𑌾𑌗𑌵𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍.

[illegible]

𑌵𑍇𑌦𑌃 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌶𑍍𑌚 𑌬𑍋𑌧𑌨𑌃. 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌾𑌹-
𑌸𑍍𑌰𑍇 𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌨𑌾𑌂 𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑍇. 𑌶𑍍𑌰𑍀𑌪𑌤𑍇𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌨𑌾-
𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍. 𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑍈𑌶𑍍𑌚 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌪𑌞𑍍𑌚𑌪𑌾𑌤𑌕𑌨𑌾-
𑌶𑌨𑌮𑍍. 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍𑌸𑌾𑌰𑍀𑌤𑍇 𑌕𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌮𑍍. 𑌵𑌿-
𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌭𑌾𑌗𑌵𑌤𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌶𑌤𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌕𑌮𑍍- 𑌸𑌾𑌰𑍀𑌤𑌾𑌵𑌦𑍍-
𑌵𑌿𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌤𑌾𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌪𑌯𑍋𑌭𑌿𑌰𑌾𑌟𑍍. 𑌪𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌭𑌾𑌗-
𑌵𑌤𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌮𑍍. 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌸𑌂𑌖𑍍𑌯𑌾-
𑌤𑌂 𑌹𑌰𑌿𑌵𑌰𑍍𑌣𑌨𑌮𑍍- 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌿𑌤𑌾 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌾 𑌪𑌞𑍍𑌚𑌾-
𑌶𑌤𑍍𑌤𑍇𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍. 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌕𑍇 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌪𑍍𑌰𑌕𑌾-
𑌶𑌿𑌤𑌮𑍍. 𑌅𑌨𑌨𑍍𑌤𑌶𑍍𑌲𑍋𑌕𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌹𑌰𑌿𑌸𑌂𑌸𑍍𑌤𑌵𑌮𑍍. 𑌶𑌾-
𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌿𑌰𑍍𑌭𑌗𑌵𑌦𑍋𑌦𑌿𑌤𑌮𑍍. 𑌷𑌷𑍍𑌠𑌂 𑌭𑌾𑌗𑌵𑌤𑌂 𑌪𑍍𑌰𑍋-
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
𑌇𑌤𑌿 𑌸𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌪𑌞𑍍𑌚𑌧𑌾 𑌵𑌿𑌧𑌂 𑌭𑌾𑌗𑌵𑌤𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍. 𑌪𑍍𑌰𑌥-
𑌮𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌦𑍁𑌰𑌿𑌤𑌨𑌾𑌶𑌨𑌮𑍍- 𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌦𑌂
𑌚𑍈𑌵 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌂 𑌪𑌾𑌪𑌨𑌾𑌶𑌨𑌮𑍍- 𑌪𑌞𑍍𑌚𑌮𑌂 𑌕𑌾𑌮𑌦𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌷-
𑌷𑍍𑌠𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌦𑌂 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍. 𑌸𑌪𑍍𑌤𑌮𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌦𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌇𑌤𑌿 𑌸𑌪𑍍𑌤𑌵𑌿𑌧𑌾𑌨-
𑌯𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃. 𑌭𑌗𑌵𑌦𑍍𑌭𑌾𑌗𑌵𑌤𑌯𑍋𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌮𑍍. 𑌪𑍍𑌰-
[illegible]
[illegible]

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀[illegible] 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌤𑍍𑌸𑌹𑌸𑍍𑌰
𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌭𑍂𑌲𑌕𑍍𑌷𑌣𑌵𑌰𑍍𑌣𑍇 𑌭𑌾𑌗𑌵𑌤𑌲
𑌕𑍍𑌷𑌣𑌨𑌾𑌮 𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃.

படலஅட்டவணை.

பக்கம்	படலம்.	பக்கம்.	படலம்.
௧	கடவுள்வாழ்த்து	௩௪௨	சிந்தையந்திப்படலம்
௨	திருவரங்கப்படலம்	௩௪௫	கோவர்த்தனகிரிப்படலம்.
௨௧	நைமிசாரணியப்படலம்	௩௫௦	வருணப்படலம்
௩௬	ஆற்றுப்படலம்	௩௫௩	குழலூதுபடலம்
௩௮	நாட்டுப்படலம்	௩௬௦	அம்பிகாவனப்படலம்
௪௧	நகரப்படலம்	௩௬௨	நப்பின்னைப்படலம்
௪௯	நாச்சியார் திருவவதாரப் படலம்	௩௬௬	அரிட்டாசுரப்படலம்
௬௩	கெசேந்திரன் மோட்சப்படலம்	௩௬௮	கேசிவதைப்படலம்
௭௩	வராகப்படலம்	௩௬௮	வியோமனப்படலம்
௯௫	கபிலப்படலம்	௩௭௦	அக்குரூரப்படலம்
௧௦௭	நாரசிங்கப்படலம்	௩௭௮	தாருகன்வதைப்படலம்
௧௩௫	துருவப்படலம்	௩௮௨	சுதாமாப்படலம்
௧௩௯	மச்சப்படலம்	௩௮௨	திருவிக்கிரமப்படலம்
௧௪௨	கூர்மப்படலம்	௩௮௪	சிலையிறுத்தப்படலம்
௧௬௬	அண்டப்படலம்	௩௮௫	கஞ்சன்முயற்சிப்படலம்
௧௭௯	பிதுச்சக்ரவர்த்திப்படலம்	௩௮௭	குவலயாபீட மகாபத்திரன்வதைப்படலம்
௧௮௪	இடபராசப்படலம்	௩௮௯	சாணூரன்வதைப்படலம்
௧௯௪	வாமனப்படலம்	௩௯௨	கஞ்சன்வதைப்படலம்
௨௦௨	அசாமிளப்படலம்	௩௯௩	உக்கிரசேனன்முடிசூடுபடலம்
௨௦௯	உருக்குமாங்கதப்படலம்	௩௯௪	குருதட்சணைப்படலம்
௨௪௪	அம்பரீடப்படலம்	௩௯௫	உத்தவப்படலம்
௨௪௮	பரசுராமப்படலம்	௩௯௯	பாண்டவப்படலம்
௨௫௩	இராகவப்படலம்	௪௦௧	சராசந்தனபசயப்படலம்.
௨௭௭	தேவகிப்படலம்	௪௦௫	சிரகாலன்வதைப்படலம்
௨௮௯	கண்ணன் திருவவதாரப்படலம்	௪௦௮	காலயவன்வதைப்படலம்
௩௦௩	பூதனைவதைப்படலம்	௪௧௨	இரேவதிப்படலம்
௩௦௯	சகடாசுரப்படலம்	௪௧௫	படங்காண்படலம்
௩௧௦	காலியாசுரப்படலம்	௪௨௦	விதர்ப்பராசன் மந்திரப்படலம்
௩௧௩	குக்குடாசுரன்வதைப்படலம்	௪௨௫	தூதேவுபடலம்
௩௧௫	நவநீதப்படலம்	௪௪௫	அலங்கற்படலம்
௩௧௭	ததிபாண்டப்படலம்	௪௫௬	சேதிபராசப்படலம்
௩௧௯	அருச்சுனப்படலம்	௪௬௪	நாச்சியார்தேரேறுபடலம்.
௩௨௨	பெகாசுரன்வதைப்படலம்	௪௭௪	சேனைசூழ்படலம்
௩௨௪	அகாசுரன்வதைப்படலம்	௪௮௬	பவுண்டரப்படலம்
௩௨௫	வற்சாபகாரப்படலம்	௪௮௯	சாலுவப்படலம்
௩௨௮	தேனுகன்வதைப்படலம்	௪௯௨	தந்தவக்கிரப்படலம்
௩௩௦	காளியமர்த்தனப்படலம்	௪௯௪	மகதராசப்படலம்
௩௩௪	பெலம்பன்வதைப்படலம்	௪௯௭	சிசுபாலப்படலம்
௩௩௭	கூறைகொள்படலம்	௫௦௧	உருக்குமன் அபசெயப்படலம்
		௫௧௮	துவாரகாபுரிப்படலம்

ஸ்ரீ

பிரகடனம்.

		ரூ.	அ.	
ஸ்ரீ மஹாபாகவத புராணம் முதற்புத்தகம்.	தபாற்கூலியுட்பட	2	4	
காஞ்சிப்புராணம்.		2	0	0
திருக்கழுக்குன்றப்புராணம் உரையுடன்.		0	12	0
திருவிரிஞ்சைப்புராணம் உரையுடன்.		0	8	0
வள்ளலார்சாத்திரம்.		1	4	0
சுந்தரமூர்த்திசுவாமிகள்தேவாரம்.		0	12	0
தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையருரை.		0	12	0
கொலைமறுத்தல் உரையுடன்.		0	4	0
திருமுருகாற்றுப்படை உரையுடன்.		0	3	0
கல்லாடமூலம்		0	2	0
இலக்கணச் சுருக்கம் To Middle School Examination.		0	5	0
கந்தரநுபூதிஅலங்காரம்.		0	1	6
சித்தாந்தக்கட்டளை.		0	1	6
திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்.		0	1	6
திருப்பேரையூர் பச்சைநாயகன் பந்தடி		0	1	0
சச்சிதாநந்தமாலை.		0	1	0
கந்தாந்தாதி மூலம்.		0	1	0
சிவஞானபோதம் உரையுடன்.		1	0	0
வடதிருமுல்லைவாயிலந்தாதி.		0	1	[illegible]
இடும்பன்கவசம் கடம்பன்கவசம்.		0	1	0

ஐந்துபுத்தக மேககாலத்தில்வாங்கினால் ஒரு புத்தகம் அதிகம் கொடுக்கப்படும்.

இவை சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை சுப்பிரமணியமுதலி வீதி - 33 - வது வீட்டில் புங்கத்தூர் கந்தசாமிமுதலியாரிடத்தும் தஞ்சாவூரில் புத்தகஷாப்பு த - நா - திருவேங்கடம்பிள்ளையிடத்தும் திருச்சிராப்பள்ளி புத்தகக்கடை நாராயணசாமி பிள்ளையிடத்தும் மதுரை புத்தகக்கடை முத்தையப்பிள்ளையிடத்தும் பெற்றுக்கொள்ளலாம்.



விஷ்ணுமயம்.

ஸ்ரீமஹாபாகவதம்

கடவுள்வாழ்த்து.

பொன்னிறமாமெனப்புவனம்படைத்துக்காத்துப்
புயனிறமாய்த்தழனிறமாய்த்துடைத்துப்போந்து
முன்னிறமாய்த்திளைத்துயர்ந்துமுழங்குநார
முடுகிடவேநீண்டவடவிலைமேன்முந்தித்
தொன்னிறமாமண்டாண்டமெண்ணில்கோடி
துலங்கிடவேவயிற்றமைத்துத்தூயதாய
தன்னிறமாங்குழவியெனப்பொலிந்துதோன்றுந்
தலைவனிருதாளிணையெந்தலைமேல்வைப்பாம். (௧)

வேறு. வானாசுகன்பாவகனீர்நிலமற்றுமாகி
யூனாருடலாயுயிராயுயிர்தோறுமேவுங்
கோனாகிமூவர்செயலாயகுணங்கள்யாவுந்
தானாகிநின்றதலைவன்றிருத்தாடுதிப்பாம். (௨)

வேறு. கரமதனாற்கடல்கடைந்துமமுதளித்துங்கனகனூர
முரவுகிரால்வகிர்ந்தளைந்துமுலகிடந்துண்டுமிழ்ந்தளந்துஞ்
சரமதனாற்றசமுகனொருபதுகமறத்தடிந்தும்
பரமபதத்தொளிகொளிபதுமமலரடிபணிவாம். (௩)

வேறு. ஈசரதவசரபங்கற்கருள்செய்துசுரர்கோனீந்த
வசரதமிசையினேறியிராவணன்மாளவெமிக்
கசரதவாளியேவிக்கமலனோடிமையோர்போற்றத்
தெசரதனடியில்வீழ்ந்தசெம்மலுள்சென்னிவைப்பாம். (௪)

யாதவர்குலத்துட்டோன்றியிமையவர்க்கிடர்கள்செய்யும்
பாதகர்மடியவேபார்பாரமதொருவப்பார்த்தன்
ஆதனுமைத்துணர்வேண்டிச்சூதனாய்த்தேருமூருஞ்
சீதரனைவாசுதேவனைவணக்கஞ்செய்வாம். (௫)

வேறு. தீயனவொழிபிறப்பினுஞ்செய்ததீவினைகண்
மாயகாரணனெட்டெழுத்தினைவழியொழுகச்
சேயவாயரங்கேசனார்மகிழ்திருப்பணிசெய்
தாயனார்திருத்தாளிணைபோற்றுவமதிவால். (௬)

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

முதலாவது.— திருவரங்கப்படலம்.

வேறு. சீராருமிக்கிளைமண்மகள்சேர்ந்துபோற்ற
வோராயிரவாய்ப்பணிமீதுறைவானையுள்கி
நீராயுமணந்திருபாலுநிறைந்துசேர்ந்த
காரார்பொழில்சூழ்திருக்காவிரிவாழிவாழி. (௧)

வேறு. தரங்கவேலையடைத்துத்தனுவினாற்
றுரங்கதேர்கரிதுன்னிலங்காதிபன்
சிரங்கள்வீழவடுந்தெய்வவாளியா
ரரங்கவீசரடியிணைவாழியே. (௨)

வேறு. சூதாம்பரனார்செயலென்றுசனன்சொல்லவு
பீதாம்பரிசென்றுணர்மாவலியீந்துவப்பப்
பாதாம்புயம்பாருயர்வானிற்பரந்தவன்கோட்
பீதாம்பரமல்கியபேரொளிவாழிவாழி. (௩)

வேறு. நந்தன்மைந்தனெனக்கறைநாடிமீக்
குந்தியுண்டருதித்துயிர்கொள்ளைகொள்
ளெந்தையெங்கணிரணியகெற்பன்வா
ழுந்தியின்கிளரொண்மலர்வாழியே. (௪)

எதிரிலங்கைமன்றோள்சிரம்யாவையுங்
கதிர்கொள்வெங்கணையாற்களைந்தேபினர்
விதுரனல்விருந்தாகியவித்தக
னுதரபந்தனத்தொண்சுடர்வாழியே. (௫)

பார்புனற்கனல்கால்வெளியாய்ப்பரந்
தோர்குதற்கெளிதாகுஞ்சுடருளார்
சீர்பலித்தசெந்தாமரையாயமர்
மார்பிலுற்றகவுத்துவம்வாழியே. (௬)

பேயினுருவாம்பறிபம்வீழ்த்தெழில்
வேயினேழிசையூதிவிளங்குவா
னாயன்மாலரங்கத்துறைபவன்செய்ய
வாயும்வாழிமுறுவலும்வாழியே. (எ)

முண்டகத்திறைவன்முனிவோரண்டர்
தெண்டிரைக்கடலெண்சயிலர்திக
ழுண்டவண்டமுந்தன்னகடாரவே
யுண்டகண்டத்தொருமுதல்வாழியே. (அ)

மண்ணையுண்டுபின்மத்தடியுண்டுசேர்
வெண்ணெயுண்டுவெதிரிசையூதுவோ
னுண்ணயந்துயரந்தொளியேதிகழ்
கண்ணிணைக்கருணைநிதிவாழியே. (௯)

வேறு. அருமுகக்கானுடன்றானன்றிரிசிர
வருமுகிற்குலமெனப்பொருதுளோர்மடியவே
யெரிமுகக்கணைவிடுத்தருளுமெம்பிரானார்
திருமுகத்தொளிர்தவச்செவ்வியும்வாழியே. (௧௰)

வேறு. வாலிமாளமராமரம்வீழவேழ்
வேலைசீரழன்மேவிராவணன்
காலன்வாயுறவாழிகடாவுவா
னீலமேனிநிறைகவின்வாழியே. (௧௧)

சகடுதைத்துப்பொடிபடச்சாடிவெம்
பகடுடைக்கஞ்சன்மார்பினிற்பாய்ந்தவன்
முகடுமுட்டியபாதமுராரிதன்
மகுடமுற்றமணிகளும்வாழியே. (௧௨)

உகிருலன்றிரணியன்வல்லுரம்
வகிரநீள்வயிரார்குடன்மார்பினிற்
சிகரமேற்புரள்பாம்பெனச்சேர்த்தவான்
றிகிரிவாழியச்செங்கையும்வாழியே. (௧௩)

அங்கராசனடற்றுரியோதனன்
சங்கையோடச்சகுனிமருகியா
மங்கைகேள்வன்மடியவன்றாங்கிய
சங்கம்வாழிதடக்கையும்வாழியே. (௧௪)

சரங்களால்வெண்கபிலையன்றேந்திடேனுன்
சிரங்கள்வீழ்ச்சிவனருளாற்பெறும்
வரங்கண்மாய்த்தவன்மார்பிலக்கோட்டின்
சரங்கணைவிடுஞ்சார்ங்கமும்வாழியே. (௧௫)

ஆழிமாவிரதஞ்சிலைதாளிற
வாளிதூவியிராவணனஞ்சக
காளைவாவென்றருள்செய்தாரணன்
வாளும்வாழிமலர்க்கையும்வாழியே (௧௬)

சண்டகக்கும்பகன்னன்கைகால்சிரந்
துண்டகண்டங்களாகத்துணித்தபி
னண்டர்மிண்டவன்றுளிமைமேய்த்தவன்
றண்டும்வாழிதடக்கையும்வாழியே. (௧௭)

வேறு. வெந்திறலவுணன்சேயைவெருண்டெழுந்தடர்த்ததூணின்
வந்தெழுகனகன்மார்பைப்பிளந்தவன்மடங்கன்மூர்த்தி
சிந்தையிற்கதங்களோவித்திருவருள்புரியச்சேர்ந்த
நந்தொளிர்கரச்சீரங்கநாயகிமலர்த்தாள்வாழி. (௧௮)

வேறு. மூரணிழந்துபொற்கனன்முடியவேனுயர்குவான்
சரணடைந்துகவினுறச்சதுமறைக்ணியவல்லவதாம்
பொருணயந்தசரிதைமால்புகலவேமகிழ்ந்தரு
டரணிமங்கைமலர்த்தாள்கள்வாழிவாழியே. (௧௯)

வேறு. பாண்டுமைந்தர்களுய்யவேபடவராவுயர்த்தோன்
மாண்டுவீழ்ந்திடமகபதிசுதனுக்குமணித்தேர்
தூண்டுசாரதியாகியசோதிதன்றேவி
நீண்டகன்றகண்ணீளையார்மலர்ப்பதம்வாழி. (௨௦)

வேறு. போதநேறுடைமராகிப்புனலணிசடையனாகி
வேதமாயகண்டமாகிவிண்ணுமாய்முனிவரோத்து
மாதியாமரங்கராசரணைத்தருடேவியான
கோதையாய்க்கோதைசூடிக்கொடுத்தவள்வாழிவாழி. (௨௧)

இரணியன்சிறுவன்றன்னையெரியினிட்டப்பினுய்த்து
முரணியகரிமுன்னிட்டுமுகடுறுஞ்சிகரமேற்றித்
தரணியிற்றள்ளும்போதுந்தாளினைந்தோதுநாமப்
பிரணவவடிவமானபேரொழில்விமானம்வாழி. (௨௨)

மாயையில்வந்தமானைவடித்தகோற்கிலக்கனுக்கிப்
பேயுருண்டகண்ணன்பின்னவனுகமுந்தித்
தாயதென்னரங்கராசர்துயில்கொளவணையாத்தோன்றி
யாயிரஞ்சுடிகையோங்கியமர்திருவனந்தன்வாழி. (௨௩)

வேறு. திருடிவெண்ணெயயின்றுசெயிருறு
முருடொடுங்கவுரனைமுனிந்தவன்
புருடவுத்தமன்பொற்பதமேந்துமைக்
கருடராசன்கழலிணைவாழியே. (௨௪)

வேறு. வானோர்பதிமாமலரோனகர்மற்றுமற்றும்
போனாழியாப்பதமிதுபொலிந்துதோன்றிக்
கானாநடந்தருள்கண்ணனைக்காட்டியாட்கொள்
சேனாபதிவாழியச்சேனையும்வாழிவாழி. (உரு)

வேறு. வஞ்சகரிலங்கைமேவிமைதிலிசரணம்வாழ்த்தி
யஞ்சியவரக்கரோடவக்கனையரைத்திட்டவ்வூர்
துஞ்சவல்லெரிமடுத்துச்சூடாமணிகொண்டுமீண்ட
வஞ்சனைசிறுவனானவரிகுலவீரன்வாழி. (உசு)

வேறு. தயிருவெண்ணெகளவினுண்டுதாயுமாகிவந்தபே
யுயிருமுண்டெவ்வுலகுமுண்டகண்டராரணத்துளார்
வயிரமாரமூ[illegible]கண்மின்ஸ்ரீமண்டபத்தில்வாயில்சார்
செயிரிலங்கு[illegible]விசையர்வாழிசீரரங்கம்வாழியே. (உஎ)

வேறு. மீனமாயவுண்ணுடல்விதைத்தயன்முன்விமானமேற்றோன்றியம்மனு
வின், ஞானவின்றவத்தாலயோத்தியினெய்திச்சுடர்முடியிராமனீந்திட
வே, யீனமிலிலங்கைவீடணன்கொடுசென்றிக்குபுட்கரணியினிறுத்த,
மாநதியிரண்டாய்வளையரங்கத்தின்வயங்கியவரங்கனார்வாழி. (உஅ)

வேறு. சூதுமாபாதகங்கடியசெய்ந்நன்றிகுன்று
மேதமாதவர்கடம்மையிகழபசாரமெல்லா
மூதையாற்பாறுபூழையீதெனவகற்றியோங்குஞ்
சேதுமாதவனுமெங்கோன்திருவடிவாழிவாழி. (உகூ)

இல்லாணின்றியம்புசொல்லாலிடர்க்கடலழுந்துதாஸத
சொல்லாணியாகநாடுறுடர்ந்தடர்கானினேகிப்
பல்லாணிமுத்தாங்கஞ்சப்பாவைபாலேகவேண்டிப்
புல்லாணிநகரின்மேவும்பொருசிலையிராமன்வாழி. (௩௦)

வேறு, கருவனந்திரண்டமேகமென்னமேனிகவினுறப்
பொருவிகந்தநிகிரிதண்டுபுகர்கொள்வாளிலங்கவே
மருவினந்துவன்றுசெந்நெல்மதில்பிறங்கவரவின்மேற்
றிருவனந்தபுரநகர்க்குண்மேவுதேவன்வாழியே. (௩க)

வேறு, அல்லுறவிரவிதன்னையாழியான்மறைத்துப்பார்த்தன்
வெல்லமேவமீளவாங்கிவெயிலினைக்காட்டியப்பாற்
கொல்லுதிசிந்துநாடாண்மன்னனையென்றுகூறி
வல்லமாநகரின்மேவுமாதவன்திருத்தாள்வாழி. (௩உ)

வேறு. சுற்றலக்கோடிடியிடித்துச்சாபம்வாங்குந்
துன்மதிக்கஞ்சன்விடுத்ததும்பிதன்னைச்
செற்றதிற்கோட்டைக்கொண்டேயெதிருஞ்சாணூ
ரனைவதைத்துச்சிறந்தொளிருமூமையான்பாகத்

நற்றவர்கோட்டைக்கரத்திறைருவநூதி
யும்பர்பிரானுதிமவாகனத்தோனேத்த
விற்றுலக்கோடெனுநகரின்விந்தைமார்பின்
விளங்கிடவேயமர்விமலன்றிருத்தாள்வாழி. (௩௩)

வேறு. இறுங்கடுவினைகடுயேவின்பமெய்ஞ்ஞானமெல்லா
முறுங்குடியடியராவிருற்றுநீர்தொழுமினென்றே
நறுங்கொடிமலரோனுநேவிலநாரதனுமோத்தக்
குறுங்குடிமேவிநின்றகோவிந்தநம்பிவாழி. (௩௪)

வேறு. நலங்கொளுஞ்சடகோபனார்நவின்றவாரணச்சொல்
விலங்குமெய்த்திருவாய்மொழியினிதுவுந்துறைப்போர்
நுலங்கள்சூழ்குருகூர்தனிற்கொழுமுகில்போலப்
பொலிந்துநின்றவெம்பிரான்பதப்போதுகள்வாழி. (௩௫)

வேறு. புகர்முகங்கொள்புகலிபம்வெந்துயரமெய்திப்
பொய்கையினிற்கரமெடுத்தன்றாலமென்றே
பகருமுனரடைந்தடருங்கராவைச்செற்றுப்
பாஞ்சசன்னியத்துடனேநேமியேந்திச்
சுகரைநிகர்மறையவர்கண்மகிழ்விநோடு
சூழ்ந்திடவேதென்றிருப்பேர்நகரினோரா
மகரநெடுங்குழைக்காதுவயங்கவைகு
மாதவனார்திருத்தாள்கள்வாழிவாழி. (௩௬)

வேறு. ஆடகமதில்சூழ்ந்திலங்கரிமேயவிண்ணகரமரரிவாழி
வேடனையருள்வெள்ளக்குளத்தமரும்வித்தகன்றளிணைவாழி
நீடுசித்திரத்தேர்வலவனரிலங்குநிகரிலாத்திருப்பதிவாழி
சேடனிற்றுயில்கள்ளப்பிரான்வைகுஞ்சீர்மலிவைகுந்தம்வாழி. (௩௭)

மின்னலார்வயல்சூழ்வரகுணமங்கைநகருறைகாகுத்தன்வாழி
யின்னலில்குளந்தையிலங்கியமாயக்கூத்தர்தம்பிணையடிவாழி
பொன்னகரெனவேபுகழ்மலைநாட்டிற்பொலிநந்தபுரத்தண்ணல்வாழி
யன்னமென்னடையாரமருவண்பரிசாரத்திருநகரரிவாழி. (௩௮)

வேறு. வெரீயுறச்சாதகரொயதக்கலர்களானோர்
மெலிந்துடலிறுவிவிடவரற்றிச்சுற்றத்
தரீமமுறவேயந்தத்தனுவைச்சேர்க்கச்
சான்றவனாயிகழ்ந்தவரொன்றனலாருங்கண்
ணரீயமொடுசெம்புருக்கிநாவினுய்க்கு
நரகமெல்லாமழித்திடுநன்னுமச்சோதி
சிரீவரமங்கலநகரிற்றிருவினோடுஞ்
சிறந்திலக்குமனக்கவர்திருத்தாள்வாழி. (௩௯)

திருவரங்கப்படலம்.

வேறு. அருவநற்பதிவிளையத்துலங்கவேவரந்
தருவனந்திகழ்வுறுஞ்சார்ங்கபாணியாய்க்
கருவெனமுகிலெனக்கமலைதன்னொடுந்
திருவண்வண்டூருறைசெல்வன்வாழியே. (௨௦)

சிலைவலியிடரினைத்தீர்த்துப்பத்தர்கட்
கலைவிலின்பந்தரும்பதமளிக்கப்பொற்
கலைவிலினிளவெயிற்கவினைக்காட்டவாழ்
தொலைவிலிமங்கலச்சோதிவாழியே. (௨௧)

வேறு. செருக்காளியுகந்துநோக்கத்திரண்டெழுமலைகைக்கூட்ட
முருக்காளவரைபோலாடவும்பன்மாவிரதஞ்சிய
நெருக்காழியரக்கர்மாளநிருதர்கோன்றலைகணிக்கித்
திருக்கோளூரிலங்கமேவுந்திருவினாயகன்றாள்வாழி. (௨௨)

வேறு. கருமாறவுயர்ந்தநற்கதியைக்காட்டுசெற்
குருமாறனுரைமறைத்தமிழுவந்தகோ
வுருமாறியடைந்துசெல்லுமழையைச்செற்றவன்
திருவாறன்விளைநகர்ச்செல்வன்வாழியே. (௨௩)

வேறு. கரிச்சங்கபிவுளியினம்யாளிசீயங்
கடல்புடைசூழிலங்கைநகர்நிருதரெல்லா
மரிச்செங்குமலைகளெனக்குரம்பைவீழ
வாளியினாற்கொய்துதசமுகனைவீட்டி
வரிச்சங்கங்கதைநேமிகுனியுஞ்சார்ங்கம்
வாளிலங்கமாகுமரன்மருங்குசூழத்
திருச்செங்குன்றூரதனிற்றிருச்சிற்றாற்றுச்
சிற்றாயன்றிருவடித்தாமரைகள்வாழி. (௨௪)

வேறு. எருக்கடித்திண்டைசேரும்வேணியனிடரைநீக்கித்
திருக்கடித்தாரிலேனுடுஞ்சிறந்தொளிமார்பிலோங்க
விருக்கடித்தானமாகவிரும்பிடுமறையோரோத்தத்
திருக்கடித்தானமேவுஞ்சீதரன்கழல்கள்வாழி. (௨௫)

வேறு. அட்டநாட்டத்தயனஞ்சிடத்தன்பெயரண்டாண்ட
முட்டநாட்டிப்பரனில்லையென்றேயெழுமீதின்மோதுங்
துட்டநாட்டுத்திலமிற்றெனவீர்ந்திடத்தூளியாக்குங்
குட்டநாட்டுப்புலியூருறைகோளரிதாள்கள்வாழி. (௨௬)

வேறு. பளிங்கொளிர்வராகமாகிப்படியினையெயிற்றலேந்திக்
களங்கமுன்மலியும்வெய்யகனகன்றன்கனிட்டன்றன்னை
வளங்கிளராழியேவிவதைத்துமண்மடந்தைபோற்றப்
புளிங்குடிநகரின்மேவும்புராதனமுராரிவாழி. (௨௭)

பார்க்கரன்சோமனெய்திப்படிந்தபோலாழிகோடு
சீர்க்கரமிசையிறேனுங்கச்சினத்தெதிர்மாலியோடு
மூர்க்கராமரக்கர்தம்மைமுடுக்கியேகடிதிற்செற்ற
கார்க்கரையப்பன்றுய்யகழலிணைவாழிவாழி. (௪௮)

வேறு. பருமேழைதனிரதப்பானிறையமுகந்ததனைப்பருகியேதான்
வருமூழிற்பலம்வாய்த்தவனையெனுமசோதைதமுனநடித்துவானி
னிமைமேழற்படிவமதாயெழுந்தெயிற்குறப்புடவிதனையெளிதினேந்தித்
திருமுழிக்களத்துறையுஞ்செல்வனார்திருத்தாள்கள்வாழிவாழி. (௪௯)

வேறு. மூவாமுதலாயுயர்மூர்த்திகண்மூவராகி
மாவாய்பிளந்தேமதமாகரிகோடுவாங்கிக்
கோவாகியவஞ்சகக்கஞ்சனைநொய்திற்கொன்ற
நாவாயுறைநாரணநம்பிதன்றாள்கள்வாழி. (௫0)

நாட்டாட்டணிப்போதுறைநான்முகன்போற்றிசெய்யக்
காட்டானையைக்காத்தடர்நக்கரத்தைக்கடிந்து
கோட்டாற்கடனீரமிழ்யாரினைக்கோத்தெடுத்தே
வாட்டாற்றுறைமாதவன்றன்பதம்வாழிவாழி. (௫௧)

வேறு. கொடிகள்கோபுரங்களோங்குவில்லிபுத்தூரிற்கோதை
கடிகமழ்கழுநீர்முல்லைகருமுகைகலந்துகாட்சித்
தொடையினைக்குழன்மேற்சூடிக்கொடுத்திடமகிழ்ந்தசோதி
வடபெருங்கோயின்மேவுமன்னனார்தாள்கள்வாழி. (௫௨)

வேறு. உருத்தங்காவெனவில்வாய்விரிக்கும்பூத
கணத்தினுடனுமைகொழுநன்சுதர்களோடுஞ்
செருத்தங்காதோடிடவேவிசிகந்தூவிச்
சினத்தெதிரும்வாணனார்புயங்களெல்லா
மரத்தங்கான்றிடத்துணியவாழியேவி
யனுருத்தனுடாங்கனையைவதுவைசெய்யத்
திருத்தண்காற்றிருப்பதியினொருநாட்டங்கி
நின்றருளுந்தேவர்பிரான்றிருத்தாள்வாழி. (௫௩)

வேறு. ஏடலர்தார்தென்னவர்கோனேற்றிடவேபல்லாண்டு
பாடியுயர்கிழியறுத்தபட்டர்பிரான்கண்களிப்ப
வாடகவம்பாமிலங்கவாழிவளையேந்தியமா
கூடலழகியபெருமான்கோகனகத்தாள்வாழி. (௫௪)

வேறு. வருமோகூன்றெழுத்தையாலிவ்வல்வினைவள்ளல்வந்து
பொருமோர்கூர்வாளியாலேயிராவணன்பொன்றவென்றி
தருமோகோவென்றமின்னின்சிறைதவிர்த்தவடன்றேடுந்
திருமோகூரிலங்கநின்றசெழுஞ்சிலையிராமன்வாழி. (௫௫)

வேறு.பாலிருங்கடலிற்பாந்தளோவியேபங்கயத்தின்
மேலிருங்கண்ணுண்மார்பின்விளங்கிடவமரர்போற்றத்
தோலிருங்கயத்தினோலமென்னமுன்றோன்றியிம்பர்
மாலிருஞ்சோலைமேவிவயங்கியவழகர்வாழி. (௫௬)

உருக்காட்டிவிசையன்றேறவோதியகீதைகாட்டிச்
செருக்காட்டிப்பெருகுங்கங்கைசிறுவன்முன்றிகிரிகாட்டிக்
கருக்கோட்டைக்குமாறாகக்கழலிணைமிதித்துக்காட்டி
திருக்கோட்டியூரினின்றதெய்வங்கள்பெருமாள்வாழி. (௫௭)

வேறு.நள்ளிவயல்சூழுறந்தைநகம்பெருமான்றாள்வாழி
தெள்ளியர்கள்செயுமன்பிற்றேவதேவன்வாழி
கள்ளவிழ்சோலைக்காம்பனூரமர்கண்ணன்வாழி
புள்ளம்பூதங்குடியிற்போரேறுவாழியரோ. (௫௮)

வேறு.அண்டர்கடுதிக்குமாதனூரராவணையோன்வாழி
தொண்டர்களேத்துஞ்சேறைதுலங்கியவிராமன்வாழி
ரூண்டகவாவிசூழ்நாண்மதியமுராரிவாழி
கண்டியூர்நீலகண்டன்கடுவினைகளைந்தான்வாழி. (௫௯)

வெறியுறுபூங்காச்சூழவேதநான்குடனேமெய்யா
ரறனுறுமாலிதன்னினமருளாளன்வாழி
நறுநெய்பானுகருநந்திபுரவிண்ணகரோன்வாழி
மறைநிறைகூடலூரிலிலங்கியமாயோன்வாழி. (௬0)

வேறு.பாந்தளேயணையாய்ப்பள்ளிகொள்பார்த்தன்பள்ளியினிலங்கரிவாழி
மாந்தளிர்நிகர்மெய்மாதர்களுறைமண்டங்குடிமாதவன்வாழி
நாந்தகமிலங்கவவிர்கொண்மெய்யத்தினகரமர்நாரணன்வாழி
சேந்தொளிரனஞ்சூழ்செம்பொன்செய்கோயிற்சீதரன்றாளிணைவாழி.

தேன்மலர்ப்பொழிலாருந்திருத்தெற்றியம்பலச்செங்கண்மால்வாழி
மீனெனவியங்குநயனமங்கையர்சேர்விண்ணகரத்தரிவாழி
யானிரைமலியுங்கவித்தலத்தமருமச்சுதன்றாளிணைவாழி
வானவர்புகழ்வைகுந்தவிண்ணகரினமர்புருடோத்தமன்வாழி. (௬௨)

காகமோர்நயனங்கழன்றிடத்திரணங்கடாவியேகானுயிர்களைந்து
சாகரத்தரிகள்பிறங்கலானெறியைத்தரவிலங்காபுரியடைந்து
மேகநாதனதிகாயன்விச்சிரவாமதலையோடனுசனைவீட்டி
நாகையாம்பதியினழகனாய்வயங்குநாரணன்றிருவடிவாழி. (௬௩)

வேறு. கண்டகன்காகன்போசன்காசிபன்சேதிராசன்
மண்டனின்மடியமோதிமலருளோன்வலாரிவானோ
ரொண்டவருடனேபோற்றவிராசமாநகரின்மேவுஞ்
செண்டலங்காரமன்னன்றிருவடிவாழிவாழி. (௬௪)

தும்பிக்கையுடையோனன்னைதனுக்கிடச்சுரர்களெல்லாங்
கம்பிக்கக்கயிலைதன்னைக்கரத்தினாலெடுத்தோனுக்கை
யம்புக்கன்றிலக்கமாக்கியழகியநறையூர்மேவு
நம்பிக்கைநாச்சியார்தந்நாயகன்றாள்கள்வாழி. (௬௫)

மறைக்கடிமலரோன்போற்றவாளியானிருதரோடுஞ்
செருக்கணிகரத்தனனைதசக்கிரீவனையுஞ்செற்றே
யெரிக்கண்ணன்வியப்பவண்டமேலவீரடியாற்கொண்டு
திருக்கண்ணமங்கைமேவிநின்றருடிருமால்வாழி. (௬௬)

அருக்கனற்குமரனெய்தவரவினாலுவமையில்லாத்
திருக்கிளர்பதவியாள்வோன்றனையனன்றிறவாவண்ணம்
பொருக்கெனவவன்றேர்த்தட்டைப்புடவியினழுத்திவண்மைத்
திருக்கணங்குடியின்மேவுந்திருவினாயகன்றாள்வாழி. (௬௭)

முரட்கணைதொடுத்துவிட்டன்றிராவணன்முடிகள்பத்து
மறைக்கணமுறுதன்முன்னமறுத்தவனாவிகொண்டே
யெருக்கணிசடையினான்றனிரவொழித்தெயில்கள்சூழுந்
திருக்கணபுரத்துமேவுஞ்சீதரன்றாள்கள்வாழி. (௬௮)

வேறு. கச்சணிநகில்வீறியவுமைகொழுனனடஞ்செயக்கமலனேடிமையோர்
நிச்சலுமுராரிதனைத்தொழும்பதியைமுன்புபோனிறுவியதிருவ
னச்சுதராயன்வணங்கிடவரவினழகியதில்லையம்பதிக்கே
மைச்சுடர்வரைபோல்வயங்குகோவிந்தராயன்மாமலரடிவாழி. (௬௯)

வேறு. தருவெழுந்தபோலொளிருந்தடக்கைமீதிற்
றமனியவச்சிரக்கடையந்தயங்கக்காட்ட
வரவெழுந்துபணாமகுடங்கவிக்கப்பாலி
னலையுறும்வேலையிற்றுயில்கொளய்யன்மெய்யன்
வெருவெழுந்துசெருக்களத்தின்மாலிமாலி
மாலியவான்பாறிடவேவிசிகந்தூவித்
திருவழுந்தூராமருவியப்பனை
தேவகிதன்றிருக்குமரன்றாள்கள்வாழி. (௭௦)

மாகேழலாயளவில்வையமேந்தி
மகன்சொற்கேளாதுமுனிந்தெழுவின்மோது
மாசூழிலாடகனையரியாய்ச்செற்றே
யாலிநகர்த்திருமங்கையாழ்வாரோத்த
நாகாழவாவியினிற்றுலங்கமேய்ந்து
நளினமலர்தொறுமாரவினங்கனல்குஞ்
சீகாழிவிண்ணகரில்லேகர்போற்றச்
சிறந்தமருந்தாடாளர்திருத்தாள்வாழி. (௭௧)

வேறு. ஒள்ளியபுதல்வன்றன்னையுரப்பியேயொளித்தன்றேடுங்
கள்ளனைவெளிசெய்யென்னக்கனகனக்கறைந்தூணிற்
றெள்ளியசிங்கமாகியுகிரினிலவனைச்செற்றே
வெள்ளியங்குடியின்மேவுவிண்ணவன்றிருத்தாள்வாழி. (௭௨)

மண்ணகல்வானமூண்டவாயன்மாமலரின்மேவும்
பெண்ணகமாகவைகும்பிறங்கியமார்பனீள்கற்
பண்ணகமொழியாளாகியெழுந்திடமிதித்தபாதன்
விண்ணகருறையுமப்பன்விழுமியபதங்கள்வாழி. (௭௩)

கடந்தருகயமன்றுய்யக்கராவினைச்செற்றுப்பூமண்
மடந்தையர்மருங்குசூழமாமழைசேர்வனசப்பொய்கைத்
தடந்தனிலிலங்கச்சற்பத்தவிசின்மேற்சயனங்கொண்டே
குடந்தையின்வயங்குமாராவமுதெனுங்கோமான்வாழி. (௭௪)

தியமேர்சனகிதன்னைமணஞ்செய்யச்சிவனார்கையிற்
சாபமன்றிறுத்துமங்குற்றாரையைத்தடுத்துத்துய்ய
கோபராவுய்யக்கோவர்த்தனகிரிதன்னையேந்திப்
பாபநாசத்தின்மேவும்பரமனார்திருத்தாள்வாழி. (௭௫)

வேறு. விடம்பரவுங்காளியன்றனுச்சிமீதின்
விண்ணவர்கள்வியப்புறவேநடித்துக்காட்டிக்
கடம்பெருகுகரியினுயிர்களைந்துவஞ்சக்
கஞ்சனுடனவன்கனிட்டர்தமையுஞ்செற்று
நடம்புரியுநக்கபிரானிருநாலான
நாட்டனிருடிக்கணங்கள்வலாரிபோற்றத்
தடம்பருகுகருமுகில்வாய்த்தஞ்சையாளி
சார்ந்திடுநற்பதியினமர்தலைவன்வாழி. (௭௬)

வேறு. பொருப்பேசிகராகியவெண்டிசைப்பூட்கையீரு
மருப்பேயிறநேர்பொருதானுயிர்வானினேற
நெருப்பார்கணையெய்துயர்நேமியுங்கொண்டுதாங்கித்
திருப்பேருறைநாரணன்சேவடிவாழிவாழி. (௭௭)

வேறு. மங்குலையணவநீண்டுமணியொளிர்சிகரமோங்கச்
சங்குகண்முழங்கப்பேரிதழும்பிடச்சின்னமார்ப்பச்
செங்கயலுகளும்வாவிசிறந்தவெள்வளைமேற்சேரும்
பங்கயச்செல்விமார்பிற்றிகழ்பரந்தாமன்வாழி. (௭௮)

வேறு. ஏராருலகயனோடனித்தலையுண்டுமிழ்ந்திடந்தே
ஓராயிரமுடிதோள்விழியுயர்தாள்களுமுளனும்
பேராயிரமுடையானெனப்பெருந்தேவர்கடுதிப்ப
நாராயணபுரமேவியநாதன்கழல்வாழி. (௭௯)

வேறு. வெம்பியசேதிராசனுருக்குமன்வென்னிட்டோட
அம்புவிட்டமரின்வென்றுண்டருள்செறிவிதற்பனல்குங்
கொம்பினைமணந்துதேவர்குழாந்துதிசெய்யநின்ற
பம்பையிற்பாண்டரங்கவிட்டலன்பாதம்வாழி. (அ0)

நத்தாரும்வயல்கொள்பூகாடிரந்தவைபெருமற்
பத்தாரிற்பாதிவேண்டக்கொடாதவன்படியிலோங்க
வொத்தாரும்பிளந்துவீழவீமனுக்குறுதிகாட்டி
வித்தாரிற்பள்ளிகொள்ளும்விமலனார்திருத்தாள்வாழி. (அக)

ஏதமார்முழைக்கண்ணனென்புகளொடியக்கோட்டாற்
காதியார்கலியின்வீழுங்காசினிதனையிடந்து
பூதலமானுக்கன்பாற்புராணமுமருளிமுட்டத்
தாதியாம்வராகமூர்த்தியடியிணைவாழிவாழி. (அஉ)

தருக்கோடன்றவுணனீயுமூவடிதானமேற்றே
யிருக்கோதுமறையோர்போற்றவுலகமீரடியாற்கொண்டு
மருக்கோடுகமழுநாகம்வழைசெழுவகுளம்பூத்த
திருக்கோவலூரின்மேவிநின்றருடிருமால்வாழி. (அங)

சந்திரன்றபனன்பக்கமிரண்டினுஞ்சார்ந்தமான
நந்துசெந்திகிரியேந்திநற்கரநயனம்பாதம்
சுந்தரத்தோள்கண்மார்பம்வதனம்வாய்துலங்கநேரி
லிந்தளப்பதியின்மேவுமிந்திராகொழுனன்வாழி. (அச)

நச்சிமெய்க்கமலன்வேதநவின்றுசெய்வேள்விநாப்பண்
மைச்சுடர்க்கிரிபோன்மேனிவயங்கிடமவுலிமின்ன
வச்சுதப்பெயரினனென்றமரர்கள்போற்றிநின்ற
கச்சியத்திகிரிநாதன்கழலிணைவாழிவாழி. (அரு)

வேறு. திங்கடங்குசடையன்மேவுகச்சிவீதிதிகழுநற்
[illegible]ங்கயத்தினயன்வலாரிமுனிவர்தேவர்பணியவே
கங்கைகொண்டமண்டபத்தினிற்சிறந்தகலுழன்மேன்
மங்குலாமெனக்குலாவுவரதராசர்வாழியே. (அசு)

வேறு. வருந்தாரளகப்பதிக்கைத்தலவோடுமாற்றிக்
குருந்தேறிநின்றுச்சியர்கூறைகள்கொள்ளைகொண்டே
விருந்தாவனத்தெய்தியதிகிரிவாய்மாயன்மேவு
பெருந்தேவியெனுந்திருப்பீதகத்தாள்கள்வாழி. (அஎ)

வேறு. நேயமார்மழிசையாழ்வார்நிகரிலாக்கணிகண்ணன்முன்
காயுமவ்வளவன்சொல்லாற்கச்சிவிட்டேகுகின்றுன்
மாயவயானுஞ்செல்வேனீயும்வாவென்னச்சேடப்
பாயலைச்சுருட்டியன்றுசென்றருள்பரமன்வாழி. (அஅ)

வேறு. துச்சமிலாச்சங்கத்தொண்டர்க்கின்புறவேகோளரியாயெழுவிற்றோ
யச்சமிலாத்துங்கத்தண்டர்க்கந்தகனுமாடகனுரமேகீறிப் [ன்றி
பிச்சையிலாதுங்கைத்தண்டைச்செங்கழலாற்பீடுறவேநலனாயோங்கும்
கச்சிநிலாத்திங்கட்டுண்டத்தெம்பெருமானார்பூம்பொற்கழல்கள்வாழி.

வேறு. வெறிசெறிபொழில்சூழிந்திரபுரத்தின்வித்தகன்வாழிவெஃகாவி
னுறையரிவாழியுவமையில்பரமேச்சுரவிண்ணகரத்துள்ளோன்வாழி
மறையவர்திரள்சேர்பாடகப்பதியின்வயங்கியமாதவன்வாழி
பொறியுறுதிருத்தண்காக்கவினுறவேபொலிதருகருமுகில்வாழி. (௧௦)

நீரகத்துறையுநிமலனார்வாழிநிகரிலாவேட்கைமால்வாழி
காரகத்தமர்வோன்வாழிகார்வானத்தச்சுதன்வாழியொண்கள்வ
னூரகத்திலங்குமுத்தமன்வாழியுவமையில்கடிநகர்வயங்கு
மாரியன்வாழிசிறந்திடுமட்டபுயத்தமரமலனார்வாழி. (௧௧)

மருமலர்பொழில்சூழுங்கடன்மல்லைநகருறைமாயவன்வாழி
சுரர்தொழுதிலங்குதிருப்பிருதியினிற்சோதிதன்றாளிணைவாழி
திரையுறுநதிகளிலங்கிடப்பொழில்கள்சிறந்திடக்குயிலினங்கூவ
வரியுறுமணக்கத்தரிவைசேர்வைகுந்தத்தினிலமரரிவாழி. (௧௨)

வேறு. நிகரறநின்றவூரினித்திலத்தெந்தைவாழி
சிகரஞ்செல்லுறுவேளுக்கையினிலமர்தேவன்வாழி
புகரிபக்கோடுவாங்கிப்பொருதநீர்மலையோன்வாழி
சுகர்நிகரந்தணாளர்சூழிடவெந்தைவாழி. (௧௩)

வேறு. மாதவரினஞ்சேர்காவளம்பாடிவயங்கியமாதவன்வாழி
போதின்மாதுடனேதொண்டனூரிலங்கும்புதுவைமின்னாயகன்வாழி
கோதிலாமேலைக்கோட்டியூரமருங்கோவிந்தன்கழலிணைவாழி
சூதமார்வேலூர்புரிதனிற்சென்னராயனாஞ்சோதிதாள்வாழி. (௧௪)

வேறு. நெருப்புக்கணினாலுலகெங்கணுநீறுசெய்வான்
பொருப்பைக்கரத்தாலெடுத்தெண்டிசைப்போதகத்தின்
மருப்புற்றிடவேபொருதானுயிர்வவ்விவண்மைத்
திருப்புட்குழிவாழுமிராகவதேவன்வாழி. (௧௫)

வேறு. கொக்காரத்தொடுமேவக்கிஞ்சுகங்கள்கொஞ்சிடவேகுயில்கள்கூவ
விக்காரமுகுத்திடவேயிலங்குகடிகாசலத்தேழ்முனிவரோத்தத்
தக்கானாய்த்தமனியன்றனுரம்வகிர்ந்துமற்றவன்றன்றனையற்கென்று
மக்காரக்கனியாகியமர்ந்தருளுங்கோளரிதன்னடிகள்வாழி. (௧௬)

வேறு. வெவ்விடமதுகையிடவரோடளப்பிலமர்செய்தங்கவருயிர்வீட்டி
யவ்வியமகன்மாமுனிவனாச்சிரமத்தமர்ந்துசெய்தாசினீர்பருகி [ங்க
மைவணமுகின்மேல்வனசமாமலர்கண்மலிந்தபோன்மெய்யெலாமய
வெவ்வுளினரவின்மிசைத்துயில்வீரராகவனிருபதம்வாழி. (௧௭)

வேறு. பொருவில்லிக்காகமைந்தன்றனைத்தந்தபுண்டரீகத்
தொருவல்லிக்காகமீய்ந்தோயோலமென்றழைத்ததொல்லை
வெருவல்லிக்கரவாலன்றுவெந்திறற்றிகிரிவிட்டே
திருவல்லிக்கேணிமேவுதேவநாயகன்றாள்வாழி. (கூஅ)

கல்லைக்காற்பொடியாலுரியாக்கியேகவின்கொண்டோங்கு
நெல்லிக்கோடியரப்பூகந்நிறைந்திடும்வயல்கள்சூழ
வல்லைக்காய்மணிகொண்மாடத்திருப்பதியணுகிவாழுந்
தில்லைக்கோவிந்தராசன்றிருவடிவாழிவாழி. (கூகூ)

தீங்கடர்பிறப்புத்திரத்திரள்யசிமூப்புநோய்க
ணீங்கிடஞானமெல்லாநிறைந்துமாமுத்திநேரப்
பூங்கொடிதிகழுமார்பிற்கவுத்துவம்போற்கொண்டோங்கி
வேங்கடமிலங்கநின்றவித்தகன்கழல்கள்வாழி. (க00)

வேறு. சலமேலெங்குந்தாவியவாலி
னிலைமேலெய்தியெழிலஞ்சனமா
மலைமேனின்றான்மார்பின்வயங்கு
மலைமேன்மங்கையடியிணைவாழி. (க0க)

வேறு. பவவெள்ளத்தழுந்தாதையபரனெங்குமுளன்பாரொன்னுந்
தவமுளசிறுவன்சொல்லையிகழ்ந்தறைதறியினண்டம்
புவிபிளந்திடவேதோன்றிப்பொன்னவனுகம்போழ்ந்த
வவுபழநாரசிங்கனடியிணைவாழிவாழி. (க0உ)

வேறு. மங்காத்திருமைந்தனைவைதடருமவுணன்
வெங்காத்திரமோடறைதூணினுண்மீளியாகி
அங்காத்துகிராலவனுக்கைபிளந்தனைந்து
சிங்காத்திருமாநகர்மேவியசீயம்வாழி. (க0௩)

வேறு. சுகநாதகீதமோதுஞ்சுரர்முனிதுதிப்பவெள்ளி
நகநாதனிடைமாற்றினான்முகனுகர்கோமான்
ககநாதன்முதலோர்போற்றக்கடகமன்னிறைஞ்சவாழுஞ்
செகநாதமேவுமெங்கோன்றிருவடிவாழிவாழி. (க0௪)

வேறு. பழியளவிலபவமெண்ணிலசெய்தே
பலவிதமாகியகொடுமைசெய்நிறையக்
குழியிடைமறுகிமெய்குலைபவர்தங்கள்
குலம்வருவாளொருவன்குறுகியபோ
தழிவிலதாகியகதியினையாறு
மாறுடனென்பதுதலைமுறையடைய
வழியருளும்பிரயாகையில்வாழும்
மாதவனிருமலரடிவாழி. (க0ரு)

வேறு. வெங்கைமாமூலமென்னக்கராவினைவிழவேவீட்டிச்
சங்கைமாவிசையற்காகச்சமரின்வாய்மலரினூதி
யங்கைமாலீசனேற்குமருவினையகலநீக்கும்
கங்கைமாநதிசூழ்கண்டக்கடிநகரிதாள்வாழி. (க0சு)

எதிரிலாக்கனகன்றன்னையிருகையாற்பிளவுசெய்தே
சதிரினாலிலங்கைவேந்தன்றலைகளைத்தடிந்தருந்தி
சுதரொலாமுய்யத்தீயசுயோதனன்மடியச்செய்த
வதரிநாரணனாமெங்கோன்மலர்ப்பதம்வாழிவாழி. (க0எ)

உயிர்தொறுமுளனாய்வேதத்துச்சியினிறைந்துதுய்ய
கயமழைத்திடுமுன்னெய்திக்கராவினைவதைத்துவேத
னயமுறுசடிலனாகண்டலனுடனமரர்போற்ற
நயிமிசாரணியத்தெய்துநாரணன்கழல்கள்வாழி. (க0அ)

உக்கிரக்கனகன்றன்னையுகிரினாற்பிளவுசெய்தே
நக்கனைக்கிரியினோடேயெடுத்தநாலைந்துகையான்
கொக்கரித்தெறிந்தசூலமுதிர்த்தவனாவிகொண்ட
சக்கரத்தெழில்கொள்சாளக்கிராமநாதன்றாள்வாழி. (க0கூ)

முட்கரக்கரன்றன்னோடுமவன்கிளைமுடியவாண்மை
உட்கரச்சிரங்களெண்ணினுறவுலர்பாதவத்தின்
சுட்கம்வெந்திறப்பாய்வன்னியெனச்சுடுசரங்களேவிப்
புட்கரப்பதியின்மேவும்பொறியுறுமார்பன்வாழி. (கக0)

வேறு. சுரரிவையர்போற்பொதுவர்தம்மாதர்துலங்குமாய்ப்பாடியான்வா
திருவுடன்றுவரைப்பதியினில்வயங்குதேவகிகுமரன்றாள்வாழி [ழி
வரசர்கடுதிப்பவயோத்தியினிலங்குமருள்செறியிராகவன்வாழி
பருதிபோலவிர்கொண்மணியுறுமரவின்பாற்கடற்றுயிலிவாழி. (ககக)

வேறு. பொய்கையுயர்பூதத்தார்பேயார்மிக்க
புகன்மழிசைமாமறையோன்சேரர்கோமான்
வையகமெண்புதுவையர்கோன்மாறன்றொண்ட
ரடிப்பொடிபாணாழ்வார்சீர்மங்கைவேந்தன்

றுய்யமறைப்பொருளுறவேயிவரீராவர்
தோத்திரஞ்செய்நூற்றெட்டுத்திருமுற்றத்தின்
செய்யமலர்மங்கைநிலமங்கைசூழச்
சிறந்தமருந்தேவர்திருவடிகள்வாழி. (ககஉ)

வேறு. இரணியன்சிறுவன்சுரர்முனிசமதக்கினியசேயெழில்கொள்புண்டரீக
ரருமறைபகர்ந்தோனுயருமம்பரீடனருள்செறிசுகன்சவுனகன்றான்
வரநதிபுதல்வன்றுப்பியனுருக்குமாங்கதன்றனஞ்செயன்வசிட்டன்
பரவைசூழிலங்கைவீடணன்முதலாம்பரமபாகவதரும்வாழி. (ககங)

வேறு. வைகுபோதின்மாரியாலும்வாடியேசில்கோவலூ
ருய்கவேதியன்கொடுத்தவிடைகழிக்குளுற்றிரா
வைகிஞானநல்விளக்கின்மாயன்மேனிகண்டுளார்
பொய்கைபூதர்பேயரானபுநிதர்வாழிவாழியே. (ககச)

வேறு. மொழிசெய்பல்சமையங்களூழ்கியே
வழிசெய்யாதெனமாற்றிநல்வீடருள்
சுழிசெய்சானவிபாதனைச்சூழ்ந்துவாழ்
மழிசைமாமறையோனென்றும்வாழியே. (ககரு)

வேறு. சிலைசேர்கரனுருயிர்கொன்றவிக்கொண்டறேவி
வலிசேர்காராவணன்றேர்மிசைபோகும்வாய்மை
யொலிசேருமுனைங்கடவோடுதியென்றுசென்ற
குலசேகரனாகியகொற்றவன்வாழிவாழி. (ககசா)

வேறு. அதுவிதென்றயராதுபல்லாண்டுரைத்
துதவியேமுகுந்தற்கொளிர்கோதையார்
வதுவையாகநன்மாதலனுகிவாழ்
புதுவையந்தணர்பொற்பதம்வாழியே. (ககஎ)

வேறு. ஆறங்கமுநால்வேதமுமறையும்பொருளெல்லாம்
நூறுமிருநூறுமெழுநூறும்பெறநுவல்வோன்
வீறுந்திரைநதிசூழ்ந்திடுகுருகாநகர்மேவு
மாறன்சடகோபன்றிருவடித்தாமரைவாழி. (ககஅ)

வேறு. அண்டரடிப்பொடியெனவே
யரைத்துழக்குங்கும்பகன்னனுதியாகுந்
துண்டரிடிப்படமுழக்கிச்சூழ்ந்தவரைக்
கணைகளினுற்றுணித்தசோதி
கொண்டலடிப்பொடியின்மலர்க்குழலியைக்கல்
லுருவகற்றுங்குணங்கள்கூறுந்
தொண்டரடிப்பொடிமண்டங்குடிமறையோன்
றுளிணைகடலங்கிவாழி. (ககக)

வேறு. பூணாரம்பொன்னினுடையார்பொலி
சேணுருந்திருமேனிகண்டகண்
காணுமற்றவையென்றுங்கைதொழும்
பாணாழ்வார்திருப்பாதம்வாழியே. (கஉ0)

வேறு. சதுரர்சதுமறைதமிழினுதவிய
வெதிரின்மகிழ்மலரணியுமிவரொன
முதிருமொழியொருபதினெருவர்செயு
மதுரகவியடிமலர்கள்வாழியே. (கஉக)

வேறு. செங்கண்மாலுடன்செந்திருவைத்தனைத்
தெந்துமானவனெட்டெழுத்தோதிய
சங்கைபோகத்திருமொழிசாற்றினோன்
மங்கைவேந்தன்கலிகன்றிவாழியே. (௧௨௨)

வேறு. அராமீதமர்வாய்கரியுந்திடவாழியினைக்
கராமீதுறவேவிடுவாய்கருணாகரரா
மராமாவெனநான்மறைமல்கிடவேதுதிசெய்
யிராமானுசமாமுனிதாளிணையென்றும்வாழி. (௧௨௩)

வேறு. நாரணனெனினமிலங்கியதிருச்சேறுபதிசெந்தமிழ்ச்சைய [முன்
வாரணமறைந்தோனருள்செறிநாதமுனியுய்யக்கொண்டவந்தணன்
சீரணிமணக்கானம்பிதொல்புகழ்சேராளவந்தார்திகழ்கரும்பார்
தாரணிபெரியநம்பிகல்லிராமானுசனிவர்தாளிணைவாழி. (௧௨௪)

வேறு. கோரத்தாலேபழுக்கொண்டகண்டன்சபைமே
னாரத்தானேயிறையென்றசொன்னானவே
யோரத்தானேதுரோணம்முளைதென்றெழுதுங்
கூரத்தாழ்வான்பதக்கோகனகம்வாழி. (௧௨௫)

வேறு. திருவரங்கநகரின்வந்தபோதுகண்கடெரிகிலாக்
கிருமிகண்டன்மீளவோடவேகிளந்தநான்மறைப்
பொருள்கலந்தமணவரங்கர்புவியடங்கவிசிறினோன்
பெரியநம்பிபிள்ளைபாதமலர்கள்வாழிபெரிதரோ. (௧௨௬)

வேறு. தொம்பிளைந்தொடிந்தேயெட்டுக்கரிகுலந்திடவென்றோன்சே
யம்பிளையவனைத்தாக்கமருந்துதவனிலராசர்
தம்பிளைக்கயன்வாழ்வீய்வோன்முனிணையேத்திவாழு
நம்பிளையிருபொற்பாதநளினங்கள்வாழிவாழி. (௧௨௭)

வேறு. உணவாகியவைம்புலநோய்களுமோடவெங்கும்
பணமாயிரப்பஃறலைப்பாந்தளிற்பள்ளிகொண்டு
பிணையேயின்முராரிபொற்றுளிணையேத்திவாழு
மணவாளனென்னுந்தவமாமுனிவாழிவாழி. (௧௨௮)

வேறு. மாதவனொண்சடகோபன்றமிழாற்செய்த
மறையொழியாவண்ணமதிற்குடந்தைமாலுக்
கோதியவாராவமுதாம்பத்தைக்கேட்டே
யுயர்குருகூருறங்காதவெகினத்தின்கண்
டொருவச்செந்திருவாய்மாறன்கூறத்
திகழ்திருவாய்மொழியையுலகுய்யத்தந்த
நாதமுனியியலிசையினும்வல்லோ
னளினமலரிணையடிகள்வாழிவாழி. (௧௨௯)

வேறு. ஓரங்கலாதநாவுடையானுருவிலாதோனைங்கோலின்
வீரங்கலாமலிடைந்துடையவெற்றியுறமுக்கோலுடையா
னுரங்கலாரங்கமீழ்திருவையகலாவரங்கரடிபிரியாச்
சீரங்கநாராயணமுனிதன்சிறந்தவிணைப்பதம்வாழி. (௧௩௦)

வேறு. கராசலமுறவேபிணித்திழுப்பக்கராசலமவணிஞாலமிடச்
சராசனம்வாளம்வளையாழிதண்டுந்தரித்துவந்துதவித்
துராசையொருவுமுனிவர்தொழத்துலங்குமரங்கர்பதமேத்தும்
பராசரபட்டரிருபாதப்பதுமமலர்கள்வாழியரோ. (௧௩௧)

வேறு. தீதவியாசில்பொன்னித்திரையுலாமருங்கினோங்கு
மாதவியாரம்பூகம்வயங்கியவரங்கமேவுஞ்
சோதியைவியாளமீதிற்றுலங்கியைச்சுருதியோதும்
வேதவியாசபட்டர்விளங்கியபதங்கள்வாழி. (௧௩௨)

வேறு. நந்தாடவெங்குங்கயறுள்ளிடநாரம்பொங்க
வந்தாடுமாமதிப்பொய்கையின்மாமறைவாய்த்
தந்தாடியதேத்துமரங்கனைச்சார்ந்துபோற்றுங்
கந்தாடையண்ணன்கமலப்பதம்வாழிவாழி. (௧௩௩)

வேறு. உதிட்டிரன்றனக்கொன்னலன்வஞ்சமிக்
கதுட்டன்மாளக்கவான்றட்டிக்காட்டிய
மதிட்டுவாரகைமன்னடிபோற்றிய
வதிட்டையாயன்மலரடிவாழியே. (௧௩௪)

வேறு. பெருமலையப்பினிற்பிறழுவேகடை
கருமலையொப்பனார்கழல்கள்பேணுவார்
மருமலையப்புகீள்வதிட்டையாயனார்
திருமலர்ப்பாததாளிணைகள்சேருவாம். (௧௩௫)

எயினன்ராமாவெனவெழில்கொள்வைகுந்தத்
துயர்வுறவயங்கியதன்மையாமென்றன்
மயர்வறவெட்டெழுத்தோதுமாந்தர்க
ளியல்புறுபெருமையையியம்பற்பாலதோ. (௧௩௬)

வேறு. நீதிசேர்செல்வம்வாய்க்குநிவந்தமெய்த்தருமநீனு
மேதமின்ஞானமெய்துமிந்திரையினிதுநோக்குஞ்
சேதிபராசனோடச்செருவென்றுவிதர்ப்பனல்குங்
கோதையைமணந்தமாயோன்சிலைவலிகூறுவோர்க்கே. (௧௩௭)

உன்னியகருமம்வாய்க்குமுயர்மறைநெறியுண்டாகி
மன்னவராகிவாழ்வார்மறுவிலாமக்கட்பேறும்
பொன்னெடுங்குன்றமானப்பொருதவேறேழடர்த்துப்
பின்னையைமணந்தமாயோன்பெருநலம்பேசுவோர்க்கே. (௧௩௮)

வேறு. திருவினுடனவசுந்தரையுநீளையென்னுஞ்
செழுங்கொடியுந்தேவியராய்ச்சிறந்துதோன்றப்
பருமணிமேற்புரள்பணமாயிரங்கள்கோடி
பருதியொளியெழுமரவப்பாயன்மீதே
கருமுகின்மேற்றிகழ்கமலக்காடுபூத்த
கவினுறவால்வளைநேமிகதைவாள்சார்ங்க
மருவவகல்பயோததியின்வயினதேயன்
வலம்வரவாழரியடியெம்மனத்துள்வைப்பாம். (கஙகூ)

வேறு. இதரதேவதைதயைநினைக்கிலாமதியையீய்ந்துநீயானகிலிலங்கு
சுதைதருமொழியார்கலவியிற்படிந்துதூர்த்தனுத்திரிகுவதொழித்துப்
பதமரிச்சித்துச்சரிதையைமறவாமனமளித்தென்பவந்தீர்த்தி
சதுமுகனோடெவ்வுலகுமூர்த்தியினிற்றந்ததிற்றோன்றியதலைவா. (கசO)

வேறு. கன்றெடுத்துவிழவெறிந்துஞ்சகடுதைத்துங்கரமதனாற்
குன்றெடுத்துமழைதடுத்துங்கலையெடுத்துங்குருந்தமர்ந்து
மென்றினவிர்மறைந்திடவேதிகிரிதனையெடுத்தடைத்து
நின்றுகுழலூதியருணெடியவன்றன்பதநினைப்பாம். (கசக)

வேறு. அன்னைதன்னுதரத்தடைந்துசோடசமாம்வருடமாரழகனுய்த்தரங்க
துன்னுபாற்கடலிற்சோதிபாலகச்சுதனெனுமவாவினுல்வியாசன் [ந்
பின்னுறநடந்துவிளித்திடவநத்திற்பிறங்குபாதவங்களோலென்னனவே
தொன்னலனுறவேசெனனபாசத்தைத்துணித்தகன்முனிவனைத்தொழு
[வாம்.

வானநாரியர்நக்கினத்தினராகிவாவிநீர்மருவவொண்வியாச
னீனமில்வசிட்டன்பராசரன்வரத்துசிடையினிற்புனைந்திலச்சித்தே
வேனிலான்விசிகம்விலக்கலாதவர்நீர்விளங்கியசுகன்றனக்கியாமுங்
கானுறுமரமுஞ்சமமெனவுரைப்பக்கடிதகன்முனிவனைத்தொழுவாம்.

வேறு. இருக்குமுதன்மலரயனோடேழுலகமளித்தவினை
மருக்கொள்குழற்றேவகிதன்மதலையெனவந்தவனித்
திருக்குளதெலாமடியச்சிசுபாலன்றிகைத்தோட
விருக்குமணித்திருவைமணந்துவந்தருள்வான்சரிதைதனை. (கசச)

புகலரியவிறலபிமன்புதல்வனுக்கன்றருள்புரிந்து
சுகன்மொழிபும்வடகலையையான்றமிழாற்றொடுத்தனனீண்
மகரநதிபதியலையவரும்விசையைநிகரெனமண்
ணுகுசிறுகூவற்புனலுலாவியமண்டூகமொத்து. (கசரு)

வேறு. சுகனவன்பிதாவவன்றந்தைதாய்மையாற்
பகர்கதையரியினம்பருப்பதங்களாற்
சகரநீரடைப்பமெய்தனின்மனற்கொடே
புகுமணிவியல்பெனப்புகலுவேனரோ. (கசசா)

வேறு. திசைசெவிடுபடநெடியசிகாமுடியினமொடிய்
விசைகொடெதிர்வருகெருடனிகரெனவேவிரிதிலன்வாய்
மசகமிருசிறகசையவருசெயலேயொத்தனவா
லிசைகொள்சுகனருண்மொழியையான்றமிழாலியம்பியதே. (கசஎ)

சம்பரனைவதைத்துயருந்தசரதராமன்சரிதை
கம்பன்மொழிசெந்தமிழின்கவித்திறத்தின்காட்சிகண்டு
மம்புயங்களலர்ந்தெழுநீரிலஞ்சிதனிலாம்பலுந்த
தம்பியபோலேவாசுதேவகதைசொல்லினனால். (கசஅ)

வேறு. இரைகடலிப்பிகாற்றமெள்கிலாததனிற்றேன்றுஞ்
சரியில்வெண்டாளநற்றிச்சார்குவார்போலஞானந் [ண்
தெரிகிலேன்மொழிந்தபுன்சொற்சிறுமையைப்பெருமையாய்க் கொ
டரிதலப்புகழையுள்கிமகிழுவாரறிஞர்மாதோ. (கசகூ)

வேறு. பராசரன்புதல்வன்முதலினோருரைத்தபதினெட்டுப்புராணமாமதனு
ளிராசையையுறுத்தும்புராணமோராறுங்கரில்சாத்திகமெனவுரைப்ப
ரிராசதபுராணத்தியல்பிருமூன்றென்றியம்புவரிதுவுமேயன்றித்
துராசையையளிக்குந்தாமதபுராணஞ்சொல்லுவர்மூவிரண்டெனவே.

காருடம்பதுமம்வராகம்பாகவதங்கவினுறுவிண்டுவின்புராணம்
நாரசிங்கத்தினுடனிவையாறுநலனுறுசாத்திகபுராண
மேருறுமார்க்கண்டேயம்பௌடிகம்வாமனமியற்பிரமகைவர்த்தஞ்
சீருறுபிரமாண்டத்துடன்பிரமஞ்சிறந்தவிவ்வாறும்ராசதமே. (கருக)

அந்தமார்மச்சங்கூருமஞ்சைவமாக்கினியங்காந்தத்துடனிலிங்க
மிந்தநூற்புராணமாறுந்தாமதமாமிராசதந்தாமதமிரண்டும் [ஞ்
வந்தெழுஞ்சனனமறுத்துயர்பதத்தைக்கொடாதுசாத்திகமகாபுராண
சுந்தரவரியின்பதத்தினையளிக்குமாதலாற்சுகன்மொழியுரைத்தேன்.

வேறு. எதுகுலத்துவருமிறையோன்சரிதையைநற்சுகவிசையா
லீதவுசொலேத்தமிழினுலுரைத்தவன்வண்டிருவரங்கம்
பதியமர்வேத்திரக்கரத்தோன்பழமறையோன்வரதனெல்லிக்
கதிபதியாயுயர்ந்திடுபேரருளாளநாதனரோ. (கருங)

வேறு. ஆபுமறையோரெண்ணவருஞ்சகார்த்த
மாயிரத்தெழுநூற்றோடறுபத்தஞ்சாந்
தாயசுபகிருதுதனின்முதன்மாதத்திற்
றலங்குகுருவாரத்தத்திராடநாளி
னேயமுடனெல்விநகர்வரதராச
னிகரிலரங்கத்திலரவணையினேற்கு
நாயகன்முன்னறிஞர்மகிழ்ந்திடவேவாசு
தேவகதையாரங்கேற்றிநலனுற்றனே. (கருச)

குந்திசுதர்தேவியுடன்கொடுங்கானின்மாதவனைச்
சிந்தைசெய்துமுயர்கதியைச்சேர்ந்ததுவுமகபதிசேய்
மைந்தன்மகன்றனக்குவியாசன்குமரன்மால்சரிதை
யந்தமுடனமுதெனவேயருளியதுமறையலுற்றேன். (௧௫௫)

திருவரங்கப்படலம்-முற்றிற்று.

ஆ- இவ்வளவும்பாயிரம்.

ஆ- திருவிருத்தம். ௧௬௧

௨-வது—நைமிசாரணியப்படலம்.

வேறு. பூமிசைவனிதைகொழுநனுமுராரிபுவியிடத்தருந்தவரிலையத்
திமைசெயசுரர்மடிந்திடவிடுப்பத்தெசசதகோடிசூரியர்போ
னேமிவந்தவணவதைத்தவண்விழவேகிரிலாநைமிசாரணிய
நாமமுற்றிடவேயிலங்குமாச்சிரமத்தனேகமாமுனிவர்நண்ணினரால்.

சவுனகன்முதலாமருந்தவரெல்லாஞ்சத்திரயாகத்தைமுயன்று
சிவனயனெடுமாலிவர்மகிழ்ந்திடவேதெசசதவருடமுநிறைய
வவிசொரிந்தழலின்மறைச்சொலிரப்புமவர்முனேசூதன்வந்தணுகக்
கவினுறுதவிசினிருத்தியாச்சரியத்துடனிவைகழறினரன்றே. (௨)

அயனிகர்வியாசனருளியபுராணமனைத்துக்கும்பாத்திரமானு
மியல்புறுமறிஞர்மகிழ்ந்திடச்செவிகட்கினியநல்லமுதெனவிசையாற்
செயலுறுசரிதைப்பொருளினையெவருந்தெளிவுறப்பகருமாபுருட
சயமுறுஞானம்வழங்கிடுங்காதையருளெனச்சவுனகன்மொழிவான்.

கனமுறுதடத்தின்செயலெனச்சனனமரணமுங்காட்டுமிக்குரம்பை
தனினமர்சீவனரகினுஞ்சுவர்க்கமதனிலுமமர்ந்துபின்புவியின் *
சினமுறுவிலங்குபறவைகள்கிருமிநருமாய்ச்செனித்திடாதுயர்ந்த
வனகன்வாழ்பதத்தினமைத்திடுஞ்சரிதையருளெனச்சவுனகனறைந்தான்.

சிவனெனவிளங்குஞ்சவுனகமுனிவன்சிறந்திடவுரைத்தசொற்கேளா
த், தவர்களெண்சூதனறைகுவானிகரில்சத்தியவதிதருதனையன், கவினு
றவருள்பாகவதம்வாளபிமன்காதலன்போசனாகிப், பவமிலாச்சுகன்
றன்மொழிந்திடக்கேட்டபுராணத்தைப்பறைகுவனென்றான். (௫)

சூதனீதறையச்சவுனகனறைவன்றூயனாகியசுகமுனிவன்
பூதலத்தமரின்மடிந்தவாளபிமன்புதல்வன்பாலேதுகாரணத்தான்
மாதவருறவேகிரில்பாகவதமகாபுராணத்தினைமொழிந்தான்
நீதகல்வியாசன்பயிற்றியவுனாயென்றோதிடவவனிவைசெப்பும். (௬)

தரங்கநற்சரசுவதிநதிக்கரையிற்சம்மியப்பிராசவாச்சிரமத்
தரங்கடையயம்போலவனியிற்சனங்களருவினையகலவேவியாசன்
புரங்களைபுரிதன்மகிழ்ந்திடநாலுபெயரதாய்மறையினைப்புகன்று
கருங்கடலுடனேழுதிருவுலகிற்கவினுறுபாரதம்பகர்ந்தான். (௭)

மறையறைவியாதனிருக்குவேதத்தைமறுவிலாப்பயனிலங்கறைய
நெறியுறுவைசம்பாயனமுனிவனிகரிலாவெசுருவைநிகழ்த்த
வறிவுறுசெயன்சாமத்தினைமொழியவதருவவாரணஞ்சுமந்து
பறையவேரோமகருடணனிகரில்பாரதம்பகர்ந்திடப்பணித்தான். (௮)

பயிலமாமுனிவன்பழுதிலாவைசம்பாயனர்செயமுனிபாரிற்
செயலுறச்சுமந்துமறைகணான்கினையுந்தெளிவுறவந்தணர்க்கறைந்தார்
கயலுறுகடல்சூழ்காசினியமர்ந்தோர்கவினுறுபாரதப்பொருளை
யறியவேரோமகருடனச்சூதனறைந்தனனுலகெலாந்தழைப்ப. (௯)

சத்தியவதிசேய்சதுமறையைத்தானறைந்துபாரதத்தினைமொழிந்தும்
புத்தியின்மலமாகாமையான்மலினம்பொருந்தவே மெய்யெலாமெலிந்
சித்தம்வேறாகியுழலும்வேலையின்வாய்சிறந்திடுமொதவமுனிவ [னா
னத்துறுநதிவாய்பராசரன்குமரனண்ணுமாச்சிரமத்தையடைந்தான்.

வீணையுங்குடையுஞ்சிரகமுந்தண்டும்விளங்கிடநாரதபகவான்
வாணனாயிரந்தோடணித்தவன்புகழைத்துதித்தவன்வருதலும்வியாசன்
பாணியாற்றொழுதுசிரசினாலிறைஞ்சிப்பரிவுடனாசனத்திருத்தி
வேணியார்விமலனிகர்தவன்முனரினிருந்திடச்சுரர்முனிவிளம்பும்.

வேதநான்கினையுமுலகெலாந்தழைப்பவிரித்தனைபாரதவிசையைச்
சூதன்யாவருக்குமறைந்திடப்பணித்தாயாகிலுந்தூயயோகியர்தந்
நாதனாமுராரிசரிதையைப்பரிவானவின்றிடாப்பாவம்வந்துறவே
யோதியுமுணர்ந்துமனதுநின்மலமாகாமனீயுழந்தனையென்றான். (௧௨)

இவையெலாமொழிந்தயாழ்முனியடியினிறைஞ்சியேபராசரன்குமர
னவையறுமறைநான்கினையுநானவின்றுநலனுறுபாரதம்பகர்ந்தும்
மறுவுறுமனதுகலங்கமெய்ஞ்ஞானம்வளருதலிலாமலேகுறைவா
யறிவறலானிவ்வினையினையகலவருளுநீயருளுதியென்றான். (௧௩)

நிகரிலாமுனிவனிவைநிகழ்த்திடலுநெறியுறுநாரதனனங்கள்
பகிரதியயத்தைப்பருகவேகரடம்பழுதுறவச்சலம்பருகா
திகழ்வுறுகிருமியினைத்தகட்டத்தினிழுக்குநீருந்துவபோன்று
ககபதிதுவசன்புகழைமெய்யறிஞர்கழறநீயிதராநூல்பகர்ந்தாய். (௧௪)

கன்மகாண்டத்தைநிறைத்தவரெனினுங்கவினுறுதிருமகள்பதியா
நின்மலன்புகழைநினைக்கிலாதவர்கணிரயத்தினுறுவர்வேதத்தி
னன்மையையுணராதறநெறிநிரம்புநவையுறுமனத்தினரெனினு
மன்மதன்றந்தையடியடைந்தவர்கண்மருளறவுயர்பதத்தமர்வார். (௧௫)

காசினியதனிற்றவஞ்செய்வார்யோகக்கழறிடிலியமநியம
மாசனம்பிராணாயாமமற்பிரத்திகாரதாரணமருட்டியான
மேசகல்சமாதியிவையெட்டுமுணர்ந்தோரொன்னினுமுராரியொண்புகழின்
வாசனையிலாதோர்சொற்கமெய்திடினுஞ்சென்னமாம்வாரியின்வீழ்வார்.

ஆவலையகற்றியவனியிற்றீர்த்தயாத்திரைமருவுவோர்பெரியோர்
சேவைசெய்திடுவோரவர்களான்முராரிசரிதையைத்தினந்தொறுங்கேட்
பாவமாமளப்பில்பரவையைக்கடப்பார்பதுமமாபன்னவரிதயத் [டே
தோவுதலிலாமலிலங்குவனவாயுவப்பொடுந்தன்பதத்துய்த்தே. (கஎ)

படியினில்வயங்கும்பாதவஞ்சடையப்பாவகன்றுலங்குமாறெனமா
லடிநினைந்தவர்பிற்குணமிரண்டகற்றியறனுறமுற்குணத்தாள்வர்
சடமகற்றியசாத்திககுணத்திறைவன்சங்குசக்கரந்தரித்தவனே
வடிவுடைமலரான்மகுணனுங்கவர்கள்வைகுந்தம்பெறவருள்செய்வான்,

மறைமகம்யோகங்கிரியைமெய்ஞ்ஞானமறுவிலாத்தத்துவதன்ம
நெறியுறுகதிஷமிவையெலாமுராரிபெயருறநிறுத்தினனலனு
மறனறவிதரதெய்வத்தையடையினிவையெலாமநனமமாயளக்க
ருறுமுயர்கலங்காலடைந்திடவுடைந்தேயழிவபோற்பருவாலுறுவார்.

ஆதலின்முனிவனவனியிற்சோகமோகவெம்பவங்களையகற்றுஞ்
சீதரநெடுமாலமிர்தநாமங்கடிறமெனவுணருதியான்முன்
றாதிபுத்திரனாய்ப்பரமபாகவதவெதிகளாற்றத்துவமறிந்தேன்
மாதவனடியானெனமகிழ்வுற்றேன்மற்றவைகேளெனமொழிவான். (உ0)

சுரர்முனியெனுநான்பூருவசெனனத்துலங்குகெந்தருவனாய்த்தோன்றி
யுருபெருங்கண்ணனெனும்பெயராகியுருவினலதிகனுமாகி
மருவையரிடத்தினதிகமோகனுமாயமர்ந்திடுமெனைத்தெசப்பிரம
ரருமறையவர்சேர்மகத்தினிற்கானமிசைக்கநீவருகெனவறைந்தார். (உக)

தீதினையகற்றியுயர்தெசப்பிரமர்மொழியினாற்றேவியருடனு
மேதமுற்றிடானவர்செயுமகத்தினிடையிற்பாடவத்தொடுமெய்த
மாதர்களுடனீஆர்த்தனாயிவணின்வந்தனையாதலினிழிவாந்
தாதிபுத்திரனாய்ச்சனித்திடுகெனவெந்தழலுறச்சபித்தனரன்றே. (உஉ)

சாபமுற்றியானயங்குகெந்தருவனாகியசெனனத்தையொருவிப்
பாபமுற்றிடவாண்டுறையுமோர்மறையோன்படைத்திடுந்தாதிபுத்திரனாய்
கோபமுற்றிடுநற்குணமுடையவனாய்ப்பிறந்தைந்துபருவங்கூடமா [க்
னுபியிற்றிகழ்வோன்றனைமிகவெதிகணால்வர்வந்தவ்விடத்துற்றார். (உங)

ஏதமிலெதிகள்வருதலுமறையோனெதிரெழுந்தவர்களையிறைஞ்சி
யாதரவுடன்றன்மனைதனிற்கொணர்ந்தேயருக்கியமளித்தபின்பரிவாற்
றாதிபுத்திரனுமெனையுவர்க்கேவல்செய்யும்படிசாற்றியேவிடுப்ப
மாதவமுறையானவர்களேவினைசொன்மருமலாண்டேழியஞ்செய்தேன்.

தாதிபுத்திரனாய்த்திரியுமென்றவத்தாற்சாதுமாதத்திடையெய்து
மேதமிலெதிகள்வரமனைமெழுகியேவியதொழிலெல்லாங்கேட்ப
நீதியார்தவத்தோர்நதியினிற்படிந்துநியமமுற்றியபினர்ச்சமைத்த
வோதனமருந்திமிகுந்திடுமிலையினுச்சிட்டமளிக்கயானுகர்ந்தேன். (உரு)

மாதவமுறையானெதிகளுச்சிட்டம்வழங்கிடவருந்தவென்மனத்தி
னேதமற்றுயருமறிவுவந்துறமாதவன்கதையவரியம்பிடும்போ
தாதரவுடனுமகிழ்ந்தியானேற்பவதுவெலாம்விரித்தெனக்கறையக் [றே.
கோதின்மெய்ஞ்ஞானம்படர்ந்திடயானோர்கொள்கொம்பாயுணர்ந்தனனன்

வேதமோதிகண்மறையவன்மனையினிருதிங்கண்மேவியபின்
போதலுமவரைத்தொடர்ந்துதானேகப்பொறையுடையவரெனைமகிழ்ந்து
தாதிபுத்திரனென்றிகழ்ந்திடாதெனக்குத்தத்துவஞானத்தைமொழிய
வாதரவுடனங்கவர்களையிறைஞ்சியகத்தினிற்றிரும்பிவந்தனனால். (உஎ)

தூயயோகியர்களறைந்ததத்துவத்தாற்றுலங்கியவிருத்தியுண்டாயுந்
தாயினையொருவமனதிலாததனாற்றவஞ்செயுங்கருத்தினையறியே
னேயமோடவளோடுறையுநாளவளைநெறியுறுமறையவனோக்கிப்
பாய்புனிற்றுக்கண்மாவநத்திடைபோய்ப்பால்கறந்தெடுத்துவாவென்றான்.

மறையவன்மொழியால்வநத்தினாவினங்கள்கறந்திடவல்லையிற்செல்லு
நெறியிடையரவுகடித்திடவவளுமிறந்திடநேமியோனருளா
லறிவுவந்தனனவளைமடிந்தமைதானலனெனநினைந்தவணொருவிக்
கறையடியுழுவையிருளிகோளரிகள்கரடிசேர்கானிடையடைந்தேன். (உகூ)

மனிதர்களணுகாவரையுறும்வநத்தின்வல்லையினெய்தியான்றிரியத்
தினகரன்வெயிலாற்பசியுறவவணோர்கயத்தினிற்செலத்தினைப்பருகித்
தனியரசருகினிருந்தரிதியானந்தளர்விலாமற்கருதிடவென்
மனதின்மலமாயுறப்பரஞ்சோதிவந்துமுன்னின்றவண்மறைந்தான்.

இருவிழிகளிப்பத்திருமகள்கொழுநனென்முனிற்றோன்றியேமறையத்
துனைவரத்திசைகளொருங்குறத்திரிந்துதயானுவாமுராரியைக்காணுப்
பருவரலுறயான்பருவமோரைந்தாஞ்சிறுவனாதலிற்பரிந்திரங்கி
யரியுயர்விசும்பினடைந்தசரீரியாகியேயிவையறைந்தனனால். (ஙக)

தாதிபுத்திரனேயெழுந்தவிச்செனனந்தன்னினீயொப்பிலாதுயரு
மாதியாமெனைத்தானடைவதற்கரிதேயாதலாலிவ்வுடலகற்றி
யோதுதற்கரியவழிவிலாச்சரீரமுற்றெனையடைதிசின்னாளிற்
பீதியுற்றிரங்கேலெனவருள்செய்யப்பிரான்றனைச்சேவித்தவணிருந்தேன்.

வருடமோர்சதுரயுகஞ்சகசிரமாய்வரமலரயற்கிரவாகக்
கருடவாகனன்றன்னருளினிலிழிவாமுடலினைக்கழித்துத்திவ்வியமாம்
புருடனாய்ப்பிரமன்றுயில்கொளமனையிற்புகுதும்போதவன்வயிற்றுற்றே
யிருடருபொழுதாருகமலுங்காலுமிலங்கியாண்டிருந்தனனன்றே. (ஙங)

சதுமுகனிரவிற்சகசிரசதுரயுகமொருப்படத்தைவானத்
துதிகமாயெழுந்தவவாந்தரவெள்ளமகன்றிடவவன்றுயிறுறப்ப
வுதையமாகியபோதவன்மடிதன்னினுதித்தாரதனெனும்பெயராய்க்
கதிதருமுராரிக்கடியனாயினனாலறிதிமாமுனியெனக்கழறும். (௰௪)

தாதிபுத்திரனாமிழிவினிற்பிறந்தாஞ்சங்கொடுசக்கரந்தரித்த
வாதிதன்சரிதையருந்தவரறையவழியுடன்கேட்டமாபலத்தான்
மாதவர்துதிப்பவயன்வயிற்றொன்றிவயங்கினேன்மாலடியவனா
யாதலின்வியாசமுனிவகாரணநற்சரிதையையறையெனப்பறைவான்

நற்றிலாதிருக்கத்தொடர்ந்துதீவினைதா
    னலியுமாறெனப்பலவுயிர்க்கு
முற்றநல்வினையால்விபவமுற்றாழ்ந்த
    நிலனுறமுடுகுசீரொனவே
பற்றுமாலார்க்குமுயலவேண்டுவதிப்
    பரமநற்சரிதையைப்பரிவாற்
கற்றுணர்ந்துரைப்பதுலகிற்றுல்லபமா
    மவையினைக்கழறுகென்றிசைப்பான். (௰௬)

அரிபெயர்பிறையவயங்குபாகவதமச்சுதனயன்றனக்கறைய
விரைமலருறுவோன்யான்செய்மாதவத்தால்விளம்பினானதனைவிரித்தே
யிருவினையகலச்சனனநோய்பிரையவிருளறவிருதயத்திலங்கித்
திருவினாயகன்வந்துறப்பரனடியார்களிப்பணிசெய்பெனவறைவான். (௰௭)

வேதநான்கினையும்விரித்ததன்பொருளைய்மூமிதாயுணர்ந்துகேசவனே
யாதிமற்றவனையலாததெய்வங்களிறையலவீதுசத்தியநா
னோதினேனெனவேமொழிந்தநீயிதரநூல்களையுரைக்கிலையுயர்ந்த
யாதவக்குலக்கோன்சரிதையையியம்பென்றியாழ்முனிவிசும்பினேகினனால்

இவையெலாமொழிந்தேயாழ்முனிவிசும்பினேகலும்வியாசமாமுனிவ
னவையறப்புலனைவிளக்கியேகாந்தசித்தனாய்நாரணன்பெயரிற்
சுவையுறவுயர்ந்ததுவாதசாக்கரத்தைத்துலங்கிடத்தன்மநத்தமைப்பப்
பவமகற்றிடவேபரமன்முன்றோன்றிப்பாகவதந்தனைப்பகர்ந்தான். (௰௯)

நிகரிலாவியாசன்பதினெண்ணாயிரமாய்நிறைந்திடுசுலோகபாகவதஞ்
சுகமுனிக்குரைப்பவவனருள்சுரந்துதூயவாளபிமன்மைந்தனுக்குப்
பகிரதிக்கரைமேலெழுதினமதனிற்பயோத்தியமிர்தெனப்பகர்ந்தான்
சகலசாஸ்திரவேதத்தமர்பொருளைச்சவுனககேளெனமொழிவான். (௨௦)

அரவுயர்துவசன்மடிந்திடத்தருமனறனுறத்திரிதராட்டிரனா
திருபன்மாமகுடங்கவித்திடத்தானாண்டிளவரசியற்றியேநிகரி
லருமறைமுனிவர்மகிழ்ந்திடச்செங்கோலவிருறவமர்ந்திடுநாளிற்
றரையினினுயர்ந்தசதாகதிதனையன்சார்ந்தனனுடனிவைபகர்வான். (௨௧)

இடமொமக்குறவஞ்சகம்பலவியற்றியிணையிலாத்துரோபதிதுகிலைக்
கடைகயிறெனவன்றுரிந்தெமைவனத்திற்கடியனுய்த்தரத்துநின்மதலை
படிபடுத்திடுமென்புயமிதுவெனுஞ்சொற்பகர்ந்தவனறிவுறுகுருட
முடிகவித்திவணிருத்தியோவெனவேமொழிந்திடவவனுளைந்தனனால்.

தினமுறற்பவனன்றிருமகன்றனித்தவிடமறிந்திவையினைச்செப்ப
மனமெலிந்துளையுந்திரிதராட்டிரன்முன்மறனிலாத்தருமன்வந்திறைஞ்சி
யினியனபலவுமியம்பவுமிடருற்றிருந்திடுமூத்ததாதையினைத்
தனையனாகினைந்தோவருந்தினையெனமன்சாற்றிடவவனிவைமொழிவான்.

விறலுடைப்பவனன்மதலைவந்துளையவிளம்பியவெள்கலையறையா
னறனருள்சுதனையவனியிலமர்செய்தாருயிரிழந்திடுமென்றன்
சிறுவர்கட்கிவணின்பரிவுடனுதகக்கிரிசையான்செய்திடத்தனங்க
ணிறைவுறக்கொடுக்கினலனெனநவிலநிகரிலானீவனென்றகன்றான். (௬௪)

அனுசர்கட்கிவையையறனருள்குமரனறைந்திடக்கேட்டிடும்வீமன்
சினமுறவிறந்தோர்தமக்கவர்பெறுஞ்செய்திலமயமளிக்குவதன்றித்
தனையர்கடமக்குப்பிதாவடத்துவதுதருமமன்றெனக்குறித்தாகுங்
கனகமோடுடைவையுங்கொடேனெனப்பகர்ந்துகொடுத்தனன்கவினுறுதருமன்

அறனுருதருமன்பரிசனன்புதல்வன்றனக்கவன்சொம்மெலாமளித்து
நெறிநிறைந்திடுநால்வருக்குறுகனகங்கலன்களுநிறைத்திடமகிழ்ந்து
திரிதராட்டிரன்றன்சிறுவருக்கன்பாற்றிலமயமளித்தபின்பிண்டம்
நிறைவுறவுதவிமறையவர்க்கொருங்குநிதியெலாமீய்ந்தனனன்றே. (௬௯)

சிறுவர்கட்குதககிரிசைமந்திரத்தாற்செய்திடுந்திரிதராட்டிரன்பாற்
கறைமிடற்றரன்போற்கனன்றுகான்மதலைகடுகிவந்துருமெனவதிர்த்து
மறமிலாத்தருமன்றனத்தையிவ்வினையால்வவ்வியேவறுமையைக்கொடுத்தி
யுறவுபோற்பகைதீர்குருடவுன்வயிறுவளர்த்திவணுறுதியோவென்றான்.

தினமுமுன்மொழியைப்பவனனற்குமரன்செப்பிடவுளைந்திடுமந்த
மன்னன்முனர்த்தருமன்வந்துநல்லுரையைவழங்கவுமவுனனாயிருக்க
நினைவுவேறாகியிடருறவறன்சேய்நிகரிலாவுனக்கியான்செய்தீ
வினையெதுவென்னச்சமீரணன்புதல்வன்விளம்பியவீதெலாம்விரித்தான்.

அறனறவியற்றுஞ்சுயோதனன்றனையான்பயந்திடுமதிகபாவத்தால்
விறலுறும்பவனன்சுதனிகழ்ச்சியினைவிளம்பிடத்தருமயான்வருந்தி
னுறுவனென்றறைந்தங்குதிட்டிரன்றடுத்துப்பலபலவுரைக்கினுமிராது
நெறியுறும்விதுரன்றுயர்கொள்காந்தாரியினொடுநகரைநீங்கினனால்.

கந்தமார்கடத்திநயனமில்லவன்றான்கடிதினினவரொடுமேக
மைந்தர்கடுத்தங்கிரங்கவுமறுத்துமதியினின்ஞானம்வந்தெழநற்
குந்திதன்கொழுனன்றமையனைவணங்கிக்கூடவேசென்றிடநிகரி
லந்தணர்திலகமாயசஞ்சயனுமணுகினனவனொடுமன்பால். (௭0)

தருமனாண்டிரங்கித்தந்தைதன்மூத்தோன்சார்ந்திடவனத்திடைங்கரி
விரணியமிலங்கவுயருமண்டபங்களெழிலுறுமாளிகைபலவும்
விரைவினிலமைக்கவதனிடையவருமேவியாண்டனேகநாளிருப்ப
வரசர்களுடனேயறனசுதன்றினமுமவ்விடத்தடைந்துமீடினத்தின். (௫௧)

தவமுயல்பவர்களிரணியமிலங்குஞ்சரியின்மாளிகையிற்சார்த
னைவையுறுமெனவங்குதிட்டிரன்வருமுன்னால்வருஞ்சஞ்சயனுடனும்
பவமறவெவருமணுகற்கரியபழுவத்தினடைந்தமர்தினத்தி
லுவமையில்விதுரனிவர்களையொருவிப்பலமிருகங்களோடுறைந்தான்.

விரைவினிற்றருமனிவரமர்வனத்தின்மேவியாண்டிவர்களைக்காணான்
பருவறலுறவேபலவியோசனைகளந்தப்பழுவத்தினெய்தி
யரியமாதவஞ்செய்யரசனோடனைவரடியினினிறைஞ்சியபின்னர்
சரியிலாவிதுரனிரலைமானினத்தோடுறைந்திடக்கண்டவன்சார்ந்தான்.

இரலையினினத்தோடமர்ந்திடுவிதுரன்றமையன்றனருள்சுதனிறைஞ்சி
யுரைபலமொழியவதற்கவனெவையும்விளம்பிடாதோடலுந்தருமன்
றரையினிற்காலாற்றுடர்ந்திடவவனோர்தழைந்தபாதவத்தினிற்கோட்டை
யிருகையாற்பிடித்தாண்டுயரும்யோகத்தாலிமைப்பினிற்சீவனைக்கழித்தான்

உயரும்யோகத்தாலொழித்திடும்விதுரனுயிரேயொளியதாயெழுந்து
தயவுடைத்தருமன்றனுவிடைப்புகுதவிறந்தவன்றனைத்தழல்வளர்த்தி
யியல்புறுமுனிவர்க்கிவையுரைத்திடநீரிருவருமியமன்றனுருவாஞ்
செயலினன்மடிந்தோன்சீவனின்னிடத்திற்சேர்ந்ததென்றுரைத்தனரன்றே

தவர்களீதுரைப்பவவர்களையிறைஞ்சிச்சமன்சுதன்மூத்ததாதையினை
யவனியினயனம்புனனிறைந்திடவேவணங்கலுமவன்விடைகொடுப்ப.
வுவமையினகரியடைந்துசெங்கோலையோச்சிமாமறையவர்மகிழப்
பவமறவறங்களுயர்ந்திடவியலும்படியினையாளுநாடன்னின். (௫௬)

கரியுறுவனத்திற்கண்ணிலாவரசன்காய்கனிகந்தமுமருந்திச்
சரியிலாமதியிற்றயங்குமக்கினியகோத்திரஞ்சந்ததநடத்து
முரனிலாமையினலாற்றுமசமாரோபணம்பணவுயர்ந்திடுந்தழலை
விரவினவ்வனத்தினிகரில்காந்தாரிவிடுப்பவவ்வழல்பரந்தெழுந்த. (௫௭)

எரிபரந்தகன்றவனத்திடைப்புலர்ந்தவிந்தனப்புல்லிடையெழுந்து
விரைவினிலவரைவளைந்திடவரசன்விளம்புவனுரனுறுமவர்க
டரையினிவ்வழலின்மடிவதுபவமென்றறைந்திடச்சஞ்சயன்கடுகி
வரையினெய்திடநற்குந்திகாந்தாரியுடன்மன்னன்றழலிடைமடிந்தான்

வனமுறுமெரியாலவர்மடிந்திடலுமாதவரவணிடையெய்தி
யனலிடையிறந்தோரத்தியையெடுத்தேயத்தினபுரத்தினிற்றருமன்
முனரடைந்ததனைவைத்திவையெலவயுமொழிந்திடவனுசரோடாற்றிக்
கனலிடைமடிந்தவவரொலும்பதனைக்கங்கையினயமுறவிடுத்தான்.

தீயினாலுயிர்போங்குந்திகாந்தாரிதிரிதராட்டிரனிவர்தமக்குத்
தூயனாந்தருமன்சார்ந்தியதனிற்றோய்ந்தயக்கிரிசைமந்திரத்தா
னேயம்வீறிடத்தானடத்தியங்கத்திப்பதியிடைநிவர்ந்திடுதிநந்தி
லாயிரநயனன்சுதனெனும்விசையனளக்கர்சூழ்துவரையிற்சென்றான்.

துவரையினடைந்தவிசையனப்பதியைச்சூழ்ந்துசாகரமழித்திடவு
மவனியினரசர்மடிந்திடத்திருமாலழிவில்வைகுந்தத்தினெய்தத்
தவர்மகிழ்ந்திடமாமதுரையினிலங்கவச்சிரன்றனைமுடிகவித்துப்
பவமுறுதருமனடியினிறைஞ்சிப்பருவரலுடனிவைபகர்வான். (௬௧)

தரையினினெதுவின்குலத்துளார்முனிவர்சாபத்தின்மடிந்திடப்பரம
ளிரதமீதிலங்கியெழில்கொள்வைகுந்தத்தெய்தினனென்றுபற்குணன்று
னுரைசெயத்தருமன்படியின்வீழ்ந்தாற்றிலோகநாயகன்றனைப்பிரிந்திவ்
வரசினைநற்றியமர்கிலேன்றவத்தினடைவனென்றமைந்திடும்வேலை. (௬௨)

விலையுறக்கொடுத்துக்கொளுமனையதனின்வீழுமியநிதியினைக்கண்டே
யிலகியமறையோன்றனக்குமுன்விற்றோன்றனையிதுகொள்கெனவவன்றான்
றலமுறுதனமுமுனக்குறுமெனவேதருமன்முன்னிருவருமெய்தி
நலனுறுமிவையைநவின்றிடவரசனவைவாதீர்ப்பனென்றறைந்தான். (௬௩)

அரசனீதுரைப்பவிருவருமகன்றங்
கற்றைநாளொருவிடவுயருந்
தருமன்முன்னணுகிமனைகொளுமவனித்
தனமெனக்கெனத்தலம்விற்றோ
னிருநிதியவனிற்கண்டெடுத்தமையா
லெனக்கெனவியம்பிடக்கேட்டு
நிருபர்கோன்மிகவுநகைத்துமாதவரை
நோக்கியேநிகழ்த்தலுற்றனனால். (௬௪)

நென்னலித்தனத்தைச்சுரைபடுமோடு
நிகரொனவிகழ்ந்தவரின்றென்
முன்னரினிதனைவிரும்பியேவழக்கு
மொழிந்தனர்முறைமையைநடத்தி
யின்னலைக்கடிந்தான்யானுமிந்நிதியைக்
கவர்ந்திடவிச்சையாயினனாந்
துன்னுதிவினையையறுத்திடுந்தவத்தீ
ரிவைதெரிந்திடச்சொலுமென்றான். (௬௫)

நலனுறுமரசனிவைநவின்றிடலுமற்றவரவன்றனைநோக்கிப்
புலனுறுதிருபதுவாபரயுகந்தான்போயறன்மெய்நெறியழிக்குங்
கலியடருகமின்றாகையினாலேகருத்திறைற்றான்மதியெவர்க்கு
நிலையுறவமருமெனமனநடுக்கியனுசரோடிவைநிகழ்த்தினரால். (௬௬)

உலகநாயகனுயெமக்கிடர்களைந்தவுத்தமன்வைகுந்தத்துற்றுன்
கலியுகம்புகுந்ததினிநிலனுளுங்கருத்திலேன்கேடிலாத்திருமான்
மலரடியடையவநத்திடைப்போவனெனவவர்யாமும்வந்திடுவேம்
புலனுறுமரசவெனப்புகன்றிடலும்புரவலன்மகிழ்ந்தனனம்மா. (கூஎ)

தரையையாண்டிடவாண்டுயர்பரிச்சித்துசிரசின்மேற்சுடிகையைச்சாற்றி
யிருநிதியாவுமிருபிறப்பாளர்க்கீய்ந்துதன்னனுசர்களுடனும்
விரைவினிற்செல்லுநெறியினில்லாமலிராதுதான்மேவிடும்படியே
யருமறைநெறியான்மகாபதவிரதஞ்சங்கற்பஞ்செய்தகன்றனரால். (கூஅ)

அனுசர்களுடனுமகாபதவிரதஞ்சங்கற்பமடைந்திடுந்தருமன்
றனியகன்றுயருமிளைஞர்கள்சூழத்துரோபதியுடன்வநத்தேக
வினையறுமறலிதானுமோர்சுவானுய்விளங்கியவாலினைக்குழைத்தே
தனைநிகரிலாதநிருபர்களுடனேதரையிடத்தேகியதம்மா. (கூகூ)

தரையினிலளப்பில்வரைகளுநதியுந்தடாகமும்வாவியுங்காவுங்
கரியரியிரலையுழைமரைகரடியுமுழுவைசாகாமிருகங்கள்
கிரியினங்கவரிவிடமுமிழரவுங்கிளர்ந்தெழும்பழுவங்களொருங்கு
விரைவினிகழ்ந்தமுனிவர்சாபத்தான்மெலிகுவாரிடரொலாந்தவிர்த்தார்.

அரியினைமநத்தின்வழுத்தியங்கெங்குமவனியினிராமனில்லாமல்
விரைவினினனேகந்தினமொருவிடவேமேவிடவிதிவழியதனு
லரனறமிலத்திற்றுரோபதிமடிந்தாளதற்பினரொளிகொள்சாதேவன்
றரையினிறந்தானதற்பினர்விசூலனுயிர்விடத்தனஞ்செயன்மரித்தான்.

தூயபாஞ்சாலிசுசிகொள்சாதேவன்றுலங்கியநகுலன்மாவிசையன்
சீயமாம்புழைக்கைசித்திரகாயஞ்சேர்வனத்திறந்ததற்பினரின்
வாயுசேய்நிலத்தின்மடிந்திடத்தருமன்மநத்திடர்மலிந்திடக்கரத்த
னேயமோடெடுத்துவெரினிடைச்சுமந்துநெறியிடையிரங்கியேகினனால்.

ஆவிபோமனுசன்றனைச்சுமந்தேகுமறன்சுதனுங்கசரீரி
சீவனேகியவிவ்வுடலினிற்பயனென்செத்தபாதவங்கினைத்திடுமோ
காவலவெவையுமுணர்ந்தநீயிடைக்களைந்துமூவுலகமும்படைத்த
தேவனைச்சரணென்றடைதியிச்சவத்தைத்தெசியெனவிடுத்தவன்சென்முன்

அனுசர்நால்வருங்கற்புடையபாரியும்வீழ்ந்திறந்திடவறனருள்குமரன்
றனியனுய்ச்செலமாநகரினுந்துடங்கித்தாணியிற்சென்றிடுஞ்சுணங்கன்[ந்து
பினரின்வால்குழைத்துத் தொடர்ந்திடவுலப்பில்பிறங்கல்சேர்வனமெலாமிகழ்
வினையறுதிருக்கேதாரமாந்தலத்தின்மேயினன்றருமரூபவனே. (எச)

காவலன்றிருக்கேதாரமாந்தலத்தைக்கடந்திடுமுரணிலாதயரத்
தேவர்மாமுனிவர்திரண்டுவானதியின்செலத்துநீராடியொண்டருவின்
பூவின்மாமாரிபொழிந்தவணிலங்குவிமானமேற்போதுதியெனவே
யாவலினெனைவிட்டகல்கிலாச்சுணங்கன்றனைமுனரோற்றுமென்றறைந்தான்

மனனிவைமொழியநகைத்துவானவர்களறைகுவார்தருமமெய்மலியத்
தினகரனெனப்பாருலகினின்வயங்கிச்சீதரன்பத்தனுகையினால்
வினையறவிவனியடைந்திடவடையும்விமானத்திற்சுடலையிற்புரண்டு
துனியுறுகணங்கனனுருமோவெனவத்தூயனுநிருபர்கோன்பகர்வான்.

அத்திமாநகரமுதலதாயெனைவிட்டொருவிலாதனுசர்களிறந்துஞ்
சுத்தமார்மனமோடிணைவையுந்துறந்துதுடருமிச்சுணங்கனேருத
சித்திரமுறுமிவ்விமானமீதியானுஞ்செலலெனெனநகைத்துயரிமையோர்
மெய்த்தவர்மகிழச்சுவானுருவொருவிளங்கியமறலியீதறைவான். (௭௭)

நீதியும்பொறையுந்தருமமுமறிவுநிறைந்திடுமிவன்றனைநிகராய்ப்
பூதலந்தனின்வான்மிசையினினெவருமிலரெனவந்தகன்புகழ
மாதவர்துதிப்பவிமானமேற்றருமன்வயங்கியமறலிதன்பதத்திற்
போதலுஞ்சொற்கத்தியல்பையுநோக்கிநரகுளார்புலம்பவுங்கேட்டான். ௭௮

சரியிலாச்சுவர்க்கத்தனுசர்களுடனுஞ்சுயோதனன்றங்கிடநோக்கி
நிருபனொண்வீமன்விசையன்மாநகுலனிகரில்சாதேவனோடிவர்க
ணரகின்வீழ்ந்தரற்றுமொலியினைக்கேட்டுநலனுறுநெறிகொளென்னனுசர்
நிரையம்வீழ்ந்திடவுநெறியிலாப்பகைஞருயரவுநீதியோவென்றான். (௭௯)

தருமமேமுயல்வார்நரகிடைவிழவுஞ்சற்குணமிலாதவர்சுவர்க்க
மருவவுமியற்றுமறனிலாவிவணின்வைகிலேனெனமனன்றிரும்பித்
தரையிடையுறவேயெனத்தவர்நகைத்துத்தருமநீயமர்க்களத்தன்று,[வார்.
குருவதையுறவேயுரைத்திடுஞ்சடத்தின் கொடுமையினடைந்ததென் றறை

குருவதையுறவேகுராகதத்தாமாவதமெனக்கூறியசெடமா
முறையினிற்கொடுமையுறுதலானிகரிலுத்தமராகுமுன்னனுசர்
நிரையம்வீழ்ந்தரற்றுமொலிகள்கேட்பதுவுநெறியிலானுயர்சுவற்கத்தின்
மருவிடவிவணிற்காண்பதுமாயமனவினிநோக்குதியென்றார். (௮௧)

மருளறுமுனிவரிவைமொழிந்திடலுமறனிலாமனன்பினர்நோக்க
விரணியமிலங்காதனத்தினின்வீமனிந்திரன்சிறுவன்மாநகுலன்
சரியில்சாதேவன்வயங்கிடக்கவரிசாமரைத்தெய்வநாரியர்க
ளிருமருங்கினும்வந்தசைத்திடவுயருமெழிலினைக்கண்டுளமகிழ்ந்தான். ௮௨

தருமனங்கிளையவனுசர்கள்சுவர்க்கஞ்சார்ந்திடக்கண்டபினெறியி
லரவுயர்துவசனிளைஞர்கள்சகுனியடைந்திடுமாழ்ந்திடுங்கோர
நரகினினழுந்துங்கொடுமைகண்டிடுமுன்னயனிலாதவனுநற்குந்தி
திருமகன்வதனநோக்கவான்கிருமிசெறிந்தசீயிடைமுழுகினனால். (௮௩)

நிரையம்வீழ்ந்தழுந்துமறனிலாதவனைநெறியுளான்றயவுடனோக்கிப்
பருதிகாணிருள்போனிலத்திடையிபற்றும்பவமெலாமறவுயர்சுவர்க்கத்
தாரகேதனமன்னிளைஞர்களுடனுண்டுயர்ந்திடவுண்மகிழ்ந்தருளுந்
தருமனல்லனுசர்துரோபதியுடனுஞ்சத்தியலோகத்தைச்சார்ந்தார். (௮௪)

சத்தியவிரதனிளைஞர்களிரிவைதன்னுடன்சத்தியலோகத்
துத்தமமுனிவனெதிர்கொளவடைந்தேயுயர்ந்தகாருண்யவைகுண்டத்
தத்தனுமுராரியடியினில்வணங்கியளப்பரும்பரமவானந்தச்
சித்தியுற்றிடவேதிசைமுகனுவப்பச்சிறந்தினிதிருந்தனனன்றே. (௮௫)

அறனுறுதருமனனுசர்களுடனுமழகியதுரோபதிவரவே
பிறிதிணையிலாதமுகுந்தனைத்துதித்துப்பிறங்கியமகாபதவிரத
நெறியின்மாவிந்தமடைந்ததற்பினரினிகரிலாவபிமனற்சிறுவன்
முறைமையாலுலகமனைத்தையும்புரந்தான்முடிகதிரொளிச்சிரமிலங்க. (௮௬)

உத்தரன்மகளைவதுவைசெய்துயருமுத்தரையருளியகுமரன்
சித்தசனெனவேவயங்கியசெனமேசெயன்முதனால்வரைப்பயந்து
சுத்தமாதவர்கடுதித்திடத்துரகமேதயாகத்தினைநடத்தி
யெத்திசைத்தலத்துமிலங்குமன்னவரைச்செயித்துலகெங்கணுந்திரிந்தான்.

அரசரைத்திறைகொண்டுலகெலாந்திரிந்தவழகியவுத்தரைகுமரன்
றருமதேவதைநற்பசுவடிவாயோர்தாளினின்றிடவருகலிய
னிருபர்வேடத்தைத்தரித்தொருகாலாலதனையுதைத்துநின்றுழிநின்
றரிதிருப்பதத்தாற்சனித்திடுநலத்தாலவையினையறிந்தனனம்மா. (௮௮)

தலமிசையொருதாளினின்றும்பெற்றந்தருமதேவதையெனுஞ்செயலு
நிலமிசையதனையுதைத்துநின்றவன்றனெறியிலாக்கலியனென்பதுவு
நலனுறுமரசனறிந்துவெஞ்சினத்தானவையறவவன்றன்மேல்விசிகஞ்
சிலையினிற்றொடுப்பவெருவுவோன்றனைநீயஞ்சலையேகுதியென்றான். (௮௯)

வெருவியகலியனரசயானமருமிடமெதுவிளம்புகென்றறைய
நிருபர்கோன்யான்காத்திடுமியற்புவியைநீங்கிநீசுரைபருகிடுவார்
தரையினின்வலையர்சூதினைப்பொருவார்தையலார்தமனியமென்றீண்
டுரைசெயுமைந்தனிடத்தினமர்தியெனவவனவணினுற்றனனால். (௯0)

தருமதேவதையைத்தவமுயர்சவுசஞ்சத்தியந்தயையிவைநான்கென்
றுரைசெயுந்தாளாலியான்புரந்திடுமிவ்வுலகினிலமனொவிதுதான்
மருவநீண்மரங்கள்மடிந்திடச்செங்கோல்வளர்ந்திடவுலகையாண்மன்னன்
மிருகயாத்திரையைவிரும்பிவெம்புரவிமேவியேதிரிந்தனன்மாதோ. (௯௧)

வளமுறப்புரவிவெரிநிடைவயங்கிவருமவன்மத்தியானத்திற்
றினகரன்கிரணமுதிர்வுறவவணிற்சிறந்தவாங்கிரமாமுனியைப்
புனல்பருகிடநீதருதியென்றிறைஞ்சிப்புகலவுமவுனமாயிருப்ப
வெனையிகழ்ந்தனனென்றவன்கழுத்திடையிறந்திடுமரவினைப்பிணித்தான்

மாதவன்கழுத்தின்மரித்திடும்பணியைப்பிணித்துமன்னவனகரடையத்
தீதிலாமுனிவன்குமரனுண்டெய்திச்சினந்திறந்திடுமரவினையென்
றுதைகந்தரத்தினிணைத்தவனேழுதினந்தனிற்றெக்ககன்கடித்துப்
பூதலமிசையின்மடிகுவனெனவேசபித்தனன்பொறையெலாமகல. (௯௩)

மனமொனுமபிமன்மதலைதானேழுதினந்தனின்மடிந்திடும்வண்ண
மனலுமிழ்ந்திடுதெக்ககன்கடித்திடவேயறைந்திடுஞ்சிறுவனைமுனிந்தம்
முனியிவன்சபித்தவினையினையரசன்முன்னரின்மொழிகுதிரொனத்தான்
றனைநிகர்த்திடுமாதவர்களையேவவவர்கள்போய்த்தராபதிக்குரைத்தார்.

சரியிலாங்கிரன்கழுத்திடைமரித்தசற்பத்தைப்பிணித்தனையென்றுண்
டெரியுறுசினத்தோடவனருள்சிறுவனேழுநாளதனினீயிறக்க
விரைவினினுயர்தெக்ககன்கடித்திடவேவிளம்பினனென்றவர்மொழிய
வரசர்கோனகைத்துமனையினைத்துறந்துசுரர்நதிக்கரையின்மீதமர்ந்தான்.

அடிசினீர்கனிகாயெவைகளுநுகர்வில்விரதத்தையடைந்திடுமரசன்
படியொடுககனமளந்தருள்பரமன்பதத்தினிலடையவிச்செனன
விடரினைக்கெடுக்கநலனெதுவெனத்தானெனுமுனரெண்கணனெனவும்
விடையவனெனவுமிலங்கிடுமுனிவர்விரைவின்மன்னவன்முனரடைந்தார்.

அத்திரிவசிட்டன்சியவணன்கபிலனங்கிராபராசரனவன்றன்
புத்திரன்பிருகுகவுசிகன்பரசுராமனாரதன்புலத்தியன்வீ
றத்தியைநுகர்வோன்வருதவவசிட்டனரியகண்ணுவன்பரத்துவாசன்
சித்தசன்றனைவென்றிடுமயித்திரையன்கவுதமன்றேவலமுனிவன். (௯௭)

சவுமியன்மோதாதிதியுசத்தியன்போதாயனன்சாத்துவான்கவர்க்க
னுவமையற்றிலங்கிந்திரப்பிரமதன்சீருறவயங்கியபிரயலத
னவமகற்றியநல்லாழிசேனன்காமனையிடர்சதானந்தனுடனொண்
சிவனயனெனவுந்திகழுமாதவர்கள்சேரவுத்தரைசுதன்பணிந்தான். (௯௮)

அருமறைமுனிவர்வரவிறைஞ்சியமன்னுசநத்தவர்களையிருத்திச்
சரியிலங்கிரமுனியருடனையன்சபித்திடத்தக்ககன்கடிக்க
வருமுனரரிதன்பதத்தில்யானடையும்வகையினையருளுவீரொன்று
நிருபர்கோனுரைப்பவவன்றனைநோக்கிநெடுந்தவர்நிகழ்த்தலுற்றனரால்.

அரசநீசரியின்முராரிதன்பதத்தையடைந்திடவேண்டின்மாதவத்தை [தை
விரைவினின்றறையினியற்றுதியெனுஞ்சொல்விளம்பினர்சிலரும்யோகத்
மருவுதனலனென்றுரைத்தனர்சிலர்கண்மறையவர்மகிழ்ந்திடமணியா
விரணியமவனிமுதலமாத்தானமிசைந்திடென்றறைந்தனர்சிலர்கள் (௧00)

நிகரிலாமுனிவர்பலபலவுரைப்பநிருபர்கோன்றிகைத்திடும்வேலை
சகசிரகிரணத்தினகரனவிர்போற்றயங்கியேசோடசவருடம்
புகுமிளங்குமரர்வெள்குமெய்கவினுற்பொலிந்திடவரியடிமறவாச்
சுகனலமுனிவர்மதலையர்பரிவாற்சூழ்ந்திடவரசன்முன்னடைந்தான்.

சுகமுனியவணினடையமாதவர்களெழுந்திடத்துயரொரீஇயரசன்
மிகமகிழ்ந்தவன்றனடியினிறைஞ்சியருக்கியங்கொடுத்தவண்விளங்கு
நிகரிலாதனத்தினிருத்தியபினரினீயிவணடைந்திடயான்றுன்
சகலபாவமுமற்றுயர்ந்தனனெனுஞ்சொற்சாற்றியீதறையலுற்றனனால்.

அரியருளதனாலெனைக்கதிபுக்குதவடைந்தனையாதலிலறிரு
கருணையார்முனிவன்மதலைசாபத்தாற்கடியதெக்ககன்வருமுனரின்
றிருமகள்கொழுனனடியிணையடையுநலன்றனைச்செப்புதியெனத்தா
னுரைசெயுமவனைப்பரிவினானோக்கியுத்தமச்சுகனிவையுரைப்பான். (௧௦௩)

எரிவளர்ந்திடவும்பருப்பதத்திருந்துமிம்பரினயத்திடைப்படிந்தருஞ்
சருகினைப்பொசித்தும்பவனமேயுணவாய்த்தயங்கிடச்செய்திடுந்தவமு
மருமறைமொழியாலியற்றிடுமகமுமருளினானுதவுதானமுமால்
சரணிடையுறத்தாதவன்றனையியற்றுஞ்சரிதைகேட்டியென்றறைவான்.

கயவரையரிக்கரயவரைக்காக்கக்காசினியதனின்மச்சியமா
யியல்புறுகமடம்வராகங்கோளரிவாமனம்பரசிலக்குபாணியுமாய்த்
தயரதன்குமரனலாயுதனசோதைதனையனுமாகியேவயங்கு
மயமதாய்ச்சனகசனந்தாசனாதசனக்குமாரப்பெயராகி. (௧௦௫)

அன்றியுநரநாராயணர்கபிலனிடபனாதனயக்கிரீபன்
வென்றிசெய்தத்தாத்திரேயன்மோகினிமின்வேள்வியின்பிருதுவியாசனுமாய்
நன்றிசெய்தன்மந்திரியுயர்பவுத்தனிவர்களாய்நலகிலனோங்கு
மன்றல்சேர்துளபத்தரிவருசரிதைமகிழ்வுடன்கேளெனப்பகர்வான். (௧௦௬)

துட்டராமசுரர்தமைச்செகுத்திடவேசுரர்மகிழ்ந்தியாந்தரும்வரத்தைக்
கட்டுரையெனவென்னுடனுறுசீவன்கழிவதென்றெனக்கன்னலிரண்டின்
விட்டிடுமெனலுமுபையநாழிகையில்விமலனைத்துதித்துவீடுற்றான்
கட்டுவாங்கனுனக்கேழுநாளுளதாற்கதியரிதோவெனவறைவான். (௧௦௭)

சரியிலாமுனிவரறைந்திடுபுராணம்பதினெட்டிலிரசததாமதங்கள்
மருவிடுபுராணந்துவாதசமவைதாமருவொழித்திடாதுசாத்திகமா
யுரைசெயுமிருமூன்றாகியபுராணத்திலங்கியேயுயர்ந்தபாகவத
மரசயாணியம்பக்கேட்டுநீயரியின்பதத்தினையடைபெனவறைவான். (௧௦௮)

விதுரனுக்குயர்ந்தமறைநெறியறிவுவிளங்கிடமலர்மிசையெழுந்த
சதுமுகனிகராகியமயித்திரேயன்சாற்றியவரிசரிதையினைக்
கதமறுத்திலங்குநிருபநீகேட்டியெனக்களிப்புடன்மனன்முனிவன்
பதமிசையிறைஞ்சியிருகைசேகரத்திற்குவியவேபகர்ந்தனனன்றே. (௧௦௯)

மதிகொள்வேணியனைநிகர்மயித்திரேயன்மதியிலாச்சுயோதனனகர்வாழ்
விதுரனுக்கரியின்சரிதையைவிளங்கவிளம்பியவாறெலாம்விரித்தே
சதுமறையுதவுமுனியுவந்தளித்ததனையனீசாற்றுதியெனலுஞ்
சுதையினுமினியவிரதமன்செவியின்மடுத்திடச்சுகமுனியறைவான். (௧௧௦)

தருமனுக்குரியநாடிரந்திடவேசதுமுகனுடனுலகளித்தோ
னரவுயர்துவசன்பதியடைந்திடவேயறனுறுவிதுரனங்கணுகி
யிருபதமிசையிற்பணிந்தெழுந்தாடியிருகணீர்புரளத்தன்னில்லிற்
சுருதிநாயகனைக்கொணர்ந்தனமளிப்பச்சோதிநெஞ்சுவந்தருந்தினனால். (௧௧௧)

நீதியிலரவத்துவசனீதுணர்ந்துநெறியுறுவிதுரனைநீயென்
னோதனமருந்தியுலப்பிலாச்செல்வமுறவயங்கியதெலாமுணரா
தேதமுற்றிடவென்பகைஞர்தூதுவனையிறையெனவிறைஞ்சியேபுகழ்ந்தாய்
தாதிபுத்திரனாகியவிழிகுலத்தவென்றுகண்சிவந்துசாற்றினனால். (௧௧௨)

அந்தகன்சிறுவனந்தமில்குரூரமொழியினையறைந்திடவிதுரன்
சிந்தைநொந்துயர்ந்ததனுவினைமுறித்துத்தீர்த்தயாத்திரையினைவிரும்பி
யந்தரநதிகோதாவிரிவேணியளப்பிலாவயத்தினிற்படிந்தே
சிந்துவையுறவேதிரையெறிசரசுவதியினைச்சேர்ந்தனனன்றே. (௧௧௩)

நாரமார்சரசுவதிநதியணுகும்வேலையின்ஞானநற்றீபம்
நேரவுத்தவன்றன்வரக்களிப்புடனேநிலத்திடைப்பணிந்துகைகூட்பிப்
பூரியவரவத்துவசன்றன்மதியாற்றமரொடும்போர்க்களத்தவிந்தான் [ன்.
சீரின்மற்றவனையளித்தவென்முன்னோன்றுயரெங்ஙன்றீர்வனென்றுரைப்பா

அந்தணக்குருமந்தாகினிபுதல்வனுடனியானறைந்திடுமொழியை
நிந்தைசெய்துயர்ந்ததுரோபதிதுகிலையுரிவித்துநீசனாயெழுந்த
மைந்தனைத்தடாதங்கவனொடுமகிழ்ந்தமதியிலென்முன்னவன்றுயரச்
சிந்துவினமிழ்ந்தியழுங்கினனெனவேயுரைத்தவன்செப்பலுற்றனனால்.

விதிநெறியெவர்க்கும்விலக்குதலரிதாமெனத்துயரொருவியேவிளங்கு
மதியெனத்திகழுமதியுடையறிஞர்வாரிசூழ்துவரையின்வயங்கு
மெதுகுலத்தெழுந்தவிறைவனுமுராரியிணையிலாவிதர்ப்பர்கோன்பயந்த
சுதைதருமொழியாளுடனும்வீற்றிருந்துதுலங்கினனோவெனச்சொல்வான்.

நிகரிலாவரியைப்பயந்ததேவகியின்னெறியினாலுயர்வசுதேவன்
றிகழ்மனமதனனநிருத்தன்சாம்பன்சிறந்தவக்ரூரன்சாத்தகிம
ணகமெனவிலங்குமலாயுதவிறைவனலமுறுமுக்கிரசேனன்
சுகமுறவவணிற்றுலங்கினரோவென்றுரைத்திடவுத்தவன்சொல்வான்.

உததியிற்றுயிலுமுத்தமன்வசுதேவன்சுதனாமெனவோங்கி
மதமுறுமசுரர்நிருதர்வேரறுத்துமதியிலாச்சுயோதனன்றமரோ
டிரதர்குழுவுமடிந்திடவைவர்தமக்குறனெல்லவுமழித்தே
யெதுகுலம்படியினிறந்திடமுனிவர்சபிக்கவேயியற்றினனம்மா. (௧௧௭)

தவர்களங்கறைந்தசாபவெவ்வினையாற்றமரொடுமெதுகுலத்தரசர்
துவரையையொருவிநதியிடையணுகித்துன்மதியுறமதுப்பருகி
நவையுறவெவரும்விரோதமாய்மடிந்தார்நாரணனலாயுதனுடனே
சிவனயன்றுதிக்கவுயர்வரவுயரும்பதத்திற்சேர்ந்தனனெனவறைவான்.

எதுகுலத்தரசர்மடியுமுன்முராரியெனையழைத்தேழுநாளதனி
னுததிநீர்வளைந்துதுவரையையழிக்குநீரருய்யவேயுயர்ந்த
வதரியாச்சிரமத்தடைகுதியெனவேயிதவுபதேசமும்வழங்கிச்
சதுமுகனுணராப்பதத்தினெய்தினனென்றுரைத்தனன்றனாக்கணீருகவே.

உத்தவனிவையையுரைத்திடக்கேட்டேயொடுங்கியமெய்யனுவுலர்ந்த
பத்தனும்விதுரனயனீர்பெருகப்பகருவான்பரமனியிணையி
லத்திமாநகரத்தடைந்தபோதெனதுமனையிடையமர்ந்தியான்மருட்போய்ச்
சுத்தனுய்த்துலங்கவிருந்தனமருந்துஞ்சோதியேநமவெனச்சொல்வான்.

நெடியவமுகுந்தபராபரமாயவின்மலவுன்றனைப்பிரிந்தே
யடியனின்சரணையடையுமாறெங்ஙனறிகிலேனெனவரற்றிடுவோன்
சுடருறுகதிர்போற்றுலங்குமெய்ஞ்ஞானத்துய்யவுத்தவன்றனைப்பணிந்தே
யிடரறவரியின்பதத்தியானமதாயிதவுபதேசஞ்செய்யென்றான். (௧௨௨)

விதுரனிம்மொழியையறைந்திடக்கேட்டுவிளம்புவானுத்தவனசோதை
சுதன்மயித்திரேயன்றனையழைத்தெனக்குத்துய்யநல்விருந்தனமளித்தோ
னதிபெலாம்படிந்துன்முனரின்வந்தடைவனலனுறநீயவன்றனக்கே
யிதவுபதேசமுதவெனப்பணித்தானென்றுமாவதரியையுற்றான் (௧௨௩)

வதரியாச்சிரமத்துத்தவனடையமருளெலாமகற்றியவிதுர
னெனுகுலத்திறையையுளத்திடையமைத்தேயிணையில்பாகிரதியென்னு
நதியிடைமறையோதியமயித்திரேயநற்றவன்றனினில்வணங்கச்
சதுமுகனிகர்மாமுனியுளமகிழ்ந்தேயிவையிவைசாற்றலுற்றனனால். (௧௨௪)

நிலமகள்பொருதவசுரராக்கதர்களீசராமரசர்கள்பலருங்
குலனொடுமடியவதைத்தெதுகுலத்தைமுனிவராற்குறைத்திடுங்கோமா
னிலகியபரமபதத்தினேகுதன்முன்னென்றனைநோக்கியேயுனக்கு
நலனுறவுபதேசஞ்செயவிதித்தானென்றிவைநவின்றனன்மாதோ. (௧௨௫)

அரிதிருவுளத்துக்குவப்பதாயுயர்ந்தவடியனும்பரமபாகவத
சரியிலையுனக்குச்சகலலோகத்துமெனமுனிசாற்றிடவிதுர
னிருநிலமிசையினிறைஞ்சியேதுதிப்பவிருத்தியென்றவன்றனக்கினிய
பரமநற்சரிதையுரைத்தனனெனவேசுகமுனிபகரலுற்றனனால். (௧௨௬)

அரிதிருவவதாரத்தினியல்புஞ்சிருட்டியுமண்டத்தின்செயலுஞ்
சுரர்நரர்பசுதிரியக்குத்தாபரசங்கத்தினிற்றுலங்குவதெலவும்
நிரையமுஞ்சுவர்க்கநிலைமையுமுத்திநெறியையுநிகழ்த்தினனதனை
விரிவுறத்தெரியமொழிகுவனெனவேசுகமுனிவிளம்பலுற்றனனால். (௧௨௭)

அரிசிறுவனுக்குப்பகரவேயநாரதமுனிக்கறையமற்றவன்று
னுரைசெயவியாசன்விரித்தபாகவதவொள்ளியஞானமெய்ப்பொருளைத்
தருமயித்திரேயன்விதுரனுக்களியாற்சாற்றியசரிதையைமொழிவ
னிருபனீமகிழ்வோடுணர்ந்துநற்கதியின்வயங்கெனநிகழ்த்தினன்மாதோ.

சுகமுனியிவையையுரைத்திடக்கேட்டுத்துயரறுமனன்மிகமகிழ்ந்து
நிகரில்பாகவதப்பொருளினாலடியேன்கதியுறநிகழ்த்துதியெனவே
சகல்மாதவருந்துதித்திடமுனிவன்சாற்றியசரிதையையளியாற்
சிறியுறுமகஞ்செய்சவுனககேட்டியென்றுசூதன்னுரைசெய்வான். (௧௨௯)

வேறு. குண்டினமாபுரியின்வருகோதைதனக்கரிசரிதை
யண்டர்முனியறைந்ததுவுமவள்முதலாமரிவையரா
வண்டுவரைமாமுகுந்தன்மணந்துகலர்தமைவதைத்தே
யெண்டவர்தம்பரமபதத்தெய்தியதுமியம்பலுற்றும். (௧௯௦)

நைமிசாரணியப்படலம் முற்றிற்று.

(ஆகப்படலம் - ௨ - க்கு திருவிருத்தம் - ௨௯௧.)

ஆற்றுப்படலம்.

வாமனன்மதுசூதனன்னனிருத்தன்மாதவனச்சுதன்
பூமனன்னமிலங்குமார்பினன்மாயன்மால்புருடோத்தமன்
காமனையனையானனன்னுயர்காசிதன்னின்விளம்பிடு
நாமநாரணனேமிநாயகனாதனென்பவரடியனான். (௧)

நீதியானனியமமெய்துவிதர்ப்பனாகியநிருபர்கோ
னேதலார்களையமரின்வென்றுயர்சிலையனெவ்வுலகங்களு
மோதவீசியபுகழுமுற்றவனரசியற்றியவுண்மையாற்
பூதலங்களினெறிவியெண்டிசைபொழியுமாறதுபுகலுவாம். (௨)

வேறு. அண்டர்கோனயிராபதமேனியின்
மண்டியேமகராலயமேவிநீர்
மொண்டுமீண்டுமுகுந்தனிறமெனக்
கொண்டல்வானிற்குலாவியகொள்கையே. (௩)

செய்யவாயரிசென்றன்றரக்கர்மேல்
எய்யும்வாளிகளெண்டிசைபோர்த்தபோல்
வையம்யாவுநிறைந்திடமாமழை
பெய்தவோங்கும்பிறங்கல்கள்மீதரோ. (௪)

பல்லியங்கள்கறங்கப்பரந்தவேல்
வில்லிடக்கையின்வீசியரக்கர்க
ளொல்லையில்கணையெய்தனரென்பபோற்
செல்லெழுந்துபொழிந்தனதிக்கெலாம். (௫)

செலஞ்செலம்பரஞ்சேர்ந்துபணித்திடச்
செலஞ்சிலம்பிச்செகதலத்தாறதாய்ச்
சலஞ்சலந்திகழ்சாகரமீதுறச்
சலஞ்சலம்மெனவேதமரித்ததே. (௬)

வரையினூற்றுமரங்கள்முறித்தெறி
திரையுறப்பொன்செழுமணிவாரிநற்
கரையடர்த்துக்கலித்துக்கடுகியே
தரைமடுத்தகழ்ந்தோடுவதண்புனல் (௭)

ஞானமேவுங்குறிஞ்சியைநண்ணிநற்
கோலமுல்லையைக்கொள்ளைகொண்டேகியே
சீலமாமருதந்தனிற்சேர்ந்துநீள்
வேலையாரமடுத்ததுவெள்ளமே. (௯)

உம்பரஞ்சனவும்பனிறைந்தெனப்
பம்பிநாரதரம்பயம்பெய்யவே
யிம்பர்மாநதியெண்ணிலவிர்ம்புன
லம்புராசியதிர்தரச்செல்லுமால். (௯)

குலங்கெடுத்தரசன்வெஃகிக்கொள்பொருள்
பொலன்கலன்கனகம்பொறியோடுமெய்
கலங்கியோடிடத்தானுங்கழிவபோல்
விலங்கலுள்ளகொண்டேகியவெள்ளமே. (௧௦)

வாளைதேளிவரால்கயல்பாய்ந்திட
நாளிகேரங்கதலிநற்பூகத
மூளுமாசினத்தோல்கள்முடங்குளை
யாளியும்வலித்தேகினவாரியின். (௧௧)

தத்துநீருறுசேல்கயமுவிவெண்
ணத்தினோடலரும்மலருந்நல
நித்திலமெறிந்தேகிலமாதணி
யுத்தரியமும்போற்பொலிந்தோடுநீர். (௧௨)

காவினும்வயறன்னினுங்கானினுந்
தாவியும்மதிற்றங்கிலதண்புனல்
பாவமெண்ணில்பரத்தையர்தம்மனம்
போவபோலப்புரண்டுபரந்தவால். (௧௩)

நிலைகொணீருறுநேரிடைமாதர்தங்
கலைகள்வாரிநற்காவினின்மீதிடு
மலைகொண்மாநதியாயர்தம்பாடியிற்
பொலிகொண்மாயன்செயலெனப்போகுமால். (௧௪)

இயல்பினுரமொடொண்மலரேந்துறுஞ்
செயலினித்திலஞ்சிந்துறச்செந்நதி
யுயிரையொத்துளகேளவனுழையுறு
மயல்கொண்மாதெனவாரியிற்சேருமால். (௧௫)

சரமுமெண்ணிலசராசனமும்விழ
வருளில்வேடரரிவையர்தம்முடன்
வளையினெய்தியரற்றவலைத்தெழு
நிருபரென்னவுமோடினநீத்தமே. (௧௬)

வெண்ணெய்பாறயிர்நெய்யுறவீழவே
பண்ணையாவொடுகன்றுகள்பாறிட
மண்ணினோடிவரும்புனன்மாயனுங்
கண்ணனென்னவுமுல்லையிற்காட்டின. (கஎ)

நிறையும்பொன்மணிபோன்மலிநித்தில
மறுவில்செந்நெலுங்கன்னலும்வாரியே
துறைதொறுந்நதித்தோயம்பரந்தவண்
டிறையிடுமன்னர்போற்கடல்சேர்ந்தன. (கஅ)

மதிசெய்மாந்தர்தற்சேர்ந்தவறியர்கட்
கதிசெயத்தொடுமுள்ளதளிப்பபோற்
கதிசெய்கன்னல்கமுகுகளோங்கிட
நதிசெய்தோறுமுதவினநாரமே. (கசு)

மதர்ப்பநீண்டகண்மங்கையர்கற்பினி
னுதிப்பமாரிமெய்நீதியொடோங்கியே
கதிப்பநல்லறன்வேதங்களித்தெழும்
விதர்ப்பராசன்றனாடுவிளம்புவாம். (உ0)

ஆற்றுப்படலம் முற்றிற்று.

(ஆகப்படலம் - ௩ - க்கு திருவிருத்தம் - ௩கக.)

நாட்டுப்படலம்.

மீனுயர்கமடமேனமுடங்குளை குறள்வில்வேந்தர்க்
காணியேபரசுபாணியயன்மகன்சுதனுமாதி
யூனமில்சங்கின்வண்ணனுருப்பிணிகொழுனனாகி
யீனமில்பரியாமெந்தையிணையடியிறைஞ்சுவோம்யாம். (க)

வேறு. அந்தமிலுருவக்கூகைகள்குத்திப்புதைபுக்குப்பிடியெனவரற்றும்
வெந்தசொலகற்றிச்செவிகளுக்கினியவிருப்பமாய்மெய்மயிர்பொடிப்பச்
சிந்தையுமுயிருமுருகவேயன்பாற்றினங்குருகூரெனவிசையாற்
சந்தையிட்டனபோற்புகலுமந்நகரிசார்ந்துமாறனைத்தொழுந்தொண்டர். (உ)

வேறு. சுகனெனுமுனிவன்சொல்லவபிமனற்சுதன்முன்கேட்கு
நிகரின்முற்சரிதைதன்னைபெறும்புநெய்ப்பவ்வநீந்தப்
புகுவதோர்செயலீதென்னவன்பினாற்புன்சொனாட்டிப்
பகருவன்பழிப்பிலாதவிதர்ப்பர்கோனாட்டைப்பண்பால். (௩)

பொன்னவிர்மணியுமுத்தும்புரண்டிடும்வயல்களெல்லாங்
கன்னல்வண்கதலிபூகங்கிளர்ந்தெழக்களிக்கும்வண்ணஞ்
செந்நெலின்கதிர்வாய்கொண்டுதிரண்டெழச்சேல்கள்வாவி
துன்னியவள்ளைமீதுகழாயர்போனடிக்குந்துள்ளி (ச)

களிமலர்மதுக்கள்சிந்திக்கழையினஞ்செழுந்தேன்சிந்தத்
துளிகொள்மாங்கனிநீர்சிந்தத்துலங்குபூகத்தின்மீதே
தெளியுநீர்வாளைதாவச்சிதரினபாளையாழ்போல்
வளனுறஞிமிரும்பாடமயூரமுன்னடிக்குமாதோ. (௫)

காரணிகமுகுகன்னல்கதலிவாரீசமாம்பல்
சீரணியிளநீரோங்குந்தாழைசெங்கழுநீர்முல்லை
நீரணிகலந்துசூழநிறைந்தெங்கும்வயங்குமாட்சித்
தாரணிமாதின்பொற்பார்வடிவெங்குந்தழைத்தபோன்ற (௬)

வேறு. சுருதியாறுகானவின்றிடச்சூதமின்களிநீர்
விரிதடாகத்தம்போருகத்தோமத்திவிளைப்பத்
தெரிதுய்மாதவிவழைசெழுமலர்களைச்சூட்ட
மருதமாணிலம்வதுவைசெய்மகளிர்போன்மகிழ்ந்த. (௭)

காலைமாமலர்த்தேனுறக்கன்றினைநினைந்து
நீலமேதிகள்முலையினிற்பொழிந்திடநிரம்பும்
பாலொடாடுமாம்பழம்விழுசாருடன்கழையி
னாலைபாயுநீரோடியேயளக்கரின்மடுத்த. (௮)

மாரவேண்மடலேந்துறுவனிதையர்நதியி
னீருளிற்குடைந்தோடநீள்சலதியினிறைந்தே
யாரவாரஞ்செய்யெழிலிகள்முகந்துபாரறையுந்
தாரைநாறுவதளவுடன்சந்தனம்பனிநீர். (௯)

குளிர்கொளுங்கொண்டல்முழவினுமிசையெழக்குமுறுங்
கிளிகள்பண்பலமிழற்றிடக்கின்னரரெனவுங்
களிகள்பாடனன்மயூரங்களாடுவகண்டே
யொளிகொணித்திலமுதவினவலம்புரியுமிழ்ந்தே. (௧௦)

சொன்னநாடனில்மகிழ்நன்வந்திலனெனச்சோர்ந்தே
யென்னகாரணமெனப்பருவரலுடனெழுந்தாண்
டுன்னுதோறுங்கோவிணையினீருகுத்தமாதொத்த
கன்னல்கண்டொறமுத்தினையுதிர்த்தெழுங்காட்சி. (௧௧)

வேதர்நெய்யொடுவேள்வியைபெங்கணும்விளைப்ப
மாதர்தம்பதிச்சொல்வழுவாக்கற்பைவளர்ப்ப
நீதிமெய்தவமருளறநிறைந்தெங்குங்கிளைப்ப
பூதலந்தனிற்றிங்கண்மும்மாரியும்பொழிந்த. (௧௨)

வஞ்சகங்கொலைகளவுமாயங்களுமாய
விஞ்சியெங்கணுந்திருமகளுறநெறிவிளங்கச்
செஞ்சொலந்தணர்மறைசெழுநூலினைத்தெரிக்க
வஞ்சுகங்களுங்குஞ்சுடன்கொஞ்சுமாரணங்கள். (௧௩)

வேறு. ஆனிறைந்தனவந்தணர்வேதமுந்
தானிறைந்தனதாமரைமேலமர்
மானிறைந்திடமாமழைநிறைந்தன
கானிறைந்தகனிமலரீட்டமே. (௧௪)

உழுபகட்டையுரப்பிநிரப்புசா
லெழுவகட்செவியின்மணிநித்திலங்
கொழுவுறப்படைகொண்டுழுமள்ளர்கள்
கெழுமிடக்கிளர்ந்தோங்கினசாலியே. (௧௫)

வேறு. இடையொடிப்பபோற்கதித்தெழுநகிலிடையுறவே
நடையெனப்பெடையெனவருகடைசியர்நாரு
மிடையடர்ந்தெழுங்களைகளைந்தின்கதிர்ப்பழன
மடையடைப்பர்கள்பணிலமீன்முத்தெலாம்வாரி. (௧௬)

வயலினிற்களையானவாரிசநன்மலரு
மியல்பினுலலர்பானலுங்களைந்தனரொங்கு
மயிலினம்மெனுங்கடைசியர்வளைகளுமொலிப்பக்
கயல்கடுள்ளிடவராலினங்கமடமேற்பாய்ந்த. (௧௭)

வேறு. கொன்மலையுழவர்கள்கொய்தநெற்கதி
ரின்மலைநிகர்பகட்டினமிதிப்பவே
நென்மலைக்குப்பைகணிறைந்தமாட்சிகள்
பொன்மலைநிரைகளாய்ப்பொலிந்தபோலுமால். (௧௮)

மண்டநில்விளைதிலமுற்கமாடமு
மெண்டவர்விழைவுறுமெஃவயுங்கோதியுங்
கொண்டலினதிர்வுறக்குழாங்களாய்வரும்
பண்டிகள்பரந்தனபகரலாவதோ. (௧௯)

வேறு. மடந்தைமாருடன்விழைவுறுமகிழ்நர்சோபனமு
மிடைந்தவாண்மகப்பெறமகிழ்வளமையும்விளங்க
வடைந்தநான்மறைப்பொருளருள்தேவராலயமும்
படர்ந்துவிஞ்சியவிதர்ப்பகோன்புரந்திடும்படியே. (௨0)

நலன்மிகுத்தமென்மருங்கியர்நடையினோதிமங்கள்
குலைவதன்றியேயுலகினெவ்வுயிர்களுங்குலையாச்
சிலையெனத்திகழ்நுதலியர்திரண்டெழுமுலைமே
லலையுநித்திலமன்றிவேறியாவையுமலையா. (௨௧)

சேயகண்ணியர்கருங்குழற்செய்கைகாண்மயூரஞ்
சாய்வதன்றிமெய்த்தவநெறியோரருள்சாயா
வேய்கொடோளியர்தலைவனைப்பிரியவில்வேளே
காய்வதன்றியவ்வுலகினைவறுமைநோய்காயா. (௨௨)

செய்யவாய்ச்சியர்முலைபொருத்தேயு நுண்ணிடையே
பொய்யென்றோதுவதல்லதெப்பொருள்களும்பொய்யா
துய்யவிண்மிசைத்துலங்கியசசிமறுவன்றி
வையகந்தனில்யாவர்க்குமறுவிலைமாதோ. (௨௩)

பொழியுமும்மதத்தெறும்பியுமடங்கலும்பொருந்து
மழல்விழிக்கொள்காகோதரங்கருப்பையோடமரு
முழையினங்கள்சார்த்தூலமோடொன்றியங்குவக்கு
மிழையுமஞ்சுகங்கங்கமோடினிதமர்ந்திடுமே. (௨௪)

வேறு. சொங்காவலிலாதனசோரரிலால்
வெங்கோபமிலாதனமேலருளால்
மங்காநெறிநீடியவீமகன்
செங்கோன்முறையாலுயர்தேசமரோ. (௨௫)

மறமில்லைமனந்தனின்ஞானமுற
வறனில்லையதன்மமிலாதுயரு
முறவில்லையுறும்பகையின்மையினாற்
குறைவில்வளநாடியல்கூறரிதே. (௨௬)

வேறு. நீதிமுற்றநற்றிருவுநீங்கிலா
வேதமுற்றவுற்றறனுமேவுமா
லேதமற்றுமெய்த்தவமுமீறில
தீதுமற்றகற்றுணருந்தேசினால். (௨௭)

வாசம்வீசுகோகனகமாதரா
ளேசிலாததோர்மகளொன்றெய்தவே
வீசுகீர்த்தியான்விதர்ப்பராசனா
டேசங்கூறினும்புரியுஞ்செப்புவாம். (௨௮)

நாட்டுப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௩௩௧.

௫. வது—நகரப்படலம்.

கலைவாரிமின்னிடைமாதர்கள்கனமாமுலையணைவான்
சிலைவாள்கதைவளையாழியுமுடையான்றிருவுடையா
னுலகேழுடனயனார்வருமொளிர்நாபியுமுடையா
னலைவேலையினிடையேதுயிலமர்வான்புகழறைவாம். (௧)

இமவானெனவடமேருவினியல்பாமெனவெழில்வா
னமையாதெனநிவர்கோபுரமழகேயுறநிறையு
முமையாள்பதிபதிமாமலருறைவோனுறைநகரம்
அமராபதிஅளகாபுரியெனவேயவர்பதியே. (௨)

வேறு. நீதிமெய்தழைத்தருணிறைந்துபூசுரர்
வேதமெங்கணுமெழமுனிவர்விண்ணவர்
போதநற்றிருமகள்பொலிந்துதோன்றிய
கோதிலெண்டவர்கள்சேர்குண்டினபுரம். (ங)

அண்டர்களுறைவனொன்றறையவேண்டுமோ
தெண்டிரைப்பயோததிதுறந்துசெய்யவ
ளொண்டிசைவயங்கவந்தெய்தினுளென்றாற்
குண்டினபுரநலன்கூறலாவதோ. (ச)

வேறு. வான்கடந்துயர்வைகுந்தத்தொளிர்கொள்மண்டபமோ
தேன்றுடைந்தெழவலர்ந்தசெந்தாமரைமலரோ
மீன்கிடந்தவிண்ணடுவெழவீசுபாற்கடலோ
மான்கடந்தகண்டிருவைகும்விதர்ப்பமாநகரம். (ரு)

உததியிற்றெரிதினகரரொளியெனப்பரந்து
சதுரமாகிக்கொண்மூவினந்தவழுறவான்போய்ப்
பதிசொல்பேணுமின்கற்பெனப்பகையெலாமடர்த்து
மதில்பிறங்கியமாழையால்வளநகர்வளைந்தே. (சு)

திமிரமுற்றவுமகற்றியதினகரரொளிபோற்
றமனியத்தகடிலங்கியொண்மணிகளுந்தயங்க
விமையவர்க்குமோரதிசயமிதுவெனவெழுந்து
சமனிலாமதில்சிறந்தனவுயர்ந்தவான்றடவி. (எ)

திகழுகின்றவம்போருகங்குவலயஞ்சிறந்து
புகழுடைக்கனபுவியினையம்பரம்பொருவி
மகிழ்வருக்கைமாதவிவழைமாழைகள்மருங்கா
ரகழ்நிறைந்தனவகன்றெழுமளக்கரைநிகர்த்தே. (அ)

வேலும்வாள்களுமிடைந்தெதிர்தாக்குவவேயச்
சேலும்வாளையுங்கயல்களுந்திரண்டெதிருகள
வால்வளைக்குலமெதிர்த்தெழவராலினங்குதிப்பக்
கோலமாகியமதில்வளைந்தகழிநீர்குலாவ. (கூ)

வேறு. படியெலாஞ்சந்திரகாந்தம்பாருறு
மடியெலாம்பளிங்குறுமகழிப்பித்திகை
யிடமெலாந்தமனியத்தகடிலங்கவே
கடலெலாநிறைந்தபோலலைகள்காட்டின. (க௦)

வேறு. பாபமுற்றவுமறுத்திடும்விதர்ப்பர்கோன்பதியா
மாபுரத்தினிற்பிறங்கியமணிகளுந்தயங்கக்
கோபரத்தன்வானளந்தருள்கோலமேசிவணக்
கோபுரத்துறுங்கவினையாங்கூறுதற்கெளிதோ. (கக)

தேய்விலாதநற்பனன்றேர்திசைதொறுந்திரிந்த
வோய்விலாமலேசென்றுசென்றேகிடவுயர்ந்து
மாய்விலாததாபதருறும்விழாநகர்வழங்கச்
சாய்விலாதுவான்முகடுறத்தயங்குகோபுரமே. (௧௨)

இரணியத்தகடிழைத்தநன்மணிகளோடிலங்க
வருணமுற்றுயர்மாடமாளிகைதொறுமதியின்
கிரணமொத்தநித்திலங்களுங்கிளர்ந்தபொற்கிரியின்
றிரள்களொத்துவானணவிடச்சிறந்தகோபுரங்கள். (௧௩)

வேறு. கயிலையங்கிரிதனிற்கதிரவன்னிள
வெயில்பரந்தென்னவேவெள்ளிமாடமீ
துயர்வுறத்தமனியத்தகடுவேய்ந்தொளி
யியல்புறக்குயிற்றியவெண்ணிலாதன. (௧௪)

விடவரவுமிழ்மணிவிளங்கமாழையின்
சுடரொளிதயங்கநித்திலந்துலங்கவே
கொடிககனத்துறுங்கோபுரங்கள்சேர்
கடவுளராலயங்கணக்கிலாதன. (௧௫)

மெல்லடிவிளங்குநூபுரமிழற்றவே
யெல்லுறுசசியினையிகழுமானன
வல்லியர்நடித்திடவளைத்துமாமணி
வில்லுறுமரங்குழைவிளங்கிக்காட்டின (௧௬)

உருப்பசியெனவடிவொளிருமாதரார்
பொருப்பிணைநகில்கலன்பொலியவீதியின்
விருப்பமுற்றுகந்தவர்வீசுநாரமார்
கருப்புரமாலினிற்கலந்துநாறுமால். (௧௭)

நல்லியற்கவிஞர்சொற்போன்றநன்னக
ரெல்லையில்விழாவொலியிசைத்ததெங்கணு
மெல்லியரிசைக்கும்யாழ்வீணைவிஞ்சிய
பல்லியங்கறங்கினபரவையஞ்சவே. (௧௮)

தேரணிநிறைந்தனதேவரூரென
வாரணநிறைந்தனமங்குலீட்டம்போற்
றூரணியனிலம்போனிறைந்ததாவுமாத்
தோரணநிறைந்தனதருவின்றோற்றம்போல். (௧௯)

வேறு. வாயில்மும்முரசதிரவால்வலம்புரிமுழங்கத்
தூயநன்மணிச்சுடர்முடிமன்னவர்துலங்க
வாயிரச்சதத்திரட்டிதூண்மரகதத்தமைந்த
கோயிலம்பொனின்மணியிழைத்தேகொடிகுலாவ. (௨௦)

கரிகடுன்னினதுன்னினர்கதிரயிலாளர்
பரிகடுன்னினதுன்னினபணைநெடுந்தேர்கள்
கிரிகடுன்னினவெனக்கிளர்ந்தெழுந்தகோபுரங்க
ளரிகடுன்னினதுன்னுமங்கையரளகங்கள். (௨௧)

சாதுரங்கமுந்தழைத்தனமறுகெலாந்தயங்க
வேதிகைப்பசும்பொன்னின்மண்டபங்களும்விளங்கக்
கோதையோதியின்மதுகரங்குலாவுகோதையர்கள்
கீதவீணையாழ்பயிற்றினர்கின்னரரெனவே. (௨௨)

வேறு. சிலையியற்றினர்தேர்நிறையுந்தினர்
கொலையியற்றியகுஞ்சரமூர்ந்தனர்
நலனியற்றியமாவுநடத்தினர்
பலவியற்றினர்பல்படையாயுதம். (௨௩)

வேதமோதினர்வேள்விசெய்வேதியர்
கீதமோதினர்கிஞ்சுகவாயினு
ரோதமோதியெங்குந்தவமெய்திட
நீதியோதினர்நீணகராரரோ. (௨௪)

வேறு. இகற்கரிமதமிழியருவியாறெனப்
புகப்பரிமிதிப்பத்தேரோடவேபொடி
யுகத்துகளாகிவிண்ணுறுத்தமாடமேற்
றுகிற்கொடிபரவிவான்றுடைப்பபோன்றவே. (௨௫)

முழங்கினமறையவர்மொழியும்வேதமு
முழங்கினவனிதையர்குழலின்மொய்யளி
முழங்கினவீணையாழ்விளரிமுந்தியே
முழங்கினபேரியுமுகிலினார்ப்பென. (௨௬)

பொரவலமதக்கரிபொலியவேறிய
மருவலர்கெடவுடைவாளும்வாங்குவார்
திருவலர்விதர்ப்பர்கோனகரஞ்சேர்ந்துறை
இரவலர்புரவலராகவீகுவார். (௨௭)

ஈதலேவிரும்பினரியன்றசான்றவ
ரோதலேவிரும்பினரொளிகொள்வேதியர்
காதலேவிரும்புநர்களிகொள்காமுகர்
போதிலேவிரும்பிமாதுறையும்பொன்னகர். (௨௮)

அருக்கியநடையினரமிர்தமென்சொலார்
முருக்கிதழ்வாயினர்முருகுகூந்தலார்
தருக்களிற்றெருக்களிற்றரளம்வீசினு
ருருக்குமணித்திருவுறையுமூர்தனில். (௨௯)

கொய்தனர்கடிமலர்கொடியகண்களா
லெய்தனரிளைஞர்மாலெழுநன்மால்வரை
நொய்தெனப்பணைமுலைக்கிடைநுடங்குவார்
கைதனில்வயிரகங்கணமிலங்கவே. (௩0)

குளிர்த்தெழுங்குங்குமக்கொங்கைமங்கைய
ரளித்தனரமுதவாயமுதந்துய்த்துமெய்
துளித்தனர்புளகம்வேள்சுரதநூல்களாற்
களித்தனர்பொருநர்மேனைகங்கண்டென. (௩௧)

எரிகதிர்வேலினான் றுணைவிக்கிச்சென்மம்
பிரிகிலனென்றலும்பெருகுகண்ணினீர்
வரவருபிறவியினகல்வனென்றுமா
துருகியேதெருமரலுற்றுச்சோர்ந்தனள். (௩௨)

அந்தமார்கருமுகில்மையுமஞ்ஞைபோற்
கந்தமார்மலர்குழல்கவின்கொள்மாடமீச்
சிந்துவாரத்தகிற்செடிசெறிந்திட
வந்தெழுதூமத்தோர்மாதுநின்றனள். (௩௩)

பாடகநூபுரம்பாதசாலமுங்
கூடியார்ப்பரித்திடநடந்துகொண்கனை
நாடியேகண்டணைத்துவந்தநன்னுத
லூடினளைகிர்க்குறிபிறிதினுற்றதால். (௩௪)

நாகணைத்துயிலுவோனரியோங்கோ
னேகநீடியரறிந்துணர்தியென்னலு
நாகணிமுன்கையாணடுங்கிக்கொண்கனைப்
பேகணித்திரங்கியேபெய்துற்றுளரோ. (௩௫)

வேறு. அயில்விழியிலவச்செவ்வாயனநடைகழையின்மென்றோள்
குயில்மொழிகலசக்கொங்கைகொடியிடைகொண்டகொம்பு
மயிலெனமருணனோடேமணம்புணர்ந்துயருமாட்சி
கயிலையோன்விழியாற்காய்ந்தகாமனோடிரதியொத்தார். (௩௬)

வேறு. அடலேந்துறுமன்மதனைங்கணையா
லுடலேந்துயிரோய்வுறவேயொளிசேர்
மிடலேந்துறுதோளிணைவீரர்கள்கை
மடலேந்துவர்மங்கையர்வந்தணைய. (௩௭)

வாங்காநயனத்தொடுகூடல்வனைந்
தேங்காவிறைவன்வருமின்றெனவே
நீங்காமயல்கொண்டுநிறைந்தனராற்
பூங்காவினிறைந்தொளிர்பொற்கொடியார். (௩௮)

அலையும்மலைகொந்தளமீதளியுங்
கலையுங்கலையுங்கதிர்பூண்முலையா
மலையும்மலையும்மகுணன்னுரமே
லுலையும்மயநீருமினுற்றனைய. (௩௯)

வேறு. கூர்கொதித்தவயிற்கொண்கன்கூடிலர்
வார்கொதித்தவனமுலையார்மலர்த்
தார்கொதித்தெழத்தாங்குடையுந்தட
நீர்கொதித்தநிகழ்த்துவதியாவதோ. (௪௦)

மாதொருத்திதன்னாயகன்வாறெலா
மீதெனத்துணைவிக்கிதமாகவே
ஓதியுத்தமனைக்கொடுவாவெனாத்
தூதுவிட்டிங்ஙன்மாழ்கித்துவண்டனள். (௪௧)

நற்றியற்றுணைவிக்குத்தன்னாயகன்
குற்றமுற்றவுங்கூறிக்கொதித்தமின்
மற்றவன்வரலும்மலர்க்கைகளா
லுற்றணைத்தனளோரிமைப்பின்முனே. (௪௨)

பாகுநேர்மொழிப்பாவைதன்னாயக
னேகலாதுமுன்னோடியெழுந்தவன்
போகவேற்கண்புனல்கொளவிம்மியத்
தோகைதூதுவிட்டொல்கினள்சோர்ந்தரோ. (௪௩)

தெளிகொள்வேற்பொருனன்வயிற்செல்கெனக்
கிளியையேவினள்கேகயம்போனபி
னளியையேவிநல்லன்னத்தைச்சேறியென்
றொளிகொணீள்கண்ணிதானுமங்கோடினாள். (௪௪)

இறைவனைக்கொணர்கென்றுமின்னேவப்போய்
வெறிகொளுங்கொம்புமீண்டனள்மார்வமேற்
சிறியவள்ளுகிர்ச்செய்கையுஞ்செய்யவாய்க்
குறியுங்கண்டுகைகொட்டிநகைத்தனள். (௪௫)

எண்ணுடைக்கொழுனனெய்திலானெனும்
புண்ணுடைத்துனியோங்கிப்பொருமுறு
நுண்ணுடைச்சியவனெய்தநோக்கலாக்
கண்ணனொல்கிக்கபாடமடைத்தனள். (௪௬)

ஏடலர்த்தொடைவாடவிருகணீ
ராடையுந்நனைந்தோடவழுதிழை
கூடல்கூடிடக்கண்டனள்கொண்கன்றே
ரோடும்வந்துமுன்னிற்கவுவந்துமான். (௪௭)

கோணிலாமொழிக்கொண்கன்கரத்தினாற்
பூணுலாநகிற்பொற்றுகினீக்கலும்
வாணிலாமுறுவற்கனிவாயினா
ணாணியேமறைத்தாணயனங்கையால். (௪௮)

ஏடுசேர்தொடையான்புயத்தெய்குறி
நாடினாளவைகாண்கிலதாய்நகைத்
தூடினாளவன்றன்பதமுற்றுறக்
கூடினாள்பின்னுங்குங்குமக்கொங்கையாள். (௪௯)

அல்லுநன்பகலுந்தன்னகிலணைந்
தில்லின்வாழ்கொழுநனிதமாமுறை
சொல்வனென்றலுஞ்சோர்ந்தனள்சோர்தரச்
செல்வனென்றசொற்செப்புவனாமெனா. (௫௦)

கொலைகொள்வேற்கொழுநன்குறுகாமன
நிலையைநோக்குந்தன்னோர்நின்றமாரவேள்
சிலையைநோக்கும்வெந்தீவினைத்திங்களாம்
வலையைநோக்கும்வருநெறிநோக்குமான். (௫௧)

தந்தநல்லதரக்குறிதன்னொடும்
வந்தனனெனவேமருணன்றனை
நொந்தசிந்தையளாக்கித்தன்மென்முலைச்
சந்தழித்தொல்கிச்சேக்கையுட்சாய்ந்தனள். (௫௨)

பாங்கிமார்களும்பாங்கிலர்கிள்ளையே
யீங்கெனாயகன்பாலெய்தியேதொடை
வாங்கிவாரலையென்னின்மற்றென்னுயிர்
நீங்குமீதுணர்நீயென்றுரைத்தனள். (௫௩)

ஈண்டெனாயகன்பாலெய்தியென்மயல்
காண்டிநீகழறென்றுதன்கைகளால்
வெண்டுவாளிடும்பைக்கடல்விஞ்சிடப்
பூண்டுதன்கிளியோடும்புலம்பினாள். (௫௪)

இந்துவானுறவெங்கயலாய்க்கதிர்
வந்துதோன்றிடவிங்ஙன்வந்தாயெனா
நொந்துதானணிநண்டுளையாரமுஞ்
சிந்தினாணயனஞ்சிவப்பேறவே. (௫௫)

தன்னைநாயகன்றன்வயிற்சேரொனா
மின்னனாடன்மனத்தைவிடுக்குவா
ணின்னலாதிலைநீயுமறுத்தியோ
வென்னுமாலுறவேக்கமுற்றேங்கினாள். (௫௬)

வாடுவார்மருணன்வந்திலானெனத்
தேடுவாரவன்வந்திடிற்சேர்ந்துதா
னூடுவார்மதனன்கணையுள்ளுறக்
கூடுவார்மடவார்குயில்போலவே. (நுஎ)

திங்கணுணுந்திருமுகச்செவ்வியார்
தங்கணாயகர்சார்விடநண்ணியே
பொங்குமார்பமுறக்கலன்பொற்பெழ
வங்கையாரமகிழ்ந்தணைத்தாரரோ. (நுஅ)

வேறு. கதித்தபூணகிலிதத்தவாரமணிகண்கள்வேலிணைகொள்மங்கைமார்
மிதித்தமாநடமதிர்த்தபாதமெழமிளிர்பொன்மாமுழவமோசையா
லுதித்தபானுவையெதிர்த்தசோலையுறுமேதியோடையுளுழக்கலுங்
குதித்தவாளைகள்மிதித்தபூகமிசைகொண்டபாளையணிகுலையவே. (நுகூ)

அந்தரங்கொளிடைமந்தரங்கொண்முலைநந்துகந்தரமடார்க்கும்வேற்
கந்தர்தந்தைகணின்வெந்துசந்தமறுகாமனுய்யுமொளிர்கண்ணின
ரிந்துநன்வதனமுந்தியுந்தியெழுநீரினேருகுழியிவைகொடே
வந்துமுந்தியுறுகந்துகங்களொடறைந்தெழுந்தனர்கள்மங்கைமார்.

நஞ்சமாமெனவயங்குகண்ணியர்கணெண்ணும்வீதிதொறுநலனுறப்
பஞ்சபாணமதனஞ்சுகுஞ்சியொளிர்மஞ்சர்பாய்பரியினேறவே
மஞ்சமேவியுயர்வானிலங்கிவர்மாடமாளிகைகள்கோபுர
மிஞ்சிசூழுநகர்விஞ்சுமல்குநலனிந்திராதியருமெண்ணுவார். (சுக)

புன்னைதாழைவகுழபாடலங்கதலிபூகமாழையுயர்பொழிலின்வாய்
மின்னுமாமணிகடுன்னுதூணணிகள்விஞ்சுமண்டபம்விளங்கவே
கன்னலானமொழியன்னநாணுநடைகஞ்சுனேரளகமங்கைமார்
கின்னராதியர்கணாணயாணருறுவீணையின்னொலிகிளர்த்தினார். (சுஉ)

வேறு. அரசரோடுமாமணம்புணரரிவையர்மகிழ
முரசுபேரிகைமுழவொடுதிமிலையின்முழக்குற்
கரைசெய்யாததோர்களிப்புடைக்கனகமாநகரி
னுரைசெய்வேதியர்மகம்புரியோசையேமலிந்த. (சுங)

அருந்தவத்துளோருயரமுதாசனர்பலரும்
பொருந்தநாடொறும்பொலிவுடன்மகிழுவர்பூமா
னிருந்துவாழ்பதிமறையவரொண்ணிலர்வேதந்
திருந்தவோதுமாநகர்நலன்செப்புதற்கெளிதோ. (சுச)

வேறு. எல்கிளரிஞ்சியிஞஞ்சிலேலுற
வில்கிளர்திருநகர்வேதமெய்யறன்
பல்கிடச்செல்வங்கள்பரந்ததன்றியே
நல்குரவிலையிறைநெறிநடத்தலால். (சுரு)

நகரப்படலம்.

வேறு. வேதவித்தினினிதியேமுளைத்தறன்மேவி
மாதிரத்தெழுபணைகளாய்த்தழைத்துமெய்வளார்கொண்
டாதரித்தருளரும்பிடப்பெருந்தவமலர்ந்து
போதமுத்திசேர்ஞானமாங்கனிதரும்புரமே. (கசு)

மின்னுமாமணித்தமனியக்கோபுரம்விளங்கி
மன்னுமாநகர்தனக்குமவ்வவனிக்குமன்ன
னென்னுநாயகன்செயலையுமிந்திரையென்னும்
பொன்னினவதரித்திடும்பெருமையும்புகல்வாம்.

நகரப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உ0சு.

சு. வது—நாச்சியார்திருவவதாரப்படலம்.

கண்ணன்வாழியனைவெஙணையுண்ணுநிறைகள்வன்வாழிகருணாகரத்
தண்ணல்வாழியரிவாழிசிதரமுராரிவாழியலைவேலைவாய்
நண்ணுநாகணையன்வாழிமாலிருடிகேசன்வாழிநளிர்மைமுகில்
வண்ணன்வாழியுயர்மாயன்வாழிகிலமாதுநன்கொழுனன்வாழியே. (க)

அண்டருந்துதிசெய்குண்டினபுரியினருளினோடுமரசமருவோன்
மண்டலங்கண்மலிநீதிமெய்தருமமறையிளலெழில்கொள்வாயினன்
கண்டகக்குலமடிந்துவீழவொளிர்கதிரின்வாளுறைகழற்றுவோன்
விண்டலத்தபனகிரணநன்குலவிதர்ப்பராசனெனும்விறலினன். (உ)

பளிங்குதுற்றுமலிபொற்சுவர்க்கருகுகால்சனீலமணிபற்றவே
விளங்குநற்பவளமிக்கபோதிகைவிரித்தெழுந்துவயிரேர்யக்
களங்கமில்லொளிசொளுத்திரத்துவயிரக்கதிர்ப்பலகைதைத்துமேல்
வளங்கொண்மாமணியிலங்குதுணணிகளெண்ணின்மண்டபமருங்கரோ.

நீலமாமணிகள்வேலையார்தரளநீளமாமரகதங்களுங்
கோலமானவயிரேயங்கள்வயிரங்களுகமணிகுழுமவே
ஞாலமீதினிவர்மாழையாலவிர்கொள்சீயமேவுநலவாசன
மாலைவாகைபுனையானையாளியெனவேறினன்மகுடமன்னவன். (ச)

வெள்ளியங்குடைவிளங்கவாபரணமேனிமேலவிர்பரந்தெழத்
தெள்ளிதாயுயரவீசுசாமரைபயோததிக்குணிவர்திரையெனத்
துள்ளவீசுபுகழ்மகுடவர்த்தனர்கள்சூழவாழிமலிசுடரொன
வள்ளன்மாமுடிவிதர்ப்பராசனெனுமன்னர்கோன்மகிழுநாளினில். (ரு)

துருக்கர்கேரளர்கடுளுவர்பப்பரர்கள்சோனகப்பெயர்கள்சூழநீ
ளிருக்கையோதுமறையோர்கடாபதர்களியல்பினுசிகளியம்பிட
வுருக்குமன்றனொடுகுமரராவனாயுமுதவியேயொளிகொள்புகழினன்
செருக்கவானமர்தருக்கொண்மாலினுயர்தேவிமேவுதிறமறைகுவாம். (சு)

வேடமாரனெண்விதர்ப்பராசனொருநாளின்மேவியமர்கோயிற்
கோடிமாமணியிழைத்ததூணணிகள்கொண்டமண்டபமருங்குறப்
பீடமேதிகழவெய்திநன்மகவுபெற்றயானொருமகட்பெறக்
கூடிலாதவிதியென்கொலென்றுறநினைந்துகொற்றவன்வருந்தவே. (௭)

பாவம்வீயவறனெய்தநல்லரசுசெய்துபாரினுயர்கொற்றவன்
றேவிவந்தடிபணிந்துநாயகநினைந்ததெண்ணியுறுசிந்தையாற்
காவிவாளிகயல்வேல்களென்னவொளிர்கண்கண்முத்துதிரவாடியே
யாவிநொந்துமகள்பெற்றிலேனெனவுரைப்பவன்னவனுமறைகுவான். (௮)

நற்குலத்தினிலுதித்தவிந்துமதிதன்னிலுநலனிவர்ந்தவெண்
டிங்களஞ்சுவதனத்தியானதமையந்திநாளுமுயர்செய்யமா
மங்கைதன்னைநிகர்நங்கையைப்பெறமணத்ததண்டுளவமாயனுஞ்
சங்குயர்த்தகரனெய்தநோற்றியதவம்புரிந்திடுதல்சதுரோனு. (௯)

மந்திரத்தவரையரசுநீதிவழுவாதுகாவுமெனவாரியின்
மந்தரத்தரவினைப்பிணித்தமிர்தம்வந்தெழக்கடையுமாதிரு
மந்திரத்துமுதலெட்டெழுத்தையுமனத்துள்வைத்துமறமாயவே
மந்திரத்தையுமெரித்துநன்மனைவிதன்னொடும்பழுவம்வைகினான். (௧௦)

புலன்கள்வேலியெனநிற்கநெஞ்சென்வயறன்னின்ஞானமழைபொழியவே
நலங்கொண்மெய்யெனுமலத்தினுழுதுநாலிரண்டுதிருவக்கரத்
துலங்குவித்தினைவிதைத்தெழுந்தகளையானவஞ்சகமறத்துறந்
திலங்குமாதவமெனும்பெரும்பயிர்பலன்களீவகையியற்றினான். (௧௧)

சலங்களைந்துமையடர்த்துவஞ்சமதகற்றிமுற்றியமெய்தழுவவே
நலங்கொளும்பிரணவத்தினோடுமிருநாலெழுத்தைநிறைநாவுடன்
பொலன்கொடாபதர்களுழிசெய்தவமோர்கன்னறன்னிடைபொருந்திடக்
கலங்கலாதொருபிறங்கல்போலுயர்கணக்கருந்தவமியற்றினான். (௧௨)

முனிவரோடயன்வலாரியூழியுமுடிக்கொணாதரியமொய்தவங்
கனியதாகநிவர்குண்டினபுரியினரசியற்றியமர்காவலன்
பனிலையநூறுகதிராமெனப்பவமறத்தனிடிருபதங்களி
னினியனாகிடவனந்தன்மீதுதுயில்கொள்ளுமாதவனெழுந்தனன். (௧௩)

மங்குன்மல்கியுயர்வனசமாமலர்மலிந்துவண்பருதிசசியொடுந்
தங்கமேருவினெழுந்ததென்னவுயர்மௌலியெண்டிசைதயங்கிடச்
சங்குநேமியொடுதண்டுவாள்களொளிர்சார்ங்கமோங்கவலர்தாமரை
மங்கைமார்பினிலங்கவேவயினதேயன்மீமிசையின்வந்தனன். (௧௪)

வாசவன்கமலன்வானுளோர்முனிவர்வாசமாமலர்கண்மலியவான்
வீசவன்பினுயரந்தரத்தினின்விளங்குதுந்துமிமுழங்கிடக்
காசினிக்குளுயர்குண்டினபுரியினரசனன்பொடுகளிப்புற
வாசையெங்குமவிர்பாலவாழியமரச்சுதன்னமலனணுகினான். (௧௫)

நாச்சியார்திருவவதாரப்படலம்.

ஆடினான்மகிழ்வினோடிறைஞ்சினனெழுந்துதுள்ளியியலாரணம்
பாடினானிருகணீர்புரண்டிடமெய்புளகமாகியுயர்படியின்மே
லோடினான்வலமதாகமீளவொருநொடியின்முன்னமலனிருசரண்
சூடினான்முடியினளவில்போதமொடுசுருதிநாவனிவைசொல்லினான். (௧௬)

வேறு. ஆரணமாயாரணத்தின்பொருளதாகி யைம்பொறியாயைம்பொறியி
னமருஞ்சோதி, பூரணமாய்வாரணத்தினரங்கைதீர்த்தும்புவனமெலாம்படை
த்துதரம்பொலியவைக்கும், பாரணனாய்ப்பாரணங்கின்பதியாய்த்தோன்றும்
பல்லுயிர்கடொறுமேவிப்பரந்துநின்ற, காரணமாகாரணனேபோற்றியென்
றான் களிப்பென்னுங்கடலினைத்தான்கரைகாணாதான். (௧௭)

மூவருமாய்மூவருக்குமிறைவனாயமுழுமுதலாய்முப்பத்துமூன்றுகோடி,
தேவருமாய் முனிவருமாய்மறைகளாகித் திசையெட்டேழ்கடல்வரைபார்தி
வானாகிச், சீவனுமாய்ச்சீவனுள்ளியங்குஞ்சோதித்திருவுருவாய்ப்பலவுருவா
ய்த்திகழுகின்ற, மாவமருமணிமார்பநினைக்கண்டு மகிழ்வுறவேயென்செய்
தேன்மதியிலாதேன். (௧௮)

பாதகமின்மநத்தினராய்நினதுநாமம்பலகோடியூழிதொறும்பரிந்துபோ
ற்றித், தீதகலுமருந்தவங்கள்செய்துநாணித்திரியுமவர்க்கணுகாதாய்சிறொன்
றில்லாப், பேதைமையேன்கண்களிக்கவிமைப்பின்முன்னேபெருந்தேவியொ
டும்பிரியாதெய்தப்பெற்ற, தேதிதெனவறிகிலேனறிந்தேனன்பர்க்கெளியவ
னாநீயெனுஞ்சொலிறைவவென்றான். (௧௯)

ஊணிறைந்தவுயிர்கடொறுமுளனாய்ப்பாரையோரடியாலளந்துகொண்
டேயுயரமாகுஞ், சேணிறைந்தவொருபதத்தாய்பிரகலாதன் செப்பியசொல்
லிகழ்சனகன்கரத்தாற்றீண்டுந், தூணிறைந்தவரியுருவாய்த்திருவினோடுந்து
லங்குநவமணிகோடிவயங்குந்தூய, பூணிறைந்தகவின்மார்பாபோற்றியென்
றுபுகன்றனன்கண்ணீர்படியிற்புரளவேதான். (௨0)

இன்பமுறுமுணர்வினுடனெரியில்வெண்ணை யிடவுருகுமாப்போலவிதை
யந்தன்னோ, டென்புருகிவிழுந்தெழுந்துதுள்ளியாடி யிருநயனம்புனல்புரள
வியந்துபாடு, மன்பனைத்தண்ணளிசுரந்துநோக்கித்தூய வறிஞவுனக்காயவர
ம்யாவதென்றே, முன்பகரவரியிறையைக்கேட்டவேந்தன் முடியின்மிசைமு
கிழ்கரத்தின்மொழிகின்றானே. (௨௧)

பரமபதஞ்சரபங்கற்கருளிப்பார்வான் பயமுறவேபரிநெடுந்தேர்கடவி
வென்றக், கிரமபதத்திருந்ததெசக்கிரீவன்சேயின் கிளர்முடிகள்பொடிபட
மெய்கிழியமோதிச், சரமபதத்தளித்தும்பொன்வெற்புக்கப்பாற் சயிலமொடு
மருந்துகொணரனுமற்கூங்கார், பிரமபதமளித்திடுவாயடியேனிவ்வன்பேதை
மையாற்பிதற்றுவரம்பெறநீயீவாய். (௨௨)

மைந்தர்களைந்துளரெனக்கோர்மகடோன்றுதவருத்தமறவாரீசமலர்மே
ற்றோன்றுஞ், செந்திருவோடொப்பவளாய்க்குணத்தாற்கற்பாற் செகதலம்
வானிகரில்லளாயளித்துச்சீரார், புந்திநனியாற்றல்கவின்படிவந்தேசின்பொலி
வுமலிமகுணனவட்காகும்பொற்பா, மிந்தவரந்தந்தருளுகென்னமாயோனி
லகியநன்முறுவலெழவியம்புவானே. (௨௩)

அரசனினக்கமகிழுங்குணத்தாலான்ற வறிவுடையவொருமகளையளித்
தேமிக்க, வரிசைமலிகுமரனுக்கேமனைவியாவா ளென்றுதிருமாலருளமதிவ
லானுங், கனைசெய்வதற்கரியபெருங்களிப்பினாற்றன் காதலியோடிருகழலிற்
கடிதுவீழ்ந்து, துரிசறநான்மறைகள்கொடுதுதித்தானின்று தூயவனுங்குண்
டினமாநகரிற்றோன்றல். (௨௪)

அருடழுவவிதர்ப்பனொடுமனைவிக்காங்கே யருளிவிடையயனோடும்வா
னோர்போற்றக், கருடன்மிசையுயர்விசும்பினோங்குங்கண்ணன் கமலமுறுநா
யகியைக்களிப்பானோக்கி, யிருடவிரவசுந்தனாதன்சுமடுதிரயதுகுலத்தில்யா
ம்வருவோமியல்பான்மிக்க, பொருடெரியும்விதர்ப்பனருள்புதல்வியாகப்போ
கெனமின்மெலிதல்கண்டுபுகலுமாயோன். (௨௫)

சுந்தரிநீமிதிலைநகர்ப்படியிற்றோன்றித்துலங்கியநாட்டனுழரித்துத்தூய
தாநின், செந்தளிர்க்கைபிடித்ததற்பின்வனத்திற்சேர்ந்தே தெசக்ரிவனகர
தனிற்சென்றுமீள, வந்தனல்விழுந்தெழுந்துமறையான்மிக்க வான்மீகியு
யர்வனத்தில்விடுத்தோமென்றே, சிந்தைநொந்தாயெனத்திருமான் முறுவல்
செய்தேசெய்யவட்குத்தெளிவுறத்தான்செப்புவானே. (௨௬)

சீதையெனும்வடிவுகொண்டுமுன்னாளென்னைச்சேராமற்பிரிந்தமநத்தி
யக்கந்திரப், போதுகநீபதினாறாயிரத்துநூற்றெண் பொற்பினாறும்வநிதைய
ராய்ப்புவிமேற்றோன்றுங், காதலுறுமவளவனேக்கவனாயின்பக் கலவிநலக்க
ளிப்பளிப்பன்கலங்கேல்யானும், யாதவரிற்பிறந்தபின்னர்மின்னேநீயுமெழில்
விதர்ப்பன்மகளாகென்றிசைவுகொண்டான். (௨௭)

மாதினுக்கிவ்வகைதெரியமகிழக்கூறி மனந்தெருட்டிவிதர்ப்பன்மகளா
கும்வண்ணம், போதுகநின்முதலொளியென்றருளிக்காயாம் பூநிறத்தோனு
வணமிசைப்பொலியத்தோன்றி, மோதியலைமுழங்குபயோததியிற்சேடன்
முடிகள்கவித்துடலினைநீளணையாய்முந்துஞ், சீதமலர்ச்சேக்கையின்மேலு
யர்ந்தான்பூவிற்றிருவினொடுங்கவினுறவேதேவதேவன். (௨௮)

வண்டுளபத்தரியும்வரமருளியேக மலர்க்குழலாளொடுவிதர்ப்பன்மகிழ்
ந்துமாயோன், புண்டரிகமலர்நிறையப்பூத்தநீலப் புயலைநிகர்திருவுருவின்
பொலன்களெல்லாங், கண்டுளமுமுருகிடத்தானெண்ணமுற்றிக் காதலிதன்
னொடுமேவிக்களிப்பான்மிக்க, குண்டினமாநகரதனிற்கொடிகள்கோடிகுலவு
மணிக்கோயில்புக்கான்கொற்றவேந்தன். (௨௯)

மன்னர்பிரான்மனைவியுடன்மகிழுநாளின்வருவருடநாலாகிவாய்க்கும்
போழ்தின், முன்னமெதுகுலத்தரியாமுதல்வன்றோன்றமுளரிமலர்க்கவினூறு
தேன்மொழியினாளும், பொன்னவிர்கொளரியநலக்காழகத்துட்பொதிந்துக
திரொளியிமைக்குமணிதான்போன்று, மன்னினளால்விதர்ப்பனில்லாள்வயி
ற்றினுள்ளேமாதமொருபத்துமுறவளர்ந்துதோன்றி. (௩0)

வேறு. நீசராசுமவர்மாள்மாநிலமடந்தைதன்சுமைநீக்கவே
கேசவன்கமலநாயகன்மாலிருடிகேசன்யாதவர்கிளைக்குள்வாழ்
வாசுதேவனெனவந்தபின்னர்நிவர்வாளரம்பொருதகண்ணிணைப்
பாசிழைக்கவின்வயங்குமிந்திரைபடிக்குளெய்தவருபண்பினாள். (௫௧)

சனகராசனெனுநிருபன்வேள்வியுறுதரணிகீறுகொழுநுதியினின்
கனகராசிவளைவலமதாகிவருகதிரவன்னுதையமிதுவெனத்
தினகராதிபர்கள்குலமதாயெழில்கொடெசரதன்றனதுசிறுவனா
மனகராசனுயிரணையதேவியெனவவதரித்தருளுமன்பினாள். (௫௨)

துதிப்பமாதவர்கள்சோதிவானவர்கடேயமாமலர்கடூவமெய்
மதிப்பவேதமருணீதிசேர்தருமம்வளரநாணளினமலரின்மான்
விதர்ப்பராசன்மனையாள்வயிற்றினுள்விளங்கியுத்திரநிறைந்திடப்
புதுப்பனாகமணிபோலமின்னுதையமாயினாள்புவிபொருந்தவே. (௫௩)

முழங்குபேரிதுடிதிமிலைபம்பைமுழவங்கள்சச்சரிமலாரியும்
விழுங்கவேலையொலியைக்கிளர்ந்துமுரசங்கள்கோடியினொடும்விஞ்சிடப்
புழுங்கராவுமிழினமணித்திரள்கள்பொன்னின்மாரிதரளங்களும்
வழங்கினார்கடிருவீதிதோறும்வறியோர்கண்மீளவிரவாமலே. (௫௪)

கசிந்துபோதொழுகுதேனினன்மொழியர்காமர்வேலிணைகொள்கண்ணினார்
விசிந்ததேர்புகரிபந்துரங்கமுறுவீதிவீதிகள்விளங்கிட
வசந்தமாடுபனிநீரினோடுநறுநெய்பாலும்வாரியினுண்மண்டியாண்
டிசைந்தமீனணிகளெண்ணிலாதவைகள்பருகியாலுமுடலிலகவே. (௫௫)

வீதிதோறுமலிசாலகுப்பைநிரைவிஞ்சுகன்னலொடுகதலியுஞ்
சோதிபோலெழுவதீபமாலைமணிமாலைதுன்னியெழுமாதரார்
கீதயாழினொடுகின்னரத்தொல்கிளர்த்தினார்கிளிகளென்னவே
மாதயோதனர்துதிக்குமாநகரின்மாமலர்த்திருவினாள்வர. (௫௬)

வேதமோதினர்களந்தணாளர்கள்விளங்குவானவர்கள்வளர்மொழி
யோதியேமலர்சொரிந்துவந்தனர்களுலகமெண்ணியவிதர்ப்பர்கோ
னீதியாகநிராரமாடிநிதிவேதியர்க்கருளிநெறியுடன்
சோதியேறுமணிதுன்னுமீழமவிர்தூயகோயிலிடையெய்தினான். (௫௭)

மத்துமந்தரமதாகிவாசுகிபிணிக்கவன்கயிறதாகவே
மெத்துவிண்ணவர்கள்கூடவெவ்வசுரர்மேவமாயன்வலன்விசையினாற்
கத்தும்வேலைமறுகக்கடைந்தமுதுகாணவுண்மகிழும்வாசவ
னொத்தனன்னுயர்விதர்ப்பனன்கழகுவடிவுகண்டுளமகிழ்ந்தரோ. (௫௮)

விண்கிளைத்தெழுமரம்பைமேனகையொடுருவசிப்பெயர்கள்விழுமிய
மண்கிளைத்தெழில்வயங்குமாதரொடுகூடிவீதிதொறுமகிழ்வுறக்
கண்களித்தெழவுரோமராசிமெய்பொடிப்பவேயினியகாவலன்
பெண்களிற்றிலகமானமின்வடிவுகண்டுவந்துசிலபேசுவான். (௫௯)

வேறு. சிந்தாகுலமறவாரியிற்சிறந்தேயெழுமமிர்தோ
சந்தார்பொழிலனமோபசுங்கிளியோதனிமயிலோ
கொந்தார்துளவணியுந்திருமான்மார்பினிற்குலவு
நந்தாமணிவிளக்கோவொளிர்நலனார்கவுத்துவமோ. (௪௦)

பொன்னோதருமலரோபுதுமணியோபுயன்மிளிரு
மின்னோதெளிதேனோவொளிவீசுந்துகிற்கொடியோ
வென்னாவுளமகிழ்வோடெழுமிறையோன்மகளெனவே
தன்னாகமுமின்னாகமுமொன்றும்படி தழுவ. (௪௧)

கூராட்டியவேலோட்டியவிழியாள்கொழுங்கவினைப்
பாராட்டினரவிர்வீசியபவளக்கொடியெனவே
சீராட்டினர்மலிசந்தனச்செழுமாமலர்வாச
நீராட்டினர்நீரார்கடல்மிர்தாங்கிறைமொழியார். (௪௨)

மின்னார்வுருசாமீகரவணிபூணுமெய்யிலகத்
தன்னேருறுதபனன்சுடரெனத்தண்டைகடயங்கப்
பொன்னூபுரமெழிற்கிண்கிணிமலர்த்தாளினிற்பொலிய
முன்னாரணனருளால்வருமுளரித்திருவளர்ந்தாள். (௪௩)

அல்லார்குழல்வில்லார்நுதலனமாநடைமொழிதேன்
வல்லார்முலையில்லாவிடைகயலாம்விழிமடவா
ரெல்லார்களுமகிழ்வோடமிர்தெனுமாவிசையெழநற்
சொல்லார்துதியறைவாரிதமுறுசோபனமெழவே. (௪௪)

வேறு. பாதகங்கள்பரிந்தெழப்பங்கய
மாதகங்கடொறும்வைகிவாழ்ந்திடப்
போதகஞ்செறிபொற்கொடிக்குத்தகச்
சாதகம்பண்ணினார்தவத்தோர்களே. (௪௫)

சங்கமுத்தநகைப்பெருந்தையலார்
சங்கமிக்குத்தழைத்தெழுந்தேத்தநற்
சங்கமத்தந்தரித்தவன்றேவிவாய்ச்
சங்கம்வைத்தமிர் தூட்டினர்தாயரோ. (௪௬)

நீதிசேர்விதர்ப்பன்பெறுநேரிலாச்
சீதையானசெந்தாமரையாடனை
யோதுநாமமுருக்குமணியென
வேதநாவர்விதித்துவிளம்பினார். (௪௭)

சுட்டிநெற்றிதுலங்கியமாதினை
மட்டவிழ்க்குமலர்க்குழன்மங்கைமா
ரிட்டிழைத்தமணிகளிலங்கிடுந்
தொட்டிலுய்த்தனர்சோபனம்பாடியே. (௪௮)

இட்டமேவியிலங்கியவல்லியை
வட்டமாமதிபோன்முகமங்கையர்
கிட்டர்போற்றச்செழும்பொன்னின்சங்கிலித்
தொட்டிலாட்டித்தொனியெழப்பாடுவார். (சகூ)

மங்கையோமணியோமதனைத்தரு
செங்கயற்கணியோதிருவோதிரை
பொங்குபாற்கடற்பொற்கொடியோபொன்னே
வெங்களாரமிர்தோவெனவேத்தினர் (ரு0)

திங்கடங்கியவானனச்செல்வியோ
சங்குசெங்கைதரித்தவன்றேவியோ
வங்கமுந்தியவாருதிமங்கையோ
பங்கயக்குயிலோவெனப்பாடினர். (ருக)

வேறு. வானேறிந்த்ரன்வந்துமாமணி
தானேசங்கொடுபாயறந்தனன்
றேனேதெள்ளமுதேசெழுந்திரு
மானேநீரழுமாறிதென்கொலோ. (ருஉ)

தாலேலோவினைதானிலாதவ
டாலேலோசுதைதங்குபொற்குயி
ருலேலோகமலாசனத்தவ
டாலேலோதிருவென்றுசாற்றினர். (ருங)

தாதாவானவிதர்ப்பர்கோன்றரு
மாதேபோதின்முன்வந்தமாட்சிகொ
லேதாலேநகைசெய்தவாறிவை
யோதீர்மாதவவுத்தமப்பெணே. (ருச)

ஒளிசேர்வென்மதியூடிருந்தது
கொளவேநீள்களிகூரவுங்கிளர்
வளையூடாடவிலார்மலர்த்திரு
விளையாடலெனவேவிளம்புவார். (ருரு)

வேறு. மங்காதறன்மல்கிடவந்தருளு
நங்காய்நளினத்துறைநாயகியே
சிங்காரவுருக்குமணித்திருவே
செங்கீரையதாடுகசெம்மையுற. (ருசா)

எப்பாரிலுமெவ்வுலகங்களிலு
மொப்பாகவுரைக்கவொணுவொளிவே
அப்பார்கமலாசனமீதமர்வாய்
சப்பாணிகைகொட்டுகசந்தமுற (ருஎ)

பவந்தானறநான்மறைபல்கிடவே
சிவந்தாயெழுமேனிசிவந்துகவி
ளிவந்தாரவடங்கணிறைந்தமினே
தவழ்ந்தேவிளையாடுதிதாரணிமேல். (௫௮)

தாள்வீசியெழுந்துயர்வான்றடவ
நீளீசர்தமார்பினிவந்தமரும்
வாளேசுறவேமிளிர்மான்விழியாய்
தோள்வீசிநடந்திடுசுந்தரியே. (௫௯)

ஒளிரும்மணிநூபுரமோலமிட
மிளிருங்கவினாரமெய்மேனியைய
வளரும்பிறைபோலவயங்குமினே
தளருந்நடைநீநடதாரணிமேல். (௬௦)

முச்சூலிகபாலமொழித்தமுத
னச்சாரரவிற்றுயினாரணனார்
மெச்சார்தவமாகியமெய்த்தவமே
யச்சோகுயிலேயமிர்தேயனமே. (௬௧)

அறம்பல்கிவளர்ந்தெழவாவின்மிகுந்
திறம்பல்கிடவேகிளர்சீத்ரனார்
நிறம்பல்கியபோலலைநீள்குழலாய்
புறம்புல்குதிபொன்னுருமின்னியெழ. (௬௨)

மைப்பாய்ச்சியகண்டன்மகன்கரவே
லொப்பாய்ச்சொலலாம்விழியொண்டிருவே
துப்பாச்செறிமேனிதுலங்கியெழ
வப்பூச்சிகண்டாடுகவாரமிர்தே. (௬௩)

தேனின்கனிவாயமுதத்திருவே
நானங்கமழோதிநறுங்கொடியே
மீனெங்கும்விளங்கிடவெண்மைபெறும்
வானம்புலிவாவெனவோதுதியால். (௬௪)

திக்காக்கியசீர்த்தியினான்றிறல்கண்
மிக்காக்கமிகுத்தவிதர்ப்பனரு
ளிக்காக்குமொழித்திருவின்பமுற
வக்காக்கைபொனாலமர்கோல்கொடுவா. (௬௫)

வம்பீன்மதுமாமலர்மானெனவே
கம்பீன்மணிமாலைகவின்பெறநீ
ளம்பீர்விழியாளகத்திடையின்
றம்பீமலருந்துலங்கிடவே. (௬௬)

கொம்பார்குயிலாகியகோமளமே
யம்பாரமிர்தாயவருங்கலமே
வம்பார்குழலீசனிவாழெனவே
யம்பார்விழிமாதரறைந்தனரால்.　　　　(௬எ)

ஈண்டுந்துனியற்றறனெய்திடவே
நீண்டன்றுலகங்கொளுகேமியர்தாள்
பூண்டொன்றுமருந்தவர்போற்றிசெய
வாண்டொன்றுநிறைந்தனளாரமிர்தே.　　　　(௬அ)

வேதங்கடழங்கிவிரிந்தெழவே
கீதங்கள்பரந்துகிளர்ந்திடவங்
கோதுங்குயில்போன்மொழியொண்டொடியா
மாதுந்தமமாநதியாடினளால்.　　　　(௬௯)

சின்னம்பலவூதியிடத்திசைசேர்
மன்னன்கிளையோடுமகிழ்ந்திடலான்
மின்னும்பணிமெய்யினணிந்திலக
வன்னம்பொனிறுடையணிந்தனளால்.　　　　(எ0)

நீருடியபொன்னிறைகேதகையின்
சோருடியதும்பிதுலங்கிடவே
யாருடிமெயாரமுறுங்களபச்
சேருடினள்செம்மணிமார்பிலக.　　　　(எக)

துன்பம்மறந்தெனறிதுன்னியுற
வின்பம்முறுமங்கையரொண்ணிலர்க
ளன்பின்குடைசாமரைகொண்டடைய
மின்பொன்சிவிகைக்குளின்மேவினளால்.　　　　(எ௨)

கொடிமீதெழுதேர்கரிகோடகமும்
படிமீதுபரந்துமிடைந்திடவா
ரிடிபோலவிரட்டுறுபேரியெழ
வடிவாள்கொடுமன்னவர்மன்னினரால்.　　　　(எ௩)

காளங்கள்வலம்புரிகண்டையுடன்
மேளங்கள்கறங்கிடவேலையெனத்
தாளங்கடழங்கினதாரைசின்னம்
நீளங்கொளுநெள்ளனிறைந்தனவால்.　　　　(எ௪)

திக்கார்புவியோர்கள்செருக்குறவே
யமக்கோலவிலோசனமாதுலொள்
புக்காண்மணிதுன்னியபொன்மனையி
னக்காரநெய்பாலமிர்துண்டனளால்.　　　　(எ௫)

வேறு. தெருவினன்மணிசிந்தியுங்கண்புதைத்
துருவமென்னவொளித்துங்களித்துமே
மருவியும்மலர்வீசியும்வண்மைசேர்
பருவமைந்துபுகுந்தனள்பண்மொழி. (எசு)

முச்சில்வாரியுகுத்தவெண்முத்தினை
நச்சிநாடிகனேனொடுத்தேநகைத்
திச்சையாற்றிருமேனியும்மாசெழ
வச்சிமேலுறவீசினளுத்தமி. (எஎ)

மலியும்வான்மணப்பாவையைவாழ்த்தித்தன்
முலையுமீந்தனண்முத்தமளித்தன
ளலையுமீரமணிந்திடமாட்டிமெய்
குலையவாண்டமுதோடினள்கோதையே. (எஅ)

சிற்றிலின்மணிசெங்கதிராமெனத்
துற்றுநற்பனிநீர்கலத்திற்சொரிந்
துற்றநித்திலத்தொண்சிறுசோற்றினைப்
பொற்றிருந்தன்கைப்பொற்பிள்ளைக்கூட்டினாள். (எகூ)

தொழுங்கரத்திற்சிலதியர்சூழ்ந்திட
வொழுங்குநீதியுருக்குமணித்திரு
முழங்குமின்னிசைபாடிமுதிர்மணிக்
கழங்குமாடிக்களித்துவந்தாளரோ. (அ0)

வேறு. பேதைப்பருவம்மிவைபின்னிடநால்
வேதத்தின்மிளிர்ந்தெழுவித்தகியார்
கோதற்றுயரும்பெதும்பைக்கொடியென்
றோதத்திருவாமொளியாயினளே. (அக)

அம்மானையும்வென்றடர்கஞ்சனனு
மம்மானையுநூறியவச்சுதனு
மம்மானையுந்தவமாரமிர்த
மம்மானையுமாடினள்பாடியரோ. (அஉ)

சந்தாருமெயிற்றரளங்களெழ
மந்தாரமலர்க்குழல்வண்டெழவே
செந்தாமரைமேலுறுசெய்யமினாள்
பந்தாடியுவந்தனள்பார்மிசையே. (அங)

ஆசில்குழையாடவலங்கலுடன்
மாசில்லளியாடமலர்க்குழலா
ளேசின்மணியாடமெய்யேருறவே
ஊசல்வினிதாடினளொண்டொடியாள். (அச)

போராடளியேடவிழ்பூங்குழன்மேற்
சீராடவிளங்கியசெங்கழுநீர்த்
தாராடமணங்கமழ்சந்தனமார்
நீராடலுவந்தனணேரிழையே. (௮௫)

அலையெய்துமகோததியாரமிர்திற்
பொலிவெய்தியெழுந்துயர்பொற்கொடியா
ளிலமெய்திநிறைந்தமணங்கமழு
மலர்கொய்தனள்வண்டொலிமிண்டிடவே. (௮௬)

வளையாடகல்வாவியிலாடினணீர்
கிளியாடியசோலைகிளர்ந்தொளியா
யளியாடியமாலையலர்ந்தெழுமான்
விளையாடினள்பல்பலவித்தகமே. (௮௭)

வேதங்கள்விளங்கிடமெய்யுயர
வேதங்களிடைந்தறனெய்திடநற்
கீதங்கள்கிளர்ந்தெழுமாநகரின்
மாதங்குநிறைந்துவளர்ந்தனளால். (௮௮)

மானேயெனமாமடவன்னமெனத்
தேனேயெனவேதிருவாமெனவே
மீனோர்விழிமங்கையுமாயினண்மின்
முனேநிகராகியதாமரையாள். (௮௯)

வேறு. கீதவேழிசைபயிற்றினள்கின்னரமெனவே
யோதினள்பலபுராணமுநாமகளொதுங்கத்
தாதுசேர்தொடைச்சனகராசன்பெருமகளாஞ்
சீதையாயிவண்விதர்ப்பர்கோன்மகளெனுந்தேனே. (௯௦)

மின்னுமாரமுங்கொழுமணியினங்களும்விளங்கப்
பொன்னிலைமைந்தெழுந்தபூங்கொம்பெனப்பொலிவாள்
கன்னிமாமலர்த்திருமகள்கயனிகர்கண்ணி
யன்னமாநடைக்குயின்மொழிக்கவினுறுமணங்கே. (௯௧)

கற்பகங்கெழுமலருடன்கவினுறக்காட்டி
நிற்பவொத்திமைகயங்களினிலங்கிடநிறைந்த
கற்புடைத்திருவிதர்ப்பர்கோன்புதல்வியாங்கன்னி
யற்புதத்தணங்கனையவளழகுகூறரிதே. (௯௨)

உத்தமத்திருவடிவினிற்கவினுறுமொளியை
வித்தகக்கமலேசற்கும்விளம்பிடவரிதாற்
பித்தர்புத்தியில்பேதையாய்ப்பிதற்றுமாறெனயா
னெத்துணைக்கலுற்றேனன்பினுகர்சொல்லெனவே. (௯௩)

வேறு. பிண்டியின்றளிரினையடர்த்துப்பெரித
முண்டகமலரினைமுனிந்துமீமிசை
யண்டர்தங்கற்பகத்தளிருமாமெனத்
தண்டைபொன்னெகிழிசேர்தாளிலங்கவே (௯௪)

சித்திரத்தலர்ந்தசெங்கமலநல்லித
ழொத்தமெல்விரல்களிற்கவின்கொண்டோங்கிட
வித்துருமத்தின்மேல்விளங்குமிந்துவை
வைத்தெனவுகிரினமாட்சிகாட்டவே. (௯௫)

பரியகமிலங்கியபைம்பொன்மேலொளி
தெரிமணிப்பரிபுரஞ்சிறந்துமுண்டகத்
தரியினமுரல்வபோலரற்றவந்தமே
விரிவுறுபுறவடியிணைவிளங்கவே. (௯௬)

தெள்ளியகமடமேற்றராசுசீர்வரா
னள்ளிமேலரம்பையுநணுகுமாட்சிபோ
லொள்ளியபுறவடிபரடொண்கானுனி
யெள்ளவில்சானுமேலிலங்குமூருவே. (௯௭)

கொடியெனத்துடியெனக்கொண்டன்மின்னிவ
ரிடையினிற்றமனியமிலங்குகோசிகஞ்
சுடருறுகலிங்கமீமணிகள்சூழொளி
படருநன்மேகலைகவின்பரப்பவே. (௯௮)

சந்தமாமலர்வெறிதழைப்பவீசியே
வந்தமந்தாகினிச்சுழியின்மாண்பென
நந்திசூதாளிமென்மலரினற்றுளை
யுந்தியவுந்தியிலொளியிலங்கவே. (௯௯)

அராநிறங்கருமையாயமர்சுரும்பின்கீழ்ச்
சிரோமணிவனமிகச்சேர்ந்துநான்றெனச்
சரோருகவிணைமுகைதாங்குந்தண்டென
வுரோமமாமொழுங்குநற்கவின்கொண்டோங்கவே. (௧00)

நிதிலசித்திரப்படிவந்திட்டிடு
மேதமில்பலகைமாலிலங்குமாலிலை
மேதகுதமனியத்தட்டமென்னினுஞ்
சோதிசெய்துத்தமோசொல்லற்பாலதே. (௧0௧)

வேறு. கோங்கரும்பியமுகையினைக்கரியின்வெண்கோட்டை
யோங்குபங்கயமுகிழினையமிர்தமுள்ளொளிர
வீங்குபொற்கலசத்தினைப்பொன்னின்மேருவினைப்
பாங்கழிக்கவங்குரித்தெழும்பணைமுலையிலக. (௧0௨)

வேறு. வலம்புரியமர்ந்தெனமருதவேலியிற்
சலம்புகக்கவின்கொள்பூகந்திதானென
வலம்பியநவமணியிழைத்தவாடகக்
கலன்களின்வெயில்செய்கந்தரமிலங்கவே. (க0௩)

காம்புநேராமெனக்கவின்கொடோளிணை
ஏம்பலாலவிர்கொள்கேயூரமேருறக்
கூம்பலாதலர்ந்தகோகனகமாமென
வாம்பல்வாயரிவைகையழகுமல்கவே. (க0௪)

நேருலாவஞ்சுகநிரையின்மூக்கென்கோ
வேருலாங்கவிர்தருமிதழுமாமென்கோ
சீருலாவியவெழில்சேர்ந்தசெங்கையின்
கூருலாவுகிர்க்கவின்கூறலாவதோ. (க0௫)

இந்திரகோபமோகவிர்கனேந்தியே
தந்தநன்மலர்கொலோபவளந்தான்கொலோ
சுந்தரவிலவிதழ்துலங்குசெங்கிடை
யந்தரமழித்தோளிரதரச்செவ்வியே. (க0௬)

முல்லையினரும்பினமுனைத்தமாட்சிபோல்
வில்லுறநிரைத்தவெண்டரளமாமெனப்
பல்லிணைப்பதித்தெழும்பவளவாயினிற்
சொல்லமிர்தெனநிலாவணியதூநகை. (க0௭)

மாசிலாநறுங்குமிழ்வைத்ததாமென
வேசில்சாமீகரத்தெள்ளின்பூவென
நாசியேருறமுகநால்கொண்டோங்கியே
பேசலாந்தரத்ததோபிரமற்காயினும். (க0௮)

அயிலிரண்டாமெனவலகம்பாமெனக்
கயலிரண்டாமெனக்கடல்களாமெனச்
செயலிரண்டெனவகன்றொளிசிறந்திடு
நயனநீலோற்பலநவிலலாவதோ. (க0௯)

மருவிநற்பயோததிதயிலுமாலெனக்
கருமையும்வெண்மையுங்காணவேகளித்
தருளளித்திணையில்காதடர்ந்துநீண்டெழும்
பெருமையுற்றஞ்சனம்பிறழுங்கண்களே. (கக0)

சீலமிலிலங்கையாடியவன்றன்மேல்
மாலிருகரந்தனில்வளையவாங்குவி
னீலமுற்றிரண்டதாய்நிவர்ந்தநீர்மைபோல்
வேலிலங்கியகண்மேற்புருரமின்னவே. (ககக)

வேறு. மயிர்விளக்கருவிவள்ளைவனப்பெனவயங்கிக்காட்டிச்
செயிரறவளர்ந்தகாதிற்செழுமணியினங்கள்சூழ்ந்து
வயிரமுமிளிரவாரிவலம்புரிமணிவயங்கிச்
செயலுறமலியுமாழைக்குழைகளுஞ்சிறந்ததம்மா. (௧௧௨)

வேறு. வட்டவெண்மதியினைவகிர்ந்தபாதியை
யிட்டசொலியைந்திடுமளிகத்தெண்டினை
யொட்டிவைத்தனவெனவொளிருமாடகச்
சுட்டிநன்மணிகளுந்துலங்கிக்காட்டவே. (௧௧௩)

வேறு. மங்குலைமுனிந்துமஞ்ஞைத்தோகையையிகழ்ந்துமல்குங்
கங்குலிற்பிளப்பதென்னக்காளமார்கவரியென்னப்
பொங்களிமுரலநாவிபொருந்திடவெறிகள்வீசச்
சிங்கலிலறலாளைம்பால்செப்புதற்கெளியதன்றே. (௧௧௪)

சிங்கலிலளகந்தன்னாற்செல்வெண்மையாகிப்பாதித்
திங்கணெற்றியினாற்றேயச்சிறந்திடுவிழியினாலே
கங்கபத்திரமாவத்திற்புகக்கதித்திலங்கியோங்குங்
கொங்கையாற்குவடுகோடுகொள்ளவேமறைந்ததன்றே. (௧௧௫)

குழையினால்வள்ளைவாவிகோமளத்தோள்களாலே
கழையினம்வெடிப்பக்காந்தள்கரத்தினாற்காட்டினேக
விழைகளாடாவினுள்ளேயிடையினானுழையவாம்பற்
குழையெலாமதரந்தன்னாற்பகலிடைக்கூம்பிற்றன்றே. (௧௧௬)

சுந்தரநுதலால்வானிற்றுலங்குவிற்காணாதேகக்
கந்தரமதனாற்சங்கங்கடலிடைவெளுத்தேசாயத்
தந்தநல்லவிரான்முத்துத்துளைபடத்தாழ்வொன்றில்லா
வுந்தியினயத்தோடொன்றுஞ்சுழியழிந்தோடிற்றன்றே. (௧௧௭)

வேறு. மேகமுதியாதொளிருமின்விடமிடைந்த
நாகமுமிழாதமணிநத்துமுமிழாத
வோகையுறுமாரம்வனையூடுபிறவாத
வாகுபெறுநல்வயிரமாமலரின்மாதோ. (௧௧௮)

நாகம்வழையாமலகமாதவிநரந்தை
பூகம்வகுளங்கதலிபொற்புடையசூத
மாகமுறுசண்பகம்வருக்கைவளர்தாழை
மேகமுறுமாரமுயர்பாடலம்விளங்க. (௧௧௯)

தூவியினமோடுபெடைசூழமயிலாடக்
கூவுகுயிருவுகிளிகூடவளிபாட
வாவுகவியூகநிரைமாங்கனிகள்வாரி
மேவுபொழிலூடுமணிமண்டபம்விளங்க. (௧௨0

வாசமலர்குங்குமமணங்கமழுமேனி
யேசின்மணியாரம்வயிரங்களுமிலங்க
மூசுவரிகீதமுருகார்குழலின்மொய்ப்பத்
தேசுதிகழ்மங்கையிருசேவடிபெயர்த்தாள். (௧௨௧)

பஞ்சுதிகழ்மென்கமலமானபதமீதின்
விஞ்சுகதிரஞ்சுமணிநூபுரமிழற்றக்
கொஞ்சுசுகமன்னமயில்கூசவெறிவீச
வஞ்சியுறுகொம்புநடைகற்றதெனவந்தாள். (௧௨௨)

ஏமமணிநற்கவிகையேந்தினர்களித்தே
சாமரைகள்வீசினர்கடாமமணியோதி
வாமமலிமங்கையர்பல்லாண்டிசைவழங்கித்
தேமலர்கள்சிந்தினர்கள்சேவடியிலங்க. (௧௨௩)

மின்னுமணிமண்டபம்விளங்குசுடர்வீசப்
பொன்னவிர்கொள்கொம்புமலர்மல்கியதுபோலுங்
கன்னிமெய்யிலங்கியகலன்களுறமேவு
மன்னமெனவெய்தியரியாசனமமர்ந்தாள். (௧௨௪)

சிந்தைமகிழ்ந்தணர்கண்மாதவர்திரண்டே
வந்துமலர்தூவிமொழியாசிகள்வழங்கிச்
சுந்தரவிதர்ப்பனருடோகைநலினத்தே
னிந்திரைமகிழ்ந்திடவிருந்தனர்சிறந்தே. (௧௨௫)

தும்புருநன்னாரதரியம்புசொலின்விஞ்சக்
கிம்புருடர்நாணவிசைகீதமொழிகேளா
வும்பர்கணிறைந்துமலர்தூவவொளியோங்கு
மம்புயமடந்தைமகிழ்வெய்தியமர்வேலை (௧௨௬)

நாச்சியார்திருவவதாரப்படலம்முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௫௩௨.

எ. வது—கெசேந்திரன்மோட்சப்படலம்.

மாவிடவராவினணைவைகிமறையோது
நாவுடையநன்குறளதாயவுணனல்கு
மூவடியின்மூவுலகுமுற்றவுமளந்த
சேவடியிரண்டுநினைமின்வினைகடர. (௧)

பாருதையமானகரிதேர்நிரைகள்பாய்மா
மாரதர்கண்மாளவிசையற்கிரதமாலூர்
சாரதியுமானவரிதாள்பணிதவத்தோ
னாரதனெனும்பெயரினான்மறைகொளுவான். (௨)

மாதவன்முராரியரிமண்ணிடையிழிந்தே
யாதவர்குலத்தினிடையெய்தவெழில்வேலை
யீதமிர்தமெல்லியல்விதர்ப்பன்மகளென்றீண்
டோதநிலன்வந்தனனொறுவுருகுநெஞ்சன். (௩)

தண்டுகுடைபொற்சிரகம்வீணையொளிரத்தான்
கொண்டுயர்கரத்தன்விடையேறியருள்கோவு
மண்டர்களுமெண்ணவருநீதியறிவாளன்
மண்டபமிலங்கவமர்மாதுமுனர்வந்தான். (௪)

புண்டரிகனும்புகழும்வீணைமுனிபோதக்
கண்டனள்விதர்ப்பன்மகளாகுகமலத்தேன்
விண்டலம்விளங்குமணியாபரணமின்ன
வெண்டவன்மலர்ப்பதமிறைஞ்சியெதிர்கொண்டாள். (௫)

திருக்கதுமல்வீணைமுனிசிந்தைமகிழ்வெய்த
வருக்கியமளித்தனளருந்தவனுமாசி
யிருக்கினமொழிந்தருகினிட்டதவிசெய்த
வுருக்குமணிநாயகியுவந்தினிதிருந்தாள். (௬)

அருந்தவநிறைந்தலைகொளாழியமிர்தின்முன்
னிருந்தவள்விதர்ப்பன்மகளென்னவொளியெய்தும்
பெருந்தவநிலத்தின்மிசைபெற்றனமெனச்சீர்
திருந்துமறையோன்மகிழவேதிருவியம்பும். (௭)

ஏதமறநீயிவணினெய்தியதியான்செய்
மாதவநினைக்கிலளவில்லைவருகாலம்
பூதநிகழ்காலமுணரும்புநிதவென்றே
யோதியவுருக்குமணிபின்னுமுரைசெய்வாள். (௮)

மூவரொனவேயுலகமூன்றையுமளிக்குந்
தேவனவனெங்குறைவனென்பதுசிறப்பப்
பாவமகனன்முனிவநீபகர்தியென்று
பூவினமர்மாதருளவேபுகலுநூலோன். (௯)

பூதலமும்வானுமெரிகால்புனலுமாகி
வேதமும்விளங்குமுருவாய்வெளிசெய்யாத
வாதிமுதலின்செயலறிந்தபடிசொல்வேன்
மாதினிதுணர்ந்தருடியென்றுரைவழங்கும். (௧௦)

ஞாலமுயர்வானமமர்சிவனனியுற்ற
கோலமறவேகவயமாகநிவர்கோமா
னீலமுகில்போனிகரிலாதநிசுவாகி
பாலிலையின்மீதினமர்வோனவன்முகுந்தன். (௧௧)

எண்டவர்களிந்திரவியெண்டிசையர்வானத்
தண்டரயனோடுவரையேழ்கடலமர்ந்த
வண்டமெணிலாதவுதரத்திடையடக்கிக்
கொண்டலெனவாலிலையின்மீதினமர்கோமான். (க௨)

நாபியினிலேழ்பொழிலுநான்முகனுநண்ணத்
தீபமெனநான்மறைகள்செய்துசிவன்மீதிற்
சாபமறவைம்புலனடக்கியதவத்தோர்
பாபமறவீடுமருள்சோதிபரமேட்டி (க௩)

ஆன்றவுலகங்களையுமுண்டிலையமர்ந்து
கான்றுகழலாலளவுகொண்டிடர்கடிந்தே
மூன்றுசுடராயறிஞர்முத்திபடர்தற்கா
னூன்றியகொள்கொம்பெனவுயர்ந்ததிருமூர்த்தி. (க௪)

அண்டமுதலாகியதினப்புறமுமாகிப்
புண்டரிகராயரர்புரந்தரருமாகி
யெண்டிசையுமெவ்வுயிருமெண்வரையுமாகித்
தெண்டிரைகொள்வேலைகளுமாயதிருமார்பன். (க௫)

நீலமுகின்மீதின்மலரம்புயநிறைந்த
கோலமெழவாழிவளைவாள்கதைவில்கொண்டு
காலனெனவேவருகராவினலைகமா
மூலமெனவந்ததுணையொன்றுமுனிசொல்வான். (க௬)

வேறு. இரணியந்தாரநீடயமென்றிவ்வணந்
தரிதிரிசிமையந்தாரகையைத்தாவுவே
திரையுறுசிகரஞ்சேணிரைக்கும்பாற்
பரவைசூழ்பருப்பதம்பகரலாவதோ. (க௭)

இயல்புறத்துயிலரிபெருந்துழுவனச்
செயலுறுமூர்த்திகடெரியநின்றபோற்
பயமுறவலையெழும்பரவைசூழ்வா
னுயரவோங்கியதிரிகூடவொண்வரை. (க௮)

அடியெலாமரகதவிர்களுநேன்றுற
நடுவெலாந்தமனியப்பத்திநண்ணிடத்
தடமெலாம்பாண்டிலிரைஞ்சாரமா
முடியெலாமரவுமிழ்மணிகண்மொய்த்ததால். (க௯)

வருதிரைநதிகளுமலர்களோடையும்
விரிவுறுமுடுவினத்ததிகம்விஞ்சமீ
யருவிகளிழிவனவரிமெய்யெங்கணுந்
தரளமாவட்டம்புரடன்மைபோன்றதே. (௨௦)

இரலையாவிகமெண்குசவரம்யாளிக
ளரிகிரிகரிமனாயருணம்வாரணம்
வளாகிகர்காரமைவருடையெண்ணில
பரவியவுயர்பருப்பதத்தின்மீதரோ. (உக)

கற்பகநிரையெனக்கவின்கொண்டோங்கலி
னற்புதத்துணர்மலரனந்தமல்கிடப்
பொற்புறும்பொழிலெழில்புயலிஞேங்கிட
நிற்பனகோகிலநிறைந்துகூவவே. (உஉ)

சித்தர்சாரணர்கள்கெந்தருவர்சீருறு
வித்தியாதரரியாழ்விளங்குகின்னரர்
சித்தசன்மயல்கொளுந்தேவமாதரார்
நித்தலும்வரைமுழைநிறைந்துபாடுவார். (உங)

ஓதிமமொதுங்கல்லொளிகொணூபுரப்
பாதமதிசையுறவளைகள்பம்பவன்
காதிணைவிழியுறக்கந்துகங்கொடே
மோதிடுமாதரார்குழாங்களோர்முறை. (உச)

இரணியவம்பரமிலங்கமாமணி
வருணமேகலையிடைவயங்கிக்காட்டவெண்
டரளமாவடமொடுதாமமாடவே
யரிவையரூசலாடுவர்களோரிடம். (உரு)

கைதனில்வயிரகங்கணமிலங்கவே
மெய்தனிற்கருப்புரவெறிகள்வீசநற்
பொய்கையின்மருங்கினார்பொழிலினுண்மலர்
கொய்திடுங்கோதையர்குழாங்களோரிடம். (உசா)

ஓவியமுயிர்பெறவொளிருஞ்செய்கையிற்
காவியுங்கமலமுங்கரத்தினாலெறிந்
தேவிலாமணிவெயிற்றிகழுவெண்ணிலா
வாவிநீராடுமங்கையர்களோரிடம். (உஎ)

தரளமார்வடங்களுந்தனத்தின்மல்கவே
சுரிகுழல்வெறிகளாலளிகடுன்னவே
கரமிசையாழுறக்கற்புற்பாதவ
முருகிடவோதுவார்குழாங்களோரிடம். (உஅ)

பாடகம்பரிபுரம்பதத்திலங்கவொஞ்
சூடகங்கரமிசைதுலங்கவெய்திநீ
ளாடகமண்டபத்தமர்ந்துகொண்கனைக்
கூடியேகளிப்பவர்குழாங்களோரிடம். (உகூ)

இணையதோர்பொற்புறவெண்ணில்கந்தரத்
தனமெனுநடையுடையணங்கனார்கடாந்
தினமுமற்புதமுறச்சேர்ந்துகொண்கரோ
டினிதுறும்வரைநனியியம்பலாகுமோ. (ங௦)

அரிவைமார்மருணனோடணிந்ததாமத்தி
னூரமிசைக்கலவியினுலாவுமாசுகம்
வரவருமணஞ்செறிவருணனூல்வள
ரிருமகத்தென்பதோர்பொழிலிலங்கவே. (ஙக)

தினமலர்காய்கனிசெறிமந்தாரநற்
சொனமலர்ப்பாரிசாதநலருச்சுனம்
பனசமாம்பிராதவம்வழைபல்லாதக
மினியசெம்பீரமீந்தாலங்கிஞ்சுகம். (ஙஉ)

வேறு. மருகங்கச்சூரம்பாடலங்கணவம்வகுளஞ்சம்பகம்பிரியாழ்
கதுமைசேர்தமாலம்பிசுமந்தமாரங்கதலியாசினிவடங்கதம்பஞ்
சுதையுறுகனிசேர்கபித்தமிங்குதம்வேதசங்குந்தங்குபிசகஞ்சூதம்
விதுவின்மண்டலஞ்சேர்சாலநீள்சிரீடம்வில்வமாமலகமாதவியே. (ஙங

கோவிதாரம்வானோங்கியபிலக்கங்குரவகநரந்தைநற்றுலங்
தேவதாரந்தாழைத்திர ளதுவும்பாடலிசெறிந்திடும்பூக
மேவுதாரகைக்குமுயரவேவளர்ந்துவிளங்குபுன்னைசமாகனத்திற்
றுவுதாரத்துட்டமனியகிர்த்தமலர்தழைத்தவுத்தியாவனமே. (ஙச)

கோகிலங்கபோதமஞ்சுகம்பூவைகுரண்டம்பாராவதங்கங்
கேகையமுத லாய்க்கிளர்ந்திடும்பறவைசெழுமிடவலிமுகவினங்க
ளாகமாமலரைப்பறித்தெறிந்தெழுந்துநற்கதலிப்பழமருந்திப்
பூகமேற்றுவித்தாழையினிளநீர்பருகியாண்டோடிடும்பொழில்வாய்.

நிகரில்வானதியினீரொளத்தெளிந்துநிறைந்திடும்வாருதியெனத்தா
னகலநீளந்தாழ்மும்யோசனை நூறுகியவோடையினறுகால்
புகவலர்நளினந்தமனியவனசம்பொலிவுறுமுற்பலங்குமுத
மிகழ்வில்கல்லாரநிறைந்துயவானினுடுவெனவிலங்கியதன்றே. (ஙசா)

வேறு. சாதியுமவ்வலுந்தளவும்பிச்சியுஞ்
சீதம்விஞ்சிடுகரவீரமுந்திகழ்ந்
தேதமில்வலம்புரியிலங்குசெவ்வந்திப்
போதினோடோடையெம்மருங்கும்பொற்புற. (ஙஎ)

விரைமரைமலரனம்வீற்றிருந்திடப்
பொருசலவாரணங்கரண்டநேமிப்புள்
ளிருமருங்குறவளியிசைகள்பாடவே
பருவரால்கழாயர்போற்றுள்ளிப்பாய்ந்தவால். (ஙஅ)

சேலினைவரால்கயல்வாளைதேளியுங்
கோலமார்வல்லையின்கொடியிற்றாவிட
வால்வளைநெருக்கச்சின்மச்சம்பாறவே
மேலெழுகச்சபம்விளங்கிக்காட்டிய. (௩௯)

வனசமாமலரின்வானோங்குமாம்பிரக்
கனியுமிழினியநீர்கலந்துபாயவாண்
டனநுகர்ந்தாடநல்லளிகள்பாணியோ
டினிதுடன்பொதுளவோரிலஞ்சியுள்ளதால். (௪௦)

வேறு. உருவுடையகெந்தருவனூகுவென்போ னோடையிற்றன்மனைவியர்களு டனுநண்ணிக், கனைமருங்கின்மருங்கின்மிசைவயங்குகின்றகலையறவந் நீரினிடைக்கலந்தமூழ்கி, விரைபுரையுமலர்பறித்தங்கெறிந்தேகூடிவி ழுந்தெழுந்துவினோதங்கள்பலவுஞ்செய்து, வரைவில்களிப்பெய்திடவா னரம்பைநாணமங்கையர்களுடன்மேவிமகிழும்போதின். (௪௧)

தேவலனுமுனிவனந்தச்சலத்தின்மூழ்கித் திகழ்ந்திடலுங்கெந்தருவனூ குவென்போன, பாவமறநீரினுள்ளேமுழுகிக்காமம்பற்றறுத்ததவத்தோன்ற ன்பாதம்பற்றச், சேவினூறுமரன்போலச்சீறிநீதான்செருக்குறவென்றாள்பற் றுந்தீமைதன்னால், வாவுசினக்கராவெனவேமூன்றுகூடவரையிடத்தினோடை வாய்விழுவாயென்றான். (௪௨)

சரியின்முனிசாபமிடவூகுவென்போன்றாழ்ந்திறைஞ்சியென்பிழையை த்தணியென்றோத, வருளுறநற்றேவலன்றானவனைநோக்கியாழ்ந்திடுமெவ்வோ டையினிற்கராநீயாய்நீர், பருகவருகரிதாளைப்பற்றவெட்டாப்பரமனெய்தித் திகிரியினாலுன்றனுக்கை, யிருபிளவாக்கியபோதிப்புன்மையோவிக்கெந்தரு வவுருவாகியேகென்றானால். (௪௩)

வேறு. ஆசகன்முனிவனிவ்வாறறைந்திடவூகுவென்போன்
மாசறுமிடங்கராகிவனப்புறும்பயோததிக்கு
ளோசையார்திரைகள்சூழ்ந்திரிகூடவரையினோடை
வாசமாம்வனசமல்கும்பயத்தினுள்வயங்கிற்றன்றே. (௪௪)

வாரியைக்கிழியவோடுமகரம்போலோடையின்க
ணாரமெம்மருங்கும்பாயநளினம்வேர்பறியச்சேல்கள்
பாரியவரால்கள்வாளைபயமுறக்கமடம்பம்ப
நேரிலரக்கராவுமாழ்ந்துமிர்ந்தெங்குந்திரியுநாளின். (௪௫)

சந்திரன்குலத்துட்டோன்றுந்தராபதிதென்னமன்ன
னிந்திரன்றனையொப்பானிந்திரத்துய்மனென்பான்
சுந்தரவடிவினாலுசுருதிநூல்வழியையோம்பி
யந்தமார்செங்கோலோச்சியுலகெலாமாண்டானன்றே. (௪௬)

ஒன்னலரவியவெட்டுத்திசையுமோர்செங்கோலோச்சி
யிந்நிலத்தறன்மெய்நீதியியல்பெலாம்வளரவாண்ட
மன்னவன்முன்னாட்செய்தநல்வினைவருதலாலே
பன்னகப்பாயன்மேவும்பரமன்றன்பத்தனானான். (௪௭)

தந்தைதாய்துணையர்தாரஞ்சகோதரர்செல்வமெல்லா
மந்தரத்தனுவையொத்துமயத்திடைக்குமிழிபோன்றுஞ்
சிந்திடுமிளமைநில்லாதேய்ந்திடுமாயுக்காலன்
வந்திடுமென்பதுன்னிமன்னன்மாலடியனானான். (௪௮)

அளவிலாப்பிறவியென்னுமளக்கரைக்கடக்கவிட்டாண்
டுளமகிழ்ந்திருக்கமீளாப்பதவியையுதவுமையன்
துளவணிபரமனல்லாற்சோதிவேறில்லையென்று
தளர்வில்வேதாந்தமோதுந்தத்துவத்தறிந்தானன்றே. (௪௯)

சாத்திகபுராணந்தன்னிற்சதுமறைநெறியின்மூன்று
நேத்திரனிடனாநீக்கநேமியைத்தரித்தேயார்க்கு
மூத்தவனிவனேமீளாமுத்தியைப்பத்தர்க்கீயுந்
தீர்த்தனுமிவனேயென்னச்சிந்தைசெய்திருந்தமன்னன். (௫௦)

ஆளுமவ்வுலகம்விட்டானளப்பிலாவிபவம்விட்டான்
கேளிரைவிட்டான்முரந்தனையர்கிட்டாமல்விட்டான்
மூளுமிந்திரியந்தன்னைமுடுக்கித்தன்கீழாளாக்கி
நீளநாயகனைநெஞ்சினிறைத்தவனகலாநீங்க. (௫௧)

விலாலெழுசரத்தால்வாலியிராவணனறவீழ்த்தோனைச்
சொலாலுறவேத்திநாளுஞ்சூழ்ந்திடுஞானமெய்தப்
பலாசமாம்பிரந்தமாலம்பாண்டில்சூழ்பழுவந்தன்னிற்
குலாசலமென்னுமோங்கல்குறுகினான்மன்னன்மாதோ. (௫௨)

வேறு. உடலமாவிரதமிவ்வுளியிந்திரியமுரணுறுமனம்பிடிபாச
மடலில்சாத்திகநல்லெஞ்சுருவாணியடர்ந்திடும்பிராணனாண்டிருசு
விடலுறுமறனேருருளையதன்றிவினையுறுமதன்மமோருருளை
கடுகியேசெல்லுநெறிசுவையொளியூறோசைநாற்றங்கடான்கடுக்கும்.

இனையதோரிரதவலனெனப்புந்தியிஃதுறுமாளுறுசீவன்
றனுநலமளிக்கும்பிரணவஞானசரம்பரன்பதமதற்கிலக்கு
வினையுறுவிரயத்தழுந்திடாததன்மவுருளையைவெட்டியேநீக்கி
நனிதருமத்தினுருளையையறிஞர்நடத்திமாலிலக்கைநாடுவரால். (௫௪)

பிரணவத்தனுவின்விடுத்திடுஞானம்விசிகம்பேராயிரன்பதத்தின்
மருவவவ்விடத்திற்சீவனுமணுப்போல்வயங்கிடப்புகுதுமாறறிந்தாண்
டரசனச்சமறமாசிலாஞானமச்சுதன்பதத்திலங்குறத்த
னிருகணீர்புளமவனாயினைதயமுருகிடவிருந்திடுநாளின். (௫௫)

பரவையைநுகருங்குறுமுனிவரனும்பாண்டியன்மவுனனாயிருப்ப
வெரிசினத்துடனற்றவனெனைப்பணியாதிருந்திடுமதரினனிருப
கரியுருத்தரித்துத்திரிகுதியெனவேகழறியேகிடலுமவ்வரசன்
பெருவரைநிகராம்புகரிபமாகிப்பெயர்ந்தனனவ்விடமொருவி. (௫௬)

வடவரைநிகர்த்துப்பெயர்ந்திடும்பகடுவடதிசைமுடுகியேபாலின்
கடலிடைநடுவிற்ககனமார்திரிகூடப்பருப்பதத்தினைக்கலந்து
தடமெலாநிறையும்பிடிகளுஞ்சேர்ந்துதந்தியினீட்டங்கள்சூழக்
கடகளிற்றரசாயடவிகடோறுங்காமுறத்திரிந்தநாடன்னின். (௫௭)

கதிரவன்சுடராலடிபொடியுறவேகடுகிநீர்பருகிடநினைந்து
மதமுறுகரிகள்பிடிகளெண்ணிலாதகுருளைகளிருமருங்குறநீ
ளுததியுமஞ்சப்பிளிறிடுமொலிகளுருமெனவடவரையென்னப்
பதநிலம்புதையப்பாதவமுறியப்பருப்பதந்துகள்படவந்தே. (௫௮)

கடிதடவிகடக்கரியிபஞ்சூழக்கனகமால்வரையெனவரவே
சடசடவெனவாண்டொலியுறப்பிறங்கறுகளுறச்சாலம்வேர்பறிய
வடவியினரியாவிகங்கரிமரைகளருணமெண்குழுவைகண்மயிட
முடல்கரைந்திடவேதிசைதொறுங்கொட்புற்றோடிநீள்கந்தரங்கரந்த. (௫௯)

ஆடகவரைபோலுயர்ந்திடுகரிசென்றயமன்னபொழிலிடைநாப்ப
ணோடையின்விழுந்தந்நாரமுள்ளாழ்ந்தமுழுகியாண்டொளிபெறவெழுந்து
நீடியகரத்தாலமையுநீர்பருகிநிரைமணன்மெய்யெலாமிறைத்துக்
கூடிவந்தயரும்பிடிகளுக்கன்பாற்றுதிக்கையாலயங்கொடுத்ததுவே. (௬0)

பிடிகளுங்குருளையினங்களும்பருகப்பெருங்கரத்தமையுநீர்கொடுத்தாண்
டுடலெலாநிறையவயமும்வாலுகமுமுயர்ந்தெழுந்தேயிறைத்திடவே
புடைவருமிபத்தின்குழுவெலாமிலைறத்தபுனறன்மெய்யருவிபோல்விழமா
வடவரையெனவவ்வோடையையுழக்கிமதமுறக்களிக்கும்வேலையின்வாய்.

வேறு. ஆலமெனக்கடல்வடவனலாமெனவுயிர்வவ்வுங்
காலனெனக்கொடிதானகராவுங்கடிதெய்தி
நாலுகையாலிபமெய்யினிறைத்திடுநல்வேழக்
காலிணைவாய்கொடுகவ்வியிசித்தனவிசையோடே. (௬௨)

கடுவிடமாமெனவெய்துகராவடுசினமோடே
வடவரைநிகர்கரிபின்வருதாளிணைவவலோடுங்
கடமுறுமிபமிருகண்கள்சிவந்துக்கிரமோய
விடிபடவதிர்குரல்பிளிறியிசித்ததுகரையேற. (௬௩)

கரியுரனோடுமிசித்திடவுங்கதமுறுநெஞ்சோ
டொருசிறிதசைவிலதாகியிடங்கருருத்தேதா
னெரிநயனத்தொடுபற்றியிசித்திடவிபமெல்லாம்
வெருவியரற்றினபிடிகளொடேகனாதனின்மேவி. (௬௪)

மதவிபநிரையொடுகுருளைகள்பிடிகளும்வலிமிக்க
கதமுறவொளிர்கரிகாறலைகரமுறவிவைபற்றி
வுததிநிகர்த்திடுமோடையைவிட்டுயர்கரையேறக்
கதுமெனவிசைகொடிசித்தனமுரணுறுகையாலே. (௬௫)

மத்தகசத்தினமெண்ணிலபிடியொடுவந்தேகை
யொத்துவலித்திடவுஞ்சிறிதசைவிலவுரன்மெய்யின்
மெத்துகராவதுகண்டுவலித்திடவிசையாற்றங்
கத்திகளெங்கணும்வெருவியிரிந்தனவலறித்தாம். (௬௬)

கூடியிசித்திடும்பநிலைவலிகள்குறைந்தோட
வாடகவரையிவர்கரியுமிசித்திடவயமாரு
மோடையினக்கிரமொத்துவலித்திடவிசையாலே
வீடியகச்சபமச்சியம்வால்வளைமிதியுற்றே. (௬௭)

வேறு. அம்புயமலரிலைவேரொடுமற்றனவாம்பறுணிந்தனவால்
வம்பவிழ்மாழையின்வனசமரிந்தகுவலயமயங்கினவால்
கம்புசிதைந்தனகுமுதமிறந்தகலாரமமிழ்ந்தனவா
லும்பனுநக்கிரமும்முறவோடைகுழம்பியவள்ளலுற. (௬௮)

பாய்பகடிங்ஙன்வலிக்கவிடங்கர்பயத்துளமூந்திடவே
ஆயிரவருடமிவ்வண்ணமுறைந்திடவயமுறுநக்கிரமெய்ப்
பாயுரம்விஞ்சிப்பருவரையிவர்கரிபாதமுமெய்முரணு
மோய்வுறநயனமிருண்டுசெய்வகையிலதாகியுளைந்ததரோ. (௬௯)

மெய்யொடுகால்கரமோய்ந்திடவேவிழிசுழலமெலிந்துகரி
யுய்வகைகாண்கிலதாகியுளைந்தருவாயுருவாயொளியாய்ப்
பொய்யறுமெய்யனுமாய்ப்புவிகாலெறிபுனல்வெளியாயனலாய்
வெய்யவர்வேரறவீட்டியவாதியையுன்னிவிளம்புமரோ. (௭0)

வேறு. ஊருருகருமம்பேர்குணபாவமிவைகளிலொன்றுமில்லவனை
யாருமோர்ந்துணர்ந்தொன்றறிவதற்கரிதாமவனுமாயிருந்துமிவ்வண்டஞ்
சீருறப்படைத்தங்களித்தழிப்பவனைச்சிறந்தும்பரேசனையுயர்ந்த
காரணப்பூதப்பகவனைச்சகலகாட்சியாமுதல்வகாவென்ற. (௭௧)

முத்தியினுருவாய்க்கலைகணைஞானக்கண்ணுமாயெவர்க்குமூத்தவனைப்
பத்தவச்சலனைமாயனைஞானப்பானுவாய்ச்சாந்தனையனந்த
சத்தியவேதபுராணரூபனுமாய்ச்சாற்றுகைக்ககப்படாதவனைச்
சித்தியாயெங்குமுளனுமாயுயருந்தேவனேகாத்தருளென்ற. (௭௨)

நீதியாய்நிட்காரணனுமாய்நிருவிசேடனையோகிகட்கெட்டாச்
சோதியாய்மூலப்பிரகிருதியுமாய்த்துலங்குகைவல்லியத்திறையா
யேதமிறருமார்த்தத்துடன்காமமுத்தியுமீய்ந்திடுமவனை
யாதரவிலாதார்க்ககப்படாவாதிமூலமேகாத்தருளென்ற. (௭௩)

நயனநீர்புரளநளினமாண்டேந்துநாலுகைசிரத்தின்மீதோங்க
வுயர்வறவுயருமொருவனீகாவென்றும்பருனுரைத்தசொற்கேட்டுச்
சயிலவில்லிறையுந்திசைமுகன்றானுமிக்குணந்தமக்கிலாமையிஞ
லயருமாகரிமுன்னணுகிலரண்டத்தப்புறத்தமர்ந்தவனறிந்தான். (எச)

தீயமாவினையான்மைமையாய்ச்சிறுவரிலாமையாற்றினந்தினமெலிந்து
தூயநல்வினையாற்றவத்திறுற்பயந்தசுதனமுதழைத்திடக்கேட்ட
தாயெனவிபங்காவென்றசொற்கேட்டுத்தளர்ந்திடும்வைகுண்டநாத
னேயெனுமுன்றானிருந்தவாதனத்தினிழிந்துபுட்சிறைப்புயத்தானன். (எரு)

பீதியுற்றிடப்பார்ப்பதறியேயோடும்பேதைபோலேகுமாயனைக்கண்
டேதகிங்கெனவேவெருவுதேவியர்க்கொன்றியம்பலானெதிரொப்துஞ்சேனை
நாதன்வந்திறைஞ்சநோக்கலான்ககத்திறையகன்புயத்தினனாகி
வாதமுமயரவவன்றனைக்காலிவிடுக்கியேகடுகிவந்தனனால். (எசா)

சுந்தரக்கலுழன்புயத்தவனாகித்துளங்கியகரியழைத்திடுசொற்
பிந்தவவ்வோடைமருங்கினின்முந்திப்பிரானிலத்தமர்ந்துதன்கரத்தாற்
றந்தியைப்பற்றியிசித்தவண்வலிசெய்கராவின்வாய்தறித்திடுநேமி
யுந்திநல்விபத்தைவெருவலையெனவாண்டுச்சியினங்கைவைத்தணைத்தான்.

கரியினையணைத்துக்கராவினைவதைத்தகருணையங்கடலினைப்போற்றி
யரனயன்குபேரன்மருதசாரணர்களருந்தவர்வலாரிகந்திருவ
ரிரவிகேசரர்களியக்கர்கின்னரர்களிலங்கியவரம்பையருடனே
சுரர்மலர்சொரிந்துதுதித்தனர்பேரிதுந்துமிசினம்பணைமுழங்க. (எஅ)

இந்திரன்கமலன்முதலினோர்முறையாலேத்தியாண்டிறைஞ்சிடும்போழ்திற்
செந்திருமகணன்விடுத்திடவயங்குதிகிரியாற்போழ்ந்திடுகராவின்
வெந்துயரறவானெதிரினாகுவனும்விளங்குகெந்தருவனாயெழுந்து
சுந்தரவரியையிறைஞ்சியாழிசையின்சுருதியாற்பாடியேகினனால். (எகூ)

திகிரிசென்றறுப்பக்கராவுருவொருவத்தேவலன்சாபமுமொருவி
நிகரில்கெந்தருவனாகியேவயங்கிநெடியவனேகெனப்போனான்
பகடெனவிடங்கர்பற்றிடமெலிந்தபாண்டியன்பரன்கரந்தீண்டப்
புகல்வதற்கரியசதுர்ப்புயம்பீதாம்பரமுடிபொற்புறநின்றான். (அ0)

அரசனுய்க்கரியாயமர்ந்திடுஞ்சனனமகலநல்லரியுருவாகிச்
சரியிலாச்சாலோக்கியமுடன்சாருப்பியமுறசசங்குசக்கரங்கை
தெரியநற்சாமீப்பியம்பெறும்பத்தனாகியேசிறந்தவண்வயங்கி
மருவமர்துளவனிணையிலாவடியின்வணங்கியுண்மகிழ்ந்தனனன்றே. (அக)

இடரறக்கராக்கெந்தருவனாயேகவிபம்வளையாழியையேந்தும்
வடிவுடைச்சாருப்பியத்தினையடையவகுத்திவன்காத்திடுமாய
நெடியவமுகுந்தநேமியமுராரிநின்மலவச்சுதவனந்த
படியளந்தருளும்பரமவென்றேத்திப்பணிந்தனர்பங்கயன்முதலோர். (அ௨)

அரனயன்புருகூதன்சுரர்துதிப்பவர்களையேகுமினென்று
கருடவாகனனுய்வயங்கிவேங்கடமார்கரியுருவொழிந்திடநாற்கை
யுருவனுயிலங்கும்பிருத்தியனுடனேயொளிகொள்வைகுண்டத்திலோங்கு
மிரவியர்கோடியவிர்பொலிந்தெழுந்தவெழின்மணிமண்டபத்தமர்ந்தான்.

சருதுகால்புனலைப்பொசித்துயர்வரையிற்றழலிடையளப்பிலாயுகங்க
ளரியநற்றவங்கள்புரிந்தயோகிகட்குமகப்படாதுயர்ந்திடுஞ்சோதி
கரிகரமெடுத்துக்கலைகளுமாதிமூலமேநாவென்மொழிந்த
வுரையினினுதவுநலச்செயலுணர்தியென்றுநாரதமுனியோதும். (அச)

வேறு. பிரமனிமையோர்கண்முனிவோரொடுபிறைகக்
கரமுடையவரனுமமர்முட்டைகழியப்போய்ப்
பொருமியெழுநீர்விரசைபொங்கவவிர்தங்கும்
பரமபதமீதினுறைபும்பதுமநாபன். (அரு)

அண்டமெணிலாதனவளித்தவைகள்யாவு
முண்டெனவுறைந்துயரமீதினவிர்கொள்வை
குண்டமெழில்கொண்டகுருமாமணிகுலாவு
மண்டபமிசைத்திகழுமாதவன்முகுந்தன். (அசு)

ஆணொடுபெண்ணலியுமாகியயன்வானோர்
பேணுமுருவாகியருவாகிவிவர்பெம்மான்
காணுமுருவாயவனிமீதிடர்களைந்த
தாணுவெனநின்றசெயனியுணர்திதக்கோய். (அஎ)

என்றிவுரைகூறியநல்யாழ்முனியைநோக்கி
நன்றிகொள்விதர்ப்பனருணங்கைமகிழ்வெய்தி
யன்றிபமுயக்கடிதின்வந்தவரிமண்மே
னின்றிடர்கடிந்தசெயனியுரைசெயென்றுள். (அஅ)

கெசேந்திரன்மோட்சப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௯௨௦.

அ. வது—வராகப்படலம்.

பிறருடைநாரிபொருடனைக்கவர்ந்துபிழையுறவதிவினையியற்றி
யறனறமுயன்றுகயவனாயிணங்கியறிஞரையெள்கிமூர்க்கருமாய்
மறலிதன்னுலகினரகிடையழுந்திமறுகுறுகிருமியாய்ப்பிறவா
திறையுயரரியேயவன்பெயருரைமினிணையிலாக்கதியையாமுறவே. (க)

அனந்தைமட்டவார்கலவியினழுந்தியவனியினலகிலாவினைவாய்த்
தனநிலன்விரும்பிக்கொலைகளவுயர்த்தித்தருமமெய்சாத்திகமகற்றித்
தினகரன்புதல்வனகரிடைநிரயச்சிறையிடைப்படுத்திடவியற்றென்
மனனெனுங்கொடியாயிணையிலாவரியையவழுத்துநாம்வைகுந்தமுறவே. (௨)

பாரிடைவயங்கும்விதர்ப்பர்கோன்பயந்தபங்கயத்திருமகளுடனே
நேரிலாவிறையோன்பலவுருத்தரித்துநிலமிசைக்கயவரைவதைத்த
சீரினையருளென்றுரைத்திடக்கேட்டுச்சிறந்திடுமுனியரிகிரியாய்த்
தாரணியெடுத்தாண்டவுணனைச்செற்றதகைமைகேண்மாதெனமொழிவான்.

உருவமாயருவாயொளியுமாய்வெளியாயுயரறிவாம்விராட்புருடன்
சரியிலாவகங்காரூழ்ந்தபாதாளந்தருணமாவருணமோபுறங்கா
லுரகமாரிரசாதலம்பரடொளிசேர்மகாதலமொப்பில்சானுனிதான்
விரிவுறவவிர்கொடாராதலஞ்சானுவிளங்கியசுதலமாயோங்கும். (௪)

நிகரின்முன்னுடைநல்விதலமொப்பிலாமணிநிறைந்திடுமடித்துடையதலஞ்
சகனநற்பூமியந்தரமிலஞ்சிதானவர்பகைஞருர்மார்பம்
புகல்வதற்கரிதாய்நிவர்மகாலோகம்பொலனுறுசிரதரங்கவினூர்
முகமொளிர்செனமன்னுதறவவுலகமுடியுயர்சத்தியவுலகம். (௫)

சிரமுயர்வேதங்குஞ்சிசீமூதஞ்சிகமுகனாசியச்சுவணி
புருவமெய்யயனூரிருவிழிசுவர்க்கம்பொலனுறுசோத்திரமாசை
யிரதநற்றாலுநகைமிகுமாயையெயிறுயரரியமாதெய்வஞ்
சரியிலுள்வாய்நீர்சந்திரனுடுப்பலிந்திராதியர்புயந்தானே. (௬)

கடைவிழிநோக்கஞ்சிருட்டிமேலிதழாமிலச்சைகீழ்ப்பாலிகையுலோபம்
நெடியதாம்வெரிநேயதன்மமாமூலக்கணிகரிலாத்தருமமுமாகுங்
கடலகலுதரநகங்கரிபரியுட்டிரமயனமெட்டிரங்கவினூர்
விடணமாண்டெதிரின்மித்திரவருணர்விலங்கலோங்கத்தியாமன்றே. (௭)

இனநரம்பெண்ணினதிகளாமுரோமமிலங்கியபாதவத்திரளா
மனமுருத்திரன்கான்மூச்சிராப்பகலும்வாமதெக்கணபக்கமாகு
நினைவுகந்தருவர்வித்தியாதரர்சாரணர்தெய்வமடந்தையர்நிறையப்
புனைதுகிலிரண்டாஞ்சந்தியாகாலமெனவரிபுருடனுயோங்கும். (௮)

நிகரிலொண்பரனுபுலகெலாமடங்கநிறைந்திடுவிராட்புருடன்றன்
முகமொளிர்புயமூரடியினினான்குகுலத்தினர்முந்தியாண்டெழுந்தார்
புகல்வதற்கரிதாயமைந்தவிவ்வண்டம்போன்றுளவுலப்பிலாவண்டம்
முகினிறத்திறைதன்னுடலினுருரோமமுனைதொறும்வயங்கிடுமன்றே. (௯)

ஆயயோகியர்தந்நினைவினுமெட்டாச்சோதிதன்கடைவிழியருளான்
மாயைபாயுயரும்பிரகிருதியினில்வாழ்மகத்தத்துவந்தோன்றத்
தேய்விலாவஃதினெழுமகங்காரஞ்சிறந்தசாத்திகமிராசதமோ
டோய்விருமதமென்றுரைத்திடுமூன்றுகுணமதினுயர்ந்திடுமன்றே. (௧௦)

ஆயதாமதத்திலுதித்தவாகாயமஃதிடைச்செனித்தவாயுவினிற்
றேயுவந்தெழவாண்டஃதிடைப்பிறந்தசலமதிற்றோன்றியதவனி
ஆயவிவ்வைந்துபூதமுமோசையூறொளிசுவையெழுநாற்றந்
தேய்விலிவ்வைந்துபொறிகளுங்கூடத்தெசமதாய்த்தோன்றியதன்றே. (௧௧)

இனிமையாயெழுந்தவிராசதகுணத்திலிலங்குமெய்வாய்விழிசெவிமூக்
கெனுமிவையைந்துஞானவிந்திரியமெதிரிலாவசனங்கையாதந்
துனியுறுமபானங்குய்யமோடைந்துங்கருமவிந்திரியமாய்த்தோன்றி
மனமுடனேகாதெசமெனவுலகினுரைத்திடமன்னியதன்றே. (௧௨)

கருமவிந்திரியஞானவிந்திரியந்தெசமதாய்க்கலந்திடவதற்குச்
சரியில்சாத்திகத்திற்செனித்திடுமதிதேவதைகளின்சதாகெதிமெய்க்கு
வருணன்வாய்க்கிரவிவிழிக்குயர்தெய்வவயித்தியர்நாசிக்குத்திசைக
ளிசையொலிகேட்குஞ்செவிக்கிவையைந்துக்குறுமதிதேவதையிவையே.

அனலவன்வசனமமரர்கோன்பாணிக்கருள்செயுமுபேந்திரன்பாத
மினிமையின்மருத்தங்கபாநத்துக்கயனமெட்டிரமிவையைந்தாந்தெய்வங்
கனமுறுபஞ்சபூதலமம்பொறிகள்கருமவிந்திரியமோரைந்தும்
வினையறுஞானேந்திரியமோரைந்துமிவையுடனிருபதாய்விளங்கும். (௧௪)

பூதமும்புலனும்பொறிகளுங்கருமேந்திரியமும்பொதிந்திருபத்தா
யேதுவாயுயர்பிரகிர்தியாங்காரமெழுமகத்தத்துவமநத்தோ
டீதுநாலுடனேசீவனுங்கூடவிருபத்தஞ்சாகுதத்துவத்தி
னீதிகொண்டுலகோடண்டமும்படைத்தநீவிநீவுவன்பரமேட்டி. (௧௫)

அயனெழிகாலமடையுநாட்பகருமவனியின்வாசனைவாங்கப்
பயமதாய்ப்பூமியிறந்திடநாரவிரதத்தைப்பாவகன்பருக
வயமிறந்தனலோடிறவனலொளியையாசுகனுங்கவக்கனன்மாண்
டியல்பறவறையுஞ்சமீரணனுடனுண்டேகமாய்க்கலந்தெழுந்ததுவே. (௧௬)

வாயுவின்பரிசமதனையாகாயம்வாங்கவாண்டாசுகனிறந்து
தூயவாசினியுட்கலந்திடக்ககனத்தொலியையாங்காரமும்பருகத்
தீமையிலஃதைமகத்துவம்வாங்கச்சிறந்திடுமஃதினைமாயை
நோயெனமுடுக்கிநுகரவெவ்வுயிருநுழைந்துசோதியினிடத்துறுமால். (௧௭)

மாயையுமுயிருமறப்புனல்பரவவடமதாயெழுந்ததனிலைமேன்
மீயுயர்ந்தெழுந்தவனந்தவண்டந்தன்வயிற்றிடைவிளங்கியாண்டமரத்
தூயதோர்குழவியாகியேபெரும்பாட்சாலங்கடலங்கிடத்தோன்றித்
தீவினையொருவவயனைடெவ்வுலகும்படைத்திடச்சிந்தைசெய்தனனால்.

அரவணைமிசையிற்பயோததிதிகழவமரரிதன்னிதலையிலே
விரைசெறிகமலத்திடையினெவ்வுலகும்விளங்கிடவயன்றனையுதவத்
திருமகள்கணவன்சிறுவனும்பிரமன்செயலுறநாலுதிக்கினையு
மிருவிழியதனானேக்கவானனநாலாகவாண்டிலங்கினனன்றே. (௧௯)

பிரமனுற்றிசையுநோக்கவானனநாலாகவேபிரமையுற்றவனாய்
வெருவியாரிடத்திற்செனித்தனன்யானென்றுள்கவும்வெளிப்படாதாகி
மரைமலர்ப்பொகுட்டின்றனைவழித்தெய்வவருடமாயிரமறவிழிந்தே
யரியினையவனிற்காண்கிலான்றிரும்பியம்புயத்துச்சியையடைந்தான். (௨0)

அயனலர்நளினத்துச்சியினமர்ந்தேயயமெங்கும்வளைவுறவெருவிச்
செயும்வகையறியான்றிகைக்குமவ்வுழிநற்சீதரனருபியாயெழுந்தே [ன்
யியல்புடனுலகைப்படைத்திடத்தவத்தை யியற்றெனவெட்டெழுத்தினைத்தா
மயர்வறக்கருத்துளிருத்தியேபுலப்பில்வருடமோவிடத்தவஞ்செய்தான்.

வருடமெண்ணிலபிற்படத்தவஞ்செய்துவருந்தியேமுராரியைக்காணப்
பிரமனெஞ்சுளைந்துதுவாதசாக்கரமட்டாக்கரம்பிறங்கிடவேத
ளிருதயகமலப்பொகுட்டினுட்பணிலகியதிருவுறவமருங்
கருடவாகனனையுரோமமெய்பொடிப்பக்கண்ணெலாங்களிப்புறக்கண்டான்.

மணிமுடிதிகழவதனம்வான்மதியின்வயங்கிடமகரகுண்டலங்கள்
புணரியினிலங்குங்கதிரவனிரண்டாய்ப்பொலிந்தெனத்தயங்கிடநயன
விணைதுலங்கிடவேகவுத்துவமொளிரவிந்திரையுரத்துறக்கிரீவத்
தணிகலப்பிரபையழகுறவரியம்பரமிளங்கதிரவிர்பரப்ப (உ௩)

இலம்பசமளிகத்தழகுறப்புயங்கடிலங்கவேதரளமார்பிலக
வலம்புரிதிகிரிகரங்களிற்றியங்கவயங்குமுந்நூலுரத்துறவே
யலம்பியமணிநாண்மருங்கெழில்காட்டவரவிந்தமுந்தியினலரச்
சிலம்புறுபதங்களொளிரவேதிகழுந்திருவினாயகன்றனைக்கண்டான். (உ௪)

இருதையகமலத்தலர்மிசையிலங்குமிந்திரைகொழுநனைஞானந்
தருநயனங்களருவிநீர்பொழியத்தடக்கைசேகரத்துறநோக்கி
யரியரியரியேயச்சுதவனந்தகோவிந்தவற்புதமுகுந்த
பரமகேசவமாதவவருளாளபதுமநாபாவெனப்பகர்வான். (உ௫)

வனசமாகியவுன்பதப்பரிமளத்தைமறுவிலாமறைகளினாலே
யினிமையுற்றுபயசெவிகளுமுணரவிணையிலாப்பத்திபாசத்தா
லுனையிருதயத்திற்பிணிக்கும்வள்ளியர்தம்முளமகன்றிடநெறியறியாய்
சினவினைசோகமோகபீதிகளுஞ்சிதறிடவவர்வயங்குவரால். (உ௬)

அந்தகாலத்திலரிபெயருரைப்பாரனந்தசென்மத்தடர்பவங்க
ளிந்துவினவிராற்றிமிரமஃகினபோலிறக்கபாடந்திறந்திலங்குஞ்
சுந்தரப்பரமபதத்தினொன்றுவர்கடிலங்குமுன்சுதனெனும்யானு
நந்திடுங்காலம்வரவுனையடைவேனிவையுணரார்நரர்கெடுவார். (உ௭)

வரமருண்முதல்வாவெனைப்படைத்தருளுமாலவாமவெனத்துதிக்கும்
பிரமனையளியாற்றிருவுளமகிழ்ந்துபிறிதிணையிலாதவாய்மலர்ந்து
திருமகள்கொழுநனவன்றனைநோக்கிச்சிருட்டியைவிரும்பினையஃது
வருமெனமறவாத்தவமியற்றெனவேயளித்தனன்வடிவினைமறைத்தான்.

திசையினைநோக்கச்சதுமுகனாகிச்சிறந்தவன்சிருட்டியைவிரும்பித்
தசசதமுடிகண்புயமடிபெயராந்தலைவனையுளித்தவஞ்செய்ய
நிசியுறுமோகமுடன்மகாமோகம்நிறைந்திடுமந்தரமிசிரம்
விசையுறவெழுதாமிசிரமிந்நான்கும்பிறந்திடவெருவினனன்றே. (உ௯)

கருத்திடையுனவுமரியதாய்ச்செனித்தந்தகாரமாய்நாலுமுன்கழிய
வருத்தமோடரியையொருமையுள்ளமைத்துத்தவஞ்செயுமலரயன்முனரி
னருத்தியாய்ச்சனகசனந்தசனாதசனக்குமாரன்னவதரித்துத்
திருத்துமாதவராய்ப்பரமனைப்பரிவாற்சிந்தைசெய்தொருவினரன்றே. (௫0)

தனையராஞ்சனகாதியர்தவத்தினராய்த்தனையொருவிடப்பல்கால
மனதினெட்டெழுத்தைநிறுத்தியேதவத்தின்வருந்தவுஞ்சிருட்டிவாராது
சினமுறவஃதினரன்பிறந்துலகந்திடுக்குறவுரோதனஞ்செய்யும்
வினையினாற்பிரமனுருத்திரனெனவேபெயரினைவிளம்பினனன்றே. (௫௧)

நுதலினிற்செனித்தவுருத்திரன்றனக்குநூலெலாமறைந்திடும்பிரமன்
விதமுறுமனுமன்னியுநலவரநாதன்மகான்விளங்கியசிவன்வெங்
கதமுறுமிரதத்துவசனோடுருரோதாபவனெதிரில்வெங்காலன்
மதியுறுசடைசேர்வாமதேவன்சீர்விரதனென்றேபெயர்வகுத்தான். (௫௨)

அரன்றனக்குயர்ந்தபதினொருபெயரையளித்தவனவற்கிருப்பிடமா
யிருதயமுடனிந்திரியநற்பிராணனிருவிசும்பனிலனக்கினிநீர்
தரையுயர்தபனன்சந்திரன்றவத்தோடிவைபதினொருபதிதந்தே
விரைவினிற்சிருட்டியியற்றெனப்பரிவால்விளம்பிடச்சிவனிவைசெய்வான்.

அரர்பதினொருபேராகித்தம்பதியினமர்ந்துதங்கோரமாவுருவோ
டெரியுறுநயனத்துடன்கரத்தயிலையேந்தியேயனேகருத்திரராய்
விரைவினிற்படைக்கமலாமலரயன்முன்வெருவியிச்சிருட்டியையொழிகென்
றுரைதவஞ்செய்யக்கருத்தனாயினனியோகியாகெனப்பகர்ந்தனனால் (௫௪)

பருத்தபங்கயத்தோன்புதல்வனாய்ப்பிறந்தோர்பவமறத்தவர்களாயேகச்
சிரித்தயன்வருத்தமுடன்றவம்பலநாள்செய்திடவவனெழினுதலி
னுருத்திரன்செனிக்கவவன்றனக்கேகாதேசவிடமுதவிநீதவஞ்செய்
கருத்தனாகுதியென்றறைந்திடுங்கமலன்கடுந்தவஞ்செய்திடும்போழ்தின்.

அரியருளயன்றன்மநத்தினின்மரிசியத்திரிநயனத்திற்றெக்கிற்
பிருகுநாபியினிற்புலகனற்றெக்கன்பெருவிரலிடைவதனத்திற்
சரியிலங்கிராநற்கிருதுகைமிசையிற்சாயையிற்கருத்தமன்மடியிற்
சுரர்முனிசெவியிற்புலத்தியனுகிரில்வசிட்டனுந்துலங்கியங்கெழுந்தான்.

நேரிலாவயன்றன்வாக்கினிற்பரமாநிறைந்திடப்பாதவமிருகஞ்
சிறுருபதங்கநதியிவைபடைத்துத்தேவர்கள்பிதுர்க்கள்கந்திருவர்
சாரணரியக்கர்சித்தர்கின்னரர்கடயித்தியர்நிருதர்கள்பசாசம்
பாரியபிரோதபூதமுமிலேகர்பாவையர்பலரையும்படைத்தான். (௫௭)

அனவெரினுறுவோன்விதித்தனன்மகத்தோடளப்பிலாங்காரமைம்பூத
மினியவிந்திரியமதற்கதிதெய்வமிடர்தருமோகதாபங்க
ணனியுறுதிரியக்குகணரருடனேநலமதாஞ்சிருட்டியைநல்கிப்
பினருமிவ்வகையிற்பலவிதமாகப்படைத்தனன்பெருந்தவப்பயத்தால். (௫௮)

நிலமிசையுறுதாபரமதின்மலர்காய்நிறைவனபூவிலாதுயர்ந்து
பலமலிவனவோடதிகொடிதோலாற்பலமுறவெழுதினவியலுந்
தலமதிற்படர்பூண்டிவையுடனுறுவிதமுறச்சதுரினுற்படைத்து
நல்லுறுநளினமிசையினிலுயர்ந்தநான்முகன்பின்னருமளிப்பான். (௫௯)

இருகுரமுறவேதிரிவகோவினங்கள்வெறிகிரியிரலைவெள்ளயங்கள்
மரைபுலியுழைமேதிகளிவையெட்டும்வகுத்தொருகுரமுறத்திரிவ
பரிகரஞ்சாதிக்குரகதமெட்டுப்பதமுளவருணமொட்டகங்கள்
சரியிலாக்கவரிகுரங்கமோடாறுவிதங்களுமளித்தனன்சதுரால். (௬0)

தரையினிற்பஞ்சநகமுடன்றிரிவசல்லிகஞ்சஞ்சரிகமட
மரிசுவாவிசலன்முசலிகையுழுவையரிசெந்நாய்வெருகுநீர்மகரம்
விரிசிறைமயூரமெருவைவல்லூறுவிளங்குதோலடிகங்கங்கரடம்
பரவுவண்டானங்குருகுநேமிப்புள்படைத்தனன்கூகையொடனேகம். (௬௧)

வித்தியாதரரோடனேகரைப்படைத்துவிபுலையின்மநிதரைநீவிச்
சுத்தநால்வேதமாயுணூறனுநூறலங்குகெந்தருவநூல்புராண
மெத்திதியாசமுதலிவையுதவிவிளங்கியசுவாயம்பூமனுவா
முத்தமன்றன்னையவன்றனைப்புணரவுயர்சதரூபையையளித்தான். (௬௨)

தூயனஞ்சுவாயம்பூமனுப்புயத்தைத்தோய்ந்துசுந்தரச்சதரூபை
சீயமேநிகராய்ச்சிறந்திடும்பிரியவிரதனுத்தரன்பரதன்சீ
ராயவிவ்விருவருடன்பிரசூதியறனுருக்கூதைமின்னுணத்
தேயுநுண்ணிடையார்தேவகூதைத்தேனிவர்களைப்பயந்தனடிகடு. (௬௩)

உருசியாமுனிக்காங்கூதையாந்திருவையுதவிநற்கருத்தமன்றனக்குச்
சரியிலாத்தேவகூதையையளித்துத்தவமுறுதெக்கனுந்தவற்குத்
தெரிவையாகியபிரசூதியைக்கொடுத்துச்சிறந்திடும்புதல்வர்களுடனே
யொருதனிக்குடைக்கீழுலகெலாமாண்டானுயர்ந்திடுசுவாயம்புமனுவே. (௬௪)

தேவகூதைத்தேன்கருத்தமன்புயத்தைச்சேர்ந்துதான்பயந்தநாரியர்க
ளோவியம்பழித்தகலையனசூயையுவமையில்விறபுக்குச்சிரத்தை
காவிநாணயனக்கெதிமினுள்கிரிகைகியாதிநல்லருந்ததிகற்பாள்
பூவினிற்றிருவைநிகர்த்திடுஞ்சாந்தியிவர்நவப்பெயர்பொருந்தினரால். (௬௫)

அயனருண்மரிசிகலைகுயமுறவேயத்திரிதனக்கனசூயை
மயலுறச்சிரத்தையெனுமினங்கிராவைமணந்திடப்புலத்தியன்புயத்தைச்
செயலுறும்விறபுக்குவுமணஞ்சேரச்சிறந்திடுபுலகன்றோள்கெதியா
மயில்விரும்பிடவேகிருதுவினுரத்தைமடந்தையாங்கிரிகைசார்ந்திடவே.

பிருகுவைக்கியாதிமணந்திடவசிட்டன்பெருமைசேரருந்ததியென்னுந்
தெருவையைப்புணரவதறுவச்சாந்தியெனுமினுளிருகுயஞ்சேர
வரியறுள்பிரமனளித்திடவயங்குங்கருத்தமனலினுகுதியைப்
பரிவுடன்விடுத்தாண்டிவர்நவப்பெயர்க்குக்கொடுத்தனன்பயந்தபாவையரை

சுத்தனுமரிசிபயந்திடத்துலங்குஞ்சுதனெழிற்காசிபமுனிசேர்
புத்திபூரணிமாவிருவர்களிவரிற்பூரணிமாவுவந்தருளச்
சித்தசனிகர்க்கும்விரசனும்விச்சுவதையெனச்சிறந்தவானதியா
முத்தமவடிவாகியமினுஞ்சனித்தாருயர்ந்துமேருந்தவர்மகிழ. (சஅ)

சுந்தரமலியத்திரிசுதர்தெத்தாத்திரையனுமுனிதுருவாசன்
சந்திரனுடன்மூவருந்தயங்கிடவான்சரியிலாவங்கிராத்தரவே
வந்திடுசுரராசானுஞ்சத்தியனும்வனிதையரனுமதியிராதை
யிந்துநேர்வதனக்குருசினிவாலியிவர்களுல்வருமிலங்கினரால். (சகூ)

அருமறைநிறையும்புலத்தியன்புதல்வர்சத்தியன்விச்சிரவாவோ
டிருவரும்வயங்கப்புலகனற்சேயரிலங்கியசன்மசேடன்வான்
சுரர்துதிவரியான்சிட்டுருப்பெயரோடிவர்கண்மூவருந்துலங்கிடவே
கிருதுவின்றனயர்வாலகில்லியராய்க்கிளர்ந்தனரறுபதாயிரம்பேர். (ருo)

சுரர்துதிவசிட்டன்சுதர்களாயெழுந்தோர்சுரோசிறற்சித்திரகேது
விரசன்மித்திரனுற்பனன்வசுகிருத்தியருணுமான்விளங்கியசத்தி
தருமமார்தருவார்தருணையதனயர்ததீசியச்சுவச்சிராத்திரத
விரதனேடிவர்மூவருமிலங்கினரால்விபுதர்களலர்மழைபொழிய. (ருக)

சரியிலாப்பிருகுதனயர்தாதாவிதாவிவரிருவரிற்றுதா
வருண்மிருகண்டுமுனியவன்மூனையாயமருமாறகண்டயன்விதாதாப்
பரிவுடனுதவுசுதனலப்பிராணனவன்றருவோன்பவமகற்றுங்
கருமமார்கவிமற்றவனெழிற்செம்மல்கவினுறுசுக்கிரன்மாதோ. (ருஉ)

தக்கனற்பிரசூதியையணைத்தளித்தசதத்துடனாறுமங்கையரி
னக்கனுக்கிணையில்சதியினைக்கொடுத்துச்சுதையினைப்பிதுவுக்குநல்கி
யக்கினிதனக்கங்கழகியசுவாகாவெனும்பெயரரிவையையீந்தே
மிக்கிடுதிரையோதெசத்துமாதினைத்தருமன்றேருள்சேர்ந்திடவிதித்தான்.

தருமதேவதைதன்மனைவியர்திரையோதெசத்தினர்பெயரினைச்சாற்றின்
றெரிவையாஞ்சிரத்தைமயித்திரிதயாநற்சாந்திதுட்டித்திகழ்புட்டி
யரிவையாங்கிரியையுன்னதிபுத்தியழகியதிதிக்ஷைநன்மேதா
விரைசெறிகுழலாளிரியெதிரிலாதுவிளங்கியமூர்த்தியுமாமே. (ருச)

சரியிலாத்தருமன்மனைவியர்பதின்மூவரும்பெயரடைவிலீன்றனயர்
விரிவுறுசுபம்பிரசாதநல்லபையஞ்சுகம்பிரியம்மிளிர்காந்தி
யிருளகல்யோகமெதிர்ந்திடுந்தவந்தன்மம்நன்மையிணையிலாதுயர்ந்து
மிருதிவாஞ்ஞெழுக்கந்துலங்கியநரநாராயணராமெனவிளம்பும். (ருரு)

தழலிறைமனைவியாகியசுவாகாவெனுந்தத்தைதந்திடுந்தனயர்
விழுமியசுசிபாவகன்பவமானனெனப்பெயர்விளம்பிடுமூவ
ரழலுமிழிவர்தாமளித்திடுபுதல்வரைந்துடனென்பதுமாற
வெழுதொகையினர்களிவரொலாங்கூடியேழுதேயுவாயமர்ந்தார். (ருசா)

நக்கனல்வேள்விசிதைந்தயத்தலையாய்நலனெலாமொருவிடமெலிவாந்
தெக்கனவ்வுடலைக்கழித்தூநற்கரியவாதன்றன்மார்பினிற்செனித்தே
மக்களையுதவவ்வாசுரமுனியால்வநத்திடைத்தவஞ்செயமுனிவு
மிக்குநாரதனுக்கிருப்பிடமிலாமற்றிரிகெனவிளம்பியேசபித்தார். (௫௭)

சரிநாரதனைமுனிவினாற்சபித்ததக்கனார்பயந்தநாரியர்க
ளிரவினன்றனக்காண்டிருபதோடேழுவனிதையர்தங்களையீந்து
தருமதேவதைக்குப்பதின்மரைநீவித்தாற்கிகன்றனக்கொருநாலு
தெரிவையர்தமைபங்குதவியங்கிராவுக்கிருவரைக்கொடுத்தனன்சிறப்ப.

ஆசகல்கிராசாச்சுவன்றனக்குப்பையவரிவையர்தங்களைநல்கி
தேசுறவுயர்ந்தபூதனுக்கிரண்டுதெரிவையர்தங்களைக்கொடுத்தே
காசிபன்றனக்குத்தெசத்துடன்றிரையக்கவினுறுமகளிரையீந்தான்
மாசகன்றிடவீண்டிவர்களுக்களித்தான்மடந்தையரறுபதுபெயரை. (௫௯)

கதமகற்றிடுங்காசிபன்றனைமருவுங்காரிகைமார்களிற்கவினு
ரதிதிதன்சுதர்கள்விவச்சுவானனவலரியோனரியமர்புருடர்
பதவியாசபிதாவருணமித்திரனற்பகன்றுவட்டாவெழிற்றுதா
மதியுறுவிதாதாவலாரிவாமனனோடிவர்துவாதெசத்தவர்மாதோ. (௬௦)

அலரியோனனவிவச்சுவான்புயந்தோய்ந்தழகியசங்கிக்கைபயந்தா
ணலனுறுசிராத்ததேவெனுமனுவைநடுவனையச்சுவனியரை
யிலகியசாயையிரவியைப்புணர்ந்தேயெழிலுறுமைந்தரையீன்று
பொலனுறவளர்சாவருணிமின்றபதிப்பொற்கொடிதன்னையுமளித்தாள்.

சரிபில்காசிபன்றோள்சார்திதிபயந்தாடயித்தியர்மருத்துகடம்மை
யரிவையாந்தனுத்தானவர்களையளித்தாளருட்டைசெந்தருவரையீன்று
டெரிவையாமுனிபின்றெய்வநாரியரையுதவினள்சிறந்திடுசுரசை
விரைசெறிதொடைசேர்சவுரசர்தமைவான்விளங்கிடநல்கினளன்றே. (௬௨)

சுரபிமின்பயந்தாள்சுரபிமேதியினைச்சுரிகுழற்காட்டைமெல்லியலா
ளொருநூரமிருகமுதவினள்குரோதவசைபுரகங்களையீன்று
டரளநேர்தசனத்தாம்பிரையகட்டிற்சனித்தனவெருவைகங்கங்க
ளிருள்செறிபளகச்சாமைநல்கினளாலிகலறுமெண்ணிலாமிருகம். (௬௩)

இளையெனுமடவாள்பாதவமுதலாமெண்ணிலாமரங்களையளித்தா
ளளிசெறியாகத்திதினான்பயந்தாளயத்துறுசெந்துவர்க்கத்தை
வளர்பிறைச்சடையோனிகர்த்தகாசிபன்றன்மனைவியரிவையெலாநல்க
வளனுறுதுவட்டாவுதவினன்வயங்குந்தும்விச்சுவருபனைமகிழ்ந்தே. (௬௪)

நலனுறுமதியார்தார்க்கிசன்புயஞ்சேர்நாரியர்நால்வரிற்பதங்கி
யிலகியபறவையனைத்தையுமீன்றாளிமையமின்சலபநல்கினளால்
கலனணிகிரீவக்கத்துருச்சேடன்முதலியகட்செவிபயந்தா
ளிலவிதழதரச்சுபருணையருணன்கருடன்மின்னிடியெலாமளித்தாள். (௬௫)

அதிதிதன்சுதனும்வலாரியைவதைக்கவறனுறுகாசிபன்றன்னைத்
திதிவரம்வேண்டியவனுமாமியமஞ்செய்திடக்கருப்பமுண்டாகுஞ்
சுதைமொழியசுசியாகியேதுயிலச்சுராபதியவள்வயிற்றெய்திக்
கதமுறவுதரக்கருவைவச்சிரத்தாலேழெழுகூறுறக்களைந்தான். (சுசா)

இலகியகுலிசத்தேழெழுகூறுய்க்கருவிழத்துணித்தவிந்திரன்று
ணலர்மலரிறைத்துத்திதியடியிறைஞ்சியவண்முனிவகற்றிடமகிழ்ந்தே
நிலமிசைவிழுந்தகருத்தசைநாற்பத்தொன்பதுவிபுதராய்நிறைந்த
வலனுறவெழவேயவரொடுமமராபதியிடைவயங்கினனன்றே. (சுஎ)

அந்தரமிசிரமுதலியபடைத்தவடிவினையயனொழித்திடவே
யிந்துவினவிர்போலிலங்கெயிற்றினராமிராக்கதரஃதினைப்பற்ற
முந்துமவ்வினையேயுலகினையடங்கமூடியகங்குலாய்நிறைய
நிந்தனையுறவேகிங்கரரெனும்பேர்நிருதரைச்சூழ்ந்தனவன்றே. (சுஅ)

சுரார்தமைப்படைத்தவடிவயனொளிக்கத்துலங்கினரஃதினைப்பற்றித்
தருநிறைநகரினமாரந்நலனேசார்ந்தனர்பகலதாயிலங்கி
யுரனுறுமசுரர்திரள்களையளித்தவுருவினைமலர்முனியொளிக்கப்
பரவுதானவர்களஃதினைப்பற்றப்பகருமவ்வினையந்தியான. (சுகூ)

கந்தருவரைத்தான்படைத்திடுமுருவைக்கமலமார்தவனொளித்திடவே
யந்தநல்லொளியையவர்கள்பற்றிடவேயதனுறுநலனெலாம்விசும்பி
லிந்துவினவிராகிலவெனப்பரந்தவிருகிலச்சிருட்டியாச்சிலையென்
றந்தணன்முனியவவைவிடமாகியரவினம்பலவினுமடைந்த. (எ0)

வனசமாமலரோன்பதமொழிகாலம்வகுத்துரைக்கிற்பரமாணுத்
தனையிருமடியாய்ச்செய்யினிரணுவாமீரணுமூன்றுசார்ந்ததுதான்
மனைதனிலிரவியவிருறவணின்வயங்கியசாலகவாசற்
றனிலுறுதிரசரேணுவாமதின்மும்மடிதுடியென்றுசாற்றுவரால். (எக)

துடிசதங்கூடியுறினதுவேதஞ்சொலுமந்தவேதமூன்றுற்றுற்
படிமிசைலவமென்றறைகுவரிலவந்திரையமுட்படிந்திடினிமிடங்
கடிதுசென்னிமிடமூன்றுறத்திரளிற்கணமதாமதினைந்துகாட்டை
யடையுமக்காட்டைபதினைந்துசேரினறைவராலகுவெனவம்மா. (எஉ)

பகருமவ்விலகுபதினைந்துகூடிற்பறைகுவர்கடிகையொன்றெனவே
செகமதிற்கடிகையுபயமேமுகூர்த்தங்கன்னலேழனாயுறச்சேர்ந்தாற்
புகலுவர்யாமமென்வெட்டியாமம்பொருந்திடிற்றினமென்றேயாகுங்
ககனமேலிரவிகழிதினம்பதினஞ்சுறப்பக்கமெனக்கழறுவரால். (எங)

படியிசையுபயபக்கஞ்சேர்ந்திடவேபகருவர்திங்களொன்றென்றே
யடையுமோர்திங்கள்பிதுக்களுக்கேகதிவசமம்மாதமோரிரண்டு
மிடையவோரிருதுவிருதுதாமூன்றுவிளம்பிடினயனமாம்விசும்பிற்
சுடருறுமிரவிவடவரைவலமாய்ச்சுற்றுமீரயனமோர்வருடம். (எச)

வருடமோர்நூறுநிறைந்திடிற்புருடாயிசத்திங்கடுவாதசம்வரின்வா
னருடருமிலேகர்க்கொருதினமுந்நூற்றறுபத்தஞ்சாகியவருட
மிருடவிர்சுரர்க்கோர்வற்சரமாகுமிமையவராண்டுசொல்லீரா
றறையுமாயிரந்தானடைந்திடிற்சதுரியுகமெனவறைகுவரன்றே. (எரு)

சகசிரச்சதுரியுகம்பிரமனுக்குச்சார்ந்திடினோர்பகலாகும்
புகலுமத்திவாவிற்சதுர்த்தெசர்மனுக்கள்புறத்தியாமாயிரத்திரண்டு
தொகையுறச்சதுரியுகமயன்றனக்குச்சொல்லிலங்கோர்தினமாமப்
பகலிராவிரவுவரவவாந்திரமாம்பிரளயம்படர்செயல்பகர்வாம். (எசு)

சேடனனத்துக்கிரவுதாசனன்முன்சினமுறுமுருத்திரனுடனே
மூடிமூவுலகுமெரித்திடமகலோகத்தினையொருவிமாமுனிவர்
மோடுடைத்துருவனுடன்சனலோகத்தனைவருமுடுகியேயடையக்
கோடுடைக்கரியின்றுதிக்கைபோற்றுணாகுழாமுறப்பொழிந்திடுங்கொண்டல்

அயனிரவுறவேயவாந்திரக்கணங்கள்பொழிந்திடவகன்றவேழ்கடலிற்
பயமெலாமேகப்பிரளயமாகப்பரமனற்சேடனின்மீதே
புயலெனவுருவம்பொலிதரநிலமான்பூமகடிருவடிவருட
வயினதேயன்றனிருசிறையிலங்கவலம்வரக்கண்வளருவனால். (எஅ)

இருசகசிரந்தானிறைந்திடுசதுரியுகங்கழிந்திடவிலங்கயனுக்
கொருதினமதுமுப்பதுநிறைந்திடவோர்திங்களத்திங்கள்பன்னிரண்டோர்
வருடமற்றதுதான்சதமுறக்கமலமலரயன்கற்பமாண்டொழியுங்
கருடவாகனனுக்குலப்பிலாப்பிரமர்கழியுநாள்கணத்துக்கும்பற்று. (எகூ)

கமலவொண்ணிலர்களமர்ந்திடும்பதத்தைக்கழிந்திடுகாலத்தைக்கடக்கும்
விமலன்மெய்யுரோமத்தனந்தவண்டங்கள்விளங்கியசாலகவாச
லமர்பரமாணுநிகர்த்தனபரவுமயன்முதலோர்செயறிவா
னுமையவள்கொழுனனிடரினைத்தவிர்த்தோனவன்செயலொருவருமறியார்.

பிரமகற்பத்தினிறைந்தவற்சரந்தானைம்பதுபிரிந்திடப்பினரின்
வருமுதற்றினத்திலியாமமொன்றதன்மேன்மலிந்தநாற்கன்னலங்கற்ற
மனைமலருறுவோன்பகலிடைவயங்குமனுக்களீரேழுடன்முனிவர்
சுரரவர்பதிக்குத்துலங்கியநாதன்சோதிதன்பெயரெலாஞ்சொல்வாம். (அக)

அரியருள்குமரன்றிவாவினுதியாயினோன்சுவாயம்புமனுவே
சுரர்பதியானோன்றுலங்குமெஞ்ஞன்றனவன்சுதர்தூயராம்விபுத
ரிருடிகளெனவான்வயங்கியேயமர்வோரிணையிலாமரிசியோடெழுவ
ரரியுருத்தரித்தோனமரர்நாயகனுமழகியவெஞ்ஞனென்றறைவர். (அஉ)

உபையமாமனுவாயுயர்ந்தவன்சுவாரோசிபனுரோசனெனவானிற்
கபடமில்பெயரோன்கலனணிவலாரிகவினுறுதடிதனோடனேகர்
சபையுறுவிபுதரிருடிகளுறச்சத்தம்பனோடெழுவர்விண்டயங்க
விபுவெனவமர்ந்தோன்விடமணியரித்துவிளங்கியவிமலனுமுராரி. (அங)

திரையமாமனுவாய்வயங்கிரோன்புகளெண்டிசையெலாமுற்றவுத்தமமன்
சரியிலாவிபுதர்தனக்குநாயகனுஞ்சத்தியசித்தெனவலாரி
சுரரொனவிசும்பிற்றுலங்கினோர்வேதச்சுருதர்பத்திரிகள்சத்தியரா
மிருடிகளெழுவர்வசிட்டர்புத்திரராயிலங்கரிசத்தியசேனன். (அச)

நாலதாமனுத்தான்மதனெனும்பெயரோனவையிலாத்திரிசிகன்வலாரி
சிலராயுயர்சத்தியர்களோடனேகர்சிறந்ததேவாதிகளானோர்
கோலமார்சோதித்தாமனேடெழுவர்கூறின்வாழ்முனிவராயமர்ந்தா
ராலமாகியவெங்கயவரையரிக்கவரியரியாயவதரித்தான். (அரு)

பஞ்சமமனுவாயிலங்கினேனிணையிலிரோவதன்பயந்தவர்விபுதர்
விஞ்சுமிந்திரனும்விபுவெனும்பெயரான்விளங்கினனுலகெலாமகிழ
வஞ்சகமிலாதவிரணியரோமர்முதலினோர்முனிவராய்வயங்க
நஞ்செனுமவுணர்தமையரித்திடவேநாரணன்வைகுண்டனானன். (அசு)

ஆறதாமனுவாவயங்கினேனகுடனமரர்தம்பதிக்குநாயகனும்
வீறினன்றன்மெய்நெறியெலாந்திசைகள்விளங்கிடமந்திரத்துய்மன்
மாறிலாப்பெயர்தாம்விபுதராயினர்கண்மறுவிலாவரிட்டுவான்முதலோர்
தேறியதவமார்முனிவராயமர்ந்தார்சிதரன்சிதனுய்ச்சிறந்தான். (அஎ)

ஏழதாமனுவாய்ச்சிறந்தனன்வைவச்சுதனெனுமிணையிலாவவன்றன்
பாழிசேர்புயனிந்திரன்புரந்தரனும்பவமிலாவிலேகர்களானே
ராழியொன்றுடைத்தேரிரவியோடனேகரறனுறுகாசிபன்முதலோ
ரேழுமாமுனிவரதிதிதன்செயலாலிலங்கியவாமனன்முராரி. (அஅ)

அட்டசமனுசாவருணியாமரசனறனுறுமகாபெலிப்பெயரோன்
சிட்டனும்வலாரியுயர்ந்திடுஞ்சுபதாதிரளினோர்தேவர்களாவோர்
கட்டவைம்புலனைக்கடந்தகாவலர்தான்கவினுறுமிருடியாமெழுவர்
அட்டரையரிக்கமுராரியாயெழுவோன்றுலங்கியசாருவபூமன். (அகூ)

நவமதாமனுநற்றெக்கசாவருணிநலனுறுசுரிகனிந்திரனும்
பவமிலாதிலங்கும்பார்முதலானோர்பலனுறுவிபுதராயமூர்வா
ருவமையில்சுதிமான்முதலினோர்விசும்பினுயர்ந்திடுமெழுமாமுனிவர்
கவினுறுமிடபன்கயவரைவதைக்குங்காலனாய்விளங்கிடுமுராரி. (கூ0)

தெசமதாமனுநற்பிரமசாவருணிசிறந்திடுமிந்திரன்சம்பு
வசையிலாதிலங்குசுகாசனரனேகாவானவராய்வயங்கிடுவா
ரசைவிலாத்தவமார்விட்டுமொன்முதலோரந்தரத்திருடிகளெழுவர்
சுசியிலாவசுரர்தமைவதைத்தருள்செய்சோதியாம்விச்சுவசேனன். (கூக)

தன்மசாவருணியெனுமனனேகாதெசமதாமனுவெனச்சார்வன்
வன்மையின்மனுவைத்திரதனமரசன்வானவர்நாயகனாகும்
புன்மையில்விபங்கர்முதலினோர்விசும்பிற்பொலிந்தபுத்தேளிர்களருணர்
நன்மையாமுனிவரொழுவராந்தன்மைகேதுநாரணனுருவாமே. (கூஉ)

துவாதெசமனுவாந்துலங்குருத்திரசாவருணிதான்றான்றுவன்விசும்பிற்
றவாவலியுறவேவயங்கரித்தாமாத்தானவர்பகைஞர்நாயகனு
மவாவுறுவரிதாமுதலினோரமரரருட்டிபோமூர்த்திகளெழுவ
ருவாவுறுமதிபோற்றயையுறுமுனிவருலகளந்தவனுயர்சுதாமா. (௬௩)

திரையமுர்ந்தெசமுங்கூடியதொகையிற்றிகழ்மனுத்தேவசாவருணி
சரியிலாவலாரிதிவாப்பதிசுதமாமுதலினோர்தானவர்பகைஞ
ரிருடிகளெழுவரிலங்குநன்மோகரிறையதாயுயர்ந்திடுமுராரி
விரைசெறிகமலன்முதலினோர்வழுத்தவிளங்கியோகேச்சுரனுமே. (௬௪)

ஏழிரண்டாயமனுநலிந்திரசாவருணியாமிந்திரன்சுசியே
பாழிசேர்புயத்துப்பவித்திரர்முதலோர்பழுதிலாவிலேகர்களாவோர்
சூழும்வல்வினையைத்துணிக்குமக்கினிபோன் முதலினோர்துலங்குமேழ்முனி
வ, ராழியிற்றுயில்வோனுருவமாயவிர்கபானுவேயவதரித்தருள்வான். (௬௫)

சதுமுகன்றிவாவிற்சதுர்த்தெசமனுக்கடானவர்பகைஞர்நாயகனுய்ச்
சுதைநுகரமரர்துலங்குமேழ்முனிவர்தூயமாலுருவமாயெழுவோர்
விதமுறுபெயராமனைவர்கடமையும்விளம்பினஞ்சுவாயம்புமனுவின்
பதமுறுகாலத்திரணியன்மாழைநயனனோடெழுஞ்செயல்பகவர்வாம். (௬௬)

தெக்கனார்பயந்ததிதியெனுங்கொடியைச்சிறந்திடுகாசிபற்கீய
விக்கிரதச்சொல்லேந்திழைவிரகமெய்தவக்காசிபமுனியைத்
தூர்க்குணமிகுத்தசுதர்களைப்பெறுவான்சந்தியகாலத்திற்றாய
வக்கணங்கருப்பமாகியாயிரத்தாண்டகட்டிடையமர்ந்திடுங்காலை. (௬௭)

திதியினுதரத்தாயிரத்தாண்டுசேர்ந்திடுங்கருப்பத்தின்விகார
விதமுறுங்கோரவெம்மையின்செயலால்விடமெனப்பரந்திடவிபுத
ரதிதிதன்சுதனோடலைந்துமெய்குலைந்தேயளக்கர்வீழ்மரக்கலநிகர்த்துச்
சதுமுகனுலகமடைந்தவன்பதத்திற்றாழ்ந்திவைசாற்றலுற்றனரால். (௬௮)

காசிபன்புயத்தைக்கலந்திடுந்திதியினுதரத்திற்கருப்பவெம்மையினா
லாசையும்விசும்புந்திமிர்ப்பிழம்படரவலரிதேர்நெறியுறவயர
வாசவன்முதலெண்டிசையுறுமவருமயர்வுறப்பதியிழந்துலக
நாசமுற்றிடுநாளடைந்ததென்றடைந்தோமெனவயனகைத்திவைநவில்வான்

அரியருள்யான்றன்சிருட்டியைவிரும்பியவனெழுத்தெட்டுளமமைத்து
மனைமலரதனிற்றவஞ்செயவன்றென்மநத்திடைச்சனித்திடுமவர்கள்
கருமகாண்டத்தினைமைகிலராகிக்கரிவெரினமருவோனகருஞ்
சரியிம்லென்பதுமிவையமென்றிகழ்ந்தார்சனற்குமாரனோடுநால்வர்.

அயனெனுமியான்றானளித்தவெவ்வுலகுமகன்றவாயகங்கனல்கால்வான்
செயலுறுமனந்தகோடியண்டங்கடிகழ்பிரகிருதியுங்கடந்தே
மயர்வறவயங்கும்விரசையுமிகழ்ந்துமறுவிலாவமானவனிலங்க
வுயர்வறவுயர்ந்தேயொளிகொள்வைகுண்டத்துற்றனர்யோகத்தினுயர்வால்.

ஆதியந்தரந்தானமைகிலதாகியவிருறுமனந்தகோபுரங்கள்
பீதகத்துடனேநவமணிதிகழப்பிறங்குமாளிகைகண்மண்டபங்கள்
வேதிகையலரிகாந்தமிந்துவினால்விளங்கியகாந்தம்வெண்படிக
மேதமிருரமிலங்குமாவரணமாவணமெல்லவுங்கண்டார். (௧௦௨)

ஐந்தருவனந்தம்வீறுறும்வருக்கையாசினியாம்பிரநரந்தை
கந்தமார்வழைபுன்னாகமாதவிபாடலங்கமுகரம்பையாமலகஞ்
சந்துசண்பகநற்குரோதமச்சுவத்தஞ்சம்புசெம்பீரநற்றாழை
குந்தம்வேதசமொண்கபித்தமாழையினாற்சோலமார்பொழிலெல்லாங்கண்டார்

ஆடகப்பொழில்களனந்தமங்கமரவயமலைவீசிடவகன்ற
வோடைகளொளிரக்குவலையங்கமலமுற்பலமுலப்பிலவலரப்
பேடொடோதிமங்கள்கவினுறவிருப்பப்பிரமரங்கீதங்கள்பாடக்
கோடரமருங்கிற்குதிகொளும்வாளைக்குறுக்கொக்கேறுவகண்டார். (௧௦௪)

அரிதிருப்பெயரைமனத்திடையிருத்தியருச்சனைசெய்திடுமவர்கள்
வரிநெடுநயனமனைவியருடனும்மணியொளிர்விமான்மீதடைந்தே
தரையைவிட்டுயர்ந்துமுகட்டினையொருவிச்சார்குவாரனந்தவண்டத்தின்
புரைவழியிலங்கிவிரசைநீர்படிந்துபொலனுறுமவர்களைக்கண்டார். (௧௦௫)

அனந்தவண்டத்தின்புரைவழியெழுந்தேயமானவன்றமுவிடமவுலி
புனைந்துநாற்புயமுந்துலங்கிடத்திகிரி வளையொடும்பொருந்துசெங்கையராய்
சினந்தனிபொருவித்திருவினாயகனைத்தேவியருடன்றுதித்தாடி [ச்
வனந்திகழ்விமானமிசைதொறும்வருவார்பலரையுமகிழ்வுடன்கண்டார்.

காசுறுகனசப்பொழின்மலர்வெறிகள்கமழவாவியினலைத்திவலை
வீசநல்வசந்தமுலாவிடவியலும்விமானமீதிலங்குபாகவத
ராசையையஃதின்மைக்கிலரரிவைகலவியைநினைக்கிலர்நிராய
நாசனாமுராரிநாமகீதத்தைநவிலுவார்பலரையுங்கண்டார். (௧௦௭)

அருவையர்மதுணர்கலவியைநினையாரவிருறுபுருடர்தம்மனைவி
தருவிரகத்தினமிழ்ந்திலரிணையிறத்துவமூர்த்தியாயுயர்ந்த
பரமனைமனத்திற்பதித்தெழுந்தாடிப்பாடியேநயனநீர்புரளச்
சரீரரோமங்கள்புளகமாய்க்களிக்குந்தபோதனர்சார்தலுங்கண்டார். (௧௦௮)

கோகிலங்கபோதங்குக்கிலொண்பூவைகுரண்டநீர்க்கரண்டமோதிமநற்
கேகயங்கருஞ்சங்கிள்ளைநேமிப்புள்கிளர்ந்தபூங்காவினையடைந்தே
கூ-குகூவெனநற்குரலிடைகுமிறமிழற்றிடக்குதிக்கநீர்முழுக
வாகுறநடக்கநடித்திடக்கொஞ்சவருகவினெல்லவுங்கண்டார். (௧௦௯)

விரைசெறிகமலத்தரியரிசங்கீதத்தினைவிளங்கிடப்பாட
விருசிறகடக்கிச்செவிமயிர்சிலிர்த்தேயிருகணாலமைவுறநோக்கி
வருககமெலவுமுரையினைமறந்துவரையுமோவியத்தினைநிகர்த்தே
கரைமருங்கொளிர்பூங்காவிடையிருந்தகவினையுங்கண்டுளங்களித்தார்.

தளவுசெவ்வந்திசண்பகந்திகிரிசாதிமவ்வற்கரவீரங்
கிளர்வழைநாகம்வகுளம்பாடலநீள்கிஞ்சுகமேலநான்மருங்கும்
வளனுறமலரமாதவன்பதத்தினணிந்திடுமனமனுரதனுற்
றுளவவொண்கொழுந்துகனகநற்கதிரிற்றுலங்கிடுங்கவினையுங்கண்டார்.

சரியில்பாதவங்கள்வெறியுறுய்யானந்தயங்குநீர்மலர்கொடியெழுநூ
விரைசெறிதுளபம்வாவிமச்சியங்கள்விளங்கிடக்கமுதலாக
வரிதிருவுளத்துக்குவப்பவைகுண்டமளப்பிலாவழகுறவயங்கும்
பரமபாகவதரிறையுருத்தரித்தேயியற்றியபலவிதங்கண்டார். (ககஉ)

உவமையினள்ளினந்தராசவிராவமொள்ளியநள்ளிவண்கதலி
கவினுறுதுடிநீர்ச்சுழிவடவிலைமாவரைகழைகம்புநற்குமுதம்
நவையகல்சிலைமீனுளிகம்பிறைகந்தரம்வையெல்லவுநண்ணிப்
பவளவொண்கொம்பிற்பதிந்தபோற்கமலைபலதிருவாயெழக்கண்டார்.(ககங)

சோதிசெய்படிகநீலமண்டபத்திற்றுலங்குநற்சாயையைநோக்கிப்
போதுறுமணமிப்பூவையர்முராரிபொற்பினுக்கொப்பவரிவர்க்குத்
தாதியாய்த்திரிவனென்றுபொற்குடத்திற்றண்பனிநீரினைநிறைத்து
வீதியினிறைத்துவிமலன்முற்றத்தின்விடுத்திடுங்கவினெலாங்கண்டார்.

இயல்புறுதிருவோடிலங்குவைகுண்டத்தெழிலெலாங்கண்டுளங்களித்துச்
செயலுருவரணமாறையுங்கடந்துசிறந்திடுதாமரைமலர்சேர்
புயலெனுமுராரிசரண்படிந்திடவேபொருக்கெனப்புகுந்திடுதவரைச்
செயனுடன்விசையன்கதையினுற்றடுத்துச்சிறியேயகன்மினென்றுன். ககரு

திருத்தமாதவராயுலப்பிலாவுகங்கள்கழிந்திடச்சிறந்திடுஞ்செயலால்
விருத்தராமெனவுமியவனமுறவேவிளங்கலாற்பருவமோரைந்து
பொருத்தியசிறுவரெனவுமாயவனைவணங்கிடப்புகுந்திடுமவரைப்
பருத்தவொண்கெதையாற்றடுத்திடநகைத்துப்பரமபாகவதர்தறைவார்.

நாவினிரறமெய்யலைந்தவாவினங்கணதிப்புனலுறுநெறியறிந்தே
யாவலிற்பருகவரச்சினத்தெதிர்ந்தாண்டடர்புலிநிகர்த்துநீரிணையி
றேவனைத்தொழவேபுகுமெமைத்தடுத்ததீமையீர்மோகமுமயக்கு
மேவிடும்பகையுமிலையரிக்கென்பதுணர்ந்துநீர்வெகுண்டதென்னென்று.

அரிபதத்துறுவீர்திகிரிசங்கேந்துமங்கையீர்தேவரிற்றிகழ்வீர்
சரியில்சாத்திகத்தையகற்றிவெம்பவமார்தாமதக்குணத்தினைத்தரித்தே
யிருபிருகுடியுறுதலினிற்குனியவெரியுறுவிலோசனராகி
யுரையுருமெனவேயதிர்த்திவணுரப்பித்தடுத்ததிதன்மமென்றுரைப்பார்.

திருவினுயகனையுளங்களிப்புறவேவணங்கிடச்சென்றிடுமெம்மைநீ
ருருமெனுமுரையாற்கதைகொடுதடுத்தபவமறக்குரோதலோபியராம்
நரருலகத்திற்சனித்திடுமெனவேநடுங்கிமெய்குலைந்துநாக்குழற
விருகையாற்றொழுதுகழலிடையிறைஞ்சிச்செயனுடன்விசையனிதிசைப்பன்.

புனிதமாதவர்நீர்யாமறியாமற்பிழைத்ததுர்ப்புத்தியைப்பொறுத்தே
கனமணின்வறுமைகழிந்திடப்பொழியுமியல்பெனக்கருணைசெய்தருளித்
துனியுறுநிலத்தின்முராரிசத்துருவாய்த்தோன்றினுமவன்பெயர்மறவா
வினிமையார்தவத்தையருளுதியெமக்கென்றிறைஞ்சினரேத்தினரன்றே.

செயனுடன்விசையனிவைமொழிந்திறைஞ்சித்திடுக்கிடுமனத்தினராகத்
தயையுறச்சனகசனந்தசனுதசனக்குமாரத்தவரிரங்கிக்
கயவவொன்றிவனாயிகழ்ந்துவெஞ்சாபங்கழறினமுனிவகற்றுத
செயலினுலெனவேதிகைத்திடுமளவிற்சீதரனிவையெலாமுணர்ந்தான்.

தவர்களைச்செயனும்விசையனுந்தடுத்ததகைமையையறிந்திணையிலாத
நவமணியிலங்கவயங்குமண்டபத்தினலனுறுசேடவாதனத்தி
னுவமையின்மலர்மானுடனும்வீற்றிருந்தவுத்தமன்கதுமெனவிழிந்தே
பவமறப்பெருகும்பகீரதிவளர்ந்தபதங்கொடுநடந்துவந்தனனால். (கஉஉ)

இரவியர்கோடியவிருமின்மினிபோலிகழ்வுறமணிமுடிதிகழக்
கரியமைமுகிலின்கவின்றனையடர்த்தகாதினிற்குண்டலமலையப்
பொருதொழிலதனிற்றனுசுபோல்வளையும்புருவங்கடிகழ்ந்திடவளையின்
றரளவெண்மையினைத்தகர்த்திடுமுறுவலிளநிலாப்பிரபையைத்தரவே.

அலர்கொள்பங்கயமாழ்பங்கமுற்றலையவசன்றெளிர்நயனங்கடிகழக்
கலைநிறைமதியின்பாதியுங்களங்கமுறக்கவினுதலிலங்கிடவே
சலமுறுவளையும்வளையுறத்தரளவடம்புனைகந்தரந்தயங்கப்
பொலனுறுகிரிவெங்கரியுறத்துலங்குபுயங்கள்கேயூரங்கள்வயங்க. (கஉச)

கடலிடையுதையக்கதிர்முதிருறவேகவுத்துவமார்பினிற்றயங்கத்
தடவரைகடைந்தகரத்தினுர்சர்ப்பபணந்தொறுந்தாட்பொறியுறவே
துடியடிபடவேதுலங்கியமருங்கிற்சூழ்ந்தபீதாம்பரம்வயங்கத்
கடகரியினங்கணுலுகாலாகக்கவினுறும்பதநடந்திடவே. (கஉரு)

திருமுகநுதலிற்சிறந்தகஸ்தூரித்திலதநல்லழகினைவிரிப்ப
மரகதமலையிற்றவழ்நிலாவெனவேமார்பினித்திலவடமலைய
விருமையார்கடையங்கரத்துறவுடைநாணெழிலுறுமருங்கிடையிலங்கப்
பரிபுரமரற்றத்துளபநற்கொழுந்துபதமிசையெழுந்தெழுந்தாட. (கஉசு)

பரிபுரஞ்சிலம்பச்சதங்கைகண்மிழற்றப்பைம்பொனின்கலிங்கமேற்காஞ்சி
யிரவினனவிளையடர்த்திடவிணையிலிருதனமிசையினிற்கலன்க
டரளமாலைகளோடிலங்கிடக்கரத்திற்சரிவளைகறங்கமஞ்சிகைக
ளிருகுழையதனின்வயங்கிடவளகத்தளியெழக்கமலமானெய்த. (கஉஎ)

இந்துவந்தெழுந்ததென்னவெண்கவிகையிலங்கநித்திலவடமலையச்
சந்திரகாந்தந்தயங்கிடவதனீர்த்திவலைகளெங்கணுஞ்சாரத்
துந்துமிமுழங்கமுழவினமதிரத்துலங்கியசின்னங்கள்பரமன்
வந்தனனெனவேகறங்கிடமலரின்மாரிபாகவதர்கள்பொழிய. (கஉஅ)

மரகதமலையிற்கெழுமியபவளக்கொம்பெனத்திருவலத்துறவே
யிருகையினாழிவளையினோடிலங்கவெழிலுறுகலுழன்மார்புயத்தி
னொருகரமமைத்துநளினவெண்மலரையுயர்வலக்கரத்தினாற்சுழற்றிச்
சுருதிபாகவதர்மொழிந்திடப்பரமன்றவர்முனந்தோன்றினான்றுலங்க.

கோடிகந்தர்ப்பர்கவினிலங்கிடவேகுளிர்கொண்மூவெனவடிவிலங்கச்
சேடனும்பதத்திற்சிறந்தபாதுகமாய்வயங்கிடத்திகழுநாயகனை
யேடவிழ்மலர்மினிருகணானோக்கியிவனெழிற்கமைகிலனிவன்றன்
சேடியாய்த்திரிவனெனவெள்கிவரவேதிசையெலாமவிருறவந்தான். (க௫0)

சரியிலாச்சனகசனந்தரசனாதசனக்குமாரத்தவர்பரமன்
திருவுடனிலங்கிடந்துவந்தெய்தச்சிரமிசைக்கரங்களைக்கூப்பி
யிருசரணிறைஞ்சித்துளவினொண்மலரின்மகரந்தமெங்குமெய்நனைப்ப
வரியரியரியேயச்சுதானந்தகோவிந்தவென்றவர்நடித்தார். (க௫க)

அண்டகோடிகளுன்னுதரத்தின்மெய்யின்முகியவுரோமத்தினுனியின்
மிண்டிடவமைத்தேயுதினமரனந்தசீவனின்மேவிடுவிமலா
முண்டகன்முராரிமுனிவர்கட்கெட்டாமூவுலகளந்தநின்பாத
புண்டரீகத்தினிறைஞ்சியாந்துலங்கவெளியைபோற்பொந்தனையென்றார்.

கருமகாண்டத்தைவிரும்பிவான்சுவர்க்கங்கலந்துமண்செனித்தவணிறந்து
நிரையமேபதியாய்மீளுசீவன்கணித்தியமுத்தனாமுன்ற
னிருசரணிறைஞ்சியருச்சனைசெய்யாதியமகோரத்திடையுழல்வார்க்
கரியனாய்ப்பரமபதந்தனில்வயங்குமச்சுதநமவெனத்துதித்தார். (க௫௩)

அலர்கொள்பங்கயத்தினமுந்தியவளியினவாவுறுமனதுனைப்பற்றி
யிலகியவசுணமிசையினிற்களிக்குமியல்பெனவிருசெவியுனது
வலனுறுசரிதையோர்ப்புறின்வங்கந்தவறறநோக்குமீகாம
னிலையெனநயனநின்னுருக்காணினிலத்திடைப்பிறப்புநன்றென்றார். (க௫௪)

சண்பகமலரின்வெறியருவருக்குமளியெனச்சாற்றிடும்பறையால்
வெம்பியேபாறுமசுணப்புள்ளெனவும்விளங்குவேலமூந்துறமுகிழ்க்கு
மம்புநயனமென்னவுமிதரதெய்வத்தைமனஞ்செவிநோக்கா
னம்பிடாதுனதுபதத்திடையமைக்கினலநிலன்சனனமென்றறைவார்.

சுத்தசாத்திகநற்பரமனேநமவேசோதியேமாதவநமவே
முத்தனேநமகேசவநமநாராயணநமமுராரியேநமவே
சித்தசன்பிதாவேநமவுலகளந்தசீதரவாமனநமவே
அத்தனேநமவென்றிறைஞ்சியாரணங்கள்பாடியெயாடினாரம்மா. (க௫௬)

இருகணீர்புரளரோமமெய்பொடிப்பவிறைஞ்சியேநடித்திடுதவரை
யரியருளதனாலமைவுறநோக்கியனந்தவண்டத்துமற்புதமாம்
பரமபாகவதர்நீரிவணெய்தப்பவித்திரமாயவைகுண்டப்
புரியுடன்யானுமெனவிவையருளிமகிழ்வுடன்பின்னரும்புகல்வான். (க௫௭)

புனிதமாதவரொன்றிகழ்ந்திடாதெள்கிப்பொறையறுசெயனுடன்விசையவ
சினமுறத்தடுத்தபிழையினைப்பொறுத்துக்கமையுடன்றிகழுவீரெனலு
மினியராயரியையிறைஞ்சியேகியபின்னெழிலுறுமுகுந்தனைப்பணிந்து
கனமுறுகதைகொண்டெழுந்தகாவலர்மெய்நடுங்கிடக்கழறிடுமாயோன்.

நிலமிசைதனிலீலாவிநோதத்தைநிறைத்திடவேண்டியான்றானே
சலமொடுதவரைத்தடுத்திடவுமைக்கொண்டிழைத்தவருமைச்சபித்திடவுங்
கலகமிங்கியற்றிமுடித்தனன்றறையிற்கலர்களாய்முப்பிறப்பெடுத்தே
வலனுறவெனதுகரத்தினான்மடிந்துவருகுதிரொன்றுபோயினரால். (கஙகூ)

தவர்களைத்தடுத்தபவமுறச்செயனும்விசையனுமற்றவர்சபிக்க
வவனியிற்சனிக்கத்திதியுதரத்தினடைந்தனரவரையச்சுதன்று
னவையறவதைப்பன்றிவெருவன்மினெனவேநான்முகனவிலவெண்கரியின்
சுவலுறிந்திரனோடெண்டிசையமர்வோர்சுரரொடுதம்பதியடைந்தார். (கசo)

அரியெனமுனிந்ததவத்தவர்சாபமறைந்திடச்செயனுடன்விசையன்
சரியில்காசிபன்றன்றனையராயவன்றோள்சார்ந்திடுந்திதியுதரத்தின்
கருவதாயிரத்தாண்டமர்ந்துலகுலையக்கறைவருடம்பொழிந்திடப்பா
ரொரியவானிடியுங்குறைக்கொள்ளிபலவும்விழுந்திடவிருவரும்பிறந்தார்.

இகலனுசியினினெரிக்கொளியுமிழவிரவியைச்சூழ்பரிவேட
மிகவடர்தூமகேதுவுமெழப்பார்வீறியவாசுகனறையக்
ககனமோடுலகங்கலங்கிடக்கமலனடுங்கிடவலாரியுட்குழையப்
புகல்வதற்கரியவிரணியனுடனும்பொற்கணன்சனித்தனனன்றே. (கசஉ)

இரணியநயனனெண்ணில்பல்வருடமிருநிலத்திற்றவஞ்செய்ய
விரைசெறிகமலத்தயனவன்முனரின்விளங்கியெவ்வரங்களுமருளிப், பெரிய
தோர்கதையும்பிறங்கியதெய்வச்செயந்திமாலையுங்கொடுத்ததற்பின் [ன்.
சுரர்துணுக்கிடநான்முகன்மறைந்திடவப்பொற்கணன்றோள்புடைத்தார்த்தா

பாதமேற்சிலம்பினொலியெழவியப்பாம்பறவைகண்மறுகவெண்கரிகள்
பீதிகொண்டிடையப்பெருங்கதையெடுத்துப்பிறங்கழுதாசனர்பாற
மோதிநல்வருணனுலகினையடைந்தாண்டவன்குழாங்களைமுனிந்தடித்தே
யோதையாருவரிகிழியவங்கதனுளுலாவிமூழ்கித்திரிநாளின். (கசச)

தயையுடைச்சுவாயம்பூமனுமலரார்தவனடியிறைஞ்சிநின்றுரைப்பா
னயமுலகொருங்குங்கொட்புறமறைந்தவவனியானமர்ந்தரசாளுஞ்
செயலிலாதுனைநான்சேர்ந்தனனெனவத்திசைமுகன்சிந்தைசெய்தெழிலார்
புயல்வடிவுடையபுநிதனைப்பூமியருளெனப்போற்றிசெய்தனனால். (கசரு)

சிந்தைசெய்திருந்ததிசைமுகன்வதனஞ்சிறந்திடுநாசியாம்புழையிற்
சுந்தரப்பரமவரியொரங்குட்டவுருவுடைவராகமாய்த்தோன்றி
யந்தரத்திமைப்பின்முனரொழுந்தண்டமுகட்டினையளாவினனகன்ற
மந்தரவரையின்வளர்ந்தநற்காலின்மணித்திகழ்சிலம்பொலியதிர்ப்ப. (கசசா)

இந்துவின்கதிரையிவர்த்தெயிறிலங்கவிலக்குகித்தில்வடமலையக்
கந்தரமயிர்கள்சிலிர்த்திடச்செவியைநெரித்துவாலெடுத்துவன்காலான்
மந்தரவரையையிடறிவானுயர்ந்தவடவரைச்சிமிலிதூளாக
வுந்தியெவ்வுலகுமுலையவாண்டுரப்பியுரனுடனுததிபுக்கனனால். (கசஎ)

இரணியக்குவடாண்டிடிபடக்காலாலிடறிவானிமையவர்வெருவ
வருணனுங்கலங்கவுததியைக்கிழித்தங்குலப்பிலாவழுவத்தின்வைகிக்
கருமையிற்றவழக்கலையினிற்றெரிசேதகமெனக்காசினிகோட்டின்
மருவவாண்டிருணியாகியபரமனெழுந்துதான்வருகின்றவெல்லை. (கசஅ)

வருணனும்வெருவவுததியின்மூழ்கிவரையெனத்திரிந்தபொற்கணன்பாற்
சுரர்முனியடைந்தங்கறைகுவானுனக்குத்தோற்றவாகண்டலன்முதலோர்
வெருவுறக்கரந்தாரினிச்சமர்முயலும்விறலுடையாரிலைகிரியாய்த்
தரையினையெயிற்றாற்கொடுவரும்பரனோடமர்செய்துதாக்குதியென்றான்.

முனிவனீதறைந்தான்பேகலுமவுணன்முக்கணான்வெருவிடவார்த்துக்
கனகமால்வரையின்கதையினைச்சுழற்றிக்காசினிகொணர்ந்திடுவராக
வனகனோடெதிர்த்தன்றயனெமக்கருளுமவனியைவிடுவிடென்றறைந்து
சினமுறவடவைத்தீயெழவிழிகள்சிவப்புறவுருத்தனனன்றே. (கரு0)

தரையினையுததிதரித்திடப்பரன்றன்சத்தியைநிறுவியாண்டமைத்துச்
சுரரயன்வலாரிதுறந்தவர்பிறங்கியரம்பையர்சூழ்ந்துவந்தேத்தி
யரிகிரியுருவாயவனியையிடந்தாயடரசுரேசனைவதையென்
றுரைசெய்துமலர்கள்சொரிந்திடவரையினுருத்தனன்பொற்கணனுடனே.

எதிர்வருவராகமுராரியைநோக்கியிரணியவிலோசனனறைவா
னுததியினழுவத்தழுந்துபூமியினையுன்னெயிற்றேந்தியின்றென்முன்
விதிவழிச்செயலாலகப்படுமுனைநான்வினோதமாய்வதைத்துவிண்ணவர்தம்
பதிமுதல்விபுதர்திரளினைமடித்துப்பலமகவவியுண்பனென்றான். (கருஉ)

வேறு. அந்தகனஞ்சவுலகநடுங்கவசுரேசன்
வந்தொருகதையைமந்தரவரைபோலுறவீசத்
தந்தியினிடரைத்தவிரரியதனைத்தாளாலே
யுந்தலும்வானத்துயரவொடிந்ததுகளான. (கருந)

கதைதுகளுறவேசதமுறுநெஞ்சன்கனல்கண்ணன்
மதிதவழ்சடையோன்மலரயன்முதலோர்மிகவஞ்சக்
கதுமெனவுயரும்வரையிவர்தண்டங்கைக்கொண்டான்
டிதிதிதன்மைந்தர்வெருவவடித்தான்சிரமீதின். (கருச)

இரணியநயனன்கதைகொடுமோதவிருகொம்பாற்
றரணியிடந்தான்றண்டுசுழற்றித்தடைசெய்ய
முரணுறுமசுரன்கதைகொடுகிரிதன்னுதன்மோத
விருணியுருக்கொண்டவன்மெய்யடித்தானிடியொத்தே. (கருரு)

கடுவிடமெனவாண்டிருவருமெய்திக்கதைகொண்டே
யிடம்வலம்வருவரொண்ணில்சாரியுலகெங்கு
முடியடிதோளின்மோதுவர்சீருநகைசெய்வ
ரிடிவெடிபடவார்த்திடுவர்கள்கதைமெய்யிமிழத்தான். (௧௫௬)

இரணியநயனனிவனுயரிருணியிவனென்றே
வருணனேடியமன்வாசவன்முதலோருணராதங்
கருணயமில்லாவசுரனுமோழலானேனும்
விரணமெய்யுறவான்சுழலுவர்கதையின்னடிமேவ. (௧௫௭)

அரிசினமுறவேகதைகொடடிப்பவவுணன்றன்
வரையினினிடிவீழ்மாறெனவுக்காண்டயர்வுற்றுச்
சொரிகறைநிறையத்தேறியெழுந்தேசுடர்போலத்
தெரிவுறுதண்டங்கைகொடடித்தான்சினம்விஞ்ச. (௧௫௮)

ஆடகநயனன்மோதியதண்டாலரிகையி
னீடியகதைநீள்வீழமுனிந்தேநெடுமோறன்
பீடுடைவாலாலக்கதைபற்றிப்பிலனேடுஞ்
சாடினனவுணன்றண்டுமுறிந்தேபொடியாக. (௧௫௯)

கதைபொடியுறவேகதமிகுமவுணன்வரிவில்லின்
குதைசெவியுறநற்குரைகடல்சுவறக்கொடுவாளி
விதியுடனமரர்வெருவிடமழைபோல்விடலோடுந்
திதிசுதர்காலன்றண்டுசுழற்றிச்சிதைவித்தான். (௧௬௦)

கோலமுகத்தான்கதைகொடுசுற்றக்கொடிதாய
வாலமெனச்சூழாசுகமெல்லாமறலோடும்
வேலயில்குந்தமெழுமழுநேரின்மிளிர்வாண்முட்
கோலொளிர்பிண்டிபாலமெறிந்தான்கொடியோனே. (௧௬௧)

கொடியவன்விட்டபலபடையெல்லாங்கதைகொண்டு
நெடியவன்மோதத்துகளுறலோடுநெறியில்லான்
விடையவனயனுங்கண்டலனமரர்மிகவஞ்சச்
சுடர்விடுமுனைகொள்சூலமெறிந்தான்கதம்விஞ்ச. (௧௬௨)

அண்டருமஞ்சவவுணன்விடுக்கவருசூலங்
கண்டைகறங்கக்கனல்புடைசுற்றக்கடுவெல்லா
மண்டிடவேதாளக்குழுமுந்தமலரோனே
டெண்டிசையுள்ளோர்வெருவிடவந்தவிடியுட்க. (௧௬௩)

இருளொருதிசையைச்சுற்றவதற்குளொரிமண்ட
மருளுறுமல்கையொருதிசைசுற்றவடைவத்தீ
யுருமினமுளையவொருதிசைசுற்றவிடமுற்று
மரவொருதிசையைச்சுற்றிடவந்ததயிலம்மா. (௧௬௪)

அரனயன்முனிவரதிதிபெறுஞ்சேய்முதலெண்மர்
சுரர்களும்வெருவச்சூழ்கனன்மலியவருசூலந்
தரையுறுபொடியாய்விழவொளிராழிதனைவிட்டங்
கிருணியினுருவாமெம்பரனூர்த்தான்றவரோத்த. (௧௬௫)

சூலமறக்கண்டரனயன்முதலோர்துதிசெய்தார்
காலனெனக்கண்டியுறுமவுணன்கடிதெய்திக்
கோலமெய்குலையக்கொடியகரத்தாலிவன்மோதிச்
சூலுறுகொண்மூவிடையினொளித்தான்சுசியொப்பான். (௧௬௬)

எதிரமர்செய்யாதேகியொளித்தவசுரேசன்
கதுமெனமாயப்படையைவிடுப்பக்கரிகோமா
வுததியெனச்சூழவுணர்களார்ப்பயுகம்வீயுந்
திதியினிலறைகால்வடவனலுற்றதிசையெங்கும். (௧௬௭)

இருளுறவெங்குந்தூளிபொழிந்தவெரிகொள்ளி
சொரியவிரத்தஞ்சீய்தசையத்திச்சுனையோடும்
பெருகிடமண்டிப்பேய்கணடிப்பவிருநாவால்
வரையிறவாங்கிமாசுணமெங்கும்பரவிற்றால். (௧௬௮)

கிரிவருடங்கள்கிளரமரத்தின்மழைபெய்ய
வுருமினமெங்கும்பரவிவிழப்பல்படையுற்றுச்
சொரியமுடுக்கிச்சூலமெடுத்தேகலையின்றி
நிருதிகளார்ப்படாகினியெங்குநின்றாட. (௧௬௯)

முக்கணர்நூறுசிரசினர்நாவான்முகிலெல்லா
நக்குவரீரைஞ்ஞூறுகையுடையர்நாட்டந்தீக்
கக்குவர்வரையைக்காலிடையெற்றிக்கடலூட்டி
முக்குவர்வாயாலார்ப்பர்களண்டத்தொலிமுட்ட. (௧௭0)

எற்றுமினெற்றிப்பல்படையாவுமெறிமின்கள்
சுற்றுமினிருணிவெருவிடவாளிசொரிமின்கள்
பற்றுமினுடலைத்தின்னுமின்கறையைப்பருகிக்கா
லிற்றிடவரைமின்வரையினிடத்தென்றெதிர்செல்வார். (௧௭௧)

திக்குலகெங்குந்தீயுடன்வாயுவரைகொள்ளி
மிக்கிடவிரதங்கரிபரிமிடையவிடம்வாயாற்
கக்கிடுதீயர்நிருதர்களெங்கும்பரவக்கண்
டக்கணம்வானோர்திசைதொறுமோடியயர்வுற்றார். (௧௭௨)

சுரரொடுமுனிவர்பாறிடவதிதிசுதனோடு
மரனயனோட்டம்பொத்தினர்கிரியாயமர்செய்வான்
சரியிலதிகிரியத்தனைமாயப்படையெல்லா
மிரவியினவிராலிமமறுசெயலிற்கடிதிற்ற. (௧௭௩)

ஆடகநயனன்செலவிடுமாயமறமுன்ன
மோடியவிபுதர்முனிவர்கள்பலருமகிழ்வோடுங்
கூடினராகிமலர்கள்பொழிந்தாருமைகொண்க
னேடவிழ்மலரோனிமையவர்நாதன்றுதிசெய்தார். (கஎ௪)

தான்விடுமாயப்படையறலோடுந்தழல்கண்ணன்
வானமதஞ்சவாள்கொடெதிர்ந்துமலைவானை
யேனவுருக்கொண்டெதிர்பொருபரனாழியையேவத்
தானவர்பெருமான்றலைபொடியாயபடிமீதின். (கஎ௫)

சூரியர்கோடிதுன்னியபோலவெழுமாழி
வீரியவசுரன்கந்துணிசெய்யவிழலோடு
மேருறுமரனைகண்டலனளினனிமையோர்கள்
சீருறுமுனிவர்திரளொடுமோடித்துதிசெய்தார். (கஎ௬)

வேறு. அந்தரதுந்துமியதிர்ந்ததெங்கணு
நந்தொலிபரந்தனநவின்றசின்னங்கள்
சிந்தினர்மலர்மழைதேவர்பின்னுக
னிந்திரனுடனயனியம்புவானரோ. (கஎஎ)

அந்தகன்வெருக்கொளாடகக்கட்டியனை
யெந்தைநீயிருணியாயெழுந்துசெற்றெங்கள்
வெந்துயரொழித்தனைவேள்விநாயகா
தந்தனைபுனலினாழ்தரணியென்றனன். (கஎஅ)

வாசமுமலரும்போன்மண்விண்ணேழ்கட
லாசையெண்வரையரன்யானுமாகியென்
னூசியின்வராகமாய்நண்ணிப்பொற்கண
னீசனைச்செற்றெமதிடரைநீக்கினாய். (கஎ௯)

அந்தமுநடுவுமாயாதியாய்த்தவர்
சிந்தனைக்ககப்படாத்தேவவெம்முனர்
வந்தனையெளியர்போன்மறைக்குமெட்டிலா
வெந்தைநின்மாயையையாவர்காண்குவார். (கஅ0)

படைத்திடயானெனப்பண்ணியாவையுந்
துடைத்திடவரனெனத்துலங்கவைத்தென்ற
னிடத்தினிலிருணியாயிவனைச்செற்றலாற்
கடைத்தொழின்முதற்றொழில்யாங்கள்கற்றிலோம். (கஅக)

உயிர்தொறுமுளனுமாயுலப்பிலண்டங்க
டயிரமைநெய்யெனச்சார்ந்துநின்றநீ
யியல்புடன்கொணர்ந்திடுமவனியென்றுமிவ்
வயமிசையொளிபெறவருளுவாயென்றான். (கஅ௨)

அயனிவையறைந்திடக்கேழலாகிய
புயல்புனன்மீதினிப்பூமிகீழ்விழா
தியல்புடனிருக்கவாண்டருளவெண்கணன்
றுயரொழிந்தாடவேசுரர்கள்போற்றினார். (கஅங)

பூமனோடமரர்கள்போற்றும்வேலையிற்
சாமளருபியாய்த்தமனியத்துகில்
வாமமேகலையுடன்வயங்கப்பார்மகள்
வீமனுஞ்சுரிகுழல்விளங்கவந்தனள். (கஅச)

அடிமிசைநூபுரமாற்றப்போற்றுசீர்த்
துடியிடைமேகலைதுலங்கநித்தில
வடநகிலிலகப்பொன்வளைக்கைமாண்புற
விடமகல்விழியிணைமிளிரவந்தனள் (கஅரு)

சுதைதருமொழியினடுவர்செவ்வாயள்வின்
னுதலிபொற்குமிழெனநுவலுநாசியள்
புதிதலர்கமலம்போற்பொலியுமானனி
மதியினிற்பிள்வெனவயங்குநெற்றியாள். (கஅசு)

நாகெனுங்கழுத்திநாளீகநேரான
வேகடத்தோடுகள்விளங்குகாதினாள்
கெகயமனங்குயில்கிள்ளைநாணவே
சூகரத்தடிமிசைதொழுதுநின்றனள். (கஅஎ)

வந்தடிதொழுதெழுமாதைக்கோலமாஞ்
சுந்தரவாமவூருவிற்றுலங்கசற்
சந்துடன்றுமமுந்தனத்தின்மீதணிந்
திந்திரைநாணவாண்டிலங்கவைத்தனன். (கஅஅ)

அவனிமின்வராகமாமாதியூருவிற்
கவினுறத்தோன்றலுங்கமலன்றேவர்மன்
சிவனொடுமுனிவர்கடிரண்டுவாழ்த்தியே
பவமறப்பொழிந்தனர்தருவின்பன்மலர். (கஅகூ)

துந்துமிபடலிகைதுடிகள்காகளஞ்
சிந்துவினொலிகெடமுழக்கச்சேரவொண்
கந்தருற்றுபமுங்கவின்கொடபமு
மந்தரத்தரம்பையொடுத்தங்காடவே. (ககூ0)

கோலமனிடத்துடையிருத்துங்கோமளா
ஞாலமின்னினையணைத்துவந்துநான்மறை
வேலையிற்றிரண்டிடுமிரதமீண்டிய
சீலமாவராகமாபுராணஞ்செப்பினான். (ககூக)

பாகமற்றுயர்மகாபுராணந்தான்பகர்ந்
தோவியத்தெழிலினைப்படைத்தவுத்தமத்
தேவியைமகிழ்வொடுசேரத்தன்பதத்
தேவிடையவனயன்போற்றச்சேர்ந்தனன். (௧௧௨)

கோலமாயவனியைக்கொணர்ந்துபொற்கணன்
காலன்வாயுறவரன்கமலனேத்தமா
ஞாலமான்மகிழ்கதைநவின்றநாதனூர்
சீலமீதெனமுனிதிருவுக்கோதினன். (௧௧௩)

வராகப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௱௧௩.

---

௯. வது—கபிலப்படலம்.

வாமமவிர்சித்திரைவைகாசியானிசகூமாற்றிவெண்ணைக்காடியாவணிக்
குணின்றுகஞ்சத், திமையன்மண்விழப்புரட்டாசிடற்பசிசுபாலன்சிரந்துணி
யவேவாழியைவிடுநற்றேவன், சோமகுலவந்தகன்செய்முனர்நடுங்காத்திகை
த்தாடுசிலைமாளாதருஞரேந்துளபமார்கழியான், பூமன்வணிதைக்காய்மாசில்
சாபங்குனியப்போரினிற்றெசமுகனைச்செற்றானைப்போற்றிசெய்வாம். (௧)

வேறு. அரிபெருங்கிரியாகியேயாடகநயனன்
சிரமறுத்திடுசரிதையைச்செங்கமலத்தின்
மருவுநற்றிருக்கேட்டுளமகிழ்ந்துமால்பினரின்
றரையியற்றியதெதுவெனநாரதன்சாற்றும். (௨)

விரியுநான்மறையயனொடுமுதவியவிமலன்
கருடவாகனனைக்கருத்தமன்முனமொய்த்தி
வரமளித்தவன்சுதனெனக்கபிலனாய்வயங்குஞ்
சரிதையுத்தமிகேளெனத்தவனிவையறைவான். (௩)

திருத்தமுற்றிடச்சிருட்டிசெய்மலரயன்சேயாங்
கருத்தமப்பிரசாபதிகருடவாகனனை
யொருத்தனுக்குரித்தாயவெட்டெழுத்தைத்தனுளத்தி
னிருத்தியோகமாண்டியற்றினனெண்ணருங்காலம். (௪)

இருதையத்தினிலெட்டெழுத்தழுந்துறவிருத்தி
விரதசீலனாய்விலோசனநாசியினுதியின்
மருவவைம்பொறிமறித்துத்தன்னடியினங்குட்டந்
தரையினூற்றிடத்தழலினாய்ப்பண்டவஞ்செய்தான். (௫)

கருத்தினுள்கவுமரியதாங்கடுந்தவஞ்செய்யப்
பிருத்தியன்கருத்தமன்றன்மேற்பிரிதியுற்றவனாய்
விருத்தம்வானவர்செயக்கையினேமியுங்கோடுந்
தரித்துவந்தனன்கலுழன்மேற்றிருவுளந்தயங்க. (௬)

அலரிகாணவேயலரரவிந்தமாமலர்கண்
மலியுமைப்புயன்மிசையிளங்கதிரவிர்வயங்கும்
பொலனுறத்திகழ்கிரீடநற்சேகரம்பொருந்தக்
கலநிறைந்திடக்கண்கைவாயுந்திகாலிலக. (எ)

மகரகுண்டலமலைந்திடவளையிருதனுபோற்
புகல்வதற்கரிதாகியபுருவங்கடயங்க
நிகரிலாக்கவுத்துவமணியவிர்நிறைந்திடப்பொற்
றுகின்மருங்கினிலமருடைநாணொடுந்துலங்க. (அ)

இரவினன்னவிர்பரந்திடுங்கருங்கடலெனவெண்
டரளமாலைகள்கழுத்தினுமுரத்தினுந்தயங்க
விரைசெய்தார்துளபத்தொடுவிளங்குகஸ்தூரி
திருமுகத்தினுக்கழகுறநுதலிடைத்திகழ. (கூ)

தேவதுந்துமிமுழங்கிடச்சிறந்தகற்பகப்பூத்
தூவிவானவர்நடித்திடமுனிவர்கடுதிப்பப்
பூவுளோனொடும்புகரிபவிறைபுகழ்ந்தேத்த
நாவினான்மறைநவின்றிடநாரணன்வந்தான். (க0)

வாடுருமலர்மங்கைதன்னாயகன்வரவு
மாடினான்வருமானந்தநயனநீர்சொரியப்
பாடினான்மறையிசையினிற்கருத்தமன்பணிந்தே
சூடினான்பகிரதியமர்பதத்தணிதுளபம். (கக)

இரவிகாணலரரவிந்தமலரெனவிணையி
லரியைநோக்கியகருத்தமனானனம்வயங்கச்
சரிரரோமமும்பொடிப்பநாக்குழறிடத்தடக்கை
சிரமுறக்குவித்தாடியேசெப்பலுற்றனனால். (க௨)

அண்டமெண்ணிலவகுத்தவைகாத்தளித்ததனு
ளுண்டெனத்திரிந்துரோமத்தினுதியதிலுலப்பின்
முண்டகக்கடவுளருறைமுட்டைகளமர
வெண்டவத்தினர்துதித்திடவிலங்கிவீற்றிருப்பாய். (கங)

சீவகோடிகளனைத்தினுமுறைந்தவைசெலுத்தும்
பாவபுண்ணியம்பற்றிலாய்பங்கயன்முதலாந்
தேவர்தேடவுந்தெரிகிலாய்பத்தருக்கெளியாய்
பூவினின்னமர்திருவுரம்பொருந்தியபுனிதா. (கச)

மாதவாநமமலர்மகண்மருணனேநமவே
ஆதியேநமவவனிமின்னாயகநமவே
சோதியேநமசுந்தரப்பகீரதிதோயும்
பாதனேநமபரமனேநமவெனப்பணிந்தான். (கரு)

உளமுமென்பினோடுருகிடுங்கருத்தமன்றன்னைத்
துளவணிந்திடுசோதிதன்னிருகணுநோக்கி
யளிமலிந்திடமகிழ்ச்சியாலானந்தமுறவே
வளமுறும்மிளமுறுவல்வாய்மலர்ந்திவையறைவான். (கசு)

சுத்தனுமெனைக்கருத்திடைத்துலங்கிடவமைத்த
பத்தனாகியகருத்தமபவமெலாமறுத்தே
மெய்த்தவஞ்செயும்வித்தகாவுனக்கியான்விளங்கும்
புத்திரன்னெனவருவனென்றிவையிவைபுகல்வான். (கஎ)

சுத்தனாகியசுவாயம்புமனுவருடோகை
தத்தைநாணுறச்சாற்றிடுந்தேவகூதையைத்தான்
வித்தகம்முறவேட்டவடன்னொடும்விளங்குஞ்
சித்தசன்னெனக்கலவியிற்சிறந்தினிதிருப்பாய். (உஅ)

தேவகூதையாந்தேவியைநீபுணர்ந்திடவே
ஆவியோதிமநிகர்நவவனிதையர்துலங்கப்
பாவமில்லவள்பயந்தபின்பவவிருளகற்றும்
தீபமாகியசிறுவனாய்ச்சனிப்பனென்றகன்றான். (ககூ)

மாயனேகியபின்னரின்மலர்மகணிகராந்
தூயளாகியமகளுடன்சுவாயம்பூமனுமன்
காயும்வெவ்வினைகடிந்தருள்கருத்தமன்றன்னை
வீயொடேயயந்தனிலருச்சித்திவைவிளம்பும். (உ0)

மாதவஞ்செயுங்கருத்தமயான்பெறுமகடான்
கோதில்கோகனகத்திருநிகர்த்திடுங்கொம்பு
பூதலந்தனில்விசும்பினிலிணையிலள்பொறைசா
னீதிவாய்மையளிவளெனச்சுட்டிநின்றறைவான். (உக)

உருவினாலுருவிலிமடலெடுத்துறுவிரகம்
பெருகவேமயங்கிடவயங்கிடுநலன்பெற்ற
தெரிவையாகியதேவகூதைத்திருத்தன்னைத்
தருகுவனுனக்கென்றுகைத்தாரைநீரளித்தான். (உஉ)

கதமிலாதுயர்சுவாயம்பூமனுமன்கன்னிகையைச்
சதுமறைப்பொருளுணர்ந்திடுகருத்தமன்றனக்கே
வுதவினேனெனவுதகங்கைவிடுததலுமுவந்து
சுதைநிகர்த்திடுந்தோகையைநெறி யின்வேட்டனனால். (உங)

இந்துவேணியைநிகர்த்திடுங்கருத்தமனில்லாள்
விந்துமாசரசிற்படிந்தெழவவண்விதிக்க
வந்தமின்னுடனத்தயத் தனேகமங்கையர்கள்
வந்துதோன்றலுமனைவிக்கூழியஞ்செயவகுத்தான். (உச)

கருத்தமப்பிரசாபதிகாகமுமணியு
மருத்தியாகவேபொருத்தியவிமானமங்கெழுத்தான்
திருத்தமாகவேவகுத்ததிற்றேவகூதையினை
யிருத்திமற்றவளோடுமெண்டிசையெலாந்திரிந்தான். (உரு)

கற்பகத்தருநிழலினுங்கவினுறுகுபேரன்
பொற்புறுந்திருநகரமாம்பொழிலினுங்கனக
வெற்பினுற்றுயர்நந்தனவனத்தினுமேவி
யற்புதத்தணங்கின்குயமுரத்துறவணைத்தான். (உசா)

மாரனோடைவன்மனைவியும்வெள்கிடமருவி
னாரிதன்னொடுங்கருத்தமனலங்கிளர்கலவி
வாரிமூழ்கிடமற்றவள்வயிற்றிடைச்சனித்தா
ராருநேரிலாவரிவையரைந்துடனால்வர். (உஎ)

பாவைமார்நவப்பெயர்களைப்பயந்தழகாருந்
தேவகூதையாந்தெரிவைசாடரத்தினிற்சிறந்த
மூவராகியமுழுமுதன்முனிவர்கள்வலாரி
பூவின்மீதமர்புநிதனும்போற்றிடவமர்ந்தான். (உஅ)

உவமையற்றுயர்தேவகூதைத்திருவுதரத்
தவிர்நிறைந்திடுமச்சுதனமர்ந்திடுநாளி
னவையகற்றியகருத்தமனரியைநோக்கித்
தவமியற்றிடுவேன்றளரேலெனச்சாற்றும். (உகூ)

மனைவிபுத்திரர்மித்திரர்வாழ்விவையெல்லாங்
கனவினுற்றிடுபொருளெனக்கடிதினிற்கெடுமா
றினகரன்புருடாயுவுநிறைந்திடத்திரிவ
னனகனேயலாற்சீவனுக்காந்துணையிலையால். (௩0)

ஆதலாலினிதாயபோலடர்மனைவாழ்க்கை
கோதில்கோதையேகூறிடினித்தியமாகு
மாதவன்றிருநாமமேமறுவிலாநெறியைத்
தீதகற்றியவவன்பதத்துறச்செலக்காட்டும். (௩க)

காமமாகியவளக்கரைக்கடக்கிலாதமிழ்ந்
தீமையாகியசனனத்தைச்சேர்த்திடுமதனால்
வாமமேகலைமடந்தைநீவருந்தலையென்று
பூமனன்சுதன்றவஞ்செயப்போவனென்றுரைத்தான். (௩உ)

கொழுநனிவ்வுரைகூறியேயகல்வனென்றறைய
வழுதகண்ணினளயர்ந்தவனடியின்வீழ்ந்தெழுந்தே
தொழுதகையினடுணைவநீயொருவிடிற்றுன்ப
மெழுமனத்தியாமெனக்கியார்களைகணென்றிசைத்தாள். (௩௩)

மனைவியிவ்வுரையியம்பியேவருந்திடக்கூடிய
வினையைவென்றிடுங்கருத்தமன்விளம்புவான்மாலுன்
றனையனாகவேசனிக்கவுன்சாடரத்தமைந்தான்
வனிதையேயுனக்கவன்கதிவழங்குவனென்றான். (௫௪)

சரியின்மாதவன்றனையனாச்சனிப்பனென்றியம்பி
யரிவைதன்னிருநயனநீரங்கையான்மாற்றிக்
கரியுறுங்கருங்கானிடைக்கருத்தமனேகப்
பிரமனெய்தியேதடுத்திவைபேசலுற்றனனால். (௫௫)

திருவினாதனுன்றேவிதன்னுதரத்தினமர்ந்தான்
சரியின்மாதவவுனக்கவன்கதியினைத்தருவ
னரிவைவெந்துயராறவேயவன்சனித்ததற்பின்
மருவுவாய்வனத்தென்றகன்றனன்மலருறைவான். (௫௬)

பிரமனவ்வுரைபேசியேயகன்றிடத்தவஞ்செய்
கருமநீங்கியகருத்தமனிலகுகன்னியரை
மரிசியேமுதலானவப்பெயர்கையின்வழங்கிச்
சுரர்துதித்திடத்துலங்கினன்மனைவிதன்னுடனே. (௫௭)

சுரர்கண்மாமலர்பொழிந்திடத்துந்துமிமுழங்கக்
கரியையூருவோனரன்கமலன்புகழ்ந்தேத்தத்
தெரிவையாகியதேவகூதைதத்திருவுதரத்
தரியுருபமாங்கபிலன்வந்தவதரித்தனனால். (௫௮)

பாவகாரியர்பற்றறக்கபிலனைப்பயந்த
தேவகூதையுஞ்சிறந்திடுகருத்தமன்றானு
மாவலிற்பெறுஞ்சிறுவனையரியெனவறிந்தே
பூவின்மாரிகள்பொழிந்தடிபணிந்துபோற்றினரால். (௫௯)

மைந்தனாகியகபிலனைக்கருத்தமன்வணங்கி
யிந்தமாநிலத்திருவைப்போலியற்றிடுங்காமப்
புந்திமுற்றியபுன்மைபோயுன்பதம்புகவே
யெந்தமாதவமியற்றுவனியம்பெனவிசைத்தான். (௬௦)

தந்தையாகியகருத்தமன்சாற்றிடக்கபில
னெந்தமாதவமியற்றினுமென்பெயரறியா
மைந்தர்மண்ணிடைப்பிறவியின்மறுகுவரதனாற்
சிந்தையின்னெனைமறக்கலாத்தவஞ்செயென்றுரைத்தான் (௬௧)

சிறுவனாகியகபிலனுமிறையிவைசெப்ப
வறிஞனாகியகருத்தமனடவியினடைந்தைம்
பொறியைவென்றுநற்புந்தியிற்றுவாதசாக்கரத்தா
னிறைவுறத்தவஞ்செய்தரிகிவர்பதத்துற்றான். (௬௨)

மதுணைப்பிரிந்தழுங்கியசுவாயம்பூமகடா
னிகரிலாததன்சிறுவனைவணங்கியெநெறியார்
புகரிபுத்திடர்போக்கியபுனிதனேயென்ற
னகமடூர்க்கும்வெவ்வினையறவருளெனவறைவான். (௪௩)

என்புத்துறுமடியவர்கயவரையிகழ்வர்
துன்பமுற்றியமனைவியர்சுகத்தினைத்துறப்பர்
வன்பகற்றியநயவரோடிணங்குவர்வலாரி
யின்பமுற்றியபோகமுமென்றுநச்சிலரால். (௪௪)

சிரசினுலெனையிறைஞ்சியாராதனஞ்செய்வ
ரரிசரித்திரமாயவென்காதையையறிந்தே
யுரைசெய்தப்பொருளுணர்ந்துளமகிழ்வரொன்னடியார்
திரளின்மற்றவர்பாதநீர்சென்னியிற்றரிப்பார். (௪௫)

சுத்தனுகியபத்தருக்குறுகுருதுணைவ
னத்தனன்னைமித்திரன்சுதன்சகோதரனுகி
யித்தலந்தனிற்பவக்கடல்கடக்கவிட்டிலங்கு
முத்தமப்பெயருறையுமென்பதத்தினுய்த்திடுவன். (௪௬)

விரைவினுற்றமுற்றிடுகட்டந்தாழ்தரைமேவு
மருவுநீரினைவிலக்கியேயுயர்நிலமதனிற்
பரவுநந்தனவநத்தினிற்பாய்ந்திடவியற்றும்
விரகர்போலவும்விட்டெனையுறுவரொன்னடியார். (௪௭)

ஆதனந்தனினிருந்தடர்வாயுவையடக்கிச்
சூதுசெய்யுமிந்திரியங்கடோற்றிடலொடுக்கி
நீதிமல்கநாசியினுதிநயனத்தைநிறுவிக்
காதலாலெனையிருதையகமலத்திற்காண்பர். (௪௮)

இருதையந்தனிற்கமலமாமலர்மிசையிலங்கு
முருவனுகியவெனைத்தியானஞ்செயுமுபாயஞ்
சரியில்வாலனுய்ச்சவுந்தரியத்துடனின்றே
யரவினிற்றுயின்றிருந்தபோற்காண்குவதறிவே. (௪௯)

கொடிதுரொட்டிசெந்தாமரையலர்மலர்குலிசம்
படருநற்குறியழகுறவிலங்கியபாதஞ்
சுடர்மலிந்திடுசோமரிற்றுலங்கியநகங்கள்
வடிவுடைத்திருவயங்கியதரமுறுசானு. (௫௦)

உவணன்றோள்களுக்கழகெலாமளித்திடுமுருவங்
கவின்மலிந்திடுகனகநற்கலிங்கமார்மருங்கு
நவையகற்றியபிரமனுற்பவித்திடுநாபி
யுவமையற்றுயர்திருவினுளுவக்குமில்லுரமே. (௫௧)

கவின்கவுத்துவமணியினுக்களித்திடுகண்ட
முவமையற்றுயர்மந்தரவரையுறக்கடையத்
தவர்மகிழ்ந்திடத்துலங்கியகடையமார்தடக்கை
யவிர்கொடுத்திடுகரங்களினமருமைம்படைகள்.

அளிசிறந்திடுங்குஞ்சிநல்லளிசெறிநயனம்
வளைவின்மானவேல்வயங்கியபுருவங்கள்வெள்ளை
யிளவிளங்கதிரிரண்டுகொண்டெனவிருகுழைக
டளவலர்ந்தசெந்தாமரைநிகர்த்திடுவதனம்.

இவையெலாமுறவிளங்கியவுருவமாரிறையை
யவிர்நிறைந்திடவிருதயகமலத்தினலர்மே
னவையகன்றிடஞானநந்தாவிளக்கெடுத்தே
தவமலிந்திடச்சபீசயோகத்தினுற்காண்பர். (௫௪)

இருதயத்துறுமலரமர்யானெனுமிறையை
மருவுவோருளமுருகுவர்மகிழுவரழுவர்
சிரமிசைக்கரஞ்சேர்ப்பர்மெய்யுரோமங்கள்பொடிப்ப
விருகணானந்தநீர்விழவெங்கணுநடிப்பர். (௫௫)

பேயர்போலவேதம்மெய்யைப்பேணலர்நகுவர்
தூயபத்தரைக்கண்டிடினிருகையாற்றொழுவ
ராயவன்புறுமடியர்களென்பதமதனிற்
ஞேயம்விஞ்சியவிரசையைக்கடந்துசூழுவரால் (௫௬)

தாமதன்பரதிரவியம்பிறர்தையல்புணர்ச்சி
தீமையெல்லவுமலிந்திடச்செய்குவனுலப்பில்
காமமுற்றுவனிராசதன்சாத்திகன்கமல
மாமனுகுமெனுமந்தன்மநத்திடையமைப்பன். (௫௭)

அலரியாலுலர்காட்டத்தினதிகமாங்கிளையோ
டிலையுறும்மரமதனினுமுயரியதெண்ணில்
பிலனையுற்றிடுபிராணவாயுத்தருக்கிருமிச்
சலமுளாழ்மனக்கீடமற்றதிற்சற்றுப்பெரிய. (௫௮)

அறிவுண்டாமனக்கிருமியினதிகமாம்பரிச
முறவுணர்ந்திடுமரவட்டையதனினுமுயரு
நிறையுநற்சுவைவலசலசரமதினிவரு
நறுமலர்ப்பரிமளத்தினைநுகர்வநல்லளியே. (௫௯)

அளியைவிஞ்சிடுமோசைகண்ணாலுணரவந்
தெளியவாயிருபக்கமுந்தசனங்கள்செறியும்
வெளிறில்கட்செவிக்குயர்ந்திடுமெதற்குவீறிடுமாற்
கிளருநாலுகாலுளகரிகேசரிபலவும். (௬௦)

அடிசதுர்த்தியாம்விலங்கினுக்கதிகமானிடர்கள்
படியின்விஞ்சியமனிதரினுயர்ந்தவர்பவங்கள்

சடியும்வேதியரவரினுநிவர்ந்தவர்கருத்தி
னெடியமாமறைநான்கையுநிகழ்த்துமந்தணரே. (௯௰)

மறையையோதுவார்தம்மினும்வயங்குவார்வேத
மறையுமப்பொருளுணர்ந்தவரவரினும்பெரியோர்
நெறியினப்பொருட்சந்தயமறநிகழ்த்திடுவோர்
மறுவினித்தியநியமமுற்றவரினுமுயர்ந்தோர். (௯௧)

நீதியாமனுட்டாநங்கணிறைந்தவர்தமினும்
வாதைபோகவேகாமம்வையாநியமத்தோ
ரோதமற்றிடுமவரினுநியமங்களெல்லா
மாதியாமெனக்கேசமர்ப்பித்தவரதிகர். (௯௨)

நீதியாமனுட்டானங்கணிகழ்ததுமப்பலன்கள்
வேதவேள்வியினுறுபொருள்விழுமியதான
மீதுதான்முதலானவையென்னிடத்தளிக்குஞ்
சாதுவிற்பெரியோரிலைசகலலோகத்தும். (௯௩)

சகலதேவதைதமக்கியான்றலைவன்சத்தியமே
நிகரில்சாகரங்கரைகடவாததுநிவருங்
ககனமேகங்கள்சொரிவதுங்கடல்வடவைத்தீ
வெகுவிலாததுமென்னுடைவிதிதவாக்கினையே. (௯௪)

கலர்கடம்முயிர்கடுஞ்சமன்கவர்வனென்றெண்ணார்
நிலனிலெண்ணிலாவருடங்களிருப்பர்போனினைந்தே
வலனிற்றுரந்தருங்கலன்களுமாழையுமெல்லா
நலனின்மன்னராற்றிருடராணுசமாய்மெலிவார். (௯௫)

ஈனனாயினும்யாக்கையையிழக்கச்சம்மதியான்
கானலாறெனக்கருதியேயுழலுவார்போல
மானநோக்கலான்வரைவிலாமகளிர்தோளணைந்தே
யானியேதரும்பவமுறவாசையைத்தவிரான். (௯௬)

பரதனங்களைக்கவர்ந்ததுபாவமென்றெண்ணு
னிரதம்போலவெந்துரிதமேநிறைக்குமில்வாழ்க்கை
மருவமற்றதினுற்றிசையெங்கணும்வருந்தி
நரைமலிந்திடுமூப்புநோய்நணுகவேமெலிவன். (௯௭)

திரையுந்தோலலைத்திடவளைவில்லெனத்திகழ்வ
னுருவமாறியேயுடல்குனிந்திடநயனங்க
டெரிகிலாதுபற்பலகழன்றிடத்தெரிவையர்க
ளருவருப்புறவகன்றிடச்சிறுவர்குறசிப்பர். (௯௮)

சிறுவரோடிலாளிகழினுஞ்சினேகமற்றவர்மே
னிறையவைத்தவருதாசனக்கூழ்நிறைத்திடினு
மறுவுறுஞ்சுவாத்தின்பபோலருந்தியெவருந்தி
நெறியறத்தவழ்ந்தப்பொழுதுயிர்விடநினைப்பன். (௯௯)

மனைவிபுத்திரர்மித்திரர்வாய்திறந்தரற்ற
நினைவுமற்றவர்க்குரைநிகழ்த்தவுமரிதாய
வினைகள்சுற்றிடக்கோரசாதகருறவெருவி
மனநடுக்குறப்பிரசமாமலம்விடமரிப்பன். (௭௦)

இருநிலத்திடைமரித்தவன்சூக்குமயாக்கை
விரவியாதனுசரீரத்தின்மேவிடவமைத்துப்
பரவுசாதகர்திருடரைப்பற்றுமாறெனவே
கரமிரண்டுறப்பாசத்தாற்கட்டியேகுவரால். (௭௧)

நெறியின்ஞாளிகணிறைந்துமெய்யெங்கணுங்கவ்வ
வறையுங்காலுடன்காட்டுத்தீயாண்டுவந்தடர்க்க
நிறையும்வெம்பசிநலிந்திடநீர்நிழனிலாது
மறுகுசாதகர்கசையடிவெரினுறமயங்கும். (௭௨)

தரையியற்றியபவமெலாநினைந்துளந்தளர்வ
னெரிபரப்பியவயமுறுமிலக்கயோசனையும்
பரவுசாதகரடியினாற்பயந்தழுதரற்றித்
தருமன்முன்னரினூறுநாழிகைதனிற்சார்வன். (௭௩)

நடுவன்வெங்கதமுறநவின்றிடுமொழிப்படியே
கொடியசாதகர்கொள்ளியாற்குரம்பைவெந்தரற்றச்
சுடுவர்கால்கரந்துண்டமாய்நறுக்குவரவன்றன்
குடர்பிடுங்கிடக்குரைத்தடர்ஞாளியைவிடுப்பர். (௭௪)

அகிகடித்திடவிரிச்சிகம்புச்சமிட்டறைய
வகிர்படுத்தவன்றசையினைவாளினாலரிந்து
மிகவரற்றுவான்வாயினிற்றிணித்துவெங்கதமார்
புகரிபக்குரமிதித்திடப்புடைத்திழுத்தெறிவர். (௭௫)

வரையினுச்சியினேற்றியேமண்ணினூக்குவர்க
ளிரையுநீரினுளமிழ்த்துவர்வசியினேற்றிடுவ
ரரிவர்மெய்யினைச்செக்கினிட்டாட்டியேயரைப்ப
ரெரிபரந்திடுமழுவினைத்தழுவிடவடிப்பர். (௭௬)

அதிகபாவங்களியற்றினோனவனியினந்த
மிதமுறும்பசநிர்ப்பந்தமேவியேபினருங்
கதமுறுங்கடுஞ்சாதகர்கரத்திழுப்புண்டே
யதன்மமேதுணையாகவெந்நிரையத்தினாழ்வர். (௭௭)

நிவுரவம்முதலாகியநிரையமேழ்மூன்றும்
பவமுறுந்துணையாகவேபடிந்ததுதுலைத்து
நவையுறும்மவன்செய்தகன்மங்கணண்ணிடவே
யவனியிற்பலயோனியின்வந்தவதரிக்கும். (௭௮)

புருடர்வாயினிற்சீவனீரனந்தனிற்புகுந்தே
யரிவையோனியின்மகிழ்ச்சியாலவன்புணர்ந்திடவே
பரவுசுக்கிலஞ்சோணிதத்துற்றிடப்பாய்ந்தே
யொருதினத்தினொன்றாகியேயுதரத்தினுறுமால் (எக)

ஐந்துநாளையிலயத்துறுகுமிழிபோலாகிச்
சந்தமாகியதசையதாய்த்தசதினத்துருண்டே
யந்தமாகியோர்திங்களிற்சிரங்கைகாலாகி
யுந்திமெய்செறியுரோமமுத்திங்களினுறுமால். (அ௦)

அத்திதோறசையரிவையாண்குறியுறவமரும்
முத்திரத்துடன்முப்பதுமாறுநாடன்னின்
சத்ததாதுக்கள்சதுர்த்தியாந்திங்களிற்சாரும்
பத்தினைந்துபோந்திங்களினுறும்பசிதாகம். (அக)

அன்னைதானுகரன்னசாரம்மவள்குடரின்
மன்னுநாபியின்கொடிநெறிசிசுவயிற்றிழிந்து
துன்னுமாப்பையினுறுமாதத்தினிற்சூழுங்
கன்மசென்மமேழ்திங்களிற்கருத்துறவறியும். (அஉ)

அலரியான்வருமட்டமாதந்தனிலுதர
மலமுடன்பிரசரத்தினுண்மாழ்கியேகிருமி
பலவும்வாய்கொடுகடித்திடப்பதைத்துமூர்ச்சிக்குந்
தலையினைக்கவிழ்ந்தேவெரின்கூனுறச்சாரும். (அங)

சரியிலன்னைவாய்தனினருந்திடவயிற்றுரு
மருசியுப்பினிற்சாரங்கள்வளைத்திடக்கரித்துத்
தெருமரல்லுறுங்கழிந்திடுஞ்சென்னத்தினினைவு
வரமெலிந்திடுமுடலெலாநடுங்கவேமயங்கும். (அச)

மாதமொன்பதின்வருந்தியேயனேகசன்மத்தின்
மீதுறும்பலமனைத்தையுந்தெரிந்துடன்மெலிந்து
சூதிவாயுவந்தறைந்திடத்துளங்கியேநெளியு
மாதிநாரணநமவெனவங்கைகூப்பிடுமால் (அரு)

இருநிலந்தனிலெண்ணருஞ்சனனத்தினிழைக்க
வருபவங்கடான்மாய்ந்திடமாதவன்றன்னைப்
பிரமைசேருமுன்பேணியாராதனைசெய்து
நிரையவேலையைநீந்துவனியானெனநினைக்கும். (அசா)

ஐயிரண்டுதிங்களுநிறைந்தன்னைதன்னுதரப்
பைகிழிந்திடச்சூதியாம்பவனன்வந்தெழுந்தே
மெய்யொடானனங்கீழதாய்வீழ்ந்திடநூக்கக்
கைகுவித்தரிகருத்துறச்சனிக்கும்வேலையின்வாய். (அஎ)

அன்னையோனியினுன்னந்தோன்றுவேலையின்வாய்
மன்னுமாயையாகியசடவாயுவந்தறையத்
துன்னுஞானமும்பறிபடச்சோதியைமறந்தே
யிந்நிலந்தனிலடுத்தடுத்திறங்கியேசனிக்கும். (௮௯)

விட்டையுற்றிடுகிருமிபோல்விபுலையினெளிந்தே
யிட்டமேயறியாதுதாய்வளர்த்திடவிரங்கித்
துட்டசெந்துமெய்கடிக்கவுந்துடைக்கவுமறியான்
கட்டமோடுதுர்க்கந்தமாம்படுக்கையிற்கிடப்பன். (௯௦)

தரையினன்னைகைதனினமர்ந்திருந்துறத்தவழ
மருவியேநடையயின்றபின்மழலைச்சொற்கூறிப்
பருவமைந்துறப்படியினினெய்துதற்கரிய
பொருளைநற்றியேபொலனுருமுருவனாய்வளர்வன். (௯௧)

கதமுமாசையுநிந்தையுங்கயவர்களறைசொ
லிதமதாகவாங்காரமோடிவையெலாம்வளரப்
பதகனாகவேயியற்றிடும்பவமெலாமகற்றிச்
சதுமுகன்றனைத்தருமெனைச்சார்வதுகருமம். (௯௨)

அயனுந்தான்றரவெழுந்திடுமெரிவைதன்மீதின்
மயலெழுந்தனன்மற்றவன்சிருட்டியினமருங்
கயவரெங்ஙனம்விடுகுவர்கடியதீவினையின்
செயலதன்மனைச்சேருதன்மடந்தையர்கலவி. (௯௩)

ஆதலாலனைபுத்திரற்கேதுவாயமர்ந்த
மாதரார்களைவிரும்பியுமாத்திரமாகப்
பூதலந்தனிற்புன்மையர்சங்கமதகற்றிச்
சோதியாமெனைத்துணையெனப்பற்றுவதறிவே. (௯௪)

தரையினிற்செயுந்தருமபாவங்களினாலே
விரகினெய்யுநாடாவுழன்மெல்லியவிழைபோ
லிரவிகாதலனகரினுமிவ்வுலகத்துந்
திரிவரெண்ணிலயோனிகடன்னிடைச்செனித்தே. (௯௫)

கிரகநீதியாங்கிரமஞ்செய்தறம்பொருள்காமம்
விரகின்முற்றுறத்தேவதைபிதுர்க்களைவிரும்பி
நிகரிலாவெனைநினைக்கிலானவாந்திரவயந்தான்
புகவழிந்திடுமிந்துவினுலகத்திற்போவன். (௯௬)

சரியிலாநலசாத்திகர்சங்கமுமேவி
விரியுநான்மறைமெய்ப்பொருளுணர்ந்துளம்விளக்கிப்
பரமனாமெனையருச்சிப்பர்பருதிமண்டலத்தை
யுருவியேயயனுலகமாந்தென்பதத்துறுவர். (௯௭)

ஆதலாலெனைப்பயந்திடுமன்னையானவளே
தீதையாவையுமொருவிமெய்ஞ்ஞானமுட்டெளியச்
சோதியாமெனைத்துலங்குமுன்னிதையத்தினிறுவி
மாதவஞ்செய்துவருதியென்பதத்தெனவுறைந்தான். (கூஅ)

மைந்தனாகியகபிலமாயவனருள்செய்யச்
சிந்தைஞானமெய்ப்பொருடிகழ்தேவகூதைத்தேன்
கந்தமாமலர்க்கழலிடையருச்சித்துவணங்கி
விந்தைநாயகவினையறுத்தனையெனவிளம்பும். (கூகூ)

பீடுலாவியபிரமகற்பப்பிரளையத்தின்
சேடசாயியாய்த்திருவொடுமனந்தவண்டங்கள்
வாடுறுமலருந்திசேர்வயிற்றிடையமைத்துச்
சூடுறுக்கனகக்கலன்றுலங்கிடவமர்வாய். (க௦௦)

தூயநான்முகன்முதலினோர்தமைத்தருசோதி
யாயநீயெனக்கறிஞனாம்புதல்வனையெழுந்த
மாயமென்கொலென்றறிகிலேன்மறையினைமயக்கு
நாயகாவெனத்துதித்தவள்பின்னருநவில்வாள். (க௦க)

சுனகனுக்கெரித்திடுமருட்டூர்க்குணனெனினு
மனகநின்பெயரறைந்திடினவனுவகெவைக்கும்
புனிதன்மற்றவன்கிரிகையேபொறையுறுதவமு
மனலினெய்சொரிவேள்வியுந்தருமமுமாமால் (க௦உ)

எந்தைநீயெனக்கின்புறுமதலைநீயயன்றன்
றந்தைநீமகத்தலைவனீதாமரைவயங்கும்
விந்தைநாயகவித்தகவிபுலையின்கொழுந
சுந்தராவெனத்துதிதடிதொழுதிறைஞ்சினளால். (க௦ங)

மாயனாகியகபிலமாயவனருட்படியே
தூயதாஞ்சரசுவதிமாநதியினிற்றுலங்கப்
பாயயத்தினிற்படிந்தியோகத்தினையியற்றிக்
காயநீக்கியேயரியமர்பதத்தினிற்கலந்தாள். (க௦ச)

சுத்தையாகியதேவகூதைத்திருத்துயர்கூ
ரத்திமுன்வருபரமன்றன்பதத்திடையடைய
மெய்த்தவத்தினாற்கழித்திடுங்குரம்பைவீழ்தலமே
சித்தமாநதியாகியபெயருறச்சிறந்த. (க௦ரு)

கந்தமார்குழற்றேவகூதைக்குமெய்கழறுஞ்
சுந்தரஞ்செறிகருத்தமன்றனக்குமொண்சுதனாய்த்
தந்தைதாய்கதிபெறவருட்கபிலன்றன்சரிதை
விந்தைநீயுணரொன்றியாழ்முனிவிளம்பினனால். (க௦சா)

கபிலப்படலம் முற்றிற்று. ஆ திருவிருத்தம் - கூகக.

விரதரோன்பெண்ணில்செய்துவிளங்கியவேள்விமுற்றிச்
சரியின்மாதவமியற்றித்தானங்கள்பலசெய்தாலு
மிருமையார்சுவர்க்கத்தெய்திப்பின்னருமிம்பர்வீழ்வ
ரரிபெயருணாயுந்தொண்டரழிவிலாப்பதம்பெற்றுய்ய. (௧)

வேறு. ஒள்ளியரெனமெய்யுறவுபோற்றிரிந்துள் வினையிலுற்றலேவனைக்கெடுக்கும், தெள்ளியகுணமில்செறுநரைப்போன்றுதினந்தழைவரைவிலாதருந்து, வெள்ளயமெனநல்லறிஞரையறியாததன்மமேவிளைத்துவெந்நரகிற், றள்ளுமென்மனனேயிணையிலாமுகுந்தன்றாளினைவழுத்தியாமுய்ய.

வேறு. சரியிலெண்டேவகூதைசதுமுகன்றனையனோடு
மருவவேசிறுவனாகிவயங்கியகபிலன்காதை
விரிபுகழ்விதர்ப்பன்பெற்றமெல்லியல்கேட்டுப்பின்னுங்
கரியமாலியற்றுஞ்செய்கைகழறெனமுனிவன்கூறும். (௩)

ஆயிரமுடிகண்டோள்கால்பெயரதாமாதியன்பாந்
தூயசின்மதலைக்காகியவுணர்கோனறைந்ததூணிற்
சீயமாயெழுந்துதோன்றியுகிரினாலறனிறீயோ
னேயவேபோழ்ந்தகாதையொப்பிலாய்கேளென்றோதும். (௪)

இருணியாயெழுந்தசோதியிரணியாக்கனைத்தான்கொல்ல
முரணுறுமசுரனானவிரணியன்முனிவினோடு
மருணயமிலாதகாலசேயருக்கரன்கிரிட்டன்
கருணையில்காழிநாபனிவரொடுங்கழறலுற்றான். (௫)

கிரியுருவாகிவந்திங்கெம்பியைக்கிளர்ந்துசெற்ற
யரியினையானேகொல்வனமரரைவதைத்துநீங்கள்
விரிவுறுவேதமெல்லாமழியவேள்வியைச்சிதைத்துத்
தரையினின்முனிவரெல்லாந்தவஞ்செயாதியற்றுமென்றான். (௬)

இரணியன்மொழியைக்கேட்டாண்டிலகரன்கிரிட்டனேமிக்
கருணையினிசும்பன்சும்பன்சம்பரன்காலகேயர்
விரைவினிற்கரிதேர்குந்தமிருகவாகனத்திலேறிச்
சுரருலகத்தினெய்தித்தேவரைத்துரத்தினரால். (௭)

மாதவர்தவங்களெல்லாமறித்தவர்வைகுங்காணிற்
பாதவமெல்லாநூறிப்படியினின்மறையோர்செய்யு
மேதமற்றிலங்குவேள்வியெண்ணிலவழித்துநீதி
மோதித்துன்மரங்கள்வாழமுயற்சிசெய்தார்களன்றே. (௮)

இரணியன்றமர்களாலாண்டிமையவர்முனிவரெல்லாம்
விரைவினிற்கரந்துபாறவேள்விகளழியப்பொன்னின்
வரையெனவிருந்தான்றேயமறவன்றேவியாவாள்
கருவயிற்றிடையிற்றோன்றக்களித்தவனிருக்குநாளின். (௯)

எம்பியைக்கிரியாய்க்கொன்றவிருடிகேசனைக்கொல்ல
வம்பவிழ்மலரோன்றன்னால்வரங்கள்பெற்றிடுவனென்று
சம்பரன்முதலினோரைத்தன்பதிக்காகவைத்தே
உம்பர்கள்வெருவத்தீயோன்றவஞ்செயவொருப்பட்டானால். (க௦)

வாயுவேயுணவதாகமனதுடன்பதினொன்றாகிய்
பாயுமிந்திரியமெல்லாமடக்கிவெம்பழுவந்தன்னிற்
றேயுவினுப்பணாகித்திசைமுகன்றன்னையுள்கி
நேயமாயனேககாலநிறைந்திடத்தவஞ்செய்தானால். (கக)

தாலமேலனேககாலந்தவஞ்செயுமிரணியன்றன்
றோலுடன்றசைகளெல்லாமழிந்துசெஞ்சோரியற்று
ஞாலமேலத்தியெய்தவதனினற்சீவனோங்கக்
கோலமாரயனைத்தானுட்கொண்டுமாதவஞ்செய்தானால். (கஉ)

திதிசுதன்குரம்பையோவியத்தியிற்சீவனெய்தச்
சதுமுகன்றன்னையுன்னித்தவஞ்செயுநாளிற்றேவர்
பதியிரணியன்றன்வைகும்பழுவத்தினெய்திச்செய்த
வதன்மமார்பாவத்தாலேயிவனுடலழிந்ததென்றார். (கங)

துன்னியபவத்தினாலேதுலங்குமெய்யழிந்துவீழ்ந்திங்
கொன்னலன்மடிந்தானென்றங்கும்பர்கோன்களிப்புக்கொண்டு
பொன்னின்வண்ணத்தான்வைகும்புரியிடைவிரைவினெய்த
மின்னெயிற்றவுணரெல்லாமிடைந்துவந்தெதிர்த்தாரன்றே. (கச)

சம்பரனமுசியேதிசகுனிசாந்தாயனுக்க
னும்பர்கணடுங்குங்காலகேயர்களுடன்வந்தார்த்துக்
கம்பினமுழக்கிக்கும்பிகந்துகமிருகமெல்லாம்
பம்பவைவேல்வாள்விட்டுப்பகழிகள்பொழிந்தாரன்றே. (கரு)

அவுணர்கண்முனிவினோடுமாயுதம்பலவும்விட்டுச்
சிவனெனமுனிந்துதாக்கத்தேவர்கடிரண்டுகூடிக்
கவனமாக்கரிகளெண்ணில்ககமிருகங்கள்மீதி
னிவர்சிலைவாளிதூவிநிறைந்தெங்குமெதிர்ந்தங்கார்த்தார். (கசு)

எரிசினத்துடனுந்தீயவவுணர்களெழுவும்வாளுஞ்
சரியில்வெம்படையும்விட்டுச்சாயகஞ்சொரிதலோடுஞ்
சுரர்கண்மெய்துளைக்கப்பீதிதொடர்ந்திடவோடலோடுங்
கரியினைவலாரியுந்திக்கடுங்கணைசொரிந்தானன்றே. (கஎ)

இந்திரன்முனிவால்வெய்யகணைசொரிந்தெய்தலோடு
மந்தகன்றுவட்டாக்காமனலரிவெவ்விடையையூர்வோன்
சந்திரன்முதலாயுள்ளோர்தழலெழவிழித்துத்தாக்கிக்
கந்தரம்பொழிவபோலக்கடுஞ்சரஞ்சொரிந்தேயார்த்தார். (கஅ)

சுரர்பதிதமர்களோடுஞ்சூடுகணைசொரிந்தங்கார்ப்பக்
கரிபரிரதம்வெய்யகைமிருகங்களெல்லாம்
விரைவினின்மடிந்துவீழவினையுறுமசுரர்கைகா
லுரனரையறலுமோடித்திசைதொறுமொளித்தாரன்றே. (கக)

உரனெலாமழிந்துதீயவசுரர்களோடலோடுஞ்
சுரரொழுந்தார்ப்பத்தெய்வதுந்துமிமுழங்கநேரி
லிரணியன்மனைவிதன்னையிந்திரன்பற்றியேகச்
சுரர்முனிதடுத்திந்நாரிதனைவிட்டேகென்றுசொன்னான். (உ0)

சுரர்முனியுரைப்பக்கேட்டுத்தம்பிவென்னுறுவோன்சொல்வா
னெரிசிறிதென்றுநூறுதிருந்திடிற்காட்டமெய்த
விரைவினின்றுலகமெல்லாம்வீக்குவபோலிந்நாரி
தரிகருச்சிறுவனாகிற்கருமமன்றென்றுசாற்றும். (உக)

இவள்வயிற்றுதையமாகுங்குமரனையிமைப்பிற்செற்று
நவையறவிடுத்துமிந்தநாரியையென்றுகூற
உவமையின்முனிவனேரிலும்பர்தம்மிறையைநோக்கிப்
பவமறுபுதல்வனாகப்பயக்குமிவ்வனிதையென்றான். (உஉ)

இரணியன்மனைவியானவிவள்வயிற்றுதிக்குஞ்செம்மல்
கருணையங்கடலாய்த்தூயகருடவாகனனுஞ்சோதி
தருணமார்பதங்கள்போற்றும்பரமபாகவதன்றானு
மரணமக்காகியேநம்மிடராறுத்தருள்வனென்றான். (உங)

நாரதனிவைகள்கூறநலமிலாவிரணியன்றன்
பாரியைவிடுத்துத்தேவர்பதியும்வான்பதியிற்சேரச்
சீருறுமுனிவனந்தவனிதைதன்செவியினேரி
னாரணனீறிலாதபரனெனன்றுநவிலலுற்றான். (உச)

மலரயனுடனுமண்டமெண்ணிலவகுத்துக்காத்தங்
கிலயெனத்துடைத்துநின்றேயாவர்க்குங்காண்கிலானு
யலகிலாவிளையாட்டாடியன்பருக்கெளியனாகி
யிலகியாண்டவர்முன்னிற்குமிறையரியறிதியென்றான். (உரு)

இறையரியென்றுகூறுமியாழ்முனிநீதானல்குஞ்
சிறுவனப்பரமன்றன்னைமறக்கிலானென்றுசெப்பி
நறுமலர்க்குழலியுன்றன்கணவனுஞ்சிறிதுநாளி
னுறுவனென்றுரைத்தங்கேகநாரிதன்பதியிலுற்றாள். (உசு)

சுரர்முனிவிடுவித்தேகத்திதிசுதன்மனைவிதூய்தாம்
புரிதனில்வைகுநாளிற்புவியினினுடனீரான
விரணியனத்திதன்னிற்சீவனுற்றெண்கணேனைப்
பரிவுடனினைந்துரையப்பங்கயத்தவத்தோன்வந்தான். (உஎ)

அன்னவென்னுறுவோனெய்தியத்தியிற்சிவன்வைகத்
தன்னையங்குனிப்பல்லாண்டுதவஞ்செயுமவனைநோக்கி
யுன்னுடலெழில்சேர்ந்தொப்பிலோங்கல்போல்வளர்தியென்று
சொன்னநான்முகன்றன்முன்னரிரணியன்றுயங்கிநின்றான். (௨௮)

தசையுறுதோலுங்கூடித்தமனியவரையினோங்கி
யசுரர்கோனெழுந்துதூயவயன்றனைவணங்கியேத்த
வசையிலாவயனீகேட்டவரமெலாந்தருவனென்றே
யுசனனல்லாசானைகவுயரவுணனுக்குச்சொன்னான். (௨௯)

மரைமலர்த்தவத்தோனிவ்வாறுரைத்திடத்திதிதன்மைந்தன்
சுரரிறையியக்கர்தேவர்நிருதர்களசுரர்தூய
வரியரன்றிக்கிலுள்ளோரயனெனுநீபூலோக
நரரினுநாரியாலுஞ்சாவிலாவரநல்கென்றான். (௩௦)

பின்னருங்கூறுவானீள்பிருதிவியப்புவாயு
வன்னியாகாயந்தன்னின்மடிகிலாதிரவியோடுந்
துன்னவக்கிரகத்தாலுந்தூயமாதவர்கணெஞ்சி
லுன்னியசாபத்தாலுமுயிர்விடாதருடியென்றான். (௩௧)

நிகரிலாநேமிசூலங்குலிசம்வேனீண்டபாண
மிகல்புரிவாளினோடுமெண்வருமாயுதத்தாற்
பகலிடையிரவினுள்ளிற்புறத்தினிற்பணியின்மற்றுங்
ககமிருகத்தினாலுங்கடிகிலாவரநல்கென்றான். (௩௨)

இரணியனிவைகளெல்லாமியம்பிடமுறுவலெய்தித்
தருணமார்கமலத்தோனுந்தந்தனனென்றுபின்னு
முரணுறுபடைகளெல்லாமருளித்தன்னுலகின்முந்த
வருணையமிலாததியோன்றமருடனடைந்தானன்றே. (௩௩)

சம்பரன்முதலினோர்கள்சலதிபோன்மிடைந்துசூழ
வம்பரத்திரதமீதினமர்ந்துபொன்னுலகத்தெய்தி
யும்பரோடதிதிமைந்தன்சசியொடுமொளித்துப்பாறக்
கம்பினைமுழக்கிவெய்யகணைசொரிந்தார்த்தானன்றே. (௩௪)

இந்திரனனலோன்காலனிருதிநீரிறைவன்வாயு
முந்தியகுபேரனீசன்முறிந்திடவடர்ந்தேயெட்டுத்
தந்திகள்பீதியோடுமிரிந்திடக்கரத்தாற்சாடி
இந்திராகொழுனன்வைகும்பயோததியெய்திச்சொல்வான். (௩௫)

எம்பியைக்கொன்றகள்வாவெதிர்த்தியென்றறவேயார்த்துச்
செம்பொன்மால்வரையுநாணத்திரண்டதோர்கதைகைக்கொண்டு
வெம்பியேபயோததிக்கண்மிடைந்தெங்குங்கலக்கித்தேட
வம்பரனனந்தனோடுமவன்முன்றன்றோன்றனான். (௩௬)

மந்தரவனாயுநாணுங்கதையினன்மறுவிலாப்பாற்
சிந்துவைக்கலக்கியெங்குந்திருவினாயகனைக்காணு
னிந்தனையுறத்தானேமிநேர்கிலாதொளித்தானென்று
புந்தியின்மகிழ்ச்சியாற்றன்றோளிடைப்புடைத்தேயார்த்தான். (௩௭)

செருவிடையெதிர்ந்திடாமற்சிறந்துநீதுயிலமேவு
மரவொடுமொளிந்தகள்வாவுன்னையானண்டமுற்றும்
விரைவினிற்றேடிக்கொல்வன்குருதியால்விடைநேரொம்பிக்
குரியதாங்கிரிகையெல்லாமுதவுவனென்றங்கார்த்தான். (௩௮)

அரியினைக்காண்பானாகியமரர்கள்பதியெண்டிக்குஞ்
சரியில்பொற்கிரியோடெண்ணில்பிறங்கல்கடனினுந்தேடி
விரைவினிலரன்றன்வைகும்விலங்கலைநேடிவாசப்
புரைமலருறைவோன்வைகும்புரியினையடைந்தானன்றே. (௩௯)

விரைபுரைமலரோன்வைகும்பதியிடைமேவிக்காணான்
சரியில்காருணிகவைகுந்தத்திலுங்காண்கிலானு
லிரணியனண்டமுற்றுந்திரிந்தரியில்லையென்று
சுரரொடுமுலகமுட்கத்தோள்புடைத்தார்த்தானன்றே. (௪௦)

அரிதனக்கஞ்சிவானண்டத்திலாதகன்றனென்று
விரைவினிற்பதியின்மேவிவிடநிகரவுணர்சூழ
விரவியாயுலகமெங்குமிலங்கிநற்சோமனாகிச்
சரியிலாவிமானமீதிற்றயங்கியேதிரிந்தானன்றே. (௪௧)

அரவதாயவனிதன்னைப்பரித்துமப்பாரையாண்டு
சுரரிறையாகித்தேவர்துதிக்கவப்பதியின்வைகிக்
கரியதாய்க்கரியையேந்துங்கடலரசாகிவானு
யெரியதாய்வாயுவாகிவியமனுமாகுவானால். (௪௨)

கொண்டலாய்ப்பொழியுமோங்குகுபேரனாயிலங்குநேரி
லெண்டவரியற்றும்வேள்வியவியெலாமினிதினுண்ணு
முண்டகன்பதியினெய்திமூவுலகுக்கும்விஞ்சு
மண்டர்நாயகன்றானென்றங்கவன்றுதித்திடவேவைகும். (௪௩)

பாரினோடுலகமெல்லாம்படைத்தளித்தழிப்போனாகி
மேருவினுச்சிதன்னின்வீற்றிருந்துயர்காலாலே
வாரியையுழக்குமண்டமுகடுறநிற்கும்வண்மை
யாரவேயிருக்கிற்சேடனயர்ந்துடனடுங்குமம்மா. (௪௪)

பிரணவத்துடனேயட்டாக்கரமெனும்பெருமையோங்கு
மரிபெயருடனுநக்கனஞ்செழுத்தினையுமாற்றி
யிரணியநமவென்றேத்தியிருடிகண்மறையோர்யாரும்
பொருணலமுறும்வேதங்கள்புகன்றிடுவார்கண்மாதோ. (௪௫)

வாயுவைநுகர்ந்தேயோங்கும்வரையிடைத்தழல்கள்சூழப்
பாயவேயோகஞ்செய்யும்பழுதிலாமுனிவரோனுந்
தூயவெட்டெழுத்தும்பஞ்சாக்கரத்தையுந்துரந்துசோதி
யாயவனிவன்றானென்றாண்டிரணியநமவென்பாரால். (சசு)

மூவுலகுக்குந்தானேமுதல்வனாயவுணர்க்கெல்லாங்
காவலனாகிவாழுங்கடியனாமிரணியன்றன்
றேவிதன்வயிற்றிலோங்குகருப்பம்பல்காலஞ்சென்றே
யோவியத்தெழுதவொண்ணாவுருவுடைமகனைத்தந்தாள். (சஎ)

அறன்மறைநீதியோங்கவமரரோடெவர்க்குமேலா
மிறையவன்றனக்குநல்லசகுனங்களெழுந்துதோன்ற
மறமுறுமசுரர்க்கெல்லாம்வாமங்கடுடிப்பவேதான்
பொறையுறுமவனியோற்றப்புதல்வனுமுதையமானான். (சஅ)

குமரன்வந்துதித்தானென்றாண்டிரணியன்றனக்குக்கூற
வமரர்கடுதிப்பநீராடித்தன்கோயிலெய்திச்
சமர்செயுந்தடக்கைதன்னாற்றனையனையெடுத்துப்புல்லிக்
கமையிலாமனாப்பிலாதகலனெலாமணிந்தானன்றே. (சகூ)

சரிவளைதிமிலைபேரிமத்தளியிடக்கைதக்கை
முரசுகாகளங்கள்சின்னமுருமினுமுழங்கியார்ப்பத்
தெரிவையர்வீதிதோறுஞ்சிறந்தசோபனங்கள்பாட
விரைகமழிளநீர்செய்பால்வீசினார்புரியினெங்கும். (ரு0)

இரணியன்றனக்குத்தூயகுமரன்வந்துதித்தானென்று
தரணியிலவுணர்வீரர்நிருதருந்தாமுமாட
வருணலமிலாதார்மாளவரியன்பனடைந்தானென்று
கருணையால்விபுதரெல்லாங்களித்தெங்குநடித்தாரம்மா. (ருக)

மூவுலகுக்குஞானமுதிர்ந்திடக்கலைகணில்லாத்
தேவர்கண்மலினமெல்லாந்தீரநான்மறைகளோது
நாவலர்மகிழநாராயணவெனுநாமமோங்கப்
பாவமற்றிட்டதானேந்துபருவமாய்வளர்ந்தான்பாலன். (ரு௨)

பெருமையாற்பிரகலாதனாகியபேருமாகிப்
பரமபாகவதனாவான்பருவமைந்தாகித்தோன்றக்
கருமைசேர்மநத்தனானவிரணியன்களித்துநோக்கி
யருமறைசிறுவனோதுங்காலம்வந்தடைந்ததென்றான். (ருங)

எண்டவர்க்கதிபனாகியயங்கியவுசனன்மைந்தர்
சண்டனோடியருமற்கன்றமையழைத்தென்றன்செம்மன்
முண்டகன்மகிழவேதமொழியவோதுவியுமென்றே
கண்டகனுரைப்பக்கேட்டுக்களித்தவர்தலைமேற்கொண்டார். (ருச)

வேறு. இறைவனாகியாண்டிலங்கியவிரணியன்பயந்த
சிறுவனோடுயர்சண்டனுமற்கனுஞ்சென்று
மறையையோதிடுமிடத்தினின்மன்னியேயமர்ந்து
நிறையும்வேதத்தைநிகழ்த்திடமுயற்சிசெய்தனரால். (ருரு)

தூயதாகியமுகூர்த்தத்திற்சுருதியையறைய
நேயமோடுயரிரணியாயநமவெனநிகழ்த்தென்
றுயுமாமறையசுரராசான்மைந்தரறையத்
தீயகோலெனச்சிறுவன்றன்செவியிடைமடுத்த. (ருசு)

அந்தணாதியரிரணியாயநமவெனவறைதி
மைந்தனேயெனுஞ்சொல்விடமாமெனமடுப்பச்
சிந்தைவெந்திருகரத்தினாற்செவியைப்பொத்தினனா
லந்தியாற்குவிநளினம்போலானனங்கருக. (ருஎ)

அரிதிருப்பெயராகியஅட்டவக்கரத்தைப்
பிரணவம்முதலாகவன்புளமுறப்பேசிக்
கரதலங்குவித்திருகணீர்கலுழவொண்சிறுவன்
சரீரரோமங்கள்புளகிப்பத்தான்மகிழ்ந்திருந்தான். (ருஅ)

சிறுவனெட்டெழுத்தினையுறச்செப்பிடலோடு
மறுவில்சண்டனுமற்கனுமுயிரறமலைந்தீண்
டிறுதிகாலம்வந்தடுத்ததாமின்றெமக்கென்னா
வறிஞனாகியபுதல்வனோடிதையறைந்தனரால். (ருகூ)

மைந்தநீயுரைமாயவனண்டம்விட்டேக
விந்திரன்கமலாசனனிமையவர்பிறரும்
வந்துநித்தலும்வருந்தியிங்கேவல்செய்திடுவ
ருந்தையேயண்டங்காக்கின்றவொருவனாயுயர்ந்தான். (சு0)

ஆதலாலிறையரியலனுந்தையாமவன்பே
ரோதுவாயெனச்சண்டனுமற்கனுமுரைப்ப
நீதிமல்கிடவளர்ந்திடுஞ்சிறுவனேமியன்றன்
பாதமேசரணென்பதுசுருதியாற்பகர்வான். (சுக)

இரவியேகிடவெழுந்தமின்மினியையென்றுவுக்குச்
சரியெனாமொழியறிவிலர்போற்சதுர்வேத
முறைசெயாதியைவிடுத்துத்தண்டுலமிகழ்ந்துமியைப்
பருகுவாரெனவிரணியாயநமவெனப்பகர்வீர். (சுஉ)

சுதையிகழ்ந்துவர்சுவையினைப்பருகுவார்போன்றும்
பதியையோவியேபரவையிச்சித்தவள்போன்று
மதிகவீடருளரிபெயரதிந்துயாதழிதுன்
மதியினாலிரணியாயநமவெனுமுறைவகுப்பீர். (சுங)

பழுவமெய்தியும்பருப்பதமெய்தியும்வெய்ய
தழல்வளைந்திடத்தவஞ்செயும்யோகியரெனினு
மழிவிலாதுயரரிபெயர்நினைக்கிலராயிற்
கொழுவுகோலுருக்கொடியெனச்சுவர்க்கமுற்றிழிவார். (சுச)

மறுவிலாதுயர்மாதவன்பெயரையாருரைத
விறுதிகாலமின்றுமக்குவந்ததுவெனவிளம்பு
மறிவிலீரஃதுறுமுமக்கரிபரனென்னு
முறுதியெண்ணிலாதிரணியநமவெனுமுறையால். (சுரு)

அன்னைதன்வயிற்றமருநாளரிபரனெனயான்
முன்னநான்மறைப்பொருளுணர்ந்தேன்மருண்முடுகி
மன்னுஞானமின்மதியிலீரென்னையிவ்விடத்தி
லென்னவோதுவிப்பீருமைக்கேட்பதேதென்றான். (சுசு)

பெருகுநீரெனப்பிரபைசெய்கானலைவிரும்பு
மிருகமாமெனவறிவிலீரும்முடன்மேவ
வருகனல்லனியானெனவுரைத்தவர்களையிகழ்ந்து
முருகுமல்கியதுளவணிமுகுந்தனைத்துதித்தான். (சுஎ)

அரிதிருப்பெயரறைகுவான்றன்னருகிருந்தே
மருவியோதிடுமதலையர்தங்களைநோக்கி
யிருளகற்றிடுங்குருவெனவிருந்திவணும்மை
நரகினுய்த்திடுவாருளாநம்பன்மினென்றான். (சுஅ)

நிரையமெய்திடநேரிடுங்குருவினைநோக்கி
மருளொழிந்துயர்பத்தியின்வைகியான்சொல்லு
முரையைநம்புதிருமக்கியான்சுரர்முனிமொழியும்
சரியின்மாமறைப்பொருள்பகர்வேனெனச்சாற்றும். (சுகூ)

தந்தையாகியவிரணியன்றவஞ்செயுநாளி
னிந்திரன்னெனைப்பயந்தவடன்னைக்கொண்டேக
முந்துநாரதமுனியென்றனன்னையைவிடுவித்
தந்தமாதவன்பகர்ந்தனன்கேண்மினென்றறைவான். (எ0)

அண்டரண்டங்களெண்ணிலதன்னிடையமர
முண்டகம்மெனுமுந்தியிலயனுமூவுலகு
மண்டியேயெழுந்திடவளித்ததுதனைவாயா
லுண்டுமிழ்ந்திடந்தளர்ந்தவனொப்பிலாவொருவன். (எக)

ஏகமாகியபிரணவத்துள்ளிருப்பவனுஞ்
சாகரம்மெனத்தழைத்திடும்வேதசாத்திரத்தி
லோகையாருபநிடத்தினிலுயர்ந்தொளிர்பவனு
நாகமேலமர்ந்தேயருணாரணமூர்த்தி. (எஉ)

உவரியாகியபிறப்பினையொழித்திடுபவனும்
பவர்கள்மாண்டிடப்பலவுருவாயெழுபவனுந்
தவர்களுக்குயர்தன்பதமளித்திடுபவனு
முவணமீதமர்வோனுயர்வைகுண்டத்தொருவன். (எஙு)

ஆதியேயரியவனலாலிறையிலையெனவான்
டீதெலாமுனியென்னையீன்றிடுமனைக்கிதமா
யோதினனவனுதரத்திற்கருவினுள்ளிருந்தே
யாதரத்தொடுமோர்ந்தனன்யானெனவறைவான். (எச)

மருணிறைந்திடுமுசனன்றன்மைந்தர்வாய்மையிரு
லிரணியநமவென்றிடும்பவங்கழித்திடநற்
கருணையங்கடலாகியபரனையுங்கருத்தி
னரணதாகிநீரடைந்துய்மினென்றிவையறைந்தான். (எரு)

அறிஞனிம்மொழிபகர்ந்திடவருவினையகலுஞ்
சிறுவர்சற்குருவிவனெனவிரணியன்செம்ம
லறையுமாயவனட்டவக்கரத்தினைக்கருத்தி
னிறையவோதித்தாம்கிகரிலாக்கதிபெறப்போனார். (எசு)

சிறுவர்சுக்கிரன்புதல்வர்சொலிகழ்ந்துசீதரனு
மிறையைநெஞ்சமைத்தேகலுமிரணியன்மதலை
நெறியிலாச்சண்டமற்கரிநீரரிபெயரை
யறையுமிவ்வினையறவெனவவரஞ்சியகன்றார். (எஎ)

அரியெனும்பெயரசுரர்கோன்சுதனறைந்திடலும்
வெருவுநெஞ்சினர்மெய்குலைந்தோடியேவிரைவின்
வரையெனத்திகழ்மடங்கலாசனத்தின்வீற்றிருந்த
விரணியன்றனைவணங்கிநின்றிவையுரைத்தனரால். (எஅ)

மறையையோதவுன்மைந்தனுக்கியான்சொலும்பொருளை
யறைகிலானவனநீதியாம்பொருளினைமொழிந்தே
யிறைவவெம்மருங்கிருந்துவேதத்தினையியம்புஞ்
சிறுவர்நீங்கவெவ்வுரையினைச்செப்பினனென்றார். (எகூ)

உசனன்மைந்தர்களுரைத்திடுமொழியினைக்கேட்ட
வசுரர்கோனென்றன்சிறுவனிருரைத்தசொல்லகற்றி
விசனநீருறப்புன்மையாய்விளம்பிடும்பெயரை
யிசைகொணுவினீரியம்பிடுவீரெனவிசைத்தான். (அ0)

சீலமில்லவனுரைத்திடுமென்றவண்செப்பக்
கோலவந்தணர்குலைந்திருசெவிகளைப்பொத்தி
யாலமன்னசொல்யாமுனக்கறைந்திடற்கடிதின்
ஞாலுவெந்திடுநிரயத்திற்சார்குவமென்றார். (அக)

உசனன்மைந்தர்களுரைக்கிலருளநடுங்கிடலு
மசுரர்மன்னவனருகுநின்றார்களைநோக்கி
வசையிலாதவென்மதலையைக்கொணருதியெனலுங்
கசங்கர்த்தவர்மறையையோதிடங்கடிதுற்றார். (௮௨)

அந்தணாளர்கள்சிறுவர்கள்கூடியாரணத்தின்
சந்தையோதிடஞ்சார்ந்தவர்பிரகலாதனைத்தா
னுந்தையுன்றனைக்கொணர்தியென்றுரைத்தனனெனலுந்
தந்தைபாதத்திற்சற்குணன்சேர்ந்தடிதாழ்ந்தான். (௮௩)

வந்துகைதொழுமதலையையிரணியன்மார்பிற்
சந்துடன்கலனழுந்துறத்தழுவிமாடிருத்தி
யந்தணாளர்கண்முனியநீயறைந்திடும்பெயரை
மைந்தனேயெனக்குரையெனமொழிந்தனன்மகிழ்வான். (௮௪)

தாதையிவ்வுரைபகர்ந்திடத்தனயன்கைகூப்பி
வேதமோதுதன்முன்னரின்விளம்பிடும்பெயரை
யோதினேனெனவவுணர்கோனுவப்பொடுமதனை
யீதெனாவெனக்கியம்புதிதெரியநீயென்றான். (௮௫)

கண்டகன்னிவைகழறிடக்கடிதினிற்சிறுவ
னண்டமுற்றவுமமர்ந்தவனுயிரம்பெயரி
னெண்டவத்தினரளியுடனியம்புமெட்டெழுத்தை
முண்டகன்றுதிசெய்திடமொழிந்தனனன்றே. (௮௬)

கரங்குவித்திருகண்ணினீர்படிமிசையுறநற்
சிரங்கைகால்விழிபெயர்களாயிரமுடைச்செல்வன்
குரங்கலோசனியாகியதிருமகள்கொழுந
னுரங்கொணாமமீதுணருதிநீயெனவுரைத்தான். (௮௭)

வேதமீனமிர்தாவதும்வேள்வியின்பொருளும்
போதன்முக்கணன்புகல்வதும்யோகிகள்பொருந்த
வோதுநாமமுமும்பரினிம்பரினுயிர்செய்
யேதம்வேரறவெழுவதுமிணையிலெட்டெழுத்தே. (௮௮)

சனனமாகியசலதியைநீந்திடநாவா
யெனவெழுந்தகலிம்பரினும்பரினெவரும்
வினைகடிந்துநற்பதத்தினைமேவவேயருளு
மனகனாமமிவ்வெட்டெழுத்தேயெனவறைந்தான். (௮௯)

உட்டெளிந்துவஞ்சகமறவொப்பிலாமதலை
யெட்டெழுத்தினையறைந்திடவிரணியன்முனிந்தே
அட்டதிக்குறுங்கரியுடனமரர்கள்வெருவத்
தட்டமீவல்லதாமமேற்றழலுறநகைத்தான். (௯0)

விழியுகாந்தத்தினழலினையுலகெலாம்விரிப்ப
வழலுநெஞ்சினனழகியபுதல்வனைநோக்கிப்
பழயவொன்னலன்பெயரினைப்படியினின்வானி
னிழிவையெய்திடவழிபவர்யாருனக்குரைத்தார். (கக)

அரனயன்முதலிருடிகளமரரிப்பெயரை
யுரைசெயாரவரஞ்சுவரொளித்துனக்கின்று
வெருவலாதிந்தமொழியினைவிளம்பினராரொன்
றெரியுநெஞ்சினன்பின்னருமிவைபகர்ந்தனனால். (கஉ)

வரையினெண்வடகிரிசிகராமென்னவயங்கித்
திரியுமெம்பியைச்சினத்துடனிமைப்பின்முன்னுயரு
மிருணியாய்வதைசெய்தவன்பெயரியம்பிடவோ
பரிவினாலுனைப்பயந்தனன்யானெனப்பகர்வான். (கஙு)

இரையயோததிகலக்கிநானிமையவருலகின்
வரையின்வாரியின்மலரயனுலகினுந்தேட
வெருவிநேர்பொரும்விறலிலாதண்டம்விட்டேகு
முரனிலான்பெயருறுதியென்றுருனக்குரைத்தார். (கச)

மாதவந்தனாலுலகெலாம்வகுத்தளித்தழிக்கு
மாதியாகியேமகத்தவியடங்கலுநுகர்வேன்
சோதியென்றுநீசொல்லரிபெயரினையொழிந்தென்
பாதமர்ச்சனைசெய்குவார்பங்கயன்முதலோர். (கரு)

புண்டரீகனும்புராரியும்புரந்தரன்றானு
மெண்டவத்தரோடருச்சித்துச்செவிப்பவொன்பெயரை
விண்டலத்துளோர்புவியுளோர்விளம்புவதரிதோ
வண்டகோளகைக்கப்புறத்தனைவருமறைவார். (கசு)

வேள்வியின்னவிவிலக்கியங்கவன்றனெட்டெழுத்து
மேழிரண்டெனும்பொழிலினிலையெனவடர்ந்தே
னேழைநீசொலுமிறையவனெவ்வலிகொண்டு
வாழுவானெனமற்றவன்பெயரினையறைந்தாய். (கஎ)

உலகநாயகனாகியேயொளிருமென்பெயரை
மலரயன்முதன்முனிவர்களிசழ்ந்திடின்மடிவர்
நலனிலாதவவ்வுரையினைநவின்றுநீபிழைத்தாய்
சலமிலாதியான்பொறுத்திடத்தனையனாகையினால். (கஅ)

மழலைநீங்கலாமதலைநீயாதலினிந்தப்
பிழைபொறுத்தனனினியொன்றும்பேசிலைமறையோர்
விழைவினாலுறைமறையினைவிளம்புபோதுதியென்
றிழையினாலொளிரிரணியனியம்பினனன்றே. (ககூ)

தந்தையம்மொழிபுகன்றிடச்சரியிலாப்புதல்வ
னந்தகாந்தகனஞ்சுமவ்வவுணனையிறைஞ்சிக்
கந்தநாண்மலர்க்கடவுளுங்காண்கிலாதுயரும்
விந்தைநாயகன்செயலினைக்கேளெனவிளம்பும். (க௦௦)

கரந்தைசூடியுங்காலனும்வெருவுமுன்றனக்கு
வரந்தருந்தவன்ருனுமாய்வானுயரண்டம்
பரந்துமேவியவுயிர்தொறுநிறைந்தொளிர்பரமன்
கரந்தனன்னுனக்கென்றனையவன்செயல்காணுய். (க௦க)

வேதநான்கினும்விளங்கியசாங்கியந்தனினும்
போதநீறணிபுராரிமாதவர்கருத்தினினு
மூதையேயுணவாகுவோருணர்வினுமெட்டா
வாதியோவுனக்கஞ்சியேகரந்தனனையா. (க௦௨)

வாயினூல்கொடேயுலூதையோர்வட்டமாய்வளைந்தாண்
டாயதெல்லவுமருந்திடுந்தன்மைபோலுயரு
மாயனெண்ணிலவண்டமோரிமைப்பினின்வகுத்துக்
காயுமாலதுதன்னுளேகரந்திடவம்மா. (க௦௩)

அண்டநீங்கிமால்கரந்தனனென்றிவணுறைந்தாய்
முண்டகக்கணனிமைப்பினின்முடிவிலாதண்ட
முண்டெனக்கடிதியற்றித்தன்னுரோமத்தினுனியின்
மண்டவேயவைதன்வயின்வாழ்பவன்காண்டி. (க௦௪)

அரிநுகர்ந்திடாதுயர்மகத்தவியெலாமடங்கப்
பருகினேனெனப்பகர்ந்தனையுன்னுடலுயிரின்
மருவிநிற்பவன்மாதவனென்றறிகில்லாய்
விரைவித்தாமலேவிளையுமென்றுணருணர்விலியே. (க௦௫)

வேதமோதுவார்போலவேவிரோதமாம்பொருளை
யோதிநாரணனுலகெலாநிறைந்திடுமொளியைப்
பேதையாயினோரறிகிலார்மருளுறப்பிதற்றி
யேதமாநரகெய்துவரெந்தைநீயுணர்தி (க௦௬)

மறையினுச்சியிற்சித்தெனுந்தத்துவமருளா
தறியும்யோகிகளரியினையறிந்துவீடுறுவர்
பிறிதொன்ருகவாண்டறிவறப்பொய்மையைப்பிதற்றி
யுறுவர்வெந்நிரயந்தனுளெந்தைநீயுணர்தி. (க௦௭)

மாயன்மாயையின்மலரயன்முதலினோர்மயங்கி
நாயகன்னெனத்தம்மைத்தான்மெய்மையாய்நாட்டி
யோய்வுகாலம்வந்துறுபொழுதவன்றனையுள்கி
ஆயிரம்பெயரறைந்துய்வரறிதிநீயெந்தாய். (க௦௮)

சாங்கியத்தினும்யோகமார்பொருளினுந்தானே
யோங்குமாயனையுணர்குவரவரறிந்துய்வர்
பாங்கிலாப்பொருள்பற்றியங்குய்குவார்போன்று
தாங்கிலாதெழுசனனமாஞ்சலதியிற்ருழ்வார். (க0கூ)

முக்குணங்களுமூவுலகுமுமெனமுளைத்துச்
சற்குணங்களாய்த்தழைப்பவர்தமக்குவீடருளுந்
துற்குணங்களாமவர்களைப்பகைஞராய்த்துணிக்குஞ்
சிற்குணத்தரிசெயலினையார்கொலோதெரிப்பார். (கக0)

வேறு. அரியினைநினைந்திடாதருளுந்தானங்கள்
விரைவினிற்செய்பலவேள்விமாதவந்
தரையினிற்பெருகிடுஞ்சலமில்வித்தென
விரைவினிட்பலமாகிவீடுமால். (ககக)

மனதினிலரியினைவைத்துநன்குடன்
றினையளவாகிலுஞ்செய்ததானங்க
ளனலுறுவேள்விகளனந்தமாகியே
தினம்வளர்செய்கையைவேதஞ்செப்புமால். (ககஉ)

இந்திரியங்களினியங்கிவேதமார்
மந்திரங்களின்மிகவயங்கிக்காட்டியே
நந்தலுமநந்தலுநல்குந்தீயர்க்கும்
வந்திடரகற்றுவானவனென்மாதவன். (ககங)

பானுறுதுப்பெனப்பரந்தெவ்வண்டமுஞ்
சீலமார்ஞானங்கள்தெரிந்துளோர்க்கெலாங்
கோலமாரொளியனுய்த்தோன்றிக்கோதுறு
மாலமேகிகர்த்தவர்க்கரியனுருவான். (ககச)

அராவணைத்துயின்றிடுமமலனுகிவெங்
கராவினைவதைத்துயர்கரியைக்காத்தருள்
பராபரவஸ்துவுன்பாதங்கண்டுய்ய
நிராசையுற்றவர்க்கலானினைக்கற்பாலதோ. (ககரு)

சகமிசைச்சீவதாபரசங்கத்தினுக்
ககமதாய்ப்புறமதாயவையினல்லனு
யுகமெனில்காலங்களிமைப்பினுேயக்கஞ்
சுகியுறுவாரியிற்றுயில்கொளும்பரன். (ககசு)

கரந்தவன்போலவேகாணும்வான்புவி
பரந்துளன்போலவேபற்றிற்ருன்றிலா
வரந்தருமுதல்வன்றன்மாயவாரியிற்
பொருந்தினரலதியார்பொழிலைநீந்தினர். (ககஎ)

மாதவவரத்தினல்வலனுற்றேயண்ட
நாதனுயினனெனநவின்றுளாயுலர்
பாதவம்வடவையாற்பரந்தெரிந்தபோ
லாதியையெள்கினுரழிவர்காண்டியால். (ககஅ)

மயர்வறவுயர்ந்திடுமாதவன்றனை
யியல்பலவெள்குநீயென்றுமாய்கிலா
உயிர்நலச்செல்வம்விட்டுலர்தியென்றியான்
செயலுறுமரிபெயர்செப்பினேனென்றான். (கககூ)

வேறு. சிறுவனெதிர்நின்றிவைகள்செப்பிடமுனிந்தே
யிறுதியுகமெய்தவருமீசனெனவாயா
லுறுபுகையெழக்கணுமிலங்கியுலகெல்லா
மறுகவிடியஞ்சிடநெருப்பெழநகைத்தான். (கஉ0)

திக்கயமிரிந்தொளிகொள்தேவர்திரளஞ்ச
நக்கனுடனேயயனடுங்கவுலகெல்லா
முட்கிடவநந்தன்மெய்யுலைந்துடலிரத்தங்
கக்கவசுரன்பிரகலாதனைமுனிந்தே. (கஉக)

என்வயினுதித்தவிவனெம்பியைவதைத்த
வொன்னலனையேத்தினனிவன்றனையுரத்தாற்
கொன்மினெனவெய்யவர்கள்கூடிமெய்கயிற்றாற்
பின்னினர்கள்வெல்கதைபிறங்கயிலெறிந்தார். (கஉஉ)

எய்தனர்கள்வாளிமழையெங்கணுநெருக்கிக்
கொய்திடுமினென்றவர்கள்கூர்மழுவெடுத்தார்
வைதனர்களெண்ணில்படைமாவடவைபோலப்
பெய்தனர்கள்பூமனொடுபிஞ்ஞகனுமஞ்ச. (கஉங)

எறிந்தபடையெய்தகணையெற்றுகதையாவு
முறிந்தனவலாதுகுமரன்மெயினின்மொய்த்தே
யறந்தருமனத்தரியைநெஞ்சிடையமைக்கச்
சொறிந்ததிறனுஞ்செய்கிலதீயர்திரடுன்னி. (கஉச)

மன்னனருகெய்தியெதிரின்மறவரொல்லா
மின்னிலகுமாரன்மெயினெய்தலருமொத்தே
துன்னுபடையாவையுமுறிந்தசெய்திசொல்ல
வன்னியிடையுய்த்துவதைசெய்மினென்றுரைத்தான். (கஉரு)

நிகரில்கனகன்னிவைநிகழ்த்திடலும்வீரர்
ககனமுகடுற்றிடவெழுங்கனல்வளர்த்தே
யிகழ்விலகுமாரனையெடுத்ததினில்விடுப்ப
மிகவுமெய்குலைந்தலறினார்விபுதரெல்லாம். (கஉசா)

தியர்விடுதீயினிலமிழ்ந்துசிறுவன்றன்
மாயவனைநெஞ்சினிடைவைக்கநளிர்சீத
மாயுடலிலங்கவதுகண்டுமறவோர்க
ளேயெனுமுன்மன்னனிடையெய்தியிவைசொன்னார். (கஉஎ)

அன்னவருரைக்கவனலாகுமசுரேசன்
வன்னிதனைவன்சிறையின்வையுமெனவோதி
மின்னெயிலெயிற்றினவன்மேனிகவ்விமாய்க்கப்
பன்னகம்விடுத்திடுமினென்றுரைபகர்ந்தான். (கஉஅ)

வேறு. மனந்தழலுறவந்திரணியனுரைப்பமறவர்கடுன்னியேகுவ
வனந்தன்வாசுகிகார்க்கோடகன்குளிகனடர்மகாபதுமன்வேற்பதுமன்
கனந்தருசங்கபாலன்றெக்கன்முனிவொண்மர்கடிதினினெய்திச்
சனந்தனைநிகர்க்குமதலையைக்கடித்தார்தம்விடவெயிற்றினுற்கவ்வி. (கஉகூ)

நகபதிநடுங்கக்கன்மிசைப்பிறைகணுழைந்தெனக்கடித்திடவிடங்க
ளுகவனுசிதையாயெயிறுகளெல்லாமொடிந்துக்குவிழுந்திடவரியை
நிகரிலாக்குமரனினைந்தெழிலிலகநின்றிடக்கண்டிடுமசுரர்
புகல்வதற்கரியவலனுடைமனனுக்கிவையெலாம்புகன்றனரன்றே. (கங0)

அரவினங்கூடிக்கடித்திடவிடங்களமிர்தமாயெயிறுகளொடிந்து
தரையினில்விழுந்ததகைமையைக்கேட்டுத்தயையிலாவிரணியன்முனிந்தெண்
கரியினந்தனைநீர்விடுத்திடுங்கொம்பாலவனுயிர்களைந்திடுமெனலும்
வரையெனவுயருமறவர்கள்மிடைந்துமாதிரத்தோல்களையழைத்தார். (கஙக)

வஞ்சனையவுணரழைத்திடநடுங்கிமாதிரந்தாங்கிடுங்கரிக
ளஞ்சனங்குமுதம்வாமனமயிராபதங்கரற்றபுண்டரீகம்
விஞ்சியகிரிநேர்புட்பதந்தம்மெய்விளங்கியசுப்பிரதீப
மஞ்சமேவயடருஞ்சார்வபூமமிவையெட்டுமெண்வரையெனவந்த. (கஙஉ)

மும்மதந்தியாய்முடுகிடவரைபோன்முந்தியதந்திகண்முனரின்
செம்மலைக்கயிற்றாற்பிடித்திடுந்தியர்திரண்டுபாரிடையினின்வைப்ப
மெய்ம்மைசால்குமரன்கரிகளைநோக்கியிடங்கரால்மெலியுநங்குலத்தின்
கைமலையழைப்பக்கடிதின்வந்துதவுங்கடவுளென்மனத்தினனென்றான்.

நிகரிலாக்குமரனிவைநிகழ்த்திடலுநெடுவரைபோலவங்கெதிர்ந்த
புகரிபவினங்கள்வெருவிமாதவஞ்செய்புதல்வனைவணங்கியகிடலும்
நகமெனவிளங்குமவுணர்களிவையையிரணியன்றன்னொடுநவில
மிகமுனிந்தெனக்குவென்னிடுமரியைவிரும்பிபங்களைக்கொலுமென்றான்.

சிந்தையிற்கனன்றங்கிரணியனுரைப்பத்திறலுடையசுரர்கள்சென்றே
யந்தகனெனவெண்கரிகளைவதைக்கவடர்தலுமவைமிகவஞ்சி
மைந்தனையணுகித்தடித்தினநிகர்த்துவயங்கிடுமருப்பினுற்குத்தி
முந்தியவலரிவெயிலினுலர்ந்தகிடையெனக்கோடெலாமுறிந்த. (கஙரு)

திசையுறுகரிகளுரனொடுகுத்தித்திரண்டிடுகோடுகள்முறிந்த
வசுரனுக்கவர்களுரைப்பநெஞ்சழன்றேயளப்பிலாதுயர்ந்தகோபுரத்தின்
மிசையினிலவனையுயர்த்திநீர்கீழின்விழுத்திடுமடியவென்றறையச்
சுசியுறுநயனர்மதலையையெடுத்துத்துய்யமாசிகரத்தினுற்றார். (கஙரு)

யோசனையெழுநூறுயர்ந்திடுசிகரத்துச்சியின்குவடிடைவிளம்பி
யாசகல்புதல்வன்றனையெறிந்திடலுமவனிமாதனந்தமாங்கரங்கள்
மாசறுகடையம்வயங்கிடவேந்திவைத்திடவிழுமியமதலை
யீசனெட்டெழுத்தையியம்பியாண்டன்போடிதையமுமுருகிடவிருந்தான்.

வேறு. தரைமினெண்ணில்கரங்கடயங்கத்தான்
பரவிமைந்தனையேந்திடப்பார்த்தவர்
விரைவினெய்திவிளம்பவிரணியன்
சுரர்நடுங்கிடவேயிவைசொல்லினான். (கஙஅ)

வரையின்மைந்தனைவார்கொடுவீக்கிநீ
ரிரையும்வாரியினுய்த்திடுவீரென
வரனுஞ்சிந்தைமயங்கவவுணர்கோ
னுரைசெயக்கடிதுற்றனர்தீயவர். (கஙகூ)

சுந்தரச்செம்மறோள்களைப்பாசத்தால்
மந்தரம்நிகரும்வரையிற்பிணித்
திந்திராதியரோங்கிநடுங்கவாழ்
சிந்துவின்னிடையுய்த்தனர்தீயவர். (கச0)

வரையின்மீதுறமைந்தனவ்வாரிநீர்
சுரருலோகத்திற்றுன்னவிழுந்தவன்
பரனைநெஞ்சிற்பதிக்கமிதந்திடுஞ்
சரியிலோங்கலின்மீதிற்றயங்கினன். (கசக)

வேலையேழுடன்மேவியவெள்ளத்தி
னாலினீளிலைமேலிலமர்ந்திடும்
பாலனென்னப்பரந்தபரவையிற்
சீலமுற்றசிறுவன்வயங்கினான். (கசஉ)

வாரிமீதின்றரையின்வயங்கிய
சீருறுஞ்செம்மல்சிந்தையினேழ்பொழிற்
பாரணாமுகுந்தாபரமாவரி
நாரணாவெனவுன்னிநவிலுவான். (கசங)

கந்தர்தாதையுயர்கமலாசன
னிந்திராதிகளெண்ணிலிருடிகள்
சிந்தைவேதத்திற்செய்யவுந்தோன்றலா
வெந்தைநின்செயல்யானெங்ஙனெண்ணுவேன். (கசச)

விடமுநீசுதைநீயெங்கும்விஞ்சிய
சுடருநீயிருணீபகைநீதுணை
வடிவம்நீவெளிநீமறைநீவரு
மிடருநீயதொழித்திடுமீசனீ. (கசரு)

தந்தைதாயெனத்தந்தவர்நீயவர்
முந்துவெம்பகையாகமுடுக்கிய
வெந்தைநீமறையெண்ணவுமெட்டலாச்
சுந்தராவுனையானெங்ஙன்சொல்லுவேன். (கசசு)

வெறிகொண்மாமலர்வேதன்முதலினோ
ரிறைவனுமெனவெண்ணமயக்கியே
யுறுகலாதங்கொளித்துருவாகுவாய்
சிறியனானுன்செயலெங்ஙன்செப்புவேன். (கசஎ)

படியும்வானும்பரந்துநிறைந்தநின்
வடிவையேதறிந்தேத்துவன்மாயநின்
னடியர்தங்களடியரடியினிற்
பொடியதாகுந்தவமிலிப்புன்மையேன். (கசஅ)

அழல்கள்சூழவளப்பிலுகந்தனி
லுழலுமாதவருன்னவுமெட்டலா
வெழிலிவண்ணவிடர்கெடவாவென்றே
மழலைநீங்கிலாவாய்கொடங்கேத்தினன். (கசகூ)

வேலையின்மிதக்கும்வரைமீதினின்
சீலமார்சிறுவன்வயங்கக்கண்டே
யாலமன்னவரோடியவுணர்கோன்
பாலடைந்திச்செயலைப்பகர்ந்தனர். (கரு0)

கேட்டவேந்தன்கிளர்ந்திடுவெந்தழல்
நாட்டமெய்தநகைத்துநஞ்சேனையி
னீட்டத்தாலிமைப்பின்னவனின்னுயிர்
வீட்டுவிப்பனென்முன்விடுமென்றனன். (கருக)

மறலியஞ்சவசுரர்மன்கூறலு
முறைமைசெய்கிலாமூர்க்கர்களெய்திநற்
சிறுவனைப்பற்றிச்சென்றுதயித்திய
ரிறையவன்முன்னரெய்தியிருத்தினர். (கருஉ)

சிறுவனைக்கண்டுசீறியிரணியன்
முறைமையில்சம்பரன்முதலோர்களை
யெறுழ்வலிக்கரத்தாற்படையேவிநோய்
நிறையமாயத்திற்கொல்லுமினீரொன்றுன் (கரு௩)

தீயனவ்வுணாசெப்பத்தயித்தியர்
காயும்வெங்கதைநீள்கணையெண்ணில
வேயுறும்வனாவீசிநிறைந்திடு
மாயையெங்கும்வகுத்தடர்த்தாரரோ. (கருச)

ஆலமென்னவசுரர்செய்மாயையாற்
காலநேமிருதித்திரள்காளிகள்
சூலியஞ்சிடத்தோன்றியுகாந்தத்தீ
காலவும்பர்கலங்கியிருந்தனர். (கருரு)

அரவினங்கள்கறுத்தவலகைகள்
வரைகள்வாயுவடவைக்கடுவிடஞ்
சுரர்களஞ்சவிவற்ருெடுந்தோன்றவான்
பரவினார்பங்கயத்தன்றிகைக்கவே. (கருசு)

மந்தரம்மெனமாக்கதையெண்ணில
வுந்திரத்திவ்வியாத்திரமோட்டியே
முந்துமாயங்களெண்ணிலமொய்த்திட
வந்தகனஞ்சவார்த்தடர்த்தாரரோ. (கருஎ)

சினந்தழீஇயசுரேசர்செய்மாயையி
னினந்தழீஇயும்பரோங்கவடர்க்கலு
மனந்தசாயியையன்புடன்செம்மறன்
மனந்தழீஇக்கொளவெல்லவுமாய்ந்ததே. (கருஅ)

கடியர்விட்டகடும்படைமாயையும்
நொடியின்முன்னரினிற்றநுறுங்கவக்
கொடியஞனவிரணியன்கூறெனு
விடமருந்துவித்தான்சுதன்வீடவே. (கருகூ)

கடியனிட்டகடுவிடம்யாவையுஞ்
சுடர்கொள்மாதவனைத்துதிசெய்துய
ரடியனுக்கமுதாகிவயங்கவக்
கொடியனெஞ்சுகொதித்தெழுந்தானரோ. (கசுக)

கோபம்விஞ்சசுரன்மகனைக்கொல்ல
வாபிசாரமிழைக்கவடர்த்திடும்
பாபமென்னக்கிருத்திபகட்டிறை
மாபயங்கொளவந்துருத்தாளரோ. (கசு0)

இறுதிகாலத்தெழுந்திடுமீசனும்
நிறைபயங்கொளநேத்திரத்தியினல்
மறுகவாரிவடவனல்வெந்துகக்
கறையுயிர்க்குலங்கக்கவெழுந்தனள். (கசுஉ)

அழலுநெஞ்சினளானனமூன்றினள்
சுழலுநாட்டமுமூன்றெட்டுத்தோளினாள்
மழலைநீங்கிலாமைந்தனைச்செற்றிட
வெழிலிவானினெறிந்திடவெய்தினாள். (கசுங)

கடியகாலையுயிர்ப்புத்தரக்கண்டு
வடவைதேயவளர்ந்திடவாரியைக்
கடையுமத்தின்கயிற்றையணிந்தண்டம்
வெடிபடக்கொக்கரித்தெழுந்தாள்விண்ணின். (கசுச)

சூலம்வேன்மழுதோமரம்பாசமுட்
கோலெழுங்கணையங்குறடீட்டிவாள்
காலனஞ்சுங்கரங்கடொறும்விரித்
தாலமென்னவதிர்த்தடர்ந்தாளரோ. (கசுரு)

கதிர்சுழன்றிடவெண்டிசைக்கட்செவி
யுதிரங்காலவெண்டோல்களுமோடவே
பிதிரமாழைப்பிறங்கலுடுவின
முதிரவார்த்தனள்வாய்புகையுற்றிட. (கசுசு)

அடியிற்பார்பிளந்தேயயமல்கவே
முடியினண்டமுகடுநெரிந்திட
நெடியகைகளினால்வரைநீறுற
விடிகள்சொல்லிலுடைந்திடவெய்தினாள். (கசுஎ)

அண்டகோளங்கிழிந்திடவார்த்தயில்
கொண்டுவாசவன்கூற்றஞ்சவெய்துவாள்
வண்டுழாயனைமைந்தன்றுதித்திட
வெண்டவத்தர்வியப்பவெரிந்தனள். (கசுஅ)

விருத்திராசுரன்மெய்யினைமானவே
யுருத்துருத்திரனஞ்சவங்குற்றிடுங்
கிருத்திநீறுறக்கண்டசுரன்கெடுங்
கருத்தினான்விடம்போற்கனன்றானரோ. (கசுகூ)

வீயும்வண்ணம்விடுத்திடும்யாவையும்
மாயஞ்செய்துவயங்கியமைந்தனைத்
தீயுறப்படிதேய்த்தென்கரத்தினி
லேயெனுமுனிற்கொல்வனென்றெய்தினான். (கஎ0)

சுரர்நடுங்கத்துலங்கியவம்பலிற்
கரியிரிந்திடநற்கமலத்தய
னரனுமஞ்சவடர்ந்திங்கிரணியன்
வரநகைத்துமதலையறைகுவான். (கஎக)

இன்னலில்லெனைக்கொல்லவென்றெந்தையே
யுன்னிறையெனிலுன்னுயிர்தன்னிறு
மன்னியண்டம்வருவித்தமாலடி
யென்னுள்வைகுமுனக்கெளிதாயதோ. (களஉ)

மைந்தன்கூறிடமாயனென்றுண்மையாற்
சிந்தியோடினன்றேவர்மன்னெண்கணு
னந்தகாந்தகனென்னடியர்ச்சிப்ப
ரெந்தமாமுதனீசொல்லிறையென்றான். (களங)

எரிசினத்துடனீதறைதந்தையை
மருளகற்றியமைந்தன்வணங்கியே
கருதவும்மரிதாகுங்கடவுடன்
பெருமைகேளெனப்பேசலுற்றானரோ. (களச)

பிரணவந்தனில்வைகும்பெருமையோ
னரணிதன்னிலமர்ந்திடுமங்கிபோல்
முரணுறுமெணிலண்டங்கள்மொய்த்துளான்
மரணமென்னும்வரம்புகடந்தவன். (களரு)

திலமுமுள்ளிற்சிறந்ததயிலமு
மலரும்வாசமும்பாலும்வைகும்நெய்யு
மிலகுமாண்பெனவெவ்வுலகங்களு
முலவும்பல்லுயிர்தோறுமுறைகுவான். (களசு)

எரியுந்தூமமும்பொன்னுமிழைகளுந்
திரையும்வேலையுஞ்சேர்ந்ததுபோலத்தன்
னுருவினுருமுரோமத்தெணிலண்ட
மருவச்செய்தளித்தேதன்னுள்வாங்குவான். (களஎ)

மூன்றுகாலமுமூன்றுசுடர்களு
மூன்றுலோகமுமூன்றுகரணமு
மூன்றுசெய்கையுமூன்றுகுணங்களு
மூன்றுதோற்றமுமாகியமூர்த்தியோன். (களஅ)

அரிதுமாயெளிதாயிடுமாதியைச்
சுருதிசொல்லிற்றுலங்குமென்னுள்ளம்யோற்
கருதுவாயெனிலெங்கணுங்காணலாந்
திரணங்காட்டமுதற்செறிதேவனை. (களகூ)

நெறியையோவினர்முன்னரிநேர்ந்திடான்
மறனைநீங்கினர்க்கேயெளிதாய்வரு
மறிதிநீயென்றறையவவுணர்கோன்
கறைகொணெஞ்சன்கைகொட்டிநகைத்தனன். (கஅ0)

அண்டமெண்ணிலவன்றனுரோமத்தின்
மண்டுமென்றுமவற்றெறும்வைகுவ
துண்டெனப்பகர்வாய்கிலையோதென
முண்டகத்தயன்போற்றமொழிகுவான். (கஅக)

நொய்யதாகுமணுவினைநூறெனக்
கொய்துகூறிட்டகோணங்கடோறுளன்
வையம்வானம்வடவரைமீதுளன்
மெய்யுட்டோன்றிவிளங்கியமாமுதல் (கஅஉ)

நிகரிலாதவென்னெஞ்சிலுளனிவண்
புகலுஞ்சொல்லினுளன்மணிபூணுள
னிகழ்வினுன்னிதயப்பங்கயமெனு
முகையின்விஞ்சும்பொகுட்டுளமூர்த்தியோன். (கஅங)

ஆதலாலரியெங்கணுமாயுள
னீதிமோதியநீயிவண்காணென
வோதுமைந்தனைநோக்கியுறநகைத்
தேதமாரிதையத்தினியம்புவான். (கஅச)

அழிவிலாதெண்ணிலண்டத்துயிர்தொறு
மொழிவிலாமலுறைபவன்றன்னையிவ்
வெழுவிற்காட்டிலையேலுன்னிரத்தந்தோல்
முழுதுந்தேக்கிமுடிப்பன்குறையென்றான். (கஅரு)

இயல்பறுந்தந்தையிவ்வுரைசாற்றலு
மயர்வினெஞ்சனவன்றனைநோக்கியென்
னுயிருனாற்கொள்வதற்கரிதென்றுமால்
செயலினுனவன்முன்னிவைசெப்புவான். (கஅசு)

எந்தைநீசொல்லிடந்தொறுமெம்பிரான்
வந்திலானெனிலென்னுயிர்மாய்ப்பன்யா
னுய்ந்துளேனெனிலுற்றவனைத்தொழு
மந்தமாலடியானலனென்றனன். (கஅஎ)

இரணியன்சொல்லிடந்தொறுந்தோன்றநற்
கருணையங்கடலாய்க்கடல்வைகுவோன்
றரணிவானிற்றயங்குமுயிர்தொறுந்
திரணங்காட்டந்தொறுஞ்சினையாயினன். (கஅஅ)

வறு. மகனிவைசொலவிழியழலுறவாய்நகைவந்திடவோர்கையினு
லுகவிறுதியினிடிபோலொருதறிமிசையுரனொடுமோதுதலுங்
ககனமோடண்டமும்வெடிபடநீள்கனகனுளநடுங்கிடவே
மொகுமொகுமொகுவெனமானரசிங்கமுழங்கநகைத்ததரோ. (கஅகூ)

நீடியதறியினுளேநரகேசரிநின்றுமுழங்கிடலுஞ்
சேடுறுகுமரனுயர்ந்துவியந்துசிறந்தகல்படியின்மிசை
யாடியெழுந்துவிழுந்துமகிழ்ந்துயராரணநூல்களெலாம்
பாடிவயங்கியவெழிலினைவலமுறவந்துபணிந்தனனால். (கக0)

அரனொடுதிசைமுகன்மாதவர்தேடியுமவர்முனுறுதவரி
வரவருமகிழ்வொடுமதலைபணிந்திடவானவர்தாம்வெருவ
விரணியன்முனிவொடுமெழுவினுள்மிகநகைசெய்திடுமெம்பரனை
வெருவியகன்றிடுநீயிவண்மேவினைவெளியுறவருகெனவே. (ககக)

பரவையினுவணனொடொருநொடியிம்முனர்பாறியகன்றிடுநீ
வெருவலையமர்பொரவருகெனவேயசுரேசன்விளம்பிடலும்
வரையிவருந்தறிபிளவுறவானுயரண்டமுமிண்டிடநீள்
சிரமுறவடிபடிகுழியவளர்ந்திடுசீயமெழுந்ததுவே. (ககஉ)

விண்டிடுதூணினெழுந்தெழிலார்நரமீளிவளர்ந்தசெய
லெண்டவராலுமுணர்ந்தறிதற்கரிதென்றிடில்யாரறிவா
ரண்டமுகட்டின்வயங்கியமர்ந்திடுமாதியிவ்வரியினொளிர்
முண்டகவுந்தியின்வந்ததுபோன்றனன்முடிவறைதற்கெளிதோ. (ககங)

சீருறுதாரகையின்னினமாநரசிங்கமெய்யணியிழைக
ளூருவின்வீழ்ந்திடவேயதினுற்றொளிர்பித்திலமொத்தனவா
லேர்கொளுமுந்தியினலர்நளினத்திடையெய்துபொருட்டெனுமா
மேருவயங்கியதென்னில்வளர்ந்திடுபெருமைவிளம்பெளிதோ. (ககச)

ஆயிரகோடிவெள்ளமெனவேபகரவுணரினிருமடியாந்
தூயமுகங்கடொறும்விழிமூன்றுதுலங்கியுகாந்தமுறும்
தீயினையுமிழவுயிர்ப்பிறுதியினைதேயுசகாவுரனு
மோய்வுறவேயெழவான்மணின்யாவையும்வாய்கைகடொறுமுளதால்.

எண்ணிலகோடிகரங்களிலங்கிடவெயிறுகள்வரையெனவாய்
நண்ணிடவெரியொடுபுகையுறவிடசுருமஞ்சநகைத்தலகின்
புண்ணியமாநரகேசரிபொறையிலவசுரர்கணிருதரலா
விண்ணவரொடுமறன்மேவியவனைவருமுயவருள்செய்தனனால். (ககசா)

கரிபரியிரதமோடெண்ணிலவசுரர்கள்கடலெனநிரைபவரை
அரிபடவிரல்களினுகிரினுறந்திடவண்டமுகட்டளவாய்
விரைவினினுயர்வரைபோலவெழுந்துவிழுந்துமடிந்திடநீ
டரையினிறைகறையோடினவலையுறுசாகரமாமெனவே. (ககஎ)

அகலியவடிவிரனுனிகளினிடறிடவயமுறமிளிரிரதம்
புகரிபவினமொடுபாடலமெண்ணிலபொறையிலவசுரர்திர
ணிகரிலவரையெனுநிருதர்கள்கடுகியவிசையொடுசுழலுமவர்
மிகமுனியரிவிழியெழுமழல்வலைவுறவெந்துகரிந்தனரால். (ககஅ)

வேறு. அசுரரைப்படிமிசையரைத்திடுமழலுறக்குதியாற்
பிசையுமத்திகளுடலினிற்றிகழ்பிதிர்வுறப்பொடியாய்
நிசிசரக்குழுமடியவுக்கிரவுகிருறுத்திடநீ
டசைமலைக்குவையுறநடித்தனதலையிலுறுகுறையே. (ககூகூ)

வடவரைக்குவடிடையடித்திடுமதகரிக்குழுவை
யுடல்படிக்கணிணுறவுனிக்கிளுமுழுரிணிற்பரியைக்
கடையமுற்றிடுகரவிரற்கொடுதுணிசெய்கத்திரிபோ
லடல்மிகுத்திடும்சுரரைச்சிரமறவதைத்திடுமே. (உ00)

வகிர்படுத்துடலறவுரித்திடும்வரையையொத்தவரைக்
ககனமுற்றிடவிடுமுயிர்ப்பினிற்கரிபரித்திரளை
யுகிரிடத்தவனொளிசெயுக்கிரமுறுமறத்திரளை
நிகரின்மற்றெருநகருனிக்கணினிறையவைத்திடுமால். (உ0க)

சிலர்களைப்பெருமலையினுற்றுடல்சிதறமொத்திடுமால்
சிலர்களைக்கடிதுயிரறக்கடறினரயினுய்த்திடுமால்
சிலர்களைக்கொடுவடவையிற்சிரமெரியவைத்திடுமால்
சிலர்களைத்திரிவரையிறக்கடுசினமொடொத்திடுமால். (உ0உ)

நாசியுற்றெழுவாதமெற்றிடநாகமுற்றிடுவார்
வாசியுற்றவர்தேரினுற்றவர்மாருதத்திறலோ
ரோசைபெற்றுயர்வானமுற்றுவிலோசனத்துறுதீ
வீசவக்கணநீறுபட்டனர்வீரமற்றிடவே. (உ0ங)

உகிரினிற்கரிபரியினுற்றவரொருகணத்துருவ
வகிருமெத்தியகுடர்களைக்கொய்துமகிழுமத்தசையை
நுகருயிக்கிடுகுருதியைக்கொடுநொடியினிற்பருகிக்
ககனமுட்கிடமிகநகைத்திடுமனல்கடிக்குறவே. (உ0ச)

அலகைசுற்றிடவிகலனுற்றிடவவுணரத்திபரி
யிலகுநற்கிரிநிகரொயிற்றிடையமரவிட்டுழல
வுலகமெத்தியவுதரவக்கினிதனிலுலர்த்துசரு
கிலையெனக்கடிதெரியவிட்டனவெவையுமிக்கணமே. (உ0ரு)

கரியினைப்படிமிசையடித்தனகவினுடைக்கரமே
பரியினைக்கொடுவடவையிட்டனபலதிருக்கரமே
நிருதரைக்கடறினரயினிட்டனநிகரிலக்கரமே
தெரிமணிசுடர்கலன்மெய்யிட்டனசிலதிருக்கரமே. (உ0சு)

சிலர்களைக்கொடுகடிதுசுற்றியசிலதிருக்கரமே
சிலர்களைத்திசையுறவிடுத்தனசிலதிருக்கரமே
சிலர்களைச்சலதியினமுக்கினசிலதிருக்கரமே
சிலர்களைத்தரையினுளரைத்தனசிலதிருக்கரமே. (உ0எ)

அசுரரத்தனைவருநொடிக்கணினயமொடத்தியெலாம்
நிசிசரக்குழுவுடனுமுற்றிடநெடியநற்கைகளால்
விசைகொடெறறினனவர்களுற்றனைவிழுமியற்சொலினார்
தசையையுற்றிடுகருவறத்தனியிடர்தணித்தனனால் (௨௦௮)

வேறு. எண்ணிலகோடியாகியிலங்கியகரத்தினாலுங்
கண்ணுமிழ்தீயினாலுங்கடையுகக்காலதாகி
நண்ணியவுயிர்ப்பினாலுநலனிலாவசுரர்தம்மை
மண்ணிடைத்தேய்த்தும்வானிற்புடைத்துமேவதைத்தான்மாதோ.

முரனுறுமசுரர்தம்மைமுடுக்கியேவதைத்தங்கார்க்கும்
வருணமாநரசிங்கத்தின்வலனினைநோக்கித்தீய
விரணியன்முனிந்துவாளுமிலங்குகேடகமும்பற்றித்
தரணியினெதிர்க்கநோக்கித்தனையனீதறையலுற்றான். (௨௧௦)

அண்டமுந்தானேயாகியளப்பிலாவசுரர்தம்மை
மண்டனில்மடியுமோதிநின்றருள்மடங்கல்வீரங்
கண்டுநீயறிவிலாதாய்கடுஞ்சமரொழிந்துமாயன்
புண்டரீகத்தாடாழ்திநின்பிழைபொறுக்குமென்ன. (௨௧௧)

என்றிவையுரைத்தமைந்தன்றனையெரியெழத்தானோக்கி
வன்றிறனரசிங்கத்தைவதைத்துனைத்தறித்துவீழ்த்தி
வென்றிசெய்வாளையான்றன்றெழுவனென்றுரைத்துவிஞ்சும்
குன்றெனவுயர்ந்தவெய்யோன்குவவுத்தோள்கொட்டியார்த்தான்.

இடங்கொண்மூவுலகுமஞ்சவார்த்தவனெதிரிற்சேடன்
படங்களுநடுங்கவெய்திப்பரிசைவாள்சுழலத்தீபோல்
மடங்கலையெதிர்த்துத்தாக்கிமண்விண்மாதிரங்களோடே
யடங்கலுநடுங்கவோங்கியமரினைவிளைத்தானம்மா. (௨௧௩)

அரனயன்வலாரியஞ்சவடர்ந்தெதிரவுணன்மெய்யைச்
சரியில்பொற்கிரியைச்சூழ்ந்தரங்கமார்பாலின்வெலைப்
பெருமைபோன்மடங்கலாயபிரான்கையாற்றழுவவாங்கே
யிருவருமசனியஞ்சப்புடைத்தெழுந்தெதிர்த்தாரன்றே. (௨௧௪)

வேறு. பூதலம்விண்டிடமேருவசைந்திடவேயுயர்பொன்னுலகோர்
பீதிநிறைந்திடவெண்கரிதுஞ்சவலாரியயன்பினாக
னாதனுளைந்திடமாநரசிங்கமுநலனிலவிரணியனு
மோதிமலைந்தனர்வாயொலியானிவர்முகடுகிழிந்திடவே. (௨௧௫)

சீலமிலிரணியன்வாளொடுகேடகம்விசிறியடர்ந்துசெலு
மாலமெனச்சினம்விஞ்சிடவரியொடுமலையவவ்வாதியவன்
கோலமிகுத்திடுமகுடமொடேயுயர்குண்டலமுஞ்சுழலக்
காலொருகைகொடுசுற்றினனண்டர்கள்கமலனொடரன்மகிழ. (௨௧௬)

உக்கிரமாநரகேசரிசுற்றியவுயரவுணன்மகுடஞ்
சக்கிரவாளகிரிக்குவடும்பொடியாய்விழவொண்டபனன்
மிக்கிடுமண்டலமாமெனவேசுழலப்படிவிண்ணமர்வோர்
தக்கினர்குருதிகள்திசையினினுறுமதகரிகளிரிந்தவரோ. (உகஎ)

வடவரைபோன்முடிமண்ணின்விழுந்திடமார்புறுதரளமெலா
மூடுவினமென்னநிறைந்துவிண்ணுற்றிடவுதையமொடத்தமெனு
நெடுவரையிதுவெனவேயொளிர்குண்டலமிலனிடைவிழவொளிர்வாள்
சுடருறுகதிரொனவானுறவவுணனையெந்தைசுழற்றினனால். (உகஅ)

பருதியின்மண்டலமகல்குடநகமிசைபாதிமறைந்தபினர்
விரைவினிவேனிகிடுமுன்னரின்விண்ணுறுகோபுரவாயிலின்வாய்
வரைநிகர்கேசரிதன்னிருவூருவின்மலையெனவைத்துகிரா
லிரணியன்மார்புபிளந்துநகைத்தனனிடிகளுமஞ்சிடவே. (உகக)

வடவரையுளினுறுவாசுகியுடலினைவாங்கியதாமெனநற்
சுடருறுவச்சிரநகுநடுவுகிர்கொடுதுளையுறவகிர்செய்தவன்
குடர்தொடையாகிடவேயுரன்மீதுகுலாவவணிந்தகலும்
படியொடுவானகமஞ்சிடவார்த்தனன்மீளியெனும்பரமன். (உஉ0)

அந்தகனஞ்சிடுமிரணியனாகம்வகிர்ந்தரியார்த்திடலும்
நந்தொடுதுந்துமிசின்னமுழங்கிடநாகர்களரனயனோ
டிந்திரன்மாதவரிபுமருதத்திரளெண்ணிலர்விரைவினெய்திச்
சிந்தைகிளர்ந்துபொன்மாமலர்வீசினராடினர்திசைகளெலாம். (உஉக)

அரனயன்முதலினர்சிந்தையுவந்தரியடியின்வணங்கிடவு
முரனுறுமிரணியன்மார்புபிளந்துமொழிந்திலசீற்றமுயர்
வரைதுகளாகமிதித்திடும்வாரிகணீரறவேபருகு
மெரியுறுவடவையைநாவினிடும்பொழியெழிலிமைநுங்கிடுமால் (உஉஉ)

எண்ணிலகோடிசிரங்கள்கரங்களிலங்கவுலப்பிலதாங்
கண்ணிறைதீயுலகெங்கும்வளைந்திடமூச்சுமிழ்காலறைய
மண்ணொடுவிண்ணினைநுகரவிரித்திடுவாய்புகையாயெழவே
விண்ணவர்முனிவரலைந்துநடுங்கினர்மேவவுமிடமிலதாய். (உஉங)

பீதியுறச்சுரர்முனிவர்களோடுபெயர்த்துநடுங்கிடலும்
வேதன்வலாரிபுராரியுயர்ந்திடுமீளியினடிதொழுதே
யாதிபரம்பரவச்சுதவற்புதவந்தமொடாதியிலா
நாதமுனிந்திடலென்றுதுதித்திடநாலுமுகன்னறைவான். (உஉச)

வேறு. உந்தியினுலகத்தோடுமெனைத்தந்தவொருவனுகும்
விந்தைநாயகனேவேதவுபநிடம்விளங்கலாத
வெந்தைநின்செயலையாவரறிகுவரிடரைநீக்குந்
தந்தைதாய்முனியிற்சார்புதனையனுக்கெங்ஙன்சாற்றும். (உஉரு)

சகனமோடண்டமெல்லாங்கலந்துறுமுயிரின்மேவும்
நிகரிலாச்சோதிநீயேகருமத்தின்முயற்சிநீயே
பகையுனக்கியாவர்நட்பார்பகருதிவெம்மைநீழல்
சிகிகுளிரதன்மந்தன்மந்திமிரமாயொளியாய்நின்றான். (௨௨௬)

அரியுருகடைக்கணுக்கிலனந்தவண்டங்கள்மேவும்
விளியினோரிமைப்பின்முன்னேவீய்ந்திடுமவைகளெல்லா
மெளியையபோலெய்தியெம்மைக்காத்திடுமிறைவநீபோற்
றிளருமிம்முனிவைக்காட்டினுருய்வர்கிளத்துவாயே. (௨௨௭)

களைகணுயுலகமெல்லாங்காத்திடுங்கருணைமூர்த்தி
வளருநின்முனிவைநீக்கநீயலால்மற்றார்வல்லார்
மிளிருமாவுததிதன்னுட்டினையைமீட்டிடுவர்போன்று
தளருமெம்மிடரைநீக்கித்தணிதியிக்கோபமென்றான். (௨௨௮)

ஈதெலாமியம்பிவேதனரனொடுமிறைஞ்சவுந்தா
னாதிதன்முனிவையோவாதநிகமாயெழுதலோடும்
பீதிகொண்டுணர்ந்துநின்றபிதாமகன்கமலத்தெய்வ
மாதையிவ்விடரைநீக்கவருதியென்றேத்தும்வேலை. (௨௨௯)

சுடருறுகலன்களெல்லாந்துலங்கிடநிகரிலாத
வடிவுடைவனசப்பாவைவானவர்துதிப்பவெய்தி
முடியுயரண்டகோளங்கிழிந்திடமுனிந்துநின்ற
கடவுளைக்கண்டுகையால்வெருவிக்கண்மூடினாளால். (௨௩௦)

மருவியேயொருவாதென்றுமார்பிடைவயங்கித்தோன்றுந்
திருநரமடங்கலோங்கிமுனிந்திடுஞ்செயலைநோக்கி
வெருவியிவ்வுருவநோக்காவிழியெனவிளம்பியேக
விரணியன்சிறுவன்றன்னையாவருமெமைக்காவென்றார். (௨௩௧)

பிரமனும்வலாரிதானும்பிறையணிசடையனோடும்
பரமபாகவதனாகுஞ்சிறுவனைப்பரிவானோக்கிக்
கரமெனில்கோடியாகுமிறைக்குறுங்கதத்தைநீயுன்
னுரமுறும்பத்தியாலேயொருவல்செய்யென்றாரன்றே. (௨௩௨)

அத்தியிற்றுயில்வோன்யார்க்குமகப்படானவன்றனுமம்
பத்தவற்சலனேயோங்கும்பான்மையானிகரிலாத
புத்தியையடைந்தாய்நின்னாற்பொறுக்குமிக்கோபமென்ன
வுத்தமச்சிறுவனன்பால்முடங்குளையதன்பாலுற்றான். (௨௩௩)

பாரிடையகன்றேயாழ்ந்துபலதிரையுறவங்கோங்கி
யாரும்வந்துறினுமஞ்சவறைந்துயர்ந்தெழுந்தேநீண்ட
வாரியுட்பயமிராதுதிரியுஞ்சில்வகுலிபோன்று
வீரியமடங்கறன்பால்வெருவுதலிலாமற்சேர்ந்தான். (௨௩௪)

வெருவுதலிலாமற்றூயபிரகலாதனன்றன்மேவி
யரியடியிறைஞ்சிநின்றேயறைகுவான்கராவானொந்த
கரிதனைக்காத்துலோகத்தனைவர்க்குங்களைகணாகிச்
சுருதியுமுணரொணாதாய்தூணிடையுதித்தாயென்றான். (௨௩௫)

உன்னுளேயயனைக்காட்டியுன்றொழில்படைத்தியென்று
லன்னவன்கருத்தினுமறிகிலாவுருவமாகி
நின்னைநீபடைத்துத்தேவர்திரளினைக்காத்துநீசன்
றன்னைநீவதைத்துமூவர்தொழிலுஞ்சாதித்தாயென்றான். (௨௩௬)

உனையுணர்ந்தவர்க்குமுன்னால்மடிந்தவொன்னலர்தமக்கு
மினியநல்வீடுநல்குமிறைவநீயென்னினுன்றன்
முனிவருளிரண்டுமொக்குமெனினுமுன்கோபமூர்த்தில்
வினையறுமின்பமெய்தாதிதுவொழிந்தருள்செய்யென்றான். (௨௩௭)

பிறையணிசடையன்றானும்பிரமனும்வலாரிதானு
மறிவறிமுனிவரோடுமருகியேதளராவண்ண
மிறைவவிம்முனிவையோவியிடரறவிலங்குஞான
மறிகிலாச்சிறியேன்சொல்லைமறுதருள்புரிதியென்றான். (௨௩௮)

இருவிழிகளுநீர்சோரவிதயமும்புளகமாகப்
பரிவுடனிருகைகூப்பிப்பரமபாகவதனாரும்
பிரகலாதனன்றான்கூறம்பிறிதிணையிலாதசோதி
யருள்புரிந்துச்சிதன்னிலங்கைவைத்தணைத்துச்சொல்வான். (௨௩௯)

உனையருடாதைதன்னையொருகணத்திடையின்முன்னர்
முனிவுடனுரத்தைக்கீறிமுடங்குளையாகிநின்ற
வெனையெள்கல்செய்யாதென்மேலெல்லையிலன்புவைத்துத்
துனியறுமுனக்கியான்செய்நன்றியேதென்றுசொல்வான். (௨௪0)

இனியுன்றன்மரபிலுள்ளோரொல்லையில்பிழைசெய்தாலு
முனிவுடன்வதையேனென்றுமொழிந்துயர்ந்தொளிருமூர்த்தி
வினையறுசிறுவநீமீண்டேதுவேண்டினுமீவ
னினியநல்வரங்கேளென்றாண்டியம்பிடமதலைசொல்வான். (௨௪௧)

விறனுடையிரணியன்றானழித்திடுஞ்சுவர்க்கம்வேண்டே
னிறைவவுன்பதத்தைநற்றாநாரதாதியர்களெல்லா
மறிவுறுமடியரானாராதலாற்கதியைவெஃகே
னெறியுறுவிமலவென்றுநிகழ்த்தியீதறைவானன்றே. (௨௪௨)

உத்தமக்குலத்தையோவியிழிகுலத்துதித்தேனேனு
மத்தியிற்சீவனாகிப்பிறந்தறிவற்றேனேனுஞ்
சுத்தவுன்னடியார்பாதத்துகளதாய்த்திரியநல்கென்
னத்தவென்றுரைப்பச்சோதியகமகிழ்ந்தணைத்துச்சொல்வான். (௪௨௩)

பாரினின்வானின்மூன்றுபரமபாகவதனாகுஞ்
சீருறுமசுரர்கோனாய்ச்சிறந்திடுங்கிரீடஞ்சூடி
யேருறவரசையாண்டபின்னனொன்னுழைவாவென்று
நேரிலாக்குமரன்றன்னைநோக்கியெநிகழ்த்தலுற்றான். (உசச)

மைந்தவுன்றந்தையாக்கைவகிர்ந்தியானவனையத்தீமை
வெந்திடப்புரிதமாயவிரைவின்மற்றவனையீமத்
திந்தனமிசையினூலாலெரியிடையிட்டுப்பின்ன
ரந்தணர்விதிக்கும்வெள்ளம்விடுதியென்றறைந்தானன்றே. (உசரு)

அரியிவையளியினோடுமருளநற்பிரகலாதன்
றாளிடைவணங்கிச்சென்றுதந்தைதன்றனுவையீமத்
தெரியிடைவளர்த்திப்பின்னரிருபிறப்பாளர்நூலின்
கிரிகையைமுடித்துவந்துகேசரிதாளிற்றாழ்ந்தான். (உசசு)

வந்தடிதொழுதுநின்றமதலையைமார்பினோடுஞ்
சிந்தையினுவந்துகையாற்றழுவியசெல்வன்றன்னைக்
கந்தமார்மலருளோனுங்கறைமிடற்றிறைவன்றானு
மிந்திரன்முதலினோருமினிதுவந்தேத்தினாரால். (உசஎ)

இடரறுமுனிவையோவியிலங்கியசோதிதன்மேற்
கடிமலர்பொழிந்துபேரிமுரசுகாகளங்களார்ப்ப
விடையவன்விபுதர்கோமான்விரிஞ்சன்விண்ணவர்கடேய
படிமிசைமுனிவரோடும்பரிந்துதோத்திரங்கள்செய்தார். (உசஅ)

சுரரொடுமுனிவரெல்லாஞ்சுருதிநூன்மறையையோத
மரைமலர்த்தவததோனும்வளர்த்திடப்பிரகலாதன்
சிரமிசைமணிகளாலேசிறந்தபொற்கிரீடந்தன்னை
யரிகவிழ்த்தணைத்தலோடுமாடினரமரரம்மா. (உசகூ)

முடியினைக்கவிழ்த்துமைந்தனுச்சியைமோந்துவானம்
படியிலங்கிடவேயிந்தப்பதியையாளுதிநீயென்று
தடமலர்க்கைகளாரத்தழுவிமற்றவனையோவி
யிடரகலிமையோரேத்தவிறைவன்றன்பதியிற்சேர்ந்தான். (உரு0)

மறுவிலாச்சிறுவன்றன்னைக்காத்துமற்றவன்றன்றாதை
யறையுமத்தூணிலங்கவழகியசீயமாகி
நெறியிலாவவனைச்செற்றநேமியோன்கீர்த்திவெள்ள
மறிதிநீவிதர்ப்பன்பெற்றவணங்கெனமுனிவன்சொன்னான் (உருக)

நாரசிங்கப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ககஎ0.

தத்துவமூவெட்டுறவளர்ந்தெழுந்ததனுமடிந்திடுமதிற்சிவ
வித்தியமதனைப்பவமுறுங்கிரையத்தழுந்திடாநெறிநிவர்பதத்தின்
வைத்திடுமுதலாய்மறையினுச்சியினிலுபனிடத்தின்மிகவயங்கும்
வித்தகவரியையிறையெனவுணர்ந்துவினையறவவனடிதொழுமின். (க)

அரியரியுருவாயவுணனைவதைத்தாண்டடன்பனுக்கருள்செய்மாக்கதையை
விரைசெறிகமலத்துயருருக்குமணிவியப்புடன்கேட்டுளமகிழ்ந்து
சரியிலாப்பிரகலாதனைப்போலத்தரணியின்மால்பத்தருளரோ
வுரையெனநிகரிறுருவன்மாதவத்தையுணர்த்தியென்றியாழ்முனியோதும்.

அயன்சுதன்சுவாயம்பூமனுத்தவத்தாலருளுமுத்தானபாதனுக்குச்
செயலுறவிலங்குந்தேவியரிருவர்சிறந்திடவவர்களினழகார்
கயனிகர்நயனச்சுருதியுத்தமனைக்கவினுறப்பயந்தனள்சுநீதி
யியல்பெறுதுருவனெனப்பெயரிலங்குமினையிலாமதலையையீன்றுள். (௩)

இருவரும்பயந்தபுதல்வர்களைந்துபருவம்புக்கிலங்கிடுநாளி
னரசனுக்கன்பாஞ்சுருதியீன்றெடுத்தவழகியவுத்தமன்றன்னைப்
பரிவுடனிருபன்மடிமிசைவைக்கப்பரிவிலாச்சுநீதிதான்பயந்த
துருவனுந்தந்தைகவான்மிசையேறத்துலங்கியேவருகின்றவெல்லை. (௪)

மடிமிசையேறவருகின்றசுதனைமன்னவனழைத்திடாமெலிவா
லிடருறுந்துருவன்றிகைத்திடவவனைநோக்கியங்கிலகுநற்சுருதி
சுடருறுந்தராமெனநகைத்தென்றன்சுதனுறுநலனுனக்குளதோ
புடவியாணிருபனிகழ்ந்திடுஞ்சுநீதிபுதல்வனுயபாக்கியனுனாய். (௫)

நிருபர்கோன்மடியினேறிடவேண்டிநிகரிலாயானுனைப்பயக்க
வரியினையுள்கித்தவஞ்செயப்போதென்றறைந்தவள்நகைத்திடவழுது
துருவனுந்தனையீன்சுநீதிதன்னுடனேயிவையெலாஞ்சொலவவளென்மேற்
பரிவிலாதிகழ்வானுந்தையாதலினுன்பயந்திடவறியர்போலானாய். (௬)

ஆதலிற்சுநீதியமரர்கட்கரியவரிவரத்தவஞ்செய்தேயுயரப்
போதுதியெனத்தாயடிமிசைவணங்கிப்பருவமைந்துறுமெழிற்புதல்வன்
வேதனையறத்தான்விளங்கியபரனைவிழுமியகருத்தினினைத்துத்
தீதறப்பழுவத்திடையினிற்செல்லச்சிறந்திடுஞ்சுரர்முனிகண்டான். (௭)

விழுமியமுனிவன்வனத்திடையேகிவிளங்கியதுருவனைநோக்கி
யழகியகுமரவரசனையொருவியடவியினடைந்ததேதென்ன
விழுவெனக்குறவென்றுதைதன்மடியினேற்றிலாறுதலினென்று
மழிவிலாவரியென்வினையறவரமாதவஞ்செயவடைந்தனனென்றான். (அ)

துருவனீதறையச்சுரர்முனிகேட்டுமகிழ்ந்துநீதுய்யமாதவர்க்கு
மரைமலரயற்குமரியமாதவனைமழலையாயுரைதெரிகில்லாப்
பருவமோரைந்துநிறைகிலாயெவனென்றறிகுதிபழுவத்தின்மிடையு
மரிபுலியுளியமடர்ந்திடுந்தவத்தையொழிகெனவவனிவையறைவான். (௯)

புற்புதம்போன்றவுடலினைநற்றிப்புவியிடைத்தந்தைதாயென்னுஞ்
சிற்பதத்தினையான்விரும்பலேனுயருஞ்சீதரமூர்த்தியாய்த்திகழு
மற்புதனடியனாகியேயடையுமெனைமறன்யாவையுமடையா
நற்பதத்துயர்நாரதத்தவவெனமாமுனிமகிழ்ந்திவையிவைநவின்றான். (௧0)

இலகிளஞ்சிறுவவரியயோகியருமுனக்குநேரில்லெனவியம்பி
யுலகமுண்டுமிழ்ந்தவொருவனையொப்பில்பரம்பொருளவனைநீயுள்கி
நலனுறயமுனைநதிமருங்கிலங்குமதுவநத்திடையினினண்ணிப்
பொலனுறத்தவஞ்செய்கெனவவன்செவியிற்றுவாதசாக்கரம்புகன்றனனால்.

பரிவுடன்முனிவனிவையெலாம்பகர்ந்துபழுவத்திற்சேறியென்றவன்றன்
சிரமிசைக்கரம்வைத்தணைத்துனக்கிறைவன்சிறந்திடுபதமருளுவனென்
றுரைசெய்தங்கொருவச்சிறுவனுமகிழ்வோடோங்கியகாளிந்திநதியி
னருகுறவிலங்குமதுவநத்தடைந்தேயரிவரவருந்தவஞ்செய்தான். (௧௨)

பரனையுள்ளிருத்தித்தவஞ்செயும்புதல்வன்பழுவத்தின்மூத்தினத்தொருகாற்
சரியிலாவெதிரிதனிலிளங்காயுந்தலனுயர்கபித்தநற்கனியுஞ்
சீரரின்றிடத்தானுகர்ந்தொருமாதந்தவஞ்செய்தேயிரண்டதாந்திங்கள்
பருகினனாறுதினத்தினிற்கொருக்காற்பசும்புலும்தமாலமுமாதோ. (௧௩)

உவமையில்சிறுவனுயர்திரிமாதத்தொன்பதுதினமுறவொருக்காற்
றவர்வியப்புறநற்சலத்தினைப்பருகிச்சாதுமாதத்திடைச்சரியில்
பவனமங்குணவாய்ப்பன்னிருதினத்திறொருதினம்பருகியேயைந்தாய்
நவிலுமாதத்தின்போசனனாகிநலனுறவருந்தவஞ்செய்தான். (௧௪)

தலனிடைச்சிறுவன்றளினங்குட்டந்தரிக்கமாதவஞ்செயவெருவி
யலையுமிந்திரன்றனிவன்றவமழிக்கவிடுத்திடவெழுந்துமாதவங்க
ணலியுமாபூதப்பிரேதகமனல்கானக்கினைநிருதிகளடர்ப்ப
நிலைதுலைந்திடாமலரியினைமனத்துணிறுத்தியேநெடுந்தவஞ்செய்தான். (௧௫)

ஐம்புலனடக்கித்துவாதசாக்கரத்தாலளப்பிலண்டங்களைத்தரிக்கு
மெம்பரன்றனைத்தன்மனத்திடையிருத்துமிவன்றனைப்பரிக்கிலாதவனி
வெம்பியமதமாமிதித்திடவமிழும்வேலையினம்பிபோலலைய
விம்பரிற்சிறுவனுயிர்ப்பையுள்ளடக்கவெவருமூச்சறநடுங்கினரால். (௧௬)

அவனிகம்பிக்கமுனிவரோடமரருயிர்பெறவலைந்தரிவைகும்
பவமில்பாற்கடலையடைந்தெழிற்பரமன்பாதமேற்பணிந்துளநடுங்கி
யுவமையின்மதலைதவஞ்செய்கோரத்தாலுலைந்தியாமுன்னிடையடைந்தோ
நவையறுமுதல்வவிடரகற்றெனவோரணஞ்சன்மினென்றான். (௧௭)

வெருவிவந்தடைந்தவபரொடுமுனிவர்விபுதர்கீரஞ்சலென்றருளித்
தருவன்மாதவத்தின்செயல்தவெனவேதுலங்கியசோதியுண்மகிழ்ந்து
திருவுமார்பிலகத்திகிரிசங்கேந்திச்சிரமிசைக்கிரீடமுந்தயங்கக்
கருடவாகனனாய்க்கலன்சுடரெறிப்பக்கடிதினிற்சிறுவன்முன்வந்தான்.

கோமுகம்பணவமானகந்திமிலைகுறடுசங்கமுமிருதங்க
மாமுரசுடனெண்டிசையெலாமொலிகள்பரவிடமலரயன்விபுதர்
காமனையெரித்தோன்முனிவர்கள்முதலாய்க்கடிமலர்பொழிந்துவந்தேத்தப்
பூமனுந்திருமார்பிலங்கிடமுராரிபுதல்வன்முன்வந்துநின்றனனால். (ககூ)

சிந்துவின்னொலிபோற்சிறந்தபல்லியங்கடிசையெலாமுழங்கிடவயனோ
டிந்திரன்முதலோர்துதித்திடமுராரியெய்திடவவனெழிலுருவஞ்
சிந்தையிற்றியானஞ்செயலுடனுமாகிச்சிறந்திடும்விழிகளைமுகிழ்த்துச்
சந்தமார்பரமன்றன்முனரடைந்ததுணர்கிலான்றவஞ்செய்துநின்றான். (உ0)

முன்னர்வந்திடவுமுணர்கிலாதிலங்குஞ்சிறுவன்றன்கருத்திடைமுராரி
மன்னுதன்னுருவமறைத்திடவெருவிமதலைதன்னிருவிழிதிறந்து
பன்னகப்பகைஞன்புயமிசைவயங்கும்பரமனைநோக்கியேகளிப்புத்
துன்னிடவணங்கியிருகணீர்நிலத்திற்சொரிந்திடவாடினனன்றே. (உக)

இருகரஞ்சிரத்தினிலங்கிடக்கூப்பியிதயமெய்புளகமாயெழச்சி
ரரியினைத்துதிக்கும்பொருளினையறியாதருவ்போலிருவிழியினுநீர்
சொரியவேநின்றமதலையைநோக்கிச்சுருதியாற்றன்னையேத்திடநற்
பரமனுங்குமரனிருகபோலத்துந்தன்கையின்பணிலம்வைத்தனனால். (உஉ)

அரிபரிவுடனச்சிறுவனற்கபோலத்திடையிற்றன்வலம்புரியழுத்த
விரியுநால்வேதபுராணசாத்திரத்தின்பொருளெலாநாவினில்விளங்கக்
கரதலாமலகம்போலமாதவன்றன்செயலெலாங்கருத்தினிற்றோன்ற
மறைமலருறைவோன்மகிழ்ந்திடமதலைவாய்திறந்தேதுதித்தனனால் (உங)

ஒருமுதலாகியிருசுடராகியொளிதருமூர்த்திகண்மூன்றாய்
விரியுநால்வேதமாகிநல்வேள்வியைந்துமாயாறங்கமாகி
யிரையும்வாருதிகளேழுமாய்வரைகளெட்டுமாய்நவக்கிரகமுமாய்த்
தரையினிலிலங்கத்தசவவதாரமாகியசற்குணனென்றான். (உச)

விரிவுடனீளமளவுமீதென்றுவிளம்பரிதாகியவிரசைப்
பெரியமாநதியைக்கழிந்துலப்பிலவாம்பேரொளியானவைகுண்டத்
தரியுறுமரியாதனத்தினிற்றிருவோடவனிமானிலையுமமரச்
சிரமிசைக்கிரீடமிலங்கிடவயங்குஞ்சீதராநமவெனத்துதித்தான். (உரு)

உயிர்தொறுமுளனுயுலப்பிலாவண்டமுரோமத்துணிதொறுமுறைய
வயர்விலாப்பரமபதத்திடையிலங்கியகிலம்வானுண்டுமிழ்ந்தனந்தே
யியல்புறுமறைக்குந்தூயயோகியர்க்குமெட்டலாஞானமீயென்றன்
றுயரறத்தோன்றுஞ்சுருதிநாயகனேசோதியேநமவெனத்துதித்தான். (உசா)

மறைநெறியுறவேயிவையெலாந்துதிக்குமதலையைமகிழ்வுடனோக்கிப்
பொறியுறுமுரத்தன்புகலுவான்வருடமிருபத்தையாயிரம்புவியி
னிறையநீயரசாண்டதற்பினரிரவிநிகரிலாவுடுவிதுமுதலோ
ருறையுமாபதத்தினுயர்ந்திடுமதிசுபதத்திடையுறுகுதியென்றான். (உஎ)

அளியுடன்பரமன்றுருவனுக்கிவ்வாறளித்துத்தன்பதியிடையமர
வொளியுறுஞ்சிறுவன்மலரயற்கெட்டாவொருமுதலாம்பரமேட்டி
யெளியவன்போலென்முன்னரினடைந்துமிலங்கியதன்பதங்கொடாமல்
நளினமன்னொருவுநாளழிபதத்தைநல்கினனென்றுநொந்தனனால். (௨௮)

சிந்தையினிவையைநினைந்திடுங்குமரன்செகதலமாண்டினிதிருக்குந்
தந்தைபாலடையவவன்மகிழ்ந்தெழுந்துதனயனையளியுடன்றழுவி
யந்தணர்மறைநூலறைந்திடச்சுதனுக்கம்பொனின்மவுலியைக்கவிழ்த்துக்
கந்தமார்பழுவத்தெய்திமாதவங்களியற்றிநற்கதியினையடைந்தான். (௨௯)

அடவியிற்றாதையருந்தவஞ்செய்யவகன்றிடத்துருவனுமரசன்
புடவியைமறையினெறியுறச்செங்கோல்பொருந்திடவாண்டிடுநாளி
னிடருறுஞ்சுருதிபயந்தவுத்தமன்றுனிவுளிமேல்மிருகயாத்திரையாய்க்
கடமுறுகரிகணெருங்கவேங்கடத்திற்கடிதினிற்சென்றனன்மாதோ. (௩௦)

உரனுறுபரிமேலுத்தமன்பழுவத்தெய்திநல்லுழைமரையுழுவை
கரிபரியிரலையிவையெலாம்வாளாற்களைந்தவன்றிரிந்திடும்போழ்திற்
சரியிலாநரவாகனன்பதிதன்னிற்சார்ந்திடுமியக்கரினுயர்ந்த
வரமுறுபுயப்புண்ணியாசன்வந்தடைந்துமற்றவன்றனைவதைத்தேக. (௩௧)

சரியுலுத்தமனையியக்கரில்வயங்கும்புண்ணியாசன்வதைத்தேகச்
சுருதிதன்றனயன்வருகிலானெனவச்சுரத்திடையடைந்துதான்றேடி
விரிவுறுவனத்தீமிடைந்திடவவனுமதினிடையுற்றுவீய்ந்திடலுந்
துருவனீதுணர்ந்துசலத்தொடுமிரங்கிச்சுவணநாதன்பதிசூழ்ந்தான். (௩௨)

தனபதிநகரைச்சார்ந்திடுந்துருவனியக்கரைச்சரங்களாற்றுணிக்கச்
சினமுறுநரவாகனனடைந்தெதிர்ந்துசிலீமுகமழையினைப்பொழியக்
கனமெனநிருபன்கணைகளைச்சொரிந்துகறைமிடற்றரன்சகாயன்ற
னினமொடுமிரியக்கரிபரிதுணியவிரதம்வில்லிற்றிடப்பொருதான். (௩௩)

சுடுகணைசொரிந்துதுருவனின்றடரத்துலங்கியவிரதம்வில்லிற்றுக்
கொடிகுடையறலுங்குபேரன்விண்ணிடைக்கொண்மூவிடைக்கரந்தவன்கொ
விடமுறுமாயப்படையினைவிடுப்பவிரிவுறுகாலனல்வேலைப் [டிய
படமுடையரவநிருதிகளலகைபலவுமாயெழுந்தனபரவி. (௩௪)

உரனுறுகுபேரன்விடுத்திடுமாயப்படையுலகஞ்சிடவரலுந்
துருவனெஞ்சழன்றுசடுதியினவைகடுணிந்திடவரிபடைதொடுத்துச்
சரமழைபொழிந்துதனபதிபதியைத்தழலிடச்சார்ந்திடும்வேலை
நிருபனுஞ்சுவாயம்பூமனுப்போந்துபவுத்திரனுடனிவைநிகழ்த்தும். (௩௫)

அரிவரத்துயர்ந்ததுருவனீமதலையயனொடெவ்வுலகமுமலியு
மிருகயாத்திரைசெயுத்தமன்றன்னைவீட்டியவியக்கனபோய்க்கரந்தான்
றருமமார்குபேரன்றனையிவண்முனியத்தக்கதோவறனிவைபலவிச்
செருவினையொழிகென்றுரைத்திடத்தவிர்ந்தசெம்மலையுறவணைத்தனனால்.

சரியின்மூதாதையுரைத்திடச்சமரந்தவிர்ந்திடுந்துருவனைநிகரி
லரனெழிற்சகாயனுவந்துவந்தணைப்பவவன்றனக்கருள்செறிநிருபண்
பரிவுடனினியவுரைபகர்ந்தவனைநிறுத்திமாமனுவினைப்பணிந்து
விரைவினிற்றன்வாழ்புரியினினடைந்துவிளங்கியாண்டமர்ந்தனன்மாதோ.

மறைவளர்ந்திடவேயுலப்பிலாத்தானம்வழங்கிமாமகமெணின்முடித்துப்
பொறியிலங்கிடநீள்புவியினையாண்டுபுரந்தரன்போலவீற்றிருந்து
நெறியுடன்றினங்கள்மலிந்திடவருடமிருபத்தையாயிரம்நிறைய
வலனுறுதுருவனரசர்கள்போற்றத்தமரொடுமமர்ந்திடுநாளின். (நஅ)

அரிதனையாளென்றறைந்திடும்வருடமிருபத்தையாயிரமகலச்
சுரர்துதிசெயமாமுராரிதன்னுருவாய்த்துலங்கியமாலவன்றூதர்
சரியிலாநந்தன்சுனந்தனென்றிவர்கடமணியவிமானங்கொண்டுதவித்
துருவனைக்குரம்பைதனினொடுமேற்றத்துந்துமிமுழங்கியதன்றே. (நக)

பின்னரும்விமானமரந்தமங்கெய்தப்பிறங்கியதுருவன்றன்கிளைஞர்
மன்னநற்பொன்னுருடலுறுசுநீதிமைந்தன்மாறாதனைப்பார்த்தெ
னன்னையெங்குளளென்றறைந்திடவவருமவடனைவிமாநத்திற்காட்டத்
துன்னியமகிழ்வினொடுபரன்றன்னைத்துதித்தவனும்பரிற்சென்றான். (சo)

தருமலர்மாரிபொழிந்திடவுயருந்தவரிறும்பூதொடுமகிழ
முரசுகாகளங்கள்துந்துமிநந்துமுழங்கிடத்தீபதூபங்கள்
விரைபுரையலங்கனெறியெலாமிலங்கவிமாணமேற்றமரொடுந்துருவ
னிரவிதாரகைகளுடுபதிபதியினுயர்ப தத்தெய்திவீற்றிருந்தான். (சக)

தந்தையோடினுததாயிகழ்ந்திடமெய்தளர்வுறும்பருவமோரைந்தா
மைந்தன்மாவநத்திற்செய்திடுந்தவத்தைமகிழ்ந்தரிவந்தவன்றனக்குக்
கந்தமாமலரோன்மகிழ்ந்திடவுயர்ந்தபதியினையருளுமாக்கதையைச்
சுந்தரவுருக்குமணியினிதுணர்தியென்றனன்சுரர்தொழுமுனிவன். (சஉ)

துருவப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஉகஉ.

கஉ. வது—மச்சப்படலம்.

தலமிசையுலவுகிருமியைக்குளவிதன்னிறமாக்கியதேலப்
பொலனுறுபிரமகுருவெனவெழுந்துபுலன்பொறிமுயற்சியாற்றிரண்ட
மலினநோயழியத்திருத்திமெய்ஞ்ஞானம்வளர்ந்திடத்தன்பதங்கொடுக்கு
மலைவிலாதுயர்ந்தபதத்தினச்சுதனையடுத்தவனடியரைத்தொழுமின். (க)

சிதலைதன்வாயிற்புனலின்வான்மீகமுயர்த்திக்கட்செவியினைச்சேர்க்கு
மதியிலாதனபோற்பிறர்மனைவிரும்பிவரும்வினைத்தீயெலாம்வளர்த்துக்
கதமுறஞ்ஞானநிறைந்திடச்செய்துகதிரவன்சேய்நகர்நிரைய
முதவிடென்மனனேதயையிலாயந்தோவுரையரிபெயரையாமுயவே. (உ)

துருவன்மாதவத்தாற்றுலங்கிவானுயர்ந்தபதத்தினிற்றோன்றுமாக்கதையை
வரமுனிபகரவிதர்ப்பர்கோனுதவுமணங்களுள்கேட்டுளமகிழ்ந்து.
சரியிலாப்பரமன்பின்னருமியற்றுஞ்சதுர்மலிசரிதையையியம்பென்
றுரைசெயப்பரன்மீனாயெழுநலனையுணர்தியென்றியாழ்முனியோதும்.

சத்தியவிரதப்பெயருடைநிருபன்றவஞ்செயச்சக்கரந்தரித்த
வித்தகன்றோன்றியவனைநீயிரவிபுதல்வனாய்ச்சனித்துறவிளங்கிச்
சுத்தனாமனுவாயுயர்தியந்நாளிற்றோன்றியானின்னிடரகற்றித்
தத்துவமுயருஞானமெய்ப்பொருளைச்சாற்றுவனென்றரியகன்றான். (௪)

அரியிவையுரைத்தாண்டகன்றிடவரசனகல்விசும்பொளிருமென்றினுக்குச்
சரியிலாச்சிராத்ததேவிதான்பயந்ததனையனாஞ்சிராத்ததேவப்பே
ருரைசெயவைவச்சுதமனுவாகியோங்கினனுயருமார்த்தாண்டற்
கிருகையாலளிக்குமயந்தனிற்சிறியசகுலியாய்ப்பரனெழுந்தனனால். (௫)

அருக்கனுக்கரசனருக்கியமளிக்குமிருகையின்பயமதிற்பரமன்
றிருக்கறச்சிறுபெண்மச்சியமாகித்திரிந்திடவருவருத்துயர்மன்
பொருக்கெனக்கயத்தினூறுசலத்திடையிற்போடலுமந்தமீன்விதனம்
பெருக்கவாய்திறந்துநிருபனேயெனைக்காவென்றிவைபேசியதம்மா. (௬)

பெரியமச்சியங்களெனையயின்றிடாமற்பிறங்கியபுகழுடையரச
பரிவுடனெனைக்காத்திடுதியென்றறங்கள்பலவுந்தான்பகர்ந்திடநிருபன்
சரியிலாவரிதன்னிடரினையகற்றச்சார்ந்ததங்குணர்கிலான்றானே
கிருபையோடதனின்றுயரகற்றுவன்போற்கிட்டியமீனையத்தெடுத்தான். (௭)

அயத்தொடுசிறியசகுலியைப்பரிவோடங்கையினேந்தியேயடல்சேர்
புயத்துமாநிருபன்றரளமாளிகையிற்புகுந்துதன்பொற்கமண்டலத்தின்
பயத்திடைவிடுப்பப்பருத்துநல்வகுலிபாரினிலெண்டிசையெங்கும்
செயித்திடுமரசச்சிறியவிக்கிரகமிடமிலையென்றுசெப்பியதால். (௮)

ஆவலின்வகுலிபகர்ந்திடக்கேட்டவரசர்கோன்பரிவுடனெடுத்துக்
கூவலின்விடவாண்டதனிடைமூன்றுமுழம்வளர்ந்திதுகொளாதெனவக்
காவலன்வியந்துநூறியோசனைநீண்டகன்றுநல்வெறிகமழ்கமலப்
பூவலரோடையயத்தினுள்விடுப்பப்பொலிந்திடுஞ்சலசரம்வளர்ந்த. (௯)

கன்னலின்மூக்காலிடையினின்வகுலிகடுகிநூறோசனைநீளந்
துன்னியேவளர்ந்தீதிடமிலையெனலுந்தூயமன்னுவரியின்விடுப்ப
வன்னமீன்பெருத்துமனுவினைநோக்கியரசவிவ்வகலுமார்கலியி
னென்னிலும்பெரியதிமிங்கலமகரமெனையயின்றிடாதுகாவென்ற. (௧௦)

சரியிலார்கலியின்றயங்குமீனிவைகள்சாற்றிடவரசர்கோனென்ற
னிருகையினயத்திற்சிறியமீனாகியெழுந்துகுண்டிகையினிலசும்பில்
விரியுமோடையினிலிமைப்பின்முன்வளர்ந்துவிளங்கியவுததியிற்பெருத்தா
யுரைசலசரநீயன்றுலகெவையும்படைத்தளித்துண்டவனென்றான். (௧௧)

மலரயன்வல்லாரிவிபுதர்மாதவர்க்குமகப்படாமாதவவின்று
சலசரமாகிவளர்ந்திடுங்கருமஞ்சாற்றுகென்றுரைத்துமன்வணங்க
வுலகமுண்டுமிழ்ந்தவொருவனுஞ்சகுலியுன்னையான்சாத்திடவடைந்தே
னலனுடையரசவதறந்துறுங்கருமங்கேளெனநவின்றனன்மாதோ. (கஉ)

ஏழுநாளளவினவார்ந்திரமானபிரளயமெய்துமீமிகவும்
வாழவோர்நாவாய்வருமதின்மிசையின்மன்னவாவுன்றமருடனல்
வேழமாவினதகோடிரவிபோற்றுன்றுமிருடிகளெழுவருமேவப்
பாழிசால்புயத்தாயடைகுதியெனுஞ்சொற்பகர்ந்தமீன்பரவையுட்கரந்த.

பரவையுட்பகர்மீன்கரத்தலுமுயர்ந்தபதுமநாபன்செயலுள்கி
யரியயோகிகட்குமகப்படாமுதல்வர்வடியனைக்காத்திடவிளிவா
யுரைசெயுஞ்சகுலியாகியீண்டருள்செய்யுத்தமமுகுர்த்தமாமாய
பரமவென்றுருகித்துதித்திருகண்ணீர்படியுறத்தன்பதிபுகுந்தான். (கச)

புரியினிலடைந்துமணிநிவந்தெழுந்தபொன்மனைபுகுந்துதெர்ப்பையின்மே
லரியிருபதத்தைமனத்திடையிருத்தியகங்குழைந்திருகரங்கூப்பித்
தரைமிசைவடகீட்டிசையினைநோக்கியிருந்துழிச்சதுமுகவிதாதா
விரவுவந்தணுகிப்பிரளயமுறமாவெழிலிகள்மிசச்சொரிந்தனவால். (கரு)

கரிகரம்போலக்கனவினந்தாரையுறப்பொழிந்திடக்கமலத்தோ
னிரவுறவுகாந்தப்பிரளய்மெழலுமுயர்மனுமுன்னமோர்நாவாய்
வரவதின்மிசையின்மனன்கிளையோடுமதகரிமண்ணிடைவிளையும்
விரைகளுமமரவிருடிகளெழுவர்விளங்கிடவேறினரன்றே. (கசா)

தரையினுமகன்றுநிவந்திடுநாவாய்தனின்மனுத்தமருடனெய்த
விரவிபோன்முனிவரெழுவருந்தோன்றவெங்கணுமிருள்கன்றேகக்
கரையிலாதுயருமயர்ந்தனிலம்பிமிதந்திடுங்காலையிற்பரம
னுரைசெயற்கரியபருமகீளத்தோடொப்பிலாவகுலியாயடைந்தான். (கஎ)

சரியிலாதுயர்ந்தசகுலியாயெழுந்துசலத்திடைமிதக்குநாவாயை
யுரகபாசத்தானிவர்ந்திடுந்தன்கொம்பொளிபெறவழுந்திடப்பிணித்தா
விரைகமழ்மலரோனிரவுகமொருவுமளவுந்தன்மெய்கொடுநீந்த
வரசர்கோன்றமரோடிலங்கிளனம்பிதனின்விரையமர்ந்தெங்கும்விளைய.

இரவியினவிர்போலிருடிகளெழுவரிலங்குநாவாய்மிசைதன்னில்
விரைவிதைத்திடப்பிற்பயிரொழுந்துயர்ந்துவிளைந்திடமகிழ்ந்திடுகிருபன்
பெரியதோர்வகுலியுருவமாய்நீந்தும்பெயர்களாயிரத்தனைவணங்கிப்
பரமவென்மலினமறுத்தருள்செய்யும்பத்தவற்சலவென்றுபகர்வான். (ககூ)

தரைமிசையுயருமவாந்தரவயத்திற்றளர்ந்திடாதிடரினைத்தவிர்த்தா
யிருளதாயென்றும்வெடிவிலாவில்வாழ்வெனுமகன்பாழதாமசும்பி
னிடாயநீந்திடநீயருள்கெனவுரைப்பநிகரிலாவகுலியாய்த்திரிவோ
னரசர்கோன்மகிழப்பிறப்பிறப்பறுக்குமறிவுறும்புராணத்தையறைவான்.

சதுமறைப்பொருளினுயர்ந்ததத்துவமுஞ்சாங்கியமுபநிடமுதலாச்
சுதைதரும்பொருளாலிதவுபதேசந்துயரறவருளியபினர்த்தா
மதமெனநிகழ்த்துமச்சியபுராணமுரைத்தயனிரவுபோய்மகிழ
வுதையமாமுகம்வந்திடவயமொழியவுலாவுமீன்கரந்தனவம்மா. (உக)

அயனிரவொழியவவாந்திரத்தெய்துபிரளயமகன்றிடவவனி
துயரறவிரவிதோன்றிடநாவாய்மறைந்திடத்துலங்கியமனுத்தா
னயமொழிகரிதேரினர்தமர்சூழவளியுடனுலகினையாண்டான்
புயலெனவயங்குமுருவுடையரியைப்போற்றிசெய்நாவினனாகி. (உஉ)

விரைபுரைமலரோனடுங்கவேதத்தைப்பறித்தகல்வீரையினெய்துஞ்
சுரர்கள்சத்துருவாமதுகைடவர்கடஞ்சிரந்துணித்துயர்மீனாய்
விரைவினினெழுந்துசதுமுகக்கடவுள்வினையறமறையினையுதவி
யரியிவர்பதத்தினடைந்தனனெனுஞ்சொல்யாழ்முனிமலர்மகட்கறைந்தான்.

மச்சப்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - கஉ௫.

கங. வது—கூர்மப்படலம்.

தந்தைதாய்பிராதாபதிசுதரிவர்கடுணையலவென்பதோர்தன்மை
யந்தகன்வெருவவருமிரணியன்கைகெசிகம்பத்துடையரக்கன்
சந்திரகுலத்துத்தருமனோடிளைஞர்தயையில்கஞ்சமனிடத்துணர்ந்து
சுந்தரவரியேயுயர்பதங்கொடுக்குந்துணைவனென்றறிந்துய்மின்றொண்டீர்.

பொருப்பிணைநகிலார்கலவியாடகம்வாழ்புவியிந்தமூன்றின்மேற்றினமும்
விருப்பமுற்றென்றுமிருப்பவன்போலவ்வியம்விளைத்துலகினிவ்வாக்கை
மரிப்பதும்யானுன்னுடனிகோதத்திறுறுவதுநிச்சயமனனே
பரிப்பவன்சாயிற்சுமடுவீழ்ந்திடுமென்றறிந்துநற்பிரமனைப்பகர்தி. (௨)

வகுலியாய்வைவச்சுதன்றனைக்காத்துவருமதுகைடவரைத்தான்
மிகமுனிந்திமைப்பின்வதைத்தமால்புகழைவிதர்ப்பர்கோனருள்மகள்கேட்
யகமலிகளிப்போடரிபினரியற்றுஞ்செயலினையறைமுனியெனநற் [டே
சகபதித்துவசன்கமடமாயெழுந்தகதையைநீகேளெனவறைவான். (௩)

தரையினிலனேகயுகந்தவமியற்றிச்சமனில்வித்தியாதரர்கன்னி
பரமனற்றிருமார்பழகுறவிளங்குபங்கயச்செல்வியையவணங்கி
சரியிலேழிசைகொள்கீதமாண்டறையத்தமனியவுருத்திருவழங்கத்
தெரியலையளியோடளித்திடவவளுஞ்சிறந்தயாழ்பிணித்துளமகிழ்ந்தாள்.

திருவிடைகொடுப்பத்தெரியல்யாழிலங்கச்சேர்த்தவள்சேணிடைவரலு
மருவமர்மலரோனிகர்துருவாசன்வனப்புறுங்கன்னியைநோக்கி
யரியநற்றவஞ்செய்தரியுரத்தமர்ந்தவணங்குனக்கருளியவலங்கற்
றருகுதியெனவேவணங்கலும்வனிதைதவனுக்கவ்விலம்பகமீய்ந்தாள். (௫)

உலகயின் றுமிழ்ந்துபடைத்தளித்தழிக்குமொருவன்மார்பழகுறவிலங்கு
மலருறையணங்குகுழலிடையொளிருமஞ்சரியான்செய்மாதவத்தால்
நலனுறவளிக்கப்பெற்றனனதனைநற்றவகொடுத்தனனென்று
சுலனணிவனிதையேகமாமுனிவன்களித்துவிண்ணவர்பதிசேர்ந்தான். (சு)

திருவணியலங்கல்கரத்திடையிலங்கத்திகழமராபதிமறுகின்
வருமுனிவலாரிவளைாகிரயிராபதக்கரிவெரிளின்மாமதிபோற்
றரளவெண்கவிகைகவித்திடநீலத்தடவரைமீதுபாற்கடலிற்
றிரைதவழ்சிவணச்சிறந்தசாமரைகள்குரைத்திடச்செல்வதுகண்டான். (எ)

மைமுகில்மிசையினெழுகதிரொளவேவயங்கியமணிமுடிவாழக்
கைமிசையுறநற்கலனிளவெயில்கள்பரந்தபோற்கவினுறவ்ஜ்ஜி
செம்மல்வந்துறத்துந்துமியுடனிடக்கைதிமிலைசச்சரிகடற்றிரையின்
மும்மடிதழங்கும்வளைசினங்காளமுழங்கியவொலிகடிக்குறவே. (அ)

இரவியர்விடையரிபுக்கள்சாரணர்களிமையவர்மித்திரர்வருணர்
மருதரொண்வசுக்களியக்கர்தும்புருநாரதர்தெய்வவயித்தியர்சோமர்
கெருடகாந்தருவர்சித்தர்கள்பிதுக்கள்கின்னரர்மறலிகிம்புருடர்
வருணமார்குபேரன்முனிவர்கடுவெட்டாமுதலினோர்மகிழ்ந்துசேவிப்ப. (கு)

கானவேழிசைசண்மலிந்திடத்தாளம்கவினுறுபணவமார்ப்பரிப்ப
வேனுவிழியார்நகநகுரகிலார்விதுநகுவதனியாரிரதத்
தேனுமொழியாருருப்பசியரம்பைதிலோத்தமைமேனகைமுதலோர்
பூநனிகுழலினசைந்திடச்சிலம்புபுலம்பிடநடம்புரிந்திடவே. (க0)

இனையவற்புதத்தோடிந்திரனமராபதிநகரிலங்கிடவரலும்
வினையறத்தவஞ்செய்துயர்துருவாசன்விழியிணைகளித்திடநோக்கி
நனிவெறிகமழுமலங்கலையளிக்கநலவமராபதிக்கிறைவ
னிதமர்செல்வமகிழ்ச்சியாலதனையெண்ணிலான்றுரோட்டியால்வாங்கி.

கயிலையங்கிரிபோற்கவினுறுகளிற்றின்கந்தரத்திலம்பகமணியப்
புயல்சொரிந்தெனமும்மதம்பொழிந்துயரும்பூட்கைதன்கரத்தினைநீட்டிச்
செயலுறவெறிகொளலங்கலையெடுத்துப்பதத்திறுற்படிமிசைத்தேய்க்க
மயர்வறுமுனிவனெரியுறநோக்கிவடவனல்பிறந்திடநகைத்தான். (கஉ)

திசைவிசும்பெரியச்சிவந்திடுநயனத்தனல்சொரிந்திடத்திகழ்வரைக
ளசைவுறவுயிர்ப்புச்சண்டமாருதம்போலடைந்திடவாசையினிலங்குங்
கசவினமிரியக்கதிர்மதிசுழலக்கடையுகக்கறைமிடற்றரன்போற்
சுசியுறநகைத்துச்சினமுறவதிதிசுதவிவைகேளெனமொழிவான். (கங)

உயர்வறவுயர்ந்தவொருதனிமுதல்வனுரத்திடையிலங்கிவீற்றிருக்கு
மயிலணிதெரியல்வித்தியாதரக்கன்னிகைபெறவவள்கையின்வாங்கி
யியல்புறவுனக்கின்றீயந்தனனதனையிறைஞ்சிடாதிகழ்ச்சிசெய்திடுநீ
துயருறவிபவமணிதருமுதலாயுதறிகொள்கெனச்சொலிச்சபித்தான். (கச)

எரியுறுநயனமுனிசினத்துடனேயியம்பியசாபத்தாலுவரி
பரவியங்கைந்துதருநவநிதிகள்முதலெலாங்கரந்துபாறிடலுஞ்
சுரரிறைவெருவித்துணியொடுவிபுதர்தொகுதியோடருந்தவரொய்த
விரணியவனாயின்சிமிலியினிருக்குமயனுடனிவைபகர்ந்தனனால். (கரு)

வினையறுமுனிவனுரைத்தசாபத்தால்விபவமோடுலப்பிலாதிழந்து
துனியுறுமதிதிசுதனிவைமொழியத்தூயமாமலருளோன்கேளாத்
தனிமுதலாகியுலகெலாம்படைத்ததயாளுவாநந்தத்துவமூர்த்தி
பனிகெடவிரவிவருவபோற்றோன்றிற்பவமறவிடர்கெடுமென்றான். (கசு)

இவையெலாமுரைத்ததிசைமுகன்பிறகியிமையவர்பதிமுதலிலேகர்
பவமறவுயரும்பயோததியெய்திப்பரமனைத்துவதெசாக்கரத்தால்
நவையறமனத்தைவிளக்கிமெய்யாகநலனுறத்தவஞ்செயுங்காலை
யவிர்திசையண்டநிறைந்திடக்கலுழன்புயமிசையச்சுதன்வந்தான். (கஎ)

மணிமுடிதிகிரிவலம்புரிசார்ங்கம்வாள்கதைவனப்புறுமெய்யி
னணியுரனமருந்திருவெழில்முதலாமவிரனந்தங்கதிர்காட்டப்
பிணியறுமுனிவர்விபுதர்களிலங்கும்பிரபையாலரியுருக்காணார்
பணியணிமுதலும்பங்கயத்தவனும்பரமனையறிந்திறைஞ்சினரால். (கஅ)

அரனெடுவிபுதரரியுருவறிந்துதொழுதிடவருந்தவருடனுஞ்
சுரரிறைமுதலோர்துனிகெடவணங்கித்துதித்துத்தம்மிடரெலாம்பகரப்
பரனவர்தமைநீயஞ்சலென்றருளிப்பரவையைக்கடைந்தமுதளிப்பன்
வெருவன்மினவுணர்தமையுமக்குறவாய்விரும்புமினென்றுரைபகர்வான்.

பிறையெயிற்றரவஞ்சிகரியோடமரும்பெட்டியைத்திறந்துய்யவேண்டி
மறுவிலொண்மணிசேர்படத்தின்மேலந்தவிரும்பனையெந்தவன்கருப்பை
நெறியுறவெயிற்றாற்கடிக்கவவ்வகிதானீங்கியவ்வெலியினைவதைத்த
செறுனைக்கருமமுறச்சுமந்தியற்றித்தெறுக்கலாம்பினரவர்தீய. (உ0)

ஆதலாலசுரருமக்குறவாகவியற்றியாண்டவரொடுமேவிப்
பூதலமிசையினுயருமந்தரத்தைப்புயவலியாற்கொணர்ந்துததி
மீதினினிறுவும்யானுமவ்விடத்திலொருவன்வெருவன்மினெனுஞ்சொ
லோதியெண்கணனொடமரர்கடுதிப்பவுயர்திருவனந்தன்மேலுற்றான். (உக)

அரியிவையருளிமறைதலும்வலாரியயனரனருந்தவருடனற்
சுரர்திதிசுதரையடைந்துநீரெமக்குத்துணைவராய்வாரியைக்கடைந்தா
லரியநல்லமிர்தம்பிறந்திடுமதனையருந்திநாமிறப்பிலாதிருப்பா
முரையுறுங்கருத்தென்றியம்பிடவசுரருவந்துதேவர்க்கிதமானார். (உஉ)

மாவலியுடனுந்தயித்தியர்சகாவாய்வருதலும்வலாரியோடமா
ராவலிற்கடுகியடைந்துமந்தரத்தையடைந்துதம்புயத்திடையமைத்தே
யோவுதலிலாமற்கொணர்ந்திடச்சுமக்குமுரனறக்கால்கரமொடிந்தாண்
டாவிபோயனேகர்விழவனாவிழுவமரற்றிநொந்தயைபட்டனரால். (உங)

சுரரொடுமசுரர்வெருவிநின்றரற்றியபயமென்றிடவுயர்சோதி
கருடவாகனனுயவர்முனிற்றோன்றிக்கன்வரைவிழமடிந்தவரை
யருளினாலெழுப்பியகன்றமந்தரத்தையருணன்பின்னோன்புயத்தழுத்தி
விரைவினிற்பயமார்பரவையினுயரகிறுவினன்விபுதர்கள்போற்ற. (உச)

வாசுகியுடலைப்பாசமாய்க்கனத்தமந்தரவரையினைச்சிமிழ்த்தே
யாசகறிருமாலமரர்களுடனவ்வரவினின்வாலினைப்பிடிக்க
மாசுறுமசுரர்பணிமுகம்பற்றவலத்திலெல்லோர்களுங்கடைய
வேசகல்பிறங்கனமுவமற்றதனையேந்துவாரிலாமலுள்விழுந்த. (உரு)

உயருமந்தரங்கீழுததியில்விழலுமும்பர்களுடன்புருகூதன்
றுயருறவவர்க்கவ்விடரினையகற்றச்சுந்தரனவருடனமர்ந்து
மியல்புடைக்கமடமாகித்தன்வெரிநினிலங்கியவோங்கருனெழநீள்
கயலுடையுவரியமுவத்துளெய்திக்கவினுறத்தாங்கினனன்றே. (உசு)

நியுதயோசனைநீண்டகன்றிடும்வரையைநிகரிலாக்கச்சபமாகி
யுயரும்வெண்ணிடையிற்றாங்கியசெயலையும்பர்களறிகிலர்பிறங்கல்
மயர்வறத்தானேயெழுந்ததென்றுளத்தின்மகிழ்ந்தவர்வலனுடன்கடைய
வியல்புடைக்கமடம்வெரிநிடைத்தினவங்கொழிந்ததிலதனிலையெளிதோ.

வாசுகியருமலதனுடலிடையின்வலனுறுசத்தியைநிறுத்தி
யாசகல்வரைமேற்கிளர்ந்திடாவண்ணமங்கையாலதனுச்சியமைக்கத்
தேசுறும்விபுதர்தயித்தியருடனுந்திரண்டிருபக்கமுங்கடைய
மாசுணமுகத்தினுகாந்தவக்கினிபோலெழுந்ததுவரும்புகையுடன்றீ. (உஅ)

அரவிருநோக்கத்திடைவிடுமூச்சுமழலும்வெம்புகையுமாயடர
வரைநிகரசுரருடல்பொறியுகத்தாம்வருந்தினர்விபுதர்கள்வருந்தா
தரிபொழிமழையாய்க்கந்தவாகனனுயவர்மெயினயர்வினையொழித்தான்
கயலுறுமுவரிகடையவுமமிர்தங்காண்கிலார்கடைந்தயர்சலித்தார். (உகூ)

சுரரொடுமசுரர்சுழலுமந்தரத்தைக்கடைந்துதங்கரவுரந்துலைய
வரியவர்மெலிவையறிந்துநீர்கடைதலொழிமினென்றவர்களைநிறுத்திச்
சரியில்சக்கரத்தோன்றன்னெழிற்கரங்களாயிரங்கொடுசலதியின்கண்
வரைசுழன்றிடத்தான்வலனுறக்கடைந்தான்வானவர்தானவர்மருள. (௩0)

நெடியனகரங்களாயிரங்கொண்டுநிகரிலாமந்தரஞ்சுழலக்
கடையுமுக்கிரத்தாலுததியிற்றிரியுங்கட்செவிதிமிங்கலமகர
முடல்மறுகிடப்பல்சீவனுமுலையவிவையெலாமோருருவாய
வடவனல்மறுகவெழுந்ததங்காலவிடந்திசைவானமண்மறைய. (௩க)

கடையுகச்சுசியிற்றசமடங்காகிக்கருமையாயெழுந்தெரிகொளுவிப்
படிதிசைவானமயர்ந்துவந்திடநற்பரமனைமூடியதென்றே
யுடனடுங்கசுரர்சுரரொடும்வெருவியோடிவெண்கயிலையினெய்திக்
கடிகமழ்கொன்றைச்சடையனைவணங்கிக்காவெனக்கபயமென்றனரால்.

அரியயனரனாய்ப்படைத்தளித்தழிக்குமாதியஞ்சோதியாமமலா
திரிபுரமெரித்தெம்மிடரினைக்களைந்தசிவசிவவந்தகாந்தகனே
யெரியெழுந்துலகமேழையும்விழுங்கவெதிர்ந்திடுமாலமிவ்விடத்திற்
சரணமுன்றாளெம்மிடர்கெடுத்தாளென்றுரைத்திடச்சங்கரன்மொழிவான்.

இரைதிரைக்கடலிலெழுந்திடுமாலமிவ்விடத்தெய்தியதென்று
வெருவன்மினென்றங்கருளியுத்தமியாய்விளங்கியவுமையுடனுறைவான்
பரவுபகாரமாகவவ்விடத்தைப்பாரணைபண்ணினாற்சரியி
லரிதிருவுளத்துக்குவப்பதாமதனாலரிவைநீயஞ்சலையென்றான். (௩௪)

படிதிசைககனமுதலெரிந்திடவான்பரந்துவந்தெதிருமாவிடத்தைக்
கொடியிடைபாகனுலகெலாமுவப்பக்கோமளவங்கையினேற்பக்
கடுகுபோலாலந்திரண்டமர்ந்திடலுங்கடிதினில்விழுங்கிடக்கண்டத்
திடையினிலமரவெழிலுறுகாளகண்டனாம்பெயரிறையானான் (௩௫)

அந்தரந்திசைபாரடங்கலுமெரித்தங்கடர்ந்திடுமாலகாலத்தைக்
கந்தரந்தரித்தவிறையினைக்கண்டேகளிப்புறுமமரரோடவுணர்
துந்துமிமுழங்கத்தருமலர்பொழிந்துதுதித்துநின்றாடினர்பாடி
யெந்தைநீயெமைக்காத்தருளுமீசனுநீயென்றடியிறைஞ்சியேத்தினரால்.

கயிலையங்கிரிமேற்கவினுறவுமையோடமர்ந்தகங்காதரன்றன்னைத்
துயரறவிபுதர்வலாரியோடவுணர்துதித்திடவரன்விடைகொடுப்பக்
கயலுடைக்கடலின்மந்தரஞ்சுழலவாயிரங்கரத்தினாற்கடையும்
புயல்வணத்தரிபாலசுரர்புத்தேளிர்புரந்தரன்புகன்றிறைஞ்சினரால். (௩௭)

மீயுயர்வரையைக்கமடமாய்த்தாங்கிமீதலைகிளர்ந்திடாதமுக்கித்
தீயுமிழரவமுடலருவண்ணஞ்சிறந்ததன்சத்தியைநிறுவி
யாயிரங்கரத்தாலமிர்தம்வந்தெழவேகடைந்தனனாதியாம்பரம
னேய்விலாதொலிக்குமுததியினுச்சைச்சிரமெனும்பரியுதித்ததுவே. (௩௮)

நிகரிலாப்பரியைப்பரமன்மாவலிக்குக்கொடுத்திடநிறைந்திடும்படிகப்
புகரிபந்தெய்வமடந்தையரிலங்கும்பாரிசாதம்மவண்பொலிய
மகபதிக்களிக்கவளப்பிலாதுயருஞ்சவுந்தரியம்மெயின்மன்னப்
புகல்வதற்கரியதமனியக்கொழுந்துபொலிவபோற்றிருவவதரித்தாள். (௩௯)

கனகமெய்யிலங்கக்கவினெலாஞ்சிறப்பக்கடலிடையுதையமாந்திருவை
முனிவர்கள்விபுதர்தயித்தியர்நோக்கிவிரகவேதனையின்மூர்ச்சித்தார்
துனியகன்றிடவேவலாரியிந்திராக்குச்சொன்னபீடத்தினையிட்டான்
வினையகன்றிடவப்பயோததியருளுமெல்லியல்வீற்றிருந்தனளால். (௪௦)

திரிபதைமுதலாஞ்சிறந்திடுநதிகடிகழ்ந்திடுமரிவையருருவா
யிரணியவருணக்குடத்தினிலயத்தையேந்தியங்கீந்திடவெட்டுக்
கரியவர்கரத்திறகனககும்பங்கள்கடிதினில்வாங்கினர்கோக்கள்
பரிவுடனுதவுபஞ்சகவ்வியமெய்ப்படியநீராட்டியவன்றே. (௪௧)

அவனிமாதளியாலங்கராகத்தோடுமவயங்கலந்தசந்தளிப்ப
வுவமையின்மலர்கள்வசந்தனங்குதவவுததிவெண்ணேத்திரமிரண்டு
கவினுறக்கொடுப்பவிபுதர்கட்கரசன்விசித்திரக்கலனெலாந்தரவே
நவமணியினங்களிலங்குகுண்டலங்களுகர்களீந்தனரன்றே. (சஉ)

சரியிலாத்தரளவடஞ்சரசுவதிதந்திடத்திருவிவையெல்லாம்
பரிவுடனணிந்துமகிழ்ந்திடும்வேலைப்பரவைமன்செயந்தியென்றுரைக்கு
மரியுறுமலங்கல்கொடுத்திடவதனையங்கையின்வாங்கியுண்மகிழக்
கருடகாந்தருவர்கின்னரர்கீதங்கிளர்ந்திடப்பாடியாடினரால். (சங)

வேதபாரகர்நற்சுருதியைவிளம்பித்துதிசெயமேகங்களெழுந்து
மோதுதுந்துமியானகமிருதங்கம்பணவங்கோமுகஞ்சங்குமுரச
மோதையார்கலிபோனிறைந்திடமுனிவரோதியமுகூர்த்தத்திற்கவினார்
பாதமீச்சிலம்புபுலம்பிடநடந்துபதியினைநாடினடிருவே. (சச)

இருடிகளிடத்திற்றவமுளவெனினுஞ்சயித்திடாதொழிகிலரிணையில்
சுரர்குருவிடத்தும்பார்க்கவனிடத்துந்தூயமாஞானமுண்டெனினும்
விரிவுறுகாமம்விடுகிலர்வலாரிக்குயர்விபவங்களுண்டெனினும்
பெருமையுற்றிடத்தன்வலனிலையெனுஞ்சொற்பேசியங்கேகினளம்மா. (சரு)

சீருறுபிரமாதிகளிடத்துயரும்பெருமையுண்டெனினுஞ்சிறந்த
நாரிமேற்காமம்விடுகிலார்பாரினலமுறுசிபிமுதனிருபர்க்
கேருறுதானமுளதெனிலவர்க்காயிசுவிலைகாத்தவீரியற்கும்
வீரமுண்டெனினுங்கமையிலையென்றுவிளம்பியேயேகினளம்மா. (சசு)

தவமுறுசனகசனகாதியர்க்குத்தாழ்விலாவாயிசுண்டெனினு
முவமையற்றிருக்குநலனிலர்மாற்கண்டயனென்றுமுளனெனினவியும்
நவையுறவிறையிந்திரியநிக்கிரகமிலையிந்தநற்குணமெல்லாஞ்
சிவனுளனெனினுமங்களன்மசானப்படையுடன்றிரிவனென்றகன்றாள்.

சிவன்முதலாகவெவரையுமெள்கிச்சென்றிடும்பங்கயச்செல்வி
யுவமையில்சகலகுணமுடைத்தாகியுயரரியிவனெனன்றேயவன்றன்
கவினுறுமார்பத்திலங்கிடச்செயந்தியலங்கலைக்கரத்திறைச்சார்த்தித்
தவர்களெட்டாதபதத்தினின்றிறைஞ்சித்துதித்தனடனைநிகரிலாதாள். (சஅ)

திருவுயரரியைச்சேர்ந்துளமகிழச்சிறந்தநற்றுந்துமியிடக்கை
வரிவளைதிமிலைமத்தளஞ்சின்னம்வாரியினொலியினுமுழங்கச்
சுரரயன்வலாரிமுனிவர்கள்முதலாய்மலர்மழைசொரிந்துநின்றுடித்
தெரிவையர்திலகத்திலோத்தமைமுதலோர்சிறந்ததீபங்களேந்தினரால்.

வாரியின்வயங்குதமனியக்கொம்புமலர்ந்தபோலெழிலுறத்தெய்வ
நாரியர்தமக்குத்திலதமாயெழுந்தநங்கைதன்புயத்தினிலணியுஞ்
சீருறுஞ்செயந்திமாலையின்வெறியார்மகரந்தம்பெருகத்தேன்மொய்ப்ப
வேருறுமுராத்தையரியளித்திடலுமிலங்கவீற்றிருந்தனடிருவே. (ருo)

உயர்பயோததியின்மலர்மகளுதையமாகியபின்னரிறைப்பில்
செயலுறமிளிர்வாருணியெனுங்கன்னிதிகழ்வுடன்வருதலுமவளை
யியல்புறுமசுரற்கியந்திடப்பினரினீருருபுயத்துடனிலங்குந்
தனையுடையவனுயமிர்தமார்கலசமேந்தித்தன்மந்திரியுதித்தான். (௫௧)

ஆயுருவேதந்தனக்குயர்தெய்வமாகிமாமுகுந்தனுருருவாய்த்
தூய்தவனெழலுமவன்கையினமிர்தம்துலங்கியபொற்கலசத்தை
யேயெனுமுனரினமரர்கள்வாங்கியசுரரிதனைக்கவராமல்
மாயவகாத்தியெனவவனடியின்வணங்கியேசரணடைந்தனரால். (௫௨)

சுரர்பயமெய்திச்சரணமென்றடையச்சோதியுமமக்கிந்தச்சுதையைத்
தருகுவன்றரையின்மிசைவயுமெனுஞ்சொற்சாற்றிடவமிர்தமார்கலசம்
விரைவினிலவனிமீதினின்வைப்பவினையுறுமசுரராங்காரம்
வரவலியதனலதுதனையெடுப்பமாயவனகைத்திவைசெய்தான். (௫௩)

சுரர்களுக்கமுதமளித்தவரிடைத்துணித்திடச்சோதியாம்பரம
னரிவையர்திலதமானமோகினியாயளியுறுமலர்குழலிலங்க
விருவிலவளைத்தங்கெயுமிளிர்விசிகமிதுவென்றுதல்விழிவயங்கத்
தரளமொத்திலங்குதசனமும்வலாரிகோபமாமதரமுந்தயங்க. (௫௪)

இந்துவைப்பிளவுசெய்துவைத்தனபோலிலங்கியவளிகமேருறநற்
சுந்தரத்திலகந்துலங்கிடமணியார்தோடுசோத்திரத்திடைவயங்கச்
சந்திரனெழிலைப்பழித்திடுவதனந்தயங்கப்பொற்குமிழ்த்துண்டஞ்சிறப்ப
நந்திளைநகுகந்தரத்தினன்கதிரைநகுகலனவிர்மலிந்திடவே. (௫௫)

வேயினைப்பழித்துவிளங்கியதோளின்மிளிர்மணித்தொடிகைவில்வீசத்
தூயபொற்கைகளழகினைப்பழித்துத்துலங்கியகரத்தினிற்சுடர்கள்
பாயுநன்மணிகள்மலிந்திடவிலங்கும்பசும்பொனின்கடையங்கணிறையத்
தேயுநுண்ணிடையிற்சிறந்தபொற்கலிங்கமெழிலுறமேகலைதிகழ. (௫௬)

சீருறுமமிர்தநிறைந்தபொற்கலசமுலையமாய்ச்சிறந்திடல்சிவண
வாரமாவடங்களழகுறவணியினவிருறக்கலவைகள்கமழ
வேருறப்பணைத்துக்கதித்துறநெருங்கியிருமுனைகறுத்திறுமாந்து
வாரினைமுனிந்துகெறுவிதமாகிவளர்ந்திடும்பயோதரம்வயங்க. (௫௭)

வடவிலைமிசையிற்கருமைசேருறவியொழுங்குறவயங்கியசிவண
விடவிழியணங்கின்வயிற்றிடையுரோமம்விளங்குகூதாளியின்சுழியை
யடர்திருநாபியழகுறவுருவிலந்தரம்போன்றிடைதுவளக்
கடியுறுகமலமலரெனத்திகழுங்காலிணையிலங்கியதன்றே. (௫௮)

பரிபுரமரற்றச்சதங்கைகள்கொஞ்சப்பரிமளமேனிமேற்கமழச்
சரிவளைகரத்திற்கறங்கிடத்தொடிகைதயங்கிடக்கந்தரமிலங்க
விருதனம்வயங்கவவிர்கொணித்திலத்தாவடமசைந்திடவிருவிழிகள்
பரவியவசுரருயிரினைப்பருகப்பசும்பொனின்கொம்பெனவடைந்தாள். (௫௯)

கடைவிழிநோக்கமெழிலுறுகோடிகந்தர்ப்பருயிரினைக்கவற்றப்
படர்நிலவளித்தவிளநகைமுனிவரறிவுறுஞானத்தைப்பறிக்கக்
குடமெனவயங்குந்தனமியோகிகட்குவிரகவேதனையினைக்கொடுப்பத்
துடியிடையழகுதயித்தியர்கருத்தைச்சூறைகொண்டிடநடந்தனளால். (கூ0)

மறுளுறுமசுரர்மனமெனுங்கலைகள்மன்னிடமருங்கினின்வயங்கத்
தெரிவுறுங்கலையாந்தீபகங்காட்டச்சிறந்துநீண்டகன்றிடுநயனப்
பெருவலைவிசிறியிளநகைக்கயிற்றுற்பிணித்துமாநதியெழுஞ்சுழியின்
பரிசினைப்பழித்தேயிலங்கியவிலஞ்சிப்படுகுழிபடுத்திடவந்தாள். (கூக)

தெரிவையர்முதலாய்விரகமுற்றனையச்சிறந்திடுமோகினிவரலுஞ்
சுரரரியருளாற்றமைப்பயந்தெடுத்துத்துலங்கியவனையெனநோக்க
வரைநிகரசுரருயிருடனறிவுபறிபடமதிமிகக்கலங்கிக்
கரைசெயற்கரியமயலுறவெவருங்கண்ணிமையாதுபார்த்துரைப்பார். (கூஉ)

ஆலமோநயனமாரமோதசனமாம்பலோவதரம்வந்தடருங்
காலனோமுறுவல்ககனமோமருங்குகாமனுக்கரசினைநிறுத்துங்
கோலமார்விசையத்தம்பமோகொங்கைகூற்றுவன்வரவிடுசுருள்செய் [ர்.
யோலையோகுழையின்மணிமிளிர்தோடென்றுருகியேசோர்ந்திவையுரைப்பா

அயனெமநயனங்களிப்புறவிடுத்தவற்புதவமிர்தமோவின்றெம்
முயிர்மனங்கவர்ந்துவந்திடுமின்னுனூரொதுபேரொதுபகர்வா
யயல்நமக்காருமிலையுனையேநாம்நம்பினமிவ்வமிர்தத்தை
வியல்புறப்பகிர்ந்தீண்டீதியோவெனவுமேந்திழைநகைத்திவையுரைப்பாள்.

தெரிவையர்கருத்தைத்திசைமுகன்றனக்குந்தெரியவுமரிதெனவுரைப்பார்
புருடர்நீரெனைநம்பினமெனுமுறையைப்புகலுவீரெனவிதந்தேத்தி
வரைவினிலவர்கைச்சுதைநிறைகலசமிளிர்வளைக்கரத்தினில்வாங்கிச்
சுரரொடுமுமக்கிவ்வமுதினைப்பகிர்வனென்றுபின்சொல்லலுற்றனளால்.

இயானுமக்கினியென்னுமக்கியான்பகிருஞ்சுதையினையெப்படியிடினும்
நியாயமாய்க்கருதியிருத்திரோவெனுஞ்சொனிகழ்த்திடவெமதுயிர்நீயுன்
கையாலுமுன்மனதின்படியினேயிடினுநல்லெனக்கருதுவமெனவே
தயாளுவாய்ச்சுரர்தமிடர்கெடவெழுந்ததையனல்லாளிவையுரைப்பாள்.

நீரயத்திடையிற்படிந்துபவாசநெறியுடனிருந்துநாளைக்கு
வாருமென்றுரைக்கவவர்களுமகிழ்ந்துவனிதைதன்சொற்படியேகி
நீரிடைமூழ்கிப்பசியுடனிருந்துங்கரிலாச்சுதைபொசித்திடத்தா
மார்வமோடெலோருமறுதினம்வரலுமமரரும்வணங்கிவந்தடைந்தார். (கூஎ)

விரிவதாய்நிவந்துதமநியம்நிரையவிளங்கியமண்டபமிசையின்
சரியிலாவலங்கறயங்கிடத்துபதீபமும்நிறைந்தவண்சாரச்
சுரரொடுமசுரர்குசைகளாசனமாய்த்துலங்கிடவதன்மிசையாகக்
கரமிசையமிர்தகலசமங்கிலங்கக்கவினுறுமோகினிவந்தாள். (கூஅ)

வருமவளெழிலைநோக்கியுண்மகிழ்ந்துவளைகிரசுரர்களுநாப்பா
ரரிவைநீயியாயவடைவினிங்குதவென்றறைந்திடவவளுந்தன்மனத்திற்
றுரிதராமிவர்க்கொன்றிடாமலேநெறிசால்சுரர்களுக்களிப்பதுநலனென்
றுரைசெயாதுள்கியவுணர்கள்விரகமுறநகைத்துநோக்கலுற்றனளால். (சுகூ)

வெற்பெனும்புயத்தினவுணரைநோக்கிமிடலுடையவர்கணீர்தேவர்
துற்பலரவருக்கியான்முனரற்பசுதையினையளித்ததற்பின்னர்
பொற்புறுகலசமிகுதியையுமக்கீண்டிடுவனென்றிதவுரைபுகன்றே
யற்புதத்தணங்குவிபுதர்கட்கன்பாலமிர்தெலாமளித்தனண்மாதோ. (எ௦)

அலையுநற்குழலாலளிகசிந்துரத்தாலானனவழகினுல்வளையுஞ்
சிலைநுதல்நெறிப்பாற்கடைக்கணினோக்காறசிறந்தசோத்திரத்தலைதொடர
விலவிதளெழிலால்முறுவலாற்கமலமுகைநிகர்நகிலினுலிடையாற்
கலையுடையதனுலசுரரையுருக்கிக்கடிதினிறசுரர்க்கமுதளித்தாள். (எக)

விதுநலவிரவியிவர்களுப்பணிநோர்மிடையுடையசுரன்வானவனுய்க்
கதுமெனவமிர்தநுகரவாண்டமரக்கண்டரியாழியாற்றுணிக்கு
விதிவழிச்செயலால்ராகுவுங்கேதுவாகியுங்கிரகத்தின்விளங்கச்
சுதையெலாமமரர்க்களித்தவள்கலசந்துடைத்தங்தோர்வமிர்தமில்லென்றாள்.

சுரர்களுக்கமுதமுதவியேகலசந்துடைத்திலைசுதையெனவவுணர்க்
குரைசெய்தாண்டவரைநகையினுலுருக்கியுவணமேற்பெண்ணுருவொழிந்தே
யரிபயோததியினடைந்திடவசுரரமரர்மேற்சினங்கனன்றுகாந்த
வெரியெழுநயனரிரதமாதுரகமிபமெணிலெழவெதிர்ந்தனரால். (எ௩)

சேவலோனெனவெஞ்சினத்துயர்மயனுற்செய்தவைகாயசவிமான
மாவலியமர்ந்துகொடிகுடைவயங்கமருங்கினிற்சாமரைபுரள
வேவொருதனுவும்விளங்கிடவெண்ணில்பலபடையிலங்கியேதோன்ற
நாவலோர்துதிப்பவவுணர்களார்ப்பவிமயவர்நடுங்கிடவந்தான். (எச)

சம்பரன்வாணன்விப்பிரசித்திசகுனிதாரகன்கயக்கிரீயன்
செம்பனுற்கரன்றீநிகர்பகன்சங்குசிராவயோமுகன்பவவிமூர்த்தன்
றும்பனில்வான்மாத்துந்துமிநிசும்பன்றுன்மருடன்குரோதவஞ்சீ
ரம்பரநடுங்கவருமயன்கபிலனட்டன்சந்தாபன்சக்கிரனே. (எரு)

வலன்புலோமாநாகாசுரன்சிரும்பன்வச்சிரத்தெயிற்றவனமுசி
நலனிலாமயிடாசுரனுயரரிட்டனேமிமாகர்ளியனுபன்
கொலைபயிலிரவவுலோமன்மாவுசனன்கூற்றுவனஞ்சிடுமிராகு
கலனணிவிவாதகவசனேடிலங்குகாலகேயனுமடைந்தனரால். (எசு)

ஏதியோடயர்ந்தங்கெழுபிரகேதியெதிரிலாச்சுமாலிமாதவர்கள்
பீதிகொண்டாற்றவடர்ந்திடுமாலிபெருவரைபொடிபடக்கதையால்
மோதியேமுனிவிவிருடபருவாத்தீமுடுகிடவிழித்துலகினுக்குத்
தீதுறப்பருவிற்கொடுமிதிசழ்காலநேமியோடனைவருஞ்சென்றார். (எஎ)

கரிபரியிரதங்கார்வயப்போத்துக்கடசமார்விருகமாற்சால
மிருணிகோமாயுக்கோடரநகுலமெஃகினங்குடாவடியிரலை
யருணமூடிகஞ்சிக்குரூடம்வெஞ்சரபமடுமெயிடஞ்சசஞ்சாக
மெரியுறுநயனக்குயவரிசிரல்வாயசமும்வாகனங்களாயெதிர்ந்தார். (எ௯)

சல்லியம்வாமியுட்டிகன்சூரன்றந்தகூசன்வருசிகிரி
யொல்லையினடைந்தங்குயருங்கோலாகலத்துடன்முசலிகைதெறுக்கால்
வல்லையினசுரரிவைமிசையமர்ந்துவாளயில்வேல்குந்தம்விசிறிச்
செல்லினந்தீயவெரியெழவிழித்துச்சென்றனராசுகஞ்சொரிந்தே. (எ௯)

தோலடிகரடம்வயவனற்கபோதஞ்சுவாகதஞ்சிவல்சில்லைகம்புள்
வாலொளிர்சரணாயுதஞ்சிகிகுடிஞைவருகருசங்கங்கழுகு
மேலினிற்சிலவரமர்ந்திடமகரந்திமிங்கலம்விளங்கியவிடங்கர்
காலுடைக்குளிரமிவைகள்வாகனமாய்க்கடிதுவந்தார்த்தனரன்றே. (அ௦)

துந்துமியிடக்கைபடலிகைதக்கைதுடிகைசச்சரிபம்பைபணவ
நந்துயர்திமிலைகரடிகைமுரசுநவையறுகம்பலிகடுவை
சிந்துவினொலியுந்தியங்கிடமுழங்கச்சின்னங்காகளமெலாமார்ப்ப
வந்தகனடுங்கவரக்கரோடவுணரடர்ந்தனர்திசையெலாமெரிய. (அக)

நிருதரோடவுணர்பரிகரிமிருகநிறைந்திடும்பறவைகள்மகர
மெரிவிழியிடங்கர்திமிங்கலவிரதமிலங்கிடவெதிர்ந்திடமுனிந்து
சுரரிறையயிராபதத்தெருத்ததனிற்றுலங்கியகொடிகுடைதயங்க
விரிகதிர்மௌலிவிளங்கிடவுயர்சாமரையெங்கும்வீசிடவந்தான். (அஉ)

வேறு. இரவியர்பிதுக்கள்கங்குல்னரிபுவிசுவதேவர்
வருணனெண்விசுவகன்மாவசுக்கள்வாதாவிகாமன்
குருசனிவிடையர்தெய்வவயித்தியன்குபேரன்றேயு
மருதர்மித்திரனிலேகர்வியாவசுதுவட்டாவாயு. (அங)

பத்திரகாளிசாத்தாப்பகரரிபராசிதன்மாச்
சத்தமாதாக்களாகுஞ்சரியிலர்மங்கைபங்கர்க்
கொத்தவிருடாக்கபியோடொப்பிலாவீரரொல்லா
மத்திமாக்கரங்கள்வெய்யமிருகமீதேறியார்த்தார். (அச)

சங்குகாகளங்கள்சின்னஞ்சச்சரியிடக்கைதக்கை
சிங்கலிவுருமைகோடிதிமிலைமாமுரசுபாண்டில்
மங்குல்போலதிர்க்கும்பேரிகும்பிகைதுடிகைவாரி
பொங்கியங்கெழுந்தவோசைபோலவார்ப்பரித்ததன்றே. (அரு)

வேறு. அடல்முடுகிவீரரானதெவர்களமரர்பதியோடுமானைதேர்பரி
மிடையவரலொடுமாறில்மாவலிமிகமுனியமீளியேறுதானவர்
கடகரிகளேனமாகும்வாசிகள்கடவுநெடுவாளிசோனையாமென
முடுகியயல்வேல்கள்வாள்கள்மாகதைமுகிலிரியவீசினார்கள்கூடியே.

விழிகள்கனல்வீறநீறுபூசியவிமலனெனவேதுநேரிலாதெழு
பழுதில்விடைமீதிலேறிவான்வருபவர்களழல்மேவும்வாளிதூவிட
வெழிலிகரியாகிவீழவேயெதிரிமையவர்கடோளுமார்புதாளற
வுழுவையினம்வேகமாகிமேல்வரவுழலுமுழைபோலவாடியோடினார். (௮௭)

அசுரர்திரள்கூடியோடுமோசுகமனல்பரவவேவிவாள்கள்வேலுகள்
விசைகளுறவீசிவாசிமாகரிவிடைகள்சிகிகரடநீடுமூடிகம்
முசுவமுழுவைமீளியாளிபாடலமுதுகுதுடைகால்கள்வீழவானுயர்
பிசிதமலைபோலநீளவேகறைபெருகுநதிபோலமேவுமோடியே. (௮௮)

அரியுழுவையேனமானையாவிகமருணமிசையேறிவீறுதானவர்
சொரிகணைகள்சூரராகிமேல்வருஞ்சுரர்கடலைதோள்கடாள்கள்மார்புகள்
கரிகளுடல்வாசிநாசிவாமமெய்கடிதினறவோடவோடிவீழ்கறை
பருகியுயர்பேய்கள்பாடியாடினபணவமொடுபேரியோசைசேரவே. (௮௯)

அவுணர்திரள்வாள்கள்வேல்கள்வாளிகளயில்கள்கனல்காலவேவியேயடர்
சிவன்வெருவமூடலோடும்வானமர்தினகரர்கள்காலன்வாயுமாமத
னவையிலறுதேவர்தேர்கள்யானைகள்நகுலமரிமோழல்நீடுமேதிகள்
சிவல்சரபமேறிவீறியேகணைசிதறினார்களாசைதோறுமூடவே. (௯௦)

சுரர்கடிரள்கோபமோடுவாளிகள்சொரியவசுரேசர்தோள்கடாளுடைச்
சிரமிருகைமார்புநாசிநாவிழிசிதறவுயர்சியம்யானைபாடல
மிருணிசசமேடம்நீடுகோடரமிரலைவெளில்கூகைகரடமூடிகம்
வரைவிழுவபோலவீழவோடினவருகரைகள்கூளிமூளைபூசவே. (௯௧)

புலவர்திரள்கூடிமூடிநீள்கணைபொழியவசுரேசர்வாகுகாறுடை
தலையறுவர்தேரினுணிசாரதிதலனிறுவதூணியோடும்வார்சிலை
நிலையிறுவவரனளாவுநீள்கொடிநெடியகடல்மீதினோடுமோகல
மலையினமிழ்போழ்தின்வீழுபாய்மரமெனவகலுமாழிநீரினாழ்வன. (௯௨)

கரமறுவர்காலகேயரானவர்கழலிறுவர்காளிநாயன்மாதிரள்
சிரமறுவரோதியோடுகூடினர்செவியறுவர்வாணனனவீரர்க
ளுரமறுவர்சூரரானதானவருடலறுவாமேதியேனமூர்பவ
ரரையறுவர்மீளியாளிமேலினரலகைகளியோடுபாடியாடவே. (௯௩)

கடகரிகள்கோடுகால்கள்வாலொடுகரமறுவதேரினுணியாழிகள்
கொடியறுவவோடும்வாசிநாசிகள்குரமறுவமீளியாளிஞாளிக
டுடையறுவதீயரானவீரர்மெய்துளையுறுவதூணியோடுவார்சிலை
கடிதினறவாடியோடிவீழுவர்கடலினிடையோடுசோரிவிழவே. (௯௪)

வருணன்மழைபோலவாளிதூவிடவடிவுடையமாரன்வேல்கடாவிட
விரவிமழுநேமிவாள்கடான்விடவியமனயில்காலபாசம்வீசிட
வருசுரர்கள்கோபமொடுவார்சிலைவளையவழல்பாயவோடுமாகணை
சொரியவசுரேசரானவீரர்கடுயரமுறவாசைதோறுமோடினார். (௯௫)

வேறு. வசையறுவருணன்மயிடமமர்ந்தோன்மதன்வெய்யோன்
விசையுறுமமரர்பலர்களுமேவிவிடுமம்பால்
நிசிசரரசுரர்கரமுடறுணியகிலையற்றுத்
திசைதொறுமுறலின்மாவலிநெஞ்சிற்சினமுற்ருன். (௯௬)

இரவியினவிர்போலிலகியவைவகாயசமென்னுஞ்
சரியில்விமானமிசையினிலேறிச்சலமிக்குச்
சுரரொடுதிசையின்ருேலினம்வெருவவுலகுட்க
வருசிலைநாணிஞெலியுறமழைபோற்சரமெய்தான். (௯௭)

வரிசிலைமூன்ருேம்பிறையெனவளையவடிவாளி
யெரிபுகையுறவேயிறுதியின்மழைபோலெய்தார்ப்பச்
சுரர்சிரமிருகாறுடையுரமிருகைதுணியுற்றுக்
கரிபரிமிருகங்கசமுடலெல்லாங்கடிதிற்ற. (௯௮)

சுரியுரமொருகைகாலறவரைபோனிலன்வீழப்
பரிகுரமறநீள்படிவிழவிரதந்துகளாக
வரிகரியிருணியயமிருகாரியடியற்றுத்
தரையினின்விழவங்குடல்குறைதாவிநடமிட்ட. (௯௯)

சிவனெனுமுனிவாமாவலிகையிற்சிலையாலே
யுவணனுமுலையவிசைகொளும்வாளியுலகெங்குந்
தவர்பயமுறவேசொரிதலும்விபுதர்சரமற்றங்
கவனியினோடக்கண்டிடுமெவுணர்திரளார்த்தார். (௧௦௦)

மாவலிசிலையாலேவிடும்வாளிமழைபோலே
மேவிடவமரர்வெருவியுடைந்தநிலைகண்டு
தேவர்தமிறைவன்றிகழ்கரிமிசையிற்சினமிக்கு
மூவுலகதிரமுடுகியெதிர்ந்தான்வலையூதி. (௧0௧)

வரிசிலைநாணிஞெலிதிசையுறவேவடிவாளி
கருமுகிலெனவெங்கனலுறவிடலுமசுரேசர்
நிருதர்கடலைகாலுரமரையறவேநிறைசோரி
யிரைகடலுறநீளிபமயமிருகங்கசமற்ற. (௧0௨)

கடையுகவிறுதிதனிலெழுமுமையாள்கணவன்போல்
வடவரையிவருங்கரிமிசைவரும்வானவர்கோமான்
கடவியகணையாற்கரிபரியறவேயசுரேச
ருடைதலும்வெருவலெனவுயபோதியெதிருற்ருன். (௧0௩)

அந்தகன்வெருவவார்கலியெனவார்த்தெதிரேகி
சிந்தியகணையாற்கரிபரியிரதத்திரள்மாளத்
தந்தியைமிவருமுவரியினிறைவன்றழல்கண்ணன்
முந்தியநிருதன்றேரினைமூடக்கணையெய்தான். (௧0௪)

இருவருமமரிவிடம்வலம்வருவார்கணைமாரி
சொரிகுவர்வேலுஞ்சூலமும்விட்டேபொரும்வேலை
விரைவினில்வருணனலவன்வாளிவிடலோடு
மிரதம்வில்லறவேபாறினன்வரைபோலெதிரேகி. (க0ரு)

ஏதிபின்னிடலுமெரிசினமுறவேபிரகேதி
சோதிசெயிரதமீதுதுலங்கிச்சுரரெல்லாம்
பீதியையுறவான்பெய்முகில்போலப்பிறைவாளி
மாதிரமறையத்தூவியடர்ந்தான்வரைபோல்வான். (க0சு)

அத்திரமாரிதூவுமரக்கர்பெருமான்மேல்
மித்திரனெய்திவெஞ்சரம்விட்டேயவன்வில்லு
மத்திரியுறுதேர்தனையுமழிப்பத்தரைமீதிற்
குத்திரநிருதன்றேடினன்விண்ணோர்குழுவார்ப்ப. (க0எ)

வேறு. மீளிபோலெய்தியேவினையுறுநிருதர்கோன்
ஞாளிபோலோடலுங்கண்டுநன்கென்றுவிற்
காளிநாபன்கடுங்கதமுடனெய்திவெவ்
வாளிபெய்தார்த்தனன்வானுளோரஞ்சவே. (க0அ)

வந்திடுங்காளிநாபன்விடும்வாளியாற்
சிந்திடும்தேவரைக்கண்டுகண்டியெழு
வந்தகன்கதைகொடேயவனுறுந்தேரினை
யுந்தியேபொடிபடுத்திடலுமங்கோடினான். (க0கூ)

காளிநாபன்கடிதோடலுங்கண்டனன்
மீளிபோலெதிர்மயன்விசிகமாமழைபெய
வாளியுமிரதமுமிவுளியும்வீரரும்
தூளியாய்மடியவேசுரர்பயந்துன்னினார். (கக0)

மயன்விடும்வாளியால்வானவர்மடியுமத்
துயர்கணிற்கண்டனன்றூயவிச்சுவகன்மா
வயனுடைவ்வலசமுமஞ்சவென்றவன்மெயிற்
சயமுடைத்தண்டினாற்சாடவேபாறினான். (கக)

உம்பரின்மயனுடைத்தோடலுமெதிரிலாச்
சம்பரனிரதமேற்சார்ந்தழலாசுக
மம்பரமறையவேசொரியவெம்பரியரி
யும்பன்மண்படியவானும்பருமோடினார். (ககஉ)

வேறு. வருசம்பரனெய்திடுவாளியினாற்
சுரர்மங்கிடவேதுவட்டாகெடிய
வரிவில்லினிலாசுகம்வான்மறையச்
சொரியப்பவன்மெய்துளைசெய்தனவால். (ககங)

சுரர்வந்துதுதித்திடவேதுவட்டாச்
சரமெய்திடநொந்திடுசம்பரனும்
வெருவித்தலனோடவிறன்னமுசி
வரையொத்துயர்வாளிசொரிந்தனனால். (ககச)

அரியொத்தடருந்நமுசிக்கொடியோன்
சரமொத்தவிலேகர்கள்சாய்ந்திடலும்
வரையொத்தபராசிதன்வந்துதொடுத்
தெரியொத்தனவாசுகமெய்தனனால். (ககரு)

விடையொத்தபராசிதனெய்விசிகம்
வடவைக்கனல்போலமடுக்கவவன்
கொடியுற்றிடுதேர்குலையப்படியின்
விடமொத்தவனோடிமெலிந்தனனால். (ககசு)

வேறு. மருடருமநத்துநமுசிக்கொடியவன்பா
ருருடருநலத்திரதமிற்றுநிலனோட
விருடபருவாவெதிரின்வந்துவில்வளைத்துக்
கருடனும்வெருக்கொளவிசைத்தகணைவிட்டான். (ககஎ)

செயத்தினுடனேயவுணன்வாளிமழைசிந்த
அயத்திரளுடன்கரிகள்மங்கவதுகண்டு
புயத்தின்வலியாற்புகழ்பொலிந்திடுமிலேகர்
வயித்தியர்கள்வில்லினெடுவாளிமழைபெய்தார். (ககஅ)

இமையவர்வயித்தியர்களெய்தவிசிகத்தாற்
கமையிலவுணன்கையிறனுக்கடிதிறத்தா
னிமையின்முனரின்வெருவியோடினனிலத்தே
யமிர்தம்நுகர்வோர்துதிசெய்தாடினர்களன்றே. (கககூ)

விருடபருவாவெருவியோடவிடமொத்து
மருடருமநத்துவிறல்வாணனிளையோரோ
டிருடருமதக்கரிகள்சூழவெதிருற்றே
வருடமெனவாளிகள்பொழிந்தனன்வலத்தால். (கஉ௦)

அருளிலவுணன்றசசதக்கையினுமார
வருவிலினெடுங்கணைகள்மாரியினுமொத்தக்
கரிபரியினோடமரர்மாளவதுகண்டே
யிரவிசுடர்வாளிமழைபெய்தெதிரிலுற்றான். (கஉக)

அலரிநிமிடத்துமுனராசுகம்விடுப்ப
நலமிலவுணன்கையினைநூறுதனுநாரி
நிலனிறுகளாகநிகரற்றுயரும்வாணன்
றலமிசையினோடியிளையோரொடுதளர்ந்தான். (கஉஉ)

வாணனிளையோர்களொடுமண்ணின்மிசையோட
நாணியசுரேசர்கணமொடுங்கிடவிராகு
தூணினைநிகர்த்ததொருதோமரமெடுத்தே
பூணினுடனேபுலவர்மார்புபொடிசெய்தான். (கஉங)

கதைகொடிமையோர்கள்குழுக்காலறவடித்துத்
திதிசுதர்கள்போற்றவருராகுசெயல்கண்டு
விதுமுனிவொடேவிசிகமெண்ணிலவிடுப்பப்
பதகனுயர்தண்டுதுகளாய்ப்படியின்வீழ்ந்த. (கஉச)

வேறு. சரியிலாச்சோமனெய்யும்வாளியாற்றண்டுதூளாய்
விரைவினிலிராகுபாறவிண்ணவரார்ப்பக்கண்டு
வரைநிகர்புலோமாவெய்திவானவர்மறுகியோடக்
கரிமிசைத்தோன்றிவெய்யகடுங்கணைபொழிந்தான்மன்றோ. (கஉரு)

பொறியுகப்புலோமாவெய்யும்புங்கவவருடந்தன்றூற்
கறையடியிவுளிவையங்கமிருகங்கள்சாய
மறுகியங்கமரரோடவசுவரிசசிவந்தெய்தி
யறையவான்பஞ்சுபோலவவுணன்றேருடன்போய்வீழ்ந்தான். (கஉசு)

இம்பரிற்புலோமாவோடவிமையவரார்த்தலோடுந்
தும்பனுநிசும்பன்றானுஞ்சுடுகணைமாரிபெய்ய
வும்பன்மாமகரங்கட்கமிருகமிட்டிகம்வெம்புல்லங்
கொம்புடைக்கோணிமாளக்குலைந்தனரமரர்கூட்டம். (கஉஎ)

அத்திரமாரிதூவியடர்ந்ததீயோரைநோக்கிச்
சித்திரகாயமேறிச்சினந்திடுமலகைதிய
வத்திரராகிச்சூழமடங்கல்வாகனமாயோங்கும்
பத்திரகாளிவெய்யபலபடைவிட்டேயார்த்தாள். (கஉஅ)

சூலமும்வேலும்வாளுந்தோமரம்பலவும்விட்டே
யாலமேபோலத்தோன்றியடர்தலுஞ்சிலையைத்தோற்றுத்
தாலமேற்றும்பன்றானும்நிசும்பனுந்தளர்ந்தங்கோடக்
காலனேபோலவந்தானசுரர்சம்பாவுட்காந்த. (கஉகூ)

தீயவனடர்ந்துவெய்யசிலீமுகம்பொழிந்தங்கார்ப்ப
பாயயங்கும்பிவாமிபாண்டில்மண்மடிந்துவீழ
வேயெனுமுன்னரஞ்சியிமையவரோடலோடுங்
காய்கனற்கண்ணன்மாவிருடாக்கபிகடுகிவந்தான். (கஙo)

வேறு. தூயோனெனும்விருடாக்கபிசூரரார்த்திடவெய்தித்
தீயோன்மிசையழல்வாளிகள்செலுத்தச்சிலையற்றுப்
பாய்மாவுறுமிரதம்படிதுகளாய்விழப்பயந்தே
யாயோவெனுமுன்பாறிடுஞ்சகடம்மெனவகன்றூன். (கஙக)

அயிராபதன்மகிழத்துய்யவிருடாக்கயியடரக்
கையிளுயுதம்விழத்தியவன்கடிதோடிடக்கண்டு
மயிடாசுரன்விடமாமெனமுனிந்தேசிலைவலியால்
நியுதாத்திரஞ்சொரிந்தானிமையோர்தங்குழுநீங்க. (கஙஉ)

வேறு. சுரர்கணடுங்கிடவேமயிடாசுரன்வாளிசொரிந்திடலு
முரனுறமேவியதூயவிபாவசுவிபுதர்களுண்மகிழ
வரிசிலையானெடுவாளிசொரிந்திடவாளவுணன்கவச
முருவிவெனுற்றிடலுங்கறைமெய்யுறவோடினன்வாடியரோ. (கஙங)

கல்லெனுமுரமுறுகவசமழிந்திடவேமயிடாசுரனும்
வல்லையிளோடிடவானவராரர்ப்பதுகண்டுயர்தேர்மிசையி
னில்வரன்வெஞ்சிலையால்விடுவாளிகளெங்கும்நிறைந்திடவே
புல்லமிடங்கர்குரேடமடிந்துயர்புலவர்களோடினரால். (கஙச)

வேறு. தீயிலவரன்முன்சீறிச்சிலீமுகவாளிபெய்ய
வேயெனுமுன்னரும்பரிரிந்திடலோடுநோக்கித்
தூயவாதாவியெய்திச்சுடர்விடுவாளிபெய்யப்
பாய்பரியிரதமற்றுச்சிலையிறப்பவன்வென்னிட்டான். (கஙரு)

பாய்பரியிரதம்வில்லிற்றிலவரன்பாறலோடுந்
தீயவனுனதுன்மருடணனுலம்போற்சீறி
யோய்விலாதெழுந்துபெய்யுமழையெனவுயரும்வில்லாற்
காய்கணைகடாவலோடுமமரர்மெய்யுதிரங்கான்ற. (கஙசு)

நன்மதிவிபுதரெல்லாம்நடுங்கிடக்கணைபெய்தார்த்த
துன்மருடணன்றன்சாபத்தொழிலினைச்சுசியோனோக்கி
மன்மதன்வருடவாளிபொழிந்திடமறவன்றேரும்
வின்முதலாகவற்றுவிளைவினிற்பாறினுனல். (கஙஎ)

துற்குணனுகிவந்ததுன்மருடணன்முன்பாற
வுற்கரன்முனிந்துவந்தேயுமையவள்கொழுனனஞ்ச
விற்கொடுபகழிமாரிசொரிதலும்விபுதரெல்லா
மொற்கமுற்றுதிரம்வாயாலொழுகிடவோடினுரால். (கஙஅ)

சுத்தராமமரர்பாறச்சுடுகணைசொரிந்துதோன்றுன்
மத்தவுற்கரனைநோக்கிவடவரன்முனுமஞ்சச்
சத்தமாதாக்களெய்தித்தண்டயில்வேல்வாள்விட்டே
யொத்தலுஞ்சிலைகடோற்றங்குதிரங்கான்றவன்வென்னிட்டான்.

உற்கரனயின்மெய்யுற்றேயுதிரங்கான்றோடலோடுஞ்
சுக்கிரன்முன்முனிந்துசுடுசரம்சொரிதலோடும்
கற்கடகந்தோல்குந்தங்காங்கடமிருகமோழல்
மற்கடமுதலாய்மண்ணின்மடிந்தனவமரரோட. (கச0)

உசனனுக்கிரத்தோடெய்தியுதாசனன்வாளிதூவத்
திசைதொறுமமரரோடச்சிறந்தபீதகன்றனெய்திச்
சுசியுறுகணைகளெல்லாமவன்மெயிற்சொரிதலோடுந்
தசையுடனாலச்சோரிதரையுகப்பாறினனால். (கசக)

சுரர்குருவடரப்பாறுசுக்கிரன்றனைக்கண்டு
நரகன்வந்தெண்ணில்கோடிசிலீமுகம்விடுப்பநாகஞ்
சிரகிகொய்யவைவாலேபஞ்சிக்குயவரிநூறுட
மனையிறைடமார்கைகாலறக்கறைவாரிசோர்ந்த. (கசஉ)

அந்தகன்வெருவவெய்துநரகனுசுகங்களாலே
யிந்திரன்முனரினஞ்சியிமையவரோடலோடு
மந்தன்மந்தரம்போற்குன்றிமழையெனவாளிதூவக்
கந்துகமுறுதேரற்றுக்கடியவன்பாறினனால். (கசங)

வேறு. பீதிகொண்டுநரகன்பெயர்ந்திட
நீதியில்லாதிவாதகவசர்கள்
வாதமஞ்சமணித்தண்டுகைகொடு
மோதவோடினரும்பர்கள்முந்தியே. (கசச)

பருதியஞ்சப்பவர்தண்டினாற்சுரர்
குருதிமெய்யினொழுகக்குலைந்திட
மருதரொய்திவருடங்கள்போற்கணை
சொரிதலும்மவர்மெய்யைத்துளைத்தவால். (கசரு)

ஆலம்போலமருதரடர்க்கநீ
டாலமீதினிவாதகவசர்தம்
வேல்வில்லற்றுவெறுங்கைகொடேகவெங்
காலகேயர்கடிதின்வந்தார்த்தனர். (கசசு)

சூலியஞ்சச்சுடுகணைமாரிபெய்
காலகேயரைக்கண்டுவசுக்கடாம்
வேலும்வாளுமுலக்கையும்வீசிட
ஞாலமீதவரோடினர்ஞாளிபோல். (கசஎ)

ஏயெனாமுன்னவுணரிடைந்திடத்
தீயைநேரிபலோமநுஞ்சீறியே
மாயவத்திரம்வீசிடவானவ
ராயிரங்கணன்முன்னஞ்சியோடினார். (கசஅ)

மாயைசெய்துமயக்குங்கொடியர்மேற்
றூயவிச்சுவதேவர்கடுன்னியே
சீயவெங்கணைசிந்தியடர்த்திட
வேயெனாமுன்னிரிந்தனர்திக்கெலாம். (கசகூ)

தீரராமசுரோசர்சிதறவெங்
கோரரானகுரோதவாகெய்தி
வாரிபோலவளைந்தம்புதான்விடப்
பாரிஞேடினர்பம்பியிலேகர்கள். (கரு0)

கடையுகக்கனல்போற்கடுந்தீயவ
ரடர்தலோடுமமரர்கள்பாறலும்
விடையெறெய்திவிட்டேறுமுட்கோன்மழுக்
கடவுவெய்யவர்கால்விசைத்தோடினுர். (கருக)

வருணன்மித்திரன்மாரன்விதுச்சனி
சுரர்குருத்தபனன்றுவட்டவசுச்
சரியிலண்டர்கள்தானிவர்தாக்கலும்
வெருவியேயசுரோசர்வென்னிட்டனர். (கருஉ)

சுரர்களார்க்கத்திதிசுதரோடலும்
வரன்மிகுத்திடுமாவலிநோக்கியே
யெரியெனச்சினமெய்தவிமானமே
லரியெனப்பெரிதார்த்துவந்தானரோ. (கருங)

சிலைவளைத்துச்சிலீமுகம்பெய்யவங்
கிலகுதேர்கரிமாவிறவீரர்க
டலைகைதோளுரந்தானறத்தேவர்கள்
நிலையிலாதுடைந்தார்பயநெஞ்சுற. (கருச)

இந்துசேகரனஞ்சவெதிர்த்தவண்
வந்தமாவலியைக்கண்டுவானவர்
சிந்தவெள்ளயிராபதத்திற்சிறந்
திந்திரன்னெதிர்ந்தானிணையில்லவன். (கருரு)

சுரர்களுதன்சுசியெனச்சீறித்தன்
வரிவிலாற்கணைமாரிகடுவேவே
சரியில்மாவலிசாயகத்தாலறுத்
தெரியுறும்விசிகந்தொடுத்தெய்தனன். (கருசா)

இந்திரன்மெய்யிலீரைந்துபாணமுந்
தந்திகாய்பவற்குச்சதுப்பாணமு
முந்துவெண்கரிமீதொருமூன்றம்பு
முந்தியார்த்தனரோசையண்டம்முற. (கருஎ)

அசியின்மாவலியார்த்தெதிர்தூவிடு
விசிகமெல்லவுமற்றுவிழுந்திட
வசையிலிந்திரன்வாளிகள்பெய்திடச்
சசிதரன்னெனத்தானவன்சீறினுன். (கருஅ)

இண்டைசேர்சடையோனெனுமாவலி
யண்டர்கோன்மிசையம்பொன்வரைநிகர்
தண்டுகொண்டங்கெறிந்திடத்தானவர்
மண்டியார்த்தனர்மானவன்பாறவே. (௧௫௯)

அண்டரண்டமுடையுமென்றஞ்சியே
புண்டரீகன்றிகைத்திடப்போந்திடுந்
தண்டுசாயகத்தாற்றுகளாக்கினு
னெண்டவத்தவரோத்திடவிந்திரன். (௧௬௦)

ஏயெனுமுனிற்றிண்டிறல்மாவலி
தீயெழச்சினம்விஞ்சிடச்சீறியே
தூயவேதன்சுரர்கணடுங்கிடக்
காய்கனற்கதிர்ச்சூலங்கடாவினுன். (௧௬௧)

வேறு. மாவலியேவிடவண்டநடுங்கிடவிடுசூல
மூவிலையோரமும்வடவனல்மூடிடவரலோடுந்
தேவர்களதிபதிசிலையொடுபகழிகள்முகில்போலத்
தூவிடவயிறுகளாகிவிழுந்தனசுரரோத்த. (௧௬௨)

வேறு. சூலமிமைப்பினிற்றுகளுறமாவலிசுரர்களுமஞ்சவெழு
மாலமெனச்சினமல்கிடமாயமுறும்படைவிடவவனிற்
காலனும்வெருவிடவேமிருகாபதிகொடுவரிகட்செவிதோல்
கோலம்விரிச்சிகமாகியெழுந்தனகுவலையமெங்கணுமே. (௧௬௩)

வாரியெழுந்துவளைந்தனவிறுதியின்வாயுவறைந்திடவெங்
கோரநெடும்படைகொண்டுயர்நிருதர்கள்கூடிமலைந்திடவெஞ்
சோரிவளூரம்விழுக்கொடுசெய்கள்சொரிந்திடவேயலகை
பாரினிலெங்குநடித்தனநிகரில்பருப்பதமழைபொழிய. (௧௬௪)

நிருதர்கள்வாயினிலங்கிநிறைந்துநெடும்படைதூவிடவே
யரிபுலிகரடியதிர்த்திடமத்தகசங்களடர்ந்திடவான்
கிரிமழைபெய்திடமாசுணமாலமுமிழ்ந்திடவெங்கரிக
டரையையிடந்திடவானமெலாமுயர்சலதிவளைந்தனவால். (௧௬௫)

மாயமுறும்படைமாவலியேவிடமாதவர்வானவர்தம்
நாயகனேடுநடுங்கியிவ்விடரினைநீக்கிடநண்ணுதியெம்
மாயமுகுந்தபராபரவச்சுதமாதவமாவுருவத்
தூயவநாரணகேசவவென்றுதுதித்தயர்வேலையின்வாய். (௧௬௬)

வேறு. நிகரற்றுயர்ந்தவசுரேசன்விட்டநெடுமாயையெங்கும்வளையச்
சிகரத்தையொத்தகரிமீதினுற்றவிறைதேவரோடுசெயலற்
றுகமுற்றுநாளினிடருற்றபோலவுளமஞ்சமாயனுவணக்
ககமுற்றிரண்டுசுடர்பற்றிமல்குகருடமகமென்னவரவே. (௧௬௭)

வடமேருமீதின்வருகொண்டலென்றினவிருத்திலங்கமறுவில்
கடிநீடுகோகநகமல்கிவந்தகவினென்னமாயன்வரவே
விடமாகியெங்குநிறைமாயம்விண்டுவெளியாகவானிலுறைவோ
ரடிமீதிறைஞ்சிநெடியோய்முகுந்தவருளாளவென்றுதொழவே. (கசுஅ)

விடுமாயமற்றுநெடியோனுயர்ந்தககமீதின்மேவியிலகக்
கடிதாகவந்துநிவர்காலநேமிகரிமேல்வயங்குமிறைமேற்
சுடர்வீசுசூலம்விடநாலுவம்பல்சுசியாகவண்டரிரிய
விடமாயெழுந்துகடனீரும்வேகவெளியாகமுந்திவரவே. (கசுகூ)

சுரர்நாதனுவியுணவேதுலங்கிவருகின்றதூயவயிலை
யரிநாகர்கண்டுமகிழ்வெய்தவங்கைகொடுபற்றிவிட்டவவுணன்
சிரமீதினேவவவன்வீடலோடுமிமையோர்கள்தேவர்பதியோ
டடிமீதிறைஞ்சியலர்மாரிதூவியருளாளவென்றுதொழவே. (கஎ0)

விடநேரதாகிவருகாலநேமியயிலால்முடிந்துவிழவே
கொடிதாயமாலியுடனேசுமாலியழல்போலநெஞ்சுகொதியாக்
கடிதாயயானைபரிதேர்கள்கொண்டுகடல்போல்வளைந்தபொழுதின்
நெடிதாமுராரிசிலைகொண்டுவானநிறையாசுகங்கள்சொரிய. (கஎக)

கரிகால்களற்றவொருகையுமற்றகவின்வீறுகொம்புமறவே
பரிதாள்களற்றவெரினற்றவற்றவுயர்வால்படிக்கணிருதர்
சிரம்வானினுற்றவுடல்பாரினுற்றசெவிகண்களூருவலிசேர்
கரமார்புமற்றகவசங்களற்றசிலையற்றவற்றகணைகள். (கஎ௨)

கொடியற்றவற்றகுடைசாய்மரங்களறவற்றபாகர்சிரமா
வடியற்றவீரர்தலையற்றவற்றவவர்தோள்கண்மார்பமதமா
வுடலற்றவுற்றவுரனற்றகொற்றமுறுகையினோடுநிருதர்
முடியற்றசோரிநிலமுற்றுமுற்றமுகிலுற்றவற்றபிசிதம். (கஎ௩)

அரிவாளிதூவவவனேறுவீறுககராசன்வீசுசிறகால்
மிருகாரிகோணம்வெளில்காடைநாகமயின்மோழல்மேடகுலங்
கரிகோடரங்களுயர்வானினேறவசுரேசரோடுகவினுர்
பரிநீடுதேர்கள்சருகாகியேகியுடனேபடிந்துமடிய. (கஎச)

வரைபாதவங்களடியோடுபேரமகமேருவெற்புமசைய
வொருகோடிகாதமளவாகவீசுசிறகாலடிப்பவுயுருங்
கிரிபோல்மிடைந்தவசுரேசர்தூள்களெனவேகிளர்ந்துமடிய
உரகாரிசெய்தசெயல்கண்டுமாலியுளம்வேவநெஞ்சுகொதியா. (கஎரு)

வரைமீதின்வீழுமிடிபோலநீசன்மதியாதுவெய்யகதையா
லுரகாரிமீதின்முனிவோடுமோதவுலகேழளந்தபெரியோன்
றெரியாவலங்கொளுயராழியேவவயனோடுதேவர்திரளோர்
சுரர்நாதனோடுதுதிசெய்யவந்துதுணிசெய்தமாலிசிரசை. (கஎசு)

சுரர்வாழுமாலிதலைஞாலம்வீழவதுகண்டுநெஞ்சுதுடியா
வரைபோலெழுந்துவிறலார்சுமாலிமலரோன்வலாரியிமையோ
ரரனோடுமஞ்சவயில்கொண்டுவீசவரியெய்யும்வாளியதனை
யெரியாகநூறியவன்மார்பினேகவிழிசோரியோடுமயர. (கஎஎ)

கலனனமாலிமடியச்சுமாலிகடிதின்னயர்துபெயர
நலனுறும்வாளிதனையேவிநின்றநளினங்கொள்மாதுபதியை
மலரோன்வலாரியிமையோர்களாடிமலரேபொழிந்துமகிழ
உலகேழுநுங்குமிறைபாலின்வாரியணைமேவினன்னுவணன்மேல். (கஎஅ)

வேறு. காலநேமியுடைப்பில்கடுந்திறல்
மாலியங்குவரச்செற்றமாயவன்
வேலையெய்தவெகுண்டுயர்மாவலி
காலனஞ்சக்கடுங்கணைசிந்தினான். (கஎகூ)

இந்திரன்மெய்யிற்சோரியிழிந்திடத்
தந்திமீக்கறைவெள்ளந்தரையுக
மந்தன்மாரன்மறலிவிபுதர்கள்
சிந்தியோடச்சிலீமுகம்பெய்தனன். (கஅ0)

மலினமுற்றுபபுலவர்மண்டோடவே
சலமிகுந்தேயுமாவலிதன்மெயின்
வலனுறத்தந்தியூர்பவன்மாறிலாக்
குலிசம்விட்டுக்கொதித்துறவார்த்தனன். (கஅக)

வாசவன்விடும்வன்குலிசத்தினா
லீசனென்னவிலங்கியமாவலி
நாசமுற்றவன்போலுளமைந்தசு
ரேசரஞ்சவயர்ந்தனனிம்பரின். (கஅஉ)

இம்பர்மாவலிமூர்ச்சிக்கவெய்திய
செம்பொன்சீயமெனவந்துசீறியே
யம்பொன்மால்வரையாமெனுந்தண்டினா
லும்பரஞ்சவெளும்பலைமோதினான். (கஅங)

கதுமெனச்செம்பொன்கைக்கதைமோதவே
மதமுறுங்கரிமண்ணிடைவீழ்ந்துதா
னுதிரங்கக்கியுளைந்திடமாதலி
விதமுறும்வையங்கொண்டவண்மேவினான். (கஅச)

மாலியானைமுனர்வந்துமாதலி
சீலவாகண்டலன்சிறந்தேறிடக்
கோலுமாவிரதங்கொணர்ந்தேயிடக்
காலனஞ்செம்பன்கண்டுளங்கன்றினான். (கஅரு)

இந்திரன்றனக்கிங்கிமையின்முனர்த்
தந்திசாயுமுன்வையந்தந்தானென
வந்தகன்கலங்கும்மயில்கைக்கொடே
யுந்தமாதலிமார்பிடையுற்றதே. (கஅசு)

அயிலுரத்துறலும்மயர்மாதலி
துயரநோக்கியதூயசுரர்கள்கோன்
கயிலுறுங்குலிசத்தைக்கடாவவே
யியல்பிலாச்செம்பன்றன்சிரமிற்றதே. (கஅஎ)

பாரிற்செம்பன்மடியவலன்பக
ஞரிகாதுறநற்சிலைதான்வளைத்
தேர்கொளிந்திரன்மேலினெண்ணாயிரங்
கோரவெங்கணைசிந்திக்கொதித்தனன். (கஅஅ)

சுரர்கள்கோனிரதத்திற்றுலங்கிய
பரியின்மேலுநாலாயிரம்பல்லவம்
விரைவின்மாதலிமேலுமெண்ணாயிரம்
சரமுந்தூவினன்தானவரார்ப்பவே. (கஅகூ)

பகனுடேவலன்பாய்பகழித்திரள்
சிகியுமஞ்சச்சொரிந்திடத்தேவர்கள்
புகலிடமிலராகிப்பொருமினர்
மிகவுஞ்சோரிகளாறெனமேவிய. (கக௦)

கலர்விடுத்தகணைகளிற்பாடலச்
சலம்வலாரிதன்மெய்யினிற்றுனுகக்
குலிசம்வாளவர்கோன்முனிந்தேவிட
வலனுடேபகன்மண்மிசைமாண்டனன். (ககக)

வலனுடைபகன்மாய்ந்திடக்கண்டனன்
நலனிலாதநமுசிநற்றேவர்கள்
குலையவெங்கணைகோடியின்மேலெய்தெவ்
வுலகுமஞ்சிடவூதினன்சங்கமே. (ககஉ)

தீயர்விட்டசரங்களைத்தேவர்மன்
தூயவச்சிரத்தாற்றுணிசெய்திட
மாயம்வல்லநமுசிவரைமழை
யேயெனுமுனவொங்குஞ்சொரிந்தனன். (கக௩)

காலமாவருடம்மெனக்கன்மழை
வேலனேகம்விடுதலுந்தேவர்கோன்
கோலவச்சிரங்கொண்டுதுணித்திடச்
சூலமேந்துநமுசிதுரந்தனன். (ககச)

நமுசிவிட்டநவையற்றுயரயி
லமரரஞ்சவரவதிதிப்பெணின்
குமரன்வெய்யகுலிசத்தறுத்திட
விமையவர்திரளெங்கணுமாடினார். (௧௯௫)

கடியனேவுமயிறுணியக்கண்டே
விடமெனக்கணையெங்கணும்வீசலுங்
கொடியவெஞ்சரத்தாற்குறைத்திந்திரன்
சுடர்விடுங்குலிசத்தைத்துரந்தனன். (௧௯௬)

வேறு. இந்திரன்குலிசந்தன்னையேவிடநமுசிவன்பார்
கந்தரந்துணிக்கலாமைமீண்டதுகண்டுவெண்டோ
ளுந்துவோனுயர்விருத்திராசுரன்றனைக்கொன்றோங்கு
மிந்தவச்சிரமித்தீயோன்றனைப்பற்றுதென்னோவென்றான். (௧௯௭)

தீயவன்றனைக்கொலாமற்றிரும்பியகுலிசமென்றே
யாயிரநயனனோவவுயரசரீரிவெய்ய
தாயுலர்ந்ததிலும்பச்சைதன்னினுமிவன்றன்சாகா
னீயிவையிரண்டுமில்லாததனிற்கொனெறியீதென்ன. (௧௯௮)

உயரசரீரிசொல்லவுலர்ந்திடாபச்சையாகா
வியல்பெனவெனவேசுட்டியிரையுநீர்நுரையைவாங்கிக்
கயினுறவெறிதலோடுநமுசியைக்கண்டமாக்க
மயர்வறவமரர்பொற்பூப்பொழிந்துளமகிழ்ந்தாரன்றே. (௧௯௯)

பின்னும்போர்துடங்கும்வேலைபெருமையார்கமலன்சொல்லால்
மன்னிநல்வீணையோதுமுனிசமர்விலக்கமாயா
தின்னமுதருந்தினோர்கள்யாவருங்களித்தங்கேகத்
துன்னியமகிழ்வினோடுஞ்சுரர்பதியிலங்கினானல். (௨௦௦)

தந்திரமெல்லாம்பட்டுத்தானவரோடலோடுந்
துந்துபிமுழங்கத்தெய்வமடந்தையர்துலங்குதீப
முந்தியேயெடுப்பத்தூயமுனிவர்களேத்தத்தேர்மே
லிந்திரன்பதியினெய்தியிலங்கிவீற்றிருந்தானன்றே. (௨௦௧)

மாலியுமெதிரிலாதவலன்பகனமுசிதானுங்
காலனுங்காலநேமிதன்னுடன்மடியக்சாதித்
தாலமேலயர்ந்துவீழ்ந்தமாவலியுசனன்சாற்றுஞ்
சீலமார்பொருளாருஞ்சஞ்சீவியாற்பிழைத்தானன்றே. (௨௦௨)

அவுணரோடமரரெல்லாமமரொழிந்தேகப்பின்னர்
சிவனுயரனந்தன்மீதிற்சிதரன்றன்னைக்கண்டு
சுவையுறுமமிர்தமீய்ந்தமோகினிசுருபங்காண
வவமையிலிறைவவிச்சித்தேனென்றங்குரைத்தானன்றே. (௨௦௩)

அரனிவைமொழியக்கேளாவரிநகைசெய்துநேர்
னுருவுடையஞ்சங்கிளைபிணிமுகங்கபோதமுற்ற
வரியுறுமலரின்வாசமடர்ந்தபூங்காவிலங்கச்
சரியின்மோகினியாய்த்தோன்றித்தன்னுருக்கரந்தானன்றே. (உ0ச)

வேறு. மீனெனவிலங்கிப்பழுதிலாமையினால்விளங்கிடுங்கோலமாயரிமெய்
மானவேவாமம்நிறைந்திடுங்கருமைவயங்கப்பார்க்கவன்குலத்தவனு
யானிசெய்யிலங்கையரக்கனந்தகனேந்தம்பெனவலர்ந்தரியொளியாய்
வேனலானையனையமுறவவிர்பொற்றொடிசேர்குழையடர்விழியாள்.

வேறு. அயனமைத்திடவுமொண்ணாவற்புதவுருவமாகி
யியல்புடைத்தெய்வமாதரியாவரும்வெள்கியேத்தக்
குயில்சுவாகதங்களெல்லாமொழியினாற்குறைந்தேயோட
உயரனநடையாற்றோற்கவுருத்திரன்முன்னர்நின்றாள். (உ0சு)

அலங்கல்சில்லளகபாரத்தழகுறவானனத்தி
னிலம்பகம்விளங்கித்தோடுமிலங்கிடக்கந்தரத்தின்
கலன்கள்வில்வீசவாரங்கவினுறநகிலினாடத்
துலங்கநேத்திரங்கலாபந்துடியிடைவயங்கவந்தாள். (உ0எ)

கந்துகங்கரத்தினேற்றிக்கடைவிழியசனோக்க
வந்தரமதனின்மொய்க்குமளியெனவதன்மேற்காட்டச்
சுந்தரிபதங்களன்னந்தொலையவேநடிக்கவார
மந்தரவரைபோற்பொங்குநகிலினின்வயங்கியாட. (உ0அ)

கோலமாரேகப்பந்துகோடிமேலுளதாமென்னக்
காலினாற்கரத்தாற்றோளாற்கவினுறுமுழங்கைதன்னால்
ஞாலமேனடிப்பள்விண்ணிற்றுலங்குநற்கையிற்றோன்று
மேலுங்கீழ்சுற்றுங்காணும்விரைவின்மாதடிக்கமாதோ. (உ0கூ)

கைபுகச்சிவக்குமேலிற்கண்டிடிற்றவளமாகும்
மெய்கணைநிகர்க்கநோக்குவிழியினாற்கருகுமோரா
துய்யகந்துகமிவ்வண்ணமாகியேதுலங்கிக்காட்டி
நொய்யதாகியநுசுப்புநுடங்கிடவடித்தாள்மன்னோ. (உக0)

கைவளைதிருத்துந்தோடுகாதினில்வயங்கச்சேர்க்குந்
துய்யமாதளிகவேர்வுதுகிலினாற்றுடைக்குமார
மெய்யினிற்கோலமாரவணியுமேகலையைமின்னும்
நொய்யதாநுசுப்பின்மீதினிறுக்கும்பந்தடிக்குமன்னோ. (உகக)

தூயயோகியர்க்குமெட்டாச்சோதியோர்தையலாகி
மாயையையியற்றிப்பந்துமண்மிசையெழிலான்மோத
வேயெனுமுனரிற்றோன்றவிருநகிற்றுகிலைநீக்கப்
பேயினஞ்சூழும்பேதைபாகன்றுண்டித்தனான். (உகஉ)

வாசமார்வசந்தமெய்திமங்கைதன்கொங்கைமீதிற்
றூசினைநீக்கலோடுஞ்சுசியுறவிரகமெய்தத்
தேசுறுமுமைபுங்கங்கைமங்கையும்வெள்கச்சேர்ந்தே
யீசனம்பாங்குவீழவெழின்மினைத்தழுவவந்தான். (உகங)

தழுவியபுராரிகையிறசார்குவார்போலவங்கண்
கழுவியவனிதையோடநாணமுமகலவேகச்
சுழியெழுமாறுபோலவீரியஞ்சுரந்துகாலி
னொழுகிடவவணின்மாசாத்தன்கடிதுதையமானான். (உகச)

வீரியந்தனாயிற்றோயுமிடமெலாமிளிருமாழை
சாரவேயோடப்பாறுந்தய்யலைத்தழுவவெய்தும்
நாரிபாகத்தன்வெள்கநங்கைதன்வேடமாறிச்
சீரியகருடன்மீதிற்சிறந்தரிதிகழநின்றான். (உகரு)

தூயனுஞ்சோதியெய்தித்துலங்கிடவுமைதன்கேள்வன்
மாயையங்கலஞானமெய்தநான்மறைகொடேத்தி
நீயியற்றிடவேநீளுமயக்கவாரியினைநீந்த
மாயையில்வல்லார்யாவரொனுமுறைவழங்கிச்சொல்வான். (உகசு)

நேயமாயிவணின்மாயத்தழுந்துமென்மேலென்றும்நீ
மாயையிம்மருளையேவாதருளெனவணங்கியேகத்
தூயபாற்கடலினுப்பண்டிலங்கியவனந்தன்மீதி
லாயிரம்பெயரினையனமர்ந்தினிதிருந்தானம்மா. (உகஎ)

கமடமாய்வரையைத்தாங்கிக்கடலினைக்கடைந்துதுய்ய
வமுதினையமரர்க்கீய்ந்தங்கசுரரைவதைத்துநேரி
லுமையிடப்பாகனுன்னேன்மருளுறவொருத்தியாகு
மெமதிறைசெயலிதென்றேயாழ்முனிபொறிக்குச்சொன்னான். (உகஅ)

கூர்மப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கசருங.

கச. வது—அண்டப்படலம்.

கேசவனாராயணனுயர்மாதவன்கிளர்கோவிந்தன்விண்டு
மாசகன்மதுசூதன்றிருவிக்ரமன்மன்னுவாமனனவிர்மலியும்
தேசுறுசிகரில்சிதரனிருடிகேசனொண்பதுமநாபன்சீர்
வீசியதாமோதரனெனவுரைபின்வினையறவுயர்பதத்துறலாம். (க)

வேறு. துட்டரையிணங்கிக்கொலைகளவியற்றிச்சுகமெனப்பிறர்மனைவிரும்பி
சிட்டரைநலிந்துபுவிபொருள்கவர்ந்துதினமின்னுவினைத்தியென்மனனே [ச்
விட்டிலும்விளக்கையுண்வெனவிரும்பிவிழுந்தவண்மடிவதேசிவனைக்
கட்டமார்பிறையத்தழுந்திடாதுயர்ந்தகதிபெறவரியினைநினைத்தி. (உ)

ஆதியிற்பாகவதபுராணத்தைஅரியயற்கருளநாரதற்கு
வேதனுமுரைக்கநாரதன்வேதவியாசனுக்குரைக்கவும்வியாசன்
மாதவமயித்திரேயற்குஞ்சுகற்கும்வண்மையாற்சூதற்கும்பகர்ந்தா
னேதமின்மயித்திரேயனும்விதுரற்கியம்பிடவிதுரன்வீடுற்றான். (௩)

ஈதெலாஞ்சுகன்றன்பரிசித்தைநோக்கியேழ்தினமதனினீகேட்கிற்
றீதரன்பதம்பெற்றிடுவையெனமன்றினமேழின்முடியுமோவென்னக்
காதலாற்கட்டுவாங்கனுங்கன்னலிரண்டிற்கேட்டடைந்தனன்கதியை
யாதலாற்கேளென்றறையவேழ்தினத்தினரசன்கேட்டெய்தினான்முத்தி. (௪)

இதுவலாலுருக்குமணிக்குநாரதன்றனிசைத்ததைநைமிசாரணியத்
ததிற்சவுனகனேமுதல்வரொண்பத்தெண்ணாயிரர்முனிவரர்கேட்பச்
சதுமறைச்சூதனுரைத்திடும்வடநூற்சுலோகமாம்பதினெண்ணாயிரமும்
விதிதமிணைல்லிவரதையன்சொன்னான்விருத்தமொன்பான்சகசிரமே. (௫)

கச்சபமாகிவரையிணைச்சுமந்துகடலிணைக்கடைந்தமிர்தத்தை
நச்சியவமரர்க்களித்தமாக்கதையைநளினமின்கேட்டுளமகிழ்ந்தே
யச்சுதனுகர்ந்திங்குமிழ்ந்தவிவ்வண்டத்துலகெலாமழிந்திடுஞ்செயலை
நிச்சயமாகப்பகர்வனத்திருவேங்கடவனமுனிநிகழ்த்திடுவான். (௬)

ஆதியுநடுவுமீறுமில்லாதவரும்பொருட்பகுதியின்முளைத்த
நீதிசேர்புந்திபுந்தியுளகந்தையகந்தையுட்பிரகிருதியதனுட்
டிகிலம்புலனுமொன்றினிலொன்றாய்த்தெசமடங்கதனிலோர்கூறாய்ச்
சோதிசேர்புவனஞ்சதுர்த்தெசங்கூடித்தோன்றியதண்டமானதுவே. (௭)

இப்படியண்டமனந்தகோடிகளாமெண்ணிலாவடுக்குகளதற்கு
ளொப்பிலாவண்டமாயிரங்கோடியோரடுக்கொன்றின்மேலொன்று
மெய்ப்புகழடுக்கினோரண்டத்துகையவிளம்புவன்யோசனைகணக்கின்
றப்பிலெண்ணிடுமோரியோசனையளவைச்சாற்றிடத்தையலேகேட்டி. (௮)

கதிர்த்துகளெண்மூன்றதுகசாக்கிரத்ததுவெட்டேயிலாக்கையாமதுநான்
குதித்தரும்யூகையூகைபெட்டியைபயையிபைபவைமூன்றங்குலத்தவ்வா
மதுவறுநான்குகரங்கரநான்கேதனுதனுவிரட்டியேதண்டங்
கதிதண்டமிரண்டாயிரங்குரோசமதாங்குரோசநான்கியோசனையொன்றே.

அந்தயோசனையிலைம்பதுகோடியளவுபூமண்டலங்கடாக
மிந்தளவதற்கீழ்மேலுமெண்டிசையுமியற்சதகோடிவட்டமதாய்
முந்தியேபெட்டிமூடியாமுட்டையொன்றிடுமண்டத்தைப்பிரமன்
றந்தசுவாயம்பூமனுவருள்பிரியவரதனேதனியரசாண்டான். (௧௦)

அரசுசெய்பிரியவரதற்கேழ்மதலைபவர்பெயராக்கினீத்திரனும்
வரமிகுமித்துஞ்சிகுவனுமிந்திரவாகுவேவாடிரணியரோதா
விரகுளகிருதப்பிருட்டன்மேதாதிவீதிகோத்திரனிவரொழுவர்
இரணியவரைக்குமேழ்கடலேழ்தீவாக்கியேயெழுவர்க்குமீந்தான். (௧௧)

அறனுறுகமலனருள்சுவாயம்பூமனுவினுக்குதையமாமரசன்
பிறிதிலாப்பிரியவரதன்மாதவன்றன்பெயரெலாமறைந்துயர்பதத்தின்
மறுவிலாமாழையிரதமேல்வைகிவடகிரிசுற்றியெட்டாசை
யுறவவன்வையத்தாழியின்வழியினுவரிகளேழுமாயினதே. (௧௨)

வடவரைநிலத்திற்றாழ்ந்ததுபதினாறாயிரயோசனைவண்மை
யடியினிற்பருமம்யோசனையீரெண்ணாயிரமதினெழுமுயர்ச்சி
படியினிற்கிளர்ந்தெண்பத்துநாலானசகசிரயோசனைபரவ
முடிதனியகலத்தியோசனைமொழியின்முப்பத்திராயிரமன்றே. (௧௩)

செயவுறுபவன்பாரியாத்திரனெனவேதிகழ்வரைகுடதிசையிலங்க
வயங்குறையருவித்தேவகூடமுஞ்சேடாவும்பூருவதிக்கினமர
வுயர்திரிசிருங்கமகரமுத்தரத்தினுறைந்திடத்தெக்கணதிசையின்
கயிலையுங்கரவீரமுந்திகழ்ந்திடும்பொன்மலைக்கட்டவிட்டமாய்க்கதித்தே.

திகழுமிவ்வரைநாற்றிசையுமெட்டெட்டாந்தெசசகசிரத்தியோசனையாய்
நிகரிலாதுயரவதனிற்றெக்கணமாதிசையினிவர்கயிலையின்வாய்ச்
சிகரகோபுரங்கணிறைந்திடவுமைபாகன்றெரிவைவாமந்தனிற்சிறப்ப
வதிபினுபரணத்தான்றவரோத்தவமரர்கள்பணியவீற்றிருப்பான். (௧௫)

வடவரைநிவாயுயர்ந்திடநாலுபக்கமும்வயங்கிடுகிரிகள்
குடதிசைச்சுபாருசுவமுறுங்குணக்குமந்தரமேருமந்தரந்தெற்
கிடமதாயமருமுத்தரங்குமுதமிலங்குமிந்நாலெனும்பிறங்க
னெடியவொவ்வொன்றுக்கயுதயோசனையினுயரமாயுறைந்திடுமன்றே. (௧௬)

மேருவைச்சூழ்ந்துவிளங்கிடுஞ்சுவாருசுவமெழில்மந்தரமினிரு
மேருமந்தரமொண்குமுதமிந்நான்குகிரிகளின்விரிந்திடும்பூங்கா
நேரில்நந்தனஞ்சயித்திரவிரதம்நிறைந்திடும்வைப்பிராகந்தே
ணூர்வுறவயங்குஞ்சருவதோபத்திரத்துடனுலுமங்கமரும். (௧௭)

நாலுபூங்காவினடிவுறவயங்குமோடைகணான்கதாய்நிறையும்
பாலொளிர்செந்தேன்கன்னலின்சாறுபயமிவைமலிந்தலைமோதிச்
சேலொடுவரால்கள்சிறந்தபல்வகுலிகூருமந்திகழ்சிஞ்சுமாரம்
வாலவளையிவைகள்வளையெனத்திரியவாரிபோல்வயங்கியதன்றே. (௧௮)

மந்தரமிசையினிலங்கிடுஞ்சூதம்வயங்கியமேருமந்தரத்தி
லிந்துவையணவவளர்ந்திடுநாவலெழிலுறுசுவாருசுவத்தில்
கந்தமார்கதம்பந்தயங்கிடுங்குமுதங்கவினுறநிற்குநற்றுரோத
மிந்நான்மரமுந்தமால்மல்கிடவானிமையவர்பதமுறவுயரும். (௧௯)

பருவரைமிசையினிவருநான்மரங்களொவ்வொன்றினடியினிற்பரும
மிருபதிற்றைந்தாந்தொகைகொள் யோசனையாயீரைஞ்ஞூற்றியோசனையுயர
விரிவுறுகவடுதெசசதமென்றுவிளம்பிடியோசனையாகு [ம்
மிரணியப்பிறங்கலெழிலுறுநாலுபக்கமுமிலங்கியதன்றே. (௨௦)

மந்தரமிசையின்வயங்குகுருதத்தின்கனிவரையெனவளர்ந்ததனீர்
சிந்துவைநிகர்த்துவிரிவுடன்குணக்குத்திசையினிற்பெருகிடவதனை
யிந்துசேகரன்றன்மனைவியோடிலங்கும்வனிதையர்பலர்களும்பருக
வந்தமாமடவாருட்பரிமளந்தானையிரண்டோசனைகமழும். (உக)

மேருமந்தரத்தின்மிசையுறுசம்புப்பலமத்தகசமெனவிளங்கி
வாரிபோலதனீர்தெக்கணதிசையில்வருமிடமெலவும்பொன்னாகச்
சீருறவவண்ணின்மருங்குறுமடவார்திகழுறுமெண்ணிலாபரண
மேருறவணிவரதுதனைவாங்கியிலங்கிடவேகடஞ்செய்தே. (உஉ)

துலங்கியசுவாருசுவவரையதனிற்றோன்றியகதம்பம்பால்சொரிய
விலங்கியநதிபோற்குடதிசையுறவேயதுதனைப்பருகுமேந்திழையார்
நலங்கொளும்வதனப்பரிமளஞ்சதயோசனையெட்டுத்திசைதொறுநண்ணிக்
கலன்களோலிடத்தன்கணவர்களுடனற்கலவிசெய்துசுமகிழுவரால். (உங)

குமுதமால்வரையின்சகசிரவல்சமெனப்பெயர்படைத்தந்தக்குரூத
மமுதநேரெனப்பால்சொரியவுத்தரமாதிசையிடையாறெனப்பெருகிச்
சமையுமோதனம்பாறயிர்குளந்துப்புத்தரவவைபொசித்திடுமவர்க
ளிமையவர்தொழவேநரைதிரைமூப்பற்றிலங்குவரொவ்வனமுறவே. (உச)

கிரிபொழிலோடைமரமிவைநான்குங்கிளர்ந்திடுந்தமநியப்பொருப்பின்
சிரமுறுங்குமுதங்காருடங்குசும்பஞ்சேதிவாசகந்திரிகூடஞ்
சரியிலொண்யதங்கம்நிடதமஞ்சமம்வைகங்கடங்கபிலமாச்சங்கம்
விரிவுறுவைடூரியமிவைமுதலாயிரங்கொடுமுடிவிளங்கியதால். (உரு)

இயல்புறவுயராயிரங்கொடுமுடிகளிலங்கியவடவரைநாப்ப
ணயனமர்ந்திலங்குமயுதமோடேகசகசிரயோசனையகலஞ்
செயலுறுநகரம்வயங்கிடவதனைச்சூழ்ந்திடத்திசையினெண்பால
ருயர்பதியொவ்வொன்றகலமஞ்சாயைஞ்ஞூறதாம்யோசனையாய. (உசு)

உலகமேழளந்தோன்வாமபாதத்திலுவமையிலங்குட்டவுகிரி
னிலகிடவெழுந்தசுரர்கதிதூயவேழுமாமுனிவரும்பரிவாற்
பொலனுறச்சுசியாய்ச்சிரமுறப்படியப்பொருந்துநற்சீதத்தைமலிவாய்
நலனுறவிதுத்தானமர்ந்திடும்பதத்தைநண்ணிப்பொன்மேருவிற்குதித்த. (உஎ)

இரணியவரையினயன்பதியதனினிலங்கிடக்குதித்தவானதிதான்
பரவிநான்முகமாயெழுந்துமேற்றிசையிற்சக்குவென்றேபகர்பெயராச்
சரியிலாக்கேதுமாலகண்டத்திற்றயங்கிடவிழுந்துமேலுவரி
திரையுடனுடைந்துகிழிந்திடவடையுஞ்செகதலமதிர்ந்திடச்சிறந்தே.

விரிவுடன்குணக்குத்திசையினிற்சீதையெனும்பெயர்விளங்கிடவெழுந்து
சரியிலாதிலங்கும்பத்திராசுவகண்டத்தினிற்றுவியத்திசையிற
பரவையையடையும்வடதிசையுறவேபத்திரையெனும்பெயர்விளங்கி
மருவமர்பொழில்சூழ்குருகண்டமிசையின்வழிந்தந்தவாரியின்வீழுமால்.

செம்பொன்மால்வரையிற்குதித்தவானதியுத்தரதிசைகுடக்கொடுகுணக்கி
னம்புவிமிசைமுப்பெயருறவழகநந்தையாம்பெயரினையடைந்தே
யிம்பரினுயர்தெக்கணதிசையதனினிலங்கியபரதகண்டத்தி
னம்பொடுமனவேயெழுபெயருடைத்தாயலையுறமோதிவந்தணுகும். (௩0)

பரதகண்டத்தினையடைந்தவானதிதான்பாவினியிலாதினிநளினி
சரியிலிம்மூன்றுபெயருறக்கிழக்கிற்சாகரமிசையின்வானிழியும்
விரிவுறுசுசக்குச்சிதைநற்சிந்துவெனப்பெயர்மூன்றவண்விளங்கப்
பருதிசேர்ந்தொளிக்குந்திசையினிற்பரவைபடிந்திடுங்ககனத்திநெறியால்.

பருதிசேர்ந்திலங்குகுணக்கொடுகுடக்கிற்பரவையினிவ்வறுபெயராய்த்
திரையுறக்ககனநெறியின்வீழ்ந்திடவேதென்றிசைக்கங்கையாய்ச்செகத்திற்
பரவியமனிதர்பவத்தினையறுத்துப்பகிரதிசானவியெனத்தா
னுரைசெயவிளங்கிப்பெருகியேகுணக்கினுவரிநீரொதுங்கவீழ்ந்திடுமால்.

செம்பொன்மால்வரையைச்சிறந்திடச்சூழ்ந்ததீவுகள்செம்புவண்பிலக்க
மும்பர்கள்மகிழுஞ்சான்மலங்குசநற்கிரவுஞ்சமுவமையில்சாகம்
வம்பவிழ்பொழில்சூழ்புட்கரமிவையோடேழுமாய்வளைந்ததினேழா
மம்பரம்லவணந்தேமதுத்துப்பொண்ணளைபயமயமிவைசூழும். (௩௩)

செம்புயர்நாவலிறளிவண்பிலக்கஞ்சிறந்திடுமிலவுசான்மலமா
மம்புவிமிசையிற்குசப்புலொண்குசமேயகல்வரைப்பெயர்கிரவுஞ்ச
மும்பொண்ணிலையினகரிமானசாகமொளிகொளுமம்புயமலரோ
யிம்பரிற்கவினார்ந்திலங்குபுட்கரமாமிவையுறுந்தீவுமிப்பெயரே. (௩௪)

நாவலந்திவுக்கிறைவனுய்வுயங்குமாக்கினீத்திரனலப்புதல்வர்
தேவர்கள்மகிழத்திகழிலாவிரதன்சிறந்திடுமிரமியனழகார்
காவலனிரண்மயன்குருக்கிரிலரிகவ்ன்மலிநதகிம்புருடன்
மாவுறுபாரதன்கேதுமாலன்பத்திராசுவனிவர்நவமைந்தர். (௩௫)

சீலமன்னிவர்பெறுஞ்செம்புத்தீவினவகண்டந்திகழுமெண்வரைக
ணீலமாச்சுவேதஞ்சிருங்கமொப்பில்லாநிடதநீடேமகூடம்பொற்
கோலமேதிகழுமிமாலயம்சிகரில்மாலியவான்குளிர்சொண்மூக்
சாலவேபடியுங்கெந்தமாதனத்தோடிவையெட்டுபிறங்கலுந்தயங்கும். (௩௬)

உயர்பொனின்வரையைச்சூழிலாவிரதகண்டத்தையடுத்தவுத்தரதிக்
கியல்புறக்குணக்குக்குடக்களவாகவிலங்கிடும்நீலநற்சுவேத
மயர்வறுசிருங்கமுடனிவைமூன்றுவரைகளுந்தெக்கணதிசையின்
செயலுறுநிடதமேமகூடஞ்சீரிமாலயமூன்றிவைதிகழும். (௩௭)

உத்தரதிக்கினளவதாய்க்கிடக்குங்குடக்குமாதிசையினிலோங்குஞ்
சித்திரகாயமலியுமாலியவானெனும்வரைசிறந்திடுங்குணக்கி
னத்திகணிறையுங்கெந்தமாதனக்குன்றமர்ந்திடுமிவையெட்டுமொவ்வொன்
றெத்திடும்பருமமிருசகசிரமீதுயர்ச்சியுமயுதயோசனையே. (௩௮)

உத்தரதிசையினீலமால்வரைக்குஞ்சுவேதவொண்பிறங்கற்குநாப்பண்
வித்தகரினம்வாழிரமியகண்டம்விளங்கிடுஞ்சிருங்கமீருகச்
சுத்தர்கணிறைந்துதுலங்கிடவிரணமயகண்டந்தோன்றிடுமுப்பி
னத்தியினளவாயமர்ந்திடுமகன்றகுருகண்டமருந்தவர்மலிய. (௩௯)

ஏருறுதெற்கினிடதமால்வரைக்குமேமகூடத்துக்குநடுவே
சீரிசண்டமிலங்கிடுமிமாலையவரையினளவதாய்ச்செறிந்த
காரியமாகிம்புருடகண்டந்தானமர்ந்திடுமிலவணம்நிறையும்
வாரியினளவாய்வயங்கிடும்பரதகண்டமாதவரொலாமலிய. (௪௦)

விரிவுறுகுடக்கின்விளங்குமாலியவான்வரைக்குமவ்வீரைக்குநாப்பண்
சரியிலாக்கேதுமாலகண்டத்திற்றயங்கிடுங்குணக்குமாதிசையிற்
றெரிவுறுகெந்தமாதனக்கிரிக்குஞ்சிறந்திடுமுவரிக்குநடுவே
யருமறையவர்களமரும்பத்திராசுவகண்டமொன்றமர்ந்திடுமன்றே. (௪௧)

அம்பொன்மால்வரையைச்சூழிலாவிரதகண்டத்தினமர்ந்திடுஞ்சோதி
யும்பரினுயர்சங்கருடணமூர்த்தியவன்றனைத்தொழுதவணுறைவார்
நம்பனுமுமையுநாரியர்பலரும்நலனுறுமருந்தவர்திரளு
மும்பர்களுடனேயுலப்பிலாக்களிப்போடியருவர்மறைநெறியுறவே. (௪௨)

உத்தரதிசையினிரமியகண்டத்தோங்குமச்சியவவதாரச்
சுத்தனுஞ்சோதியிலங்கலவ்வசுதமனுத்தொழுதேத்தியங்கமர்வ
னித்தர்வாழிரணமயகண்டந்தன்னினிவர்ந்திடுகச்சபமாய
வித்தகனடியைவிரும்பியேபணிவர்விநயகன்பிதுத்தெய்வத்துடனே. (௪௩)

அவிருறுகுருகண்டத்திடையோங்கியமர்ந்திடுவராகமூர்த்தியினை
புவிமகள்தொழுதுபுனல்மலர்கொணர்ந்துபூசைசெய்துளமகிழ்ந்திருக்கும்
நவையகன்றிடவேவயங்குமிம்மூன்றுகண்டமும்நலனெலாமலியத்
தவருறவிளங்குமிளாவிரதத்தினுத்தரதிசையினிற்சாரும். (௪௪)

விரிவுறுகுடக்குத்திசையினிற்கேதுமாலகண்டத்தினில்விளங்குந்
திருவுடன்காமதேனுவைத்தொழுவார்தெசப்பிரசாபதிதனையர்
பருதிசேர்குணக்கிற்பத்திராசுவகண்டத்தினிற்பத்திராசிரவா
மரசர்கோன்தொழவேவங்கமாய்க்கிரீவமலன்வீற்றிருந்திடுமன்றே. (௪௫)

தென்றிசையரிகண்டத்தினினரசிங்கம்வீற்றிருந்திடஞான
மொன்றியபிரகலாதன்மாதவரோடுருகியேதொழுதினிதிருப்பன்
புன்றொழிலகல்கிம்புருடகண்டத்திற்பொலனுறுமிராகவன்சீதை
வென்றிகொளிலக்குமணனுடன்வயங்கமேவிமாருதிதொழதமர்வன். (௪௬)

பரதகண்டத்தின்வயங்கிடுநாராயணமூர்த்தியாம்பரனைச்
சுரர்முனியுடனேயருந்தவர்மனிதர்தொழுதுளமகிழ்ந்தினிதிருப்பார்
விரிவுறுமலையமங்களப்பிரத்தம்வேங்கடமகேந்திரவிந்த
மிருசியமூகமிருக்கிசகிரிகோவர்த்தனமிடபஞ்சீசயிலம். (௪௭)

நேரிலாச்சயிலஞ்சுருதிமான்றுரோணநீலநற்சித்திரகூட
மேருநம்வேதகிரிமயினாகமிந்திரசீலகங்ககுபம்
பாரினினுயரும்பாரியாத்திரங்கோகாமுகம்பழுதகல்மவான்
சாருறுவாரிதரந்திரிகூடமுதலியகணக்கிலாதமரும். (௪௮)

சந்திரவசைநற்றும்பிரபருணிசரியிலாதிலங்கவடோணி
கந்தமார்கிருதமாலைநேரிலவைகாயசிறந்தகாவேரி
நிந்தனையகற்றும்பெண்ணைபாலாறுகிரிலாச்சக்கரவரத்தை
யந்தமார்துங்கபத்திரிவேலையலையெனக்கிளர்ந்திடும்வேணி. (௪௯)

வினையறுவீமாநதியகல்கோதாவிரிகிருவந்தைமானதிபார்ச்
சுனையுறப்பெருகுபருட்டுணிதாவிசுரகிருமதைநலவிரவை
யனமுறுமலர்சூழ்வேதசிமிருதியலைமலையுந்திரிசாமை
நினைவதன்முன்னம்வினையகலிருடிகுல்லைநேரில்கவுசிகையே. (௫0)

சானவியமுனைசரயுநற்சரசுவதிசதமாலைநீள்சகோணை
வானவர்மகிழ்சந்திரவதைசத்துருபைமருத்துரதைவந்தையா
ரீனமில்விசுவைவிரோணியிவையோடெண்ணிலாநதிகளுமிலங்க
வானிறைநிறையும்பரதகண்டத்தினளவினைவிளம்புதற்கரிதே. (௫௧)

சிருறுநவகண்டத்துடன்வயங்குஞ்செம்புத்தீவியோசனைநியுதம்
நேரிலாலவணவுவரியுமஃதாய்நிறைந்திடும்பரதகண்டத்திற்
பாரினிற்சனித்தோர்பலத்தினைத்தேடிச்சுவர்க்கத்திற்பயனுறப்பொசிப்பா
ரோருறுசுவர்க்கத்திருமடிபலனுற்றிருப்பர்மற்றெண்கண்டத்துறைவோர்.

மற்றையெண்கண்டத்துறைகுவோர்சுவர்க்கத்திருமடிவாழ்வுபெற்றுவந்து
பெற்றொடிமடவார்கலவியிற்களித்துப்பொலனுறுதேவகற்பந்தான்
முற்றுநாட்டனிலோர்புதல்வனைப்பெற்றுமுடிகுவருடலினைதுறந்து
நற்றவமகங்கள்புரிந்துவான்மிசையினலனுய்ப்பார்பரதகண்டத்தோர். (௫௩)

இரண்டதாந்தீவுபிலக்கமானிலத்திலித்துமகிருவன்சேயெழுவர்
திரண்டதோளினர்கள்பெயரினாற்கண்டஞ்சிறந்திடுஞ்சிவமியவசஞ்சீர்
தெருண்டிடவயங்குஞ்சுபத்திரஞ்சாந்தஞ்செலமிருகேமம்நல்லமிர்த
மிருண்டடர்பொழில்சூழ்பயமிவையுடனேயெழுமாகண்டமுமிலங்கும். (௫௪)

ஏழுகண்டங்கடொறுநவ்வடையவிலங்கியவனாமணிகூடம்
வேழமெண்ணிலசேர்வச்சிரகூடம்விளங்கியவிந்திரசேனம்
மாழைசேர்ந்துயர்சோதிட்டுமான்றும்பிரவருணமுமிரணியவருணந்
தாழ்விலாமேகமாலையோடேழுமிறங்கலுந்தயங்கியதன்றே. (௫௫)

அருணநீர்மலியுஞ்சிரவணையகலாங்கிரதிசாவித்திரியயம்வால்
வருணமுற்றுயர்ந்தசுப்பிரபாதைவயங்கிடும்பிகதனாமுத்தின்
றருணவெள்வலைசேர்சத்தியவரையோடேழுநதிதயங்கியதீவி
னருணயத்துடன்வாழ்சனங்களேயவர்க்கையாயிரம்வருடமாயிசவே.

சேருறுபிலக்கத்தீவினுக்குயர்ந்ததேவதைதபனனேயாமப்
பாரிடையகலமிரண்டிலக்கத்திேனசனைபழுதிலாவிக்குச்
சாரமாருவரியகலமுமஃதேசற்பமீன்மணிகளெண்ணிலாத
வாரமோட்டணியுமரிவையர்புருடர்மகிழுவர்நரைதிரையறவே. (௫௭)

மூன்றதாந்தீவுசான்மலமதற்குமுதல்வனுமிந்திரவாகு
தோன்றியங்களிக்குஞ்சுதர்களோரொழுவரவர்பெயராற்றுலங்கியது
சான்றவருறையுஞ்சுரோசனஞ்சரியில்சவுமனஞ்சமமிரமனக
மான்றிடுந்தெய்வப்பாருகம்பாரிபத்திரமாப்பியாயநம்பிஞாகம். (௫௮)

ஈதெனும்பெயராலகன்றிடுகண்டமேழுக்குநடுவதாம்வரைகள்
பீதகவருணச்சாசுசம்பழிப்பில்சதசிருங்கம்பிறிதிதுவென்
றோதுதற்கரியவாமதேவக்குன்றுயரியகுமுதமாழுகுந்தஞ்
சூதமன்புடையவருடனேரிலாதசகசிரசதியிவையேழ். (௫௯)

அனுமதியலேமோதுஞ்சினிவாலியகல்சரசுவதிநற்குருநீர்
சனையுறுரசனிதுலங்கியநந்தைதூயதாமிரோகையோடேழு
வினையகற்றியமாநதிகளுமமரவிளங்கியசான்மலத்தீவுக்
கினியமாதெய்வமெதிரிலாக்குமுதசகாயனுமிலங்கியதன்றே. (௬0)

சான்மலத்தீவினகலநாலிலக்கவோசனைநரங்கமார்மதுவங்
கானவார்கலியினகலமுமஃதேயழகுறுமந்தமாணிலத்திற்
றேனகுமொழியார்கொழுனர்களுடனுந்தினந்தினமற்புதமுறவொண்
பானகுமதாமளித்துவேணுலேப்படித்தின்பமெய்துவரன்றே. (௬௧)

நாலதாந்தீவுகுசமதினுறுவோர்நலனுறுமிரணியரோதாச்
சீலமார்குணத்தன்சிறுவர்களொழுவர்பெயரினுற்சிறந்திடுங்கண்டங்
கோலமார்வசுநீள்வசுதரந்திடமொண்ணுருசினுபிருத்தங்கோதிலாத
மேலவன்றிரியுஞ்சத்தியவிரதம்விப்பிரநாமமோடேழு. (௬௨)

சதுநிவர்சிருங்கந்தயங்கியகபிலந்தாழ்விலர்ச்சித்திரகூடம்
விதுதவழ்ந்திலங்குந்தேவராநீகம்விலங்கல்சேருறத்தரோமத்தோ
டுதையமாகிரிபோலுயர்ந்திடுவரைகளேழுவாரேங்கியதீவின்
சுதையுறுகனிகடுலங்கியபொழில்கள்சூழ்ந்திடவயங்கியதன்றே. (௬௩)

அந்தமாரிரசகுல்லேமாதங்கமதுகுல்லேயலேயுறுஞ்சுருதி
விந்தைநற்றேவகெருப்பைவண்கிருதச்சுதைவிளம்பரியமாநதன்றோவா
னந்துறுமாலேயிவையுடனேழுநதிகளும்விளங்கியதீவின்
முந்துதேவதையாயுதாசனனமரமுதிர்ச்சியில்புருடர்களுநறைவர். (௬௪)

குசமெனுந்தீவினகலமெட்டிலக்கவோசனைகூறுதற்கரிய
சுசியுறுதுப்புப்பரவையுமஃதேதூயவத்தீவினினுறைவோர்
கசவினமிவுளிக்கிறைவராய்வயங்கிக்கவினுறுமரிவையருடனும்
நிசியுடன்பகலும்பிரிவிலாதையாயிரம்வருடம்நிறைந்தமர்வர். (௬௫)

அஞ்சதாந்திவுகிரவுஞ்சகிருதம்பி நட்டனத்தீவினுக்கிறையாம்
வஞ்சமிலரசன்சிறுவர்களெழுவர்பெயரினால்வயங்கியகண்டம்
விஞ்சுமாமனம்வண்மதுரகமேகபிருட்டமாமேவிடுசுதர்கள்
மஞ்சுசூழ்சிகரவிரிசிட்டமுலோகிதாருணம்வனமுட்டனேழ். (சுசு)

இவையதாங்கண்டத்திடைகுறுக்கறவங்கிலங்கியவரைகள்சுக்கிலஞ்சொல்
லுவமையில்வருத்தமானம்போசனநீளுறப்பெருங்கணமறைபோதுந்
தவருறையவனுந்தனமநந்தனம்வண்சருவதோபத்திரமிவையே
யுவிருறவிலங்குந்தமகியக்கிரிபோலழகுறவமர்ந்திடுமன்றே. (சுஎ)

அயமுறும்பையையலைகொளுமமுதவோகையாரியகைதீர்த்தவதி
கயலினமுகளுந்திருப்பதியூருபவதிநற்கவினுறுபணிலஞ்
செயாலுறவணங்கித்திரிபவித்திரசுக்கிலையுடனெழெனச்சிறந்தே
யுயர்தவர்விரும்புநதிகளக்கண்டந்தொறுமகன்றுலாவியதன்றே. (சுஅ)

அகல்கிரவுஞ்சத்திவினுக்கமர்ந்ததேவதையறனுறுவருணன்
புகல்வதற்கரிதாயுயருமத்திவினகலஞ்சோடசலக்கம்பொல்லார்ந்
திகழ்விலவளையாஞ்சலதியுமஃதேயிலங்கியதரையினினமரும்
நகினகமெனச்சொல்நவிலுநாரியரும்புருடருநலனுற்றுமகிழ்வார். (சுகூ)

ஆறதாந்திவுசாகமத்தலத்துக்கரசன்மேதாதியறன்மெய்
யூறுசிந்தையனுமவன்றருமைந்தரெழுவர்கள்பெயரினாலோது
மாறிலாதிலங்குபுரோசவமனோசம்வயங்கியதூமநல்லநீகம்
வீறுசித்திரரோபம்வெகுருபம்விகிரியமிவைகண்டமேழு. (எ0)

இலங்குமீசானமிகழ்விலபலபத்திரந்தெய்வபாலமேர்மிருத்துத்
துலங்குறுசிங்கம்வயங்கியசதகேசரந்துய்யவிரசுரோதந்தோல்
வலங்கொளரிசேர்மகாநசமிவையோடேழுமால்வரையுமத்தீவு
நலங்கொளவுயர்ந்தமாழையாலவிர்கொண்டோங்கியநாகமாமெனவே. (எக)

அனகைநல்லாயுதோற்புகைசிருட்டியகல்பராசிதைபாபெவர்க்குந்
துணியகன்றிடவேவிளங்குபஞ்சபதிசகசிரசுருதியிவ்வேழு
விளையகல்நதிசேர்கிரிலத்திவுக்குறுந்தெய்வங்காலந்தவிபுலை
வனிதையருடனும்வயங்கியபுருடர்மகிழுவர்நரைதிரையறவே. (எஉ)

ஆசறவயங்குஞ்சாகநற்றீவினகலநாலெட்டிலக்சத்தி
ஞெசனையனந்தன்மிசையரியுறம்பாலுவரியுமன்னதேயாமக்
காசினியமரும்புருடருங்கவின்கொள்கயனிகர்கண்ணியர்தாமு
மாசகல்சுவர்க்கத்தெண்மடங்காகிவைகுவர்மறைநெறியுறவே. (எஙு)

ஏழதாந்திவுபுட்கரமதனினிலங்கியவீதிகோத்திரன்றுன்
வாழவேசனித்தசிறுவர்களிருவர்பெயரினால்வயங்கிடும்பொழில்கள்
சூழிரமணகந்தாதகமெனவேதுலங்கிருகண்டத்தினப்பண்
மாழையார்கிரிபோன்மானசோத்திரமென்னுருகிரிவளைவுறச்சூழும். (எச)

தூயபுட்கரத்தீவகலமெட்டெட்டாமிலக்கயோசனையெனத்துலங்கும்
பாயலையுறவேவிளங்கவப்பரவைபகருமவ்விலக்கமேயாகும்
வேயுறுவனாகன்மிடையிரமணகந்தாதகமிருகண்டம்விளங்கத்
தேய்விலாதுயரும்பிரமரூபமாயதேவனைத்தொழுவரங்குறைவார். (எரு)

அயுதமஞ்சுறுமோசனையுயர்மானசோத்திரமாகியகிரிமே
லியமனிந்திரனொண்மருமரவெண்டிசைதொறுமுளநகர
மயர்வறவுபரத்தீவினினுறையோர்வயங்கியபிரமமாந்தேவைக்
கையினயமலர்கொண்டருச்சனையியற்றியயுதவாண்டமருவர்களித்தே. (எசு)

செம்பொருவிலக்கம்பிலக்கமோரிரண்டுசிறந்திடுஞ்சான்மலநாலு
வம்பவிழ்செறிகாக்குசமிருநாலுவயங்கியகிரவுஞ்சமீரெட்
டும்பர்கண்மருவுஞ்சாகநாலெட்டங்கொளிதிகழ்புட்கரமெட்டெட்
டம்பரமேழினகலமுமுபரத்தீவுகளிலக்கமேயாகும். (எஎ)

தீவுகளேழினகலநூற்றிருபத்தேழிலக்கந்திரைப்பரவை
மேவிடமஃதேயிருவகைகூடவிரண்டரைக்கோடியோசனைமேல்
பாவலரிலக்கம்நாலெனப்பகர்வர்பழுதல்ப்புவரியினப்பாற்
றேவர்கள்சரிப்பர்கோடிமேற்றெண்ணூறிலக்கயோசனைசெறிவிடமே.

உவமையிலமரர்செறிவிடமிலக்கம்நூற்றுத்தொண்ணூறவையொழியி
னெவர்களுமியங்காவெளியிடமெட்டுக்கோடிமேலிலக்கமோராறு
நவையறுதீவும்பரவைகொளிடமுமிரண்டரைக்கோடிநாலிலக்க
மிவையெலாங்கூடுந்தொகைகளீராறேறிரண்டுகோற்கோடியாயிசைப்பர்.

சேடுறுந்தீவுபரவைவிண்ணவர்கள்செறிவிடமெல்லவுஞ்சேர
வாடகவரையின்வடக்குறுதிசையினகலம்பன்னிரண்டரைக்கோடி
நீடுதெக்கணமுங்குணக்கொடுகுடக்கும்கிரிலிம்முத்திசையகலங்
கூடநாற்றிசையுங்குறைவில்பஞ்சாசட்கோடியாய்விளங்குமென்றே. (அ0)

அம்பொன்மால்வரையைச்சூழநாற்றிசையின்யோசனையைம்பதுகோடி
யிம்பரினுறுநற்சக்கிரவாளகிரியண்டமுகடுறவெழுந்தே
யும்பர்களுறையுமடிக்கணமீராறுடனரைக்கோடியோசனையாய்
வம்பவிழ்பொழிலார்தீவுகளுவரிவெளியிவைவளைந்துதோன்றினவே. (அக)

இலகியேயுயர்நற்சக்கிரவாளகிரியின்மேலிந்திரனியமன்
றுலங்கியவருணன்றனபதியிவர்கள்நால்வர்க்குந்தூயதாநகரம்
புலன்களைந்தவரொண்ணிந்திராபுரிநற்சயம்னிமம்ரோசதிபொன்
னலங்கிளர்சிகரவிவர்பதியிவைகளுலுமாபுரிகளுமமர. (அஉ)

பரவையேழேழுதீவுடனிமையவர்களுறுமிடமுறுதபார்கூடி
யுரைசெய்பன்னிரண்டோடரையறுகோடியோசனைசக்கிரவாள
வரையடிக்கணமிவ்விலக்கமேயாமம்மலையினப்புறத்தண்டபித்தி
யிருபதோடைந்தாங்கோடியோசனையாயிரவிதுன்னவிரிலாதிரவாய். (அங)

சிந்துராலுடன்மூன்றெழுதீவமார்செறிவிடமவிருமுப்பான்கு
வந்தமாயதனைவளைந்திடும்பிறங்கலடிக்கனத்தப்புறத்திரவி
வந்திடாதிரவுமலியநீளண்டபித்தியைமருவிடுகிலமுஞ்
சந்துசெய்தொகைதானன்பதுகோடியோசனையென்றுசாற்றுவரால். (௮௪)

மேருவேமுதலாயினுமண்டத்தின்பித்தியீறுகிடைவிளம்பும்
பாரொருதிசையின்றொகைகளோசனைதானன்பதுகோடியாய்ப்பகர்வர்
ஓர்கெழுமாழிப்பிறங்கல்காப்பவர்கடெற்குயர்சங்கபாற்குடக்குச்
சோர்வில்பொன்னிரோதாவுத்தரதிசையிற்கேதுமான்சுதனுவாக்கிழக்கே.

இரவிதேர்த்தட்டினகலமொன்பதினாயிரத்தியோசனையதாயிலங்க
விரிவுறவுருளாழியின்றனைவழியினவிளங்கியவிரிசினீளந்தா
னிருபதாயிரத்தினிரட்டியோடையாயிரத்தியோசனையதாயிசழ்வில்
துரகமேழுறவேவலவனுமருணன்றுலங்குவனவ்விரதத்தின். (௮௬)

இரவிதேர்க்குதிரையேழ்பசுந்தசுவாயிலங்குமரப்பூண்டிடுநுகந்தா
னுரைசெயினிருமூன்றிலக்கயோசனையாமுயர்ந்திடுவலவனுமருண
னுரனொடுகரத்தாற்கொளுவிடுமுட்கோலிருபத்தாறிலக்கவோசனையாம்
பரியுறுவையந்தனைக்கொடாண்டுருளும்பண்டியொன்றிலங்கியதன்றே. (௮௭)

வானவர்மகிழும்வாலகில்லியர்கள்வயங்குமங்குட்டத்திற்பாதி
யூனுறுமுடலராறுபதாயிரம்பேருவந்துசேவிப்பவாழ்பதங்கன்
றானுறுமிரதத்தாழிநேரில்லாமானசோத்திரவரைதன்மேற்
றுன்வரிரியத்தவர்களுண்மகிழத்தயங்கியங்குருண்டிடுமன்றே. (௮௮)

மானசோத்திரமாவரையினினுருளுமாழியின்வயங்கிடுமச்சின்
மேனுனியளவவ்வுயர்ந்திடுநீளம்விளம்பிடினூற்றன்பத்தெட்டா
மூனமிலிலக்கயோசனையாகியொருதலைமேருவுச்சியினிற்
றூனமர்ந்திடவேதயங்கிடுஞ்செயலைச்சாற்றுதற்கெளியதன்றம்மா. (௮௯)

உரனுறவிவருமானசோத்திரத்தினுத்தரதிசையுயர்ந்திடுமவ்
வரையிடையிரதத்தாழியுட்புறத்தின்வந்திடினுத்தராயணமாம்
விரிவுறுபுறவோரத்திடையுருளின்விளம்பிடுதெக்கணாயனமாஞ்
சரியுறநடுவின்வருதினமேடந்துலாத்திடையிரண்டுநாட்டானே. (௯0)

இரவிதன்பதமோரிலக்கயோசனைசந்திரன்பதமதனின்மீதிரட்டி
சரியிலாவிதுவின்பதத்தின்மேல்மூன்றிலக்கயோசனையுடுத்தயங்கும்
விரிவுறுதாரகணவுலகத்தின்மீதிரண்டிலக்கயோசனையின்
சுரர்களொன்னார்தங்குருவெனவயங்குஞ்சுக்கிரன்மருவுவனன்றே. (௯௧)

உசனனொண்பதத்திரண்டிலக்கத்தியோசனைமேற்புதனமர்வன்
வசையிலாப்புதன்றன்பதத்தின்மீதுபையவிலக்கயோசனையிடைவயங்குங்
குசனவன்பதத்தினுபையயோசனையிற்குலாவிடுங்குருவவன்பதமேற்
சுசியுறவுகவிலக்கவோசனையிற்றுலங்கியங்குயருவன்காரி. (௯௨)

சனியமர்பதத்தின்மீதினிலேகாதசவிலக்கத்தின்யோசனையின்
வினையறத்தவஞ்செய்யிருடிகளெழுவர்விளங்குவரவர்பதமீதி
னனியுயர்பதமூன்றிலக்கயோசனையினான்முகன்முதலினோர்துதிப்பத்
துனியறச்சிறியமதலையாய்த்தவஞ்செய்துருவன்வீற்றிருந்திடுமென்றே. (கூ௩)

யோசனைமுப்பத்தொன்பதினிலக்கச்சோடசவாயிரமுயரு
மாசுகப்பாசமிலங்கிடவதனையயமுறுதவனன்றேரச்சாய்
மாசகன்றெழுந்தமேருவுச்சியினின்மருவிடுந்தடியிடைப்பொருத்தித்
தேசுடைத்துருவன்சோதிசக்கரத்தைத்திகழ்கையாற்றிருப்புவனன்றே.

இரவிதன்பதமேமுதலதாயுயர்ந்தபதமெலாமிலங்கிடச்சுழலுஞ்
சரியிலாவிரிவாஞ்சோதிசக்கரத்தைத்தன்னுடைக்கரத்தினாற்றுருவன்
ஒருதரந்திருப்பவொருதினமாகவியற்றியங்கொளிகொளவமர்ந்தான்
திருமகள்கொழுநனருளினாலெவர்க்குநிவந்திடும்பதத்தினிற்சிறந்தே. (கூரு)

துருவன்றன்பதமேற்கோடியோசனையிற்றுலங்கிடுமகன்மகாலோகஞ்
சரியிலங்கதன்மேலியோசனையிரண்டுகோடிமீதிற்சனலோக
மருவமீயெட்டுக்கோடியோசனைமேற்றவவுலகம்வைகுமதன்மே
லுறைசெய்நாலெட்டுக்கோடியோசனைமேலொளிருமாற்சத்தியவுலகம்.

சரியிலாவயன்வாழ்சத்தியவுலகமிசையினிற்றயங்கியவண்டப்
பெருமையார்முகட்டினளவதாந்தொகையைப்பேசிடினாறுகோடியின்மே
லுறைசெயினன்பத்தெட்டிலக்கமுமுப்பதாயிரயோசனையாகுந்
துருவன்றன்பதத்திற்கீழுளவெவையுமவாந்திரவெள்ளஞ்சூழ்ந்தழியும். (கூஎ)

அரியினல்லவிராயமர்சிஞ்சுமாரபிரசாபதியகலியவம்பொன்
கிரிமிசைநிகரில்குண்டலாகாரமாகவேதன்சிரங்கீழாய்
விரிவதாயமர்வோன்வாலினிற்றுருவன்விளங்கினனவனடிக்கூலத்
திருவர்தாதாவிதாதாவெனும்பேரிலங்குதேவதையமர்ந்திடுமால். (கூஅ)

அரையினின்முனிவரொழுவருமமரவகலியவலச்சகனத்திற்
சரியிலாதுயரும்புனர்வசுவயங்கத்தயங்கியவிடச்சகனத்தின்
விரிவுறுபூசமிலங்கத்தெக்கணப்பின்காலினாதிரைவிளங்க
வுரமலியிடப்பின்காலினாயிலியமொளியினோடுறைந்திடுமென்றே.

முன்வலக்காலின்விசித்துவம்வயங்கமுரணுறுமுன்னிடக்காலின்
மன்னுமுத்திராடம்வலக்கணினோணமிலங்கிடமறுவில்பூராட
மின்னும்வாமக்கண்மிசையினனவிட்டம்விளங்கிடும்வலச்செவிதன்னி
னின்னலில்வாமச்செவியினில்மூலமியல்புறவமர்ந்திடுமன்றே. (௪00)

வாமபாகத்தின்மகமுதலனுடமளவெட்டுநாள்களும்வயங்குந்
தாமமாவலமார்பிடத்தினிலமர்ந்துதயங்கியமுற்கொழுங்கோலாம்
நாமமேமுதலாமான்றலையளவாநவின்றிடுநாள்களீர்நாலுந்
தீமையில்வலக்கந்தரத்திடைக்கேட்டைசிறந்திடுந்திசையெலாமிலங்கி.

இடச்சிரதரத்திற்சதையமேருறநாளிருபத்தெட்டிவ்வகையமருங்
குடத்திடைப்பிறந்தகுறுமுனிமேலிற்கபோலத்திற்குறுகியேயமரு
மடர்த்தெழுமறலிகீழ்க்கபோலத்திலமருமானனத்தின்மங்களன்முன்
றிடத்துடன்வயங்குமேட்டிரந்தன்னிற்சிறந்திடுநிகரிலாமந்தன். (கO௨)

வெரிநிடைமுரிப்பிற்சுரர்குருவயங்கும்விரிவுறுநடுவின்மார்பிடையி
னிரவிவந்தமருமிருதயந்தன்னினிலங்கிடுமிருடிகேசன்முன்
சரியிலாமனதிற்சந்திரனமருர்தயங்கிடுமுசனனுபியினி
னிருமுலைமிசையினுறுவர்கடெய்வவயித்தியரெழில்மலிந்திடவே. (கOந)

சீருறுபிராணன்புதன்பரந்ததனிற்சிறந்திடுமிராகுநேரில்லா
வாரமாரும்முட்கழுத்திடைக்கேதுவயங்கிடுமமரர்கள்முதலா
வேருறவெவருமுரோமமீதமர்வரிவ்வகையிரணியமலியு
மேருவுச்சியினினுயர்சிஞ்சுமாரப்பிரசாபதிவிரிவுடன்மேவும். (கO௪)

இரவிதன்பதத்திற்றாழ்வுறவயுதயோசனையிராகுகேதுக்க
ளுரனுமமர்வரவர்பதத்தின்கீழ்யோசனையீராயிரத்திற்
சரியிலாச்சித்தர்வித்தியாதரர்கள்சாரணரிலங்குவரதன்கீ
ழிருபதாயிரத்திற்பாதியோசனையினியக்கராக்கதர்கள்பேயமரும். (கO௫)

அவனிமீதுயரச்சதவியோசனையினுசுகன்பதமதின்மாற்கத்
துவமையிலெழிலியுறைந்திடுமேதன்கீழ்ப்பறவைகள்சஞ்சரித்தோங்குந்
தவருறுதரணிமிசையினிற்றாழச்சததசயோசனைதன்னிற்
கவினுறுமதலமதற்கிறையசுரபலன்மயன்காதலனன்றே. (கO௬)

விதலலோகத்தின்விடையுறயிறைவனுடகேசுரனெனவிஞ்சி
யெதிரிலாவுமையோடிலங்குவன்சுதலலோகத்தின்மாவலியிருப்பன்
விதமுறவகனுந்தராதலலோகமயேசுரன்விளங்கியங்கமர்வன்
கதமுறநிவர்தெக்ககனமர்ந்திடுவன்மகாதலலோகத்திற்கதித்தே. (கO௭)

விரிவுறுமிரசாதலவுலோகத்தின்விளங்குவரெண்ணிலாவசுரர்
சரியில்பாதாளமிசையின்வாசுகியேமுதலினோர்தயங்கியங்குறைவர்
மூரணுறுமுரகவுலோகம்யோசனைதான்முப்பதினாயிரத்தின்கீ
ழரவரசாயவனந்தன்வீற்றிருக்குமாயிரமுடிகளுமிலங்க. (கO௮)

ஏருறுமனந்தன்சகசிரமுடிகளிலங்கிடவெழுகடல்வரையாற்
சீருறுமீரேழுலகெலாங்கடுகுபோன்றவண்டோன்றவோர்சிரத்திற்
சாரவேசுமந்துதயங்கினனிகரில்சதுர்த்தசபுவனமாரண்டம்
நேரிலாதுயரும்பெட்டிமூடியும்போனிறைந்தனசகலமுமுறவே. (கO௯)

தரையினிற்கதுமையெழுபதாயிரத்தின்யோசனைதாழ்ந்தவேழுலகு
மிருமைசேரனந்தனிருப்புமோரிலக்கமென்றளவாய்ப்புவவுலகும்
பருதிவைகிடமேமுதலவாய்த்துருவன்பதமளவாச்சுவவுலக
மிருவகையுலகவுயரம்யோசனைநாற்பதிலக்கமென்றியம்புவரால். (கக0)

சரியிலாமகலோகஞ்சனவுலகந்தாழ்விலாதுயர்தவலோக
மனாமலரயன்வாழ்சத்தியவுலகமிவையெனவருமொருநாலா
யிருளகல்பதத்தினுயரம்நாற்பத்துமூன்றதாங்கோடியோசனையென்
றுணர்செய்வரிந்தவுலகுகள்பிரமனெழிவுகாலத்திடையழியும். (ககக)

வெறிமலரயன்வாழுலகமீயண்டமுகட்டளவாறுகோடியின்மீ
துறைகுவரன்பதுடனிருநான்கினிலக்கத்தின்முப்பதாயிரமா
யுறுவயோசனைகாருணியவைகுண்டமதினுறுந்தொகையுறக்கூடி
நிறையும்பஞ்சாசத்கோடியோசனையென்றறிஞர்கணிகழ்த்துவரம்மா.

அயனுடைவ்வுலகுமமைந்தவிவ்வண்டத்தப்புறத்திற்பதின்மடங்காப்
பயமுறுமதனையதிற்றசமடங்காப்பரந்துறவனைக்குமக்கினிதா
னயமிலவ்வழலைப்பதின்மடங்காகிநண்ணியேவளைந்திடும்பவன
னுயர்வுறவறைகாற்றினைத்தசமடங்காவளைத்திடுமொப்பிலாகாயம்.

பவனனைவளையுங்ககனமுள்ளமிழ்த்திப்பரந்திடும்பிரகிருதியினிற்
புவனமார்ந்திலங்குமனந்தவண்டங்கள்பொலிந்திடுமப்பிரகிருதி
உவமையிலரிதன்சத்தியாதாரமாகவேயுறையுமப்பரமன்
நவையறுந்தனக்கேதானுரமாகநலனவிர்வைகுண்டத்தமர்வன். (ககச)

அனந்தனுய்நீளவரையதாய்மானசோத்திரப்பிறங்கலாயளப்பில்
கனந்தரநிவருஞ்சக்கிரவாளகிரியதாய்க்கடல்களுமாகி
யனந்தமாமருணச்செய்யவாய்ச்சிஞ்சுமாரப்பிரசாபதியாகி
வனந்திகழண்டமெவையுமாமாலின்செயல்முனிமாதினுக்கறைந்தான்.

அண்டப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கருசுஅ.

கரு. வது—பிதுர்ச்சக்ரவர்த்திப்படலம்.

அண்டமெண்ணிலாதபடைத்தவையிடையினமர்ந்தளித்தழித்தெதிரில்லா
முண்டகமடந்தைகொழுநனேயாகிமுளரியோன்முக்கணனுகிக்
கண்டகர்மடியக்கரத்தினைம்படையைக்காட்டியமுராரிசேவடியைத்
தொண்டர்காடொழுமின்றுனியறவழியாப்பதத்தினிற்சூழ்ந்தியாமுய்ய.

அரிபடைத்தருளநிவர்ந்திடுமண்டச்செயலினையருந்தவனறையச்
சரியிலாவிதர்ப்பனருளுருக்குமணித்தத்தைகேட்டுளங்களிப்புற்று
விரிவுறுமுலகிற்பின்னருமுராரியியற்றியவித்தகம்விளம்பென்
றுரைசெயப்பிதுவாயுயரரிசெயலையுத்தமிகேளெனவறைவான். (உ)

நெறிகொளுத்தானபாதமன்மரபினிகரிலாவங்கராசனுக்கு
மறனுறுமதன்மதேவதைமகளாஞ்சுநீதிமான்பயந்திடுமதலை
யறனெறியறியாவேனனுமரசனவனிவிண்ணடுங்கிடத்தோன்றிக்
கறவையான்சிசுக்கள்வனிதையர்திரளைவதைத்தனன்கரத்திறலூறித்தே.

கூவலிற்சிசுக்கடிரள்களைவிடுத்துங்கோவினைக்கரத்தினால்முறித்தும்
பாவையரினத்தைநிலத்தினிற்புதைத்தும்பவமுறவேயெழுமவனே
காவலான்மாதாமகனெனுங்கொடியவதன்மதேவதையினைக்கடுப்ப
மேவிடவவனைப்பயந்திடுமரசன்மிகமெலிந்துளநடுங்கினனால். (௪)

விறலுடையரசர்கோன்சுதனானவேனனுக்கறநெறியுரைத்தீண்
டறனலாவதையையொழித்தியென்றிடவுமதன்மதேவதைமகள்சுதனா
மறுவுறுகுணத்தோன்மறுத்தடர்விடம்போற்கொலைசெயமன்னவன்திகை
நெறியறுமதலைதனைப்பயந்தவர்கணிரையம்விட்டகல்கிலரென்றான். [த்து

துன்மதிமலியுமதலையைப்பயந்தோர்தம்மினுஞ்சுதர்களைப்பெறாதார்
நன்மையுற்றவராமெனமனனவின்றுநலனிலாதவரொடுமிருத்தல் [று
புன்மையென்றிகழ்ந்துபுலன்களையடக்கிப்பொருக்கெனத்தவஞ்செயப்போ
னான்மதமடுத்தங்கறிவிலாவேனனாடவர்களையடர்ந்துலகாண்டான். (௬)

மகஞ்செயாதொழுமின்குருக்களையிகழ்மின்மறையவர்தங்களைத்துறமின்
செகஞ்சிறப்புடையதெய்வபூசைகள்செய்யாதிருந்தானங்களெவையு
மிகழ்ந்துநீரெவையுங்கொடாமலேயதன்மமியற்றுமினிரந்தவர்க்கொன்று
முகங்கொடாதடர்மினென்றுமாபேரிமுரசறைவித்துலகாண்டான். (௭)

மறையவர்நடுங்கக்கயவர்கள்மகிழமந்திரத்தவர்மனஞ்சலிக்க
வறநெறியழியமுடிகவித்தரியாசனத்தின்மேலமருமன்னன்பாற்
குறைவிலாமுனிவரணுகினான்மறையினின்சொலாற்கொடுமையையியற்றன்
முறைமையன்றெரிவாய்நிரயத்துள்வீழுதியென்றுதாம்பின்னருமொழிவார்.

நீதியால்மறையினெறியினைநடத்திநிகரில்செங்கோலினையோச்சிப்
பூதலந்தனையாண்டிருத்தியேன்மனவிப்புவியுளோர்செய்திடுந்தரும
மாதவமகங்கடனிலுனக்காறிலொன்றுறவருமுன்றன்பிதுக்க
ளூதறுகெதியையடையநீசுவர்க்கஞ்சேருதியாமெனச்சொன்னார். (௯)

சதுமறைமுனிவரிவையெலாமுரைப்பத்தருமமில்லெனமன்னன்மொழி
விதிமுதலெவர்க்குமுலோகநாயகனானென்கழல்விரும்பிநீரோதிக் [வான்
கதுமெனமகங்களியற்றுமினிலாதகணவனையொருவிவேறொருத்தி
பதிதனையணையுமகளிரைநிகர்ப்பீரொன்றிவைபகர்ந்தனனன்றே. (௧௦)

பாவமார்நிருபனிவைமொழிந்திடலும்பழுதிலாமுனிவர்கள்கனன்று
சீவனீவிடுதியெனச்சபித்திடவேசிறப்பிலாவேனனங்கிறப்ப [து
மேவியாண்டனையாஞ்சுனீதிமற்றவன்றன்குரம்பையைத்தயிலத்தின்விடுத்
மாவடுவகிரினிவரிருவிழிநீர்மலிந்திடக்காத்தனளன்றே. (௧௧)

சீருறுமுனிவர்கதமுறச்சபிப்பச்செகதலமாளுமன்மடியச்
சோரர்கள்மிகுத்துமனுநெறியழியச்சுருதிசொல்குலவருணத்தி
னேரொலாங்குலையவவனியிற்பழனத்தினில்விபசாயங்களிறப்பப்
பாரிலெவ்விளையுமகன்றிடமடவார்பதிவிரதங்கள்போயினவால். (௧௨)

இதரதேவதையின்வழியினிலொழுகியிணையிலாவிறையினைநினையாப்
பதிதர்தமுளத்திற்புலன்கள்போற்சிலரப்படியுளோரலேந்திடக்கண்டு
சதுமறைமுனிவர்திரளெலாமணுகிச்சரியிலாச்சுனீதியாமாதின்
சுதனிடத்திணையில்மகன்பிறந்தவனிதுலங்கவாழும்படிநினைந்தார். (கரு)

இடரெலாமகலத்தவரெலாமணுகியிறந்திடும்வேனனினுருவைக்
கடையவக்கணத்தினிருநயனத்திற்கனலுறக்கரத்தின்வில்லேந்தி
விடமெனக்குஞ்சவுருவனுய்த்தழலால்விரிந்திடுமெரிநவிர்பிறங்க
விடியெனவதிர்த்தீண்டியாவனாவதைப்பனெனுமுரைபேசியேயெழுந்தான்

உருமெனவதிர்த்துப்பவமெலாந்திரண்டவுருவனுயெழுந்தவன்றனைக்
கிரியுறைமுனிவரனைவருநோக்கிக்கிராதனுயொழிதியென்றம்மன்
னிருகையைக்கடையவரியினதுருவாயிணையிலாக்குமரன்வந்தெழவே
திருவினல்லவிராய்ச்சிறந்ததில்வநிதைதேவர்கள்போற்றிடச்செனித்தாள்.

எதிரிலாச்சுதனுயெழுந்தவன்றனையிணையிலாவரியிவனென்று
பிதுவெனப்பெயரிட்டழைத்தனர்திருவாம்பெண்ணினையரிச்சிசுவெனத்தான்
சதுமறைமுனிவர்மொழிந்தவன்றனக்குத்தாரமாயிவடனைவிதிப்ப
விதியொடுவலாரிதுதித்திடமணந்தான்விண்ணவர்மலர்மழைபொழிய.

துந்துபிமுழங்கச்சுரர்மலர்பொழியத்துறந்தவர்தோத்திரஞ்செய்ய
வந்தணரினநான்மறையினுலாசியறைந்திடவரிச்சிசுப்பதியாஞ்
சுந்தரப்பிதுவின்சிரமிசைமணியாற்றுலங்கியபொற்கிரீடத்தைக்
கந்தமாமலரோனிருகையால்வாங்கிக்கவித்தனனுலகெலாமகிழ. (கஎ)

தனபதியரியாதனமிடவருணன்றரளமார்சத்திரங்கொடுப்ப
வனிலன்மாமணியாராலவட்டத்தையளித்திடவறனெழினந்தாத்
தனிமலர்மாலையுதவிடச்சுடிகைசதமகனீய்ந்திடமறலி
கனமுறுகதையைத்தரக்கவசத்தைக்கடிமலர்க்கிறையவன்புனைந்தான்.

நாமகளுலகெண்டரளமாவடத்தைநல்கிடச்சக்கரந்தன்னைப்
பூமகள்கொழுநனளித்திடத்துவட்டாப்பொலனுறுமிரதத்தைக்கொடுப்பச்
சோமனைச்சடையிற்றரித்தவன்றெசசெந்திரநல்வாளீய்ந்திடத்துலங்கும்
காமன்வெண்கவிகையானவன்றவளக்கவனமாநாலுதந்தனனால்.

அரனிடப்பாகத்தமர்ந்தவள்சதசந்திரமெனுங்கேடகமளிப்ப
வுரனுறுதனுவையுதாசனன்கொடுப்பவுருளையொன்றுடையதேர்வைகு
மிரவியெண்ணிலாதசரங்களீய்ந்திடவேயிரண்டுபாதுகத்தினைவசுதை
யருளநற்சுவர்க்கத்தமருவோரலங்கலுறுவெறியலங்கலேயுதவ.

நாட்டியம்வாகிந்திரமகாசுகிதநவினந்தத்தானமிந்நான்கும்
வாட்டமிலுயர்கேசரர்கொடுத்திடநீள்வாரிதிவலம்புரிவழங்க
வீட்டமாரிவுளியிலங்குமாதேருக்கிடமதாநெறிநதியுதவப்
பாட்டினுனிகரில்சூதர்மாகதர்கள்பழுதில்வந்திகர்புகழ்ந்தனரால்.

வந்திகர்நிகரில்மாகதர்சூதர்வழுத்திடப்பிதுமொழிவான்யா
னெந்தவீரியத்தையியற்றினனென்றீண்டியம்புதிரிலாததுபுகழி
னிந்தனையதுவாமென்னைநீர்துதிச்சொனிகழ்த்துவானன்றலவினையில்
சுந்தரவரியின்சகசிரப்பெயராத்தோத்திரஞ்செய்யுமென்றுரைத்தான்.

பிதுமனனிவையைப்பேசமாகதர்கள்பிறிதிலாச்சூதர்வந்திகரு
மெதிரிலாவிறையைமகிழ்வினேக்கியியம்புவாரிருடிகளுனைத்தான்
விதியினையருளுமுராரியாமென்றும்வேதசாத்திரம்விரையெல்லா
முதவிநீளவனிதுலங்கிடப்பளமேடொத்திடத்திருத்துவையென்றும். (உரு)

சரியிலாநெறிகட்கதிகமாம்பிறர்தந்தாரசகோதரனென்று
மருமறைவழாமல்மகங்களைமுடித்துமந்தணர்க்கெண்ணிலாத்தானம்
புரிகுதியெனவுஞ்சகலசற்குணமும்பொருந்தியபுருடனீயென்றும்
விரிவுறுமுனிவருரைத்தசொற்படியேவிளம்பினம்யாமெனத்துதித்தார்.

பாவலரவைகடுதித்திடநிகரில்பங்கயச்செல்வியைநிகராந்
தேவியாமெழில்கொளரிச்சிசுவுடனுஞ்சிறந்துலகாண்டிடுநிருப
னேவியமொதுங்குமுருவுடைவிசுதாசுவனெனுமதலையையுதவிப்
பூவினிலுறைவோன்வலாரிபுத்தேளிர்புகழ்ந்திடப்படியையாண்டனனால்.

வேதசாத்திரங்கள்விரைகளுமிலாமல்வெறுமையாய்மனிதர்களிரங்க
நீதிசானிருபனவனிமேற்கோபநிறைந்திடவிரதமீதேறி
மாதிரம்வெருவவலம்புரிமுழக்கிவரிவிறைனொலியண்டத்தப்பாற்
போதவேயழலார்சிலீமுகந்தொடுத்துப்புவியினையடர்ந்தனனன்றே. (உசா)

நிருபர்கோன்சினத்தோட்டார்ந்திடவெருவிநிலமகடேனுவாயோடி
யரனயன்வலாரிமுதல்விணோரிடத்தினடைந்திடவவர்கடாங்கிலாது
திருமகள்மகிணனரியினல்லுருவாச்சிறந்திடும்பிதுவினையடைந்து
சரணமுன்பாதமுனிவொழியெதுவேண்டினும்யான்றருகுவனென்றாள்

அவனிமின்னிவையையறைந்திடவரசனருள்புரிந்தவடனைநோக்கி
யுவமையில்விரைகள்வேதசாத்திரங்களுதவுதிநீயெனவசுதை
கவினுறுநிருபவிவையெலாந்தருவன்கன்றுகொண்டேகறவென்ன
நவையறுமுனிவரரனயன்வலாரிநலனுறமனனிவைசெய்தான். (உஅ)

துலங்கியசுவாயம்பூமனுத்தனையேதூயகன்றாக்கிமாநிருப
னிலங்கியவிரைகளனைத்தையுங்கறந்தானிருடிகள்சுரர்குருவினையோர்
நலங்கிளர்குழக்கன்றாக்கியொண்வேதநான்கொடுசாத்திரங்கறந்தார்
பலங்கொளவிமையோர்வலாரிகன்றாகக்கறந்தனர்சோமபானத்தை. (உகூ)

மருளுறுமசுரர்பிரகலாதனைக்கன்றாக்கியேமதுவர்க்கங்கறந்தார்
விரைவினிற்சித்தர்கபிலன்கன்றாகவிளங்கியசாங்கியங்கறந்தார்
சரியில்கெந்தருவர்கவினுறுவிசுவாவசுவொருகன்றதாய்ச்சார
விருகாமுடுகியிலங்குகாந்தருவர்மதுக்கறந்திடப்பினரன்றே. (௩0)

மாயதேவதைகள்மயனைக்கன்றாக்கிமற்றவையெல்லவுங்கறந்தார்
பேயுயர்பூதயியக்கராக்கதர்கள்பிஞ்ஞகப்பிரானைக்கன்றாக்கி
நேயமோடிரத்தம்நிறைந்திடக்கறந்தார்நிகரிலாமாசுணவினங்க
டீயுமிழ்நயனத்தெக்ககன்கன்றாச்சிறந்திடக்கறந்தனர்விடமே. (௬௧)

ஆவினமகிழ்வாலிடபங்கன்றாகவடர்ந்திடும்பசும்புல்லுக்கறந்த
தேவர்கள்முதலாவனைவரும்பினருஞ்சிறப்புறவேண்டியதெலவு
மாவலிற்கறப்பப்பிதுவினைவணங்கியவனிமாதகன்றனளரசன்
யாவரும்பரிபூரணத்துடன்களிப்பவிருநிலமினிதுறவாண்டான். (௬௨)

வரிவிலிற்கோடிமடுத்துயர்ந்தடர்ந்தவரைகளையொதுக்கியேதாழ்வு
சரிவரமேடுதகர்த்தகலவனிதடவிலைபோற்பரம்படித்து
விரைவினிற்றரையிற்புலம்புநீருறவும்விளங்குநீர்ச்சிறையகல்வாவி
பரவைபோன்மலியப்பட்டணநகரம்பழனமார்கிராமங்கள்வகுத்தான்.

வரைதனிற்சிற்றூரதுதனிற்கீணீர்வரும்படியழகுறவகுத்துத்
துருகமெண்ணிலாதபுரியினிலெயில்கடுலங்கியநாஞ்சிலுமமைத்தே
யருமறைமலியத்தெய்வதானங்களழகுறவாவினநிறைய
விரவலர்நிகரில்புரவலராகவளித்துலகாண்டனனிலங்கி. (௬௪)

துரகமேதந்தொண்ணூறுசெய்தரசன்பின்னரும்வேள்வியைத்துடங்கச்
சரியிலாவலாரியசூயையாற்புரவிதனைக்கொடுபோகவத்திரிகண்
டுரைசெயவிசுதாசுவன்றுடர்ந்தேகிப்பிடித்திடவும்பர்கோனடுங்கி
மரவுரிசடைவெண்ணீறுறவுருவமாறவேகொலாமல்விட்டனனால். (௬௫)

பின்னரும்வலாரிகபாலமுமேந்திப்பிறங்கியமாத்திரைக்கோலுந்
துன்னுவெண்டலைகடயங்கநீள்சடைகடுலங்குவேடத்தினைத்தாங்கி
யுன்னுமுன்னடைந்தேயூபமார்பரியைவிடுத்தவனோடவத்திரிகண்
டின்னலில்விசுதாசுவமனுக்குரைப்பவெரிசினத்துடனவன்றுடர்ந்தான்.

கதுமெனவிசுதாசுவமனன்றுடர்ந்துகணைதொடுத்திடுதலுமமரர்
பதியுளம்நடுங்கியிவுளியைவிடுத்துப்பாறிடவவன்றன்மேல்முனிந்து
பிதுவரிச்சிலைகொண்டெழுந்திடநோக்கிப்பெருமையாரிருத்துகடுத்துக்
கதமொழிந்திடுநீயெங்கள்மந்திரத்தால்வலாரியைக்கட்டுவமென்றார். (௬௭)

இவையுரைத்துயர்ந்தவிருத்துகள்சினத்தங்கிந்திரன்வலங்குறைந்தெய்த
வவியுறுமகத்திலிணையில்மந்திரத்தாலழலிடையோமத்தையியற்றத்
தவரெனுமயனுஞ்சங்குசக்கரத்தைத்தரித்திடுதயாளுவுமெய்தி
யுவமையிலரசபொறுத்தியென்றுரைத்தேயும்பர்நாயகனைமுன்வைத்தார்.

சுந்தரமுராரிபிதுவினைநோக்கிச்சொல்லுவானீயெனதுருவாய்
வந்தனையுனக்குநிகரிடும்புருடர்மண்ணிலும்விண்ணிலுமிலையால்
இந்திரன்றனக்குமவன்பதியவணிற்கொடுத்தனையினியிந்தயாகஞ் [ன்.
சிந்தையாற்செயவும்நினைக்கிலையெனுஞ்சொற்செப்பிநற்பாற்கடற்சேர்ந்தா

ஈறிலாமுகுந்தனிவையுரைத்தேகயாகத்தையொழிந்திடும்பிதுமன்
கூறுதற்கரியவயனையும்விபுதர்கோனையுமேகுமென்றுரைத்து
மாறில்மாதவரைமகிழ்வினாலிரைஞ்சிமாதவப்பிரிதியாய்வேத
நூறுமாமகத்தைமுடித்துநீயெனக்கீண்டாறிலொன்றுதவுவீயென்றான்.

அரசனீதுரைப்பமகிழ்ந்திடுமுனிவரச்சுதப்பிரிதியாயெங்கட்
குரியநால்வேதநெறியினின்மகங்களியற்றுவமென்றுரைத்தேகச்
சரியிலாச்சனகசனந்தநற்சனாதசனற்குமாரத்தவர்சார்ந்து
நிருபவாத்துமநாயகனுயரொளிசானேமியானறிதியென்றகன்றார். (சக)

அரியுயரிறையென்றறிந்திடுமரசனளப்பருங்காலமேதினியைத்
தருமம்வீற்றிடவேநெறியுடனாண்டுதனையனைமவுலியைக்கவித்து
விரைவினிற்பழுவத்தரிச்சிசுத்தேவிமேவிடவருந்தவஞ்செய்து
திருமகள்கொழுநனுறையும்வைகுண்டஞ்சேர்ந்தனனுடலினைத்துறந்தே.

அரியமாயோகந்தனினுடறுறந்தேயரிபதத்தரசன்போயணுகச்
சரியிலாக்கற்பினரிச்சிசுத்தேவிதன்னுடைக்கொழுநனுக்கையினை
எரியினைவளர்த்தியிமைப்பின்முன்றானும்விழுந்துயரிமையவரோத்த
மருவமர்துளவமணியுமால்பதத்தின்மகிணனோடெய்தினள்மகிழ்ந்தே.

அரியினங்கிசமர்மலர்மகளவிராய்ப்பிதுமனுமரிச்சிசுதானுந்
தரையினினுயிர்மாய்வேனனைக்கடையச்சார்ந்துநால்வேதசாத்திரங்கள்
விரைகளையுதவிவரைகளையகற்றிமேடுபள்ளம்பரம்படித்தே
யரசனாயுலகாண்டுயர்பதமடைந்தானணங்குகேளெனமுனியறைந்தான்.

பிதுச்சக்ரவர்த்திப்படலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-கருகஉ.

கரு. வது—இடபராசப்படலம்.

அரிதிருமகிணன்ரங்கமீதொளிர்வோனச்சுதானந்தகோவிந்தன்
பரமனாரணன்மால்பரவையைக்கடைந்தோன்பாண்டவர்தூதன்வேயூதுங்
கரியவனிகரில்கச்சியினமர்ந்தோன்கவினுறநிறையுமஞ்சனமா
கிரியினினுறைவோன்சகசிரப்பெயரோன்கேசவனெனவினைகெடுமே.

புடவியைத்திருத்திமறையொடுவிரைகள்புவிமகளருளவேமுயன்று
திடமுடனரசாண்டுயர்பதத்தமர்ந்தபிதுவினன்செயலினைக்கேட்டு
வடிவுடைமலர்மான்மகிழ்ந்தரிபினருமியற்றியதருளெனமாறி
விடபனாமுராரியெழுந்தமைகேளென்றியாழ்முனிதிருவினுக்கியம்பும்.

துலங்கியபிரியவரதனாமரசனளித்திடச்சிறந்திடுசுதர்க
ளிலங்கியவாக்கினீத்திரனெழில்சாவித்துமசிகுவனெண்ணில்லாக்
கலன்களால்நிகரிலிந்திரவாகுகவினுறுமிரணியரோதா
நலன்களார்கிருதப்பிருட்டனெண்மேதாதிதிநவில்வீதிகோத்திரனே.

எதிரிலாப்பிரியவரதன்றன்சிறுவரிவரொழுவருமெழுதீவுக்
கதிபதியாகியமர்ந்தனரவரோடுதித்திடுமரிவையூர்ச்சச்சு
வதியுசனனுக்குத்தேவியாய்ச்சிறந்தமகடெய்வயானையையீன்று
சதிருறுமவடான்சோமனன்குலத்தின்யயாதிக்குத்தாரமாயினளால். (௪)

வேறு. சுந்தரஞ்சால்பிரியவரதன்னருளும்சுதன்சுரர்கடுதிக்கவோங்கு
மந்தரநேர்புயமுடையோனுக்கினீத்திரன்மறுவில்குணத்துமன்னன்
கெந்தமாதனவரையிற்கிளர்காவிலருவிநீர்த்துறையினெய்திச்
சிந்தையினிற்றிசைமுகனைத்தியானித்துக்கணிப்பருநாட்டவஞ்செய்தானால்.

சதுமுகனைத்தன்கருத்தினமைத்தவன்றூன்பலசாலந்தவஞ்செய்நாளிற்
சுதைசுரர்கட்களித்தபிரான்சுதனருளவவனவையிற்றுலங்குகின்ற
விதுவதநவயிலைநகுவிலோசனிபூருவசித்தியென்னுமின்னாள்
கதுமெனநற்கந்தமாதனவரையிற்கவினுறவேதோன்றினாளால். (௬)

பரிபுரம்வண்டிசைபகரப்பாதசாலகம்வயங்குபதம்பார்மேவச்
சரியில்வரான்மிசையலவன்றயங்கிடவேயரம்பையதின்மீதிற்சார
வரவின்மிசையாசாயமுறவதின்மீயிருவரைகளமரச்சங்க
மிருவில்கணைபிறையதின்மேற்புயலுயரவெழுகனகக்கொம்புபோல்வாள்.

மலரளசமாமதியின்வதனமிலங்கிடமுறுவனிலவைமான
விலகுமிருவிலோசனநாளிகங்குமிழிற்றுவியிடக்குயங்கள்மீதிற்
கலநிறையநித்திலத்தாவடமலையக்கரமிசையிற்கடகமின்ன
நலனுறுபொற்றுகிலின்மிசைகாஞ்சியுறவோதிமமுநாணவந்தாள். (௮)

சிந்துரநல்லளிகமுறத்தெரியலலைந்திடக்காதிற்றோடுமாட
மந்தரநேர்நகிலின்மணித்தாவடங்கள்புரளமலர்ப்பாதமீதி
னந்தமுறுபரிபுரங்களரற்றிடவேயாடகநற்றூசுமாடக்
கந்துகங்கொண்டனங்கன்மனங்கலங்கிடவேகரமாறியடித்தாள்மாதோ. (௯)

கரும்புருவந்தனில்வேடன்கரத்தின்வளைகரும்புறுநாணுறவேமுல்லை
யரும்புவெள்குபல்லிரவினரும்புநிறைசுடரினும்வாலவிளைவீச
விரும்புலவர்மனமரத்தினிரும்பெனவேசிதையவிழிகுழையிலூடச்
சுரும்புமலர்க்குழலாடச்சுரும்பின்மிசைபந்துகொடாடினள்பொற்றூசை.

சந்தனங்குங்குமநாணங்கஸ்தூரிதளவலர்கள்வாசம்வீச
விந்தைநிகர்த்தந்தரத்தின்விளங்குதிலோர்த்தமைமுதலோர்வெள்சக்கையாற்
கந்துகங்கொண்டறைந்தெழுமின்கவினைநலவாக்கிநீத்திரமன்கண்டே
சிந்தைமறுகிடவசந்தன்சிலீமுகமெய்நிறைந்திடவேயுரைசெய்வானால். (௧௧)

நாரியில்லாவிருசிலையின்குதைசிறகில்வாளிகொடுநாரியாரோ
யாரையெய்யவடருகின்றீரரிகுழலின்விரகவிசையறைவதென்னே
மார்பினூறுகலசநிறைதனமுனதோவவைபரிக்கமருங்குகாணேன்
சீரினுறுவாயினுரைசெய்யாமற்சிலம்புசெப்பவருவீர்கூறீர். (௧௨)

சிலைகளிரண்டிரண்டெனவேயானனத்துமார்பிடத்துந்திகழ்வதேது
நலனுறுகந்தரம்பிறைபொற்றுமளைக்கீழ்நவையகல்வமர்வதென்னே
நிலவைநகுநித்திலங்கள்வாய்தனினுந்தனந்தனினுநிறைவதென்கொல்
கலைமருங்கிற்றேன்றுறவேகலைபலவுங்கண்டுறுவகழறுவீரோ. (௧௩)

கரமிசையின்வெண்சகுந்தஞ்சுகனமிசையெழுந்துநிலன்றவழ்வதென்கொ
லரிகுழலினமராமலுயர்ந்துயர்ந்தேயாழினிசையறைவதேது
பரிபுரங்கள்பதமிசையிற்பலகாலுங்கலகலெனப்பகர்வதென்னே
தரளவடநகிலின்மிசைதாங்காமற்புரள்வதேதுசாற்றுவீரோ. (௪௪)

எனதுகையிற்செபவடம்போலுமதுதனத்தரளவடமிலங்கக்கண்டேன்
கனமுறுமென்சிரமிசையிற்சடையெனவேயுமதுகுழற்பின்னல்கண்டே
நினைவிறைமேல்வைப்பதுபோற்கந்துகமேலுன்மனதுநிற்பக்கண்டேன்
முனிவர்களினதிகமென்பதறிந்தேனீமொழியாதமவுனத்தாலே. (௧௫)

உம்மிடத்தின்வளையமர்ந்துமலர்வாயினுறுதேனைநுகர்ந்துகாமன்
வெம்மையறப்பணிப்படத்தின்வீரியயோகம்விளையத்தவஞ்செய்வேனேல்
நன்மையுறுசுவர்க்கமதிலுன்மடங்கினின்பமுறுநவையையோவுஞ்
செம்மையிதுநுங்கருத்தைச்செப்புவீர்தனங்கள்செப்பாய்த்திகழுவீரோ. (௧௬)

ஊருளையீர்விழியாலேயுயர்விசும்பினுறைந்திடுவேனென்றுசொல்வீர்
பேருளையீரழகாலேபிறங்கியபூருவசித்தியெனும்பேர்பூண்டீர்
தாரருளீரிலவதரந்தருளீரொன்றெனக்குத்தாரமாவீ
ராருளர்தாமும்மையல்லால்விரகவேதனையகற்றியருள்செய்வாரோ. (௧௭)

வேறு. விரகவேதனையினிவையெலாமுளைத்துமெலிந்திடுமாக்கினீத்திரனைச்
சுரர்கடாமகிழத்துலங்குபந்தறைந்துதோன்றியபூருவசித்தி
யிருகையாற்றொழுதேயெனக்குநீகொழுநனிணையிலாவரசவென்னுள்ள
முருகிடுமயலையளித்தனையெனவேயுவந்தவனுரத்துறவணைத்தாள். (௧௮)

கலைமருங்ககலக்கற்பகத்தருநேர்காவினினுதிர்மலரணையி
னிலவிதழதரமளித்துமென்புள்ளினிசையினைமுழக்கியுமிணையில்
வலனுறுபுயத்தினகக்குறிவகுத்தும்வதனம்வேர்வுறவிருகரத்தின்
பொலனுறுவளைகள்பதபரிபுரங்கள்புலம்பிடக்கலவிசெய்தனளால். (௧௯)

அலரியத்தியிலேநாறிமேற்றிசையினஃதிடையடங்குவதறியான்
கலவியாமுலப்பில்கடலிடையமிழ்ந்திக்கவினுறுபூருவசித்தி
யிலகியவமிர்தகலசநேரிணையிளமுலையிறுகுறத்தழுவிப்
புலனொடுபொறியுமனதுமொன்றாகிநியுதவாண்டுறப்புணர்ந்தனனால். (௨௦)

நீபநேரரசன்புயந்தனையணைத்துச்சிறந்திடும்பூருவசித்தி
நாபியாம்பரதனிலாவிரதன்சீரிகுருநவையில்கிம்புருடன்
சோபனமலியுமிரம்மியனிரணமயனலப்பத்திராச்சுவன்வெம்
பாபமற்றுயருங்கேதுமாலனென்றிடுவர்நவமைந்தரைப்பயந்தாள். (௨௧)

மேருவுக்கதிதேவதையருள்மேருதேவிநல்லிலதைவித்தகமாஞ்
சீர்கொளுச்சரிதங்கட்டியொண்ணுரிசிறந்திடும்பிரதிருப்பைத்தேன்
வாருறுகுயங்கொளிராமைநற்சியாமைவயங்கியபத்திராதேவி
யாருமொவ்வாவிந்நவமடந்தையரையாக்கினீத்திரன்சுதர்வேட்டார். (உஉ)

மேருவுக்கரசன்பயந்தநாரியர்தங்கொழுநராஞ்சிறுவரைவிளங்கப்
பாரினிற்பயந்துபழுதிலாதவள்பூருவசித்திபங்கயனமரு
மூரினிற்புகுதவிரகவேதனையாலுளமெலியாக்கினீத்திரன்றன்
மாரனெய்கணையால்மயன்மலிந்திடவேவனத்திடையவளைநாடினனால். (உ௩)

அடவியிற்காணனதிகளிற்காணனுயர்வரைகளிற்காணன்
கடிமலருறுநற்காவினிற்காணன்கலங்கியுள்ளழிந்திடுமரச
னிடரகன்முனிவரருளினாலனலினிலகுகாமியமகமியற்றித்
திடமுடன்சுவர்க்கத்தடைந்தழகுடையபூருவசித்திதோள்சேர்ந்தான். (உச)

நலனுறவயங்குமாக்கினீத்திரன்றன்சுதனெழினாபிமன்மறையாற்
பொலனுறவியற்றுமகத்தினங்கியினிற்புயலனநாரணன்றோன்ற
நிலனுறவணங்கித்துதித்திடுமரசனிகலிலாவுன்றனைப்போலென்
குலமெலாமுயவேயெனக்கொருமதலைகொடுத்தருளென்றறைந்தனனால்.

நாபிமன்னிறைஞ்சியிவைநவின்றிடலுநாரணனறைகுவானுனக்குச்
சோபனமுறவேயான்சுதனாகத்தோன்றுவனென்றந்தப்படியிற்
பாபமில்லரசன்மனைவியாமேருதேவிதான்பயந்திடுமகவாய்க்
கோபமில்லிடபநிருபனாயெழுந்தான்கோகனகத்துமின்கொண்கன். (உ௬)

அரியினல்லுருவாய்ச்செனித்திடுமிடபவரசன்வான்மறுத்திடவகன்ற
தரையினினெவருமுயக்கனவேடந்தாங்கியேவருடித்தானவன்றன்
சிரசினில்முடியைக்கவித்துயர்நாபிதவஞ்செயத்தேவியோடேக
நிருபனுமிடபனுலகெலாம்புரந்தானிகரில்செங்கோலினையோச்சி. (உஎ)

அவனியின்மனிதருயக்கருமத்தையனுட்டித்துக்காட்டிடவேண்டி
யுவமையிலிடபனிகரிலோர்குருவாயுயருபதேசமும்பெற்றுத்
தவமொணும்வலாரிதனையளாஞ்செயந்திதனைமணந்தவணகிற்றோய்ந்து
பவமிலாதிலங்குஞ்சுதர்கள்நூற்றுவரைப்பயந்தனனறநெறிதழைய. (உஅ)

இடபனாநிருபன்பயந்தநூற்றுவரினிலங்கியபரதனாமத்தாற்
புடவியினிகரில்பாரதவருடமெனப்புகன்றிடும்பெயரான
திடமுடனுயரும்யோகிகளாகிச்சிறந்திடவொன்பதுகுமர
ரடவியினடைந்தாரொன்பதோடொருவர்கருமங்களனுட்டித்தாரன்றே. (உகூ)

செம்பொன்மால்வரையைச்சூழ்ந்திடுஞ்செம்புத்தீவினில்நவகண்டந்தனக்கே
யும்பர்கள்மகிழவரசராயினர்களுவமையிலாவிலாவிரதன்
வம்பவிழ்தொடைசேரிரமியணிரணமயன்குருவயங்கியவரியொண்
கிம்புருடக்கோன்பரதனற்கேதுமாலன்பத்திராச்சுவன்கிளர்ந்தே. (௩0)

மறுவிலாவிவரொன்பதுநலப்புதல்வர்வயங்கியநவகண்டமனரா
யுறையவிவ்வகையின்சுதர்களுற்றுவளையுதவியவிடபனுமரசன்
நெறியுறவரசாளவனியினுறைவோர்நிகரிலாவிருடிகேசனனை
யிறையெனவிறைஞ்சித்துதிப்பவரலாதோரிதரதேவதைகளையெண்ணார். (௩௧)

அறநெறியுறநீளவனியையாளுமிடபனுமரசனூநியாக
மறைமுறைமையினால்நடத்தியேநவையின்மதலையர்தங்களைநோக்கிப்
பிறிதிணையிலாதபரன்றிருமகுணப்பிரானவனடியரைப்போற்று
மறிவுமெய்ஞ்ஞானமுறும்வழியினைநீர்கேண்மினென்றறையலுற்றனனால்.

தெரிவையருருவின்மயங்கியங்கவளைச்சேர்வதுநலனெனவிரும்பி
மருளுறுசுணங்கன்புணர்வபோற்பவங்கள்விளைந்திடக்கலவியார்வலைப்பில்
பரவையிற்படிந்துதொலைவிலாநிரயப்படுகுழிவிழுவதங்கோரீ
ரரிபதமுறவேயுபாயம்யானுரைப்பனைவருங்கேண்மினென்றறைவான்.

அரியடியறியுங்குருவினைவணங்கியாசையையகற்றிடச்சார்ந்த
பெரியவர்குழுவைப்பிறிகிலாதிருக்கப்பிறருடைமனைவியர்பொதுவாந்
தெரிவையரிடத்தின்மனஞ்செலாதமரச்சீவனீதுயர்பரனிவனென்
றருமறைநெறியினரியவிந்திரியம்பிராணவாசுகளொடுசெயிக்க. (௩௪)

சார்ந்தமித்திரர்சத்துருசுகதுக்கஞ்சரியெனவுணர்ந்திடத்தான
மாய்ந்துயர்மறையாலுறுமகமெல்லாமச்சுதப்பிரீதியாய்ச்செய்யக்
காய்ந்திடுஞ்சினமும்வயிரமுமகற்றகயவர்வாழ்விடத்திராதொருவ
னேர்ந்தநற்கருமமுகிர்ந்திடவியற்றநியாயவர்ச்சனைதனைமுயல. (௩௫)

தானுறுந்துயர்போற்பிறரிடரறியதத்துவஞானமுண்டாக
ஊனுறுமுடலாருயிர்முதலாகவுள்ளெங்குமுகுந்தனென்றுணர
வானவர்க்கமிர்தமரிவையாயளித்தமாயன்மாச்சரிதையைக்கேட்க
தேனுறுமலர்நீர்கொணர்ந்துமாதவனைத்தினந்தொறுமர்ச்சனைசெய்ய. (௩௬)

பெருமைசேர்பிரமசரியநேரில்லாக்காரசத்தியம்பிறிதிணையில்
மருளறமறையினெறியினார்வானப்பிரத்தஞ்சன்னியாசமாவிரத
முரிமையாந்திடத்தால்நடத்திடவீட்டுமுடைமையையென்னதீதென்று
தரையினிலிறவாதிருப்பவர்போலச்சாற்றுமாங்காரத்தைத்தவிர. (௩௭)

இருநிலமதனினுடலுறுசீவனியற்றிடுபவங்களுக்கெல்லாம்
நிரயநிர்ப்பந்தம்பலவினுமழிதல்நிச்சயமிப்பவந்தீய
வருபிணியகன்றுநலனுறவருந்துமருந்துபோற்பிராயச்சித்தஞ்செய்யி
னிரவிதன்புதல்வனுலகினெய்தாமலிலங்கியகதியிடையமர்வர். (௩௮)

கருமசாத்திரத்தின்பிராயச்சித்தம்பகர்வர்கலர்செயும்பிராமணக்கொலைதா
னிருநிலமதனிற்றுவாதசவருடங்கபாலத்தினிரந்திடினொருவுஞ்
சுரையினையுதரநிறைந்திடப்பருகுந்துன்மதியோரந்தமதுவை
யெரியெழக்காய்ச்சிக்குடர்கரிந்திடவேநுகரிலப்பவமறுமென்றறும். (௩௯)

இருநிலமதனிலிரணியங்களவினியற்றிடுபதகனாங்கொடியோன்
கரியுறுமரசன்கரத்தினாலுலக்கைகொடுத்திடவுடலினைக்கடிக்கச்
சிரநெரிந்தவணின்மடிந்திடவென்றுஞ்சிறந்திடுங்குருவினில்லாளை
மருவுவோன்விடணமறுத்துத்தெற்குறவேநடந்துபோய்மரிப்பதேயென்றும்.

ஆவதைபுரிவோன்சுராதனைநுகர்வோனாடகங்களவுசெய்நீசன்
தேவனாங்குருவின்மனைவியையணைப்போன்றீயராமிவருடன்சார்வாம்
பாவிமற்றவர்களெரிநரகுறுமற்பகர்பிராய்ச்சித்தசாத்திரந்தான்
கூவிலவணப்புனனல்விரதங்கொடாதபோற்பாவம்வேராறு. (௪௧)

சுராயுறுகடத்தைச்சுரர்நதியத்திற்றோய்த்திடச்சுத்தமாக்காத
பரிசெனமுராரிதியானமில்லாதுபடியினிற்செய்பிராய்ச்சித்தந்
தருமமில்மனிதர்பவங்களையாதுசக்கரந்தரித்தவன்பெயரை
யொருதரம்நினைப்போரனந்தபாவங்களொருவிடச்சமன்முகங்காணார். (௪௨)

மனைவிபுத்திரர்கள்மித்திரரொளத்தான்மனம்வையாதொழிக்மாதவன்ற
னினைவுறவுயரட்டாங்கயோகத்தினெறியினைநினைவுறவியற்றித்
தனைநிகரிலாதவரிபதத்தெய்தத்தவஞ்செயுஞ்சதுர்நலனென்று
புதல்வருக்கிடபனிதவுபதேசமளியினாற்புகன்றனனன்றே. (௪௩)

சரதநான்மறையின்பொருளினையிடபன்றனையர்கட்குரைதுத்தன்சுதனும்
பரதனைமுடியைக்கவித்துநீநெறியாற்பாரினையாளுதியென்று
சுருதிநூல்வழியாற்றிகம்பரனாகித்துலங்குசன்னியாசத்தைத்தாங்கும்
விரதமுற்றுயர்நாராயணத்தியானம்விடாதனுட்டித்தனனன்றே. (௪௪)

தரையினினெதியிரீய்த்திரிந்திடுமிடபன்றனைக்கண்டுசேர்ந்திளஞ்சிறுவர்
விரைவினிலடித்துங்குத்தியுமுதைத்துமேனிமேல்வெள்கலாதுமிழ்ந்து
மிருகையாற்புழுதிதனையெடுத்திறைத்துமிகழ்வுரைத்தெங்கணுமார்ப்ப
வரிகள்மொய்த்திடவேநடந்திடுகரிபோலவனியிற்றிரிந்தனனம்மா. (௪௫)

அரியினையுளத்தினிறைத்திடுமிடபனனங்கனும்வெள்குருவனாய்ப்
புரிதொறும்விரைவிற்றிரிந்திடனோக்கிப்பொறியையோர்தெரிவையொவரும்
விரகமுற்றிடவவ்வனிதையர்கற்புமெலியுமென்றிமைப்பினினொருவி
நருருவனத்தின்விலங்குபுள்ளெனவேநவையறத்திரிந்தனனன்றே. (௪௬)

அசைவிலாமலைப்பாம்பெனவவண்கிடந்துமட்டமாயோகத்தின்செயலால்
விசையுறப்பதினாலுலகெலாமேவிமீண்டண்டத்துறைகுவோர்செயலைச்
சுசியுறவயங்குமனத்தினாலுணர்ந்துதூயநான்மறைநெறிதுலங்க
நிசியகன்றிடவான்வருகதிர்சிவணத்திரிந்தனனிகரிலாவிடபன். (௪௭)

சருகினைப்பொசித்தும்புனலினைநுகர்ந்துஞ்சதாகதித்தனையேயருந்திச்
சுரருலகளவாய்நிவர்ந்திடுங்குடகாசலமெனும்பிறங்கன்மேற்றுலங்கி
விரைவினிருகையதனினிற்றிரண்டகற்களைவிழுங்கியவ்வனத்தி
னெரியினைவருகென்றதனிடைமுழுகியிலங்கியவைகுண்டத்தமர்ந்தான். (௪௮)

தரையினினரசிவ்வகையுறங்கிறவஞ்செய்துமால்பதத்தெய்தும்
விரகிதுவெனத்தானியற்றியாண்டெரியின்விழுந்துவைகுண்டத்தின்மேவும்
பரமனல்லுருவாய்வயங்கிடுமிடபன்பயந்திடுநறசுதன்பரத
னருமறைநெறியினுலகினையாண்டானந்தணர்முனிவர்கண்மகிழ. (௪௯)

ஏசகல்பரதனெழிலுறப்பயந்தசுமதியோடிராட்டிரபூத
னாசகல்சுதரிசனனலவாணன்றூமரோதுத்தனோடைவர்
மாசறுகுமரர்வயங்கிடவுலப்பில்மகத்தினைவளர்த்துமாதானம்
பூசுரர்க்களித்துத்தவஞ்செய்வான்கருதிப்புதல்வருக்கரசைநல்கினனால்.

நலனுறப்புதல்வற்கவனியையளித்துநாரணன்றனையுள்ளமைத்துப்
புலகனாச்சிரமத்துறைந்துபரிசையைப்புனல்மலர்துளவெலாங்கொணர்ந்து
பலனுறப்பரதனருச்சனைசெய்துபலங்கந்தமருந்தியெத்தினமுஞ்
சலமுறுசடையன்சதுமுகன்மகிழத்தவர்களஞ்சிடத்தவஞ்செய்தான். (௫௧)

அரியையுள்ளமைத்தாண்டிருகரங்குவித்தேயருவிபோனயனநீர்பொழியத்
தரையினிற்பரதனிருந்துளியவணிற்சலம்பருகிடவருமருணம்
விரைவினதிவாய்க்காற்றினின்மேவிமீளியார்ப்பரவத்தின்வெருவிக் [வே.
கரைகொணீர்க்கால்வாய்கடந்திடக்குதிக்கக் கலங்கித்தன்கருப்பம்வீழ்ந்தது

பயந்தனிற்கருப்பங்கலங்கிவீழ்ந்திடலும்பயத்தினாற்குதித்திடுங்குரங்கம், கய
ந்தனினமிழ்ந்திமடிந்திடப்பரதன்கதுமெனச்சேர்ந்தவண்கருவி, னுயர்ந்ததிரி
ரைக்குருளையைவியப்பாலெடுத்துத்தன்னுறைவிடம்புகுந்து, புயந்தனிற்சும
ந்துங்கருணைபால்வளர்த்தான்புதல்வரைப்பயந்தவன்றனைப்போல். (௫௩)

அருணமீன்குருளைதனையெடுத்தளியாலருந்தவப்பரதமன்னனசை
மருண்மலிந்திடவேவளர்த்திடச்சிறிதுவருடத்தின்மாளுநாட்சீவன்
றரணியிற்குரம்பையழிபவணிடத்திற்சார்ந்திடும்போதிந்தவுழைமேற்
கருணையாலிருகண்ணுறக்களித்தேகிக்கவினுறுகுரங்கமாச்சனித்தான். (௫௪)

அங்கம்விட்டுயிர்வானடைவபோதருணக்குருளைமேலன்புவைத்திடுமச்
சங்கமாவினையாலுழையதாச்சனித்துந்தவத்தினான்ஞானம்வந்துறவே
கங்கையைச்சிவனும்நதியினிற்பின்முங்கவினுறப்படிபுமாதவர்பா
லங்கையில்வளையேந்தரிபின்மாக்கதையையளியுடன்கேட்டமர்ந்தனனால்.

சந்ததம்பரனைநினைத்துழையாகித்தபோதனரிடத்தினிற்சார்ந்து
விந்தைநாயகன்றன்சரிதையைக்கேட்டுவினையகன்றிடச்சென்மங்கழிந்தே
அந்தணனொருவனிடத்தினிற்சனித்தானரிபத்தனாகியதவத்தால்
சுந்தரவிடபன்சுதனுமாய்ப்பின்னரிணருணமாய்த்தோன்றியதுணர்ந்தான்.

மரணம்வந்திடுபோதுழையின்மேற்கருத்தைவைத்திடச்செறிந்தபாவத்தா
லருணமாய்ச்செனித்ததறிந்தினியெவருமணுகிடாவண்ணமாய்மூங்க
ரிருள்நலிந்திடவேதெரிகிலாக்குருடரியம்பியதுணர்கிலாப்பிதிரர்
தரணியிலுழலுந்தகைமைபோற்றிரிந்தான்றுயங்கிதெய்தினுமருந்தி. (௫௭)

தவ்வணமயாருவவவனியினெவருஞ்செவிடந்தன்மூங்கனென்றுரைப்ப
பாவமிறனையாண்டுதவியமறையோன்பயந்திடுஞ்சேட்டர்கள்பரிவா
லேவிடப்புனத்திற்பயிருகளழியாதிரலைமானிவையெலாமோட்டிக்
காவலாய்த்தினமும்பரமனைநினைந்துகானிடைத்திரியுநாடன்னின். (ருஅ)

திருடர்கட்கிறையாமொருவனுணையினூற்றீமைசெய்கயவர்களேகி
மருட்டுமலகைத்தலைவியானவட்குமாணிடப்பலியிடமற்றோர்
புருடனையவடன்கோயிலிற்பாசம்புயத்தினிற்பிணித்துக்காத்தவர்க
ளிருடரும்பொழுதிற்றுயின்றிடவவன்றன்விதியினூற்றப்பியேகினனால்.

கயவர்கள்விழித்தக்கோயிலிற்றங்கள்சட்டிவைத்தவன்றனைக்காணா
துயருமெம்மிறைவன்வரினமைவதைக்குமென்றுளம்வாடியேபுனத்திற்
பயிரினைக்காத்துத்திரிசெடபரதனெனப்பகர்நாமத்தந்தணன்றன்
புயமழுந்துறநீள்கயிற்றினுட்சிமிழ்த்துப்போந்துகாத்திருந்தனரன்றே.

அந்தவேலையினிற்றிருடர்கட்கிறைவனணுகியக்காளியையிறைஞ்சிக்
கந்தமாமலராலருச்சனைமுடித்துக்கடுகியச்செடபரதற்குச்
சந்துடன்றொடையலணிந்தனந்ததிநெய்தணிந்திடவருந்துவித்ததற்பி
னிந்துவினவிர்போலிலங்குவாள்கரத்தாலெடுத்தவன்றறித்திடும்வேலை. (சுக)

அரிமனத்துறவேயவனிடுமனத்தையருந்திமற்றவன்றனைத்தறிக்கச்
சிரசினைநீட்டுஞ்செடபாதன்றன்றேசசுக்காளியைச்சுடலும்
வெருவியாண்டவடான்விரைவினிற்சுடர்வாள்விசிறியத்திருடர்கட்கிறையோ
டொருநொடியிடுமுன்சுமடர்களெல்லாமுருண்டிடத்துணித்தனளன்றே.

சந்ததந்திருடுங்கயவர்கட்கிறைவன்றமரொடுங்காளிதன்வாளால்
மந்தரவரைபோல்மடிந்தவண்விழவேவனத்தினிற்செடபரதன்முன்
முந்தியபயிரைக்காத்திடுந்தினத்தினொருதினமுடுகுதேரிரவி
சிந்துவினெழுநீர்படிந்திடவேண்டிச்செறிந்தகானேகிடும்வேலை. (சுங)

விந்துதேசத்துக்கிறைவனுமிரகூகணனெனும்வேந்தர்கோனிகரில்
கந்தமார்கமலத்தயன்றுதித்திடுநற்கபிலனையிறைஞ்சிடக்கடுகி
யந்தமார்தந்தச்சிவிகையின்வருவோன்றனைச்சுமந்திடவவன்சிவியார்
சந்தியாவிரதஞ்செயவருமிவனைப்பிடித்துநீசிவிகைதாங்கென்றார். (சுச)

உரனுறுசிவியார்செடபரதன்றனுரத்திடைமோதியேபிடித்து
விரைவினிற்கொணர்ந்துசிவிகையைத்தாங்கவிடுத்திடமறுத்துரைசெயாம
லொருபுயத்திடையிற்சுமந்திடச்சிவிகையலைந்திடவுளைந்திடுமரசன்
எரியெழக்கனன்றுண்டிவன்றனைநோக்கியிவையிவையியம்பலுற்றனனால்.

விடையெனப்பருக்குமெய்யினையுடையராய்விழுமியசிவிகையையலைத்துப்
படியினிற்கிடாப்போற்கொம்பினைச்சுமக்கும் பலனிலாதவர்கள்போன்றப்பா
முடுகிநீயலையாதேகுதியலாதேன்முனிந்துனையாக்கினையிடுவன் [ய்
றிடமுடனிவர்போற்பரிக்குதியெனலுஞ்செடபரதன்னிலையறைவான்.

மறுவிலாதுயருஞ்சிவிகையுமுளதாய்மற்றதின்மீதினியுளையாய்
திறலுடையுனையேபரித்திடுஞ்சிவியாருளருமாயவனியிற்செல்லும்
நெறியுமீண்டுளதாய்நீயுமநித்தியனாயிருப்பதுநிச்சயமாயி
னிறைவனாயுலகாளரசயானுன்னைச்சுமப்பதுமெய்யெனவிசைத்தான். (௬௭)

வேதசாத்திரத்தால்விளங்கியபொருளைவிழுமியசெடபரதன்று
றோதலுமிரகூகணமன்னன்கேட்டேயுவமையில்சிவிகையினிழிந்து
காதிதன்சுதனோகபிலனோசனகாதியர்களோகழறெனவிவன்றன்
பாதமேற்பணிந்திவ்வுரையினைமொழியப்பவமிலாவந்தணன்பகர்வான். (௬௮)

என்னைநீயெவனென்றியம்பிடவேண்டாம்யானெவனாகிலென்னிவணீ
யுன்னியகருமந்தெரியயானறைவனோதுதியெனமன்னனொளியாற்
றுன்னியமணியாற்றுலங்கியசிவிகைசுமந்தநீசுமந்திலையென்று
யன்னவாசகமேதுணர்த்துதியெனவேயந்தணனிவையறைந்தனனால். (௬௯)

நிருபவிவ்வனத்தோர்வணிகன்றன்றமரோடெய்தவேயிலாபங்கணிரப்பும்
பரிவுடன்வருவானெறியெலாந்தூறும்பலபலபூண்டுமேமலியத்
திருடர்களுறுவர்சினேகிதர்போலத்திரிந்திடவிகலனுமிடைய
வெருவுறவசகமசகமெய்கடிக்கவிபரிதச்சுழலுயிர்ப்பறைய. (௭0)

சிலரியுங்குராலும்வெடிபடக்கூவச்சிகியுறுவாயகலலைகை
நலனுறத்துவபோலொளித்திடர்தரவேநவையுறவனத்தனல்பரவ
வலனுறுமியக்கர்வாதைசெய்திடவேவளையெயிற்றரவமுங்கடிக்க
விலையில்முண்மரத்தினிருந்திடும்வரைப்பாம்பிழுக்குறவிழுங்கியேயுமிழும்.

அயமிலாநதியையளிபுடனோக்குமடவியிற்கானலைக்கண்டு
பயமெனப்பாறும்பழுதில்கெந்தருவர்பதியிடைச்சேர்ந்தவனொருவு
மியல்புறும்வரைமீதேறவேகருதிநெறியெலாமுள்ளூறவிழியுங்
கயம்வரவெருவிவ்வரைமுழைவிழுந்துகடிதோடிக்கொடியினைப்பற்றும். (௭௨)

நாரமிலசும்பில்விழுந்திவையிலாதநலனிலாத்தேனுகரப்போய்க்
கோரமாமதனிகொட்டவேபதைக்குங்கூடிவந்தவரெலாமொருவச்
சாருமவ்விடத்திற்புதுமையானவரைத்தடநெறிசலிப்பின்றிநடப்பன்
றூரவவ்வழியின்முடிவிடமறியான்றுரிதமுற்றேகியேமீள்வன். (௭௩)

அரியினுக்கஞ்சியெருவைகள்குரண்டத்தருகுறுமவர்கள்வஞ்சனையின்
மருவியோதிமங்கடனையகன்றறிவின்மற்கடவினத்தினைவிரும்பித்
திரியுமிவ்வழியிற்றுரிதமுநினையான்றினந்திரும்பாமலேபோவ
னிருபநின்னிடத்திற்றுலங்கியவிவேகத்திவ்வனம்நீக்கியேகென்றான். (௭௪)

தூயனாய்வயங்குஞ்செடபரதன்றான்சொல்லியவுரையினைக்கேளா
வாயவையெலவுமறிந்தனனிரகூகணனவையேதெனவற்றியிற்
றீயவெங்கானந்தரையினில்வாழ்க்கைசிறந்திடுவணிகனேசிவ
னோய்விறத்துவமூவெட்டுமேயவன்றன்றமரெனவுரைத்திடுமன்றே. (௭௫)

ஈட்டிடுமிலாபங்காமமேநெறியிவிடைவிடாத்தூறும்பல்பூண்டுங்
கூட்டுறற்றருமவதன்மமேயாகுங்கோரராஞ்சோரர்களறுவர்
பூட்டியஞானேந்திரியமுமனதும்புனிதமாலாகியநிதியை
வீட்டினிலுறுமவுளதெலாம்பறித்துவிபரிதஞ்செய்குவரன்றே. (எசு)

இகலறுயமர்வோரில்லுறைமடந்தைதனயர்கள்மித்திரரிவர்க
டகைவிலாதவன்சொம்மாகியவசத்தைச்சதிருடன்கொண்டுபோயுறுவர்
மிகவும்வெம்மையதாமசகமோடசகம்விபரிதவிரவலராகு
நகிலுறுமடவார்கலவியேசுழல்காற்றெனநசிப்பித்திடுமறிவை. (எஎ)

சிலரியேகாணுவிடத்திற்றூடகனுஞ்சீரிலாக்குரால்முனர்நின்று
பலபலவெள்கல்பகர்ந்திடுமவனும்பழுதுறுகொள்ளிவாயலகை
பொலனுறுமவிர்போலனவினைக்காட்டிப்பொருக்கெனமறைப்பபோல்விபுவந்
தலமிசைநிலைபோலெழுந்திமைப்பின்முன்சல்லபியாய்விடுமன்றே. (எஅ)

வனவனலசுபமியக்கராமவர்கள்வாதைசெய்நீதியிலரசர்
கனலுமிழரவங்கயவர்செய்வினையாங்கனமுளாரிலையில்பாதவந்தா
வினலுறவெவர்க்குமிடாதுதான்பொசியாதிருநிலத்தீட்டியதனமாம்
நினைவுறத்துயின்றுவிழிப்பனவிழுங்கியுமிழ்ந்திடுநீள்வரையகியே. (எகூ)

பயமிலாநதியைநோக்கிநிற்பனயாடண்டமார்க்கத்திடையமர்வ
நயமிலாவனத்திற்கானலைக்கண்டுநாரமாமென்றுபாறுவன
வியல்பறத்தனக்கெய்தாதனவெவ்வையுமிச்சிக்குஞ்சுவையொளிபரிச
முயர்வுறவெழும்பேரோசைநாற்றமென்றுணாத்திடுஞானவிந்திரியம். (அ௦)

பழுதில்கெந்தருவர்நகரிடைச்சேர்ந்தங்கொருவுதல்பருதிசால்விசும்பி
னழிவுறுசுவர்க்கத்தமர்ந்துபின்பாரினடைவனவகல்வரைமீதிற்
கெழுமிடக்கருதிநெறியின்முள்ளூறவேகிமுறவிழிவனமுராரி
வழுவிலாப்பதத்தினுறுவபோற்கன்மமருவிமண்செனனமாவனவே. (அக)

கடகரிவரவேவெருவிமால்வரையின்கந்தரம்விழுந்தவனுடியுங்
கொடிபிடித்துழல்வதெதுவெனிற்காலன்குறுகுவனெனப்பயமலிந்தே
யிடரொனும்விலங்கன்முழையினிமிழ்ந்தியிழுக்குறுங்காமமாங்கொடியைத்
திடமெனப்பிடித்துமரணமுற்றிடவேதீயுறுநிகோதத்தினடைவ. (அஉ)

அயமிலாதொருவுமசும்பிடைவிழுந்தேயச்சுவைத்தேனுகரப்போய்
நயமிலாத்தேனீயறைந்திடப்பதைப்பதெதுவெனினன்கிலாஞான
முயர்வுறும்பாழ்வெங்கூவலினமிழ்ந்தியொருவனில்லாடனைப்புணரக்
கயவளாமவடன்கணவனீதுணர்ந்துகதமுறப்பிடித்துதைப்பனவே. (அ௩)

தன்னுடன்கூடிவருபவரொருவத்தான்புதிதானவருட்னு
மன்னியேநடந்துமுடிவிடமறியான்மறித்துமீண்டிடுவனென்பதுதா
னன்னைதன்னுடனேயத்தன்மித்திரர்களகன்றிடமரணமாய்ச்செனித்தே
பின்னரும்பிதாத்தாயுறப்பிறப்பிறப்புப்பிறிவுகாணுதிவனுழல்வ (அச)

வெருவியேயரிக்குக்குரண்டமோடெருவைமேவிடத்தமர்ந்துவஞ்சனையாற்
சரியிலோதிமத்தையொருவிமற்கடத்தைச்சார்ந்துபோகுவனெனப்பதறையின்
மரணகாலத்துக்கதியயமுறவேமருளுறுமிதரதேவதைதாள்
பரவிமோகனநூலுணர்ந்தறிஞரைத்தாணிகழ்ந்துபாவியர்தமைச்சேர்தல்.

இவையெலாமுணர்ந்தேயிலங்கியவிரகூகணசட்கமாருந்தன்னிடத்தி
னவையறவளர்மெய்ஞ்ஞானமார்பொருளானலனிலாச்சென்னமாவனத்தைப்
பவமறத்துணித்துப்பரகதியடைதியெனப்பகர்ந்திடுஞ்சொலையறிந்தே
தவரினுமதிகசெடபரதன்முனிறைஞ்சமற்றவனிவைசாற்றும். (அகூ)

தெண்டிரைக்கடல்களுலப்பிலாவரைகடவுகளெழிலுடையுலக
முண்டகத்தலைவன்புரந்தரன்விபுதர்முனிவர்தானவர்கள்மாசுணங்க
ளண்டமோடளப்பிலெழுவனவெவையுமனித்தியமழிவிலாவிறைவ
னெண்டவர்தமக்குமகப்படாதிலங்குமுராரியீதுணர்தியென்றிசைப்பான்.

ஆதலால்மனவுஞ்சிவிகையான்சுமந்ததிலையென்பதறிகுதியெனநால்
வேதசாத்திரத்தாலதிகனுயுயரும்விமலன்மாலாமெனவிரித்தே
யோதுதத்துவத்தையுணர்ந்திடவரசனுவந்தவன்பதத்தினிலிறைஞ்சி
யாதியாம்பரனைமனத்திடையழுத்தித்தவஞ்செய்துபரகதியடைந்தான்.

விந்துதேசத்துக்கிறைவனுக்கிவையைவிளம்பியசெடபரதன்முன்
சிந்தையிலரியையழுத்தியாண்டெவருஞ்செறிந்திடப்பழுவத்திற்றவஞ்செய்
தந்தமாநடுவாயாதியாயெவையுமல்லவாயசைவிலாதுயரும்
விந்தைநாயகனுமுராரியாயிலங்கும்விமலன்வாழ்வைகுண்டத்தடைந்தான்.

அவனியின்மனிதருயவளப்பில்லாவருந்தவந்தனையனுட்டித்துப்
பவமறவவிர்கொளரியினலுருவாய்ப்படியினிலிடபனுமாகி
யுவமையிலறஞர்பரதனையுதவியுயர்தவத்தாற்கதியடைந்த
கவினுறுசரிதைசமலைகேளென்றுகழறினன்யாழ்முனியம்மா. (கூ0)

இடபராசப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஎ0உ.

கஎ. வது—வாமனப்படலம்.

அருணமாயெழுந்தவரக்கனைவதைசெய்தமரர்கோன்புதல்வனைவீட்டிக்
கருணையாலிரவிசிறுவனுக்கவிர்கொள்கவினுறமுடியினைக்கவித்து
வருணன்மேற்சரங்கடுரந்துவாருதியின்வரைகளையடுக்கியேகடந்து
முரணுறுநிருதன்வரனுடைரைந்துமுடிதுணித்தவன்றனைத்துதிப்பாம். (க)

கோலநுண்ணிடையார்குவிமுலைநுதியிற்குழுமியகிரந்திமீவிடுப்பப்
பாலருந்தாதவ்விடக்குருதியினைப்பருகுநீர்ப்புழுவெனமனனே
சீலநல்லறத்தைவிடுத்தின்னுவினைத்துத்திருப்பொனுங்கோதத்தைத்தராது
பாலனுபுலைசேழயின்றவனுமம்பகர்திமற்றவன்பதத்துறவே. (உ)

எழிலுறுமுராரியிடபனுயெழுந்தேயிம்பரின்விரதமாதவங்கள
பழுதறமுடித்துப்பாரதனையுதவும்பவமிலாச்சரிதையைக்கேட்ட
விழையொளிராரிவையினிதுடன்முராரிபின்னருமியற்றியசெயலை
யழிவின்மாதவனேயுரையெனமுனிமின்றனக்குவாமனன்கதையறைவான்.

அரியணங்காகியசுரர்கட்கமிர்தமளித்திடாதமரர்கட்குதவச்
சுரர்களோடவுணர்சுடுசரஞ்சொரிந்துதொலைவிலாச்சமர்செயவலாரி
கரிவெரினிலங்கிவச்சிராயுதத்தைக்கடாவிடமாவலியயர்ந்து
தரையினில்விழுந்தேயுசனனன்றருள்சஞ்சீவியாற்றமரொடும்பிழைத்தான்.

மாவலியுசனனுதவுசஞ்சீவிமந்திரந்தன்னினாற்பிழைத்துத்
தேவர்கடமைத்தான்செயித்திடவேண்டிச்சிறந்திடுஞ்சுக்கிரன்றமரை
யாவலின்வணங்கிப்பருச்சனைபலவுமளியுடன்சற்கரித்தெண்ணில்
கோவனமுதன்மாதானங்களெல்லாங்கொடுத்திடவவர்மகிழ்ந்தனரால். (௫)

வேதியரளியால்விரோசனன்செய்க்குவிச்சுவசித்தெனும்வேள்வி
போதினிலயனும்வெருவிடமறையைப்புகன்றவர்முடிக்கவவ்வனலுட்
பீதகவுருவாய்வயங்குநாலிவுளிபிணிப்புணவரிக்கொடிதிகழ
வோதுதற்கரியவுருளையோடொருதேரும்பர்கணடுங்கிடவெழுந்த. (௬)

அன்றியும்பிறைநிகர்த்திடுதனுவுமம்பறுவாவமுமிணையில்
குன்றுவந்துறினுந்துகளதாமுரத்திற்குழுமுசாலிகையுடன்றுன்ற
வென்றியையுறவாண்டிமையவர்மகிழும்விறலுடைமாவலிதனக்கே
யென்றவீர்சிவணமணிகொள்மாலையினையீந்தனனிரணியன்சிறுவன். (௭)

உசனனோர்பணிலமளித்திடத்தன்னையுதவிய விரோசனன்பிதாவாம்
வசையிலாப்பிரகலாதனைவணங்கிமாவலிவையமீதேறி
யசுரர்கள்கடல்போலதிர்த்துவந்துறவேயமரர்கோன்பதியினையடைந்து
சசிநிகர்வளையைமுழக்கினன்விபுதர்சதமகனோடுலகஞ்ச. (௮)

அண்டம்விண்டிடுமென்றமரர்கள்குலையவசுரர்கோன்சிலையினொலிபோய்
மண்டவெண்கரிகளிரிந்திடவுவரிமறுகிடவடவரையசைய
முண்டகன்மனமுந்துளங்கிடவிபுதர்முனிவர்கணடுங்கிமாவலியைக்
கண்டுநெஞ்சுலைந்துவலாரியோடேகிக்கவினுறுகுருவின்பாலடைந்தார். (௯)

அன்றுமாலமிர்தமெமக்களித்திடுநாளமரிடைத்தோற்றமாவலிதா
னின்றிவணுடிவளையினையூதியெதிர்த்திடுவலனிதேதென்ன
வன்றிறலுடையவிரோசனன்மதலைமறையவர்வேண்டியதளிப்ப
நன்றிகொளுசனனிகரில்விச்சுவசித்தெனுமகநடத்தினனென்றான். (௧0)

அந்தணருடனேயுசனன்மாமறையையறைந்தந்தவேள்வியைமுடிப்பக்
கந்தவாகனன்போற்கடுகியேசெலுநாற்கந்துகந்தேர்கொடிகனலி
லெந்தநாட்டினுஞ்சரமறுவாவமிணையிலாக்கவசமவ்வெரியின்
வந்திடவலமிக்குயர்ந்தமாவலிமுன்மலைந்திடவரிதெனவுரைப்பார். (௧௧)

வரந்தருமயனுமதிகொள்வேணியனுமாலும்வந்திடினுமாவலிமுன்
பொருந்தரமிலாதுவெருவியோடுவராற்புகல்வதிங்கேதெனப்பகர்ந்தே
யரந்தையையடைவீரமர்செய்வீராகினதிதிதன்சுதரொடுநீயிர்
கரந்துயுமெனாலுமவரிவரொளுதுகலங்கிநல்வலாரியோடொளித்தார். (கஉ)

வானவருடனும்வலாரிபோயொளிப்பமாவலிமகிழ்ந்தவர்பதியிற்
ருனவர்களிப்பநிருதர்கள்வியப்பச்சதமகனேறுமாசனத்தின்
மீனெனமிளிர்கண்ணரம்பையர்கவரியசைத்திடவெண்குடைவிளங்கத்
தேனமர்தொடையலணிந்துவீற்றிருந்ததிசையெலாம்புரந்தனனன்றே. (கங)

சதசயிந்தவமேதத்தினைமுடித்துத்தானங்களெண்ணிலசெய்து
திதிதருசுதர்கள்மகிழமாவலிதான்சிறந்துலகாண்டிடக்கண்டே
யதிதிசோகிதளாயயமுறுநயனளாகிக்காசிபன்றனையிறைஞ்சி
யுதவுதியெனக்கோர்மகவினைவலாரியிடர்கெடும்படியெனவுரைத்தாள். (கச)

மனைவிநெஞ்சுளைந்துவணங்கிப்பீதுரைப்பமறுவிலாக்காசிபன்மொழிவான்
றுனியுறும்வலாரிசுரரொடுமகிழ்ந்துதுலங்கிடவுனக்கொருசுதன்ருன்
றினகரனவிர்போற்செனித்திடவுயருஞ்சீதரன்றனையுள்கி
நினையுமந்திரத்தாலிலங்குமாவ்ரதநீமுயலென்றிவையுரைப்பான். (கரு)

மீனமாதத்திற்றபனனும்விதுவுமேவிடுந்திதிமுதலாக
வானவர்மகிழுந்துவாதசியளவாய்மறுவில்லாத்துவாதசாக்கரத்தாற்
றேனமர்மலராலருச்சனைநிறைத்துச்செயம்பெறவிரதத்தைமுடிக்கிற்
ருனவருரங்கடளர்ந்திடவுனக்கோர்தனையன்ருேன்றுவனெனமொழிந்தான்.

பதியிவைபகரவதிதிநெஞ்சுவந்துபழுதிலாத்துவாதெசாக்கரத்தாற்
புதுமலர்கொணர்ந்துநிகரில்காசிபன்ருன்புகன்றிடுமந் நமாத்ததிற்
றிதிமுதற்றுவக்கித்துவாதசியளவாய்ச்சீதரன்விரதத்தைச்செய்யக்
கதுமெனக்கருடன்மிசைக்கருமுகில்போற்கவினுறுமாதவன்வந்தான். (கஎ)

அலர்மழைவிபுதர்மகிழ்வுடன்பொழியவந்தரதுந்துபிமுழங்கச்
சிலைவளைதிகிரிகதையொள்வாடயங்குதிருக்கரங்கவினுறச்சுடரார்
கலனுறுநிறத்திற்கமலைவீற்றிருப்பக்கதிர்முடிவயங்கிடத்தோன்றும்
நிலமகள்மகுணனடியினினிறைஞ்சியதிதிகண்ணீருறத்துதித்தாள். (கஅ)

இருகரங்குவித்துநயனநீர்புரளவிறைஞ்சியேதுதித்திடுமின்னை
யரியளிமலியவுனக்கியானருளும்வரமெதுபகரெனவறையத்
தெரிவைநெஞ்சுவந்துவலனுறும்சுரர்செருக்கவித்திடுமொருசுதனைத்
தருகுதியெனவம்முராரியானுனக்குத்தனயனுய்வருவனென்றகன்ருன். (க௯)

சதுமுகன்பிதாவாஞ்சக்கரனுனக்குத்தனயனுய்வருவனென்றகல
வதிதிநெஞ்சுவந்துபதியினையிறைஞ்சியரியருளின்செயலறைய
விதுநிகர்வதனமனைவியைப்புரிவால்விழுமியகாசிபனணைப்பத்
திதிசுதரிடக்கண்டுடித்திடக்கருப்பந்திரண்டவத்துயவள்வயிற்றின். (உ௦)

அதிதிசாடரந்தானிலங்கிடக்கருப்பமவிருற்றங்கரிவைமாதத்தின்
விதுவளர்ந்திடுநற்றுவாதெசியோணம்விளங்குமுற்காலவிசித்திற்
புதுமலரமரர்பொழிந்திடவலையார்புண்ரிபோற்றுந்துபிமுழக்க
மதனனையெரித்தோனிடரினைத்தவிர்த்தோன்வாமனனாகியெசெனித்தான்.

வேதியர்மகிழநிகரிலாதவனாய்விளங்கியவாமனன்செனிக்க
வாதரவுடன்சேர்ந்தன்னையும்பிதாவுமணைத்தளிமிகுத்திடவளர்த்துச்
சாதகஞ்சவுளமுடித்துபநயனஞ்சதுமறைநூல்கொடுசெய்து
வேதசாத்திரநூல்விழுமியபுராணமனைத்தையுமோதுவித்தனனால். (உஉ)

சுரர்குருதிகழ்முந்நூலினைக்கொடுக்கத்துலங்கியகாசிபன்முஞ்சி
யருளவேயதிதியெழில்கொள்கௌபீனமளித்திடக்கமண்டலம்வியாசன்
றரவுயர்குசப்புல்சரியிலேழிருடிகணங்கடானுதவமான்றோலைப்
பரிவினால்வனிப்பாவைநல்கிடவான்பரிவிலாவிதுப்பொற்றண்டீந்தான்.

வேறு. நாமகள்செபவடம்நல்கவேயயன்
தோமில்காயத்திரிதன்னைச்சொல்லநற்
பூமனன்முதலினோர்போற்றிசெய்திட
வாமனனடந்தனன்மண்ணின்மீதரோ. (உச)

நருமதைநதியினுத்தரத்தினன்குறும்
பிருகுவாசம்மெனும்பேருண்டாய்விய
லரிமலர்ச்சோலைசூழாச்சிராமத்திற்
பரிவினால்மகஞ்செய்மாவலியின்பாற்சென்றான். (உரு)

அருமறைநாவினினமரவொண்சிகை
வெரினுறவவாமுஞ்சிவிளங்கிக்காட்டவே
சரியில்கௌபீனநற்றவளமாயுற
வர்முந்நூலுழையின்றோலொளிரவந்தனன். (உசு)

தண்டுடன்கமண்டலந்தடக்கைமீதுற
மண்டனிலெழுகுசப்புலுவ்யங்கவே
முண்டகமணிவடமொளிரமூவுல
குண்டவன்வாமனனாகியுற்றனன். (உஎ)

அஞ்சனமரகதமளக்கர்நீலமார்
மஞ்சுகாயாமலர்மானுமேனிய
னிஞ்சொலாலாரணமிசைக்குநாவினன்
கஞ்சமாமலருளோன்களிக்கவந்தனன். (உஅ)

அருமறைவடிவெனவற்புதக்குற
ளுருவதாய்வருகின்றவுத்தமன்றனைப்
பரிவினால்மாவலிவணங்கிப்பாதநீர்
சிரசின்மேற்றரித்தனன்றீமைவேரற. (உகூ)

அற்புதமானவவ்வனிமீதினுன்
பொற்பதமிலங்கைவைத்திவணிற்போந்தின்று
நற்பதநானெய்தநல்கினுயென்மெய்
புற்புதமாகவேபோகுமுன்னென்றுன். (௩௦)

மாவலிதுதித்திவையறையவாமனன்
பூவினிநயனருள்புவனமெங்கணு
மாவலிற்கேட்பவர்க்கவையளித்திடுங்
காவலவுனைநிகர்த்தவராக்காண்கிலேன். (௩௧)

சரியிலாமகமெணில்செய்துதானங்கள்
பரிவுடனளித்துவிண்பாரெண்டிக்குநீ
யொருதனிக்கோல்கொடேயோச்சினுயெனு
வருமறைச்சொற்கடாங்காசிகூறினுன் (௩௨)

வேதநற்கொழுந்துபோல்விளங்குமாணவச்
சோதிசொல்லமிர்தெனச்செவியிற்றுன்னலு
மாதவனடிமிசைவணங்கிமாவலி
யேதுவேண்டினும்யானீவன்கூறென்றுன். (௩௩)

மருளகன்மாவலிமகிழ்ச்சியோடிமீ
துரைசெயக்கேட்டருளுலோகநாயகன்
தருமமும்ஞானமுந்தவமுமின்னதென்
றருள்செய்துபின்னருமறையலுற்றனன் (௩௪)

மானமார்வேசிமற்றஃதிலாக்குலத்
தேன்மொழியுற்பசந்துட்டஞ்சேர்மன
ளுனதுகொண்டுளமகிழ்விலந்தண
னினமெய்துவரெனப்பினரியம்புவான். (௩௫)

காவலவாதலிற்காமமுற்றியா
ருவலிற்காண்குவதனைத்துங்கேட்கிலன்
பாவமற்றுயரவென்பதத்தின்மூவடி
தாவெனமொழிந்தனன்றூழ்விலந்தணன். (௩௬)

அந்தணனிவ்வுரையறையமாவலி
சிந்தையின்மகிழ்ந்துநீசெப்புமூவடி
தந்தனனென்றுதான்றுனம்பண்ணவே
யந்தமார்கமண்டலத்தயங்கையேந்தினுன். (௩௭)

பிடிததிடுசிரகநீர்பெருகமூவடி
கொடுத்தனன்கோடிநீயென்றுகூறுமுன்
வடித்தவேலுடையமாவலியைக்கோபியாத்
தடுத்துயர்பார்க்கவன்சாற்றுவானரோ. (௩௮)

அவனியன்றிடந்துபின்னருந்திக்கான்றிடு
முவமையிறனிமுதலானவுத்தம
னிவனுனைவஞ்சனையியற்றவெய்திய
கவடமாவனவுருக்காண்டிபின்னென்றான். (௩௯)

இந்திரன்றனக்குலகளிக்கவெண்ணியே
நந்துசெங்கிரியையேந்துநாற்கர
னந்தணச்சிறுவாயடைந்துமூவடி
தந்திடென்றியற்றுகைதவம்பின்காண்டியால். (௪0)

சரதமாணவக்குறளொன்றுதானவ
கருதிமூவடிகரதலத்தினு
லொருதனிமுதல்வனுக்குதகஞ்செய்திடியே
லரிதினிற்பெறுமுலகாள்கிலாயென்றான். (௪௧)

மாவலிக்கிவ்வுரைவழங்கிப்பார்க்கவன்
தேவர்தம்மிடரினைத்தீர்க்கச்சிந்துவாய்
மூவடிதாவெனமொழிந்தமாயனுக்
கீவதுகருமமன்றிகழ்தியாலென்றான். (௪௨)

எனவுரைபலவுரைத்திதநீதெனச்
சொனவுசனன்றனைச்சுளித்துமாவலி
தனைநிகரிலாதசற்குருவென்றுன்னைநா
னினைவதுபழுதெனநிகழ்த்துவானரோ. (௪௩)

தடித்தெனவிளங்கியேதவிரிவ்வாழ்க்கைதான்
றிடத்துடனிருக்குமென்றவத்தஞ்சிந்தித்துக்
கொடுத்திடாதொழிகெனக்கொடுமைசூழநீ
தடுத்ததுகருமமன்றென்றுசாற்றுவான். (௪௪)

சாதலேநிச்சயந்தருமம்வெஃகநீ
ராதலாற்றுனிகெடவாகியாயினு
மீதலேநலனலாதெண்ணறீதெனு
வேதசாத்திரமெலாம்விதித்ததாமென்றான். (௪௫)

அருமறைநெறியினையறிந்துஞானமெய்ப்
பொருளினையுணர்ந்திடும்புலவராயினு
மிரவலர்க்களித்திடாவுலோபமெய்துமேற்
புரையுறக்கெடும்பயம்போல்வரொன்றனன். (௪௬)

கொடுப்பவர்தங்களைக்கொடாதியற்றியே
தடுப்பவர்சுற்றமுந்தாமுங்கீடமா
யுடுப்பவுண்பனவிலாவுலப்பில்சாலங்கள்
விடக்கொடுநிரயத்தின்வீழ்வரொன்றனன். (௪௭)

அச்சுதன் குறளனாயணுகிமூவடி
நச்சினனெனிலதுநானளித்திடி
னெச்சியமிலாதுநற்பதத்தினோங்குவ
னிச்சயமதுபெறினிகருண்டாகுமோ. (சஅ)

ஆதலாலீதலேயறனென்றேயுயர்
வேதபாரகன்றனையெள்கிமேவிய
வாதியைமூவடியளந்துகொள்கென
வோதிநீர்கொடுகடிதுதகம்பண்ணினான். (சகூ)

அளியினால்மூவடியளந்துகோடியென்
றெளிகொளுமாவலியுதகம்பண்ணவே
களைகளையுலகினைக்காக்கும்வித்தகன்
கிளர்முடியுயாண்டங்கிழியவோங்கினான். (ருo)

அகலகங்காலினுக்கவனிபோந்தில
ககனமுள்ளடியினிற்கமலத்தாயின
சகலலோகங்களுந்தாளிரண்டினிற்
புகுதவேநிவந்தனன்புயல்கொள்மேனியான். (ருக)

சித்தசன்றனைத்தருஞ்செல்வன்றன்னை
மெத்தியசூத்திரம்விளங்கச்சேர்த்திடு
பத்திசெய்நித்திலம்பரந்தமாட்சியை
யொத்தனநிறைந்திடுமுடுவினங்களே. (ருஉ)

கவிகையாய்மவுலியாய்க்கவின்கொள்மார்பினி
லவிர்மலிகவுத்துவமாகியேமருங்
குவிலுறுநாண்மணியாகிக்கோதிலா
வுவமையில்லரிகிழொளிரவோங்கினான். (ருங)

உலகெலாமளந்தருளொருவன்றுணணி
நலனுறுமணிகொடாவடத்தினையகம்
பொலனுறுமூருவிற்றிகழ்ந்தபோன்றன
வலரியோனெனிற்பரன்செயலையார்வலார் (ருச)

துந்துபிமுழங்கிடச்சுரர்கள்மாதவ
ரிந்திரனோடுவந்திறைஞ்சித்தூய்மலர்
சிந்தவேநீண்டருடேவனுந்தியின்
வந்தபோலாயினமலரவன்பதி. (ருரு)

மங்குல்போனீண்டருள்மாயன்சேவடி
திங்களார்வானின்மேற்செல்லப்போற்றிநற
பங்கயன்கழுவிடவயங்கும்பாதநீர்
கங்கையாயுலகெலாங்களிப்பவெய்தின. (ருசா)

போதயன்கமண்டலப்புனல்கொடன்பினூல்
வேதமார்சொற்கொடுவிளங்குமாதவன்
பாதமேனிறைத்திடப்பரந்தவானதி
தீதறப்பரிசுதத்ஞ்செய்ததெங்கணும். (ருஎ)

காசினிசோங்கெனக்ககனமீதின்மால்
வீசுதாளதின்மரமெனவிரிஞ்சனு
மாசின்மீகாமன்போல்வயங்கக்கங்கைநீ
ராசிலம்மரத்திற்பாயலேவபோன்றவே. (ருஅ)

மூவடியிரந்திடுமுதல்வன்றன்னிரு
சேவடியகலத்திற்சேண்மண்கொண்டபின்
மாவலியின்னமோரடிக்குவைகிடந்
தாவெனவழக்குரைசாற்றினனரோ. (ருகூ)

அரியிவையருள்செயவறன்செய்மாவலி
தரணிவான்முற்றவுந்தாளிரண்டினல்
விரைவினினளந்தருள்விமலனேயென்றன்
சிரசின்மீதோரடிசேர்த்தியென்றனன். (சு०)

நளினமன்முதலினோர்தமக்குநண்ணலா
யெளியையபோலென்முனினெய்திமூவடி
யளியெனத்தானமேற்றடியிரண்டினு
லொளிகொள்வான்புவியெலாமொடுக்குமுத்தம. (சுக)

மாநிலத்தயம்வரவையங்கீண்டிட
வேனமாயினவுனக்கின்பமாகவீய்
தானமொன்றனந்தமாய்த்தழைக்குமென்பது
தேனுறுதுளவுளாய்வேதஞ்செப்புமால் (சுஉ)

ஆதலின்மாயவுன்னடியனுமெனை
யீதிமூவடியெனவிரந்ததானத்தின்
மாதவப்பலனிவண்வாயக்கவென்சிர
மீதுநின்றுளினைவிளங்கவையென்றான். (சுங)

சிந்தையின்மகிழ்வொடுசிறந்தமாவலி
யிந்தநல்லுரையினையியம்பிநேரிலா
விந்தமாதேவியுந்தானுமேவியே
வந்தனைசெய்துமாதவனையேத்தினன். (சுச)

மாவலிதேவியோடெய்திமாதவன்
சேவடியிறைஞ்சியாண்டேத்தத்தேமலர்
ஆவியேயிரணியன்சுதனிறைஞ்சிடப்
பூவுளோன்புரந்தரன்விபுதர்போற்றினர். (சுரு)

மாதவர்துதிக்கமாவலியைநோக்கிமால்
பூதலமுதலதாம்புவனமெங்கணு
நீதிமெய்யிறையமாதானநின்னைப்போ
லீதலுக்கிசைகுவாரிலையென்றோதுவான். (௬௬)

என்னிருதாளினையிறைஞ்சியேத்திவா
முன்னுடைப்பிதாமகன்போன்றவுத்தம
வின்னலில்வலாரிதன்பதிதந்தென்பதம்
பின்னர்யான்றருகுவனென்றுபேசுவான். (௬௭)

சதமகன்பதியினைத்தந்துபின்னரொன்
பதமுனக்களிப்பன்யான்பவமில்கீர்த்தியாய்
சுதலலோகத்தினிற்றுலங்குபோவென
விதியினையுதவியவிமலன்கூறினான். (௬௮)

அரியிவையருளவேயறஞ்செய்மாவலி
பிரகலாதனனொடுமிறைஞ்சிப்பிங்கலன்
சுரரொடுதுதித்திடச்சுதலலோகத்தி
னிரவிபோற்றமரொடுமிலங்கிவைகினான். (௬௯)

மாவலிசுதலலோகத்தின்வாழ்ந்திடத்
தேவர்கட்கிறைவனைச்சிறக்கநின்பதி
காவெனவருளிநற்கமலையாகிய
தேவிமார்பிலகவைகுண்டஞ்சேர்ந்தனன். (எ௦)

அதிதிதன்புதல்வனையணுகிமாவலி
யுதவுமூவடியினுக்குலகமெல்லவுஞ்
சதுரினீரடியினாற்றுவுமால்செய
விதுவெனத்தவன்பொறிக்கியம்பினனரோ. (எ௧)

வாமனப்படலமுற்றிற்று.
ஆ திருவிருத்தம் - ௧எஎ௫.

௧அ. வது—அசாமிளப்படலம்.

சேடனுமலைந்திடத்திரியும்பொற்கணன்
வீடவேமுனிந்துயர்மீளியாகியே
ஆடகன்றனைப்பிளந்தயோத்தியெய்திநீ
டாடகைதனைக்கொல்வான்றளையேத்துவாம். (௧)

பாவமாரசுரனாய்ச்சனித்துப்பார்க்கவ
னீவதுகருமமன்றெனவரிக்கருள்
மாவலிபோலவேமருளைநீத்தவர்
யாவர்களுளரெனமுனியியம்புவான். (உ)

வசீகரவேசியைத்தோய்ந்துமண்ணிடை
நிசாசரர்போலவாண்டுழன்றுபின்னெறி
யுசாவிமால்பதத்தினிறேங்குமந்தண
வசாமிளன்சரிதைகேளணங்கென்றோதுவான். (௪)

கன்னியாகுமிசமாதேசத்திற்கவின்
றுன்னியவடிவினூற்றுலங்குமந்தண
னின்னலிலசாமிளனென்னுநாமவான்
மன்னியகுருவெனமறுவினீதியான். (௫)

நீதியாசாரத்தினிறையசாமிளன்
வேதமாரோமத்தைவிளைக்கவெண்ணியெ
யாதரவுடன்குசப்புல்லரிந்திடச்
சீதமார்ந்தெழில்கொளாராமஞ்சேர்ந்தனன். (௬)

தருப்பையைக்கொய்யவுத்தியானஞ்சார்ந்தவன்
பொருப்பெனவளர்முலைப்பொதுமடந்தையா
மருப்பநுண்ணிடையுடையவளொடோர்விடன்
விருப்பமுற்றனங்கனூல்விளைக்கக்கண்டனன். (௭)

இலவிதழதரநீர்பருகியேருறு
முலையிடையணைத்தெண்புள்ளொலிமுழக்கியுஞ்
சிலைநுதலணங்கனுளவளுடேசெயுங்
கலவியையசாமிளன்கண்டுநைந்தனன். (௮)

வேதநூலோதியும்விரதமீட்டியும்
மாதவஞ்செய்குவர்வருத்தமெய்யினுக்
கீதலேயலாததிற்பயனிலேருறுங்
கோதைமார்கலவிபோற்சுகங்கொடாதென்றான். (௯)

தனங்கனவரைநிகர்தையலாசையா
லனங்கசாயகமுறவலையசாமிளன்
மனங்கலங்கிடமருளுற்றுமாமயி
லினங்களாருயானம்விட்டேகலானரோ. (௧௦)

விடனொடுகலவியைவிளைத்துத்தீர்ந்துபின்
கடிமலர்க்காவினைக்கடந்தங்கேகலும்
வடிவுடையசாமிளன்மயங்கிமற்றவ
ளடிமிசைவணங்கிநீயணைத்தியென்றனன். (௧௧)

துன்னுகாமத்திறுற்றெழுதவேதியன்
தன்னைமின்னோக்கியேசாற்றுவாளென
மென்னுடனுகர்ந்தெனைப்பிரிகிலாயெனின்
மன்னுவன்யானெனமருளன்கூறுவான். (௧௨)

என்னுயிர்க்கின்னதேயிணையிலாமட
வன்னமேயுன்னைவிட்டகல்கிலேனெனச்
சொன்னவேதியனொடுந்தோகைதன்மனை
மன்னியாண்டவனுக்குமனைவியாயினாள். (கஉ)

ஓதனமவளொடுமருந்தியோதிடும்
வேதசாத்திரமெலாம்விடுத்துவிஞ்சிய
சாதியாசாரநற்சந்திவந்தனை
நீதிமெய்யொருவியேகிருதன்போன்றனன். (கங)

வடிவுடைப்பொதுமகளாயமாதினை
இடைவிடாதேதழீஇயின்பமுற்றவத்
துடியிடைமின்றெசசுதரையீன்றிட
விடனெனுமசாமிளன்மிகமகிழ்ந்தனன். (கச)

மாதராள்கனிட்டனாய்ப்பயந்தமைந்தனைத்
தீதில்நாராயணனென்றுசீருற
வோதுநாமத்தினையுதவியுண்மகிழ்ந்
தேதமாரசாமிளனிருக்குநாடனில். (கரு)

இருநிலத்தெண்பதோடெட்டென்றோதிடும்
பருவம்வந்திடநரைபரந்துளான்றனை
யிரவிதன்மதலையாமியமன்றூதுவர்
விரைவினிற்பற்றலுமிகநடுங்கினன். (கசு)

சாதகர்கோரமாமுருவைத்தாங்கியே
போதநாராயணனென்றுபுத்திரற்
கோதுநாமந்தனையுரைத்துரைத்துநொந்
தேதமாரசாமிளனிறந்தனன்னரோ. (கஎ)

அந்தகாலத்தினிலசாமிளன்மிக
நொந்துநாராயணவெனநுவன்றுதன்
மைந்தனையழைத்தவன்மடியலோடுமே
சுந்தரமாதவன்றூதர்தோன்றினார் (கஅ)

மைந்தனையழைத்துயிர்மடிந்துளானுயி
ரந்தகன்றூதுவர்பற்றவந்தமார்
விந்தைமார்பகனடியார்விலக்கலும்
நொந்துசாதகரிவைநுவலலுற்றனர். (ககூ)

தீயவிவ்வசாமிளன்செனித்தநாண்முதற்
றூயவையெல்லவுந்துறந்துளானையாங்
காயும்வெஞ்சினத்தொடுங்கட்டியேகவீண்
டேயெனுமுன்றடுத்துளீர்கள்யாரென்றார். (உ0)

சாதகரிவ்வுரைசாற்றமாதவன்
றூதுவரவர்களைநோக்கிச்சொல்லுவா
ரோதமில்லரியின்பேரியம்பிமாண்டிடு
நீதியன்றனைநலிநீயிராரென்றார். (உக)

என்றரிதூதுவரியம்பலோடுமே
தென்றிசையுற்றிடுமறலிசெப்பிட
வின்றிவன்றனைக்கொடாண்டிமைப்பினேகவே
யொன்றியசாதகர்யாமென்றேகுதினார். (உஉ)

எரிநயனத்தராமியமன்றூதுவ
ருரைசெயக்கேட்டரியடியரோதுவார்
தருமமில்மனிதரைச்சமனலிந்திடும்
நிரையமெத்தனையெனவவர்நிகழ்த்துவார். (உ௩)

இரவிதன்புதல்வனாமியமன்வாழ்பதி
தரையினிற்கீழுறத்தாழ்ந்தெண்ணையும்
விரிவுறுமிடத்தினில்மிகுத்தகோரமாம்
நிரையமூவேழெனநிகழ்த்துவாரரோ. (உச)

வேறு. தூய்மையிலாமிச்சிரமந்ததரமிச்சிரமிரவுரவந்துன்மதியோ
ராயவர்வீழுமகாரவுரவங்கும்பிபாகம்வெங்காலசூத்திரமற்
பாயவேபவர்கள்கலந்திடுமசிபத்திரவனஞ்சூகரமுகம்பல்
சீயொடுதசைசேர்ந்திடுமந்தகூபந்திமிரமார்கிருமிபோசனமே. (உ௫)

தாழ்ந்திடுஞ்சந்தங்கிசம்பவரடையுந்தத்தசூருமிவதைபுரிவார்
சூழ்ந்தவச்சிரகண்டகமுடையுறுசன்மலியத்திதுதையும்வைதரணி
யாழ்ந்திடும்பதோதம்பிராண்டுரோதம்நீண்டகன்றிடும்விசஞ்சனங்கயவர்
வீழ்ந்திடுமிலாலாபோசனஞ்சாரமேயாதனம்விச்சிரியமே. (உசு)

பெயரிவையுடையநிரையமூவேழும்பெரும்பவஞ்செய்திடுமினங்கள்
துயருறவடர்நிர்ப்பந்தமோரேழென்றிசைப்பர்சூலப்பிரோதமமாப்
பயமுறவளையுங்காரகத்தாரந்தெந்தசூகாதனம்பவர்க
ளயர்வுறும்பரியாவர்த்தனஞ்சூசிமுகமகல்வடநிலோதனமே. (உஎ)

அன்றியுங்கோரவிரககோணகபோசனமுடனேழிவையாகும்
நன்றியைமறந்தோர்பிறர்பொருள்பரர்தம்நாரியையடைந்தவர்மகவைக்
கொன்றவர்திருடிவிலைக்குறக்கொடுப்போரிவர்களைக்கொடியபாசத்தி
னென்றிடப்பிடித்துமத்திகையோச்சவுருள்வர்தாமிச்சிரநாரகின். (அ)

பலதினந்தொறுமிப்பவந்தனைச்செய்வாரினங்களையிதிற்பதின்மடங்காய
நலனிலாக்குரூரமலிமந்ததரமிச்சிரநரகிற்றள்ளுவார்கள்
சலமொடுபரனாக்கெடுத்திடுமவனாயவர்களாரனைந்தவர்சார்ந்து
வலியுறுமுளையாய்த்தசையறநச்சிவலிப்பர்களிரவுரவத்தின். (உகூ)

மகாரவுரவமாநிரையத்தின்மாறாய்மருளுறத்தமைநலிந்தவரை
விகாரநாவதனாற்பிடுங்கியேபொசிப்பர்வேட்டையின்மிருகங்கொன்றவர் தஞ்
சகாயரோடவரையெண்ணைகற்காயுங்கும்பிபாகத்திடைத்தள்ளி
நிகோதகாவலர்கள்வறுப்பர்களழல்சாலயமுறுமகப்பையைநீட்டி. (ங௦)

காலசூத்திரமாநிரையத்தினகலங்கழறிடினியுதயோசனையாய்
மேலெலாமுகாந்தத்துறுமிரவியைப்போல்வெம்மையாய்க்கீழ்வடவனலாய்ச்
சாலவுங்குரூரமானவவ்விடத்திற்சற்பிராமணர்களைப்பிதாவைச்
சீலமார்குருவையிகழ்ந்தவர்சோவின்மயிருறுவருடஞ்சேர்ந்துழல்வார். (ஙக)

ஆயுதநிறையவடாயகநிரையமவியசிபத்திரவனமாந்
தியமாநரகின்மறையறைநெறியைத்திறம்பிப்பாடண்டத்தையடையுந்
தூய்மையிலவரையதில்விழவடித்துத்துரத்தவப்பணையினிற்படைமெய்
யோய்வுறவறுக்கவுதிரம்வீழ்ந்திடவேயுளைந்துளைந்தோடுவரன்றே. (ஙஉ)

சூகரமுகமாகியநிரையத்திற்றூயவேதத்தையோதாமற்
சாகரமிசையிற்றவழும்வங்கத்திற்சார்ந்துகற்பழனத்தினுழுது
சேகரமிசையிற்சுமடினைச்சுமந்தமறையவர்செகதலத்தறன்மெய்
போகவேயரசாள்புரவலரிவர்கள்புகுதுவரிருணிமெய்கடிக்க. (ஙங)

சகமகிதெறுக்கால்மிருகமீமசகங்காய்ந்துகொன்றிடுநலனிலரைச்
செகமதிற்பழனப்பயிரைமேயாவினினந்தனைச்சினத்தடித்தவரை
யகலமாயாழுமந்தகூபத்தினடைத்திடவவர்கொலுஞ்சீவ
னுகவிறுதியினின்வருமழற்போலக்கடிக்குமவ்வுருவங்களுறவே. (ஙச)

பஞ்சமாயாகம்பண்ணாதவேதியரைப்பழுதிலாத்தந்தைதாயாசான்
றுஞ்சிடவவருக்கிடாதுதன்னுதரம்வளர்த்திடுதற்குணமிகுத்த
வஞ்சகர்தமையுநியுதயோசனைநீள்மடுவதாங்கிருமிபோசனத்தின்
நஞ்செனமுடுக்கிவிடுத்திடவவரைநலமிலாக்கீடங்கடினுமால். (ஙரு)

அறனுறுமவரையடித்தவர்பொருளைக்கவர்ந்தவரயனமுற்றவரை
மறனுறப்பறித்தங்குழலும்வஞ்சகர்களிவர்களைமறலிதன்றூதர்
கறையுறவடித்துமுடுக்கியேசந்தங்கிசநிரையத்தினிற்காய்ந்து
நிறையுமெஃகயத்தினழலுறும்பொடியைநித்தலுமருந்திடவிடுப்பர். (ஙசா)

பதிதனையிகழ்ந்தேயரர்களைச்சாரும்பழியுடைத்தீயபாவையரை
யதன்மமெய்திடத்தன்பாரியைவிடுத்துப்பிறரில்லாளோடடைந்தவரைக்
கதுமெனத்தத்தசூருமியென்னுந்நிரையத்திற்றள்ளிக்காயிரும்பால்
விதமுறுபுருடரரிவையரவர்மேல்விழுந்தணைத்திடவுடல்சுடுவார். (ஙஎ)

வயிரமுற்றடர்ந்துநிரபராதிகளுக்கிடர்செயுமதியிலாதவரைத்
தயையில்சாதகர்கள்கொடியவச்சிரகண்டகமகல்சன்மலிதன்னிற்
றுயரமுற்றலறவரமுறுமுள்ளாற்றுலங்கியவிலவின்மேலேற்றிக்
கயிறுறக்கயிற்றின்விடுத்துநீள்புவியினிழுப்பர்களகக்கரத்தடித்தே. (ஙஅ)

தருமமெய்யகற்றித்தனத்தினைவிரும்பிச்சற்புருடர்க்கிடர்செய்தா
ணிருபரானவரைநெறியறத்தாதிதனையணைத்திட்டநின்மூட
நரரையாசாரம்விடுத்தவேதியரைநகைமயிர்குடர்தசையெலும்பு
குருதிநீர்நிறைவைதரணியிற்கரிமீன்குதிரைமீதேவிக்கவிடுப்பர். (௩௯)

முடிவலைக்கொடுகான்வேட்டையைவிரும்புமூர்க்கரைப்பிராணரோதத்துங்
கொடுமைசேர்பதோதநரகினுமுருட்டிக்கூர்மையாரழல்கொள்வாளிகளைக்
கடுமையாலவர்மெய்யுருவிடவிடுத்துக்கதறிடக்கதையினாலோச்ச
விடமுறுமரவமரிபுலிகரடிகடித்தவர்மெய்த்தசையருந்தும். (௪௦)

அச்சுதப்பிரிதியெனுமலாங்காரமுறமகஞ்செய்யுமந்தணரைச்
சிச்சியென்றிகழ்ந்துமறலிதூதுவர்கள்விசஞ்சனநிரையத்திற்சேர்ப்பர்
குச்சியுற்றிடத்தாஞ்செயுமியாகத்திற்படுத்தகோவாகியங்கெய்தி
யச்சமெய்திடவேயாற்றிடுமவர்மெய்த்தசையினையருந்திடுமன்றே. (௪௧)

விடமதாமதராய்த்தங்கள்மேட்டிரத்தைமெல்லியர்புருடர்வாய்தன்னி
னிடுமறிவிலரைக்குறூரமாமிலாலாபோசனநிரோதத்தினிழுத்துக்
கொடியமூத்திரமும்வீரியந்தனையுங்குடித்திடவதனிடையழுத்தி
நெடியமத்திகையாலுடலெலாங்குருதிநிறைத்திடப்புடைப்பர்களன்றே.

விடமிடுபதகர்பிறரில்லிற்றீயைவிடுப்பவர்சனங்களைவதைக்கக்
கொடியசூனியத்தையியற்றுவாரிவரைக்கொணர்ந்தகல்விச்சிரியத்து
மடர்சாரமேயாதனநிரையத்துமழுத்திநீள்பருப்பதத்துருட்டிக்
கடுகியதிருகுசக்கரத்தெறிந்துங்கழுவின்வைத்திருத்துவர்கனலின். (௪௩)

அருமறையவனாவதைத்தவர்சுரையைப்பருகினராடகந்திருடு
மருளர்கள்குருவின்பாரியையணைப்போர்மற்றவருடனன்புவைப்போர்
தரையிடையறனில்பஞ்சபாதகராமிவர்பசுத்தனைத்தடிந்தவர்க
ளிவையைவதைசெய்கயவரிம்மூவேழ்நரகினுமடைகுவர்பலகால். (௪௪)

ஆதலாலறனிலசாமிளனிந்தநரகெலாமடைந்திடச்செயுமா
பாதகனிவனைவிடுத்திடுந்திகிரிப்ணிலமோடடற்கதையேந்தும்
நீதியாயினநீரோவரோனவெமக்குநிகழ்த்துதிரொன்றுதென்றிசைமன்
றூதுவருரைப்பவவர்களைநோக்கிச்சோதிதன்னடியவர்சொல்வார். (௪௫)

வேறு. அரியடியாரியாமசாமிளன்றனை
விரைவில்விட்டேகுதிரெனவிளம்பநற்
சுருதியினெறியினைத்துரத்திப்பாவஞ்செய்
கருமனீண்டிவனெனக்கட்டுரைத்தனர். (௪௬)

சாதகரிம்மொழிசாற்றமாதவன்
றூதுவரசாமிளன்சுருதியோதிடு
நீதியைநீங்கியிந்நிலத்திற்செய்திடு
மேதமார்மறத்தினுக்கியாவர்சான்றென்றூர். (௪௭)

வேறு. மாலடியவர்களுரைத்திடக்கேட்டுமறலிதன்றூதுவருரைப்பார்
காலெரிநிலநீர்ககனமானிகருங்கங்குலோடேபகல்சோமன்
மேலவன்திசைசெய்காலநற்சந்திவிழுமியவித்துவாதெசமும்
ஞாலமேன்மனிதரவர்செயுமறனுக்குயர்ந்தசான்றுமெனநவில்வார். (௪௮)

மருளுறநிலத்திலசாமிளன்செய்தமறுவுறுமறங்களுக்கெல்லா
மிரவியேமுதலாயியம்புபன்னிரண்டுமிலங்கியகரியெனமொழிய
அரியடியவர்களந்தகாலத்திலிவனறைந்திடும்பரனுமம்
விரைவினிலிவன்செய்பவங்களையெரித்துவிளங்கிடச்செய்யுமென்றுரைத்தார்

மாதவனடியாருரைத்தவிம்மொழியைமறலிதன்றூதுவர்கேட்டு
நீதியையகற்றியசாமிளன்செய்தநிகழ்த்தரிதாயபாவங்கள்
ஏதமார்நிரையத்திடாதிவன்றன்னையிவனெம்மால்வெருவித்தன்சுதன்பே
ரோதிடக்கெடுமோமொழிந்திடுமெனலுமொப்பிலாவரிபத்தருரைப்பார்.

இறவுகாலத்திலசாமிளனாராயணவெனவியம்புநல்லெழுத்தைப்
பிறிவுசெய்திடத்தான்வருமிரண்டெழுத்தேபிதுப்பசுநாரிநான்மறையை
யறைபவரிவரைவதைத்தவராசான்மனைவியையணைத்தவர்சோரர்
நெறியறவெறியைப்பருகினர்செயும்பாதகத்தினைநீக்கிடுமென்றார். (௫௧)

விதியையுந்தியினிலளித்தவனடியார்விளம்பியமொழியினைக்கேளா
வதன்மமேமுயலுமசாமிளனிறையையறிந்துரைத்தவனலன்வெருவிச்
சுதனுடைப்பெயரனாயறைந்தனனதனுலிவன்செயுந்தொலைவிலாப்பாவம்
கதுமெனக்கெடுமோகழறுவீரெனலுங்கார்வண்ணன்பத்தர்கள்பகர்வார். (௫௨

மருளினாற்கொளுத்துமுதாசனன்றனும்வகைசொல்லியருந்திடுமருந்தும்
விரைவினிந்தனத்தையடர்ந்திடும்பிணியையழிப்பதல்லாலிவைவிடுமோ
தரையினிலதனாற்சனித்தமானிடர்களிகழ்ச்சியால்விளைதத்தாற்சாற்றும்
பரமனற்பெயரோயவர்செயுந்தொலைவில்பவங்களையெரித்திடுமென்றார். (௫௩)

ஆதலால்மறையோன்மரணகாலத்திலறைந்திடுமால்பெயரவன்செய்
பாதகமெவையுமெரித்திடுமிதனைப்பழுதிலாமறலியுமறிவன்
போதுமினெனவேயவர்மிகவெருவிப்பொருக்கெனச்சமனிடையடைந்தீண்
டுதேலாமறையவிரவிதன்மதலையவர்களுக்கிவையுரைத்தனனால். (௫௪)

சரியிலாவிறையேயரியவன்செயலைச்சதமகனிருதிமாமருத
ரிரவிகால்வருணனுதாசனன்கமலனியமனுகியவியானீசன்
பிருகுவிச்சுவதேவதைவசுதெசமாப்பிரமர்பிங்கலன்மதிமுதலா
யொருவருமறியாரறிவிலாதவர்நீருணர்வதெத்திறமெனவுரைப்பான். (௫௫)

பரமபாகவதர்செயலினையறிவார்பங்கயத்தவனுமைபாகன்
சுரர்முனிகபிலன்மனுப்பகிரதிதன்சுதனுயர்மாவலிசனக
னருள்செறிவியாசன்மறலியாகியயானுடகனருளுஞ்சற்புதல்வ
னிருளினையகற்றுஞ்சனற்குமாரன்முனிவர்சுவாகதசத்தரென்றறைவான்.

தரணியிற்றொலைவில்பவங்கள்செய்திடினுந்தனையனையளியுடனினைத்து
மரணமுற்றிடும்போதசாமிளனுரையணவென்னும்வாசகத்தாலே
யருணனுற்றிடவாண்டுதையமாமிரவியவ்விருளவிந்திடுமிம்போல்
விரணமுற்றெழுந்தமறனெல்லாமெரிந்துவீடுபெற்றுயருமென்றறைவான். (ருஎ)

மாதவன்பெயரைத்துதித்துவாழ்பவரைமறந்துநீரடைகிலீரெனவே
யோதியமறலிதனைத்தொழுதவர்களுலகநாயகனடியவரைப்
பூதலமிசையிலுணர்வதெக்குறியாற்புகலுதியெனப்பகர்ந்திடலுஞ்
சாதகர்செவியின்ரகசியமாகச்சமனிவைசாற்றினனன்றே. (ருஅ)

திருமகள்கொழுநனடியவர்புயத்தினிலாஞ்சனந்திகிரிசங்கிலங்கு
முரமிசையமருமெழில்வனமாலையூர்த்தபுண்டரநெற்றியொளிரும்
பரமபாகவதர்குறியிஃதிவரைப்பரிசியாதொழிமினீர்தீண்டில் [ன்.
விரைவிலென்பதவியழிந்திடுமெனுஞ்சொல்மெல்லெனச்செவியிடைவிரித்தா

சாதகர்தமக்குமறலியிவ்வுரையைச்சாற்றிடுமெல்லையின்முராரி
தூதுவர்மறையோன்குரம்பையிற்சீவன்றுலங்கிடமறைந்திடவெழுந்தே
யாதரவுடனெண்டிசையினும்நோக்கியவர்களைக்காண்கிலானவர்க
ளோதியமறைசால்மொழியின்மெய்ஞ்ஞானமுறவிறையரியெனவுணர்ந்தான்

அரியினையிறையென்றறிந்தசாமிளன்றனனைத்தையுமிகழ்ந்துகானேகிப்
பரமபாகவதரடியினிலிறைஞ்சிப்பழுதறவவரருள்மொழியாற்
றிருவிணயகனையொருமையுள்ளழுத்திச்சிறந்திடுமியோகமுற்றிடவே
தரையினினுடலைக்கழித்துமாறுதரினத்துடன்வைகுண்டஞ்சார்ந்தான். (சுக)

பொதுமகணகிலையணைந்துமீரைந்துபுதல்வரைப்பெறுமசாமிளன்மாய்
பதிபெயரிடுமச்சிறுவனைமரணகாலத்திலழைத்திடும்பலத்தால்
விதமுறுநிரயத்தழுந்திடாதுயர்ந்தவீடுபெற்றனனெனவிதர்ப்ப
னுதவுமாமகளுக்குரைத்தனன்மண்விண்ணுறைப்பிலாநாரதமுனிவன். (சுஉ)

அசாமிளப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கஅ௩ரு.

கக. வது—உருக்குமாங்கதப்படலம்.

இருணியாயிடந்துங்குறளனுயளந்துமிலங்கியவனந்தனுய்ச்சுமந்தும்
வருணமார்சிசுவாயருந்தியுமுமிழ்ந்துமறுவிலாத்தேவகிசுதனு
யருணனுணயனச்சத்தியபாமையாகியங்கரசனிற்பிறந்த [ம்.
தரணிமின்றனைத்தன்னுரத்தினிலணைத்தோன்றுளினைப்போற்றியேதொழுவா

அனமயமகற்றிப்பயந்தனையருந்துமறிவுபோற்பவந்தனையொருவித்
தினநலனியற்றியளிமலிந்திடுநற்சித்ரன்றுளினைநினைத்தாற்
சனனநோய்துயரமிறப்பகன்றிடவேசலனமில்கதியினுயர்வாய்
மனனெனக்கினியாய்வணங்கினேனவனைமறக்கலாய்மரணகாலத்தும். (உ)

வேதபாரகனுநெறியினைவிடுத்தும்விடனெனத்திரிந்துமால்பெயரை
போதுமவ்வொலிகேட்டொளிர்தருமுராரியடியவருருமெனவடைந்த
சாதகர்தமையும்விலக்கிநற்கதியிற்சார்த்திடுமசாமிளன்போல
வேதமற்றுயர்ந்தேயிலங்குவாருளரோலியம்பெனவிந்திரையுரைத்தாள். (ங)

திருக்கறவிலங்குந்திருவிவைமொழியச்சிறந்திடுநாரதமுனிவ
னிருக்கறைவசிட்டனெழில்கொண்மாந்தாதாதனக்கிளிவாகியநிரைய
வருக்கமற்றிடவேயரிதினவிரதமறுவறநடத்திநற்கதிசே [ன்.
ருருக்குமாங்கதன்றன்சரிதையைப்பகர்ந்தானவைபொறியதியெனவுரைப்பா

இரவிதன்குலத்திற்சிறந்திடுமிக்குவாகுவின்மரபிடையிலங்கு
மரசரொண்ணிடபத்துவசன்மாதவத்தாலருளியவுருக்குமாங்கதனும்
நிருபன்வாள்வலியாற்றிசையெலாம்வென்றுங்கிரிலாச்செம்புத்தீவினைத்தான்
தருமமெய்தழைப்பவொருகுடைநிழலிற்றவர்மகிழ்ந்திடப்புரந்தனனால். (ரு)

உருவினுற்றிருவுமொதுங்குமெய்யுடையாளொப்பிலாக்கற்பினுக்கரசி
தரையினிற்கனகமிதித்திடுமிடந்தோறிலங்கியேவளர்ந்திடத்தண்டை
பரிபுரமரற்றநடந்திடும்பதத்தாள்பரவையினமிர்தநேர்மொழியாள்
மருவமர்குழலிதெரிவையர்திலகிமறுவிலாச்சந்தியாவல்லி. (சு)

அறுசுவையடிசினினைவினுண்டாக்கியளப்பிலாரடையினுமளிப்பா
ளுறுநரைதிரைமூப்பொருவிடவிளமையொளியுறப்பரிசிக்குங்கரத்தாள்
மறுவிலாவிவளையுருக்குமாங்கதமன்மகிழ்வொடுமணம்புணர்ந்தருளி
வெறியுறுமலரிலமரளியெனவேவிரும்பியத்தோகையோடமர்ந்தான். (எ)

தரையின்வானிடத்தினிகரிலாதிலங்குஞ்சந்தியாவல்லியைத்தினமும்
பிரிகிலாவரசன்விதிசைமாநகரிற்பெலனுறவுலகையாடினத்தி
னருள்செறிவசிட்டன்பராசரன்பிருகொடளப்பிலாமுனிவர்வந்தெய்தப்
பரிவினுலவர்க்காண்டருக்கியமளித்துப்பணிந்துமன்னிவைபுகன்றனனால்.

நிரையம்வான்சுவர்க்கமிரண்டினுமுறுதுநெறியினுலுயரிறைபதத்தின்
நரரடைந்திடவேயியற்றுமாவிரதமெவையவைநவிலுவீரெனவவ்
வரசர்கோனுரைப்பவருந்தவரரியையலாதுவேறதிகதேவதையில்
தரையினிலேகாதெசியினைச்சிவணுநோன்பில்லையென்றுசாற்றுவரால். (கூ)

அறிவினுல்மருளாலியற்றிடும்பவங்களறவரிக்கின்றதோரங்கி
யிறைவனுமுராரிதிவசமாவிரதமிதுவலால்வேறியம்புவதில்
மறுவிலாத்துரகமேதமாயிரமும்வாசபேயம்மொருநூறுங்
குறைவிலாமுகுந்தன்றினவிரதத்திற்சோடசத்தொருபலன்கொடாது. (க0)

கருமவிந்திரியஞ்ஞானவிந்திரியமிவைதெசத்துடன்கருத்தார
நரர்செயும்பவங்களரிதினவிரதங்கறியாதவரெனினுந்
தரையினேர்வியாசந்தனினின்னமருந்தாதிருந்திடினுந்தபனன்ற
னிரதம்வந்துறவேகெடுமிமமெனவாண்டெரிந்திடச்சமனுலகேறார். (கக)

கயைபகீரதிபுட்கரமுயரோவைகாசிபாரிணையிலாயமுனை
தயையுடைத்தவர்வாழ்சந்திரபாகைசமனிலாக்கவுதமிவேணி
நயமிகுகுருக்கேத்திரமுதலானநற்றலமானவையெலவும்
புயல்வணமுராரிநலதினவிரதம்போலநற்கதியையீயாது. (கஉ)

திருவினாயகனுமிறைதினவிரதஞ்சீருறுகற்பகவிருக்க
மருளறவுயர்சிந்தாமணியிலங்குநவநிதிவறுமைநோய்கெடவே
தருமமோடொத்ததாமமுத்தியினைத்தருவபோற்சனனபாவங்க
ணரர்களுக்கொருவநல்குமென்றுரைத்துநற்றவர்பின்னருமுரைப்பார். (கங)

தெசமியினொருபோதருந்திமாமுராரிதினந்தனிற்சத்துவமிலாதார்
பசிகெடப்பயம்பால்கிழங்கிவையயின்றுபவமறவிராத்துயிறுறந்து
வசையிலாதுயருந்துவாதெசிதன்னின்மறுவிலாவடிசிலைநுகர்ந்து
நிசியினத்தினத்தினனம்விரும்பாமல்நெறிசெயவாரரிபதத்துறுவார். (கச)

சுத்தமாமேகாதெசிவிரதத்தாற்றுலங்குவர்பினுத்திரர்மகிழ்ந்து
குத்திரமறவேதெசமியின்வேதைகுறுகியவத்தினமொழிந்து
பத்தியினுயருந்துவாதெசிதன்னிற்பவமறவனமருந்தாம
லுத்தமத்திரையோதெசியிறபாரணையாயயின்றவரரிபதத்துறுவர். (கரு)

தெசமிவேதையினைக்கூடியவேகாதெசியினில்விரதஞ்செய்யாமல்
வசையிலாதுயருந்துவாதெசிதன்னில்மருவுறுமனமருந்தாமற்
சுசியுறுந்திரையோதெசியிற்பாரணைசெய்சுத்தர்கட்கரவிறைசமக்கும்
வசுதையைச்சற்பாத்திரமறையோர்க்குவழங்கியபலன்கள்வந்துறுமால்.

சிரவணங்கூடுந்துவாதெசிவரினேகாதெசிதன்னுடன்சிறப்ப
விருதினந்தனினுமனமருந்தாமல்மறுதினத்திணையில்பாரணையா
யரிதினவிரதஞ்செயினருந்தவஞ்செய்முனிவர்க்குமதிகமாயுயர்ந்து
மருவமர்துளவமணியிறைபதத்தின்வயங்கிவீற்றிருப்பர்களன்றே. (கஎ)

பாபமார்தெசமிவேதையுமின்றிப்பரணிமங்களன்றினமலாமற்
சாபமாதத்தினுயர்ந்திடுமேகாதெசிமகாவிரதத்தைத்தரித்து
மாபலன்கொடுக்குந்திருத்துவாதெசியின்மகிழ்வொடுமோதனமயில்வோர்
நாபியினயனைப்படைத்தநாரணன்றனல்முறுங்கதியைநண்ணுவரால். (கஅ)

தெசமியின்வேதையுறப்பவமுறுமேகாதெசிவிரதத்தைச்செய்வோர்
சுசியுறுமறையோர்க்களித்திடுந்தானந்துலங்கிடச்செயுமகாபலன்கள்
வசையிலாவிரவியவிர்விளங்கிடவேவசுந்தரைவளைந்திடுமிமமும்
நிசியுமற்றனபோலகன்றவர்தவமும்நிட்பலமாயிடுமன்றே. (ககூ)

தரைமிசையுலப்பில்வருடமுற்றிடநற்றவஞ்செய்சம்பாசுரன்றனக்கு
மரைமலரயனீயிரவிதேர்வலவன்வருமுதையத்தினிற்றெசமி
பரவிடத்தொலைவில்பவமுறுமேகாதெசியுபவாசத்தைப்பரிப்போர்
தருமமெய்தானந்தவமகாபலன்களழிந்திடத்தவலடைந்திடுவார். (உ0)

பஞ்சகவ்வியத்தாற்சுசியுறும்பாண்டம்பவமுறுஞாளிதீண்டிடவே
யஞ்செகத்துறைவோரனைவருமிளிவாயறைவபோற்றெசமியின்வேதை
நஞ்செனப்பரவநலனிலாவேகாதெசியுபவாசநன்றென்பார்
விஞ்சுமாதவங்களழிந்திடுமுயர்நால்வேதத்தையிகழுவார்குலம்போல். (உக)

தரையினிற்றெசமிவேதையுற்றிடுமேகாதெசிநோற்பவர்தருமம்
பரர்கடோடேயுமனைவியென்றுணர்ந்துமவடனைப்பரிசிக்குமறிவில்
மருளனைவரித்தசிராத்தகாலந்தனிற்செயுந்தானமுமறலி
விரவிதேர்வலவனெழுமுனமியற்றுஞ்சந்திவந்தனமும்போலிறுமால். (உஉ)

அரிவையர்புணர்ச்சியனந்திலதயிலமசத்தியம்நீசரோடுறைதல்
தரையில்வாணிபங்கள்பயிர்செயலசமரநெறிசெல்லிலங்குதாம்பூலம்
விரைவினகற்றித்தெசமியின்வேதைவிழுங்குமேகாதெசிவிடுத்தே
யரிமகிழ்ந்திடுநற்சுசிகொளிவ்விரதமடைகுவருயர்பதத்தடைவார். (உ௩)

ஆதலாலரசவரியலாற்பினர்வேறதிகதேவதைகளுமில்லை
வேதசாத்திரம்போல்விளங்கியவசனமிலையிகழ்தெசமியின்வேதை
யேதமற்றுயரேகாதெசிவிரதம்போலவேயிலங்குநோன்பில்லை
யீதுநிச்சயமாமுணர்தியென்றறைந்தாரிணையிலாமுனிவர்களம்மா (உச)

சரியிலாவிரதந்தனையருந்தவர்கள்சாற்றிடவரசர்கோனிறைஞ்சிப்
பரிவுடனவரையமருமாச்சிரமத்தேகுவீரெனப்பகர்ந்தருளி
யரிதினந்தெசமிதுவாதெசிமூன்றுதினத்தினுமிருதரமனமுண்
டுருவுடைத்திருநற்சந்தியாவல்லியுடனனுட்டித்தனன்மாதோ. (உரு)

தெசமிவேதையினையொருவியவேகாதெசியினிராத்துயிறுரந்து
வசையிலாமுனிவர்மறைநெறியுறவாண்டறைந்திடும்வசனத்தின்படியி
னசைவிலாதுயரும்விரதமோங்கிடவேபரசர்கோன்மகிழ்வொடுநடத்தி
நிசியகன்றிடவானிலங்கியவிரவிநிகரெனவுலகினையாண்டான். (உசு)

மறுவிலாவுயரேகாதெசிவிரதமண்மிசையனைவருஞ்செய்ய
நெறியுறுமுனிவருரைத்திடும்படியினிகரிலாத்தெசமிதான்முதலா
யிறைவனுமுராரிதினவிரதத்தையெழிலுறச்செய்குமினென்று
பறையறைந்திடுமென்றுரைத்தனன்ருஞுள்படியெலாம்பார்த்திபர்பெருமான்

அரிதினமதனினெழுந்திடுமெனவங்கறைதெசமிடேதத்தையகற்றி
வருடமெட்டுறவேவளர்ந்தவர்முதலாய்வயதெண்பதானவரீறாய்
விரதமிவ்வகையிற்செயாதிடிற்றந்தையனைசகோதரர்கள்வேட்டிடுமில்
லரிவைபுத்திரர்கள்சகாவெவரெனினுமடுவன்மன்னெனப்பறையறைந்தான்.

பறையறைந்திடலுமுருக்குமாங்கதனுள்பழுதிலாதுயர்செம்புத்தீவி
னுறைகுவோர்மகிழ்ந்துதெசமிதான்முதலாயுயரரிதினத்துமாவிரதம்
நெறியுறநடத்தித்துவாதெசிதனிலோர்தரமனமருந்தியேநேரி
லிறைவனுமுராரிபதத்தினேகுவராலியமன்வாழ்நகரம்புறபடா. (உகூ)

அறனுறுமரசன்றேவியுந்தானுளவனியிற்செனங்களுந்தானு
மிறைவனுமுகுந்தன்றினவிரதத்தைநடத்தியங்கிலங்கிடுநாளின்
மறுவிலாநிருபன்சந்தியாவலியையணைத்திடமற்றவள்வயிற்றி
னெறியுறச்சனித்தான்கவினுறுகுமரனிகரிலாவசந்தனைப்போல. (௩0)

ஏதமில்குமரனுதையமாகிடலுமிலங்கியவுருக்குமாங்கதன்முன்
மோதுதுந்துமிகாகளஞ்சினம்பணிலமுழங்கிடவந்தணர்மறையார்
சாதகம்நடத்தியுயர்தன்மாங்கதனென்றழகியபெயரினைச்சாற்றத்
தீதகல்சவுளமுடித்துபநயனஞ்செய்தனன்றமரொலாமகிழ. (௩க)

கவினினால்மதனனைவிரினுலிரவிகருத்தினூற்புந்தியாலுசன
னுவமையிலளியாலுடுபதியெனவேயோங்குதன்மாங்கதனியுதக்
கவளமார்கரியின்பலத்தையுற்றவனுய்க்காவலன்மகிழ்ந்திடவளர்ந்து
புவியினேழ்தீவினரசனாயமரிற்புரந்தரன்றிகைத்திடச்செயித்தான். (௩உ)

எத்திசையினும்நேரரசரைச்செயித்தங்கேழுதீவுறுபுவியாண்டு
வித்தியாதரரைச்செயித்தவர்பயந்தவித்தியலோகையோடெண்மர்
நித்திலநகையாருடன்றொலைவிலாதநிகரில்கன்னியர்களைக்கொணர்ந்தே
யுத்தமமிகுதன்மாங்கதன்பிதாவுக்குவப்பொடுமணம்புணர்வித்தான். (௩௩)

சரியிலாதுயர்தன்மாங்கதன்முனுளேழுதீவினிலுறுஞ்சனங்க
ளரிதினவிரதஞ்செயும்படிபறையையறைந்துதாய்தந்தையுந்தானும்
பரிவுடனனுட்டித்திடச்சமனுலகுஞ்சுவர்க்கமும்பாழ்படப்படியி
னிருவினையறவேயெவர்களும்பரமபதத்தினிலேறுவரன்றே. (௩ச)

இரவிபுத்திரனுமியமனுண்டியற்றுங்கருமமுமிலாதுமுழேவேழாம்
நிரையமேநிறநீள்புற்படர்ந்ததிற்சென்னெறியினிற்றுவாதெசாதித்தர்
பரவியதெனவேயமையும்வெம்மையும்போய்ப்பமுதிலாச்சித்திரகுத்தர்
வரைவதுமிலாமற்சுவர்க்கமும்பாழாயினவரிமாவிரதத்தால். (௩௫)

மனைவிதன்வசனங்கேட்டிடும்புருடன்வாழ்வெலாமழிந்தனசிவணத்
தினகரன்சுதனுமறலியுள்ளழிந்துசித்திரகுத்தர்தம்முடனே
யனமிசையமரும்பிரமனையணுகியவனடியிறைஞ்சியாண்டெழுந்து
துனியுறுமுளத்தனிருகரமதனூற்றொழுதுநின்றிவையிவைசொல்வான். (௩௬)

நீயெனக்களித்தபதம்படியாருநிருபனுல்நிலைகுலைந்தலைந்தே
யோய்வுறுமுடலோடியான்செயுங்கருமமிலாதிவணுற்றனனெனநற்
றூயமாமலரோனவன்றனைநோக்கித்துனியுனக்கறவொருமனிதன்
காயமத்திறனைப்பகருதியெனலுங்கதமுடன்சமனிவையுரைப்பான். (௩௭)

விறலருள்மிகுந்தவுருக்குமாங்கதனும்வேந்தன்மாமேருவைச்சூழ
வுறுமெழுநிலத்தீவினினமர்செனங்கள்பவமெலாமொழிந்திடரகல
மறுவிலாவுயரோகாதெசிவிரதம்நெறியுடன்செயும்படிவகுப்ப
வறனுறுசுவர்க்கம்நிரையமுற்றிடாமலரிபதத்தடைவரென்றறைவான். (௩அ)

கோவதைமறையோர்வதைமுதலாகக்கொடுவினைசெய்திடுமனித
ராவலின்முராரிதினவிரதத்தையடையவப்பவங்களற்றவர்தந்
தேவியருடன்றாய்பிதாச்சகோதரர்கள்சேர்ந்திடவவர்தலைமுறைகள்
மூவெழுவகையினுறுமவருடனுமுகுந்தனற்பதத்தினெய்துவரால். (௫௯)

ஆமலகக்காய்தனைமிகவளைத்தங்கவையுடல்சிரமுறத்திமிர்ந்து
தாமரைக்கண்மாறினத்தினீர்படிந்துசரியிலாவிரதத்தைச்செய்து
காமனைக்கடிந்தோனிடரினைக்களைந்தோன்பதத்தினிற்கடிதினெய்துவரால் [ன்
பூமிசைத்தவனேயுருக்குமாங்கதனைப்பொருக்கெனவழித்தியென்றுரைத்தா

மறலிபீதுரைப்பமலரயன்மொழிவான்மாறினவிரதத்தையெவரும், நெறியுற
ச்செயவாங்கியற்றியேயிலங்கும்கிகரிலாவுருக்குமாங்கதனை, யறனறமுனியே
ன்மருளுறயான்முனமலன்றன்னடியரையெள்கிற், பொறையுறுதவமுமிமைப்
பிலென்பதமும்பொருக்கெனவழியுமென்றுரைத்தான். (௬௧)

குரகதமேதந்தேசஞ்செயுமவருங்குறைவிலாச்சுவர்க்கத்தினெய்தித்
தரையினிற்பினருஞ்சிறிதுநாளதனிற்சனனமாகுவர்சரியில்லா
வரியெனுமிரண்டக்கரந்தனையொருக்காலறைந்திடுமவன்கெதியடையுந்
திருமகள்கொழுனன்றினவிரதத்தைச்செயுமனனலஞ்செப்பவெளிதோ.

சுவையினைநுகர்வோர்சுவாவினுக்கெரிப்போர் தூரமாந்தெரிவையையணைப்
போர், மரணகாலத்தின்முராரியென்றறைந்தால்மருளுறுபவமெலாமெரிந்து
திருவினாயகன்றன்பதத்தினிலுறுவர்தினந்தொறுமவன்பெயருரைப்போர், ச
ரியில்மாதானமகாநதீர்த்தமெனுரவையுயர்பதந்தருமால். (௬௩)

மாதவன்பெயரையொருதரமொழிந்தால்மறுளறவரியபதத்துறுவ
ராதலின்முகுந்தன்றினவிரதத்தையவனியிற்செனமெலாஞ்செய்யப்
பூதலத்தியற்றுமுருக்குமாங்கதன்றன்பெயரினைப்புகன்றிடிற்பஞ்ச
பாதகமுதலாம்பவமெலாமறுமாலென்றுபின்பங்கயன்மொழிவான். (௬௪)

அண்டமெண்ணிலாதபடைத்தவையளிப்போனழிவிலாவிறையவன்கொப்
புள், முண்டகமிசையின்மூளைத்திடுமவனுனவனடியார்களைமுனியி, னெண்ட
வருறுமென்பதத்திறேடியானுமிமைப்பின்முன்னழிவனென்றுரைப்பச், சண்
டன்வெந்துயரோடவனடிமிசையிற்றாழ்ந்திவைபகர்ந்தனனம்மா. (௬௫)

தரையினிற்சனங்களுயகலனியற்றுஞ்சதுருறுமுருக்குமாங்கதனை
விரைவினின்முனியாயெனினும்யான்மெலியாவகையறன்மேவிடவவன்செய்
யரிதினவிரதமளந்திடும்படிநீயருளுதியெனவதற்கிசைந்து
மருவமர்கமலப்பிரமனோர்கோரவுருக்கொடுமவுனனாயினனால். (௬௬)

உயர்வுறுநெறிசேருருக்குமாங்கதன்செய்யரிதினவிரதத்தையொழிக்க
வயன்மனத்திடையினினைப்பவக்கணமேயற்புதமாகியோரணங்கு
புயல்பிறைகுனிவில்புங்கவந்திலத்தின்பூவள்ளையாம்பல்கித்திலம்வேய்
செயலுறுபணிலந்திகிரிமின்றிகழுஞ்செம்பொனின்கொம்பெனநின்றாள்.

நினைவதன்முனரினுலகெலாமயங்கநின்றமோகினிதனைநோக்கி
யனவெரினமர்வோனளப்பிலாக்காமமடையத்தன்னிருவிழிதழைத்து
மனதினைத்தவத்தால்நிறுவியேயரர்தம்மனைவியைநச்சிடிற்பாவங்
கனமுறவனையுநிரையமெய்துவரொன்றறைந்திருகண்விழித்தனனால். (சஅ)

சதுமுகன்மயல்கொள்கருத்தினைநிறுவித்தயங்கிருவிழியினைத்திறப்ப
மதிமுகமடந்தைகரத்தின்யாழிலங்கவணங்கிடவவளைநோக்கி
விதிசைமாநகரினுருக்குமாங்கதன்செய்விமலமாதினவிரதத்தைக்
கதுமெனவழிப்பவயருமந்தரத்திற்கடிதினிற்செல்கெனவறைந்தான். (சகூ)

கந்தமாமலரோனிவையுரைத்தேகென்றறைந்திடக்கவின்கொள்மோகினிதன்
சிந்தையின்மகிழ்ந்துபிரமனைவணங்கிச்சிலம்புகைவளையெலாமொலிப்ப
வந்தரநிகராமருங்கிறுடகத்தினம்பரம்வயங்கிடவேகி
மந்தரவரையிற்கடிகையேழரையின்வனசமான்போலவந்தடைந்தாள். (ருo)

நியுதயோசனையாய்நிவருமந்தரமால்வரையின்மேல்நிகரிலாநீலஞ்
செயலுறவிளங்கேழோசனையகலஞ்சிறந்திடும்பாறையின்மீது
னுயரமீரைந்துமுழமதினிரட்டிவிரிவுறவோங்கியேதயங்கு
மியலிலங்கப்பெருடையபாண்டரங்கன்மேவுகோயிலின்மிறுளடைந்தாள்.

மலரயன்குமரியுயருமந்தரத்தின்வயங்கிடுநாட்டணினெறிமெய்
நலனுறநிலனுருக்குமாங்கதன்றன்மாங்கதனுடனிவைநவில்வா
னலரிபோனுயரொன்சிறுவயாஞேர்தீவாண்டனனீபுய்வலனு
லிலகுபொன்வரையைச்சூழெழுதீவும்புரந்தனையென்றுபின்னறைவான்.

சுந்தரமிகுத்துவலனுறும்புயங்கடிலங்கியநற்சுதனிருக்கத்
தந்தையானவன்பூதலத்தையாளுவதுதருமமன்றுதலினுலே
யெந்தையான்மெலியாதியான்சுமந்திடுமிவ்வரசையாண்டிடுதியானெதிரில்
மந்தரவரையின்வயங்குமாதவர்பால்வைகிமீள்குவனெனவறைந்தான். (ருங)

தருமமெய்யறங்கடவறுதலிலாமற்சதுமறைவேதியர்மகிழ
விருநிலமதனையளியுடனுண்டுசிறுவநின்னுடலழிந்திடினுந்
திருமகள்கொழுனன்றினநலவிரதபங்கம்வந்துறுவகைசெய்யென்
றுரைசெய்துசுதனைத்தழுவியாண்டிருத்தியுருக்குமாங்கதன்வனமடைந்தான்.

தவளமாதுலங்கமிசையினினேறிச்சத்திரமதியெனத்துலங்க
வுவமையிலறன்செய்யுருக்குமாங்கதமன்னுயர்வரைசெறிவனத்தேகித்
தவரிறைஞ்சிடவாண்டமர்ந்திடும்வாமதேவனாச்சிரமத்திற்சார்ந்தே
யவனியினவனைப்பணிதலுமுனிவனருளினுலாசிசெய்தறைவான். (ருரு)

இரணியவரையைச்சூழெழுதீவினிலங்கியமாந்தர்களெல்லாங்
கருணையங்கடலாம்பரன்றினவிரதங்கடிவினையகன்றிடநோற்று
விரணமார்நரகுஞ்சுவர்க்கமும்புகாமல்விழுமியகெதியினையடையத்
தரணியினியற்றும்நெறியுறவுலகாளுனக்கியார்சரியெனப்பகர்வான். (ருசு)

முடுவலுக்கெரித்திட்டிழிகுலத்தவனுமுசுடனுயிடினுமால்பத்தி
யடைபவனவன்றன்மறையவர்தமக்குமதிகனுமந்தணனுயும்
படியளந்தருளுமுராரிபேர்துதியாப்பவனெனிற்சுனகனுக்கட்டாங்
கிடுமவன்றனிலுங்கடையனுமிதுமாமறைவிதித்திடுஞ்சொலென்றிசைப்பான்.

அரியினையிறையென்றறிகிலாதிகழ்ந்தாண்டவமுறவிதரதேவதையைப்
பரிவினுலடைவோர்பதிதனையகன்றுபரர்கடோளணையுநாரியர்போல்
நிரையமீதுறுவரிவைமறைபுராணம்நிகரிலாவுபநிடயோகம்
பொருளுறவறையுமெனப்பகர்ந்துயரும்பொறையுறுதவன்பினருரைப்பான்.

அரமதாற்றுகளாமிரும்பெனவினைகளறவரிதினவிரதஞ்செய்
பரமபாகவதவுனக்குநேரிலையென்பவமறவிவணின்வந்தனையென்
றருமறைமுனிவனருளவேமகிழுமரசர்கோனவனடிமிசையிற்
சிரமுறவிறைஞ்சியிருகைசேகரத்திறகுவித்துநின்றிவைகள்செப்பினனுல்.

கற்புடையவடான்மிதித்திடும்படிகடொறுங்கனகங்களும்விளைய
வற்புதவடிசினிவினுண்டாக்கியளப்பிலரருந்திடவர்த்துப்
பற்பலகழன்றுவிருத்தராமவருமிளைஞராம்படிபரிசிக்கும்
பொற்புடைக்கரத்துச்சந்தியாவல்லிமனைவியாம்புகழெனக்குற்ற. (சு0)

தாரமாயுறுநற்சந்தியாவல்லிதருசுதன்றரணிவானிடத்தும்
நேரிலாதவனுய்வளர்ந்திடும்தன்மாங்கதனுடனெறியுறயானுள்
மேருலாவியசெம்பிலங்கியதீவொன்றுண்டனனவனெழுதீவின்
வீரரானவரைச்செயித்தொருநாளின்மேவியென்னடிபணிந்தனனுல். (சுக)

ஆதலாலறிஞமனைவியுத்தமியாயருள்சுதன்சற்குணமலிய
வேதமற்றிடவாண்டேழுதீவினையும்புரப்பவனுகயானிழைத்த
மாதவமெதுநீபகரெனவுரைப்பவாமதேவன்மனமகிழ்ந்து
நீதிசானிருபகழிந்திடும்பிறப்பினின்செயல்கேளெனமொழிவான். (சுஉ)

நேரிலாவுருக்குமாங்கதநீபூருவசென்மநெறியில்சூத்திரரிற்
சூரசாதியினிற்றேன்றிநற்குணமிறேசகைநின்மனைவியாகிடவப்
பார்மிசையலைந்துவறுமைவந்திடலும்பாரியையொருவிமந்தரமா
மேருறுவரையினடைந்துமாதவரையிறைஞ்சிமால்சரிதைகேட்டனையால்.

சரிதையில்தவங்கள்புரிந்தறநெறியுஞ்சற்குணசங்கமுமுண்டா
யரிகதையுணரும்தெளிவினுன்பாவமகலநற்சிரவணமாதம்
வருபிறைவளருந்துவாதெசிதன்னில்வயங்கியசூனியசயன
வீரதநீசெயவப்பலத்தமுக்காறில்விளங்கியவரசர்கோனுனுய். (சுச)

அரியடியவனுய்ச்சிரவணமாதத்துவாதெசிவிரதத்தையடைய
விருநிலமிசையினிருபனுமாகியிணையிலாத்தேவியுமுறப்பொன்
வரையினைச்சூழேழ்தீவையும்புரக்குமதலையைப்பயந்தனுமன்றித்
திருமகள்கொழுனன்றினவுபவாசஞ்செகமெலாநடத்துவித்தனையால். (சுரு)

ஆதலாலுனக்குச்சென்னமாசுவர்க்கமறவரிநின்முனரணுகி
நீதிசால்பதத்தையருளுவனெனவேசிகழ்த்திடுமுனிவனையிறைஞ்ச
வேதநூனெறியால்விளங்கியதவத்தோன்விடைகொடுத்தருளவேகினமன்
வாதநேர்சுவேதகுரகதமிசையின்வயங்கிமந்தரவரைசேர்ந்தான். (சுசு)

சுரரொடுமசுரருவரியைக்கடையவெடுத்துத்தந்தோள்வலனற்றுச்
சிரமுரனரைகள்சிதறிவீழ்ந்திடவேசிதரனொருகையாலேந்தி
யுரனுறக்கடையுகியுதயோசனையாயுயர்ந்திடுமந்தரவரையின்
பெருமையுமதனைச்சூழவேபதினோராயிரம்பிறங்கலுங்கண்டான். (சுஎ)

அரவுமிழ்மணிகடிகிரிகள்வெடித்தவாரமுநீலமுமவிரார்
மரகதவினமும்வயிரமும்புஷ்பராகமுமாழையுமலியுங்
கிரிமிசையருவிபலமுகமாகிவீழ்வதிற்கிளருமீன்றுள்ள
வரியுறுமலர்ப்பூங்காவினின்மயூரவினங்குயிலமைவுறக்கண்டான். (சுஅ)

வரையினிற்பொழிலுமருவியுங்கசுமுமணிகளுந்தயங்கிடும்வனப்பை
நிருபர்கோனோக்கிமகிழ்ச்சியாற்றவளப்புரவியைநிலத்திடைநிறுவி
விரைவினிற்கிரிமேலடைந்திடும்வேலைவிளங்கியமோகினியென்னு
மரிவைநேரிலாதவுருக்குமாங்கதமனணுகியதறிந்தனளன்றே. (சுகூ)

உருக்குமாங்கதமனடைந்தமையறிந்தவொப்பிலாமோகினியென்னு
முருக்கிதழ்வாயாள்யாழ்கரத்தேந்திமுனிவர்கடிரளெலாங்காமம்
பெருத்திடவசுணமயங்கிடமாமும்பிறங்கலுமுலகுளோர்தமையு [ல்.
முருக்கினளிசையேழுறவெழில்வளைபோலொளிகொளுமிடற்றினேசையினு

கயல்கிகர்நயனியிசைத்தயாழொலியாற்கவினுறுகாமனேவுறவின்
னுயருமந்தரமால்வரையுமாண்டுருகவொளிகொளவதனின்மீதுறையும்
வியலிலிங்கமுந்தன்னுருவுகொண்டெழுந்துவிளம்பரிதாமயலுறநற்
கையினுறும்வீணைவிழுந்துகின்னரர்கள்காதலுற்றயர்ந்தனரன்றே. (எக)

பூதலமுதலாம்புவனமீதுறைவோர்பொழில்வரையெவைகளுமுருக
வேதமில்மடந்தையாழ்கரத்தேந்தியேழிசையின்விதமுறவே
யோதுகீதத்தினொலியினையுருக்குமாங்கதன்கேட்டுளமலைந்து
நாதம்வந்தடரும்நெறியினையடைந்துநடந்துபோயவடனைக்கண்டான். (எஉ)

மந்தரவரையினுயர்ந்திடுநீலப்பாறையின்வயங்குமோகினிதன்
சுந்தரமடையவிழியினூற்பருகிச்சொலுமுரைகினைவெலாமொருவ
விந்துவெண்குடையாலிலங்கியமதனனெயுமலர்வாளிகளிதையத்
தந்தகனயில்போலமுந்திடவரசனயர்ந்தனனதிகமாலுறவே. (எங)

அரசரினுயருமுருக்குமாங்கதன்முனயர்ந்திடக்கண்டமோகினிமின்
மரைமலருறுவோன்வரவிடுகருமம்வாய்த்ததென்றுளங்களிப்புற்றுப்
பரிபுரமரற்றக்கரவளையொலிப்பப்பயோதரமிசையினின்வயங்குந்
தரளமாவடங்களலைந்திடவனம்போற்சார்ந்திவைமன்னனுக்கறைவாள். (எச)

பூதலமுழுதுமொருகவிகையின்கீழ்ப்பொருந்திடப்புரந்திடுமரச
காதலுற்றிவணின்வருந்துவதெனவுன்கவினுறுகாமமுற்றனன்யான்
றுதவிழ்தொடையாயெனைமணந்தருளிற்றுதியாயூழியஞ்செய்வே
னேதமில்நிருபவெனக்குநீகலைகண்ணெனமன்னன்றெளிந்துகண்விழித்தான்.

அரிவைநல்லுரையாலயர்ந்தமன்றெளிந்துவிழித்தவளழகினைநோக்கிப்
பரவைநல்லமிர்தோதெளிந்திடுதேனோபகரொணுவற்புதத்தணங்கோ
தெரிவையர்க்கரசோதிரண்டதீம்பாலோதிரொணுமயல்கொள்வேனுயிரோ
சுரதநூலினைவேட்டனக்குபதேசஞ்சொலும்பெண்ணோவென்றிவையறைவான்

இருறுபுவனங்களகமாமணிகள்சிறந்திடுந்தேனுநற்றருக்க
ளொருறுமவையினேதுவேண்டிடினுமெனதுயிர்முதலதாயீய்வன்
வாரிசூழ்புவியின்விசும்பினினெழில்சால்வநிதையர்நாயகமேயென்
பாரியாயெனைநீயணைத்தெனுவியினையருளெனப்பகர்ந்தனனம்மா. (எஎ)

நிருபனீதுரைப்பநகையுறநகைத்துமகிழ்த்துவாளரசநீயாளுந்
தரணிமாகனகநவநிதிமணிகடருவிவைநச்சிலேனென்ற
னுரையினைமறுமலமர்வனென்றரியையொளிகொள்பூசனைசெய்துதான
மருமறையவர்க்கங்களித்ததெக்கணக்கையருளுதியெனவெடுத்தணைத்தாள்.

சுரமுறத்தழுவியினியசொற்பகருங்கவினுறுமோகினியுயரும்
நிருபநீயானொன்றுரைத்திடவரசனிகழ்த்துவானிக்குவாகுத்தன்
மரபினினிடபத்துவசமன்னருளுமைந்தன்யானென்றவடன்னை
யரிவையுன்னுரையைமறுக்கிலேனெனத்தெக்கணக்கரமளித்திவையறைவான்

புதியநல்லமிர்தம்போலவேயிவணிற்போந்திடும்வனிதைநீயாரொன்
றதன்மயில்லரசன்பகரமோகினிமின்னறைகுவாணிருபவெண்ணயனச்
சதுமுகன்புதல்வியானுமுன்றனக்குத்தாரமென்றழுந்துறத்தழுவ
விதிகிர்முனிவர்மறையினூல்வழியின்கனல்வளர்த்தவலைவேட்டனுல்.

அருமறைவிதியிற்றனைமணந்தருளுமரசனைநோக்கிமின்னறைவாள்
சரியில்கற்புடையவனிதைதன்பதிதாரித்திரியத்தைநேர்ந்திடினும்
பரிவுடனதுநற்செல்வமென்றவனைப்பற்றுவரலாற்பிறந்தகத்தை
மருவுவோர்கிளையத்தழுந்தியூர்ப்பெட்டைவராகமாயுழல்வரொன்றுரைப்பாள்

ஆதலிலிவையையறிந்திடுமியானிவ்வுரையினிமர்வரொன்றுரைத்தல்
பேதைமைநிருபர்க்கிறைவநீயென்மேற்பெட்புவைத்திடவதுபொருமை
லேதலர்களைப்போலெனைவிரோதித்துக்குறூரமாயிருப்பருன்னில்லின்
மாதர்களெனினும்வருவனுன்னுடனென்றுரைத்திடமன்னன்மகிழ்ந்தணைத்தான்.

அரசன்மோகினிமின்னுரைத்தநன்மொழியாலகமகிழ்ந்தணைத்திடவவளும்
புரவலனுடனேயிருகரவளையும்பதத்தினூபுரங்களும்புலம்ப
மருவமர்குழலினளியெழக்கலவைகமழமந்தரவரையொருவி
யிருநிலமதனினிகரிலாத்தவளவிவுளிகின்றிடுமிடமடைந்தார். (அங)

திசைமுகன்மகளுமுருக்குமாங்கதனுஞ்செகமிசைச்சேரும்வேலையிலே
விசையுறுதவளப்புரவிமேதினியைவெட்டிடுங்குரமிதித்திடவோர்
முசலிகையுடலின்விரணமாய்நிலத்தின்மூர்ச்சையையடைந்திடவதனைக்
கசமெனவயங்குமுருக்குமாங்கதன்றான்கண்டனன்றயையுறவம்மா. (௮௪)

விரணமுற்றயருமுசலிகைதனைமண்மேலவன்வெம்மையினாலே
மரணமுற்றிடுமென்றதனையோர்நிழலின்வயங்கியதமாலத்தின்வைத்துத்
தருணமோகினியையயங்கொடுவருதியெனவவடரும்புனலதனைக்
கருணையாலதன்மெய்யுறநனைத்திடலுங்கதுமெனத்தெளிந்துகண்விழித்து.

உயிர்வரத்தெளிவாமுடம்புமெய்ஞ்ஞானமுற்றிடவரசனைநோக்கித்
தயையுடைமனயானென்செயலதனைச்சாற்றுவன்கேளெனவுரைக்கு
மியல்பறவிவணின்முசலிகையானயான்முனர்க்கழிந்திடும்பிறப்பிற்
கயலுகணதிசேர்சாகலநகரிற்கவினுறுமறையவன்மனைவி. (௮௬)

சாகலநகரினெழிலுடையவனாச்சதுமறையோதுமென்கொழுந
னாகரீகனுமாயிருப்பவன்றினமுமெனைநலிந்தடித்திடநானும்
வேகுசிந்தையளாயிவனென்மேற்சிநேகமேவிடும்படிவிசாரித்து
மோகனமுறுசாத்திரநெறியறிவாளொருத்திபாலடைந்தனள்முந்தி. (௮௭)

கரியுரியுடுத்துச்சடைகணீண்டிடவேகையினிற்செவ்வடமிலங்க
மருளுறுமிதரதெய்வமந்திரத்தைமறந்திடாப்பிரவுரச்சைப்பே
ரரிவையைவணங்கியிவையெலாமுரைப்பவவளெனக்கீய்ந்தசூரணத்தைப்
பரிவென்மேலடையப்பதகியாயினயான்பாலிலென்பதிதனக்கிட்டேன்.

பாலினின்மருந்தையிடுதலாலென்றன்பதிசயரோகமாய்மெலிந்து, நூலெலா
முணர்வோனவுடதம்பாணிட்டவையறிந்தென்னுடனில்வான், ஞாலமேலினி
யோரரிவையர்தமையுநச்சிலேன்யான்பிழைத்துய்யச், சீலமார்குணத்தாயி
தற்குமாற்றதனைக்கொடுத்தென்னோய்தீர்த்தியென்றுரைத்தான். (௮௯)

மருணனீதுரைப்பவுளைந்திடும்வினையேன்வசீகரமந்திரந்தனக்கு
நிகரிலாதவளாய்மருந்துமுன்னுதவும்பிரவுரச்சைக்கிவைநிகழ்த்தச்
சகலமோகனமுமுணர்ந்தவள்பினருந்தந்திடுமாற்றவுடத்தை
மிகமெலிந்திடுமென்கொழுநனுக்கிடலும்விழுங்கினன்பிணியெலாம்விடவே.

பிணிவிடவிளங்குமருணனென்பேரிற்பெட்பொருவாதுபொன்னிழைத்த
மணிகளார்கலன்களளித்தனியுடனேவாழுநாள்யான்மடிந்திடச்சற்
குணியலாவெனைச்சாதகர்திரள்பிணித்துக்கொடுசென்றுமறலிமுன்விடுப்பப்
பணியெனமுனிந்தங்கெனைப்பதித்துரோகியென்றவனிவைபகர்ந்தனனால்.

பதியினுக்கவமாரவுடதமளித்தவிவள்பதினைந்துகநிரையத்
ததிகவிர்ப்பந்தத்தமர்ந்துபின்கோடிவருடம்பார்முசலிகையாகிக்
கதமுறுகடிவைமுதலதாயுறவிகடையதாம்யோனியிற்செனித்தே
யதன்மமாமிழிவையடைகுவாயெனுஞ்சொலந்தகனறைந்தனனன்றே. (௯௨)

அந்தகனறைந்தவுரையினிற்பதினேந்துகம்நிரையத்திடையழுந்தி
யிந்தமாநிலத்தினுடும்பதாய்வருடையிலக்கமீரைம்பதுமுழன்றேன்
விந்தைநாயகன்றனடியனுமுனையென்விதியினாற்கண்டுமேதினியி
னுந்தவிப்பிறப்பினுழைந்திடாதுயர்வீடருளெனவரசர்கோனுவல்வான்.

துரையினிற்பதிக்குவிபரிதப்பொடியையளித்திடத்தவவுறவியலும்
நிரையமுற்றிவணினுடும்பதாய்ச்சனித்தநீயுயும்வகையுரையெனலுஞ்
சுரர்நதியமுனைதுலங்கியசரசுவதியுறுந்துறையினீர்படியிற்
சிரவணமுறுநற்றுவாதெசிபலத்திற்றீருமிவ்வினையெனப்பகரும். (௯௬)

கன்னிமாதத்திற்றெசமிவேதையினைக்கலந்தவேகாதெசிகழித்தே
இன்னலற்றிலங்குதுவாதெசிதன்னினனமருந்தாதிராத்துயில்விட்
டுன்னுதற்கரிதாய்வயங்கியதிரையோதெசியினிறுதனமருந்தத்
துன்னியபலத்தாற்சகல்பாவமும்போய்த்துலங்குவனொன்றுபின்னறையும்.

ஆதலின்மனவென்பவமறும்படியானறைந்தவிவ்விரண்டினுனன்றருளொன்
றோதமோகினிமினரசனைநோக்கியுணர்த்துவாளிவள்பதித்துரோகப்
பாதகியுயவிப்பலன்கொடுப்பதுநன்றன்றியாம்பதியிடையெய்த
வேதமற்றிலங்கும்பரியினேறுவமென்றியம்பிடநிருபனீதிசைப்பான். (௯௭)

பாரிடையெவரும்வருந்துவெம்மையினையகற்றித்தன்சீதத்தைப்பரப்பும்
நேரில்வானிறையுமுடுபதிகொலைசெய்நீசரைக்கொடியவவ்விலங்கைப்
பூரியவெனவேயருடவிர்ந்திலதாற்புணரியினெழுகதிரவிர்தான்
சீரியதலவென்றிகழுமேத்தியத்தையொளிக்கலாதென்றுபின்செப்பும் (௯௮)

அருமறைபுராணசாத்திரமளப்பிலறங்கடானங்களுக்கதிகம்
பரவுபகாரமெனுமொழிக்கிசையப்பழுதிலாவிருத்திராசுரனைச்
சுரர்செயித்திடநற்றதீசிதன்னலத்திற்றுலங்கிடவளித்தனன்சிவிமன்
பரிவினாற்கபோதமுயத்துலைபுகுந்தான்பாறினுக்குத்தசையரிந்து. (௯௯)

உவணனுங்கிடத்தானரவுகளோரோர்தினத்தினுக்கொவ்வொன்றுயடையப்
புவியினோர்பணிக்கோர்புதல்வனேயாகிப்புலம்பிடவதனுயிர்காத்துத்
தவர்மகிழ்ந்திடவேதயங்குசீமூதவாகனன்றன்னுடலடைய
வுவமையில்கலுழர்க்குதவியகீர்த்தியுலகமுள்ளளவினும்பொன்று. (௯௯)

ஆதலின்மலரோன்குமரியேயெவைக்குமதிகமாம்பரவுபகார
மீதலேநலனென்றிசைத்தவணமருமுசலிகையாயவேந்திழைக்குத்
தீதிலாவேர்ணத்துவாதெசிப்பலத்தையளித்திடவும்புருத்தீர்ந்தாண்
டோதுதற்கரியவடிவினளாகியுலகளந்தவன்பதமுற்றுள். (௧௦௦)

அருவினையொருவிமுசலிகையுருவமழிந்திடவவிருறுமுருவாய்ப்
பரகதியடைந்தவரிவையைநோக்கிப்பங்கயன்மகள்மனமகிழ்ந்தே
யரசனேடிலங்கும்புரவியினமரவயுதயோசனைகடந்தப்பால்
விரைமலர்ப்பொழில்சூழ்விதிசைமானகரின்மேவினன்கடிகையேழரையின்.

தாதையெய்தினனென்றுணர்ந்திடுதன்மாங்கதனெதிர்சென்றுமன்னவன்றன்
பாதமேலிறைஞ்சிவயங்குமோகினியைப்பணிந்தவளையுதவாதித்தர்
சோதிபோற்றுலங்குமுருவுடையவளைத்தூயசிற்றவ்வையாய்ப்பெறயான்
மாதவம்புரிந்ததெதுவெனவுரைத்துமகிழ்ந்துகைகூப்பிநின்றனனால். (க0உ)

தொழுதிடுஞ்சுதனையுருக்குமாங்கதமன்றூரகதத்திழிந்துடற்றழுவப்
பழுதிலாப்புதல்வன்றனையுடலழுந்தப்பங்கயத்தவன்மகளணைப்ப
விழுமியசிறுவனயுதவாண்டுற்றவிருத்தையைவருடமைந்துறவே
மழலையின்மொழியார்மதலையைப்போலமனமுறுவிகாரமற்றனரால். (க0ங)

வந்தெதிரிறைஞ்சிமனமகிழ்சுதனைமன்னவனுரைக்கியங்கறைவான்
கந்தமாமலரோனபுதல்வியாமிவணற்கானஞ்செய்திடவதுகேட்டு
மந்தரவரையினிவடனைக்கண்டுமணம்புணர்ந்தனனிவைசொலுமுன்
முந்தியேயுணர்ந்தென்சிற்றவையெனநீமொழிந்தனையெனத்துதித்தனனால்.

அரசனீதுரைத்துமகிழ்ந்திடத்தன்மாங்கதனுயராடகமலிந்த
விரதபீதுருக்குமாங்கதனுடன்றன்சிற்றவையிலங்கியேயெண்ணில்
பரிகரியெழிற்றேரினர்புடைசூழப்பணிலமாபேரிகைமுழங்க
விரைவினின்விதிசைநகரின்வீதியினின்மெவிடத்தானுமெய்தினனால். (க0ரு)

வீதியிற்பரிதேர்கரிமனர்மிடையவிறலுடையரசன்மோகினியோ
டேதமிலிரதமிசையினிற்றன்மாங்கதனமர்கோயிலினெய்தி
யாதரவுடனல்லறிஞருஞ்செம்மலரிதிகழாசனமிசைதன்
றாதைசிற்றவ்வையவரிருவரையுமிருத்தினன்றயங்கிடவம்மா. (க0சு)

ஆதனத்திருத்தியிருவர்பாகத்தினருக்கியமளித்தவர்தாணீ
ரேதமற்றிடத்தன்சிரத்தின்மேற்றெளித்தேயிலங்கியகருப்புரதீப
மாதர்க்கெடுப்பமதிதருமவிர்போல்வயங்குவெண்சாமரைதடக்கை
மீதினிற்றயங்கநிறையவீசினனால்விறலருள்மெய்மைசேர்குமரன். (க0எ)

அந்தமாரரியாதனத்திடையுருக்குமாங்கதன்மனைவியோடமாச்
சந்தியாவல்லிமகிழ்வுடன்கணவன்றாளிணையிறைஞ்சியாண்டெழுந்து
சுந்தரமிகுத்ததிசைமுகன்மகளைத்துலங்குமென்றோழிநீயென்று
சிந்தையினுவப்போடணைத்திடவவளைத்திருமகன்றொழுதிவையுரைப்பான்.

கொழுநனுக்கிதமாமனைவிமேல்வயிரங்கொண்டிகழறிவில்பாரியர்கள்
விழுவர்வெந்நிரையத்தறனுறக்கணவன்விருப்பமாயுற்றநாரியரை
யிழிவுசெய்திடாமலதிகசற்காரமியற்றியமடநல்லார்நிலத்தி
லழிவிலாப்புகழையடைந்துயர்பதத்தினமர்வரொன்றொருகதையறைவான்.

சாகலநகரிற்சதுமறையுணருமறையவன்சமனிலாதுயரும்
போகமாதுடனேமதனசாத்திரத்தாற்புணர்ந்திடவவனுடைமனைவி
மோகமுற்றிடத்தான்முயலும்வேசிக்குமுறைமையில்வேதியன்றனக்கு
நாகணிகரத்தாலடியிணைவருடிநவின்றிடுமேழியஞ்செய்வாள். (கக0)

பூதலமிசையின்மறைநெறிதுறந்தபதிக்குமப்பொதுமகடனக்கும்
பாதநீர்விடுத்துமிராத்துயிலுறும்போதவர்கள்புன்றுளின்கீழ்ப்படிந்துந்
தாதிபோற்பயந்துதிரிபவடனக்ருத்தயையிலான்றயிலத்தின்வெந்த
மேதியின்றசையைக்கணிகைதன்னுரையாலிடவவள்விழுங்கினளன்றே.

கணிகைதன்னுரையாற்றயையில்வேதியன்றன்கருமையார்மேதியின்றசை
யைக், குணமுயர்மனைவிக்கிடும்பவந்தன்றூற்கொடியதாமகோதரமென்னும்
பிணியுறமறையோனுழைந்திடும்போதிற்பிரியமுற்றவர்கள்போற்பிரியா
தணையுமோகனமான்மலர்மதுநுகர்ந்தவளியெனப்பூரிகொண்டகன்றுள்.

மறையவன்பிணிகொண்டுழைந்திடக்கணிகைமற்றவன்றனங்கொடாண்டொ
ருவ,நெறியுறுங்கொடியோன்மனைவியைநோக்கிநினக்கிவணளப்பரிதாய, மு
றைமையினிடாநிறைத்திடுமவத்தமூர்க்கனுறுயும்படிநிகரில், பொறையுடை
யணங்கேபரிகரியெனுஞ்சொறபுகன்றிடவவள்மகிழ்ந்திசைந்தாள். (கஙக)

பதியிவைமொழியவவன்செயுங்கொடுமைமறந்திடுமுத்தமயாரி
கதுமெனத்தனையேபயந்தவன்மனையினடைந்திவைகழறிடத்தந்தை
யுதவியபொருளாற்பரிகரித்தவன்றன்பிணிவிடுத்துய்ந்திடிற்காளிக்
கிதமுறுபெலியாய்த்தன்சிரம்நறுக்கியிடுவனென்றிசைந்தனளன்றே. (ககச)

இன்னலினணங்குகொழுனனைய…யாலிவ்வகைப்பரிகரித்திடுநாள்
சன்னிவந்தடரவுழைபவன்முகத்திற்றூர்குழலங்கைவைத்திடலு
மின்னவனவள்கையங்குலிமூன்றுதுணிந்திடவவன்பலாற்கடித்துத்
துன்னிருட்கலையாணையின்மேற்கணிகைதனைநினைந்தாருயிர்துறந்தான்.

அருமறைநெறியைத்திறம்பியகொழுனன்மடிந்திடநிகரிலாவணங்கு
கரமுறுகனகவளையினைவிற்றுக்கனமுறக்கொண்டவிந்தனத்தைத்
தரையினிலடுக்கிக்கணவனையதின்மேற்கிடத்தியேதானுமங்குற்றுப்
பரிவுடனணைத்தங்கியினுடலெரியப்பதியொடும்பரகதியடைந்தாள். (ககரு)

கருமைசார்கலையினணையின்மேற்கிடந்துங்கடுவினைக்கணிகையைநினைந்து
மரணமுற்றிடவப்பவமெலாம்பாரிமகிழ்ந்தனுமானஞ்செய்தவத்தா
லரியுயர்பதத்தினிருவருமடைந்தாராதலினெனைப்பயந்தவளே
சரியிலாவுனதுமகுணனுக்குவப்பாந்தையலையெள்கிடேலென்றுன். (ககஎ)

சரியிலாதுயர்தன்மாங்கதனிவ்வையைச்சாற்றிடச்சந்தியாவல்லி
யருமறைநெறியையியம்பினையென மெய்யணைத்தவனுச்சியைமோந்து
மிரைதிரைக்கடல்சூழேழுதீவினையுமிலங்கிடவாண்டிடுமுன்னைத்
திருமகனெனவேபயந்திடுமெனக்குச்செகதலத்தியார்நிகரென்றுள். (ககஅ)

மைந்தனையணைத்துமகிழ்ந்திவையுரைக்குமறுவிலாச்சந்தியாவலியுன்
றந்தையாமுருக்குமாங்கதற்கிதமாஞ்சதுமுகன்புதல்வியாமணங்கை [த்
திந்தைசிந்தையினுநினைக்கிலேனெனவேங்கழ்த்திப்பொற்பாண்டத்தைநோக்க
தந்திடுசகலபதார்த்தவோதனமுஞ்சரியின்மன்னருந்திடவளித்தாள். (ககக)

வங்கமார்கடலினமிர்தநேரடிசில்மகிழ்ந்துசந்தியாவலியளிக்கப்
பங்கயனுதவுமகளருந்தியபின்பழுதிலாவிமசலத்துடனே
குங்குமங்கலந்தமலையசமிதையங்குளிர்ப்புறமெய்யினிற்கொட்டிக்
கங்குனேரளகமிசைமலரணிந்தாள்கவினுறுசிறுவனைப்பயந்தாள். (௧௨0)

அன்னமன்னவளாஞ்சதுமுகன்குமரியருந்திடவவன்மனையளிக்கத்
துன்னியமகிழ்வினுயர்ந்திடுதன்மாங்கதனவ்விதோற்றிடவிழிக்கு
மின்னெனமருங்குமிளிருமோகினிக்குமேகலைமஞ்சிகைகலன்க
ணன்னிலவவிராமலகக்காய்போன்றவாரமுநல்கினளன்றே. (௧௨௧)

தருமமார்தன்மாங்கதனிவையளிப்பச்சந்தியாவல்லிசற்கரிக்க
மனாமலர்ப்பிரமனுதவுமோகினிமின்மகிழ்ந்துதன்மருணைநோக்கி
யரசவுன்புதல்வன்றனக்குலசெல்லாமளித்தெனைநீயொருவாமல்
மருவுதியெனலுமனன்செகமெல்லாமதலையைக்காத்திடப்பணித்தான் (௧௨௨)

சிறுவனுக்கவனியளித்திடுமுருக்குமாங்கதன்றிசைமுகன்மகளைப்
பிறிகிலேனெனநல்லிதமுறுவசனம்பேசிடவவள்மகிழ்ச்சியினால்
மறுவிலாதுயருன்மனைவியொன்மேல்வயிரம்வைத்திடாமலும்யான்றன் [ள்.
வெறியுறுதொடையாயுனைப்புணர்ந்திடவுமிசைந்திடவிளம்புகென்றுரைப்பா

சதுமறைமுனிவர்முனிவினாலுறையுஞ்சாபமுமகற்றிடலாகும்
பதிவிரதையர்களகத்தினையரன்மால்பங்கயனலுந்தாங்கரிதா
லதுதனலரசவுனைப்பிரியாமலணைத்திடுங்கற்புடைமடவா
ரிதமறமுனியினியானெரிந்திடுவனவர்சினமொழித்தியென்றுரைத்தாள்.

நித்திலநகையாளாமயன்குமரிநிகரிலாநிருபனைநோக்கித்
தத்தைபோல்மொழியுமுறையினைக்கேட்டுச்சரியிறன்மாங்கதன்றுயாம்
வித்தியலேகைமுதல்மடந்தையரைவிரைவினழைத்தவரடியிற்
பத்தியினிறைஞ்சியெழுந்துநின்றிருகைகுவித்திவைபகர்ந்தனனம்மா. (௧௨௫)

செந்திருமருணனருளயனுதவச்சிறந்தமோகினியென்சிற்றவ்வை
யெந்தைதன்னுடனேயொருவலாதிருக்கவிவையைந்திடுநீரெனவியம்பக்
கந்தமார்குழலார்களன்றுகண்சிவந்துகதமுறவனைவருங்கூடி
மைந்தவெம்முயிரைக்கொடுக்கினுமுதவோம்பதியையுமற்றவடனக்கென்றார்.

சுசியுறுநயனராகியன்னையர்கள்சொலுமுரைகேட்டுநற்சிறுவன்
றிசைமுகனுதவுங்குமரியையெந்தைசேர்ந்தென்றுமொருவலாதிருக்க
விசைகிலீராகிலிலங்கியவாளாலெனதுசேகரத்தினைத்துணித்து
வசையுமக்குறவேமடிகுவனெனவம்மடநல்லார்நடுங்கியீதுரைப்பார். (௧௨௭)

எண்ணிலகோடிதவஞ்செயுமவர்க்குமெய்திடாநன்மகவாய
புண்ணியவுனக்கோரிடர்வரினியாங்கள்புவியிடையுனக்குமுன்மடிவோங்
கண்ணிருநாலோன்மகடனையுந்தைகலந்தென்றுமிருக்கச்சம்மதித்தோ
மண்ணிலுன்னுரையைமறுக்கிலமுனிவையகற்றினமென்றிலமடைந்தார்.

வித்தியலேகைமுதலினோர்முனிவையொழித்தகமேவிடக்கமலன்
புத்திரியுடன்றன்றந்தையைவணங்கிப்பொறையுறுதாயையில்விடுத்தே
யத்திறிறுயில்வோன்றினவிரதத்தையவனியினெறியுறநடத்தி
யுத்தமகுணத்தன்மாங்கதனெழுதீவினைப்புரந்தனன்புகழோங்க. (௧௨௯)

அனையர்தம்முனிவையகற்றியசிறுவன்மகிழ்ந்தடிவணங்கியாண்டொருவத்
தினகரனெனவும்வயங்கியவுருக்குமாங்கதன்றிசைமுகன்மகளோ
டினியகர்ப்பூரவிலைச்சுருளருந்தியிணையிலாமலரணைமீதின்
மனமகிழ்ந்தினியமதனசாத்திரத்தின்வழியினிற்கலவியைவிளைத்தான். (௧௩௦)

முருக்கிதழதரமளித்துமென்கமலமுகைநிகர்நகிலிணையுரத்தி
னெருக்கியுமுடலினகக்குறிவருத்துநிகரிலெண்புள்ளிசைமுழக்கி
மருக்கமழளகமலைந்திடமுகவேர்வரும்பிடமதனசாத்திரத்தா
லுருக்கினனுருக்குமாங்கதன்றனையொப்பிலாமோகினிமடந்தை. (௧௩௧)

சுரதநூற்கடலைவிளைத்துமோகினிமின்சுகமிகுகலவியைவிளைப்பக்
கருதலரிறைஞ்சநிலனையாள்மனன்றேன்கலந்திடுமசகத்தைநிகர்த்தங்
கரிதினவிரதமலானுமற்றெல்லாக்கருமமுமகற்றியேயவளோ
டிரவுநன்பகலுமிடைவிடாதெட்டுவருடமின்புற்றனனன்றே. (௧௩௨)

உத்தமவனிதையுதையினாற்சோகமுளையினாற்கோங்கெழில்மலிந்த
நித்திலநகையின்வளைமுகக்கரத்தால்நிறைந்திடுசிந்துவாரம்வே
லொத்தபார்வையினாற்றிலகம்பாடலினாலோங்கியஞாழலங்கையினை
வைத்திடத்தேமாவிகாரநோக்கதினாற்சண்பகமிவைமலர்ந்திடுமால். (௧௩௩)

அன்றியுந்தழுவக்குரவகமதுவாயமைத்துக்கொப்புளித்திடின்வகுள
மொன்றிடுமலர்பூவியையினீரைந்துமரங்களுமுருகிடுமென்று
லென்றயுதத்தினவிருறவயங்குமயன்மகளிவையெலாந்திசையை
வென்றிடுமனன்மேல்விளைத்திடிலிவன்றனவடனையெங்ஙன்விட்டுய்வான்.

இவ்வழிமதனசாஸ்திரம்பரவையெனவளைந்திடவெதிரில்லா
நவ்விநாணயனநலினமன்னுதவுநாரிசெய்விகாரத்தின்கலவி
கவ்வியேதினமாதங்களுமறியாக்காவலனமர்ந்திடுநாளி
லவ்வியமவித்துநலனுறுஞ்சிறுவன்மலையமால்வரையினையடைந்தான். (௧௩௫)

மலையமால்வரையினெழிலுறுநகரின்வயங்குவித்தியாதரர்தம்மைச்
சிலையுறுகணையாற்செயிக்கவோர்கோடிதிரவியமிலக்கவம்பரம்பா
லிலகியவடிசிலியவணிகிளையுமுலோகத்தினெய்துவிப்பனவிந்
நலனுறவொவ்வொன்றளித்திடுமைந்துமணியவர்நல்கினரன்றே. (௧௩௬)

வித்தியாதரர்களளித்திடுமைந்துமணிகளுமவர்பெறவிளங்கு
முத்தமமிருகன்னியரையும்வாங்கியுததிமன்றனைச்செயித்திடலும்
பத்திசெய்தவன்முன்பயந்தபுட்கரநன்னங்கையைப்பாரியாய்க்கொடுத்தே
அத்திரியயுதமுதவினனதனின்செவிவெள்ளைமரகதமடைய. (௧௩௭)

வருணமன்பயந்தமகளொடுமருந்தாயரும்வெண்பரியயுதத்தோ
டொருகோடியிடுமுன்வயங்குபோகவதியெனுநகரத்தினுற்றண்டா
வரசனாவென்றேயவர்பெறும்பதினாயிரமரிவையர்களைப்பற்றி
விரைவினின்விதிசைநகருளோர்வியப்பமேவினனுருக்குமாங்கதன்சேய்.

சிலைவலியதனாற்றிசைகளைவென்றுசிறந்ததன்மாங்கதனெய்தி
யிலகியவுருக்குமாங்கதனடியினிறைஞ்சிமோகினியினைத்தொழுது
நலனுறும்வருணன்மகளைவிஞ்சையர்கள்குமரியர்நாககன்னியர்கள்
பலரையுமைந்துமணியுடன்வைத்துப்பணிந்தனன்பின்னருமம்மா. (௧௪௧)

விரைசெறியளகவித்தியாதரர்கன்னியர்களைவிழுமியவெழில்சே
ருரககன்னியரையயன்மகடனக்குச்சிலதியராகவேயுதவிச்
சரியிலாமணியுமவடனக்கருளித்தயங்குதன்மாங்கதன்றனக்கு
வருணன்மாமகளைவதுவைசெய்வித்துமனன்மகன்றனைத்தழுவினனால்.

பரிவினுற்றழுவுமுருக்குமாங்கதன்றன்பாதமீதிறைஞ்சிமோகினியைத்
தரையிடைவணங்கிச்சந்தியாவல்லிதாளினிற்சிரமுறத்தாழ்ந்து
விரைசெறியளகவித்தியலேகைமுதலினோரடிமிசைவீழ்ந்தே
யரிதிகழரியாதனமிசைவயங்கியறனுறவுலகினையாண்டான். (௧௪௨)

கருமையம்பரத்தையணிபவர்விற்போர்க்கடுங்கொலையியற்றுபூசனையை
மருவுவோரிதரதேவதைதனையேயடைபவர்மதுவினைநுகர்வோர்
பரர்மனையவரையணைபவரரியைப்பழுதுசொல்கீசர்களிவரா
யெரியெனவடவெத்திசையினுந்திரிந்தாண்டிவரிலாதுலகெலாம்புரந்தான்.

இலனிடையுழுதுவிதைகளுமிடாதுகிரிலாத்தானியம்விளையப்
பலவிறைந்திடுபாதவந்தொறுந்தேன்கள்படியிடையொழுகியேமிடைய
நலனுறுமறையும்வேதியர்திரளுநதிகளார்பொழில்களுஞ்சோவு
மலிதரவினைநோயறவுயர்செங்கோல்வளர்த்திடவுலகினையாண்டான். (௧௪௩)

அறஞ்செறிவுறத்தன்மாங்கதனுலகையாண்டிடவுருக்குமாங்கதன்முன்
வெறிமலரகத்திசைமுகன்மகன்மேல்விருப்பமுற்றணைத்திடுநாளின்
மறுவறவுயரும்விருச்சிகமாதம்வருதலும்வடிவுடையரசன்
குறைவிலித்திங்கள்விரதநன்றெனவேகூறிடமோகினியுரைப்பாள். (௧௪௪)

அரசவீராவென்றுரைக்குமாதத்தினதிகமீதென்றவப்பலனை
யுரையெனநிருபனுகத்தினிற்கிருதயுகம்வியலாறுகடன்னிற
சுரர்நதிநூலிற்றுலங்கியவேதர்த்துயதன்மனத்தினிற்றனைமெய்
யுருவினினயனத்திங்களிற்றெறுக்கால்மாதமீதுத்தமமென்றான். (௧௪௫)

ஆதலின்மடவாயாதிருதிங்கடனிலுயரிந்தமாதத்தி
னேதமில்பிரசாபத்தியஞ்சாந்தராயணமெதிரில்சாந்தபனத்
திதில்மூன்றுவகைக்கிருச்சிரமுஞ்சீதரன்விரதமீதினையே
யாதரவுடன்முனருமறைநெறியினியற்றுவாரரிபதத்துறுவார். (௧௪௬)

ஒருதினமூன்றுறுணாசெய்முந்நான்குபதினைந்தோர்திங்களாமிதினி
லரிவிரதத்தைநரர்தமக்கிசைந்தபடியுபவாசத்தையடையிற்
பரகெதியடைவரிந்தமாதத்திற்பரிவுடன்றிருவிளக்கெடுப்பார்
வருபிறப்பகன்றுசதுர்ப்புயராகிமாதவன்மருங்குவீற்றிருப்பார். (கசஎ)

சரியில்கார்த்திகையாந்திங்களினிகழுஞ்சசமுதற்றலைசயினைப்பொசிப்பார்
மருளடர்ந்திடவேநீசர்களாகிச்செனிப்பர்கள்வராகமெய்ப்பிசித
மருவாதயில்வோர்வருடமாறயுதம்நிரையத்தினடைந்ததிற்பினர்த்தா
ணிருணியாய்ப்பிறப்பர்சுரையினைநுகர்வோரெரியுறுநரகத்தின்வீழவார்.

ஆதலில்நலனாம்விருச்சிகமாதத்தரிவிரதத்தினையணங்கே
நீதகன்றிடநாமிருவருமனுட்டித்திடுகுவமென்றுசெப்பிடலும்
போதயன்புதல்வியரசவுன்னுடனான்புணர்ச்சியில்லாதமர்கில்லே
னாதவன்குலத்தோய்சந்தியாவலியிந்நோன்புநோற்றிடவருளென்றாள்.

கந்தமாமலரோன்மகளிவைகழறக்காவலனதற்கிசைந்தருளிச்
சந்தியாவல்லிதனையழைத்திடலுமுவந்தவடன்கொழுநன்பால்
வந்தடிவணங்கிமகுணநீயயன்றன்மகளொடுமருவினாயென்று [பான்.
நிந்தைசிந்தையினும்நினைக்கிலேனெனுஞ்சொல் நிகழ்த்திடவவனிவையுரைப்

உத்தமகுணத்துப்புதல்வனைப்பயந்தாயுவமையில்கற்புடையாயென்
சித்தம்வந்திடுநற்றேவிநீயெனமன்செப்பியகார்த்திகைமாதத்
துத்தியிற்றுயில்வோன்விரதம்நான்செயாமலகற்றினளயன்மகளதனாற்
குத்திரமிலாதோயிந்தநோன்பினைநீகுறைவறச்செய்குதியென்றான். (கருக)

சரியிலாமகுணனிவையுரைத்திடலுஞ்சந்தியாவலிமனமகிழ்ந்து
திருவினாயகன்றன்பிரிதியாயுயரிவ்விரிச்சிகத்திங்களின்விரதம்
பரிவுடனெறியினியற்றுவனென்னப்பணிந்தவளேகியந்நோன்பு
சுருதியையுணருந்தவத்தவர்மகிழத்துலங்கிடவியற்றினள்மாதோ. (கருஉ)

மருவணிதுளவோன்விரதமாயுயரும்விருச்சிகமாதத்தினன்பு
சரியிலாமனைவிநடத்திடவுருக்குமாங்கதன்சதுமுகன்மகளோ
டொருநொடியளவுமொருவிலனாகியுடனாயிருந்திடக்கலவி
யிரவுநன்பகலுமணுகுறத்தவிசிலிலங்கியங்கிருக்குநாடன்னில். (கருங)

சீதரனுயரும்பயோததிமிசையிற்றிருத்துயிலுறந்திடுதினமாஞ்
சாதுமாதத்தின்முடிவதாந்தெறுக்காற்றிங்களிற்சந்திரன்வளரு
மேதமில்பிரபோதினியெனுமேகாதசிவரயாவருமகிழ
வாதவனெனமெய்வயங்கிடுதன்மாங்கதன்சொல்லாலறைந்தனன்பேரி.

ஓதனமடவார்கலவிதாம்பூலஞ்சமர்பயிரிடுதல்பொய்யுரைத்தல்
பூதலமிசையினெறிசெல்லாதாவின்றசைதினுமவரொடுபுகறல்
நீதியினியற்றும்வாணிபந்திலத்தின்றயிலமோடிவைபத்தும்நிடேத
மாதலிலொழிமின்சிரார்த்தமுங்கையினளித்திடுபிண்டமுந்தவிர்மின். (கருரு)

சாதுமாதத்தினேகபூதத்தைத்தரித்தவர்சற்பிராமணருக்
கோதனமளிமின்பலன்களைத்துறந்திரதுதனையுதவுமின்றுய்ப்பின்
மீதுறுமனத்தைவிலக்கிநீருந்தக்கொடுத்திடுந்ததியினைவிடுத்திர்
தீதறக்கனகமிறைத்திடுநிலத்திற்றுயின்றவர்சேக்கையையீமின். (௧௫௬)

திலதயிலத்தையகற்றிநீர்நெய்யையுதவுமின்பாலினைச்சேரீர்
நலனுறவியங்குமருக்கியங்கொடுமினலனிலாப்பலதிசைதுறந்தி
ரிலகியகோவையளித்திடுமிலையினருந்திநீர்கஞ்சமீய்ந்திடுமின்
பொலனுறத்தினம்நீர்படிந்துநீர்நிகரில்புரவியையளியுடனருள்மின். (௧௫௭)

சாகம்விட்டவர்கள்சரியிலாத்துப்புதயங்கியவெள்ளியுமளிமி
ஞகையோடரியின்சரிதயைக்கேண்மினுவப்பினராதனைசெய்மின்
சாகரமிறுமின்மறையவர்மடியத்தடிந்திடும்பவமுதலாகப்
போகுநீர்கெதியையடைகுதிரொனுஞ்சொற்புகன்றுபேரிகையினையறைந்தான்.

அரிதினநாளையெனத்தசமியிலேயறைந்தபேரியினொலிகேட்டுப்
புரவலன்கமலன்புதல்வியையணைத்ததடக்கையைப்பொருக்கெனவாங்கி
விரைசெறிந்திடுநற்கருப்புரத்துடனும்விளங்குதாம்பூலமங்கெறிந்து
பரமனைநினைந்துமலரணையொருவப்பங்கயன்மகள்முனிந்துரைப்பாள்.

ஏதமிலரசர்க்கிறைவகேடுதிங்கடொறுமிருமூன்றுநாளொருவும்
வேதனையதனுல்மெலிந்தனனெனைநீவேட்டநாள்மந்தரவரையி
ஞேதியமொழியைமறுக்கிலேனெனவாண்டுரைத்துத்தெக்கணக்கரமீய்ந்தா
யாதலின்முராரிதினத்தினீயன்னமருந்துதியெனவறைந்தனளால். (௧௬௦)

மலரயன்குமரியிவையுரைத்திடலுமன்னவனறைகுவானிலத்தி
னலனிலாப்பொய்ச்சான்றுரைத்தவரிரவிவிதுவுடன்கூடுநாடன்னிற்
கலவியைவிளைப்போர்நம்பினர்தமக்குக்கடுவினைசெய்குவோர்முராரி
புலனுறுதினத்தினத்தினையன்பாற்பொசித்தவரிவர்நரகடைவார். (௧௬௧)

ஆதலிலணங்கேநரகினையடையவரிதினத்தன்னம்நீயருந்தென்
றோதுவதவத்தமலரயனுதவுமுத்தமகுணத்தவளாயும்
நீதியில்வசனமுரைக்கலையெனுஞ்சொல்நிகழ்த்திடவவள்மிகச்சீறிப்
பூதலத்தரசர்க்கிறைவனைநோக்கியசத்தியனீயெனப்புகல்வாள். (௧௬௨)

சத்தியமதனாற்சந்திரனிரவிதிரிகுவர்சாகரம்நிலைவிட்
டொத்திடாதமர்வவுவரியைநுகர்வோனுமாயிரனல்விந்தமால்வரையு
மித்தலத்துயராதிருப்பனசுவர்க்கமிலங்குவதிதுவெல்லாமுணரு
முத்தமவென்சொல்மறுக்கிலேனென்றவுரையெங்ஙனுகுமென்றுரைப்பாள்.

அனலிலில்லைப்போரந்தணர்நிலனைக்கவருவோர்நஞ்சினையளிப்போர்
வினையுறக்களவிற்கரத்தினையுதத்தாற்செனங்களைவீழ்ப்பவர்பிறர்தம்
வனிதையையணைப்போர்தனத்தினைத்திருடுமருளினர்சுராயினைப்பருகு
மினரிவர்பவங்களறப்பிராயச்சித்தமுளதசத்தியற்கிலையென்றாள். (௧௬௪)

சதநலப்புரவிமேதமுங்கரில்சத்தியந்தன்னையுநிறுத்தா
லதிகமாயுயருமெய்மைகொள்வசனமாதலினறிவிலாதவர்போ
லுததிசூழுலகையொருகுடைக்கீழிற்புரந்திடுமுத்தமவென்சொ
லிதமதாய்முராரிதினத்திலன்னமருந்தெனப்பின்னருமிசைப்பாள். (௧௬௫)

அரசவென்சொல்லைமறுத்தசத்தியத்தையடைதியேல்வாலியமுதலாய்த்
தரையினிலியற்றும்விரதமாதானஞ்சரியிலாதுயரயமேத
மிரவிகாணிமம்போனிட்பலமாகியிளிவினையுற்றுநீமேவேழ்
நிரையம்வீழ்ந்திடுதியனமருந்துவதேநெறியெனப்பின்னருமுரைப்பாள்.

கருவுறுமடவார்மதலையர்விருத்தர்காவலர்பிணியினுளோவோ
ரரிதினந்தனினுமருந்தலாமனமென்றருமறையறைந்திடுமெனவே
மருளொழிந்திலங்குங்கவுதமமுனிவனெனக்கிவையுரைத்தனன்வலனூர்
நிருபவென்னுரையைமறுத்திடாதடிசிலருந்தெனமனனிவைநிகழ்த்தும்.

வேதசாத்திரங்கள்விருத்தமாயிடமோகனமிகுநூலினைவிரித்தன்
சோதியவிகாரக்கவுதமன்முராரிதினத்திலோதனமருந்திடுதல்
நீதியென்றுனக்குநிகழ்த்தியவிபரீதச்சொல்லைநிச்சயமெனவே
போதயன்குமரிபுகலலென்றுரைத்துப்புரவலனிவைமொழிந்தனனால்.

சகசிரகோவைவதைத்தவராவின்றசையினையருந்திடுமருளா
ரிசழ்வுறுநீசத்தெரிவையையணைப்போரிருபிறப்பாளரைச்செற்றோர்
புகுநரகத்திலரிதினத்தன்னம்பொசித்தவரடைகுவரெனவே
நிகரில்மாபுராணமறைந்திடுமெனமன்பின்னரும்நிகழ்த்தலுற்றனனால். (௧௬௯)

செயலுறுமுராரிதினத்தினிற்சிரார்த்தமருந்தினர்நிகழ்வுறுமகத்தி
னியல்புறுபுரோடாசம்பொசித்தவர்கள்கயையினிற்பிண்டமிட்டவர்கள்
கயவர்களடையுநரகினிலுறுவரொன்றுமாபுராணங்கள்கழறும்
புயல்நிகராகவனிதையேயென்றுபுரவலன்பின்னருமொழிவான். (௧௭௦)

தரையினிலங்குமனிதரிற்பிணியாற்றளர்ந்தவர்சத்துவமிலாதோ
ரரிதினமதனிற்பயம்பயங்கந்தமருந்துவதலதனம்பொசிக்கிற்
சுரமுறுமவர்களடர்ந்தடர்ந்தடிசினுகர்ந்திடிற்சூழ்பிணியவரை [ர்.
விரைவினில்வதைக்குஞ்செயலெனப்பவங்கள்மிடைந்திடநிரயத்தின்வீழ்வ

ஆதலின்முராரிதினவிரதத்தினனமருந்துதியெனவுரைக்கிற்
றீதுறுநிரயத்தழுந்துவையிதனைச்செப்பிடாதொழிகுதியுனக்குப்
பூதலமுதலாம்புவனமாதருக்கள்புதுமணியென்னுயிர்முதலா
யேதுவேண்டிடினுந்தருவனென்றுரைப்பவினையமோகினிமுனிந்துரைப்பாள்.

தருமமெய்யுணருஞ்சற்குணன்போலத்தயங்கியமந்தரவரைமேல்
மருவியென்னுரையைமறுக்கிலேனென்றுவழங்கியமொழிபழுதாக்கி
யரிதினத்தன்னமருந்திடேனெனவிங்கறைந்திடுமசத்தியச்சொல்லென்
சிரசினையறுக்குங்கொடுமையைநிகர்க்குமென்றுமின்சீறியேயுரைப்பாள்.

மாதவன்றினத்தையுறும்விரதத்தைச்செயுமினென்றேமறைப்பொருள்க
ளோதியதிலைசாத்திரநெறியினுபவசிக்கின்றனையெனமன்
வேதநல்லுரையைசசுருதிகளறையுமிதுதனைவிளங்கிடப்புராண
மாதவனவர்போலிலங்குமாரணத்தினந்தத்தின்மொழியினைவிரிக்கும்.(கஎச)

சதுமறைநெறியிற்சாத்திகபுராணஞ்சக்கரந்தரித்தவன்றினத்தி
னிதமுறவன்னம்பொசித்தலவ்வியமேயென்றறைந்திடுமொழியாலே
சுதைதருபொருளான்மலிந்திடுவேதமார்க்கமுந்துலங்குமிவ்விரதம்
பதிதர்களிதனைவிபரிதமாகப்பண்ணினும்பயனிலையென்றான். (கஎரு)

உவமையிலரசனிவையுரைத்திடலுமொளியுறுமோகினிசிறி
நவமணியணிகடர்கணிகையாம்நாமச்சிலதியைநோக்கியேநவைனார்
கவுதமமுனியைக்கொணர்தியென்றுரைப்பக்கடுகியாண்டவளடைந்தோத
வவனியின்மறையோர்குழாம்புடைசூழவந்தமாதவனடைந்தனனால். (கஎசு)

கவுதமமுனிவன்மறையவர்சூழக்கடுகியேவருதலுமரச
னவனியினிறைஞ்சியருக்கியமளிக்கவாதனத்திருந்துமாதவத்தோன்
கவினுறுகமலன்குமரியைநோக்கி யழைத்திடுங்கருமமேதென்ன
வுவமையில்மடந்தைதவன்றனைப்பணிந்துவிரகுறவிவையுரைத்திடுவாள்.

துரையினிற்செனித்தசனங்களுக்கெல்லாந்தயங்கியவன்னமாதார
மரணமுற்றவர்க்குமிதுசனாற்பிண்டம்வயங்கிடவளித்திடவேண்டு
மிரையெனக்கருதியுறவியும்புழையினிலங்கியதண்டுலஞ்சேர்க்க
வரிதினத்தடிசிலருந்திடேனெனமன்பிராந்தனாயினனெனவறைவாள். (கஎஅ)

எதியறும்விதவையீட்டமும்போலவிருடிகேசன்றினந்தன்னிற்
பதவ்யவனத்தைவிடத்தினைக்கண்டுபயந்தவர்போலருந்தாமற்
சதுமறைநெறியினிலாதவிவ்விரதந்தானனுட்டித்தவமாரும்
பதிதர்போலரசன்பிராந்தனாயினனென்றுரைத்துமின்பின்னரும்பகர்வாள்.

அரசனானவனீளவனியையறத்தாற்காக்கவுமகத்துறுமனைவி
புருடனுக்கிதமாய்நடக்கவும்விதித்தமறையினின்பொருளினையொருவித்
தரையினினெதிகள்கைமையைப்போலவரிதினத்தடிசிலைத்தவிர்ந்தென்
னுரையினைமறுத்திண்டசத்தியனாவானெனப்புகழ்ந்தோதலுற்றனளால்.

ஓதனத்தாலேயுயிருளதாகுமுயிரினாலுடலுரனடையு
மேதமில்குரம்பைப்பலத்தினாற்பகையாயெதிர்த்தவர்தமைத்தெறவேண்டு
மாதலினனத்தையரிதினமெனவீண்டகற்றிடலொழிதியென்றனேக
மேதுவோடிட்டமுரைக்கினுங்கேளானென்செய்கேனியானந்தோவென்றாள்.

கமலனன்குமரியிவையுரைத்திடலுங்கவுதமனிருபனைநோக்கிச்
சமனில்மோகினியின்சாற்றுவதெல்லாஞ்சதுமறையறையுமிப்பொருளே
யிமையவர்க்கமிர்தமளித்தவன்றினத்தினிழைத்திடுவிரதமாரணச்சொல்
லமைகிலவதனாற்சாத்திரம்பிடித்தேயனமருந்திடாயெனவறைவான். (கஅஉ)

அருவினையறநன்மகஞ்செயுமவர்களவிசிருநேர்மும்பொசிப்பார்
தரையினினதனாலரிதினவிரதமுளதெனச்சாற்றுகைபழுதால்
விரைசெறிகமலன்குமரிசொல்மருமல்விரைவினோதனமருந்தென்றே
யுரைசெயுமுனியையெரியெழநோக்கியுருக்குமாங்கதனிவைமொழிவான்.

வாயினைமடித்துக்கனல்கணினுறநான்மறைநெறிதிறம்பியேவரம்பில்
பேயினர்போலப்பிதற்றியந்தகன்பார்பத்தியம்பெருத்திடவியற்றி [ம்
மாயவன்றினத்தின்விரதமெய்யலவென்றுரைத்துமோகனச்சொல்லைவகுக்கு
நீயிவண்வருகைகருமமன்றெழுதிபோதியென்றிவைநிகழ்த்தினனால் (கஅச)

தரைகிழிந்திடினுமண்டம்விண்டிடினுந்தமனியவரைபிளந்திடினும்
பரவைதன்னிலைவிட்டுயரினும்நிகரில்பாவகன்வெம்மைவிட்டிடினு
மிரவியோடுடுக்கள்விழுகினும்விதுச்சீதளத்தையேயிழக்கினுமியான்மெய்
யரிதினவிரதத்தனமருந்தேனீயகலுதியசாத்திரவென்றான். (கஅரு)

முனிவொடுமரசனிவைமொழிந்திடலுமுண்டகன்குமரிகண்ணிரண்டுங்
கனலுறக்கதமுற்றெழுந்துநின்றவனிகாவலனானனநோக்கி
வினையறுமுனிவர்முனரினென்சொல்லின்வழியுளனெனமொழிவிளம்பி
யுனதுதெக்கணக்கையுதவியுமறுத்தவசத்தியனீயெனவுரைப்பாள். (கஅசு)

அருமறைநெறியைத்திறம்பியேயென்சொல்மறுத்திடுமசத்தியனான
நிருபநின்னிடத்தினிருப்பதிற்சுரையைப்பருகுதனீலவம்பரத்தை
யுரைதனிற்புனைதல்மேத்தியத்தமர்தல்நலநெனவறைந்துநீமிலேச்சர்
தருமமில்மனிதரிவரிலுமிளிவாய்த்தாழ்ந்தவனென்றுரைத்தகன்றாள். (கஅஎ)

அவனிகாவலனையசத்தியனென்றேயறைந்தந்தவந்தணர்சூழக்
கவுதமனுடனுங்கமலனன்குமரிகதமுறவைதகல்பவளைப்
புவியினரசர்துதித்திடத்தன்மாங்கதனெனும்பொறையுடைக்குமர
னிவுளிமேல்வருவோனிருகணானோக்கியிழிந்தடியிறைஞ்சிநின்றுரைப்பான்.

கண்ணிணைசிவந்துவதனமும்வெயர்க்கக்கதமுடனெந்தையைவைது
மண்ணிடையதினுன்னடிவருந்திடநீவரவிங்ஙனென்பிதாவான
புண்ணியனுனக்கெவ்விடரினைச்செய்தான்புகலுதியாலெனவுரைப்ப
விண்ணுறைமடவார்திலகமாய்விளங்குமின்சுதனுடனிவைபகர்வாள். (கஅகூ)

உந்தையென்றன்னைமந்தரவரையினுருத்திரன்கோயிலின்முனரி
னந்தணர்சுருதிமொழிந்திடமணந்தவிடத்தினில்யானறைவசனம்
நிந்தனையெனத்தான்மறுக்கிலேனென்றுநிகழ்த்தினன்றெக்கணக்கரமுந்
தந்தவனிவனென்னுரைவழிநிலாமலிகழ்ந்தனனென்றுசாற்றுவளால். (ககூ0)

அருத்தியாலியானும்பிதாவையிப்புவியையாபரணத்தினைத்தனத்தைக்
கருத்தினானினைத்துத்தருகுதியெனுஞ்சொற்கழறிலனவன்றன்மேற்பரிவால்
விருத்தனாகியவுன்மெய்யுரமுறவேவிளம்பியதெள்கலையென்று
வருத்தமோடனேகவிதத்துரைத்திடவுமறுத்தனனென்றுமின்பகர்வாள்.

தனக்குறுகருமமுரைத்தவென்சொல்லைத்தடுத்தவனிடத்தினிருக்கை
கனக்கவுமிழிவென்றகன்றனனெனுஞ்சொற்கழறிடுஞ்சிற்றவைதன்னை
யுனக்கிதமுறநீயுரைத்தசொல்வழியினுறும்படிமன்னனுக்கறைவன்
மனக்கவலையைவிட்டடைகுதியெனவுமற்றவள்மகனொடுமீண்டாள். (௧௬௨)

நயவுரைமலிதன்மாங்கதன்சிறியதாயுடனண்ணியிம்மடந்தை
யியல்புறப்பொருவுமயலினாலணையுமிணையிலாத்தந்தையிலெய்திச்
செயலுறமிளிரொண்சிற்றவையிவணியசத்தியனெனுமொழிசெப்பி
யுயர்கவுதமனொடகன்றிடுங்கருமமெதுவெனப்பின்னருமுரைப்பான். (௧௬௩)

எந்தையுன்னுயிரைங்கர்த்திடுமனைவியசத்தியனென்றனையிகழா, தந்தமார்வ
லாரிநகருயரளகைமுதலெண்மரமர்பதியினையு, மூந்தியென்சிலையின்வலியினா
ற்செயித்தின்றிவள்முனிவொழியவீருவன்மா, லுந்தியின்வருவோனுலகம்வே
ண்டிடினுந்தவமுயன்றருள்வனென்றுரைப்பான். (௧௬௪)

அரிதினவிரதமுலகெலாநடத்தியந்தகன்பதமழிந்திடநற்
பரகெதியெவருமடைந்திடும்படியேபடியினைப்புரந்திடுமெந்தாய்
விரைசெறிகமலன்மகள்முனிந்திடாதுவிளம்பியகருமஞ்செய்யாம
லிரவியுள்ளளவுமசத்தியனென்னுமிளிவுறநடத்தியோவென்றான். (௧௬௫)

புயவலியுடையசிறுவனீதுரைப்பப்புரவலனவன்றனைநோக்கி
யயனருளிவளுக்கன்றுமந்தரத்தினறைந்திடுமொழிவழுவாதென்
னுயிர்முதற்சிறப்பாயேதுவேண்டிடினுமுதவுவனென்னவுங்கேளா
தியல்பறவரியின்றினத்தனம்பொசிநீயென்றனளெனமொழிந்தறைவான்.

தரையினிலெவரும்பரகதிக்குறுமற்சமனிடுநரகத்தினழுந்தப்
பரமபாகவதர்முனியயான்விரதபங்கமாம்பவத்தினிற்படிய
வரிதினத்திவடன்மொழியினாலன்னமருந்திடுமிளிவினுமையா
நரர்பழித்திடவேயசத்தியனாதனன்றெனப்பின்னருநவில்வான். (௧௬௭)

மலரயன்மகளாமிவடனக்குரைத்தவாய்மைசெய்யாச்சடமதனால்
நலமிலாதிகழ்வாமொழிபகர்ந்திடினுநரகத்தினழுந்திடுங்கட்டத்
தலவிடுகிருமிமுதலியல்பிலாதயோனியிற்பிறக்கினுஞ்சிறுவ
விலகியவரியின்றினத்தினோதனத்தையருந்திடேனென்றுபின்னறைவான்.

விடசிகர்த்திடுமோகினியெனையிளிவாய்விளம்பிடவிதியிடுசாப
மடரினுமாலம்பரந்துசூழுறினுமளக்கரின்வடவனல்வரினும்
வடவரைமுடுகியெனதுமேல்விழினுமாதவன்றனக்குறுதினத்தி
னடிசிலைநுகரேனெனவறனறியுமரசர்கோனறைந்தனனம்மா. (௧௬௯)

தந்தையீதுரைப்பநிகரிலாச்சிறுவன்சந்தியாவல்லியையழைத்துக்
கந்தமாமலரோன்குமரியென்னுரையைக்கடக்கலாயென்றுமன்னவனை
மந்தரவரையினியத்திகொள்மொழியின்மாறினத்தனமருந்தெனவே
யெந்தையீதறனன்றெனவொருவிடுவாளிவள்முனிவகற்றுதியென்றான்.

தனையனீ துரைப்பச்சந்தியாவல்லிசதுமுகன்புதல்வியைத்தழுவி
வனிதையர்க்கதிகமாயினைகவினால்வயங்கினையயன்மகளாகும்
புனிதைநீயானாய்வேதசாத்திரநற்புராணத்தின்பொருளினையுணர்ந்தா
யினியவுன்மருணன்றனையிகழ்வாகவெண்ணலையெனத்தனித்துரைப்பாள்.

அறனுறவவனியமர்ந்திடுஞ்சனங்களழிவிலாமுராரிதன்பதத்தி
னிறைவுறுமறலிபதமழிந்திடவேங்கரிலாவரிநினைவிரதங்
குறைவறவுலகமெங்கணுநடத்துங்கொழுநனைக்குருவுமச்சுதனு
மிறைவனுமெனநீகருதிடின்வடமீனெனப்பதிவிரதையாயிருப்பாய். (௨௦௨)

மறனுறுகருமமிழைத்திடுகெனவேமருணனவன்மொழிந்திடினு
மறனிவையெனத்தானவன்சொலைமறுமலியற்றுவாரருந்ததிக்கற்பை
யுறுவனிதையர்கடொழில்கொழுநன்றானுரைத்தசொல்மறுத்தவன்றனக்குக்
குறைவினைமுயலுமடநல்லார்நிரயத்தழுந்துவர்கொடுவினைவினைய. (௨௦௩)

ஆதலிற்பிரமன்குமரியுன்சொலையகற்றிலேனென்றுமந்தரத்தின்
மீதினிராசன்விளம்பினோனெனவேயஃதினைவிபரீதமாகச்
சீதரன்றினத்தினனத்தினையருந்தித்தீயனாநரகினினடையேன்
சேருதினாயாகிலுனக்கடர்பவங்களேறுமெனவின்னமுமுரைப்பாள். (௨௦௪)

என்னுயிர்க்கணவனையமன்னவனையாரொருவிடும்படியிவணீ
மன்னினாயென்றுவயிரமுன்பேரில்வைக்கிலென்சினமுளதாகி
யின்னலைத்தருமிவ்வழியினாற்கொழுநத்துரோகியுமிறைத்துரோகியுமா
யுன்னினும்பயத்தையளித்திடுநிகோதத்துளேயெனவுனதுபாற்கிறேன்.

நீயெனக்கிதமாங்கொழுநனுக்கன்புநிறைத்தவளாமெனுமகிழ்வாற்
றாயநற்றுணைவியெனவுனைப்பிரியஞ்சுரந்திடவமருவனதனால்
நாயகத்துரோகியாகிவெந்நிரயத்தழுந்துவையென்றிவைநவின்றே
னாயவையறிந்துன்கணவனுக்கிடராமொழியகற்றென்றுபின்னறைவாள்.

அளிபொறைகொடைமெய்யறநெறிதிடமால்விரதமீதெல்லவுமுளதா
மொளியுறவுலகாண்டியமொழுதிவையொருதினத்திற்செயித்தெய்தும்
வளர்பிறைசிவனுங்குமரனையுடையமனள்வருந்தாதிந்தத்திச்சொல்
லிளையவளெனினுமிறைஞ்சவன்றவிர்கென்றிருகரம்பிடித்துவேண்டினளால்.

சந்தியாவல்லியினியநன்மொழியாற்றகாதவிச்சொற்றவிர்கெனவா
னிந்துநேர்வதனவயன்மகளவளைநோக்கியீதியம்புவாளுலகெண்
மைந்தனைப்பயந்தாயருந்ததியெனவும்வயங்கியகற்பினையுடையாய்
சுந்தரமிகுத்ததுணைவியுன்சொலைமறுக்கிலேனென்றுபின்சொல்வாள்.

அரிவையுன்மொழியைமறுத்திடாதரசனச்சுதன்றினத்தனமருந்தேன்
றுரைசெயும்வசனமொழிந்தனனினியானேதுவேனதுமிகுகுறார
மெரியிடைவிழவும்விடத்தினைக்கொளவுமினாதிரைக்கடலமிழ்ந்திடவும்
பராமனைவியனாயனையவும்நினையும்பாவியரிலையெனப்பகர்வாள். (௨௦௯)

குயவரிமிருகாபதிமுனின்றிடவுங்கொடியபாம்புடன்மருவிடவுங்
கயவர்களுடன்சூதாடவுமேத்தியர்தனையருந்தவுங்ககனத்
துயருமால்வரையினுச்சியிற்குழவிழவுநெஞ்சுறுபவரில்லை
யயன்விதித்திடலாலவனியினிவையையடைந்துசெய்வார்களுமுளதால்.

ஆதலினிவைசெய்கயவரைப்போலவறனறமனத்திடையினைக்க
வோதுதற்கரியதாமனக்கோட்டமுறைத்திடவுன்னினேனளப்பில்
பாதகிதயையில்குறூரயாபாரிபழுதுறுபவத்தினைமுயலுங்
காதகியெனவேதன்னைநிந்தித்துப்பின்னருங்கழறலுற்றனளால். (உகக)

அரிவையரிடத்திற்கருவினைவிளைக்கும்புருடன்சற்குணத்தினையடைந்தாற்
சரியினன்மகவுபிறந்திடுமிகழ்துர்க்குணத்தினிற்சார்ந்திடினவத்த
மருளுறுமதலைசனித்திடுமதனால்மலரயனுன்கொழுனனுக்குறுத்
தரையினில்விரோதமியற்றெனவளிக்கத்தாமதப்புத்தியாயினனால். (உகஉ)

தாமதப்புத்திமிகுதலாலுனவுஞ்சாற்றவுங்குறூரமாமுனையைப்
பூமகளெனவேயெழில்கொணின்முனரிற்புகலுவேனெனவிவைமொழியக்
காமனைநிகர்க்குஞ்சிறுவனைப்பயந்தகவினுடைச்சந்தியாவல்லி
நாமகள்கொழுனனுதவிடவயங்குநாரியைநோக்கியீதுரைப்பாள். (உக௩)

அரிதினத்தன்னமருந்திடாதரசனறனெறிவழங்கியேவாழ
வரமருளியநீயெனதுயிர்நிகரின்மதலைதன்றுவிவேண்டிடினுந்
தருகுவன்பதிக்கோரிடருறிற்றனமும்பிராணனும்வஞ்சிக்குந்தையல்
கிருமியாய்ச்சனிப்பரதற்கியான்றிடமாய்க்கண்டதுகேளெனப்பகர்வாள்.

சிறியளாகியயான்பிதாவகந்தன்னிற்றிகழ்வொடுதிரிந்திடுநாளின்
நெறியுறவயங்குமெந்தையோமத்தைநிறைத்திடப்போழ்ந்தவிந்தனத்திற்
பிறையவிரொளவோரங்குலிப்பருமம்பெறவொருகிருமிதோன்றிடலும்
பறவையிற்கள்வமலிந்திடுகரடம்பற்றிமூக்கதனிற்கொத்தியதால். (உக௫)

நாசியிற்குத்தியெடுக்குமுன்னோட்டனானதிற்காசமும்விடுப்பக்
காசினியதனின்விரணமெய்யுற்றுக்கலங்கியங்கயர்ந்திடும்புழுவை
நேசமோடதனினுடலினிற்கரத்தால்நீரினைவிடுத்திடத்தெளிந்து
பேசியஞானமுறக்கழிபிறப்பிற்றன்செயும்பெரும்பவமெல்லாம். (உகசு)

தரையினிற்றவழ்மெய்தவளமாங்கிருமிசாற்றும்யான்கழிபிறப்பதனின்
விரையுறுத்தியானம்விளங்கியகவுண்டினியபுரிமேவிடுமறையோன்
பரிவினிற்பயந்தமகளியானெந்தைபழுதறுசாத்திரபுராண
மருமறையனைத்துகவினுறவிளங்குமந்தணன்றனக்கெனையீய்ந்தான். (உகஎ)

மறைநெறிமலியவயங்கிடுமெந்தைமகிழ்விலுலெனக்கெனில்கலன்க
ணிறைவுறவணிந்தென்மகுணனுக்கவிரார்நிகரிலாப்பூடணமுதவிக்
குறைவறவயுதவெறுக்கைநற்கோக்கள்கொடுத்திடக்கணவனுமெய்தி
வறுமையற்றிடநீண்டகலகாதன்னினிருவரும்வாழுநாடன்னில். (உகஅ)

வேறு. மனையிடத்தினென்னுடனேவாழ்மறையோன்மருளழித்துத்தனத்தை வாங்க, வினியசொல்லால்மெய்போலப்பொய்பகருமொருகணிகைதனையிச்சித்துத், தினமுமவடனைப்புணர்ந்துதிகழ்தனங்களாபரணஞ்சேரவீய்ந்து, வினையுறவேவெறுமையனாய்மேவியென்றன்கலன்களையுந்தருதியென்றான்.

பதிகலனைத்தருகெனலுமழியாமலெனைப்பயந்தானமருமூரிற
கதுமெனயானெய்திடலுந்தனந்தேடிக்கணிகையினைப்புணரவேண்டி
யுததியின்மேலோடுமரக்கலமீதினுற்றவன்றானேகலொடும்
விதமுறுமாசுகமறையமேவியவேழாயிரவோசனையவ்வங்கம். (உஉ0)

கவடமரக்கலமீதிற்கயவர்கள்சென்றடர்ந்திடநீர்க்கடலினூடு
முவமையில்வங்கத்தினுறுமவர்களுமவ்வுததியிடையமிழ்ந்திமாளக்
குவிநகிலிற்கணிகையின்மேற்காதலுறுமென்பதியோர்மரத்தைக்கொண்டு
பவனனெழும்விசைபோலப்பரவையினிற்பரம்பதனைச்சேர்ந்தானம்மா.

விதிவலியாலென்கொழுநன்வேலையினைநீந்தியொருவரைமீதேறிச்
சுதைநிகராமிரதமுறுமுந்திரிகைப்பழமருந்தித்தூயதாய
நதிமிகுத்துப்பெருகருவிதாரமிருகரத்தினிடைப்பருகிமேக
பதமுறுமோர்மராமரத்தினிடைத்துயின்றான்பரவுமிருட்கங்குறன்னில்.

தனாயினுயர்வானிரத்தடியினெனைச்சார்கொழுநன்றுயிலும்வேலைத்
திரிபதைசேர்காசிதனிற்சிறந்தமருமரசர்பிரான்பயந்தகன்னி
மருமருவுகுழலியிரத்தினவதிநித்திரையுறலுமவளைவவ்வி
யிரவினிடையொருநிருதனெய்தினனவ்வரைமீதின்விரைவின்மாதோ. (உஉ௩)

வேறு. காசிமனனுதவுமினைக்கரத்தினேந்திக்கனவரையின்சந்தரத்தினிடையினெய்தி, மாசகலுமலரமளியதனிற்றீயோன்மடியின்மிசையவடனைக்கொண்டிருக்கக்கண்டாண், டோசையுறுமுவரியெனவவன்றன்றேவியதிர்த்துரப்பியிவளாரொன்றுரைத்தலோடு, மாசினுறுமரக்கர்பிரானுனக்காகாரமாகவிவடனைக்கொணர்ந்தேனென்றானம்மா. (உஉ௪)

அறனறியுங்காசிமன்னனருளுமிந்தவரிவையைநீயருந்தெனக்காகாரமாகக் குறையறவானுயருமராமரத்தின்கீழார் கோதிலாமறையவனைக்கொடுவாவென்ன, நெறியுறுகன்னிகையவளைநோக்கியுன்னைநீக்கியென்னையணைக்கவேகவடமாகி, யறையுமிவன்மொழிநம்பேலென்றுகூறவரக்கியுமீதாமெனத்தானகன்றுபோனாள். (உஉ௫)

அரசவொண்ணுங்காசிமன்னனருளுமின்னையணைத்திடுவாமெனைவதைப்பானதற்குமுன்னஞ், சரியிலுயர்மறையோனுமிவனைக்கொன்றென்சலமுடிப்பனெனவரம்பையுருவதாகி, யிருநயனமுகிழ்த்துறங்கென்பதியைநோக்கியிருகரத்தாலெடுத்தணைத்தாண்டெழுப்பலோடும், வெருவியெழுபவன்றனைத்தானஞ்சலென்றுவிளம்பியுயர்நிருதியினர்மொழிவாள்மன்னே. (உஉ௬)

இந்தவரைக்கந்தரத்தினமரும்வெய்யவிராக்கதன்றனில்லவணுளவனென்பேரிற், சிந்தையறக்காசிமன்னனருளுமின்னைச்சேர்ந்தனைந்திண்டெனைவதைத்தபினரிற்றாய, வந்தணவுன்றனையடுவனதற்குமுன்னமவன்றனையான்சொலும்வகையினீதான்கொன்று, கந்தனிகர்மறையவவுன்னுரத்தினென்னைக்கலந்தணைத்துக்காதலியாய்க்கோடியென்றாள். (உஉஎ)

சரியிலுருத்தரித்துநின்றவரக்கிகூறச்சதுமறையையுணர்பவன்றானவனைநோக்கி, நரர்தமக்குமரக்கியர்க்கும்புணர்ச்சியில்லைநலனிலாவெனையருந்தவந்தாயென்னத், திருவுருவாய்வயங்கிநிற்கும்நிருதியுன்னைச்செற்றிடயான்சிந்தையிலும்நினைந்தேனுகிற, குருவினொடுகோமறையோர்தமையட்டார்வீழ்நிரயத்தினமர்வனெனக்கூறலுற்றாள். (உஉஅ)

தரையின்வருகாலமதிற்பாண்டுமன்னன்றனையனெனும்வீமனுக்காண்டிடும்பனாய, நிருதர்பிரான்சகோதரியாங்கமலவல்லிநிகரில்லாமனைவியுமாயவனைச்சேர்ந்து, விருதனெனுங்கடோர்க்கசனைப்பயப்பாளென்றுவியாசனருள்புராணமுளவாதலாலே, நரர்களுக்குநிருதியர்க்குங்கலவியுண்டுநான்மாயோயெனவவனும்நவிலலுற்றான். (உ

(உசகூ)

நிருதியுன்றன்கொழுனனுயர்பிறங்கலொப்பானெறியிலாதவ
றியேதென்ன, வரியமரார்க்கமிர்தளிப்பப்பொருமையாலாண்டாரனை
ந்திடுமாவலிதன்மீதிற், சுரர்கள்பதியெழுந்திடும்போதவன்றன்
மையிலாவிவ்வரககன்களவிற்கொண்டு, தரையினுயர்மராமரத் ந்சுமந்து ற்றனளால்.
னென்றுதடக்கையினாலெடுத்தவன்கைக்கொடுத்தாளன்றே.

நிருதியென்றன்பதியினுக்கிண்டினியசொல்லைநிகழ்த்தியிடுவேகாசிராசன், றருபுதல்விநிசாசரனைவெருவிநோக்கிச்சாற்றுவாளெனைவதுசெய்யநீதான், விரைவினுயர்மராமரத்தின்கீழில்வைகும்வேதியனைக்கொலந்தவனாலோமஞ்செய்வித், தருளில்நீயவன்றனைப்பின்வதையென்றேதவறனிலானம்மரத்தையணுகினானால். (உஙக)

வரையெனவேவருபவனைநோக்கித்தூயமறையவனீகடிதவனைவதைத்தியென்று, நிருதிமொழிந்திடவனுமுரத்தினேவுங்கரில்வேலிரவியெனவேகித்திக்கி, னிருளகலவெரிபரந்தவ்வரக்கன்மார்பைநெரித்துயிர்கொண்டிந்திரன்றனிடையினேகப், பரிவினொடுமவளென்றன்பதியைவிம்முபயோதரத்தினணைத்தின்பக்கலவிசெய்தாள். (உஙஉ)

சிந்தையினிற்களித்துயபொன்பதியைச்சேர்ந்துசிறந்தநிசாசரியவன்றனொடுமேகிக், கந்தரத்தினிலங்குகின்றகாசிராசன்கன்னிகையைக்கலங்கலெனவறைந்தேயுன்றன், றந்தையுறுபதியிலுனைவிடுவனென்றுசாற்றிமடிந்திடுமரக்கன்றனங்கடியே, நந்துமிழுநித்திலங்கள்கலன்களெல்லாம்நலனுறுமென்கொழுனனுக்குநல்கினாளால். (உஙங)

வேறு. நேசம்விஞ்சிடவெதிர்ந்ததிருதிபெண்ணுணையாகி
மாசறுசுவலின்மாழையமர்ந்திடமறையோனோடு
மேசகன்றிலங்குகின்றவிரத்தினவதியுமேறக்
காசியிற்கடுகிச்சென்றுள்கன்னலேழையின்மாதோ. (௨௩௪)

சுரர்நதிபரவியோடத்துலங்கியகாசிதன்னைக்
கரியுருவாகியூருங்காரிகைமறையோனுக்குப்
பரிவினிற்காட்டியிந்தப்பதியரிதலமாலிய
வரனுறையிடமாய்த்தென்னவந்தணன்பகரலுற்றான். (௨௩௫)

அரிதலமாயகாசியரனுறைவிடமாந்தன்மை
யுரையெனக்கரியாயூர்வாளுணர்த்துவாளெண்கணோன்றன்
சிரசினைப்பரசுபாணிகொயவவன்செங்கைதன்னை
விரைசெறிகமலன்சென்னிக்கபாலம்விட்டிலதாலம்மா. (௨௩௬)

முண்டகன்சிரசைக்கிள்ளுமுயலகன்வெரினினின்றான்
விழுண்டலைநிறையவெங்குமிரந்திடின்வீழுமென்றே
சுதைசைவிசும்பினெங்கும்பலியெனவிரப்பதாகி
நதிமிகுதுக்கனுதனிலங்குபாற்புணரிசேர்ந்தான். (௨௩௭)
பதமுறுமே
யாலமேந்துமரன்பயோததியைநண்ணி
தனாயினுயர்ல்வயங்குமாலைவழுத்தியேபலியென்றோதச்
திரிபதைசேகுலியினூரிற்குலிசநீர்தெறித்தலோடும்
மருமருவுாலம்விண்டுபடியினிற்றுகளாய்வீழ்ந்த. (௨௩௮)
யிரவினிருணைநீரைத்தெறித்திடக்கபாலங்கீண்டு
வேறு லவனிதன்னின்மறிந்திடப்பிரமகத்தி
னெ னவிடாமற்பின்னரிடபவாகனனோர்நாளிற் .
சிமாதவனைச்சேரவப்பவங்கழியமீண்டான். (௨௩௯)

வேறு. திரிபதைபெருகச்சிறந்தகாசியினிற்றிகழுமாதவனிடந்தன்னிற்
பரிவுடனமரக்கழிந்திடும்பிரமகத்திபஞ்சக்குரோசத்தை
யரனகன்றிடலும்பிடித்திடலோக்கிஅதிசெயமிருந்தவாவென்று
விரைவினிற்றிரும்பியரிமுனரெய்தியுமாபதியிவைவிளம்பினனால். (௨௪0)

மலர்மகள்மருணநின்னிடத்தினில்யான்வருதலுமகல்பிரமத்தி
நிலமிசைப்பஞ்சக்குரோசமாமதனைநீங்கிடப்பற்றியவதனால்
நலவருளுறும்நீயமருமித்தலத்தைநல்கிடினென்பவமொருவ
விலகுவனெனமாதவனரற்கருளியெழிலுறுபிராகையினமர்ந்தான். (௨௪௧)

மாதவனருளவிலங்கியகாசிதனிற்கரமானுறுமீசன்
நீதறவிவணின்மரித்தவர்செவியிற்சிறந்ததாரகப்பிரமத்தை
யோதியாண்டவர்கள்கதிபெறவருளியொளியுறவமர்ந்தனனதனால்
மாதவம்விளையுந்தலமிதுவெனவேமறுவில்வேதியன்றனக்குரைத்தாள்.

அரனெழிலிலகத்தாரகப்பிரமமரித்தவர்க்களியுடனருளச்
சுரர்நதிவயங்கப்பலமெலாமரித்துத்துலங்கியபதியிதுவென்று
நிருதியோதிடலுமறையவனுடனேநிகரிலாக்கன்னியுமகிழக்
கரியுருத்தவிர்ந்தவ்வரக்கியும்வனிதையாகிநற்காசியிற்சேர்ந்தாள். (உசங)

புகரிபவுருவைத்தவிர்ந்தவளரசன்புதல்வியூசுரனிவர்வரலும்
நகரிகாவலர்கண்டியாவரீதெனுஞ்சொல்நவின்றிடவிரத்தினவதிதான்
புகலுவாள்சானிப்புரிமனன்புதல்வியிவணின்வைகினளெனப்பொறையார்
நிகரிலென்றந்தைக்குரையுநீரெனவேங்கர்த்துடச்சுவாகுசென்றனனால்.

கங்குலிற்றுயிலுமரிவையைக்காணார்கலங்கியந்தப்புரத்துறையு, மங்கையரா
ற்றுமொலியினைக்கேட்டுத்திகைத்திடுமன்னன்முன்னெய்திச், செங்கையைக்
குவித்துச்சுவாகுவென்போனின்றிருமகளெய்தினளெனலும், பொங்கியவுவ
கையொடும்புரவலன்றான்பொருக்கெனப்புதல்விபாலடைந்தான். (உசரு)

வந்ததந்தையினைத்தழுவியாண்டரற்றியிரத்தினவதிமன்னனைநோக்கி
யிந்தவெவ்விரவிலிராக்கதனொருவனெனையெடுத்திமைப்பிடையேகிச்
சிந்துவெண்டிரைசூழ்சிலையினிற்சேரவவன்மனையாளிவள்செயலா
லந்தணன்கரத்தாலவன்மடிந்திடலுமருவினையற்றதென்றறைவாள். (உசசு)

எனைமணந்திடத்தன்மனைவியாமிவளைவதைக்கவெண்ணியநிசாசரனை
வினையகலமராபதியமர்வலாரிவேலினையிவள்கொடுத்திடவே
துனியகன்மறையோன்றுணித்திடத்தோலாயவளையுமென்னையுஞ்சுமந்து
நினைவதன்முனரினிவணடைந்தனனொன்றறைந்திவைநிகழ்த்தலுற்றனளால்.

காடமுட்டிடாதகவ்வுநாய்கெழுமாக்கலனுறுபஞ்சகௌவியந்தி
மூடுறுபிணம்வேமிடத்தினிற்படியாமுருகவிழலங்கலீதெனநற்
சேடனும்வெருவுநிசாசரன்கரத்திற்சேர்ந்ததும்பகிரதிபோல
வேடவிழ்தொடையாரரசயான்சுசியாயிவணடைந்தனனெனப்பகர்வாள்.

சுசியுறுமறையோனுடனெனைக்காத்துத்துணிசெயுநிருதனைச்சுருதி
யிசைவலவன்றான்வதைத்திடவியற்றியிவன்றனைக்கொண்கனுக்கொள்ளும்
நிசிசரியிதமாய்மகிழ்ந்திடவென்னைநிகரிலாவேதியன்றனக்குத்
திசையினைச்செகுத்துச்சிறந்திடுமெந்தாய்கேளெனச்செப்பினளம்மா (உசகூ)

கவினுறுகுமரியிவைகழறிடநற்காசிமன்னிருதியையிறைஞ்சி
யுவமையில்மறையோனுடனுமென்மகளைக்காத்திவணுதவிசெய்மடந்தாய்
நவையகன்றிடுமுன்றாயகன்றனக்கென்குமரியைநல்குவனிதா
னிவரிருவரையுமளியுடன்காவென்றியம்பிடவவளிவைமொழிவாள். (உருo)

எனையுடைக்கொழுனன்றனக்குமன்னவவுன்குமரியையீந்திடினிவளை
யினிமைசேர்துணைவியெனக்கருதுவன்யானெனச்சுசியட்டமிமுதலாய்த்
துனியகன்றிடுநற்சதுர்த்தசியளவுந்துலங்கியபூசைசெய்குதியென்
றனநடையுருவாமரக்கியீதுரைப்பவரசர்கோனிவையறைந்தனனால். (உருக)

புவியினிலங்கவுனதுசொற்படியின்பூசனைவருடங்கடோறும்
நவையகன்றிடநானடத்துவனெனவேநவின்றுதன்குமரியையனலிற்
றவர்மகிழ்ந்திடவாரணச்சொலினெறியாற்சரியிலந்தணன்றனக்களித்தே
யுவமையில்கலன்கள்சிலதியர்தனங்களுதவின்காசிமன்னவனே. (உருஉ)

காசிமன்னருளுங்குமரியுஞ்சிலதிதிரள்களுங்கணக்கிலாத்தனமு
மாசகன்மறையையறையுமென்பதியுமமர்ந்திடவரக்கியோர்கரியாய்
வீசும்வாலிலங்கவெரினின்மேற்சுமந்தவேதியன்சூழவிற்புகுத
வாசவனெனவுமளகைமன்னெனவுமற்றவன்றமரொடும்வளர்ந்தான். (உருந)

உததியின்வங்கமுடைந்திடவுயர்ந்துமுயர்வரையேறியுமதன்மே
லதன்மமாரரக்கன்றனைவதைத்திடுமுன்னவன்றனைச்செற்றுயர்காசிப்
பதிமனன்மகளும்நிருதியுமுறவேபழிப்பிலாவளகைமன்போல
விதிவழிச்செயலால்வினையவென்கொழுனன்விளங்கினன்விபவங்களுறவே.

வறுமையாற்கொழுனன்கலன்றனம்வேண்டமறுத்துநானென்றுமீயாமல்
நெறிதிறம்பிடவேபிறந்தகத்தையும்நிகரினின்மூடியாமென்னைக்
குறைவறுகணவன்சிலதியர்தமையுங்கோதில்பொற்சிவிகையும்வரவிட்
டுறனுறவழைப்பவவருடன்மானமற்றவணடைந்தனனம்மா. (உருரு)

ஈனமுன்மலியுங்குணத்தியாயினயானெய்தியென்கொழுனனையிறைஞ்சி
மானமுற்றிடவென்சிரசினைவளைத்துவசுந்தராதன்னைநோக்கிடநற்
றூனசீலனுமாய்த்தயையுடைக்கணவன்சலமிலாதெனையுறத்தழுவ
மானினமருளும்விலோசனஞ்சிறந்தமங்கையரிருவரும்பணிந்தார். (உருசா)

தேவியரிறைஞ்சியெனதுகால்வருடத்திகழ்ந்திடுகலனெலாமருளிப்
பாவமுற்றிடவாண்டிழலுமென்மீதிற்பரிவுடன்கணவன்வாழ்நாளி
னூவியாக்கையினையகன்றிடமடிந்தந்தகன்முனரெய்திடவவன்றான்
றீவிழியடையமுனிந்தெனைக்கொழுனன்வஞ்சகியென்றுசெப்பினனால்.

பதியழைத்திடவும்பிறந்தகத்தமரும்பாவையர்பதினைந்துசென்ம
மதன்மமார்காகமெனச்சனித்திடுவராதலினீகலனன்பா
லுதவுதியெனலுங்கொடாதபாதகத்தாலுலப்பிலாவருடமூவேழா
யதமுறுநிரயத்தழுந்தியெண்ணில்லாவிளிபிறப்பாகெனவிதித்தான். (உருஅ)

அந்தகன்கதமோடறைந்திடுமொழியாலளப்பிலாவருடமூவேழாய்ச்
சிந்தையினுணவும்வெருவுறநிரோதத்தழுந்தியிக்கிருமியாய்ச்செனித்தே
னிந்துவினுதலியிதுவலாதெண்ணிலிழிபிறப்பெனக்குறுமென்று
நொந்திடவிவைதானெவையினைகலும்நொடிகுதியெனவதுமொழியும்.

பூசமுற்றிடுநாள்வளர்பிறையதனிற்பொருந்துமேகாதசியமரு
மாசகன்றிடநீராடிநற்கதிசேர்மாகமாததிடைவரும்போ
தாசினையகற்றும்வராகமூர்த்தியினையன்பொடாராதனைசெய்து
பூசுரருடன்சாகரமிருந்தன்னமறுதினம்பொசிக்கிலிவ்வினைபோம். (உசா0)

சுரர்நதியதனிற்றோய்ந்திடவொருவாப்பாவமித்தவாதேசிதன்னி
லரியெனும்வராகமூர்த்தியைத்திருவாராதனமடைவுடனியற்றி
மருளறுமறையோர்க்குயருமாதானம்வழங்கிநற்பாரணையருந்தி
லெரியுறுதிரணமெனக்கழிந்திடுமாலென்றதுபின்னரும்பகரும். (உ௬௧)

ஆடகம்புவியினடியிடுந்தோறுமடைந்திடுஞ்சந்தியாவல்லி
கோடிடைக்கிரியாமுராரியைப்பூசித்திடிற்கதிகொடுக்குமிவ்விரதம்
பாடகமிலங்கும்பதத்தினாய்சனனந்தோறுநீபண்ணினையஃதிற்
சோடசத்தொன்றின்பலத்தினையருளிற்சூழ்வினையொருவுமென்றுரைக்கும்.

சாகரமெனவும்வளர்ந்திடும்பவங்கள்சருகெனவெரிந்திடவுயரு
மாகமாதத்திலரிதினப்பலத்தைவழங்கிடிற்கதிவருமெனயா
னீகுதனலனென்றளித்திடப்புழுவாமுருவினையொருவியாண்டிலங்கிக்
காகமோர்பயனமறத்திரணத்தைக்கடவுமால்பதத்தினிற்கலந்தாள். (உ௬௩)

ஆதலிற்கொழுநனிடரினையொருவியாவியோடும்பொருளனைத்து
மீதலேநலனுமலரயன்மகணீயேதுவேண்டிடினும்யானிசைவன்
ஓதுதியெனவுன்னிகரிலாச்சுதனையுருக்குமாங்கதன்மகிழ்வுடனே
யாதவனவிர்போலிலங்குவாளதனாற்றுணித்திடவறைகுதியென்றாள். (உ௬௪)

தூயமாமலரோன்மகளிவைமொழியத்துலங்கியசந்தியாவல்லி
காயுநாராசஞ்செவிமடுத்தெனவுங்கலங்கியேவிசையுடனறையும்
வாயுவின்செயலால்நிலத்தின்வேர்பறியவலைந்திடும்வாழையைப்போல
வேயும்நெஞ்சினளாயதனையுள்ளடக்கிநகையுடனிவையுரைத்தனளால்.

உத்தமமிகுதன்மாங்கதன்செங்கோலோச்சியீண்டேழுதீவினையுஞ்
சித்தசனெனவாண்டிடுநலக்குமரன்றிசைமுகன்புதல்வியேயுனக்குப்
புத்திரனலவோவுனக்கிலாத்துயரமெனக்கிவன்போந்திடாதென்று
சத்தியமுறவுன்கொழுநனுன்மகனைத்தடிந்திடவுரைப்பனென்றகன்றாள்.

அருளறமொழியுமலரயன்மகளையகன்றுயர்சந்தியாவல்லி
விரைவினிற்கொழுநனடியினையிறைஞ்சிவித்தருமோகினியன்னை
அரிதினத்தன்னமருந்திடாதொழியினரசநின்புதல்வனைநீயே
பரிவினைத்தவிர்ந்துவதைத்தியென்றுரைத்தாளென்றிவைபகரலுற்றனளால்.

அவனியிற்செனித்தநரர்கடம்மாக்கையனித்தியமாதலினலெண்
டவர்மகிழ்ந்திடநற்சிபிபுறவுய்யத்தசையினைப்பருந்தினுக்களித்தா
னுவமையிறதீசியமரர்கட்கத்தியுதவினனரவினைக்காத்துப்
பவமில்சீமூதவாகனன்கலுழற்குடலினையளித்தனன்பரிவால். (உ௬௮)

ஆதலாலரசவரிதினத்தன்னமருந்திடாதசத்தியனென்றே
யோதிடும்வசைச்சொல்லொழித்துநீபரியினுயர்பதத்திலங்கிடவேண்டிற்
றீதறுமகன்மேற்பரிவினையொருவித்திகழ்ந்திடும்வாள்கரத்தெடுத்துப் [ன்.
போதயன்மகள்முன்மகன்சிரந்துணித்தியெனவவன்செவிபுதைத்துரைப்பா

மறுவறமறையையறையும்வேதியனாவதைத்திடும்பவத்தினுமதிகஞ்
சிறுவனாக்கரத்தாற்றுணித்திடும்வினையென்றுரைத்துயர்திசைமுகன்மகளுக்
கறனல்லிவையென்றறைவனென்றரசனவள்வயினடைந்துதானினது
நெறியுறவுலகம்நடுங்கிடுமொழியைநிகழ்த்துவையோவெனப்பகர்வான்.

நீயயன்குமரிபிறர்களுக்கறனைநிகழ்த்துமெய்ஞ்ஞானத்தையுடையாய்
தூயையென்றனைச்சீருயருமாதவர்கடுதித்திடும்பெருமையையடைந்தாய்
மாயவன்றினத்தினனமருந்தென்றுமகன்றனைவதைத்திடுகென்றுந்
தீயவிம்மொழியினுறுவனாகருந்தீரொணுப்பழியுமென்றறைவான். (உஎக)

இந்நிலத்திலங்குமனைவியர்தமையுமொருவ்யென்பிராணநாயகியென்
றுன்னைநான்விரும்பியமர்வதுமுணர்தியுத்தமவரிதினந்தன்னி
லன்னநீயருந்தென்றுரைப்பதுஞ்சுதனையடுதியென்றறைவதுந்தவிர்த்தீண்
டென்னுயிருடனீயேதுவேண்டிடினுமீகுவனென்றிவைபகர்வான். (உஎஉ)

என்னலச்சுதன்மாய்ந்திடினியானிறப்பனீதுனக்கெய்துவபழியும்
வெந்நிரயமுமீதகற்றுதியென்றன்னுயிர்க்குயிரானமெல்லியலே
யன்னமேயுன்னைச்சரணமென்றடைந்தேனகத்தடியானுனக்கதனுல
மின்னிடையணங்கேயருள்மகப்பலியையெனவுரைத்தவளடிவீழ்ந்தான்.

துய்யவனுகியுலகெலாம்புரந்தசுதன்றனைப்பயந்திடுமரசன்
மெய்யெலாநடுங்கத்துயினியச்சொல்லைமொழிந்தவளடியினில்வீழ
மையுலாநயனிதயைதினையளவுமிலாதுமறறவன்றனையழைத்து
மெய்யனீயெனக்கன்றுரைத்திடும்வசனமறுத்தியோவென்றிவைவிளம்பும்.

புவியினிலகுமரசனீபயந்தபுதல்வனின்னலச்சுதனன்றே
விவனையான்வதையென்றியம்பலன்விருத்தனுணவுன்மெய்யினைத்திடாம
லுவமையிலரிதன்றினத்திடுேதனத்தைநுகர்கிலேனென்றிடாதருந்திக்
கவுதமமுனிவனுனாகடவாமற்கவினுறவாழுதியென்றாள். (உஎரு)

இனியசொற்பகருநலனுளார்போலவிருடிகேசன்றினந்தன்னி
னனமருந்தெனுஞ்சொல்லுனாக்குமோகினியையழலெழநோக்கிமன்றிகைப்ப
துனியகறருமாங்கதனுயர்பிதாவைத்தொழுதுநீயளப்பிலாப்பாவ [த்
வினையம்வந்தடாவசத்தியனுகாதேனைவதையென்றிவைவிளம்பும். (உஎசு)

அமிர்தத்தையமரர்க்களித்தமால்விரதமழிந்திடாதசத்தியனுகாச்
சமன்முனர்நீயாளுலகினிற்செனங்கள்சார்ந்துவெந்நிரயத்தின்வீழா
விமையவர்கழாவறனுறவதன்மமெரிந்திடவெனதிடத்தன்பு
நிமிடமாத்திரையுநிறைந்திடாதெனைக்கொன்றுயர்பதத்தேகெனநிகழ்த்தும்

வினைகளைந்துயருமுராரிமாறினத்துவிரதபங்கமுமுருவண்ண
மனைகளிப்புறவென்பிதாவெனும்நீயுன்னங்கையின்வாளினுலென்னை
முனிவர்கள்மகிழத்துணித்தியேவிலங்குமுகுந்தலோகமுமெனதாகு
மனைவிபுத்திரனொன்றெணியளியுறார்கள்மறுவில்மெய்நிறுத்துவாரொன்றுன்.

அரனிடர்களைந்தபரன்றனவிரதமழிந்திடாதெனதுசிற்றவ்வை
யுரைமருதுயர்சத்தியமுறவென்றன்சிரத்தினையொல்லையிற்றுணித்துத்
தரையினிற்றசைதோல்கறையுறுங்குரம்பைசாய்ந்திடிற்றிவ்வியசரீரம்
வரவரிபதத்தினிலங்குவனெனலுமன்னவன்றெளிந்துவாளெடுத்தான்.

அரிதினவிரதபங்கம்வந்துறுமலரசன்றன்சுதன்சிரங்களைய
விரவியினவிர்போலிலங்கியசுடர்வாளெடுத்துத்தன்கரத்திலுற்சுழற்ற
விரைசெறிகமலத்தயன்மகளவனைவிலக்கிநீசிறுவனைவதைத்து
நரகிடையுறுமல்முராரிநற்றிதியினனமருந்துதியெனநவின்றாள். (௨௮௦)

சிறுவனைவதைத்தறருமமன்றுயர்மாறினத்தனமருந்தெனச்சினேக
முறுமவரெனவேயயன்மகளுரைப்பவுவமையில்சந்தியாவல்லி
யறனுறுமரசமறலிதன்மொழியாலயன்பரன்விரதத்தையழிக்க
நெறியறவிடுப்பவருமிவளாவச்சொல்நீதியன்றென்றிவையறைவாள். (௨௮௧)

அரிதினவிரதமழிந்தகலவனியமருவோர்சமன்முனரடைந்து
நரகின்வீழ்வகைநான்முகன்வகுத்திடவேநண்ணியமோகினியுரைக்கும்
விரகினையிகழ்ந்துன்சிறுவனைவதைத்துவிளித்திடுமறலிதன்சிரசிற்
சரியிலுன்னடிவைத்துயர்பரன்பதத்திற்சாருதியென்றிடும்வேலை. (௨௮௨)

இருகரமிசைவச்சிரமணிக்கடையமிலங்கிடநித்திலவடங்க
ளுரனுறக்கலன்கள்வயங்கிடக்குழையிலொளிகொழுங்குண்டலந்திகழ
விரைசெறியலங்கலலைந்திடவதனம்விளங்கிடநகையுறக்கிரீடச்
சிரசினையுருக்குமாங்கதன்முனரிற்றெறுவெனநீட்டினனவன்சேய். (௨௮௩)

தரைநடுங்கிடநீள்சாகரங்கலங்கத்தமனியப்பொருப்புநின்றசைய
விரவியுஞ்சுழலவுருக்குமாங்கதன்கையிலங்கியவாளினைவிதிர்த்து
விரைவினிற்றருமாங்கதனெழிற்கழுத்தின்வீசியோச்சிடவுயர்நேமிக்
கரமதாற்றடுத்துக்கருடவாகனனுய்க்கருமுகில்போலமாலடைந்தான்.

திருவுரத்திலங்கத்திருக்கரமதனிற்றிகிரிசங்கிலங்கிடச்சிரசிற்
கருவரைமிசையிற்கதிரெனமவுலிகவினுறக்கலனெலாம்வயங்கச்
சுரர்மழைபொழியச்சதுமுகன்பணியத்துந்துமியுவரிபோன்முழங்க
விரைவினிற்றருமாங்கதன்கழுத்துறும்வாள்விலக்கியேதோன்றினன்விமலன்.

திருக்கிளர்ந்திடநற்கவுத்துவமணிவில்லிடத்திகழ்மாயவன்றோன்ற
உருக்குமாங்கதமன்னுவமையிறருமாங்கதனுயர்சந்தியாவல்லி
பொருக்கெனவயங்குங்கருணையங்கடலைநயனநீர்பொழிந்திடநோக்கி
யிருக்கெசுச்சாமவதர்வணவேதத்திசையுறப்போற்றியாடினரால். (௨௮௬)

நயனநீர்பொழியத்துதித்துநின்றிடுநலனுறுமுருக்குமாங்கதனைத்
தயையுடன்முராரியெழிலுறநோக்கிச்சதுமுகன்வரவிடுந்தையல்
மயல்விளைத்தனைகவ்விபரிதஞ்செயவுமகன்றனைவாளினாற்றுணித்தே
யியல்புறமனவென்றினைநலவிரதமிருத்தினையுனக்கெதிரிலையால். (௨௮௭)

செகமெலாமுயவேசிறந்திடுமரசதிடவிரதத்தினைச்செயுமிப்
புகழயனழியுந்தினத்தினும்பொன்றுதெனவிவைபுகன்றிடுந்திருமால்
நிகரில்மன்னனையுமவன்சுதன்றனையுமணைத்திடநெறியுறுபொறிமான்
மகிழ்வுடனிணையில்சந்தியாவலியையமார்புறத்தழுவினள்மாதோ. (உஅஅ)

அரியுறத்தழுவவுருக்குமாங்கதனுமவனருளுத்தமமனனுங்
கரமிருநாலும்வயங்கிடத்திகிரிவலம்புரிகனுறவேந்திப்
பரனுருவெனவங்கிலங்கினின்றேத்தப்பழிப்பிலாச்சந்தியாவல்லி
திருமகடழுவவவளுருத்தரித்துச்சிறந்துதாள்போற்றினள்மாதோ. (உஅகூ)

விந்தியலேகைமுதலரிவையர்கள்விதியினையுந்தியுனுதவு
மத்தனைத்துதிசெய்தாடியேமகிழவவரொடுமுருக்குமாங்கதனை
யுத்தமமனத்துச்சந்தியாவல்லியுயர்தருமாங்கதனுடனும்
வித்தகக்கருடன்மிசையினின்முராரிவிளங்கியபதத்தினிற்சேர்த்தான். (உகூ0)

தாரணிமிசையிலரிதினவிரதநிறுவுமன்சார்நெறியெல்லாம்
தோரணநிறையமலர்மழைமலியத்துந்துமிகாகளஞ்சின்னம்
வாரணமுழங்கத்திபதூபங்கள்மடந்தையரேந்திடநிகரி
லாரணங்கிளரயாழொலிமிகுப்பவச்சுதன்பதத்தினிலடைந்தான். (உகூக)

வரைமரமுருகவீணைவாசித்துமதனசாத்திரத்தினுலுருக்கி
விரகமுற்றிடநற்கலவியைவிளைத்தும்விபரிதமுறுத்தவுமிதனைத்
திரணமாய்நினைந்துசுதன்றனைத்துணித்துச்சீதரன்பதியிடைச்சேரு [மா.
மரசர்கோன்செயலினிடங்கொண்மோகினிமின்னயர்ந்தனள்புவியிடையம்

அரிவரவுருக்குமாங்கதனுயர்ந்தகெதியிடையடையமோகினிமின்
றரையினினிடரினயர்ந்திடவிதனைச்சமன்மொழிந்திடவயனெய்தி
நிருபனுன்மாயைக்ககப்படாதழிவில்கதியினிற்புகுந்தனனீதான்
விரைவினின்வரம்வேண்டளிப்பம்யாமெனநற்சுரரொடும்விளம்பிடும்வேலை.

புகழுறுமுருக்குமாங்கதன்பரிவாம்புரோகிதன்றிரிபதைதன்னி
னகமருடணநீர்படிந்தரிசெபத்தைமுடித்தபின்னவனியினெய்தி
நிகரில்மோகினியால்நிருபர்கோன்சுதனைத்துணித்துயர்நேமியோன்பதத்தி
னிகழ்வில்சேயுடனுமனைவியருடனுமெய்தியசெயலினைக்கேட்டான். (உகூச)

பதியினுக்கிடர்செய்யயனருள்குமரிபாதகியாமெனமனத்திற்
கதமுறவவளுக்குறும்வரமளிக்கக்கருதிநற்சுரரொடுமெய்துஞ்
சதுமுகன்முனரினடைந்திவண்மகுணத்துரோகிசக்கரவரித்துரோகி
யிதுவறிந்திருந்தும்வரங்கொடுத்திடவேயிசைந்ததேனென்றவன்முனிந்தான்.

புகழுடைப்பதியின்றுரோகியுமாகிப்புயல்வணன்றுரோகியுமாகி
யிகழ்வுறுமிவடன்னுடலெரிந்திடவாண்டிருளுறுபவமடர்சிவன்
சகலலோகத்துமிருப்பிடமிலாமற்றிரிகெனச்சபித்தபின்னிவளை
யகல்கில்லார்வரங்களருளுவாரொவருமடைகவிச்சாயமென்றறைவான். (உகூரு)

அரிதினவிரதஞ்செயுமவர்தம்மையிதுதவிர்த்திடுமெனவுறையுந்
தரையினுற்றவருமிவடனைப்போலவிடருறுவாரெனச்சபிக்க
விருளகனெறியினுறும்புரோகிதன்றானியம்பவக்கணத்துடலெரிந்து
வெருவிமோகினிதன்சீவனேகிடலுமயன்சுரர்மெலிந்துபோயினரால். (௨௯௭)

தரையினிற்குரம்பையெரியமோகினிமின்றயங்கியசுவர்க்கத்தினெய்த
யரிதினத்துரோகிமருணனுக்கிடர்செய்யவத்தியென்றடித்தவர்துரத்த
விருபதோடொன்றாநிரையமுற்றிடலுமிவள்கொடும்பாவியென்றதனின்
மருவுவோரரற்றநரகுகாவலர்கள்மறித்தடித்தோட்டினர்மாதோ. (௨௯௮)

உவமையில்சுவர்க்கநிரையமுற்றவர்களுறுகலையென்றடித்தோட்டப்
புவியினிற்றானேழுலகினின்விளைவிற்புகுதலுமதினுழுமாக்க
ளவுணர்களியக்கரரக்கர்கணடுங்கியரிதினத்துரோகியாயளப்பில்
பவமுறுபதகியகல்கெனக்கதையாற்றகர்த்திடப்பாறினளன்றே. (௨௯௯)

தரையினிற்கீழேழுலகினுள்ளவர்கடியினால்மோதியேதுரப்ப
வரைகடல்வடவையடவிகாசினியினுறைவவண்ணைகுபூதங்கள்
விரைவினிற்றுரத்தவரற்றியேதிரிந்துமீளவும்பவங்கொள்மோகினிதான்
சுரரொடுபிரமன்றனையடைந்திருக்குமிடமிலையென்றிவைசொல்வாள். (௩௦௦)

நரகுவான்சுவர்க்கஞ்சகலலோகத்துநண்ணிடுமெனையரித்துரோகி
வருகலையெனவேவைதுகல்லுலக்கைமரங்கதைசுளகினுமடிக்க
வெருவிநானரற்றியோரிடந்தனினுமேவிடமிலாமையால்மெலிந்தே
னருளுநீரிருக்குமிடமெனவவளையிறைஞ்சியின்னமுமிவையறைவாள். (௩௦௧)

உருமினாலரவாலுரனுறுந்துட்டவிலங்கினானீசராலுயிர்போய்த்
தரையினின்மடிவார்தமக்குமாறினத்தினமருந்தியதயையிலர்க்கும்
நிரையமேயலாதுநிவர்கதியென்றுமுறுதிதுநிச்சயமிந்த
விரதவிக்கினியாமெனக்குயும்வகையைவிளம்புவீரெனவவரறைவார். (௩௦௨)

திருமகள்கொழுனன்றினவிரதத்துக்கதன்மம்நீசெய்கையாலுனக்கு
வரமருளமையுஞ்சபித்திடுமறுவில்புரோகிதன்முனிவினைமாற்றி
யிருவினைக்கடலுளமிழ்ந்திடுநீதானமரிடமீய்குவமென்று
சுரரோடுபிரமனுருக்குமாங்கதன்றன்பதியிடைத்துலங்கியேகினரால். (௩௦௩)

விறலுடையுருக்குமாங்கதற்கிதமாம்வேதியன்றன்முனரடைந்து
மறலிதன்னுலகுஞ்சுவர்க்கமும்பாழாயுறும்படிமாதவன்றிதியி
னெறியுறவிரதஞ்சகலரும்நடத்திநிகரிலாக்கதியமர்ந்திடலா
லிறைவகுத்திடுமிவ்வுலகம்நில்லாதென்றெண்ணினேனென்றுபின்னறைவார்.

தரையினிற்சனங்கள்சனித்திறந்திடவுந்தயங்கியசுவர்க்கமேறிடவும்
நிரையமுற்றிடவும்பரன்றினவிரதம்நீக்கமோகினிதனைவிடுத்தோம்
அருளறனறியும்புரோகிதவதனாலிவடன்மேல்முனிவகற்றுதியென்
றுரைசெயவவனுங்கதமொழித்தெவருமுருவிடங்கொடுமிவட்கென்றான்.

சரியிலாதுயரும்புரோகிதன்முனிவையொழித்திவைசாற்றுதலோடுஞ்
சுரரொடுமுனிவரிவடனைநோக்கியுனக்கிடஞ்சொல்லுதியெனவெந்
நரகுடன்சுவர்க்கம்நிறைந்திடமறலிக்கதிகமார்பத்தியநண்ண
வரிதினவிரதமருளுவீரொனலுமயனொடுசுரர்முனிந்தறைவார். (நூ0சு)

படியினின்மறையோர்வதைமுதலானபஞ்சபாதகத்தினையகற்றி
யிடர்கெடவழியாக்கதியினைக்கொடுக்குமிணையிலாவரிதினவிரத
மடியிரண்டதனாலுலகெலாமளந்தோனருளுவதலாலுனக்களிக்கும்
திடமிலையிவையைத்தருகுதிரொனில்வச்சிரத்தினாற்றெறுவமென்றுரைத்தார்.

நரர்பிறப்பிறப்பையொழித்துயர்கெதியைநல்கிடுமோதவன்றிதியை
யருளுமென்றுரைக்கிற்சங்கரித்திடுவமதுவலவேறுகேளென்ன
விரவிதேர்வலவன்வரவதிற்றெசமியிறுதியிற்சூழேகாதேசி
தருகுதிரொனலுமவடனைநோக்கிச்சதுமுகன்முதலினோருரைப்பார். (நூ0அ)

அரனுரையதனாலசுரசம்பனுக்கன்றயனருணன்வருபோழ்திற்
பரவியதெசமியிறுதியைக்கலந்தபதினோராந்திதியளித்தனனாற்
றெரிவைநீயதனையொழியவேறுளதாய்ச்செப்பெனச்சப்பனவேதை
மருவிடுமேகாதெசியினையருளுமெனவவர்வழங்கினமென்றார். (நூ0கூ)

சப்பனவேதைகலந்திடுமேகாதெசிவிரதந்தனைச்சார்ந்தா
ரப்பினினுறையுமுராரியையகந்தவிரவினாராதனைசெய்தா
ரிப்புவியிடத்தினவர்க்குறும்பலத்தையீந்தனங்கொள்ளுதியென்றே
செப்பியாங்கவர்தம்பதியினேகிடலுஞ்செகத்தினிலவ்விடத்தமர்ந்தாள்.

அயன்மகளரியின்றினத்தனம்நுகர்தியன்றியேற்புதல்வனைவதையென்
றியல்பறவுரைக்கவறனுறுசிறுவன்கழுத்தினிலிலங்குவாளோச்சிப்
புயல்வணமுராரிபதத்தினினடைந்தவுருக்குமாங்கதன்புகழெல்லாம்
தயையுடைவிதர்ப்பன்புதல்விகேயுணர்தியென்றியாழ்த்தவமுனிபுகன்றான்.

உருக்குமாங்கதப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உகசகு.

உ०. வது—அம்பரீடப்படலம்.

கொலைபலசெய்துங்குருவினையிகழ்ந்துங்கோப்பிராமணர்களைநலிந்தும்
நலனிலாளுகிப்பார்தனிற்குரவர்நாரியைவிரும்பிமெய்யறனற்
றுலகெலாம்பழிக்குங்கயவனுயுழல்வெம்பவக்கடல்சுவறிடவொதுக்கிப் [டீர்.
பொலனுறுமடியார்க்கடியராத்திருத்திப்பொருத்துமாலினைத்தொழுந்தொண

உருக்குமாங்கதன்றன்சரிதையைக்கேட்டாண்டுளமகிழுருக்குமற்கிளையா
ளிருக்கறைந்திலங்குமியாழ்முனிவனைத்தானினிதுடனோக்கியேயிணையில்
மருக்கமழ்குழலிவயங்குமோகினிதன்மயக்கினையகற்றுமால்விரதம்
பெருக்கநற்சதனைத்துணித்தமன்போல்வாருளரொனிற்பேசுதியென்றாள். (உ)

வம்பவிழ்குழலியிவையுரைத்திடலுமறுவிலாநாரதமுனிவ
னும்பர்கடுதிக்குமுருக்குமாங்கதனையொத்திடுபரமபாகவத
னம்புவிமிசையினறனெறிவளரப்புரந்தவம்பரீடமன்செயலைச்
செம்பதுமத்திற்றிகழவீற்றிருக்குந்திருவனாய்தெரிதியென்றறைவான். (ங)

அலரிதன்குலத்தின்வயங்குமாந்தாதாவருளம்பரீடனேழ்திவு
மிலகிடப்புரந்துதிருவினாதனைத்தன்னிருவிழிநாச்செவிசிரகர
புலனுறுமனங்கைகளிப்பினோக்கித்துதித்தவன்புகழினைக்கேட்டு
நிலனுறப்பணிந்துநினைந்துபூசாத்திநிகரிலாவடியவனானான். (ச)

பரமபாகவதனாகியவரசன்பழுதகல்வசிட்டமாதவனோ
டரியநற்றவஞ்செய்முனிவரையிருத்தாய்வரித்துமாமகமளப்பிலாத
தரையினின்முடித்துச்சகலதானங்கள்சற்பிராமணர்தமக்கருளி
யரிதினவிரதந்தவறறநடத்தியாசையையகற்றியங்கமர்ந்தான். (ரு)

அரிதினவிரதந்தவறறநடத்துமம்பரீடனுக்கருள்புரிந்து
திருமகள்கொழுனனுருக்குமாங்கதனைச்சினத்துமோகினிதடுத்தனபோற்
றரையினினெவருமிவனுறுவிரதந்தனக்கிடர்செய்யிற்சங்கரியென்
றுரைசெயத்திரிசகசிரவிரவியொளியுறக்காத்திடுமன்றே. (சு)

புகரிபத்திடரைத்தவிர்த்திடும்புனிதன்புகன்றிடவிருடனாயருந்
திகிரிகாத்திடவேதிகழுமம்பரீடன்விருச்சிகத்திங்களிற்சிறப்பாம்
நிகரிலுத்தானதுவாதசிவரலும்நெறியுறுமறையவர்தமக்குச்
சகலநற்றானமளித்தனமருந்தத்தமரொடுமெய்திடும்வேலை. (எ)

வேறு. விரைவினிற்றுருவாசமாமுனிவன்மேவிடலும்
பரிவினன்னவன்பதத்திடையிறைஞ்சியம்பரீட
னருளுவான்றிருத்துவாதசிப்பாரணையருந்த
வருதியென்றலுமாதவன்சம்மதித்துரைப்பான். (அ)

படியின்விஞ்சியயமுனைமாநதியினிற்படிந்து
கடிதினெய்துவனென்றுமன்னவனுடன்கழறி
விடையவன்னிகர்முனிநதிமேவிநீர்படிந்தாண்
டடைகிலான்மனன்பாலகமருடனாகி. (கூ)

நிகரிலாமுனிநீருறயாண்டையுங்காணான்
பகலவன்குணக்குதித்தபின்னைந்தினிற்பாதி
புகலுநாழிகைபோயிடிற்றிருத்துவாதேசி
யகலுமென்றுமன்னுதகபாரணைசெய்தானஞ்சி. (கo)

திதியின்விஞ்சியதிருத்துவாதேசியேகிடுமென்
றுதகபாரணைமன்னவன்செய்தமையொளிசால்
மதிகொள்வேணியனிகர்த்திடுமாதவனுணர்ந்து
நதியினீரிடையெழுந்தெரிபுகையுறநகைத்தான். (கக)

திருத்துவாதெசிசெலுமெனச்செலத்தினைப்பருகிக்
கருத்திருலெனையெள்கினனென்றயங்காய்ச்சுந்
தருத்திபோல்விடுமுயிர்ப்பினன்றலங்குவேணியினைக்
கிருத்திதோன்றிடப்பிடுங்கிமோதினன்கிளர்சினத்தால். (௧௨)

அவனியிற்கடிதடித்தவேணியினிடைக்கிருத்தி
புவனமெங்கணுநடுங்கிடப்போந்திடவவனை
யிவணினிக்கணமம்பரீடனைத்தெறுவென்று
சிவனெனக்கனன்றறைந்தனன்றேவர்களிரிய. (௧௩)

நிகரின்மாதவனுணையிற்கிருத்திநீண்டதிர்த்தாண்
டகிலமெங்கணுமஞ்சவம்பரீடனையடரக்
ககபதித்திருத்தோள்மிசைக்கவினுறுவான்கைத்
திகிரியுக்கிரமாகவேசென்றெதிர்த்ததுவால். (௧௪)

கோடிசூரியவவிரினைக்கொண்டொளிர்திகிரி
மூடிநீண்டடர்கிருத்தியைமுனிந்துசங்கரித்துக்
கோடிரம்முறுமுனிவனைக்குறுகிமேற்சுடலும்
வாடியோடினன்மலரயனுலகினின்மாதோ. (௧௫)

விரைசெறிக்கமலத்தயனடிமிசைவீழ்ந்தீண்
டரிதிருக்கரத்தாழியென்மெய்யனலுறுத்த
வெருவியுற்றனன்விலக்குதிநின்னடைக்கலமென்
றுரைசெயத்திசைமுகப்பிரமன்னிவையோதும். (௧௬)

மறுகிமெய்சுடவந்திடுமுனிவநீகேட்டி
யிறைவனுந்தியினெழுந்திடுமியானுநான்படைத்த
குறைவிலண்டமுமவன்புருவத்தினைக்கோட்டி
னிறுமிமைப்பின்முன்னவன்படைதடுத்திடவெளிதோ. (௧௭)

இவையுரைத்தயனென்பதமழிந்திடாதிவணிற்
கவலையுற்றுறுமுனிவநீயேகெனக்கடிதிற்
சிவனையுற்றுமாறிகிரிவந்தெனைநலிந்திடாமற்
பவமறுத்தருள்பரமகாவென்றிவைபகர்ந்தான். (௧௮)

சிந்தைவெந்துவந்துறுமுனிசெப்பிடவிடையோன்
விந்தைநாயகன்மெய்மயிர்நுனிதொறுமியான்சே
ரிந்தவண்டமேபோலவெண்ணிலாவண்டமமரு
மந்தமால்கரத்தாழியார்தடுப்பரென்றறைவான் (௧௯)

படிவிண்ணீரடியாலளந்தருளியபரம
னடியனனவம்பரீடனுக்கிடர்செயுமறிவில்
கொடியமாதவநீயுயவேண்டிடிற்கோல
வடிவமாகியமாயனையடைகுதியென்றுன். (௨௦)

அரனுனக்கிவணலவகலென்றரன்கூறக்
கிரணமுற்றிடுந்திகிரிகாய்ந்திடக்கெடுமுனிவன்
கருணையுற்றவைகுந்தநற்கடவுளைவணங்கிச்
சரணமற்புதவுனதடியென்றிவைசாற்றும். (உக)

அம்பரீடனையிடர்செயுமருவினையாலே
யெம்பிரானுனதாழியெண்டிசையினுந்தொடர
வெம்பிமெய்யழலுறுதீயையொத்தனவிமலா
நம்புநும்பியைக்காத்தபோற்காவெனநவில்வான். (உஉ)

முனிவனென்றுனையிகழ்ந்திடுமறிவிலாமூர்க்கர்
வினையையென்னடியாரறுத்திடுவர்மேதினியி
னினியபத்தருக்கிடர்செயுங்கயவர்கட்குற்ற
துனியகற்றிடுமரனெனக்கிலையெனச்சொன்னான். (உங)

வேதசாத்திரநெறியுறுவித்தையுந்தவமு
மேதமற்றவர்க்கடைந்திடினவர்க்கின்பமீயுந்
தீதுகற்றவர்க்குற்றிடினவர்க்கிடர்செய்யு
மீதுணிச்செயமுனிவவுன்னிடத்துணர்கென்றான். (உச)

உவமையற்றிடுமம்பரீடனுக்கிடருறுத்துந்
தவவுன்மீதடர்திகிரியைத்தடுக்கவெற்கரிதா
லவனியிற்றிருத்துவாதசிவிரதத்தையடையும்
பவமிலாதவன்பாலுய்யப்பாறுதியென்றான். (உரு)

வம்புலாவியதுளவணிமாயவன்கூற
வம்புராசியின்வடவைபோலாழிசுட்டிடவே
யும்பரம்பரமோங்கல்கடிசையெலாமுழல்வா
னம்பரீடனையிறைஞ்சியுன்சரணமென்றடைந்தான். (உசு)

திகிரிமெய்சுடவருடமொன்றெங்கணுந்திரிவான்
மிகவுநொந்துதன்னடிமிசைவீழ்ந்திடத்தலையுற்
றவனியெங்கணுமறனுறப்புரந்திடுமரச
னிகரிலாழியைத்துதித்திவைநிகழ்த்தினனம்மா. (உஎ)

இரவிகோடியர்க்குறுமவிரிலங்கிடவெழுந்தே
யரிதிருக்கரத்தமர்ந்துயரவுணரைவதைத்து
விரைவினுன்னுமுன்னடைந்தடர்வினையினையகற்றுஞ்
சுரர்துதித்திடுஞ்சுதரிசனநமவென்றான். (உஅ)

வேறு. பரப்பினின்யான்செய்மகங்களுமறிவாறபண்ணியதானமுமிணையி
லரிப்பிரீதியுமாயியற்றிமாதவன்றனைத்தினுமுளனெனவறிந்து
விருப்பமுற்றுயர்மாறினவிரதத்தைவிளைத்ததுமெய்மையேயாகில்
நெருப்பிறைத்தவனைமுனிந்தடராதுநீங்குதிதிகிரியென்றனனால். (உகூ)

காவலனரியாலிவைமொழிந்திடவக்கணத்தினிற்றிகிரியோவிடலும்
பாவமற்றயருந்தவமுனிவியந்துபங்கயன்மாலரனுரு
மூவராற்றவிராப்பவத்தினையிமைப்பினகற்றினைமனவெனமொழிந்து
தேவருந்துதிக்குமரசனுக்காசிசெப்பிநல்லனமருந்தினனால். (௩௰)

பரமபாகவதவுன்னையானறியாதிகழ்ந்திடவுறும்பவமெல்லாம்
பிரமன்மாலரனும்வியந்திடவிமைப்பினகற்றினைபிருதுவிதன்னிற்
றருமமெய்நிறையுமரசவென்றுரைத்துத்தவனனமருந்தியேகியபின்
வருடமொன்றவணினகன்றபின்னரசன்மகிழ்வினுற்பாரணைசெய்தான். (௩௧)

திருத்துவாதேசிவிரதமாதவத்தைத்திடமுறச்செய்தரிதன்னைக்
கருத்தினுளத்தினிருத்திநற்கதியையடைந்தனனவன்கதைதன்னை
விருத்தியால்மறையோர்க்கிருநிதியருளிச்சிறந்திடும்விதர்ப்பர்கோன்பலநாட்
சிரத்தினுற்றவஞ்செய்தருளவேசிறந்ததிருவனுய்தெரிதியென்றறைந்தான்.

அம்பரீடப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨௧௭௮.

௨௧. வது — பரசுராமப்படலம்.

நீதியையகற்றிநெறியிலாக்கருமநிறைந்திடவறன்மெய்யைத்துரத்திப்
பூதலத்தனேகவுகமிருப்பனபோற்பொற்கொடியார்சொலவிரகத்
தீதினைத்தினமுமியற்றிடும்வினையேன்பவமெலாந்தீர்ந்திடவேதன்
றுதைதம்மடியார்க்கடியராத்திருத்துந்தயாளுவாமுராரியைத்தொழுமின்.

அரிதிதியதனிற்றுவாதெசிவிரதமடைந்துயரம்பரீடன்றன்
சரிதையைக்கேட்டுமகிழ்ந்தருக்குமணிதவமுறுநாரதமுனிவை
விரதமுற்றிடுவோர்க்குயர்பதமளிப்போன்மேதினியிற்றிகழ்நலனை
யுரையெனப்பரசுராமன்றன்செயலையுணருதிதிருவெனவறைவான். (௨)

விதுவினற்குலத்தினரசரின்மலிந்தவிறலுடைக்காதிமன்பயந்த
மதிநிகர்வதனச்சத்தியவதியைமறுவிலாப்பார்க்கவன்மரபிற்
சதுமறையுணருமிருசிகன்றனக்குத்தாரமாயுதவிடமகிழ்ந்து
கதமிலாமுனியக்காரிகையுடனேகயினுறவமர்ந்திடுநாளின். (௩)

காதிதன்மனைவியானகாரிகையுங்கவினுறுசத்தியவதியு
மேதமற்றிலங்குமிருசிசன்றன்னையிறைஞ்சிநின்றெமக்கிருவருக்குந்
தீதினையகற்றுஞ்சிறுவர்கள்வரவேசிறநதிடுபிண்டநீயருளென்
றோதிடமுனிவனிரண்டுமந்திரத்தாலுடையநற்சருவினைவைத்தான். (௪)

சாத்திகுணத்தையுறவொருசருவுஞ்சரியிலாராசதமலியுங்
காத்திரமனத்தையுடையதோர்சருவுமமைத்தவன்கங்கைமாநதியிற
றீர்த்தமாடவேசென்றிடவதனைச்சிறந்திடுகாதிதன்மனையாள்
வேத்திரமெனவும்விளங்குதோளுடையவிழுமியமகளுடனுகர்ந்தாள். (௫)

சரியிலாதுயருங்காதிதன்மனையாள்சாத்திககுணச்சருறுகர
விரிசிகன்பாரியிராசதமலியுஞ்சருவினையிலங்கியங்கருந்தச்
சுரர்நதியதனிற்றோய்ந்துமீண்டகன்றுதுலங்கியமுனிவனிதுணர்ந்து
வரசமந்திரத்தின்சருவினைவிழுங்குமரிவையைநோக்கியீதறைவான். (௬)

சரியில்சாத்திகமார்சருவினையருந்துந்தவமுறுகாதிதன்மனையா
ளருமறைநெறியையடைந்திடுஞ்சுதனையளிப்பநீயரசமந்திரத்தாற்
பரவியசருவைநுகர்ந்திடுஞ்செயலாற்பாரிடைக்குரூரமாங்குணத்தை
மருவியமகனையருளுவையெனவுமற்றவள்மனமெலிந்தறைவாள். (௭)

தவமுறுமுனிவவுனக்கெழும்புதல்வன்சாத்திககுணத்தினையுறும
லவமுறுகுரூரமடுக்குமோவெனவாண்டவனவட்கிவையறைவா
னவையகலணங்குன்சுதன்றனக்குயருநற்குணமாகுகவவன்சேய்
புவனமுநடுங்கப்பொருந்துகாத்திரமாம்புந்தியையடைகுவனென்றான். (௮)

இரிசிகனிவைகளுரைத்திடலோடுமெதிரிலாக்காதிதன்மனையாள்
பரிவினுற்பயந்தசுதன்கவுசிகனைப்பூவத்தினருந்தவஞ்செய்து
சரியிலாவிசுவாமித்திரனாகுந்தவனெனவிலங்கியங்கமர்ந்தான்
தெரிவையர்திலகச்சத்தியவதியீன்றுள்செமதக்கினிதன்னை. (௯)

இரிசிகன்குமரனாயெழுஞ்செமதக்கினிநலரேணுகையென்னு
மரிவையைப்பரிவால்வதுவைசெய்திடலுமவளவன்றனையணைந்தெதிரி
றருமமார்சுமதன்முதலிருவரைத்தான்பயந்திடத்தவரெலாமகிழ
மருளகல்மறையாற்சாதகஞ்சவுளம்வயங்குமுன்னூலெலாநிறைத்தான். (௧0)

சிறுவரைப்பயந்தாண்டெழில்கொளுஞ்செமதக்கினிமகிழ்ந்திலங்கிடுநாளி
னிருதருங்கொடியவசுரருந்திலத்தினிருபராய்ப்பொதுவியசெயலாற்
றரைமிறுளயர்ந்துமெலிந்திடவவடன்சுமடினைத்தவிர்த்திடவேண்டி
யரியினல்லுருவாய்ப்பரசுராமப்பேரோடிரேணுகைவயிற்றுதித்தான். (௧௧)

சுரர்மலர்பொழியத்துந்துமிமுழங்கத்துலங்கியபரசுராமன்றன்
மருளகன்மறையையுணர்ந்திடுஞ்செமதக்கினிமகிழ்ந்திடச்செனித்திடலுந்
தருமமெய்யோங்கச்சாதகஞ்சவுளந்தயங்குபநயனமுநடத்தி
வரனுடையவனுச்சோடசவருடமுறவவன்வளர்ந்திடுநாளின். (௧௨)

இரிசிகன்சுதனுக்கிரேணுகாதேவியிலங்கியதேவபூசனைக்குச்
சுரர்நதியதனினயங்கொணர்ந்திடவேதுலங்கிடவெய்தியவவடான்
மருவமர்விசிகமுடையவன்மானவானிறேழொழில்கொள்கெந்தருவன்
விரைசெறியளகத்தெய்வவானுதலோடேகிடநோக்கினள்வியந்து. (௧௩)

மாலெனவயங்கியெழில்கொள்கெந்தருவன்மனைவியோடேகிடக்கவினார்
வேலெனமிளிர்கண்ணிரேணுகாதேவிவியப்புடனோக்கிமீண்டிடலுஞ்
சீலமார்செமதக்கினிமுனிபூசைக்குதவிடுஞ்சலமிலாதுதனி
யாலமேபோலவழன்றிவடாழ்த்தசெயலெல்லாமறிந்திவையறைவான். (௧௪)

கற்புடையவள்போற்றிநின்றாணீயுயருங்ககனபூதேதகிடுங்கரி
லற்புதமனையவெழில்கொள்கெந்தருவனரிவையோடுறுநலனோக்கிப்
பொற்புறவெழில்சேர்தேவபூசைக்குப்புனல்கொணர்ந்திலையெனவுரைத்துச்
சற்பமிங்குமிழும்விடமெனச்சீறித்தனயனைநோக்கியீதறைவான். (கரு)

தனயனுஞ்சமதனவனுடைக்கனிட்டனிவர்களைநோக்கியெண்டவத்தோன்
முனிவொடுமிவளைத்துணிசெயுமெனத்தான்மொழிந்திடவவர்மறுத்திடலுஞ்
சினமுறவவரோடவளையுங்கணத்திற்சிரமறநறுக்குதியென்று
புனிதனுய்வயங்கியுயர்ந்திடும்பரசுராமனைநோக்கியேபுகன்றான். (கசு)

தந்தைவெஞ்சினத்தாலிவையுரைத்திடத்தன்றாயையுமுந்தவர்தமையு
மந்தகனெனவேமழுவினாற்சிரங்களவனியிலுருண்டிடத்தறிப்பச்
சிந்தையின்மகிழ்ந்துமுனியுனக்கிதமாம்வரத்தினைச்செப்புகென்றுரைப்பப்
புந்தியையுடையோன்பரிவுடன்வணங்கிப்பிதாவுடனிவைபுகன்றனனால். (கஎ)

இயல்புடைமுனிவகதுமொழிந்திவணின்றவென்றாயுடன்சேட்ட, ருயிரினை
யருளென்றுரைத்திடத்தவத்தோனிமைப்பின்முன் னெழுதிரென்றுரைப்பத்,
துயிலுணர்ந்தவர்போற்சிரம்பொருந்திடமெய் துலங்கிவந்தடியினிறைஞ்ச
த், தயையுடைத்தாதையுடனெழில்ராமன்றயங்கியாண்டமருநாடன்னில்.

நிருபர்கட்கதிகமாகிநற்படியைநெறியினாலாண்டிடும்வலத்தோன்
சுரியிலாவரங்களுறுபவனெழில்சேர்சகசிரவாகுவாய்ச்சிறந்தோன்
கிரிபரியிரதம்பொதுளவுற்றிடவேகார்த்தவீரியனெனும்வேந்தன்
மிருகயாத்திரைமேல்விருப்பமுற்றவனாய்விழுமியபழுவத்தினிறுத்தான். (ககூ)

பரிகரியிரதம்பரவைபோற்சூழப்பழுவத்தினடைந்திடுமன்ன
னிரிசிகன்சுதனுமிணையிலாச்செமதக்கினிமுனிகோச்ரத்திறுத்துத்
தரைமிசைவணங்கத்தவனலமொழியைச்சாற்றிநற்றெனுவையழைத்தான்
டரசர்கோனுடனேயனைவருமருந்தவடிசிலையுதவுதியென்றான். (உ௦)

அருமறைமுனிவனிவைபகர்ந்திடவுமருள்செறிதேனுவுமெய்தி
யுரனுறுகார்த்தவீரியன்றனக்குமுவரிபோலடைந்தசேனைக்கு
மிரணியக்கலத்தினறுசுவையடிசிலினிதுறவருந்திடவளித்து
விரைமலர்கலவையுதவலுமரசன்வியந்துமாதவனுடன்மொழிவான். (உக)

சகலர்கடமக்குமடிசிலையுதவுந்தேனுவைத்தருதியென்றுரைப்ப
நிகரிலம்முனிவன்மறுத்திடவலத்தானிருபனவ்வாவினைப்பற்றிப்
புகரிபம்பரிதேர்புரவலர்பொதுளிப்போதலும்பரசுராமன்றான்
மிகவுநெஞ்சழன்றுமழுவினாலவன்றன்சேனையைவீட்டினன்மாதோ. (உஉ)

பாரினிற்கடல்போற்பரவியபதினேழக்குரோணிப்படையெலவுங்
கூரியமழுவாலிமைப்பினின்வதைத்துக்குறைத்தலையெழுந்துகூத்தாட
வாரிபோற்குலிகப்புனல்திரையுறநீள்மண்மிசைப்பரவிடநோக்கி
நேரிலாதுயருங்கார்த்தவீரியன்முனெருப்பெழக்கனன்றெழுந்தனனால். (உ௩)

உததிகள்கலங்கவடவரையசையவுறுத்தெதிர்கார்த்தவீரியன்றன்
சதுமுகாத்திரமால்படையான்பகழிசலத்தினால்விடுத்திடுமவையை
மதிதவழ்சடையோனிகர்த்திடும்பரசுராமன்கைமழுவினாற்றுணித்துக்
கதலியின்வனத்தைக்கழித்தபோலவன்றன்கரங்களாயிரத்தையுங்களைந்தான்.

சகசிரகரத்தைத்தறித்தவன்மழுவாற்சடக்கெனவவன்சிரந்துணிக்க
நிகரிலாவரசன்சுதரயுதப்பேர்வெருவிநீணிலத்திடைவணங்கிப்
புகலுதற்கரியபசுவினைக்கொடுத்துப்போதிநீயென்றுரைத்திடலும்
சிகியுறுமுனிவையொருவிகல்லாதேவாடடைந்தனன்றந்தையாச்சிரமம். (௨௫)

விரைவினிற்பசுவோடடைந்துதன்றந்தையுறைவிடமேவிநின்றிறைஞ்சி
வரனுறுங்கார்த்தவீரியனுடன்சேர்மன்னவர்மடிந்திடுஞ்செயலை
யுரைசெயமுனிவனிரங்கிமண்ணரசைவதைசெயினாறம்பவமென்று
சுரர்நதிமுதலாமயத்தினோர்வருடந்தோய்குதிசுதவெனப்பணித்தான். (௨௬)

உவமையில்முனிவனுரைத்திடமழுவோனுயர்ந்திடுதிரிபதகையமுனை
கவுதமிசெனனமொழித்திடும்வேணிகடுவினைகழித்திடும்பம்பை
பவமகற்றியகாவேரிதண்பொருநம்பரவைநேர்கன்னியாகுமரி
இவைமுதலானநதியினோர்வருடம்படிந்தவனெய்திடுவேலை. (௨௭)

மழுவினால்மடிந்தநிகரிலாக்கார்த்தவீரியன்மதலையோராயுத
ரொழுவெனவயங்கும்புயமுடைப்பரசுராமனாண்டிலாதமையுணர்ந்து
விழுமியசெமதக்கினிமுனிசிரத்தைவிரைவினிற்றுணித்தவரோக
வழகினாற்சரியிலேணுகையிராமாவடைதியென்றொலித்தழுதாள். (௨௮)

பாவமில்லணங்கிவ்வுரைபகர்ந்தழுதுபருவரலுறும்பொழுதிராமன்
சேவலோனெனவாண்டடைந்துயிரொருவச்சிரமறுந்தாதையைநோக்கி
கோவினாலரற்றியனைதனைத்தேற்றிநவலுவான்படியினிலரசர்
மூவெழுகுலமுமடிந்திடக்களைவனெனுஞ்சபதத்தினைமொழிந்தான். (௨௯)

மிகவுளந்தரற்றுமனைமுனர்ச்சபதம்விளம்பிநீள்வடவரைநிகரா
புகவிறுதியினுமையவள்கொழுனனொத்துயர்பரசுராமன்றன்
சிகைவிழியுறவெவ்வுயிர்ப்பினால்வடவைத்தீயவிந்திடக்கடல்சுவறக்
ககனமீதிரவிசுழன்றிடமுனிந்துகார்த்தவீரியனகர்சேர்ந்தான். (௩௦)

இரவியினவிர்போலிலங்கியமழுவாலிணையிலாக்கார்த்தவீரியனு
மரசர்கோனயுதச்சுதர்களைவதைத்தாண்டகன்றிடுமவனியையாளும்
நிருபர்கள்குலமூவெழுதலைமுறையுநிலந்தனிற்களைந்தவர்குருதி
சுரர்பயமுறநீள்சமந்தபஞ்சகத்திற்றுப்பெனநிறைத்தனனம்மா. (௩௧)

சமந்தபஞ்சகத்தினக்கயமமைத்துத்தரணியிலுலப்பிலாக்கிளையோ
டமர்ந்திடுமரசர்குருதியைநிறைத்துத்தாதைதன்குரம்பையையவணிற்
சுமந்துவந்தெரியிற்கிடத்தியக்குலிகத்தோயமார்துறையினின்முழுகி
நிமிர்ந்துவேதியர்சொனிறைந்திடத்தாதைக்குதகமென்றுறநிரப்பினனால்.

தவமுறுசெமதக்கினிமுனிதனக்குத்தாரணியெங்கணுமாரு
முவமையிலரசர்குருதியாலுதகக்கிரிகையைமுடித்தபின்சிரார்த்தங்
கவினுறவிராமன்மறையினூலுயருங்காசிபவருக்கெனவவன்சொல்
லவமதித்தவன்றான்மறுத்திடயாருளாவனியையடைகிலையென்றான். (௩௩)

சிரமறமடியும்பிதாவினுக்குரியசிரார்த்தநீநுகரன்றேலியாணு
டனையைவிட்டகறியெனமழுப்படையோன்சாற்றிடக்காசிபமுனிவன்
விரைவினிற்புவியினகரொருங்ககன்றுவிபுலையிற்சனங்கள்சென்றுறுதற்
கரியமால்வரையினமர்தலுமிராமனவணிற்சென்றவனுடனறைவான். (௩௪)

இறந்திடுந்தாதைக்குரியமாசிரார்த்தமருந்திடாதெள்கியானுள்ளுவ்
வுறைந்திடேனெனவன்றறைந்துமிப்புவிமீதோங்கல்மேலடைதியோவெனலு
மறந்தவறிலாதவறிஞனுகுலத்தோடம்பொன்மால்வரையின்மீதமரச்
சிறந்திடுமிராமன்வடவரைமிசையிற்சேர்ந்தவனடிதொழுதறைவான். (௩௫)

உவமையின்முனிவவெனைத்தரும்பிதாவுக்குரியமாச்சிரார்த்தம்நீபுரியா
தவமதித்தகன்றிவ்வரையின்மேலமரவடுக்குமோவறிஞயானுளும்
புவியின்மீதமரிப்பொருப்பைவிட்டகன்றேயென்னுடைக்காவலிற்பொருந்தா
வவனிதானுளதேலடைதியென்றறையவருந்தவனமுன்றுபோயினனால். (௩௬)

மழுவொளிர்கரத்தோனுரையின்மாதவத்தோன்வடவரைக்குத்தரதிசையிற்
பழுவமார்பறம்பின்மிசையமர்ந்திடுநாட்டன்னிரோர்படிகவன்னத்தின்
விழுமியகபோதச்சேவலோர்பெடையைவிரகமுற்றடைந்திடவிதுதான்
பழுதிலாவெனதுபதிசுகத்திருக்கப்பற்றுதியோவெனப்பகர்ந்த. (௩௭)

பெடையதுபகரவடருமாண்பதங்கம்பெலத்தினாற்பிடித்துனைப்புணர்ந்தாற்
கடுகியுன்பதிவந்தெனைச்செயுங்கருமமெதுவெனக்கழறிடக்கபோதம்
படியினிலரசர்குலமறுத்தவன்கையாழிவந்தடுமெனப்பகர
மிடலுடைக்கபோதம்பெண்புள்ளைப்பற்றத்திகிரியுஞ்சிரமறுத்ததுவே. (௩௮)

திறலுடன்பெடையைப்புணர்ந்திடப்பற்றித்திகிரியாற்சிரம்விழச்சேவற்
பறவைவீழ்ந்திடக்கண்டிரோணுகைசிறுவன்காவலில்படியிலையெனவே
யறியுமாதவத்தோனவன்முனரடைந்துன்னுக்கினிறைந்திடாவவனி
யெறூழ்வலிப்புயத்தாயில்லையுன்பிதாவின்சிரார்த்தத்துக்கெனைவரியென்றான்.

காசிபமுனிவனிவைகழறிடலுங்களிப்புடனவன்றனையிறைஞ்சி
மாசகன்மழுவோன்பிதாவினற்சிரார்த்தம்வரித்தனனுகருதியெனவே
யாசகறவத்தோன்சிரார்த்ததெக்கணையாயையவுன்காவலினமருங்
காசினிமுழுதமருளெனக்கொடுப்பக்கடிதினேதனமருந்தினனால். (௪௦)

இலங்கியசெமதக்கினிதனைமழுவோனிணையிலாவெழுமுனிவருக்கு
ணலனுறவமரும்படிசெயுமகத்தைநடத்திடப்பிருகுகாசிபன்று
னலரியினவிர்நேரத்திரிவதிட்டனங்கிராக்கவுதமன்விசும்பிற்
பொலனுறுமறையையறைந்திடுகுச்சரிவருடன்பொலிந்தனனன்றே. (௪௧)

தாதையேழிருடிக்கணத்தொடுமமரச்சரியிலாமகத்தினைமுடிக்குங்
காதிதன்மகடன்பவுத்திரன்றனைநற்காசிபனுக்கியெற்கருளும்
பூதலமிசையினிருத்தியோவெனலும்புணரிசூழுமுதிவினைய
மாதவமுயரத்திரித்திடுமழுவோன்வைகிடமிலாதுழன்றனனால். (௪௨)

பரவைசூழ்புவிகள்பழுவமெண்ணிலபொற்பருப்பதமிவையெலாமனுகி
விரைவினினமருமிடந்தொறுந்தொடர்ந்துவிழுமியகாசிபன்றடிப்ப
வர்சர்வேரறுப்போன்றளர்ந்துளம்வாடியயமன்முன்னெய்தியென்மழுவா
லிரைகடல்மிசைமுத்தரமியானெறியுமிடமெலாமெனக்கருளென்றான். (௪௩)

சார்த்தவீரியனைக்களைந்திடுந்தவத்தோன்கழறிடவருணமனிசைய
மாத்திரையளவினெறியவான்வயங்கிவிழுந்திடுமழுவைப்பார்க்கவன்றன்
கோத்திரத்தமர்ந்தோன்சூறுகிவந்தெடாமற்சூழுமியசிதலையாயரன்கைப்
பாத்திரம்பொடிசெய்யரியெனவிபுதர்படியினிற்றுகளதாயெரித்தார். (௪௪)

ஒருதரமெரியவீழ்ந்திடுமழுவையும்பர்கள்சிதலையாயெரிப்ப
வருணனக்கணிச்சிவிழுமிடநாற்பதியோசனைநீளமும்வழங்கத்
தரைமலையாளப்பெயரினையுடையசசியநற்பருப்பதத்தமர்ந்தா [ன்.
னிருபர்வேரறுத்தக்குருதியைக்கயத்துணிறைத்துமாச்சபதத்தைமுடித்தோ

அரசர்களிருபத்தொருதலைமுறையுமழிந்திடவதைத்திடுமழுவோ
னுரனுறுந்தவமுந்தெசரதனருளுமுவமையிலிராகவனுயரும்
வரிசிலையுமிழும்வாளியால்வாங்கவாருதியருள்மலையாளத்
தரையினச்சசியவரையிடையமர்ந்தானெனத்திருவுடனவணுறைந்தான்.

பரசுராமப்படலம்முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨௨௨௪.

---

௨௨. வது—இராகவப்படலம்.

திருவுடன்புவிமானினைமான்வயங்கச்சிறந்திடும்பயோததிநாப்பண்
கருவரைமிசையிற்கவின்கொளும்நளினக்காடுபூத்தெனக்கரங்கண்கா
லூரனேழிற்சொப்புள்திகழ்ந்திடவிணையிலுரகநல்லணையின்மீதொளிகொ
ளரியினையடைந்தேயழிவிலாப்பதத்தினமரயாமியற்றுவந்தோண்டீர் (௧)

அயமுறுதூண்டிலயமிசைக்கிருமிதனையுணவாமெனவருந்தி
மயிலையங்குழல்வதெனப்பவம்விடுத்துமறலிகைக்கொடாதுயர்மனனே
தயரதன்றவத்தாற்றனையனுய்ச்செனித்துத்தசக்கிரீபன்றனைத்தடிந்து
குயின்மொழிச்சனகியுடனயோத்தியின்வாழ்கோதண்டக்குருவினைநினைதி.

குவலயத்தரசர்திரள்களைவதைத்துக்குழுமியகுருதியின்முழுகு
முவமையில்மழுவோன்சரிதையைக்கேட்டவுருப்பிணிரோணுகைசுதனுந்
தவனுரமடையப்பகழியால்வாங்குந்தசரதராமனென்றுரைத்தா [ன்
யவனெனவன்மொழியென்றியம்பிட முனிவனனக்குநீகேட்டியென்றறைவா

மறுவிலாவிரவியணைத்திடுஞ்சிராத்ததேவிதன்வயிற்றிடைப்பிறந்தான்
குறைவிலாவைவச்சுதனெனுமனுவாங்கோவவன்சேயிக்குவாகு
நெறியினலனைகவுகந்தவமியற்றிநிகரிலாத்திசைமுகனீயப்
பொறியுலாவியமார்பழகியவரங்கன்றனைக்கொணர்ந்ததுபொறிகேட்டி. (௪)

பூமகன்கலங்கமறையினைப்பறித்துநிகரிலாப்புணரியிற்புகுந்த
திமுகத்தனைமால்வதைத்துநால்வேதந்திகழநான்முகன்றனக்கருளித்
தூய்மைசேர்விமானமிசையினின்கிழிற்றுலங்கரங்கேசனுய்வரவே
மாமலர்கொடுபூசனையினைச்செய்துமகிழ்ந்தயனமருநாடன்னின். (௫)

மனுவெனுமரசன்மலரயனுலகில்வைகிமற்றவன்றனையிறைஞ்சித்
தினகரனவிர்சால்விமானமேற்றிகழுந்திருவரங்கேசனைவணங்கித்
துனியகல்நிருபனயோத்தியினெய்திச்சுதனெனுமிக்குவாகுக்குத்
தனைநிகரிலாதவரவின்மேற்றுயின்றுதயங்கியசெயலெலாமுரைத்தான். (௬)

மனுநிகழ்த்திடவுஞ்சிறந்திடுமிக்குவாகுமற்றவன்றனைநோக்கி
யனவெரினமர்வோனகரிடையிலங்குமரங்கனையான்றொழுதிடவான்
றினகரன்புதல்வவருளுதியெனமன்னுனக்கரிதாமெனச்செப்ப
வினையகல்வசிட்டமுனியிருபதத்தினிறைஞ்சிநின்றிவைவிளம்பினனால். (௭)

மலருளோன்றிருவாராதனைசெய்யுமறுவிலாவரங்கனையான்று [ம்
னிலமிசைக்கொணர்ந்திண்டருச்சனைசெய்யும்விரதத்தைநிகழ்த்துதியெனலு
பொலனுறுவசிட்டனயன்றன்மந்திரத்தைப்புகன்றிவையுளத்துறநிறுவி
நலனுறத்தவஞ்செய்யெனநவின்றிடமன்னகர்துறந்தடவியிற்சேர்ந்தான். (௮)

வனமடைந்தயன்றன்மந்திரஞ்செவித்துமன்னவனுலப்பிலாவருடம்
வினையகன்றிடநற்றவஞ்செய்யுநாளின்விபுதர்கட்கிறைவிடவடருங்
கனமழைபொழியக்காலறைந்திடநற்காமனோடரம்பையர்வரவான்
றினகரன்புதல்வன்சேயிவைதன்னிற்சிறிதுமாண்டயர்ந்திடாதமர்ந்தான். (௯)

நிலைகுலைந்திடாமற்றவஞ்செயுமனனைநெருப்பெழநோக்கியேவலாரி
யிலகுவச்சிரத்தைவிடுத்தலுமாழியெழுந்திடவெருவியாயுதத்தோ
டுலைவயிற்பறக்கும்பூனைபோற்சரியின்மகபதியோடலும்நிகரில்
மலரயனிவன்முன்செயுமருந்தவத்தைமனத்திடையுணர்ந்துவந்தனனால்.

வருமயன்மகிழ்வாற்றுனருச்சிக்குமறுவிலாவிமானத்திறுங்குந்
திருவரங்கேசன்றனைநிலத்திருத்தச்செயுமனன்றவத்தினைநோக்கி
வெருவியபிரமனிராசதகுணத்தால்மேவுபாடவந்தனின்மெலியா
தருவினையொருவவமருமச்சுதனையானெங்கனளிப்பனென்றயர்ந்தான். (௧௧)

மருளகல்பிரமனயர்ந்திடத்திருமால்வந்தசரீரிதானுகிச்
சுரர்நதியெனத்துபதத்தினிற்றோன்றித்துலங்குநாளன்றுகாவேரி
யரியநற்றவங்கள்புரிகையினுலேயவளிடத்துறுவமென்றறைந்த
வுரையினும்விதிப்புட்கரணிமாதவர்முன்வருவனென்றுரைத்தசொல்லாலும்.

நிலமிசைவிமானத்தோடும்யானமர்ந்துநிகரில்பொன்வரையினைச்சுற்று
மலரியால்வருமத்தினமுறுஞ்சதுவாமுகஞ்சகசிரமகன்றிடுநாள்
மலரின்மீதுறைவோயுனக்கிரவாகும்பொழுதினிவண்வருவேன்யா
னலனுறுமன்னுக்கெனையருளெனலுநான்முகனவன்கரத்தியந்தான். (கரு)

திசைமுகன்பரமனருளினாற்கொடுக்கச்சிறந்திடும்விமானமீதோங்கி
நிசியகலிரவியவிருறமணிசேர்சிகரிலாப்பணமுடையனந்தன் [மேவுஞ்
மிசைமரகதம்போல்விளங்கியவரங்கன்றனைக்கொண்டாண்டயோத்தியின்
சுசியுறவயங்கிக்குவாகுவின்சுதனுய்த்தோன்றினன்விருக்கியாம்பெயரோன்.

கவினுறவயங்கும்விருக்கியின்சுதனீள்காமனன்னேரதாய்த்தயங்க [ல்லாற்
வவுணரைச்செயித்தோன்விடைமுரிப்பினுக்குக்ககுத்துவென்றறைந்திடுசொ
பவமுறுமதன்மீதிவனமர்கையினாற்பழுதிலாக்ககுத்தனென்றியம்பக்
குவலயத்தமர்ந்தோர்மகிழவீற்றிருந்தானவன்சுதன்குறைவிலாப்பிருது.

விறலுறுபிருதுசுதனுயர்விசுவகந்திமற்றவன்மகன்வேத
னெறியுறவயங்குஞ்சந்திரனவன்செய்கிவருவானரச்சுவனவன்றன்
மறுவறுமதலைவயங்குசாபத்திமற்றவன்றவத்தினாற்பயந்தோ
னறனுறுபிரகதச்சுவனவன்றானளித்தவன்குமலையாச்சுவனே. (கசு)

அந்தமார்குமலையாச்சுவன்புதல்வனசுரதுந்துவைச்செயித்திடலாற்
றுந்துமாரன்னென்றியம்பிடும்பெயராய்த்துலங்கினனவனெழிற்குமரன்
சிந்தையின்மறையினெறியுறுதிடாச்சுவனவனளித் திடுஞ்செம்மல்
சுந்தரமிகுத்துவிறலுறுபரியச்சுவனவன்சுதனுயர்நிகும்பன். (கள)

சீறியநிகும்பனருளியகுமரன்சிறந்திடும்பிரகிணச்சுவனு
மேருறுமவன்சேயிலங்கியசிரசாச்சுவனவனளித்தவனிலையா
வீரனுஞ்சேனைசரித்தவன்புதல்வன்விறலுறுவனாச்சுவனவன்றான்
பாரினின்வேட்டசதமனைவியவனாப்பரிவினாலணைத்தினிதிருந்தான். (கஅ)

பாரியரிடத்திற்புதல்வரில்லாமற்பழுவத்தினடைந்துமாதவர்கள்
சீருறுமகத்தைவிளைத்துமந்திரத்தாற்கொடுத்திடுஞ்சலத்தினைப்பருகி
யேருறுமவனாச்சுவன்கருத்தரித்துயிறந்திடாதுவகையிற்பயந்தான்
மாரனைநிகர்த்துவயங்குமாந்தாதாவெனும்பெயருடையமன்னவனை. (ககூ)

இம்பரிற்றந்தைகருத்தரித்தினவிரவிபோலிலங்கியதவஞ்சா
லும்பர்கள்மகிழவெழுந்தமாந்தாதாவுதவியபுருகுச்சனெழிலா
ரம்பரீடன்மெய்யகல்கிலாநெறிசேர்முசுகுந்தனெனுமிவரயந்தோர்
தும்பிகணிறையமறையவர்மகிழத்துலங்கிநீள்பாரினையாண்டான். (உ0)

மருளுறுந்தவத்தாலுயர்ந்தமாந்தாதாமைந்தரிற்புருகுச்சன்புதல்வன்
றிரசதச்சவன்றான்பயந்திடுங்குமரன்றிகழனரண்ணியனவன்சே
யருளுறும்பரியாச்சுவனவன்சிறுவனழகியனாந்திரியருண
னிருபன்மற்றவன்றானுதவியகுனுநிகரிலாச்சத்தியவிரதன். (உக)

சத்தியவிரதனாந்திரிசங்குசரியிலாவதிட்டர்சாபத்தா
லித்தலத்திகழும்புலையனாய்ப்பினரினிணையிலாக்கவுசிகனருளால்
வித்தகவனாடமுதலெனுமைந்தாமுடுக்களும்விளங்கிடநிகரில்
சுத்தனாயுயர்தெக்கணமடைந்திடவேதுலங்கிவனமர்ந்தனனன்றே. (௨௨)

உயர்விசும்பதனினுறுதிரிசங்குபயந்திடுமுத்தமகுணமா
யியல்புடன்றயைமெய்யிலங்கியவரிச்சந்திரனெனுமரசர்கோனிலங்கக்
கயல்நிகர்நயனச்சந்திரமதியைக்கவினுறவேட்டிடவவடான்
செயனுறும்படிவமொளிருலோகிதனையுதவியேசிறந்திடுநாளின். (௨௩)

மகபதியவையின்வசிட்டமாமுனிவன்முன்னரிற்சத்தியவிரத
னிகரிலாவரிச்சந்திரனெனவலனென்றுவமையில்கவுசிகனிகழ்த்தி
மிகமுனிந்தெழுந்தேயயோத்தியினெய்திவிழுமியதனமருளொன்று
புகலுறநிருபன்மணியொடுகனகம்பொருப்பெனக்குவித்தனனன்றே. (௨௪)

வரையெனக்குவித்ததனத்தைமன்னிடத்தினமைத்தியான்வழங்கெனுநாளிற்
றருதியேயெனவாண்டரசனுக்குரைத்துத்தவனுறைக்குழலிறசார்ந்து
பரவைசூழ்படியின்விதைமுதல்விளைவுபழுதுறவழித்திடும்படியே
மிருகமெண்ணிலாதமுனிவொடும்படைத்துவிடுத்தனன்றனைநிகரிலாதான். (௨௫)

தரையிடையமருமுளைவிளைபயிர்கள்சகலமுமழிந்திடவெண்ணில்
மிருகமெண்டிசையுமிகுந்திடவரிச்சந்திரனொருதேரின்மேல்விளங்கி
யரிமுதல்விலங்கலனைத்தையும்வதைத்தாண்டடர்ந்திடுகிரியினைத்தொடர்ந்து
சுருதியையுணருங்கவுசிகமுனிவன்றுலங்கியபழுவத்தினுற்றான். (௨௬)

உவமையிலரிச்சந்திரமன்னன்பழுவத்துறைந்தமையுணர்ந்திடுமிணையில்
கவுசிகனகத்தாலமைத்திடச்சனித்தகவினுறும்புலைச்சியரெய்திப்
பவமறுநிருபன்மகிழ்ந்திடப்பாடியெமையணைத்தருளெனப்பகரச்
சிவனெனமுனிந்துகசையினாலடிப்பச்சினத்தவர்முனிவனுக்குரைத்தார். (௨௭)

சினமுடனவர்களுரைத்திடக்கேட்டுத்திகழ்ந்திடுநிருபனைச்சார்ந்து
முனிமுனிவுடனீயிவர்களையணைத்தியலவெனமொழிந்திடினரச
வினியவன்புவியோடயோத்திமாபுரியுமிலங்கியதனமுமீசெனது
மனனினவியற்றேனெனதுமானகர்நாடிவையெலாம்வழங்கினனென்றான்.

இன்னலிலரசன்புவியுடனகரமளித்திடவிணையறுமுனிவன்
மன்னவுன்னிடத்திலமைத்திடுந்தனத்தைவழங்குதியெனவதற்கிசைந்து
துன்னியவினைபோற்றுடர்ந்தவனதர்வாய்விடுத்திடுந்துற்குணனுடனு
மன்னனற்காசிப்பதியினிற்சுதனைமனைவிதன்னுடன்விலைக்கியந்தான். (௨௯)

காசியின்மனைவியுடன்சுதன்றனையுங்கடுவினையுறவிலைக்ககற்றி
நீசனுக்கடிமைபுகுந்துமன்முனிவன்றனத்தினைநெறியுறக்கொடுத்து
மாசறுபுலையனுரைத்திடுமொழியால்மருவுறீமத்தினைக்காத்தாண்
டாசறவமர்நாட்டினிற்றிருமகன்றானரவுறக்கடித்திடமரித்தான். (௩௦)

மறித்திடுஞ்சுதனை மறுவிலாதுயர்சந்திரமதியிரவிடைச்சுமந்தாண்
டெறித்திடுமிடத்தினணுகிடநிருபனிவ்விடத்திழைத்திடுங்கருமம்
விருத்தமாயவத்தமுறுதிதற்குரித்தாய்விளங்குகாற்பணமுதவென்ன
வருத்தமோடணங்குசிலதியாய்த்தனைக்கொள்மறையவன்பாற்செலும்வேலை

அரசரொண்காசிமனன்மகன்சிரத்தையறுத்தவனுக்கையையரக்கர்
பருவரலுடன்காற்பணங்கொணர்ந்திடச்செல்பாவைதன்கரத்தினிற்படியத்
துரிதமாண்டியற்றுமுனிவன்புள்ளுவத்தாலமைத்திடத்துளங்கியமின்னை
விரைவினிற்பிணித்துநகரிகாவலர்கள்வேந்தன்முன்விடுத்தனரன்றே. (௩௨)

இரவிடையெய்திச்சிறுவனைவதைத்தவரக்கியாமிவளெனப்பகர்ந்து
நிருபன்முன்விடுப்பவவனிருநயனம்நெருப்பெழவடுதிரொன்றுரைப்பத்
தரையினிற்பிணம்வேமிடத்தினிற்காக்குஞ்சந்துகனுகியவயோத்தி
யரசர்கோன்கரத்திற்கொடுத்திவடன்னைத்தெறுகெனக்காவலரறைந்தார்.

மனைவியென்றறிந்துநிகரிலாநிருபன்மலர்க்கையால்வாளினைச்சுழற்றி
முனிதடுத்திடவுந்தறித்திடும்வேலைமுக்கணுனெய்தமாதவர்க
ளனைவருமகிழவமரர்கோன்பதியினமரரிச்சந்திரவரசன்
றனையனுய்வயங்குமுலோகிதன்சிறுவன்தருமமெய்மலிந்திடும்பரதன். (௩௪)

விறலுறும்பரதன்பயந்திடுங்குமாரன்விசையன்மற்றவன்சுதன்பருக
னெறியுறுமவன்சேய்வலனுறும்விருகனவன்சுதனிகரில்வாகுச்சன்
மறனுறுமவன்சேய்மறுவிலாச்சகரன்மற்றவன்மனைவியரிருவர்
குறைவறுசுமதிசுகேசினியெனும்பேர்சுமந்துகோகனகமின்னேப்பார். (௩௫)

அரிவையர்திலகச்சுமதியீன்றிடவேயறுபதினாயிரஞ்சிறுவ
ருரனுறத்திகழ்சாகரரெனும்பெயருற்றெளியுறவமர்ந்தனரொப்பின்
மருவமர்குழலிசுகேசினியுதவவயங்கசமஞ்சசனென்னுஞ்
சரியிலாமதலையிலங்கிடச்சகரன்சதமகனெனவமர்நாளின். (௩௬)

விறலுடைச்சகரன்குரகதமேதவேள்வியைவளர்த்திடவமரர்க்
கிறைவனம்மகத்தினிவுளியைக்கபிலனிடந்தனிறெளிக்கவவ்வரசன்
சிறுவராய்த்திகழ்சாகரருலகடையத்தேடிநீள்புவியினைக்கெல்லி
யுறுபவர்கபிலத்தவனமரிடத்தினுவமையில்புரவியைக்கண்டார். (௩௭)

மகமுறுபுரவியவணுறக்கபிலப்புனிதனைவைதடரரசர்
நிகரிலம்முனிவன்விழித்திடநோக்கிநீறதாயெரிந்துவீழ்ந்திடலும்
புகழுடையசமஞ்சசனளித்திடுநற்புதல்வனுமஞ்சுமானுகிப்
பகருதற்கரியவிறலுடைமன்னன்பரியினைக்கொடுவரச்சென்றான். (௩௮)

குரவர்களெரிந்துவிழுந்திடுமடலைக்குப்பையாம்வரையினைநோக்கி
வெருவிநற்கபிலனடியினிற்றெழலும்விழுமியமாதவனருளும்
புரவியைக்கொணர்ந்துவிடுத்திடச்சகரப்புரவலன்மகத்தினைமுடித்தா
னிருபர்கள்மகிழுமஞ்சுமாமனன்றனிகரிலாத்திலீபனைப்பயந்தான். (௩௯)

பவமறுதிலீபனருளியபுதல்வன்பகீரதனாகியவரச
னுவமையில்கபிலன்றனையிகழ்ந்தெரிந்தவுரானூறுகுரவர்வீடெய்தப்
புவிவிசும்பளந்தபுராதனனுயர்ந்தபொன்னடித்தாமரைவிளக்குங் (௪0)
கவினுறுகங்கைநதிவரவயனைக்கருதியேயருந்தவஞ்செய்தான்.

சதுமுகன்வரநற்றவஞ்செயநளினத்தவனவணெய்திநற்கங்கை
நதிவரினனைத்துகுரவர்வீடுறுவரதனினலவள்படிநணுகி
னுததியும்பொறுதாலவடனைத்தாங்குமுரனுளனரனவணெய்த (௪௧)
மதியுளவரசதவம்புரிந்ததற்பின்வரநதிவரவியற்றென்றான்.

மலருளோன்மொழியாற்றவஞ்செயுநாளின்மழுவொளிர்விடையவனெய்தி
நிலனுறமுடுகியெழுஞ்சுரர்நதியினீரினைத்தாங்குவனென்னப்
பொலனுறுமரசன்பகீரதிவரவைம்புலன்களையடக்கியொண்டவஞ்செய் (௪௨)
நலனினாற்கங்கையவனியினுறவேநண்ணினளுலகெலாமதிர.

தலையினின்வருடமூன்றயுத்ததுச்சகசிரமிரண்டுசார்ந்திடமா
லருளயன்புராரிகங்கைவந்திடநற்பகீரதனருந்தவஞ்செய்யச்
சுரர்நதியுறவான்முகடளவாகத்துலங்கிவிண்பரந்திடவதனை (௪௩)
யரனுயர்சடையிற்கரந்துபின்விடலுமவனியினிழிந்தனளம்மா.

அவனியினிழிந்தசுரர்நதிநிகரில்சன்னுமாதவனிடத்தடையப்
பவமகன்முனிவன்குடங்கையாலேற்றுப்பருகநற்பகீரதன்வேண்டச்
செவிநெறியுறவேவிடுத்திடக்கபிலவிறையினாச்சிரமத்தைச்சேர்ந்து
புவியினிலிறந்தகுரவர்மெய்ப்பொடியிற்போதலுமவர்கெதியடைந்தார்.

பண்டுலகளந்தோன்பதத்தினுற்பவித்தபாணியப்பாதபங்கயத்தை
முண்டகன்விளக்கிக்கரகமீதமைத்தமுதுபுனல்முக்கணன்சடையிற்
கொண்டநீர்சிறிதுபகீரதன்றனக்குக்கொடுத்திடப்புனிதமாயிந்த (௪௫)
மண்டலத்திழிந்தவானதியடையின்வண்கதியாவரேயுறாதார்.

பகீரதன்றவத்தாற்கொணர்ந்திடப்பாகீரதியெனுமுறையினைப்பகர
நிகரிலாச்சன்னுமுனிசெவிநெறியினேர்ந்திடச்சானவியாகிச்
செகதலத்தடைந்தசுரர்நதிபரவவுதவியசீருறுமரசன் (௪௬)
புகழுறப்பயந்தபுதல்வனுநாபாவானெனும்புரவலனம்மா.

தருமமார்நாபாவான்சுதனாகித்தயங்கியசிந்துத்திவீப
நிருபன்மற்றவன்றன்மகனயுதாயுநிகரிலாவவனுதவிடுஞ்சே
யுரனுறுமிருதுபன்னவன்சிறுவனுத்தமச்சாருவகாம (௪௭)
னரசன்மற்றவன்றனருளியகுமரனழகியசுதாசனுமத்தோன்.

ஒரியசுதாசனருளியகுமரன்சிறந்திடுமித்திரசகனும்
பேருடைநிருபனவன்சுதனசுமன்பிறங்கியபுகழுடையவன்சே
யெருறுஞ்சகலனவனருட்புதல்வனிலங்கியதேசரதனாகிப்
பாரினையாண்டானவனெழிற்சிறுவன்பழுதிலாதுயாயிலுமிழி. (௪௮)

விறலுடையயிலுமிழிசுதன்விசுவசகனவன்விழுமியபுதல்வன்
மறைநெறியுயரவளர்ந்திடுகட்டுவாங்கன்மற்றவன்பயந்திடுஞ்சேய்
நெறியுறுதிலீபனவனருட்குமரனிகரிலாவிரகுவாமரச
னறனிலங்கிடவான்புவியுளோர்தமைவென்றுடகமிறைவலர்க்கீந்தான். (சகூ)

இரணியமுதலாய்ச்சகலமுமறையோர்க்கீந்தமண்ணதனிறுவியற்றுஞ்
சிரகநீர்பருகியனமுமக்கலத்திற்சிறுநுகரும்வீரியனுய்த்
தரணியாளிரகுபயந்திடுங்குமரன்சரியிலாவசமனன்விதர்ப்ப
னருணலக்குமரியாகியவிந்துமதியினையழகுறவேட்டான். (ருo)

அசனெனுமரசனழகியவிந்துமதியினையணைத்திடவவடா
ணிசியகன்றிடவானிவந்திடுதபனனிகர்த்திடப்பயந்திடுகுமரன்
றெசரதனெனும்பேர்சிறந்திடவலத்தாற்றிசைகளைச்செயித்துலகாண்டான்
வசுதையின்மறையோரிணையில்மாதவர்கள்மகிழச்செங்கோலினையோச்சி.

தவர்மகிழ்ந்திடமாநிருபர்கட்கிறையாய்த்தயங்கியதசரதராஜன்
கவுசலையுயர்கைகேசிமின்னிகரில்சவினுறுசுமித்திராதேவி
யிவருடனறுமயுதமென்மடவார்தமைமணந்திந்திரனேய
வவனியினறன்மெய்நெறியுறவாண்டானறுபதினாயிரம்வருடம். (ருஉ)

அறனுறவறுபதாயிரம்வருடமவனியையாண்டிடுமரசன்
சிறுவர்களிலராய்வருந்திமெய்யுயருஞ்சிருங்கமாமுனிசெய்யுமகத்தை
மறைநெறியதனானடத்தும்வேலையின்வாய்மலருளோன்வலாரிபுத்தேளிர்
சிறகறைகலுழன்மிசையினிற்றோன்றுந்திருவினாயகனிடஞ்சேர்ந்தார். (ருங)

திருவினாயகனையிறைஞ்சிநான்மலரோன்செப்புவானென்வயிற்றுதித்த
வருள்செறிந்திடுநற்புலத்தியன்சிறுவனாகியவிச்சிரவாவக்
குரனுறுசுமாலிபயந்தகைகேசியுதவியவிராவணனிருதன்
சுரரொடுதவரைநலிந்திடுமவனைவதையெனச்சோதியிதனுறவான். (ருச)

நிசிசரர்க்கிறைவனாகிவானமரர்முனிவருக்கிடரினைநினைக்கும்
புசவலனுடையவிராவணனுலப்பில்கிளையுடன்பொன்றயானயோத்தித்
தெசரதன்குமரனாகியொண்டிகிரிவலம்புரியனந்தனுமிவர்சிர்ச்
சுசியுறுமணிதராகநீடனராயிற்றுலங்குவனெனவரியகன்றான். (ருரு)

அரியிவையருளியகன்றிடப்பிரமனமரர்நீரரன்முதலாக
விரைவினிற்றரையிற்கவிகளெண்குகளாய்மேவுவமென்றுரைத்தொருவ
மருவமர்தொடைசேரயோத்திமன்னடத்துமகமுறுபாவகனுப்பண்
சுரர்துதித்திடப்பொற்கலத்திரோர்பிண்டந்துலங்கிடவெழுந்ததோர்பூதம்.

ஏதமில்மகத்தினுறுகனலிடையோர்கலத்தொருபிண்டத்தையேந்திப்
பூதம்வந்தவனிமிசையின்வைத்தழலிற்புகுதலுந்தெசரதவரசன்
கோதகன்றிடுந்தன்மனைவியர்கரத்திற்கொடுத்திடமூவரும்வாங்கி
யோதையாருவரியமுதெனவருந்தவுதரத்தினிறைந்ததுகருப்பம். (ருஎ)

உவமையிலயமாதந்தனிற்சோமனுயர்ந்திடுநவமியிலைந்து
கவினுறுகிரகவுச்சமாய்ப்புனர்பூசத்திற்கற்கடகலக்கினத்தி
னவனிவிண்ணடங்கவயின்றுமிழ்ந்தளந்தவச்சுதனிராகவனாகிக்
கவுசலைவயிற்றினுதையமாயினன்சீர்க்கடிமலரமரர்கள்பொழிய. (௫௮)

பூசநாளதனின்மீனலக்கினத்திற்பொலனுறுகைகேசிவயிற்றி
னாசறுபரதன்சனித்தனனிகரிலாயிலியம்மகமிலங்க
வேசறுமடங்கலிலக்கினந்தன்னிலிலக்குவனுடனிளையோனும்
வாசமார்குழற்சுமித்திராதேவிவயிற்றினிடையுதயமாயினரால். (௫௯)

முரசுகாகளநற்றியிலைதூர்ந்துமிமுந்நீரோலியாமெனமுழங்க
விரைசெறியளகவரம்பையர்முதலோர்நடித்திடவிபுதர்கடுதிப்ப
நிருபரொண்ணயோத்திக்கரசனுய்வயங்குந்தசரதன்சரயுநீர்படிந்து
கரைசெயற்கரியகளிப்புடன்குமரர்கவினுறுவதனநோக்கினனால். (௬௰)

வேதியர்தமக்குநிகரில்மாதானமளித்துத்தன்மெய்ப்புதல்வருக்குச்
சாதகஞ்சவுளம்நிறைத்தபின்முன்னூற்றரித்துபநயனமும்செய்து
மாதவர்மகிழப்புரவலர்துதிப்பமறையறநெறியுயர்ந்திலங்கித்
தீதறவனுசர்விரசவேவளர்ந்தான்தெசரதன்களித்திடவிராமன். (௬௧)

கருமுகில்காயாமலர்மரகதமஞ்சனவரைகருங்கடல்மயூரச்
சிரதரமெனமெய்சிறந்திடவறன்மெய்திடவிரதம்பொறையறிவு
கருணையுமுறவெங்கயவர்கடனக்குக்கடையுகவிடையவன்பொருவ
மருவமர்தொடைசேரிராகவக்குரிசில்வளர்பிறைபோலொளிர்நாளின். (௬௨)

மாதவர்மகிழநடத்தும்வேள்வியினைக்காக்கவுன்மைந்தரில்மூத்த
நாதனைத்தருதியெனக்கவுசிகன்முனண்ணியேயுரைத்திடவதற்குப்
பூதலத்தரசன்மறுத்திடமுனிவன்கதமுறப்பொறுத்திநீயென்று
தீதறும்வசிட்டன்மனன்றனக்கரணைச்செப்பிடச்சிறுவனையளித்தான். (௬௩)

கவுசிகன்மகிழவிலக்குவனுடனற்கவினுறுமிராமனையளிக்க
உவமையிலயோத்திநகரினையொருவியொளிர்தரும்பொழிலிடையுற்றுச்
சிவனுதல்விழியின்மதனெரிந்திடுமக்கடத்திடைச்சேர்ந்தெழிலிராமன்
பவமுறவுயர்தாடகையெதிர்ந்தடரப்பகழியாலவளைவதைத்தான். (௬௪)

நிருதியைவதைத்துச்சிலைகரத்தேந்தும்நிகரிலாவிராமனைநோக்கிச்
சுருதியையுணருங்கவுசிகன்மகிழ்ந்துதுலங்குதெய்வப்படையொருங்கு
பரிவுடன்கொடுத்தாண்டவருடனடந்துபழுதிலாமாவலிமகஞ்செய்
விரைமலர்ப்பொழிலினடைந்தியாகத்தைவிளைத்திடவரக்கர்சென்றடர்த்தார்.

கவுசிகனடத்துமகத்தினையளிக்கக்கடுவெனவடர்நிசாசரரைப்
புவியிடைத்தலைகளுருண்டிடவடித்துப்புகழுடைத்தெசரதவிராமன்
றவர்மகிழ்ந்திடவேமடிந்ததாடகைதன்றனையரிற்சுவாகுவைத்தடிந்து
பவமெனவடர்மாரீசனாழ்கடலிற்கரந்திடப்பகழிகடூரந்தான். (௬௬)

பகலவனவிராற்கெடுமிமமெனவேபழுதறவிராகவன்சரத்தால்
நகநிகர்நிருதருருண்டிடச்சுரர்கணறுமலர்பொழிந்திடமுனிவன்
மகிழ்வுடன்முகத்தைமுடித்தவருடனும்வரநதிகடந்துநீள்கல்லா
மகலிகைசாபமறக்கவுசலைசேய்மிதித்திடத்துதித்தனளம்மா. (௬௭)

தலமிசைப்படர்கல்லுருவொழிந்தெழுந்தசமனிலாவகலிகையேக
நலனுறுமுனிவன்குமாரர்களுடனுமிதிலைமாபுரியிடைநண்ணிச்
சலமிலாதுயருஞ்சனகனையணுகவவன்மகிழ்ந்திடவுழைதரித்தோன்
சிலையினைக்கரத்தாலெடுத்தொடித்தனனற்றெசரதனருளியராமன். (௬௮)

விரைபுரைமலரோன்விபுதர்களண்டம்விண்டதுகொல்லெனவெருவ
வானுயர்சிலையையிறுத்திடுமிராமனழகினைநோக்கியசனகன்
றிருவும்வெள்கிடநற்சீதையையிணையில்கவுசலைசிறுவனுக்கீய்வான்
விரைவினின்வரவேதெசரதன்றனக்குவிழுமியதூதரைவிடுத்தான். (௬௯)

பீதகவரைபோற்பிறங்கியசிலையைப்பிடித்தொடித்தருளிராமனுக்குச்
சீதையைத்தருவனெனவுயர்மிதிலைசிறந்திடுஞ்சனகர்கோன்மொழியைத்
தூதர்சென்றுரைப்பத்தெசரதன்மகிழ்ந்துதோல்பரிவீரர்தேர்சூழ
மாதவமுறுந்தன்மனைவியர்சிறுவர்வதிட்டனுஞ்சூழ்ந்திடவந்தான். (௭௦)

வேறு. உததிபோலனிகர்சூழவொல்லையிலயோத்திவேந்தன்
மிதிலையினடைதலோடும்விறலுடையிராமனெங்கோன்
சதுமறைநெறியினாலேசமனிலாச்சனகிதன்னை
வதுவைசெய்திடலும்வானோர்மலர்மழைபொழிந்தார்மாதோ. (௭௧)

பாளிதமருங்கிற்சேரவயங்கியபரதனேரில்
வேளெனவிளங்குமெய்யன்மிதிலையிற்சனகன்பின்னோன்
கோளரிபோலவோங்குங்குசத்துவசன்றன்பெற்ற
மாளவியென்னும்பேராமடந்தையைவதுவைசெய்தான். (௭௨)

மான்மதஞ்செறிந்தமெய்யன்வளமுறுமயோத்தியாளும்
கோன்மகிழ்ந்துதவுஞ்செல்வக்குமரனிலக்குவன்றன்
றேன்மொழியாயசீதைக்கனுசியாய்ச்சிறந்தேயோங்கு
மூன்முளையெனும்பேர்மாதையுவப்பொடுமணந்தான்மன்னோ. (௭௩)

நதியுறுவளநாடாளுந்தெசரதனல்குமைந்தன்
சதுமறைநெறியையோம்புஞ்சரியில்சத்துருக்கன்வாரிச்
சுதையெனுமொழியளாயமாளவிக்கிளையதூய
மதிமுகச்சுரதகீர்த்தியெனுமிளைவதுவைசெய்தான். (௭௪)

மிதிலையினனுசரோடுமிராகவன்விவாகஞ்செய்து
மதிதவழ்கவிகையோங்குந்தெசரதருடனும்வையத்
துததிபோற்சேனைசூழச்சனகனையொருவியும்பர்
பதிநிகரயோத்திக்கெய்தப்படியின்மேலேகும்வேலை. (௭௫)

சரியில்மன்னிருத்தவல்விலொவியினைச்சகியமென்னும்
வரைமிசையதனிற்கேட்டுமனமுறுசினத்திஞேடும்
பரசுராமன்றனெய்திப்பழிப்பிலாவிராமன்றனஞே
டுருமெனவுலகமஞ்சவுருத்திவையுரைத்தானம்மா. (எகூ)

சிறுவநீயிறுத்தவில்லுமிணையிலென்சிலையுஞ்சீரா
வெறிமலர்க்கமலன்செய்யும்வேள்வியினெழுவேநேரில்
கறைமிடற்றரனேர்சாபங்கரத்திடையேந்தமாலா
மிறைவனேர்தனுவைப்பற்றியிருவருஞ்சமர்செய்தாரால். (எஎ)

இருவருந்திசைகளெல்லாமெரிந்திடக்கணைகள்பெய்து
பொருதிடும்வேலேநேரில்புராரிதன்கரத்திற்சாப
முருவமாலெய்தலோடுமுமாபதியந்தவில்லைத்
தரையிடைவிடுத்துச்செய்யுஞ்சமரொரீஇயேகினுனல். (எஅ)

அரன்முரணற்றவில்லையவனியின்விடுத்தேயேகத்
திருமகள்கணவன்றன்கைச்சிலையினையுவமையில்லா
விருசிகமுனிவற்கீயவவனென்றன்பிதாவுக்கன்பா
லருளியசாபமீதென்றஉறந்தவன்பினருஞ்சொல்வான். (எகூ)

உரனிலாத்தனுவைநீதானெடித்ததிங்காண்மையன்று
திருமகள்கணவன்கையிற்சிறந்தவிச்சிலையைநின்றோட்
பெருமையால்வளைத்தாயாகிற்பிறங்கலாரவனிதன்னி
னரசர்நாயகநீயாதியலேயெனிற்சமர்செய்யென்றான். (அ0)

பரசொளிர்கரத்தோன்கூறப்பழுதிலாவிராமனேக்கி
யரிசிலைதருதியென்னவவன்கொடுத்திடலும்வாங்கி
வினைவினிற்கரத்தினுலவ்வில்லினைவளைத்துத்தூய
சரமுறத்தொடுத்துநேரிறவனஞ்சச்சாற்றலுற்றான். (அக)

நலனுறுமரசர்மூவேழ்தலைமுறைமடியநண்ணிச்
சலமுடன்பொருதுவென்றுயாகிலுந்தவவேடத்தை
நிலமிசைத்தாங்குகின்றநெறியினுற்கொலைக்காகாயென்
சிலையுமிழ்சரந்தப்பாதாவிலக்குநீசெப்புகென்றான். (அஉ)

அரசவொண்ணயோத்திவேந்தனருளியகுமரன்கூற
வெருவியபரசுராமன்விளம்புவான்விரசையோங்குஞ்
சரியில்வைகுந்தந்தன்னிற்றத்துவமூர்த்தியாய
பரமநீநிருபன்போலப்படியின்மேனின்றுயென்றான். (அ௩)

திரையுறும்பயோததிக்கட்சேடன்மேற்றிகழுகின்ற
சரியிலாக்கவினுமண்டத்தப்புறஞ்சார்வைகுந்தத்
திருமகளுடனுந்தோன்றுஞ்செயலெலாம்வெள்கவிந்தத்
தரையினிற்சனகியோடுந்தகையெலாந்தரித்தாயென்றான். (அச)

உன்பெருமாயந்தன்னையுவமையிலுமையாளான
மின்பதிமலரோனாலும்விளம்புதற்கரிதேயாகு
மன்பருக்கெளியவையவடியனென்றவத்தையெல்லாம்
வன்புறுபகழியாலேவாங்குதியென்றான்மன்னே. (௮௫)

இரிசிகன்பவுத்திரன்னீதியம்பிடவிராமநம்பி
வரிசிலைப்பகழிதன்னைநெகிழ்த்திடவானோர்போற்றப்
பரசுறுகரத்தோன்செய்தபழுதகறவத்தைவாரி
விரைவினின்விசிகமீளவிழும்பியோன்வணங்கிப்போனான். (௮௬)

மழுவொளிர்கரத்தோன்கையிற்சிலையுமாதவமுநேரி
லழகனுமிராமநம்பிக்களித்தவனேசலோடும்
விழுமியவமரர்பொற்பூவிடுத்திடத்தாதையெய்தித்
தழுவியுண்மகிழவள்ளல்யோத்தியிற்சார்ந்தானம்மா. (௮௭)

சரயுசூழயோத்திதன்னிற்சார்ந்தவனிருக்குநாளிற்
கருமுகினிகராமைம்பாற்கைகேசிதாதையூரிற்
பரதன்சத்துருக்கனோடுமடைந்திடப்பழுதிலாத
வரசர்கோன்வசிட்டனாணவருந்தவனுடனேசொல்வான். (௮௮)

பரகதியடையவேநான்பழுவத்திற்றவஞ்செய்வேனாற்
றருமமெய்வலத்தினாலுஞ்சரியிலாவிராமன்றன்னை
விரைவினின்மவுலிதன்னைக்கவித்திடவென்றுகூறி
நிருபனாண்டதற்குத்தக்கபயனெலாநிறைக்கும்வேலை. (௮௯)

மறுவிலாவிராமனேரில்மணிமுடிசூடும்வாய்மை
நெறியதுகூனிகேட்டுங்கரில்கைகேசிக்குத்தா
னறையநற்றெசரதன்பாலவளடைந்தெனக்குமுன்னா
ளிறைவநீதருவேனென்றவரங்களீகென்றுசொல்வாள். (௯௰)

பரதனிவ்வரசையாளவருளிநீபதினாலாண்டு
விரைவினிற்சீதைகொண்கன்வனத்திடைமேவவிந்த
வரமிரண்டருளுகென்னமன்னவன்மயங்கிவீழத்
திருவுடனிராமன்பின்னோனுடன்பழுவத்திற்சேர்ந்தான். (௯௧)

குகனவனிறைஞ்சியேத்தவவன்விடுகுவலயத்தி
னிகரில்வானதியைநாவாய்மிசையினிற்கடந்துநீளும்
புகரிபமடையுங்கானிற்பொலிந்திடும்பரத்துவாசன்
மகிழவும்வணங்கிப்போனார்வஃபங்குசித்திரகூடத்தின். (௯௨)

தூயவோவியத்தின்கூடத்துற்றலைமசுமந்திரன்றான்
போயுயர்தெசரதற்குப்புகன்றிடப்பொருமிமன்னன்
மாயவீண்டிராமன்சூடுமகுடமென்றுயர்கைகேசி
சேயினுக்குரைமினென்றுமுனிசெப்பத்தூதர்சென்றார். (௯௩)

மாதவவசிட்டன்கூறமறுவிலாப்பரதன்பாலிற்
தூதுவரெய்தியுன்முன்னவன்முடிசூடவாவென்
றோதலுமகிழ்ந்துபின்னோனுடனடைந்தவன்றாய்சொல்லாற்
றாதைமாண்டதுவும்வள்ளல்வனத்திற்சார்ந்ததுவுங்கேட்டான். (கூச)

தாயெனுந்தீயடன்னைச்சலத்தொடுமொருவியேகிச்
சேய்பிரிந்திடலுமாண்டதெசரதன்றன்னைத்தீயிற்
றூயவேதியர்சொல்லாலேதுலங்குசத்துருக்கன்வைத்து
நேயமோடுதகத்தெள்ளுநிறைத்திடவாற்றினானால். (கூரு)

இடருறும்பரதன்றன்னைவசிட்டனீயிரங்கலிந்தப்
படியினையாள்தியென்றுபகர்ந்திடநடுங்கிமுன்னோ
னடையுமாவனத்தினெய்திக்கொணர்வனென்றறைந்துதானுஞ்
சடையுயர்சீரைசுற்றிவனத்திடைச்சார்ந்தானம்மா. (கூசா)

நகருளோர்பலருமெய்தநன்னெறிவசிட்டனோடுங்
குகன்விடுமம்பிதன்னிற்கங்கையைக்கடந்துகோதில்
நகபதியெனவேதோன்றுஞ்சித்திரகூடம்நண்ணி
நிகரிலாவிராமன்பாதத்திறைஞ்சிபின்றிரங்கிச்சொல்வான். (கூஎ)

என்றனைப்பயந்தபாவியிழைத்திடுந்தீமைதன்னா
லுன்றனையொருவலாலேமடிந்தனனுந்தையென்ன
வின்றுலகயின்றவையனரற்றலுமுனிவன்றேற்றத்
தன்றுணைக்கரத்தாற்பிண்டஞ்சலந்திலமளித்தானம்மா. (கூஅ)

தாதைநற்கதியையெய்தவியற்றியசதுரன்றன்னைப்
போதுநீமகுடஞ்சூடவெனப்புகன்றிடும்பின்னோனை
நாதனுமகிழ்ந்தீரேழாண்டறவவணண்ணுவேனென்
றோதிடச்சிரசின்முன்னோன்பாதுகமொளிரப்போனான். (கூகூ)

பாதுகஞ்சிரசின்மீதின்வயங்கிடப்பரதனேக
மாதவர்மகிழவந்தவரையினையொருவிவள்ளல்
போதமர்திருவுநேரிளவலும்புடைசெல்வேலை
தீதுசெய்விராதன்றன்னைத்தெறவவன்கதியிற்சேர்ந்தான். (க00)

வேறு. விறலுறுவிராதன்கதியினிற்சேரவிழுமியசரபங்கனிடத்தி
னுறவவன்றழலின்வீழ்ந்துயர்பதத்தையுற்றிடவிரைவினினேகிக்
குறுமுனியடியினிறைஞ்சிடவவன்விற்கணையொடுதூணியைக்கொடுப்பப்
பறவையினதிகசடாயுவைக்கண்டுவியல்பஞ்சவடியினிற்சேர்ந்தான் (க0க)

படியினிற்பஞ்சவடியினினமருந்தினத்தினிற்பழுதகல்சனகி
வடிவினின்மயல்சால்மகபதிசிறுவன்மருளுறுகாகமாயெய்தித்
தடமுலைமிசையிற்கிழித்திடமுனிந்துதசரதவிராமனோர்திரணம்
விடவிசும்படையத்தொடர்ந்தொருநயனம்விழுந்திடவகற்றியதன்றே. (க0உ)

நிருதிசூர்ப்பநகைநிகரில்மோகினியாமுருவினைநிறைந்தெனையணையென்
றுரைசெயவிராமன்மறுத்திடவவடானுவமையில்சனகியைப்பற்ற
விரைவினினிளவலவள்செவிநாசிவிழுமியநகிலிவையறுப்பக்
கரனுடன்குருதிசொரியவேயிறைஞ்சியிவையெலாங்கழறினளம்மா. (௧௦௩)

நிருதியீதறையக்கனன்றெழுங்கரன்றூடணன்றிரிசிராநிகரில்லாப்
பரிகரியிரதம்நிசாசரர்சூழ்ந்துபழுவத்திற்சமரொலாஞ்செய்து
குருதிகள்பெருகத்தலைமலையெழவான்குவாலுறக்குறைத்தலையாட
வரசர்கடிலகத்தசரதவிராமன்கணையினாலவனியின்மடிந்தார். (௧௦௪)

கரனுடனனுசரிராக்கதர்மடியக்கலங்கியவரக்கியுட்காந்திப்
பரவைசூழிலங்கையிராவணனடியிற்பணிந்தவள்பழுதிலாதுனக்குத்
திருமகணிகராஞ்சனகியைக்கொணரச்சேர்ந்தியானவடனைப்பற்ற
வரிசிலையிராமற்கிளவலென்னகில்மூக்கிருசெவிவாளியாற்கொய்தான். (௧௦௫)

குருதிநீரிரியமுலைசெவிநாசிகுறைந்தயானரற்றிடக்கேட்டு
விரைவினிற்கரதூடணன்றிரிசிராவெவ்விடமெனவணைந்திராமன்கை
வரிசிலையுமிழுங்கணையினான்மடிந்தாரெனவயிற்றெற்றியாண்டரற்றி
யுரைசெயச்சனகியழகுகேட்டரக்கன்மயலுறவுளைந்தனனன்றே. (௧௦௬)

மருளுறுமளகச்சனகிதன்மயலாலுளைந்துமாரீசனையடைந்து
விரைவினிற்பஞ்சவடியினவடானிவணுறும்வினைசெய்யென்றறையும்
நிருதர்கோன்மொழியானுழையுருவாகிநிகரிலாச்சனகிமுன்றிரியத்
திருமகளிதனைத்தருதிநீயிராமாவெனுமுரைசெப்பினளன்றே. (௧௦௭)

தேவியீதுரைப்பச்சிலையுடனிராமன்றிரிந்திடுமுழையினைத்தொடர்ந்து
பாவமார்மடவார்மனமெனக்குரங்கம்பழுவத்தினகப்படாதேக
மேவுவோன்மாயமிவையெனக்கணையைவிடச்சிரந்துணியுமாரீச
னாவிபோயிடுங்காலிலக்குவசனகியெனமனன்குரலறைந்திறந்தான். (௧௦௮)

மதிமுகச்சனகிநிருதனாண்டரற்றுங்குரலினான்மகுணன்சொல்லென்று
பதறியேகெனமன்னிளவலுமொருவப்பவமுறவிராவணனுயரு
மெதியெனவடைந்தாண்டவடனைப்பற்றியெதிர்ந்திடுசடாயுவைவதைத்தே
யுததிசூழிலங்கைநகரிடைமேவியுத்தமிதனைச்சிறைவைத்தான். (௧௦௯)

சனகியாணையினாலொருவிடுமிளையோன்றனையிடைப்பெட்புறவேகி
யனுசனையடைந்துன்மனைவிசொல்லதனாலணுகினனெனவவனுளைந்து
கனகமாமெனுமெய்த்திருவினைப்பஞ்சவடியினிற்காண்கிலனாகித்
தினகரனவிரால்வதனம்வேர்வரும்பவாடியேதேடினனம்மா. (௧௧௦)

பவனவேகத்தாலடைபவனுயரும்பறவைகட்கதிகமாஞ்சடாயு
புவியினினுளைந்துவீழ்ந்திடக்கண்டுபுனல்கணின்மலியவேயிரங்கித்
தவர்வியப்புறவப்புள்ளுயர்பரமன்றயங்கிரும்பதத்திடையேகக்
கவலையார்மனத்தனவன்றனைப்பரிவாற்கனலிடைவளர்த்தனன்மாதோ. (௧௧௧)

புவியிசையிறந்தசடாயுவைக்கனலினருமறைப்பொருளுறவளர்த்தி
யுவரியிற்கதிரோன்மறைந்திடுமிரவினயோமுகியுறவவஞ்சி
செவியிழப்புனலைக்கொடுவரக்கயத்திற்சென்றிடுமிளையவன்கொய்ய
வவனியினுயிரைக்கரத்தினால்வாரியருந்திடுங்கவந்தனைவதைத்தான். (ககஉ)

புவியினினிறந்தகவந்தனோர்தவனுக்கதியிடைப்போகவேயருளிச்
சுவைதருகனியையருந்திடவளித்துத்தொழுதிடுஞ்சவரியாமரிவைக்
குவமையில்பரமபதத்தினையன்பாலுதவிநற்பம்பையினெய்திக்
கவிகுலதிலகவனுமனைக்காணக்கதிரவன்சேய்சகாவானான். (ககங)

இரவிதன்சிறுவன்றுணைவனாயடையுமிராகவன்பாதவங்குட்டம்
வரையெனவுயர்துந்துமியெலும்பிடையின்மடுத்துவானெழுந்திடவுந்தித்
தரையினிவரேழ்மராமரம்விழவேசாயகம்விடுத்துயர்வாலி
யுரமறவுயிர்போம்படிகணைதுறந்தானும்பர்கள்வியப்பொடுதுதிப்ப. (ககச)

அங்கதமுறுநல்லங்கதப்புயமன்னங்கதன்றனக்களிசுரந்து
செங்கைதங்குடைவாள்சிறப்புறவீய்ந்துதினந்திசையெங்கணுந்திரிந்தே
கங்கைபொங்கியகோடீரனைமலராலருச்சனைசெய்திடுங்கவியாந்
துங்கனன்றருளுஞ்சுதனைவரித்துத்துலங்குதிநீயெனச்சொன்னான்.

சுரர்பதிசிறுவன்றனைவதைத்திரவிசுதன்றனக்கரசினையளித்து
மருவலர்கெடவெங்கணைதொடுமிராமன்வருடகாலங்கழிந்ததற்பின்
விரைவினின்வருதியெனவவன்பதியின்மேவிடலுஞ்சரற்காலம்
வருதினந்தனிலுங்கவிகுலக்கிறையாய்வயங்குவோன்வந்திலனன்றே. (ககரு)

வருடகாலந்தானொருவவுமிரவிமதலைவந்திடாதமர்ந்திடநற்
புருடர்நாயகனுமிறையிலக்குவனைப்போயவன்றனைக்கொணர்கெனவுங்
கருடவேகத்தாலவன்பதியணுகிக்கழறிடக்கதிரவன்சிறுவன்
மருடவிர்ந்திடவானரப்படைசூழமன்னடிவணங்கினன்மாதோ. (ககள)

வானரவினத்தோடடைந்திடுதபனன்மதலையைமகிழ்ந்திடுமிராமன்
றேனுகுமொழியாஞ்சனகியைத்தேடத்தென்றிசையடைந்திடுமென்றே
மானகங்கரங்கதனயன்குமரன்மாருதிநீலனோடனேகத்
தானையைவிடுப்பவவர்களோர்பெலத்திற்சார்ந்தவனொருவியேகினரால்.

தரையினில்மனிதருறைவிடம்பழுவஞ்சயிலமெண்ணிலபலமுழைகள்
பரவியாசுகன்றன்வேகமோடுழன்றுபங்கயச்செல்வியைக்காணார்
தெருமரலுறத்தம்முயிரினைவிடுவமென்றுதென்றிசைமகேந்திரமால்
வரையினினெவருங்குழுமியேதேடும்வகையிலார்வருந்துமெல்லையிலே. (ககஅ)

அனுசனுஞ்சடாயுதபனன்வெம்மையினாலயர்ந்திடவவன்றனைக்காத்துத்
தினகரன்கிரணமதனினாற்சிறகுதீய்ந்தசம்பாதியாண்டுறலும்
வனசரர்குழுமியிராமவென்றேத்துநலத்தினால்வளர்ந்திடுசிறகன்
சனகிசாகரஞ்சூழிலங்கையினமர்ந்தாளெனுமுரைசாற்றினன்மாதோ. (கஉ0)

வேறு. எருவைமன்றிருவிருந்தமையியம்பிடக்கடலி
னிருதிவாயினிற்புகுந்தவள்வயிற்றினைநீக்கி
விரைவினாலவள்குடரொடாசினியிடைமேவிக்
குரைகொள்வேலையைக்கடந்தனனஞ்சனைகுமரன். (௧௨௧)

எதிரிலங்கைமாதேவதைதன்னையீடழித்து
மதில்வளைந்திடுமிராவணன்கோயிலின்மன்னிச்
சதுரவீதியின்மனைதொறுந்தாவியேதிரிந்து
புதியநல்லமிர்தானபொற்கொடியினைக்காணான். (௧௨௨)

இலங்கைமாநகரெங்கணுந்தேடியுங்காணாக்
கலங்குசிந்தையன்கவினுறுமசோகநற்காவாண்
டிலங்கவெய்துவோனிமைப்பினினேகியேகண்டான்
கலங்கிநீர்பொழிந்திடக்கலைநனைந்தசானகியை. (௧௨௩)

மாசறும்மணியேயநீடுயர்கொள்மைதிலியை
ஏசறுங்குணமாருதியிறைஞ்சியேயிராம
னாசறுங்கரவிரலிடையாழியையளிப்பத்
தேசுறுந்திருவாங்கித்தன்சென்னிமீதமைத்தாள். (௧௨௪)

சிரசின்மீதொளிராழியைச்சேர்த்திடுஞ்சனகி
யிரவியின்னவிர்போன்றசூளாமணியீய
விரைவின்வாங்கியமாருதிவிளம்பிநீள்பொழிலைச்
சுரர்துதித்திடத்துகைத்தனன்றுகளதாயிறவே. (௧௨௫)

வேறு. சரருலகளவாய்த்துலங்குமுத்தியானந்துகள்படவடிகொடுதுகைத்து
வரைநிகர்கவியொன்றடர்ந்ததுவெனக்காப்பவர்கள்சென்றிலங்கைமன்னவ
குரைசெயமுனிந்துபரிகரியுடனேயுலப்பிலாநிருதரைவிடுப்பப் [னுக்
பரவைபோலவர்கள்வளைந்திடக்கண்டுபவனன்சேயெழுந்தமர்செய்தான்.

விக்கிரமத்தாலடர்நிசாசரரைவிலங்கல்போல்விழுந்திடவதைத்துத்
திக்கயமெனவங்கெதிர்ந்தமந்திரிகளெழுவர்சேனாபதியைவர்
கொக்கரித்தயில்வேல்விடுத்திடுஞ்சம்புமாலியோடிவர்களைக்கொன்று
யக்கனைக்குதியால்நிலத்திடையரைத்தந்தகாந்தகனெனத்திரிந்தார்த்தான்.

பரிகரியிரதம்நிருதர்மந்திரிகள்பஞ்சசேனாபதியக்கன், றனையினில்மடியப்புர
ந்தரசித்துச்சரமைந்துவிடுத்துவந்தடர்த்துப், பிரமவத்திரத்தாலுயருமாருதி
தோளுறப்பிணித்திலங்கையாண்மனன்முன், விரைவினின்விடுப்பவவன்முனி
ந்திவன்வால்வெந்திடச்சுடுதியென்றுரைத்தான். (௧௨௮)

நிருதர்கோனுரைப்பப்பலரிராக்கதர்கள்நிகரிலாமாருதிகூலத்
தெரியினைக்கொளுத்தச்சனகிசொல்லதனாலிதையமோடென்புகள்குளிரத்
திருமகள்செயலீதென்றுணரனுமன்றசமுகனகரெலாமெரியத்
சரியிறன்வாலின்மிசையினினெழுந்தழலினையெங்கும்வைத்தனனால்.

சதுரமாரிலங்கைநகரினைக்கூலத்தழலினாலெரித்ததன்பின்னர்
கதுமெனச்சனகியடியினிறைஞ்சிக்கடலினைக்காலினாற்கடந்து
மதுவனமழித்தங்கதன்முதற்கவிகளுடனிராகவன்றனைவணங்கிச் [ன்.
சுதைதருமொழிநற்சீதையீய்ந்திடுஞ்சூளாமணிகொடுத்தெல்லாஞ்சொன்னா

மாருதிசனகியிருந்தவாறுரைப்பமகிழ்ந்திடுமிராகவனெழுந்து
பாரினிற்கவிகள்பரவைபோல்மிடையப்பருதிசேய்முதலினோர்சூழச்
சீருறவயங்குமிலக்குவனுடனேதென்றிசையளக்கரிற்சேர்ந்து
நேரிலாச்சலதிக்கரையினிற்றானைநிறைந்திடவமர்ந்திடும்வேலை. (௧௩௧)

வேறு.
எரியினினேம்பலுற்றிடுமிலங்கையைச்
சுரர்நகர்வெள்கிடத்துலங்குசெம்பொனால்
நிருதர்கோன்மகிழ்ந்திடநிகரிலாமயன்
விரைவினிற்குயிற்றினன்மணிகள்வில்லிட. (௧௩௨)

மயனியற்றிடவிலங்கிலங்கைமன்னவ
னியல்புறுங்குரங்குவாலெரியவைத்திட
வுயனமற்றிடவவ்வூரழிந்ததென்னினிச்
செயும்விறலேதெனச்சினத்துக்கூறினான். (௧௩௩)

எரிசினவிராவணனிவைகள்கூறலுஞ்
சுரர்பதிசெயித்திவைசொல்லுவானுயர்
நரரொடுகவிகடன்னாமம்வேறற
விரைவினிற்செற்றிவண்மீள்வனென்றனன். (௧௩௪)

தாதையோடிவைசுதன்சாற்றவீடணன்
றீதுசொல்லினையெனச்செப்பிமுன்னவன்
பாதமேற்பணிந்துயர்பரமன்றேவியை
யேதமற்றிடவிடுத்துய்யென்றனரோ. (௧௩௫)

இனையசொல்லிளையவனியம்பமுன்னவன்
முனிவுடனகல்கெனமுடுக்கவீடணன்
வினையொரீஇநால்வர்மந்திரிகள்மேவிடத்
தனைநிகரிலாதமால்சரணந்தாங்கினான். (௧௩௬)

தீமையில்வீடணன்சேர்ந்திறைஞ்சநற்
பூமனைத்தந்தருள்புனிதராமனென்
னாமமுள்ளளவும்நீவாழ்கநாமமார்
மாமதிளிலங்கையைவழங்கினேனென்றான். (௧௩௭)

சிந்துவினலையுறத்திகழிலங்கையைத்
தந்தனனென்றமனடியிற்றாழ்ந்துபின்
னிந்திரன்றனைச்செயித்திலங்குதீயவன்
றந்தையின்வலனெலாஞ்சாற்றினானரோ. (௧௩௮)

நிருதர்கோனுரனெலாம்நிகழ்த்தக்கேட்டமன்
பரவைசூழிலங்கையம்பதியிற்சென்னெறி
தருகுதியெனத்தவஞ்செய்யச்சார்கிலா
வருணன்மேற்சரம்விடவாரிவெந்ததே. (கஙகூ)

பரவைகளேழினும்பகழிபாய்ந்திட
வெரிகனல்மடுத்திடவேங்குநெஞ்சினன்
வருணன்வந்திறைஞ்சிடவரையினாற்கவி
திரையுறுமுவரிமேற்சேதுசெய்ததே. (கச0)

கடலிடைச்சேதுவைக்கடந்திலங்கையின்
மிடலுடையிராகவனமரும்வேலையிற்
கடியவனொற்றர்கள்கலந்துவானரர்
வடிவுகொண்டெய்தினார்மறங்கடுஞ்சவே. (கசக)

சாரணர்சுகரிவர்சாரவீடணன்
சோரனென்றிவர்களைப்பற்றச்சோதியோ
னேருறுமிலங்கைதனிலவற்கியந்தமை
கோரராவணனுக்குக்கூறுமென்னவே. (கசஉ)

கவினுறுமிராகவன்கழறவொற்றர்கள்
பவமுறுமிராவணனடியினிற்பணிந்
தவரியிற்சேதுவையோரிமைப்பின்முன்
கவிகள்கட்டினதெலாங்கனன்றுகூறினார். (கசங)

சேதுவைக்கடந்திவண்சேர்ந்துவிடணற்
கேதமிலிலங்கையையிராமனீய்ந்ததுந்
தூதுவர்குருதிவாயுமிழச்சொல்லவே
தீதுறுதெசமுகன்சினமுற்றானரோ. (கசச)

வேறு. முனிவுடனிருதனெழில்கொள்கோபுரத்தின்முகட்டினினேறியேயிலங் [க
வனக்குஞ்சுவேதவரையினுச்சியின்மீதமர்ந்திடநோக்கிடுவேலைத்
தினகரன்புதல்வனிமைப்பினிற்சேர்ந்துதெசமுகன்சிரத்தினின்வயங்கும்
கனகமாமவுலிமணியினைக்கவர்ந்துகாகுத்தனடிமிசைத்தாழ்ந்தான். (கசரு)

கோலமார்மவுலிமணியினையிழந்துகொடியவனுளைந்திடும்வேலைச்
சீலமாரிராமன்சனகியைவிடுத்துவுய்யெனச்செப்பிவாவெனவே
வாலிகான்முளையைவிடுத்திடவவன்போய்மொழிதலுமற்றவன்மறுப்ப
நீலமாமுகில்போற்கவின்கொளுமிராமனுடனிவைநிகழ்த்தினனம்மா. (கசசு)

சனகியைவிடாதுமறுத்திடுமரக்கன்சமரிடையெதிர்ந்திடுமயிலா
லனகனுக்கிளையோனயர்வுறவவனையெடுத்திடுமரக்கனைப்பவனன்
றனையன்வந்திமைப்பிற்றடுத்திலக்குவனைத்தடக்கையாலணைத்தவனேக
வினையறுமுனிவர்துதித்திடத்தருவின்மலர்பொழிந்தார்த்தனர்விபுதர். (கசஎ)

நீளிபோலிரதமிசையினின்வயங்கிவிசிகம்விட்டடரிராவணனைக்
காளமாமுகில்போற்கவினுறுமிராமன்காலினற்சுதன்புயமிலங்கி
நீளும்வார்சிலையிற்கணையினாலவன்றன்மகுடம்வில்நிலத்துறவறுத்து
நாளைவாவெனுஞ்சொல்மொழிந்திடவவனும்நாணமுற்றகனகரடைந்தான்.

விறலெலாமழிந்துவெறுங்கரம்நாற்றிமீண்டவன்தனக்குமாலியவா
னறனலதியற்றினிவைவருவனவென்றறைந்திடமகோதரன்முனிந்து
குறைவிலாக்கும்பகருணனைவிடுத்துக்கொடும்பகையழித்தியென்றுரைப்ப
நிறைதுயிறவிரவவன்றனையெழுப்பிநெடுஞ்சமர்பொருதிநீயென்றான்.

நிருதர்கோனுரைப்பநெடுவரைநிகர்த்துநீண்டமர்செய்திடுமரக்கன்
குருதிநீர்பெருகக்கவிக்குலமடையக்கொன்றுசுக்கிரீபனைப்பிணித்து
விரைவினிற்றிரும்புமளவினிலிராமன்விலக்கியாண்டவன்கைகாறுணித்துச்
சிரமுவரியின்கண்விழுந்திடச்சரத்தைநிறைத்திடத்தேவர்களார்த்தார் (கரு0)

மருத்தனைச்சனகனுகவேவகுத்துமாயமாங்கியற்றிவைதேகி
பெருத்திடுமிடரினயர்ந்திடுமளவிற்பிறங்கலைநிகர்கும்பகருணன்
சிரத்தினையிராமன்துணித்திடுஞ்செயலைச்சென்றிடுந்தூதுவர்மொழிய
வருத்தமுற்றரற்றுமிராவணன்முனிந்துவயங்கதிகாயனைவிடுத்தான். (கருக)

அந்தகனெனவந்தடர்ந்ததிகாயனத்திரத்தரிகளையழிக்கச்
சுந்தரமிகுத்தவிலக்குவன்சிலையாற்சுடுகணைமழைகளைசொரிந்து
கந்தமாமலரோன்படையினாலவன்றன்சிரத்தினைக்கதுமெனத்துணிப்ப
விந்திரன்முதலாயிமையவர்மலர்கள்பொழிந்தனரொழுந்தெழுந்தாடி. (கருஉ)

பின்னரும்நிகரிலிராவணன்குமரர்பிறங்கல்போலடர்ந்திடுமவரைத்
துன்னியவிருளையொழித்திடுமிரவிசுதன்முதலாயினோர்கரத்தாற்
சின்னபின்னங்களுறத்தடிந்திடலுஞ்சென்றுதூதுவர்சொலவிலங்கை
மன்னவனிரங்கிவலாரியைச்செயித்தமறவனைவிடுத்தனன்மாதோ. (கருங)

அரனயன்வெருவவிராவணிமுனிவோடரிகளைச்செற்றுவான்கரந்தே
யுரகவெம்படையாலிலக்குவனுடன்வானரங்களைப்பிணித்திடவுவணன்
விரைவினிரவம்விட்டுவானரங்கள்விளங்கியாண்டெழுந்திடவிபுதர்
தருமலர்சொரிந்துநடித்திடமுனிவர்சதுமுகனொடுந்துதித்தனரால். (கருச)

இரணியவரைபோலெழுந்துசெல்கலுழனிலகமாவுரகவெம்படையின்
முரணறுஞ்செயலையடைந்திடுந்தூதர்மொழிந்திடவிராவணன்முனிந்து
கருணைபற்றறுங்கரன்மகன்முதலாய்க்கடியவல்லரக்கரையேவத்
தரணியிற்கடல்போலெதிர்ந்திடுமிவரைத்தடிந்திடுமிரவிசேய்முதலோர்.

இரவிசேய்முதலோர்கரத்தினாலிமைப்பினெண்ணிலாநிருதர்வீய்ந்திடலு
மரனெனமுனிந்துவருணமாப்படையோடாசுகாத்திரத்தினைவிடுக்குங்
கரன்மகன்சிரத்தைக்கடுங்கணையதனுற்காகுத்தன்களைந்திடக்கண்டு
விரைபுனாகனகத்தருமலர்பொழிந்துவிபுதர்கணடித்தனர்மாதோ. (கருசு)

சரன்மகன்முதலாய்நிருதர்கள்மடிந்தசெயலினைத்தூதுவர்கழற
நிருதர்கோன்விடுப்பவிராவணியனிகநிறைந்திடவரவிலக்குவமன்
வரிசிலைவலத்தாலறுபதுவெள்ளத்தரக்கரைவதைத்திடநோக்கிக்
கருகியமனத்தனயன்படைவிடுக்கக்கருதிவானகமிசைவந்தான். (கருஎ)

கருமுகிலிடையவ்விராவணிகரப்பக்கடியனுமகோதரநிருதன்
சுரர்பதிவிபுதர்மனிதர்களுருவாய்த்தோன்றிடவிலக்குவனுடனே
யரியினந்திகைக்குமளவினிலொளித்தவறனிலானயன்படைவிடுப்ப
வெருவிவிண்ணவர்களொருவிடவிளையோன்விழுந்தனன்கவிக்குலமடைய.

விறலுடைநிருதன்விடுத்திடும்படையாற்கவிகளோடிளையவன்விழலும்
நெறியுறுமிராமனடைந்தவணிரங்கிமயங்கிடநிகரிலாச்சாம்ப [தைச்
னுறையமாருதிபோய்ப்பசும்பொனின்வரையைக்கடந்தவுடதப்பருப்பதத்
சிறகுடைக்கலுழனெனக்கொணர்ந்திடலுமுயிர்வரத்தெளிந்தனர்வீரர்.

விரைவினினனுமானவுடதவரையைக்கொணர்ந்திடவுயிர்வரும்வீரர்
சுரர்மலர்பொழியவயங்கினரெனுஞ்சொற்றூதர்சென்றறைந்திடவரக்கன்
எரிசினமுறத்தன்சுதன்றனைநோக்கியினிச்செய்வதேதெனமாயக்
கருமமங்கியற்றிநிகும்பலைமுடித்துக்களைவனந்நரரையென்றுரைத்தான்.

தீயவனிவையையிராவணன்தனக்குச்செப்பிமாவவுடதவரையை
யேயெனுமளவினவணிடையிருத்தியெய்தியமாருதிமுனரின்
மாயமைதிலியாயரற்றிடத்துணித்துவனப்புறுமயோத்திமாநகரிற்
போயதினுறுவோர்கிளையுடன்பொன்றப்பொருவனென்றேகினனம்மா.

தீயவன்வதைக்கச்சனகிமாண்டனளென்றிராமன்முன்மாருதிசெப்ப
வாயிரம்பெயரோனயர்ந்திடுமளவிலறிஞனும்வீடணனவணிற்
போயுயர்சனகன்புத்திரிதனைக்கண்டவையெலாம்புகன்றிடமகிழ்ந்து
மாயவாளரக்கனிகும்பலைமகத்தைச்சிதைத்தனன்சுமித்திரைமதலை. (கசுஉ)

வடதருநிழலிற்செயுநிகும்பலையாமகத்தினையழித்திடக்கனன்று
கடியவனயன்மாலரன்படைவிடுப்பக்களைந்திடுமிராகவற்கிளையான்
படிமிசையவன்றன்கரமொடுசிலையும்படிந்திடத்துணித்தவன்சிரத்தை
நெடியவெங்கணையாலறுத்தனனமரர்நிறைமலர்பொழிந்தெழுந்தாட. (கசுங)

புரந்தரசெயித்துமடிந்திடத்தூதருரைத்திடவிலங்கையாண்மன்ன
னரந்தையுற்றரற்றியமர்க்களத்திடையினடைந்துதன்சிறுவனுக்கையினைக்
கருந்தடங்கரத்தாலெடுத்தவனகரிற்கடிதுசென்றேதிலதயிலம்
பொருந்திடவமைத்தாண்டிடருறுமளவிற்போந்தனமூலமாத்தானை. (கசுச)

சகசிரவெளமாயறைந்திடுமூலத்தானையையிராமன்மேன்முடுக
மிகவுநெஞ்சொல்கிக்கவிகள்பாறிடலும்வெருவலென்றங்கதனிறுத்த
விகழ்விலாவிளையோயவர்களைக்காவென்றேவியேகன்னலேழரையிற்
பகலவன்குலமனுயிரம்வெளமும்பகழிமாமழைபொழிந்தறுத்தான். (கசுரு)

இரியும்வானரமாவினங்கள்மேலடர்ந்தவிராவணனிலக்குவன்மீதின்
விரைவினின்மோகாத்திரம்விடவதனைவீடணன்மொழியினாலிளவ
லரிபடைவிடுத்தேயறுத்திடக்கதமுற்றனுசன்மேலரக்கனேவயிலை
யுரமிடைதனிலேற்றுயர்சுமித்திரைசேயொல்லையினயர்ந்தனன்மாதோ.

வீடணன்றனைக்காத்தரமிசைக்கதிர்வேல்விலங்கவேற்றிடுமிலக்குவன்றன்
வாடிமண்மிசையின்விழுந்திடவரக்கன்மகிழ்வொடுதன்னகர்சேரப்
பீடுடையனுமன்மருந்துபோய்க்கொணரப்பிரிந்திடுமுயிர்வரத்தெளிந்து
கூடினனிராமன்றனையவனனுசனாகியகொற்றவன்மன்னோ. (கசுஎ)

வேலினாலிராமனனுசனைவென்றுமகிழ்வொடுமேவியவரக்கன்
மூலமாத்தானைக்கினியநல்விருந்தையளித்திடவழையெனமொழியக்
காலன்வாயவர்கள்விழுந்திடவிராமன்கனைந்தனனெனவொற்றர்சொற
வாலமேகிகராயிராவணன்கதமுற்றமர்செயப்புகுந்தனனம்மா. (கசுஅ)

மகபதியிரதமலருளோன்மொழியால்மாதலிகொணர்ந்துமுன்னிற்பக்
ககபதிமிசையின்வயங்கிடுமாயோன்கவினுறத்தேர்மிசையேறி
நகபதியெனவேயிலங்கிவந்தடருமகோதரனமனுலகடையச்
சிகிபதிவிசிகந்தனின்விசைசெய்தான்றேவர்கள்மலர்மழைபொழிய. (கசுஅ)

மந்திரியெனவேவயங்கியங்கெய்திமகோதரன்மடிந்திடமுனிந்து
வெந்திறலரக்கனிரதமேல்வரலும்விறலுடையிராமனுமடர
வந்தனதிசைகளாசினிவரைகளயனமர்ந்திடுநகரடங்கச்
சிந்தையினினையுமுனரொணில்சாரிதிரிந்தனர்சிலீமுகம்பொழிந்தே. (கஎ0)

தீயவன்முனிந்துசிலையினால்மாயச்சிலீமுகம்விடுத்திடவிராமன்
தூயமாஞானக்கணையினாற்றுணிப்பநிருதனோர்சூலம்விட்டெறிய
மாயவனதனைச்சலத்தினுங்காலவலத்தினாற்றுசளுறநூறி
ஆயிரங்கணையாலரக்கன்றன்சிரங்கையதனையுமறுத்தனனம்மா. (கஎக)

கணையினால்விழுந்தசிரங்கரமனைத்துங்கடிதினிற்கிளைத்திடநோக்கி
யிணையிலாவிராமன்சிலையினால்விடுப்பவிலங்கியசதுமுகாத்திரத்திற்
பணியணிமுதலும்பங்கயத்தவனுங்கொடுத்திடும்வரமெலாம்பருக
மணிதிகழ்கலன்களூறுமுராமுருவமண்மிசையிராவணன்மடிந்தான். (கஎஉ)

சுரர்மலர்பொழியத்துந்துமிமுழங்கத்தூயமாமுனிவர்கணடிப்ப
வரையெனத்தரையினிராவணன்மடியமயன்மகளரற்றியேமாயச்
சரியிலாவிராமனருள்வீடணன்றன்றம்முனையெரியினைவளர்த்தி
யருமறைநெறியாற்றிலமயமளித்தேயனகனையிறைஞ்சினனம்மா. (கஎங)

தினகரன்குலமன்னுரைத்திடுமொழியாற்சீருறுமாருதியேகிச்
சனகியையிறைஞ்சியிராவணன்மடிந்தநலன்றனைச்சாற்றிடமகிழும்
வனிதைநீர்படிந்துகலன்களுமணிந்துமறுவிலாவீடணன்மகளோ
டனகனைவணங்கவவன்கதமுறலுமனலிடைவிழுந்தெழுந்தனளால். (கஎச)

அரிமுனிந்திடத்தானனலிடைவிழுந்தவரிவைதன்கற்பினுலந்த
யெரியிறைவெருவிச்சிரத்தினிற்சுமந்தேயிராமனையிறைஞ்சிநின்றேத்தப்
பரிவின்மைதிலியைமகிழ்ந்தருளிராமன்றனையுயர்பங்கயத்தவனு
மரனெடுமயிராபதத்திறைதுதிப்பவமரர்கண்மலர்மழைபொழிந்தார். (௧௭௫)

அயனகர்தனினுமமரர்கள்பணியவந்தரதுந்துமிமுழங்கத்
தயரதனணுகவிராகவன்வணங்கத்தனையனைத்தழுவிநன்மருகிக்
கியல்புறுவசனமுரைத்திலக்குவனையணைத்திடுந்தாதையையிராமன்
றுயருறுபரதனன்னையாமிவளைமுனிந்திடாதருளெனச்சொன்னான். (௧௭௬)

மாயவனருளத்தயரதவரசன்மைந்தகேவனத்திடையேகத்
தீயகைகேசிவினைத்திடும்வினையாலவளுடன்சேயையுமிகழ்ந்தேன்
றூயவிவணீசொலுமொழியாலேயிவர்கள்மேன்முனிவினைத்துறந்தேன்
மீயுயர்வடமீனனையசானகியாமின்னுடன்வாழெனவகன்றான். (௧௭௭)

தாதையீதுரைத்துப்பெயர்ந்திடவிராமன்றமனியப்புட்பகவிமான
மீதினிற்சனகியுடன்மகிழ்ந்தமரின்வீடியவசந்தனையனுமான்
போதன்மாநகரிற்கொணர்ந்திடப்பருதிபுதல்வன்வீடணன்முதலானோ
ராதரவுடனேயமர்ந்திடக்கடலினணையதாஞ்சேதுவையடைந்தான். (௧௭௮)

சேதுவைத்தனுவினுதியினாற்கீறிச்சிறந்தவைதேகியைநோக்கி
மாதுநின்னுழையின்வருவதற்காகவகுத்தவிவ்வாரியினணைவா
ராதவன்விதுவைக்கலந்தநற்றிதியிற்படிகுவாரிழைத்திடுமன்னம்
வேதியர்வதைசெய்கன்றியைமறக்கும்வினையெலாமாய்ந்திடுமென்றான்.

சுரர்நதிபயத்திற்றோய்ந்துமாண்டகலாத்தொல்வினையாவையுந்திசரி
லரிவைநீயமருமிடத்துறவேண்டியளக்கிற்செய்தசேதுவினீர்
பரிவுடன்படியினொருவுமென்றிவைகள்பகர்ந்துபாரத்துவாசன்ற
னருமறைமலியவமருமாச்சிரமத்தடைந்தவனடியினிற்பணிந்தான். (௧௮௦)

வரிசிலைக்குமரன்மனைவியோடடைந்துவணங்கிடமாதவனடிசில்
பரவையினமிர்தசிகர்த்திடவளிப்பவருந்துவோன்பவமின்மாருதியை
விரைவினிற்பரதன்மகிழவென்வரவுவிளம்புகென்றேவிடவிவன்போ
யெரியிடைவிழுவோன்றனைத்தடுத்திவணிராகவனெய்தினனென்றான்.

திருவுடனிராமனடைந்தனனெனுஞ்சொற்சிறந்திடுமாருதியுரைப்பப்
பரதனெஞ்சுவந்துதிசையினைநோக்கிப்பணிந்தெழுமுனரின்முன்னவன்றன்
விரைவினின்விமானமிசையினின்னிலத்தின்மேவிடவணங்குபின்னவனை [தான்.
உரமுறத்தழீஇக்கொண்டனையர்தாளிறைஞ்சியோங்குசத்துருக்கனையணைத்

துயிருறத்தருளித்தமையனைத்தொடர்ந்தசுமித்திரைசெம்மல்வந்திறைஞ்ச
வியல்புறுபரதன்மகிழ்வுடன்றழுவவனையர்தாளிறைஞ்சிலக்குவனை
மயலறுமவனைநிகர்த்தசத்துருக்கன்வணங்கிடமார்பினினணைத்தான
புயலுறும்பரிபார்புரந்தரசெயித்துப்பொன்றிடவென்றிடும்புனிதன். (௧௮௩)

கருமுகிலெனவேகவினுறுமிராமன்கனிட்டர்களுடன்சடைகழித்துச்
சரயுநீர்படிந்துமறையவர்துதிப்பச்சரியிலாவயோத்தியினெய்தி
யரிதிகழ்ந்திடும்பொன்னவிர்கொளாசனத்தினமரர்கள்போற்றிடமிதிலைத்
திருவுடனிலங்கவசிட்டமாமுனிவன்சிறந்திடுமவுலியைக்கவித்தான். (கஅச)

மாருதியரியாதனங்கரத்தேந்தமதிநிகர்கவிகையைப்பரதன்
சீருறக்கவிக்கச்சுமித்திரைதனையர்சிறந்திடுங்கவரிகளசைப்ப
வாரியினிலங்குதிருவும்வெள்ளிடவேவயங்குமைதுலியருகிருப்ப
வாரியன்கரியவரையின்மீதொளிருமலரிபோல்முடியுறவமர்ந்தான். (கஅரு)

திங்கள்மும்மாரிபொழிந்திடநலர்க்குந்தியர்க்குஞ்செய்மையோடணிமை
தங்கிடாதுயர்மெய்ஞ்ஞானிகள்புகழத்தாரணிபுரந்திடுமிராமன்
பங்கயத்தணங்கைப்பழித்தமைதுலிதன்பயோதரமணந்திடக்கருப்ப
மங்கைதன்வயிற்றினமர்ந்திடவரியாசனத்தின்மேல்வயங்கிடுநாளின். (கஅசு)

ஆதியாமாசனவனியின்மிலைசயின்விடுத்திடுமொற்றர்வந்துணுகி
யேதமாரிலங்கையிராவணன்கொடுபோயிருஞ்சிறையிருத்திடவிசழ்வாஞ்
சீதையைப்பின்னருமனைவியாயணைக்குமிராகவன்செய்கைநன்றென்றென்
றோதுவர்சனங்களெனவுரைத்திடக்கெட்டுளைந்தகோவிலைமுயன்றனனால்.

அவனியினுறைவோரிகழ்ந்திடுவினையாலழுங்கியசனகியையிராம
னுவமையிலிளவலிரதமீதேற்றியுயர்ந்தவான்மீகிதன்வனத்திற்
கவ்லையுற்றிரங்கவிடுத்திடப்பணிப்பக்கடுவினைகளையுமம்முனிவன்
பவமிலாவணங்கின்பருவரலகற்றிப்பன்னசாலையிற்கொடுசென்றான். (கஅஅ)

சுசியுறுமுனிவனிருப்பிடத்தமர்ந்தசுந்தரிகருப்பம்விஞ்சிடநற்
குசலவரெனும்பேர்வயங்கிடவிரண்டுகுமாரரைப்பயந்திடும்போழ்திற்
புசவலனுடையலவணனைவதைக்கப்போந்தசத்துருக்கனுமரசன்
வசையறுமறையோர்க்கெண்ணின்மாதானம்வழங்கினன்சாதகமுடித்தே.

சனகிதன்றனையர்முகக்கவினோக்கிச்சத்துருக்கனவணுருவி
வினையறவமரர்வெருவவெஞ்சமர்செய்யிலவணன்சிரமறவீட்டி
யனகனையிறைஞ்சவவன்மகிழ்ந்தொருநாளந்தணனிரங்கிடவிறந்த
தனயனுக்குயிர்வந்தெழுந்திடத்தவஞ்செய்சம்புவைத்தடிந்தனன்மாதோ.

ஆதவனெனநீளவனியினீதியடைந்திடப்புரந்திடுமிராமன்
வேதியர்மகிழச்சுருதிநூல்நெறியால்விளங்கயமேதயாகத்தைத்
தீதறநடத்துந்தினத்தினிற்சனகிசிறுவராங்குசலவர்தமக்கு
மாதவன்சவுளமுடித்துபநயனஞ்செய்துநான்மறையறிவித்தான். (ககூக)

மறையையோதுவித்தும்வயங்குவான்மீகிமதில்கள்சூழ்ந்திலங்கியவிலங்கை
யிறைவனைவதைத்தசரிதையையறிவித்திடவரிராமனையிறைஞ்சி
நெறியுறவிசையினிராகவன்கதையைநிகழ்த்திடமகிழ்ந்திடும்போதிற்
றுறவிவம்முனிவனடைந்திவருனதுகுமாரரென்றுரைத்தனனம்மா. (ககூஉ)

முனியிவையறையத்தெசரதவிராமஞ்முந்திடுகளிப்பிறைற்றனது, தனையனாய
ணைத்துச்சனகியையழைத்துத்தழலிடைவிழுந்தெழுகெனலும், வனிதையா
ண்டிசையும்பொழுதினின்மலரோன்மொழியினல்வசுந்தரையெய்தி, யனகன்
முன்னணங்கைப்புவிகிழிந்திடத்தன்னங்கையினெடுத்தணைத்தகன்றாள்.

புவிகிழிந்திடநீளவனியின்சனகிதனைக்கொடுபோகலுமுனிந்து
தவர்வெருவுறத்தன்றனுவினைவளைத்துச்சாயகந்தொடுத்திடுபோழ்திற்
சிவனுடன்முனிவர்திசைமுகன்வலாரிதேவர்களிராமனையணுகி
நவையறுமிறைநீநரருருத்தரித்தாய்நாங்களுய்ந்திடவெனநவின்றார். (௧௱௪)

மலரயன்முதலோரிவையெலாமுரைப்பமனதிடைச்சினத்தினையொருவி
நலனுறுமறையாற்குரகதமேதமகத்தினைநடத்தியவிராம
னுலகினைவருடம்பதினாயிரமுமுற்றிடப்புரந்திடத்தாயர்
நிலமிசையிறப்பவனலிடைவளர்த்திநெறியினாற்றிலமயமளித்தான். (௧௱௫)

தாயரங்கிறப்பச்சதுமறைநெறியாற்றடக்கையாற்பிண்டமங்கருளுந்
தூயவன்முனரின்மறலியந்தணனாய்த்தோன்றியேயானுனக்குரைக்கும்
வாய்மைதான்முகியுங்காறுமிவ்விடத்திலொருவரும்வந்திடாவண்ணம்
நீயருளெனலுமிளையவன்றனக்கிவ்வுரையினைநிகழ்த்தியுட்புகுந்தான். (௧௱௬)

எவர்களுமடையாதிலக்குவகாத்தியென்றுதன்வாயிலினிறுவு
முவமையிலிராமனமர்ந்திடமறையோனேதுவானுலப்பிலாவண்டம்
நவையறப்படைத்தாண்டழித்திடுமிறைநீநான்முகன்வேண்டலால்நரனா
யவனியினிருதர்குலமறப்பிறந்தாயெனுமொழியறைந்திடும்வேலை. (௧௱௭)

விரைவினின்விடமாகியதுருவாசன்மேவலுமிலக்குவன்றடுப்ப
வரனெனமுனிந்துன்குலமறச்சபிப்பனெனவவனஞ்சியேகென்னச்
சரியிலாமனனிம்முனிவரமகிழ்வோடிறைஞ்சிடத்தவனவன்றனைநீ
பரனிவண்மனிதனாயினையெனுமுன்பாதியேகரந்தனன்மறலி. (௧௱௮)

அரனிகர்முனிவனிவையுரைத்தகலவந்தணன்றனையிவன்கானுைப்
புரவலன்றுருவாசனையிவண்விடுத்ததாலெனப்புகன்றிடவிராம
னுரையினைமறுத்தேனினிநிலத்தமரோனுயிர்விடுவேனெனவிளவல்
சரயுநீர்படிந்துநிகரிலாவனந்தனுருக்கொடுபரகதிசார்ந்தான். (௧௱௧)

சரயுவிற்படிந்தாண்டிளவலேகியசொற்சார்தலுமிராகவனிரங்கி
யிருநிலமிசையினிலக்குவனிராமலிரோனெனக்குசலவர்தமக்கு
விரைவின்முடியைக்கவித்துலகாளவிதித்தெழில்மாருதிதன்னைப்
பிரமநற்பதம்பின்பெறுகுதியதனாலிருத்தியென்றுரைத்தனன்பெருமான்.

பெண்களிற்கவினார்திலங்குமைதுலியைப்பிறித்திடுமரக்கனைவதைத்து
வெண்களிற்றிறைவனிடரினைத்தவிர்த்துவீடணற்கரசினையளித்தோன்
எண்கினுக்கிறையைத்துவாபரயுகத்திலியாதவனாகியேயுனது
கண்களித்திடவேமுழையினுளெய்திக்கதியினைத்தருகுவனென்றான். (௨௦௧)

வீடணன்றனக்குவிமானமீதரங்கத்துறையும்வித்தகன்றனையுதவி
யாடகமிலங்குமிலங்கையினரசையாளுதியெனவிடையருளிப்
பீடுடைப்பரதன்பிறங்குசத்துருக்கனிவரிருவரும்பெருந்திகிரி
கோடெனவயங்கச்சரயுவிற்படிந்துகலுழன்மேற்றுலங்கினன்கோமான்.

இரவிசேய்முதலாயிரங்கியகவிகளெண்ணிலருடனயோத்தியினிற்
கரிமுதலுறவிகடையதாமுயிர்கள்கமலனன்னகரிடையடைய
வருளின்விண்ணமரர்மலர்மழைபொழியவந்தரதுந்துமிமுழங்க
விரசையைக்கடந்துசனகிவந்திறைஞ்சவிமலன்வைகுண்டத்தினமர்ந்தான்.

வேறு. அராவணைதுறந்தடலரக்கர்குலமாளத்
தராதலமுமெண்டசரதன்றனையனென்ன
விராசையுறவேகிருபனுகிநிலனுரு
மிராமனெனுமாதிசெயலீதெனவறைந்தான். (உ0ச)

துட்டர்களெலாமடியவேகணைதுரந்து
சிட்டர்களெலாமகிழவேசிலையெடுத்தா
னட்டதிசையெண்ணவருமாடவர்கள்கோமான்
வட்டமுலைநற்கவுசலைக்கினியமைந்தன். (உ0ரு)

தீயர்குலம்வீயநிலமீதொளிர்கொள்தேவன்
மாயவன்முராரியளவில்செயல்வகுப்ப
வாயுமலறநாலுமுகன்வாய்மையினடங்கா
தூயகமலத்திறைவியென்றுணாதொகுத்தான். (உ0சு)

தவந்திகழுநாரதனெனுந்தகைமையோன்முன்
பவங்களறநன்கொடுபகர்ந்தவுணாகேளாக்
கவந்தனுயிர்கொண்டருள்செய்காளைபுகழுன்னி
யுவந்தருளுருக்குமணிமாமுனியொடோதும். (உ0எ)

கோசலநன்னாடுடையவீரனருள்கொண்ட
றேசுநிறையுங்கவுசலைக்கினியசெம்மல்
வீசுபுகழெண்டிசைவிளங்கிடவளர்ந்த
தாசரதியொக்குமவரார்தரணிமீதே. (உ0அ)

வாசமலர்மேவுசனகிக்குமணவாளன்
தேசுவிறலன்வடிவுசீருறங்கர்க்குங்
காசினியினெய்தியுயர்காவலருளாரோ
பேசுமெனநான்மறைபிறங்குமுனிசொல்வான். (உ0கூ)

வேலின்விழியாயமிர்தின்மீதினுறைமின்னே
பாலின்மொழியாயவிர்கொள்பங்கயமமர்ந்தாய்
கோலமுறுமன்றசரதன்குமரனைப்போற்
சீலமுறுசோதியுளனென்றுமுனிசெப்பும். (உக0)

விற்றொழிலினால்வடிவினால்மிகுகுணத்தாற்
கற்றுநிறைநூலுணர்வினாலருள்களாலு
முற்றுணரின்மற்றுநிகரோதுவமையில்லா
னற்றுவரைமன்னனெனநாயகிவிளம்பும். (௨௧௧)

ஆரவனுதித்தகுலமேதரசுசெய்யும்
பாரெதுசெறுந்திறமையேதுபகரும்மப்
பேரெதுவிரித்தருள்செய்யென்றுபொறிபேசச்
சீரிதெனயாழ்முனிசிறக்கவுரைசெய்வான். (௨௧௨)

இராகவப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨௪௩௬.

---

௨௩. வது—தேவகிப்படலம்.

ஆசிலாதறனருள்நெறிமறைப்பொருளுணர்ந்தே
மாசிலாமலர்மங்கைதன்மருணனவனே
ஈசனென்றறிந்தவன்பெயராயினவெல்லாம்
பேசுவாரடியாரெமையாட்கொளும்பெரியோர். (௧)

செஞ்சொனான்முகன்முதலினோர்க்ககப்படாத்தேவ
னஞ்செனக்கொழுந்தென்னநீளவனியிற்றோன்றி
விஞ்சினானவன்புகழினைவிதர்ப்பர்கோன்மகளாங்
கஞ்சமஞ்ஞைநீகேளெனநாரதன்கழறும். (௨)

மாசிலம்புவியாள்கின்றமன்னர்கடனினும்
வீசுதொல்புகழ்வடமதுராபுரிவேந்தன்
ஆசையெங்கணும்பிறங்கியவிறலருளான்ற
போசனென்பவற்குக்கிரசேனனாம்புதல்வன். (௩)

அன்னமன்னவனறநெறியருளெலாம்விளங்க
மன்னிநல்லரசியற்றமற்றவன்சுதன்மறமே
துன்னிவஞ்சகந்தொலைவிலாக்கொலையெலாஞ்சூழ
வின்னலோங்கிடுங்கஞ்சனென்றியம்பிடுமிகலோன். (௪)

மாயவஞ்சகம்பிறங்கவேவளர்ந்தனன்மனுநூற்
றேயமெய்யறன்சிதையவேதவழ்ந்தனன்றிரண்ட
நோய்களெங்கணுமுயரவேநடந்தனனவனுந்
தூயநன்னெறிபழுதுறத்தோன்றியசினத்தோன். (௫)

காலனென்னவுங்கடலிடையரவுமிழ்ந்தெழுந்த
வாலமென்னவுமருவினையுருவதாமெனவுஞ்
சீலமில்லவன்மறமெலாந்திரண்டெழுமுருடன்
கோலமானதோர்குரகதமியற்றிடுங்கொடியோன். (௬)

தகுதிநீதியிறந்தவக்கிரனுயர்தலத்தோற்
கதிதனானசாலுவனுடன்சேதியாளதிபன்
சகிதனக்கெனமகிழ்கஞ்சனாகியசழக்கன்
மகதர்கோன்பெறும்வல்லியரிருவரைமணந்தான். (எ)

அன்னவன்பின்னோரெண்மரைப்பயந்தறனறியு
மன்னனுக்கிரசேனனோர்மகளிரொமையினாற்
பின்னவன்னெழிற்றேவகன்றவத்தினாற்பெற்ற
மின்னனாளைத்தன்றனையளாய்வளர்த்தனன்விறலோன். (அ)

பஞ்சணிந்துமேற்பரிபுரம்புலம்புபாதத்தாள்
நஞ்சமஞ்சும்வேனயனத்தாள்முழுநிலாநகையாள்
கஞ்சமென்முகைப்பயோதரிகழையெனுந்தோளாள்
கொஞ்சுமஞ்சுகமாகியகொடியிடைக்கொம்பு. (கூ)

நாரியால்வளைசராசனம்போன்றநன்னுதலாள்
காரினீடியேவெறிபுனைமலர்க்கருங்குழலாள்
பாரினேரிலாப்பசுங்கிளிபவளவாயமிர்தஞ்
சீரினல்வடமீனெனச்சிறந்தகற்புடையாள். (க0)

கிளரியாழினோடேழிசைக்கின்னரர்மயங்க
வனுலாவவேயிசைத்தனள்மறுவறுபுராணந்
தளர்விலாவகைநிகழ்த்தினள்சததளமலிந்த
நளினமாதெனத்தேவகிவளர்தருநாளின். (கக)

இணையிறேவகிசவுந்தரியத்தெழினோக்கிப்
பணைகொளும்புயனுக்கிரசேனனும்பரிவாற்
குணமெய்நல்வடிவாற்றல்சீர்நலம்பொறைகொடைசேர்
மணவனார்மகட்கென்னமந்திரிகளின்மதியார். (கஉ)

சாருமாநெறிச்சாருகதேசமாடலைவன்
சூரசேனனற்சுதன்வசுதேவனாந்தோன்றல்
வீரவேணிலான்வெள்கிடும்வடிவினன்விண்மண்
ணாரும்நேரிலானவனிவட்காகுமென்றுரைத்தார். (கங)

அறைந்தமந்திரித்தலைவர்சொலரசனுமுணர்ந்தே
சிறந்தநல்வசுதேவனுக்கீதுவன்சீர்மெய்
நிறைந்தமின்னினையென்றுயர்நெறியெலாந்தழைப்பட
பறையறைந்தனன்மதுரையிலமர்ந்தபார்த்திபனே. (கச)

இன்னகாலையினியல்வசுதேவனுக்கிசைந்த
கன்னிதேவகிதன்னையேமணஞ்செய்வார்கருதித்
துன்னினார்கள்மந்திரத்தவர்சூரசேனன்சொற்
றன்னையுக்கிரசேனனுக்குரைத்தனர்தழைப்ப (கரு)

மந்திரத்தவர்மொழியும்வாசகத்தினுன்மகிழ்ந்து
சுந்தரத்தொளிர்தேவகிசூரசேனன்சேய்
கந்தரத்தினிலங்கலையெடுத்திடக்களிப்பாஞ்
சிந்துரத்தைநேரரசனுக்குரையின்சென்றென்ருன். (கசு)

வீரவுக்கிரசேனமன்விளம்பியநல்லினைச்
சூரசேனனுக்குரைத்தலுமகிழ்ந்தவன்ருலங்குந்
தேரினில்வசுதேவனேடெழுந்துளான்றிரண்ட
சூரரோடியர்மதுரையுய்யானத்திற்சூழந்தான். (கஎ)

மன்னனொண்வசுதேவன்றன்வரவினையுணர்ந்தப்
பொன்னினன்பதியிதுவெனமதுரையைப்புதுக்கிக்
கன்னலொன்றினிலுக்கிரசேனனுங்கடிதி
னின்னலில்லவனைதிர்கடந்தெழினகர்கொணர்ந்தான். (கஅ)

கொணர்ந்துநல்வசுதேவனுங்குமரனுண்மகிழ
வுணர்ந்துவேதியர்வகுத்திடுநாளின்மெய்யுருவ
மிணைந்ததேவகியிருகையாலெழில்கொளுந்தெரியல்
மணந்தழீஇயுறப்புயந்தனிலிட்டனள்மகிழ்வால். (ககூ)

மெய்யனும்வசுதேவனுமின்னும்வீற்றிருந்தே
ரெய்யினுகுதிகனலிடைச்சமித்துடனிறைத்துத்
தையல்கந்தரமங்கலநாணினைச்சாத்திக்
கையினற்பொறிதேயுவினிறைத்தனர்களியால். (உ0)

நலஞ்செயும்வசுதேவன்கைநாரிதான்பற்ற
மிலஞ்சுபூங்குழலனமிருள்மிதித்தனளம்மி
வலஞ்செய்தேவர்துவாமருந்ததிகண்டுமகிழ்ந்தார்
நிலஞ்செய்மாதவசிரம்பிடவினிதிருந்தனரால். (உக)

ஆனைநாலுநூறணிமணித்தேர்முந்நூற்றறுப
தினமில்பரியேழாயிரட்டியாயிரமு
மானனேர்விழிமடந்தையர்திரளிருநூறுந்
தேனினன்மொழித்தேவகிக்களித்தனன்கஞ்சன். (உஉ)

வீதிமேவினர்நகர்வலம்வருதற்குவிரைந்தே
போதநீள்புகரிபங்கள்மாவிருதரும்பொலிய
மோதுபேரிகாகளஞ்சின்னமுழவொடுமுழங்க
மாதுடன்வசுதேவன்றேர்கவினுறவந்தான். (உங)

வேறு. கஞ்சனுநெஞ்சுகளித்துறுகைவேல்
விஞ்சவிலங்கியமன்னவன்பின்முன்
குஞ்சரமாமெனவேகுதிகொண்ட
வஞ்சனடந்துமகிழ்ந்துறுமெல்லை. (உச)

அந்தரநின்றசரீரியரன்சேய்
கந்தனையேநிகர்கஞ்சன்முனாக
விந்தமடந்தைதன்மக்களிலெட்டா
மைந்தனின்னுருயிர்வவ்வுவனென்ற. (உரு)

பொங்கியவெங்கனலைப்பொழிகண்ணு
னிங்கிவளோபகையாயினளென்றே
யங்கையின்வாள்கொடுதேரினடைந்து
தங்கைநெடுங்குழல்பற்றுசழக்கன். (உசா)

கொல்லுறுமெல்லையில்யாதவர்கோமான்
புல்லினன்வாளொடுமார்புபொலிந்த
வெல்லையிலாவிறலெய்துதவத்தாய்
புல்லியர்செய்பழிபூணுதிபோலாம். (உஎ)

ஆவுயிர்செற்றவரந்தணர்தம்மைச்
சாவமுயற்றினர்பாலகர்தம்மை
நோவமடித்தனர்நுண்ணிடையார்த
மாவிசெகுத்தவராழ்நரகாழ்வார். (உஅ)

என்றுரைசொல்லியிதம்பெறுவானி
னின்றசரீரிசொலுமிகழாமற்
குன்றெனவேகுவவுப்புயனையா
னொன்றியதாகவுணர்த்துவகேண்மோ. (உகூ)

இங்கிவள்மைந்தர்களெண்மரையுந்தன்
செங்கையின்வைத்திடுவம்மவர்சேர
மங்கவடித்துயிர்வாழுதியானின்
றங்கைதனுவியுனுதொழிதககோய். (௩0)

மன்னவநின்னருளேகொடுவாழ்வம்
நின்னுயிர்போகநினைக்கிலநின்பின்
மின்னுதரத்தெழுமைந்தர்விளங்கி
யென்னபயன்றருவார்களெமக்கே. (௩க)

வல்லவனிவ்வுரைகூறமனத்தே
யெல்லையிலாநலனெய்தநகைத்துக்
கொல்லுகிலான்குழல்விட்டருள்கூர்ந்தே
புல்லினனன்பொடுபின்வருபொன்னை. (௩உ)

எங்கையையானுயிர்கொள்கிலனாக
விங்கிதநல்லுரைசொற்றனையென்றே
வெங்கணன்மைத்துனன்மெய்தழுவித்தான்
பொங்கியவன்பொடுபொன்மனைபுக்கான். (௩௩)

சிற்றியல்முன்னவர்தன்னொடுசீறிச்
செற்றுயிர்கொள்கிலதாய்வகைசெய்யுங்
கொற்றவனோடுயர்தேவகிகூடிப்
பெற்றனளோர்மகவைக்கவைபெற்றே. (௫௪)

அம்மகவைக்கொடுசென்றவடானும்
விம்முறுசிந்தையளாகமெலிந்து
தம்முனிருந்தபொன்மாளிகைசார்ந்து
கைம்மிசைவைப்பவுவந்துறுகஞ்சன். (௫௫)

பெருகியவன்புபிறங்கிடவேயென்
மருகனையின்றுயிர்வவ்விலனென்ன
வுருகியசிந்தையனொண்கொடியைத்தன்
னருகமரொன்றிருகையினமைத்தான். (௫௬)

மன்னவனென்மருகன்னிவன்வாடா
தின்னலெய்தாதுவளர்த்திடுகென்று
பின்னவள்கையினளித்திடவேபோய்
முன்னவனைத்தொழுதாள்கைம்முகிழ்த்தே. (௫௭)

இன்னலனெய்தியயாதவர்கோமான்
தன்னுடனற்கலவிக்கனிசார்ந்து
கன்னல்கொணாள்பலவுங்கழியச்சீ
ரன்னமனாள்பினுமைவரையீன்றாள். (௫௮)

ஆறுமகப்பெறுமாயிழைநெஞ்சந்
தேறினனல்வசுதேவனுமன்பா
லூறியசிந்தையுரோகணிமாதை
மாறிலமாமணமேவிமகிழ்ந்தான். (௫௯)

பாரிதனோடைதுகுலம்வருமகிபன்
பேரிதமோடுறவேபெலன்மல்கு
மாரதனாகியகஞ்சன்மனைக்கே
நாரதன்மேவினனாகர்துதிப்ப. (௬0)

வந்தமுனிக்கெதிர்மன்னியகஞ்சன்
கந்தமலர்க்கொடுகாலினிறைஞ்சிச்
சிந்தையுவந்துறுதீயவனுக்கே
முந்தியனாமுனிசொல்லமுயன்றான். (௬௧)

கஞ்சவுனக்கொருகாரியமிங்ஙன்
விஞ்சவுணர்த்திடுவேனதுமெய்யுன்
னெஞ்சினமைத்திடுநீயெனவென்றும்
வஞ்சமிலாமுனியின்சொல்வழங்கும். (௬௨)

உக்கிரசேனனுவந்தருடேவி
யிக்கிரதச்சொலியின்னமையென்னத்
நக்கவணீர்படியுஞ்சதுநாளிற்
புக்கனள்மண்டபமீதுபொலிந்தே. (சங)

பஞ்சணைமன்னியிருந்தவள்பல்கால்
விஞ்சுநலக்கலவிக்கனிவேண்டிச்
செஞ்சொலனுக்கிரசேனனையுன்னி
வஞ்சமில்மங்கைவருந்துறுமெல்லை. (சச)

கெந்தருவத்தருமன்கிளியன்னாள்
சிந்தையறிந்தவனுக்கிரசேன
னந்தவுருக்கொடுபாரினடைந்தே
வந்திடமின்னுமகிழ்ந்தெதிர்கொண்டாள். (சரு)

கொண்கனடைந்தனனென்றுகுளிர்ந்து
கண்கள்களித்தெழுவேயுயர்கற்பாள்
பண்கொளுநன்மொழிபஞ்சணைமீதிற்
றண்களபத்தொடுதண்மலர்தந்தாள். (சசா)

இன்பமுறுங்கலவிக்கனியெய்தி
யன்புடனன்னமணைத்திடுமெல்லை
நன்பதிசெய்குறிதாழ்ந்ததுகண்டே
துன்பமுழந்தழல்கண்ணினள்சொல்வாள். (சஎ)

செஞ்சொலனாகியவென்கொழுனன்சீர்
விஞ்சியநல்லுருவாகிவிளங்கும்
வஞ்சகவாரெனவானிடையேகி
நஞ்செனும்வெய்யவனின்றுநவின்றான். (சஅ)

என்கணவன்னெனவுற்றனைகற்பால்
நின்கணதாமகவுண்டெனநீசப்
புன்கணனையவனின்னுயிர்போக
வன்கணநீயவனல்மடியென்றாள். (சகூ)

அன்றுறுகெந்தருவன்மகனீயாம்
பொன்றுகவென்றனையன்னைபுகன்றாள்
கன்றினனென்சுதனன்றெனவேகாய்
வொன்றினனுக்கிரசேனனிதுண்மை. (ருo)

வேறு. சீலமாகியவுக்கிரசேனன்றேவகன்போர்
வேலனெண்வசுதேவனோடிவர்கள்விண்ணவர்கள்
மாவினோடடர்ந்துலப்பிலாச்சமர்செய்துமடிந்த
காலநேமியாமசுரனீகஞ்சனைப்பிறந்தாய். (ருக)

ஆதலாலிவையகாதியாயமரர்கட்கசுர
ரேதலார்களாமென்னின்முன்பிறந்துபின்பிறந்த
போதுபோகுமோவழிப்பகை * பூதம்யானுணர்ந்த
தீதெலாமுரைத்தேனின்னமியம்புவதுளதால். (ருஉ)

வேறு. அன்றியும்நின்னிளையாடனையர்க்குள்
வென்றிகொள்வானொருவீரியன்வந்தே
கொன்றிடுவானுனையென்றுரைகூறிப்
பொன்றலினாரதமாமுனிபோனான் (ருங)

தூய்தவமாமுனிசொல்லுரைகேளாத்
தாய்பகைதந்தைமுழுப்பகைதங்கை
சேய்பகையென்னிதுவென்றுதிகைத்தே
யேயெனுமுன்னரெழுந்துயர்கஞ்சன். (ருச)

தங்கைதன்னீண்மனைபுக்கசழக்கன்
வெங்கனல்மல்கியகண்ணன்வெகுண்டே
யங்கவள்சேயறுவோரையுமாவி
மங்கவடித்தனன்வாயைமடித்தே. (ருரு)

காவலனுங்கணவன்றுயர்கண்டே
பாவமிதேவகிநெஞ்சுபதைப்ப
நாவலனுக்கிரசேனனடங்கக்
காவலியற்றினன்விஞ்சியகஞ்சன். (ருசா)

மானகுசண்ணியுரோகணிமங்கை
யானகதுந்துமிகூறிடவாயர்
கோனகமேவினள்கொண்கனையுன்னித்
தேனகுமென்மொழிசிந்தையுழந்தே. (ருஎ)

உக்கிரசேனனுருக்கொடுதன்னை
யக்கிரமத்தினளித்தபிதாவை
யுக்கிரவெஞ்சமர்செய்துயிர்கொண்டே
விக்கிரமத்தொடுமெண்டிசைவென்றான். (ருஅ)

புனைந்தனனன்மகுடம்புனையத்தி
மனந்தனின்வஞ்சமறங்கொலைமாயத்
தினந்தினமும்வளைபோலெழவேசெய்
யினந்துடர்கஞ்சனிருந்திடுமெல்லை. (ருகூ)

தேவகிப்படலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-உசகூ.

* பூதம்-கடந்த விருத்தாந்தம்

உசு. வது—கண்ணன் திருவவதாரப்படலம்.

இருபிறைகவ்வியேயெழுந்தமைவரா
வருசெயலாமெனவராகமாய்மனங்
கருகியவாடகக்கண்ணன் வீயவே
தரணியையிடந்தசக்கரனையேத்துவாம். (க)

நீதியில்நிசாசரர்நெறியினீங்கிட
மோதிடுமசுரர்களரசர்முந்தியே
வேதனையுலகெலாம்விளைப்பமெய்ம்மலி
பூதலக்கிழத்தியும்பொறுமையாலரோ. (உ)

மெய்யெலாமெலிந்தனள்வேதஞ்சோர்ந்திடப்
பொய்யெலாங்கெழுமிடப்பொருமினள்மனம்
வெய்யராங்கலரிராக்கதர்கள்வேரறச்
செய்யெலாம்வகையினிச்சிந்திப்பாளரோ. (ங)

சூகரமாகியன்றவுணன்றேற்றிட
வாகையேபுனைந்தெனைமணந்தமாயனூர்
நாகணைமீப்பயோததியில்நண்ணுறும்
யோகமாந்துயிலுறந்துதவினன்றென. (ச)

பிரமனுமுனிவரும்பிறங்கனுதனுங்
தருவமர்ந்திடுநகர்ச்சசிதன்கொண்கனோ
டுரனுறுமிலேகருமுய்யவண்டமுண்
பரமர்தாளிறைஞ்சியான்பகர்வனீதென. (ரு)

சாமளரூபிநற்றரளமாலைசேர்
கோமளமென்முலைக்குதலைக்கோகிலம்
வாமனன்றேவிவாட்கண்ணிமல்லல்சால்
சோமன்மானனைத்தூயகற்பினள். (சு)

இடமதாயிருப்பநிற்பனவோடெண்ணிலா
உடல்கொடுதிரிவனபறப்பனவூர்வன
யடைவனபல்லுயிரனந்தமெய்தவு
மிடரறப்பரித்ததற்குணைவுமீகுவாள் (எ)

வேறு. அம்பரநற்பதத்தினச்சுதானர்க்கனுமா
யம்பரம்பாரீரடியிலுலளந்தோன்றன்றேவி
யம்பரங்களேழுமழகார்வருணமுறு
மம்பரங்களாய்க்கெழுமவேதிகழுமாரணங்கு. (அ)

சேடன்பணங்கவிகையாகச்சிறந்தவுடற்
பீடமதினேறிக்கவின்கொணிலப்பெண்ணமுதங்
கோடுடையவெண்களிற்றுக்கோமுனிவர்தேவர்களு
மாடுறமாமுண்டகத்தோன்வாழுமுலகெய்தினளால். (கூ)

நாவினுறைமறைகளுறுந்திருத்தாளாய்
மேவுபொறைமெய்யாவிழியிரண்டும்நல்லருளாய்
வீவிலறங்களெல்லாமேனியுரோமமுமா
யாவின்வடிவாகியெய்திநின்றாளவனிமின்னே. (௧௦)

கோவுருவாய்நின்றவசுந்தரையாங்கோமளத்தைத்
தேவருடன்தேவேந்திரன்முனிவர்தாந்திரண்டு
பூவிலயனுடனும்போற்றியெதிர்சென்றினிதா
மாவனுறநான்மறைகொடேத்தியறையலுற்றார். (௧௧)

அன்னேயவனியெனுமாரமிர்தேயன்புமிகும்
பொன்னேயகழ்வாரைத்தாங்கிப்பொறைநிறையு
மின்னேயுயிர்களுக்குவேண்டுமுணவருள்வாய்
தன்னேரிலாதநலத்தாமோதரன்றேவி. (௧௨)

பாரேயுருவாப்பருவரைகளேநகிலாக்
காரேகுழலாக்கடலேழுமாடைகளாச்
சீரார்சசியிரவிசேலோர்விழியிரண்டா
வேராரிளங்கொடியேயேழுலகுமீன்றமின்னே. (௧௩)

வேழ்விநிறையவிளைவயலாமெய்த்தவத்தோர்
சூழ்கைதவமொருவத்தூயநெறிபிறங்க
வாழுமுயிர்பதத்தின்வைகவருளளிப்பா
யாழிதிகழ்செங்கையமலன்றிருத்தேவி. (௧௪)

கோலமாநின்றெயிற்றிற்கொண்டுங்குறளுருவாக்
காலினாலன்றளந்துந்தாங்கிக்கமடமதாப்
பாலனாயுண்டுமிழ்ந்தும்பையநடந்தேயிருந்த
மாலினார்மாலாயணையுமடக்கொடியே. (௧௫)

என்றுதுதித்தார்மறைகொடேத்தியெழுந்திறைஞ்சி
மன்றன்மலரோன்விபுதர்மாமுனிவர்வாசவனு
மொன்றிமுலைப்பாலுதவுமாகண்டுளமகிழுங்
கன்றெனத்தாம்நெஞ்சுருகிப்பின்னுமவர்கட்டுரைப்பார். (௧௬)

வந்தகருத்தறிந்தாமண்மடந்தாய்வல்லசுர
ரந்தமென்றுமில்லாக்கரவடர்கடாந்துவன்றி
வெந்திறல்கள்செய்யமெலிவுற்றமின்னேயுன்
சிந்தையிடர்மாற்றுவதற்கெம்மாற்செயலரிதால். (௧௭)

தீர்ப்பானுங்கைதவங்களெல்லாஞ்செகமுழுதுங்
காப்பானுமூவடிதாவென்றவுணன்கைந்நிறைநீ
ரேற்பானுமேழ்பொழிலுமுண்டுமிழ்ந்தவெம்பெருமான்
பார்ப்பாரந்தீர்ப்பான்கடற்றுணைப்பைந்தொடியே. (௧௮)

ஆதலினல்மாயோனமர்பாற்கடலணுகப்
போதனலனென்னுப்புரந்தரல்புத்தேளிர்திர
டதில்மலரோன்முனிவர்சித்தவித்தியாதரரும்
நீதியுறுநிலமானேடுநெறிசென்றனரால். (கக)

சென்றார்பல்யோசனைகள்சேணுருவாத்தீயவரை
வென்றேகராவிசிப்பநொர்துவிதலையுற்றே
அன்றானைமூலமெனுமூன்வந்திடரகற்றி
நின்றான்றுயிலும்நெடும்பாற்கடலடைந்தார். (உ0)

வேறு. பெருந்தடவரையைநிறுவிநீளரவைப்பிணித்துறக்கடையயானளித்த
மருந்துபோலின்றுநுகர்ந்திடவேண்டாம்நினைக்கவேவைகுந்தத்திருத்தி
யருந்துணியொருவித்தன்னிறமாக்குமமிர்தரவினிற்கருவனமா
யிருந்ததென்மீறிற்காண்மினென்றியம்பவருவபோற்பயோததியெதிர்ந்த.

பவமெலாமறுக்கும்பருவரலகற்றும்பலசமையங்களின்முயங்கு
மவமெலாந்துறக்குமைம்பொறியடக்குமறநெறிபொறையருளிக்குந்
தவமெலாமுயர்த்துஞ்சக்கரத்தவன்றாளிறைஞ்சிடச்சடக்கெனவருகென்
றுவமைநேரில்லாப்பயோததிகரத்தாலழைப்பபோற்றரங்கமுமுலாவ.

மஃனுரையிகழுங்கனகன்முன்னெழுவின்மடங்கலாயெழுந்துரம்வகிர்ந்து
மிகமெலிகயமன்றழைத்தசொற்பிந்தமுந்திதன்பதத்தினின்விடுத்தும்
நிகரில்வாரிதியைக்கடைந்தமிர்தளித்துநிருதர்வேரறுத்தருணெடுமால்
புகழெலாம்பரந்துபொலிந்தபோற்றிருப்பாற்புணரியுமெழுந்துபொங்கியதே

வெறிமலர்மகணன்புவிமகணீளையென்னும்வேல்விலோசனையுடனும் [ந்து
பொறியரவணையின்மிசைப்புயலெனவேபொருபடையைந்துடன்பொலி
சிறையுடைக்கலுழன்வலம்வரத்திருமாலென்வயிற்சேர்தலான்மற்றை
அறுவகைச்சலதியெனக்குநேரலவென்றார்த்தபோற்கலித்தபாற்கடலே.

புயறனையூரும்புரந்தரனுடனற்புண்டரீகத்தயன்புவியா
மயிறுயரமுப்பத்துமுக்கோடிபுலவர்மாதவர்புடைசூழ
வியலினலடைந்தாரிவரிடரொருவவெழுகநீயென்றுமாறனையே
துயிலெழுப்புவர்போல்முழங்கியதரங்கம்பிறங்கிடத்துலங்குபாற்கடலே.

முப்பதோடிரண்டாமிலக்கம்யோசனையாமுடிகியபயோததிநாப்பண்
டுப்பராமணிகோமேதகம்வயிரம்புஷ்பராகந்துப்பநீலஞ்
செப்பமார்மரசதம்வயிடூரியம்பசுஞ்செம்பொன்னுலிழைத்த
வொப்பிலாவிமானம்யோசனையெழுநூறாயிரம்நீண்டகன்றொளிர. (உக)

நேரிலாவனந்தனுடல்மிசைவேற்கணிறைந்திடும்பலமலர்மலியுஞ்
சீருறுமன்னூற்றொருபதாயிரயோசனைசிறந்தகன்றநீளணைமேற்
பேர்களாயிரத்தோன்வனசமாமலர்கள்பிறங்குநீலக்கிரிபோலு
மேருறவிருநூற்றைறன்பதாயிரயோசனைதனைவடிவெழிலுறவே. (உஉ)

பாதம்யோசனைநூறாயிரமகங்காலிருபத்தையாயிரம்பதுமப்
போதுநற்புளியாறைந்தினாயிரமன்பத்திரண்டாயிரம்பொலிவுற்
றேதமிறுடையினகலமோர்கைந்நூறாயிரமெழில்கொளங்குலிக
ளோதினெவ்வொன்றாயிரமிருபத்தைந்தாயிரங்களவட்டமொளிர. (உ௮)

திருமுகவளையமுப்பதோரிரண்டாமாயிரம்யோசனைசிறந்த
புருவநேத்திரங்காதிவ்வகளுமொவ்வொன்றாயிரம்யோசனைபொருந்தச்
சரியில்வண்கொடிமூக்குயோசனையஞ்ஞூறெளிரமுந்நூறுயோசனைதான்
றெரிவுறுதிலகத்தூரியம்பிறைநேர்நுதலினிற்றிகழ்வுறத்துயில. (உ௯)

தூய்மையாந்தபனர்கோடிபேர்துன்னியெழுந்தபோற்றிகிரியுந்துலங்கத்
தேய்விலாக்குமுதசகாயன்வானகத்திற்றெறிந்தபோல்வலம்புரிசிறப்ப
மீமிசையண்டத்தப்புறத்திருளுந்துறக்கும்வாள்கதையொடும்விளங்கத்
தீவினையொருவப்பிறங்கியசார்ங்கந்திசைவிசும்பெங்கணுந்திகழ. (௩0)

மீயுயர்மவுலிக்கவின்றிசையெல்லாம்விளங்கிடவிழிகளுமிலங்க
மாயிருவிசும்பினிவர்தமனியப்பூதரமெனவயங்கிடப்புயங்க
ளாயிரகோடிகாவதமளவாச்சிறகறைகாற்றுவந்தசைப்பத்
தூயமாக்கலுழன்றொழுதுபாற்கடலைச்சுற்றியேவலமதாய்ச்சூழ. (௩௧)

வானின்மீப்பிறழுங்கதிரொனமவுலிவயங்கிடவதனமுந்துலங்க
வீனமேயிலாதவிழிகளுமிமைக்கவிடரறநிலமளந்திடந்த
கோனணிந்தருளுந்தேன்முரறெறியல்குனிந்தெழின்மார்பினிற்குலாவச்
சேனைநாதன்கைப்பிரம்பொளிதிகழத்திசையிருநான்கினுந்திரிய. (௩௨)

உரமதாற்றிருவெட்டெழுத்தையுள்ளிருத்தியுறுபகையறுவருமோட
வரமதாற்றகருமயமெனத்துணிகளறுத்துயரருந்தவமடையக்
கரமதாற்றொழுதுமெய்ம்மயிர்பொடிப்பக்கண்கணீர்புரளவேகளிக்கும்
பரமபாகவதர்மொழிந்தபல்லாண்டுபேரவையினொலியெனப்பரவ. (௩௩)

ஆரணனீயேயவனியுநீயேயவனியன்றுண்டுமிழ்ந்தளந்த
காரணனீயேகனைகடல்நீயேகனைகடல்கடைந்தவனீயே
பூரணனீயேபொறிகளுநீயேபொறிகளிற்பொலிபவனீயே
நாரணனீயேயென்றுரைநவின்றுநாரதமாமுனிநடிக்க, (௩௪)

ஒருமுதலுணர்ந்தோரிருபிறப்பாளர்முப்பகைகடிந்தவாற்றத்தா
ரருள்செறிமறைநான்கறைபவர்வேள்வியைந்துசெய்யறுதொழிலாள
ரிருளெழுவிளமையிரியவெட்டெழுத்தையிதயத்துளிருத்துவோரோத்து
முரையினையமிர்தின்சுவைபழித்தமரர்செவியினாலுண்டுண்டேயுவப்ப.

தருவமர்நகராளியைத்தனையிட்டோன்றந்தையின்பஃறலைதடிந்தோய்
கரியுரிசெய்யுங்கணிச்சிவானவன்றன்கையினிற்கடிகமன்றொழித்தோ
யரியரியரியேசெயசெயவெனவேயருமறையிசைகொடுபகர்வார்
தருதருமலரேசொரிபவர்தாளந்தத்தத்தித்தியென்றோத. (௩௬)

கிம்புருடாதிகருடகாந்தருவர்கின்னரர்கீதம்யாழ்கிளர்த்தத்
தும்புருதுதிக்காரதர்வீணையிசைத்திடத்துந்துமிமுழங்க
வெம்பராதிருவாழ்மார்பமாமாயாவென்றுதம்மிதையத்திலிருத்தி
நம்பியேநயனம்புனல்கொளுமன்பர்நாவினுன்மறைப்பொருணவில. (௩௭)

கண்ணிணைமுகுந்தன்றிருமுகக்கவினைக்கண்டுளமகிழக்கண்களிப்பால்
விண்ணிறைமதியினிலவெனமுறுவல்விளங்கிடவளையொலிவிளைப்ப
மண்ணணங்குயருங்கமலமாமலரின்வரும்வடிவுடையவளாமப்
பெண்ணமிர்தனையரிருவருமமலன்றிருவடிசெங்கையாற்பிடிப்ப. (௩௮)

கருவரைமிசையினிறைகதிரொழிலைக்கனகமார்மவுலியேகாட்டப்
பெருவரைபிணித்தவரவெனப்புயத்தினணிவலயங்களும்பிறழத்
தருவெனத்திகழுந்தடக்கையிற்கவின்கொடரளநற்கடையமுந்தயங்கத்
திருவரையதனிற்செம்பொனின்கொடிகத்தழகுவான்றிசையெலாந்திகழ.

விண்டலத்திருண்டபயோதரத்திரண்டுமெருங்கினும்விரிகதிரிரவி
மண்டலமெழுந்துவயங்கியபோலவள்ளையாங்காதினின்மகர
குண்டலநிறைந்தெல்லுறுகுருமணியின்குழாங்கணற்கவினெடுங்குலாவி
அண்டர்கள்பெருமான்றிருமுகத்தழகுக்கலங்கிருதம்பெறவமர்ந்து. (௪௦)

தன்னுடைக்கரத்திற்சார்ங்கமுமிரண்டாய்வளைந்தபோற்புருவங்கடயங்க
நன்னிலவனையமுறுவலுங்கொடிமூக்கழகுடனயனங்கடிகழ
மின்னொளிபலவாய்விளங்கியேயிருண்டமேகமேலணைந்தமாண்பெனவே
துன்னுபன்மணியின்றொகைகணீடுளபமணிதிருமார்பினிற்றுலங்க. (௪௧)

தெண்டிரைக்கடலினெழுகதிரொனநற்கவுத்துவமார்பினிற்றிகழ
வெண்டவர்வலாரியிமையவர்பிறங்கலிருசுடர்மகோததியிலங்கு
மண்டமுமயனோடுதித்திடவிலஞ்சித்தடத்தினிற்புறப்படவலரும்
புண்டரீகத்தினிகழ்களினெழிலிப்புவனமெண்டிசையினும்பொலிய. (௪௨)

திருநயனங்களிரண்டுடன்பவளச்செய்யவாய்திருக்கரமலரு
மருவுமிழ்மணியார்மார்பமுமாமையரவிந்தநாபியினவிருந்
தெரிவையரிருவர்செங்கையோடொளிர்வீரக்கழலமர்திருத்தாளுங்
கருமுகிற்றடத்திற்கமலநற்காடுமலர்ந்ததோர்காட்சியைக்காட்ட. (௪௩)

கோகனகத்தேனிலமகணீளையென்னும்வேல்விழியொளிர்கொடியு
மோகையோடுறவேபயோததியிலங்கவுயர்மணிப்பஃறலைப்பகுவாய்
நாகணைமிசையிற்கருங்கடல்பரந்துகிடந்ததோர்நலத்தினையுறவே
யோகமாந்துயிலையுவப்பவன்போற்றன்கண்முகிழ்த்துறங்குவான்றன்னை.

வேறு. இன்னமெய்வனப்புறத்துயில்கொள்ளுமெம்பெருமான்
றன்னையெவ்வகைகாண்பமென்றார்கள்மாதவத்தோ
ரன்னவெண்ணிடையுயரிறையம்பரத்தும்பர்
பொன்னினன்னகரிறைவொடும்போற்றிசெய்குனரால். (௪௫)

பச்சைமேனியபழம்பொருளாகியபரம
நச்சராவணைமிசைத்துயில்முகுந்தநாரணநின்
னிச்சையாலவதரித்திடுமிறைவவெம்மீச
வச்சுதாவனந்தாபள்ளியுணர்ந்தருளாயே.

வெற்பினைக்கடைமத்தெனவேலையுணிறுவிச்
சற்பம்வன்கயிறுகிடக்கடைந்தமிர்தத்தை
யற்பமாமசுரர்க்கிடாதெமக்குவந்தளித்த
வற்புதாவமலாபள்ளியுணர்ந்தருளாயே. (௪௭)

சேதமேயுறுநளினியினிடங்கர்வெஞ்சினத்து
மோதியேயொருதாளினையிசித்தவண்முடுகச்
சோதியேயெனுங்கறையடிதுனியறத்தோன்று
மாதிமூலவச்சுதாபள்ளியுணர்ந்தருளாயே. (௪௮)

சூதராமதுகையிடவரவர்கள்மெய்துணிய
மோதிநீள்கடறடுசேலுருவாமெனமுளைத்து
வேதநான்முகற்கருளியவிமலவித்தகனே
ஆதியேயரியேபள்ளியுணர்ந்தருளாயே. (௪௯)

சிவனெனும்விறலுடையபொற்கண்ணனைச்சேர்ந்தே
யவனுடற்குருதிப்புனலளக்கரின்மடுப்பப்
பவனவேகவெங்கேழலாயெயிற்றிடைப்படுத்தே
யவனியன்றிடந்தாய்பள்ளியுணர்ந்தருளாயே. (௫0)

இருளகற்றியஞானமெய்ப்புதல்வன்சொல்லிவரு
தருளகற்றியவாடகன்கரத்தினாலறையும்
விரியுநன்மணியெழுப்பிளந்திடவிர்விளங்க
வரியுருக்கொளுவாய்பள்ளியுணர்ந்தருளாயே. (௫௧)

மடிவிலாதுயர்மாவலிமூவடிவழங்க
நெடியனாயண்டமுகடுறநிவந்துபேரொளியாய்ப்
படியும்வான்றிசையடங்கலுமடங்குறும்படியீ
ரடியினாலளந்தாய்பள்ளியுணர்ந்தருளாயே. (௫௨)

விடத்தையுட்பொதிகுணத்திராவணனகர்மேவுந்
தடத்தைநற்றிமாவருணன்மேற்சரங்களைத்துறந்து
படைத்தலைக்குழாங்கொடுகவியெண்கினாற்பரவை
யடைத்தமெய்ப்பொருளேபள்ளியுணர்ந்தருளாயே. (௫௩)

சீலமாகியபிரமகற்பங்களுஞ்செறிந்து
வேலையெங்கணும்பரந்தண்டம்விண்டிடும்வேலை
பாலனாயுலகேழையுமுதரத்துட்பதித்தே
ஆலின்மேற்றுயில்வாய்பள்ளியுணர்ந்தருளாயே. (௫௪)

கமலநாயகிகணவபீடுடையகாகுத்த
நிமலநேமியநெடியவநிசாசரர்கால
விமலகேசவசுத்தசாத்திகருணவீர
வமலநாரணனேபள்ளியுணர்ந்தருளாயே. (௫௫)

இனையதானசொல்வழாமறைப்பொருளினாலேத்தி
முனிவர்வானவர்மகபதிமுண்டகத்திறையோ
டனைவரும்மமலாவிடரகற்றுவாயென்று
நினையுநெஞ்சினருருகினராலுளநிறைய. (௫௬)

எட்டெழுத்தையுமிதையத்துளிருத்தியேகமதா
யுட்டெளிந்திடக்கைதவமொழித்துயர்ஞானத்
திட்டியாலுயர்சிறந்தவேதப்பொருடன்னோ
டொட்டிநின்றதாம்யோகமாயுருகிடுமெல்லை. (௫௭)

வேறு. செயலுறுமம்புயமலர்கள்சேர்ந்ததோர்
புயலொருகனகபூதரத்தையுற்றெனத்
துயில்பிரிந்தருளிநற்கலுழன்றோளின்மே
லியல்புறுகமலைமார்பிலகவெய்துவான். (௫௮)

துந்துமிமுழங்கிடத்தூயபானுவு
மிந்துவுந்தயங்கிடவெழுந்தமேகம்போல்
நந்துசெந்திகிரியுங்கரத்தினண்ணநற்
சுந்தரமவுலியும்வயங்கத்தோன்றினான். (௫௯)

அறந்தவறுதமாலணுகவார்வமுற்
றிறைஞ்சினர்கமலனோடெண்ணின்மாதவர்
நிறைந்தமெய்ஞ்ஞானியர்நயனம்நீருக
வறைந்தனராரணம்பாடித்துள்ளினார். (௬0)

பாடினர்விளரியாழ்பலவும்பண்ணுற
வாடினர்முடிமிசையங்கைகூப்பினர்
பீடுறும்வைகுந்தப்பிரானைமேவியே
சூடினர்துளவங்கமலங்குதாண்மலர். (௬க)

ஊழியாயிரங்கடான்யோகமாய்நின்றே
சூழுமாவினையறுந்தவர்க்குந்தோன்றலான்
வேழமூலம்மெனவிரைவின்வந்தபோ
லேழையாமெமக்கிரங்கினனென்றுடினார். (௬உ)

துள்ளினர்தரணிவரனோங்கத்தூய்மல
ரள்ளினர்சொரிந்தனரானந்தக்களிப்
புள்ளுறப்பொடித்திடவுரோமங்கண்கணீர்
வெள்ளமொத்திழிதரவிளம்புவாரரோ. (௬௩)

வேறு. ஈசநேமியவெம்பரனேயலை, வீசுபாற்கடல்மேவியவித்தக
மாசிலாமலர்மங்கைதன்னையக், கேசவாகெருடக்கொடியாய்நம. (௬௪)

சீறொணாவவுணன்றருசெய்விண்மண், பாரணாபரமாவெனவேத்துமப்
பேறொணாதவனாசம்பிளந்தனை, நாரணாதிருநாயகனேநம. (௬௫)

ஆதியேயமலாவிமலாவருட், சீதராமுகுந்தாசெகநுங்கிய
பூதநாயகமாயபுராதன, மாதவாமண்மகண்மணாநம. (௬௬)

பாவந்தானறப்பாரிருணீக்கிய, தீவந்தானெனச்சேணுயரண்டமுந்
தாவுந்தாளதயாபரசற்குணா, கோவிந்தாகுறையேதுமிலாய்நம. (௬௭)

துட்டனாவிராவணன்றொன்னகர், சுட்டவாசுகன்சூழுவுடன்கடல்
கட்டியேயவ்வரககனைக்காய்ந்தருள், விட்டுவேவிதியுந்தருவாய்நம. (௬௮)

வேறு. மதிஞானமிலாமறமேநிறைய, மதினாலடியோமுனைநன்கதியோங்
கதியாமுறநின்கழல்நீயருள்வாய், மதுசூதனமாயவனேநமவே. (௬௯)

வருமுக்கிரராவணனன்மவுலி, சிரமுக்கிடவேயுரமுஞ்சிதைய
வெரிமுக்குறுசாயகமெய்தருளுந், திருவிக்கிரமாதிருமார்பநம. (௭0)

வேறு. காமனார்தமைநல்கியகாரணா, வாமையாயம்புராசியமர்ந்துளாய்
சாமரூபசங்குசக்கராயுதா, வாமனாமறையின்பொருளேநம. (௭௧)

காதிகாதலன்வேள்வியைக்காத்துநீள், தீதுசாலிலங்கேசனைச்செற்றுளாய்
சூதிராநெஞ்சர்தம்முனிற்றேற்றுவாய், சீதராதிருநேமியினாய்நம. (௭௨)

மருடவிர்ந்துமறையொருநான்கினின், பொருடெரிந்துனைப்போற்றிசெய்வா
கருடவாகனனேகதிராழிய, விருடிகேசவிறையவனேநம. [ர்க்கருள்

கதமொழித்துக்கயவர்களாகிய, வதன்மனைத்துறந்தேயறநீங்கலார்க்
கிதமதாகியசிந்தையர்க்கெய்துவாய்ப், பதுமநாபபழம்பொருளேநம. (௭௪)

வேறு. தீமோதியபோல்வினையேதிகழுங்
காமாதுரர்வஞ்சகமேகளைவோய்
தாமாதரவால்நினைசற்குணனே
தாமோதரனேதலைவாநமவே. (௭௫)

எனவேபலவேதமெடுத்துரைசெய்
துனையேயலதொன்றுமுரைக்கிலா
மனமேயுடையோம்வினைமாற்றுகெனச்
சொனவானவருட்பிரமன்சொலுவான். (௭௬)

வேறு. இராவணனிரணியனிரணியக்கணன்
றராதலத்துயிர்களைத்தடிந்தெல்லோரையு
மிராவணமியற்றுவாரிராமற்போக்கினா
யராவணைதுறந்துவந்தருள்தியையனே. (௭௭)

என்னையும்படைத்தனை தானுன்னின்னரு
டன்னிறலெண்ணிலாவுயிர்கடந்தன
னன்னவர்தமிற்கொடியவராமாய்த்திடப்
பின்னைநானறிகிலேன்பெருமைநீயலால். (எஅ)

மகதனுந்தந்தவக்கிரனுமாயமே
மிகுநரகனுமுரண்மிக்ககஞ்சனும்
பகனொடுசேதிபன்பவுண்டரன்றிறல்
நிகரில்சாலுவனுடனிருதரும்பலர். (எகூ)

தீயெனவுருத்தனரறமுந்தேய்ந்திட
மாயமெண்ணிலாதனவஞ்சம்விஞ்சவே
நோயெனத்திரிந்தனருலகைநுங்குவார்
தூயநான்மறைநெறிதிறம்பத்தோன்றினர். (அ0)

சூழ்வினைதழீஇயகஞ்சுகத்தர்சுற்றிநல்
வேள்வியினவியையும்விலக்கியெம்மையும்
தாழ்வினிற்படுத்தியேதருக்கினார்கள்யாம்
வாழ்வினையொழிந்தனமாதவாவென்றான். (அக)

இருக்கினின்மறையவரிருக்கையாரவே
யருக்கியமளிக்கிலரறமுமோய்ந்திடத்
திருக்கறுமருக்கனற்றோர்செலாவகை
நெருக்கினரசுரர்கணேமியாயென்றான். (அஉ)

இன்னனபலபகர்ந்திடர்களேமுய
வன்னவர்தங்கள்வேரறுத்தெம்மன்னையா
மின்னிடைவசுந்தரையலக்கண்வீய்ந்திட
வுன்னுவாய்மாயவென்றுரைக்குமெல்லையின். (அங)

வேறு. தேனுவின்னுருவிற்சென்றபார்மகள்
மானையெய்தமதுணன்மலர்ப்பதந்
தானிறைஞ்சித்தழைத்தெழுமன்பினு
ளீனமில்வசனங்களியம்புவாள். (அச)

என்பொருட்டினிரணியக்கண்ணினு
னின்புருட்டினையெனமதாகியென்
னன்பவச்சுதவாழியங்கையயான்
றுன்புழந்துவந்தேனெனச்சொல்லுவாள். (அரு)

நீசரானவரெங்கும்நிறைந்தனர்
பேசலார்கள்மெய்பொய்கள்பிதற்றுவார்
கூசலார்மறவஞ்சங்கொலைசெய்வார்
நாசமாகிலராய்மெய்நடுங்குவேன். (அசா)

துலங்குமாசயிலத்தைச்சுமந்தயா
னலங்கொள்வோர்செய்தநன்றியைக்கொன்றிடும்
விலங்குநாவினரொய்தமிடுக்கிலேன்
கலங்குவேன்விடங்கண்டவர்போலவே. (அஎ)

எல்லையற்றபிறங்கல்களேந்தும்யான்
சொல்லவல்லகொடியவர்தம்மினு
மில்லுளாளையிகழ்ந்துபிறர்மனை
புல்லுகின்றவர்தம்மைப்பொறுக்கிலேன். (அஅ)

எட்டுமால்வரையேந்துமெனக்குநற்
சிட்டரோடுமுற்றேசெல்வந்துய்த்தவர்
கெட்டபோதினின்விட்டகெடுமதித்
துட்டர்பாரஞ்சுமத்தற்கரியதால். (அகூ)

வேதபாரகர்தஞ்செயல்விட்டனர்
நீதிமாறினர்நீணிலமாள்பவர்
மாதர்கேள்வர்தம்வாய்மைமறுத்தனர்
தீதுசேர்கலரொங்குந்திரண்டனர். (கூ0)

உதவியாயினர்க்கொன்னலராயின
ரதன்மராயினர்பாரினையாள்பவர்
வதைகளேமுயல்வார்குருமாற்றமு
மிதமதாகவெண்ணார்வினையீட்டுவார். (கூக)

ஆவிழந்தனரந்தணர்கன்றினர்
நோவவெவ்வியவவ்வியநோற்றிடும்
பாவர்தம்மைக்கணமும்பரிக்கிலேன்
சாவெனைக்கருணாகரவென்றனள். (கூஉ)

செய்யமாதுக்கிடர்செய்ததீயனும்
வெய்யராவணன்வீழவேவாளிக
ளெய்தமாதவவென்னையிகழ்ந்திடி
னுய்யுமாறெனக்கில்லையென்றோதினள். (கூங)

பாரியானநற்பாரணங்கானவள்
கோரமாங்கலரால்நொந்துகூறிய
நேரிலாவுரைகேட்டருணேமியான்
சீரிதாந்திருவாய்மலர்ந்தேசொல்வான். (கூச)

பாவகாரியர்யாவரும்பற்றறக்
காவலன்வசுதேவன்கணுகிய
தேவிதேவகிதானருள்சேயதாய்
மேவுவேனிலனென்றுவிளம்பினன். (கூரு)

தேசுடன்புவிமாதுசிறந்தனள்
வாசவன்கமலாசனன்வானவ
ராசையெங்குமுனிவரோடாடினார்
வீசுநாண்மலரின்வெறிவிஞ்சவே. (௯௬)

கீதம்வீணையிசைத்தனர்கின்னரர்
வேதமோதினர்மெய்த்தவத்தோர்களும்
போதனோடுவலாரிபுத்தேளிருஞ்
சீதமாமலர்வீசினர்திக்கெலாம். (௯௭)

இனையதாயகளிப்புடனெண்ணிலா
முனிவராகண்டலனயன்மூர்த்தியே
யினியராகியிறைஞ்சினர்மால்பதம்
புனைதுழாய்மலர்சூடினர்போற்றியே. (௯௮)

போற்றிசெய்யுமவர்க்குப்பொற்பாரநா
வேற்றினையுமும்பரோடேசெனச்
சாற்றியேபுவிதன்னைத்தெருமரல்
மாற்றியேவிடையீந்தருள்மாதவன். (௯௯)

அனந்தறீர்ந்தவமலன்றனன்பரா
மினந்தனோடுபயோததியெய்தியே
மனந்தனால்கினைந்தேமணிப்பஃறலை
யனந்தனார்க்கொருவாய்மையருள்செய்வான். (௧௦௦)

கற்புமிக்கிடுந்தேவகிகாண்குறுங்
கெற்பமாகியுரோகணிக்கிள்ளையாம்
பொற்பினாடன்வயிற்றுதிபோயெனச்
சற்பராசனைமுற்செலச்சாற்றினான். (௧௦௧)

மாயைதன்னைவரவழைத்தாழியா
னாயொண்ணுமசோதைமகளெனப்
போயுதித்திடுதேவகிப்பொற்கொடி
சேயுரோகணிசேயெனச்சேர்த்தியே. (௧௦௨)

திருவினாயகன்கூறிடத்தேவகிக்
கருவதாய்த்திங்களேழினைக்காட்டிமெய்
தருமுரோகணிதன்வயினாஞ்சிலஞ்
செருவலோனெனச்சேடனுதித்தபின். (௧௦௩)

அரவின்வைகியவாழியங்கையன்பாற்
பரவைதன்னைப்பொதுவர்தம்பாடியிற்
சுரபியெண்ணிலதாகிமுற்றேன்றென
வுரைசெய்தானுயிர்தோறுமுறைபவன். (௧௦௪)

அண்டமுற்றுமயின்றருளாழியா
னண்டர்தங்களைநோக்கியவனியி
னண்டநுண்முனிதன்மரபாகியே
யண்டவொன்னவவதரிப்பீரென்றான். (கoரு)

ஆயகாலையினட்டவசுக்களிற்
றூயனானதுரோணனுக்கும்மவன்
சாய்விலாக்கற்பினுடனொத்தேவிக்கு
மேயவன்புகழ்வேதனியம்புவான். (கoசு)

மாதவன்வசுதேவன்மதலையாய்ப்
பூதலத்தினுதிக்கும்புதல்வனு
யாதலானந்தகோபனசோதையாய்ப்
போதுமின்னிலத்தென்றனன்பூமகன். (கoஎ)

திருவையுமுயர்தராணித்தேனையு
மருவுமானிலமீதினினென்றுமா
லுரைசெயுக்கிரசேனன்பின்னோனுவர்
தருளுமாகுதரத்தினமர்ந்தனன். (கoஅ)

வேறு. தேவகியுதரந்திகழநற்கருப்பமாகியசீதரன்றன்னைப்
பூவின்மெய்த்தவனெண்கயிலையங்கிரிவாழ்புராரியும்வலாரியும்புகழ்சேர்
தேவர்கள்முனிவர்கருடகாந்தருவர்சித்தவித்தியாதரர்சூழ
நாவினன்மறைகொண்டுளமகிழ்களிப்பால்நயனநீருகின்றுநவில்வான்.

ஏகபாதவத்திற்பலமிரண்டியைந்தமுப்பணைநாற்சுவையினிய
தாகியசிவமைந்தாறதாமுருவமமைந்ததோலேழெட்டுக்கவடே
யோகையாமூர்த்திநயனமொன்பதுபத்திலையுடையவ்விருக்கத்தின்
சாகையிநெருபுட்டிரிந்துதானுகருஞ்சான்றதாயொருபுட்பார்த்திருக்கும்.

ஒருமரங்குரம்பையதன்மதன்மங்களுனைத்திடுமிருபமொகு
மருவுமுப்பணைசாத்திகவிராசததாமதகுணமூன்றெனவறைவ
ரிரதநற்சுவைநான்கறம்பொருள்காமமிணையிலாமோக்கமென்றிசைப்ப
ருரனுறுசிபமொண்சுவையொளிபருசமோசைநாற்றங்களோரைந்தே. (கசக)

உருவமாறெனவேயுனாக்குவதன்னையுதரத்திற்கருப்பமொண்டொழிந்தே
யிருநிலமிசையிற்சனனமாங்குயர்தலியவனமூப்புறுநாச
முரணுறுதோலேழெனுமதேயுட்டோல்மூடுதோல்வள்ளுரமிறையுங்
குருதிமேதசைநீளத்திவெங்குடராகிணமெனக்கூறுவரன்றே. (கசஉ)

கவடிருநான்கென்றறைவனவுயர்ந்தககனமாசுகங்கனலயமண்
ணுவமையின்மனசுபுத்தியாங்காரமுடனிவையெட்டெனவுரைப்பர்
நவையறுநயனம்நவமெனவறிஞர்நவின்றதுநான்தெரிந்துரைக்கிற்
புவியிடைவிரசுஞ்செனங்கள்தம்முடலினவத்துவாரங்களாய்ப்பொலியும்.

தெசவிலையெனவேயறைவதுபிராணாபானநல்வியானமுந்திரள
விசையுறுமுதானசமானநாகன்கூருமன்கிருகரன்விளாந்தெழுந்தே
யசைவுறுதேவதத்தனஞ்செயமீங்கையிரண்டாமெனவறைவர்
வசையிலீர்க்கஞ்சஞ்சரிக்குநற்சீவன்மறுவிலாப்பரனொடுமிரண்டே. (௧௧௪

அந்தமாமரநீயறன்மறன்குணநீசுவைசிபமமர்ந்திடுமுருவ
முந்துதோல்மூர்த்திநயனநீளிலைசெய்முயற்சிநீசீவனீபரனீ
யெந்தைநீயெண்டிக்கேழ்கடல்வரையேழுலகநீயுந்தியினென்னைத்
தந்தநீதந்திக்குதவியேகராவைத்தடிந்தசக்கரக்கையனீயே. (௧௧௫)

பிறவியாமுலப்பில்பெருங்கடறன்னைப்பெருமவுன்றொடொழுகினைப்பா
மறுவிலாநாவாய்கொடுகடந்தேறிவானவர்மலர்மழைபொழியக்
குறைவிலாத்தீபநிறைதிசைவயங்கக்கொடிகுடைசாமரைதிகழ
நிறைவுசேர்பரமபதத்தினெய்துவர்கள்நின்னடியாரெனவாழ்வார். (௧௧௬)

ஐம்புலனடக்கியனிலமேயுணவாயருவரையேறிநீள்விசும்பி
னும்பர்கள்வெருவத்தழலினுப்பண்மெய்யோகமாயிருந்தவரெனினு
மெம்பரநின்றொடொழுகினைவறியாவேழையரிருநிலமுருக்கொள்
கொம்பிலாதுயரவெழுவபோல்வீழுங்கொடியெனமறுகிவீழ்ந்திடுவார். (௧௧௭)

அண்டமெண்ணிலாதநின்வயிற்றடக்கியருளுவாயைம்பொறியடக்கு
மெண்டவர்நின்றொடொழுதுதஞ்சென்மவிருஞ்சிறையொருவுவரொன்றால்
முண்டகருடனெவ்வுலகமுந்தந்தமுராரியேயுனக்குமெய்ப்பிறவி
யுண்டெனவுரையாரறிஞருஞ்செனமம்வயிரியர்கோலமென்றுணர்வார்.

ஊரிலியுருவமிலிகுணமிலிபேரிலியிழைகருமமொன்றிலியா
லாருனையறிவாரறிந்தவர்பிறவியளக்கரினமிழ்ந்திடாவண்ணஞ்
சீருறுமீன்கூருமகிரியரிமான்குறண்மழுச்சிலையலாயுதராய்
நேரில்யாதவனாயிவணினிற்றோன்றிநிகரிலாக்கற்கியுமாவாய். (௧௧௯)

கஞ்சமென்மலரோனுருவெனவுலகம்படைத்தியாற்ககனமீதெழுந்த
வஞ்சனமேகமாயவுன்னுருக்கொண்டளித்தியாலளக்கரினெழுந்த
விஞ்சியநஞ்சநுகருவோனாகித்துடைத்தண்டம்விண்டிடுமேனா
ளெஞ்சின்மாவடத்தினிலையின்மேற்குழவியெனவமர்ந்தீறிலாதிருப்பாய்.

அச்சுதானந்தகோவிந்தநமவே ஆயிரம்பெயரினாய்நமவே
பச்சைமாமணிப்பரமனேநமவேபயோததிதுயில்கொள்வாய்நமவே
நச்சுமாதவர்களுயகநமவேநான்மறைச்சோதியேநமவே
யிச்சையாய்நீயுண்டுமிழ்ந்தவிவ்வுலகிற்பிறந்தருளிறைவனேநமவே. (௧௨௧)

என்னும்வாசகங்களிருக்கெசுச்சாமவதர்வணவேதத்தினியம்பி
மன்னானகதுந்துபியருள்போசனருளியமகள்முனுந்தோன்றி
மின்னுநேமியனுன்வயிற்றிடையமர்ந்தான்விளங்கியதுலகமெம்மிறைவ
னன்னையாமணங்கெவாழியென்றயனுமருந்தவமுனிவருமகன்றார். (௧௨௨)

என்றுநான்முகனுமிமையவர்திரளுமேழைபங்காளனுந்தாரக்
குன்றினைநிகராங்கரியுடைக்கோவுங்கொடியபொற்கண்ணனைக்கொன்றே
பன்றியாயெழுந்தன்றிடந்தபார்மகடன்பாரநீயொருவியேவாழ
வினறுமாநிலத்திற்றிருவவதாரஞ்செய்கெனப்போற்றியெகினரால். (கஉங)

மாதவரிமையோர்மலரயன்வலாரிமதிவளர்சடையினோன்பிறரும்
போதலுமுராரிதிருவவதாரமுணர்ந்திந்துபொலிந்தனன்கிழ்பால்
மீதலமிறைந்ததாரகைவிளங்கவிண்மிசைத்தருவெனமண்ணிற்
பாதவங்கனிகள்மலிந்திடப்பாலிவெம்மைபோய்மருதம்போற்படிய. (கஉச)

அறமெலாந்தழைக்கவமரர்கள்மகிழவானிறைசுரந்துபால்பொழிய
மறமெலாந்துணியமதியிலாவரசாசுரர்வாளரக்கர்கடங்க
டிறமெலாமவியத்திரண்டவாமத்தோடுதித்திடத்திவினைமடிய
மறுவிலாவீரமகளுளமகிழமண்மகடவம்வளர்ந்திலக. (கஉரு)

அந்தரமிசையிற்றுந்துமிமுழங்கவமரர்கள்மலர்மழைபொழிய
நந்துசேர்மலர்க்கையுருப்பசியரம்பைதிலோத்தமைமேனகைநடிப்பச்
சுந்தரஞ்செறியாழ்நணுகுறவிசையாற்றும்புருநாரதர்பாடக்
கந்தநன்மலரினளாவியேவசந்தமுலாவிடக்கதிர்நிலாவெறிப்ப. கஉசா)

வேறு. பொங்கிலாதவெட்டாந்திதிபோந்திடச்
சிங்கநாயிறுரோகணிசேர்ந்தநாட்
சங்கநேமிதரித்தகைதன்னுடன்
செங்கண்மால்சிறந்தேயுதையஞ்செய்தான். (கஉஎ)

தேவகிச்சொடியும்வசுதேவனுங்
காவலிற்றளைகாலிறகழன்றிட
வாவலின்னெழுந்தார்வமகத்துற
மூவரொண்ணியமூர்த்தியைப்பார்த்தனர். (கஉஅ)

வேறு. கஞ்சமென்மலர்க்கண்ணிணைதிகழ்வுறக்கண்டார்
விஞ்சுநன்மணிமவுலியும்விளங்கிடக்கண்டார்
எஞ்சலின்றொளிர்திகிரிகோடிருகையிற்கண்டா
ரஞ்சலென்றவாட்கரமுந்தண்டமர்கையுங்கண்டார். (கஉகூ)

சிலைகுனிந்தெனச்சிறந்தநற்புருவமுங்கண்டார்
மலிகவின்கொடிமூக்குடன்வதனமுங்கண்டா
ரிலகுகுண்டலங்காதினினுறுமெழில்கண்டா
ருலகயின்றருள்வாய்மலரொளியையுங்கண்டார். (கஙo)

கந்தரத்திகழாரமுங்கலன்களுங்கண்டார்
மந்தரம்மெனக்குவவுத்தோள்வனப்பையுங்கண்டார்
சுந்தரஞ்செறிகவுத்துவத்துலங்குவகண்டா
ருந்திகண்டவருதரபந்தனத்தொளிகண்டார். (கஙக)

கோலமாங்கடிதடம்பொனிறுடைமேற்குலாவக்
காலினூபுரம்பரியகந்தண்டைகள்கதிரா
யேலநல்லவிர்வீசிடவெழிலியைநிகர்க்கும்
பாலனாகிமெய்க்கவின்கொளம்பரமனைக்கண்டார். (கஙஉ)

பொன்னினன்மலரிமையவர்பொழிவனகண்டார்
துன்னுநற்றுழாய்முடிமிசைத்துலங்குவகண்டா
ரன்னையும்வசுதேவனுமத்தனும்ஞானந்
துன்னுசிந்தையாராடினரிருகையாற்றொழுதே. (கஙங)

சுற்றியேவலம்வந்தொளிர்தாளினைத்தொழுதே
யிற்றதாம்பருவரலெனவாடினரியல்பாங்
கொற்றமாகியயதுகுலமன்னனுங்கொடியு
மற்றைநாட்களிப்புற்றமையறைபவராரோ. (கஙச)

ஆயதோர்பெருங்களிப்புறுமன்னையும்பிதாவுந்
தூயகேசவமுராரியேகனகன்மெய்துளைத்த
தீயமாகியபரமநற்பவளம்போற்றிகழும்
வாயநீமகவாயதேனெமக்கென்றுமகிழ்வார். (கஙரு)

வேறு. சிற்றவ்வைசொல்லத்திருவுறச்சீர்த்தம்பியுட
னுற்றுயர்கானெய்தியிலங்கையுறுமொன்னலனைச்
செற்றுலகமேழுந்திருநாபியின்விளங்கப்
பெற்றவனைப்பெற்றனம்யாம்பெற்றவரம்பெற்றவரார். (கஙசு)

கோலமெனமண்ணிடந்தகொண்டலோவன்றனை
மூலமெனவந்தருளிநின்றமுழுமுதலோ
வாலநிகர்வாரரந்தைதீர்த்தருளுமச்சுதனோ
பாலனெனவெம்முன்வயங்கும்பரஞ்சுடரோ. (கஙஎ)

என்றென்றுருகியிணைமலர்க்கண்ணுறைவியுக
நின்றுநினைந்துநெடியவனைத்தானோக்கி
யன்றிவ்வுலகுண்டருளுமாதிப்பரம்பொருளே
யின்றெம்மகவாய்வயங்குமாயமியம்புதியால். (கஙஅ)

வஞ்சனெனுங்கஞ்சன்மதியிலியோன்வந்திடுமென்
றஞ்சினம்யாமென்றறையவாழியான்கேட்டருளிக்
கஞ்சமலர்போன்றவிருகண்ணருளினோக்கி
விஞ்சுதவஞ்செய்தவர்நீரொன்றுவிளம்பலுற்றான். (கஙகூ)

வேறு. தூயனுஞ்சுவாயம்பூமன்மந்திரத்திற்றோன்றியபிரமனுஞ்சுதவா
வேயதாந்தோளிபிருச்சனியென்னும்பாரியாமெல்லியலுடனு
மாயனுமெனைத்தாங்கண்டிடவிரும்பிவரையினிலெய்திவான்மழையாற்
றீயினால்வெயிலால்மெலிந்திடார்சருகுதின்றுமாதவம்புரிந்தனரால். (கச0)

வாயுவேயுணவாயிவ்வகைபன்னீராயிரமாந்தெய்வவருட
மோய்விலாதரியதவம்புரிந்திடலுமுற்றனென்யானொளிதிகழத்
தூயமாதவனுந்தேவியுமென்னைத்தொழுதவர்பரகதிகேளார்
மாயம்யானியற்றப்பிறவிகடோறுமெமக்குநீமதலையாகென்றார். (கசக)

பெருந்தவர்தமக்கன்றவ்வரமருளிப்பிருச்சனிகருப்பனாய்ப்பிறந்து
கருந்தடமுகிலம்போருகக்காடுபூத்தெனக்காட்சியாய்வளர்ந்தே
யருந்தினனென்றாயீய்ந்தருள்முலைப்பாலன்னையும்பிதாவுமுண்மகிழ
விருந்துமெல்லெனத்தான்றவழ்ந்தழகாரநடந்தவர்க்கின்பமாண்டளித்தேன்.

மற்றுமோர்பிறப்புக்காசிபனாகியதிதியாய்வந்துமாதவஞ்செய்
தற்றிடைக்குறளாயவரிடைத்தோன்றியுயர்ந்துமாபுராணவேதங்கள்
கற்றவனாகிமாவலியீந்தமூவடிதானங்கையேற்று
முற்றமூவுலகுமீரடியடங்கவளர்ந்தனன்முனிவர்கள்தொழவே. (கசங)

ஆதலாலநாதிகாலமேதுடங்கியருந்தவஞ்செய்தெனைமகவாய்ப்
பூதலத்திருகாலுதவிடுமவர்நீருமக்குநான்புதல்வனாய்வந்தேன்
மாதுலனாகஞ்சனைவதைத்துமண்மிசைப்பாரமும்நீக்கி
மீதலத்துயர்ந்தகதியுமக்களிப்பன்விளம்புவதுளதிங்ஙன்கேண்மின். (கசச)

வேறு. அன்னையெனும்நின்வயிற்றினென்பாயலானமர்ந்து
பின்னையென்றன்மாயையினாற்போந்தேயுரோகணிப்பெண்
ணென்னுமனையீன்றமகனானனசோதையெனு
மின்னின்மகளாய்ப்பிறந்தாளந்தரியாமென்கொடியே. (கசரு)

அஞ்சன்மினீர்கஞ்சனடைத்தகபாடம்வெளியாந்
துஞ்சினர்போற்காவல்செயும்வீரர்துயில்கொளுவர்
விஞ்சுபுனலார்நதியுமேகவழியும்விடு
மஞ்சுபடையுமெனைக்காக்குமெனவறைந்தே. (கசசு)

இந்தவிருளதனினென்னையிருகையேந்தித்
தந்தையெனுநீயேபொதுவர்பதிதான்புகுந்து
நந்தன்மனையாள்மகனாயுய்த்தவடனன்மகளா
மந்தரியைநீகொடுவாவென்றங்கறைந்தனனால். (கசஎ)

சோதியுரைகேட்டுத்தொழுதுபிதாவுந்தாயு
மாதியுருத்தீண்டுதற்கின்றஞ்சுவோமென்றறையத்
தீதில்வளையாழிசெறிந்ததிருக்கைத்தலமும்
பீதகநல்லாடைமகுடங்கரந்தபெம்மானும். (கசஅ)

ஆயசிசுவெனவேதான்தொழுதுதோன்றுமவன்
மாயைதனில்மாயன்வடிவுமுரையுமறத்
தாயெழுந்துவந்துதடக்கையினாற்றானெடுத்தாங்
கேயெனுமுன்மார்பினணைத்தேங்கியிவையுரைப்பாள். (கசகூ)

யாதவர்கள்தங்கள்குலமீடேறயானீன்ற
மாதவமேநீலமணியேமரகதமே
தீதுயருங்கஞ்சனுனைத்தீண்டுதன்முன்னேவினையேன்
சாதனலனென்றுத்தழுவியணைத்தாடாயே. (௧௫௦)

கையைநெறித்தாள்வயிற்றின்மோதினாள்கண்ணிணைநீர்
பெய்யவுளம்பொருமிப்பீழையுறும்பெண்ணமிர்த
முய்யும்வகைகாணாதழலவசுதேவன்
றுய்யகுழவிதனைமோந்துதுளக்கமுற்றான். (௧௫௧)

என்மகனேஎன்னுயிரேஎங்கள்குலக்கொழுந்தே
நான்முகனுங்கஞ்சன்வினைசேருஞ்சமுடனுனைக்
கொன்மினெனவந்தாற்கொடியேனும்நின்றாயுங்
கன்மனதாய்நில்லோமடிவோமெனக்கழறி. (௧௫௨)

சிந்தைவெரீஇயின்பஞ்சிதையும்வசுதேவன்
செந்திருவினாயகனார்செப்பியசொல்நேருறவே
நந்தனுயர்மனையினற்குழவிதன்னோடு
முந்துவன்யானென்னமொழிந்தான்றன்றேவியுடன். (௧௫௩)

மன்னனுரைகேட்டுமனமெலியுந்தேவகியு
மன்னதுவேசெய்கருமமென்றங்கழகொழுகுந்
தன்னிகரிலாச்சிசுவைத்தன்னாயகன்கரத்தின்
மின்னிடையாள்வைத்துப்பொருமினள்கண்ணாலிவிழ. (௧௫௪)

கண்ணேமணியேகருநாயிறுபோல்வா
யுண்ணோயொழியவுனைப்பெற்றேனானுவந்து
மண்ணோர்மகிழவளராமற்போக்குவனோ
பெண்ணாகயான்பிறந்துபீழையினைப்பெற்றேனே. (௧௫௫)

இன்னபலபன்னியெழுந்தாற்றியீன்றவளா
மன்னையரந்தையுறவங்கைத்தலமேந்தி
மன்னன்குழவியுடன்வாயில்கடந்தேயமுனை
நன்னதியுமேகநெறிநல்கநடந்தனனால். (௧௫௬)

வேறு. பொன்னின்மாமலரிமையவரெங்கணும்பொழிந்தார்
மின்னின்வான்மிசையதிர்ந்துமேகத்திரள்பொழிய
மன்னுதாரைகள்மாயன்மேல்விழாவணஞ்சேடன்
றன்னுமாமணிப்பணத்தினாற்கவித்தனன்றுலங்க. (௧௫௭)

ஆறதாகியயமுனையைக்கடந்தெய்துமளவிற்
சீறுபேயினந்திரண்டெழுந்தரியினைச்சேர்ந்தே
யீறிலாதவைம்படைகண்டுகுலைகுலைந்திடைந்து
பாறிவீறுமாகாளிபாலடைந்திவைபகர்ந்த. (௧௫௮)

அயந்தருந்தடநளினியினிடங்கராலயர்க்கே
வுயர்ந்தகையெடுத்தோலமிட்டுளையும்வேழத்தின்
பயந்தவிர்த்தவன்பாலனாய்வந்தனனென்று
செயந்திவந்தடிபணிந்தெழுந்தாடினடிகழ். (௧௮௯)

நம்பர்தம்மொடுநொடித்தவணண்ணலியேயியந்த
சம்புவின்பலமுவந்தருடேவகிதனைய
னிம்பருன்பெயர்தன்னிருலியாம்பிறந்திடுநா
ளும்பருந்துதிசெய்யவீடளிக்குமென்றுரைத்தான். (௧௯௦)

ஸ்ரீதரன்னருள்செய்தலுஞ்செயந்திநின்றாடி
யாதியோன்றனைப்புகழ்ந்தவனடிபணிந்தேதக
மாதவன்செயுமாயக்களறிகிலான்மனத்திற்
பீதிமல்கிடவேவசுதேவனும்பெயர்ந்தான். (௧௯௧)

வேறு. விஞ்சுமணிமாடவடமாமதுரைமேவுங்
கஞ்சனிவணெய்துவனெனக்கடிதினேகி
யஞ்சியிருளூடுவசுதேவனழகாரு
மஞ்சணெடுமாயர்பதிநீண்மறுகில்வந்தான். (௧௯௨)

ஆயர்களொல்லையிலராகியடைவோர்தன்
னாயகனெனப்புகழ்கொணந்தன்மனைநண்ணி
மாயையெனுமந்தரியையவ்விவசுதேவன்
தாயினையசோதையருகிற்சுதனைவைத்தான். (௧௯௩)

நந்தன்மகளென்னவருநங்கையையெடுத்தே
வந்துவடமாமதுரைபுக்குவசுதேவன்
சிந்தையயர்வுற்றெதிர்கொடேவகியினிய
முந்தியழுவெங்குழவியுண்டதுமுலைப்பால். (௧௯௪)

குழவியழுமோசையதுகேட்டகொடியோரா
மெழுவினுயர்தோளினர்விழித்தனரெழுந்தே
யுழுவைநிகராகியடர்கஞ்சனிடையுற்றுத்
தொழுதுதுதிசெய்துபயமெய்தியிவைசொல்வார். (௧௯௫)

கொற்றவவுனக்கிளையகோமளம்வருந்திப்
பெற்றனளருங்குழவியென்றவர்கள்பேசச்
செற்றநிறைநெஞ்சொடுதிடுக்கெனவெழுந்தே
யெற்றுவனெனக்கடிதினேகினனடந்தான். (௧௯௬)

தீங்குநிறைகஞ்சனிளையாடனிடைசெல்ல
வேங்கினள்பெண்ணென்னமகவெட்டிதுடனென்றே
வாங்கினனடித்துணைபிடித்துமறவோனு
மேங்கியிருகைகொடுசுழற்றியுறுமெல்லை. (௧௯௭)

கரத்திடைசுழற்றியறையும்முனிருகாலா
லுரத்தினிலுதைத்துயர்விசும்பினிடையுற்ருள்
பருத்தகதையாழிவளைகேடகம்வில்பாணம்
விரித்தசுடர்வாளயில்கொளெண்கரம்விளங்க. (௧௬௮)

காலணிசிலம்பிலகநற்கனகவாடை
நூலிடைமருங்கினெழில்மல்கநுவல்கினருள்
சீலமறுகஞ்சவுனையேவதைசெய்வோனுய்
மால்குழவியாயினனெனுவவள்மறைந்தாள். (௧௬௯)

வேறு. அந்தரத்தெழுந்தஅந்தரியிவையையறைந்திடுமுறையினற்கஞ்ச
னுந்தனன்பகைஞன்வேறுளனெனவேநுண்ணிடைமடந்தையாமெங்கை
மைந்தரினட்டாமதலைசத்துருவாமென்றசரீரிவான்மிசையிற்
றந்தசொற்பழுதாய்ப்பிறந்தபெண்டெய்வமாகிவான்ருவியதென்னே.

அன்றுவான்மிசையினெழுந்தசரீரியறைந்தசொல்லசத்தியமான [ம்
தின்றியானுணர்ந்தேன்மெய்யெனநினைந்தேயெங்கைதன்மைந்தரையெல்லா
கொன்றுமாநிலத்திற்கொடுவினைசெய்தேனென்றுதான்பலபலகூறிக்
கன்றியசினந்தீர்ந்தெதுகுலமன்னையனுசியைக்காவல்விட்டனனல். (௧௭௧)

காற்றளையகற்றித்தேவகிக்கினிமைகழறியுன்மைந்தர்கடம்மைக் [ச்
கூற்றெனவதைத்தேன்பொறுத்தியாலென்று கொடியவன்றங்கையைத்தழுவி
சீற்றமில்மனத்தன்றுயர்வரத்திகைத்துச்சீர்வசுதேவனைச்சேர்ந்தே
யூற்றுநீரொப்பக்கண்கணீரொழுகவொற்கமுற்றிவையிவையுரைத்தான்.

ஓடுநீர்நதியின்வனத்துலர்மரங்களருவியோடொருமுகமாகக்
கூடியேபிரிப்பிற்கணத்திடைப்பலவாயொருவிடுங்கொள்கையேயொப்ப
வீடினர்மருகரிமையவர்தமக்கும்விதியினைவென்றிடவரிது
வாடியேதளர்ந்தால்வருவிலூழிவருமதோவராதொரீஇவற்றே. (௧௭௩)

மண்ணினிற்பிறந்தமனுரகுநகுடன்மதிதயனன்மகள்கொழுன, னெண்ணருங்
காலமிருந்தவரிறத்தலல்லதிண்டிருந்தவருளரோ, பெண்ணருங்கலமேபின்வ
ருந்துணையேபிழையினைப்பொறுத்தியென்றறைந்து, கண்ணினீருகத்தானிறை
ஞ்சிமைத்துனன்றன்காலிரண்டையும்பிடித்தழுதான். (௧௭௪)

கஞ்சனும்வஞ்சனிவ்வகைபுலம்பிக்கபடநாடகக்கணீர்கலுழ
விஞ்சொலாற்றேற்றியிறைஞ்சலுமெடுத்தேயிணையிலாவெழில்வசுதேவன்
விஞ்சியவிதியேயுன்றனுலுன்றன்மருகரைவீட்டியவதற்கு
நெஞ்சுளைந்தழுங்கியிரங்கலையைய நின்மனைக்கேகெனப்போனன். (௧௭௫)

பொன்மனைபுகுந்தோர்மண்டபநாப்பண்புதுமணியாசனத்திருந்து
துன்மதியானவமைச்சரைக்கூவியவருடனிகழ்ந்ததுசொல்வா
னன்மதிமுகத்துத்தேவகியந்தபெண்ணிருநாலுகையுடனே
-யென்மதிமயங்கவாயுதம்பலகொண்டெழுந்துவிண்ணெய்தியேசொல்வாள்.

மாதவனுருவமாறியீண்டுன்னைவதைத்திடப்பாலனாய்வந்து
பூதலத்திருந்தானென்றிடிபோலப்புகன்றவள்போய்மறைந்தனளால்
ஏதிதென்றுணர்த்திடுன்னுயிரனையீரொன்னுடைவாழ்வுமதன்றே
வோதுமினிதற்கேதுபாயமென்றியம்பவுருத்தெழுந்தறையலுற்றனரால்.

தேனுகன்பெலம்பன்கேசிசாணூரன்முட்டிகன்றிறலுடைச்சகடன்
மானகசிகராம்பகனகனிகர்துன்மந்திரியானவருரைப்பார்
வானகமண்ணெண்டிசையெலாம்வடவாவனல்வளைந்தென்னவன்பகைஞ
னூனுகாதுண்போமெமக்குநேருலகத்தியாருளரொன்றுபின்னுரைப்பார்.

நீயுயர்சிலையையெடுத்துநாணேற்றிநெடியசாயகங்களைவிடுத்தாற்
றீயுமெவ்வுலகுமுனக்கெதிர்நிற்பார்செகதலத்திலையுனக்கஞ்சி
மாயவன்கடலுள்வைகியாண்டொளித்தான்மலையிடையுமாபதிமறைந்தான்
றூயமாமலரோன்றவத்துளோன்வலாரியிராவணிக்கன்றுதோற்றனனால்.

மாயனுக்கிதமாமுனிவர்வேதியராணிறைமகமறையிவையழியத்
தீயெனமுடுக்கியறைந்திடின்மாலின்முயற்சியுந்திறல்களுஞ்சிதையு
மாயிருநிலத்திற்சிசுவெனவந்தான்வளருமுன்மறைந்தியாங்கொல்வம்
நோயுறுபிணிமேலடர்வமுன்னருந்துமருந்தினுனுறுக்குவார்போல. (௧௮௦)

என்றவர்நயனமெரிந்துவெங்கதத்தாலிவையெலாமியம்பலுங்கஞ்ச
னன்றுநும்முயற்சிநவின்றவிப்படியேநாரணன்றமனையேநாடிக்
கொன்றிளங்குழவியானவன்வளருமுன்னர் நீர்கடிதினிற்கொன்மி
னென்றவர்க்கினியவாடையாபரணமீய்ந்தினிதிருந்தனனிப்பால். (௧௮௧)

கண்ணன்திருவவதாரப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨௯௭௯.

---

௨௫. வது—பூதனைவதைப்படலம்.

ஆரணனுமாயகிலமுற்றவுமயின்ற
பாரணனுமாயுயர்பதந்தனில்வயங்கும்
பூரணனுமாகியுறுபூதமுதலாகும்
நாரணனையேநினைமினோவைகடூர. (௧)

மாதுயரின்மூழ்கிவசுதேவனெனுமன்னன்
றீதில்வடமாமதுரைசேருமுனசோதை
மாதவனைநாரணனைமாமகனெனத்தா
னாதரவினால்முலைகொள்பாலெழவளித்தாள். (௨)

ஏந்தினளுறத்தழுவியின்பமெனும்வேலை
நீந்தினள்மகன்றனதுநீலமுகில்மேனி
மோந்துநளினத்துமுகையாகியமுலைப்பா
லீய்ந்தனளுவந்தனளாதின்னதெனலாமோ. (௩)

தூயவடமீனெனுமுரோகணிதுலங்கு
மாயர்மடவாருடனடைந்துமகவைத்தா
னேயமுடனீலமுகில்நேர்வடிவைநோக்கி
மாயனிவனேமதனனேயெனமகிழ்ந்தாள். (௪)

பேரிமுரசந்திமிலைதுந்துமிபெருத்த
தாரையுயர்சின்னமலிசங்கமிவையெல்லாம்
வாரியொலியஞ்சிடமுழங்கியதுவானோர்
பாரினுறநன்மலர்பொழிந்தனர்பரிந்தே. (௫)

சிந்தைமகிழ்வோடிலகுசேடியர்களோடி
யந்தமிகுமைந்தனையசோதையெனுமாது
தந்தனளெனப்பதம்வணங்கியவர்சாற்ற
நந்தனலனெய்தியமுனாநதியினாடி. (௬)

பொன்மணியினிற்கடிதுசென்றுபுயல்மேனி
நன்மகன்முகக்கவினைநோக்கிநலனுற்றே
மன்மதனைத்தருமிவ்வள்ளலிவண்வந்த
தென்மரபினோர்கடவமாமெனவிசைத்தான். (௭)

பூமடலின்வந்துதிகழும்புனிதனைப்போ
லோமநிறைவேதியர்களுற்றனருவந்தே
மாமலர்மின்னுதனிலன்வந்தருண்முகூர்த்தந்
தாமிசையவெண்ணிநலனென்றுரைகடந்தார். (௮)

போதனுடனேயுலகளித்தபுயல்வண்ண
மாதவவிறைக்குயருமந்தணர்மகிழ்ந்தே
யோதுமறையாகுதிகளோமநிறையத்தாஞ்
சாதகமகஞ்செய்தியலாசியுரைதந்தார். (௯)

வேறு. திலதானமுநூறாயிரகோதானமுடன்சேர்
பலதானமும்வெயிலோனவிர்பரவும்மரவுமிழும்
நலமாகியமணியோடிரணியதானமுநறுமா
மலரோனிகர்மறையோர்பெறநந்தன்வழங்கினனால். (௧0)

தூயோனெறியருள்மல்கியநந்தன்றனியறவே
மாயோனிகர்வடிவாகியமைந்தன்பிறந்தனனென்
றாயோர்குலத்தனைவோர்களுமமிர்துண்டவர்போல
வேயூதினர்குனித்தாடினரெழில்வீதிகள்மிடைந்தே. (௧௧)

வேறு. கதலிநிரைத்தனர்கொடிகளெடுத்தனர்கமுகுகள்நட்டனர்மா
றுதிகளுரைத்தனர்தீபமுமுயற்றியதொடைகணிரைத்தனரால்
மதியையடர்த்தெழிலுடையமுகத்தியர்மயில்களெனத்திரிவார்
குதலைமொழிச்சியர்தெருவிடையுற்றனர்குழலரிசுற்றிடவே. (௧௨)

ஆடினர்வீதிகளெங்கணுமண்டர்களன்புநிறைந்திடவே
யோடினர்வீழ்வர்களிப்பொடுநள்ளுநவருற்றுமெய்தழுவுவராற்
சூடினர்தளவலர்குழல்மிசையளிகளெழுந்துதுடர்ந்திடவே
பாடினர்சோபனநலனுளவிழவொடுபணியணியாவைநலார். (௧௩)

பாலொடுநெய்ததியாயரிறைத்திசைபாடினராடினரா
லாலிலையாமுதரந்திகழக்கலைமேகலையழகுறநற்
காலணிநூபுரமிசையெழவேவளையொலிகரமீதெழவே
வேலிணைநயனியர்மண்ணிடைசுண்ணம்நிறைந்திடவீசினரால். (௧௪)

வெண்ணைகரங்கொடுமெய்யினெறிந்தனர்வீதிநிறைந்திடவே
யெண்ணையிறைத்தனர்தாழியுடைத்தனரண்டர்களெண்ணிலராற்
கண்ணிணையழகியபெண்ணினர்கொங்கையினணிமலர்கவினுறநற்
சுண்ணமிறைத்தனர்தீபநிறைத்தனர்தூபநிறைத்தனரால். (௧௫)

அண்டர்களெண்ணிலர்வந்தருள்பெருகுமசோதைமகன்கழலைக்
கண்டனரன்பொடுநந்தன்மெய்தழுவினரினிமைகள்கழறினராற்
கெண்மையெனத்திகழ்கண்ணியர்கிளரொளியாகியகுழவிதனைக்
கொண்டணிறத்தரியென்றிருகைகொடுதழுவினர்குழுமியரோ. (௧௬)

வேறு. உந்தியிலயனொடேழுலகளித்தவுவமையில்பரம்பொருடன்னை
மைந்தனென்றுவந்துநந்தனுமசோதைமங்கையுமற்றவர்கிளையு
மந்தரத்தெழுந்தவலரியினவிர்கண்டலர்ந்தவம்போருகமெனவுஞ்
சிந்துவினமிர்தைநுகர்ந்தவரெனவுஞ்சிறந்தினிதிருந்தநாட்டன்னில். (௧௭)

வஞ்சகக்கஞ்சமன்னவன்றனக்குவருடகாலந்தனிற்கொடுக்கும்
விஞ்சியகாட்சிக்களவிலாத்ததிபால்வெண்ணைநெய்யிவையெலாங்கொண்டு
மஞ்சனையொருவாதிருந்துளமகிழ்ந்துமறுவிலாநந்தகோபால
னஞ்சுகமனையசோதைநீமகனையகல்கிலாதிருத்தியென்றகன்றான். (௧௮)

நதியினிற்புனிதயமுனையைக்கடந்துவடமதுராபுரிநண்ணி
மதியெனத்துலங்குந்தனிக்குடைகவிப்பமருங்கினிற்சாய்மறைதிகழச்
சதமகனெனவும்வயங்கியகஞ்சன்றாளினில்வணங்கியேநந்தன்
துதிமிகுநெய்பாலிழுதுடனிறுக்குந்தனமேலாமன்புடன்கொடுத்தான். (௧௯)

அரசனுங்கஞ்சனந்தகோபாலனளித்திடுங்காட்சிகண்டுவந்து
வரிசையாங்கலிங்கங்கொடுத்தபின்னினியதாகியவாய்மைகள்பலவு
முரைசெய்தேநின்னூர்க்கேகெனவுரைப்பவுவகைசால்நந்தகோபாலன்
புரிசைசூழ்மதுராபுரியிற்றனமருமனைதனிற்புக்கினிதிருந்தான். (௨௦)

நந்தகோபாலன்மதுரையினெய்தியிருந்தநல்வாசகங்கேளாச்
சிந்தையார்களிப்பின்றேவகிகணவனவன்வயிற்சேர்தலுமெழுந்து
முந்தியேநடந்தவ்வாயர்நாயகனைமுகமலர்ந்திருகையாலணைத்தா
னுந்திநான்மலரினுலகுதந்தோனையுதவியபுகழினையுடையோன். (௨௧)

இருகையாற்றழுவியிருவருமோராதனத்திருந்தினிமைகூறியபின்
பெருகியவுவகைபிறந்திடவரசன்பேசுவானந்தகோபால
சருகெலாமுணவாய்த்தவஞ்செய்வோர்பெறுததவமுனக்கெய்தியததனால்
முருகவிழ்தொடைசேர்முகுந்தனைநிகராமுகில்நிறக்குழவியைப்பெற்றாய்.

அனிலனாலனலால்மாரியாற்சலியாதருந்தவஞ்செய்தவரொனினும்
பனியெலாமகற்றும்பருதிபோலாகில்புதல்வனைப்பயந்தவர்க்கல்லா
லினியமாபதத்தினணுகுவதரிதென்றியம்புவரியல்புடைச்சான்றோர்
புனிதமாதவரினதிகநீயாகுமென்றுளமகிழ்ந்திவைபுகன்றான் (௨௩)

சொன்னநல்வசனங்கேட்டுளங்குளிர்ந்தநந்தகோபனிவைசொல்வான்
என்னுயிர்த்துணைவனீயெனக்குற்றவேமமாநலனுனதன்றோ
மன்னவவென்றன்மதலையுன்மகவேயென்றுநல்வாசகங்கூறிப்
பின்னருமுரைப்பான்கஞ்சனாலரசபெருந்துயருழந்தனையென்றே. (௨௪)

தங்கையென்றுணராதுன்றேவியைத்தளையில்வைத்தவடருந்தனயர்
மங்கமுன்னடித்துமறஞ்செய்தானந்தோவல்வினைக்கஞ்சன்மாபாவி
யிங்கிவையன்றிப்பிறந்தபெண்ணிராதாகாயமேயாகியதென்றாற்
பொங்கியேயடர்முன்வினைப்பயன்றன்னைப்பூதலத்தியார்கொலோகடந்தார்.

எனுமொழிவிளம்பியிருகணீர்விழவேதழுவியவண்டர்களிறையை
வினைவலிகடத்தலரிதெனவறியாவேழைபோல்மெலிவதுகடனோ
வனையனவெல்லாமுணர்ந்தநீயிடரையகற்றியேரோகணியயந்த
தனயனையுன்றன்மகனுடன்வளர்த்தியென்றுபின்சாற்றுவானரசன். (௨௬)

உன்மகன்றனக்கிங்களப்பிலுற்பாதமுளவவைமேவிடாவண்ணம்
நன்னெறியறியும்நந்தகோபாலவெங்கனங்காத்தியோநவைசேர்
துன்மதியாரோரணுகிடாவகைநீயியற்றியென்றுணைவவென்றுணை
யின்னலெய்தாதுவளர்க்குதிநீயென்றியம்பினனியாதவர்பெருமான். (௨௭)

மன்னவனறைந்தவாசகங்கேளாமதிமறுகுற்றனனெழுந்தா
னுன்னினனிவைதானென்னகாரணமென்றறிகிலானுயிர்விடுமியாக்கை
யென்னமெய்நடுங்கியேங்கியேகடிதுசெல்வனென்றேகினனந்த
னின்னல்செய்கஞ்சன்முயற்சியாமாயவினைகளையாமறைகின்றாம். (௨௭

தீயினுங்கொடியவஞ்சகக்கஞ்சன்பூதனைதன்னைநீசென்றுண்
டேயெனுமளவிலவனியின்மனைகளெங்கணுமேகியேயியங்கி
நோயினுமுடுகிச்சிசுக்களையெல்லாநொடிப்பினிற்கொல்லுதியென்ன
மாயையையியற்றிமறலியுமஞ்சமண்மிசைமகவெலாம்வதைத்தாள். (௨௮)

அம்புவியடங்கத்திரிந்தறனஞ்சவளப்பிலாமகவெலாம்வதைத்து
வெம்பியசினத்தோடாயர்தம்பாடிமேவியொண்வித்துருமத்தின்
கொம்பெனமடவார்திலதமேபோலக்குயில்மொழிப்பெண்ணமிர்தாரு
ளம்பிணைவளைவில்குமிழ்பிறைவள்ளையாம்பல்சேரானனமிலங்க. (௩0)

காலினிற்கனகநூபுரம்புலம்பக்கரத்தினின்வளைகலித்திடவே
நூலிடைமருங்கிற்பொற்கலைதிவளநோக்கினலருந்தவரடைய
மாலெழமாலையளியொடுகுழல்மேலலைந்திடமதிமுகம்வியர்ப்பப்
பாலுறுகும்பப்பயோதரமசையப்பையவப்படிமிசைவந்தாள். (௩௧)

நந்தகோபன்றன்மனையினிற்புகுந்துநலனுறுமசோதையைநண்ணி
யிந்துநேர்வதனத்தேந்திழாய்வனசநிறைந்ததோரொழிவியைநிகர்க்கு
மைந்தனைப்பயந்தாயுனக்குநேர்விண்ணின்மண்ணினும்யாவருமில்லை
கந்தமார்தொடைசேர்குழலிநீவாழியென்றிருகரத்தினலணைத்தாள். (௩௨)

அணைத்தவள்மருங்கினழகுறவயங்குமச்சுதக்குழவியையெடுத்தே
யிணைக்கமலத்தினடிமருங்குந்தியிருகைதோள்முகத்தெழினேக்கித்
துணைக்கையாற்றழுவியுச்சியைமோந்துதூயவளாய்மனமுருகுங்
குணத்தினளேயமுகமலர்ந்தினிமைகூறியேயுளங்களிப்புற்ருள். (௪௪)

கருமுகிலெனவுமரகதமெனவுங்கவின்கொள்காயாமலரெனவு
முருவுடையவனையுததியினமிர்தையொத்தவிம்மதலையைப்பெற்ற
வருமையைநோக்காயனைவருங்காணினளவிலாத்திட்டியாமென்றென்
றுரைசெயாமகவின்முகமொடுமுகம்வைத்துகந்தொருதனிமனையுற்ருள். (௩௪)

மடிமிசையதனின்மதலையைக்கிடத்திவஞ்சகிவதைக்கவென்றெண்ணி
விடமுலைப்பாலையீய்ந்தனள்முகுந்தன்விழியினலவள்முகநோக்கிக்
கொடியவணகிலையிருகையாற்பற்றிக்குவிமுலைவாயில்வைத்தவட
னுடலிடையுயிருங்கனதனப்பாலுமொக்கவேயுறுஞ்சியுண்டிடவே. (௩௫)

கொடியவளுதரந்திமடுத்தெனவேகுடரொலாமறுகிமெய்குலைந்து
விடுவிடென்றரற்றவிட்டிலனவடனுடலினையுயிரின்வேரறவே
கடியுடைக்கமலவாயினலுறிஞ்சியுண்டனன்கமலனூர்படைத்த
நெடியபேரண்டத்தலகிலாப்புவனநிலையெலாமுண்டுமிழ்நெடியோன். (௩௬)

கடல்களும்வெருவக்ககனவான்முகடுமதிரவெண்களிறிரிந்தோட
விடிகளுமுடையவலறியோசனையினிடத்துறுபாதவமெல்லாம்
பொடிபடவிழுந்துகைகள்கால்கவிகள்கட்டியபுணரியினணைபோற்
படியின்மேற்கிடப்பப்பவளவாய்முலையைப்பற்றிநீக்கிடந்தனன்பரமன் (௩௭)

பதகிவாய்மூக்குவளாமுழைநயனம்பயமிலாப்பாழ்மடுநிகரா
யுததிவெண்பிறைபோலெயிற்றினந்துலங்கவுயர்முலையோங்கலின்வயங்கப்
புதியவெங்கூற்றமனையவளியாக்கைபுயல்படர்பொருப்பினிற்பொலியச்
சதமகனயிலால்விருத்திராசுரன்மெய்தரணியிற்சாய்ந்தெனச்சாய்ந்தாள்.

கொண்டல்வாகனனூற்சிறகரறுப்புண்டுகுலைந்துவீழ்மால்வரைபோல
வெண்டிசையதிரவிழுந்தபூதனைதன்வாயினலரற்றியவிரட்ட
லண்டர்களண்டம்விண்டதுகொல்லென்றயிர்த்தனரளக்கரின்காரி
கண்டவானவர்போற்கண்புதைத்தலறியாயர்கள்கலங்கியோடினரால். (௩௯)

ஆயர்கள்மடவாருரோகணிமடந்தையறிவழிந்தலறினசோதை
வேயிழையனலின்வீழ்ந்திடுபதங்கம்போலவேயுளம்வெதுப்புற்று
மாயவெம்பேயின்முலைவிடமுண்டமணிவண்ணவுய்தியோவென்றுத்
தீயுறுமெழுகுபோலவேயுடலுஞ்சிந்தையுமுருகிப்பார்வீழ்ந்தாள். (சo)

வீழ்ந்தவளெழுந்துவிம்மினள்மகனேவினையினேனுனைப்பெற்றநலத்தால்
வாழ்ந்தனனென்றுமகிழ்ந்தயான்மடியாதிரோவெனமயங்கிடும்வேலை
சூழ்ந்ததோகையர்கள்வஞ்சகிமார்பிற்றுலங்கியகுழவியையெடுத்தே [ல்.
யாழ்ந்தவன்பினராயசோதைகைக்கொடுப்பவணைத்துமோந்தழுதரற்றினளா

அன்னையாமசோதையிரங்கிடச்சிறியழுதுதேம்பினனருட்கண்ணன்
மின்னுநேரிடையாளுரோகணியுடனேவேறுளமங்கையரெல்லா
மன்னினார்குழவிமெலிந்திடவாலைக்கிரகந்தான்பற்றியவாமென்
றுன்னிநற்கோவின்பால்கொடுசுழற்றியோட்டிமாமறையவர்க்கீய்ந்தார்.

ஆவினீரதனால்மஞ்சனமாட்டியதினூறுமண்கொடுவிளக்கிச்
சாய்வில்பன்னிரண்டுநாமமுஞ்சாத்திச்சதுமறையோர்தம்வேதியர்கள்
நாவின்மந்திரநீருடலெலாந்தெளித்துநவையில்கோதானமுநல்கிக்
காவிசொல்விழியார்சருப்புரதீபங்காட்டினர்கவினுறப்பலகால். (சங)

உச்சிநன்னுதல்கண்மூக்கிருசெவிவாயுவமையில்கழுத்திருதோள்கை
பச்சைமாமேனியுரம்வயிறுந்திமருங்கெழிலூருவன்பாத
மச்சுதனனந்தன்முகுந்தனாரணன்மாலரிமதுசூதனன்முராரி
நச்சராவணையோன்முதலியநாமங்காவென்றுநவின்றுகாப்பிட்டார். (சச)

அந்தவேலையின்வாய்நந்தகோபாலனுயர்தம்பாடியிற்கடிது
வந்துமாபூதமடிந்தபேரியாக்கைவரையினைக்கண்டனன்மயங்கி
சிந்தையார்பயத்தாற்றிகைத்துநின்றேங்கித்திருமகன்றனையெடுத்தணைத்தே
யெந்தைநீயிறவாதிருந்ததெவ்வாறென்றேங்குவான்பின்னருமியம்பி. (சரு)

வருவதிங்கறிந்துமொழிந்தயாதவர்கோன்வாய்மையேநன்றுநன்றெனவாண்
டுரைசெய்தென்மகனைக்காத்துவன்பேயினுயிருண்டானுலகமன்றளந்த
கரியவனுமென்றிருகரங்கூப்பிக்கரைசெயற்கரியதோர்களிப்பா
லரிதிருவாராதனையெலாஞ்செய்வித்தந்தணர்க்கானிரையீய்ந்தான். (சசு)

சிகரமேருவெனமடிந்தவளுடலைத்தறித்துவெந்தீயினிற்கொளுத்த
வகின்மணத்தவளும்பரகதியடைந்தாளாருயிர்கொள்வதாயலகை
நகில்விடப்பாலையளித்திடவீடுநல்கினன்றனக்குநன்முலைப்பால்
பகலுநள்ளிரவுங்கொடுத்தவள்பயந்தாள்பெறும்பதம்பகர்வதற்கெளிதோ.

உலகயில்பவளவாயினுலுவந்திங்கிளநகையரும்பநீயுண்ட
தலகையின்கொடியவிடமுலைப்பாலோவன்றியேயவளுயிர்தானோ
விலகியசங்கோமலர்மகள்பூமானதரமோவண்டமோவெதுதா
னனுறுசுவைநீயுணர்த்தியென்றுரைத்துநாண்மலர்பொழிந்தனர்வானோர்.

பூதனைவதைப்படலமுற்றிற்று. ஆ. திருவிருத்தம் - உஎஉச.

சோடசாயிரம்நூறுசெய்தான்கைகுலைந்திடவமரர்கள்வெருவ
வாடகக்குன்றுமதிர்ந்திடமாதர்கருப்பங்கள்வெடித்திடவார்த்துச்
சூடகக்கையாற்பருதியைப்போலச்சுடருறுசூலம்விட்டதிர்ந்த
தாடகைதன்னைச்சரத்தினுற்றடிந்ததசரதராமன்தாள்பணிவாம். (௧)

நந்தனர்நந்தன்வடிவினைநோக்கிநலனுறவிருந்தமாநாளின்
வந்தநன்மதலைபிறந்தநாளதனால்மறையவர்மந்திரவயத்தாற்
செந்திருமகள்கோனாகியாண்டிலங்குஞ்சிசுவைநீராட்டியேசிறப்ப
நந்துமிழ்தரளமுதனவமணிகள்வயங்குகோதானமும்நல்கி. (௨)

சுடரொளியெனமுண்டகத்தினிற்சுட்டிதிகழ்வுறநாமமுந்துலங்கக்
கடனிறவுருவள்காலினிற்றண்டைகவினுறக்கைவளைவயங்க
விடரறத்தொடையலேற்றவேகருதுமெல்லையிலிரணியந்தாரம்
படமணியிழைத்தபலபலதொட்டில்பண்ணினர்தந்திடும்வேலை. (௩)

பூதனைமடிந்தசெயலதுகேட்டுப்போசராசன்றருபுதல்வன்
வேதனைமிகுத்துப்பலவுருக்கொள்ளும்விடமுடைச்சகடவெய்யவனைச்
சாதனைமலிந்தகாலியாசுரனைப்பகைஞனைத்தடிந்தவன்குலத்தைச்
சேதனைசெய்யச்செல்லுநீயெனவத்தியவர்முடுகியேசென்றார். (௪)

துன்மதிச்சகடனந்தகோபாலன்றூயமாமனைதனிற்புகுந்து
நன்மணியிழைத்தவிருடைச்சகடநாயகத்தொட்டிலாயிருப்ப
நின்மலக்கொழுந்தையதனிடையேற்றிநீதானமும்படகமுழங்க
மன்மதபாணமனையகன்னியர்கண்மங்களம்பாடினார்வாழ்த்தி. (௫)

வீறியபேரிபடலிகைதாளம்விளங்கியகாகளஞ்சின்ன
மூறுவாருதியினொலிகளுமஞ்சமுழங்கிடவும்பர்கடிரண்டு
நாறுமாமலர்கள்பொழியவேநந்தகோபனுமசோதையும்நலத்தின்
மாறிலாதுயர்ந்தரோகணிமாதுமடந்தையர்பலர்களுமகிழ்ந்தார். (௬)

அறுசுவையடிசினந்தகோபாலனகத்திடையருந்தியேயாயர்
நறுமலர்நானமலையசக்கமழநங்கையருடன்மனைக்கேக
மறுவிலாவசோதையுரோகணிவேறூர்மனையுளார்நந்தனுமஃதே
யிறைவனுந்துயில்வான்போன்றனன்சற்றுமிடைச்சிறுமதலையிருக்க. (௭)

எல்லையில்வஞ்சச்சகடனுங்கொடியோனியாவருமில்லையென்றுணர்ந்தே
யல்லியங்கமலக்கண்ணனைவதைக்கவணுகினனவன்றிறமறிந்து
பல்லவமனையமெல்லியவடியாலடர்ந்தடர்ந்துதைத்தனன்பரம
னெல்லையிற்சகடனூரநரம்பென்புசிதைந்துமெய்யொடிந்தனன்மடிந்தே. (௮)

சகடன்மெய்யொடிந்துதரணியின்விழவேதாமரைக்கண்ணனும்விம்மி
மிகமிகச்சீறியழுதனனதுகேட்டசோதையுமெல்லியல்பலரு
மகமெலிந்தெய்தியணுகினராயர்பலருடனந்தனுமடைந்தான்
சிகரமொத்துருண்டவசுரன்மேற்றுலங்குஞ்சிறுவனைப்பற்றியங்கெடுத்தார்.

எடுத்தவரசோதைகரத்திடைக்கொடுப்பவேங்கியேவாங்கிமெய்யணைப்ப
வடுத்தடுத்தழுதுதேம்பினனையனவளொன்றுமறிகிலாளந்தோ
கெடுத்ததுவிதியேயென்றுளைந்தரற்றக்கிளிமொழிமாதரார்பலருந்
தடுத்தனர்மதலைபிழைத்தனன்றளரேலெனவவர்சாற்றிடத்தெளிந்தாள். (௧௦)

தெளிந்துநன்முலைப்பாலீய்ந்திடச்சிறுவனுகர்தலுஞ்சிந்தைநோய்தீர்ந்தாள்
தளர்ந்துகண்ணருவிமலிந்திடநந்தன்றனையன்றனுச்சியைமோந்தா
னுளைந்துளைந்தழுதவுரோகணிபுதல்வன்றன்னையாண்டெடுத்துறவணைப்பக்
குளுந்தவானனமால்கண்ணினாலவளைநோக்கியேயிளநகைகொண்டான்.

வேதமந்திரத்தாலுயர்திலவோமம்விளைத்தனர்வேதியர்நிறைந்த
போதொடுபுனலுஞ்சுழற்றிமானதியுள்விடுத்தனர்பொற்கொடிமடவார்
தீதுசெய்பூதம்பசாசுகளணுகாவகையரிநாமங்கள்சிறப்ப
வோதியர்ச்சகர்கள்காப்புமிட்டதற்பினசோதைமின்னுரத்தெடுத்தணைத்தாள்

ஏதினாலசுரனிறந்தனன்வானத்திடிவிழச்சிதைந்தவாபோலென்
றோதினானந்தனதற்கிளஞ்சிறுவருரைப்பக்கேளுநன்மகனுதைந்து
பாதநற்சிலம்புபுலம்பிடவுதைப்பச்சகடநீளவுணனாய்ப்பட்டா
னீதுநிச்சயமென்றியம்பலுமவர்சொல்மெய்கொளாரொல்லரும்நகைத்தார்.

இவரிளஞ்சிறுவர்மழலையாமொழியொன்னறிந்திவ்வுரைபகர்ந்தார்
குவடுகளுருமிற்பிளந்ததுபோலச்சிதைந்தனன்கொடியவாளசுரன்
துவரிதழ்துடிப்பவழுமிளங்குழவியுதைத்திடமடிவனோசொல்லீ
ரவனியினிரும்பூதெனநகைத்தவுணப்பிணந்தனையப்புறத்தெறிந்தார். (௧௪)

சகடாசுரப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨௱௩௮.

---

௨௭. வது—காலியாசுரப்படலம்.

பாததூளியினாற்கருங்கல்லாய்க்கிடந்தாள்பண்டையினுருவமாயேகப் [தே
பேதைபாகன்றனெடுத்திடும்வில்லைப் பிடித்தொருநொடிப்பின்முன்னொடித்
போதினிலமிர்தினிருந்துபின்புவியினுழுதபொற்கொழுவினிற்றோன்றுஞ்
சீதையைவதுவைசெய்துவந்திருந்ததெசரதராமனைத்தொழுவாம். (௧)

மைக்குழலசோதைமற்றுமோர்தினத்தின்மதலைமெய்யணிகலன்வயங்க
வொக்கலையிருத்தியுவந்துசீராட்டவுலகிடந்துண்டுமிழ்ந்தொருவ
னக்கணத்தவடான்பரிக்கலாப்பாரமாகவேயவனியினிருத்தி
யிக்கனம்வருவானேனிவன்மாலோவென்றவணினைந்திடும்வேலை: (௨)

சீரிலாக்கஞ்சனுரையினைக்கேட்டுத்தீமைசெய்காலியாசுரன்வெங்
கோரமாங்கொடியனாயர்தம்பாடிகுறுகியேவெஞ்சினத்துடனும்
பாரொலாமுலையப்பருவரையதிரப்பறவைகள்யாவையுமடியக்
காரொலாமிரியக்கடுவினைபோலக்காற்றுருவாகியாண்டடைந்தான். (௩)

வேறு. விஞ்சமாமரநிரைகளெங்கணும்வேரொடேயுயர்விண்ணின்மேற்
பஞ்சுபோலெழவொன்றொடொன்றடிபடவொடிந்துபறந்தவான்
மஞ்சுநேரியதூகளிறோடினவானுளோர்களிரிந்துநொந்
தஞ்சினாரிதுசண்டமாருதவேகமென்னவறைந்தனன். (௪)

வரைநெரிந்தனமரமுரிந்தனமறுவிலாமதவெங்கரித்
திரள்சுழன்றனகிருடிபொன்றினசினமுறும்புலியரிமரை
யிரலையெண்கினமிவைமடிந்தனவெழில்கொளும்பசுநிரையெலா
மிரியவண்டர்களலறிநொந்தனரிறுதிகாலமிதாமென. (௫)

புழுதிமாமழைபொழியமாதிசைபுவனமேழ்கடல்மறையவே
யழுதுவாடிமெய்குலையவோடினராயரோடவர்மாதரார்
சுழலுமாசுகமுருவதாயொருகடிகைசூழவறைந்துதா
னெழுதொணாவடிவுடையமாலையெடுத்துவான்மிசையேகினான் (௬)

சுரர்நடுங்கிடமுனிவரஞ்சிடவேகுதன்மதியாகமேல்
வரைவிழுந்தனபோல்வெய்தியபாரமெய்யுறமற்றவன்
றரணிமீதுறவிழவெறிந்திடுவோனையேயரிதன்னிவர்
கரமிரண்டினுமிவரியங்குயர்கந்தரத்தைவளைத்தனன். (௭)

தாலமன்னியகால்கழுத்துறுசகடமென்னநிகர்த்தவன்
ஞாலமீதுறநெரியவாருயிர்நமன்முனண்ணமடித்தன
னாலமாகியடர்ந்துவீழசுரோசன்மார்பினினழகுறப்
பாலனாகியமாயன்மாலரிபரமன்வைகியிலங்கினன். (௮)

அன்னகாலையசோதைநங்கையறைந்தவாயுவின்மணலினு
லின்னதென்றறியாதுகண்கண்முகிழ்த்துவிம்மினளோங்கியே
பொன்னின்மாமலர்நிறையுமென்கொடிபோல்விழுந்தனள்புவியின்மேற்
கன்னலொன்றுகழிந்தபின்னரொழிந்தமீதறைகாலரோ. (௯)

மாயமாகியறைந்துவாயுவகன்றபின்னரெழுந்துமான்
ஆயமாமணிவண்ணமாகியகுழவிகண்டிலடியருஞ
வாயினீரறவலறியேசிறுகன்றுபோயுறமனமெலிந்
தோயுமாவெனமண்ணின்மீதுவிழுந்துநொந்துளமுருகினாள். (௧௦)

ஏவினால்விழுமென்கலாபமயூரமென்னவுமஞ்சியே
ஆவிபோயினவுடலிதென்னவுமறிவழிந்துமெய்சோர்ந்தனள்
காவிநேர்விழியாணடுங்கியகண்டுகண்களிலெற்றிநற்
கோவிமார்களெடுத்தபோதுயிர்வந்துசோம்புபுலம்புவாள். (௧௧)

பேயின்மாவிடமுலைநுகர்ந்துபிழைத்தபின்னொடுத்தம்யா
மாயமாஞ்சகடத்தினுய்ந்தனைமைந்தவாயுவின்விசையினாற்
போயநீயினிவருதியோபுயல்போலுமேனியபுனிதநின்
வாயும்வாண்முகவழகுமாலுங்காண்கிலாதுயிர்வாழ்வனோ. (௧௨)

அந்தவேலையினந்தகோபனுமாயருமவர்மாதரும்
வந்துவீழ்ந்துபுலம்பினார்களெழுந்துமைந்தனைவவ்வியே
யிந்தமாயமியற்றவல்லவரியார்கொலோவெனவேங்கியே
முந்தியோடினர்தேடினார்திசையெங்கணுமுகில்வண்ணனை. (௧௩)

பாரின்மேலின்மடிந்தபாதகவசுரன்மீதுபரஞ்சுட
ரோரின்மல்கிடுகுழவியென்னவமர்ந்தகண்டவரெய்தியே
யூரிஞேதவுரோகணிப்பெண்சோதையொண்குலவாயர்தன்
ஞரிமாருயர்நந்தகோபனடைந்துநண்ணினர்தாமரோ. (௧௪)

வேறு. மின்னெயிற்றிருகண்விரிகடலென்னமெய்வரைபோலவேகிடந்த
யின்னல்செய்யசுரன்மார்பினினீலமணியெனவிலங்கியகுழவி
தன்னையொண்மடவாளசோதையுஞ்சிறந்தநந்தனுமுரோகணிதானுந்
துன்னியபொதுவர்தோகையர்குழுவுங்கண்டவரிடருறச்சூழ்ந்தார். (௧௫)

இளநகையரும்பவணிகலனிலங்கவிந்திரநீலமேபோன்று
கிளரொளிதிகழக்கிடந்தவிக்குழவிதன்னையாண்டெடுத்திடுகிளைஞ
ரளவிலன்புடனுமசோதைகைக்கொடுப்பவழுதணைத்துச்சியைமோந்து
உளமகிழ்களிப்பாற்றன்முலைப்பாலையளித்திடவுண்டனன்முராரி. (௧௬)

உரைசெயற்கரியகளிப்பினால்மகனையுரோகணியெடுத்துறவணைத்தா
ளெரிவையர்பலருந்தழுவினர்சிறந்தநந்தனுஞ்சேர்ந்துறப்புல்லப்
பிரமனைநிகர்த்தமறையவராசிகூறியபின்னர்நீசெய்த
வரிதிருவாராதனத்திலுன்புதல்வனுய்ந்தனனென்றறைந்தனரால். (௧௭)

காலன்வாயகப்பட்டுய்ந்தவர்போலக்கதமுறுமலகையாற்சகட்டா
லாலநேராமிவ்வசுரனாற்குழவிபிழைத்ததுமச்சுதனருளோ
மேலுமோர்வினைகள்வரினுமற்றவன்றான்விலக்கியேகாப்பனென்றுரைத்தான்
ஓலமேநிறைந்தநந்தன்மாதவன்மேற்றேவருமலர்மழைபொழிந்தார். (௧௮)

இனையநன்குற்றுமதலைதன்னுடனுமியாவருமேகியேயியல்மா
மனைதொறும்புகுந்தாரசோதையுமகனைமஞ்சனமாட்டியேவயங்க
வினமணியிழைத்தவிழையெலாமணிந்தாண்டிராப்பகலொருவிலாடியிலிற்
கனவிலுங்காண்பருணரினுமவனைக்கண்களாற்கண்டுளங்களிப்பாள். (௧௯)

சுடர்மணிச்சுட்டிநெற்றியிற்பிறழத்தூயநன்மதலையையசோதை
மடிமிசைக்கிடத்தவிளநகையரும்பவவன்முகம்நோக்கிவாய்திறப்பப்
படிமுகடண்டஞ்சசியுடுப்பருதிபவமிலெண்பாலர்பூமகனேழ்
கடல்வரைதீவுகட்செவியுலகங்கண்டுகண்புதைத்தனளடுங்கி. (௨௦)

சிறந்தபேருலகமியாவையுமவன்றன்றிருமலர்வாயினிற்கண்டு
நிறைந்தபேரொளியாய்நின்மலக்கொழுந்தாய்நின்றருள்சோதியாநெடுமால்
பிறந்தனனென்றேபேதைநெஞ்சுருகப்பின்னருமாயையாற்பிணிக்க
மறந்துதன்கொங்கையாரமிர்தூட்டிமகனெனமகிழ்ந்தனளசோதை. (௨௧)

காலியாசுரப்படலமுற்றிற்று. ஆ. திருவிருத்தம்-௨௱௫௧.

தரணியிற்சமதக்கினிமுனிமாளத்தடிந்திருந்தனையர்களுடனும்
கரமொராயிரத்தோன்றனையொருகரத்தின்கதிர்கொள்பூமழுவினால்வதைத்தே
அரசர்களிருபத்தொருதலைமுறையையறுத்தவராக்கையிற்பெருகுங்
குருதியிற்குளித்தோன்றனுவினைவாங்கிக்கொண்டவன்புகழினையுரைப்பாம்.

நற்கவினிறைந்தமதலையைநினைந்துநாடொறும்நைந்துநைந்துருகு
முற்குணமிகுந்தயாதவன்மகற்குநாமமீமொழிகெனச்செப்பக்
கற்கனன்முனிவனெய்தவேயண்டர்தலைவனன்புடன்கழல்வணங்கி
யற்கியமியாவுமளித்தபின்றவிசினிருந்தவனுசிகள்பகர்ந்தான். (௨)

என்னநற்றவமோயான்றொழநீயென்னில்லிடையெய்தினையென்று
சொன்னபின்முனிவன்றன்முகம்நோக்கித்தூயநீகேட்டியென்மகனுக்
குன்னுணர்வுவந்தநாமமீயருடியென்றுகைகூப்பியேயுரைப்பக்
கன்னலம்புரிகவென்றருந்தவத்தின்கற்கனுமுனிவனுமறைந்தான். (௩)

அறைந்தநன்முனிவன்றன்னுடன்மொழிவானுயர்கோனியாதவன்றனக்குப்
பிறந்தபெண்ணுரையாற்றியனுங்கஞ்சனுரோகணிபெற்றசேய்தன்னை
யறிந்திடின்மறஞ்செய்தானியேமுயல்வனுதலாலருந்தவவிறைவ
மறைந்திவன்றனக்குநாமமீயிடுதியென்றனன்மதியினுயர்ந்தோன் (௪)

நந்தகோபாலன்மொழிந்தசொற்கேட்டுநான்மறைமுனிவனுமிசைய
வந்தபேருவகைமலியவேயாயர்மகிழ்ந்தனராவணம்வயங்கக்
கந்தநன்மாலைகதலிபூகந்தார்கன்னலுங்கவினுறநிறைத்தார்
செந்திருமகளையனையவர்வீதிசேர்ந்துசோபனமொழியறைந்தார். (௫)

துந்துமிமுழங்கச்சுரர்மழைபெய்யத்தூயமாமறைவலோர்சூழ
முந்தியபேரிசச்சரிதிமிலைமுரசுகாகளம்வளைமுழங்க
நந்தனோடசோதையுரோகணிநங்கைநலந்திகழாயர்களண்ண
வந்தமார்வேதமறைந்துயர்கற்கனழலினெய்யாகுதிவளர்த்தான். (௬)

ஓமவாகுதியிற்சாதகம்பண்ணியுரோகணிபெற்றசேய்தனக்குத்
தூய்மைசேரிராமன்சங்கருடணனென்றுலகுளோர்சொல்லிடநவின்றன்
காமவேடந்தையாகியவரிக்குக்கண்ணனென்றோதியேபினருந்
தீமையோரறவேவளர்ந்தருள்வாசுதேவனென்றுரைத்தருள்சுரப்ப. (௭)

வேறு. பூமலரின்மழைபொழிந்தேயந்தரத்தினிமையோர்கள்போற்றிசெய்ய
வாமமலிமங்கையர்கள்மங்கலகீதம்பாடிமகிழ்ந்துவாழ்த்த
தேமலர்மின்னாயகற்குத்திருநாமகரணஞ்செய்வித்துநந்தன்
மாமறையோரெண்ணிலர்க்குமாதாரங்கோதானம்வழங்கினனே (௮)

வேதநிகர்கற்கமுனிநந்தகோபன்றனைவேறழைத்துச்சொல்வான்
மாதவத்தால்நீபெற்றமதலைதனைமனிதனென்றுமனதிற்கொள்ளேல்
சீதரனுக்கொப்பனிவன்சிறந்தவசுதேவனுக்குமுன்னாட்சேய்கா
ணீதுணர்தியிடரொருவியுனக்கும்வீடெய்துவிப்பனென்றுசொன்னான். (௯)

எனுமொழிகள்பகரந்ததவனடியிறைஞ்சியென்மகனீடேறிவாழ்தல்
முனிவவுனதருளன்றேவென்றுரைத்துமுகமலர்ந்தவாயர்கோனுக்
கினிமையுடனுசிசொலியிருத்தியெனவேஙவசுதேவனூர்க்குந்
துனிகளறுதேவகிக்குமிவையெல்லாந்தனித்துரைத்தான் றூயகற்கன். (௧௦)

பூதநிகழ்காலமுணர்கற்கமுனிபோயதற்பின்பொதுவர்கோமான்
றீதகலுங்கற்புடையவசோதைதனக்கருந்தவன்சொல்லெல்லாஞ்செப்பி
மாதவத்தாற்றான்பயந்தமதலைதனையிருபோதுமொருவாராகி
யோதையுறுமுததியமிழ்துண்டவர்போலிருந்தவர்தாமுவந்தநாளின். (௧௧)

வேறு. துன்னுமணியாலவிர்கொள்சுட்டிவதனத்தின்
மின்னவொளிராரவடமெய்யினின்வயங்கப்
பொன்னுறுசிலம்பொலிபுலம்பவிருதாளாற்
றன்னிகரிலாதவிறையோன்றவழுமந்நாள். (௧௨)

அக்கிரமமேவுமதுரைக்கரசனேவக்
குக்குடமெய்யாகியசுரன்குறுகமாயோன்
சக்கரமெடுத்தகையினாற்றலைபுடைப்ப
வக்கணமரற்றியுயிர்மாண்டவுணன்வீழ்ந்தான். (௧௩)

நந்தனுமசோதையுநடுங்கிமெய்குலைந்தே
யுய்ந்தமகனைத்தழுவியுச்சிதனைமோந்தா
ரந்தகனின்விஞ்சவுணனுக்கையையெடுத்துச்
சந்தறநறுக்கியெறிந்தார்தரணிமீதின். (௧௪)

மாதவர்கள்மாமலர்பொழிந்தனர்கள்வாழ்த்தி
வேதியர்களோமஙிறையாகுதிவிளைத்தார்
தீதகலநெய்யினுறுதீபவொளிகாட்டி
யாதரவினாலவனையணைத்துமுலையீய்ந்தாள். (௧௫)

சிங்கலில்சதங்கைகள்சிலம்பினுடனேசீர்
தங்கியுறுகாலிடைசலஞ்சலெனவேதான்
குங்குமகருப்புரநிறைந்தமெய்குளிர்ப்ப.
வங்குநிறைதோயவனையையநகைசெய்தான். (௧௬)

ஆடரவைவாவெனவழைக்குமதுபற்ற
வோடவமும்வீழுமழுமொன்றுமறியார்போல்
மாடவொளிதீபவெளியால்மகிழும்வானோர்
தேடரியசோதிசிறுமூரலெழமாதோ. (௧௭)

தாதவிழுமாலைதிவளத்தவழுவோனைப்
பீதியுறுவோனெனவிருந்திறைபின்நோக்கி
யாதரவின்மீளவுமசோதைமடியேற
மாதுளமகிழ்ந்துமகனைத்தழுவினுளால். (௧௮)

வீறியகருப்புரமெயிற்கரமளைந்த
சேறுறநடந்துமடியேறியிடவேசி
றேறியவசோதையிறுகத்தழுவியின்புற்
றூறிநிறைகொங்கையமிழ்தூட்டினளுவந்தே. (கக)

குக்குடாசுரன்வதைப்படலமுற்றிற்று.
ஆ திருவிருத்தம் - உளஎ அ.

உகூ. வது - நவநீதப்படலம்.

பகலவன்குலத்திற்றோன்றிப்பரதனுக்கரசையீய்ந்து
நிகரிலாச்சனகியோடும்நெடியகானகத்துமேவி
குகநெறியெனக்கீயென்றுகூறியகொற்றவில்லி
புகழினையறைவோர்மைதீர்புதல்வருண்டாகிவாழ்வார். (க)

துளைபலவுளவாம்பாண்டத்தமைகிலாத்தோயம்போல
வளிமலிமுகுந்தன்காதையறிஞர்கள்மொழியக்கேட்டு
முளமகிழ்ந்துட்கொளாதேயுறுபவம்விளைக்குநெஞ்சே
களவுடையாக்கைநில்லாதுயரரிகழல்வாழ்த்துய்ய. (உ)

காவியங்கண்ணிஞர்கள்கறந்தபாறதிநெய்பாரார்
மேவலார்மனையினென்றுமுன்னலார்விரைவின்வந்தே
யாவிளங்கன்றின்வாலைப்பிடித்திழுத்தன்பிணோடு
மோவியவுருவினனைக்கண்டுளமுருகினின்றார். (ங)

துணைவரோடேகியையன்சூழ்தனனுயரில்லி
னிணையிலாக்கறக்குமுன்னமிளங்கன்றைநுகரவிட்டான்
பிணையெனும்விழியினர்கள்பிடித்தனரடிக்கவெண்ணி
யணைகயிறெடுப்பக்கானவர்மகிழ்ந்தணைத்துக்கொண்டார். (ச)

பழுதிலாவண்டரில்லினுறிமிசைப்பாண்டந்தன்னி
னிழுதெலாமள்ளித்தானும்நுகர்ந்திளஞ்சிறுவரெல்லாந்
தொழுதிடவளித்துப்பின்னுந்துயில்கொளுமாற்கன்றனை
யொழிகெனவடித்திட்டாயரெய்திடவோடிப்போனான். (ரு)

கறைதனிலேறியாயர்மனைதனின்முகட்டிற்கட்டு
முறிமிசைக்குழிசிதன்னையுயர்ந்தகோலதனாற்குத்தித்
தறையிலோர்துளிவிழாமற்றன்னுடைவாயாலேற்றான்
மறைகளுந்தேடிக்காணுமலரடியுடையவள்ளல். (சு)

வானையோரடியிற்கொண்டோனசோதைதன்மகனாய்வந்து
நானமேசெடிசெய்மேனிநறுமலர்த்தொடைவயங்க
வானெய்யைத்தேடிக்காணுவாய்ச்சியரடிசில்கொள்ளும்
பானையைத்தகர்த்துத்தொட்டிற்பசலழக்கிள்ளிப்போந்தான். (எ)

களவுசெய்மால்காணுமற்காளமார்மனைகடோறுந்
தளவலர்நகையார்வைத்தவுறிதனைத்தடவிமல்கு
மனைநெய்பால்வெண்ணெயெல்லாமசோதைசெய்கலனார்தன்மெய்
யொளிவிழக்கவினைக்காட்டவுண்டையாற்றெரித்தேயுண்டான். (௮)

வேறு. மாதவஞ்செய்யாய்ச்சியர்கள்கூடியேநம்மனையினெய்பால்களவுசெய்
யுமவனைப்பற்றித், தீதகனுமசோதைமுனம்விடுவமென்றுசெப்பினவரில்கடோ
றுந்திருடமெல்லப், போதுமிறைதனைப்பற்றியெண்ணில்மாதரகந்தொறுமோர்
புதல்வனெனப்போந்துபின்னர், நீதியுறுமனைமுலைப்பாலருந்துவோனைநேரி
ழையார்நோக்கிவெள்கியொருவினரால். (௯)

வேறு. தற்பரனயசோதிதமருடன்திருடித்தன்பங்
கொப்பியதுப்புவெண்ணெய்விலாளத்துக்குவந்தளித்துச்
செப்பிளமுலையாரெல்லாம்பின்பிடித்தேகச்சிறம்
சுப்பிரதீபம்போலத்திரிந்தனன்சுரர்கள்போற்ற. (௧௦)

சிலையெனும்நுதலின்மாதர்சிறந்தவுன்மைந்தன்தோழர்
பலருடன்வந்தெம்மில்லிற்பாறயிர்பருகிப்பின்னு
மிலையிலையென்றுபோனனென்றனரவர்மருங்கிற்
கலையினைப்பிடித்துநக்கான்களித்தவரணைத்துக்கொண்டார். (௧௧)

சங்கருடணனுந்தானுந்தமருடன்யாண்டுமேகிச்
செங்கிடையதரச்செவ்வாய்ச்சிறுமியருடனேகூடி
யங்கவர்வளையுடைத்துச்சிற்றிலையழித்துமண்ணை
நுங்கினனதனைக்கண்டோரசோதைக்குநொடித்தலோடும். (௧௨)

உரோகணியுடனசோதைமகன்றனைப்பிடித்தீண்டுற்ற
திராமநீயியம்புகென்னத்தம்பிமண்டின்றனென்று
னராவணைதுறந்தவையனண்ணனேதின்றனென்னச்
சரோருகவதனத்தாயோடனைவரும்நகைத்தார்சால. (௧௩)

வெள்ளைநீர்வண்ணத்தண்ணல்மெய்யன்றிவிரகுசொல்லா
னுள்ளவாறுணாயாயாயருறியினெய்திருடியுண்ட
கள்ளநீமண்டின்வாயைக்காட்டெனவடிப்பக்கண்ணன்
மெள்ளவாய்விரித்தானன்னைவெருவியேயிவைகண்டாளால். (௧௪

பிரமனைக்கண்டாளண்டகோளத்தின்பெருமைகண்டா
ளிரவியைக்கண்டாள்வானினிந்துவைக்கண்டாளெட்டு
வளாயினைக்கண்டாளேழுமகோததிதன்னைக்கண்டாள்
கரிபிருநான்குங்கண்டாள்கனகமாங்கிரியைக்கண்டாள். (௧௫)

ஏருறத்திசையின்வைகுமெண்மரைக்கண்டாள்வானிற்
றாரகைக்கண்டாடேவதவத்தினர்குழாத்தைக்கண்டாள்
பாரினைக்கண்டாளாயர்பாடியிற்றன்னைக்கண்டாள்
சீருறுமகனைக்கண்டாள்சிறந்தகன்கைக்கோல்கண்டாள். (௧௬)

ஏதிவனியற்கையென்றுவேங்கினளிருகண்மூடி
யாதியாயகண்டமெல்லாம்தன்வயிற்றடக்கிநின்ற
சோதியாமிவனையென்னேயென்மகனென்றுசொல்லும்
பேதைமையன்னமவென்றுபீதிகொண்டசோதைநின்றுள். (கஎ)

தூயவமெனஞ்சிற்றேன்றுசுடரொளிஞானமெல்லா
மாயையால்மறைத்துப்பின்னும்வாய்விம்மியழுதான்வள்ள
லாயதுகண்டசோதையையநானடியேனென்று
நீயழேலென்றணைத்தாள்முன்கண்டவினைவொன்றில்லாள். (கஅ)

வேறு. மின்னிடைமேனகைமுதலாமடவாரேத்தவிழுமியதுந்துமிமுழங்கவிண்ணுளோர்கள், பொன்னின்மலர்மழைபொழியமுனிவர்வானோர்போற்றிசெயத்தும்புருநாரதர்கள்பாடத், துன்னுமணித்தாவடங்கள்மார்பிடைத்துலங்கநகைத்தேநடிக்குஞ்சுதனைநோக்கி, யன்னைநவநீதமளித்துவந்துநித்தமளப்பரியவன்பினுடனமருநாளின். (கக)

நவநீதப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உஎகூஎ.

நடo. வது-ததிபாண்டப்படலம்.

நிலநீர்காலனல்விசும்பாயுலகமெல்லா நீண்டுசுரர்முதலாகிவனையாமத்தாலலையாரும்பயோததியைக்கடைந்துதோன்று மமிழ்தினைவிண்ணவர்நீருக்களித்துத்துய்ய, சிலையாலேயிலங்கைநகராளுமன்னன்சிரங்களொடுவரங்களறச்செற்றுமீண்டு, மலர்மேவுசனகியுடனயோத்தியெய்துமாதவன்றன்மலரடியைமனத்துள்வைப்பாம். (க)

வல்லூறுபசுந்தசையைக் காட்டத்தானூர் மரமொருவியிழிந்தவன்பாற்சேர்தலேயச், செல்லூருந்திருமேனியெழில்கொளெம்மான்திருவடியின்கொழுகொம்பின்பற்றுவிட்டே, அல்லூருங்கருங்குழலார்கலவிகாட்டுமல்குறனிலழுந்திநரகமைக்குநெஞ்சே, சொல்லூறுமிறைபெயராஞ்சுதையையுன்னித்துலங்கிடவுன்னிடத்தமைத்திதுயர்போயுய்ய. (உ)

அரியுறுநற்குழலலையமலர்கள்வீழவணிகாதிற்றேடிரண்டுமசையவிஞ்சும், வரிநெடுங்கண்ணிணையிலகவாசம்வீச மதிநுதலின்வெயர்வரும்பமணிகள்மின்னக், கிரியனையபயோதரங்கள்மிளிரத்தோளிற்கெழுமணிப்பூண்வயங்கவொளிர்இருகைதன்னிற், சரிவளைகள்கலகலவென்றொலிப்பமத்தாற்றழியினிற்றயிர்கடைந்தாளசோதைதானே. (ங)

தாழியினிற்றயிர்கடையுமசோதைதன்னைத் தனையனெனுங்கண்ணபிரான்முலைதாவென்றே, யாழியுறுங்கையினிலைமத்தைவீழ்த்தேயழுதிருகையாலவடனகிலைப்பற்ற, வேழைவருமிளங்கன்றுக்கிரங்குமாப்போலெடுத்தணைத்துமனமுருகியுச்சிமோந்து, வேழமுறுளைழக்கவன்தமைந்தனுர்க்குவிம்முமுலைப்பாலளித்தாள்விருப்பமிக்காள். (ச)

ஆலிலையிலன்றுதுயிலாதியோனுக்கழகியதன் முலைப்பாலையளிக்கும்போ
ந்தின், பாலுறுதீமூடுகிடவேபொங்கக்கண்டு பரமனைத்தானிலத்திருத்திப்பா
னாள்மின், நீலமுகில்மேனியின்வாய்துடிப்பச்சீறி நிலமத்தாற்றாழியினைப்பு
டைத்துமெல்லக், காலிலணிசிலம்பசையாமற்றானேகிக்கரந்துதனிமனைபுக்கா (௫)
ன்கள்வனாகி.

உரலதனையுருட்டிநிலநிறுத்திமேனின்றுயர்ந்தசிக்கந்தனையறுத்துவெண்
ணெயள்ளி,வெருகுதினத்தினவளித்துப்பயந்தார்போலத்தாய்வரவுநோக்கிநி
ன்றுவிழிக்கும்வேலை, யெரியவித்தும்பாலிறக்கியசோதைநங்கை யென்செய்
தான்மகனெனவந்தெய்திக்கண்டாள், பெருகுததிநதியெனமண்ணிறைந்தே (௬)
யோடப்பெருந்தாழிபலவோடாயுடைந்தவண்ணம்.

முலையீய்ந்தேனிலையென்றுதாழிதன்னைமுனிந்துடைத்தானாமெனத்தான்
முறுவலெய்தி, நலனாறுந்திருமகனைக்காணாளாகிநடந்தெங்குந் தேடிடவோர்
மனையினுள்ளே, நிலவேபோலொளிசிறக்கும்வெண்ணெயள்ளிவெருகினுக்கு
நெடுநேரங்கொடுத்துநின்ற, வலரோனையுந்தியினிற்றந்தமைந்தன் தனையடிக் (௭)
கக்கோலெடுத்தாளசோதைதானே.

அன்னைதனையடிக்கவருகின்றாளென் றுண்டகப்படாதேமுகுந்தனிலத்தி
லோடி, மின்னிடையிற்கலையசையக்குழல்மென்மாலைவீழ்ந்திடநல்விரிசிகையி
ன்மணிகள்மின்னப், பொன்னின்மணிச்சிலம்பரற்ற வளைகளார்ப்பப் புகரிபக்
கோடனையமுலையாரமாட, வன்னமெனநடக்குமின்னாளோடியே யவ்வச்சுத (௮)
னைப்பிடித்திடத்தானணுகுங்காலை.

விதிவேண்டவரமளித்துப்பூமிபாரம் விலக்குதற்குவடமதுரைபிறந்துபி
ன்னர், நதிதாண்டியசோதைமனைபுக்கநம்பி நற்றவங்கள்செய்துமுன்னாளழி
ந்திடாத, பதிவேண்டியறிவுடனும்பிறந்தேயாயர்பதியிருந்துபரமன்தன்வரவு
பார்க்குந், ததிபாண்டனுறைமனையினெய்தினான்மற்றவனுமிவன்றாளிணையை (௯)
ப்பற்றிச்சொல்வான்.

போதனுமாதவருமனேகங்காலம் பொருந்தியநற்றவம்புரிந்தும் வெளி
செய்யாத, ஆதியுனைக்கண்டுகொண்டேனருள்நீ வீடென்றறைந்திடலுமச்சுத
னின்றருள்செய்வானா, மேதுனைத்தாயானந்தன்மதலையென்னையன்னைபிடித்
தடிப்பதற்கிண்டெய்துகின்றாள், பேதையென்றன்கால்விடுதியென்றுகூறத்த (௧௦)
திபாண்டன்முறுவலித்துப்பேசுவானால்.

நறுமலரினயன்முதலாநாதரெல்லாமிராசதமுந்தாமதமுந்நண்ணித்தாங்க
ளிறையெனவேயாங்காரத் திருக்கமாயமியற்றியபோ லெனையின்றுமயக்குவா
யோ, வுறுவினையேன்றனக்குமெனக்குவந்தநாலேழில்லவர்க்குமியான்பிடித்த
வுயர்தாழிக்கும், குறைவில்பதங்கொடுத்தருள்நீகோடாயேலுன்னையசோதை (௧௧)
கரத்திற்காட்டிக்கொடுப்பேனென்றான்.

எனுமளவிலசோதையணுகிடலுமாயோனீய்ந்தனன்யான்பரகெதிசீயியம் புகின்ற, வனைவருக்குமுனக்குமுன்றன்கைத்தாழிக்குமடைதிரெனவச்சுதனு ண்டருளலொடு, முனிவர்தொழப்புதுமலர்கள்பொழியத்தேவதுந்துமிகள்பல முழங்கவண்டமிப்போ, யினியகெதியெய்தினர்கணந்தன்மைந்தனன்னைகை யிலகப்படாதேகினுனல். (௧௨)

எழுநாலுமனையிலுளோரெவருந்தாழியுடன்றதிபாண்டனும்வான்மீதேகு ம்வண்மை, பழுதோயவருந்தவஞ்செய்யசோதைநங்கைபார்த்துமறந்தனனண் மாயன்மறைப்பப்பல்கா, லழுதுசெலுர்தன்மகனைத்துடரமாறிலட்டமாயோ கிகட்குமகப்படாமல், முழுமாயஞ்செய்கின்றமுராரியன்பர்க்கெளியவனுருவ போற்றுய்முன்னின்றுனல். (௧௩)

முன்னஞ்சிநின்றமகன்கரத்தைப்பற்றிமுகில்போலுமேனியநீததிகொடா ழி, பின்னஞ்செய்துறியறுத்துவெண்ணெயள்ளிப்பவனங்கள்பெறவளித்துப் பிழைநீசெய்த, துன்னெஞ்சிலுணர்ந்திலையோவில்கடோறு முற்றுமுனம்புரி தீமையுலப்பிலாத, வன்னெஞ்சப்பேய்முலையைநீயன்றுண்டமதத்திறுலோவி னையென்மைந்தாவென்றுள். (௧௪)

என்றுரைத்துமிகநகைத்தவசோதைமைந்தனிருகரமும்பிடித்திழுத்துமலையினெய்திக், கன்றுகள்வால்பிடித்திழுத்தும்பாரிலுள்ளகட்டெறும்பையத ன்செவியிற்கடிக்கவிட்டு, மன்றல்கமழோதியர்கள்வளைகள்சாடிமற்றவர்கள்சி ற்றிலையுஞ்சிதைத்துவந்தே, யொன்றுமறியார்போலநிற்குங்கள்வவுன்னையினி யுலூகலத்திற்பிணிப்பேனென்றுள். (௧௫)

பெரியவுரலுருட்டியவன் முன்னர்வைத்துப் பிரமனுடனுலகுதந்தபெரி யோன்றன்னை, யரியதவஞ்செய்துமகிழசோதைநங்கையழகியநற்கயிற்றைய வன்மருங்கிற்சேர்ப்ப, விருவிரல்மாத்திரம்போதாதாகப் பின்னரிடையர்மனை த்தாம்பெல்லாமெடுத்துக்கட்டத், திருமகன்றனிடைக்கதுவும்போதாதாகத் திகைத்தனள்வந்துரோகணியுஞ்சிரித்துநின்றுள். (௧௬)

அரிவையர்கள்மிகநகைக்கவசோதைநங்கையாயர்மனைத்தாம்பெல்லாமு டிந்தொன்றுக்கிக், கரியவனைக்கட்டிதலும்போதாதாகிக்கைசலித்துமெய்வேர் வுசொரியக்கண்டு, வரையினமர்யோகிகட்கு மறைநாலுக்கும் வானவர்களுக்கும் வாசவர்க்குமலரின்வந்த, பிரமனுக்குமகப்படாப்பெரியோன்றுய்கைத் தாம்பி னுலுலூகலத்திற்பிணிப்புண்டானுல். (௧௭)

ததிபாண்டப்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-உ௮௧௪.

---

௩௧. வது - அருச்சுனப்படலம்.

தரணியினினனைவயற்றிற் றசமாந்திங்கடங்கியவ வீன்றதற்பின்மருடா னெய்த, விருநிலத்திற்கிடந்திருந்துதவழ்ந்துசாட்டியிலங்காடந்தெழிலுறும ன்மதன்போலாகி,யரிவையர்கள்கலவியெனுமளக்கர்வீழ்ந்தேயருநிரையத்தழு ந்தியுயிரலையாவண்ணந், திருமகடன்னுயகனைத்துதிமின்றுய்ய தினகரனூற்பா திமம்போற்பவங்கடேர. (௧)

திகழ்ந்திடவேதிருநாமந்துலங்
தினகரன்றன்சுடர்போன்றசுட்டிநெற்றி
தினகரன்றன்சுடர்போன்றசுட்டிநெற்றி திகழ்ந்திடவேதிருநாமந்துலங்

தினகரன்றன்சுடர்போன்றசுட்டிநெற்றி திகழ்ந்திடவேதிருநாமந்துலங்

யருதிகண்டபனியெனநீள்பவங்கடன்னைப்பற்றறுக்கும்நின்பாதபதுமமென்று, சுருதிமொழியறையுநலனின்றுடனிற்றேய்ந்துலகோர்பாவங்கடுணித்துமண்ணிற், பெருகியவரானதியறிவள்கருங்கல்லானபெண்போலவருச்சுனமாம்வடிவம்போந்தீண், டரியவினைதவிர்த்தெழுந்தேமறிவோமென்றேயரியருளால்விடைகொடுப்பவவர்கள்போனார். (௯)

இடியெனவேயதிர்ந்துமருதிரண்டும்வீழயாவதுசொலென்னவஞ்சியண்டவெய்தக், கொடியிடையாளசோதையுரோகணியாங்கொம்புகோபாலர்நாயகனெல்லாருங்கூடி, வடிவுடையமைந்தன்மரத்தடிபடாமல்மாயவன்றான்காத்தானென்றுரைத்துப்பின்னர், படியின்மரம்விழுந்திடுகாரணமேதென்னப்பார்த்துநின்றவிளஞ்சிறுவர்பகரலுற்றார். (௧௦)

கரியமுகில்வண்ணனிவன்றானேதன்னைக்கட்டிவைத்தவுரலுருளக்கடிதினேகி, மருதிரண்டும்நடுவுறவேதவழ்ந்துகாலால்மற்றதனையுதைத்திடலுமண்ணின்வீழ்ந்தீண், டிருகுமாரதினெழுந்தாரிவன்றுடனிலிறைஞ்சியவர்மீதிலேகினரென், றுரைசெயவிவ்விளஞ்சிறுவர்கண்ணன்போலவுண்மையைப்போற்சடமொழிந்தாரொன்றுநக்கார். (௧௧)

சுட்டிநெற்றிதுலங்கிடநல்வதனம்வேர்க்கச்சுடர்மணிப்பூணணியிலகவசோதைதன்னைக், கட்டிவைத்தவுரலுருளத்தவழும்வண்மைகண்டுநந்தன்கறையினிடைக்கயிற்றைவாங்கி, விட்டிடலுநகைத்தெழுந்துநடித்துப்பாடிமெல்லமெல்லநடந்துபின்னர்விசையிறோடச், சிட்டர்புகழாயர்குலதிலதனுவோனசோதையுரோகணியிவர்கள்சிரித்தாரன்றே. (௧௨)

தூயபலம்விற்பாளைவள்ளனோக்கித்தோகைநல்லாய்விலைதருவேனென்கையார, நீயிடுதியோகனியையென்னக்கொண்டுவாவெனத்தானெல்லையிருகையாலள்ளி, யாயர்திருவீதிதனிற்சிந்திப்போக வவள்முறத்தில்வெறுங்கைவைத்துமுகத்தைப்பார்த்தா, னேயமுடனவளளித்தகனியையெல்லாந்தமர்களுக்காங்குவந்தளித்தானெடியமாயோன். (௧௩)

காலினமர்சிலம்புகலின்கலினென்றார்ப்பக்கவினகொளரைக்கிண்கிணியினாதமோங்கக், கோலமுறுங்கரவளைகளொலிப்பக்காதிற் குண்டலங்கடிவளாமுகங்குறுவேர்வாச, நீலமுறவிருண்டகுழலலையச்சுட்டிநெற்றியினிலங்கமணிவடங்கடாழ, ஞாலமிசைத்தாளொடுத்துக்கரத்தைநீட்டிநவநீதத்தாதரவானடிக்கும்நாளின். (௧௪)

நந்தனுடனுபநந்தனவில்லாளையா நம்பதியிற்றுன்னிமித்தம்பலவாய்த்தோன்று, மைந்தனுயிர்கொள்வதற்குவஞ்சப்பேயாய்வன்சகடாய்க்குக்குடமாய்வாதமாகி, யிந்தநிலத்தினின்மருதாய்ப்படர்ந்தவெல்லாமெரியின்விழும்விட்டிலைப்போலிறந்துநீங்கி, யுய்ந்தனனின்மதலையரியருளாலென்றேயுரைத்தினமியம்புவதுண்டென்றுசொல்வான். (௧௫

யாமன்னியிருந்தபதிவிட்டெல்லோரும்யமுனையெனுநதிக்கரையிலிலங்குகின்ற, பூமன்னும்பொழில்விருந்தாவனத்தினெய்திற்புல்லுண்டுகனிகாய்கள்புனல்களுண்டா, மாமன்னுமிடமமைத்துமாடகூடமண்டபங்களாலயங்களழகாய்ச்செய்யிற், காமன்னனகரெனவேபாங்காமென்றுகிட்டுரைப்பநந்தனதுகருமமென்றான். (௧௬)

நந்தனஃதுரைத்திடலுமாயரெல்லாம்நலனுகவெழுந்துபலசகடுதன்னிற் கந்தமலர்க்குழலியர்களெண்ணில்மாதர்கலன்களிழைமணியிலசக்கடுகிப்போது, ரந்தரதுந்துமிமுழங்கப்பேரியார்ப்பவசோதையுரோகணியாரமணிகள்மின்ன, மைந்தரிருவரும்வயங்கமணித்தேர்மீதின்வானவர்கள்மலர்பொழியமகிழ்ந்துசென்றார். (௧௭)

ஆனிரைகளணிமணிகள்கறங்கியாடவளவிளங்கன்றினங்கடுள்ளியோட, நானநறுமலர்த்தொடையல்கமழநந்த னவமணித்தேர்மிசையினண்டர்திரள்கள்சூழ, மானதியாகியயமுனைக்கரையில்வீதி யமைத்துயர்ந்தமனைகளெல்லாம்வயங்கமாழைத், தேனுறுபூம்பொழில்விருந்தாவனத்தினெய்தித்திருவுறவாண்டினிதமர்ந்தான்செல்வமோங்க. (௧௮)

ஆயர்களெல்லாமகிழநந்தகோபனருட்கமலக்கண்ணனையுமவன்முன்னோனுஞ், சேயினையுந்தமருடனுங்கூடச்சென்று சிறந்தவிளங்கன்றுகளைமேய்ப்பினென்றான், றூயவிளஞ்சிறுவருடன்பாலின்வண்ணன்றுலங்கிடநற்காயாம்பூவண்ணனெய்தி, வேயினிசையூதியெங்குங்கவணிற்கல்லைவீசியவன்சொற்படியின்மேய்க்குநாளின். (௧௯)

அருச்சுனப்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௨௮௩௩.

---

௩௨. வது—பெகாசுரன்வதைப்படலம்.

கருவிடையிற்சிறையிருந்துகலங்கவேண்டாகாசினியிற்பிறந்துபின்னர்ப் பிணிகளாலும், நரைகடருமூப்பினுமெய்நலியவேண்டாம்நல்குரவாமளக்கர் விழுந்தழுந்தவேண்டா, மிருநிலத்திலிறந்துகடுஞ்சமனூர்தன்னி லிருந்தரிய கொடுநிரயத்தழுந்தவேண்டா, மரியினுயர்திருப்புகழையறைமின்றொண்டீரழியாதபரமபதத்தடைகுவீரே. (௧)

மாயமிகுசகடனுடல்சிதைந்தவாறும்வாயுவெனவடித்திடுவோன்மடிந்தவாறு,மாயவெல்லாங்கேட்டுமிகக்கனன்றகஞ்சனருவினையாம்பெகனகன்கன்றுகும்பீசன், றீயனையவிவர்களைத்தாரேனுக்கிநந்தன்சிறுவனைநீர்கடிதேகித்தெறுமினென்றான், றுயினையுங்கொல்லவல்லதறுகணாளர்சமனில்விருந்தாவனத்திற்சார்ந்தார்மாதோ. (௨)

இனியதமருடனேகிக்கண்ணன்மேய்க்குமிளங்கன்றினிரையுடனேதானுங்கன்றாய்த், துனிகளறுமனத்தினிலனெங்குந்துள்ளித்தூயமுகில்வண்ணனைத்தாளுறுங்காலை, வினையமெலாமறிந்துநகைத்தையன்மெல்லவிளையாடியவுணக்கன்றினைக்காலைப்பற்றிக், கனியுதிரவெறிந்தனனக்கபித்தம்வீழக்கடியவனுங்கருவரைபோல்மடிந்துவீழ்ந்தான். (௩)

இளங்கன்றாகியவவுணன்கபித்தத்தோடுமிடியெனவேயிரட்டவுறமடிந்துவீழக், களங்கனியாகியவண்ணன்செயலைக்கண்டுகடிமலர்கள்பொழிந்தனர்கள்களிக்கும்வானோர், விளங்கனியெல்லாமெடுத்துத்தமரோடேகிவிளையாடிக்கன்றினம்வீதியின்கணோட, வளங்கொளண்டரில்கடொறுமேகிக்கன்றுவந்ததிதோவென்றுரைத்துமனையிற்புக்கான். (௪)

கனிவிழவேயாவினிளங்கன்றைப்பற்றிக்கண்ணனெறிதலுமவுணனுகிமாண்டு, பனிவரைபோல்நிலத்துருண்டானென்றுகையிற்பழங்காட்டியிளஞ்சிறுவர்பகர்தலோடு, மனமெலிந்துநந்தனுடனசோதைநங்கைமார்பினணைத்தேமகனைக்காப்புமிட்டுத், துனிகளுறுமவ்வனத்தினேகாதேநீதூயவிளங்கன்றினைமேய்த்திடுதியென்றாள். (௫)

என்றவளிவ்வுரைபகரத்தமரோடேகியிளங்கன்றினங்களைத்தான்மேய்த்துநிற்பக், கன்றியசிந்தையினவுணன்பெகருபாகிக்கயிலையெனக்கடிதினெய்திமூக்காற்கொத்தி, யன்றுலகமளந்தவனைவிழுங்கலோடுமரியாகிச்சுடமீளவுமிழ்ந்தபோதின், மன்றல்கமழ்துளவினன்விரணத்தைக்கீறுமாறெனவேவாயுங்பிளப்பமாண்டுவீழ்ந்தான். (௬)

வாயால்வீழ்குருதிநதிதிரையோடவடவரைபோல்மாண்டுவிழப்பெகனைக்கொன்ற, தூயோனைத்துதித்தனர்கள்முனிவரெல்லாஞ்சுருதியுறத்தும்புருநாரதர்கள்பாட, வோயாமல்மலர்மாரிசொரிந்தார்வானோருயர்தேவதுந்துமிசங்கொலிப்பவெய்தி, ஆயோர்கள்நந்தன்மகிழ்வெய்தப்புக்கானசோதையுரோகணியாகத்தணைத்தாரன்றே. (௭)

ஆகமுறவணைத்துருகியுச்சிமோந்தாங் கசோதைநங்கையழுதழுதுவிம்மிச்சொல்வா, டோகையர்காள்வினையேன்முன்பயந்தமைந்தன்றோன்றியநாள்முதலாகத்துடர்ந்தடர்ந்த, வேகமிகுபேய்சகடுகுக்குடங்கால்வீறுகன்றுகொக்காகிவினைசெய்தாரா, லேகனிவன்விதிவழியாலுய்ந்தானின்னமிடர்வருவதறிகிலேனென்றுநைந்தாள். (௮)

இரங்கியிவையுரைத்தலவசோதைதன்னையெழிலுடையரோகணிதான்றேற்றிச்சொல்வா, டரங்கமுறுசாகரத்தில்வங்கந்தன்னைச்சாயாமற்காற்றுதவித்தந்தாற்போல,வருங்கடியவினைக்கடலைக்கடக்கவுன்றன்மதலைதனக்கருள்புரிவான்றெசக்கிரீவ, னுரங்குடையவாளிதொட்டவொருவனென்றெ யுரைத்திடரையகற்றவவளுவந்தாளன்றே. (௯)

பெகாசுரன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨௮௪௨.

௧௧. வது — அகாசுரன்வதைப்படலம்.

விரிவுறுகயத்துளிடங்கர்மாவலிப்பவெருவித்தன்மெய்தளர்ந்தொதுங்கக்
கரியொருகரத்தையெடுத்துயர்முதலேகாத்தருளென்றுரைகழறப்
பரிவுடன்கருடன்மிசையினிலெய்திப்பருதியைநிகர்த்தவாளியினால்
வளைநிகர்கராவைவதைத்திபத்திடரையகற்றினோன்மலரடிதொழுவாம். (௧)

வேறு. மகவினுக்குப்பாதயமுங்கட்டியீய்ந்து வருவினையையொருவியெய்தி வாழ்தியென்று,புகலுமன்னைமுகம்நோக்கிமுறுவல்செய்துபோதுவர்கன்றினி னமேய்க்கப்போனான்வள்ளல், பெகனிறந்தசெயல்கேட்டுச்சிந்தைநொந்துபி றையெயிற்றன்பிலவாயனகனுநீசன், சிகியெனவெங்கடுஞ்சினத் தினோடுநந்த ன்சிறுவனையான்வதைப்பனெனச்சேர்ந்தானன்றே. (௨)

வளையாகவுடல்சிரம்வண்குவடதாகவாய்பிறங்கல்முழையாகவாரிதன் னுள், ளெரியாகநயனவிணையெயிறுகுன்றி னிலங்குபிறையிரண்டெனவான றைகால்போல, விரிவாயமூக்கதனினுயிர்ப்புவிஞ்சவிளங்கியொருகாவதமாநி லத்தினீண்ட, வரவாகித்தான்கிடந்தானறனிலாதவறக்கொடியவகனுயவசுர னம்மா. (௩)

ஆயர்தங்கள்சிறுவரெல்லாம்வியந்துநோக்கியருவரையின்முழையிதென் றுகாணலாலே, வாயுவனல்வீசியதாமென்றுபாம்பின்வாயிடைப்புக்கார்கள்க ன்றின்பந்தமோடு, மாயதெல்லாமுணர்ந்தருளியசோதைமைந்தனதின்வாயி னருக்களனவாகிநீண்டான், நீயுமிழுமவுணனுடல்பிளந்துசீவன்சிரம்வெடித் தாண்டேகிடவுஞ்சிதறிவீழ்ந்தான். (௪)

படியின்மிசையுததியெனக்குருதியோடப்பகுவாயினெயிறிரண்டும்பரந் துவீழ, வுடலொடிந்துபிளந்துவிழுமசுரன்சீவ னுயர்ந்துசுடர்ச்சோதியென வெழுந்துகண்ண, னடிமலரிற்புகுதுதலுங்கண்டவானோரந்தரனுந்துமிமுழங் கவாடியேதண், கடிமலர்கள்பொழிந்தனர்கள்வீணையேந்திக்கந்திருவர்நாரத ரோழ்கானஞ்செய்தார். (௫)

அந்தரத்தின்மிகவயங்குஞ்சோதியாகி யசுரனுயிரடியிணையினெய்தக்க ண்டே, யிந்திரியமவித்துயர்ந்தமுனிவர்வானோரொழுந்தாடியிணையடியினிறை ஞ்சிநின்று, செந்திருவினாயகனீயனீவேணிச்சிவனீமண்ணீவிண்ணீசிறந்ததீ நீ, வந்தறையுமனிலனீவானீயெம்மைமதியாமல்மயக்குகின்றமாயனீயே. (௬)

அண்டமுநீயதினுறையுஞ்சீவனீயேயறிவுநீமருளுநீயருளுநீயே, யெண்டி சைநீயுறவுநீபகையுநீயேயிரவியுநீயிந்துவுநீயெல்லாம்நீயே, தொண்டனும்நீத லைவனுநீதருமம்நீயேதுணிகளுறுபாவமுநீசுருதிநீயே, யெண்டவநீயுனக்கிடர் செய்யவுணனாவியிலங்குபெருஞ்சோதியெனவெழுந்தாய்நீயே. (௭)

என்றுதுதித்தகவசுரன்றனக்குநல்கு மிணையடியையென்றெமக்குமருள் வாயென்றே, யொன்றியசிந்தையராகிமுனிவரும்பருவந்திறைஞ்சிப்போயபி ன்னரொப்பிலாதான், கன்றினங்களுடனுயர்சிறுவரோடுங்கடிமலர்சால்பொ ழிலமர்காளிந்தியாற்றிற், சென்றுயர்ந்தவாலுகங்கள்மலியவோங்குஞ்செழு ம்புளினத்துறவிருந்தான்சேர்ந்துமன்னோ. (௮)

அகாசுரன்வதைப்படலமுற்றிற்று. ஆ திருவிருத்தம் - ௨௮௰.

மாதவன்பரமன்வாமனன்முகுந்தன்மாயவன்மலர்மகள்மருணன்
சீதரன்முராரியச்சுதானந்தகோவிந்தன்தெசரதகுமாரன்
யாதவன்மதுசூதனன்பரமேட்டியிருடிகேசனுபேந்திரன்மா
லாதிவிண்டரிகேசவனயன்றந்தையமலனென்பவரடிதொழுவாம். (௧)

வேறு. துணைவர்தமைநோக்கியருள்சுரந்தநெஞ்சன் தூய்மையுறுபாதயம்ம
மருந்தவேண்டு, மிணையில்பொழில்நதிக்கவின்களிருந்தபாரீரொன்றிடக்கைத
னிலனையார்திரளையேந்தித், தணியவிரலேறுறுங்கறியைவைத்துத்தன்னவா
யிற்குழல்சொருகிக்கோலாக்கொம்பு, பணைசொளடித்தோளிரண்டினிடுக்கியு
ண்டான்பரமனிடைச்சிறுவருமப்படியேயுண்டார். (௨)

கண்ணனவர்தமைநோக்கியென்கைதன்னிற்கறிச்சுவையையறிதிரொன்று
ண்டவர்வாயிட்டே,யுண்மகிழுமகத்தவிசுநுகருமையனுவந்துதநித்திரளையுண்
ணுங்காலைதன்னி, னண்ணியிவைநோக்கியிறைசெய்கைநன்று நன்றெனவே
மொழிந்துகன்றின்குழுவையெல்லாம், விண்ணின்மிசைக்கரந்தனனென்ட
வர்கட்கெல்லாமேலாயநலங்களுறுவிதாதாமன்னோ. (௩)

கன்றினங்களதிதூரமேயக்கண்டுகண்ணபிரான்றதித்திரளைக்கையாலே
ந்திச், சென்றுவனத்தெங்கணினுந்தேடிக்காணான்றிரும்புவமுன்சிறுவர்தமை
யொளித்தான்வேத, னென்றின்வெயிலால்மேனியெல்லாம்வேர்ப்பவெய்திய
ண்டார்தனையர்தமைமீண்டுங்காணா, னின்றபின்னர்நான்முகன்விண்கரந்ததெ
ல்லாம்நினைந்துநெறியறிநெடுமால்முறுவல்செய்தான். (௪)

ஆயர்தங்கடனையர்திரளெண்ணிலாதாரவர்கள்நிறம்வடிவுகுணமறையுஞ்
சொற்க, ணேயமுடனவரூதுங்குழல்கள்கன்றினைமேய்க்குங்கோலாவின்
கொம்புபூண்ட, தூய்மையுறுமணிசலன்கடுகிலின்வண்ணந் துள்ளுமிளங்கன்
றினங்கள்மெய்யிற்றோற்ற, மாயவைகளெல்லவையுந்தானேயானானளப்பில
ண்டந்தானவாற்கரிதோவம்மா. (௫)

அந்தமுறுமைந்தர்கள்கன்றினங்களோடேயச்சுதனுமுறத்தந்தாமனையி
னெய்தித், தந்தையுடன்முன்றினத்திலுரையைச்சாற்றித்தாய்க்குமுன்னாள்ம
றைத்தவைகளெடுத்துக்காட்டச், சிந்தைமகிழ்ந்தெடுத்தணைத்தேஉச்சிமோந்
துசிறந்தவன்றுமுதலிரட்டியன்பரானார், நந்தனுடனசோதைபெருந்தவத்தை
ப்போலநன்மகவையவர்கள்பெறினம்பெறாரோ. (௬)

ஆலிலையினமர்ந்தருள்வோனயன்கொண்டேகவழகியகன்றினத்துருவா
யமர்ந்துதோன்றிச், சீலமுறுமாவினங்கடந்தங்கன்றுசேர்தலுமேவாலெடுத்
துமோந்துநக்கிக், கோலமுறுமுலைகொடுத்துக்குளிர்ந்தமெய்யாய்க் குழைந்
துமனமுருகியிருகண்ணானோக்கிப், பாலிரட்டிசுரந்தளிக்கச்சிறக்கும்பாரிற்ப
சும்புல்லும்பதின்மடங்குதுளிர்க்குமாதோ. (௭)

இன்பமுறுமைந்தர்கள்கன்றினங்களாகியெழிற்சோதியொருவருடமெய்துங்காலை, பன்மரங்கள்பழுநிறையவுயர்ந்தகோவர்த்தனகிரிமேற்பசுநிரையையாயர்மேய்க்க, வன்பினுடனசோதைமகன்குழலையூதுமளவின்வந்தேயாவினங்கள்முலையிற்பாலை, யென்புருகியிளங்கன்றுக்களிக்கவாய ரெந்திமைந்தர்தமையணைத்தாண்டிருக்கும்வேலை. (௮)

இனியதமர்கன்றினம்வருடமொன்றுமிறையென் செய்தானென்றேயெய்திநிற்ப, வனசவிறைவான்கரந்தவெண்ணில்கன்றுமைந்தர்களுமாநிலத்திற்றிகழக்கண்டா, னனகனசஞ்சலன்விமலனமலனாதி யருபியரிபரமேட்டியானோன்றன்னைத், துனிகளடரிராசதமாங்குணத் தினாலேசோதியெனவறிந்திலனானென்றுசொல்வான். (௯)

யாவருமில்பாழ்ங்காலத்தண்டம்விட்டேபோகவெள்ளமாகவடவிலைமேற்றோன்றுந், தேவனும்நீயுலகமெல்லாம்வயிற்றுள்வைத்துத்திருநாபிக்கமலத்திலென்னைப்பெற்ற, வீவில்பரஞ்சோதிநீயறியாதுன்னை வினையேன்றானிகழ்ந்ததெல்லாம்பொறுத்தென்றன்னைக், காவெனவேதுதித்திறைஞ்சியெழுந்துபின்னுங்கைதொழுவோன்மண்ணினிவைகண்டானன்றே. (௧௦)

தூயசுடராழிவளைகதைவாள்சார்ங்கந்துலங்கிய கைநாலிலங்கத் துளவஞ்சேர, மீயுயருமவுலிகதிரொளிபோற்றோன்றவிலையில்கவுத்துவமார்பின்விளங்கிக்காட்டப், பாயுமிளவெயிலெனப்பொன்னாடைசூழப்பச்சைமுகில்போலிலங்கும்பரமன்றன்போ, லாயரிளஞ்சிறுவர்கன்றினங்களெல்லாமழகுறநான்முகன்றியங்கிமயங்கினனால். (௧௧)

வெயில்பரவுங்கதிரொளியைநிசாமென்றுமின்மினிதான்பார்ப்பதுபோல்வினையேனுன்றன், செயலறியாதிழைத்தபிழைபொறுத்திநின்றன் றிருநாபிதனிற்பிறந்தசேயானன்றோ, புயலனையமேனியனேமதலைகாலாலுதைத்தாலும்பொறுக்கிலளோவன்னையைய, வயருமெனக்கருடியுன்றன்வடிவமாயரருள்புதல்வரோகன்றினமோவார்நீ. (௧௨)

பூதமைந்துபுலன்களைந்துபொறிகளைந்துபுகல்கருமேந்திரியமைந்துசீவனேக, பேதமுறுமாங்காரமனமான்மூன்று பிரகிருதியுடனுமிருபத்தஞ்சென்றென், றோதியதத்துவங்களுநீவேதாந்தத்தினுபனிடத்தி னாறுபொருணீயுன்னையேத்து, மாதவர்கட்கெளியனாநீமாயைநீயேமாயைதனைமாயையினால்மயக்குவாய்நீ. (௧௩)

அண்டரண்டமனந்தமெல்லாமுன்றன்மேனியழகியரோமத்தினுனியமர்ந்ததாலென், றெண்டவர்கள்வேதாந்தமறையுமென்றேயியம்பிடுவார்தம்மையுநீமயக்காநிற்பை, யுண்டுனக்குப்பிறப் பிறப்பென்றோதுமூர்க்கவுணர்விலியருன்வயிற்றினுலகமேழுங், கண்டனன்மாற்கண்டனெனு முறைகேளாரோ த்துத்தாவுன்மாயைகடவாதாரோ. (௧௪)

குற்றவுமிதனைக்குற்றுறப்பயனிலாதகொள்கையைப்போற்சோகனகைகே ள்வாவுன்னை, யுற்றிலர்களருந்தவஞ்செய்தூழிகாலமியோகிகளாயிருந்துழன் றுமுயல்வோரெல்லா, மெற்றியசந்துகம்பாரின்வீழ்வபோலவெழில்வானிற்சு வர்க்கமெய்திப்படியின்வீழ்வர், பெற்றநிரைமேய்த்தருள்வாய்நின்பாதத்தை ப்பேணினரோமீளில்பதம்பெற்றுவாழ்வார். (௧௫)

பூதனைதன்முலைப் பாலுமுயிருங்கூடப்புயல்வண்ணநீநுகரப்புன்மையா ளு, ளேதமறவாக்கையகில்கமழவென்று மீறிலாப்பரகெதியையடைந்தாளெ ன்றால், மாதவனேநீயருந்தும்வெண்ணெய்பால்நெய்வரும்வழியில்மண்செடிவா யூதுநல்வேய், நிதிலிளங்கன்றுதனைமேய்க்குங்கோலாக்கொம்பிவைகள்செய் ததவமார்செய்வாரோ. (௧௬)

நாதநமகாரணனேநமவேதத்தினற்பொருளேநமவானினுயர்ந்துநீண்ட பாதநமபரமநமவுலகமேழும்பயந்தபரமேட்டிநமவெவர்க்குமேலா, மாதிநம வனந்தநமவண்டமெல்லாமீன்றருளுமாயநமவுயர்ந்துதோன்றுஞ், சோதிந மவென்றிறைஞ்சித்தொழுதானாவின் மகளுடனற்சுருதியெல்லாஞ்சொரியுஞ் சொல்லான். (௧௭)

என்றுதுதித்தயனிறைஞ்சிவெருவிநிற்பவிறைவடிவெல்லாமொருவியே கனாகிக், கன்றினங்கட்டேடிமுன்னாட்செல்லுங்காட்சிக் கவினுறவேதத்திர ளைக்கையினேந்திச், சென்றுவனத்தோடிடலுமகிழ்ந்துபாரிற் சேர்ந்துவலம் வந்துதிருவடியின்மீதி, லொன்றியயனிறைஞ்சினன்கன்றினங்களண்டருந்தவு மிளஞ்சிறுவரெல்லாமுவந்துசூழ. (௧௮)

வந்தெதிர்ந்ததுணைவர்தமையரியேறுமோர்புறத் தானணைத்தருளிமல ரோன்றன்னைச், செந்தளிர்க்கைமலராலேகெனவேகாட்டித்திருநயனத்தருள் சுரந்துசிறந்துநோக்கச், சிந்தைமகிழ்ந்தெழுந்தாடியிருநாலாகித்திகழ்கண்க ளாநந்தவாரிசோர, வுய்ந்தனன்யானென்றிறைஞ்சியெழுந்தானன்பி னுடல் புளகமாகவயனும்பர்புக்கான். (௧௯)

அயன்விடைகொண்டேகியபின்சோதைமைந்த னவ்வனத்திற்றிரிந்தெ ங்குந்தேடிக்கண்டே, வெயிலொளியால்மேனியெல்லாம்வெயர்ப்பக்கன்றினி னங்களொடுமீளவருவானேபோலக், கயலுகளும்யமுனைநதிக்கரையில்வந்து கரத்தேந்துந்ததித்திரளையவர்க்குக்காட்டித், தயிர்செறியுமன்னமிவைநுகர்வீ ரென்னவருந்தினமென்றார்களிறைதானுண்டானால். (௨௦)

வனசமுனிவான்மிசையின் வருடமொன்றுமறைத் ததெல்லாமறந்தவர் கள்வள்ளலோடு, மினியவிருந்தாவனத்தினிடையிற்கன்றினினங்களொடுமெ ய்தியிலிற்புகுந்தாரின்று, துனிகளுறுமசுரனரவாகிமேகந்தோய்வரைபோற்கி டந்தான்வாய்புகுந்தோந்தூய, வனகனவனுடல்பிளப்பவுய்ந்தோமென்றேய றிந்தவெல்லாநந்தனுக்கன்றவர்கள்சொன்னார். (௨௧)

நந்தனுடனசோதையுரோகணியாநங்கை நயனங்கணீர்சொரியமெலிந் துவாடி, மைந்தனைத்தாமார்பினுறத்தழுவிமோந்துமஞ்சனநீராட்டியமிர்தூட் டிவண்மைக், கந்தமுறுஞ்சந்தனமெய்க்கணிந்துநாணங் கமழநறுங்கடிமலர் சேர்தொடையல்சூட்டி, யந்தவனத்தெய்தாமல்யமுனையாற்றினடைதியென த்தமரோடுமணுகுங்காலை. (௨௨)

வற்சாபகாரப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨௮௭௨.

௩௫. வது—தேனுகன்வதைப்படலம்.

நிலையிலையிளமைதனமுயர்சுவர்க்கமென்பதுநிச்சயமதனாற்
சலமுறுகுமிழியெனவெழுகுரம்பைசாய்ந்துயிரலையுமுன்றெண்டீர்
மலைகளினமுவச்சலதியையடைந்துமதிளிலங்காபுரிமன்னன்
றலைகளைத்தடிந்தோன்புகழினைத்துதிப்பஞ்சமனிலாவீடுபெற்றுய்ய. (௧)

பெகனகன்கன்றுமசுரனிவனைமாயன்பெருவனத்தில்வதைத்ததெல்லாங் கஞ்சன்கேட்டு, மிகமுனிந்துதேனுகனையழைத்துநீபோய்விரைவின்விருந்தா வனத்திலெய்திவெய்ய, சகபதிகட்செவியதனைத்தெறுவபோலக்கண்ணனைநீ கணத்திடையிற்றெறுவாயென்று, சிகியெனவேயிருநயனஞ்சிவப்பச்சொல்ல த்தேனுகனுந்தாலவனஞ்சேரும்வேலை. (௨)

வேறு. ஆயர்மைந்தர்களாவினங்கன்றுக, ளேயபால்வண்ணனோடுந்துலங்கவே
நேயமோடெய்துமாதர்நிறைந்திட, மாயனெய்தினன்மன்மதனுமென. (௩)

வேயிசைத்தனன்வீதிகடந்துபோய், மாயனெய்தினன்வண்டிசைபாடவே
தூயதண்மலர்துன்னுமுய்யானத்திற், பாயும்வாளைபரந்தநதியின்வாய். (௪)

தாங்குவாரியின்றொடொகுந்தாமரை, யூங்குமேவுநல்லோதிமமுற்றிடப்
பாங்கினுவலர்பாடலிதாமென, நீங்கிலாவளிநிதமிரைத்தன. (௫)

அயனிறைந்தலைவீசிக்கொழித்திடக், கயல்கள்வாளைகலந்தெங்குந்துள்ளின
வியல்பிறலலர்தாமரையின்கணின, றுயிறநந்தெழுந்துவியன்னக்குழாம்.

ஓய்விலாதுபரந்தெங்குமோடியே, பாயுமந்திகளாற்பன்மரத்திடைக்
காயுநன்மலர்க்கொம்புகடாழ்வன, மாயன்றன்னைவணங்குவபோலவே. (௭)

தொண்டைவாய்மடவார்துலக்குங்கண்போற், கெண்டையோடக்கெ ளிறுகிளர்ந்தெழப், புண்டரீகங்களிற்பொலிந்தாடிய, வண்டுபாடுமதங்கியர் மானவே. (௮)

மேகமென்கனுமேவியசோலையிற், கோகுலங்கள்மகிழ்ந்தெங்குங்கூடிய
நாகமாமலர்வாசங்கள்நாறிடக், கேகயங்கள்கிளர்ந்துநடிக்குமால். (௯)

விழையுமாதவஞ்செய்கிலமெல்லியல், குழையுந்தாமரைக்கோலவடியுற [மால்.
மழைபொருந்திருமேனியின்வண்மையை, யுழையினங்களுவந்தெதிர்நோக்கு

தூயநன்னதிவண்மையுஞ்சோலையின், வீயினங்கள்விளங்கியதோற்றமு
ஆயர்மைந்தரனைவர்க்குமாதியா, மாயவன்மொழிந்தமகிழ்வேலையின்.

காமனென்னுங்கவினுடைமெய்யனுந், தாமனென்பவன்சாரங்கஞ்சேர்வ
னாந், நிமலஞ்செயுந்தேனுகனாகிய, நாமனண்ணினனென்று நவிலுவான்.

காலனனைக்கரமெனும்வேடமாய்த், தாலமாவனஞ்சார்ந்துநெருக்கிய
சீலமில்லவனாவிசெகுத்திட, நீலமேனியநீயெய்துவாயென்றான். (௧௩)

தாமன்கூறலுந்தாமனைக்கண்ணனே, டாமதாமென்றிராமனறைந்துயர்
தூமகேதுவின்றோற்றமெனவெழுந், தீமையோனுறுமாவனஞ்சேர்ந்தனர்.

தாலமாவனத்திற்சென்றுசார்தலும், ஆலமாமெனவேயடர்தேனுகன்
பாலினார்வண்ணன்முன்னிற்பனிவரை, யேலவேகரமாயெதிர்தாக்கினான்.

தானுந்தன்னுடைச்சேனையும்வெங்கர, மானவேடமளப்பிலவாகியே
வானமெங்கிடமாமரம்வீழ்ந்திடக், கானடங்கலுங்காலிற்றுகைத்தனன். (௧௬)

எண்டிசைக்கரியெய்தியதாமென, விண்டலம்விண்டதாமெனவாய்விட்டே
மண்டொளங்கிடவந்துபிற்காலினைக், கொண்டுதைத்தனன்கோலவிராமனை.

வாலெடுத்துயர்ந்தேவந்துதைத்திடுங், காலினைப்பற்றிச்சுற்றிக்கடிதினிற்
பாலின்மேனியன்விட்டெறிந்தான்பருந், தாலம்வீழவவனுஞ்சிதைந்தனன்.

சீலமின்றியதேனுகன்சேனையைப், பாலின்வண்ணன்றடக்கையிற்பற்றித்
டாலமேல்விட்டெறியச்சிதைந்துபோய், ஞாலமேல்விழுந்தார்கள்நடுங்கவே.

அலமெடுத்துறுமையனெறிந்திட, மலைவிழுந்தனபோல்விழுந்தாரவர்
தலையுருண்டனநாலநிரம்பிய, பலமுருண்டெனப்பார்மிசையெங்கணும்.

அந்தரத்திலதிர்ந்தனதுந்துமி, நந்தொலித்திடநாகமின்னாரெலாஞ்
சிந்தையிற்களிப்பெய்திடத்தேவர்க, ளுந்துநன்மலருற்றனபாரெலாம்.

பாலின்மேனியன்றன்னைப்பரிவினாற், சீலமார்தரச்சேர்ந்துதழுவினார்
தாலமாபலமெண்ணிலதாங்கியே, மாவினோடெவளர்நகர்புக்கனர். (௨௨)

வேறு. கோலமுறச்சுருண்டிருண்டகுஞ்சிமீதிற்கோதூளி நிறைந்து
கவின்குலாவமார்பின், மாலையலைந்தெழக்காதிற்குண்டலங்கள்வயங்கமுக
ம்வெயர்வரும்பக்கடைக்கணோக்குஞ், சீலமுறப்பொன்னுடை திகழக்கா
விற்சிலம்பிணைகள்சிலம்பவிசைவேய்கொடூதி, நீலமுகில்வருவதுபோலெய்
துவானை நேரிழையார்நோக்கியிமைக்கிலர்கள்மாதோ. (௨௩)

கைத்தலத்தின்வயிரமணிக்கடகமின்னக் கத்தூரித்திலகநெற்றிக்கவி
ன்கொண்டோங்க, நித்திலத்தாவடமணித்தாவடங்கொண்மார்பினிலவொ
ளியுங்கதிரொளியும்நிறைந்துபாய, வித்துருமவாயிலகத்துணைவர்சூழவிள
ங்கியகன்றினங்கள்பின்னர்வேய்கொடூதிச், சித்தசனுமலைக்கவருவானைக்க
ண்டேதெரிவையர்கள்சித்திரங்கள்போலநின்றார். (௨௪)

வஞ்சகப்பேயுயிர்முலைப்பாலுண்டானென்பார் மாயமிகுசகடுதைத்த
வள்ளலென்பார், விஞ்சியகாற்றுருவோனைவதைத்தானென்பார்வினையுறு
கன்றால்விளவை யெறிந்தானென்பார், நஞ்சுமிழுமராவினைவாய்பிளந்தா
னென்பார்நல னிலாப்பகன்வாயைக்கீண்டானென்பா, ரஞ்சனவண்ணத்
தனிவன்பாரீரென்பாரழகொழுகும்வடிவினைப்பாரீரென்பார். (௨௫)

கோலமிலாக்கரவேடமாகிநின்ற கொடியவனைத்தாலமரத் தெறிந்து
கொன்ற, பாலகர்வண்ணனிவனோக்கீரென்பார் பாரிலிவனடைந்தகவின்
பாரீரென்பார், நீலகிரிதாரமலைபோலவீதிநிறைந்திடத்தாம்வருசெயலைக்
காணீரென்பார், சீலமுறுமசோதையுரோகணிதாமுன்னாட்செய்த தவப்ப
யனதனையுன்னீரென்பார். (௨௬)

ஆயர்மடமாதரிவ ரழகுநோக்கியன்பினுடன் முகமலர்ந்தாண் டிவைக
ள்கூற, மாயனெம்பிராமநம்பிமனையினெய்தமனமகிழ்ந்தவசோதையுரோ
கணிபின்வந்து, நேயமுடனெடுத்தணைத்துமுச்சிமோந்து நீராட்டியமிர்
தூட்டிநிறைந்தவாசத், தூயகருப்புரம்பனிநீர்கலந்தசாந்து துலங்கியமெ
ய்க்கணியவையன்றுயின்றானன்றே. (௨௭)

இருளிரியாவினமலரலரக்கீத வினமுரலவுலகிலக மறையோரேத்த,
அருணனெழில்விரதமிசையவிரோடெய்த வலரியுததியினெழலு மமரர்கோ
மான், திருவமருமணிமார்பனனந்தலோவிச்சிறுயருமுரோகணிதன்சிறுவ
னோடு, கருமுகில்போலினிதிருந்தான் யமுனைதன்னிற்காளியன்றான்சேர்ந்
தசெயலறைகுவோம்யாம். (௨௮)

தேனுகன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨௯௦௦.

௩௬-வது—காளியமர்த்தனப்படலம்.

சலத்தினையகற்றுந்தவத்தினிலுறுத்துஞ்சனனமுமரணமுமிலாத
நலத்தினையளிக்குமுலகெலாம்புகழநற்பதமளித்திடுந்தொண்டர்
புலத்திபன்சுதன்றன்றலையனீரைந்துமகுடமும்பொடிபடவவன்றன்
குலத்தொடுமடியநெடுங்கணைதொடுத்தகோதண்டக்குருமலரடியே. (௧)

வேறு. காசிபன்றன்மனையாள்கத்துருவைமைந்தன் காளியனுங்கட்
செவியன்வருரும்போழ்தி, ஞூசினிறைமதிவானினிலங்கு நாளினருணனை
ஞூசனுக்கரவின்குழுக்களெல்லாம், மாசிலமிர்தளித்திடவேகாளியன்றான்
மதியாதுதன்பாகந்தானேயுண்ண, வீசுசிறைக்ககபதிவானெழுந்துசீறிவெ
குண்டவனைக்கொல்வதற்குவிளைவினெய்த. (௨)

ஆயிரமாம்பணமிலங்கவிழிகளெல்லாமனலுறவேகாளியனுமடர்ந்துவ
ந்து, வாயினூறுமெயிறதனாற்கலுழன்றன்னைவானோர்கணடுங்கிடத்தான்க
டித்துச்சீறத், தூயககபதிவெகுண்டுமூக்காற்கொத்தித்துலங்குமிடச்சிறக
தனலறையும்போழ்திற், றீயவன்றான்மனங்கலங்கிப்பாரினோடத்திசையெ
ங்கும்பின்றொடர்ந்தானருணன்றம்பி. (௩)

சவுபரியாமெழில்முனிவன்யமுனைதன்னிற்றவம்புரியுநாளதனிற்றாங் கரி,னுவமையிலாமகரங்கிராணமீனென்றுறைபோதினவனையெய்திப்பிடிக்குங்காலை, பவமில்முனியுணர்ந்தி நனைவிடுதியென்றுபகர்ந்திடலுஞ்சலசரத்தைப்பற்றித்தின்ன, வவமதித்தாயென்னாணையையிவணீயென்றுமனுகினுயிர்விடுதியெனச்சபித்தான்முன்னாள். (௪)

அந்தமுனிசபித்ததெல்லாமுணர்ந்துகண்களனலுமிழுங்காளியன்முன்யமுனைதன்னில், வந்துமிகவாழ்மடுவில் மாதரோடுமுறைந் துறையமேலின்வருபறவையெல்லாம், வெந்துவிழுநீர்கொதிக்குமதனுட்காற்றுவீசியிடவிருமருங்கினுயிர்கள்வேகு, மந்தவிடத்திருநிலத்தினருமெய்தானனலுமிழும்விடவரவாண்டமருநாளின். (௫)

கடம்பொழியுமதகரிக் காக்கராவைச்செற்றகண்ணபிரான் கலன்றிகழநித்திலத்தின், வடம்புனையுந்திருமார்பன் றுணைவரோடும்வயங்காவினினங்களொடுகானில்வந்து, விடம்பொழியும்நீர்பருகிவீழ்ந்தோருய்யவிழியருளானோக்கிமடுக்கரைமேனின்ற, வடம்பின்மிசையேறிமருங்கம்பொற்கச்சையழகுறவேகுப்புற்றானயத்தினன்றே. (௬)

கடமலிந்துதிசையையுறுங்கரியையேலக்கண்ணபிரான்கடுவிசையிற்குதித்தலோடும், விடமறநீரெழுந்துகரைபுரண்டுநூறுவிரற் கடையாமளவமிருமருங்குநல்கப், படமணிகளிலங்கிடவோராயிரத்தின்பகுவாயிலெயிறதனாற்கடித்துமாய, னுடலினைத்தன்மெய்யாலும் வாலினாலுமுறவளைத்துச்சுற்றினனாலும்பரஞ்ச. (௭)

அரவுவளைத்தரியுடலைச்சுற்றக்கண்டவாய ரிளஞ்சிறுவரெல்லாமலறியோடித், தரணியிடைவீழ்ந்திருகண் புதைத்தாராவினினங்களெல்லாந்தலையெடுத்துக்கதறிவந்த, முரலளிசால்பொழில்விருந்தாவனத்தினண்டர்முன்றிலுறமாளிகைகள்ஞெள்ளல்வாய்ந்த, புரியதனிற்றன்னிமித்தம்பலவுண்டாகப்பொதுவருடனந்தனிவைபுகலலுற்றான். (௮)

வடிவுடையசங்குநிறவண்ணன்கூட வகல்கிலாதிண்டிருந்தான்மைந்தனுக்காண், டிடருளதோவறிகிலேன்பழுவந்தன்னினெண்ணிலாத்துன்னிமித்தமெய்திற்றென்று, கடுவிசையிற்கானகத்திலெய்தலோடுங் காரிகையாளசோதையுரோகணிதன்னோடு, கொடியிடையார்தொறுவியர்கள்பொதுவரெல்லாங் கூடியேவிரைவினிற்சென்றார்கள்மாதோ. (௯)

அடவியிடைக்காண்கிலர்கள்கண்ணனேகுமயனமறியா ரடியினடையாளங்கள், கொடியவையங்குசங்கமலங்கொண்டுபோன குறியறிந்துசென்றவர்கள் யமுனைதன்னின், மடுவினிடையரவுடலைச்சுற்றவீழ்ந்தமைந்தனைக்கண்டார்கண்மனமறுகிக்கண்ணீர், படியினிடைநதியெனவேயோடவோடிப்பயமுறமெய்விதலையுற்றுப்பதைத்துப்பார்த்தார். (௧௦)

இடிகள்விழுமராமரம்வேருடனும்வீழ்ந்ததென்ன நந்தனுடனுயரெல்லாம்வீழ்ந்தார், வடிவுடையவண்டர்தங்கள்மகளிரெல்லாமண்மிசையிற்கரனெரித்துமறுகிநைந்தார், கொடியிடையாளசோதையுரோகணிமெய்வாடிக்குலைந்திருகண் மோதிவயிற்றெற்றிவீழ்ந்தே, யுடலினுயிரிலையெனவங்கோய்ந்துகண்ணீருறவரற்றித்தாயிவைகளுரைப்பதானள். (௧௧)

விடமுலைப்பாலளித்தவளாற் சகட்டாற்காற்றால்மிடைந்துவிழுமருதிரண்டாற்குடத்தாற், கொடியகன்றாற்கொக்கினலரவாற்செய்யுங்கொடுவினைக்குமுய்ந்தனையேகுமராவந்தோ, படமெண்ணிலாதனவுமிழுமரவுநின்னைப்பற்றியுடல்சுற்றியயான்முன்னாட்செய்த, கடுவினையோவுன்கவினைக்கண்டகண்ணிற்கனல்மடுத்தாய்மைந்தவெனக்கழறினளால். (௧௨)

நந்தனுடனண்டர்களுமடவார்தாமும் நாவுலரமெய்ம்மறந்துநடுங்கியேதான், மைந்தனினியுய்குவதிங்கிலையாலாழ்ந்தமடுவினின்வீழ்ந்தெல்லோருமாள்வோமென்று, சிந்தைநொந்தாருரோகணிசேய் பின்னோன்செய்யுஞ்செயலறிந்துதியங்காமல்நகைத்துநின்றான், உந்தியினிலுலகுதந்தவரியோர்கன்னலுறுமளவுமரவினுடலுற்றானன்றே. (௧௩)

மாயவன்றனுடல்வளைபோல்வளையக்கண்டுமெற்றவனைச்சுற்றுமராநொந்துவருந்தி, மீயுயரும்படமோராயிரம்விரித்து விழிகளிரண்டாயிரமுமனலேயேல்த், தீயினுறுமுலவையெனவுயிர்ப்புவிஞ்சச்சிறந்தபகுவாய்கடொறுமிரண்டுநாவுங், காயும்வடவைக்கனலின்கொழுந்துபோன்றுங்கண்ணபிரானைக்கடிக்கக்கடுகினனல். (௧௪)

தூயவனைக்கடித்திடவாண்டெய்தும்போழ்திற் சுற்றிவளைத்தயந்தனிலேதுலங்கியாடத், தியுமிழுமரவினுடனொந்துசிந்தைதியங்கியிடவச்சுதனுந்தேவதேவ, னுயிரநற்பணாமிலங்கமணிகள்மின்னவலங்கிருதமாய்வயங்குஞ்சிரமேலுற்று, மீயுயருங்கெருடகாந்தருவரோடுங்கின்னரரும்வியப்பெய்தநடித்தானன்றே. (௧௫)

துந்துமிகள்பலமுழங்கத்தாளமொத்தத் தும்புருநாரதர்பாடச் சுரர்களெல்லா, மந்தரத்தின்மழைபொழியமுனிவரேத்தவரம்பையர்களனேகர்விளக்குங்கையேந்தக், கந்தரத்திற்கலன்றிகழமுறுவலெய்தக்காதிலணிகுண்டலங்களலையமார்பின், சுந்தரஞ்சேர்நவமணித்தாவடங்களாடத்துலங்கியநற்படங்கடொறும்நடித்தானன்றே. (௧௬)

வேறு. புகரிபவிறையிமையவர்கணமொத்துத்தாளம்பொங்கியிடச்
செககிணகிணககிணகிணதித்தித்தாங்தோங்தொங்கதொகு
தொகுதொகுதோதிகுதிகுதிகுதிகுதோதிகுதோதிகுவெனவே
யகிபடமிசையரிநடமிடவந்தவாயர்கள்தேறினரால். (௧௭)

வேறு. அனநடைவிதுமுகவட்மிசைநகில்முத்தாநகைசுத்தத்தகிலேர்குழலா, ரினமொடுவிதிபசிடையிறைமிவரொத்தேமிக வொத்தப்புகலோர்தாளஞ், செனகிடகுகுதகுகிடகுகுதகு கிடகுகுதித்தித்தா திருதோமெனவே, துனிகெடும்வகையகிபடவலிதொலையத்தாளுகிர் வைத்தச்சுதனுடினனல்.

வேறு. மத்தளிசச்சரியுறுமிகுடமுழாவான்வயங்கிமுழங்கிடவீணையிசைகளோடுந், தத்திதிகிரிகிடுதோந்தாந்சாந்திக்குத்தரிதிகிடகிறுதிகிடவென்றுதாள, மொத்திடவேபணங்களாயிரத்தின்மேலு முகைந்துகைந்துநடித்திடவுமுலகமுண்ட, வத்தனளவில்பாரஞ்சுமக்கலாற்றுனகமெலிந்துவிதலையுற்றேயயர்ந்தானம்மா. (௧௯)

ஆயிரநற்பணங்கடனின்மிதிப்பலவயனழலுமிழும்விழிகளெல்லாம்பிதுங்கவெய்ய, வாய்களினிறுசிகளின்கறையின்வெள்ளமாநதியின்வீழ்ந்திடத்தான்மயங்கும்வேலை, தூயமலர்க்குழல்சோரவனைகள் சோரத்துடியிடையார்துணைவியர்கள்புதல்வரோடு, மாயனிருதிருவடியின் வணங்கியாமுமெம்முடையமகிணனுமுன்சரணமென்றார். (௨௦)

தாமதமாகியகுணமுஞ்சர்ப்பமானசனனமுமானவனென்னதவஞ்செய்தானோ, தேமலரோன்றேடியவுன்றிருப்பாதத்தைச்சிறந்திடவேயிவன்சிரங்கள்மீதிற்சேர்த்தாய், வாமனவுன்னன்புமிகுபத்தராவோர்மண்ணரசுஞ்சுவர்க்கமகபதிதனாரும், பூமலரோனுலகுமுயர்வீடுமெண்ணார்பொலிந்தவுன்றன்றிருவடியைப்போற்றிவாழ்வார். (௨௧)

அச்சுதனும்பரமநமவண்டமுண்டவாயநமமாயநமவகிலந்தன்னி, னிச்சையிறுலவ்தரித்தே யிடமாநிக்குமீசநமவென்றிறைஞ்சியெமக்கெங்கொண்கப், பிச்சையினையருடியென்றுகூறலோடும்பிரமனையன்றுதவியபேராயிரத்தோ, னச்சரவினுச்சிமிசைப்பாதம்வாங்கநலனுறுகாளியன்வணங்கிநவிலலுற்றான். (௨௨)

கெர்ப்பமரமுதலாகித்திர்க்கமாகிக் கிளைத்தெழுந்த தாமதமாங்குணத்தைவெய்ய, சர்ப்பவுருவாயவவைக்கொலகம்நீயே தந்தனையால்வினையேனுக்கருள்புரிந்துன், பொற்பமருந்திருவடியென்சிரங்கள்மீதிற்பொலியவைத்தென் புன்பிறவிபோக்குமைய, வற்புதவுன்சரணடைந்தேனென்றுகூறுமரவினுக்காண்டருட்கமலக்கண்ணனன்சொல்வான். (௨௩)

கோலமுறவென்னடியின் குறிநின்சென்னிகொண்டிருக்கவுவணனுனைக்கொல்கிலானல், வேலையுளோர்மண்ணகத்திவதனுள்மேவுநீயெனவேவிடைகொடுப்பவிளங்கும்வாடா, மாலையுடனிரவிநிகர்மணிகள்சோதிவயங்கியாற்கலன்கள்பரிமளத்தின்வர்க்கம், நீலமுகில்மேனியனுக்களித்துநின்றநேரிழையார்காளியன்றனுடனும்போனார். (௨௪)

அமிர்தமயமாயமுனைவயங்கியோடவலரளித்தமாலைபரிமளத்தின்வர்க்கஞ், சயனில்மணித்தாவடங்கள்கலன்களெல்லாந்தயங்கிடத்தன்னிருகரத்தாலணிந்துகொண்டு,விமலன்வருமெழினோக்கிநந்தன்வந்துமெய்யிறுகப்புல்லினன்பால்வண்ணநம்பி, யமலனையுற்றேயணைத்துமகிழ்ந்துநின்றாரையரெல்லாமடைவடைவேதழுவினரால். (௨௫)

அன்புடனேரோகணிசென்றணைத்தாள்மார்பினளப்பரியதுயரமுடனசோதைநங்கை, என்புருகிநையுமிவளெதிரேயெய்தியெழிலுடையமைந்தனைமெய்யிறுகப்புல்லித்,துன்பமுழலுந்தையுடன்யானுமண்டர்தொகுதியுடனுயிர்துறந்துபோகாவண்ணம், வன்புடையவரவுநின்னைச்சுற்றிவாலால்வளைத்திடவுமுய்ந்துவந்தாய்மகனேயென்றாள். (௨௬)

இனையமொழிபகர்ந்துமகனெழிலைநோக்கியினிதுடனேயசோதைமகிழ்ந்திருக்கும்வேலை,தினகரனீள்குடகடலினுறவானெட்டுத்திசையுமிருள்செறிந்திடலுமாயரெல்லாங், கனிகணுகர்ந்தாவின்பால்பருகித்தாங்கள்கண்டுயிலும்போதெழுந்தகாட்டுத்தீயால், மனம்வெருவிவிதலையுற்றேயிராமநம்பிமணிவண்ணகாத்திடுமினென்றார்மாதோ. (௨௭)

வெருவியண்டர்மொழிந்திடலுங்கண்ணன்சொல்வான்விரைவினில்நீரெல்லோருங்கண்கள்மூடி, னெரியொருவுமெனவுரைப்பமைந்தர்மாதரிடையரெல்லாமிருநயனம்புதைத்தலோடும், வளாயெனவாண்டுயர்ந்தெழுந்துநாக்கைநீட்டிவடவனலும்விதலையுறவளைத்துக்கொண்ட, வெரியதனைவிழுங்கியபினசோதைமைந்தனுயருருவாகினின்றுவிழிமினென்றான்.

மூடியகண்திறந்திடலுமெரியைக்காணார்முகமலர்ந்துமனமகிழ்ந்தவண்டரெல்லா, மாடினர்கள்நந்தன்மைந்தனறிஞனென்றேயணைத்தனர்களாதவன்கீட்டிசையிலெய்த, வோடியயாமங்கிரணமோங்கவோங்குமொளிசிறந்தவாயரொடும்விரைவினேகி, நீடுவிருந்தாவனத்தின்பாடியெய்திநிமலனொடும்படிகவண்ணனிருக்குநாளின். (௨௯)

காளியமர்த்தனப்படலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - ௨௯௨௯.

௩௭. வது—பெலம்பன்வதைப்படலம்.

காசினியதனிற்றுய்யகலப்பைபயிற்கொழுவிற்றோன்று
மாசிலாமடந்தைதன்னைவனத்திடைவவ்வவந்த
நீசிதன்குழலைப்பற்றிநிகரிலாவுடைவாடன்னா
னாசியைக்கொய்தோன்முன்னோன்ஞானநாயகன்றாள்வாழி. (௧)

தன்னிடத்தமைக்குமாவின்சாரத்தைக்கழித்துச்சேற்றைத்
துன்னிடப்பரிக்குந்தாழைழுழ்ந்திடுந்தடறுதாலே
என்னமால்சரிதைகேட்டுமவையினையெள்கிப்பாவ
முன்னிடென்மனனேமாயோன்கழலுறுமலினமோய. (௨)

ஆனிரையாயர்மைந்தரலாயுதனிவர்களோடும்
பானல்கல்லாரங்கஞ்சநிறைந்திடப்பன்மீன்றுள்ளத்
தேனமருயானஞ்சூழச்சிறந்திடுதடாகஞ்சேர்ந்த
கானவரையருவியோடுங்கவினெலாங்கண்டான்கண்ணன். (௩)

கிரியின்வீழருவியோசைகிளர்ந்தறைபணவமேய
வரியிசைபாணியேலவழகுறநடிக்குமஞ்ஞை
சுரிகுழற்கணிகைபோன்றசுகவினமிழற்றுஞ்சொற்கள்
பரிணிதர்நோக்கிநோக்கியுவகையாற்பகர்வதொத்த. (௪)

கழையினம்வெடித்தமுத்திலினமெலாம்நிலவைக்கால
வழலுமிழரவமீன்றமணிகதிரொளிபோலான்ற
கொழுமுகிலினங்கள்போன்றகோடுடைப்பூட்கைசூழ
வுழையினங்குதிப்பக்கன்றினினங்களுந்துள்ளியோடும். (௫)

குருகினநிரைகள்சேரக்கோகிலமெங்குங்கூவ
வரியினமுரலக்கொஞ்சுமஞ்சுகம்பறந்தேயோடச்
சொரிமலர்ச்சோலையெல்லாஞ்சூழ்ந்திளமந்திபாயத்
திரையுறுநதிகளெல்லாஞ்சேல்கயல்வாளைபாயும். (௬)

மலர்நிறைபொழிலும்வாவிநதிவரைமாட்சியெல்லா
மிலகியமுறுவலெய்தக்கண்டனனெழிலிவண்ணன்
நலனுறுசிறுவரெல்லாம்நடித்தனரிசைகள்பாடித்
தலமிசையுயரும்பாண்டிரகமெனும்வடத்தைச்சார்ந்தார். (௭)

தாமனுமிடபன்றானுஞ்சக்கரத்தலைவன்றானுஞ்
சோமனல்வண்ணன்றானுமற்றுளதுணைவரோடுங்
காமரொண்கழறென்றிக்கடுகியேவென்றார்தம்மைப்
பூமரங்காறுந்தோற்றார்சுமந்துதான்போகும்வேலை. (௮)

தேனுகன்மடிந்தசெய்கைகேட்டனன்றீயகஞ்ச
னீனமேமலியுநெஞ்சன்பெலம்பனென்பானைநோக்கி
ஊனமில்நந்தன்சேயையொல்லையிற்றெறுநீயென்னக்
கானகந்தன்னிற்சேர்ந்தான்கடியதீவினையேபோல்வான். (௯)

ஆயர்தம்மைந்தராயவுருவுகொண்டணுகித்தூய
மாயவன்றுணைவரோடேசேர்ந்தனன்வடத்தின்கீழின்
றீயவனிராமனோடுதெறித்திடுங்கழலாற்றோற்றான்
மாயமென்றுணரான்பாலின்வண்ணன்மற்றவன்றோளேற்றான். (௧௦)

தூயவன்றன்னைத்தோளிற்சுமந்துபோய்மீளவாரான்
மாயவல்லசுரனீண்டவரையெனவுயர்ந்தமெய்யன்
காய்கனற்கண்ணன்பேழ்வாய்கடியவன்பிறையெயிற்றன்
றீயுறுமுயிர்ப்பனாகிச்சேணிடைநிமிர்ந்தானன்றே. (௧௧)

பிறைபெயிற்றசுரன்வானிற்பெயர்வகண்டிராமநம்பி
யுறுவலிக்கரத்தால்வஞ்சனுச்சியிற்புடைப்பத்தேவர்க்
கிறைவனன்றெடுத்துவீசுமிலங்குவச்சிராயுதத்தாற்
சிறகறும்பிறங்கல்போலச்சிதறிமண்ணிடையின்வீழ்ந்தான். (கஉ)

வாயிடைக்குருதிசோரவிரவலன்மடிந்துவீழத்
தூயமாமலர்சொரிந்துதுதித்தனரிமையோரெல்லா
மாயவன்மகிழ்ந்துபாலின்வண்ணனைத்தழுவிக்கொண்டா
னுயர்தஞ்சிறுவரெல்லாமன்புடனணைத்தாரன்றே. (கரு)

பின்னுமெல்லோருங்கூடிப்பெருங்கழற்றெறித்தலோடு
மன்னினன்வீணையேந்துமறைமுனிமாயன்றன்னை
யின்னிலத்தியற்றுமாயமறிகிலேனிறைவாவென்று
சொன்னவன்றன்னைநோக்கித்தூயவன்கழறலுற்றான். (கச)

விரைவினின்யமுனைநீரிற்படிந்திவண்மீடியாயி
னுரைசெய்வனிலத்தின்யானீண்டுற்றனவெல்லாமென்றே
யரியிவைமொழியக்கேட்டவருந்தவன்கடிதினெய்தி
யிரையுமாநதியின்மூழ்கியெழுமுனமிவைகண்டானல். (கரு)

தவமுனிவேடமோவித்தராபதிமைந்தனாகி
யவனியிற்பிறந்துதாயரனேகர்சீராட்டக்கண்டான்
புவனியிற்றவழ்ந்துபின்னர்நடந்தைந்துபருவம்போக
வுவமையில்மைந்தனாகிவளர்ந்தெழிலுறுவகண்டான். (கசு)

ஆயிரமடவார்தம்மைமணம்புணர்ந்தவர்தோள்சேர்ந்து
தூயவொண்மைந்தர்தம்மைப்பெற்றுநன்மகுடஞ்சூட்டி
மாயிருஞாலமெல்லாமன்னனாயாளக்கண்டான்
தீயராஞ்செறுநரோடுஞ்சினத்தமர்செய்யக்கண்டான். (கஎ)

கரிபரியிரதமெல்லாங்களத்தின்வீழ்ந்தவியக்கண்டான்
சரியிலாவீரரோடுந்தனையர்கள்மடியக்கண்டு
வெருவித்தானோடிநீரின்வீழ்ந்தபோல்மெய்நடுங்கிக்
கரையின்மீதேறியெய்திக்கண்ணனோடுரையலுற்றான். (கஅ)

ஐயயானவனிதன்னிற்பிறந்துபேரரசனாகி
மையுறுகண்ணினாரையணைந்துநன்மைந்தருண்டாய்த்
துய்யநன்மகுடஞ்சூட்டித்தோல்பரிசிறுவர்வீரர்
வெய்யரால்வீழயானும்வெருவிநீர்வீழ்ந்துபோந்தேன். (ககூ)

என்னருந்தவங்களெல்லாமழிந்ததாலினியென்செய்கே
னன்னல்நீயருடியென்னவரும்பியநகையனாகுங்
கண்ணன்யானிலனிற்பூட்டுங்கழலிணைத்தெறியாமுன்ன
மண்ணினிற்பிறந்துவாழ்ந்ததெங்ஙன்மாதவநீயென்றான். (உ0)

மாயவனகைத்துத்தான்செய்மயக்கினையொருவலோடுந்
தூயமாமுனிவன்ஞானந்தெளிவுறத்தொழுதுசொல்வான்
மாயிருஞாலமுன்றன்வயிற்றுள்வைத்ததனிற்றோன்று
மாயிரம்பெயரினோயுன்செயலினையறிவாராரோ. (௨௧)

நீயயனரனாய்த்தோன்றியெவர்க்குமுன்னிற்கிலாத
மாயையையியற்றியுள்ளும்புறத்தினுமருவினாயென்
றாயவையுணர்ந்துநோக்கினவற்றினுமணுகாயாகித்
தூயநான்மறைக்குந்தோன்றாச்சுடரொளியாகிநிற்பாய். (௨௨)

உயிர்க்குயிராகிநின்றஒருவனேயுலகில்நீசெய்
யியற்கையைக்கேட்டவென்றன்பிழைபொறுத்தென்றுமாய
மயக்குளதென்மேல்வாராதருளெனவணங்கினான்
முயற்சிசெய்வீணையேந்துமுனிவன்வானுலகிற்போனான். (௨௩)

தூயமாமுனிவன்போனபின்னர்நற்றுணைவரோடு
மாயவன்முன்னோனோடும்வண்ணவாணிரைகளோடே
யாயர்தம்பதியினெய்தியுரோகணியசோதையான
தாயர்தாளிறைஞ்சலோடுந்தனையரைத்தழுவிக்கொண்டார் (௨௪)

தீயவன்தன்னைமுன்னோன்சினத்துடன்வதைத்ததெல்லா
மாயவன்மொழியநந்தனிராமனைமகிழ்ந்தணைத்தான்
றாயர்கண்ணருவிசோரத்தனையரைத்தழுவிக்கொண்டா
ராயர்கள்திரளுமாதரனைவருமகிழ்வுற்றாரால். (௨௫)

பெலம்பன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨௧௫௪.

---

௩௮. வது — கூறைகொள்படலம்.

நீரினிற்குடைந்துபாரினிகரிலாக்கலன்கள்பூண்ட
நாரியர்துகிலைவாரிநலனுறுங்குருந்திலேறி
மூரலார்வதனம்வானின்முழுமதிபோலத்தோன்றக்
கார்முகில்போலநின்றகண்ணனைவணக்கஞ்செய்வாம். (௧)

கொலையலாதியற்றாமற்றைக்குணத்தினெண்மடங்கதாகி
நிலையிலாச்செல்வம்நற்றிநெறியறவினைக்குநெஞ்சே
தொலைவிலாப்பவங்களெல்லாந்துரந்திடுநாமச்சோதி
அலைவிலாப்பதத்தின்வாழுமச்சுதன்பெயரோத்துய்ய. (௨)

தினந்தினந்தோறுமையன்சிறந்தநற்றுணைவரோடும்
வனந்தனிலேகியாவினிரைதனைக்கறந்துவானோ
ரினந்தனையேத்தவேபாலடிசில்செய்தினிதருந்தி
மனந்தனில்மகிழமாரிக்காலம்வந்தடுத்தமாதோ. (௩)

எதிர்ந்தரிசார்ங்கங்கொண்டுநாந்தகம்விசிறியெங்கு
மதிர்ந்திடவளையையூதியசுரர்மேற்கணையெய்தாற்போல்
விதந்தருவில்லுதத்தோன்றமின்னிவாணிடித்துமேக
மதந்தருகரிகள்மானவெய்தியேபொழிந்தமன்றோ. (௪)

வானமீன்மறையநாரதரம்வளைந்தெங்கும்பெய்யப்
பானல்சால்கயங்கொள்பாரின்மின்மினிபரந்ததெல்லா
மூனமேயிலாதநாலுமறையினாலொளிப்பவிஞ்சி
யீனமேமலிந்துதோன்றுமிதரநூலான்றபோன்ற. (௫)

புயல்நிறச்சோதியோன்றன்பொற்றிருவடிகளல்லா
லயலொன்றுமறியாவன்பரளப்பரிதாயவெந்தீத்
துயருறவந்தபோதுஞ்சோர்விலாதிருந்ததேபோற்
சயிலம்வான்பொழியச்சற்றுஞ்சலிப்பிலாதிருந்ததன்றே. (௬)

தங்கள்தொல்வினைகடன்னால்நல்குரவெய்தித்தாக்க
வெங்கணுமொடுங்கிமுன்னாளருந்தவத்தியல்பினாலே
யங்கண்மாலெய்தக்கண்டாண்டாடியவன்பரோய
மங்குலினீட்டங்கண்டமயூரங்கணடிக்குமன்றோ. (௭)

உழலுமாதவங்கள்செய்துவருந்திமுன்னாற்றநேமி
யழகனைக்கண்டார்கண்ணினாறந்தவாரியேபோற்
றழலூறும்வெயிலினாலேகொதித்தமாசயிலமீதி
னெழிலிகள்பொழியயாண்டுமருவிகீழிழிந்தமாதோ. (௮)

செறிந்துவான்பொழியயாருஞ்சென்றிடாவயனமெங்கு
மறிந்துதானெய்தாவண்ணமடர்ந்துபுற்படர்ந்துமேவச்
சிறந்துநான்மறையையோதித்திருந்திடவுருச்சொல்லாமல்
மறைந்தநாவினர்கள்போலவழிகளுமறைந்தமன்றோ. (௯)

நதிதடாகங்கள்கூபம்நற்கயநாமமெல்லா
மெதுவிதென்றறியாவண்ணமேகமாய்ப்பரந்தவெள்ள
மதன்மமீதறமீதென்றுமறிஞர்களறியாவொன்று
மதியிலானுணராதொன்றாய்மதிப்பபோல்வளைந்ததன்றே. (௧௦)

அரியொன்றங்கறையப்பின்னரதனைமறந்துமோசை
சுருதியையறைவிப்பான்போற்சொல்லுவார்பலரும்போன்று
தரணியிற்குடும்பத்தோடுந்தானுழல்வறியன்செய்கை
தெரியவேமெல்லமெல்லத்திரிந்தனகூனனந்து. (௧௧)

துயர்வரவரிநாமச்சொல்லொழிந்திடும்சோம்பர்போன்று
குயிலினக்குரலினோசையடங்கினகூத்தராடுஞ்
செயலினிற்றேற்றும்பின்னுமொழித்தவர்சீர்கற்பார்போல்
மயிலினமாடமந்திமுடுக்கரினோக்குமன்றோ. (௧௨)

வேறு. அருளதனுளதெவர்க்குமளிக்குமன்ன னரசாளுமவனிதனக்கன்றி மாற, முரசுநிறைபேரியொலியொழியவேதன்முகம்வெளுத்துநகைமாறிநிதி களில்லா, திருகரத்தின்கொடையகற்றியெங்குமாப்போ லெண்டிசையும்வா னகமுமிருண்டமேகஞ், சொரியுமயமறமின்னு மிடியுமின்றிச்சுப்பிரமாயகன் றசரற்காலந்தோன்ற. (௧௩)

மருளனைச்சேர்ந்தறனறியாப் புன்மையாளோர்மதிநிறையுமறிஞர்களைய டைந்துதூய, வருமறையின்பொருளுணர்ந்துஞானமெய்தவடரும்வினையகல மனஞ்சிறந்தார்போலக், கரைபுரண்டுகழுகினம்வேர்பறிந்துவீழக்கலங்கிமிக க்குறைந்தோடுநதிகளெல்லாந், திரையமர்ந்துவரம்பினுள்ளேயடங்கிமேவச் செறிவயல்கடொறும்பாய்நீர்தெளிந்தமாதோ. (௧௪)

வலனுறச்செங்கோலொச் சிஉலகமெல்லாம்வண்மையுறவரசாளுமன்ன னெங்கும், நிலமிசையினுயர்ந்தெழுந்ததீயரெல்லாம்நிலைகுலைந்துமெய்நடுங்கி யெங்குமாப்போ, லரிகிரணத்தருணவொளிபரவயாண்டுமலர்ந்தெழுந்தவன சமலர்நிறையவாங்கே, மெலியுமிதழ்குவிந்துகவிழ்ந்தொதுங்கிநீரின்விளங்கு தலிலாம்பல்பொலிவழிந்ததன்றே. (௧௫)

சிந்தையினிலறனினையாக்கயவர்முன்னாட்செய்தவத்திற்சிறிதுசெல்வமெ ய்தத்தம்மை, யிந்திரனுமுன்னியென்றுமிருப்பார்போலவியல்பறவங்கடங்கா தாழ்வினைகள்சூழ, நொந்துசெய்வதிலராகியுழல்வார்போன்றுநொய் யகரை யழித்தோடுந்தடாகநீரின், முந்தியெழுந்தேதுள்ளிக்களிக்குமீன்கள்முயற்சி யிலாதயமொருவக்கிடந்ததன்றே. (௧௬)

வேறு. நீருண்ணுங்கயங்கயங்குடையநீள்கயல்
வீரணந்துடிபடவிதரிவாவின
வாரணத்தடியின்வாரணஞ்சிதைந்தெனக்
காரணமாம்பியைக்களைந்தகாலினால். (௧௭)

கூவிளமிலவமிங்குலிகஞ்சிந்துரம்
பூவகமுருக்குக்கன்னிகாரம்பூழின்மை
தாவியகரந்தைவரும்பின்சாலஞ்சே
றாவியதொளித்தலுந்துறுத்ததெங்குமே. (௧௮)

சிட்டர்தங்கீழுறச்செய்யும்பாடவத்
துட்டரோவிடலல்லோர்துலங்குமாட்சிபோற்
குட்டிமஞ்சிந்துரங்கொண்முப்பெய்தலை
விட்டிடநதித்துறைதொறும்விளங்கிய. (௧௯)

சூதநற்கோடுகடுணியவாவிவிற்
சாதியினேயினதற்றகாலத்து
வாதுவனொன்னவாரணத்தினங்கன்றின்
மீதுறப்பாய்ந்தனவிகடகச்சமே. (௨௦)

பூகநற்கோடுறும்பொய்கையிற்புனல்
மேகநீறச்சரற்காலமேவவே
யேகமாமினம்பிரிந்திரங்கித்தென்னவம்
மாகமுள்ளுறக்கிடந்தரற்றுநீகமே. (உக)

வேறு. கானிலுறுமரங்களெல்லாந்தளிர்ப்பவான்றகாட்சியுறுதமலகஞ்சேண் கமலங்காட்டப், பானலுயர்கல்லாரமலர்ந்துவிஞ்சும்பங்கயங்கணிறைந்தில குமிலஞ்சியெல்லாந், தேனிசைமுரலவனந்திகழவாளைசேல்கயல்கடாவுமெ ழில்சிறந்துதோன்ற, மானினங்கண்மறிகளொடுபரந்தேயோடமந்தியினங்க ண்டுவந்துநோக்குமன்றே. (உஉ)

கார்காலங்கழியவுலகங்களெல்லாங்கதிரவன்றனவிர்பரந்துகாட்சியெய் தப், பாராரும்பொழில்களெல்லாம்வயங்கவாயர்புதிமாதரொண்ணிலார்கள்பரி விறேடுந், தாராருங்குழலசையவாரமாடத் தனமிலங்கநதிக்கரையிற்றனுமா தத்தில், நீராடலுவந்துவந்துமருங்குநோயநெருங்கினர்கள்நிறைகனகக்கொ ம்புபோல்வார். (உங)

வாசமிகுகாலேகங்கமழவேதான் வந்தெழில்கொள்பாளிதங்கள்கரை மேல்வைத்தே, யாசில்வதனத்தினிருகண்ணின்வாயி னழகினுறுமரவிந்தங்க ளுநீராம்பல், மாசிலயத்துள்ளலர்ந்துமறைவபோலமடந்தையர்கள்விழுந்தெ ழுந்துகுடையநீரி, ளைசையுறுமார்கழிநீராடினார்களுயர்ந்தெழுந்தவளியின ங்கள்பாடியாட. (உச)

அனங்கன்மனந்தடுமாறித்திகைப்பவானினரம்பையர்கணாணவுயரண் டர்மாத, ரினங்களயந்தனின்விழுவவொழுவர்கையா லிலங்குமலர்பறித்தெறிந் தேயெறிவர்தூய, தனங்களிணைவயங்கவிடை துவளவில்லார்தரளநகையெழ க்குழுடன்னைச்சுற்ற, மனங்கனியுங்களிப்பினொடுதினமுமெய்திமார்கழிநீரா டியவர்மகிழும்நாளின். (உரு)

பரிபுரந்தாண்மிசையரற்றப்பொன்னிறுடையன்மணிகள்பவருடைநாண் மருங்குவாய்ப்பத், தரளமணித்தாவடமொண்டாமமாடச் சந்துவெறிவீசவு யர்பீலிப்பின்னல், சிரமுறவேயிருகாதிற்குண்டலங்கடேமாம்பூவுடன்சிறப்ப வேய்கொடேி, விரைவினின்வந்தாய்ச் சியர்பொற்கலைகள்வாரிவெளியமலர்க் குருந்தேறிநகைத்துநின்றான். (உசா)

வேறு. அம்பரமெல்லாம்வாரியழுங்கியகுருந்தினேறு
மும்பர்கள்பெருமான்றன்னைநோக்கியொண்முறுவல்செய்து
வம்பவிழ்குழலினார்கள்மார்பினிரமிழுகின்றே
யெம்பரவென்செய்தாய்நீயெங்கலைதருதியென்றார். (உஎ)

மார்கழிநீராடவந்தனமியாங்களந்தோ
நீரினுட்சீதமாற்றேம்நீயெஞ்செம்படங்களெல்லாஞ்
சோரர்போல்வாரித்தூயகுருந்தின்மேற்றேன்றிநக்கா
யாரிதுசெய்வாராயாவம்பரமருள்வாயென்றார். (உஅ)

பொதுமடவோரலோம்யாம்பொதுவர்தம்மகளிரன்றோ
ததிகளவாடுமையாதகுதியுமறிந்திலாயோ
மதிமுகமிலகநின்றுநகைத்தெமைமயக்கிடாதே
யுதவுநீயெங்களும்பொற்கலையையென்றுரைத்தாரன்றே. (௨௯)

நிந்தனைசெய்தாயையநீயிவண்செய்ததெல்லாம்
நந்தகோபாலனுக்குமசோதைக்கும்நவின்றிடோமோ
சுந்தரவினிநீயெங்கடுகிலினையளித்தாயாகில்
வந்தனைசெய்வோமென்றுமடந்தையருரைத்தாரன்றே. (௩௦)

அரிவையருரையைக்கேட்டேயச்சுதன்முறுவல்செய்து
தெரிவைமீர்நீயிர்சாபத்திங்கணீராடுகின்ற
விரதமாப்பலனிங்கெய்தவிரைவினிற்கரையினேறி
யிருகையாற்றொழுதீராகிலீவனுந்துகில்களென்றான். (௩௧)

ஆரியன்கூறக்கேட்டவரிவையரவனைநோக்கி
நீரினுளொருவிநின்முனக்கினத்தினராய்நிற்கின்
பாருளதனையுமெம்மைப்பரிபவஞ்சொலாரோவையா
சீரியவல்லசொல்லேலென்றுபின்செப்பலுற்றார். (௩௨)

சிற்றிலையழித்தியாங்களடுசிறுசோற்றைச்சிந்திப்
பற்றியகலசந்தன்னைத்தகர்த்துமெம்பட்டைப்பீறி
நிற்றலும்வளைநெறித்துநீயெம்மைமயக்குங்கல்வி
கற்றநீசொற்றதெல்லாம்கேட்பமெங்கலைதாவென்றார். (௩௩)

கருந்தடவிழியினார்கள்கழறலும்நகைத்துக்கண்ணன்
பெருந்தடநீரகன்றொவ்வொருத்தியாய்ப்பெயர்ந்துவிஞ்சங்
குருந்தருகெய்தியென்னைத்தொழுதிறகூறையீய்வன்
வருந்தநீர்நீருள்நின்றுவணங்கினுங்கொடேன்யானென்றான். (௩௪)

கருமுகில்வண்ணன்கூறக்கேட்டகாரிகையாரெல்லாம்
விரகனெல்லோரும்பல்கால்வேண்டினுங்கூறைதாரான்
றெரிவைமீரொன்செய்வோமென்றுரைத்தவர்திகைப்பச்சென்றோ
ரரிவைநக்கினத்தோடேகித்தொழத்துகிலளித்தானையன். (௩௫)

தனியேசென்றொருத்திகூறைவாங்கலுந்தையனல்லா
ரினியேதுகருமமென்னவிலங்குபூங்கொம்பாமென்ன
வனமேபோலெய்திநின்றேயனகனையிருகைகூப்பக்
கனமேனியிறைவன்கண்டானனைவர்க்குங்கலைகளீய்ந்தான். (௩௬)

வில்கிளர்கலன்கள்பூண்டமெல்லியலொருத்தியோர்கை
யல்குலைமறைப்பமற்றையங்கையாற்கூப்பலோடுஞ்
செல்கிளர்ந்தெனவேதோன்றுஞ்சீதரனவளைநோக்கி
யெல்கிளர்தசனமூரலிலங்கிடவியம்பலுற்றான். (௩௭)

தெரிவையர்யாவரோனுமெனைத்தொழச்சேர்ந்துநின்றே
யொருகையைக்கூப்பினுரோலவர்கரந்துணிக்கவொப்பி
லருமறைபுகலுமென்னவவளல்குல்மறைகைவாங்கி
யிருகையாற்றொழலுங்கண்ணனைத்தவடுகிலீய்ந்தான். (௩௮)

ஒருத்திபின்னொருத்திசென்றுதொழுதிடவுவந்துமாய
னருத்தியினளித்தகூறையனைவரும்புனைந்துகொண்டு
மரத்தினுமிழியுமுன்னம்வள்ளலைப்பற்றிக்கொண்டே
திருத்தநீயாங்களுன்னைத்தொழுதபோற்றொழுதியென்றார். (௩௯)

நீயவநீதியெம்மைச்செய்ததுநினைந்துகொண்டே
யாயநீதொழுதியென்னவனகன்வாண்முறுவல்செய்து
சேயிழையார்கட்கெல்லாந்தனித்தனிசெங்கைகூப்ப
மாயனன்முகத்தைநோக்கிமடந்தையர்விளம்பலுற்றார். (௪௦)

இருகணுநோக்கயாங்கள்மயங்கினமெதிரிலாத
புருவநீகோட்டவுன்றன்மாலினிற்பொருந்தினோம்யாந்
தரளவெண்ணகைநீசெய்யத்தாழ்ந்தனமதுதன்றனலிங்
கிருகையாற்றொழுதவண்மைகண்டிலமிறைவவென்றார் (௪௧)

ஆதலாலடிச்சியோமையழகுறத்தொழுதியென்ன
மாதவனகைத்துச்செங்கைகூப்பலுமகிழ்ந்துநின்று
சீதரன்கடைக்கணோக்கில்முறுவலிற்செப்புஞ்சொல்லின்
மாதர்களுருகிமாலைவணங்கித்தம்மனைகள்புக்கார். (௪௨)

கண்ணனுமுறுவல்செய்துகானகந்தன்னின்மேய்த்த
வெண்ணருங்கோவினோடுமிலங்கியதுணைவரோடும்
நண்ணியேயாயர்தங்கள்பதிதனில்நாட்கடோறு
மண்ணணங்குவப்பப்பாதமலர்கொடுதிரியும்நாளின். (௪௩)

கூறைகொள்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உகககஎ.

---

௩௧. வது— சிந்தையந்திப்படலம்.

கந்தர்தன்றுதைதன்னைக்கயிலையோடெடுத்தெண்டிக்கிற்
றந்திகோடிறுத்துவென்றதசக்கிரீபன்றன்சாய
விந்திரனிராதமீதிலிலங்கிவெம்படகழிதூவுஞ்
சுந்தரவிராமன்பாதந்தொழுமினோபிறவிதீர. (௧)

ஐயன்றன்றுணைவரோடுமாவினந்தூரமேய்த்து
வெய்யவன்கிரணந்தன்றால்மெய்யெலாம்வெதும்பித்தாமோர்
பொய்கையின்பொழிலினெய்தத்துணைவர்கள்புண்டரீசக்
கையவெம்பசியினொந்தோமென்றலுங்கண்ணன்சொல்வான். (௨)

இந்தநல்வனத்தினாண்டோமொழில்கொளுய்யானந்தன்னில்
அந்தணரெல்லாமாங்கிரதமெனும்யாகஞ்செய்தார்
முந்தியான்விடுத்தேனென்றுமொழிந்துநீரடிசில்வேண்டி
வந்தனைசெய்துவாங்கிவருதியென்றுரைத்தான்மன்னோ. (௩)

இறையவன்மொழியக்கேட்டதுணைவர்கள்கடிதினெய்தி
மறையவர்தம்மைத்தூரவணங்கித்தாம்வந்ததெல்லா
மறைதலுமாயர்தங்கள்மதியெலாமழுகிசென்று
முறுவல்செய்தேதுயிலைப்போமெனமுடுக்கினாரால். (௪)

வேதியரிகழ்ந்ததெல்லாந்துணைவர்கள்விளம்பக்கேட்டே
ஆதியோனகைத்துநீயிரந்தணர்தேவிமார்க
ளதிலாதிருந்தசோலைசேர்ந்தவர்களுக்குச்செப்பி
யோதனம்வாங்கிவாருமென்றுமாலுரைத்தான்மன்னோ. (௫)

நந்தகோபாலன்மைந்தனவின்றிடத்துணைவரேகி
யந்தணர்தேவிமாரைவணங்கிநின்றறைதலோடுஞ்
சிந்தையின்மகிழ்ந்துதூயவறுசுவையடிசில்சேர
வந்தமார்குழிசிதன்னிலடுக்கித்தாஞ்செல்லும்போழ்தின். (௬)

காதினிற்குண்டலங்களலைந்திடக்கைத்தண்டேந்தி
வேதியர்மோதிவைதுவெருண்டவர்தடுக்கவுந்தான்
கோதையர்நில்லாரெங்குஞ்சிதறித்தாமோடிக்கூடி
மாதவனிற்குமந்தவனத்திடையேகினாரால். (௭)

பாரிலிவ்வண்ணமாதர்பரந்திடுங்காலைமாலி
னாருறவொருத்திவல்லைநடந்திடவவடன்கொண்கன்
கோரவெஞ்சினனாய்வைதுகோதைதன்கரத்தைமான்றோல்
வாரினாற்பிணிக்கச்செல்லும்வகையிலாதாகிநொந்தே. (௮)

சினமுறுகணவனெய்தித்தடுத்திடவசோதைசேயா
மனகனைச்சிந்தைசெய்யச்சிந்தையந்தியனோயாகி
வினையறவுடலினாவியோவிப்பொன்விமானமீதிற்
கனகனையுக்கிராற்போழ்ந்தகரியவன்பதத்திற்சேர்ந்தாள். (௯)

திருந்தியமகங்கள்செய்துஞ்சிறந்தபல்தானமீய்ந்து
மருந்தவமளப்பில்காலமனிலமேயுணவாய்த்தம்மெய்
வருந்திடுவோருங்காணாமாதவன்பதத்தின்மங்கை
பொருந்தியதிறம்பூதென்னாப்புலவர்கள்புகன்றாரன்றே. (௧௦)

அன்னதுநிகழும்வேலையந்தணர்தேவிமார்கள்
பொன்னுறுகலன்களெல்லாவடிசிலும்பொருந்தமேவித்
துன்னினாரனகன்சானத்தெழிலுறநின்றசோலை
மன்னியேகண்டார்நீலமுகிலெனவயங்குவானை. (௧௧)

சிரந்தனிற்பீலிப்பின்னறிகழுநற்றிலகமின்ன
வுரந்தனிலாரமாலையுடன்வனமாலைதோன்ற
வரந்தருபாதந்தன்னின்மணிச்சிலம்பொளிரவேயோர்
கரந்தனிற்கமலமேந்தித்துணைவர்தோளுறுகையானை. (கஉ)

இளரொளிக்குண்டலங்கள்கெழுமியகாதினானை
யளியுறும்வனசமன்னவழகியநயனத்தானை
யிளவெயில்நிகராமாழையிலங்குடையாடையானை
நளினம்வாய்நெகிழ்வபோலநகைதிகழ்வாயினானை. (கங)

சோதியாயுலகமெங்குந்துலங்கிநின்றானைக்கண்டு
வேதியர்தேவிமார்கள்விழியிணைகளிக்கநோக்கி
யாதியானருகினெய்தவவர்களையருளாலையன்
மாதரீரிவணேன்வந்தீர்மகுணர்பாலேகுமென்றான். (கச)

தனையர்கள்வேண்டாமெம்மைச்சார்வுறுங்கொழுநர்வேண்டா
மனைகளும்வேண்டாம்நீயேகெதியெனவந்தோமையா
வனகநின்பாதஞ்சேருமறிவினையருளாயாகில்
வினையுறுபிறப்பாமெம்மைக்கணவரும்விரும்பாரென்றார். (கரு)

அரிவையர்மொழியக்கேட்டவரியவற்கருளிச்செய்வான்
றருமமெய்ந்நீதியின்றித்தற்கராலுமென்ற
னிருபதமடைந்துவாழ்வரியாவரோயெனினுந்தாழ்ந்த
வருநரகடையார்தேவர்முனிவர்க்குமவரேமேலோர். (கசு)

ஆதலாலனைவீரும்மென்னருளினாற்கெதியுண்டானீர்
மாதரீரும்மைமைந்தர்மகுணர்தாமெள்கல்செய்யார்
போதுமினென்னலோடும்புனிதனைப்போற்றிசெய்தே
யோதனமளித்துமாதர்சாலையையுறறபோழ்தின். (கஎ)

மறையவர்சிந்தைசெய்துஞானம்வந்துறுதலாலே
யிறையவனந்தன்மைந்தனுமெனவறிந்தாரோங்கி
யறைமறைவேள்விதோன்றுமனனுறுமாகுதிச்செந்
நெறியறனுலகந்தாங்கின்றவனிவனேவன்றே. (கஅ)

சோதியென்றறியாதந்தோவெள்கியாந்துயரமுற்றேம்
வேதநூலறியார்செய்யும்விரதங்களறியாரேழை
மாதராராதியென்றேயறிந்துவான்கதியைப்பெற்றா
ரோதியாங்குங்குமங்கள்சுமந்திடுங்கரமேயொத்தோம். (கக)

என்றவர்சிந்தைநொந்துதுயரமோடெதிரேசென்று
மன்றலங்குழலினாமகிழ்ச்சியோடினிமைபேசி
யொன்றினாரவருந்தாமுமுலகமீரடியாற்கொண்டு
நின்றவன்றுணைவரோடுநிறையுமோதனத்தைப்பார்த்தான். (உ0)

நறுமலர்க்குழலினார்கணண்பினாற்கொணர்ந்துதந்த
வறுசுவையடிசிலெல்லாந்துணைவரோடருந்தியைய
னிறையுநீர்பருகியாவினிரைகளோடணுகியாயர்
மறுகினிலெய்திநந்தன்மனைதனில்வைகுநாளின். (௨௧)

சிந்தையந்திப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் -௩௦௧௮

௪௦. வது — கோவர்த்தனகிரிப்படலம்.

சுரர்பதிவிடுப்பவேழுமுகில்சொரிந்திடவேநோக்கி
வெருவியபொதுவர்மாதர்மேவுமானிரைகள்வீயா
தொருகையாலுலகமெல்லாம்புகழ்ந்திடவும்பரோங்க
வரையினையெடுத்துக்காத்தமாலினைவணக்கஞ்செய்வாம். (௧)

அயத்திற்சைவலமேபோலவகத்தடர்பாவமெல்லாம்
பயத்தின்மண்ணகற்றுந்தேற்றன்வித்தையெனப்பரமனுமங்
கயத்திடர்கயத்தினெய்தியவண்களைந்ததுபோல்நீக்கு
முயத்திடத்துடனேநெஞ்சேயுலகளந்தவனைப்போற்றாய். (௨)

யிந்திரன்தனக்கெல்லோரும்பூசனையியற்றுங்காலம்
வந்திடநந்தகோபன்மகிழ்ச்சியாலாயர்தம்மைத்
தந்திடுந்தண்டுலங்கள்சரியிலாமுற்கமாட
மிந்துவினவிர்போல்வெண்ணைததிநிறைபால்களென்றான். (௩)

ஆயர்கோன்கூறலோடுமாயிரங்கண்ணினான்றன்
றூயபூசனைகட்கெல்லாந்தொடங்கலுநந்தன்றன்னை
மாயவனோக்கியீதுமந்திரநூலோர்வல்ல
நேயமாமுலோகிதம்மோநிகழ்த்துதிதெரியவென்றான். (௪)

மைந்தன்றன்மொழியைக்கேட்டுமகிழ்ச்சியோடாயர்கோனா
னந்தனதெல்லாமையாநாமுறைவனங்களெல்லாங்
கந்தரம்பொழியவேண்டிக்கருணைசெய்தருளுந்தெய்வ
மிந்திரனதலாலேயவற்கிடும்பூசையென்றான். (௫)

தந்தைதன்னுரையைக்கேட்டுத்தாமரைச்செங்கண்மாய
னெந்தைநீயறிகிலார்போலிருதெனக்கருமஞ்செய்தாய்
தந்தமுன்வினையினாலேதருமபாவங்களெய்து
மிந்திரனமக்குச்செய்யும்நலனெனச்செய்வாயென்றான். (௬)

கான்படர்புல்லைமேய்ந்தாக்கறந்திடும்பாலேபோலத்
தான்செய்தநீதிதானேதருந்தருமங்கடன்னை
வான்பொழிகாலம்வந்தாற்றடுப்பனோவானோர்வேந்த
னேன்பினியவற்குவேண்டாம்வெறியானுவக்கேண்மோ. (௭)

வேறு. காவெத்தனையதன்மீதுறுகனியெத்தனைவாசப்
பூவெத்தனையடர்ந்தேபடர்புல்லெத்தனையிவைமே
யாவெத்தனையதன்பால்கொடுநாம்வாழ்குவததனாற்
கோவர்த்தனகிரியேநமக்கிதமாங்குலதெய்வம். (அ)

இயல்பாலளித்திடும்பாலனவருக்கமிவையெல்லா
முயவானுறுகோவர்த்தனகிரிதேவதையுருவா
யயில்வாரவைகாண்மின்னெனவறைந்தேயதற்கெல்லா
முயல்வீரெனநந்தன்முதலோர்நன்றெனமொழிந்தார். (௯)

விதமாகியமலிதண்டுலமிகுமாடமுமுற்கந்
ததிபாலிழுதுடனேயுயர்சகடங்களில்நிறைத்தார்
மதியானனமடவார்திரள்மலர்சந்தனமேந்தி
நதிநீர்விழுகோவர்த்தனகிரியெய்தினர்நண்பால். (௧௦)

மலைமேலுறநீர்விட்டனர்மலர்சந்தனநிறைத்தா
ரிலைமேலனவருக்கம்பலவரைபோலெதிர்குவித்தே
நலமேவியததிவெண்ணெய்கணறுநெய்யிவைபடைத்தார்
வலமாயுயர்கோவர்த்தனகிரிசூழ்ந்துறவந்தார். (௧௧)

மாலன்னையிராமன்னவன்மாதாவுயர்நந்தன்
ஞாலம்முறுபொதுவோர்திரள்சேவித்தேவணங்கிடலுங்
கோலம்முறுகோவர்த்தனமுருக்கொண்டனவெனக்கை
நாலின்னனமெல்லாநுகர்ந்தானுரணனம்மா. (௧௨)

நிலமீதினிற்றொழுமாயர்கள்குழுவோடிவணின்றே
மலைமேலுயர்தெய்வம்மெனக்கரங்கள்கொடுவாயி
னிலைமேலமரனம்பாறயிரெல்லாமெடுத்துண்டா
னலைவீசியதிருப்பாற்கடலரவிற்றுயில்மாயன். (௧௩)

சீராயமர்கோவர்த்தனகிரிதேவதையுருவா
யேரார்கரநாலாலனமெடுத்தேயருந்தியதால்
பாரீருயர்நந்தன்மகன்பகர்சொற்பழுதாமோ
வாராய்ந்திடின்வரையேதெய்வமாகண்டலனன்றே. (௧௪)

என்றேயிவைமொழிந்தாயர்களிலங்கும்மடவார்கள்
குன்றாகியகோவர்த்தனமிசையிற்குழுமித்தாங்
கன்றாநிரைமேயக்கடிமலர்ச்சோலையினுவந்தே
யன்றாலிலையமர்ந்தானுடன்மகிழ்ந்தாண்டமர்வேலை. (௧௫)

வேறு. இந்திரனறைவானுயரெனக்கிடுமன்னமெல்லாம்
நந்தன்றன்மைந்தன்கூறும்நலனிலாவுரையைக்கேட்டு
வந்தனைசெய்துகுன்றைவலம்வந்தேயளித்தின்றென்னை
நிந்தனைசெய்தானென்னநெருப்பெழக்கனன்றுநக்கான். (௧௬)

தூயதாமனமெனக்கின்றிடாதநுன்மதியாரான
தீயராநிரைகள்மைந்தர்சேயிழையார்களெல்லா
மாயவேயூழிக்காலத்தெழுஞ்சமவர்த்தகப்பே
ராயமாமேகந்தன்னைத்தலைவிடுத்தறையலுற்றான். (௧௭)

சூழ்மணிமாடம்வீதிதுலங்கியவாயவெல்லாம்
வாழ்விருந்தாவனத்தின்மடிந்திடவானினேகி
யூழிகாலத்தில்நீதான்பெய்யுமுக்கிரத்தினோடே
யேழுநாளிடைவிடாமற்பொழிதியென்றியம்பினான். (௧௮)

ஆயிரங்கண்ணன்கூறிவெகுள்தலுமாயர்வைகுந்
தூயநற்பதியையெல்லாஞ்சூழ்ந்துவான்கருகிச்சண்ட
வாயுவந்தறையமின்னியிடித்துவானவர்களஞ்சத்
தீயவல்லரக்கர்தோற்றமென்னவேதிரண்டமேகம். (௧௯)

தரணியெண்டிசைகளெங்கும்வயங்கிடத்தாங்குகின்ற
வரவின்வெம்படம்நடுங்கவலசிவெங்கரிகளோட
வரையினம்பிதிரவெண்ணில்மராமரம்பரிந்துவீழச்
சொரியுநாரதரமின்னியிடித்ததுகாலஞ்சூழ. (௨௦)

ஆவினம்நடுங்கியோடஆயர்களலறிவீழக்
கோவியர்குழவியோடுங்குலைந்துமெய்யயர்ந்துபாறக்
காவினமொடிந்துசாயக்கரிகரம்போன்றதாரை
தூவிவானேறுவீழச்சொரிந்தனவெழிலியெங்கும். (௨௧)

நந்தனுமசோதைதானும்நடுங்கிமெய்நாவுலர்ந்தே
வந்திடரோகணிப்பெண்மயங்கினண்மகளிரெல்லாம்
நந்தினமந்தோவென்றுகம்பலைநண்ணவாய
ரெந்தையுன்சரணமென்றுண்டிறைஞ்சிடவிறைவன்சொல்வான். (௨௨)

புரந்தரன்சினத்தினேவப்பொழியுஞ்சீமூதமெய்து
மரந்தைநீரொழிதிரஞ்சலென்றவர்க்கருளியையன்
கரந்தனிற்கோடற்பூவையேந்தியகாட்சிதோன்றப்
பெருந்தடவரையையொய்தினெடுத்தனன்பெருமையோங்க. (௨௩)

வேறு. உயர்ந்தகோவர்த்தனகிரியையோர்கையா
லயந்தடவரைமிசைபுரளவாயர்கள்
பயந்திடும்பருவரலொழியப்பாருளோர்
வியந்திடவேந்தினன்விண்ணுளோர்தொழ. (௨௪)

பருவரையேந்தியபரமனாயரைத்
தெருமரலொழிந்திவண்சேர்மினென்றலு
மரிவையர்பொதுவராநிரைகள்கன்றுகள்
வெருவரலொழிந்தவண்வரைவினெய்தினர். (௨௫)

தந்தையுந்தாயரும்விரைவிற்சார்ந்தனர்
சிந்தையினுவந்துவந்திராமன்சேர்ந்தனன்
மைந்தனின்றேந்தியவரையைநோக்கியே
புந்தியின்மகிழ்ந்திடப்புனிதன்கூறுவான். (உகு)

வேறு. சிறியனென்றென்கைக்குன்றம்வீழுமோவென்றுசிந்தை
மறுகிடவேண்டாமிந்தமால்வரைவானோர்க்கெல்லா
மிறைவனினதிகம்நொய்தெனென்கரத்திருக்குமென்று
மறிதிர்நீரளித்தவன்னமருந்தியதெய்வமென்றான். (உஎ)

என்றவர்க்கிவைமொழிந்தேயிளநிலாமுறுவறோன்றக்
குன்றினையேந்திநின்றான்கோவலக்குரிசிலம்மா
வன்றொருகுழவியாகியண்டங்கள்வயிற்றுள்வைத்தா
னின்றவன்வளர்ந்துநின்றலொருவரையேந்தலானே. (உஅ)

பொடிபடமரங்களெல்லாம்பொறியுகவரையின்மீதின்
வெடிபடுமண்டமென்னவெணில்மழையேறுவீழக்
கடகரிக்கரம்போல்வீழுந்தாரைகொள்மாரியோடு
மிடைவிடாதேழுநாள்கள்பொழிந்தனவெழிலிமன்னோ. (உகூ)

நன்னெறியறிந்தேயைந்துபுலன்களையடக்கிநாவிற்
றன்னிகரிலாதசோதிதன்பெயரோதுவாரை
முன்னூறுபிறப்பிற்செய்ததீவினைமுடுகினாலு
மன்னிடாவாறுபொலிம்மாரியால்மெலிந்தாரில்லை. (௩0)

ஊழியிற்பெய்யுமேகமேழுநாளோய்வில்லாம
லாழியைநிகர்த்துவெள்ளமலையுறப்பொழிந்தபின்னர்
வேள்வியைநெறியிற்செய்தவேதியர்தம்மையூழாற்
சூழ்வினைமாய்ந்ததென்னவகன்றனதோற்றமின்றி. (௩க)

துளிகளுமின்றிமேகமொருவிடத்தூயவானம்
வெளியுறவிரவிதோன்றிவிளங்கிடவாயர்மாத
ரளவிலாமகிழ்ச்சியெய்தியாவொடுகமலக்குன்றைக்
களவினெய்யுண்டான்வைத்துக்கவினுறநிற்குங்காலை. (௩உ)

கெருடகாந்தருவர்சித்தர்வித்தியாதரர்கள்கீத
வரிவையரியக்கரொப்பில்கின்னரரளப்பிலாதோர்
தெரிமலர்சொரிந்துதேவதுந்துமிமுழங்கியாடிப்
புருடவுத்தமனேயென்றுபோற்றிசெய்தார்களன்றே. (௩௩)

பருவமோரேழுதன்னினேழுநாள்பருப்பதத்தை
ஒருகையினேந்திநின்றவொருவனையுணராதேயான்
தெருமரலுற்றுச்சிந்தைகலங்கினேனென்றுதேவ
ரருமறைமுனிவரோடும்வலாரிவந்தறையலுற்றான். (௩௪)

மாரியின்மெலிந்திடாமலேழுநாள்வரையையேந்து
மாரியனீயேயென்பதறிகிலேனண்டம்பூத்த
வேரியங்கமலத்தோன்றன்றாதையேவினையேனந்தோ
பாரிடைநந்தகோபன்பாலனென்றெண்ணினேனால். (௩௫)

காமனாயிரங்கண்ணாலேகாமவேடனைத்தந்த
வாமனனெழிலைநோக்கியிறைஞ்சியேமண்ணினின்று
பூமனோடுலகுதந்தபுனிதனேநூற்றுப்பத்து
நாமனேயடியேன்செய்தகவையினைப்பொறுத்தியென்றான். (௩௬)

பிற்குணத்தினர்கடம்மையீசனாமென்றும்பேசித்
தற்குணமகற்றுவாய்நீசுருதிநீசோதிநீயே
சிற்குணமானாய்நீயேதீக்குணமிரண்டுநீக்கி
முற்குணமானாய்நீயேமூவுருவாயதேவ. (௩௭)

என்னைநீவிபவந்தன்னாளிருத்தினாயதனாலே
யுன்னையானறிந்தேனில்லையும்பரினெழில்யுண்மின்
மின்னியேமறைந்தாற்போலவெளிசெய்வைமறைப்பைமீள
வுன்னரிதாகுஞ்சோதியெளியைபோலுலகினிற்பாய். (௩௮)

ஆதலினடியேன்செய்தபிழைபொறுத்தருடியென்ன
மாதவனிருபாதத்தின்வணங்கியேவலாரிநின்றான்
றீதகல்காமதேனுவந்தடிவணங்கித்தேவா
போதயன்பணியால்வந்தேன்புனிதனேகேட்டியென்ற. (௩௯)

மலரயன்மொழிவானெந்தைமண்மிசைநின்றானியுன்
முலையுறுபாலினாலேமஞ்சனமாட்டிமூவா
நிலையுடையானுக்கோத்தநாமநீநிகழ்த்துசென்றா
னலையுறுபயோததிக்குளமர்செல்வவென்றதேனு. (௪0)

நவமணிக்கொம்பில்வாலிற்றாளினிற்கழுத்தினண்ணை
வுவமையின்மேனியோங்கவுவந்துதன்முலைப்பாலாலே
புவியினினனைகருணைபுயலைமஞ்சனநீராட்டித்
தவர்மறையறையப்பேரிதுந்துமிதழங்கிற்றம்மா. (௪௧)

தேனுவின்முலைப்பாலாலேசிறந்திடுவானைநோக்கி
யானையிற்றிலதமாகியமரயிராபதந்தான்
வானதிநீரைப்பொன்னார்மணிக்கும்பக்கலசத்தேற்று
மானவன்மேனியெல்லாமஞ்சனமாட்டிற்றன்றே. (௪௨)

ஆவினுக்கெல்லாமேலாமழகியகாமதேனு
பூவினிற்றொடைபொன்னாடைபுதுமணியிழைகள்சாத்திக்
கோவினைக்காத்ததாலேகோவிந்தநாமந்தன்னை
நாவினால்நவின்றுபட்டங்கட்டியநலன்கள்மேவ. (௪௩)

பேரிமாமுரசுசங்கஞ்சச்சரிபிரளையத்தி
னாரவாரங்கொன்னவறைந்திடவுயர்ந்ததேவர்
ஓரிதாமலர்கடேவத்தேனுவும்வலாரிதானும்
பாரினில்வணங்கியேகப்பரமனங்கிலங்கிநின்றான். (௪௪)

ஆயர்கோனசோதைமங்கையுரோகணிராமவண்ணல்
மாயனைத்தழுவிக்கொண்டுமகிழ்ந்தனர்மாதரோடும்
நேயமாம்பொதுவரெல்லாந்துதித்தனர்நிரைகளோடுந்
[illegible]யமாபதியிற்புக்கித்துலங்கியாண்டமருநாளின். (௪௫)

கோவர்த்தனகிரிப்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௩௦௬௩

௪௧. வது—வருணப்படலம்.

மந்தரவரையின்வெய்யவாசுகிதன்னைவீக்கிச்
சிந்துவைக்கடைந்துதூயவமுதினைத்தேவர்க்கெல்லா
மிந்துவினுதலியாயவரிவையாய்ப்பகுர்ந்தாண்டுய்ந்த
செந்திருமருணன்பாதந்தொழுமின்செய்வினைகடீர. (௧)

ஏருறுமிரவிதோன்றிற்றுவாதெசியில்லையென்றே
பாரணைமுந்திச்செய்வான்பருதிதொழுவமுன்னே
நீரினி[illegible]டியலோடுநிகரிலாவருணன்றூதர்
சீருறுநந்தன்றன்னைப்பற்றித்தம்முலகிற்சேர்ந்தார். (௨)

நதியினீரதனின்மூழ்கும்நந்தனைத்தேடிக்காணார்
பதியினிற்புகுந்தேயுற்றதுரைசெய்வார்பகரக்கேட்டு
விதிகொடிதந்தோவென்றுவிழுந்தழுந்தசோதைவிம்மித்
ததிகளவாடுவானைத்தழுவிநின்றரற்றினாளால். (௩)

மைந்தவுன்றாதைபோனான்வாழ்கிலேனுயிரைமாய்ப்பே
னெந்தைநீதனியனானாயென்றென்றேயிரங்குவாளோ
டுந்தியின்மலரோன்றன்னையுதவினோனழுதுதேறித்
தந்தையைத்தருகின்றேன்யான்றவிர்துயரென்றுசொன்னான். (௪)

சங்கொடுசக்கரம்வாடண்டொடுசார்ங்கந்தோன்றச்
செங்கதிரொளியேயேலச்சிறந்திடுங்கிரீடந்தோன்றப்
பங்கயமலரலர்ந்துபடர்ந்திடக்கவின்கொண்டோங்கு
மங்குல்போலெய்திநின்றான்வருணன்மாபதியின்மாதோ. (௫)

கண்டனன்வருணனீலமுகிலினிற்கமலம்பூத்துத்
தண்டுளவணிந்துவானின்சசியொடுமிரவிதோன்ற
மண்டனில்வந்ததென்னவயங்கியமாயோன்றன்னை
யெண்டவர்தொழும்பாதத்தினிறைஞ்சிநின்றேத்தினானால். (௬)

நளினமாமலரின்மீதினான்முகன்முதலொரியார்க்குங்
களைகணாயுலகமெல்லாங்கடந்துமீவிரசைமேற்பே
ரொளியுளேயுறையுஞ்சோதியொருவர்க்குமகப்படாதா
யெளியைபோலென்முன்னிற்கவெத்தவஞ்செய்தேனென்றான். (௭)

சிந்தைசெய்துலகமெல்லாந்திருத்தியேயவற்றுக்கெல்லாந்
தந்தையாமெண்கணான்றன்றந்தைநீயுனைப்பெற்ற
நந்தனுந்தந்தைதன்னைநதியினென்றூதர்தந்தா
ரெந்தைநீபொறுத்தியென்றேயிருபதத்திறைஞ்சினானால்.

பன்மணிவருக்கத்தோடும்பாசிழைவெண்பட்டாடை
நன்மதிக்கர்த்தசங்குதரித்தநாரணன்முன்வைத்து
மன்மதற்றந்தாயுன்றன்றந்தையோடெய்திவாழ்தி
யென்மதிமறவாதுன்றாளேத்திடவருள்செய்யென்றான். (௯)

சிந்துவுக்கிறைவனீய்ந்தசெழுமணியிழைகளாடை
யிந்துவைநிகர்த்தசங்கமேந்தினானணிந்துகொண்டே
நந்தனுந்தானுமெய்திநன்மனைபுகவசோதை
சிந்தையினுவந்துவந்துசிறுவனைத்தழுவிக்கொண்டாள். (௧௦)

நந்தன்றன்மனைவிதன்னோடுறைகுவாரூரமூழ்கிச்
சிந்துவுக்கிறைமுன்றன்னைத்தூதுவர்சேர்த்தவாறு
மைந்தனாங்கண்ணனெய்திமாலுருவானவாறு
முந்திவந்திறைஞ்சிநின்றாண்டுதிமன்மொழிந்தவாறும். (௧௧)

மற்றவனுற்றதெல்லாமுரைத்திவன்மைந்தனென்று
பெற்றனம்யாமேயென்றுமுரைத்தல்பேரிழுக்கதன்றி
நற்றவக்கற்கன்முன்னாள்நவின்றனனிவனேயண்ட
முற்றுமானவனாமென்றுமொழிந்திடுஞ்சொல்லுக்கேற்க. (௧௨)

விடமுலைப்பாலையீய்ந்தவெய்யவளுயிரையுண்டுங்
கொடியவச்சகடுதைத்துங்காலியாசுரனைக்கொன்றுங்
கடியவெங்கன்றெறிந்துங்ககத்தினவாய்பிளந்தும்பாரி
னெடியதாய்க்கிடந்தபாம்பினெஞ்சினைப்பிளந்துநின்றான். (௧௩)

காளியன்பணங்கடோறுங்காலினால்மிதித்துக்காட்டி
நீளுமால்வரையைக்கையினேந்தியிந்நிலத்தின்மீதி
னாள்களோரேழுநின்றுநாமெலிந்திடாதவண்ணங்
காளமாமேகம்பெய்யுங்கல்வருடத்தைக்காத்தான். (௧௪)

ஆதலாலிவனையீன்றவன்னைநீயத்தனானென்
றோதுபேதைமையையோவியொளிநிறச்சோதியோன்றன்
பாதமேற்பணிந்துயர்ந்தபதந்தனிலடைவோமென்றே
மாதவன்மலர்ப்பாதத்தின்வணங்கிநின்றிவைகள்சொன்னார். (௧௫)

அந்தமுமாதிதானுமளப்பரிதாயவுன்னை
மைந்தனென்றெண்ணியாங்கள்மதிமயக்குற்றோமாகி
லெந்தைநீயுயர்ந்தவீடுண்டெமக்கருளென்றேயேத்துந்
தந்தைதாய்நயனங்காணத்தன்னுருவாகினின்றான். (௧௬)

நீலமாமேனிகண்டார்நேமியுஞ்சங்குங்கண்டார்
நாலுகைவனப்பைக்கண்டார்நலந்திகழ்கிரீடங்கண்டார்
சீலமாந்திருவைமார்பிற்சிறந்திடக்கண்டார்பொன்னின்
கோலமாராடைகண்டார்குனிவில்வாள்கதைகைக்கண்டார். (௧௭)

துளவணிமார்பினாரந்துலங்கியவெழிலைக்கண்டார்
தளவலர்நகையைக்கண்டார்தாள்களினெழிலைக்கண்டார்
களவினில்வெண்ணெயுண்டபவளவாய்க்கவினைக்கண்டா
ரளவிலாக்கருணைநல்குமழகியநயனங்கண்டார். (௧௮)

குண்டலங்கதிர்களோலக்குழையினிற்குலாவக்கண்டார்
மண்டலவதனங்கண்டார்வளைவிலின்புருவங்கண்டா
ரண்டமுன்னுண்டான்மேனியழகுகண்டயிர்த்தன்னை
யுண்டவர்போன்றுகண்ணிற்புனல்கொளவுரைக்கலுற்றார். (௧௯)

உயர்மறைக்ககப்படாயையுரலினிற்கட்டினோமியா
மியல்பினேமுலகுண்டாயைமண்டின்றாயென்றுசொன்னோஞ்
செயலெல்லாமுடையவுன்னைவெண்ணெயுண்டிருடனென்றோம்
பயமிலாமாயவுன்னைபயப்படென்றடித்தோமென்றார். (௨௦)

எந்தையும்நீயேயானாயெமக்குநீமகவுமானா
யந்தமுநடுவுமானாயாதியுநீயேயானாய்
செந்திருநீயேயானாய்சிறந்தவள்கணவனானா
யுந்தியின்மலரோனானாயுருத்திரமூர்த்தியானாய். (௨௧)

என்றவர்துதித்திறைஞ்சியெமக்கருள்கதியையென்ன
வன்றுலகுண்டசோதியளியினாலவரைநோக்கி
யொன்றியதவத்திரட்டவசுக்களினுயர்ந்தோரன்றோ
வென்றுமீறிலாதவீட்டையீய்குவன்பின்னமொன்றான். (௨௨)

ஆயவையெல்லாங்கூறிஆதியாமுருவைநீத்து
மாயையாலவர்கடன்னைமயக்கியேமைந்தனாகித்
தூயவர்முன்னின்றானைச்சோதியென்றறிகிலாராய்ச்
சேயெனவெடுத்தணைத்துச்சிறந்தினிதிருந்தாரம்மா. (௨௩)

வருணப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௦௮௭.

அரியுழையுழுவைநாகமரவொடுபறவையாவி
னிரையுடனினிதுகேட்பநிறைமரமதுக்கள்வீழ்ப்பச்
சுரர்மடவார்கணையத்துலங்கியதொறுவமாத
ருருகவேயூதிநின்றோன்புகழினையுரைத்துய்வோம்யாம். (௧)

இந்திரையிலங்குமாயர்பதிதனிலெழில்கொளாயர்
சிந்தையின்மகிழவாவின்னிரைகளுஞ்சிறந்துதோன்ற
நந்தனுமசோதைதானுநலஞ்செறியழகுகொண்ட
மைந்தனொடினிதிருந்தார்வந்ததுவசந்தகாலம். (௨)

தூயமாவசந்தகாலந்தோன்றிடத்துணைவரின்றி
யாயர்தம்பதியையோவியஞ்சனக்கொழுந்துபோல
வேயிசைவாயினூதிவிண்ணவர்மகிழ்ந்துபோற்ற
மாயவன்யமுனையாற்றின்வண்மையைக்கண்டான்மன்றே. (௩)

அலையொலிகறங்கவீசியோடியயமுனைநீரி
னிலகியவாளைபாயவெழிற்கயல்சேல்கடுள்ள
நலனுறுவரால்கடாவநந்தினம்பரந்துமேய
நிலமிசைவயங்குமந்தாகினிதனைநிகர்த்தமாதோ. (௪)

வேறு. மதுநுகர்ந்தழுந்திமயங்குதலறிஞர்மதியலவென்றுரைப்பனபோ
லுதியினலரியெழுபொழுதவணினுயரரிமுரன்றிடமுன்னாட்
கதிர்மறைபொழுதிற்குவிமலர்களினக்கள்ளுணுமளியதிறலிகேட்
டிதழுறமலர்வாய்குடைந்தெழுந்தனவாலியல்பர்சொல்மருதவொண்டுவே.

கங்குலிற்பரத்தைகலவியினழுந்திக்கதிரவன்வரப்பொதுவியரா
மங்கைதன்னிடத்திற்செலவவள்சினத்தாண்டடைத்தவாசலினமர்பவன்போ
றிங்கள்சாலிருளிற்குவிமலர்களினத்தேனுகரரியிரவொருவத் [ற்
தங்குமம்மலர்விட்டகன்றலர்குவிந்தகுமுதத்திற்சார்ந்தவணிருந்த. (௬)

செங்கமலத்தொண்பொகுட்டிடைத்திலங்கள்சிதறிடவுமிழ்ந்திடுபணில
மங்குறுத்திடவீழ்நறவம்வெண்ணளினத்தூன்றிடவதனைப்பேடை
பொங்கியமதுவால்கன்றதன்றுளாற்பொருந்தியவாநவநீத
மங்கியினுருக்கிவிழுவெள்ளிவள்ளத்தேற்றிமெரிவையைநிகர்த்தே. (௭)

விரியும்வானளினத்தமரனச்சேவல்விழுமியபெடையின்மீதேறிப்
பிரிவிலொண்கலவிவிளைத்தனபோன்றபீழையாற்பேட்டனமதுகண்
டெரியிடைவிழுந்ததெனவலருஞ்செங்கமலத்துளிருந்தனவரால்கள்
பரவியவ்வனலையவிப்பபோலதனிற்பயமுறவெழுந்துதாவியதால். (௮)

வாலொளிர்களினங்குரண்டமென்றஞ்சிவகுலிபோய்வளையினையணுகிச்
சாலவும்வெருவியத்திலுளவைதான்சார்ந்ததென்றகன்றுகூம்பாமற்
பாலடைந்தவையும்பணியெனப்பயந்துபயமொழிந்தேதுள்ளிவானின் [ந்த.
மேலெழுந்தழலின்மிடைந்தவெள்ளியைப்போல் விரியுஞ்செங்கமலத்தின்வீழ்

வலமும்வாமமுமாக்ககன்றபங்கயமும்வாலுறுகளினமுமலர
வலர்தரும்பானலயத்ததிருப்பண்வளர்ந்தவாறுசுகனலைப்ப
விலகியபக்கத்திருமலரினுந்தானியங்குவதிராகுபார்க்கரனைக்
கலைநிறைகுபேரனுடனுமோர்பக்கந்தனிற்கலந்ததுதனைக்கடுக்கும். (கo)

கேடகங்கதிர்வாளயில்கணைபலவுங்கிளர்ந்தவெண திருநுமவர்தந்
நீடியசதுப்புநயனமானனம்வாய்ங்கரிவிகாதறத்துணித்தே
ஓடுறுகமடம்வராலுகள்வாளையுலப்பில்சின்மீன்விசைத்தறைய
மூடுசைவாலங்குவளைசெங்கமலங்குமுதநாளிகமுறிந்திற்ற. (கக)

விதுநிறைகலையுற்றதனிடைக்களங்கமுறவுந்தான்விளங்கியதெனவே
மதுநுகராறுகால்வர்ந்தவெண்ணளினமலிந்திடவயங்கியயமுனை [ப்
யெதுகுலத்திறைவனெழிலிபோல்வடிவாமெழிலினையெண்ணில்கண்விழித்து
புதியசெங்கமலம்விளக்கதாயேந்திப்பொலனுறநோக்கியபோலும். (கஉ)

நகையுறவதனம்வயங்கவேயெழிலார்நயனங்கள்களிப்புறநோக்கி
யகிலுறுபனிநீர்கணவன்மெய்குளிர்ப்பவங்கையால்விடுமரிவையைப்போ
லிகழ்விலொண்பணிலமுமிழ்ந்தநித்திலஞ்சேர்கமலநீலோற்பலமிலங்க
மகிழ்மலர்நிறைந்ததிவலைமாலாகமணமுறவீசியயமுனை. (கங)

வயலுறுகவைவண்டடருநீர்க்கொடிகொடமர்ந்தலர்மலர்சடைமாமேற்
குயில்சுகம்நிறையத்தென்றறன்காலங்குலாவவேயாவிமீன்குதிப்பச்
செயலுறுமிவைவேள்சிலையதினுறுநாண்சிலீமுகம்காகளம்புரவி
யியல்புறுமிரதந்துவசமொத்திலங்கத்தரணிமானேந்தியதன்றே. (கச)

பொங்களிசிலைநாணெனவிலங்கனங்கன்சரம்படாப்பெதும்பைபூவணையிற்
றங்கியொண்கொழுநன்கலவியைவிளைக்கச்சார்கெனக்காந்தனிலிடைவாள்
செங்கையைவிசையாலவன்வலித்தெனவேநிகரமெறிதிரையமிழ்த்தும்
பங்கயமலரைத்தருணநல்விபந்தன்றுதிக்கையாற்பற்றியேயிசித்த. (கரு)

ஊடியமடவாளதரந்தன்வாயாலுவப்பொடுபற்றவெங்கரத்தால்
மூடியவோட்டத்துடனுடன்படாதங்கலைபவடனைமுனிந்தெழுந்தே
சாடியதலைவனெனவயமிசையிற்றபனன்றன்சுடரினுல்முகிழ்த்த
வேடுடைக்குமுதந்தனையளிகுடைந்துநெறியிலாதெற்றியசிறகால். (கசு)

திரைபெனுங்கரத்தாலருக்கியமளித்துத்திவலையால்மஞ்சனமாட்டி
மரையிலைதனிற்சிதறுசீகரமொண்மரகதத்தாலமேற்றரள
நிரைகொளாலாத்தியேந்தினநளினந்தீபமாய்நிகரில்வெண்கமலத்
தரியிசைபாடவனமசைந்தாடவரியையாராதனைசெய்த. (கஎ)

வேறு. நாகமாமலகங்குருந்தம்நாவல்மாதவிநரந்தை
பூசமாம்பிரம்வருக்கைகேசரமகிழ்பொற்கொன்றை
மாசமார்கோவிதாரங்குரவகம்வழைமந்தார
மேகமாராந்தாழைபாடலம்விளங்குமன்றே. (கஅ)

கோகிலங்கூவக்குஞ்சொடஞ்சுகங்கொஞ்சவாடும்
கேகயங்கிளரவண்டுகின்னரர்போன்றுபாடப்
பூகமேல்மிழற்றும்பூவைபொலிந்திடக்கபோதமெல்லாம்
நாகமேற்றிகழ்பூகம்நன்மரந்தோறுந்தாவ. (௧௯)

இனையனவயங்குகின்றவெழில்விருந்தாவனத்தின்
மனமகிழ்ந்தினிதிருக்குமணிவண்ணனுறையும்வேலை
தினகரன்குடபாலெய்திமறைதலுந்தீரவொண்ணா
வினையெனக்கங்குலெய்திவிளைந்தனவுலகமெங்கும். (௨௦)

வேறு. தலைவன்விட்டகலவிடருறுமவள்போற்றபனன்போய்மறைந்திடநளி
மலர்குவிந்திடத்தற்பிரிந்தநாயகன்றன்வரமகிழ்மங்கையொனவே [ன
கலைநிறைமதிகண்டலர்ந்தனகுமுதமவையினைக்கண்டநற்சேவல்
பொலனுறுபெடையின்றுயர்நினைந்தவைதானலனுறப்பொருதும்பிற்புக்கணைத்த

வேறு. இடரொரீஇமடவாளணியிதழ்க்கதவடைக்கவாரஞ்
சுடருறவணிந்துதூயமுகந்துலங்கிடத்தன்கேள்வன்
வடிவுவந்தணைத்தமின்போல்வயங்குஞ்செங்கமலம்கூம்ப
வுடுமதியிலங்கக்கொண்மூவுருவெனவளைத்தகங்குல். (௨௨)

உயர்தனிச்செங்கோலோச்சியுலகினையாண்டமன்னன்
பெயரவங்கற்றம்பார்த்துத்தீயவர்சூழப்பின்னோர்
தயையுடையரசனெய்தியவர்களைத்தள்ளிமேவுஞ்
செயலெனவிருளைநீக்கிச்சிறந்ததுகீழ்பாற்றிங்கள். (௨௩)

வியாளமேற்றுயிலைநீங்கிவெய்யவருடனேபாரிற்
சுயோதனன்மடிந்துவீழக்குந்திதன்சுதர்மேல்வைத்த
தயாவினால்மாயனெய்தித்தரணியிற்பிறந்தானென்றே
பயோததிபரந்துதேடும்பண்பெனநிலவுகாய்ந்த. (௨௪)

நிசியெலாமகலவானில்நிறைந்தெழுமமிர்தம்போன்ற
சசிநிலவெறிப்பவாவித்தண்மலர்வெறிகளுறத்
திசையெலாமிலங்கத்தென்கால்பையவேசிறந்தாண்டெய்த
வசையும்வண்பொழிற்கோட்டினலர்மலர்வாசம்வீச. (௨௫)

பொன்மலைவில்லியெண்கண்புனிதன்புத்தேளிர்நாத
னன்மதிமுனிவர்தூயநாகர்கள்சூழ்ந்துபோற்றத்
தன்மயமானவண்டமடங்கலுந்தானேயுண்டான்
மன்மதனாணநின்றான்மண்மகள்மகிழமாதோ. (௨௬)

வேறு. பரிபுரங்கள்பாதமிசைக்கதிரைக்காட்டப்பசும்பொன்னிறாடையுடை
திகழத்துய்ய, தரளவடமொடுதாமந்திவளக்காதிற்றயங்கியகுண்டலமலையப்
பீலிப்பின்னல், சிரமிசையிற்கவினுறவேகேயூரங்கடிரண்டுயர்ந்தபுயமிசையி
னெழிலைக்காட்டக், கரமிசையின்வயிரமணிக்கடகமின்னக்கந்தற்பனெனக்க
ழைகொடுதினானல். (௨௭)

கரும்புருவம்நெறித்தெழில்சேர்கடைக்கண்ணோக்கிக்கண்ணபிரானூதுகுழற்கானங்கேட்டே, யரம்பையுருப்பசியொடுமேனகையிலங்குமழகுசெறிதிலோர்த்தமையோடனேகமாதர், கரும்பிரதமொழியினர்கள்வளைகள்சோரக்கலைநெகிழக்குழலவிழக்கடிதினெய்தி, விரும்புறவேநோக்கியுலைமீதுவைத்தமெழுகெனவேமெய்மறந்துருகிநின்றார். (௨௮)

இருகரங்களிலங்கமழையெழிலிபோன்ற விறையூதுங்குழலமிர்தகீதங்கேட்டே, கெருடகாந்தருவருபரியக்கர்கேழில் கின்னரர்கிம்புருடரொழின்மிக்கதூய, வுருவுடையதும்புருநாரதர்கள்சித்தவித்தியாதரர்களும்வந்தெய்திக்கையின், மருவியகின்னரியிணையில்வீணைசோர மதிமயங்கிச்சித்திரம்போல்நின்றார்மாதோ. (௨௯)

வடிவுடையமதனனையபங்குகண்ணன்வாயினூறுவேயினிசைசெவியின்வாய்ப்ப, அடவிதனிலழல்வளர்த்துவருந்திச்செய்யுமருந்தவங்களொருவியோகிகளுமொக்கக்,கடலினூறமிர்தமகவவியீதெல்லாங்கைத்திடவானமரர்களுங்கடிதினெய்தி, யுடலுருகியானந்தவாரிசோரவுறநோக்கிமெய்மறந்தோவியம்போல்நின்றார். (௩௦)

கோகிலங்கள்பிணிமுகங்கள்கபோதம்பூவைகொஞ்சுசுகமோதிமமீன்குரண்டம்நாரை, போகமிகுமன்றில்புதாவினங்கள்பார்ப்போடசுணப்புள்ளினங்களெல்லாங்கடிதிற்புக்கே, யோகையுடன்சிறகுகுவித்துற்றுநோக்கியுருகியிருகண்ணிமையாதிருந்ததூய, நாகமிசைநடித்தருள்வோன்வேயினூது நாதவிசையிருசெவியோர்ப்புற்றுநைந்த. (௩௧)

கருமுகிலஞ்சனநீலங்காயாம்பூவின்கவினிகராமுருவுடையகண்ணன்வாயின்
மருவுகுழலூதவெழுநாதகீதமகோததியினமிர்தெனவேசெவியினவாய்ப்ப
வரியநறுமலரினூறுவேரிதன்னையருந்துதல்விட்டெய்தியளிபாடாதாடா [றே.
திருசிறகுவிரித்துயர்வானசையாதேகாதெழுதியசித்திரம்போலவிருந்ததன்

நாகரிகனனவள்ளலூதுகின்றநற்குழலினெழுநாதகீதங்கேட்ட, சூகரம்பஞ்சானனஞ்சார்த்தூலங்கைமாத்துலங்கியவாவிகமயிடமெண்குசீறி, மோகரத்தினெய்தாளிருருமியோடுமுடுகுசினமொழிந்துகண்களிமையாதாகிச்,சாகரமாய்ச்செவிநெறித்தேயுருகிநிற்பச்சற்பங்கள்படம்விரித்தாடாமனின்ற.

காதினிற்குண்டலமிலங்கநெற்றிமீதிற்கஸ்தூரித்திலகவொளிகவினைக்காட்டச்,சீதரன்றன்வாயினிசையெழுநாணச்சிறந்தகுழலூதவெழுநாதந்தன்னாற்பாதவங்கள்மதுச்சொரியமலர்கள்வீழப் பரந்துகனியுதிர்ந்திடவேபணிவார்போலப், பூதலத்திற்பரமனின்றதிசையைநோக்கிப்பொலிந்ததமாலச்சாகைவளைந்தமாதோ. (௩௪)

காளிலெழுகில்வெறிப்பத்தண்கால்விசக்காவினூறுமலர்வாசங்கமழக்கேழி, ஞனவெறியுற்மேனிதிகழ்கின்றநாரணனூதும்வேயினாதங்கேட்ட, மானினங்கள்மேய்ந்தபுல்லுங்கடைவாய்சோரமகிழ்ந்திருகண்ணாலமையப்பார்த்துநிற்க, வானினங்கள்செவிநெறித்துமுலைப்பால்சோரவகன்குழைந்துகன்றினுடனேருக்கிற்றம்மா. (௩௫)

மாயவன்றன்வாயினிடைவேயைவைத் தூமகிழ்ந்தினிதினூதவெழுகீதங்கேட்ட, வாயர்மடவார்களெல்லாமுருகிநெஞ்ச மாவிதளர்ந்தேயொளாறமறியாராகி, யேயெனுமுன்குழலோசைநெறியினெய்தியிடைதுவளக்கலைநெகிழவளைகள்சோரத், தூயகுழலவிழவிமைப்போதின்முன்னந்துலங்குபாமன்றனைத்தான்சூழ்ந்தாரன்றே. (௩௬)

கறந்தநிறைபாற்கலசந்தரையின்வையார்கவிழ்ந்துடையவெறிந்தோடிக்கடிதிற்சென்றார், சிறந்தவனமருந்துகரநீரிற்காட்டார்தியங்கிமனந்தடுமாறவிரைவிற்சேர்ந்தார், துறந்துதயிலனந்தலுடன்பாறினார்கள்சோருருவற்கிடுவமுன்னேயுளங்கித்தம்மெய், மறந்துமதிமயங்கிவல்லியேகினார்கள்மாலெழுவார்தமைத்தடுக்கவல்லார்யாரோ. (௩௭)

வேறு. பெருகியவன்பின்மாதர்பிறங்கிருங்கூந்தருழ
வுருகியமனத்தராகியோடும்போதொருத்திதன்னைக்
கருகியசினத்தளாகியவளன்னைகடிதினெய்தி
யிருகரம்பிடித்தலோடுமெய்துமாறறியாளாகி.

நந்தன்றன்மைந்தன்பாதநலன்கனிநினைந்துநைந்த
சிந்தையருடலினாவியரியடிசேரநேரி
லந்தரத்தமரர்பூவின்மாரிகள்பொழியவான்ற
சுந்தரவிமானமேறித்துலங்கியகெதியிற்புக்காள். (௩௯)

செந்தமிழ்வளர்த்தெண்ணில்லாவருந்தவஞ்செய்தோராலுங்
கந்தமாமலரோனாலுங்காண்கிலாச்சோதிபாதஞ்
சிந்தனைசெய்யச்சிந்தைசிந்தையந்தியளாய்ச்சீரா
யுந்துநற்கதியைச்சேர்ந்தாளவளல்லாரோடிச்சென்றார். (௪௦)

வேறு. காலிலணிநூபுரத்தைக்கையிற்பூட்டிக் கரத்தினுறுமணிக்கடகந்தாளினிட்டார், நூலிடையின்மேகலையைக்கழுத்திற்சாத்தினண்டினையினாவடமருங்கிற்சேர்த்தார், கோலமுறுபொன்னுடைதலையிற்சூட்டிக்குழலிலணிதொடைகளெல்லாமரையிற்சூழ்ந்தார், மாலுறவேயின்னதென்றுமறியாதோடிமணிவண்ணன்மேனிகண்டுமயங்கினாரால். (௪௧)

அலர்ந்தெழுந்ததாமரையின்மதுவையுண்ணவவாவுடனேயளியினங்களடைவபோல, நலந்திகழுந்திருமேனியையன்கைகால்நயனமுகம்வாய்மார்பில்நாட்டம்வைத்தே, தலந்தியழும்பிரசமுறுமீய்கள்போலத்தழைந்தனர்கள்பொன்னுடைதறையின்வீழ, வுலர்ந்தயர்மின்னார்களிருகைகள்கூப்பி யுத்தமவெம்மயல்தீரொன்றுணர்க்கவுற்றார். (௪௨)

புன்முறுவலாலாவிதளர்ந்தோநின்றன்புருவநெறிப்பால்மயலைப்போத
ப்பெற்றேம், நின்மலநின்கடைக்கண்ணினேக்கினலேநிலையழிந்தோமெம்மு
யிர்கள்நிற்கும்வண்ண, முன்மணிமார்பழுந்தவெம்மையணைத் தியென்றேயுரை
த்திடவேயோரொருத்திக்கொருத்தனென்ன, மன்மதனாகியவுருவமநேகமா
கிமாதர்கடந்தோளணைந்தான்மாயன்மாதோ. (௪௩)

இருளளகமவிழமலர்கமழவேர்வினெழில்வதனமுத்தரும்பவிருகைமீதிற்
சரிவளைகளொலித்திடநன்மணியால்மின்னுஞ் சதங்கையவிர்பரிபுரங்கடாளி
னார்ப்ப,வரையெனவேகதித் ததனத்தங்கராகம்வாசமுறுகுங்குமமுமுதிரவை
வேல், பொருகயல்களெனுநயனம்பூசலாடப் போர்மதனாணவணைத்தருளி
னானல். (௪௪)

உருவுடையவுருப்பசிமேனகையரம்பை யொப்பிலாராயர்தங்கள்மடவா
ராகித், தரையிடையிற்பிறந்திலம்யாமென்றுநைந்துதளர்ந்துமதனேவுமலர்ச்
சாயகத்தால், விரகமுறவாடினர்கள்பொதுவர்மாதர் விளங்கினர்கள்கல்வியு
றுமதனால்மிக்குப், பெருமையுறுமானந்தவாங்காரங்கள் பெருகிடலுமறைந்த
னனற்பிரமன்றுதை. (௪௫)

மறைந்ததனங்கண்டுபின்னுமிழந்தார்போல மதிமயங்கிவாய்வெருவிவா
டினார்கள், நிறைந்தபொழில்வனமடங்கத் தேடினார்கள்நிலமிசையிற்காண்கி
லிராய்நொடிதுநேர, மிறந்தவர்போற்சோர்ந்தனர்களெழுந்தார்மீள விறைவ
வெம்மையிகழ்ந்தனையோவகன்றுயென்றே, யறைந்தனர்களலியிருதனத்தி
ன் வீழவரிவையர்களெல்லாருமயர்ந்துசொல்வார். (௪௬)

சரிகுழன்மேல்மலர்த்தெரியல்சூட்டினையேதுணைமுலைமேற்றொய்யிறனை
யெழுதினையே, தரளவடமார்பழுந்தத்தழுவினையே சரியிலாவாயமிர்தின்சு
வைதந்தாயே, பிரிகிலேனுனையென்றுபேசினையேபிறிதில்லையுனக்குநிகராமொ
ன்றுயே, யிரவிடையிற்றனித்தெமைவிட் டேகினையே யென்றுசொல்லுமாதர்
பின்னரிவைசெய்தாரால். (௪௭)

இளமையுறுமொருத் தியுயரரிபோல்நின்றேயிலங்குமயிற்பீலிசிரந்திகழ
வாயின், துளைகளுறுவேயினிசையூதக்கேட் டதோகையர்களிருமருங்குமுன்
னுஞ்சூழ்ந்து, விளையுமயறீரவெம்மையணைத்தியென்றும் வித்துருமவாயமுத
மளித்தியென்றும், வளைகடிகழ்காமுறத்தான்றழுவிமாயனல்லனிவள்மங்கை
யெனமயங்கிச்சொல்வார். (௪௮)

தூதுரைத்துவருவதற்குச்செல்வாரில்லை தோகையரையேவிவிடிலெமக்
குமுன்ன, மாதரவாயவனெழிலைக்கண்டபோதங்கணைத்திடுவர்மீள்வதில்லைய
துவுமன்றிச், சீதளமாங்கியமதியுந்தென்றலுநந்தீ யெனவேவீசியிடச்செய்வ
காமேனன், மாதவன்றுன்மறைந்தவனும்வாரானென்றுமயங்கியிடமாமாயனி
வைசெய்தானல். (௪௯)

மானவனுங்கொருத்தியுடனெய்தியுன்மேல்மயல்மிகுத்தேனென்றுமலர் பறித்துச்சூட்டிக், கானினடந்தேகால்கள்நொந்ததென்றுகழறுமவடனைச்சும ந்துகடிதேக, மீனைநகுவிழிக்கவின்கொளெனக்குநேராமெல்லியர்களில்லை யென்றேயாங்காரந்தா, னவளைவிட்டொருவவவளுஞ்சோர்ந்தாளரிதனைத் தாமாய்ச்சியர்கடேடினரால். (௫௦)

மடந்தையர்கள்வனங்களெங்குந்திருவியோடி வாடிமனம்வருந்துமவர் வண்மையாகிப், படர்ந்தகொடியங்குசம்பங்கயமிலங்கும் பரமன்றாட்குறிக ண்டார்பணிந்துசென்று, தொடர்ந்திடலும்பசும்புல்லாற்றோன்றாதாகத்துள ங்கிமிகச்சோர்ந்தவர்களெழுந்துகண்ண, னடந்திடவேவசுதைமின்னினுரோ மமாகிநலந்திகழப்பொடித்தனவோவென்றுனைந்தார். (௫௧)

அடியெடுத்துத்தொடருமடவார்கள்மற்றோ ராயிழையாணடந்தேகுமடி யைக்கண்டே, யுடல்கனன்றிங்கெம்மையெல்லாமொருவிக்கண்ண னொருத் தியைக்கொண்டேகினனென்றுரைத்துப்பின்னர், கொடியிடையாளடிச்சுவ டுகாணார்மாயன் கோலமலர்த்தாளழுந்துங்குறியைக்கண்டு, வடிவுடையான் மற்றவளைச்சுமந்துசென்றானெனத்தம்மனமுருகிவாடினரால். (௫௨)

தோகையர்கள்நம்மையெல்லாநீத்துக் கண்ணன்றுடியிடையாளொருத் தியினைச்சுமந்துபாரி, னேகினனாலென்றிரங்கியடியின்பின்னரெய்துமவரிளங் கொடிக்கங்கிறைவனன்பால், நாகமலர்செறிந்திருண்டகுழன்மேற்சூடிநலந் திகழவிருந்தபள்ளியறிந்துனைந்தே, யாகமெலிந்திவளென்ன தவஞ்செய்தா ளென்றறையுமவரழுதாற்றுமவளைக்கண்டார். (௫௩)

என்னையிங்குடறளர்ந்தேயிரங்குமாறென் றிளங்கொடியாருரைத்திட லுமியம்புவாளாற், றன்னேரிலாதவரியென்னோடெய்தித் தையனல்லாயுன்ம யலிறறளர்ந்தேனென்றும், புன்னாகமலர்பறித்தென்குழலமேற்சூட்டிப்புயல ழகனெனைச்சுமந்துசென்றுகானி, னென்னாகமெலிந்திடத்தானகன்றுபோனா னென்செய்கேன்றோழியர்காளென்றுனைந்தாள். (௫௪)

அவளுடனுமாதரெல்லாமடியின்பின்னரடவியெல் லாந்துருவல்புரிந்தா ண்டுங்காணார், தவளமணல்மலியமுனாநதியிற்சேர்ந்துதளர்ந்தவர்கள்கூடல் வனைத்தாவிநைந்தே, துவளுமவர்முன்னீலமேகமென்னத் துலங்குமணித்தா வடங்கள்மார்பிற்றோன்றப், பவளநிகர்வாயினிளமுறுவல்செய்துபரமபுருட ன்றோன்றப்பணிசெய்தாரால். (௫௫)

பணிந்தெழுந்தமடவார்கள்சொங்கை மீதிற்பரிமளநற்சந்தனகஸ்தூரி வாங்கி, யணிந்தனர்களச்சுதன்றன்மேனியெல்லாம வரவர்க்காண்டொருவ னெனவனந்தம்பேராய், மணந்துதையமிளிர்மலர்கள்குழல்மேற்சூட்டிமணி சூழ்ந்தமரகதம்போற்காவைச்சேர்ந்து, தணிந்திடநற்கலவிதனைத்தினமுஞ் செய்தான்றுனைவற்றளகப்படாத்தலைவன்றானே. (௫௬)

வண்டமரும்பூங்குழலார்மகிழ்ந்துசுற்றமதனனெனவிலங்கியெழிற்கரத்திலேலே, செண்டுகொண்டுவிளையாடிக் குரவைகோத்துச்சிறந்தெழுந்த பொன்னூசலாடவாடி, யண்டரெல் லாந்திரண்டுமலர்பொழிய வோங்குமங்தரதுந்துமிமுழங்கப்பணில்மார்ப்ப, வெண்டவர்களானந்தவாரிசேரவேத்திடவேயினிதின்மகிழ்ந்திருந்தநாளின். (௬௭)

குழலூதுபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௧௪௩.

௪௩. வது — அம்பிகாவனப்படலம்.

சேராதிருவிக்கிரமாதிகழ், மாதவாமதுசூதனனேயுயர்
யாதவாவெனவேத்தடியார்கடம், பாதகூளிதத்தாற்பவந்தீருமே. (௧)

இம்பர்மாவனத்தேவியல்பாயது, செம்பொனூர்மதிட்கூடலஞ்சிறந்தது
நம்பர்வாழுநற்கோயிலிலங்கிய, அம்பிகாவனமென்பதோராலயம். (௨)

தரணிமேவுஞ்சரசுவதியென, வுரைசெய்யாறமந்தாகினியொப்பது
கரையின்வாளைகள்பாய்ந்திடக்கற்பக, நிரைகணிடுநெடும்பொழில்சான்றது. (௩)

ஆகுவாகனனன்பினமர்ந்தது, தோகைமாமயிறசண்முகன்சூழ்ந்தது
நாகவானுறைமானகர்போன்றது, நாகம்பூண்டடிச்சவன்வாழ்பதி. (௪)

சாதநான்மறையோர்தன்னிச்சார்ந்திட, விரதமாதவர்சூழ்ந்துவிளங்கவே
துரிதம்வீழத்துவசமுமேறியே, யிரதமோடுவிழாவுமணைய்தி. (௫)

ஆசைதோறமவனியுளோரெலாங், காசுலாமுலைமாதர்களித்திட
வாசமாமலர்சூழ்பொழில்வானுறு, மீசன்வாழம்பிகாவனதெய்தினர். (௬)

அந்தநாட்டனில்லாயர்கள்சூழ்ந்திட, நந்தசோபனகோதைநலங்கிளர் [தனர்.
மைந்தன்பால்வண்ணன்மாதர்களினபுறஞ்,சிந்தையோடம்பிகாவனஞ்சேர்ந்

பம்பைபேரிபணவமுழங்கிடக், கொம்புகாகளங்கோடுதழங்கிட
வும்பர்மாமலர்சிந்திடவோடிய, வம்பிகாவனத்தம்பிகைபாகன்றோ. (௮)

சித்தர்போற்றிடத்தேவர்களாடநற், பத்தரானந்தமாகிப்பரந்திட
வித்தகன்விடையேறியருளிய, சுத்தனன்பொழிற்கோயிறுலங்கினன். (௯)

கற்றைவார்சடையிற்கங்கைதோன்றிட, வொற்றைமான்மழுக்கையனுயர்வே
பற்றலார்புரம்வெந்திடப்பார்த்தோனிர், வெற்றியாமிறைவீற்றிருந்தானரோ.

தூபமெய்குநிறைந்திடத்தூயதாங், தீபமாதர்களேந்திச்சிறந்திடச்
சாயமேவனாயாக்கியதானுவைப், பாவம்வீயப்பணிந்தனராயரோ. (௧௧)

வாசமாமலர்மாலைநிறைந்திடத், தூசுமாமணமல்கச்சுகந்தமு
மீசன்மேனியிலங்கிடச்சாத்தியே, ஆசில்பூசனைசெய்தருச்சித்தனர். (௧௨)

இம்பராயர்கணந்தனொடெண்ணிலா, ரெம்பராவெனவேத்தியின்புற்றவர்
நம்பர்பாதம்பணிந்துநலனுறும், அம்பிகாமலர்த்தாளிலர்ச்சித்தனர். (௧௩)

பருதிமேற்றிசையுற்றிருள்பாய்ந்திட, வரிவைமாரண்டரன்னமருந்தியே
யிரவிடைத்துயில்போதெழில்நந்தனை, யரவுபற்றிவிழுங்கியதாமரோ. (௧௪)

வேறு. நள்ளிருளதனிலெய்திநந்தனைநாகம்பற்றி
முள்ளெயிறதனாற்கவ்விவிழுங்கலுமுறையோவென்னப்
பள்ளிகொள்ளாயரெல்லாம்பதைத்தெழுந்தனர்களோடிக்
கொள்ளிகொண்டரவைச்சூழ்ந்துசுட்டனர்குழாங்களாகி. (௧௫)

கதித்தவெங்கொள்ளிகொண்டுகடிதினிற்சுட்டபோது
பதைத்திலநந்தன்றன்னைவிட்டிலபகுவாய்வெந்தீக்
கொதித்திடவிழுங்கும்பாம்பைக்குறுகிநற்கண்ணன்காலா
லுதைத்தலுமவனைவிட்டேயுரகமாமுருவைநீங்கி. (௧௬)

இலங்கியகிரீடந்தோன்றவெழில்மதனிவனாமென்னக்
கலன்களும்வயங்கப்பொன்னின்கலிங்கமுநடுவிற்சூழ்ந்து
துலங்கியேநின்றான்றன்னைச்சுந்தரனினிதுநோக்கி
நலன்கொளும்படிவினாய்நீயாரெனநவிலலுற்றான். (௧௭)

ஏசிலாமரபின்விஞ்சும்வித்தியாதரர்க்குளேயான்
மாசிலாநாமமேசுதெரிசனனென்பேர்வானி
னாசையோரொட்டுந்தூயவிமானமேலமரவெய்தித்
தூசுநாண்மாலையாரந்துலங்கியான்றிரியுநாளின். (௧௮)

அருந்தவனங்கிராவின்றனையராங்கீரனென்னும்
பெருந்தவத்தினனாயென்மெய்க்கவினுறும்பெருமையாலே
யிருந்தவர்முனரினீயிர்குரூபனென்றெள்கல்கூறத்
திருந்தியமறைகொளுவர்சிகியெனச்சினத்தாரன்றே. (௧௯)

எம்மைநீகுரூபனென்றீண்டெள்குமுன்கொடுமையாலே
வெம்மைசேரரவமாகிமேதினிவீழ்வாயென்று
மும்மையாங்காலமெல்லாமுணர்ந்திடுமுனிவராய
செம்மையோர்சபிக்கவேயான்சிகியுமிழ்புயங்கமானேன். (௨௦)

தரணியிற்கருங்கல்லானுடன்னைமுன்னுருவமாக்குந்
திருவடிமெய்யைத்தீண்டலுற்றனன்வினைகள்தீர
அரவமாமுருவையோவியமரரிலுயர்ந்தேனைய
பரமனேபோற்றியென்றுவலஞ்செய்துபணிந்துபோனான். (௨௧)

ஆயவன்வணங்கித்தூயவிமானமீதெய்தலாலே
தூயனாநந்தகோபன்சுதன்றனைத்தழீஇயின்புற்றா
னாயர்களெல்லாமீண்டுந்துயின்றனரவனிமீதிற்
பாயிருளொருவும்பர்பனிமதியெழுந்ததன்றே. (௨௨)

தூயவான்மிசையினிர்ந்துதுலங்கிடவிராமனோடு
மாயவனுருவமெய்திவாயின்வேயினிதினூதி
ஆயர்கள்மாதரெல்லாமனமமர்ந்தபோதளகையின்கட்
டயனுஞ்சங்கசூடன்சேர்ந்தவண்கரந்துநின்றான். (௨௩)

சீலமில்சங்கசூடனென்றவன்றிருடனாகிக்
கோலமாமடந்தைமாரினொருத்தியைப்பற்றிக்கொண்டு
ஞாலமீதோடலோடுநன்னுதலரற்றக்கேட்டுச்
சாலம்வேருடனேவாங்கித்தாலகேதனனுஞ்சென்றான். (௨௪)

தாலகேதனன்மாச்சாலஞ்சுழற்றியேசார்தல்கண்டாண்
டாலமேயனையசங்கசூடனுமவனைத்தந்து
காலினிலோடலோடுங்கருமுகில்வண்ணன்சென்று
சீலமேயிலானைக்கையான்மோதலுஞ்சிதைந்துவீழ்ந்தான். (௨௫)

அவனுயர்சிரத்திற்றோன்றுமாதவனவிளையான்ற
நவமணிதன்னைவாங்கிநாரணன்முன்னோனுக்கே
யுவகையினீய்ந்தபின்னரொள்ளியவேயையூதிக்
குவிமுலைமாதரோடுங்கூடியேகளிக்கும்போழ்தின். (௨௬)

செறியிருளொருவக்கீழ்பாற்றினகரனுதையமாக
வெறிகமழ்சோலைசூழ்ந்தவம்பிகாவனமேவாது
நறுமலர்க்குழலினாருமசோதையுநந்தன்றானு
மிறைவனுமெழில்விருந்தாவனத்திடையெய்தினாரால். (௨௭)

ஆனுடன்குழவைகுமாயர்கள்பதியிற்சென்று
தேனமர்பொழில்கடோறுந்திகழ்நதித்துறைகடோறு
மீனிடைவிண்ணிலிந்துவிளங்குதல்போல்வேயூதி
மானனையார்களொடுமால்மகிழ்ந்துறையும்நாளின். (௨௮)

அம்பிகாவனப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௧௭௧.

---

௪௪. வது — நப்பின்னைப்படலம்.

கதலிபூகங்கழைவிளைசெந்நெல்சூழ்
மதில்பிறங்கமணிதிகழ்கோபுர
மிதுலையின்கணின்விஞ்சியகும்பகன்
புதல்விநாயகன்பொன்னடிபோற்றுவாம். (௧)

மாதவத்தினசோதைமுன்னோன்மனத்
தீதகற்றியகும்பகன்சீர்மையான்
மேதினிக்குள்விளங்குமிதுலையா
மேதமற்றபதியினிருப்பவன். (௨)

திருந்துநான்மறையோர்மகிழ்செம்மையான்
பெருந்தவத்தினரெண்ணும்பெருமையான்
றெரிந்தஞானத்தன்செய்ததவத்தினாற்
பொருந்துசெல்வத்தளகைமன்போலுவான். (௩.)

ஆயவன்செய்யரியதவத்தினால்
மாயவன்றிருமார்பினின்வைகிய
நாயகிக்குநிகரெனுநன்னுத
றாயநப்பின்னையென்பவடோன்றினாள். (௪)

வளையும்விற்கணைவள்ளையொடாம்பல்சேர்
நளினம்போற்றிகழ்நல்வதனத்தினா
டுளையிலாரந்துகிரிடைச்சேர்த்தபோ
லளவில்வண்மையடைந்திடுமூரலாள். (௫)

கழைகொடோளினற்காந்தளின்கையினா
ளிழைகொள்மெல்லிடையாளெழிலில்லவள்
மழைகொள்மேகக்கருங்குழல்வண்டுக
ளிழையும்வண்கமலத்தெழிற்பாதத்தாள். (௬)

பேதைநீங்கிப்பெதும்பைப்பருவத்திற்
கோதைதன்மகளாயுயர்கும்பகன்
வேதியர்க்களித்தேமிகுதானங்கள்
மாதவத்தினன்வாழ்கின்றநாட்டினில். (௭)

காலநேமிதனையர்கள்காய்சினத்
தாலமாயவெழுவரவணியிற்
கோலமாகியகும்பகனாவினி
னீலமேகவிடையெனநின்றனர். (௮)

நடக்கிலெண்டிசைமுற்றுநடுங்குமாற்
படுக்கிற்சேடன்பணங்கள்வளைக்குமால்
மடக்குவார்களைச்செற்றுமரங்களை
யொடிக்குங்காலிட்டுகைந்துகெற்சிக்குமால். (௯)

இன்னதாயவிடபங்களேழையு
மன்னநன்மிதிலைக்கரசாகிய
மன்னவன்வெகுலாசுவன்வண்மையான்
கொன்மினென்றுதன்சேனைக்குக்கூறினான். (௧௦)

அரசன்கூறவடைந்தவநீகினி
பரவியெங்கணும்பாசம்விட்டேயெறிந்
திருகரத்தினுமாயுதமேந்தினீ
டரணியிற்றிரிசேக்களைத்தாக்கினார். (௧௧)

வாலெடுத்தெதிர்வாய்கொடுசெற்சித்துக்
சாலெடுத்துத்துகைத்துக்கடுகித்தம்
பாலெடுத்தவரைக்கொம்பிற்பாயவே
வேலெடுத்தகைவீரர்கள்மாண்டனர். (௧௨)

மாயும்வீரரைக்கண்டுமிதிலைமன்
றூயகும்பகன்றன்னுடன்சொல்லுவான்
பாயுமாவிடையேழையும்பற்றியே
நீயகற்றுதியென்றுநிகழ்த்தினான். (௧௩)

கொம்பினாற்கொலைசெய்விடையேழையு
மம்பின்வாளினடர்ந்தெறிபாசத்தி
னிம்பரின்வதைத்தாருக்கென்மங்கையைக்
கும்பகன்றருவேனெனக்கூறினான். (௧௪)

நடையினோதிமநாணநன்னூலையே
விடையள்மெல்லியறன்னெதிற்காகவே
கடுகியாண்டடர்ந்தாரகம்விஞ்சிய
விடையினாற்றறைவீழ்ந்துமடிந்தனர். (௧௫)

சிந்தைநொந்துதியங்கியகும்பக
னிந்தவெவ்விடையேழையுஞ்செற்றிட
நந்தன்மைந்தரொடுநண்ணுவாயென
முந்துதூதரையேவிமுடுக்கினான். (௧௬)

தூயகும்பகன்தூதர்கள்சொல்லினு
லாயர்சூழவருள்செறிநந்தனு
மாயனும்மதிவண்ணனுநன்னெறி
சாய்விலாமிதிலாபுரிசார்ந்தனர். (௧௭)

தூதர்நந்தன்வரவினைச்சொல்லலுந்
தீதகற்றியகும்பகன்சென்றெதி
ராதரத்தினரத்தனைவோரையு
மேதமற்றதன்னில்லிற்கொண்டேகினான். (௧௮)

ஆசிலாதவறுசுவையோதனம்
நேசமோடளித்தேநிறைசந்தனம்
பூசிநற்பொனினுடைகளீய்ந்துதண்
வாசநாண்மலர்மாலைவழங்கினான். (௧௧)

ஏறுமாவனையேழெழுந்தன
சீறியீண்டெதிர்ந்தாரைச்சிதைத்தமை
கூறிநொந்திடுகும்பகன்றன்னொடு
மாறிலாநந்தன்மைந்தனியம்புவான். (௨0)

கொடியவெள்ளிடபங்களைக்கொன்றுநின்
னிடரகற்றுவனென்றுமுன்னோனுடன்
கடுமையிற்சென்றகண்ணபிரானந்த
விடைகள்மேலடர்ந்தான்வெகுண்டேயரோ. (உக)

கடியவெவ்விடையேழுங்கனலுறக்
கொடியகண்களினோக்கிக்குரலினொ
லிடிகளஞ்சவதிர்த்தங்கெதிரிலா
விடமெனப்பரந்தேதுள்ளிமேல்வர. (உஉ)

வாலினைப்பற்றிச்சுற்றியும்வந்தடர்
காலினைப்பற்றிக்கல்லொடுதாக்கியு
மாலமொத்தங்கடர்விடையேழையுங்
காலனொத்துக்கடிதினிற்செற்றனன். (உ௩)

அந்தரந்தனிற்றுந்துமியார்த்தன
நந்தொலித்தனநான்மலரெங்குமே
சிந்தியாடினர்தேவர்கள்சீறிய
வெந்தைவல்லதியாவர்வல்லாரென்றே. (உ௪)

ஒப்பிலேழ்விடையைச்செற்றொலித்திடு
மப்பின்மீத்துயிலையன்றன்றோளினிற்
றுப்புநாற்கொம்புபோலத்துலங்கிய
நப்பினைத்திருநற்றொடையிட்டனள். (உ௫)

அண்டமுண்டருளாரியன்றன்னுடன்
கெண்டையங்கண்கிளிமொழிநப்பினை
மண்டபத்தினமர்ந்துவயங்கிட
வெண்டவத்தினர்வேதியரெய்தினார். (உ௬)

அங்கியின்னிறையாகுதிபெய்தனர்
சங்குபேரிதழங்கிடச்சாகைமா
நங்கைநப்பினைநற்கந்தரத்தினிற்
செங்கைமங்கலநாண்செறித்தானரோ. (உ௭)

மற்றுமாகுதிசெய்துவலமுறச்
சுற்றித்தேயுவைத்தூய்மலர்த்தாளிறை
பற்றவம்மிமிதித்துப்பல்லாண்டெழ
வுற்றுநோக்கினரும்பருந்ததி. (உ௮)

தூயநந்தன்றுணைமலர்த்தாளின்மேல்
மாயநப்பினையோடுவணங்கவச்
சேயைமார்பினிற்சேர்த்தித்தழுவிட
வாயர்நோக்கியகமகிழ்ந்தாரரோ. (உ௯)

யீசனப்பின்னைதன்னுடனின்புற்
மாசிலன்னமருந்திமகிழ்ந்தன
னூசினற்கலனூற்பதினாயிரந்
தூசுமீய்ந்தனன்றூயமன்கும்பகன். (௩௦)

மாயனப்பின்னைதன்னுடன்மாமணித்
தூயதேர்மிசைதோன்றவலாயுத
னுயர்ந்தனோடந்தகரோவிப்போய்ச்
சாய்விலாநெறிதாம்விரைந்தேகினார். (௩௧)

தேரின்மீதிற்சிறந்திடவேறியே
யேருறும்விருந்தாவனத்தெய்தினந்
தாரைசின்னம்பணிலந்தழங்கிட
மாரனென்னமனைபுகுந்தானரோ. (௩௨)

உருகுசிந்தையசோதையுரோகணி
யருகுசென்றடிதாழ்ந்திடவன்பினால்
மருகிதன்னொடுமைந்தனையார்வமுற்
றிருகையினணைத்தேயின்பமெய்தினார். (௩௩)

ஆயநப்பின்னையோடுதுலங்கிய
மாயவன்றனக்குப்பின்னுமானக
ராயர்நல்கியவாயிரமாதரை
நேயமோடளித்தன்புநிறைந்தனர். (௩௪)

கமலநீலையிராதைமந்தாரகை
சமனில்பாலிகைசந்திரிகையெழி
லமையுமெய்யிந்துவல்லியளப்பிலாக்
கமைகொளாய்ச்சியர்தோளணைந்தான்கண்ணன். (௩௫)

வண்ணமார்கலன்மார்பின்வயங்கிடக்
கண்ணனன்மதனுணுங்கவினுற
வெண்ணின்மங்கையரோடின்பமெய்தியே
மண்ணின்மீதுமகிழ்திருநாடனின். (௩௬)

நப்பின்னைப்படலமுற்றிற்று.

ஆ_திருவிருத்தம் - ௩௨௦௭.

௪௫. வது—அரிட்டாசுரப்படலம்.

அரிகேசவனுயர்மாதவனருளாளன்முகுந்தன்
திருநாயகன்மதுசூதனன்திருவிக்கிரமன்மா
நரகாசுரன்றனைச்செற்றவனாராயணன்மாயன்
கரிவீடுறவருள்செய்யிறைபுகழேகழறுமினே. (௧)

அலவாயுதமெடுப்போன்மிகவழன்றோர்கையிறபுடைப்ப
மலைபோலுயர்பெலம்பாசுரன்மடிந்தானெனக்கேட்டுப்
புலையேயுறுகஞ்சன்சினமெழவேபுகையுயிரா
யலைவீசியகடலாமெனநகைத்தானனல்பிறங்க. (௨)

கோரம்முறுமரிட்டாசுரன்கொடியோன்றிறற்கேசி
சோரன்சகடவியோமனனிவர்தன்னுடன்சொல்வா
னாரம்முறுவிருந்தாவனத்தாயன்மகன்றன்னை
நீர்சென்றினித்தெறுமின்னெனவிடுத்தானெருப்புயிர்ப்பான். (௩)

அரசன்சொலவரிட்டாசுரனழன்றேயொருவிடையாய்த்
தரையெங்கணுமலையக்குரம்பெயர்த்துத்தழலுறமால்
வரையொத்துயர்வாலாணிவர்கொம்பால்வளைமுகில்க
ளிரியக்கடுவிடமாமெனவெழுந்தான்சுரரிடைய. (௪)

மலையாமெனவெரினின்மிசைவான்மைமுகில்மொய்ப்பத்
தலைமேலுறுமிருகொம்புகள்சாலம்மெனவுயர
வுலகேழுறுகுரலோசையிற்கருப்பங்களுமுடைய
நிலமீதினினுயர்மேருவைநிகர்த்தேயெதிர்ந்தனனால். (௫)

ஆயோர்கடுவிடத்தாலலையிமையோரெனவஞ்சி
மாயாவுனக்கபயம்மெனமலர்த்தாள்மிசைவிழுந்தார்
தூயோனொருதோழன்னுயர்தோள்மேற்கரம்வைத்தே
தீயோன்வருசெயனோக்கினன்சிரித்தேயெதிர்நின்றான். (௬)

மதியாதெதிர்நின்றானெனவரையாமெனவருவான்
கொதியாவிடிவெருவக்குரலுறவாண்டடர்ந்திடலுந்
ததிதேடியவிறைகொம்பினைப்பிடித்தேயுறத்தள்ளப்
பதினேழடிபின்னுற்றுவிழுந்தானுடல்பதைத்தே. (௭)

பதைத்தேபினெழுந்தானிலனுயரும்பருப்பதம்போற்
கொதித்தேயெதிர்நடந்தான்றனையிருகொம்பையும்பற்றி
யுதைத்தேயிருநிலத்தின்மிசையுறத்தள்ளினனுரத்தின்
மிதித்தானிறையரிட்டாசுரன்வீழ்ந்தானுயிர்மாய்ந்தே. (௮)

வாயாலெழுகுருதிப்புனலாறாயெழமாண்டான்
றீயேநிகரரிட்டாசுரன்றேவாதிகடிரண்டே
யோயாமலர்பொழிந்தேத்தினருயர்துந்துமிமுழங்க
ஆயோர்திரடுதித்தாடினரையன்புகழ்பாடி. (௯)

வேறு. மாயோனையன்பின்மணிமார்பணைத்துமகிழ்ந்தகோபனிலகத்
தாயாமசோதைமணிவண்ணனானதனையன்றனைத்தழுவவே
தூயோயென்றுயர்திரள்மாதர்வந்துதுதிசெய்துநின்றுதொழவச்
சேயோன்விளங்கிமனைமேவியின்பமுறவாழ்தினத்தினொருநாள். (௧௦)

அரிட்டாசுரப்படலமுற்றிற்று. ஆ திருவிருத்தம் - ௩௨௧௭.

ஆயன்முகுந்தனருளாளனாதியமரோர்தமக்குமுதல்வன்
றூயன்கராவைவதைசெய்துதந்திதுனியைத்துடைத்தபரமன்
மாயன்முராரியுலகேழுமுண்டமணிவண்ணனெந்தைவிசைய
னேயன்புராரியிடரைத்தவிர்த்தநெடுமாலினைத்துதிசெய்வாம். (௧)

கொடிதாயகஞ்சன்விடவேயதிர்ந்துவருகேசிவெங்குரகத
வடிவாகிமேருவரைபோல்நிமிர்ந்தவெரிநல்விண்மங்குலிரிய
வடியாலநந்தன்முடிதானடுங்கவனலாகுகண்கள்பெரிதாய்க்
கடல்போலிரைந்துகடிவாய்திறந்துகருமேகமென்னவரவே. (௨)

பரியாகிவந்துகொடியோனடர்ந்துவரவாயர்தங்கள்பதிவிட்
டிரிவோரையஞ்சலெனவோதிமாயனெதிரேநடந்துசெலவெண்
ணுரைவாயின்வீழவிடிபோலதிர்ந்துநொடியாகுமுன்பினுயரு
மிருகாலின்மார்பின்விசையோடுதைப்பவிறைதப்பிநின்றிதுசெய்தான். (௩)

உரமீதுதைத்தவிருகாலையோர்கையுறவேபிடித்துவிசையால்
விரிவானவானின்மிசைவீசலோடுமொருநூறுவிற்கடையுயர்ந்
திருமாநிலத்தின்விழலோடுமாவ்பதையாவெழுந்ததனையி
னுருமேறுபோலவதிராவெதிர்ந்துவருகேசிமால்முனுறவே. (௪)

வன்மீகமுற்றவரவாகுமென்னவருமாவின்வாயினிடையே
தன்மாகரத்தைநுழையப்பெருத்ததடிபோலகட்டுளடர
நன்மாவினுக்கவுயர்பல்லொடிந்துநெறியைந்துநாலுமடையாய்ப்
பொன்மானகர்க்குளுயிர்போனகேசிபுவிமீதுருண்டுவிழவே. (௫)

வரைபோலுருண்டுவிழுகேசிவாயினிடைபோயவற்றுள்மிடையுந்
திருமால்கைமீளவருபோதிரத்தநதியோடவேதிசைதொறும்
அருமாதவத்தரயிராணிகேள்வனயனோடுதூயமலரே
சொரிவார்துதித்துநனிவாழியென்றுசுரரோடும்வானினுறவே. (௬)

வேறு. நந்தனுமசோதையுங்கடிதினண்ணித்தம்
மைந்தனையணைத்தனர்மார்பினுரவே
சிந்தையின்மகிழ்ந்துரோகணிதன்சேயையு
மிந்திரைகேள்வன்முனிருந்தநாட்டினில். (௭)

கேசிவதைப்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௩௨௨௪.

௪௭. வது—வியோமனப்படலம்.

வேலிணைவிழியினார்கலவிவெஃகிநீர்
காலதூதுவர்கள்வந்தடையுமுன்கரி
யோலமென்றழைத்திடவுற்றகொற்றவன்
கோலமேநினைந்துய்மின்கூற்றன்பாறவே. (௧)

மாயனுமுன்னவன்றானுமற்றுள
வாயர்கள்மைந்தருமாவின்கூட்டங்கள்
மேயவெங்கானிடைவிண்ணிறோங்கிய
ஆயதோர்காவினிற்றுலங்கித்தோன்றினார். (௨)

மாயவனரசன்மந்திரியலாயுதன்
றீயதிருமனற்சேனைக்காவல
னையர்கள்சிலர்களுஞ்சோரராஞ்சிலர்
ஆயசேனையர்சிலராகித்தோன்றினார். (௩)

மையெடுத்தோடியேமறஞ்செய்சோரரைக்
கையினைக்கட்டுமின்காலைவாங்குமி
னெய்யுமின்குத்துமினிவர்கடஞ்சிரங்
கொய்யுமினென்றிவைகூறுவார்பலர். (௪)

பசியினுக்கசந்தனையெடுத்துப்பற்றினோர்
தசையுமக்கருந்துதற்கிடுதுந்தந்தெனா
விசையுநீரொன்றவர்கரத்தையெற்றியே
விசையுடனோடுவார்கைப்பர்மீளுவர். (௫)

அரசனுக்காடிரண்டதனிரட்டியாண்
டுரைசெயுமந்திரிதனக்குநூறுமிவ்
வரிசையாய்மறிக்குறிதருவம்வம்மெனாச்
சரசமாய்த்தாம்விளையாடுங்காலையின். (௬)

கயவனாங்கஞ்சனேவிடக்கனன்றுவெம்
மயன்மகன்வியோமனனுருவமாறியே
யுயரரியுறைவனத்தவரொடொன்றியே
யயமெலாமுழையினுளொடுத்தடைத்தனன். (௭)

மையெனத்திரிதருமைந்தர்தங்களை
வெய்யவன்முழையினுள்விடுத்ததன்மையை
அய்யனாண்டறிந்தவனாக்கையைத்தழீஇக்
கையினைப்பிடித்துநீகள்வனென்றனன். (௮)

கையினைவிடுதியான்கள்வனன்றென்று
பொய்யினைப்புகலலும்புனிதன்விட்டிலன்
மெய்வரையெனவுயர்விண்ணிறோங்கினா
னையனங்கவனுரத்தடிக்கமாண்டனன். (௯)

வியோமனன்மண்மிசைவீழ்ந்துமாண்டபி
னியாழமர்பூட்டொலிநிறையத்தேவர்கள்
வியாளமேனடித்தருள்விமலவித்தகத்
தயாளுவேயென்றுதண்மலர்சொரிந்தனர். (௧௦)

தீயவன்றுணைவரைச்சேர்த்தமாபெல
வாயினிற்கல்லினைவாங்கிவாயினுற்
றூயவனழைத்திடத்துன்பமோவிட
வாயர்தம்பதியினுனிரையொடெய்தினன். (௧௧)

வஞ்சகவியோமனன்மடிதல்கேட்டனர்
நெஞ்சினில்மகிழ்ந்துதாய்தந்தைநந்திமெய்
விஞ்சியவுரோகணிவிரைவினெய்தியே
மஞ்சனையணைத்துத்தாமுவந்துவாழ்த்தினர் (௧௨)

துன்பமாண்டொருவிடச்சுரர்துதிக்கவே
யன்பினினப்பினையரிவைதன்னுடன்
அம்பொனின்மணிக்கலனணிந்துநாயக
னின்பமொடமர்ந்தினிதிருக்குமெல்லையின். (௧௩)

வியோமனப்படலமுற்றிற்று.
ஆ திருவிருத்தம் - ௩௨௩எ.

௪அ. வது—அக்குரூரப்படலம்.

மருளறவருளுறமறையினண்ணிய
பொருளுறுமுதல்வனைப்புதல்வனாகியாத்
திரள்களைமேய்த்திடுந்தேவதேவனை
யிருளகல்சிந்தையோடேத்துவாமரோ. (௧)

வடமதுராபுரிமன்னன்கஞ்சனுங்
கடியவனாரதனெய்தக்கண்டவ
னடிமிசைபணிந்தருக்கியமளித்திடக்
கொடுவினையகல்முனிகூறல்மேயினன். (௨)

முன்னம்யான்வருவனமொழியக்கேட்டிலை
பின்னருமுன்னொடும்பிறந்தபெண்ணென
வுன்னியேயன்புவைத்துறுதியெண்ணிலாய்
மன்னவநீயெனமற்றுங்கூறுவான். (௩)

உன்னுரத்துதைத்துயரும்பரோகுமின்
மின்னிடையசோதைதான்பெறவிளங்கினள்
மன்வசுதேவன்றன்மைந்தனுனவ
னன்னெறிநந்தன்சேயாகிநண்ணினன். (௪)

நந்தனுன்மறையறைநெறியைநண்ணுவான்
சிந்தையின்மகிழ்சகாவானசெய்கையாற்
குந்திதன்முன்னவனுகுங்கொற்றவன்
மைந்தனையவன்வயின்மறைத்துவைத்தனன். (௫)

அன்றியுமுரோகணியருளயாரையும்
வென்றிகொளலாயுதவீரனைவ
னுன்றனக்கரும்பகையாகுமுத்தம
மன்றலர்துளவினனோடும்வாழ்ந்தனன். (சா)

ஆதலாலரசநீயறையவேகிய
பூதனையுடனசுரோசர்பொன்றிய
வேதனையுற்றனமேலிங்கெய்துவ
தேதெனவின்னமுமுணர்ந்துகொள்ளென்றான். (எ)

நற்றவனிவ்வுரைநவிலலோடுமக்
கொற்றவன்றேவகிக்கொம்பனானுடன்
கற்றறிவிலாவசுதேவக்கள்வனைப்
பற்றிசீர்தருதிறொன்றுரைபகர்ந்தனன். (அ)

கங்குலினிழுத்தவன்முன்னிற்காட்டினர்
தங்கையைமைத்துனன்றனைச்செற்றிட
யங்கையின்வாளெடுத்தடர்தலோடுமச்
சிங்கலிலருந்தவன்விலக்கிச்செப்புவான். (கூ)

பகைஞனைக்கொல்கிலாய்பழிவந்தெய்தவே
மிகமுனிந்தெதிரிலாவிவளைவீட்டியே
லிகழ்வுனக்கெய்துமென்றியம்பலோடும்வெஞ்
சிகியுருவிலோசனன்செங்கைவாள்வைத்தான். (கய)

பருந்தலைசெய்தவர்தாளிற்பாய்ச்சியே
யெரிந்திடுநயனனேரில்லுள்வைத்தன
னருந்தவனிவைமொழிந்தகன்றுபோயபின்
பொருந்தியவமைச்சரோடிவைபகன்றனன். (கக)

ஆனகதுந்துபிமைந்தராருயிர்
வானகத்தேற்றவாளமர்மலைந்திடக்
கானகத்தவர்களையழைத்துக்காட்டுதுஞ்
சேனைகள்சூழவில்வேள்விசெய்யுமின். கஉ)

சகலன்முட்டிகனொடுசகலன்சாணூர
னிகரிலாமல்லர்களசுரர்நின்றனர்
மிகமுனிகுவலயாபீடமீதுறு
மிகழ்வின்மாபாத்திரனிங்குளானரோ. (கங)

ஆதலினந்தனில்லமருமைந்தரா
மேதலர்தமையழைத்திகல்செய்தேயவர்
சாதல்காண்குவமுயர்தனுவிழாச்செய
வேதியர்தமையழைவிரைவினென்றனன். (கச)

வேதியரெய்திவில்வேள்விசெய்வதற்
கோதினார்சதுர்த்தசியுயர்ந்தமாதிதி
ஆதலின்முயலெனவறைந்தபேரிகை
வீதிகள்கரிபரிவீரர்துன்னினார். (௧௫)

கன்னல்நீள்பூகம்நற்கதலியெங்கணு
முன்னதமாகவேயுயர்த்துத்தோற்றியே
துன்னியகொடியுறத்துலங்குமாலைக
ணன்னகரிலங்கிடநாற்றினாரரோ. (௧௬)

அரிவையரரசர்களந்தணாளர்கள்
விரதநன்முனிவர்வில்வேள்விகாண்குவார்
பரிவினோடெங்கணும்பரவித்தோன்றினார்
கரிபரிநிறைந்திடுங்கஞ்சனூர்தனில். (௧௭)

வரையெனவுயர்ந்தமாதனுவைவண்மைசேர்
தரணியிற்சகட்டின்மேற்கொணர்ந்துதாங்கியே
விரைவினின்மண்டபம்விளங்கவைத்திடச்
சரியிலாமறையவர்வந்துசார்ந்தனர். (௧௮)

உயர்ந்திடுமுருத்திரமூர்த்தியோனுக்கு
வியந்திடுமருச்சனைவேள்விசெய்தபின்
சயந்தருதனுவின்மேற்றுமஞ்சூட்டியே
யயர்ந்தனைநறுக்கினாராடிப்பாடியே. (௧௯)

தரணியின்கோட்புறுதனுவிழாச்செய
வரசனக்குரூரனையன்பினாலழைத்
திருகரம்பிடித்துனக்கியாரும்நேரிலை
யுரைசெயுங்கருமமொன்றுளதுகேளென்றான். (௨௦)

குந்திதன்முன்னவன்கொடுமைகேட்டிதன்
மைந்தரைநந்தன்றன்மனையில்வைத்தன
னிந்தவெம்மொழிமுனியியம்பினானென்றான்
சிந்தையினிடரினித்தீரவேண்டுமால். (௨௧)

நந்தன்வாழ்மனையினைநண்ணித்தேவகி
மைந்தரைவில்விழாக்காணவம்மெனாத்
தந்தவையாலவருயிர்த்தடிந்தியான்
சிந்தைநோய்தீர்வனீசெல்லவேண்டுமால். (௨௨)

விருத்தனாமுக்கிரசேனன்மேதினி
யருத்தியோடாளவெண்ணப்பன்றீங்குறு
கருத்திதேவகியவள்கணவனோடுமே
யொருத்தரைவைத்திலெனுயிருண்பனரோ. (௨௩)

மகதனென்மாமனும்வாணன்சம்பரன்
சகமெலாமடர்ந்திடுந்தவக்கிர
னிகல்செய்சாலுவனரகாசுரனிவர்
சகியர்களாதலாற்றாழ்வொன்றில்லையால். (௨௪)

என்னுயிர்த்துணைவனீயேகிநந்தனோ
டொன்னலர்தமைக்கொணர்ந்துதவுவாயெனா
மன்னனக்குரூரனையணைத்துமாமணி
துன்னுநற்கலன்களுந்தூசுநல்கினான். (௨௫)

அறனில்வெங்கஞ்சனீதறையக்கேட்டிடு
மறனிலக்குரூரனம்மன்னைநோக்கியே
திறனொடுமுயற்சியைச்செய்தல்வேண்டுமோ
லிறைவயானேகுவனென்றுபோயினான். (௨௬)

இரதமதேறியக்குரூரனேகுவான்
சரதநான்மறைகளுந்தவருங்காணொணா
வரிதனைக்காண்பதற்களப்பில்காலமுன்
விரதமாதவஞ்செய்தேனெனவிளம்பினான். (௨௭)

பவமறப்பயோததிபாம்பின்மேற்றுயி
லுவமையிலரிபுகழொன்றுமில்லதாய்ப்
புவியினோர்புராணநல்லுணாபொருந்தினுஞ்
சவவலங்காரமாய்த்தளர்ந்துபோமென்றான். (௨௮)

வஞ்சகப்பிறவியுள்மருண்டுவீழ்ந்தவ
னஞ்சனவண்ணனுக்கடியனானபின்
விஞ்சினவினையெலாம்வேரினோடுமே
பஞ்சனலுற்றெனப்பாறுமென்றனன். (௨௯)

ஆசறுவினையெனுமளற்றிலாழ்ந்துவீழ்
நீசனென்பிறவியாங்கடலைநீங்கிட
வாசமென்மலருறுமங்கைகேள்வனா
மீசனைக்காணவெத்தவஞ்செய்தேனென்றான். (௩௦)

நீலமால்வரையுடன்கயிலைநின்றிடுங்
கோலமாமெனமலர்க்குயிலின்கொண்கனா
மாலினோடலாயுதன்றன்னைவண்மையால்
ஞாலமேற்காண்பனென்றறைகுவானரோ. (௩௧)

வானிவர்ந்தளந்துமண்வழங்குபாதத்தின்
யானிறைஞ்சிடவிருகைகளாரவென்
மேனியைத்தழுவிலென்வினைகள்பாறுமே
யூனுடைப்பிறவியுமொழியுமேயென்றான். (௩௨)

தீதுறுகஞ்சன்றன்செப்பவெய்திய
தூதுவனென்றெனையிகழ்ச்சிசொல்வனோ
வேதமிலன்பருக்கெளியனாகிய
ஆதியாதலினருள்புரிவனுமென்றான். (௩௩)

அனகனுக்குறவுவெம்பகையிலாமெனி
னனிசிலர்நலன்சிலரடைவதேதெனிற்
கனகமீகற்பகங்கலர்துற்புத்தியி
னுனுமுமிதருவபோலுறத்துவானென்றான். (௩௪)

வாசமென்வனசமார்மங்குலேலலப்பொற்
றூசுடன்கலன்களுந்துலங்கிநின்றரு
வீசனற்பதத்தடிப்பொடியையென்மெயிற்
பூசுவன்கடிதெனப்புகன்றுபோயினான். (௩௫)

வனமுறுமுலர்முளின்காட்டம்வானத்தின்
கனமுறுவருடத்தாற்கங்கைசேர்ந்தபோ
லனகனையித்தினமடையயான்செய்நல்
வினையெதுகொல்லெனமகிழ்ச்சிவீறினான். (௩௬)

குன்றெடுத்தாவினைக்காத்தகொற்றவ
னன்றுலகளந்தவனடியிறைஞ்சிவீ
டொன்றவேவிடுத்தகஞ்சன்செய்யொப்பிலா
நன்றியையெங்ஙனம்நவிலுவேனென்றான். (௩௭)

புடவியினாவின்பின்போகுமச்சுத
னடியினிற்கொடியரவிந்தம்வாரணம்
படியவேபடியினிற்றிகழப்பாரினப்
பொடியின்மேற்புரண்டனனடியின்வீழ்ந்தனன். (௩௮)

மெய்மயிர்பொடித்திடவிழிகணீருகக்
கைமலர்கூப்பியேகடிதுசெல்குவான்
மைமுகிற்கொழுந்தெனவயங்கிநின்றரு
ளையனைக்கண்டனனடியின்வீழ்ந்தனன். (௩௯)

பாதமென்மலரினைப்பற்றிவிட்டிலன்
பேதையேன்பிறப்பெனும்பிணியைநீக்கிய
நாதனேநான்மறைதனக்குநண்ணலாச்
சோதியேயெளியையபோற்றோன்றினையென்றான். (௪0)

மானிலத்தழுந்துறவணங்குமன்பன்றன்
மேனியைத்தழுவினன்விளம்புவானுரை
யானகதுந்துபிகுலத்துளாயினு
யீனமிலெந்தைநேராகும்நீயென்றான். (௪௧)

இனையவக்குரூரனுக்கினிதியம்பியே
மனைதனிலருக்கியம்வழங்கவாதனத்
தினிதுறவிருந்தனமருந்தினானிறை
நனிமலர்சாந்துடனானம்நல்கினான். (சஉ)

அருளினக்குரூரனைநோக்கியையநீ
விரைவினிலெய்தியசெயல்விளம்புகென்
றுரைசெயக்காந்தினியுதவுநன்மகன்
பரிவினானோக்கியேபகர்தல்மேயினான். (சங)

வினையுறுகஞ்சன்முன்வீணையேந்திய
முனிவனுமெய்திநற்குந்திமுன்னவன்
றனையர்நீர்நந்தனில்சார்ந்துளீரென்றே
யனையவுமறைந்திடவனல்கொள்நெஞ்சினான். (சச)

தியவன்றங்கையைச்சூரசேனன்சே
யாயவன்றன்னைத்தன்னங்கைவாளினா
னோயெனமுடிக்கிடலோடும்நூலறி
தூயநாரதமுனிவிலக்கிச்சொல்லவே. (சரு)

வாளிருநிலத்தினின்வைத்துமற்றவர்
தாளினிற்பருந்தளைதைத்துவைத்தபின்
ஞாளிகளரிதனைநலியுமாறென
மூளும்வெங்கணனுமைத்தெறுமுயற்சியால். (சசு)

வில்லுயர்வேள்வியைக்காணவேவிரைந்
தெல்லையினுமையழைத்துதவுவாயெனாப்
புல்லியன்விளம்பிடப்பொருந்தியெய்தினே
னல்லியங்கமலக்கண்ணனப்பவென்றனன். (சஎ)

காந்தினிசுதனிவைகழறக்காளியப்
பாந்தளினடித்திடும்பரமன்கஞ்சனும்
வேந்தன்பாலெய்துவன்விரைவினின்றெனா
நாந்தகச்செங்கையானகைசெய்தானரோ. (சஅ)

ஆயதோர்காலையினாயர்தம்பதி
நாயகனாகியநந்தனெய்தியே
தூயவக்குரூரனைத்தழுவிச்சோர்விலா
வாய்மையினலனொடுமகிழ்ந்துகூறுவான். (சகூ)

மன்னவநின்கிளைமைந்தர்மற்றுளோ
ரின்னலெய்தாதிருந்தனர்களோவெனாச்
சொன்னபின்றுன்மதிக்கஞ்சன்றூய்நெறி
யொன்னலான்கொடுமையையுரைக்கலுற்றனன். (ரு0)

தங்கைதன்றனையரைத்தடிந்துதந்தைதாய்
சிங்கலெய்திடச்சிறைவைத்தீயனும்
வெங்கணன்கொடுமையைவிளம்பிலேனெனு
மிங்குநீயெய்தியதியம்புவாயென்றான். (௫௧)

வடமதுராபுரிமன்வில்வேள்வியைக்
கடிதினில்மைந்தருநீயுங்காணவாண்
டடைகுவாயென்றுனக்கறையவேவினான்
கொடியவனென்றுரைகூறினானரோ. (௫௨)

தூயநற்காந்தினிசுதன்சொற்கேட்டலு
மாயர்தந்நாயகனளப்பிலாவனை
காயநற்சுவைகொள்பால்கறவையாவுடன்
மாயன்முன்னோனுடன்வழிக்கொண்டானரோ. (௫௩)

மாயவன்மதுரையினேகும்வாய்மைகேட்
டாயர்கள்மாதராரன்பினெய்தியே
தீயுறும்வெண்ணெயபோலுருகிச்சிந்தையி
னோயுறவிவையிவைநுவல்வதாயினார். (௫௪)

கண்ணன்வாய்முகங்கடைக்கண்கள்காண்கிலோம்
பெண்ணெனப்பிறந்தியாம்பீழையெய்தினோம்
வெண்ணெயுண்கள்வநீமீள்கிலாயெனில்
மண்ணின்மீதுழல்கிலமாய்வமென்றனர். (௫௫)

கடிமலர்நாயகிகாமமுற்றிடும்
வடிவுறுமேனியின்வனசவேரியின்
கடைவிடுத்தெனவுன்றன்கடைக்கணோக்கினு
லுடலுயிருருகுவோமுய்வதேதென்றார். (௫௬)

ஐம்பொறியுனதிடத்தழுந்தவாவியுன்
வம்பணிதுளவணிபதத்தின்வைகவே
யம்பரத்தரிவையர்க்கதிகமாயத்தி
னிம்பரினணைத்தயாமெங்ஙன்விட்டுய்குவம். (௫௭)

தனமுறுகலவைதன்னடிதயங்கவே
வனசமார்நீலத்தின்குறியெம்வாய்தொறு
மினவுனவிரலுகிர்ப்பொறியெம்மெய்யிடை
மனவணைத்துய்ந்தயாமொருவின்வாழ்கலம். (௫௮)

பரவையின்முதநேர்பவளவாயினின்
மருவுவேயிசையினெம்மனமுருக்கியே
குரவைகோத்துயிரொலாங்கொள்ளைகொண்டநீ
பிரிவையேற்றடுத்துனைப்பிடிப்பமென்றனர். (௫௯)

நேரிழையார்நமைப்பிரித்துநேமிகொள்
வீரியனேடுமேமதுரைமேவிடுங்
கோரவிக்குரூரனையக்குரூரனென்
றேருறுநாமமிட்டனர்கள்யாரென்பார். (௬0)

என்றுரைத்தெய்தியவெழில்கொள்மாதரை
யன்றுலகளந்தருளையனோக்கியே
மன்றலர்குழலினீர்வருந்தலீண்டிரு
மின்றுயான்வருவனென்றேகினனரோ. (௬௧)

ஆயர்களுவமையிலசோதைநாயகன்
றேய்விலாயமுனையிற்படிந்துசெல்லவே
மாயவன்காந்தினிமைந்தனுஞ்சிலோன்
றூயகாளிந்தியாந்துறையிலெய்தினர். (௬௨)

வேறு. பேயினுயிர்முலைப்பாலோடருந்துங்கோமான்பெலம்பனுயிர்வதை த்தவன்பித்திகையினிற்பத், தூய்மையுறுகாந்தினிதன்சுதனீர்மூழ்கித்து லங்கிமேனின்றவரையயத்துட்கண்டான், மாயமெனவெழுந்தவரைக்கோ ட்டினோக்கிமறுத்துமயந்தனில்மூழ்கிமற்றுங்கண்டே, தீமையிலாவறநெ றியைத்தேர்ந்தமன்னன்றிகழ்சோதியுருவினவிர்சிறப்பைக்கண்டான்.

பேரொளியாயுயர்ந்ததொருநகரினுப்பண் பிறங்குமணிமண்டபத்தின் மீதுவெண்மைச், சீருலவுவளையாழிகதைவாள் சார்ங்கந்திகழ்கரங்கடிரு மார்பிற்கவுத்துவந்தோ, ளேருலவுகிரீடநுதல்வதனங்கண்வாயெழிற்காதிற் குண்டலம்பொன்னுடைபாதங், காரெழிலிமிசையினலர்கமலம்பூத்தகாட் சியுறுமேனியனைக்கண்டானன்றே. (௬௪)

சிரமுயர்ந்தகதிருஞ்சிமேகங்கண் டினகரன்சந்திரன் செவிகடிசை யோரொட்டுக்,கரையிலளப்பிலவுவரியுதரங்கொப்பூழ் ககனனகனகமரங்க ளுரோமமாகி, விரைகமழுங்கமலமலரிறையோன்சிந்தை விழித்தல்பகல் முகிழ்த்தலிரவாகியோங்கு, மொருவனெனவயங்கியருள் சோதிதன்னை யொளிகொள்மணிமண்டபத்திற்கண்டானன்றே. (௬௫)

கடலுறுமீனெனவுமொளிருதும்பரத்தின்கனியினுறுமசகமும்போற் கருமேகத்தின், வடிவுடையான்வயிற்றதனிலண்டகோடிவயங்கியிடுமொற தனைக்கண்டான்மற்றும், படியினெழுதுகளெனநீண்டாழ்ந்தகன்றபரவை யுறுமறலெனப்பல்லுயிர்களெல்லாம், நெடியவன்றனிடத்துதித்தேயமரு ந்தன்மைநெறியறியுமன்னவர்கோன்கண்டானன்றே. (௬௬)

சனந்தசனகாதியரைக்கண்டான்பூவிற் சதுமுகனைக்கண்டுசெசிதரனை க்கண்டா, னனந்தனைக்கண்டான்ககத்தின்பதியைக்கண்டானருள்செறி சேனபதியைக்கண்டானன்ப, ரினந்தனைக்கண்டுளமகிழ்வான்கண்ணுளா ரதாமில்லங்கியுறுகோலமெல்லாங்கரந்தாற்போல, வனந்தனிலானிரைமே ய்த்தகோமான்மீளமறைத்திடலுங்காணுமலெழுந்தான்மன்னோ (௬௭)

திரைகுரைகாளிந்திநதியயத்தின்மூழ்கிச்சிறந்தமன்னனெழுந்துயர்ந்தகரைமீதேறி, யரியிணைத்தாண்மலரினிறைஞ்சிநீயேயண்டரண்டமெண்ணிலவாயவற்றின்மேலா, மொருவனுமாய்ப்பேரொளியாயுயர்ந்தவாதியுன்னூங்குமுன்னுமுணராயென்று, கரைபுரளுமானந்தக்கண்ணீர்சோரக்களிப்புடன்கைதொழக்கண்ணனகைத்தானன்றே. (௬௮)

அன்னவன்றனுடனிரதமீதினேறியாழ்ந்தகன்ற யமுனையிகந்தப்பாலேகித், துன்னுகொடிமிடைசிகரமுயர்ந்துதோன்றத்துலங்குமதுராபுரியினெயிலைச்சூழ, மின்னியெழுமுகிலளவாயிலங்கிநீண்டுவிழுமியமாமலர்நிறையமிழற்றுகின்ற, வன்னமயில்கோகிலநற்கபோதம்பூவை மலிந்தெழுந்தவாராமமிருந்தார்மாதோ. (௬௯)

புரிசையகழ்பித்திகையினிலங்கியோங்கும்புறப்பொழிலினிருந்துபுயல்வண்ணன்மாயோன், வரிசையுறுகாந்தினிதன்மகனைநோக்கிவடமதுராபுரிநகர்க்குவருவேனுன்னை, விரைகமழுந்தொடைமார்பவிதனைமுன்போய்விளம்பெனவுமகிழ்ந்திரதமிசையினேறி, முரனுடையமுன்றிலிடைக்கஞ்சன்முன்னர்முகுந்தன்வரவதனையவன்மொழிந்தானன்றே. (௭௦)

அக்குரூரப்படலமுற்றிற்று.

ஆ_ திருவிருத்தம்-௩௩௦௭.

---

௪௧. வது—தாருகன்வதைப்படலம்.

தாலமிசைமறைமொழிந்தவருடம்நூறுந் தணிந்திடத்தாணிருந்திடினுந்தாய்கைம்மீதிற், பாலனெனச்சிறிதுதிங்கள்கழிந்தபின்னர்ப்பருவமுறப்பாவையர்தந்நகிலிற்றோய்ந்து,மேலினுறுநரைதிரைமூப்படரநோய்கள்வெய்யதுயர்முடுகவிந்தவுடல்விட்டேகிக், காலனிடுநரகிடையினழுந்தாமுன்னர்க்கண்ணனெடும்புகழினையாங்கழறியுய்வாம். (௧)

சிந்தைமகிழ்காந்தினிதன்சிறுவன்றேர்மேற்சென்றிடலுஞ்சிறந்துயர்ந்தபூங்காத்தன்னி, னந்தனுடனுயர்திரளெல்லாங்கூடிநலனுறவேமகிழ்ந்திருப்பப்பொதுவர்தங்கள், மைந்தருடன்மதிவண்ணன்மருங்கினெய்தவானுறுசெங்கதிர்குடபாலிழியும்போழ்தி, னிந்திரைநாயகன்மேகக்கொழுந்துபோலவிலங்குமதுராபுரியினேகினனால். (௨)

வேறு. சதுரன்றாமரைக்கண்ணினன்சாமள
வெதிரில்லாமெய்யனேழுலகாள்பவன்
முதிருமும்மதயானைகள்மூந்திய
மதுரைமாநகர்வீதியின்வந்தனன். (௩)

கரிநிறைந்தனகார்முகிலாமெனப்
பரிநிறைந்தனபாய்திரையேலவே
வரிநிறைந்தவரிவையர்தங்குழல்
பரிநிறைந்தனபூரணபொற்குடம். (௪

தோரணங்கணிறைந்துதுலங்கிய
வாரணங்கள்முழங்கிமலிந்தன
பாரணங்குதவஞ்செய்தபண்பினும்
நாரணன்கடிதேகுநல்லாவணம். (௫)

கன்னல்பூகங்கனிகொள்சுரும்பினந்
துன்னுபங்கயமாலைதுலங்கிய
வன்னம்போன்றவர்தோள்கழுத்தானன
நன்னலத்தினைநத்திவந்தாலென. (௬)

குயிலினம்மெனவன்னக்குழாமென
மயிலினம்மெனமங்கையர்வந்தனர்
வெயிலின்வெண்ணெயுருகுவபோல்மெலிந்
தயர்வமாயனழகுகண்டாரரோ. (௭)

செய்யகண்ணினன்றஞ்சனந்தீட்டுவா
ளையன்வீதியடைந்தனனென்றலுந்
துய்யமையுறுதூரியக்கோலுட
னெய்தமாயனிலங்கநகைத்தனன். (௮)

தூசுமென்மருங்கிற்சுற்றும்வேலையின்
மாசிலச்சுதன்வந்தனனென்றலு
மேசெறிந்திலளாடையிழுத்தெய்த
வீசனெண்ணகைசெய்தினிதேகினன். (௯)

இழையொண்முத்துத்துளையிடுமெல்லையின்
மழைதடுத்தவன்வந்தனனென்றலுங்
கழைகடோளிதரளங்கைந்நூலுடன்
றெழுதுமாலுறவீதியிற்சேர்ந்தனள். (௧௦)

கொங்கைபாற்குழவிக்கருள்வேலையிற்
செங்கண்மானகர்சேர்ந்தனனென்றலு
மங்கைமார்மகவைப்பிறிந்தேவந்து
பொங்குமன்பினிற்கூலம்புகுந்தனர். (௧௧)

கலையுஞ்சோரக்கருங்குழல்சோரநன்
முலையின்மீதணிமுத்தஞ்சிறந்திட
மலரினங்கணைமாமதன்வாங்கிய
சிலையினாலெய்யவேதிகைத்தாரரோ. (௧௨)

பால்குடித்தனைபாம்பினடித்தனை
மால்கொடுத்தனைவந்தனையாமென்பார்
வேல்களொத்தகணாரியர்வீதியின்
மாலடிப்பதுமங்கண்டுமொழ்கியே, (௧௩)

கண்ணனென்பர்விற்காமனிவனென்பர்
வெண்ணெயுண்டருள்வித்தகன்றானென்பர்
மண்ணின்மீதில்வருங்கொண்டல்காணென்ப
ரண்ணலைக்கண்டவாயிழையார்களே. (கச)

கரியமேனிக்கருமுகிறானென்பார்
வரிகொணீள்விழித்தாமரைதானென்பார்
சரியிலாநகைதண்ணிலவாமென்பா
ரரியைஞெள்ளலிற்கண்டணங்கார்களே. (கரு)

நந்தகோபன்செய்நற்றவமாமென்பா
ரிந்தமாநிலஞ்செய்தவமாமென்பார்
சிந்தையாரக்களிப்பர்தெருவினில்
வந்தமாயனைக்கண்டெழின்மாதரார். (கசு)

ஐகொள்மெய்யசோதைதிருமகன்
கைகள்கால்முகங்கண்கள்செந்தாமரை
மைகொள்நீலமரகதமேனிய
னெய்தினானென்பரேந்திழையார்களே. (கஎ)

வேயினேழிசைகேட்டுவிரும்பிய
வாயர்மாதரருந்தவநன்றென்பார்
தாயசோதைதவம்பெரிதாமென்பார்
மாயன்மேனியைக்கண்டமடந்தைமார். (கஅ)

கோலுங்கன்றின்குழூஉமிவனுண்டிடும்
பாலும்வெண்ணெயும்நெய்யும்பரிந்தெழு
மால்கொளண்டர்கள்மங்கையர்கூறையுஞ்
சீலநற்றவஞ்செய்ததென்பார்சிலர். (ககூ)

கேளிரெங்கணும்வீதிகிளர்ந்தெழ
வேளிரங்கிவணங்கிடுமேனியை
வாளரங்கள்மதித்திடுகண்ணியர்
சாளரங்களிற்றாமுற்றுநோக்கினார். (உ0)

நிரைகொளோடைநிறைவனசங்கள்போற்
றெருவினானனந்தோன்றச்சிறந்திடு
மரிவைமார்கணினோக்கினராசையே
மருவவீதியிலேகினன்மாதவன். (உக)

வந்தகாரியமுற்றுகவஞ்சகர்
வெந்துநீறெழவேதம்விளங்கவே
மைந்தநீயென்றும்வாழுதிவாழியென்
றந்தணாளர்கள்கூறினராசியே. (உஉ)

இந்திராதியர்வேதனிருடிகள்
கந்தநாண்மலர்வீசிக்களித்தனர்
நந்தகோபன்செய்நற்றவத்தெய்திய
மைந்தன்வீதியினெய்திவயங்கவே. (௨௩)

கழைகொடோளிகளெண்ணிலர்கையினூற்
றெழுதுமாவிற்றவண்டுமயங்கவே
அழகின்விஞ்சியவைங்கணையோன்றந்தை
யெழில்கொள்வீதியினெய்திடுமெல்லையின். (௨௪)

கொடியனாகியகஞ்சன்றன்கோயிலி
னடைகுவான்றுகில்மைகளைவிப்பவன்
படியிற்பல்வனப்பட்டுடைகொண்டுதான்
வடிவனாகியமாயன்முன்னெய்தினான். (௨௫)

உம்பர்தம்பரனுற்றவன்றன்னையே
யம்பரம்மெனக்கின்றளித்தாயெனி
லிம்பரின்னலனெய்துவையென்றலும்
வெம்பினன்றுகில்வெள்ளையதாக்குவான். (௨௬)

தழையுறும்படிதாங்கிக்கவித்துயர்
பழுவந்தன்னிற்றிரிந்துபல்லாக்களோ
டுழலுவாய்கஞ்சமன்னனுடுத்திடு
மிழைநலத்துகில்சுற்றுவையோவென்றான். (௨௭)

நதிதெருத்தொறுந்தாங்கிவிற்கும்மிடை
மதியினீமொழிந்தாயெனமாதவன்
வெதிருறுங்கரத்தாற்குத்தவீழ்ந்தவ
னுதிரம்வாயுகவேயுருண்டானரோ. (௨அ)

தூயதூசுகொண்டேகிடுந்துன்மதி
மாயவேகலிங்கப்பொதிவைத்தவ
னேயமாகுங்கிளைஞர்கள்நின்றிலர்
சீயங்கண்டசெந்நாயெனவோடினார். (௨௯)

வேறு. தாருகன்மடிந்துவீழக்கவினுறுகலிங்கந்தன்னை
ஆரியனணிந்தபின்னரலாயுதனுடனுயர்க்கும்
பாரினில்வறிஞர்கட்கும்பரிவிற்சம்படங்களீய்ந்து
தேருறுவீதிதன்னிற்றிகழவேயெய்தும்வேலை. (௩௦)

தாருகன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௩௩௩௭.

ருo. வது—சுதாமாப்படலம்.

ஆலமேபோலுமாலீமடியமாலியவானஞ்சி
ஞாலமேவிலங்கையோவிநாகலோகத்திற்பாறச்
சீலமார்கருடன்மீதிற்றிகழ்ந்துயர்திகிரியேவுங்
கோலமாலிருடிகேசன்புகழினைக்கூறியுய்வாம். (க)

தூயவன்சுதாமாவென்போன்றுலங்கியதொடையல்சேர்ப்போன்
மாயவன்றன்னைநோக்கிவணங்கினனெழுந்தேயாடி
நாயினேனிருக்குமில்லினையகவருகவென்றே
தீமையில்குணத்தோன்சொல்லச்செல்வனுஞ்சென்றானன்றே. (உ)

அரியவன்மனையினெய்தவாங்கவன்மகிழ்ந்துதன்னிற்
றெரிவையுஞ்சிறுவர்தாமுந்திகழ்திருவடியின்வீழ்ந்து
பரிவினுதனத்திருத்திப்பரமன்பாதோதகத்தை
யருவினையொருவவுட்கொண்டாடிமெய்புளகமானார். (௩)

தளவங்கல்லாரமௌவல்சண்பகஞ்சாதிநாகந்
துளவமம்போருகம்பார்துலங்கியவிலஞ்சிவாசங்
கிளரும்பாடலத்தின்மென்பூக்கெழுமியதொடைகளெல்லா
முளமகிழ்ந்தையன்மார்பிணணிந்துநின்றுருகினான்மால். (௪)

அலங்கலையணிந்துநின்றவன்பணியருளினோக்கி
யிலங்கியசெல்வமெல்லாமெய்திப்பின்னிணையில்லாமற்
றுலங்கியகதியின்வாழ்தியென்றளிசுரந்துசொல்ல
நலங்கிளர்சுதாமாவேத்திநவின்றனன்பின்னுமாதோ. (ரு)

என்பிலாப்பிறவியாகியிழிவினையடைந்தாலும்முன்
னன்பெனக்கருடியென்றேயாங்கவன்மொழியக்கேட்டுத்
துன்பகல்சிந்தையாய்நீபெறுகுதியென்றுதூயோ
னின்பமோடவனைநில்லென்றெழிலுறவேகுமெல்லை. (சு)

சுதாமாப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௩௩௪௩.

ருக. வது—திரிவக்கிரிப்படலம்.

சங்குசக்கரம்வாள்சார்ங்கந்தண்டெழிற்கரங்களோங்க
மங்குன்மீவனசம்பூத்தமாண்பெனவயங்குமேனி
செங்கதிருதையமேலச்சிறந்திடுங்கிரீடந்தோன்றக்
கங்கையார்பதத்தின்வானமளந்தருள்கண்ணன்வாழி. (க)

தேனமர்குழலினார்கள்சிறந்துவந்தெதிரினோக்க
நானமெய்கமழவாதிநாரணனெய்தும்வேலை
யூனவில்வளைந்தபோன்றுண்டொளியறுகுருபியாகுங்
கூனிநற்சுகந்தங்கொண்டுகுறுகினள்வீதிதன்னில். (உ)

அய்யனுண்டவளை நோக்கியாரிடைச்செல்கின்றாய்நீ
தூய்யநற்சுகந்தந்தன்னைத் தருதியோவென்றுசொல்லக்
கையினிற்றொழுதேயன்பிற்கண்ணினீர்புரளநின்று
மெய்யநின்றாதிநானென்றவளிவைவிளம்பலுற்றாள். (௩)

மாமையில்கூனிமூன்றுவக்கிரியாகுமென்பேர்
தூய்மையில்கஞ்சனுர்க்குச்சுகந்தமெய்யணிவன்கண்டாய்
நீயிவணெய்தப்பெற்றேனெனக்குநேராருமில்லை
யாயனுமுன்மெய்தன்னிலணிகுவன்சுகந்தமென்றாள். (௪)

குங்குமங்கலந்தசந்தம்பாளிதம்பனிநீர்கொண்டு
செங்கையாற்குழைத்துமார்பிற்கொட்டிச்சிந்தூரந்தன்னைத்
திங்களுணனந்தான்றிகழ்வுறநுதலிற்றீட்டி
யங்கண்மாலழகுநோக்கியடிமிசைவணங்கினின்றாள். (௫)

சிந்தூரஞ்சுகந்தமெல்லாந்திகழ்வுறவணிந்துநின்ற
வந்தமில்கூனிதன்னையங்கையாற்கழுத்துமார்பு
மிந்திராகொழுநன்பற்றியெடுத்துநிமிர்த்தலோடுஞ்
சுந்தரியாகினின்றாடெய்யவானரம்பைநாண. (௬)

மாதவராசிகூறிமகிழ்ந்தனர்வானமீதிற்
றூதவிழ்மலர்களூர்த்தார்தானவர்பகைஞராஞோர்
பூதலந்தன்னிற்கூனும்புன்மையாமுருவையோவிச்
சீதரன்முன்னர்நின்றாள்செய்யவளாகிமாதோ. (௭)

வேறு. மூடவர்கேட்கிலர்கண்ணிலர்மூங்கையர்
நொடியிற்கூனிமிர்மங்கையைநோக்கிமா
லடியிற்றூளைமெய்யப்பிநின்றாடினர்
கடிதிற்கேட்டனர்கண்டனர்போற்றினர். (௮)

அந்தவேலையரம்பையுநாணநற்
சந்தமெய்யுருப்பெற்றவடாமரை
யுந்தியோனுத்தரீகத்தைப்பற்றியே
யிந்திராக்கிறைவாவெனைப்புல்லென்றாள். (௯)

கூனிமிர்ந்தெழில்கொண்டதிருவனாள்
வானின்மங்கையர்நாணுமடந்தையைத்
தான்மகிழ்ந்துநின்னில்லினிற்சார்குவன்
போநினின்மனைக்கென்றபின்போயினாள். (௧0)

திரிவக்கிரிப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௩௫௩.

ஆசையாலறனல்லவைசெய்திங்க, ளாசமாகிநமன்கைப்படுவமுன்
வாசியாகியகேசியைமாய்த்திடு, மீசன்ருளிணையேத்துவமுய்யவே. (௧)

வேய்களெங்கும்விளங்கிடவூதியே, ஆயர்மைந்தர்களாவலங்கொட்டவெஞ்
சியம்போலவிலங்கித்தெருவினில், மாயனெய்தினன்வானவர்போற்றவே.

ஞாலமீதுயர்மண்டபநாப்பணோர், கோலமாய்த்திகழுங்குலமால்வரை [னே.
போலவேமிகத்தோன்றும்பொலிவுடைச், சாலையெய்தினன்ருமரைக்கண்ண

தூபதீபங்களெங்கணுஞ்சூழ்ந்திடத், தீபமாலைநிறைத்துச்செறிவுறுஞ்
சூபமோகனந்தோன்றப்படைத்துநீள், சாபமுன்மைகடானும்நறுக்கினன்.

அரசரெங்குமுறைந்தழகான்றன, விரைசெய்மாலைவிளங்கிமலிந்தன
முரசுபேரிபணவமுழங்கவே, நிரைசெய்மாகரிதேர்கணிறைந்தன. (௫)

இனையதாயவெழிலுடைவில்லுறு, நனியுயர்ந்தொளிர்மண்டபநாப்பணின்
வினையிலாமல்விளங்கியவண்டர்க, டனையர்சூழ்ந்திடச்சார்ந்தனன்மாயவன்.

வேறு. இந்திரதனுவையேலவெழில்கொளுஞ்சாபந்தன்னை
நந்தன்மாமைந்தனெய்தியெடுத்துயர்நாணையேற்றித்
தந்திவெங்கரத்தாற்கன்னறன்னைத்தான்முறித்தலைப்ப
வந்தரம்நடுங்கநாரிகாதறவொடித்தானம்மா. (எ)

ஒடித்தமாதனுவினோசையுறவுயரண்டகோளம்
வெடித்ததுகொல்லோவென்றுவிண்ணவர்வெருவிநொந்தார்
தடித்துமல்கிடவானெண்ணிவிடிதறைவீழ்ந்தவென்றே
படித்தலஞ்சுமந்தநாகம்படந்தமோறிற்றன்றே. (அ)

விஞ்சியமதுரைதன்னில்விளங்கியவரசரோடு
மஞ்சினன்கஞ்சன்பூமிபிளந்ததென்றையமுற்ருன்
வெஞ்சினமுற்றதிக்கின்புழைக்கைமாவெருவியோடக்
கஞ்சமாமடந்தைகேள்வன்கவினுறநின்ருன்மாதோ. (௯)

வில்லினையெடுத்தொடித்தவிறலுடைப்பொதுவன்றன்னைக்
கொல்லுமினென்றுசேனைக்காவலர்குழாங்களாகி
யொல்லையிற்கரிமாத்தேரினினங்களுமுறவாண்டெய்தி
யெல்லையில்கணைகள்பெய்தேயெறிந்தனர்வேல்வாளெல்லாம். (௧௦)

துந்துமியிடக்கைதக்கைதுடிகைக்கம்பலையினுலே
யந்தரநடுங்கவீரரளப்பில்வெங்கணைகள்பெய்து
குந்தம்வேல்முசுண்டியீட்டிகுலிசந்தோமரமுலக்கை
யுந்தினர்திசைகடோறுமுலகெலாமஞ்சமாதோ. (௧௧)

ஒடித்தவிற்பாதிகொண்டேயுரோகணிசேயுமாறு
மடித்தனரிரதங்கைம்மாவயமெலாமடியவீரர்
முடித்தலையுருளமார்புமுழங்கைகாலொடிந்துவீழப்
படித்தலத்துதிரவெள்ளம்பரவைபோலோடிற்றன்றே. (௧௨.)

சாரிகையாகியெங்குந்தால்கேதனனுமாலுந்
தேரினிற்கரியின்கோடுசிதைந்திடப்பரிகள்பொன்ற
வீரர்கள்வதனங்கைகால்வெரிநெலாம்விண்டுவீழப்
பார்நிறைகுருதியோடப்புடைத்திடப்பாறினரால். (௧௩)

படியினின்மாயனெய்திப்பகடுதேர்முறியமோது
மடியினலஞ்சித்தங்களகந்தனிற்புகுந்தமன்னர்
மடநல்லார்குழாங்கள்சூழமற்றவர்மருங்குநோக்கா
ரிடையெனும்பெயரினலேயெய்துவன்கண்ணனென்றே. (௧௪)

இரிந்தனர்வீரரெல்லாமிமையவர்பூவின்மாரி
சொரிந்தனர்பொதுவர்தங்கள்சுதரெலாம்பார்க்கவேபோர்
முரிந்தவிற்றுண்டத்தோடுமுராரியுமுன்னோன்றானுந்
தெரிந்தவிர்பொழிலிற்சேரத்தினகரன்குடபாற்சேர்ந்தான். (௧௫)

சிலையிறுத்தபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௩௬அ.

௫௩. வது—கஞ்சன்முயற்சிப்படலம்.

புந்தியிற்கதங்கடூர்ந்துபொறைநெறியறன்மெய்யெய்தச்
சந்ததம்பதுமநாபன்றாள்களைக்கருத்தின்வைத்துக்
கந்தமாமலரர்ச்சித்துக்கரங்களைக்கூப்பிநின்று
வந்தனைசெய்யுமன்பர்க்கடியிணைவணங்கியுய்வாம். (௧)

தினகரன்குடபாலெய்தச்சிறந்திடும்யாமஞ்சூழ
நனிகடுந்துயரமெய்துநந்தன்றாள்மிசையின்மீதே
அனகனுமுன்னோன்றானுமயம்படிந்தமுதுசெய்து
கனகமார்பாரின்மீதிற்கண்டுயின்றார்களன்றே. (௨)

கங்குல்வந்துற்றகாலைக்கனகமாமண்டபத்தின்
சிங்கவாதனத்தின்மீதிற்றிகழவீற்றிருந்தகஞ்சன்
தங்கைதன்றனையரெய்தித்தன்னகர்புகுந்தாரென்று
வெங்கனல்பொழியுங்கண்ணன்முன்னின்றுவீரர்சொல்வார். (௩)

நந்தகோபன்சேயெய்திநன்னகர்புகுந்துதூசு
தந்ததாருகன்றன்முற்றத்தலையினிற்கரத்தால்மோதிச்
சந்துமெய்க்கணிந்தகூனிதன்னைக்கூனிமிர்த்துச்சார்ந்தே
யிந்திரதனுவைப்போன்றவெழிற்சிலையிறுத்தானென்றார். (௪)

அன்றியுமடர்ந்தேதாக்குமயங்கரிவீரர்மாளக்
கொன்றுதானிருந்தசோலைகுறுகினனென்றலோடுங்
கன்றியவரசனுக்குக்கடியமுட்டிகன்சாணூரன்
குன்றியவர்கரியின்மாபத்திரனிவர்கூறலுற்றார். (௫)

நீயுருத்தெழுந்தபோதுநீறணிகடவுணேமி
யாயிரநயனன்வானோரமரிடையாற்றுராகிச்
சாய்வதங்கல்லாற்போர்செய்தருக்கிலரொய்துங்கண்ணன்
மாயவேபொருவம்நாளேயென்றவர்வணங்கினூரால். (௬)

உரைசெய்தவவரைநோக்கியுவந்தெழிற்கலன்கணல்கி
யரசனுண்டிருந்தவேலையாசினிமதியுந்தூய்தா
யெரிசுடர்விளக்குங்கண்ணுக்கிருண்டவாயுருவமெல்லாந்
தெரியநல்லாடிநீழற்சிரமிலாதாயிற்றன்றே. (௭)

இனையதுற்குறிகளெய்தவிடருறத்துயில்கொள்மன்னன்
கனவினிற்கரம்பூண்டேரினேறியோர்கடத்தினெண்ணை
நனையுநீள்குஞ்சியோடுநக்கினனாகிப்பேயி
னினமொடுபிணத்தைத்தானுந்தழுவியாண்டிருப்பக்கண்டான். (௮)

ஆயதுகனவிற்கண்டாண்டஞ்சிமன்னிருந்தகாலைத்
தூயமாத்தாண்டன்கீழ்பாற்றோன்றியேயிலங்கல்செய்ய
மாயவனகரியெய்திச்செய்திடும்வலத்தினாலே
தீயவனழன்றுசீறிச்சிறந்தமண்டபத்திற்சேர்ந்தான். (௯)

இம்பரினதன்மமேவியெழில்கொள்மண்டபத்தின்மீதி
னும்பரினுயர்ந்தமாடத்தோங்கரியாசனத்திற்
செம்பொனின்கலன்கள்பூண்டுதினகரனவிரோபோல
வம்பமர்குழலினார்கள்வாழ்த்திடவிருந்தான்மாதோ. (௧௦)

ஆதவன்கிரணம்போன்றவவிர்மணிக்கிரீடந்தோன்றச்
சோதிசெய்மதியைப்போலத்துலங்கியகவிகையோங்க
மாதர்சாய்மரைகள்வீசமங்கலநாதமல்கக்
கீதயாழ்வீணையெல்லாங்கிளத்தியமடவார்சூழ்ந்தார். (௧௧)

நடித்திடவல்லராகம்பாடியபிநயங்காட்டப்
படித்திடுபுராணமெல்லாம்பழமறையோர்களோத
விடித்திடுமுரசம்பேரியிலங்கிடவாமக்கண்டோ
டடித்திடவிருந்தான்பாரிற்சுரர்கணாயகனுநாண. (௧௨)

கயிலையிலிலங்குமீசன்கமலத்துவாழும்வேதன்
மயிலினிற்றோன்றும்வீரன்வந்தெதிர்மலைந்தாரோனு
மயுதயானையின்பலத்தையடைந்தயானவனைவென்று
புயனிறத்தவனும்பொன்றப்பொருவனென்றிருந்தான்மன்னோ. (௧௩)

முன்றிலின்மருங்குசூழமுன்னூறுமிதங்கள்மீதி
னொன்றியமறையோர்மன்னனருலப்பிலாமனிதரொல்லாஞ்
சென்றினிதிருத்தலோடுஞ்சிறையிருந்தவர்கடம்மைக்
கன்றியசினத்துக்கஞ்சன்கடிதினிற்கொணர்மினென்றான். (௧௪)

உக்கிரசேனன்வண்மையுயர்வசுதேவனொப்பில்
சக்கரன்றன்னைத்தந்தாடவநெறித்தேவகன்று
ணக்கிரமத்துக்கஞ்சனன்னையோடவரையெல்லா
முக்கிரக்காவலாளருறுதளையுடன்கொண்டேகி. (௧௫)

கஞ்சன்முன்காட்டலோடுங்கடலின்வாசுகிவாய்வீழ்ந்த
நஞ்செனக்கனன்றுநக்குநந்தன்றன்மைந்தன்வைது
மஞ்சர்கள்மடிதல்காண்மினென்றுமற்றவரையெல்லாம்
விஞ்சியவிதணின்மீதினேற்றினன்வினையம்வல்லான். (௧௬)

நந்தகோபன்றனுயர்திரளொடும்நண்ணிநெய்பா
லிந்துவைநிகர்த்தவெண்ணெய்ததியிவையெல்லாங்கொண்டு
வந்திடக்கஞ்சனோக்கிமணிமுடிதுளக்கிவஞ்சச்
சிந்தையிற்கனன்றுநீயிர்செருக்கிரிதன்மீதென்றான். (௧௭)

ஆயவனுரைத்தலோடுமாயர்களோடுநந்தன்
றூயதாமிதணின்மீதிற்றுலங்கியேயிருந்தான்கஞ்சத்
தீயவன்செயலைநோக்கித்தேவர்கோன்முனிவர்சூழ
மீயுயர்விசும்பினெய்திவிளங்கினன்விபுதரோத்த. (௧௮)

வேறு. இடியெனப்பிளிறிக்கண்டையிரட்டல்கழொழவே
கொடியதாய்வருகுவலையாபீடமேற்கொண்ட
கடியனுயமாபத்திரன்கஞ்சனுக்கிளைய
நெடியனுறியக்குரோதனோடெண்மரும்நின்றார். (௧௯)

சகலன்முட்டிகன்சாணூரன்சலதனென்றிவர்கள்
நிகரின்மல்லர்களெண்ணிலர்நிறைந்தெங்குஞ்சூழக்
ககனமஞ்சிடத்தவண்டைமல்லாரிகள்கறங்கச்
சிகியெழுங்கணர்சென்றுமன்னடியிணைதொழுதார் (௨௦)

சிகரவாயிலிற்சினத்தமாபத்திரனுடனே
நிகரிலாதவெங்குவலையாபீடத்தைநிறுத்தி
யிகல்செய்சாணூரயாதவன்மதலையைச்செற்றென்
பகையகற்றுதியென்றவன்பகர்ந்திடும்வேலை. (௨௧)

கஞ்சன்முயற்சிப்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௩௩௮௯.

௫௪. வது—குவலையாபீடமகாபத்திரன்வதைப்படலம்.

ஆயன்மாதவனச்சுதானந்தகோவிந்தன்
பேயினாருயிருடனுகர்ந்தருளியபெரியோன்
றூயவன்குடக்கூத்தன்மால்சோதிபாற்கடலோன்
வேயையூதியவித்தகனெனவினையறுமே. (௧)

என்றுகிட்டிசையெழுதலும்விரைவினீராடி
மன்றல்மாலைதித்திலவடமார்பினின்வயங்க
வென்றியந்தும்பைபுனைந்துகற்கச்சையும்விளங்கத்
தன்றுணைப்பெரும்புதல்வரோடெய்தினன்றனிமால். (உ)

பொதுவர்தம்புதல்வர்களிருபுடையினுமார்ப்ப
மதுரைவீதியிற்சசிவண்ணனுடன்வரவணங்கி
யதிரதக்குழாமயங்கரிதேரணிநிறையு
மதியுறுங்கொடிஞ்சிகரத்தின்வாயிலிற்சென்றார் (௩)

வேறு. கோடுடைக்கிரிநிகர்குவலயாபீடமேற்
பீடுடைப்பாகன்மாபத்திரப்பெயரினு
னுடகக்கோயில்வாயிலினடைந்துட்புகு
மேடுடைத்தொடைகொண்மார்பினனைநில்லென்றனன். (௪)

என்றலுமாயவனிடையர்தஞ்சிறுவருஞ்
சென்றியாமரசர்கோன்செல்வமேகீக்கிமீள்
கின்றனம்விடுதியாற்கேழிலாப்பாகனே
யுன்றனக்கியான்புகின்வருவதென்னுரையெனு. (௫)

தூயவன்புகறலுஞ்சுடரழற்கண்ணுடைத்
தீயவன்கரிதனைச்செலவிடுத்தேயிசித்
தாயர்மன்புதல்வனேயகல்கிலாதுன்னுயிர்
மாயுமென்றுரைசெயமாயவன்கூறுவான். (௬)

தடையெனைச்செய்திடிற்றந்தியோடுன்னையுங்
கடிதினிற்கொல்குவனென்றலுங்கதமுறு
விடியெனக்குமுறுமாகரிதனையிறைவன்மேற்
படியதிர்ந்துறவிடுத்தான்கொடும்பாகனே. (௭)

ஆயிரந்தோலினின்வலியுடைத்தாயழற்
பாயும்வெங்கண்ணுடைப்பகடடர்ந்தோர்கையாற்
றூயமந்தரமுறச்சூழ்ந்தவாசுகியென
மாயவனுடலினைச்சுற்றிவாங்கியதரோ. (அ)

ஆலமாமென்னவங்கழலுமாகரிகரங்
காலபாசம்மெனக்கட்டலுமொருவினு
னுலுசாலினினுமைந்தேகியேநாரணன்
வாலிநேர்கையினுற்பற்றியேவாங்கினன். (௯)

கலுழனுகந்தனைக்கவ்வியேதிரிவபோ
னிலனின்மேல்விற்கடைநீளமையந்துற
வுலகுளோர்மகிழ்வுறச்சுற்றிவிட்டும்பருன்
வலமதாய்வரினிடம்வந்தனன்மாயவன். (௧௦)

இடம்வலஞ்சாரிகையெண்ணிலதாகநீள்
படியினிற்பகடுறும்பகடுசீறிடமுகத்
திடிவிழுந்தாலெனக்குத்தியேயிறையவன்
கடிதினிற்புடவியிற்கால்விசைத்தோடினான். (௧௧)

சரிகரத்துறுமவன்போலவெய்திக்கண
ணிருநிலத்திடைவிழுந்திடவிருசொம்பினாற்
றரையினிற்குத்திடத்தப்பியேயோடினான்
கருவரையொத்தகைம்மாகதமுற்றவே. (௧௨)

வெஞ்சினத்தோடுதன்மேல்வருங்கரியின்முன்
னஞ்சனக்குரிசில்சென்றேபராவொத்ததன்
விஞ்சுநற்கையினைப்பற்றிவீழ்ந்தேபக
டஞ்சிடக்கொம்பிரண்டும்பறித்தானரோ. (௧௩)

கொம்பிரண்டும்பறித்தேயொருகொம்பினால்
வெம்புமாபத்திரன்மடியமேல்மோதினு
னும்பலும்பாகனுமோங்கல்போலேவிழ
வம்பரத்தமரர்கள்மலர்பொழிந்தாடினார். (௧௪)

குவலயாபீடமகாபத்திரன்வதைப்படலமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௩௪0௩.

௫௫. வது — சாணூரன்வதைப்படலம்.

இலகியவடிவஞ்செல்வமிளமைதாய்தந்தைதாரஞ்
சலலிபியென்பதுன்னிச்சமனுலகடையாவண்ண
மலையுறுமளக்கர்மீதினராவணைத்துயிலுமைய
னலனுறுபெயரைநித்தநவின்றியாம்வாழ்வந்தொண்டீர் (௧)

பவமெலாமாளவேமாபத்திரனோடுபட்டுக்
குவலயாபீடம்வீழக்கோவிந்தன்முன்னோன்றன்னோ
டவனியோர்துதிப்பயானைக்கொம்பினையங்கைபற்றி
நவையிலாவிடவன்றுமனண்ணிடவவையிற்சேர்ந்தான். (௨)

குங்குமஞ்செறிந்ததென்னக்குருதியின்குழம்புநில
வங்கமேலிலகவம்பொற்கச்சையினழகுதோன்றச்
செங்கையிற்கடகமின்னச்சிந்துரத்திலதந்தோன்ற
மங்குலின்பிழம்பிதென்னமலர்க்குஞ்சிவயங்கவந்தான். (௩)

தாளரிச்சிலம்பினோசைதழங்கிடக்கேயூரங்க
டொளிவிடயிலகக்காதிற்குண்டலந்துலங்கித்தோன்ற
நாளலர்கமலமன்னநன்முகம்வயங்கிக்காட்ட
காளமாமேகம்போலக்கஞ்சன்றனவையுட்சேர்ந்தான். (௪)

மறையவர்தமக்குவேதமகாமுனிவர்க்குச்சோதி
வெறிமலர்க்குழலினார்க்குவேள்வசுதேவனுக்குச்
சிறுவன்சிட்டருக்குநல்லவமிர்தந்தீயோர்கட்கெல்லா
மறலிகோபாலற்குற்றவனப்பெனவயங்கினின்றான். (௫)

சீலமில்லாதமல்லர்திரள்களுக்கிடியேபோன்றான்
கோலமில்கஞ்சனுக்காண்டுயிர்கொளுங்கூற்றம்போன்றான்
ஞாலமெண்வடமீனென்னநங்கைதேவகிதனக்குப்
பாலனைப்போலநின்றான்பரம்பொருளாயசோதி. (௬)

அஞ்சனக்கொழுந்துபோலவச்சுதன்வயங்கித்தோன்ற
வஞ்சகக்கஞ்சனெஞ்சமறுகிடவிருந்தகாலை
விஞ்சியமல்லர்தம்மிற்சாணூரன்வெகுண்டுநந்தன்
மஞ்சனைநோக்கியென்னோடமர்பொரவருதியென்றான். (௭)

என்றலுநந்தன்மைந்தனிளநகையெய்தநோக்காக்
குன்றெனவுயர்ந்துதண்டதரனஞ்சக்குமுறுமுன்னை
வென்றிடுமாற்றலில்லேனென்றுரைவிளம்பலோடுங்
கன்றியசாணூரன்றான்கதமுறக்கழறலுற்றான். (௮)

பெகனகன்காலியானோன்பிறையெயிற்றரிட்டன்கேசி
சகடனென்றிவர்கடம்மைவதைத்துயர்தனுமுறித்து
நிகரில்வெங்கரியைச்செற்றநீயெனக்கெதிராமென்றே
புகலுஞ்சாணூரன்றன்னைப்புயல்வணனோக்கிச்சொல்வான். (௯)

அரசனும்போசன்மைந்தனருத்தியாய்நோக்கிவிஞ்சப்
பொருவனென்றுரைக்கப்பொங்கிப்புகையுயிர்த்தெதிர்த்தலோடுங்
கருமுகில்வண்ணன்முன்னோன்கடியமுட்டிகனையெய்த
விருவரும்பொருதார்கண்டாரிரங்கிநின்றிவைகள்சொல்வார். (௧0)

வரையெனவுயர்ந்தோர்முன்னர்வருமிளங்குமரர்தம்மைச்
சரிபொரவிட்டகஞ்சன்றருமத்துக்கதிகனென்று
ரிருகணீர்சோரக்கையைநெறித்துத்தேவகியின்னேங்கி
வெருவினள்கணவனோந்துவிம்மிடவவனைநோக்கி. (௧௧)

தேவகிவெதும்பியுள்ளஞ்சித்திரகாயத்தின்வா
யாவகன்றகப்படக்கண்டிரங்கிமெய்தளர்ந்துநோக்கு
மாவிருகண்ணீர்சோரவழுங்கியதெனவும்வெய்ய
பாவகனிடத்தினுற்றபைங்கிளியெனவுநொந்தாள். (௧௨)

உக்கிரசேனன்றாயதேவகனுயருநந்த
னெக்கனருள்ளமாவிநிலைதளர்ந்தயரும்வேலை
கொக்கரித்தடர்ந்துவந்துகுறுகினன்சாணூரன்றான்
சக்கரத்தலைவனோக்கிநகைசெய்துதாக்கினானால். (௧௩)

வேறு. நோக்கினர்நகைத்தனர்நொடிக்குமுன்னெதிர்த்தே
தாக்கினர்தடக்கைகள்முறுக்கினர்தடுத்தா
ருக்கமோடடர்த்தனருருக்கினர்சினத்தா
ராக்கையினுறக்கடிதுகுத்தினர்களார்த்தார். (௧௪)

தட்டினர்கையொடுகைதழற்கணுறவேமுன்
கிட்டினருரத்தின்மிசைகுத்தினர்கள்கிட்டா
தொட்டினர்நெருக்கினருறுக்கினருரத்தா
லட்டதிசையுற்றகரியாமெனவடர்த்தார். (௧௫)

ஊருவினடித்தனர்கையோங்கினர்குதித்தார்
சாரிகையுறக்கடிதுவந்தனர்சலத்தா
னேருறவுடற்றமுவிநின்றுநொடியின்முன்
பாருறவிழுந்தனரெழுந்தனர்பதைத்தே. (௧௬)

அதிர்த்துவருசாணூரனடற்கைகொடுரத்திற்
புடைத்திடவதற்கிறைபொறுத்தவனையுற்றுப்
பிடித்தொருகையாலுடல்பிளப்புறவடித்தே
யெடுத்தெறியமேகபதமுற்றுநிலனுற்றான். (௧௭)

சிதைந்துடல்பிளந்தழல்கொள்சாணூரன்மடிந்தா
னெதிர்ந்தனனிராமனுடன்முட்டிகனிடித்தே
யதிர்ந்தகனமாமெனவதிர்த்துநனிசீறிக்
கதந்தருமனத்தனிருகைகொடுபுடைத்தான். (௧௮)

விழித்திருகணுங்கனல்மிடைந்திடவுருத்தே
தெழித்துவருமுட்டிகனையுற்றெதிர்சினத்தாற்
கழுத்தினைமிதித்திருகையாலுமிருகாலைக்
கிழித்தனனிராமனுயர்கீர்த்திநிலைநிற்க. (௧௯)

மல்லர்கடிரண்டெதிர்மலைந்தவரையெல்லா
மொல்லையினுரத்தின்மிசைகுத்திமெய்யொடித்துங்
கல்லிடையடித்துமிருகால்கரமுறித்துஞ்
செல்லுறவெறிந்துவதைசெய்தனனிராமன். (௨௦)

சீறிவருசாணூரனுடன்சினமுதிர்ந்தே
மாறிவருமுட்டிகனுமல்லருமடிந்தார்
தேறினர்கடேவகியுயர்ந்தவசுதேவ
னீறில்புகழ்தேவகன்முனோனிவர்களெல்லாம். (௨௧)

துந்துமிமுழங்கியதுதூயமலர்தூவி
யந்தரமிசைத்தவர்களோடமரரெல்லாஞ்
சிந்தைமகிழ்வோடுதுதிசெய்தனர்சிறந்தே
நந்தனொடுமாயர்துயரற்றுநலனுற்றார். (௨௨)

சாணூரன்வதைப்படலமுற்றிற்று. ஆ திருவிருத்தம் - ௩௪௨௫.

மாதவன்மாயவன்வாமனன்வானோர்க்கமுதீய்ந்தான்
சீதரனாராயணனுயர்பரமன்றிறனேமிப்
பூதனையுயிருண்புனிதன்முராரிபுயல்வண்ணன்
வேதனையருளும்வித்தகனெனவேவினைதீரும். (௧)

மல்லர்மடிந்தார்சாணூரன்முட்டிகன்மாண்டாரொன்
றெல்லையிறுன்பமெய்தியகஞ்சனிடியேபோலுஞ்
சொல்லுறவாயன்சுதர்களையோட்டித்துறமின்க
ளொல்லையில்நந்தன்காற்றளையிடுமென்றுரைசெய்தான். (௨)

சீலமிலாதவுக்கிரசேனன்வசுதேவன்
கோலமிலாதத்தேவகன்வஞ்சக்கொடியோரை
ஆலங்கர்த்தேகொல்லுமினுயர்பதிமேவி
ஞாலமிசைத்துய்நற்பவுசெல்லாந்தருவீரால். (௩)

என்றுமுனிந்தேகஞ்சனுரைத்தானிவைகேட்டார்
நின்றுநடுங்கும்போழ்தினில்நீலத்திருமாலோர்
குன்றினும்விஞ்சுங்கோளரிபோலக்குதிகொண்டே
சென்றனன்மீளியாதனமீதிற்றிகழ்வான்முன். (௪)

வந்தெதிர்நின்றமாமணிவண்ணன்றனைநோக்கிச்
சிந்தையழன்றோர்கேடகம்வாளோடுயர்தீப்போ
லந்தகனைப்போனின்றடர்வானையரிநோக்கித்
தந்தியையுறுவெங்கேசரிபோலச்சலமிக்கான். (௫)

அழலுறுநயனக்கஞ்சனையாங்கேமுடிபற்றி
யெழிலுறுவண்ணன்சுற்றிடவெறிசக்கரமேபோற்
சுழலமணிப்பூண்குண்டலமோடுஞ்சுடர்வாளுங்
கழலநிலந்தானதிரவீழ்ந்தான்கனல்போல்வான். (௬)

நிலனுறமாண்டான்மார்பினினின்றநெடுமால்மேல்
மலர்கள்பொழிந்தேவானுறுமிமையோர்திரள்வாழ்த்த
வலனுறுகஞ்சற்கிளையவர்வடிவாள்சிலைகையி
னிலகியவெண்மரார்த்தனரெய்தார்சரமாரி. (௭)

சீலமில்கஞ்சனிளைஞர்களெண்மர்திறல்வீர
ராலமெனத்தாமெய்துமெறிந்துமடர்வாரை
மாலெதிர்சென்றுமற்றவரைத்தாமதியாதே
காலொடுகைகைப்பற்றியெறிந்தான்ககனத்தே. (௮)

அம்பரமீதிறவிதளர்ந்தேசுழல்கின்ற
பம்பரமேபோல்வீழ்ந்துமடிந்தார்படியின்மே
லும்பர்கள்கண்டேயாதவசோதியுலகுண்ட
வெம்பரவாழியென்றுசொரிந்தார்மலர்மாரி. (௯)

கஞ்சன்வதைப்படலமுற்றிற்று. ஆக திருவிருத்தம் - ௩௪௩௪.

கொலைபலசெய்தோர்பிறர்பொருள்கவர்ந்தோர்குருவினையிகழ்ந்திடுமூர்க்கர்
நலமிலியானோர்பஞ்சபாதகத்தர்நவையுறுகுணத்தினரெனினு
மலர்மகள்கொழுநன்றன்றிருப்பெயரைமறக்கலாவடியரைவணங்கி
னலரிகாணிமம்போலருவினையொருவவமரர்கடுதித்திடவாழ்வார். (௧)

சினமுறுகஞ்சனிளைஞர்களுடனுமடிந்திடச்சிறந்ததேவகியு
மனமகிழ்சூரசேனன்றன்சேயும்வல்வினையொருவியேவரவே
யனகன்வந்தெதிர்சென்றிறைஞ்சிடக்கண்ணீர்நிலனுறத்தழுவியின்புற்றார்
கனகன்வல்லுரத்தைப்பிளந்தவனன்னைகயின்முலைப்பாலினைநுகர்ந்தான்.

மாலுறுமகிழ்வாலிருகணுலன்னைவதனத்தைநோக்கியங்குரைப்பான்
பாலனும்பருவத்தென்விளையாட்டுக்கண்டிலையந்நீயென்ன
வேலவார்குழலியிருகணீர்சோரவிறுகுறத்தழீஇக்கொண்டென்மைந்த
சீலமில்கஞ்சன்றனைவதைத்தென்றன்சிந்தைநோயகற்றினையென்றாள். (௩)

அன்னையிவ்வசனமுரைத்திடக்கேட்டவரிவசுதேவனைநோக்கி
யிந்நிலமதனிற்றந்தைதாய்குற்றமற்றவில்லாளிவர்க்கெல்லா
மன்னமிட்டிலாதான்றன்றசையைத்தானருந்தியதொக்குமென்மகவாய்
மன்னயான்பிறந்துநீசிறையின்கண்வருந்தச்சோறருந்தியதென்றான். (௪)

என்றுரைத்திரங்குமைந்தனைமார்பினிறுகுறத்தழுவிமெய்ந்நெறியி
னென்றியசிந்தையுயர்வசுதேவன்விளம்புவானுன்னையான்பயந்து
கன்றியசினத்துக்கஞ்சமன்னிருத்துங்கடுஞ்சிறைப்பருவரல்கழிந்தே
யின்றினிதிருந்தோமின்னநீசெல்வங்கதியெலாமீகுவையென்றான். (௫)

தந்தைதாய்மொழியுமுரையினைக்கேட்டுச்சக்கரத்தவன்மகிழ்வேலை
சிந்தையினுவக்குமுக்கிரசேனன்றேவகனக்குரூரன்சீர்
முந்தியநெறியாருத்தவன்முதலோர்முடுகியவன்புதானிறைய
வந்துமாயவனைத்தழுவிநற்கண்ணீர்வழிந்திடப்பெரிதுவந்திருந்தார். (௬)

காமனைப்பயந்தான்கழலிணல்மிதிக்கக்கஞ்சன்றான்மடிந்தமைகேட்டுத்
தாமுகமடித்தேயத்திவெம்பிராத்தியிருவர்தேவியர்தளர்ந்தழுதார்
மாமனுங்கஞ்சச்சவத்தினையெடுத்துமணங்கமழ்சந்தனமரமா
ரீமமீதினிலிட்டுயரமாமாயன்யமுனைநீராடியேகினனால். (௭)

முரசுடன்பேரிகாகளஞ்சின்னமுழங்கிடக்கதலிகள்கன்னல்
விரைசெறிபூகம்வீதியினிலங்குபூரணபொற்குடம்விளங்க
வரசர்கள்வணங்கவுக்கிரசேனன்றனக்குயரருந்தவத்தினர்கள்
வரிசையிற்றுலங்குமணிமுடிகவித்தார்மாயவன்கிளையெலாமகிழ. (௮)

வீதிகடோறுமகரதோரணங்கள்விளங்கிடத்தூபமுந்நிறைய
வோதையார்கடல்போற்பலவியமுழங்கவொண்டவக்கற்கன்மாயனுக்குச்
சாதகமுடித்தபின்வசுதேவனுமெனநற்பெயர்சாற்றி
வேதநூல்வழியின்னவிணுருதிகள்விடுத்துபாயனமுஞ்செய்தான். (௯)

நந்தகோபன் றனடியிணையிறைஞ்சினா ரனன்முன்னவனுடனு
மெந்தைநீயெம்மையீன்றவளசோதையென் றுரைத்திந்நகரின்கண்
வந்திடுகருமமுடித்தபின்யாமுன்மனையிடத்தெய்துவமென்று
சிந்தையின்மகிழ்வால்நவமணிக்கலன்கள்சிறந்தபொன் னுடைகளளித்தான்

ஆயர் தம்பெருமான் சிறுவனையன் பினணைத்திருநயனநீர்சோர
மாயவனினையான்காண்கிலாமனையின்வழங்குவதெங்ஙனமெனவே
தீயுறுமெழுகுபோன்றுளமுருகிச்சிந்தைவெந்துயரொடுமேகத்
தூயநற்றுணைவரொருவிலாதிரங்கித்தொழுதுகண்ணீர்விழப்போனார்.

உக்கிரசேனன் முடிசூடுபடலமுற்றிற்று.
ஆ திருவிருத்தம் - ௩௪௪௫.

---

௫௮. வது—குருதட்சணைப்படலம்.

தந்தியின்வெரிநிற்றனிக்குடைகவித்துத்தரணியையாள்கின்றபதமு
மிந்திரன்றிருவுமளகைமன்னிஸையுமெழிலுறுசுவர்க்கத்தினியல்பு
மந்தரத்தெழுந்ததனுவெனமறையுமறிந்துநீரரிதிருப்பெயரைப்
புந்தியினிருத்தியழிவிலாப்பதத்திற்பொருந்திடவடியராய்வாழ்மின். (௧)

தூயதாமவந்திமாநகர்தன்னிற்றுலங்குசாந்தீபினிதாளின்
மாயவன்முலகேதனனுடனும்வணங்கிநீகுருவெனமகிழ்ந்தே
யாயவனருளவருமறைநாலுமாறங்கஞ்சாத்திரம்புராணம்
நேயமாங்குசேலனுடனொருநாளினெறியுறவறைந்தனனம்மா. (௨)

அன்றியுஞ்சாந்தீபினியுபதேசத்தரியமாதனுவினூலறிந்தே
யின்றுனக்கியான்செய்தெக்கணையேதென்றியம்புவாயென்றரியோத
வன்றுலகளந்தவரியைவாரிதிநீரடர்பிரகாசநற்றுறையிற் [ன்முன்.
பொன்றினன்முன்னாளெனக்கொருபுதல்வனவனைநீகொணர்கெனப்புக

வேறு. மறையவன்மொழியக்கேட்டுமகரவாரிதியினெய்தி
யிறையவன்வருணன்றனையீகுவாய்சுதனையென்ன
வறனறியாதபஞ்சசனனந்தமகவைநுங்கி
யுறைகுவன்வாரிதன்னுளுத்தமவென்றானன்றே. (௪)

பரவையினெய்திப்பஞ்சசனனைச்செற்றகன்றபாரின்
மருதிறவுதைத்தகோமான்மற்றவன்வயிற்றைப்போழ்ந்தே
யிரவியினவிர்கொண்டோங்குபாஞ்சசன்னியத்தையேரார்
கரதலம்பற்றியண்டங்கலங்கிடவூதினானல். (௫)

அந்தணன்மகனைக்காணுவந்தகன்புரத்தினேக
வந்தனனியமன்மாலினடிமிசைவணங்கிநின்று
நந்தன்மாமைந்தனுகிரான்முகன்றந்தையாகு
மெந்தையேமறையவன்றனெழிற்சுதனிவனென்றீந்தான். (௬)

மாயவ... மறலியீயுமதலைதன்னுடனுமெய்தித்
தூயசாந்தீபினிக்கச்சுதன்றனைக்காட்டலோடு
மாயுமாமறைவல்லோனுமகமகிழ்ந்தாசிகூறி
நேயமொடமிழ்தளித்துநின்னகரிடத்தேகென்றான். (௭)

அன்னதுசொன்னசாந்தீபினியடியிறைஞ்சியையன்
றன்னிகரிலாதமுன்னோன்றன்னுடன்மதுரையெய்தி
மன்னவன்வசுதேவன்றன்மலரடிதொழுதபின்ன
ரன்னைதன்னடிவணங்கவவளணைத்துச்சிமோந்தாள். (௮)

ஆயர்தம்பதியைவிட்டுவண்டலாயுதனன்னையெய்த
மாயவன்றன்னையீன்றாளுடன்வசுதேவனுக்குத்
தூயதேவியர்களானோர்பதினெண்மர்துலங்கிச்சூழச்
சேயிருவோர்களோடுஞ்சிறந்தினிதிருந்தானம்மா. (௯)

வீயவெவ்வினைகணீதிவிளங்கிடவுதையமான
மாயவன்றன்னைநோக்கிமகிழுந்தேவகியாமங்கை
தூயமேனகையுநாணுஞ்சுபத்திரைதன்னையீன்று
மாயிருஞாலந்தன்னில்வயங்கியேயமருநாளின். (௰)

குருதட்சணைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௪௫௫

---

௫௯. வது—உத்தவப்படலம்.

வேலையைவரையாற்கட்டிவிலங்கலோடிலங்கைமேவிச்
சூலியைக்கயிலையோடுமெடுத்ததுன்மதியோன்சென்னி
ஞாலமேற்றுணிந்துவீழநல்லபல்லத்தையேவி
நீலமால்வரைபோல்நின்றானடியிணைநெஞ்சுள்வைப்பாம். (௧)

மாதவன்மதுரைதன்னின்வைகிடுந்தினத்தோர்நாளின்
நீதியுத்தவனைநோக்கிச்செப்புவானெனக்கன்பாய
தாதையாநந்தனொன்றாயனாளசோதைநேய
மாதராவென்னையோவும்வருத்தம்நீயகற்றவேண்டும். (௨)

என்னுயிர்த்துணைவநீயேயிக்கணமேகியாயர்
தன்னகரதனிற்பின்யான்வருகின்றதன்மைசாற்றி
யன்னையைப்பிதாவைத்தேற்றியாயர்கள்மடவாராய
மின்னனாரிடர்நீக்கிமீள்தியாலென்றுரைத்தான். (௩)

இந்திரைகொழுநன்கூறவிரதமீதுத்தவன்போய்ச்
சிந்தையின்மகிழ்ச்சியோடுமாயர்தம்பதியைச்சேர
நந்தன்வந்தணைத்தேயின்சொல்நவின்றன்னமருந்துவித்துச்
சந்துதண்மலரளித்துப்பின்னிவைசாற்றலுற்றான். (௪)

வேறு. மாயவன்றானிதினிருந்தானோவீண்டுவருவனோவடமதுரைமருவினானோ, தாயெனவேயசோதைதனைநினைப்பனோதன்றந்தையென்றேயென்மேலிற்றயாவைப்பானோ, ஆயர்தங்கள்சிறுவரையுமறந்தானோதானன்பினுறுமரிவையரையெண்ணிலானோ, தூயபசுத்திரளுடனேதோன்றக்காணேன்றொல்வினையேனென்செய்கேன்சொல்வாயென்றான். (௫)

தீயாலுமழையாலும்விடையினாலுஞ்சிறியெழுமரவாலும்பரியினாலு, மாயாமலெனைக்காத்தான்வருகிலானோ வனத்தினூறுகோக்களெல்லாமவனையுன்னி, மேயாதுவெருண்டோடும்வரையிற்கானில்வெறுநிலத்தினதிமணலின்விளங்கியெங்கும், காயாம்பூவண்ணனடிகாணுந் தோறுங்கனலினூறுமெழுகாவேனென்றுசொல்வான். (௬)

வேயோசைகேளாதசெவியினாரும்விளம்பியசொல்லழல்நாராசம்போற்றைக்கும், காயாம்பூமேனியனைநோக்காக்கண்கள்கமரினூறுகுழியெனவேகாணுதொன்றும், பேயாகித்திரிகின்றேனென்றுநைந்துபெருந்தாரையாய்நயனம்புனல்கள்வீழ, வாயாலொன்றுரைக்கிலனுள்வெதும்பிவிம்மிவாய்விட்டங்கரற்றியவனிரங்குங்காலை. (௭)

அன்னநடையாகிய மின்னசோதையெய்தி யாயர்குலநாயகனைநோக்கிஞால, மன்னவனும்வட மதுரையெய்திவாழும்வஞ்சனைக்கஞ்சனைவதைத்துமகிழ்ந்துபின்ன, ரன்னையெழிற்றேவகியாய்த்தந்தைதானு மருள்செறியும்வசுதேவனாகிப்போனாற், கென்னவுன்னியிரங்குகின்றாயரசர்மைந்தனிடையர்சுதனாகுவனோவென்றுசொல்வாள். (௮)

உத்தவனேகேட்டியென்றன்மைந்தனென்னையுவந்துமுலைதாவென்றுகடையுந்தாழி, மத்தினையேபிடித்துநகைசெய்தவாயின்வசனமுகங்கண்காதுமார்புகாணே, னித்திலத்தாவடமசையச்சிலம்புமார்ப்பநிருத்தமிடுந்தாள்காணேன்வெண்ணெயேந்துங், கைத்தலத்தினெழில்காணேன்கறையினார்த்தகயிற்றுடனுந்தவழ்ந்துசெலுங்கவானைக்காணேன். (௯)

கன்றினங்கடனைமேய்க்குங்கோலுமீதேகறையினின்யான்கட்டிவைத்தகயிறுமீதே, சென்றுதாழியையுடைத்தமத்துமீதேசிகைமிசையின்வயங்குமயிற்பீலியீதே, தன்றுணைவர்மருங்குறப்பார்மரங்களெல்லாந்தழைத்திடவேதானூதுவேயுமீதே, யென்றனையுமறந்துவடமதுரைக்கேகுமென்மகன்றான்வருகிலன்யானென்செய்கேனே. (௧௦)

இனையனவெலாமொழிந்துமைந்தன்மேனியெழில்நினைந்து விளையாடுந்திறத்தையுன்னித், தனமுறுபால்பெருந்தாரையாகியோடத்தடமலர்க்கண்ணீர்முலையிற்றதும்பியோட, மனமுருகியுளம்வெதும்பியுருகுகின்றமங்கைதனைநந்தனனுமறிஞனோக்கி, யனநடையாயம்மதலைக்கழுகின்றாய்நீயறிவிலியோதுயரொழிதியென்றானன்றே. (௧௧)

நங்கையழக்கொழுந னெய்தித்தடப்பப்பின்னர் நந்தனிரங்கும்போழ் திலசோதையான, மங்கைதுயரொருவுகெனமாறிமாறிமாயவனுமிறையை யுன்னுமவளைநோக்கிச், செங்கைகுவித்தேதொழுதுமறைக்கும்யோகீசு ர்தமக்குமெட்டாததேவதேவ,விங்கிவர்க்குச்சுதனுகியன்பை யீய்ந்தாயென் றுரைத்தேயுத்தவன்ருனியம்பலுற்றுன். (கஉ)

அருவனையின்மிசையினெய்தியனந்தகால மங்கிலமுணவாகவளப்பில் லாயோகம், பெருகுதவத்தினர்கள்பெறுமின்பந்தன்னைப் பெற்றவர்நீ ரும்பெருமைபேசுவார்கள், நிரையமகலுயர்கதியேயடைவாரீதுநிச்சயமா மென்றுரைத்தானுத்தவன்ரு, னிருதயத்திவிருவர்களுமாயன்சீரையெண் ணியெண்ணியிராமுழுதும்விழித்தாரன்றே. (கங)

மறுவில்பரமேட்டிபுகழ்பாடியாடிமனம் வேறுவைக்கிலராமன்பர்த ங்கள், பிறவியெனுமிருளொருவுஞ்சோதியெய்தும்பெற்றி யெனக்கங்குல றக்கதிரோன்ருேன்ற, நிறைததியைநிலைமத்தாற்கடைவோரெல்லாம்நெடு மாயன்கீர்த்தியினைக்கீதம்போல, வறைபவர்கள்குரலோசைசெவியினுரும மிழ்தெனவேகேட்டனனுத்தவன்ருனம்மா. (கச)

இரவியெழவாவணத்தினெய்துமாதரிரதமிசைவந்தனர்யார் முன்ன ரெய்தி,யரசரிலக்குரூரனென்றேபெயருமாகியச்சுதனைப்பிறிவித்துக்குரூர ஞ்செய்த, விரகனிவன்மீளவந்ததென்கொலென்றுவிளம்பினர்க்கேயறிந்த வருத்தவன்வந்தானென், றுரைசெய்யவரிவையர்களெல்லாங் கூடியுத்த வன் ருடனில்வணங்கியுரைப்பதானுர். (கரு)

அரியுன்னைவரவிடுத்தகருமமேதிங்கன்னைபிதாவின்பாலினேவினுனே, வெரியுருகுமிழுதெனவேயுருகுமெம்பெண்ணினைநினைக்கிலானஃதுமறிவா ம்யாங்கள், விரிமலரின்மதுவில்லாதொருவும்வண்டுவெறுமையனைவெறுத் துவிடும்வேசிதானுந், திரள்கனிகளுதிர்மரத்திற்பரவைதானும்போலவெம் மைச்சீதரனும்நினையானென்ருர். (கசு)

பூதனையினுயிர்கவர்ந்தமாயன்றன்னைப்பொருந்தியவெம்மாவிகொள்ள வருகிலானே, தாதையுடன்னைதனைமறந்துவேந்தர் தம்பதியிற்சார்ந்தவ ன்ருனரசர்பெற்ற, மாதர்தமைமணஞ்செய்வதல்லாலெம்மைமதித்திடுவ னேவிருந்தாவனத்திலன்று, சூதுநினைந்தம்மைவிட்டுப்பிரியேனென்றுகூ றுறவுசெய்தவன்றன்றூதாசொல்வாய். (களஎ)

கைகொடுகைகளைக்கோத்துக்குரவையாகக் களித்தாடிப்பாடித்தன்க டைக்கண்ணாலே, மையல்விளைத்தும்மையலால்மாதராரைமனத்தாலுமுள் கிலன்யானென்றுதானே, மெய்யுரைப்பார்போலிதங்கள்மொழிந்துநீண் டுவிளங்குவிருந்தாவனத்தினெம்மைவிட்டுப், பொய்யுரைத்துப்போனவன் ருனுகந்தன்னிற்பூமகள்பெட்புறவென்கொல்பொருந்தினுளே. (கஅ)

என்றரிதன்புகழ்பாடிக்களிப்பார் பின்னரிரங்கிடுவர்நகைத்திடுவரிறைவன்மேய்த்த, கன்றிதுவாமெனவணைப்பரிழுதுபால்நெய் கடத்தினுளவிவைதிருடுங்கள்வன்றன்னை, யன்றுமுதலின்றளவிப்பதியிற்காணோமென்பரடர்மழைகாத்தேயங்கையேந்துங்,குன்றினைத்தான்றொழுவர்கருமேகங்காணிற்குடமாடுகூத்தனெனவெழுவரம்மா. (௧௯)

உத்தவனைநோக்கியரிமயலினாலேயுருவறியாதயர்ந்துலகமெல்லாமுண்ட,வத்தன்விடுதூதுவனுமளியேகேளாயாரமதிவசந்தமெல்லாமனலாய்வீசுஞ், சித்தசன்வந்தெய்கின்றானவன்றன்கையிற்சிலையினுறுநாணன்றோநீயுமந்தோ, நித்தன்விருந்தாவனத்திலாவோடெம்மைநினைப்பதுண்டோபொய்யின்றிநிகழ்த்துவாயே. (௨௦)

அளிகேளாயரியெம்மேலாசையில்லையஃதறிந்தோமவனன்பைவிடுதுமென்றால், வினைவானமயல்கடல்போல்வளைந்துசூழமீண்டுமவனுருவையுள்கிமெலிவதாகி. யுளம்வேகக்கலைசோரநாணமேகவூதுகுழலிசைகேளாவுடனைகின்ற,வெளியேன்றம்முச்சியிற்றன்பாதம்வையாணிவன்புருடோத்தமனானதெங்ஙனென்றார். (௨௧)

தீதேதுமில்லாததெரிவைமார்கள்செயலினைக்கண்டுத்தவன்றான்றெரிந்துநோக்கிப், பூதானங்கோதானங்கனகதானம்புரிந்துபுவியின்வேள்வியைந்துஞ்செய்து, மாதானம்வழங்கியருந்தவங்கள்செய்தமாதவத்தோர்பெறாதநலநீயீர்பெற்றீர், தூதாகியெனைவிடுத்தவிறையும்மேலிற்சுரக்குமருளுடையோனீண்டடைவனென்றான். (௨௨)

நந்தனுடனசோதைசுதனென்றுநயநாரியர்கணாயகனென்றேமோஇப்பச், சிந்தைமகிழ்ந்துத்தவன்றாறுதிங்கள்சிறந்தாயர்பதிதன்னிலிருந்துபின்ன,ரிந்திரைதன்கொழுநனுடன்றந்தையன்னையிலங்கியவாய்ச்சியரிவரையிறைஞ்சியேத்தி, யந்தமுறுமிரதமிசையேறிநின்றாண்டன்பினுடனிவையிவையேயறைகின்றானால். (௨௩)

அன்றுலகமளந்தான்றனடிகடோயுமவனிநமசெடிகணமவவன்றான்மேய்த்த, கன்றுநமவாவுநமமயல்கொள்மாதர்கழலிணையிற்றாள்கள்நமகரத்தினேந்துங், குன்றுநமவெழில்மடவார் கலைகொண்டேறுங்குருந்துநமவென்றென்றேதொழுதுகூறி, மன்றல்மலர்பொழில்சூழ்மதுரையெய்திமாய னுடனிவையெல்லாமொழிந்தான்மாதோ. (௨௪)

சீதரன்றான்கேட்டருளிநகைத்துவந்துசீர்மையுறுமுத்தவனோடிரவிற்சென்று, மாதவஞ்செய்கூனிமனைவாயினெய்தவணங்கியவள்மாழையுறுவிதானந்தோன்றச், சோதியுறுதீபநிரைவயங்கத்தீபதூபமெழுமணிமாலைதுலங்கப்போற்றித், தாதவிழுமாலைநிறைமண்டபத்திற்றாமரைத்தாள்பன்னீரால்விளக்கினாளால். (௨௫)

குங்குமங்கத்தூரியுடன்பனிநீர்சேர்த்துக் குழைத்துநிறைசந்தனமெய்குளிரக்கொட்டிச்,சிங்கலில்வெண்பட்டாடைபுனைந்துகாஞ்சிதிகழ்ந்திடவேதனத்தினணிகலன்கள்யின்னத், தங்கமுறுசெங்கைதனிற்கண்ணனோடுதோளிருந்துதண்மலராம்பான்மீச்சூட்டி, யங்கையுறவணைத்திரதிசமழ்க்கமேவியனுராகக்கலவிசெய்தாளரம்பையன்னாள். (உகூ)

உத்தவப்படலமுற்றிற்று.
ஆ திருவிருத்தம்-௩௪அக.

---

௬0. வது—பாண்டவப்படலம்.

திருமகளும்புவிமகளும்நீளைமின்னுந்தேவியராச் சிறந்திடமாமதனன்றன்னோ, டருள்செறியுங்கமலபிரான்சுதனுமாகவண்டமெல்லாந்தன்னகட்டுளடக்குமையன்,கரமுடிதாள்விழிபெயராயிரமேயாகக்ககபதியின்வாகனமாய்ப்படையைந்தேந்தி, யுரகமுயர்மெல்லணையிலிலங்குகின்றவொருமுதலாமவன்புகழையுரைத்துய்வோம்யாம். (க)

மாயவனுங்கூனிதனைமகிழ்ந்தணைத்துமனையிருத்தியென்றவளையொருவிக்கேழற், றூயவனுமுத்தவனோடக்குரூரன்றுலங்குமிடத்தேகுதலுமவன்வந்தெய்தி, நேயமுடன்வணங்கியடிவிளக்கியந்தநீர்சிரத்திற்றெளித்துமணியவிர்களான்று, பாயுமெழில்மண்டபத்திலமர்தியென்னன்பாவமறவுயர்ந்தனன்யான்பரமவென்றான். (உ)

காந்தினிதன்சுதன்களித்துக்கழறுவானைக் கண்ணபிரான்றழுவியுடனிருத்திப்பாரின், வேந்தன்வசுதேவன்றன்கோத்திரத்துள்மேவியநீயென்றனக்குத்தந்தையன்றோ, பாந்தளுயர்த்தோனகரிற்குந்திதேவிபாண்டவர்களோடெய்தியிருந்ததன்மை, யாய்ந்தவர்களிடரொருவச்சேறியென்றேயரிமனையினெய்தவவன்விரைவிற்சென்றான். (௩)

வேறு. இரதமீதேறித்தூயவக்குரூரன்றானேகிச்
சரதநான்மறையோர்சேருமத்திமானகரிற்சார்ந்தே
விரதமாத்துரோணன்றன்னைவிதுரன்வீடுமனைக்கண்டு
சுருதிநூல்வழாதகுந்திசுதர்கள்பாற்சென்றானன்றே. (௪)

தருமனோடைவரெய்தித்தாடனிலிறைஞ்சலோடு
மருகணைத்தழுவிக்குந்திவணங்கிடமலர்க்கைதன்னா
லிருகணீர்சோரவேதானணைத்தபின்னெழிலாலோங்குந்
தெரிமணிமண்டபத்திற்சேர்ந்தினிதுரைக்கலுற்றான். (௫)

குந்தியுன்முன்னோன்றன்னைக்கொடியனாங்கஞ்சன்செய்த
வெந்துயரங்கள்வீயவிரலுடைமாயன்றோன்றிச்
சிந்தையின்மகிழ்ச்சியெய்தத்தீயவன்றன்னைச்செற்றே
யந்தமாமதுரைதன்னிலமர்ந்தனனென்றானன்றே. (௬)

ஆயவையெல்லாங்கேட்டாண்டழுதுபின்மகிழ்ந்துகுந்தி
பாயும்வெவ்வழலைசேரும்பழுவத்திற்பாண்டுவேந்தன்
மாயவேகளைகணில்லாவல்வினையேனும்வாடிச்
சேயிவரைவரோடுமிந்தமாநகரிற்சேர்ந்தேன். (எ)

பாதகனானபாந்தனுயர்பவன்பயத்தினுள்ளே
யேதமார்கழுவைநாட்டியெழில்கொள்வீமன்கழுத்தின்
மீதுறுமரவைக்கட்டிவியாளலோகத்திற்றள்ளி
யோதனத்தருநஞ்சிட்டானுய்ந்தனர்விதியாலென்றாள். (அ)

கொடியகானகத்திற்செந்நாய்க்கூட்டத்திற்குரங்கம்போல
விடவரவுயர்த்தோன்செய்யும்வினையினுளிருந்தோம்வெய்ய
கடியனாங்கஞ்சன்றன்னைக்களைந்தவன்களைகணாகி
யிடரினையகற்றிலுய்வோமென்றுதானிரங்கினாளால். (௯)

அவ்வுரையெல்லாங்கேட்டவக்குரூரன்றானைந்து
நவ்விபோல்விழியினாளேநாரணனருளினாற்றால்
வெவ்வினைசெய்வோர்மாண்டுவீழ்குவர்நிரையந்தன்னிற்
கவ்வைநீயொழிதியென்றுபின்னருங்கழறலுற்றான். (௧0)

மாயவன்மொழிந்தகேட்டிவஞ்சனைநும்மைச்செய்யும்
தீயவர்சிறிதுநாளின்மடிகுவர்திண்ணஞ்சிந்தை
நோயினையொருவுகென்றுநுவல்கின்றானெங்காய்நீயுன்
சேயினரோடுமாலைமறக்கலைதினமுமென்றான். (௧௧)

இந்தநல்லுறுதிசொல்லியெங்கைநீயிருத்தியென்னா.
வந்தனைமரசன்பாலினக்குரூரன்றானெய்தச்
சிந்தையின்மகிழ்ச்சியோடுமாதனஞ்சிறப்பவீய்ந்தே
யிந்திரைகொழுநன்கோடிருந்தனனோவாண்டென்றான். (௧௨)

என்றலுமக்குரூரனியல்பிலாக்கஞ்சன்றன்னைக்
கொன்றவன்தாய்தந்தைக்குக்கோலமாமகுடஞ்சூட்டி
என்றுதையத்தைப்போன்றெம்மிடரெலாமொருவமாயன்
வென்றிசெய்திருந்தானென்றுபின்னரும்விளம்பலுற்றான். (௧௩)

இருநிலமதனிற்செல்வமிளமையிவ்வுடனில்லாது
தருமபாவங்களிந்தத்தரணியுள்ளளவுநிற்கு
மரசநீயஃதுணர்ந்துன்னனுசன்றன்புதல்வர்தம்மை
வரிசையால்வளர்த்தியென்னமன்னவனுரைப்பதானான். (௧௪)

அறனெலாமறிந்துசொன்னாயக்குரூரவதெல்லா
மறையுறுவாய்மையாமுன்மருகரென்மைந்தரன்றோ
குறைவிலாவரசநீதான்கூறவேண்டுவதோவென்றங்
கிறையுமந்தனைத்தானீங்கியவணாநிறுத்திப்போனான். (௧௫)

பரியுறுவையமீதிற்பழனஞ்சூழ்மதுரையெய்தி
யரியினைவணங்கிக்குந்தியருள்செறிபுதல்வரோடு
முரகமீதுயர்த்தோன்செய்யுமுயரும்வஞ்சனையினுய்ந்தே
தெரிகிலாநயனனூரினிருந்தனர்செல்வவென்றான்.

மைத்துனரோடுங்குந்திவருந்துறுவசனமெல்லாம்
நத்துறுசெங்கையையனகையுடன்கேட்டுத்தீய்மை
யித்தலத்தியற்றினார்களிருநரகடைவரென்று
வித்தகன்மதுரைதன்னின்விளங்கியேயமருநாளின். (௧௭

பாண்டவப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௪௯௮.

௯௧. வது — சராசந்தனபசயப்படலம்.

இம்பரின்வரைபோலோங்கியெதிர்ந்திடுமிரவிசேயை
யும்பர்கள்வெருவத்தோளினெருக்கித்தன்னூரின்மேவுங்
கும்பகன்னன்றன்கைகால்குறைத்தவன்சிரத்தைநீளு
மம்பரத்திடையினிட்டவழகனைவணக்கஞ்செய்வாம். (௧)

சித்தசன்றன்னைத்தந்தோன்கஞ்சனைச்செற்றசெய்கை
அத்தியும்பிராத்திதானுமத்தனையணுகிவீழ்ந்து
கைத்தலமுதரத்தெற்றிக்கண்ணினீர்சோரச்சொன்னா
ரத்திறங்கேட்டமன்னனழலெனக்கொதித்தானன்றே.

மருகனைக்கொன்றமாயன்றன்னையான்வதைப்பனென்னாக்
கருகியசினத்தனாகிக்கரிபரியிரதமெல்லாந்
தருகுதியென்றுவெய்யசராசந்தன்கூறலோடும்
பெருகியவாரிபோலப்பெயர்ந்தனவனீகவீட்டம்.

சங்குகள்பணவம்பேரிசச்சரியிடக்கைதக்கை
மங்குலினிடிகளஞ்சமுழங்கிடவயவரெல்லாம்
பொங்கினாரிறுதிகாலத்தனைவரும்பொன்றத்தோன்று
மங்கைபங்காளனென்னமகதனுமெழுந்தான்மாதோ.

கரியினம்வரைகளேலக்கண்டைகள்கலிப்பச்செல்லப்
பரியினம்பவனமேயப்பார்மிசைப்பரந்துதாவ
விருநிலத்தக்குரோணியிருபத்துமூன்றுசூழத்
தெரிமணியிரதமீதிற்சென்றனன்மகதர்கோமான்.

அதிரதர்சூழப்பேரியறைந்திடுமமலையெய்த
வெதிர்நிகர்தோளின்மாதர்வெண்மையார்கவரிவீசக்
கதிரவன்றோற்றநாணக்கனகமாமவுலிமின்ன
மதுரையைவளைந்துசூழ்ந்தான்மகதராசன்றானன்றே.

ஆதவர்போசரெல்லாமாலங்காணிமையோரோலப்
பீதிகொண்டிரியும்வேலைப்பிறங்கலால்வருடங்காக்கு
மாதவன்முறுவல்செய்துமதிவண்ணனோடுந்தேரின்
மீதுசென்றடர்ந்துவிஞ்சுமீளிபோற்ருக்கினுல். (எ)

நீதியில்மகதராசனெடுவரைபோலநின்று
சீதரன்றன்னைநோக்கிச்சிறியனுமிவனேரல்லன்
பூதலத்தென்னோடேநீபொருதியோவிராமவென்ன
மாதவனகைத்துக்கஞ்சன்மாமனுக்கிவைசொன்னுனுல். (அ)

உன்னுடைமருகன்கஞ்சனுயிர்கவர்ந்தோனும்யானே
யென்னுடன்பொருவாய்நீயென்றியம்பியேயிலங்குகின்ற
தன்னுடைக்கரத்துச்சார்ங்கம்வளைத்துயர்சரங்கள்கோடி
மின்னுடைமேகம்போலப்பொழிந்தனன்வீரர்வீரன். (கூ)

அன்னதுகண்டுநெஞ்சமழன்றுயர்மகதன்சேனை
துன்னினர்கணையின்மாரிசொரிந்தனர்திசைகடோறும்
பொன்னெடுவரைபோற்ருேன்றும்புகரியம்பரித்தேர்தூண்டி
மின்னகுவேலும்வாளும்விட்டெறிந்தார்த்தாரன்றே. (க0)

இடிகளும்வெருவப்பேரிமுழங்கிடவிலங்குசங்கந்
துடியொடுகறங்கச்சின்னங்காகளந்துலங்கியார்ப்பக்
கொடிகுடை.கவரியோங்கக்கொடியவரெதிர்ந்துவானம்
வெடிபடச்சிலைநாணேசையுறச்சரம்விடுத்தார்மாதோ. (கக)

சக்கரமுசுண்டிகுந்தந்தண்டுயர்பிண்டிபால
முக்கிரமிக்கசூலங்கற்பணமுலக்கையொள்வாள்
கொக்கரித்தெறிந்துவெய்யகொடுங்கணைபொழிந்துசூழ்ந்தார்
நக்கனுன்முகன்வலாரிநாட்டங்கள்புதைத்தாரன்றே. (கஉ)

வேறு. முரசறைந்தனதிமிலைவளைமுழங்கினமுடுகி
யரசர்வெஞ்சினமடையவளவில்வெங்கணைபொழிய
விரதமுந்தியவரிதன்னெழில்கொள்வெஞ்சிலைவளைய
வுரகனஞ்சிடுபகழியுலகமெங்கணும்விசிற. (கஙு)

வீரர்தஞ்சிரமுருளவீறுவெங்கரிமிடைய
மூரிவெஞ்சிலைமுரியமுளுவெம்பரிமுடுகு
தேரினங்களுமழியவீடுசெம்புனறிரைகொள்
வாரிமண்டிடவெழில்கொள்மாயன்வெங்கணைமுடுக. (கச)

கரமிழந்தனர்சிலர்கள்கதையிழந்தனர்பலர்கள்
குரமிழந்தனகுதிரைகொடியிழந்தனரிரதர்
சிரமிழந்தனர்வயவர்சிலையிழந்தனரரச
ருரமிழந்திடுகரிகளுயிரிழந்தனகடிதின். (கரு)

கொடிதுணிந்தனகுடைகள்கடிதொடிந்தனகுதிரா
யடிதுணிந்தனவுடலமறவிழுந்தனகொடிய
கடமிடைந்திடுகரிகள்கதமிழந்தனநெடிய
படிபரந்தனகுருதிபரவையெங்கணுநிறைய (கசு)

வயவருந்தினவிரதமழியவன்சினமுடுகு
கயமடிந்திடவுதிரமுவரியின்கடிதடைய
உயரும்வெண்கொடிதுணியவுருளும்வண்டில்களொடிய
வயமுருண்டிடவெருவியரசரெங்கணுமிரிய. (கஎ)

இரிவைகண்டடர்மகதனிரதமுந்தினன்முடுகி
யரிமறைந்திடநெடியவழலும்வெங்கணைபொழிய
வரிநெடுஞ்சிலைவளையமழைவணன்பொழிபகழி
யரவைநுங்கியகலுழனெனவரிந்தனவதனை. (கஅ)

நெடியவன்கணைசொரியநெறியில்வஞ்சகனெடிய
கொடிமறிந்தனவெழில்கொள்குடையொடிந்தனவிவுளி
யடிதுணிந்தனவலவனுடறுணிந்தனநொடியின்
மடியவெஞ்சிலைமுறியவெருவிநொந்தனன்மகதன். (கசு)

மகதனஞ்சிடவெதிரும்வரிநெடுஞ்சிலைவயவர்
சிகிதருங்கணர்பரியின்வெரிநின்விஞ்சினர்சிலவர்
நகைதரும்புகையிடையநகமெனும்பரிகரிகள்
செகதலங்களுமதிரவடரவந்தனர்சிலர்கள். (உ0)

எழில்யஞ்சிடமுரசமிலகுதுந்துபியறைய
மழுமுசுண்டிபொடயில்கள்வளையும்வெங்கதையெறிவ
ருழுவையென்றிடவடைவருலகமெங்கணுமறைய
மழையெனும்படிகணைகள்பொழிவர்வந்துறுமறவர். (உக)

மணிகணின்கணினெனமும்மதமுறுங்கரிமிசையி
னணிகலன்கதிரொளிரயடரவந்தனர்சிலவ
ரிணையில்வெம்பரிகடவியிருநிலந்துகளுறமொய்
கணைபொழிந்தனர்சிலவர்கமலனும்பர்கள்வெருவ. (உஉ)

வேறு. மங்குனிகர்வெங்கரியின்விஞ்சியெழுமொன்னலர்கள்வந்தடரலுஞ்
சிங்கமுழையின்கணினகன்றுவெளியெய்தியடர்செய்கையெனவே
சங்குநிறவண்ணனிரதந்தனிலிழிந்தொளிர்தடக்கைதனிலே
சங்கணமிலங்கிடவடர்ந்துயர்கலப்பைகொடடித்தனனரோ. (உங)

ஒடிந்துபடியிற்றுகளமுந்தவிரதங்களுயருங்கொடியொடுங்
கடந்தருகரித்திரள்கள்கோடுகைசிதைந்துகடிதிற்புரளவே
மிடைந்தெதிரடர்ந்ததுரகந்துடைதுணிந்துமெலிவுற்றுவிழலு
மடிந்தனர்கள்வெஞ்சிலைபிடித்துவருமொன்னலர்கண்மண்ணின்மிசையே.

ஆடினகவந்தமெண்ணிலாதவல்லைத்திரளடர்த்தவவணி
ஞேடினநிலத்தினூறுசெங்குருதியாறுநதியொத்தலேயெழ
வீடினபிணக்குவைகள்மேகமுறவெங்கணுமிடைந்தவிமையோ
ரோடவிழுமாமலர்பொழிந்துமறையாசிகளியம்பினரரோ. (உரு)

பரித்திரள்கரித்திரள்படைத்தலேவரின்னவருணத்தினர்களென்
றுருத்தெரிகிலாவகையுருத்துயர்கலப்பைகொடுறுக்கியடியா
னெரித்துடலினிற்றசைகள்மூளேயெழுசெங்குருதிநீருநிலத்
துரைத்தனனுருத்திரனுடைந்தகனுமஞ்சமதிவண்ணனமரின். (உசு)

இரைத்துவருசேனேயிருபத்தினொடுமூன்றுதொகையக்குரோணியி
னொருத்தருமுயாவகையுருத்திறுதியுற்றிடுமுருத்திரனெனப்
பருத்துயர்கலப்பைகொடுவீரர்கரிமாவிவைபடச்சமர்செயுந்
திருத்தமதுகண்டுதுதிசெய்தனர்கடேமலர்கள்சிந்தியிமையோர். (உஎ)

கண்டுமகதன்கொடியகாலனெனவேயிரதமீதுகனல்வா
னெண்டிசையுமஞ்சவளேபூதிவிண்ணெழுந்தெழிலிபெய்வதெனவர்
னண்டர்கணடுங்கவில்வளேத்துநெடுவாளிகளநந்தம்விடலும்
விண்டலமறைந்திருள்பரந்துயரவும்பருதிவெய்யிலகல. (உஅ)

அதிர்த்தெழிலிபெய்வதெனவாசுகம்நிறைந்திடவழற்கணுறவே
கொதித்துயர்கலப்பையொருகைகொடுசுழற்றிவருகொல்களேயெலா
முருத்திரதமாமடியமாவலவனென்புகளொடிந்துபடியிற
பதைத்திடவடித்தனனெதிர்த்தமகதப்பகைஞனஞ்சியிடவே. (உகூ)

அலத்தினடியாலிரதமாவினொடுசூதனுமழிந்துயிர்விடச்
சலத்தொடுமிழிந்துமகதன்கொடியதண்டுகைபிடித்தெதிர்தலும்
நலத்துறுமுரோகணிதன்மைந்தனகைசெய்துயர்கலப்பைகொடுதன்
வலத்தொடுமறந்திடமணிக்கதைபிளந்துதுகளாயினதரோ. (௩௦)

அடற்கதையொடிந்துபொடியாயுதிரவேயழ்லுறுங்கணரச
னுடற்கனலவர்தெழிலலாயுதனுரத்திடைபுடைத்திடலுநீள்
கடற்குள்வடவாவனலேயொத்தமகதன்கதிர்முடித்தலேதனேத்
தடக்கையினிழுத்துவதைசெய்யுமுன்முராரிதடைசெய்தனனரோ. (௩௧)

வேறு. சிதரனிராமன்றன்னேநோக்கியேசெப்புவானம்
மாதுலன்மாமன்றன்னேவதைசெய்யலாகாதையா
வேதமிலக்குரோணியிருபத்துமூன்றுமாள
வேதனேயெய்தினனேவிடுதிநீயென்றுசொன்ஞன். (௩௨)

மாயவனியம்பலோடுமதிவண்ணன்மகதள்றன்னே
நீயுயிருய்ந்துபோதியெனுமுனாநிகழ்த்திவிட்டான்
தூய்மையில்நெஞ்சினனுந்துயரமுநாணுமெய்த
வேயெனுமுன்னர்த்தான்வாழெழில்நகர்க்கெய்தினனல். (௩௩)

தரணியாள்மகதராஜன்பின்னருந்தாரின்வெள்ள
மிருநிலத்தக்குரோணியிருபத்துமூன்றுங்கொண்டாண்
டரிதனையடரச்சுற்றுஞ்சேனையையனகன்கொல்ல
வெருவியேவலனுமஃகிமீளவும்வென்னிட்டானால். (௩௪)

சினமுறுமகதனிங்ஙன் பதினெழுசமருஞ்செய்தே
யனிகமுந்நூற்றுத்தொண்ணூறமூன்றதாமக்குரோணி
தினசரன்பணியைச்செற்றசெய்கைபோல்வசுதேவன்றன்
றனையரால்மாளவெள்கித்தனியனாய்வெருவிப்போனான். (௩௫)

கதமுறுமகதராஜன்கரிபரியிரதஞ்சூழப்
பதினெழுசமருஞ்செய்துபடையெலாமாளவெள்கிச்
சதுரெலாமழிந்துதானுந்தரணியில்வெருவியோட
மதுரையில்வசுதேவன்றன்மைந்தர்கள்மகிழும்நாளின். (௩௬)

சராசந்தனபசயப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௫௩௪.

---

௯௨. வது — சிரகாலன்வதைப்படலம்.

ஆழிமன்வெருவவாளியடரவிட்டிலங்கைமேவிப்
பாழிசேர்புயநாலைந்தோன்படைஞராமூலவெள்ளம்
வேழமுன்னனேகவையமிடையவோர்வில்லாற்கன்ன
லேழனையளவிற்செற்றவிராமனைவணக்கஞ்செய்வாம். (௧)

பீதகவாடைதோன்றப்பிறங்கியகிரீடமோங்கச்
சோதிசெய்கலன்கள்மின்னத்துளவநற்றொடைவிளங்க
வாதனந்திகழவேறியச்சுதனமரும்வேலை
மாதவர்வனத்திருந்துமண்டபந்தன்னிற்சார்ந்தார். (௨)

தீதகல்முனிவர்தாளினிறைஞ்சிநற்சீதரன்றா
னாதனமீய்தலோடுமாசிகள்மொழிந்துசொல்வார்
மாதவதீயர்தம்மைவதைத்தருள்செய்யவந்தா
யாதலின்யாங்களெய்துமருந்துயர்கேட்டியென்றார். (௩)

கரவீரபுரத்தின்வாழுங்கடியவனசுரர்கோமான்
சிரகாலனென்போன்தேவர்திரளெலாமழிக்கும்வெய்யோ
னரநாகர்பதியினாலுமழிப்புணுறுயிர்கட்கெல்லாம்
வருகாலனனையானெங்கள்வனத்தினையழித்தானென்றார். (௪)

திருந்துநல்வேள்விதன்னைச்சிதைத்தெங்கள்செபமிதெல்லா
மிருந்தையாகிடத்தீயிட்டேயெண்ணில்பாதவத்தைப்பேர்த்துக்
கருந்தடங்கண்ணினார்தங்காமமாங்கடுவைப்பொலெம்
மருந்தவமழித்தான்றன்னைச்செற்றிடாகற்றியென்றார். (௫)

விஞ்சியமுனிவரிங்ஙன்விளம்பியேயிடருற்றுரை
யஞ்சனமின்னியிருங்களருந்தவமழிப்பான்வைகு
மிஞ்சிசூழ்நகரினெய்தியிமைப்பின்முன்னவனைக்கொல்வே
னெஞ்சின் மாவனத்தினெய்துமென்றரியியம்பினானால். (௬)

மாதவன்முனிவர்தம்மைவனத்துநீரேகுமென்று
தீதுசெய்சிரகாலன்றன்சேருகோசரத்தினெய்த
வூதுகாகளங்கள்பேரியுவரிபோற்கறங்கவோங்கும்
யாதவன்சேனைசூழவிராமனோடேகினானால். (௭)

தாருகன்றடந்தேர்தூண்டச்சார்ங்கம்கையிலகித்தோன்றப்
பூரியன்பொருந்திவாழுங்கரவீரபுரத்திற்செல்ல
வாரியனெய்துந்தன்மையறிந்திடுமசுரர்கோமான்
வாரிபோற்சேனைசூழவந்தெதிர்தாக்கினானால். (௮)

கரிகளுங்கரிகடாமுங்கனன்றெதிர்தாக்கவேதாம்
பரிகளும்பரிகடாமும்பாய்ந்துவெஞ்சமரின்மூள
முரசுக்காளங்கள்பேரிமுகிலெனமுழங்கவெற்றி
யரசருமசுரர்தாமுமடர்ந்துபோர்செய்தாரன்றே. (௯)

மழுவயில்நேமிதண்டுமுக்கரம்வலையங்குந்த
மெழுமுனையீட்டியெல்லாமெறிந்துவெங்கணைசொரிந்தே
யுழுவைகள்போலத்தாக்கியுடல்சிரந்துணியவெய்ய
கழுதுகள்சூழயாண்டுங்கவந்தங்கணடித்தவன்றே. (௧௦)

தேரினிற்கரிகள்மாயச்சிலையறவிவுளிசாயப்
பாரினிற்குதித்துவெய்யகேடகங்கட்கம்பற்றித்
தேருறத்தாக்கிக்கைகாறுணிந்திடநிலத்தின்வீழ்ந்தார்
வாரிபோலுதிரவெள்ளமடுத்திடக்கழுதுமாட. (௧௧)

பரியினுமிரதமீதும்படைத்தலைவீரர்மேலுங்
கரியினுங்கடியவாளிகதுமெனச்சொரிந்தங்கார்த்து
வரிசிலைவலத்தினாலேவாளெயிற்றசுரர்கொல்ல
விரிகின்றசேனைநோக்கியிருவருமெதிர்த்தாரன்றே. (௧௨)

கயிலையும்நீலவெற்பும்வயங்கியகாட்சிபோலப்
புயல்வண்ணன்முன்னனோடும்பொருசிலைவளையவாங்கி
யயிலெயிற்றசுரரோடுமிரதங்கள்வெய்யவாசி
கயமெலாமடியயாண்டுங்கணைமழைபொழிந்தாரன்றே. (௧௩)

சிலையறக்கொடிகள்வீழத்தேரினமுறியவீரர்
தலையறப்பரிகள்சாயத்தந்திகளுருளவோங்கு
மலையெனவசுரராக்கைமண்ணுறக்கறையின்வாரி
நிலமிசைநதியாயோடநிறைந்தனகவந்தமாடி. (௧௪)

வேறு. சிவர்சிவமுறப்பலிசெங்கைநீக்கிய, நவர்நவநீதமுண்ணுதராசுகந்
தவர்தவலொருவுறத்தரணியெங்கணும், பவர்பவமடிந்திடப்பரந்தவாமரோ.

ஐயிலையயன்வில்லளவுமாசுகம், நொய்தெனநொய்தினுழைந்துதோலயம்
வையமீவையமாய்வீரர்மாளவே, துய்யதுய்யாரழலெனத்தொடர்ந்தவால்.

கிரியிவர்கிரியெனநிலனைக்கீண்டரு, ளரியரியாகியவவுணர்மாளவெம்
பரிபரிவுறக்குரந்துணித்துப்பார்விழக், கரிகரியாயிறக்கணைகள்பெய்தனன்.

சிந்துரமியத்தணைதுயிலுஞ்செங்கணன், சிந்துரங்கரஞ்செவிசிதறவாசையிற்
சிந்துரங்காலறத்தெவ்வர்சாடரஞ், சிந்துரப்புனலுகச்சிலீமுகம்பெய்தான்.

வேறு. உடலறக்கரிகள்வீரருரமறவுயர்ந்ததேரி
னடியறவலவன்மாளவயங்ளைவாலுமற்றே
துடையறக்கொடிகள்விழத்துவசங்கள்வீழக்கண்டே
கடிமலர்பொழிந்துவானோர்களித்தெங்கும்நடித்தாரன்றே. (௧௯)

வருகரியிரதம்பாய்மாவாளெயிற்றசுரர்வீழ
விருவரும்பொருததன்மைகண்டனலெரியுங்கண்ண
னுருளுமாவிரதமீதினுற்றுயர்சிரகாலன்முன்
பொருசிலைவளையவாங்கிப்புயல்வண்ணன்மேலெய்தார்த்தான். (௨௦)

தீயவனெய்யும்வாளிதிசைகளைமறைப்பக்கண்டு
மாயவனதனையெல்லாம்வாளியாற்கொய்துவீழ்த்தே
யேயெனுமுன்னர்வானமறையவாசுகங்களெய்தா
னுயவையறுத்துவெய்யவசுரன்விண்ளெங்கவார்த்தான். (௨௧)

சொரிகாலவருடமேலத்துலங்கியபல்லங்கள்கொண்
டிருஞாலம்நடுங்கவார்த்தேயெய்துநின்முனைநோக்கி
யரிகாலன்படையைவாங்கியருச்சித்துவிடலும்வெய்ய
சிரகாலன்சிரத்தைதள்ளிச்சென்றதுதெய்வவாளி. (௨௨)

துந்துமிமுழங்கவானிற்சுரர்தருமலர்கவீவி
யிந்திரனயன்றன்னோடுமேத்திவிண்ணிறைஞ்சினார்கள்
சிந்தையின்மகிழ்ச்சிமேவுமுனிவர்கடிரண்டுவாழ்த்த
நந்தொளிர்வண்ணனோடுநாரணன்மதுரைபுக்கான். (௨௩)

தீயவல்லசுரன்றன்னைச்செருக்களத்தவியநூறி
மாயவன்மதுரையெய்தித்தந்தையைவணங்கிப்பின்னர்
தாயினையிறைஞ்சிநீதிதருமஞானங்களோங்கத்
தூயநான்மறையோர்சூழத்துலங்கியேயமருநாளின். (௨௪)

சிரகாலன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௫௫௮.

பீடுடையசோதிபெருமானமரர்பேணுஞ்
சேடனினமர்ந்தவிர்கொடேவைகினைதோறு
மாடியவனன்பெயர்களாயிரமுமன்பாற்
பாடிமகிழ்வோர்பரமபாகவதராவார்.

மாலயன்மதிச்சடையன்வந்தமர்செய்தாலும்
ஞாலமிசையென்றுமடியானலனிலாத
காலயவனுமசுரன்முன்வினைகளைந்த
சீலமுறுநாரதனடைந்திவைகள்செப்பும்.

உன்னுடையதோழனுயருமசதராஜன்
மன்னன்வசுதேவனருள்மைந்தரொடுமூண்டே
யிங்கிலமதிற்றசமொடேழுசமர்வென்னிட்
டுன்னுவமுன்னோடியதுமாக்கவெளிதன்றே.

ஆதலினுயர்ந்தவசுரர்பதிநீயேகில்
மாதவனிடைந்திடுதறிண்ணமெனும்வாய்மை
யோதிமுனியேகலுமுருத்திரனையொத்தே
தீதுசெறிகாலயவனெஞ்சுசினமிக்கான்.

ஆடல்வயமாகரியின்மீதவுணனூன்று
கோடிபடைநாயகர்கள்கூடிவரவேமுன்
னீடுகொடிசூழிரதமேறிநெறியில்லான்
காடுகள்கடந்துபலநாடுகள்கழிந்தான்.

வடமதுரையெய்திமதில்சுற்றுறவளைத்தே
கொடியவசுரன்னுடல்கொதித்திடவுமார்ப்ப
நெடியவனவன்றிறலறிந்துநெறிசேருங்
கடலரசன்மாநகரினிற்கடிதுசென்றான்.

மாதவனடைந்திடலுமேவருணராசன்
சீதமலர்தூவியிருசேவடியிறைஞ்ச
ஆதியிவண்வந்தகருமத்தடைவையெல்லா
மோதுதியெனப்படியளந்தவனுரைப்பான்.

காலயவனுனவசுரன்கடிதினெய்திச்
சீலமுறுமாமதுரைசேர்ந்துறவளைத்தான்
ஞாலமிசையெய்தியிடும்நன்னகரமில்லைக்
கோலமுறுவண்பதிகொடுத்திடுதியென்றான்.

மாயவன்மொழிந்திடமகிழ்ந்துவருணன்று
னேயமுடனேசனைதுவாரதெசநிறைந்த
வாயமுறநீளமகலம்மழகிதாகத்
தூயதுவராபதிதலங்கடவமைத்தான்.

அயனருளவானவர்கடச்சனவணெய்தி
மியல்பினுறுமாளிகைகளெண்ணில்சிகரங்க
ளுயருமவிர்மண்டபமொண்வேதிகைகள்வீதி
கயமுறுவவோளிகளெலாங்கடிதமைத்தான். (௧௦)

அருணவயமாயிரமலங்கிருதமான
வருணமுறுபாசிழைவருக்கநயவாடை
தருணமுறுதந்திகடயங்குமணியெல்லாம்
வருணன்மகிழ்சிந்தையொடளித்தனன்வயங்கி. (௧௧)

எண்ணெதிரில்சாய்மனையிலங்குகுடையெண்ணில்
வண்ணமுறுநன்மணிவயங்கியிடுமாழை
கண்ணியகலன்கள்கதிர்போலொளிர்கிரீட
முண்மகிழ்வினோடளகையுற்றவனளித்தான். (௧௨)

சந்திரவிமானமெனவேதரளமல்கிச்
சுந்தரமணித்திரள்கொடிஞ்சணிதுலங்க
மந்தரநிகர்த்துயருமண்டபமகிழ்ந்தே
யிந்திரனளித்தடியிறைஞ்சினனிவந்தே. (௧௩)

வாரியின்வயங்கியிடுமானகரைநோக்கிச்
சீருறுகுபேரனகர்தேவர்பதியெல்லா
மேருறுபகீரதியினாலிழிவையெய்தும்
பார்நதியையேலுமெனவேயுரைபகர்ந்தார். (௧௪)

எதிரில்மடவார்புருடர்யாருமிரவின்கண்
மதுரையினுறங்கியரிமாயையையியற்றக்
கதிருதையமாகுமுனேகடிதொரீஇநீ
ளுததியின்விளங்குநகருற்றபின்விழித்தார். (௧௫)

வடமதுரைவைகுகரிமாமருடர்மாதர்
கடலினுறுமானகர்தனிற்கடிதுமேவி
யடையவரிதாமொருவனேயடன்மிகுத்த
கொடியவசுரேசன்முனரிற்குறுகிநின்றான். (௧௬)

ஏறுபுரிவானெனவெதிர்க்குமசுரேசன்
சீறியரிதன்னையமர்செய்திடுதியென்ன
நாறுமலர்தண்டுளவினற்றொடையணிந்தோன்
பாறினனகைத்துவிசையோடுபடிமீதே. (௧௭)

வேறு. அரியமாதவர்களாகியளப்பிலாவூழிகாலந்
தரையினினீரின்வெய்யதழலிடையோகஞ்சாதித்
திருவினையகற்றித்தங்கள்மனங்கொண்டுபிடிக்கவெட்டா
வொருவனைப்பிடிப்பதாகவோடினனசுரன்மாதோ. (௧௮)

எதிர்நின்றுசமர்செய்யாமலேகின்றாயிடையாவுன்றன்
மதியெலாமிஃதோமண்ணின்வானெனக்கும்பாதிப்பின்னா
றுததியினொதுங்கினாலுமுன்னையான்பிடிப்பனென்றாப்
புதியவெங்கூற்றம்போலப்பூரியன்றுடருங்காலை. (௧௯)

மனுவின்றன்மதலையிக்குவாகுவின்மரபில்வந்தோன்
முனிவறொண்மாந்தாதாவின்சுதன்முசுகுந்தனென்போன்
றுனியகல்சுரர்கோனுக்காய்த்தூய்மையிலசுரரோடே
சினமுறப்பொருதுநின்றானாயிரந்தெய்வவாண்டு. (௨௦)

மறனுறுமசுரரெல்லாமடிந்திடவென்றுநின்ற
திறனுறுமரசன்றன்னைநோக்கியேதேவர்கோமா
னுறுகெதிபரமனீய்வதல்லதிங்கொருவராலும்
பெறுவதரிதென்றிப்போதுபெறுவவெல்லாங்கேளென்றான். (௨௧)

ஆயிரநயனவேந்தனருள்செறிந்திங்ஙன்கூறத்
தூயனுமாந்தாதாவின்சுதன்முசுகுந்தன்சொல்வான்
தீயராமசுரரோடுசெருச்செய்தவருடமெல்லாம்
மாயிருஞாலத்தேயான்றுயில்கொளவரமீயென்றான். (௨௨)

வேறு. அரசனிவ்வரம்வேண்டலுமமரர்கோன்முனிவர்
தரணியின்னுயர்வரையினிற்கந்தரஞ்சார்ந்தே
யிருகணிற்றுயில்கொளுமுன்னையிடையின்வந்தெழுப்புந்
துரிதரக்கணமெரிந்திடுவாரெனச்சொன்னார். (௨௩)

அந்தநல்வரம்பெற்றுயர்முசுகுந்தனனுகிச்
சிந்தையின்மகிழ்ந்தோங்கலிற்கந்தரஞ்சேர்ந்து
சுந்தரஞ்செறியுருவினன்றுயில்கொளாகரத்திற
கந்தனன்மலர்க்காவினுட்கண்ணனுங்கரந்தான். (௨௪)

கடிதினிற்றுரந்தோடியேகடுந்திறலவுணன்
படியினின்வரைமுடுக்கரிற்புகுந்துயர்பரமன்
வடிவுறத்துயில்கொள்கின்றான்றன்னைமாலென்று
கொடியவன்னவனுரத்தினிற்புடைத்தனன்கொதித்தே. (௨௫)

தெழித்துரப்பியேதீயவன்புடைத்தலுமரசன்
விழித்துநோக்கலும்விடையன்முன்வேளெரிந்தாற்போ
லிழைத்தமாதவயோகிகளிருக்குமாச்சிரம
மழித்தவெய்யவன்சாம்பராயவனியின்மாண்டான். (௨௬)

துயிலையோவியேயெரிந்திடுந்துட்டனாரொன்று
பயிலுவானவண்பரஞ்சுடர்மரகதமலைபோ
லியல்பினாழிசங்கெழிற்கதைசார்ங்கம்வாளேந்தி
மயிலெனுந்திருமார்பினின்வயங்கவந்தணுகல். (௨௭)

கண்டனன்கருணாகரவடிவினையமிர்த
முண்டதாமெனக்களித்திறைஞ்சவன்மிகவுவந்தே
யண்டர்நாயககவுனதடியார்க்கடியவனாந்
தொண்டனேன்வினைதொலையமுன்றோன்றினையென்றான். (௨௮)

அன்பினானந்தநயனநீரவனியிற்புரள
வின்பமாகமெய்புளகமுற்றேத்துவான்றன்னைத்
தன்பெருந்தடந்தாமரைக்கண்களானோக்கித்
துன்பமோவினாய்வேண்டுதிவரமெனச்சொன்னான். (௨௯)

விந்தைசேர்புயனியம்பிடமுசுகுந்தன்விளம்பு
மிந்தமாநிலத்தின்பம்போலிடருறுகுடும்ப
வந்தனாகிப்பாழ்ங்கூவலினழுந்தியவென்னை
யெந்தைநீகெதிக்கேறெனாதென்சொனாயென்றான். (௩௰)

வேறு. காய்ந்தவெங்கனலைக்காலுங்கட்செவியிலங்குகின்ற
வீர்ந்தநுண்வேலைக்கவ்வியெயிறுநாவீழ்ந்தாற்போன்றே
யாய்ந்திடுமுணர்விலாமலத்திரச்செல்வம்நற்றிச்
சாய்ந்துவெந்நரகின்வீழ்வர்தரணியினறிவிலாதார். (௩௧)

ஆதலினடியேனிங்ஙனைம்புலன்றனக்கேயாளாய்த்
தீதுசெய்திடுவேனுன்னைச்செல்வமேவேண்டிப்பெற்றால்
வேதனைநரகின்வீழ்ந்துமீளவும்பிறந்திறந்து
பூதலத்துழல்வதல்லாலென்னையான்பொருந்துவேனால். (௩௨)

போதனோடமரர்வானாள்புரந்தரன்முதல்வராய
மாதவர்தம்மைநீயேமயக்குமாயன்றானுன்றன்
பாதமேபற்றினேனைப்பற்றுமோபரமமூர்த்தி
யாதிநீயருள்செய்துன்றன்பதமெனக்கருடியென்றான். (௩௩)

இவையுரைத்திறைஞ்சியேத்தியிருகணீர்சோரநின்ற
நவையகல்நெஞ்சினானைநாரணனருளால்நோக்கி
யுவமையில்மறையோனாகிப்பிறந்துயர்வதிரியுற்றுத்
தவமுயல்யானேயெய்தித்தருதுவன்கதியையென்றான். (௩௪)

என்றுரைத்தின்பமெய்திமுசுகுந்தன்றன்னையேவிப்
பொன்றியவசுரன்சேனைக்குழாத்திடைப்புகுந்துதன்கை
யொன்றியவாளில்மூன்றுகோடிபோர்சிரமுருட்டி
நின்றிடுமளவின்வந்தானிகரிலாமகதர்கோமான். (௩௫)

நீமுந்துநயனனானமகதர்கோன்சேர்தல்கண்டே
யாமந்தைக்கன்றுபோல்வானவனியிற்கடிதினோடிக்
காமந்தியடரவேடர்கணிப்பருங்குழாங்கள்சேருங்
கோமந்தவரையின்மீதிற்றுவட்டினிற்கரந்தான்மாதோ. (௩௬)

மாயவனோடக்கண்டமகதனுங்கடிதினெய்தி
யாயநீமீடியென்றுவருவளையிடத்தினெய்தி
வாயுவின்படையுந்தேயுவழங்கியபடையும்விட்டான்
தீயொடுவொதங்கூடித்திசையெலாம்நடுங்கச்சென்ற. (௩௭)

வரையினைமுற்றுஞ்சுற்றிவாயுவுங்கனலுங்கூடி
யரனுயர்தேரினேறியமர்செயவிமைப்பின்வெந்த
திரிபுரத்தவர்கள்போலத்தியராஞ்சவரர்மாள
வெரியுயர்வானைமுட்டியெழுந்தனபுகையுமெய்த. (௩௮)

அறனுறமறையையோம்புமருந்தவர்க்கிடர்கள்செய்யு
மறனுறுமெயினரெல்லாமடிந்திடநகைசெயதாங்கே
யிறைவனப்பிறங்கலுச்சியிரண்டைந்தோடொன்றுகூட
வறையும்யோசனையினின்றுமவனியிற்குப்புற்றுனல். (௩௯)

கரியரிமயிடமெண்குகவிபுலிகனலின்மாள
வரையினிலுச்சிநின்றுமகதராசன்முன்காண
வெரியினின்விழுந்தாற்போலக்குதித்திறையேகியேதார்
பரியிரதங்கடுன்னுந்துவரையம்பதியிற்சேர்ந்தான். (௪0)

மன்னவன்வசுதேவன்றன்மலரடிவணங்கிப்பின்ன
ரன்னையையிறைஞ்சிபோசனடியினிற்றொழுதுவந்தே
முன்னவன்முனில்வீழ்ந்துமுனிவரந்தணர்களேத்த
வென்னையாளுடையவையனினிதுவீற்றிருக்குநாளின். (௪௧)

காலயவன்வதைப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௯௩௩.

---

௩௪. வது—இரேவதிப்படலம்.

காலினுண்டுகளாற்கல்லைக்காரிகையாக்கிக்கால
காலன்வில்லிறுத்துத்துய்யகமலையைமணஞ்செய்தோழ்
காலங்காந்தாரத்தெயதிக்கும்புத்தோன்றன்னைவீட்டிக்
காலருள்சுதனோடுண்டகண்ணனைவணக்கஞ்செய்வாம். (௧)

அறனெறிவிளங்கமூந்துமுகத்திஞனரதத்தேசத்
திறையவன்மொய்ம்பால்மிக்கவிரேவகனென்னுமன்னன்
மறுவில்பூமடந்தைநேராமிரேவதிமாதைப்பெற்று
நெறியுறுமறையோராசிநிகழ்த்திடமகிழும்நாளின். (௨)

மன்னவனிரேவகன்றன்மகளெழில்பொருவமண்ணி
னின்னலின்மகுணன்றன்னையெங்கணும்நாடிக்காணுன்
மின்னிடைமடவாளோடும்விண்மிசையிரதமேற்போய்
நன்மலர்க்கிழவன்வாழும்நற்சபையதனிற்சேர்ந்தான். (௩)

பொன்னவிர்தரளம்நீலம்பொலிவுறுபதுமராகம்
நன்மணிவயிரங்கோமேதகம்நிவர்மரகதங்கள்
மினவயிடூரியங்கள்வித்துருமங்களெல்லாந்
துன்னுறுமெண்ணில்கோடிதுலங்குமாமண்டபத்தின். (௫)

இந்திரனியமன்வாயுவருணனோடெழிற்குபேரன்
முந்தியநிருதிதேயுமுக்கணன்தொழவுநாகர்
சிந்தையின்மகிழ்ந்துசித்தர்வித்தியாதரர்கடேவர்
சந்திரனிரவிதுய்யசாரணரியக்கர்சார.

கெருடகாந்திருவரோங்குகின்னரர்திரளினோர்கிம்
புருடர்தும்புருவோர்கீதநாரதர்பொலிந்துதோன்றப்
பொருடருமறையாறங்கஞ்சாத்திரம்புராணந்தி
மருடவிர்த்திடவிதெல்லாம்வடிவுகொண்டேத்திவாழ்த்தி. (௬)

கிளரொளிக்கிரீடந்தோன்றக்கேயூரம்புயத்திலங்க
வளருமுந்நூலுமார்பின்வயங்கிடமாழையேய
வொளியுறுமேனியோங்கவுலகெலாமுண்டானுந்தி
நளினவாதனத்தின்மீதுநான்முகனிருந்தான்மாதோ. (௭)

ஆயவன்றிருவோலக்கத்தனைவர்க்கும்விடையீய்ந்தாங்கே
தூயவன்கோயிறன்னுட்டுலங்கிடமேவும்வேலை
வேயுறுதோளியாளிரேவதிமின்னினோடுந்
தீய்மையிலரசன்சென்றுதிருவடியிறைஞ்சினானால். (௮)

இறைஞ்சியவரசன்றன்னையெண்கணனோக்கிநீயீண்
டுறைந்ததுமொழிதியென்னவுவந்தியான்பெற்றமங்கை
யிறைந்தவிவ்வடிவுக்கொத்தமணனைநிலத்திற்காணு
துறந்தவருதவையவடைந்தனனின்பாலென்றான். (௯)

இவையெலாங்கேட்டவெண்கண்ணிறையவனகைத்துநீதான்
புவியினையொருவியென்பாற்புகுந்தவவ்வுகமும்போயே
நவையகல்மன்னவிங்குத்துவாபரத்தந்தநண்ணிற்
றுவமையில்ராமநம்பிக்களித்திநீபோதியென்றான். (௧௦)

இரணியகர்ப்பன்கூறவிரேவதனிறைஞ்சியோவித்
தரணியின்மகடன்னோடுமிழிந்துநறறபனன்விஞ்சுங்
கிரணமேல்வெருவுசெம்பொன்கிளர்மணியினங்கள்சூழ்ந்து
வருணமாளிகைகளோங்குந்துவரையினடைந்தானன்றே. (௧௧)

துவரையினடைந்தமன்னனுரோகணிசுதனைநோக்கி
நவையொரீமலரோனென்னோடுரைத்தநல்வாசகத்தாற்
புவிதனினிகரிலாதபொற்கொடியாளென்பெற்ற
வுவமையில்மின்னையீந்தேனுனக்கெனவுரைத்தானன்றே. (௧௨)

மன்னவனுரைத்தலோடுமுரோகணிமைந்தனோக்கி
முன்னுறுமுகத்திற்றோன்றுமுறைமையாலுயர்நீண்ட
வன்னவடேளினீண்டவலாயுதம்பூட்டிவாங்க
மின்னிடைசிறியாளானாள்விண்ணவர்மலர்கடூவ. (௧௩)

துந்துமிமுழங்கவானிற்சுரர்கள்மாமலர்கடூவ
மைந்தனைத்தழுவியன்பால்மகிழ்ந்தனன்வசுதேவன்றன்
னந்தொளிர்காரனுமன்னைமார்களுநலனையுற்றா
ரந்தணர்முனிவரெய்தியாசிகள்பகர்ந்தாரன்றே. (௧௪)

பணவமாமுரசுபேரிபடலிகைமுழங்கப்பொன்னு
றிணையில்காகளங்கள்சின்னமிலங்குகின்னரங்களாப்ப
மணமலிபூகங்கன்னல்வாழைவண்டுவசமோங்கக்
கணையினைநகுகண்மாதர்க[illegible]த்தனர்வீதிதோறும். (௧௫)

தோலிரதங்கடூயவிவுளிகளெங்குந்துன்ன
வேலொளிர்வீரரெல்லாங்கவினொடுமிடையச்செம்பொன்
பாலிகைநிரைத்துமாதர்சோபனம்பாடினார்கள்
மாலைகணிறையத்தீபம்வழங்கியவீதிதோறும். (௧௬)

அராவுருத்தவிருமையன்றன்னொடுமணங்கின்மிக்க
விரோவதியிலங்கித்தோன்றவிருக்கறைகற்கனெய்துப்
புராதனமுனிவர்வேதம்புகலுமந்தணர்களோடே
தராதலமிலங்கவோமத்தழலினாகுதிநிறைத்தான். (௧௭)

கங்குனேரளகநங்கையிரோவதிகந்தரத்திற
சங்கொளிர்வண்ணன்செங்கைதனின்மங்கலநாண்சாத்தி
மங்கையர்மகிழவம்மிமிதித்துத்தீவலமாய்வந்தே
யங்கண்வானதனிற்றோன்றுமருந்ததிநோக்கினால். (௧௮)

அந்தணராசிகூறவருந்தவர்மகிழ்வாலேத்தத்
தந்தையைவணங்கித்தாயாந்தேவகிதாளின்வீழ்ந்து
நந்துறுகரத்துமின்னாளுரோகணிநற்பாதத்தி
னிந்துநேர்வண்ணன்றேவிதன்னொடுமிறைஞ்சினானால். (௧௯)

சீயமேபொருவுந்தாலகேதனன்றேவியோடுந்
தூயபொற்கலத்திலன்னமருந்திநற்சுகந்தநான
மாயுநன்மலர்களோடேயணிந்தின்பப்பெருமையாக
நேயமோடினியசெல்வம்நிறைந்திடவிருந்தான்மாதோ. (௨௰)

இன்னலனெய்துமுன்னோன்றன்னுடனிலேகர்வாழ்த்தத்
துன்னுநன்மணிசேர்மாடத்துவரையினிலங்கிமாயோன்
மின்னுபொற்கவிகையோங்கவிருந்தனன்விதற்பன்பெற்ற
வன்னமேயென்றுதூயநாரதனறைந்தானன்றே. (௨௧)

இரோவதிப்படலமுற்றிற்று. ஆ திருவிருத்தம் - ௩௬௨௦.

நீலமுங்காயாம்பூவுநிறைந்தறைகடலுந்தூய
ஞாலமெண்டிக்குமஞ்ஞைக்கந்தரநிறமுநாணுங்
கோலமோடாழிசங்குசார்ங்கம்வாள்சதைகொண்டோங்கு
மாலினைநினைந்துவாழுமடியர்தாள்மனத்துள்வைப்பாம். (க)

ஆலின்மேலமருமையன்புகழெனுமமிர்தந்தன்னைச்
சீலமார்விதர்ப்பனகொம்புசெவியினாற்பருகித்தேக்கி
மாலினால்மனமோடாவிமற்றவன்றனைப்பற்றக்
சோலமேவாவியம்போல்வைகுங்கோதைக்குமுனிவன்சொல்வான். (உ)

வேறு. காளமேகமொளிர்வானநீலவரைமானுமேனிகமலங்கள்கை
தாள்களுந்நயனங்களிந்துநிகர்சங்குசெஞ்சுடர்தயங்கியே
நீளுமாழ்கதிர்பொருவுநன்மணிநிறைந்தபொன்முடியிலங்குமா
லாளும்வானுலகமேழுநீயுணர்தியார்கலிக்குளமிர்தாமினே. (௩)

வீரரஞ்சியுறவேயெதிர்க்குமவன்வெதிரினின்னிசைகளூதுவோன்
மாரனஞ்சுகவின்மேனியன்றதிநெய்வைத்தவெண்ணைதன்வயிற்றிடுஞ்
சோரனஞ்சைநுகர்தூயசேவினமர்தோகைபாகர்சொலுமாயிரப்
பேரனிஞ்சொலரிசெயல்கள்கூறரிதுபெருமையுற்றகமலப்பெணே. (௪)

வில்லின்மல்லினுயர்தம்பியின்பரிவிசித்ததேரிலயவேதநூல்
வல்லமாலிருடிகேசன்மாயனுயர்மாதவற்குவமையாகவு
மல்லிமாமலரின்வந்துபாரினுறுமன்னனின்னைநிகராகவு
மில்லையேயுலகின்விஞ்சுபேர்கடமிலியாருமெவ்வெழிலிலங்குவார். (௫)

கன்றினால்விளவெறிந்தசோதியுரகாரிமீதிலுயர்கருமுகி
லன்றுபாலனெனவண்டரண்டமவையயிலுமாதியமரோர்பிரான்
குன்றினால்மழைதடுத்துவென்றிபுரிகோவலன்புகழ்கள்கூறுறு
தென்றுநாரதன்மகிழ்ந்துபுண்டரிகவிந்திரைக்கிவையியம்புவான். (௬)

முன்னர்மாமிதிலைவில்முறித்தமிர்தின்முந்துசீதையெனுமுண்டக
மின்னினோடிலகுவள்ளலென்னநெறிவிஞ்சுமாசிறுவரைப்பதி
மன்னர்கோன்மகிழ்வொடெய்தியேயுனைமணம்புணர்ந்தருள்வன்மாமட
வன்னமேயெனமொழிந்துநாரதனிருக்கினுசியுமறைந்தனன். (௭)

செஞ்சொலொண்டவனியம்புசொல்லிருசெவித்துணைக்கமிர்தமாகவே
யெஞ்சினன்முனிவனைப்பணிந்துநின்னிருக்கைசேறியெனவுரைசெய்து
விஞ்சுநஞ்சுறுகளத்தனேல்கமதைவிழவிடும்விமலன்மாலுறும்
வஞ்சிகொஞ்சுகிளிகஞ்சமாமலரின்மங்கைபொங்கமிர்தின்வந்தமின். (௮)

அருந்தவத்தினர்கடங்கள்வாச்சிரமமடையவாவினிரைகாத்துநீள்
குருந்திறுத்திடையர்மாதர்தங்கடுகில்கொள்ளைகொள்கொழுனன்வரவெனு
வருந்தினள்கலையிழந்துசோர்வுறவயங்குமேகலைவசுந்தரா
பொருந்தமெல்லமளிமீதுநன்மலர்பொரிந்துவெந்துபொடியாகவே. (௯)

விளங்குபூண்முலையிலங்குவெண்டரளமாலையும்வெடிவெடித்திடத்
துளங்குமாதின்மெயின்மீதுகோதையனல்சுற்றிடசுசுறுசுறுக்கெழக்
களங்கமெய்யின்மணிகருகவம்பொனணியுருகவெள்வளைகள்கழலவே
யுளங்கொள்மால்வடிவையுள்கியேமயலினாலுருக்குமணியுரைசெய்வாள். (௧௦)

வேறு. பண்ணார்மொழியார்கலைகொள்பரமா, கண்ணாகருணாகரகார்முகிலே
விண்ணாருரகாரிவிலோதனவென், னுண்ணோவுதவிர்ந்திடவந்துதவே. (௧௧)

வேயூதியவித்தகவித்துரும, வாயாதுவராபதிமன்னவனே
காயாமலர்மேனியகன்றினமே, யாயாவெனையஞ்சலையென்றணையாய். (௧௨)

கற்கொண்டுபலானிரைகாத்தருளி, மற்கொண்டமர்தோளொடுமாமதுரை
விற்கொண்டுமுறித்தருள்வீரியமாஞ், சொற்கொண்டதெனாருயிர்சுந்தரனே.

தானேவருகூனிதன்னாகமுறக், கூனேநிமிரத்தழுவுங்குமரா
தேனேகனியேதிருவிக்கிரமா, வானோரமிர்தேயெனவேமொழிவாள். (௧௪)

ஆரஞ்சுடுமென்னுமையாக்கும்விழும், வீரன்திறமுள்ளும்விரும்பியெழு
மாரன்கணையேவமயங்கிடுமாற், சீரஞ்சுகமாகியதேன்மொழியே. (௧௫)

வன்னெஞ்சுளமாரன்மலர்க்கணையா,லென்னெஞ்சுறுமால்கடல்போலெழவே
கன்னெஞ்சினையோவெளிகாணவிலை, னன்னஞ்சனமேனியினுற்றணையாய்.

கரியாருயிர்கொண்டருள்கண்ணவெனும், விரிவாயரவைப்பிளவீரவெனு
மரியாகியவச்சுதனேயெனுமா, றரியாதெழுமாலுறுதார்குழலே. (௧௭)

பாலேகவர்வாய்பலமாயைவலா, யாலேயமர்வாயலைவேலையுளாய்
மாலேதருவாய்வந்தேயணையாய், கோலேகொடுகோவணைகொற்றவனே. (௧௮)

வளையுங்கழலும்மயலுற்றிடவே, விளையுங்கனகங்கனல்மேனியெலா
முளையும்மனமோர்கணமேழுகமா, யளையுங்கணினீருளமிழ்ந்திடுமால். (௧௯)

சோரும்மெழுமாவிதுணுக்கெனுமா, லாருந்துணையில்லையனங்கனெயச்
சேருங்கணையாலுடநீயுமுனே, வாருங்கவினுற்பலவண்ணவெனும். (௨௦)

வல்லாய்பலமாயைகள்மாதவனே, புல்லாயிருகொங்கைபொருந்திடவே [ல்.
மில்லாய்மறையாதுயிர்விற்கும்வகை, சொல்லாயெனமாமயில்சோர்ந்தனளா

சோராவணைமீதுதுயர்க்கணுறு, மாராவமுதாளையணைத்தனராற்
காரார்குழல்காரிகையார்கள்பனி, நீரார்களபம்மெய்நிறைத்தனரால். (௨௨)

அன்னேகமலத்துறையாயிழையே, யென்னேயிவையேதெனவேயிடருற்
றன்னப்பனிநீருடல்மேல்விடலு, மின்னாருயிர்வந்துவிளம்பினளால். (௨௩)

உறியார்நெய்யுருட்டியுவந்தருள்வோன், சிறியேனிருகண்விழிசேருமவன்
மறிமால்கடல்போல்பவன்வந்தனனு, லறிவீரொனதாருயிராமடவீர். (௨௪)

ஈன்றால்விளவன்றெறியுங்கையினன்
குன்றால்மழைகாத்தருள்கொண்டல்குவா
லொன்றாயதினப்புறமும்முயர்வா
னின்றானெனமுனீரறியீர்மடவீர். (உரு)

புயலின்னளினம்மலிபொற்பினவன்
மயல்தந்தவன்வந்துநகைக்குமவன்
செயலொன்றலவேபலதேர்வரிதா
லயலின்மடவீரவனாரெனுமால். (உசு)

வளையார்கையினார்துகில்வாரியுமே
விளையாடியகையினென்மெய்தழுவி
யளையாயிருகொங்கையினச்சுதவென்
றுளையாவுயிர்சோர்ந்தனளொண்குடியே. (உஎ)

அளியார்குழலாளயரப்பனிநீர்
துளியாயெழவீசியதோகைநல்லார்
மிளிர்தாமரைமேலுறைமின்னினுளந்
தெளிவாயுறவேயிவைசெப்பினரால். (உஅ)

மானேயனமேமயிலேகுயிலே
தேனேயமுதேதிருமாமகளே
யேனீயயர்வாயிடர்நீயொழியாய்
வானோர்பெருமான்மணமேபுரிவான். (உகூ)

துயர்நீயொழியத்துவராபதியி
னுயர்மாதவன்வந்தணைவானுனையே
யயரேலெனவம்மடவார்றையக்
குயில்நேர்மொழியாளிவைகூறினளால். (ஙo)

வேறு. செஞ்சொல்நாரதன்மொழிசெவியிற்சாரவென்
னெஞ்சுளேந்தரிபுகழ்நிறைந்துநிற்பினுங்
கஞ்சநாபன்றனைக்காண்கிலேனெனிற்
றுஞ்சுமென்னுடலினைத்துறந்துபோமுயிர். (ஙக)

ஆதலான்மையலாலலக்கணெய்துவேன்
சாதனாலதுசெய்சதுருண்டாமெனில்
மாதரீரிதற்கொருவாய்மையின்னல
னோதுவேன்கேண்மினென்றுரைக்கலுற்றனள். (ஙஉ)

புயலினம்போருகமலர்கள்பூத்தெனச்
செயல்பெறுந்திருவுருத்தெரியவேபடத்
தியல்புறவரையவல்லீர்களென்னிலென்
னுயிருடல்மேவுமின்றெனவுரைக்கவே. (ஙங)

பங்கயத்தவளிவைபகரப்பாங்கியா
மங்கையெள்ளுதலிலாமதனவல்லிநீள்
வெங்கயந்தனைத்தெறும்வீரனல்வடி
விங்கிதத்தெழுதுவன்படத்தினென்றரோ. (௫௪)

மருதிறவுரலொடுதவழுமாமையுங்
குரவையுங்குருந்துறுங்கொள்கையுங்குழல்
மருவவேமதனகோபாலனுமெழிற்
றெரியவும்படத்தினிற்சித்திரிக்கவே. (௫௫)

திகிரிசங்கங்குசபாசந்தேனின
மிகவிரும்பியமலர்விசிகமிக்குவில்
சகவுயிர்மயங்கிடச்சத்திக்குங்குழல்
நிகரிலொண்கரந்தொறும்நிறைந்திலங்கவே. (௫௬)

கரும்பெனச்சிலைமலர்கணைகள்காமர்நாண்
சுரும்பெனக்கலன்களுந்துலங்கவண்டளை
வரும்பெனச்சிறுநகைதிகழவண்டரும்
விரும்பியமதனகோபாலன்விஞ்சவே. (௫௭)

குண்டலம்விளங்கிடமதனகோபன்மெய்
கண்டனளுருகினள்கடுகியென்னுயி
ருண்டவனிவனிவனிவனென்றேயொளிர்
முண்டகத்திறைவியுமொழிந்துசோர்ந்தனள். (௫௮)

உயிரிலையெனவுடலுருகிமாழ்கிய
வயல்நிகர்வனிதைதன்னயர்வுநீங்கிட
வயில்விழிமங்கையராலவட்டத்தா
லுயிர்வரக்கமழ்பனிநீர்சொரிந்தனர். (௫௯)

எழுந்தனள்மதனகோபாலனீயுமா
லழுந்தியமின்னவளடியிரண்டினு
முழுந்துருளுவமுனமுற்றுநற்றிரு
விழுந்தனளேமுறனுற்றுவெம்பியே. (௬௦)

உடலிடையுயிரிலையெனவுமோய்வுறுந்
துடியிடைமங்கையைச்சூழுமாதரார்
கடியுடைக்குங்குமக்கலவைமேனிமேற்
றடவிடத்தெளிந்தபின்சாற்றுவாளரோ. (௬௧)

வேறு. எய்வீரெனநின்றருளிக்குவிலீர், கொய்வீரெனதாருயிர்கோகநகக்
கைவீரியரேகலவீர்கடிகோல், பெய்வீர்மதனன்சமர்பின்னிடவே. (௬௨)

குன்றுதுயர்கோடிவில்வேளுருவை, வென்றீரமிர்தாமெனவேவெளியி
னின்றீரடியேனினைந்தொருகா, லொன்றீரணையீரருளீருனையே. (௬௩)

துய்யீரிடைமங்கையைச்சொல்வபோல், வையீரடியேனையுமாமணமே
செய்யீர்கலவிக்கடல்சேர்கிலினொன்,மெய்யீர்வுறுமையல்விளைத்திடுவீர்[ரோ

பிணையேர்விழியாயர்கள்பேதையர்கா, விணைநீர்முனிறைஞ்சியெழுந்திலி
துணைநீரொனவேதொழுவேனையிங்ங, னணையீரிவையென்னவருக்கிறைவீர்

எதிராய்வருகூனியரம்பையென, மதுராபுரியார்மகிழத்தழுவுஞ்
சதுராவவடன்னினிகழ்ச்சியளோ, கதிராழியநானுமோர்கன்னிகையே.

ஏடார்தொடைமார்பினர்வாருமெனப்,பீடார்கைபிடித்திவைபேசியெனக்
கூடாதிவணூடினர்கொண்கனென,வாடாமலர்மங்கைமயங்கினளால்.(சஎ)

மின்னேரிடையாளணைமீதயர, வென்னேயிவளுய்வகையேதெனவே
பொன்னார்முலைமேற்பனிநீர்பொழிய, வெந்நீரொனமாதுவெதும்பிடவே.

மாலேநிறைமங்கைதுயர்க்கடலே, தாலேதணியும்மெனவேதையலார்
மாலாமிறைவந்தனனுமெனவே, வேலேவிழிமாதுவிழித்தனளால். (சகூ)

தோழித்திரளோரிருகைதொழுதே, யாழித்திரளாரமிர்தேயனமே
தாழித்திரள்சாடரிதன்னுடனி, வாழத்திரளுந்துவவாறுளதால். (ருo)

படத்தேயுறுரூபினியென்னபயன், றிடத்தேநெறியோகிகள்சிந்தையெனு
மிடத்தேயுறுமாலுனதேந்துமுலைத்,தடத்தேபுணரக்குறிதானுளதால்.(ருக)

ஆமேமொழிவோமெனநீர்நினையா, தேமாமுனிநாரதர்செப்பியசொற்
போமோபழுதேபுயலேருருவா, மாமாதவனின்னைமணம்புணர்வான்(ருஉ)

ஆமாமவையையமிலாரமிர்தே, நாமேமகிழச்சொலுநற்கெவுளி [னே
பூமாதுதெளிந்துகொள்பொற்றுவளைக், கோமான்மணம்நின்றொடுகூடுவெ

எனவேபலதூய்மொழியேதுவுட, னனமேதுயராறெனவேயறைவார்
தனமேவிழைமேலியதையனலா, ரினமாமலர்தூவியிறைஞ்சினரால்(ருச)

மையார்விழிமங்கைநலார்வசன, மெய்யாகவிரும்புவிதர்ப்பன்மக
ளுய்யாவுயிருய்ந்துமிருந்தனளால், செய்யாளெனவந்தருடெள்ளமுதே.

பொன்னின்குடைசாய்மனையும்பொலியத்,துன்னும்மலருந்தூய்சந்தனமு
மின்னும்மணியாரமுமெய்யிலக, வன்னந்துயராறியமர்ந்தனளால். (ருகூ)

தன்னேர்பிறிதில்லவடாரணியென், பொன்னாரமிர்தம்புணரித்திருவா
மின்னாளமர்வேலைவிதர்ப்பனெனு, மன்னாதரவாலுள்குமாறறைவாம்(ருஎ)

படங்காண்படல முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ஙசாஎஎ.

செங்கமலஞ்செறிமேகமெனத்திருமேனிதிகழ்ந்தெழவே
சங்கொடுசக்கரம்வாணிவர்தண்டெழில்சாபமமர்ந்திலகு
மங்கைகள்மார்புறுமங்கைகவுத்துவமம்பொனினுடையெழிற்
கங்கையுதித்துயர்பாதமுமென்னிருகண்ணிணைநண்ணினவே. (௧)

துன்னுமணித்திரள்வில்லிடுதூணணிகோடிதுலங்கியெழும்
பொன்னிழைத்தவிர்மண்டபமீதரியாதனமேபொலியக்
கன்னல்மொழிக்குயின்மங்கையர்விழுமியகவரிகள்கொண்டெழவே
மின்னுசுடர்க்கதிர்மவுலியுறத்திருவெய்தும்விதர்ப்பர்பிரான். (௨)

அந்தணருமறைமுனிவரனேகர்களாசிவிளம்பிடவே
யிந்திரனென்னவிருந்தனன்மைந்தனுருக்குமனென்பவனும்
வந்திடமுந்தியபருணிதர்பழையவர்மந்திரிமார்களுறச்
சிந்தைமகிழ்ந்தரசெய்தினிறைந்தவிதர்ப்பனெனுந்திறலோன். (௩)

அம்பெனும்நீள்விழிகாதடருந்திருவாகியவாய்வளையைக்
கொம்பனையீர்மணிமண்டபமீதுகொணர்ந்திடுவீரெனலு
மும்பரொடேழுலகீன்றவள்சேவடியைப்பணியொண்மடவா
ரெம்பரனீவருகென்றனனென்றனரிந்திரையின்புறவே. (௪)

அந்தமொழிக்குமகிழ்ந்தவுருக்குமணித்திருவன்னமனு
னைந்துறுவெண்டரளத்தொடுபொற்பமர்நற்கலனும்மிலகக்
கந்தமலர்க்குழல்வண்டெழநீளிருகண்ணிணைகாதுறவே
வந்தனள்பொய்யிடைகொண்டுவிதானநிழற்றனின்மாமயில்போல். (௫)

மற்குடையாமல்மலைந்தவனைத்தலைசாடிமறந்தருகஞ்
சற்குடையாதவன்மார்புடனென்புதகர்ந்திடநின்றுயருங்
கற்குடையாகவெடுத்தவன்மீதுறுகாதல்நிறைந்தெழுமின்
பொற்குடைசாமரைமல்கிடவேகடந்தனள்பூமிசையே. (௬)

துன்னியநவமணியுறுகனகம்பிறைதூசிடைதுயில்வரவம்
பொன்னமர்கிண்கிணிநூபுரமவிர்கொள்பதங்கடமிற்பொலிய
வன்னமும்வெள்கிடவேமயில்கூசிடவாரமிர்தாமெனவே
மன்னனிருந்தவைகாணவிருப்புறுமாதுநடந்தனளால். (௭)

ஓதமெழுந்துறுநேமியின்முந்தியவமிர்தினுதித்தமினோ
சீதமெழுந்தலர்செங்கமலத்தினமர்ந்துறைசெந்திருவோ
பாதம்விளங்கியஞெகிழிமிழற்றிடுபரியகமின்னவரு
மாதிவள்மண்மிசையேகியதென்னெனவுன்னினர்மாதவரே. (௮)

அண்டர்கள்வந்துதுதித்திடவாணினரம்பையுநாணிடவே
தண்டைசிலம்புகலின்கலினென்னநடந்தருடாளிலகக்
கண்டவர்நெஞ்சுகளிக்கமரத்தொடுபுல்லுயர்கல்லுருக
மண்டபமெய்தினள்கெண்டைகளஞ்சமதர்த்தடர்வாள்விழியாள். (௯)

வந்தனளந்தணர்மாதவர்பாதம்வணங்கியெழுந்துபினுந்
தந்தையையன்பினிறைஞ்சிமுனேனடிதாழ்ந்துயர்தாமரையாள்
சிந்தைமகிழ்ந்திருகண்கள்களித்திடுதாதைமருங்குசிறந்
தந்தமலிந்திடுமாசனமேறியிருந்தனளாரமிர்தே. (க0)

பண்கொளுநன்மொழியாமலர்பங்கயமீதமர்பாவைமுனுள்
மண்கொளுமச்சுதன்வேயிசையூதினனெனநினைவாணுதலாள்
பெண்களின்விஞ்சியகவினுடையாளுயர்பெருமையினுனிறையுங்
கண்கள்களித்தெழவுடல்புளகம்முறுகாவலர்கோன்மகிழ்வால். (கக)

மாதவர்நான்மறையறைபவர்பண்டிதர்மந்திரிமார்களுட
னீதியினுலுயருங்குணவீடுமெனிவைகள்நிகழ்த்திடுவான்
காதுறுநீள்கயலென்னும்விலோசனிகவினைநிகர்க்குமவ
னேதமிலாதகுலத்தினினல்லவனியாவர்கொலோவெனவே. (கஉ)

முரசறைமுன்றிலினிருபரிடேந்திறைமுகிலளவாய்வளரக்
கணைசெயலரியதொர்மகிழ்வொடுமெதனிறைகறையடிவெரினின்வரு
மரசனுரைத்தலுமஃதுணர்முனிவர்களந்தணர்மந்திரிக
ளுரைசெயலுற்றனர்புரவலவெம்மனமுறுபொருள்கேளெனவே. (கந)

வேறு. அலகைகளெழக்குருதியாறெனமடுப்பச்
சிலைகைகொடுதெவ்வர்கள்செருக்கறவெதிர்த்தே
யிலகுமுடிமன்னவமகட்பெறுவரேனு
முலகுதனினல்வரனுணர்ந்தருள்வர்கற்றோர். (கச)

அளவில்விபவங்களுறவேண்டுமகிழன்னை
கிளைஞர்கள்குலத்தினலனுற்றவர்கிளைத்தே
தளர்வியுயர்கல்விதனையோருமுயர்தாதை
யுளமகிழ்வுறுங்கனியுருபவனையுன்னும். (கரு)

ஆதலின்மகட்பெறுகையல்லறருவிக்கு
மோதரியமெல்லியலுருக்குமணியாகு
மாதுளமகிழ்ந்தருளநல்லமணவாளன்
யாதவர்குலத்தினுளனென்றுபின்னிசைப்பார். (கசு)

உத்தமகுணக்குரிசிலோதுவமையில்லா
வித்தகன்வனப்பினுடன்வேயினிசையூது
மத்தனெழில்பச்சைநிறவண்ணனடலாழி
நத்திணைவைத்தகரநாரணனுமாவான். (கஎ)

கஞ்சனைவதைத்திகல்செய்காலயவன்மாள
வஞ்சகமியற்றியிடைமாதர்துகில்கொள்வான்
நெஞ்சின்மதனஞ்சும்வடிவன்னெதிரிலாதான்
விஞ்சுமதில்சூழ்துவராபதியமர்வீரன். (கஅ)

யாதவர்குலத்துள்வசுதேவனருளம்மான்
மாதவன்முராரியரிவாமனனுமாவான்
றீதையகல்கற்புடையதேவகிதன்மைந்த
னேதமறுசோதிநலனோதரியதெம்மால். (௧௯)

மன்னன்வசுதேவனருண்மைந்தனெழில்மாயோ
னன்னமெனுமென்னடையுருக்குமணியாகு
மின்னின்மணவாளனெனவெய்தியிடவீர
முன்னுன்மரபோர்செய்தவமாமெனமொழிந்தார். (௨௰)

என்றுமுனிவோர்களொடுமந்தணரிசைப்பக்
கன்றுநிறையோடுசெறிகாளைபுகழ்கேளா
வென்றிபுனைமன்னவன்விதர்ப்பனுண்மகிழ்ந்தே
நன்றுரைசெய்தீரறிஞரென்றுரைநவின்றான். (௨௧)

ஓவியமுயிர்ப்புடனிருந்ததெனவோங்குங்
காவிவிழியாளையுயர்காமனிகர்கண்ணற்
கீவமெனவெம்முடனியம்பினன்விதர்ப்பன்
பூவினமர்பொற்கொடிதன்மெய்புளகமாக. (௨௨)

பரவைவருநல்லமிர்தெனப்பகர்சொல்லாற்று
மூருகினர்கணீதிமுயலுத்தமர்களெல்லாங்
கருகினனுருக்குமனனெஞ்சுறுகடுந்தீப்
பெருகுசினம்விஞ்சினபினாகிமுனிவொத்தே. (௨௩)

மடித்தனனடர்க்குமனல்வாயுறநிலத்தி
னடித்தனனகைத்தனனவைக்கணரஞ்சத்
துடித்தபுருவத்தனுருமும்வெருவுசொற்கள்
வெடித்திடவழற்கணுறவெய்யவன்விளம்பும். (௨௪)

அருந்தவர்சொல்நன்றுமறையாய்பவர்சொல்நன்று
பொருந்தியவமைச்சருரைநன்றுபுகழ்வெய்தித்
திருந்தநிலனாளுமிறைசிந்தையதுநன்றென்
றெரிந்தெழுமனத்தினனுருக்குமனியம்பும். (௨௫)

வியந்தெழுமறைப்பொருளுணர்ந்துவினையில்லா
துயர்ந்தவரெனத்தகையமாதவருமொத்திங்
கயர்ந்துமதிதப்பினவரென்றெணவறைந்தீர்
நயந்தினையுமில்லவனையேயுமதுநாவால். (௨௬)

நீர்சொலுமிடைக்குலமடைந்துநெறியில்லாற்
காருறவுகூறுகுலமேதவனடர்த்த
வீரமெதுநல்லுருவமேதவன்விளங்கு
மூரெதுபகர்ந்திடுமினென்றுமறிகில்லீர். (௨௭)

ஆயர்குலம்வந்துததிவெண்ணெய்நெய்யருந்திப்
பேயின்முலையுண்டடியுமுண்டுபிணியுண்டு
காய்கனிகொடேணினொடுகந்தமுறுகானிற்
போயுடல்வளர்த்தவனையோபுகலுவீரே. (௨௮)

மாதர்திரடங்களுறிவைத்தததிபால்நெய்
யாதரவினாலுதரமல்கிடவருந்திப்
போதுமுனர்கண்டவர்கள்போகவெனவோடிப்
பீதியுறுபேதைதனையேபெரியனென்றீர். (௨௯)

ஒள்ளியமனைக்குளுரலேறியுறிதாவி
மெள்ளவுயருங்கலமிழிச்சியதின்வெண்ணெய்
யள்ளிநுகர்மிச்சில்வெருகும்பெறவளித்த
கள்ளனையும்வள்ளலெனவேகழறுவீரோ. (௩௦)

தெருத்தனிலிடைக்குலமடக்கொடிகள்சீராய்
நிரைத்தெழவொளிக்கைவளையெல்லவுநெறித்தே
சிரித்தவர்கள்மார்பினினகக்குறிகள்செய்யுந்
துருத்தனையுருத்துயனெனச்சொலுவதென்னே. (௩௧)

நீரினாறுமாதர்துகில்வாரிநிறைபோதின்
காருறுகுருந்தின்மிசைநின்றுகனைமீதின்
வாருமிருகைகடொழூமென்றவரைமால்செய்
சோரனையுமாரணிகரென்றுரைதொடுப்பீர். (௩௨)

மஞ்சுபுனைமாடவடமாமதுரைமன்னுங்
கஞ்சனெனுமாதுலனையேகருணையின்றி
நஞ்சமெனவந்துவதைசெய்யுநலனில்லா
வஞ்சகனையிஞ்சொலினனென்றுரைவகுப்பீர். (௩௩)

சீலமுசுகுந்தனிடைசென்றவன்விழிக்க
வாலமெனவங்கைதனின்மோதியவணீறாய்க்
காலயவன்மாளவிகல்கண்டுநகைசெய்மெய்
நீலனையுமாலெனநிகழ்த்திடுவதென்னே. (௩௪)

ஊதுகுழலோசைதனினாலுழையுமாயர்
மாதர்புளினத்தினூறமாலெழமயக்கிச்
சூதுநிகராகுமுலைதோறுமனைதோறும்
நீதிநெறியில்லவனையென்னெனநினைத்தீர். (௩௫)

அடருமகதத்திறைவனாற்றறனிலாற்றான்
றடவரையொளிப்பவனல்சுற்றுவதுதப்பிக்
கடலிடைவயங்குதுவராபதியைக்காக்கு
மிடையனையும்வத்துவெனவெண்ணுமுறையென்னே. (௩௬)

யாதவர்முடிக்குரியரல்லரிதுவன்றி
நீதியிலிடைப்பதிவளர்ந்துநெறியில்லாச்
சூதனவநீதநுகர்சோரனையெம்மின்னு
மாதுமணவாளனெனநீருரைவகுப்பீர். (௩௭)

எதுகுலமறிந்திடையனென்பதுமுணர்ந்து
மதிமுகமடந்தைதனையீய்வமெனும்வாய்மை
யுதவுமுனிவோர்களுயர்மந்திரிகளெந்தை
முதுமதியின்வந்ததெனவேபலமொழிந்தே. (௩௮)

மாதவமுழந்தெனதுதந்தைபெறவந்த
கோதைதனையாவரெனினுங்குழலிசைத்தாற்
றீதுமெனவோதினர்களுவையிருவாளாற்
சேதனைசெய்வேனெனமொழிந்துநனிசீறி. (௩௯)

எங்கள்குலமுய்யவருமாரமிர்தமென்றன்
றங்கையெனுமுத்தமிதனக்குநிகராகத்
திங்களவிர்வெண்குடைகவித்தசிசுபாலன்
றுங்கமரபாளனுளனென்றுரைதொடுத்தே. (௪௦)

சேதிபர்கடங்கள்குலதீபசிசுபாலற்
கோதுகவுருக்குமனேலையினையெங்கள்
ளாதுதனையீவனிவணிற்கடிதுவாவென்
றீதுறவரைந்துபலதூதுவரையேவி. (௪௧)

உருக்குமனலர்க்குளமருத்தமியைநாளைச்
செருக்கொடுசிறந்தசிசுபாலன்வரவேநான்
பொருக்கெனவளித்திடுவெனென்றுபொறையில்லான்
பெருக்குமுரையாற்சபதமானவைபிதற்றி. (௪௨)

மதகரிகடேர்நிரைகள்மாவினணியெல்லாம்
விதமுறவலங்கரிமுன்வீதிதொறுமேவிப்
புதுமைபெறவேவிபுதர்தங்கள்பதிபோல
வதிகநயவேதமுரசம்மறைமினென்றான். (௪௩)

என்றவனெழுந்துசினமேறவெதிரெங்கும்
நின்றவர்நடுங்கவெரிகண்ணனெறிநில்லான்
குன்றெனவுயர்ந்தமதயானைமிசைகொண்டே
யென்றுதவழ்மாளிகையினெய்தினனிருந்தான். (௪௪)

உன்மதமெடுத்துநெறியொன்றுமறிகில்லாத்
துன்மதியுருக்குமனிவ்வுரைதொடுப்ப
மன்மதிகலங்கினன்மறைத்தவர்திகைத்தார்
நன்மதிமுகத்தவணடுங்கியுளம்நைந்தாள். (௪௫)

மாதவர்கடத்தமிடம்வைகிடவிதற்பன்
கேதகிவாசெஞ்சொடுகிரீடமுடிதாழ
வேதகமில்மாளிகையினெய்தினனமர்ந்து
போதிலுறைமாதுமணிமாடமிசைபோனாள். (௪௬)

ஏதமில்விதற்பன்மொழியுஞ்சிறுவனென்பா
னோதியதுமற்றுமுயவீமையுமுணர்த்தார்
மாதவவுருக்குமணிவேதியனைமால்பாற்
றூதெனவிடுத்தருளுமாறதுதொடுப்பாம். (௪௭)

விதற்பராசன் மந்திரப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧௭௨௪

௪௭-வது. தூதேவுபடலம்.

விராதன்விரல்சேர்கரன்விசாரவுழையேழு
மராமரமும்வாலியுநிசாசரருமன்று
மிராவணனும்வீழவொருவாளிதனையேவிச்
சராசரமுமானவரிதாளிணைதுதிப்பாம். (௧)

முன்னவனறைந்தமொழியால்முளரிமாதா
மன்னனடையாளனுளாமுமவர்போல
வென்னிதெனவுன்னியிருகண்கள்புனலெய்த
மின்னிறொளியாலயர்வியாளமெனவீழ்வாள். (௨)

எழுந்தனளிவ்வெய்யவுரையேதெனமயங்கி
விழுந்தனளிடர்க்கடலினுற்றனள்வெதும்பி
யழுந்தினளாற்றுமிவளாயுமியல்வேதக்
கொழுந்தினைநினைந்துணர்வுகூடியிவைகூறும். (௩)

வஞ்சகமனக்கருணையற்றமறமுன்றே
னஞ்செனமொழிந்தவுரையாலுளம்நடுங்கித்
அஞ்சுமுயிரெங்குமுனரிற்றுடரநீவந்
தஞ்சலெனவேயுதவுவாய்துவரையாள்வாய். (௪)

ஆயுமறைவேள்விதனிலேயரிகொளன்னம்
நாய்கவரவெண்ணுமதுபோலநலமில்லாப்
பேயினர்முயன்றுபுரிவஞ்சனைபிரிந்து
மாயவிடர்நானகலவாதுவரைமன்றே. (௫)

கண்ணவெனுமாருயிர்கரைந்திடவயர்ந்து
மண்ணின்விழுமீண்டெழுமதிக்குமனதாடே
யெண்ணுநினைவோடழியுமாமெனவிரங்கும்
வெண்ணெய்நுகர்வோய்கடிதுமேவுகெனுமின்னே. (௬)

வருந்தினளிவ்வெவ்வுரையினென்னுயிருமாயா
திருந்ததுவென்றோவெனவிரங்குநனிநஞ்சை
யருந்தினர்படுந்துனியிதாமெனவயர்ந்தே
பெருந்தடமெனுங்கணிணையாளிவைகள்பேசும். (௭)

மூளும்வினைவஞ்சகமுயற்றிசெயுமுன்னர்
காளமுகில்போலெழில்கொள்கண்ணனெனைவந்தே
யாளுகிலனுகிலுடல்கொண்டுயிருமார
நாளையுமிருந்துழல்வனோவெனநகைக்கும். (௮)

தந்தைவலியில்லனெனதாயினுரைசெல்லா
வந்தமில்முனோனறனிலாதவதிபாவி
வெந்ததுடல்நொந்ததுயிர்வேறுதுணைகாணே
னந்தனருள்மைந்தவெனைநண்ணியணைநல்லோய். (௯)

கையினைநெருக்கும்வயிறெற்றுமலிகண்ணீர்
மெய்யினுறவேமுலையின்மீதுறவுதிர்க்கு
மைம்முகில்நிகர்க்குமணிவண்ணனெனுமால்கொள்
செய்யதிருமங்கைதுயர்செப்பவெளிதன்றே. (௧௦)

வானின்மதிவாவெனவருந்துமவர்போன்று
மூனமுடவன்சிமையமுற்றபிறகுமுன்
பேர்நிமிர்வபோலுமொழியொத்துவினையென்பா
ராணிமடக்கினையுன்னிலவனெயான். (௧௧)

காளமுகில்போலுமவனெய்தும்வகைகாணே
நாளையதிபாதகமியற்றுவமுனோனன்
மாளுவதுவேகருமமென்றுமனவெந்தீ
மூளவுயிர்நையமுளரித்திருவயர்ந்தாள். (௧௨)

அன்னமனலுற்றதெனவேயணையில்வீழு
மின்னினுயிரொன்னவருதோழியர்கள்மேவி
யென்னெனவிரங்கியிருகண்களிடையெற்றித்
துன்னினர்கள்மெய்தழுவினார்கடுனிசோர. (௧௩)

நொந்துகனலாகியெழுமேனிதனைநோக்கிச்
சந்துபனிநீர்புழுகுதந்துமெய்விடுத்தா
ருய்ந்தமலரிந்திரையையஞ்சலெனவோடி
வந்தனளழைத்தனளம்மன்மதனவல்லி. (௧௪)

மாதினிவருந்தல்வளர்பொற்கொடிவருந்தல்
போதமருமுத்தமிவருந்தல்புவிவாணி
னேதமகனற்றிருவருந்தலெனுமின்சொல்
லோதினளுருக்குமணியொற்கமகலத்தான். (௧௫)

அன்னமயிலாரமிழ்தமானமடமானே
மின்னிடையாய்கயலைவென்றவிழிமாதே
யுன்னுயிரெனத்தகையபொற்றுவனையுற்ற
மன்னன்வரசல்வகைவகுப்பனவைங்கணீ. (௧௫)

நீதிநெறிநூல்வழிசிரம்பிமெய்யுணர்ந்தே
யேதமுளயாவையுமகற்றிவளரின்சொல்
லோதுமவனாகினலனுய்ப்பவனுமாகுந்
தூதுவனையேவியருள்சுந்தரனிடைக்கே. (௧௬)

பொற்றுவனைமன்னனிடைபோகவிடுதூதா
யுற்றவனுரைக்குவமுனூரிரதமேறிச்
சிற்றினமதானவர்கள்மாளவமர்செய்தே
கொற்றவனுனைப்புணர்வனீயுணர்திகோதாய். (௧௮)

ஐயனுரையன்னமொழியாவதுமகற்றும்
வெய்யவனுமுன்னம்வருவீரன்வகைவேறு
செய்வனிலைநீகடிதுதூதுவிடுதேனே
யுய்யுநலனாகியவுபாயமிதுவென்றாள். (௧௯)

என்றுமொழிமன்மதனவல்லிதனையின்புற்
றுன்றவுயிராரமெய்யுறத்தழுவியின்பா
லின்றுவருபேருதவியேழ்கடலின்விஞ்சு
மன்றல்கமழோதியெனவேமகிழ்வொடோதும். (௨௦)

மின்னுமுகிலேகிலவன்மேனியின்முயங்கு
மன்னமுறின்மன்கையமர்சங்கினியர்க்குந்
துன்னுமணியேகிலிறைதூயசிகைசேரு
மன்னவரிபாலினிதினேகுமவர்யாரே. (௨௧)

எய்துமவராரிவணெனைத்துயரின்மூழ்கச்
செய்பவர்கள்செய்கையுமெதிர்ந்தசிலைவேளின்
வெய்யகணையால்வெருவுகாதலும்விளம்பி
யுய்யும்வகைசெய்கணவனென்னுழையுறத்தான். (௨௨)

ஏதெனமனத்தினினையாவிடரிதுற்ற
மாதினையணைத்தினியமன்மதனவல்லி
போதனிகராகியபுரோகிதனருட்செய்
வேதமொழிமானவனையேயெனவிரித்தாள். (௨௩)

அங்கிவனையேவியிடினல்லிமலர்மானே
சங்கொளிகொள்கையனுறைநற்றுவனைசார்வான்
செங்கமலமன்னகழல்வீரனொடுசேர
விங்குவருவானயாலென்றிவையுரைத்தாள். (௨௪)

உரைக்குலமன்மதனவல்லியையுவந்தே
இருக்குமுதனாலுமறையோதுமவனையத்
திருக்கருநெறிக்குளமர்செல்வனையென்முன்னர்ப்
பொருக்கெனவழைத்திடுமினென்றுரைபுகன்றாள். (உரு)

மாதிவைமொழிந்திடமகிழ்ந்தருணமாதர்
வேதமொழிநாவினனைமேவினர்பணிந்தே
தீதகலுருக்குமணிசேருமணிமாட
மேதமகல்பூசுரவெழுந்தருள்கவென்றார். (உசு)

கொஞ்சுசுகமன்னவர்கள்கூறுமுறைகேளா
வஞ்சமகல்கஞ்சமலர்மாமுனிநிகர்த்தே
விஞ்சுமறைநல்வடிவுகொண்டெனவிளங்கிப்
பஞ்சியடிவஞ்சியமர்பைம்பொழிலடைந்தான். (உஎ)

நூலொளிருமார்பினனுணங்கவருநன்னா
னாலுமறைநாவினனலந்திகழுமெய்யன்
பாலினுறுநாரமகலப்பருகுமன்னம்
போலமலிஞானமுறுபுண்ணியன்மகிழ்ந்தே. (உஅ)

ஏசகலுருக்குமணியென்னுமடமின்மேல்
வாசமலர்தூவிமறைநாலுமலிவாய்மை
யாசிகள்பகர்ந்திருகணார்வுறுகளிப்பா
னேசமலிநெஞ்சினொடுநின்றுதுதிசெய்தான். (உகூ)

உருக்குமணியோதுமறையோன்மிகவுகப்ப
வருக்கியமளித்துமணியாதனமிசைக்க
ணிருக்குறையுநாவினனிருக்கெனவிதஞ்சொல்
முருக்கிதழின்வாய்முளரியாள்பலமொழிந்தாள். (௩௦)

மால்பிரமனேற்றில்வருவோன்மகிழ்வொடெய்த
நாலுமறையோதியதினற்பொருளெனத்தான்
கோலமுறுவேள்வியனல்கொண்டவருவப்பச்
சீலவமுதம்பருகிடும்படிசெய்விப்பீர். (௩க)

திங்களின்மும்மாரிபொழியச்செகதலத்திற்
றங்கியுயர்தேவதைகள்மூர்த்தியொடுசார
வெங்குமருள்மெய்யினரியைந்தெழுவவெல்லா
முங்கள்மறையால்வருவதல்லதுவுமுண்டோ. (௩உ)

வேந்தரதிபாதகம்விடும்படிவகுப்பீர்
சாந்தமுறுசாத்திககுணத்தினொடுசார்வீ
ரோர்ந்துயருநாலுமறையுள்ளபொருளெல்லா
மாய்ந்தமுதலாமிறையறிந்தருளுவீரோ. (௩௩)

உத்தமகுலத்துதயமாகியொளியுள்ளீர்
கைத்தலநெலிக்கனியெனப்பொருள்கள்காண்பீர்
சித்துறுமறைக்குருவுயர்சீரிணையறிந்தே
நித்தலுமனற்பிறழும்வேள்விகணிறைப்பீர். (௧௪)

எண்கணனுநும்பெருமைகூறவரிதென்று
லிங்கினிநிகழ்த்துமவர்யாரெனவிசைத்தே
சிங்கலின்மறைத்தலைவனன்பொடுசிறப்ப
மங்குலென்னநீள்குழன்மடந்தையிவைசொல்வாள். (௧௫)

மன்னவன்விதர்ப்பன்மகளாகியவென்முன்றோன்
சொன்னநெறியில்லவசனங்களவைசோர
வென்னிடரறத்துவரையிஞ்சியினின்விஞ்சி
மின்னகரினிற்கடிதுசென்றுவரல்வேண்டும். (௧௬)

ஏகிவரலேதுகருமத்தெனவிசைக்கிற்
பூகநிரைசூழ்கழனிப்பொற்றுவரையுற்ற
மாகமுகில்வண்ணன்மதுசூதனனெம்மாயோன்
யாதவன்முராரியரியாயர்குலம்வாழ்வோன். (௧௭)

ஆரவனெனக்கருதுமையவுரைகேண்மோ
வீரனவன்யாதவர்குலத்துவருமெய்யோன்
மாரன்வெஃகுமேனியினன்மாதவன்முகுந்த
னாரணன்முராரிநவநீதனுகர்கல்லோன். (௧௮)

கண்ணன்மணிவண்ணனுயருங்கனகவெற்பு
மண்முழுதுமுண்டுமிழுமாலிருடிகேசன்
வெண்ணெய்நுகர்கள்வனொலிவேலைதனின்மேவு
மெண்ணரியசோதிபுகழ்கூறவெளிதன்றே. (௧௯)

காலயவன்மாளவகைசெய்தகரியோன்றன்
பாலின்வருநற்கருமமேபகரின்முன்றோ
ராலிலையமர்ந்தவனென்னெஞ்சிலகலாத
மாலினைவிளைத்தனன்வளத்துவரைமன்னன். (௨௦)

கஞ்சனுயிர்காயுமிறைகாளமுகில்காயா
வஞ்சனமுநாணுமெயிலங்கவரிவந்தென்
னெஞ்சுநிறையக்கணின்முனிற்பனுறவாரா
னெஞ்சில்வசுதேவனருள்செம்மலிணையில்லான். (௨௧)

விரைகமழ்துழாய்பிறழுமேனியிறையென்முன்
வருவனுடனேமறைவன்மாதர்தருசெய்யால்
பருகினவனெண்ணில்குணமென்மனதுபற்றி
யுருகுமுயிரன்னவனையல்லைகருதேன். (௨௨)

அன்னவனெனாவிகணினெஞ்சினகலாத
மன்னவனையுன்னியவன்மார்பினெழினத்து
மென்னையறியாதுநவையெய்திடவேயென்
முன்னவன்மறத்தினாறுதுன்மதிமுளைத்தே. (௪௩)

அரியையெள்கலாக்கியலவன்களையருந்து
நரியைநலனென்றுரைசெய்நன்கிலர்கள்போலக்
கிரிகைகொடுகோநிரைகெடாதவகைகாத்தோன்
பெரியபுகழிற்சிறிதுபெட்புமில்பசாசன். (௪௪)

சேதிபர்கடங்கர்குலதீயசிசுபால
னேதமுறுவான்றனையளிப்பெனிளையாளா
மாதினைமணஞ்செய்திடநாளைவருகென்றே
தூதுவனையேவினன்விதர்ப்பனருடோன்றல். (௪௫)

ஆயவனுரைத்தமொழிகேட்டவெனதாவி
மாயுநொடியின்முனரதற்குளொருவாய்மை
யாயுமறைநாரதனறைந்தமொழியாலே
தூயமணிவண்ணன்வருமென்றுடல்சுமந்தேன். (௪௬)

அறிந்தருள்மறைத்தலைவபாரினடர்கன்றை
யெறிந்துவிளவின்கனியுதிர்த்தவரியென்பா
லுறுந்தவமிலாதொருவினையுதயத்தே
யிறந்திடுவனிங்கிறைவனாணையிதையெண்ணி. (௪௭)

அற்பர்கள்செருத்தொழிலடக்கிநிலனோடே
விற்பெருமையெங்கணும்விளங்கவினையேன்றன்
கற்புமகலாதவகையிற்கடிதினேகிச்
சற்பவனையச்சுதனையெற்குதவுதக்கோய். (௪௮)

ஆயுமறையந்தணவெனாருயிரலைந்தே
யோயுமுனரிற்கடிதினாண்டுவரையுற்று
மாயவனுநாளையுதயத்துவருவண்ண
நீயுதவிசெய்தருளுகென்றுபினிகழ்த்தும். (௪௯)

நளனெனுமகீபன்மொழியாலனநடந்தே
யளவிலுயர்கற்புநிறையெங்கள்குலமாணும்
வளமையுறுகன்னிதமயந்தியெனுமாதி
னுளமகிழவேயுரைசெய்தூதுமுணர்வாயே. (௫0)

மாதவனருட்படியின்வாரிதிகடந்தே
மீதுயரிலங்கைநகர்மேவிவினைவீடச்
சீதையுயிருய்யவொளிராழிகொடுசென்று
ஆதரைசெய்வாயுசுதனன்மையுணர்தூயோய். (௫௧)

ஆதலின்மறைத்தலைவனியறனைறிந்தோய்
மாதுயரின்மூழ்குமென்மறுக்கமதுதீர
யாதவனிடைக்கடிதினேகுமுதவிக்கிங்
கேதுநிகரில்லையெனவிந்திரையிசைப்பாள். (௫௨)

இன்றுதுவரைப்பதியினேகியெழில்சேருங்
குன்றெனசிவந்ததொருகோபுரநல்வாயில்
சென்றுபிறமன்றவர்கடேவர்களிலங்க
வன்றிவுலகுண்டருளுமாதியையடைந்தே. (௫௩)

எஞ்சில்குணமாயவமுராரியெனவேத்திச்
செஞ்சொன்மறையோதியரிசித்தமகிழ்வித்தே
யஞ்சுதலிலாமலெனதாவிநிறைகாதல்
விஞ்சியெழுமாறதனைமெல்லெனவிரிப்பாய். (௫௪)

கோவியர்கள்காதலெழவேகுழல்கொடூது
மோவியமுநாணுமுருவாவுனதுமாலின்
மேவியவுருக்குமணியானமடமின்னின்
றேவியுயிருய்யவருளென்னுமுரைசெய்வாய். (௫௫)

சிற்றினமதாகவருதீயசிசுபாலன்
சுற்றமொடுநாசமுறவேதொடரவேகி
விற்செழில்வயங்கிடவுருக்குமணிமின்னை
யுற்றுமண்நீபுணருவாயெனவுரைப்பாய். (௫௬)

கூனிவருவாணிமிரவங்கைகொடுகோதின்
மேனிதழுவுங்குமரனுக்குயர்விதர்ப்பன்
மானுனதுதேவியெனவேவரமளித்தா
லானியிலையென்னுமொழிநீயுரைசெயையா. (௫௭)

சிங்கமெனவந்துசெருவென்றவசன்மூன்று
னெங்கள்குலவிந்துமதியோடுமணமெய்தித்
தங்கணகருற்றுயர்தவாவலியெனத்தா
னங்கைபிறழ்நேமிவரவேயருள்செயையா. (௫௮)

இலங்கைநகரின்மிதுலைமாமயிலிருந்தே
கலங்கும்வகைசெய்தநிருதன்னுயிர்களைந்து
வலங்கொளுமிராமனெனவந்தருளிவீரந்
துலங்கியுறமன்னனெனைமன்னும்வகைசொல்வாய். (௫௯)

காலனெனவந்தடர்கராவினலைகைம்மா
மூலமெனவன்கலுழன்மீதுசென்முராரி
சீலமெனவென்வினைகடீரும்வகைசெய்ய
நீலமுகில்வண்ணன்வரவேதுவறிநீயே. (௬௦)

இன்னபடிசொல்லுமுறையென்னவறியாதேன்
சொன்னமொழிதன்னுணலனுள்ளதுதொடுத்துப்
பின்னுமிதமானவசனங்கள்கொடுபேசி
மன்னனெனைவர்தனையுமாறுரைவகுப்பாய். (௯௧)

நீரொடும்வளர்ந்துநிறைசெந்நெலொடுகன்னல்
காரொடுமுலாவுகதலித்திரள்கள்காணுஞ்
சீருடையபூகநிரைசேர்கழனிசூழு
மூர்களிருநூறுமகிழ்வோடுதவுவேனுன். (௯௨)

வீசுகதிரின்சுடர்விளங்குமணியீட்ட
மாசின்மதிபொன்னினம்வயங்கியுறுமாரந்
தேசுநிகழாபரணமாடைவிடுதேர்கள்
வாசியிபமோடருள்வனீகடிதுவந்தால். (௯௩)

சேறியுறுகாதலுரைசெய்துதிருமாலோ
டறினலனெய்தவருவீர்கொலெனவிற்றைக்
கூறுமிருணூறுகதிர்கீட்டிசையுதிக்குங்
காறுமெனுடற்குளுயிர்காணுமறிகற்றோய். (௯௪)

வாயுவெனவேகமலிவாசிநிரைபூண்டே
யேயெனுமுனெய்துவதிலங்கியவிமான
மாயம்தாருதேரின்மிசையேறியருளையா
மீயுயர்கடற்றுவரையேகியிவண்மீள்வாய். (௯௫)

இன்றுதுவரைப்பதியினேகிநெறிநாளை
மன்றல்கமழ்நற்றுளவமாயனொடுவந்தா
லென்றனுயிரும்மொழிவதில்லையதுபோற்செய்
நன்றியிலையென்றுரைசெய்நாயகிநினைந்தே. (௯௬)

மழைமுகிலின்வண்ணனருள்மாறுமறைமுன்னோன்
விழைகருமமும்பலவுமோலையின்விரித்தே
யுழையின்விழியொத்தகணிமாதவனையுள்கித்
தொழுதுகையினீயமறையோனுமிவைசொல்வான். (௯௭)

அன்னநடையாகியொளிரன்னையயரேனீ
சொன்னநலனுயதுவராபதியில்வாழு
மன்னவனுனைப்புணரவேவரவுரைத்துன்
முன்னம்வருவேனெனமறைத்தவன்மொழிந்தான். (௯௮)

மறைமொழியிருசிகள்வழங்கினன்மகிழ்ந்தே
யுறுபுரவிபூணிரதமுற்றனனுவந்தவ்
விறைவியுமெழுந்துகடிதேகெனவிசைத்தங்
கிறைவதன்முன்வானயனமாகிடவுயர்ந்தான். (௯௯)

வேறு. அம்பொன்மாமணிவிஞ்சுதேரினனந்தணாளர்குலக்கொழுந்
தும்பர்வீதியினெழுந்துசெங்கதிரோடிமேல்கடவுறுவபோ
லிம்பர்மாவொடுகடவுசாரதியெழிலிமேல்விடவியன்மறை
நம்புநாவினன்வரைகள்காடுகளகலநாடுகணண்ணியே. (எ0)

வாரிதிக்குளெழுந்துமாருதம்வீசியோடுமரக்கல
னேரெனக்கடுவிசைகொடேயிரதத்திலெநெறியேகிவான்
காருறைத்துறுகோடரத்துயர்கதலிகைத்திரள்கவினுறச்
சிருதித்தமர்துவரைமாநகரணுகினன்றிகழ்வேதியன். (எக)

அண்டரிந்திராந்தரத்துவிமானமோடுமமர்ந்துற
வெண்டவத்தினர்கிலவுநம்மிறையிரணியப்பதியிலகவே
முண்டகத்துறைமாதுமார்பன்முராரிமேவுதிருப்பதி
கண்டனன்விழிகளிகொளச்சதுமறையையோதுகருத்தினன். (எஉ)

செம்பொனாலவிரெயில்கள்சூழுகன்வேலைநின்றுசிறந்தெழ
வும்பர்வானினுயர்ந்தகோபுரமண்டபங்களுமொளிகொள
வம்புராசியெனத்திரண்டனவணிகம்வீதியினடையவே
வம்புலாவியவளகவாணுதன்மாதர்வாழ்துவராபதி. (எங)

மின்னுமாமணிமிளிர்வகோபுரமும்பரவானின்விளங்கியே
நன்னிலாவவிர்தரளமாளிகைகிளைகள்வில்லிடுநகர்தனிற்
புன்னின்மால்வரைகயிலையங்கிரிநீலவெற்பணிபொற்பினுற்
றுன்னுவீதிகடோறுமல்லல்பிறங்குநன்மைதுலங்கவே. (எச)

தேவர்மாமுனிவோர்கள்வந்துதிரண்டுமாமலர்சொரியநற்
பூவிலோனரனோடுமிந்திரனமரர்மாதர்கள்பொலியவே
நாவினான்மறையறையும்வேதியர்நாவலோர்துதிநவிலமா
மூவராமொருமுதல்வன்வாழ்பதிமுரசினோசைமுழங்குமால். (எரு)

வீதிதோறுநெருங்குமாபரிதேர்கள்வேழம்விளங்கிடச்
சோதிவாள்கதைவின்முசுண்டிதுலங்குகையினர்சூழநற்
கீதமெல்லிசையாணர்வீணைகிளத்தினார்கிளிபோலவே
மாதரார்களிலங்கிவாழ்துவராபதித்திருமாநகர். (எசா)

சந்துபாடலமகிழ்பலாமுகிழுவுபூகநிறைந்தெழு
மந்தமாநகர்முந்துமாமறையந்தணாளனடைந்துபின்
றிந்தமாபுரியியையுமாபதியெந்தலோகமுமிலையெனச்
சிந்தையாரநினைந்துதேரினில்வந்துவீதிசிறந்தனன். (எஎ)

வீதிநண்ணியமைந்ததேரினெழுந்தமாமறைவேதியன்
சாதுரங்கமிடைந்துகாகளமோடுபேரிதழங்கிட
மாதவன்கருணாகரன்கருமேகவண்ணன்மகிழ்ந்துவா
ழேதமின்மணியதிர்கொள்கோபுரவாயிலெய்தினனெழிலுற. (எஅ)

ஆயுநான்மறையந்தணாதிபன்வாயில்வந்தமர்வேலையின்
மாயனாயன்முராரிமாதவன்வாமனன்றிருமாலரி
வேயினூதியவாயனச்சுதனச்சராவணைமேவுவோன்
தூயமாமுகில்வண்ணனாதனிருந்தவாறுசொல்வாமரோ. (௭௯)

விளங்குமாமணிநீலமாரவினங்கள்வித்துருமங்களுங்
களங்கமில்வயிடூரியம்வயிரங்கள்மின்னுறுகங்கணந்
துளங்கவில்லிடுபதுமராகநன்மரகதங்கடுதைந்திட
வளங்கொடுணைணிகோடிமீதுயர்மண்டபத்தின்மருங்கரோ. (௮௦)

வேறு. பொன்னின்குடையுயர்சாமரைபொலியக்கதிரவிர்பொற்
றுன்னுமெழின்மணியின்றிரடரளத்துடன்றுலங்க
வன்னந்திகழரியாதனமிசைமாமுகின்மான
மின்னுஞ்சுடர்ப்படையாழியனிருந்தான்றிசைவிளங்க. (௮௧)

நீலத்தடவரைமேலவிர்நிறையுங்கதிர்பொருவக்
கோலத்துறுமவுலிச்சுடர்திசைவானொளிகொள்ளப்
பாலைத்தருமதரத்திகள்பலகாலுறநோக்கும்
வேலொத்தகண்மிளிர்மெய்யெழில்விபுதர்க்கிறையொப்ப. (௮௨)

மின்னிலமுமணியாரமுமிளிராபரணஞ்சூழ்
முன்னூறிகழ்திருமார்பமுமுளரித்திருமுகமு
நன்னாதுமிழ்ந்திடவில்லிடுநன்னித்திலநகையும்
பொன்னாடையிற்பிறழுங்கடிதடமுங்கவின்பொலிய. (௮௩)

காதிற்பிறழ்மகரக்குழைகதிர்பொன்னொளிகாட்டச்
சோதித்திருப்புருவத்தெழில்குனிவில்லெனத்துலங்கித்
தீதற்றநற்றிருவாய்மலர்திகழ்துப்பெனச்சிறப்பப்
பாதத்தனிவீரக்கழல்படிவானவிர்பரப்ப. (௮௪)

அலருங்கதிரவனாமெனமணியின்றிரளமரும்
வலயங்கவினுறுதோளிணையுயர்மந்தரமான
வலையும்புனல்குடைந்தேறியவரிவைத்திரடொழுவே
கலையன்றருள்கரமீதணிகடையம்பொலிவுறவே. (௮௫)

அம்போருகமலராமெனவருட்கண்ணிணைசிறப்பக்
கம்பாரமுமணியும்பிறழ்களமுங்கவினுறவே
யம்பாசிழையொளிவீசிடவணிமார்பினினழகாய்
வம்பாணிறைதொடரோடணிதுளபத்தொடைவயங்க. (௮௬)

கருமாமுகில்காயாமலர்கடலஞ்சனமெனவே
திருமேனியையுடையானவிருடையான்செகமுடையா
னருளாளனமுயர்கேசவனமரர்க்கிறையமல
வுருவாகியுமருவாகியுமுயிர்தோறமரொருவன். (௮௭)

பண்ணேர்மொழியார்சோபனப்பல்லாண்டிசைபகர
விண்ணோர்சதமகனெண்டவர்விரிஞ்சன்மலர்பொழியக்
கண்ணாரமுதச்சோதியன்கருணாகரன்றிருமால்
மண்ணோர்தொழவிருந்தான்மரகதமாமலைமான. (௮௮)

சந்தார்பொழிற்றுவராபதிச்சதுவேதனும்வியவா
வந்தேயுறக்குடபாலினின்மறையோர்புனலிறையாக்
கொந்தார்துளவணியும்மெதுகுலதீபகமன்னன்
செந்தீபமுமிருபாலெழநின்றான்றிசையிலக. (௮௯)

அன்றானைமுன்வருமச்சுதனெழகார்முகிலெனவே
நின்றேயருளும்வேலையினிறைவேதியன்வரவை
யென்றோடுடுத்தவழ்கோபுரவணிவாயிலொரியம்பக்
குன்றான்மழைதடுத்தானிவண்கொணர்மின்னெனக்கூற. (௯௦)

மதுசூதனன்மொழிகேட்டுயர்மணிவாயிலினமர்வோர்
சதுமாமறைநிறைவேதியதிபாலிழுதயிலு
மெதுவாகுலவிறையோனுனையழையென்றனனெனவே
விதமாயுடல்புளகம்முறவெழுவேதியனெய்தி. (௯௧)

வேறு. கண்டனன்மணியவிர்கனகமண்டபத்
தண்டருமுனிவருமந்தணாளரு
மெண்டிசைத்தலைவருமகிழ்வொடேத்திடும்
புண்டரீகத்தரும்புரவலன்றனை. (௯௨)

திருவளர்மார்பனைத்தேவதேவனை
மருடருபிறவிநீர்மருந்தைமாயனைக்
கருமுகில்கமலங்கொண்டெழுந்தகாட்சியா
முருவனைநிறையுமுத்தொளிருமெய்யனை. (௯௩)

சுத்தசாத்திககுணத்தொழிலினான்றனை
யத்தனையருச்சுனமொசித்தவையனை
வித்துருமத்தெழில்விளங்குவாயனை
நத்துறுநித்திலநகைமுகத்தனை. (௯௪)

விதியொடெவ்வுலகமும்விதித்தநாயனைச்
சுதைதருமொழியனைத்தூயசோதியைப்
புதிதலரரவிந்தம்பொருந்துங்கண்ணனை
மதியெனவயங்கியவதனத்தான்றனை. (௯௫)

மகரகுண்டலம்பிறழ்காதின்வள்ளலைத்
திகிரிசங்கமர்ந்துளசெங்கையான்றனை
நிகரிலாமுராரியைநீலவண்ணனைப்
பகிரதிவளர்ந்தெழும்பாதத்தான்றனை. (௯௬)

களவினில்வெண்ணெய்நெய்கவருங்கண்ணனை
யொளிகொளுத்தரிகத்தினுடனுலாவிய
துளபமுமாரமுந்துலங்குமார்பினின்
மிளிருமுந்நூலணிவித்தகன்றனை. (௯௭)

திவளுமாழைத்துகிறிவளுவான்றனைக்
கவளமார்கரிநடைகாட்டுஞ்சோதியைத்
தவளமார்ந்தளவுடன்சாதிமஞ்சரி
குவளையோடிலங்கியகுஞ்சியான்றனை. (௯௮)

பணவரவணைமிசைப்பதுமநாபனை
யுணவுளவுயிர்தொறுமுறைகுவான்றனைக்
யணிகலன்பிறழ்வுறவருக்கனுமெனு
மணியுடைநாண்செறிமருங்கினான்றனை, (௯௯)

பொலன்கொள்பீதாம்பரம்புனைகுவான்றனைக்
கலங்குறவீரையைக்கடைந்தமந்தரம்
விலங்கொணுவகைசெறிவியாளமாமெனத்
துலங்குகேயூரங்கொடோளினான்றனை. (௧௦௦)

அண்ணலையமலனையாதியோன்றனை
வெண்ணெயைநுகர்ந்தருள்வித்தகன்றனைப்
புண்ணியவிதர்ப்பர்கோன்புரோகிதன்மகன்
கண்ணினுற்கண்டனன்களிக்குஞ்சிந்தையான். (௧௦௧)

உளமகிழ்வெய்தவென்புருகினனுவர்
தளவில்லன்புளநிறையர்தனுளனும்
வளையொடுதிகிரிசேர்மன்னனைமுகி
லொளியெழுமேனிகண்டுவந்துபோதுவான். (௧௦௨)

ஸ்ரீதராவாழிஸ்ரீராமவாழியெம்
மாதவவாழிமாமாயவாழியெம்
யாதவவாழியெம்மிறைவவாழியென்
றோதியேமலர்சொரிந்துவந்துபோற்றினான். (௧௦௩)

சூழ்ந்தவிர்மணியணிதுலங்குமார்பனை
யாழ்ந்தெழுமன்பினோடாசிகூறியே
தாழ்ந்தனவிருவினைதருமமோங்கிட
வாழ்ந்தனன்மரகதவடிவவென்றனன். (௧௦௪)

சிந்தைநற்களிப்பெய்தத்துதிசெய்வான்றனை
வந்ததென்கருமமார்வரவிடுத்தபே
ரந்தணவுரைநகரறைகுவாயென்றான்
செந்திருமகளுறத்திகழுமார்பினான். (௧௦௫)

தோன்கவினுறுங்கமலச்செங்கணு
ணுதியாகலமெழுமுறையினுல்மகிழ்
வேதியன்புளகமெய்யெழவிரும்பியே
யாதவிகேட்டியென்றியம்பலுற்றனன். (கoசு)

குண்டினபுரத்தரசியற்றுங்கொற்றவ
னெண்டவர்வியப்புறும்விதர்ப்பனென்பவன்
பண்டுசெய்தவத்தினுற்பயந்தபைங்கிளி
தெண்டிரைக்கடலமுதனையசெந்திரு. (கoஎ)

உத்தமகுணத்தள்கற்புயருமோதிமஞ்
சித்திரங்கவின்கெடச்சிறந்தமேனியா
ணத்துறுத்திலகைகயள்நன்மதி
யொத்தொளிர்திருமுகமொளிருமொண்ணுதல். (கoஅ)

மின்னெனுமிடையினுள்வேய்கொடோளினுள்
அன்னமென்னடையினுளாம்பல்வாயினுள்
பொன்னவிர்மேனியாள்புயல்கொள்பூங்குழ
றன்னிகரிலாதவேற்றடங்கண்மாமயில். (கoகூ)

விற்புருவத்தினுள்வீணையாழெனச்
சொற்பகர்கிளியனுள்சோதியாயெழுங்
கற்பகக்கையினுள்கமலமாமுகைப்
பொற்புறுபயோதரமிலங்குபூங்கொடி. (ககo)

மல்லலார்வடவிலைநிகர்வயிற்றினு
ளொல்லையிலுடுநீர்ச்சுழிகொளுந்தியா
ளல்லிசேரனிச்சமெல்லனத்தின்றூவிசெம்
பல்லவமுறுத்திடச்சிவக்கும்பாதத்தாள். (கக௧)

வேறு. தாதவிழுசெங்கமலபீதிலுறுதையல்
பூதலமுயர்ந்தபுவனங்கடிசையெங்கு
மாதவநிறைந்துறவமர்ந்தருளுமங்கைக்
கோதியவியற்பெயருருக்குமணியென்பாள். (ககஉ)

அன்னவள்விடுக்கவருதூதனலையாழி
தன்னினிவர்பொற்புடையநற்றுவரைசாரு
மன்னவசுதேவனருள்மைந்தவுயர்வானின்
மின்னுமுகில்மேனியவெனுவுரைவிரித்தான். (ககஙு)

வேதியனுரைத்தநலமிக்கமொழிகேளாத்
தீதகலுருக்குமணிசிந்தையினினைந்தே
யேதுனைவிடுத்தகருமத்தினியலெல்லா
மோதெனவலைகடலினுற்றவனுரைத்தான். (ககச)

வேயினிசையூதியருள்வித்துருமமொத்த
வாயனிவைகூறமறைவல்லமறையோனு
மாயமுகில்மேனியவனற்றவருளாள
தூயமதுசூதனவெனுவினிதுசொல்வான். (௧௧௫)

வேலெனும்விலோசனியுருக்குமணிமின்னி
னீலமுகில்மேனியெழினெஞ்சினினிறைந்தே
மாலெழமயங்கிமனனேந்துமெய்யுமாழ்கி
வேலையொலிமீதெழமெலிந்துளம்வெதும்பி. (௧௧௬)

நிறையுமுகிலொத்தவிர்சோணின்வடிவுகண்கண்
டறிகிலன்விருப்பமுறுநின்செயலினுர்வ
முறமயலெழுந்துயிருமோயுமுடல்சோருஞ்
சிறியவள்படுந்துனிதெரிக்கவரிதையா. (௧௧௭)

விழியினுறுநீர்களலைவேலையெனவோட
வழுமலரணைக்குள்விழுமாவியுடல்சோரு
மழைமுகில்கணேர்வரினின்மேனியெனவாடித்
தொழுமெழுமுழைக்குமயல்சொல்லவெளிதன்றே. (௧௧௮)

கீதவிசைகற்கிலள்கிளிக்குரையயிற்று
ளோதிமலர்சூடுகிலளூசல்மிசையாடாள்
காதலெழமின்வளைகள்கைகழலநொந்தே
யோதுவதுநின்பெயரலாதுபிறிதோதாள். (௧௧௯)

கந்துகமடிக்கிலள்மதன்கணைகளேவ
நொந்துடல்வெதும்பியுருடங்கிவிளைகாதல்
வந்துறநெடுந்துனிகடூரும்வகைகாணள்
சிந்தையினிலுன்றனைநினைந்துருகுசெய்யாள். (௧௨௦)

அன்னமும்விரும்புகிலளாடுகிலணிரும்
துன்னுமலர்சார்துபனிநீர்மெய்சுடுமென்னு
மின்னுமுகிலஞ்சனவிலங்கலொளிர்காயா
நன்மலரெனத்திகழுநின்வடிவைநாடி. (௧௨௧)

பேயினுயிர்பால்னொடுமுண்டபெரியோனே
யாயர்குலம்வந்தருளுமையவனையென்றே
யோயுகில்மீதினிழையுள்ளவைகளெல்லாந்
தீயுமுருகுங்கருகுமுள்ளமயல்சேர. (௧௨௨)

மருதிறநடந்தருளுமாயவெனுமாரன்
பொருதுறவெழுந்தமயல்போகவணைமீதின்
மருவியணையாதவமுராரிதிருமாலென்
றுருகியெழுவாடுயரமோதவரிதையா. (௧௨௩)

குழலிசைகொடுத்தியருள்கொண்டலெனுமாவி
யழலுமுலைமேலணிகலன்களுளயாவு
மழலெழவெரிந்துபொடியாகிடவயர்க்குங்
கழைபொருவுதோளிதுயர்காணவெளிதன்றே. (௧௨௪)

ஓதுவதுமுன்பெயர்களுள்ளுவதுன்மேனி
சீதரவுன்மாநகர்சிறந்திடுதிசைக்கண்
காதலெழவேயுடல்களைந்துயர்கரத்தால்
மாதுதொழுமச்செயல்வகுக்கவரிதையா. (௧௨௫)

கோவியர்களுணவவர்கூறைகொடெழுந்தே
காவுயர்குருந்தின்மிசையேறியகணுமின்
னாவியினுநெஞ்சிடையுமம்பகவிணைக்கு
ணுவினுளுமெங்குமுளையென்றுமுளைநல்லோய். (௧௨௬)

உன்னவரிதானகவின்மாதவவுன்வீரந்
தன்னிகரிலாதசெயலின்மயறழைக்கு
மன்னம்வடமீனனையவாரமுதணங்கா
மின்னுனதுதேவியெனவேநலன்விரும்பும். (௧௨௭)

அற்புதமுகுந்தவரிகேசவவனந்த
சற்பவணையச்சுதசழக்கர்தலைசிந்த
மற்பொருதமாயவுனதாஞ்சையின்வருந்துங்
கற்புடையகன்னிகைகருத்தையுணராமல். (௧௨௮)

ஏதநிறையுங்குணனுருக்குமனனென்போன்
றீதுமுயல்வோனெறியில்சேதிபனிடைக்கே
யோதரியவொண்கொடியையீவனெனவுன்னித்
தாதுவனையேவினனறங்கள்மறைசோர. (௧௨௯)

சீலமில்முனோனுரைசெவிக்குறுதலோடுங்
காலன்வரவேயுயிர்கலக்கமுறுவார்போல்
வேலின்விழியாள்விதலையுற்றுவியல்வேலை
யாலநுகர்வார்தமினுமஞ்சினளயர்ந்தாள். (௧௩0)

அஞ்சலெனவேறுதுணையற்றவளவாழி
விஞ்சியுறுநாகவணைமேவியருளில்லாக்
கஞ்சனுயிர்செற்றகருணாகரவெனுவி
துஞ்சுமுனம்வந்தருள்செய்யென்னுமுளைசொல்லி. (௧௩௧)

மாதினவருந்துமவளென்னைவருகென்றே
யாதவனெனுநயகனிடைக்கடிதினேகித்
தீதுமுயல்வோர்கள்செயல்செப்பெனவுரைத்தா
ளாதியெனவேமமுறுமந்தணனுரைப்பான். (௧௩௨)

முன்னையுகமெண்டிசையுமூவுலகுமஞ்ச
வின்னல்செயிராவணனிலங்கைநகர்தன்னில்
மன்னவனிராமனைநினைந்துளம்வருந்து
மின்னெனவிருந்தனள்விதர்ப்பன்மகள்வீர. (௧௩௩)

என்றுரைபகர்ந்தவனுருக்குமணியென்னுந்
துன்றுகுழல்மாமயிலுரைத்தசொலையெல்லா
மொன்றுமொழியாமலுலகங்களையுமுண்டால்
மென்றளிரின்மீதுதுயில்வானுமவிரித்தான். (௧௩௪)

கழைகொடிசையூதியருள்கண்ணனவனைநாடித்
தொழுதுமயலெய்திமெலிசுந்தரியுனக்கே
யெழுதியநலோலையிதுவென்றுகையினீந்தான்
மழைமுகிலின்மேனியிறைவாங்கினன்மகிழ்ந்தே. (௧௩௫)

வாங்கியருளோலைதனைவாசகமவலான்கை
யீங்கிதனையோதுதியெனக்கடிதினீயத்
தீங்கிலமறைப்பொருளுறத்தெளியுமின்சொல்
லோங்கியிடமுதறிவுணர்ந்தவவனோதும். (௧௩௬)

வேறு.

தீதுசெயுருக்குமன்செயலினாலுறும்
வேதனைகடுவெனவிளையவெண்ணெயுண்
சோதிமுன்னுருப்பிணித்தோகைதன்றுய
ரீதெனவெழுதியமொழியியம்புவாம். (௧௩௭)

மாயவமானவமதுரைமன்னவ
வாயநீகேட்டுவந்தருணின்றேவியாந்
தூயகுண்டினபுரத்தோகைகாதலா
லோயுநாளெழுதியவோலைவாசகம். (௧௩௮)

விண்ணவரிறைவிடுவருடமிஞ்சவே
மண்ணுறுபொதுவர்கள்மகளிராவுயக்
கண்ணகன்வரையினைக்கவித்துக்காத்தருள்
புண்ணியவொன்றுநீபுகலக்கேட்டியால். (௧௩௯)

சுருதிகடெரியவுமரியதோன்றனின்
கருமுகிலெனக்கவின்காட்டுஞ்சோதிசெய்
யுருவினின்மயலெழநீயுருமையால்
வெருவுவென்காணெனைவேதத்துள்ளுளாய். (௧௪௦)

கண்ணுளேமனத்துளேகாண்கிலேனுனை
யெண்ணுமுன்வருகுதியருளுமீகலாய்
வெண்ணெயுண்கள்வவுன்விரகெலாமொரு
பெண்ணுடன்வளர்த்தியோபெருமையானநீ. (௧௪௧)

குருந்தமேலெறியுங்குரவைகோத்தும்வாய்
பொருந்துவேயூதியும்பொதுவர்வெண்ணெய்பா
லருந்துநீயடியனேனுள்ளமாரவே
யிருந்தனைகாண்கிலேனென்னமாயமோ. (௧௪௨)

ஆயர்தம்பாவையர்க்கமுதமாகநல்
வேயிசையூதிமுன்விளங்கிநின்றநீ
வாயுநேர்படக்கடல்வங்கம்போலவே
யோயுமென்முன்னிலாதொளிக்குமாறெனே. (௧௪௩)

துலைவிலாப்பொதுவர்தந்தோகைமார்க்குநற்
கலவியுமளித்தவர்களிப்பவாழுதி
யிலவிதழதரமீந்தெனையணைக்கிலாப்
புலவியென்னருடியைம்பூதநாயக. (௧௪௪)

சேணிலனுளனிறையென்றுசெம்மருன்
காணுதியெனக்கனல்கனகன்கையறை
தூணில்வந்துதித்தநீயென்முன்றோன்றலா
வீணினையுரைத்தருள்விளங்குநேமியாய். (௧௪௫)

கஞ்சமாமடுவினிற்கராவினாலைய
ரெஞ்சிறோலமழைக்கமுன்னெய்திநின்றநீ
பஞ்சபாணத்தினுலையும்பாவியேன்
றஞ்சிடாதொல்லையிற்றோன்றுதூயவ. (௧௪௬)

ஆருவாயுன்றிருவடியினன்றியே
மீளாத்துணியென்மேல்வினைத்துவைக்கினுங்
காளமாமுகினிறக்கண்ணநீயலா
ஞாளிபோன்றவனைநானத்திலேனரோ. (௧௪௭)

உன்னையென்னுயிரெனவுள்குநெஞ்சொடு
நின்னிருதிருவடிநெகிழலாதய
ரென்னினைவறிகிலானீதியெண்ணிலா
னின்னலொன்றிடுமுருக்குமனென்முன்னவன். (௧௪௮)

பாஞ்சுறுகதிரொளிதனிலும்பாரினில்
மேஞ்சுறுமின்மினிவிழுமிதாமென்றும்
ஆஞ்சுறுகற்பகத்தழகையன்றென்றே
காஞ்சிரநலனெனுங்கயவர்போலவே. (௧௪௯)

நெறித்திறன்றிறம்பியநீசனாகியே
மறத்திறனுறுசிசுபாலமன்னன்கைக்
கறத்திறங்கெடவெனையளிப்பனென்றன
னிறத்துளவுதவுவர்க்குதவிநேமியோய். (௧௫௦)

நன்றியிலானுரைசெவியினண்ணநான்
பொன்றிலாதிருந்ததுபுயலின்மேவிநா
ளன்றலர்தாமரையமைந்தமேனியா
முன்றனைக்காணலாமென்னுமூற்றத்தால். (௩௫௧)

உயிர்சுமந்துழன்றனனுலகுணேமியா
யயர்வொழிந்தடியனேற்கஞ்சலென்றுதோய்
தயிரளைகைகளாற்றமியனைத்தழீஇத்
துயராறுத்தாளுதிவந்துதோன்றியே. (௩௫௨)

பாரிலானிரைக்குமொண்பாவைமார்க்குநீள்
கோரவெம்பருவரல்குறுகவந்திடில்
வீரியரமர்செய்துவிலக்குமெய்ந்நெறி
யாரியவறிந்தநிற்கறையவேண்டுமோ. (௩௫௩)

அரக்கனலுற்றெனவளக்கரிற்கவிழ்
மரக்கலமெனவடியேன்மெய்வாடுமுன்
பொருக்கெனவருகலையென்னிற்பொன்றுவன்
பரக்கழியுணக்குறும்பதுமநாபனே. (௩௫௪)

உடலிடையென்னுயிரொருவுமுன்னெலி
கடலிடையமருவாய்கடிதினெய்தியே
யிடமுடையுனதுமார்பணைத்திடாயெனிற்
கொடியனேனுயிர்நமன்குறுகுங்காண்டியால். (௩௫௫)

நாளைவந்தெனைமணநண்ணிலாயெனில்
மாளுவனெரிதனில்விழுந்துமாண்டபின்
மீளுமோர்பிறவியின்வினையினேனைநீ
யாளுநல்வரமருளமலவச்சுத. (௩௫௬)

ஆதலிலச்சுதவடியனேனிங்ஙன்
சாதலின்முன்னம்வந்துதவிச்சார்வுறுஞ்
சேதிபன்சிரங்களைத்தெதிர்திசெய்யகண்
மாதவவுன்திருவடிவணங்கினேன். (௩௫௭)

வானுநீமண்ணுநீமற்றுமுற்றுமே
யானநீமதுரைமாநகரினங்கையாற்
றூனுவந்துரமுறத்தழீஇக்கொணற்றவக்
கூனியாய்ப்பிறந்திலேன்கொடியளாயினேன். (௩௫௮)

நெடியவமாதவநிலமளந்தரு
ளுடையவவானிரையுவந்துமேய்த்திடு
மடவியிலுன்திருவடியிஞர்வுறும்
பொடியதாய்ப்பிறந்திலேன்புன்மையாயினேன். (௩௫௯)

அலையுலாந்திருவடைந்தன்னம்போனடை
நலனுலாமகளிர்நக்கினத்தராகியே
மெலியவாண்டொல்லையின்மேவிநீகவர்
கலையதாய்ப்பிறந்திலேன்கவலையுள்ளத்தேன். (௧௬௦)

ஆயர்மாமடநல்லாரார்வமோடெய்தச்
சியமான்புலிகரியாவுஞ்சேரநின்
வாயினுலிசையெழமகிழ்வொடூதுநல்
வேயதாய்ப்பிறந்திலேன்மலினமேவுவேன். (௧௬௧)

குணங்கெடுங்கருதலர்குரகதங்கரி
பிணம்படக்குருதிகள்பெருகநீடுபேய்க்
கணங்குதித்தாடவேபொருதுகாத்தெனை
மணம்புணர்ந்தருளவாவாசுதேவனே. (௧௬௨)

ஏழையேனறைந்தபுன்மொழிகள்யாவையு
மாழியாய்பொறுத்தியாலடியளேனைநீ
சூழவாநாளையென்றுணியினற்பல
ஆழியாங்கடிகையொன்றறிதியுத்தம. (௧௬௩)

இனையனபொருடரவெழுதும்வாசக
மனையவுமொழிந்திடக்கேட்டவாழியா
னினையவுமரிதிவள்கற்புநீணில
வனிதையர்திலதமென்றுளமகிழ்ந்தனன். (௧௬௪)

நாயகியெழுதுவாசகத்தினன்குறத்
தீயுறுந்துப்பெனவுருகுசிந்தையான்
றூயகம்பிரிந்திடைப்பாடிசார்ந்தவன்
பேய்முலையுண்டபீதாம்பரத்தரி. (௧௬௫)

துய்யபாற்கடலிடையமுதிற்றோன்றிய
செய்யவளாமெனத்திகழுஞ்சிந்தையான்
மையில்மாணவக்குறளாகிவானுளோ
ருய்யவேமுலகளந்தருளுமூழியான். (௧௬௬)

செந்திருமகளெழுதனையசெய்கையால்
வந்திடும்புளகமெய்ந்நிறையுமாதவன்
சிந்தையிற்களிப்புறும்வாசுதேவமா
லந்தணன்றனக்குரையருளினனரோ. (௧௬௭)

அருந்ததியனையவளலையினுயிழை
யிருந்துழிநாளையேயெய்திநின்மணம்
பொருந்துவன்பாணியாதிரதமீதுபோய்
வருந்தலையின்னெனவுரைவழங்குவாய். (௧௬௮)

விண்ணவரொதிர்க்கினும்வேலைசூழ்ந்திடு
மண்ணவரொதிர்க்கினுமலைந்துமாமணம்
புண்ணியத்தணங்கினைப்பொருந்துவேன்மலர்ப்
பெண்ணெனுந்தத்துறலொழியப்பேசுவாய். (௧௬௯)

இப்பொழுதிரவினிலேகியந்தண
துப்புறுமதராமின்றுணிகடார்ந்திட
வுப்புடைக்கடலிடையலரியோங்கிடு
மப்பொழுதணுகுவோமறைதியாலென்றான். (௧௭௦)

கிளிமொழியனாடைக்கெண்டையங்கணி
யுளமகிழ்ந்திடமுன்னுலகளந்தவன்
வளமுறுமணிகலனவிர்கொள்மார்பினிற்
றுளபமல்கியமலர்த்தொடையுமீந்தனன். (௧௭௧)

வாங்கினன்மதுவுகுந்துளபமாலையை
வீங்கினன்குவவுத்தோள்மகிழ்ச்சிவிஞ்சவே
யோங்கியமறையினுலேத்தினுனளந்
திங்கிலோனறநெறிதெரிந்தவேதியன். (௧௭௨)

கதிரவனவிரெனக்காட்டுநற்கல
னுதவியிற்சலஞ்சலமுதவுமாரமு
மதுர்மென்மொழிமறையவனுக்கீந்துமாக்
கதியுறுமிரதமுமருளிக்கார்வணன். (௧௭௩)

ஓடுமிவ்விரதமேலேறியொண்கொடி
வாடுவமுன்னரென்வரவுசொல்கென
வாடினன்மகிழ்வொடுபாடியந்தணன்
யவினையெனவிளம்புவானரோ. (௧௭௪)

ஆரியவாழியென்னமலவாழிபோர்
வீரியவாழிநீயெனவிளம்பியே
சீரியமாயனைவிடைகொண்டேதிகழ்
தேரின்மீதேறினன்மறைதெரிந்துளான். (௧௭௫)

இரதம்வானெறியுலவெழிலிதாவுறப்
பரிதனைமுடுகுகோல்வலவன்பார்வையாற்
கருதுவோர்மனத்தினுங்கடுகியேகினன்
சரதநான்மறையறிந்தவர்களெண்ணுவான். (௧௭௬)

இவ்வழிதுவரையினெந்தைபாலெய்துஞ்
செவ்வழியந்தணன்செய்கைசெப்பினு
மவ்வழிவிதர்ப்பர்கோன்புதல்வியன்னமென்
னவ்விபோல்விழியினள்செயனடாத்துவாம். (௧௭௭)

அ-தேவபடலமுற்றிற்று. ஆ- திருவிருத்தம்-௩௧௦௧.

சூழவந்தறுதுனியறத்துலங்கியகதைநீ
ளாழியோடுகோடாதவச்சார்ங்கம்வாளமர
ஊழியாயிரமொருகணமாகவேயுலகம்
வாழ்வாழிமேலமருவோன்மலரடிதொழுவாம். (௧)

வேறு. மறையவன்வையமேல்வல்லையேகவாண்
டிறைவியம்பகமிமையாதுநோக்கியே
மறைதலுமலரணைமேவிவாரிதி
யுறையரிவடிவினையுள்குவாளரோ. (௨)

நீலமால்வரையினம்போருகந்நிறை
சோலமாய்க்குருமணிகுலவுமெய்யொளிர்
மாலினுரிவர்கொலோவந்துநின்றனர்
வேலைநேர்விழியினீர்விளம்புவீரெனும். (௩)

கண்ணின்முன்னெய்துவான்கரங்களாரவே
யெண்ணிருல்வினையினேன்றழுவவெய்தினன்
வெண்ணெயுண்கள்வனும்விரகன்வித்தக
னுண்ணயமிலன்கொலோவுரைமினீரெனும். (௪)

மன்னவன்றுவளாவாழ்வாசுதேவன்யா
னுன்னுமுன்னென்னுயிருருக்கியுண்டவன்
பின்னரும்வந்தனன்பிரிந்துபோயினு
னின்னவனின்னமுமென்செய்வான்கொலோ. (௫)

எனுமுறைபற்பலவியம்பியேந்திழை
மனமயல்மல்கிடமலர்க்கண்மூத்துகக்
கனலுறநகிலின்மேற்கலன்கடைந்திட
வனநடையெனுமிளைணையிற்சோர்ந்தனள். (௬)

சோருமின்மயலுறுந்துனியைநோக்கியே
வாருறுமுலையின்மேன்மணங்கொளும்பனி
நீருறவிடுத்தனர்நிறைந்தசந்தனம்
வாரிமெய்பூசினர்மங்கைமார்களே. (௭)

ஏங்கினர்பொருமினரிருகண்ணீர்விழப்
பாங்கியர்பருவரற்பரவையின்னுறப்
பூங்குழல்மடமயிலெழுந்துபூவணை
நீங்கினணடந்தணிறைந்தசோலைவாய். (௮)

பாடலமாதவிபனசமார்நிழற்
கோடுடைநாகமாமலகங்கோங்கொடு
பீடுடையாசினிபிண்டிபூகம்வா
னீடியதாழைசண்பகநிறைந்தன. (௯)

அற்புதமலர்மலிதுணர்களான்றெழும்
பொற்பெழவெழில்மேற்பொலிந்ததாமெனுஞ்
சொற்பெழவிபுதர்தம்பதிதுலங்கிய
கற்பகமரநிரையெனவுங்காட்டுவ. (கo)

நாகமேற்கேகயநடிக்கநல்லிசை
பூகமேலளிசெயச்சூதம்பொற்பெழக்
கோகிலங்கூவவஞ்சுகங்கள்கொஞ்சவே
யூகமாங்கனியுதிர்த்தோடுய்யானத்தில். (கக)

காவியுங்கமலமுங்கடிகொள்பானலு
மேவியேயலர்ந்தெழவிளங்குந்தன்மையாய்த்
தாவிநற்கயலெழத்தரங்கம்வீசிய
வாவிமீனிறைந்தொளிர்வானம்போன்றதே. (கஉ)

குரண்டநற்கொக்குறவயதுட்கூடிற்றென்
றரண்டுசேலினஞ்சரிவளையையண்டின
மருண்டுவீழ்நறவொடுபிறவிமானவே
கரண்டநீர்முழுகிமீதெழுந்துகாட்டின. (கங)

ஓதிமந்தாமரையுறங்கச்சீகரங்
கீதமேமொழிந்திடக்கிள்ளைபேசவே
நீதியாலமகிழ்நனைத்தெய்வமாய்நினை
மாதரார்மனமெனத்தெளிந்தவாவிநீர். (கச)

வளையினமதிர்த்தெழவாளைதாவநல்
லளியினமரற்றிடவலையுந்தாமரை
களியனந்துயில்விடக்கயல்கள்பாயவே
யொளிகொடண்புனலலைகடலையொத்ததே. (கரு)

யொன்னெழிற்படியெலாங்கெழுமிப்பொற்புற
மின்னவிர்மணியெலாம்விளங்கப்பித்திகை
துன்னியபங்கயஞ்சூழக்கோடுகள்
மன்னியதந்தமார்வாவிநீருற. (கசு)

நீலமும்வயிரமுநிறைந்தவென்றெழி
லேலுமாமணிகளுமிரணியத்திழை
கோலமாந்தூணணிகோடிதுன்னவே
மேலெலாஞ்சந்திரகாந்தமின்னிய. (கஎ)

கந்தனார்தந்தைவாழ்கயிலையாமெனச்
சந்திரனார்பதந்தரணிவந்தென
விந்திரனுருறுவிமானமீதெனச்
சந்தமார்மண்டபந்தயங்காப்பணே. (கஅ)

ஆரகிள் சாவினிக்கமர்ந்திலங்கமீ
மூரியேரரம்பையிற்றமாலமூடியே
வேரிமாமலர்மலிவிதானம்வீக்கினீர்
வாரியார்தரளமாமாலைநாற்றினார். (கக)

எல்லையில்கருப்புரமிழைத்தசந்துட
னல்லகுங்குமவெறிநாறமோடுறப்
பல்லவம்படுத்துமீப்பங்கயத்தினின்
மெல்லியதளவமாமலர்விரித்தனர். (உ0)

தண்பனியயர்தனைத்தெளித்துச்சாதியும்
பண்புறமௌவலும்பரப்புமெல்லணை
மண்பவமரவருவனப்பினிந்திரை
யொண்பவளக்கொடிபோலவுற்றனள். (உக)

மேவினள்வெறிகமழ்மலரின்மெல்லணை
யாவியுங்குரம்பைவிட்டகல்வதாமென
வோவிலங்காந்துயர்கனலையுற்றயர்
தூவிநல்லனமெனத்துளக்கமெய்தினாள். (உஉ)

மதிகலங்கிடுமெழுமையல்விஞ்சிட
விதிகொடிதோவெனவிளம்பும்வாய்வெரீஇத்
ததிகளவாடுவாய்தமியளேனைநீ
வதுவைசெய்தணைந்திடவாவென்றேதுவாள். (உங)

கூனிவாவெனக்கரங்கொண்டுமற்றவள்
மேனிமாமணமுறத்தழுவும்வித்தகா
தேனவாவொடுமலர்தேடும்வண்டென
நானவாவெய்தநீநணுகிலாததென். (உச)

இன்னனகூறிநொந்தரந்தையெய்தவே
யுன்னுமால்வடிவினையுயிருமோய்ந்திட
முன்னையூழ்வினையெங்ஙன்முடியுமோவென
வன்னமானடையினளயரும்வேலையில். (உரு)

அகிலம்வானளந்தவனணைகிலாமையொண்
ணகையிலாநங்கையைநணுகுகாமத்தின்
சிகையநல்பரவமெய்சிவப்பச்செல்வபோற்
ககனமீதலறிமேற்கடலின்மூழ்கினான். (உசு)

அனைத்துலகும்பெறுமாதிமூர்த்தியை
நினைத்திவனேபரனென்றுநெஞ்சினாற்
றினைத்துணையாகிலுந்தெளிகிலாதவர்
மனத்தினைப்பொருவினவளைந்தபேரிருள். (உஎ)

வெய்யவன்சுடரொளியொருவவீங்கிருள்
வையகந்திமிர்ப்பிழம்புறவளைத்திடச்
செய்யவடிசையெலாநோக்கிச்சிந்தையி
லுய்வகையிலையெனவுள்கிக்கூறுவாள். (உஅ)

வளைந்தனைநிலம்விசும்பருந்துமாறென
விளைந்தனைகங்குலேவிழையுமென்னுள
முளைந்திடக்கருநெருப்புதவினுயென
வளைந்தனள்பருவரற்கடலுளன்னமே. (உகூ)

சந்தனங்கரிந்துகத்தரளமாமணி
வெந்துகமையலாலுளம்வெதும்புவாள்
நொந்தனடிசைதொறுநுழைந்துவந்தெழு
மந்தியிற்பசலையுற்றயரும்வேலையில். (ஙo)

வேறு. அம்பரக்கயற்பதாகையரிபரிவசந்தன்வைய
மும்பரினிந்துகொற்றக்குடையெனவுருவமாருஞ்
சம்பரன்பகைஞனுக்குச்சராசனத்தரிநாணேற்றி
வம்பவிழசோகவாளிமலர்மகள்கருத்திலெய்தான். (ஙக)

வேறு. அல்கிளர்வருசதாகதியருப்பின
வில்கிளர்மலர்க்கணையுந்தவாய்வெரீஇ
மல்கிக்கருமணிவடிவவாவென
வொல்கியவொண்கொடியுறைக்கலுற்றனள். (ஙஉ)

காளமாமுகிலெனக்கடுகிவந்தெனை
யாளவேயஞ்சலென்றணைத்தியைங்கணை
மாளனணறவில்லுமண்ணில்வீழ்ந்திவண்
வேளினுர்விறலொரீஇவென்னிட்டோடவே. (ஙங)

கங்குலேமுகமதாக்காதல்விஞ்சயான்
மங்கிலாமுன்னம்வந்துதவிமாதவ
சங்கிராமத்திநின்முசுண்டர்ச்சார்ந்திட
வெங்கும்வாளிகடொடுத்தெய்துவாயென்முள். (ஙச)

அணிகலனகலவாயிழையும்வாடவான்
திணியிருளகலநெய்த்திபந்திதெனப்
பணமணியுமிழவான்பருதிபோன்றொளிர்
மணிவிளக்கெடுத்தனர்மாதரார்களே. (ஙரு)

செறுக்குறுவேனிலான்சிலையின்வாளிக
ணெருக்கிமெய்யுறமயனிகழவேதென்றல்
பெருக்கவச்சுதன்கவினினையும்பெட்பினு
வறுக்குமற்கிளையவளுளையும்வேலையில். (ஙசு)

உலகயில்மாதவனுதவுமாலினுய்
மெலிகொடிசெயலினைக்காணவேண்டியே
யலைகொளுமமாக்கர்மீயமர்ந்துநோக்கிய
நிலமகளெழின்முகநிகர்த்ததிங்துவே. (௩௭)

கொள்ளியும்விள்ளலாக்கொடியகங்குலை
யள்ளியுள்விழுங்கிவானகன்றபாரிடை
வெள்ளியையுருக்கியேவிரித்தல்போன்றது
தெள்ளியநிலவினைப்பரப்புந்திங்களே. (௩௮)

உடுக்களுமுட்கிடவிருளுமோய்வுற
மிடுக்குறக்குமுதங்கள்விதர்ப்பர்கோன்மகள்
நடுக்கமுற்றெளிர்மதன்கணையினையவே
யிடுக்கணுற்றிடவிளங்கியதுதிங்களே. (௩௯)

அல்லியங்கமலம்வாய்குவியவாம்பல்க
ளொல்லையிலுருமதிவரவெழுந்தன
நல்லறிவினர்களேயொதுங்கஙன்கிலாப்
புல்லறிவினர்கடாநிறைந்தபோன்றன. (௪0)

மெல்லமாவிடமெனப்பரந்தவெண்ணிலா
வல்லிமாமலருறையன்னம்போன்றெளிர்
வல்லியாகந்தனில்மதனனம்பொடுஞ்
செல்லவேயுளமனலுறுத்தத்தேம்பினுள். (௪௧)

வேறு. சோமனுல்விளையுந்திமெய்சுறுக்கிடத்தோமில்வாசத்
தாமமோடாரமெல்லாந்தழலதாயிருந்ததாகக்
காமவேள்சரத்துக்காற்ருக்கன்னிகையுயிராக்காக்குஞ்
சேமமாண்டிலாதுவிஞ்சுந்தெருமரலுறவேசொல்வாள். (௪௨)

வேறு. அந்திதந்தவனலெழுமைங்கணை, சிந்திமன்மதனுஞ்செருச்செய்திட
வெந்தசிந்தையளாய்மெலிவேனென்மே, லிந்துவந்தெரிவீசினையேயென்ருள்.

சீதளந்தருதெள்ளமிர்தோடுநீ, யோதனற்கடலில்லுதித்தாயெனும்
நீதியென்னளவேயொழிந்தாய்நிறை, வேதனைப்படவெங்கனல்வீசினுய்.

நயமிகுந்தவர்போலவுநண்ணினு, பயரவெங்கனல்வீசினையன்பினு
லுயருமொள்ளியர்போலுள்வினைமலி, கயவர்சிற்றியல்காட்டினைவெண்மதி.

நெடியமாதவனுனொன்னைநேர்கிலா, விடமறிந்தெரிசிந்தினையிந்துவே
கொடியையாயினையென்னளவிற்குளி, ரடையநேர்கிலையென்றயர்ந்தாளரோ.

அம்பிறைக்குமரிக்கொண்கணுசைமா, லம்பிறைக்குங்கணுள்கொண்டனங்கவே
ளம்பிறைக்கவுளைந்ததுமன்றிவா, னம்பிறைக்குடல்வாடியலைந்தனள். (௪௭)

மதியினாலுமுன்னேன்மனத்தெண்ணவ, மதியினாலுமதன்கணைவந்துறு
மதியினாலுமெலிந்துளம்வாடினள், மதியினார்குண்டினாபுரிமாமயில். (சஅ)

பாலினார்வண்ணர்பின்வந்தபார்த்திபன், பாலின்மாலெழப்பைந்தொடிமாரன
பாலும்வெண்மதியாலும்படர்கனற், பாலைவேலியுட்பைங்கிளியொத்தனள்.[ம்

கரனைவென்றருள்கார்முகிலேயச்சங், கரனிருந்தகையிலையன்றேந்திய
கரன்முரண்களைந்திரிக்குக்கார்முகக், கரனெய்யாவகைகாத்தருள்வீரொனும்.

சிலையெடுத்துத்திரள்மழைகார்த்தரன், சிலையெடுத்தொடித்தாயெனைச்சேரச்
சிலையிதென்னரவிந்தங்கள்சேரும்பா,சிலையடுத்துறுமேனியசெப்பெனும்

வாலிகாலன்றன்மாலெழமாருதி, வாலினாலெரிமாநகர்போலமெய்
வாலிலங்குமணியிழையேகுரோ, வாலின்னாவுறவாடினள்மாமயில். (ருஉ)

கரியவண்ணனிணைவினிற்காரிகை, கரிநகர்ந்தவிளங்கனியாய்க்கர
னரியுறுஞ்சிலைநாணுமிழம்புள, வரியையொர்தரங்கைதக்கடல்மூழ்கினாள்.(ருஙு)

காஞ்சனங்கன்கடுங்கணையேவமெய், காஞ்சனம்பெறக்கண்ணினைநீருகப்
பாஞ்சசன்னியமேந்தும்பரமன்மால், பாஞ்சரிந்திடநொந்தனள்பண்மொழி.

கஞ்சமாமலர்மேவியகாரிகை, கஞ்சமாமனைக்காய்ந்தவன்மாலினா
லஞ்சினானனங்கன்விடுமம்புக, ளஞ்சினாலுமழல்மதியாலுமே. (ருரு)

புலியினாலலையும்பொழில்போலவம், புலியினால்மெலியும்மலர்ப்பொற்கொடி
கலையும்பார்விழவேகதிர்வீசுமே, கலையுமேயுருகிக்கரியாயின. (ருசா)

தீயின்மேன்மெழுகாகியசிந்தையா, ளோயுமாலினுருகுமுளக்குமால்
வேயினாதியவித்தகவாவெனச், சாயும்பாயலிற்றுமனையன்னமே. (ருஎ)

வேறு. வளையும்வளையாழியையொத்தெழுமால்
விளையும்விளையாட்டொருமெல்லியலா
ளுளையும்முளையுந்துறவுள்ளுயிர்பித்
தளையும்மளைவெண்ணெயருந்தியெனு. (ருஅ)

மலையும்மலைமீதில்வசந்தமலா
தலையும்மலையாழியமர்ந்தவனென்
றலையும்முலைமேன்மெழுகாயுளமே
கலையுங்கலையுங்குலையக்கவலா. (ருகூ)

மதிவந்தனல்வீசியமாதுவரா
பதிவந்தபரம்பொருள்பாரொனுமாற்
றதிமுந்தியருந்துதடக்கைகொடே
யெதிர்வந்தணையென்னுமிளங்கொடியே. (சுo)

மையார்கடலின்வருமாமதியும்
வெய்யோனெனவேயனலேவிசிறு
மையாதுவராபதியாயடியே
னுய்யேனினிவந்துதவாயெனுமால். (௬௧)

வேறு. வாசுதேவவாமனாமுகுந்தமாதவாவெனு
மாசையால்மெலிந்தவென்னையஞ்சலென்றணைந்திடாய்
நீசனானசேதிராசனின்கைவாளிதன்னினா
னாசமாகவேயடர்ந்தென்முன்வினைய்துநாரணா. (௬௨)

அந்தியாலுமன்றிலாலுமாயர்வேயினாலும்வே
ளூர்ந்தவாளியாலும்வீசுதென்றலாலுமும்பரி
னிந்துமூடுநிலவினாலுமீடழிந்தவென்னையுன்
விந்தைசேருமார்பினுற்றணைத்திசீரியாவெனும். (௬௩)

முண்டகங்கலந்தெழுந்தமங்குலைமுகிலெனக்
குண்டலங்களலையவீசுகுங்குமங்கள்மேனிமேல்
மண்டவண்டலம்புமாலைமார்பின்மாமணித்திரள்
மிண்டியண்டமுண்டகண்டவீரவென்னைமேவியாள். (௬௪)

கஞ்சமன்னனைக்கடிந்தகாளைபாலிலேகுமென்
னெஞ்சுவந்துரைத்தியென்னைநீமறந்துமீள்கிலா
வஞ்சமென்னமல்லடர்த்தவாசுதேவனுன்னையும்
வெஞ்சிறைப்படுத்தினன்கொலென்றயர்ந்துவிம்முமால். (௬௫)

பாருமேருவும்பரந்தவானமுண்டுபண்டொரால்
சேருமாருநேரிலாதுவீசுவாசுதேவரோ
வாரும்வாருநீரளித்தமால்வளைக்கவேயெனை
பாருமார்பினணையுமென்பயோதரம்பணைக்கவே. (௬௬)

வள்ளல்வாசுதேவனாமுகுந்தமாதவன்னிவண்
கள்ளனாகிவந்துநின்றுகண்ணுளேகரந்தென
துள்ளமேவிமாலிழைத்தெனுயிருநாணுமனமொடே
கொள்ளையாடியேகினானிதென்னமாயைகொண்டனன். (௬௭)

கலைகழன்றவளைகழன்றவிழைகழன்றகாமவேள்
சிலைகழன்றவாளிவீசுதென்றல்வந்தடர்த்திடத்
தலைகழன்றுகயமன்வீழவேதடிந்தமாயன்மால்
வலைகழன்றபோதெனாதென்மனமொடாவியென்னுமால். (௬௮)

அனங்கனெஞ்சழன்றுசிந்துமைந்துவாளிமேலவா
மனங்கனன்றுசிந்தைநொந்தயர்ந்துவாடுமென்னிரு
தனங்கடம்மினீயணைந்துவாழ்திசாரும்வானரத்
தினங்கள்கொண்டிலங்கைவேரறுத்தவீசவென்னுமால். (௬௯)

புண்ணியப்புரோகிதன்குமாரபோகவென்றயான்
விண்ணுயர்ந்ததேரினேகிவெய்கொடுதுமேகமார்
வண்ணர்தம்மொடெய்திநான்மகிழ்ந்துவாழமதியிலேன்
யெண்ணினெண்ணமேபிழைபிறந்ததென்றுபேசுமால். (எ0)

வேறு. ஆழ்ந்தும்விழுமெழுமயலாரொனும், வெயர்வுசேர்வுறவேகைவிதிர்க்குமா
லுயருமாமதிவெய்யதென்றேதிடுந், துயரவாரியின்மூழ்கியதோகையே. (எக)

திக்குறக்கண்டிடுக்கெனுந்தன்னிரு, பக்கமுற்றனன்பாரளந்தானெனுஞ்
சக்கரக்கரன்றுனணைத்தானெனு, மக்கணம்மகன்றுனெனுமன்னமே. (எஉ)

எல்கிளர்ந்தவெழிற்றிருமாலெனைப், புல்கவல்லையிற்போதுவனேவென
மல்கிடும்புனற்கண்ணினள்மாலினு, லொல்கியொல்கித்தெருமரலுற்றனள்.

மின்னுநன்முகில்மேனியன்மால்மனம், துன்னவிண்மதியுஞ்சுகியாகவே
யின்னதென்றறியாதயர்வாளெழுந், தன்னமும்பலபன்னியறைகுவாள். (எச)

ஏருமாமறையோனிரதத்தினிற், போகுவான்றுவராபதிபுக்கபின்
நாகமேனடித்தாற்குநலனுளா, யாகயான்படுங்காதலறைவனே. (எடு)

காதல்கேட்டென்கருத்துமுணர்ந்தரு,ளாதியோன்றனையெண்ணிலனுமெனுந்
தூதுபோகியதூய்மறையோன்வரும், போதுமாயினதென்றுபுலம்புவாள்.

அந்தணாளன்விழைவுறமாரணச், சந்தையோதிடத்தாழ்த்தனனேவுயர்
விந்தனேடுவெருவினனேவென, நொந்தமாமயில்பின்னுநுவலுவாள். (எஎ)

சிலைகொள்மாயன்றிருநகர்சேர்வுறு, மலைகொளாழிகண்டஞ்சினனேவெனு
முலைகொள்பாலுயிர்தாளெருமூச்சினு, லலகைவீழவருந்தினன்றேவியே. (எஅ)

தூயதேவர்கடும்புருநாரத, ராயுநான்மறைமாதவரந்தணர்
நேயமானிருபர்கடுன்னிய, வாயில்காணமயங்கினனேவெனும். (எகூ)

நிறையுந்தேவர்கள்வந்துநெருக்கலா, லிறைவன்மாதுவராபதியேந்தலுக்
கறைகுவாரிலரோவறிவாலுயர், மறையினுனிவண்வந்திலனென்னுமால். (அ0)

முதிருநூலறிவோன்மொழிகேட்டவச், சதுரன்றும்மரைக்கண்ணினன்றும்விலா
மதனனும்வடிவுகொண்டான்றனக், கெதிரிலானென்றியம்பினனேவெனும்.

விரியுநான்மறைவேதியன்சொல்லினுற், கரியமாயனென்கண்ணிணைகாணவே
வருவனேவெனக்கூடல்வளைக்குங்கண், ணருவியாலதழிந்திடமாழ்குமால்.

சுழிக்குங்கூடறனியுறக்கண்ணினீ, ரழிக்குமூர்ச்சிக்குமேங்குமரற்றுமா
லுழைக்குமாயவவந்துதவாயென, வழைக்குமேற்றிசைபார்த்தயரன்னமே.

கொடியவஞ்சகமுன்னவன்கூறிய, விடமெனும்மொழியுள்ளுவள்மெய்யெலா
நடுநடுங்கியநன்னுதல்கண்ணினுற், படியினின்குடக்கின்றிசைபார்க்குமால்.

சாதலோகொடிதென்றுமக்கண்ணன்பாற், றூதுபோனவன்வந்திலன்றன்மதி
நீதனாகியசேதிபனெய்துமுன், சாதலேநலனென்றுரைசாற்றுமால். [த்

எங்குமோயுமிருக்குமெழுமனை, நீங்கிமேற்றிசைபார்த்தொல்கிநிற்குமால்
பாங்கிமாரிருக்கமுஞ்சூழ்வுற, வீங்குமாதுவருந்திவிளம்புவாள். (அசு)

வேறு. அரிகரியமேனியன்முகுந்தனருளாளன்
வரவிலையெனப்பருவரற்கடலின்மாழ்குந்
தெரிவையுடல்கொண்டுழல்கிலேன்மயர்வுதீர
வெரியினிறந்திடுவனென்றுரைசெய்வேலை. (அஎ)

உம்பர்கள்விரும்புதுவரைப்பதியையுற்றே
யெம்பரமனச்சுதனிதத்துடனளித்த
வம்பவிழுமாலைகொடுவேதியனும்வானின்
வெம்பரிகள்பூண்டிரதமேல்விரைவின்வந்தான். (அஅ)

கரிந்தெழுமனத்தினனிராவணிகனன்றே
சொரிந்தபிரமன்படைதுளக்கவயர்வெய்தும்
பொருந்தகையிராமனிளையோனிடர்கள்போக
மருந்துகொடுவந்துதவுமாருதியையொத்தான். (அகூ)

மின்னுமணிசேரிரதமீதுவருநூலோன்
முன்னின்வருமுன்னர்முகில்மேனியரிமுந்தி
யென்னைமணமேவவருமோவலனெனாமுன்
உன்னுமுனமின்னினருகெய்தினனுவந்தே. (கூ0)

மாதுமுனர்வந்துமலர்தூவிமறையாலே
யோதுமுயராசிகளுரைத்தனனுவந்தே
யாதரவினாடியெழுமந்தணனையன்ன
சீதரன்வருஞ்செயல்கள்செப்பெனவுரைப்பாள். (கூக)

வந்தனனருட்கடல்முராரியரிமாயோன்
வந்தனனுனக்குநலனீயுமணவாளன்
வந்தனனரன்கைவரிவில்லிறவளைத்தோன்
வந்தனன்மலர்த்திருமனத்திடைவருந்தல். (கூஉ)

நீயெனைவிடுப்பநெறியேகிநெறிசூழுந்
தூயதுவராபதிதுலங்கநெடுவானிற்
போயவிர்கொள்கோபுரமிலங்குமெயில்பொன்னால்
மேயுமணிமாடமொளிர்வீதிதனில்மேவி. (கூங)

அண்டர்முனிவோரரசரந்தணர்நடந்தே
மிண்டியுறும்வாயிறனைமேவிமணிமின்னும்
மண்டபமதிற்கரியமேனியனைமாலைக்
கண்டனன்மகிழ்ந்தெனதுகண்ணிணைகளிப்ப. (கூச)

வின்மருவுகையனெழில்வேய்மருவுவாயன்
நன்மையுறுசொல்லன்மறைநாலுமுணர்சோதி
மின்முகிலுநீலமவிர்வெற்புநவையில்லா
வன்மதனுநாணுமவனாண்வடிவில்மானே. (௯௫)

தூயதுவராபதியடைந்தொளிகொள்சோதி
தீயநிருதாதிபரைவென்றுதிறல்மிக்க
மாயன்வடிவின்னலமகிழ்ந்தினிதுநோக்க
வாயிழையுனக்குவிழியாயிரமும்வேண்டும். (௯௬)

அன்னவனைநின்னுளமமர்ந்தவனையாழி
தன்னுளமர்பொற்புடையநற்றுவரைசாரு
மன்னவனைமாதவனைமாயவனைவானோர்க்
கின்னமிழ்தமானவனையெங்ஙனமுரைக்கேன். (௯௭)

மாதவன்முராரியரிமாமுகில்வணற்குன்
காதலளவில்லதுணையுங்கழறியப்பாற்
றீதுமுயல்வோர்கள்செயலுந்தெரியவோநா
னோதினனதன்றியுமுனோலையுமளித்தேன். (௯௮)

ஓதலுருவாசகமுவந்தருளியுன்பா
லாதரவினோலைகொளாழியமரையன்
மாதினைமணம்புணரவேமகிழ்வினோடும்
போதுவன்விதர்ப்பநகரென்றிவைபுகன்றான். (௯௯)

மன்னவர்கடேவர்திரள்மாதிரமடைந்தோர்
துன்னியமர்செய்யினுமுடித்தலைதுணித்தே
யொன்னலர்களோடவொரிமைப்பின்முனமுற்று
மின்னினைமணம்புணர்வனென்றுரைவிரித்தான். (௧௦௦)

வேலையினினீளரவமெல்லணையமர்ந்தோன்
ஞூலிகையுறுங்கடிதைநூறியருடேயோ
னீலமுகில்மேனியனணிந்தலர்நிறைந்த
மாலையிதுகொள்கெனவளித்தனன்மகிழ்ந்தே. (௧௦௧)

அந்தணனுரைக்குமமிழ்தஞ்செவியினாரச்
சிந்தைமகிழ்வெய்தியவுருக்குமணிதேனார்
கந்தமலர்மாலைகையின்வாங்கினள்களித்தாள்
வெந்தவுடல்வந்துயிரைமேவினர்கள்போல. (௧௦௨)

கரத்தினமர்மாலையிருகண்களினுமொற்றிச்
சிரத்தின்மிசைசூடமெய்சிறந்தகரிதன்னை
யுரித்தவனைவிட்டவுணர்மாளவுயர்மாயோ
னரித்தருளஞாலமனரன்றெழுவபோல. (௧௦௩)

தேறினர்முனிவர்பருவரற்பரவைதீர
வாறினர்முராரியெனைவந்தணையுமென்றே
யூறினன்மகிழ்ச்சியுயர்வேதியனுவப்பக்
கூறினன்விதர்ப்பனருள்கோகனகமாதே. (கoச)

வீரியமுராரிதிருமார்புறவிளங்கும்
வேரியுறுமாலைகொடுநீவிரைவின்வந்தென்
றாருயிர்கொடுத்தெனதுகற்புமகலாத
சீரினையளித்தனைசிறக்குமறையோனே. (கoரு)

கந்துலிலிலங்கைநகர்சென்றுகடிகாவிற்
றங்கியுயர்சானகியுயத்தயரதன்சே
யங்குலியாழியருளையனெனநீநோன்
மங்குவதன்முன்றுளவமாலைகொடுவந்தாய். (கoசு)

ஆயனருணற்றுளவமாலைகொடெனுவி
யோயுமுனம்வந்துதவுநன்றியையுரைக்கிற்
போயுயருமண்டமுதலீயிலதுபோதா
தூயமறையோயெனவுரைத்தருள்சுரந்தே. (கoஎ)

ஆய்ந்துநலனுகமணியாரமுடனம்பொன்
வாய்ந்தகவினுபரணமானவகையெல்லா
மீய்ந்தருளவந்தணனுமாசிகளியம்பிப்
போந்தனனிலங்கியதன்மாளிகைபொலிந்தே. (கoஅ)

அந்தணனையேகவிடைநல்கியருளாலே
சிந்தைமகிழ்வெய்திநிறைசேடியர்கள்சூழ
வெந்துயர்கள்வீழவிழையின்பமெழமேவி
நந்தன்மகன்வந்தணைவனென்றுநலமுற்றாள். (கoகூ)

கொங்கையிணைவிம்மியெழவுண்மகிழ்வுகூறத்
திங்களையடர்த்தவதனத்தெழில்சிறப்பச்
சங்குதருவெண்டரளவெண்ணகைதழைப்பப்
பங்கயமலர்க்குள்வருபாவைமகிழ்வுற்றாள். (ககo)

சந்துபனிநீர்புழுகுகானமலர்சாதி
சிந்தினர்கள்மெல்லணையின்மீதெழில்சிறப்ப
நந்தணிகரத்தினர்கணற்கவரிவீசிச்
சுந்தரிமகிழ்ச்சியுறவேதுதிகள்செய்தார். (ககக)

தோழியர்கள்சேடியர்கள்சூழ்ந்தனர்களிப்பா
லூழிமுதலாயுரகமெல்லணையிலுற்றே
யாழியிலிலங்குமருளாளன்மகிழ்தேவி
வாழியெனநன்மலர்கடூவினர்வணங்கி, (ககஉ)

ஆதியையசஞ்சலனையச்சுதனையாழி
மீதரவின்மேவியருள்வித்தகனைவிண்ணோர்
நாதனைமனத்தினினினைத்துநளினத்தின்
மாதமிழ்தருந்துவதுபோலமகிழ்வுற்றார். (ககங)

ஆதிதருமாலிகைகொடந்தணன்வரச்சீர்
மாதினிதிருந்தருளுநன்மொழிவகுத்தாம்
நீதியிலுருக்குமன்விடுப்பநெறிசெல்லுந்
தூதர்சிசுபாலனுடனோதியதுசொல்வாம். (கக௪)

அலங்கற்படலம் முற்றிற்று. ஆ திருவிருத்தம்-௪௦கரு.

கூகூ-வது. சேதிபராசப்படலம்.

அருளாளன்முகுந்தனசஞ்சலனுங், கருமாமுகிலாகியகண்ணபிரா
னொருமாமுதலுத்தமனூழியுளான், திருமாலிருசேவடியேதொழுவாம். (க)

உருமேறெனநின்றவுருக்குமனச், சுருளோலைகொடெய்தியதூதுவரும்
மருளோடியருஞ்சிசுபாலன்மகிழ், திருநாடுகள்சூழ்நகர்சென்றவர்தாம். (உ)

விரிமாமணிமண்டபமீதிலகு, மரியாசனமேறியவண்டர்பிரான்
சரியாயமர்சேதிபனைத்தரையிற், பரிவோடுவணங்கியிடப்பகர்வான். (ங)

யாரோவிடவெய்தியதும்மரசன், பேரோதுபெருந்தகைவைகியுறு
மூரோதுமாயின்னெனவோதினனற், சீரோதமிலாச்சிசுபாலனரோ. (௪)

கொடிவானுறுகுண்டினமாநகரான், விடையோனெனமாதிரம்வீசியெழு
முடைவாளனுருக்குமனேவிடவுன், னிடமேவினமோலையிதென்றனரால். (ரு)

தருமோலைமகிழ்ந்துதராபதியு, மருளாலிதுவோதுமினென்றறையப்
பொருளார்வுறவேயுயர்புந்தியினர், மருளாதுமொழிந்தனர்வாசகமே. (சு)

உயர்வீரனுருக்குமனோலையினை, யயிலோர்சிசுபாலனறிந்தருள்க
மயிலேவிகரொங்கையைநீமகிழ, வியல்பாகவழங்குவன்யானெனவும். (எ)

இருளார்செய்யினக்கரியெங்குமெழப், பொருவீரர்கள்மாவணிபோதரவே
யுருடேர்பிசைநீயுதயத்துமுனர், வருவாயெனவாசகமோதினரால். (அ)

உரைசெய்திடலும்மகிழ்வோடுமுயர்ந், தரைசெய்தியசேதிபனனைகொடேர்
திரள்வெம்பரிவீரர்கள்சென்றிடவே, முரசம்மறைகென்றுமொழிந்தனனால்.

அரிநேர்சிசுபாலனறைந்திடவே, புரிவாயொலிமாமுரசம்பொலியக்
கரிதேர்பரிவீரர்கலந்தனரால், விரிவாகியெழுந்தடர்வேலையென. (க௦)

ஜராசந்தன்வருதினிதாரணியில், விராய்வந்திடவீறிரதம்மிசைய
மரேசன்னெனவந்ததுகண்டனனற், றுராசன்செயிர்தூன்னியசேதிபதி. (கக)

மருளார்தசனம்முறுவக்கிரனுந், திரள்மாகரிதேர்பரிவீரருடன்
வருமாரதுகண்டுமகிழ்ந்தனனால், அருணீதியிலாச்சிசுபாலனரோ. (௧௨)

திசைபார்நிறைமாகரிதேர்களெழக், கசைகோல்கொடுசாரதியேகடவ
விசையோடுறுதேரினன்மேவினனாற், சிசுபாலனெனத்தகுசேதிபதி. (௧௩)

காளங்கள்வலம்புரிகண்டையுடன், சூளங்கடழங்கியமாமுரசம்
நீளுங்கடலோசைநிகர்த்தனவா, மூளுங்கனபேரிமுழங்கியதால். (௧௪)

கரிசென்றனகாரினமொத்திரதத், திரள்சென்றனசேணின்விமானமெனப்
பரிசென்றனபாய்நதிபாமெனவிற், கரர்சென்றனர்சித்திரகாயமென. (௧௫)

மதியொன்றுமில்சேதிபன்வந்திடவா, னுதிரங்கள்சொரிந்தெனவேயுயரு
முதிர்வெங்கனலோடுமுன்வீழ்ந்தனனி, யதிர்கின்றனபாரரவம்புரள. (௧௬)

மேகங்களினீளிரதக்கொடிமேற், காகங்கள்கலந்துமிடைந்தனவால்
வேகங்களொழிந்தனவிஞ்சுபரி, நாகங்கள்குறுக்குநடந்திடவே. (௧௭)

இவையாகியதுற்குறிதாமெழவே, யவையாவுமுணர்ந்திலனந்தமிலான்
புவிமேன்மலிபூகம்வளர்ந்துயர்கா, டவையாவுமகன்றினிதேகினனால். (௧௮)

மறைவிஞ்சியகுண்டினமானகரி, னுறைவன்கடிதென்றுயர்தேரின்மிசை
நிறையும்பரிவீரர்நெருங்கிடவே, மறமொன்றியசேதிபன்வந்தனனால். (௧௯)

வேறு. தூதுவர்களோடியவைதுன்னினர்கண்மன்னுஞ்
சேதிபதிவாசிகரிதேர்கள்வருசெய்கை
யோதுதலுநெஞ்சினிலுருக்குமனுவந்தே
யாதரவின்மாநகரலங்கரியுமென்றான். (௨௦)

ஓதுதலுமாமுரசறைந்தனருவந்தே
மாதர்திரடோரணைகள்வாசிகரிமன்னர்
வீதிதொறுமேவினர்கண்மின்னுமணிதுன்னிச்
சோதியெழுமாளிகைகள்வீதிகடிலங்க. (௨௧)

துன்னியவரம்பைகடிலங்கியுறுகன்னல்
மின்னுமணியாரமொடுவீதிகணிறைந்தே
பொன்னவிர்கொள்மாடநிவர்வேதிகைபொருந்தி
யுன்னவரிதாயவமராபதியையொத்த. (௨௨)

மாறினிவர்பூகநிரைவீதிகளில்வைத்தார்
நாறுநனிகோதைகணலந்திகழநானச்
சேறுசெய்தசந்துபனிநீரினொடுசேர
வாறெனவிறைத்தனர்களன்னநடைமின்னார். (௨௩)

கும்பமிசைபாலிகளிலங்கியனகோலச்
செம்பதுமமென்னவொளிர்தீபநிரைசேர
வும்பருலகாரவிலகுங்கொடியுலாவ
வம்பரவிதானமவிரான்றனவசைந்தே. (௨௪)

கோலமுறுமாளிகைகள்மீதுகொடிதுன்ன
ஞாலமிசைபூகநிரைநற்கதலிமான
வேலின்விழியார்களமுழுருவும்விளங்க
நீலமுகில்போற்குழனெருங்கிடமிடைந்தார். (உரு)

துன்னியுறுயாணர்மணியெண்ணிலதுலங்கும்
பொன்னகருநாணியுறவேபொலிவுமன்னு
முன்னரியகுண்டினபுரத்திஞெளிகாணு
மன்னவன்விதர்ப்பனருள்மைந்தன்மகிழ்வுற்றுன். (உசு)

உத்தியினைநேருமணிக்திறுடனுற்றே
மதியில்சிசுபாலன்வரலும்மகிழ்விஞெடு
மதிரதர்கள்சூழவணியாபரணமின்ன
வெதிர்கொளவெழுந்தனனுருக்குமனனென்போன். (உஎ)

எழுந்திரதமேறியெதிர்செல்லுமவனின்பக்
கொழுந்தெழவுயர்ந்தசிசுபாலஞெடுகூடி
யுழுந்துருளுமுன்னமவனைக்கடிதினுற்றே
யழுந்துறவணைக்கவவனும்முறவணைத்தான். (உஅ)

அணைத்தசிசுபாலனவனுக்கினியசொற்க
ளுணர்த்தினனுருக்குமனுவந்தினியதேரிற்
பணைத்தமதமாநிரைகள்பாய்பரிகள்சூழக்
கணக்கில்வயமன்னர்கள்களிப்பவினிதேகி. (உகூ)

திண்டிறல்மிகுத்தசிசுபாலஞெடுசேர
வெண்டிசைபரந்தெழுவருதினியோடேகிக்
குண்டினபுரங்குறுகியேகொடிகள்மிக்க
மண்டபமடைந்தனர்மகிழ்ந்தினிதிருந்தார். (௩0)

வேறு. தருக்குசிந்தையன்சராசந்தன்றந்தவக்கிரனு
மருக்கொளுந்தொடைச்சேதிபராசனுமகிழ்வோ
டிருக்குமிக்கவர்மண்டபமீதினிதிருந்தா
ருருக்குமன்னருக்கியங்களுமுதவிடவுவந்தே. (௩க)

மற்றுமேபலவளாகத்துமன்னவர்பலருஞ்
சுற்றமோடுவந்தெய்தினர்சுடர்மணிதுலங்கக்
கொற்றமுற்றிடுசாலுவன்பவுண்டரக்கொடியோ
னெற்றுமாகயமிரதமாவுடனுமெய்தினரால். (௩உ)

அந்தணாளர்கடிரண்டெழுந்தாசிகள்கூறி
வந்துமாமணமின்றெனவுரைத்தனர்மகிழ்வாஞ்
சிந்தையாற்சிசுபாலனுஞ்சேதிபராசன்
முந்தியேகடிக்கொத்தனயாவையுமுடித்தான். (௩௩)

இணங்கியேதுணங்கினையெதிர்தெழுந்துவேதாளக்
கணங்களாடவேதானுமோடிடுபவன்கமலத்
தணங்கைமாதவன்றேவியென்றறிகிலனழிவான்
மணஞ்செய்கோலமேபுனைந்தனன்சேதிபமறவோன். (௬௪)

வேறு.

வெண்டுகிலுடுத்தனன்விளங்குநித்தில
மண்டபமிரவிநேர்மணிகள்சேரிழை
மிண்டியமெய்யினன்கிரீடமேற்றிகழ்
கண்டனன்கொடியசேதிபவெங்கண்ணினான். (௬௫)

கண்ணொடுபுயமிடந்துடித்துக்காட்டவும்
விண்ணிடைக்குறைக்கொள்ளிபரந்துவிழவு
மெண்ணிலவுலகமீரேழுமீன்றிடும்
பெண்ணினைவிழைவுறும்பேயினானரோ. (௬௬)

இவ்வழியுறுமணக்கோலமெய்தினன்
வெவ்வுரைமலிசிசுபாலன்விஞ்சிய
வவ்வெழில்கண்டவனுருக்குமன்றன
செவ்வழியொருவுமவ்வியங்கொள்சிந்தையான். (௬௭)

வந்தபேருவகையானுருக்குமன்மருட்
சிந்தையானெழுந்துதாய்க்கினையசெப்புவான்.
சுந்தரமாகியவதுவைதூயதா
மிந்துநேர்முகத்தியையமையுமென்னவே. (௬௮)

புதல்வனுண்டுரைத்திடும்புன்மையானசொல்
லிதமறவன்னைதானின்றமின்னுறை
மதுகரந்துதையுமாமலர்கொள்சோலைவாய்க்
கதுமெனவெழுந்துபோயணுகுங்காலையில். (௬௯)

மாதுநற்றுவரைவாழ்மன்னன்வந்துறுக்
காதலினுருகுவாள்கடியணுகிய
சேதிபன்வந்தனனென்றதீச்சொலால்
வேதனைமிகுத்ததுவிடமுண்டாலென. (௭௦)

எரியுறுமுடலெலாமிருகணீர்விழ
வெருவிமெல்லணையின்மேல்வீழுமேற்றிசை
வரவுளவோமதிட்டுவளைமாநக
ரரியெனவெழுந்துபார்த்தரந்தையாகுவாள். (௭௧)

துஞ்சினளெனமனந்துளங்குஞ்சேதிப
வஞ்சகனடைந்தனன்றுவரைமன்னவா
கஞ்சனைக்களையுநீகளைகணாகவந்
தஞ்சலென்றனைகுவாயென்னுமன்னமே. (௭௨)

சேதிபனடைந்தனன்செருக்கினாலெனை
யீதலும்விரும்பினனெனக்குமுன்னவ
னாதலினிலைசெயலனவில்வீழ்ந்தியான்
சாதனன்றெனுமொழியுளாக்குந்தையலே. (௪௩)

மறந்தருசேதியன்வரவினால்மன
முறுந்துனிதனிலெரியுற்றுமாண்டபி
னறந்தவிராதமாலிவணடைந்தபோ
திறந்தனையோவெனவிகழுமோவெனும். (௪௪)

மருவுமென்னுயிர்விடாதிருக்கில்வந்துறுந்
திருவிலிசேதிபன்றீயிலாழ்வனே
லருளரிமுனியுமென்றஞ்சுமென்னுள
மிருதலைக்கொள்ளியினெறும்பையேலவே. (௪௫)

என்னுமெய்யுருகும்வீழ்ந்தெழுமியாதவர்
மன்னவமுகுந்தநீவருவையின்றெனச்
சொன்னசொலென்னதாந்தோன்றுவாயென
வன்னமுள்வெதும்பிடவெய்தினாளை. (௪௬)

எய்தினள்மண்டபத்திருந்தமாமயில்
உய்திறமிலையெனவுடலுமோய்குவாள்
கைதவன்மகடனையணைத்துக்கண்ணினீர்
பெய்திடவைதனள்சுதனைப்பிழையால். (௪௭)

மோந்தனள்முகத்தினைமுளரிக்கையினாற்
சாந்தொடுந்தண்பனிநீருந்தையல்மெய்த்
தோய்ந்துறவிடுத்தனடோமுற்றேயுயிர்
மாய்ந்தெனவரந்தையால்வாடுமன்னமே. (௪௮)

அன்னையுமிருகணீராறுபோலெழ
மின்னினையணைத்தனள்விளம்புவாளுயர்
மன்னவன்றுவரைவாழ்மாயனெய்தியே
யுன்னையின்றணைகுவனொற்கந்திரியால். (௪௯)

கனவுகள்கண்டநற்குறிகள்காட்டியே
சொனகலப்பல்லியந்தூயதாதலி
னனைவசுதேவன்றன்செம்மல்வந்துறும்
துனியொருவன்னமேயென்றுசொல்லுவாள். (௫௦)

அந்தரியம்பிகைதுர்க்கையாமிவ
ளிந்தமாநகர்தனில்வரங்கள்யாவையுஞ்
சிந்தையினினைக்குமுன்னளிப்பள்சீருறு
மிந்திராதத்துறலொழிதியென்றனள், (௫௧)

துன்பமீண்டொருவிடத்துற்கையாமிவட்
கின்பமாவதுவரமியற்றிவேண்டவுன்
னன்பனுமியோதனத்துழவரஞ்சிடத்
தன்பெருந்தேரின்மெல்வருவன்றையலே. (௫௨)

அஞ்சநீயன்னமேகராவினாலலை
குஞ்சரங்காத்தருள்குழகனெய்திநீ
விஞ்சிடவணைகுவன்விதியினாமெனச்
செஞ்சொலாலவளுந்தான்றேற்றினாளரோ. (௫௩)

தேற்றினாடிருமகள்சிந்தைவெந்துயர்
மாற்றினாளினையசொல்வழங்கியின்றவ
ளாற்றுநீரொனவிளாகண்ணினீரொல்கிச்
சாற்றினாடனைத்தருமன்னைதன்னுடன். (௫௪)

இருக்கறப்பகவதிதனக்குச்சீர்மையா
லருக்கியமுதலியவளித்துப்பாலன
வருக்கமுமளித்தியாம்வரமும்வேண்டுவம்
பொருக்கெனச்சேறுமின்றெனப்புகன்றனள். (௫௫)

மின்னனாளிவ்வுரைவிளம்பக்கேட்டெழுந்
தன்னைமாபகவதியமருங்கோயிலின்
மன்னிநாம்வேண்டுவம்வரமென்றேமக
டன்னைநீராடெனச்சாற்றினாளரோ. (௫௬)

துளித்தெழுமழையினைத்தூயகண்களா
ளளித்தனளெனவழுமடந்தையாரழல்
கொளுத்தியவயமயங்கூடித்தேர்ந்தபோற்
குளித்தனடண்பனிநீர்கொடுத்ததே. (௫௭)

புனைந்தனளவிருறும்பொன்னின்சம்பட
மனந்தனில்மாதவன்வருமென்னுள்குவான்
றனந்தனிலணிந்தநற்றரளமாமணி
யினந்தழலெழத்தொடையெரிந்ததெங்குமே. (௫௮)

மதம்பொழிகரிமருப்புதவுமாமணி
விதம்பெறுமுடர்யாகவில்லுறுஞ்
சதங்கைகடிகழ்வுறச்சரோருகங்களாம்
பதந்தனிற்பரிபுரம்பண்மிழற்றவே. (௫௯)

தோள்வளையெல்லிடத்தோடும்வில்லிட
வேள்சிலையிரண்டெனநுதல்விளங்கிட
நாளலர்க்கமலமானனத்தைநாணிட
வாளினைப்பழித்தமான்விழிவயங்கவே. (௬0)

செயிறறச்சூடுறுஞ்செம்பொன்னூலிழை
வயிரவான்கடகமார்மலர்க்கைகாந்தள்போ
லியல்புறக்கலாபமேல்மின்னுமிட்டிடை
துயல்வருங்கலிங்கநன்மணிதுலங்கவே. (௬௧)

மின்னெனத்திருவெனவிளங்கத்தோன்றிய
கன்னியைக்கண்களிற்களித்துநோக்கிய
வன்னையும்பகவதிதுர்க்கையாமவள்
மன்னியகோயிலிற்போதுவம்மெனா. (௬௨)

இருந்தவளெழுந்தனளெழில்கொள்மாமணி
பொருந்தியசிவிகையிற்பொலியத்தோன்றினாள்
வரும்பருவரல்கெடவரத்தைநச்சினா
ளருந்ததியனையதன்னன்னையோடுமே. (௬௩)

ஐயன்வண்டுவரைவாழமலனச்சுதன்
துய்யவன்வருகிலனென்றுசோர்வுறுஞ்
செய்யவடமணியச்சிவிகைமீதினிற்
பொய்யுயிர்க்குரம்பைகொண்டரிதிற்போயினாள். (௬௪)

கவிகைகள்கவரிகள்கரத்தினேந்தியே
நவையகல்மணித்திரளணிந்தநங்கைமார்
தவர்களும்விழைவுறவிலங்கிச்சார்ந்தனர்
புவிமிசைவனிதையைப்போற்றிவாழ்த்தியே. (௬௫)

அனமெனமயிலெனவஞ்சுகங்கடம்
மினமெனக்குயிலெனவெழுந்தமாதரார்
தனமலைசிகரெனநுசுப்புந்தள்ளுற
மனமுறுகளிப்பொடுவந்துசூழ்ந்தனர். (௬௬)

காந்தளின்செங்கையார்கயலொண்கண்ணினார்
சாந்தணிநகிலினார்தாமவோதியார்
பாந்தளினல்குலார்பவளவாயினார்
மாந்தளிர்மேனியார்வந்துசூழ்ந்தனர். (௬௭)

கரிபரியிரதமுங்காளைவீரரும்
மரசருங்குமரருமந்தணாளரும்
விரிவுறுஞ்சலதிபோல்விளங்கிச்சூழ்ந்தனர்
திருமணிச்சிவிகையிற்சிறந்துதோன்றவே. (௬௮)

பம்பைகள்சர்ச்சரிமுழவம்பாண்டிலு
மம்புதியலையெனவளையும்பேரியுந்
தும்பியவிடக்கைகடமுங்கத்துயதாங்
கொம்புகளுடன்சின்னங்குறித்துக்காட்டவே. (௬௯)

வீணையாழொலிகளும்விஞ்சக்கின்னரர்
நாணவேயிசைத்தனர்நலங்கொள்மன்மதன்
பாணமேயனையகண்ணிணைகொள்பாவைமார்
சேணிறாரம்பையரென்னச்சேர்த்தனர். (௭௰)

தோழியர்சிலதியர்தூயதாயரா
மேழையர்களிப்பொடுங்கடிதினெய்தினர்
வாழிநின்கருத்துறுங்கருமம்வாய்த்திட
வாழியிலமருவானனுகவென்றனர். (௭௧)

அந்தணருமறைமுனிவராதியா
வந்தருளுருக்குமற்கிளையகோமளச்
சிந்தையினினைவுவந்துறுகவென்றுசிர்
முந்தியகலனுரைமொழிந்துவாழ்த்தினார். (௭௨)

இதரவன்றேவதைதுற்கையென்பவட்
குதவிடும்வரன்முறைக்குரியயாவையு
மதுகரமலிமலர்த்திரள்கள்வாரியிற்
சுதைநிகர்கனிகளுஞ்சுமந்துசென்றனர். (௭௩)

கன்னலுங்கதலியின்கனியுங்காருறுஞ்
சென்னலிற்றண்டுலந்தெங்கின்காய்களுந்
துன்னுநற்றதிகள்பாலுப்புமாகிய
வின்னனவெவைகளுநிரப்பியெய்தினார். (௭௪)

துந்துமியிரட்டிடச்சுரர்கள்வான்மிசை
சிந்தியமலர்க்களுந்திரண்டுபார்விழக்
கொந்தளகத்தினார்குழாங்கள்சூழ்ந்திடச்
சுந்தரியணிகலன்றுலங்கவேகினாள். (௭௫)

கருமுகில்காண்கினுங்கண்ணனாமென
வுருகுமேற்றிசையினையுற்றுநோக்கியே
வெருவுமாலெய்திடவெதும்பும்வெய்துறும்
திருவனாடமணியச்சிவிகைமேலரோ. (௭௬)

புரமதுகடந்தனர்புரிசைபிற்படச்
சுரர்கடம்முலகுறநிவந்துதோன்றிய
விரிவுறுத்தியாவனம்விளங்குமால்வரை
யருகுறப்பெருகுநன்னதியடைந்தனர். (௭௭)

இருகரைபுரண்டலையெழுந்தளப்பிலாக்
குருமணிமருமலர்கொழித்துவீசியே
வருபுனற்பகிரதிமல்லலொத்தெனப்
பெருகியநதியினின்பெருமைகண்டனர். (௭௮)

நன்னதிக்கரைமருங்கிலங்கரந்துமி
ழின்னலினித்திலமணியினீட்டங்க
டுன்னுபொற்கோயிலிற்றுலங்குந்துற்கையை
யன்னைமின்ஞெடும்பணிந்தமரும்வேலையில். (எக)

சேதிபன்வருஞ்செயல்செப்பிப்பங்கய
மாதுநன்னதிக்கரைவந்தவாறெலா
மோதினமுலகமேழுண்டவாயனும்
யாதவனடைகுவதியம்புவாமரோ. (அ0)

சேதிபராசப்படலம் முற்றிற்று. ஆக திருவிருத்தம்-௪0௬௫.

எ0-வது. நாச்சியார் தேரோறுபடலம்.

ஆயிரமருக்கருதையமாயினரொத்தாயிரமுடிகளும்பிறழ
வாயிரம்புயங்கடிலங்கிடவாழிசங்குவாள்கதைவில்லுமமர
வாயிரம்பணத்தினரவணைமிசையினலர்மகள்புவிமகளணுக
வாயிரம்பெயராய்நிறைந்தருள்சோதியச்சுதனடியிணைதொழுவாம். (க)

அருவமாயுருவாயாணுமாய்ப்பெண்ணுடலியுமாயப்புறமாகுங்
கருவுமாயதினீர்கால்கனல்வெளியாய்க்கதிருடுச்சசியதாய்க்கலந்தே
திருவுமார்புறையக்கவுத்துவமிலகத்திகிரியோடழகியசெங்கை
மருவுறக்கமலன்பசுபதிவலாரிவிபுதருமாகியமாயோன். (உ)

புவிமகள்மகிழத்திருமகள்மருவப்புணரிமேற்றுயின்றருள்புனித
னவனியிலிழிந்தேயதுகுலத்தரசனறிவினுயர்வசுதேவன்
தவமுறுபலத்தாற்றேவகியருளுந்தணயனென்றெழுந்துதான்மேவித்
திவசமும்பொதுவர்நகர்தனிலசோதைசுதனெனவளர்ந்தருடிருமால். (ங)

செயிருறுமலகையுயிரறமுலைப்பாலருந்தியேதனபதிசிறுவ
ருயரருச்சுனமாம்பருவரலிருத்தங்குரலினுப்புண்டுறிநிறையுந்
தயிரொடுநெய்பால்களவினிலருந்திப்பாறிடப்பிடித்திடுந்தாயார்
கயிறுகொண்டடிப்பக்கண்பிசைந்தழுவோன்கமலநன்றுயகிகாந்தன். (ச)

கன்றினுல்விளவையெறிந்தருளில்லாக்காலியாசுரனையுங்கடிந்து
பொன்றவெஞ்சகடுமுதைத்தரவினின்மேனடித்துயர்புள்ளின்வாய்பிளந்து
குன்றுமோர்குடையாக்கவித்திடைமாதர்துகிலொடுங்குருந்தின்மேலேறி
யன்றுவேயூதியானிரைமேய்க்குமச்சுதானந்தகோவிந்தன். (ரு)

விஞ்சியவெயில்சூழ்மதுரையினுயர்ந்தவில்லினைமுறித்துமும்மதநீள்
குஞ்சரத்திலகக்குவலயாபீடம்படவதன்கோடுகொண்டறைந்தே
வஞ்சனைமல்லர்சிதைந்திடவதைத்துவலிமலிமாமனுய்சினக்குங்
கஞ்சனைக்களைந்துகடியனுங்காலயவன்படவுபாயமுங்கருதி. (சு)

வேதமும்விளங்கவியலுமார்கலிசூழ்வையமுமிலங்குவித்தகனும்
மாதவன்முகுந்தன்வாமனன்முராரிமாயனாரணன்பரமேட்டி
ஸ்ரீதரன்புருடவுத்தமனனந்தன்றிருவிருபகன்றிறனேமி
யாதவனிருடிகேசன்மால்வாசுதேவனுமெந்தையெம்பெருமான். (எ)

ஓவியமுயிர்பெற்றுயதோருருக்குமணியெனுமுத்தமமின்னு
ளாவியேயனையாள்விடுத்திடவந்தமறையறையந்தணன்மகிழக்
காவிநல்விழியாங்கமலநாயகிபாற்கடிகினன்வருவனென்றவனை
யேவினபின்னரினிதிருந்தான்கும்பாதவர்குலத்துவாழீசன். (அ)

வாசமார்குழலாளவிர்தனிலிலங்குமலர்மகளாமெனமனத்தி
லாசைதான்மிகுந்தவனைப்பங்கடைந்தேயவனைநாமணைகுதுமென்னு
மீசனும்வாசுதேவனாரணன்மேலெழுமதிதென்றலுமெதிர்ந்து
வீசவேள்மலரின்கணைவிடவயர்ந்துதுயின்றனன்விபுதர்கள்பெருமான். (கூ)

அயில்விழிபுருக்குமணியயராமலின்றுபோயணுகுவாயெனவே
யியல்புடையலரியாபிரங்கரங்கொண்டெழுப்புவான்போற்கிரணத்தாற்
றுயில்கொளுமாதிவிழித்திடவிருண்டகங்குலைத்துறந்துதேரருணன்
கையினூறுங்கோலிற்கடவியபரிகள்வயங்கிடக்கடலிடையெழுந்தான். (க0)

விண்ணவருவப்பவிருளெலாமொருவவேலைசூழெண்டிசைவிளங்க
மண்ணவர்துதிப்பமறைவலோர்குழுமிமகிழ்விலருக்கியம்வழங்க
நண்ணுறுசுரும்புகுடைந்திடவலர்ந்தநளினமாமலரொளிபரவ
வண்ணல்வண்டுவளையமலனுமனந்தறீர்ந்திடவாதவனுதித்தான். (கக)

செங்கதிரவன்றானுதித்திடக்காயாமலரெனத்திகழ்வடிவுடையோன்
சங்குசக்கரத்தோன்றுயிலுரந்தருளிச்சந்தனநிறைந்ததண்பனிநீர்
குங்குமங்கலந்தமஞ்சனமாடியம்பொனின்கூறையுமணிந்தே
யங்கையின்புனல்கொண்டருக்கனுக்கன்பாலருக்கியமளித்தனனமலன். (கஉ)

சீரியகமலத்திருப்பவன்முதலாமுனிவருந்தேவர்தம்மிறையு
மேரியல்பரமபதத்தினிலுறவேவிழைவுறுநாமத்தையியல்பா
லாரியன்கரியமுகிலினில்வயங்குமழகியபிறையெனவணிந்து
போரியற்கோலம்புனைந்தனனளினப்பூமகளுறைநகர்பொலிவான். (கங)

வேறு
ஆவுடன்மருவியயமுனையாற்றிரு
நாவுடைப்பஃறலைநவையினன்பொறி
வாவிடவரவின்மேனடித்தமாண்புறுஞ்
சேவடியணிமணிக்கழல்சிறக்கவே. (கச)

கரியவான்முகிலிடைக்கலந்தசெக்கர்வான்
றெரிவபோற்கடிதடங்கச்சைசேரவே
யிருளெலாம்வெருவவானென்றின்றோற்றம்போ
லரியுலாவாடையுமமர்ந்துதோன்றின. (கரு)

நன்மணிதுலங்காகின்றவாரமுந்
துன்னிடாணியல்மருங்கிற்றுன்றிய
பொன்வரைசூழ்ந்திடும்பதங்கன்போன்றெழில்
மின்னுடைவாளயிர்விளங்கிக்காட்டவே. (கசு)

ஆரமாமணிவயிரங்கொளாடகஞ்
சேருமாபரணமுஞ்சிறந்துசிந்துவி
னீரெலாமிளவெயினிறைந்தமாட்சிபோ
லேருலாவியதிருமார்பிலங்கவே. (கஎ)

அந்தரமுறுகருமுகிலடைந்துய
ரிந்திரன்வில்லெனயாதவர்க்கிறை
மந்தரமெனவளர்குவவுத்தோளமர்
சுந்தரிகணவன்கைச்சார்ங்கந்தோன்றவே. (கஅ)

போதகம்புரண்டிடவதைத்துப்போர்புரி
சாதனைமல்லரைத்தடிந்துதன்னுடன்
காதியகஞ்சனைக்களைந்தகண்ணனுஞ்
சீதரன்கரங்களிற்கோதைசேரவே. (கக)

கலைகொடுகுருந்தின்மேலேறுங்கார்வண
னலனுறப்புயலலர்களினவாசப்பூ
மலர்தொறுமறுபதமமர்ந்தமாட்சிபோற்
சிலைகணைதொடுவிரற்புட்டில்சேர்த்தியே. (உ0)

உம்பர்கள்வலாரியோடமரிலோடவே
பம்பியவவுணர்கள்படத்துறந்திடுந்
தும்பியமறையினின்சொல்லினுன்றெழு
மம்பருவாவமும்வெரிகிலாரவே. (உக)

அலங்கல்சாலலங்கல்மார்பலையவாடக
மிலங்கியகுண்டலங்காதிலெல்லிடப்
பொலன்கொளும்பிறையெனப்பொலிந்தநெற்றியிற்
றுலங்கியவீரப்பட்டிகையுந்தோன்றவே. (உஉ)

என்றவிர்கிகர்மணிவயிரம்வீறுற
வொன்றியதமனியமவுலியுற்றெழில்
மன்றலர்குஞ்சியில்வயங்கவேபுனை
வென்றியந்தும்பைமாமலர்விளங்கின. (உஙு)

ஆரியன்றுவரைவாழமலனச்சுதன்
சீரியவிதர்ப்பர்கோனகரிற்சேர்வுறும்
பூரியர்வலிகெடப்பூசல்செய்யுமா
வீரியவுருக்கொடுவிளங்கிநிற்கவே. (உச)

அந்தரத்துயர்ந்தமாவிபுதராய்மலர்
சிந்தினர்தெரிவையர்தீபமேந்தியே
முந்தினர்மகிழ்ந்துசோபனமொழிந்தனர்
நந்தனுந்தனனெனவயங்குநாதனை. (உரு)

உம்பர்கள்வாசவனுமையிறையக
னம்புயமீதயனுநிகூறின
ரிம்பரின்மாதவனிலங்கித்தோன்றவே
தும்புருநாரதர்சுருதிபாடினர். (உசு)

கண்ணன்மால்கருமுகில்கமலம்பூத்தெனும்
வண்ணன்மாதவன்மலர்மாதுநாயகன்
புண்ணியன்றலகேதனனைப்போற்றிசெய்
தண்ணலேகேளெனவருளினனரோ. (உஎ)

மன்னனும்விதர்ப்பர்கோன்மகள்வருந்துறு
முன்னம்யானெய்தியாகவத்தின்மூண்டெழு
மொன்னலர்யாவர்வந்துறினுமோடவே
சின்னபின்னங்களேசெய்வன்காண்டியால். (உஅ)

அராவிறப்புள்ளரசடர்த்தகீர்மைபோ
னராதிபர்மடிவுறசாகம்வாவுமாத்
தராதலத்துருளிரதங்கடார்மனர்
விராயவணைய்தின்வாவெனவிளம்பினன். (உகூ)

வேறு. அந்தவேலையிற்சுரர்முனியணுகினனையை
முந்தியேமணஞ்செய்குவான்சேதிபன்முனைந்தான்
கந்தமாமலர்த்திருவனாள்கடுந்துயரொருவ
வெந்தைநீகடிதேகெனவியம்பியேகினனால். (௩0)

வேறு. நாரதனவ்வுரைநவின்றுசெல்வுழி
யாரியன்கமலமாணிடரகற்றுவா
ரேர்மலியிரதனீகொணர்தியீண்டெனத்
தாருகன்றன்னொடுங்கடுகிச்சாற்றினன். (௩க)

வினையுமுன்னெய்துவநிலத்தும்வானத்து
மனைவருமணுகினுமகன்றுகாட்டுவ
புனைமணிதுலங்குவபுரவிபூண்குவ
கனைகடலொலியெனமுழங்கிக்காட்டுவ. (௩உ)

வாயுவின்விசைகெடவானின்முந்துவ
வேயெனுமுன்னுலகேழுமெய்துவ
தூயநற்ககபதித்துவசந்தோன்றுவ
வாயபொன்னிரதம்வந்தணுகிநிற்கவே. (௩௩)

வீரியபேரிகைதழங்கவேதியர்
கூறினராசிகள்குழுமிக்கொற்றவ
ரூறியவார்வமோடுவந்துபோற்றவே
யேறினன்யாதவனிரதமீதரோ. (௫௪)

வாரிதியெழுங்கதிரவன்றன்மாமணித்
தேரொனவிலங்கியதிசைகள்யாவையு
மாரியன்வயங்கவேயமரரார்த்தெழத்
தாருகன்முடுகிநீடளையிலோட்டினன். (௫௫)

வேறு. தடவரையிதிர்படவுருளவெழுஞ் சடசடவெனுமொலிதகரவெழும்
வெடிபடவிடமுடையரவுலகம் வெளிப்படலெனவிறதியினுலகங்
கடலிடைநிறைபுனல்மொகுமொகெனக் கடவியபரிபதமிசையலைய
மிடலுறுகொடிககபதியொளிர விரையொடுவருவதுமிளிரிரதம். (௫௬)

மரமொடுகிலவரைபொடிபடவிண் மறைபடவெழுதுகள்மகரமுறும்
விரிவுறுகடறிடர்படவடைய மிடலுறுகுரசதம்விசைகொளமுன்
னரவுமிழ்மணிதிகழ்தரளமுட னவிருறுமரகதவினமலைய
விரவியொளியினுமிலகியுய ரிமையவர்மகிழ்வுறவருமிரதம். (௫௭)

ஓடுநல்லறிவிகள்பலநதிக ளுவரியினலையெனவொலியுறவே
மாடுறுகதலிகள்வளிகமுகு மாழைகடாழைகள்வகுளமுயர்
பாடலனனிகனிநிறைபனசம் பழனமொடொளிர்செநெல்பயிர்வளமா
நாடுகள்பலபலபிறகிடமா நடைகொடுமுடுகினநலவிரதம். (௫௮)

தடவரைமிசையுறுபுனலருவி சலசலவெனுமொலிதரவிழவே
மிடலுறுமரிபுலிமயிடமொடு விடைகரிகாடிகள்விரவியெழப்
படமுடைவிடவரவுமிழ்மணிகள் படிமிசைபரிந்தினவிர்களுற
விடமுறுகடறுகள்பலகழிய விடிகளும்வெருவுறவருமிரதம். (௫௯)

விடமுடையரவுடல்சிதறவெழும் விரிவுகொள்சிறகுறைககபதிநீள்
கொடியுடுவினமொடுமிடையமுகிற் குலகிரிதனிலிவர்குரகதமுங்
கடலிடைபிறழ்கதிரிரதம்வருங் கதியினுமுடுகியகடுவிசையாற்
படிமிசையுருள்வதுதுகடரவே பரமர்தம்மிருகழல்படியிரதம். (௬௦)

நீலமோடவிர்மணிநலவயிரம் நிலவினுமொளியுறுநிரைதரளங்
கோலியவெழிலுறுகனகநெடுங் குடையொடுகவரிகளிடைமிடைய
வாலிடையமர்பவனவனிலக வலவனுமுடுகிடவடலயமான்
மேலமரர்கள்பதியெனவே விரைவொடுவருவதுமிளிரிரதம். (௬௧)

கொடியெனுமிடையினள்வடவரையின் குவடெனுமுலையினள்குயில்மொழிமி
வடிவிலையகடெனவுயர்கமல மலர்மிசைவருமவள்வடிவுடையா[ன்
ளிடரறவடையலரிடையவவ ளெழின்மணமடைகுவமெனநினையு
முடலிடையுயிர்தொறுமுறையொருவன் மனமுனமுடுகுவதுருளிரதம். (௬௨)

சுதையெனுமொழியினடரளநகைத் துடியிடைமனதுறுதுனியகல
வெதிர்பொருமரசர்கள்முரணழிய வெதுகுலம்வருமிறையுடனெழுமா
லுததிகள்கிழிபடவனகளொடு னுறுமரமடிபடவுயர்திசையின்
மதமுறுகரியினமறுகிடவான் மழைமுகில்விரிதரவருமிரதம். (௪௩)

அண்டர்கடருவமர்மலர்சொரிய வமரர்களிறைவனுமகமகிழ
முண்டகமலருறைமுதல்வனொடு முனிவர்கள்சதுமறையொலிபொலியக்
கண்டகர்மடிவுறமுனியுமிறை கனைகடன்மலைகொடுகடைநெடுமால்
கொண்டலினுலவியகொடிமிடையுங் குண்டினபுரமதுகுறுகினனால். (௪௪)

அதிர்வுறவகிலமொடெழுகடலு மலையுறவடதிசையமர்வரையும்
பிதிர்வுறவிறுதியினறைவளியின் பெருமையின்முடுகிடவுடுவினமு
முதிர்வுறவிபுதர்கள்மகிழ்வுறவே யொருநொடியிடைமுனமுருடருதே
ரெதிருறமதிதவழெயில்வளைகுண் டினபுரமணுகியதெழில்பெறவே. (௪௫)

வேறு. அண்டர்மூதுணர்வாளராமருந்தவரார்ப்ப
வெண்டிசாமுகத்தமர்ந்தவரினிதுவந்தேத்தப்
புண்டரீகனுந்துதித்திடத்துவரைவாழ்புனிதன்
குண்டினபுரமணித்தெனத்தேரினிற்குறுகி. (௪௬)

இந்தநன்னகரிருந்தனள்கமலமாளிறைவ
வந்தமின்றுயரகலவாவெனவழைத்தசலை
முந்துகைகளாநீட்டியமுறைமைபோன்முகிலை
யுந்துவெண்கொடியும்பரினுலாவுதல்கண்டான். (௪௭)

மின்னுமாமணியவிருறமேருவைப்பொருவும்
பொன்னிறனிவர்கோபுரம்புதுமணிமாட
மின்னும்வீதிகளெயில்களும்விளங்குவகண்டா
னன்னமாயயற்கருமறையுதவியவமலன். (௪௮)

மகரதோரணம்விளங்கிடவாயில்கடோறு
நிகரிலாமணிக்கும்பமுந்தீபமுநிறையச்
சிகரமால்வரையெனத்திகழ்மண்டபஞ்சிறப்ப
வகிருமாவடுவனையகண்ணியர்வரக்கண்டான். (௪௯)

சந்தனங்களுஞ்சுண்ணமுந்தண்பனிநீரு
முந்துநன்மணவசந்தமுமுகந்துபாரிறைத்தே
வந்தமங்கையர்பிறங்குகொந்தளமலரலையக்
கந்துகங்கள்கொண்டறைந்தெழுங்கவினையுங்கண்டான். (௫௦)

வாசமாமலரலைந்திடமதிமுகம்வெயர்ப்பத்
தூசுமாடநற்சுரும்புகளுறுங்குழறொடராக்
காசுலாவியமுலையுநற்கலைவையுங்கமழ
ஆசலாடியவரிவையர்பொலிவுகண்டுவந்தான். (௫௧)

கீதவீணையாழ்கின்னரர்மயங்கிடக்கிளிபோ
லோதுமாதர்கண்டுவந்திடவுருப்பசியெனவே
வீதிதுன்னியவரங்கினில்விளங்கிடநடஞ்செய்
காதுசேர்விழிப்பாவையர்களிப்பிணைக்கண்டான். (௫௨)

தந்தவக்கிரன்பவுண்டரன்மகதன்சாலுவனும்
வந்துமண்டபந்திகழ்வுறச்சேதிபமறவோன்
சிந்தையுங்களியெழமணக்கோலமுஞ்சிறப்பக்
கந்தநற்றொடையணிந்துறுங்கவினையுங்கண்டான். (௫௩)

தும்பிசூழ்ந்திடத்துரங்கமெண்ணிலாதனதுலங்க
விம்பரோங்கியவிரதமென்டிசையினுமலங்க
வெம்புவாட்கருலப்பிலாவிறலினர்விளங்க
வும்பர்வாழ்பதியெனவுறுமோளிகண்டுவந்தான். (௫௪)

கண்டயாதவரிறைகருணாகரன்கழறு
மண்டர்வாழமராபதியளகைநன்றெனவே
யெண்டபோதனரியம்புவதிம்பரிலெழில்சேர்
குண்டினபுரங்கண்டிலார்கண்டபின்கூறுர். (௫௫)

எனமொழிந்துளமகிழ்ந்தருள்யாதவர்க்கிறைவ
னனமயூரங்கோகிலங்கிளியடைந்தடர்பூங்கா
வனமுமைவனையிழிபுனலாடியமாதர்
புனையுமம்பரமருங்கினிற்பொலிவவுங்கண்டான். (௫௬)

மின்னுநுண்ணிடைக்கோகிலமெழின்மிகுநளினத்
தன்னமம்பிகைகோயிலினணுகினளெனவே
பொன்னினன்மணிப்பரிபுரம்புலம்பிடப்பொலிந்து
துன்னிமங்கையர்வருஞ்செயல்சுந்தரன்கண்டான். (௫௭)

நாறுநன்மலர்பாளிதமான்மதநான
மாறிலம்பிகைபூசனைக்குதவிடவருந்திப்
பாறுமங்கையர்கொந்தளச்சும்மையைப்பரிக்கு
மாறிலார்கரந்தாங்கியேவருமெழில்கண்டான். (௫௮)

துற்கையம்பிகைகோயிலிற்சுடர்தருமணியின்
வற்கமோடணிகவினுறவிதர்ப்பர்கோன்மகடான்
அற்கியங்களையுவகையோடளித்திடுமழகைக்
கற்கியென்னவும்வருமவன்கண்டனன்களித்தே. (௫௯)

ஓவியம்முயிர்பெற்றதாமுருவுடையவளாந்
தேவியைக்கமலத்தினில்வயங்குசெந்திருவை
யாவிகண்டெனக்களித்தவனொருநொடியதனின்
மேவுவேனெனமுடுகினனிரதமேல்விளங்கி. (௬௰)

இன்னவாறரிகேசவனெய்திடும்வேலைச்
சொன்னகாலையும்வழுவிடச்சுந்தரன்வாரான்
என்னகாரணமோவெனவிடரினில்மயங்கு
மன்னுமன்னவளம்பிகைக்கர்ச்சனையளிப்பாள். (௬௧)

துலங்குசீலிதன்மேனிமேற்றூயநீர்சொரிந்தே
கலன்களெல்லிடக்கலவைகானங்கடிமலர்கள்
புலன்களாலுறநிறைத்தனள்பூசனைக்குரித்தா
யிலங்குதூபதீபங்களுமளித்தனளியல்பால். (௬௨)

ஆனெய்பாலனந்ததியறுசுவையுடனடிசி
லீனமில்லமாழையைநிகர்பனசமீன்கனிக
டேனளாவிடக்கதலிசூதப்பலந்திகழ
மானினீள்விழிவனிதையர்வரையெனக்குவித்தார் (௬௩)

இன்னதாகியசுதைநிகர்யாவையுமீந்த
பின்னர்வாலடைக்காயமிர்தளித்தனள்பெரிய
கன்னியாயவம்பிகையினைப்பணிந்தனள்கமல
மின்னனாளொடுமன்னையானவள்வரம்வேண்டி. (௬௪)

குயிலைநல்லனமாகியகோமளக்கொழுந்தை
மயிலையொள்ளியவீழியின்கனியின்வாயமிழ்தை
யயிலெனும்விழியணங்கையீனன்னையுமணைத்துத்
துயரொழிந்திடுந்துர்க்கையைப்பணியெனச்சொல்வாள். ()

மின்னினோடுவந்தம்பிகையடியினில்வீழ்ந்தங்
கன்னையானவளரந்தையோடறைகுவாளெனது
பொன்னையேதுவராபதிமன்னவன்பொருந்து
மின்னதாகியநல்வரமருளெனவிசைத்தாள். (௬௬)

தாயுநல்வரம்விழைவுறத்தரைகணீர்நிறையத்
தீயின்மேலுறுமெழுகெனவுருகிடுஞ்சிந்தை
யாயவாரிமின்னம்பிகையடியினிற்பணிந்தாண்
டோயவேயுடலுயிர்தடுமாறிடவுரைப்பாள். (௬௭)

தீயனாகியசேதியன்மணிமுடிசிதையப்
பேயனாகியவென்முன்னோனினைவுறப்பிறிய
வோயுநானுயிர்விடுமுனமுலகளந்தருளு
மாயனோடெனைமணம்புணர்வரமருளென்றே. (௬௮)

இடருழந்திருகண்ணினீரிருநிலம்புரள
வுடல்கனன்றுறவுலைக்கனல்மெழுகெனவுருகப்
படியினிற்பணிந்தாளெழுந்திராதுதான்பல்காற்
குடதிசைக்கணினோக்கிமெய்குழைவுறும்வேலை. (௬௯)

வஞ்சிநுண்ணிடைமலர்மகள்வரம்பெறவருந்தி
நெஞ்சினொந்தவணிற்புழிக்கண்டனனயத்திற்
குஞ்சரந்தனைவினைந்திடக்குறுகிமுன்னின்ற
வஞ்சனந்திகழ்மேனியனாயர்கள்பெருமான். (௭௦)

சாலமாலினாற்றளர்வுறுமின்னுயிர்தரிப்பப்
பாலின்வேலையிலனந்தன்மேற்பள்ளிகொள்பரமன்
கோலமாகியவிந்திரவில்லொடுகுறுகி
நீலமேகமுன்னிழிவபோனில்லுறவரவே. (௭௧)

மழைதடுத்தவனிரதமேல்வரமலர்க்கையாற்
குழலொதுக்கிவாணோக்கினள்குவலயத்தரச
ரழலுறுத்திடுமெழுகெனவுருகிமின்னழகா
ளுழலையுற்றிரதங்கள்மாகரிகள்விட்டுருண்டார். (௭௨)

சோமனாண்முகச்சுந்தரியருகுறச்சூழுந்
தீமையோர்திருவடிவினாற்றிசைதொறுந்தியங்கச்
சாமரூபநற்சக்கரத்தந்தையார்க்குதவிக்
காமராசனுங்கலக்கினன்கருப்புவிற்கணையால் (௭௩)

அன்னமானமின்வனப்பினிலவனியிலரசர்
தன்னையோர்கிலர்மயிலினாற்றரணியில்விழுந்தார்
மின்னுநேமியணிரதம்விட்டிழிந்திடவிதர்ப்பன்
கன்னியானதேன்களிப்புறக்கண்களிற்கண்டாள். (௭௪)

அண்டர்நாயகனாகியவரியெழிலமையக்
கண்டமாதுமுன்கடலிடைவிளங்கியவமிர்தை
யுண்டதாமெனவுடறடித்துள்ளமுமகிழ்ந்தாள்
கொண்டனீரினால்வாடும்பைங்கூழ்குளிர்ந்தெனவே. (௭௫)

தண்பயோததியுற்றநற்பதிசராசரத்துக்
கண்பனாகியவச்சுதன்வருமுனமலைந்து
துன்பவாரியில்விழுந்தமிழ்ந்துழல்பவடுறைகண்
டின்பவாரியிலமிழ்ந்தனளிறைவனைநோக்கி. (௭௬)

குளிர்ந்தவம்பகங்கோகனகத்திருவதனந்
தெளிந்தநன்மதியங்குறச்சிறுநகைதெரிய
வளர்ந்தகுங்குமக்கொங்கைகள்மெய்ம்மயிர்பொடிப்பக்
கிளர்ந்தபொன்னொளிர்கற்பகங்கெழுமியபோல. (௭௭)

சேணுலாவியதேரினின்றிழிந்தசீதரனைக்
காணலாகியதவமுளதெனமகிழ்கருத்தாள்
பூணுலாவியமுலையிணைபுளகம்வந்தரும்ப
நாணுலாவிடச்சிலதியர்பண்ணையினடந்தாள். (௭௮)

பரிவொரீஇத்தெளிபரிவுமல்கிடப்பரன்றன்னை
யிருகண்ணோக்கினுங்களிப்புடனோக்கிடேனெனது
திருமகட்கொத்தசெயலுறுநாயகனிவனென்
றருள்மகிழ்ந்தனள்விதர்ப்பர்கோனன்புறுமனைவி. (௭௯)

அனையதாகியமகிழ்வினாலருந்ததியனையா
ளினையவாசகமியம்புவாள்யாதவகுமரா
வுனையலாதுவேறென்மகளுள்ளத்திலொன்றும்
நினைவிலாளிவணாயகனீயெனநிகழ்த்தும். (௮௦)

பணமொராயிரப்பாந்தள்மேற்றுயில்கொளும்பரமற்
கிணையதாகியமனைவிசெந்திருவனையாளின்
குணமதாகியகோகனகக்குயிறனக்கு
மணவனாகியேயூழியும்வாழ்திநீயென்றாள். (௮௧)

சிறியனின்றனையல்லதுசீரிலாதொன்று
மறிகிலாளென்றனாருயிரனையவளுன்னைப்
பிறிகிலாதவள்குணவதிநின்பெருந்தேவி
வெறிகொள்பூந்துழாய்மார்பநீகாத்திடவேண்டும். (௮௨)

என்றுநல்லுரைபகர்ந்தவள்மகளெழில்மேனி
யொன்றமெய்தழீஇயொளிவளைக்கரம்பிடித்துவந்து
குன்றமன்றெடுத்தானிரைகாத்தருள்கோவே
யின்றுமென்றும்வாழ்தேவியோடெனக்கையிலீந்தாள். (௮௩)

அன்னையானவடன்னைமால்கரத்தினிலளிப்ப
மின்னுநேமியையங்கையிற்றரித்தருள்வீரன்
பொன்னின்மாமலர்ச்சேவடிபணிந்தனள்பூங்கொம்
பென்னநின்றிடுமேந்திழையிதையமுமகிழ (௮௪)

பணிந்தமாதவப்பங்கயத்தமுதினைப்பணைத்தோ
ளணிந்தநானமெய்யையுறச்சேறுறத்தழுவித்
தணிந்தமானிலச்சிந்தையன்றேவியுந்தானு
மிணைந்ததேரின்மேலேறினனிமையவரார்த்தார். (௮௫)

ஏறினாரிரதத்தின்மேலிறைவியுந்தானுங்
கூறினார்பலசோபனங்கொடியிடைமடவார்
தேறினாடிருத்தேவியுஞ்சிந்தையுமகிழ்ந்தா
ளாறினாடுயர்விதர்ப்பர்கோன்மனைவியாமன்னம். (௮௬)

சுந்தரன்றிருவோடுமந்தேரினிற்றுலங்க
முந்திவந்திரைத்தார்த்தனர்துந்துமிமுழங்கச்
சிந்தைவெஃகியவிபுதர்கள்மலர்மழைசிதற
விந்திரன்கமலாசனன்முனிவரேத்தினரால். (௮௭)

அரம்பைமேனகையுருப்பசிதிலோத்தமையனேக
வரம்பிலாமகிழ்வோடும்வந்தெய்தியமாதர்
நிரம்புபாடலோடாடினரந்தரம்நிறையச்
சுரும்பருமலர்த்தோகைமாதவனொடுந்துலங்க. (௮௮)

மாயன்மாதவன்வாமனன்மலர்மகள்மகிழ்நன்
வேயினூதியவித்தகன்வியாளமேனடித்தோன்
றூயமாமலர்ச்சுந்தரிதன்னொடுந்துலங்கிப்
பாயுமாவிரதத்தினில்வயங்கிடப்பயில்வார். (௮௯)

ஆதவன்கொலோவென்பர்களலைகடற்றுயிலுஞ்
சீதரன்கொலோவென்பர்கடேவியைக்கமல
மீதின்மின்கொலொவென்பர்கள்விண்ணவர்யாஞ்செய்
மாதவங்கொலோவிவர்நிலம்வந்தனரென்பார். (௯0)

அன்னநல்லுருக்காண்பதற்காயிரநயன
மன்னவன்னுளனாகினன்றென்பர்கள்மாயோன்
மின்னுமஞ்சனமேனியைமெல்லியல்காண
வுன்னிலங்கிவட்கன்னகண்வேண்டுமென்றுரைப்பார். (௯௧)

இன்னவாறுரைவிளம்பியேமகிழ்வுருமிமையோர்
பொன்னின்மாமலர்பொழிந்தனர்புரந்தரனிலங்கு
மன்னஞர்தியோடனைவருமாசிகள்பகர்ந்தார்
பன்னுநான்மறைமொழிந்தனர்முனிவர்கள்பலரும். (௯௨)

பொன்னின்குடையிலங்கிடச்சாமரைபுரள
வின்னலில்லுவணக்கொடியெழுந்துவானுலாவ
மின்னுமம்புயமடந்தையோடிரதமீதிருந்தான்.
மன்னவன்மதுசூதனன்றுவளாவாழ்மாயோன். (௯௩)

கன்னறேன்சுவைதமொழியினள்கமலமாமங்கை
மின்னினுஞ்சிலாரெயிலுடைத்துவரெயில்விளங்கு
மென்னையாளுடைநாயகனுடனிருந்ததனைச்
சொன்னநாமினியுருக்குமன்செயலினைத்தொடுப்பாம். (௯௪)

(நாச்சியார் தேரேறுபடலம். முற்றிற்று. ஆ திருவிருத்தம்-௪௧௮௮.)

௭௧-வது. சேனைசூழ்படலம்.

மறனொழித்துமன்த்துறுமைம்பொறித்
திறனடர்த்துத்தெளிந்தெழுஞ்சிந்தையா
லுறியுருட்டித்ததியுண்ணுமுத்தம
விறையினைப்புகழ்வாரடியேத்துவாம். (௧)

இந்திராதிபரேத்திடயாதவன்
வந்துமாதினைப்பற்றிவன்றேரினை
யுந்தவேகிலனேடுதல்கண்டுதஞ்
சிந்தையோடியதூதுவர்செப்புவார். (உ)

ஓடினார்களுருக்குமனெய்திடந்
தேடினார்கடெருத்தெருத்தோறுமே
வாடுறுமலர்மங்கையைக்கோவலன்
கூடினன்கொடுபோயினன்கூவென்றார். (௩)

வண்டுசாருங்கருங்குழல்மங்கையை
யண்டர்காணவடனெடுந்தேர்மிசைக்
கொண்டுபோயினன்யாதவன்கூவென
மீண்டியோடினர்வீதிகடோறுமே. (௪)

மண்டபத்தின்மதிக்குடைமீதுறத்
திண்டிறற்சிசுபாலன்செருக்கிடக்
கண்டிருக்குமுருக்குமன்காலில்வீழ்ந்
துண்டிறைப்பதுகேளெனவுற்றனர். (௫)

என்னபீதியினெய்திடுவீரென
மன்னகேள்மின்னைவண்டுவளாக்கிறை
யுன்னுபோதினிற்கொண்டகன்றனுளே
னின்னநீணிலத்தேரினிலென்றனர். (௬)

என்றலோடுமெரியுறுகண்ணினன்
கன்றினன்வதனங்கதம்விஞ்சவாய்
மென்றுதீயின்விடமுமிழ்வானென
நின்றவீரனினையகிகழ்த்தினன். (௭)

மரபழித்தென்றன்றங்கையைவன்பிற்றன்
னிரதம்வைத்துறும்யாதவர்கோன்றனைப்
பொருதழித்துப்புடைத்தவன்றன்னிரு
கரமகப்படக்கட்டுவன்காண்டிரால். (௮)

தேவர்வந்துவிலக்கினுஞ்சீரிலா
மூவரொய்திமுடுக்கினுமூண்டம
ராவமுன்மலியாசுகமாரியே
தூவிவென்னையுண்சோரனைவெல்வனால். (௯)

எண்டிசாமுகமெங்குங்கண்ணன்சிலை
துண்டமாசத்துணித்துத்துரத்திவா
னண்டர்காணவடர்ந்தின்றென்றங்கையைக்
கொண்டுமீள்குவன்கொற்றவர்காண்டிரால். (௧௦)

யாதவன்றனையிடழித்தெங்கையா
மாதினைக்கொடுவந்திலனாகில்யான்
கோதிலாமதிட்குண்டினமாநகர்
சார்தலில்லையெனுமொழிசாற்றினான். (கக)

கறங்கெனக்கடிதிற்சென்றுகார்வணன்
புறங்கொடுத்திலதாய்நகர்புக்கில்யா
னறங்கெடுத்தருள்கொன்றசடாகிய
மறங்கொளும்பொய்ச்சமாக்களுமாகயான். (கஉ)

வில்லினிற்பொருகண்ணனைவென்றியான்
வல்லியைத்கொணராதென்றனூர்வரி
லொல்லையிற்கெடவுற்றொருவன்னுடை
யில்லெடுப்பவன்வீழ்நரகெய்துவேன். (கந)

குன்றமேந்தியகோவலன்றன்னையே
வென்றுமாதினைமீட்டிடனேநக
ரொன்றிலேனெனிலுத்தமர்செய்திடு
நன்றிபொய்க்குநவையுளனாகயான். (கச)

விளைவினிற்கண்ணன்வென்னிடவென்றிடு
மூரணிலாப்புயத்தோடிந்தவூர்வரின்
விளைவிற்பொய்க்கரிகூறியமாக்கள்வீ
ழெரிதிகோதத்திலெய்தியுழல்வன்யான். (கரு)

கடுகியாகவம்வென்றுகல்ன்செறி
வடிவினாளைக்கொடுவந்திலேனெனி
லிடையனாயவிழிகுலத்தியாதவற்
கடியனாகுவன்யானென்றறைந்தனன். (கசு)

என்றிவ்வெய்யவுரைகளியம்பியே
கன்றுசிந்தையுருக்குமன்காலன்போ
னின்றசெய்கையைநோக்கினநீதியிற்
குன்றமன்னசராசந்தன்கூறுவான். (கஎ)

எனக்குடைந்துவளையிலெரிந்திடு
மனற்கிடைந்தங்கலைகடலின்றிடர்
தனக்கிடம்மெனச்சாருந்தமியனு
மனைக்கடிந்திங்ஙன்வைப்பன்சிறையென்றான். (கஅ)

அந்தவெவ்வுரைகேட்டனலாமென
நந்தன்மைந்தனைநான்றனியாகியே
மூந்திவெஞ்செருவெல்குவன்மூண்டெனத்
தந்தவக்கிரன்றானுரைத்தானரோ. (ககூ)

சேலினைப்பழித்தேயறத்திட்டிய
வேலையொத்தகண்ணாளொடுமேவுகோ
பாலனைப்பற்றிக்கட்டுவன்பாரெனச்
சாலுவன்னுரைத்தான்றழற்கண்ணினான். (உ0)

ஏசிலாமரபின்மினைக்கொண்டெய்தும்
வாசுதேவன்வலிதொலைப்பேனெனா
வீசனீயவரியுருவெய்திநீள்
காசினிக்குட்டிரிமன்கழறினான். (உக)

யாதவன்றனையான்விடுவாளியாற்
பூதலந்தனிற்றேரும்பொடியுறக்
காதிநின்முனிற்கட்டுவனென்றனன்
சேதிபன்செயிருற்றெழுஞ்சிந்தையான். (உஉ)

தந்தவக்கிரன்மாகதன்சாலுவன்
சிந்தைவெந்தபவுண்டரன்சேதிப
னிந்தவெம்மொழிகூறவெழுந்தனன்
வெந்திறற்படைவீரனுருக்குமன். (உங)

எழுந்துருக்குமன்சீறிடவெங்கணுந்
தொழும்படைத்தலைவீரர்கடுண்ணியே
யுழுந்துருட்பொழுதிற்கண்ணனுற்றபே
ரழிந்திடப்பொருவோமென்றடர்ந்தனர். (உச)

வீரரானவர்கூறிவெகுளலுஞ்
சீரிதானசொற்செப்பினராமெனச்
சூரனானவுருக்குமன்றாய்நெறி
யீரமாறுவன்கண்ணனியம்புவான், (உரு)

இடையனேதுமதியிலனெங்கையைக்
கடியதேர்மிசைக்கொண்டுகழியுமுன்
படையெலாங்கொண்டுபார்திசையெங்கணுந்
தடுமின்யானையைத்தந்திடுமினென்றான். (உசு)

சொன்னவீரியனாணையிற்றான்றொழு
தன்னதேமுயல்வோமெனவானைதேர்
துன்னுபாய்பரிவெள்ளமுஞ்சூழ்ந்திட
மின்னுவாளொடுமேவினர்வீரரோ. (உஎ)

படைக்கலங்கொடுவீரர்பரந்தெழ
வுடற்கனன்றவுருக்குமன்றன்னொடு
மடற்குடன்றெழுசேதிபனாதியர்
விடைக்குலங்களெனவெகுண்டாரரோ. (உஅ)

இரதமேறினர்வெஞ்சிலையேந்தினர்
விருதுமாதங்கமீதுவிளங்கினர்
துரிதமாய்வருயாதவன்சோரவே
சரதமாயமர்செய்குவராமென. (உக)

முரசறைந்துநற்பேரிமுழங்கலு
மரசெழுந்தமரெய்தினனென்று
வரிசையின்னுயர்மன்னர்வருதினீ
யுரைசெய்முன்னமுடன்றுவந்தார்த்தனர். (௩0)

உம்பரோங்குகதலிகையோடுதேர்
பம்புமானைதுரங்கம்பரந்திடச்
செம்பராகமுறத்திடராயின
விம்பர்வாரிமகரமிலங்கவே. (௩க)

கரியினீட்டமுழங்கினகாரெனப்
பரியினீட்டம்பரந்தனவேலைபோ
லரியினீட்டமெனவெழுந்தார்த்தனர்
சுரிகையீட்டங்கொடுவருசூரரே. (௩உ)

தேர்மிடைந்தனமும்மதச்செம்முகக்
கார்மிடைந்தனகண்டையொலித்திடப்
பார்மிடைந்தனபல்பரிவானவ
ரூர்மிடைந்தவிலோதனமோங்கியே. (௩௩)

வாண்மிடைந்தனமாவயவீரர்க
டோண்மிடைந்தவலயந்துலங்கிடத்
தாண்மிடைந்திடத்தாங்கள்மடிந்திடு
நாண்மிடைந்திடவேநடந்தெய்தினர். (௩௪)

இறுதிகாலத்திரைந்தெழுவேலையு
முறுவதாமெனவோங்கியவானமு
மறையுமாகரிதேருடன்வந்தனர்
நிறையகாலக்குரோணிநெடும்படை. (௩௫)

ஆனைமேலணிதேரின்மேலடர்
வானின்மீனையுதிர்த்தெழும்வாளினர்
சோனைமேகமெனச்சொரிவார்கணைச்
சேனைகாவலரேசினந்தாரரோ. (௩௬)

வேறு. படைத்தலைவர்மொய்ம்பொடுபரப்பினிலெழுந்தே
கடிக்கமலமின்னைநிறைகன்றுகளொடரவு
மடக்குமிடையன்கொடுவழிப்படுவமுன்னர்ச்
சடக்கெனவளைத்திடுமினென்றுரைகடந்தார். (௩எ)

மகரிகைமருப்பிலகமும்மதமுமண்ட
நிகரில்பிறழ்பன்மணிகறங்கியெழநீலச்
சிகரகிரிமானவிழிசெங்கனல்பரப்பப்
புகரியமளப்பில்கொடுபொங்கினர்கள்வீரர். (௫௮)

உம்பலிகிளர்ந்ததெனவேயனிகமெய்தக்
கும்பமதயானைகொடுவீரர்கள்குறிக்குங்
கம்பொலியொடேகடுவைபூமைகள்கறங்குஞ்
சம்பலைபரந்தனகடற்றிரைகள்மான. (௫௯)

ஆழியுறுதேர்நிரைகளாசைதொறும்விஞ்சச்
சூழிமதயானைகடுறந்திடமுகிற்போற்
பாழியமைதோளினர்படைத்தலைவர்பொங்கு
மாழிகள்கிளர்ந்ததெனவெங்கணுமடர்ந்தார். (௬௦)

எள்ளுநுதலினற்கவினிலங்குமிளையோடுங்
கள்வனைவளைத்துநெறிகட்டுமெனவேதான்
துள்ளுபுரவித்திரள்கடோலினிரைசூழத்
தெள்ளியபடைத்தலைவர்தேரின்மிசைசென்றார். (௬௧)

எண்டிசையுமோடினர்கணேடினர்கள்வேலை
மண்டியதுபோலநிலன்வந்தெதிரும்வீரர்
அண்டர்குலநாயகனையன்னமொடுதேரிற்
கண்டனர்கள்காலனெனவேகதமுறத்தாம். (௬௨)

மதக்கரிகளைக்கொடுவளைத்தனர்கள்வேல்வாள்
விதித்தெழுகரத்தரிரதத்தின்வருவீர
ரொதுக்குலமுதித்தருளுமீசனையெதிர்த்தே
யதிர்த்தெழுமுநீரினொலியாகுமெனவார்த்தார். (௬௩)

பல்லியமுழங்கினபகற்கதிர்மறைப்ப
வெல்லையில்விலோதனம்விண்ணெங்கணுமுயர்ந்த
வல்லியமுனிந்துவருமானெனவெகுண்டு
மல்லுயர்புயத்தரசர்தேர்கொடுவளைத்தார். (௬௪)

மூரிமதவும்பல்கள்முழங்குமுகிலஞ்சப்
பாரதிரவெண்டிசைபரந்தனநடந்து
தேரணியுடன்றுரகதத்தணிசிறப்ப
வீரரயில்காலவரிவேல்மழுவெறிந்தார். (௬௫)

ததையுமதவெங்கரிகடாள்கடரையுற்றுப்
புதைவுறநடத்தியெதிர்பொங்குசினவீரர்
குதைசெவியுறக்குனிவில்கோலியரிதன்மே
லுதையும்வடிவாளிகள்பரந்தவுலகெல்லாம். (௬௬)

தோல்வளையவெங்குரகதத்தின்வருசூரர்
வேல்வளையும்விற்கொடுமிடைந்தனர்களெங்கும்
வால்வளைதழங்கிடவளைத்தனர்களூழிக்
கால்வளைவபோலிரதமீதுகடிதுற்றே. (சஎ)

விற்றொழிலர்நற்கரியின்மேலமரும்வீர
ருற்றனருருக்குமணிநாயகனையொன்னார்
சுற்றினர்தெழித்தனர்தொடர்ந்தகலுமுன்னம்
பற்றுமினியெற்றுமெனவெவ்வுரைபகர்ந்தே. (சஅ)

எதிர்ந்தனர்கள்பல்படைகளெங்கள்குலமின்னென்
றறிந்துமிரதத்தினொடுமேதுமறிவில்லாய்
கறந்துநிறைபால்கவருகள்வகழியேலென்
றறைந்துகடுவூறுகணைதூவினரடைந்தே. (சகூ)

எங்கள்குலமன்னவனுருக்குமனெதிர்க்குஞ்
சிங்கமெனவந்தடருசெம்மல்சிலைவல்லான்
றங்கைதனைவிட்டகறியென்னுமுரைதந்தே
பொங்கினர்படைத்தலைவர்கோளரிகள்போல்வார். (ரு௦)

சூலமழுநேமிவலையஞ்சுரிகைதூய
வேல்குலிசமுற்கரமுசுண்டிகதைவிட்டு
நீலமுகில்மேனியனைவந்துறநெருக்கி
யாலமெனவுந்தினரதிர்ந்தவுலகெல்லாம். (ருக)

இந்திரனெழிற்கமலனீசனிமையோரும்
வந்தனரரம்பைமுதல்மங்கையர்களோடு
மந்தரநிறைந்தனர்களாழிகைவிளங்கு
மெந்தைசிலைவல்லதொழில்காணுதுமெனத்தாம். (ருஉ)

ஆலமெனவேலைகள்பரந்தெழுவதான
காலமெனமாகரிகடேர்நிரைகலந்தே
வேலின்விழிவாணுதல்வெருக்கொளமிடைந்தார்
மாலுநகைகூரவெதிர்நின்றனன்மகிழ்ந்தே. (ருங)

கஞ்சமலர்விஞ்சவருகன்னிகடிகாவிற்
கொஞ்சிகிளிபஞ்சியடிகோகிலமடந்தாய்
அஞ்சலெனவெஞ்சிலைகொடேயலைகொளாழி
நஞ்சமெனும்வஞ்சர்படைநாணினையெறிந்தான். (ருச)

கடங்கலுழ்கரித்திரள்கள்வாசிகதமூரு
மடங்கலெனவந்தெதிருமன்னர்வலியெல்லா
மடங்கியயர்வெய்தவுலகானவைகளெல்லா
நடுங்கினவயங்குசிலைநாணொலியினம்மா. (ருரு)

உலைந்தனர்களுவிலுறுநீறவுலைந்தே
யலைந்தனர்கள்வீரர்பரியானையணிதேர்கள்
குலைந்தனவயங்கியுயர்கோவலனென்றோர்மேல்
மலைந்தெழவெறிந்தசிறுநாணொளியின்மாதோ. (ருசு)

வேறு.
இலங்குதேர்கரிமாவினெழுந்தவர்
கலங்கியோடிடநீள்கனகக்கிரி
குலுங்கவேலைகள்யாவுங்கொதித்தெழ
வலங்கொள்மார்பன்வலம்புரிவாய்வைத்தான். (ருஎ)

சங்கமூதினன்சார்ங்கம்வளைத்துவா
னெங்குமேகமெழுந்துபொழிந்தெனப்
பொங்குமாசுகம்வான்றிசைபோர்த்திடச்
சிங்கவேறெனுமாதவன்சிந்தினன். (ருஅ)

தேரின்மேற்பெருங்கோடுடைச்செம்முகக்
காரின்மேற்பரிமேற்கழிவீரர்மேல்
மாரிபோலவும்வந்துபொழிந்தன
நேரிலாநெடுமால்விடுநீள்கணை. (ருகூ)

ஐயன்வார்சிலையால்விடுமாசுக
மெய்யதாகியமொய்ம்புறுவீரர்க
ளெய்யும்வாளியெலாநெறியிற்றுகப்
பையராவெனப்பார்புகமாயுமால். (சுo)

அதிர்ந்தபார்மதயானையின்கோடிற
வுதிர்ந்தவாரத்தின்குப்பைகளோங்கல்போற்
பிதிர்ந்ததேர்பரியின்னங்களாகவே
யெதிர்ந்தவீரர்குடர்களுமிற்றவால். (சுக)

கொடிகளற்றகுடையுமுறிந்தன
விடியெனக்குமுறுங்கரியாவையும்
பொடிபடப்படியெண்டிசைபோர்த்தன
வடவனற்சுடுமாறெனவாளியே. (சுஉ)

கவசமற்றகடும்பரிதேரொடுந்
துவசமற்றனதோளுறும்வீரர்க
ளவசமுற்றனரந்தகன்றூதரத்
திவசமுற்றுநடந்துயிர்செற்றனர். (சுங)

படிமிடைந்தனபல்பிணக்குப்பைகள்
கடல்மிடைந்தனகான்றுகுசெம்புனல்
சுடர்மிடைந்தெழுதாய்மகுடம்புனை
முடிமிடைந்தனவந்தரமுற்றுமே. (சுச)

ஏகநாயகனேவியவாளியாற்
பாகர்பாறப்பரிநெடுந்தேர்பட
வாகைசூடியமன்னர்மடிந்திடச்
சாகமெய்தியவர்கண்களைந்தன. (௬௫)

கொடிகொடேரொருகோடிநல்வீரர்கள்
நொடியின்முன்னரின்மாளநுழைந்திடும்
படியின்மேலிரத்தப்புனல்பாறிநற்
கடலில்வீழக்கவந்தமுமாடின. (௬௬)

தாண்டுவெம்பரித்தேரினிற்சாரதி
மாண்டுநாணறவஞ்சிகொடண்டினைப்
பூண்டுசெம்புனலாற்றுடன்போகுவார்
தூண்டில்கொண்டெழுவாரெனத்தோன்றினர். (௬௭)

தடப்பொருப்பெனச்சாருங்கைமாவினிற்
குடற்புறப்படக்கொம்பிரண்டற்றுயர்
சுடர்ப்படிந்துறுதூயமுத்தைக்குவி
தொடப்பமொத்துளதும்பியின்வாலரோ. (௬௮)

உம்பர்தம்பரன்றன்சிலையுந்திய
வம்பினங்கடிதின்னறுத்தோடகின்
கொம்பிரண்டொடுகையுங்குறைந்தெழு
தும்பியின்னினஞ்சூகரம்போன்றன. (௬௯)

பழுதில்மாதவனேவியபல்லவக்
குழுவின்மாண்டவர்மெய்க்குருதிப்புனல்
முழுகியாடினகூளிகள்முந்தியே
கழுதுசூழக்கவந்தமுமாடின. (௭௦)

ஈறின்மாதவன்வெங்கணையேவிட
மாறில்வீரர்மடிந்தனர்செம்புன
லாறுபோலலைவீசிடவஞ்சினோர்
பாறவேயெதிர்ந்தார்படைநாயகர். (௭௧)

வேறு. வீடியபிணக்குவைவிலங்கலெனவேயுயரவெஞ்சிலைகொடே
கூடினர்படைத்தலைவரானவர்கள்சிறிவருகோளரியென
வாடல்மதமாவிவுளிதேரில்வருசூரர்களடர்க்கவரியை
மூடினர்களும்பர்திரளஞ்சிடமுழங்கியதுபேரிமுரசம். (௭௨)

சூலமழுநேமிவலையஞ்சுரிகைதோமரமுலக்கைசுடர்வாள்
வேலெழுவயிற்குலிசம்விஞ்சுமுசலங்கைகொடுவீசியெதிர்வார்
கோலிவிழுதேர்கிரைதுரந்துசிலைநாண்வலிகொடோளிலுறவே
யசலமெனவெம்பகழிமாரிகள்பொழிந்தனரடர்த்தரிதனை. (௭௩)

தேர்கொடிபடைத்தலைவர்சிறிநெடிவாளிகடிரண்டுபொழிய
வாரியன்முனிந்துசிலைகோலியுயர்மாமழையிதாமெனவிட
வாரியையடர்க்கும்வடவாவனலெனக்கடியவாதமெனவே
சூரர்தலைதேர்கரிகொடாளொருகைவால்செவிதுணித்தவிசிகம். (௭௪)

கடிந்துஅவனாக்கிறைவன்விட்டகணைபட்டதிசையுங்கனலவே
மடிந்தமதவேழநிரைமன்னர்மகுடத்தலைகள்மண்ணின்விழவாண்
டொடிந்தவிரதம்பரியுருண்டுவிழவோடியதுசெங்குருதிநீர்
படிந்ததுபிணக்குவைபரந்ததிசையுண்டபரவைக்குலமரோ. (௭௫)

மாறிலொளிசாரிரவிவாயுவருணன்கனல்வழங்குபடைவிட்
டேறினுருமீசனெனவேயுயர்படைத்தலைவரெங்குமடரக்
கூறுதுவளைக்குரிசில்கோரநெடுவாளிகள்விடுத்தவையெலா
நூறியனலம்புகள்பொழிந்தவர்கடேர்சிலைநுறுக்கினனரோ. (௭௬)

நாணியறவோடிமெய்நடுங்கினர்களுவலரவாளிநிறையுந்
தூணியறவோடினர்கயேவிவுளித்திரடலக்குமிரதத்
தாணியறவோடினர்களானைபடவோடினரளப்பிலமொழிற்
பூணியொடுகானினிடையேகியபுராதனர்பொழிந்தகணையால். (௭௭)

துற்றகணைதூணியுறநாணியிலைவிட்டிரதசூரர்களுட
னுற்றவர்மடிந்திடவிமைப்பின்முனமோடவளையுட்புகுதலாற்
சுற்றமனைநாரியையகன்றுமெதிர்சூழ்வினைதொடைத்துயரவா
வற்றுமுழையுட்புகுமருந்தவரையொத்ததரியாசகமரோ. (௭௮)

ஓரொருவர்பின்னெதிர்மருங்குமுளராகியொருதேரின்மிசையே
சாரிகைதிரிந்துவளையூதியரிதூவியதழற்கணையினாற்
றேரினமெரிந்துகரிமாவினமடிந்துதிறல்மன்னருருளப்
பாரிலுறவோடியதுசெங்குருதியாடினபரந்தலைகையே. (௭௯)

வேறு. கொண்டல்வானவிர்வில்லொடுங்கூடியே
மொண்டுமாரிபொழிந்தெனமூவல
குண்டவாயனெய்வாளியுலப்பில
மண்டலும்மண்டலீகர்மடிந்தனர். (௮௦)

ஒல்லையில்லுடைவோர்கணோக்கிநும்
மில்லிளையகியேந்திழைமென்முலை
புல்லுவீர்கொலென்றேநகைபோதமுன்
சொல்லுவார்களுந்தேரிழிந்தோடுவார். (௮௧)

நீளுமாயிருஞாலத்தினோர்மன்னர்
தாளுந்தோளுமறத்தலைகொண்டெழும்
வாளிமாமகுடத்தொடுவானக
மாளுமாறெளவண்டமுற்றேமோல். (௮௨)

கோட்டும்விற்றுவராபதிக்கொண்டலைத்
தீட்டும்வாளிகொண்டெய்யுமினென்றுதேர்
காட்டுவார்விரலுஞ்சிதையுங்கணை
பூட்டுவார்சரமுங்கொடுபோஞ்சரம். (௮௩)

தும்பிபோற்சுழல்தேர்கடுலங்கவே
தும்பிமன்னர்கள்சூழ்ந்திடவாவியிற்
றும்பிமாய்வொழித்தோன்சுடர்போர்விலுந்
தும்பிறைக்கணைமாரிகடுன்னின. (௮௪)

நாகமேலணைவான்கணைநாலுனைக்
நாகவீரர்மடியநடந்துபொன்
னாகமீதுறுநாகரும்வான்மிசை
நாகமாமலர்தூவிநடித்தனர். (௮௫)

துவரைமன்னன்விடுங்கணையாற்றுணிந்
துவரையென்னவீழ்மன்னரைப்பேய்கள்சூழ்ந்
துவரைவில்களியோடயன்றெல்லையாய்ந்
துவரைமண்டைகடோன்றத்துகைத்தன. (௮௬)

மடங்கல்போனிலனெய்தியமன்னர்கள்
மடங்கவேமகுடச்சிரம்வானிற்போய்
மடங்கிவீழ்ந்திடவேபெய்யுமாரிமும்
மடங்குவாளிகளெய்தனன்மாதவன். (௮௭)

கவந்தனைக்களைந்தோனொழியாமற்காக்
கவந்தமன்னர்களாருயிர்காலனார்க்
கவந்தப்பாசங்கணைக்கறப்பாடலக்
கவந்தமோடக்கவந்தநடித்தன. (௮௮)

அயங்கொணஞ்சடைமன்னர்களானைதே
ரயங்கடம்மொடுமம்புலிகண்டுறு
மயங்கவென்னவிரிந்தஞ்சினார்கள்செம்
மயங்களந்தனிலாறெனவோடவே. (௮௯)

அரிவிற்றேய்வுறுமம்புகளாலத்தோ
லரிவிற்றேரறநூறிடவாடவர்
பரிவிற்றேடியபான்மைகண்டேசுரர்
பரிவிற்றூடினர்பன்மலர்தூவியே. (௯0)

நாரிதோளுறநாற்றியமாலினு
நாரிகாதுறவாங்கநடுங்குமொன்
னாரிநொவொடுபோறிடநாகமின்
நாரிதார்வல்லபொன்றுநடித்தனர். (௯௧)

அனகன்வாளியறுத்திடவாடவர்
புனையுமாமகுடத்தலைபோயவர்
மனையின்வாய்விழமற்றவர்தேவியர்
துணையர்சூழத்தழீஇயுடல்சார்ந்தனர். (௯௨)

ஐயன்வாளிதுணித்திடவாடவர்
கையில்வாய்விழக்காதலிகண்டுதன்
றுய்யவேல்விழிநீர்தொடைக்கப்படு
மையைநோக்கினளோய்ந்துயிர்மாய்ந்தனள். (௯௩)

நிரைச்செற்றுச்செங்கோலறச்செல்லுறு
வாரைச்செற்றுமண்ணுள்வுறுமன்னனுங்
கோரச்சொல்லிகுலைகுலைந்தாலெனத்
தேரைச்செற்றுமுறியச்சிதைத்தனன். (௯௪)

நரகுதம்மிற்செய்தேசெய்தநன்றிகொன்
றுருகுதன்னிலில்லாள்கிளையோம்பார்
பெருகுதலின்றிமாள்பவன்பெற்றிபோற்
கரிகிமண்மிசைவீழ்ந்தகரிகளே. (௯௫)

கரவிலார்துயர்கூரக்கயவர்க்காய்
வரைவில்வாதுக்கவையையுமாற்றிப்பொய்க்
கரிசொல்வான்றன்கடியகுலமெனப்
பரியெலாமுயிர்போய்ப்படிவீழ்ந்தன. (௯௬)

எல்லிமங்கிடச்செல்லென்றிவனென
வல்லியங்கமலக்கண்ணனம்பிற
லொல்லையில்லுரவோர்மடியக்கண்டார்
வல்லியங்கண்டமானெனவோடினர். (௯௭)

சங்கமாகித்தளைப்பெய்தவீரர்மா
வெங்கண்வல்விலங்கும்மடிந்தேவிழப்
பொங்கிவீழ்செம்புனலுகும்வாரிமேல்
வங்கம்போனின்றமாதவன்றேரரோ. (௯௮)

உணங்குவாய்க்குணவாந்தசைமென்றுறு
நிணங்களாடையதாகவிவந்தபேய்க்
கணங்கண்மூளைக்களபமுமெய்க்கணிந்
திணங்கியேதுணங்கையெறிந்தாடின. (௯௯)

நந்தன்மைந்தன்விடுங்கணைநாலுகைத்
தந்திதம்முடன்வீரர்கடந்தலை
சிந்தியெங்கணுந்தேங்கிடப்பேய்கடாந்
தொந்தொந்தொந்தோமென்றாடித்துகைத்தன. (௪00)

பவர்கொணீள்குடர்மாலையணிந்துபாய்
கவளமாச்செவியேகுடையாய்க்கவித்
திவுளிசாய்வுறவிற்றுயர்வாலெனுங்
கவரிவீசக்களிக்குமலகையே. (௯௯௧)

அற்றயானையின்காலுரலாகத்தாம்
பற்றிவீரர்கள்பற்பறித்துச்சொரிந்
திற்றகோடுகொண்டேயிசைபாடியே
குற்றுமாலலகைக்குலங்கூடியே. (௧௦௨)

சாயும்பல்பிணத்தின்றசையாவையு
மேயெனும்முனுண்டாடுமெவ்வெல்லையில்
வாய்கொடேபறித்தும்வசைபேசியும்
பேய்களாகியுயிர்பிரிந்தாடுமால். (௧௦௩)

கூளிகூத்தியர்போற்குஞ்சரமணித்
தாளமார்த்திடச்சம்புகம்பாடவெங்
காளிகைகொட்டிக்கண்டுகளித்திட
ஞாளிசுற்றக்கவந்தமின்றாடின. (௧௦௪)

அருந்தவேமுலைப்பாலுயிரோடளித்
திருந்ததாய்நன்றியெண்ணினன்றன்கொலோ
பரிந்துபேய்த்திரளுக்குயர்பல்பிண
விருந்துமீய்ந்தனன்வேயிசைவாயினன். (௧௦௫)

கூடினார்படைவீரர்குழாங்கொடு
மூடினார்முகுந்தன்விடுவாளியால்
வீடினாரலைவேலையுடைந்தென
வோடினார்மற்றவருயிர்பேணியே. (௧௦௬)

இறுதிகாலத்தெழுந்துறுங்கூதிரால்
மறுகியேகிளர்ந்தோடியவாரிபோற்
குறைவிலாதவைகுந்தன்கொடுங்கணை
யறைதலும்முறிந்தோடினராடவர். (௧௦௭)

சேனைசூழ்படலம் முற்றிற்று. ஆ திருவிருத்தம்-௪௨௬௬.)

௭௨-வது. பவுண்டரப்படலம்.

தத்துவங்களையைந்துணர்சாத்திகச்
சுத்தவித்தையராய்ச்சுடராழியேந்
தத்தனெட்டெழுத்தும்மறிவார்கடம்
பத்தர்மெய்யடியாரைப்பணிகுவாம். (௧)

உருக்குமன்படைநாயகரோடவே
செருக்களத்தினிற்சீறிப்பவுண்டரன்
பொருக்கெனக்கடுந்தேரிடைப்புக்கனன்
நெருக்குதார்ப்பரிநீள்கயஞ்சூழவே. (௨)

பேரிமாமுரசம்பம்பைகும்பிகை
வாரிபோலமுழங்கிடமாவய
வீரர்வாளினர்வில்லினர்தேர்வருஞ்
சூரர்மூன்றக்குரோணியர்சூழ்ந்தனர். (௩)

உருமினார்ப்புடன்மின்னுறுமொண்கனல்
சொரிவபோன்றுசுடர்தருங்கோடைக்
கரியின்வீரர்கள்கண்டைகலித்திட
வரியைமூடக்கணைசொரிந்தார்த்தனர். (௪)

வேறு. மதகரியின்மழைமுகில்வான் வருவனமுதிர்குரலினமா
வுததியினொலியெனவுருடே ருருளுறுதுரகதநிரையோ
டதிர்வுறமிடலுடைவிறலோ ரழலுறவிடுகணைவரைபார்
பிதிர்வுறவதிலெழுமரவோர் பிளவுறவுயர்வனபிறைபோல். (௫)

இமகிரியினமெனமதமா வெழுவனவடர்மதமுறவே
சமனிலையெனவருகளிமாச் சடசடவெனநடைதரவா
னமரர்கள்பதியெனவவிரோ டணிதொறுமிரதமுமுறவே
திமிதிமிதிமிதிமியெனநீ டிமிலையொடுருமிகடிரள. (௬)

கடதடவிகடிதமதமார் கறையடிபுகர்மிகுகவினு
ரிடமுடைமிடலுடல்செவிவா லிலகியவொருகரமிருகோ
டுடைவடவரைமுடுகுவபோ லுறனுறுமிபநிரையொடுதேர்
கொடிகுடைபிறழ்வுறமனநேர் துரகதநிரைகொடுமிடைவார். (௭)

பணபணியுமிழ்விடமெனவே படைஞர்களடிமிசைவருவார்
பிணவுறுகரடிகைபடசோ டெறிமணிபிறழ்குறடுடனே
யிணையறவனைதுடிகையினோ டெழுகடலொலிநிகர்தரவே
கணகணகணகணவெனநீள் களிறணிமணியிசையெழவே. (௮)

சிவனயனெனவருதிறலோர் திரள்கரிபரிரதமுடனே
யவனியுமதிர்வுறவருவோ ரமிழ்தெழுமனமொடுபெயர்வா
னிவனிவனிவனிவனெனவே லெறிபவர்முடுகிடவிறைநீள்
பவனனில்விசையுறுகணையேய் பரவைகள்மறைவுறவிடவே. (௯)

உருமெனமிடைவடவனலா முருவெனவரவுமிழ்விடம்வான்
வருமெனவிரவினிலுறுதேய் மதியமர்சடையினன்விழியார்
பருமழலிதுவெனமலரான் பதிவிடுசரமுறநிலனாள்
பெருமையினுருமனர்தலைதாள் பிறிவர்களுடல்புரள்வுறவே. (௧0)

கோடுகள்கயங்கிறையிமவான் கொடுமுடியெனவிழவுயர்வா
னோடடர்கொடியுடைரதமா வுருள்வனபடிபொடியுறவே
பீடுடையரசர்களுடல்பார் பெருவரையெனவிழவரிசேர்
காடுடையனலெனநெடுமால் கடவியகணைமுடுகிடவே. (௧௧)

வாலறவிருசெவியறநீள் வயிரமுகமறவிசையார்
காலறவொருகையுமறவே கடுகிமுன்விழுவனகதமா
வேலறவயிலறவுரவோர் விரலறவரிசிலையறவெங்
கோலறவெருவுவர்பொறிசேர் குரிசில்வில்விடுகணையுறவே. (௧௨)

உலகுணுமிறையவர்விடுநீ ளுததியிலுயர்கதிரொனவா
னிலவியவிசிகமுமறவா வியங்ஙாபரிமனரிறவே
சலசலசலவெனுமொலியே தரநிறைகுருதிகணிலவே
மூலையுறவெழுவலகைகளோ வளவிலதுகர்வனதசையே. (௧௩)

மாறிலையெனுமனர்செவியோர் மணிமுடிவிழிபுயமதமே
யேறினகரிகரயிருகோ டிவுளிகடுடையடியிவையே
நூறினவுயர்கொடியுடனே நொடிமுனர்கலைமகளுறவே
வீறியகவிஞர்சொற்றொடைபோல் மேவியவரிசொரிசரமே. (௧௪)

வேறு. கடலிடையரவணைதுயிலுமால் கரியவன்விடுகணைநொடியின்முன்
வடவனலிதுவெனமுடுகிட மதகரியுறுமனர்மடிவன
வடவிகள்வரையொடுமெரிசெய லமர்வுறவலையுயர்குருதிகள்
கொடிகுடையிடைவனவிசைகொடு குடரொடுநிணமவைகுவைசெய. (௧௫)

ஒருதிசைகரிவிழவரிசிலை யொருதிசையுறவுரமொருதிசை
பரவிடவணிமணியொருதிசை பருதியினவிர்கொடிபடியவே
சிரமொருதிசைபடவொருதிசை செவிதுடையிருதிசைசிதறவான்
கருமுகிலனையவன்விடுகணை கடுகினவுயிர்கொடுகணமேல். (௧௬)

பின்னையையனையவன்விடுகணை பிளிறிடுகளிறுறுபெருநில
மன்னராயிரதமொடெதிர்வரு வயவரைமணிமுடிகளைவுற
வென்னிடும்விருதர்களிவரொரு வில்லொடுவிரல்செய்வதெதுவென
வுன்னினுமவர்சிறமறுமெனி லொன்னலரினியெங்ஙனுய்வகை. (௧௭)

பழுதகல்புகழ்புனைபரமன்வெம் பகைஞர்களெறிவுறவிடுகணை
விழிதனுளிலகியசெவிதனுள் ளிடறிறவுடலறமிடையவங்
கிழிதருகுருதியொடொழுதசை யினைநிணமுடையுறுகுடரொடுங்
கழுகுணுமுனமெழுமலகைகள் கடுகியபசியுடனுகருமால். (௧௮)

எழுமொலியுறுகடல்கடையவ னிடிகளும்வெருவுறவிடுகணை
முழுகுறவரசர்களுடலிடை முடுகியகறைநதிபெருகவே
கழுகுதம்மிருகையிலுறுதசை கடுகியவிசைகொடுகவரவங்
கழுதிடுமலகைகடொழுதன வவைதருமெனவுழுநசையினால். (௧௯)

கரிபரியிரதமுகிலமிசை கடவியகடுவிடமனையவர்
வரிசையின்முடிகவியரசர்கள் மடிவுறவடவரையதிர்வுற
வொருகணைமுடுகிடவுதவிய வுலகுணுமிறைவிறலறிபவ
ரரியரியரியரியரியென வமரர்களலர்மழைபொழியவே. (௨௦)

வாளினர்சிலையினர்சுரிகையர் மாவினர்தேரினர்வயமுறு
தோளினர்கரியினர்செறுனர்க ளொடுகணையறவவருயிர்விடு
நாளுறவவர்சிரமறவுட னிருதிசையினுநணுகிட
வேளினையருளினன்விடுகணை முடுகியககனமும்வெளிபற. (௨௧)

சேடுடையரசர்கள்கறையடி தேரணிகுரகதநிரைகொடு
மூடினரரிகணைகடிதுற மூளைகள்விழமுடிசிதறவே
வீடினர்பலர்நிறைகுருதிகள் வேலையினயமொடுவிரவிட
வோடினர்சிலர்கரியனமுகி லூர்பவர்மலர்மழையுதவவே. (௨௨)

வேறு.

ஆதியோனாகியவரிவிடுங்கணைகளே
மோதநீடிரதமாகரியின்மேல்முனைகுவார்
பீதியேயுறுதலாலெதிர்நிலார்பெரியதோ
ளுதையாலுவரியேகழிவபோலுடையவே. (௨௩)

கண்டனன்கண்ணுதற்கடவுளாலரியுருக்
கொண்டெழும்பெருமையான்கொடியவெஞ்சிலையினால்
விண்டலம்மறையவேவிசிகமாமழைபொழிந்
தண்டமும்விண்டதாமென்னவங்கார்த்தனன். (௨௪)

ஆர்த்துவந்தடர்பவுண்டரனையுங்கணைகளைப்
பார்த்துவெண்டுவரைவாழ்பரமன்வெண்ணகைசெய்தக்
கார்த்திரட்கணைகளாற்கடிபுவன்னுறமிசைப்
போர்த்தவெங்கவசமுஞ்சிலையினுண்பொடிசெய்தான். (௨௫)

சிலையும்வெங்கவசமும்பொடிபடச்சீறியே
தொலைவில்முற்கரமழுச்சூலம்வேலெறியவே
யலைகடற்றுயிலுவோனவையறுத்தம்பினா
லிலகுபொற்றேரழித்திடலுமேயோடினன். (௨௬)

(பவுண்டரப்படலம் முற்றிற்று. ஆ திருவிருத்தம்-௪௩௨௨)

௭௩-வது சாலுவப்படலம்.

மாதவாகேசவாவாமனாவாசுதேவாமுகுந்தா.
சீதராநாரணாதேவகீநந்தனாதேவதேவா
யாதவாவேறுவேறீசனான்முகனுமாயிறைவவென்றே
யோதுவாரடியர்தம்மடியரோவெம்மையாளுடையராவார். (௧)

வேறு. தேனுகாசுரனையெவதைசெய்மாதிறலினு
லீனமேநிறைபவுண்டரனிடைந்தோடவே
யானைதேர்பரிகொடேயடலுறுஞ்சாலுவான்
சேனைநாலக்குரோணியுமுறச்சென்றனன். (உ)

துந்துமித்திரள்கணப்பறைகளுந்துடிகைதேர்
வந்தெதிர்த்தசனியுமருளுமாவொலியெழக்
சிந்துரக்கரியினமிவுளிதேர்நிரையெலா
முந்துறப்பெருவிறலரசரேமுடுகினர். (ங)

சங்கமுங்கொம்புகாகளமுடன்முரையு
மெங்குமேமிடையவார்கலியொலியென்னவே
மங்குநாள்மங்கைபங்காளனூர்வருவபோற்
பொங்கினாரரசர்மாவாளியேபொழிகுவார். (ச)

பேரிமாமுரசுகும்பிகைகளும்பெரியதோ
ராரவாரஞ்செயவரசரேமுடுகினர்
தேரொலாங்கரியெலாம்பரியெலாந்திரளவே
காரொலாம்பொழிவபோற்கணைகளேசொரிகுவார். (ரு)

ஒருதனித்தேரினன்சிலைகொடேயுலகெலாம்
வெருவுறக்கரிபரித்தேருளார்விறலெலா
மெரிவுறக்கணைவிடுத்தமர்செய்தானிவனையே
பொருதழித்திடுவம்வம்மெனுமுரைபுகலுவார். (சு)

கன்றினங்கொண்டுகானேகுகள்வன்மத
மொன்றும்வெங்கரிபரித்தேருளாருருளவே
வென்றியுஞ்செய்திவன்மின்றுடேசெலுமெனில்
நன்றுநம்வீரமென்றுரைசெய்தேநகைசெய்வார். (எ)

குஞ்சரம்விஞ்சுநற்கொண்டல்போல்மிடையவே
வஞ்சகர்வெஞ்சிலையெய்யுமாமறிகடல்
நஞ்சுமஞ்சுங்கணைத்திரள்களேநலனுறு
மஞ்சனக்கிரியனைனிரதமேலடரவே. (அ)

மண்கிளைத்தெழுமன்னோரனைவரும்வளைவிற
லெண்களிற்பெரியமாகணைகளேயெய்தனர்
பெண்களிற்றிலதமாகியபெருந்திருவனள்
கண்களிப்புறுநலக்கணவனுங்கடவுள்மேல். (கூ)

நோய்மடுத்தனையவெஞ்சினமுடைநொய்யவர்
வாய்மடுத்திருகணுங்கனலவேவாளிகள்
தீமடுத்தெனவிலார்செலவிடுத்தார்கரி
யோய்மடுத்துறையில்வந்துதவுகாருருவன்மேல். (க0)

வேறு. ஆசைதோறுமானைதேர்களாடல்மாவுமாளுடன்
வாசுதேவகாவெனாவளைந்துவாரிபோலவே
யீசனேமிவானமாழியியும்வெம்படைக்கலம்
வீசினார்கடேவர்கூசமீளிபோலும்வீரரே. (௧௧)

ஆலகாலமாகவந்தடர்ந்துநின்றவாடவர்
வேலும்வாளும்வலையநேமிவிஞ்சுமாமழுக்கழுச்
சூலமாமுசுண்டிமுற்கரங்கள்சூழவீசியே
காலமாரிபோலவாளியெங்கணுங்கடாவினார். (௧௨)

எறிந்தவேல்கள்வாளியெய்தடர்த்தவீரரொங்கணு
முறிந்துபீதியோடுமோடமூரியானைமாவெலாந்
தறிந்துபார்மறிந்துதேர்தகர்ந்தொடிந்துசாயவே
பறிந்தபோதுவாளியெங்குமெய்தனன்பராபரன். (௧௩)

சுற்றும்வந்தடர்ந்துநெஞ்சழன்றுசூழியானைகொண்
டெற்றுமெற்றுவீரர்தேர்களோடுசாருமிவுளிகள்
முற்றுமுற்றறுத்துவானின்முடுகுமாமுடித்தலை
பற்றியுற்றவாளியண்டம்விண்டுறப்பரந்ததே. (௧௪)

கரந்துணிந்தவாறுணிந்தகாறுணிந்தகுஞ்சரங்
குரந்துணிந்தவோடுமாவினங்கள்வீரர்கோலியே
சரந்துணிந்தமார்பினோடுதாடுணிந்தமாமுடிச்
சிரந்துணிந்தவாழிமீதிலுதிரவாரிசேரவே. (௧௫)

குஞ்சரங்கள்விஞ்சுதேர்கள்சூழவேகொதித்துநீள்
வெஞ்சரங்களெய்துவேலடர்த்தெதிர்ந்தவீரராம்
வஞ்சரங்கமேபிளந்துபோகவாளியெய்தனன்
கஞ்சரங்கமங்கமார்பிலேமிதித்தசாலினன். (௧௬)

சீறுநூறுகோடியானைதேர்கொடேகிவீரமு
மேறவேறுளேறுபோலவேயெதிர்ந்தவீரர்வா
னேறவாறெனச்சிவந்தசோரிவேலையெய்திடப்
பாறினோடுகூளிஞாளியெங்கணும்பரந்தவே. (௧௭)

ஆடல்மாவுமோடுதேருமாடகக்கிரிக்குநே
ரோடையானைசூழவேயுருத்தெழுந்துமேவிய
கோடைமாரிபோலவாளிகோடிமேலுமெய்தவர்
வீடவெஞ்சரங்களெங்குமிடையமாயன்வீசினான். (௧௮)

ஆலநீளிலைக்கிடந்தவாதியேவும்வாளியாற்
றேலனேகமிவுளிபன்னுசூரரெங்குமிடையவே
காலனேர்செய்சாலுவன்னடர்ந்துநெஞ்சுகதமுற
வேலையேழுமறையவாசுகங்கள்வில்லின்வீசினான். (௧௯)

சாலவேமுனிந்துசாலுவன்விடுத்தசரமெலா
மாலுமாறுவாளியால்விலக்கிமற்றவன்றன்மே
னாலுகோலமுத்தலோடுநன்றுநன்றுநன்றெனச்
சூலமேதுரக்கமாயன்வாளியெய்துதுணிசெயதான். (௨௦)

ஏறிமேவுசாலுவன்செகத்துளோர்நடுங்கவே
யேறநேதரன்படைதொடுப்பவீசன்வாளியால்
நூறிநூறுவாளியால்வில்லிரதமுந்நுறுக்கினன்
மாறில்மாயன்வென்றிகண்டமறவன்மண்ணிலோடினன், (௨௧)

(சாலுவப்படலம்முற்றிற்று. ஆ திருவிருத்தம்-௩௩௩.)

௭௬-வது. தந்தவக்கிரப்படலம்.

எருவைவேந்தர்க்குயர்பதமீந்தவன் பொருதவீரப்புகழைச்செவியினாற்
பருகுவாரடியாரடிபற்றுவார் கருவிலேதிருவுற்றவர்காண்மினே. (௧)

நந்தனன்மகனாகியநாரணன் சிந்துவெங்கணையாற்கரிதேரற
நொந்துசாலுவன்வென்னிடநோக்கிய தந்தவக்கிரன்வந்துதடுத்தனன். (௨)

ஒருவன்கைத்தமர்செய்திடவோடியே வெருவியிம்பரில்வீழ்ந்துதியங்கினீர்
செருவின்வன்றிறல்நன்றெனத்தேரின்மே லருளில்நெஞ்சினனேறியடர்ந்தன

எரிந்தநாட்டனெழில்வடநாகம்போற் றெரிந்தவாக்கையன்றேர்கரிசூழ்ந்திட
விரிந்தமன்னரைநோக்கியிகழ்பவன் விரிந்தநீர்க்கடல்போலவெகுண்டுளான்,

ஆகுமாறறியாதிங்ஙனுசையா லோகையோடும்முருளொருதேரின்மேற்
பாகுலாமொழிப்பாவையைக்கொண்டுநீ யேகலாதுநீகில்லென்றியம்பினன்.

ஒல்லையிற்செல்கரியினலோங்குதேர் சில்லுளைப்பரியின்றிரள்சென்றிடப்
பல்லியங்கரங்கப்படைமன்னர்கள் வல்லியங்கொதித்தாலென்னவந்தனர்.

பார்த்தபார்த்ததிசைதொறும்பாய்பரி சேர்த்ததேரொடுவீரர்கள்செல்லவெங்
கார்த்தவேசையினூர்கலிஞ்சின தூர்த்ததூளிவிசும்பிணைச்சூழவே (௭)

கரிகளும்மொருகோடிகதித்ததேர் திரைகளும்மொருகோடிநிறைந்தெழு
பரிகள்மும்மடிவீரர்பதின்மடங் குறைசெயுந்தொகைமூன்றக்குரோணியே.(௮)

களிக்குமும்மதப்பூட்கைகள்காரின மொளிக்கவிஞ்சுங்கொடியுடைத்தேர்களு
வெளிக்கிடம்மிலதாயெங்குமேவவே வளைத்தனன்றந்தவக்கிரமன்னவன். ()

வேறு. கடவுதேர்பரிகள்கரிகள்வீரர்பலமிடைவகண்டுகருணைகரன்
இடிகளோடவுருசிலையினாண்ணொலியெழுப்பிவால்வளைமுழக்கிமா
முடிகளோடுமுடிமிடயவான்முடுகிமுகில்நேடைளவிகிலன்விழ
விடவராவெனநிமிர்ந்தவெங்கணைகள்வேலையுஞ்சுவறவீசினன். (௧௦)

அற்றதேர்கள்படிபொடியதாயுதிரவானைவீரரணிமாவொடு
மிற்றுச்சேருமகூபோல்விழுந்துருளவெண்டிசாமுகமுமெரியவே
பற்றலாரையுயிர்பருகிவானிடையொழிச்சுமாவிசைகொள்பகழிசென்
றுற்றபூவலயமதிரவீழ்குருதியுவரிபோல்முடுகியோடவே. (கக)

எழுந்தமாகரிகளிரதமாதுரகம்யாவுமோர்நொடியின்முன்னரின்
விழுந்துபாரிடைபுருண்டுவீரர்சிலைவாளியோடுமறவீரமு
மழிந்துமாமுடியினங்கள்வானுறவடர்த்தனன்கரியவஞ்சனக்
கொழுந்துபோலொளிருமாயன்வெஞ்சிலைகொடேகொடுங்கணைபொழிந்தரோ.

குஞ்சரங்கள்பதினாயிரங்களுயர்கொண்டல்கீழ்விழுவகொள்கைபோல்
வெஞ்சரங்களின்மடிந்ததேர்களணியெண்ணிலாதகனல்மேவிடும்
பஞ்சமங்கியதெனப்பொரிந்ததுபசுந்தசைக்குருதிபாறிட
வஞ்சியெங்கணுமிடைந்துபாரினர்களரசர்கூளிகளுமாடவே. (கரு)

கன்றிஞால்விளவெறிந்தசோதிவிடுகணைகளாலிரதபரிகரி
பொன்றவீரர்கள்மடிந்தசெங்குருதிபுணரியிற்கடிதுபோய்விழ
வென்றவாதினிலைகண்டுகண்கனலவில்லின்வல்லவிறல்வீரன்மு
னன்றிதாமெனமொழிந்தனன்றந்தவக்கிரனவைகொணெஞ்சினன். (கச)

சீறினனிருகணுஞ்சிவப்புறவெதிர்த்துவெஞ்சிலைகுனித்துநா
னூறுமாயிரமுமாகமாதிரமும்வானமும்மறையநொடியினி
லேறதேருமரனஞ்சவெய்தசரம்யாவும்வீழவொருவாளியால்
வேறுருவகையறுத்தனன்கடலின்மேவுமாதுவரைவீரனே. (கரு)

அழலுநெஞ்சினனடர்ந்துவந்தெதிருமாலமென்னவனவின்படை
சுழலுமெண்டிசைதுலங்கவேலையலைசுவறவில்லிடைதுரந்திடக [டேர்
குழல்கொடூதுமிறைவருணன்வெங்கணைகொடேயறுத்தவிர்கொள்கொடிகொ
கழலவெங்கவசமார்பினூடுருவவேகவாளிகள்கடாவினன். (கசு)

விரியுமாலவரையினருவிவீழ்வதெனவெய்யவன்கனகமார்பினிற்
சொரியவெங்குருதிவிடவராவெனமுனிந்துதோமரமுலக்கைவா
ளெரியைநேரொனவெறிந்திடக்கருணையாலுயர்ந்திணையிலாதவா
ளரியும்வாளியொருநூறுகொண்டவையறுத்தனன்கொடியனஞ்சவே. (கஎ)

அல்லிணைப்பொருவுநெஞ்சன்வெஞ்சரமனேகமெய்திடலுமற்றவன்
வில்லிணைக்கணையிரண்டுகொண்டுபலகண்டமாகிவிழவேயறுத்
தொல்லையிற்பரிகளும்மடிந்தொளிகொடேரழித்திடலுமுன்பகர்
சொல்லிறக்கடிதுதரணிமேல்வெருவியோடினனமரர்துள்ளவே. (கஅ)

தந்தவக்கிரனுடைந்துவாய்குருதிவீழநீடளையிலோடவே
யுந்துமுக்கிரநெடுங்கணைப்படவுருண்டமாகரிகளுலவுதேர்
வெந்திறற்பரிகளும்படக்கரியவேலைபோல்விரியும்வீரர்தா
முந்திமைக்கிரிகள்போலவெண்டிசைபரந்துபாறினர்களமுடுகியே. (ககூ)

(தந்தவக்கிரப்படலம் முற்றிற்று. ஆக திருவிருத்தம்-சகூகூஉ.)

எரு-வது. மகதராசப்படலம்.

நாராயணனுன்முகனைத்தருவோன்
பாரோரடியுள்ளுறநீள்பரமன்
பேராயிரமெய்தியபீடுடையோன்
ஆராவமுதன்னடியேதொழுவாம். (க)

கரிதேர்பரிவீரர்கள்கானிலுறு
மரிநேர்படுகுஞ்சரமாவெனவே
யிரிவோர்களையஞ்சன்மினஞ்சன்மினென்
றுரையாவுறமேறெனவந்துறுவான். (உ)

அதிரும்முரிடேரினடர்ந்தெழுவான்
கதிரின்சுடரானகலன்களுற
வெதிருங்கரிபோலெழுவானுடுவு
முதிரும்மெனவாய்விடுமோசையினால். (ங)

அலையேறுகருங்கடலாமெனநீள்
மலையேநிகரானைகளும்வளையச்
சிலையேறுகையானவைசேரவுறும்
புலையேநிலையாகியபுந்தியினான். (ச)

கராவொந்திடவேகரியுய்ந்திடமுன்
விராதன்படவென்றருள்வீரியனை
யராவின்சினமென்னவடர்ந்தனனாற்
சராசந்தனெனும்பெயர்தானுடையான். (ரு)

முரசம்முகிலென்னமுழங்கியிடச்
சுரர்தம்பதிவெண்கொடிதுன்னியுற
விரையுங்கடல்போல்வளையோசையெழ
வரசன்மகதன்கடிதின்னடைவான். (சு)

மன்னன்மகதன்வரமாகரியுந்
துன்னும்பரிதேர்நிரைசூழ்வர
மின்னும்படைவீரர்களித்தெழுசற்
சின்னம்பலவோசைசிறந்தனவால். (எ)

கரிகோடிகலித்திடுதேரினிரை
யிருகோடியவற்றினிரட்டியமா
வுரைநேர்தொகையொன்பதக்குரோணியுடன்
செருநேர்மகதன்னெதிர்சென்றனனால். (அ)

நில்லெங்கினியேகுதிநீயிடையா
மல்லின்றிரடோளன்விதர்ப்பன்மக
ளல்லென்குழலாடனைவிட்டகலென்
வில்லின்கணைநின்னுடல்மேவுமுனே. (கூ)

இடைந்தேவரையுட்புகயானிடுதீப்
படர்ந்தேயெரியுற்றிடநீபரவை
யடைந்தேயுயிருப்பர்திடுமாண்மையிலாய்
கடந்தேகலைகில்லெனவேகழறி. (க0)

சிலைநாணொலியேழுலகுஞ்செலவே
கொலைவாளிகள்கொண்டுறுகோளரிபோ
லலைசூழ்புவியஞ்சிடவந்தனனால்
மலைபோலெழுமாகதமன்னவனே. (கக)

படைவீரர்கடேர்சரிபாய்பரிமா
கடலாமெனவேவளையக்கடிய
வடல்மாகதன்வந்ததுகண்டனனோர்
குடமாடியுவந்தருள்கோவலனே. (கஉ)

சிலைகால்வளையச்சிறுநாணொலிதா
னுலகேழுமெய்திடவோதியர்தம்
கலைவாரியகைகொடுகார்முகில்போற்
கொலைவாளிகளெண்ணிருகோடியெய்தான். (கங)

விடமாமெனவேவருவெங்கணையாற்
கடமாகரிபாய்பரிகால்களற
வுடல்சோரவுருண்டுவிழுந்தனரா
லடர்வீரர்கடேர்சிலையற்றிடவே. (கச)

கரியற்றனதேர்நிறையற்றகடும்
பரியற்றனபல்படைவீரர்கடம்
சிரமற்றனமுந்தியசெம்புனலுந்
தரையுற்றதரங்கமெழுந்துறவே. (கரு)

காலற்றனவீரர்கரங்களற
வேலற்றனவில்லினமற்றனநீள்
வாலற்றனமாகரியற்றனவா
லாலிற்றுயில்வான்விடுமம்பதனால். (கசா)

நூறாயிரமாகரிதேர்நொடியி
னீறாயிடவேநிமிர்வெங்கணையாற்
சேறாயுறுசெம்பிசிதக்குருதி
யாறாயலைவேலையடைந்தனவால். (கஎ)

எரிந்தோடினவாளியிகற்பரியை
யரிந்தோடினவாடவரஞ்சநிலத்
திரிந்தோடினவெங்கரிகோடிறவே
விரிந்தோடினதூய்மைகொள்வெண்டரளம். (கஅ)

ஒருதேரினனுமெனவேயுளமுங்
கருகாவெதிரிற்பொருகாவலர்தா
மருளாரரவிந்தவிலோசனன்விற்
சரமாரியினாலுருள்வார்தரைமேல். (௧௯)

ஐயன்கணையொன்றினிலானைகளம்
பெய்யுஞ்சிலைவீரர்களெண்ணிலர்தங்
கையும்முடலுங்கொடிறுங்கழல்வ
ருய்யுந்திறமெங்ஙனமொன்னலரே. (௨௦)

வடவைக்கனலாமெனும்வாளிகள்மே
லடையப்பரிதேர்கரியாடவருங்
கடையப்படுவாரிகலங்கியபோ
லடையக்கனல்மாகதனுற்றனனே. (௨௧)

வேறு. வென்றிகண்டுசிலைவல்லவீரமதுநன்றுநன்றெனவிளம்பியே
குன்றுநின்றெனவுயர்ந்தகோளரியெழுந்துமேல்வருவகொள்கைபோற்
கன்றுநெஞ்சனிருநயனமுங்கனல்கொளுந்திடக்கனமறுகுற
வென்றின்மேல்வருமராவெனக்கடிதெதிர்ந்தனன்மகதனென்பவன். (௨௨)

எதிர்ந்துவெஞ்சிலைகொடெய்யும்வாழியெழுநூறுமாயிரமுமேவிவா
னதிர்ந்துபெய்யுமுகிலாமெனக்குவலயங்களாசையொடுமறையவே
முதிர்ந்தெழுந்தவடவன்னிமூவுலகுமூடுமாறெனமுடுக்கியே
யுதிர்ந்துவிண்ணுடுவும்வீழுமென்னவொளிர்சங்கமுந்திகழவூதினான். (௨௩)

சங்கமூதியடர்மாகதன்விடுசரங்களானவைதுணிந்திட
வெங்கணானையிருகோடிறுத்தருளும்வீரியக்குரிசில்தேவகீ
சிங்கம்வாளிமழையேவவேயெரிபரந்தவானினெடுதிசையெலாம்
பொங்குவேலையலைநீர்வறந்துதிடரானபல்லிவுளிபுரளவே. (௨௪)

கூற்றினாருயிருண்வாளிபோலெரிபரந்துதேர்துரகதங்களுந்
தூற்றுதூளியெனவேமடிந்தசெயல்கண்டுமாமகதனுந்தொடர்
காற்றினீள்படைதொடுத்தனன்வடிவினாலுயர்ந்தகருணாகரன்
மாற்றினானவையிமைப்பின்வானினுறவாயுவின்படைவழங்கியே. (௨௫)

சூரியன்படைதொடுத்தனன்மகதராசனென்றுமமர்சோர்விலா
வாரியன்சிலைகுனித்துவன்னியுறமம்பினாலவையறுத்தன
னீரமில்லவனும்வெஞ்சினத்தினெடுதண்டுகொண்டுகையெறிந்தனன்
வீரனக்கதையுதிர்ந்துபோகவொருவாளியேகொடுவிலக்கினான். (௨௬)

ஆலமாமெனவழன்றுமாமகதராசனார்கலிகலங்கிடச்
சூலமேல்விடுதலோடுமங்கதுசுழன்றுமூவுலகுமதிரவெங்
காலனாகிவருதன்மைகண்டுகதிரோலவெந்துமொருகணையினாற்
பாலனாகிமுனமாலின்மேலமருமாயனுண்பொடிபடுத்தினான். (௨௭)

நெஞ்சழன்றுமுனிவோடுநின்றுநெறியில்லவன்விழிநெருப்பெழ
நஞ்சமென்னவெழுவாளிமாமழைதுரந்தனன்கதிர்நடுங்கவே
விஞ்சமுன்னம்வருபகழிமாரியறவெய்யசாயகம்விடுத்தரி
வஞ்சன்வெஞ்சிலையறுத்துமார்பினிடைநூறுபல்லமுமடுத்தனன். (௨௮)

மார்பினேவுகணைகவசமூடுருவிவானினெய்தமழையேலவே
பாரினோடவுறுகுருதிவாயுமிழுமகதனேறியபதாகைசேர்
தேரினோடுருளையறவுயர்ந்தகொடிகடலில்வீழவுயர்திசைகளி
லூருமாவலவன்மடிவுறக்கணைகளேவினானுலகுணேமியான். (௨௯)

தேரிழந்துசிலைதானிழந்துதிரவாரிவாயுமிழுதீயவன்
பாரிழிந்தவிர்கொள்கேடகங்கடகுபற்றிமின்னொளிகொள்பங்கய
னூரழிந்ததெனவாயினோசையுறவுற்றெதிர்ந்தரியைவாளியாற்
போரழிந்திருகைபடைகளுந்துணியவோடினான்மகதபூபனே. (௩0)

ஓடினான்மகதராஜன்மாவினணியோடுதேரினுறுவீரர்தாம்
வீடவீழ்குருதியோடிநீடுகொடிமிடையவேலையிடையடையவே
சாடினானரனுமுருளவேதவமுமாதிவில்லுமிழ்சரங்களா
லாடினார்கள்மறைமொழியும்வானவர்களந்தரத்தின்மலர்தூவியே. (௩௧)

(மகதராசப்படலம் முற்றிற்று. ஆ- திருவிருத்தம். ௪௯௯௩.)

௭௯-வது. சிசுபாலப்படலம்.

நேரன்புருடவுத்தமன்றிகிரிகோடுகொண்டுதிகழ்செங்கையான்
மாதவன்னிருடிகேசன்மாயவன்முராரிபற்குணன்மகிழ்ந்திடக்
கீதையன்றுரைசெய்துதன்மாமறைநடுக்கவேகிரிகொள்கேசவன்
யாதவன்புகழுறைந்துவாழுமடியார்களெங்களிறைகாணுமே. (௧)

தெண்டிரைக்கடலுடைந்ததாகுமெனவேயுயர்ந்தகரிதேர்பரி
யெண்டிசைக்கணிடையோடவீரர்களிறந்துநொந்தலறியேகுவ
கண்டனற்கொளுவுகண்ணன்வன்றிறல்பிறங்குகம்பமதயானைமேல்
மண்டலத்திலுறுமன்னர்சூழமணிமன்னுமாவிரதமேறினான். (௨)

சூலமுற்கரமுசுண்டிநேமிபரிகங்கடோமரமுலக்கைவாள்
வேலெழுக்கணையமங்குசங்குலிசமிக்கபாசம்வலையங்கள்முட்
கோலடற்கதைமழுக்கள்குந்தமொளிர்பிண்டிபாலமயில்கொண்டெழுந்
தாலமென்னவருவீரரெண்ணிலர்களாசைதோறுநிலனடையவே. (௩

முரசுபேரியொலிதிமிலைசச்சரிமுழங்குதக்கைகணெருங்கிட
வரிசையாலுயருமணிகொடேர்களொருகோடிமண்மிசைவயங்கிடப்
புரசையானையிருகோடிமற்றதனிரட்டியொல்லைவருபுரவிகள்
கரைசெயாதகடல்மணலின்மும்மடிகணக்கில்வீரர்கள்கலித்தெழ. (௪)

இன்னதாயிரதசாரதுரங்கநாலக்குரோணிதொகையெட்டுடன்
மின்னும்வாளினர்கள்சூழவாழியெழும்வெய்யவன்னெனவிளங்கியே
மன்னர்கோனதிரதர்க்குள்மூர்த்தியுறுசேதிராசனெனும்வலியினா
னுன்னுபோதின்முனுடைந்தசேனைகளையஞ்சலஞ்சலெனவுற்றனன். (௫)

விடையினன்னிவருபுனிதனாகவுயர்விண்ணவர்க்கிறைவனாக
வடல்முனைத்தொழில்கொள்சிலையினுந்திவிடுமம்பின்மாரியெதிருற்றபே
ருடையவதல்லதொருநொடியுநிற்கிலர்களும்பர்தாமஃதுணர்ந்துளா
ரிடையனென்னெதிரினிற்கைநன்றெனநகைத்தனன்னெரிபிறக்கவே. (௬)

வில்லுநன்மழுவும்நேமியும்மிடையவிஞ்சுதேரின்மிசைவீரர்கள்
செல்லும்வெங்கரிகள்கொண்டுமன்னர்கடிரண்டுமண்ணின்மிசைசீறியே
மல்லடும்புயனைவந்துசுற்றிடமடித்தவாயனல்பிறந்திட
நில்லுநில்லெனவடர்ந்தனன்கொடியநீசனானசிசுபாலனே. (௭)

வேறு. சேதிராசன்கடகரிபரித்தேருடன்வீரர்சேரப்
போதன்வானாளியேறீசன்வானவர்களும்பொருமுனெஞ்ச
நீதெனாவெனுமுனம்பாதவன்சிலையுறும்வாளியெய்தே
மோதினானிரதமீதரசருந்துரகமும்முடியவேதான். (௮)

ஆளின்மேலிரதமேலானைமேல்மாவின்மேலரசர்மேலொண்
வாளின்மேல்வேலின்மேல்தேரின்மேல்வயவர்தம்மார்பின்மேலுந்
தோளின்மேல்வதனமேல்விரலின்மேலிலகியதுடையின்மேலுந்
தாளின்மேல்முடியின்மேலளவிலாதானசாயகம்விடுத்தான். (௯)

கொடியறக்கரியினங்கோடறத்தேரறக்குரகதத்தின்
அடியறப்பாகர்தந்தலையறச்சுடர்விடுமணியினம்பொன்
முடியறத்தோளறக்குருதியும்மூளையுந்தசையுமென்பும்
படியுறக்காகமுங்கூளியும்ஞமலியும்பரவுமாதோ. (௧௦)

குண்டலக்காதொடுமறுமுடித்தலைகளுமெண்ணில்கோடி
மண்டலக்கதிரவன்வானிறைந்தெனமாவிசையினோடும்
விண்டலத்தெழுவகிழ்விழுவமாவிசயமான்விசிகமாய
முண்டகக்கைகளிட்டாடுமம்மானைபோல்முடுகுமம்மா. (௧௧)

மூளும்வெங்கரிகளும்பரிகளும்மரசரும்முடியவீரருங்
கூளியுஞாளியுமிகலனுமெருமையுங்குடர்பிடுங்கி
மூளையுந்தசைகளுந்நுகரவீழ்குருதியால்முடுகியோடக்
காளியுங்கையெடுத்தாடினாள்கண்ணனார்புகழ்கள்பாடி. (௧௨)

கையறுங்கோடறுங்காலறுஞ்சிரமறுங்கரிகள்வீரர்
மெய்யறும்மார்பறும்வில்லறுங்கரமறுமிளிர்வகண்ணின்
மையறுங்காதறும்வயிறறுங்குருதியுமண்டுமண்மேற்
பொய்யறும்புனிதனார்பல்லவமெங்கணும்பொழியுமாதோ. (௧௩)

நூறுநூறாயிரங்கரிபரித்தேர்களும்நொடியின்முன்னர்
நீறுநீறாய்விழும்நீடுமாலாழியோன்றேகமண்ணின்
மாறுமாறுமெனப்பரவையின்வீழும்வெங்குருதிவெள்ள
மீறுறுதிரைவனூர்சரமுனேரடையலார்வீழ்ந்தமன்னர். (௧௪)

துணியுமோர்க்கையினுங்கொம்பினுங்குருதியுந்தூயபத்திர
மணியுமேபரவநீள்கரியவைமதிநிறக்கும்பியாரத்
தணியுமாதுகிர்களும்புனிதமார்மணிகளுஞ்சாரநீக்கும்
வணிகர்போலொத்தமால்வாளியாலரியுணுமதகயங்கள். (௧௫)

ஊடினார்தேர்களுங்கரிகளும்பரிகளுமுடுகிமன்னர்
வீடினார்வேலைநுண்மணலினும்பலரதைக்காணும்வீரர்
ஓடினார்வாடினாவுலரவீழ்குருதியைப்பருகியூர்போய்த்
தேடினார்தாமிருந்துறையுமாமனையினைத்தெரிகிலாதார். (௧௬)

திக்கெலாமோடுவார்சிதறியூர்தேடுவார்மனைபுகுந்து
மக்களோடுறைகுவார்கண்ணனூராசுகம்வந்ததென்றே
கக்குவாருதிரநீர்மனைவியுமலறவெங்காலனூரும்
பக்கமாய்வந்துயிர்பருகிடத்தனுவுமப்படியின்வீழ்வார். (௧௭)

வேலையெழுங்கிழிந்தோடுமாறெனவரூதினிமெலிந்தே
பாலமேவிடுமநாளமரர்போலாகுலித்தலறியோட
மாலினூர்சிலையிலவ்வூழியினீர்த்தறைபெய்யவானம்
போலவேழ்கடல்வளைப்புவிதிசையெங்கணும்பொழியும்வாளி. (௧௮)

கண்டுகண்கனலெழச்சேதிபன்கடுமையிற்கடவுதேரி
னண்டரும்வெருவுறச்சிலையினாணொலியுறவலைகொள்வேலை
மொண்டுமைம்முகில்சொரிந்தாலெனப்பகழிமேல்முடுகியேவி
விண்டலம்விண்டதாமென்னவாயூதினன்சங்கம்வீரன். (௧௯)

மாதிரமெவைகளுமறுகிடச்சேதிபன்வருதல்கண்டான்
சீதரன்சிலைபெருஞ்சுடர்சிலீமுகவிலிற்சிதறியெங்கும்
பாதகன்விடுசுடர்க்கணைகளற்றுவரியிற்படியவெய்தே
யூதினன்சங்கமெவ்வுலகினுந்திசையினுமொலிமடுப்ப. (௨௰)

ஈன்றநீள்வில்லின்வல்லாண்மையென்றவனுமென்னகையுமெய்த
வென்றிசெய்குவனிவைகாணெனவெஞ்சினம்பெருகமேவுங்
கன்றுமேடவிசேர்கள்வகாவென்றுரைகழறியம்பொற்
குன்றுமண்குலைவுறக்கொடுமைசேர்நாகபாணங்கொடெய்தான். (௨௧)

அருளிலான்விடுமணிப்பஃறலைத்துத்திவாளரவம்வாயிற்
றிரளுமாவிடமுறச்செகதலங்குலைவுறச்சேர்தல்கண்டான்
மருளெலாமகலவாழ்த்தினர்மனத்துறையுமால்வயினதேவன்
பொருளுலாவும்புடைச்செல்விடப்பணியெலாம்பொடியதான. (௨௨)

விடவராமடிவுறச்சேதிராசன்சினம்விளையவில்லா
விடபமூரிறைவனற்படையெடுத்துரனுறவெய்தலோடுங்
கடலெலாமலையவெண்டிசையெலாங்குலையவெங்கனலெழுந்து
மிடையமாபூதமுஞ்சூலமுமாவமும்வேலுமாகி. (௨௩)

இறுதியிற்சங்கரித்திடுமரன்படைவரப்பொதுவரில்லி
னுறிதனிற்றயிரெடுத்துண்டவன்கண்டுமாபதியினம்பு
முறைமையிற்கடவிடப்பரிதியின்சுடர்கெடக்கடிதின்முந்தி
யறனிலக்கொடுமையன்விடுபடைக்கலமறுத்தவணிபுக்க. (௨௪)

கண்டனன்பின்ருகன்கணையறச்சேதிபன்கனலுநெஞ்ச
னண்டமெண்வளாகடலகிலமோடுண்டருளாதிதன்மேற்
றண்டுகொண்டெறிதலுங்கைசெய்தேசக்கரபாணிநீறு
முண்டகத்தெழுமுகைப்பல்லவமுடுகவக்கதைமுறிந்த. (௨௫)

கதையறக்கதமுறுஞ்சேதிபன்கனலவன்படையைவாங்கி
யிதுதடுத்திடுதியென்றெய்யமாலென்றின்மந்திரமியம்பிக்
கதிருறக்கடவுவெம்படைவருஞ்சாமறக்கயவன்மார்பிற்
புதைவுறக்கவசமும்பொடிபடக்கடலிடைப்புக்கதம்மா. (௨௬)

மார்பினிற்கவசம்நீறுகிடக்குருதிமால்வரையின்மீது
நீரெனப்பெருகவும்நேரிலானெய்திடநிறையும்வாளி
யோரிமைப்பதன்முனேழுலகெலாமூடமுன்கனலையுண்ட
வாரியக்குரிசிலோர்பகழியாலம்பொருஞ்சிலையறுத்தான். (௨௭)

வில்லறக்கொடியவன்மழுவெழுத்தண்டுவாள்முசலம்வேலோ
டெல்லுறச்செல்லும்விட்டேருகுந்தங்கைகொண்டெறிதலோடு
மல்லிறக்கதிர்வருஞ்செயலெனக்கணைதொடுத்தவையறுத்தே
யொல்லையிற்கடியவன்மணியுறுமவுலிமுன்னுதிரவெய்தான். (௨௮)

மகுடமுன்பொடிபடக்கதமுறுஞ்சேதிபன்மணியுடைத்தேர்
சகடொடும்பரியறக்கொடியறப்பாகன்வன்றலைவிண்மீதின்
முகடொடுமளவிலாமுகிலுடன்கெழுமிமண்முடுகிவீழப்
பகடொடுங்கஞ்சனைக்கொன்றமால்பகழிமாமாரியெய்தான். (௨௯)

மூளும்வெஞ்செருவினிலிரதமாவறவெய்யமுனிவிறேனும்
வாளிலங்கிடவருஞ்சேதிபன்வெருவமால்வரிவில்வாங்கித்
தோளினுமார்பினுங்கையினுமெய்யினுந்துடையின்மீதுந்
தாளினுமளவில்வெங்கணையெய்தானவனிலந்தனில்வீழ்ந்தான். (௩0)

ஆறுபாய்வனவெனக்குருதிவாயொழுகுசேதிபனயர்ந்து
தேறினன்மனதினிற்பீதியுற்றிடவெதிர்சிறிதுமில்லாப்
பாரிறைவன்கண்டகுண்டினபுரிப்பாவைபண்மொழியுடைத்தே
னூறுபூங்குழலிணையிலாமாறுவகையானகைசெய்தாளால். (௩௧)

அடலுறுஞ்சேதிபனுடலெலாஞ்செம்புநீருருவிழ
மிடலழிந்தோடலுங்கரிகள்மாதேருடன்வீரரெல்லாங்
குடரணித்தசையெலாங்குலைசெய்தேயோடுசெங்குருதியான
கடல்கடந்தோடினார்சிலரதின்மூழ்கினாராவிகாணார். (௯௨)

(சிசுபாலப்படலம் முற்றிற்று. ஆ திருவிருத்தம்-௪௪௨௫)

௭௭-வது. உருக்குமன் அபசெயப்படலம்.

இரணியனுரம்வகிர்ந்துமற்றவனெழிற்சுதற்கரசளித்துமா
முரணிலங்கைமன்னாவிகொண்டெழில்கொள்வீடணற்குமுடிசூட்டியே
யரவுயர்த்ததுரியோதனனனுசர்கிளைஞருமமரின்வீயவே
தருமனுக்குநிலமருளுமாயனிருசரணமென்னவினைதகருமே. (௧)

தந்தவக்கிரமன்மகதன்வெங்கொடியசாலுவனுயர்பவுண்டரன்
சிந்தியெண்டிசையுமோடவோடிவருசேதிபன்செயல்கள்கண்டனன்
அந்தகற்கும்வலிமிக்கவாண்மைபன்விதற்பராசன்மகளானதேன்
சுந்தரிக்குமுனம்வந்தமன்னவனுருக்குமன்னமர்தொடர்ந்துளான். (௨)

வீரானவர்களமரினும்விசைநன்றுநன்றெனவிளம்பியோர்
தேரினேறியெழில்கவசமார்பினிடைசேரநீடுசிலைவளைவுறக்
காரும்வானமுநடுங்கவேழ்கடல்கலங்கிடக்கனகசிகரமும்
பாரினோடலையநாணெறிந்தொலிபரந்திடப்பணிலமூதினான். (௩)

பேரிமாமுரசபம்பைகும்பிகைகடிமிலைபீடுடையவுறுமியுந்
தாரைகாகளமிலங்குசின்னமலிசங்குகொம்பினுடனெறிமணி
வாரியாகுமெனவெண்டிசைக்கணுமுழங்கமாழையுறுவையமேற்
காரினோடுலவிமணிகள்மின்னவொளிர்கனகநீடுகொடியிலகவே. (௪)

வீசுசாமரைகளுயரவெண்மதிநிகர்த்தவெண்குடைவிளங்கிட
மாசிலாதமணிவயிரமாரமுறவெழில்கொள்மாமகுடமொளிரவே
பூசுரேசருயராசிகூறவிருபுடையுமன்னர்கள்பொலிந்திட
ஆசையோடுலகுமஞ்சவிஞ்சியவனீகமாக்கடலடர்ந்தெழ. (௫)

சீறுமாகரிகணூறுகோடிவிடுதேர்களுமதனிரட்டியே
மாறில்மாவுமதின்மும்மடங்குவயவீரரென்னிலர்வயங்கிட
ஆறும்வாரிதியெனப்பரந்தபடையொன்பதாயவக்குரோணிகொண்
டேறதேறுமரனஞ்சவஞ்சகனெரிந்தகண்ணினனெதிர்ந்தனன். (௬)

கரிகள்காரெனநிறைந்தெழுந்தவுயர்கனகமன்னுமணியொளிகொடோர்
விரியும்வானமிசைதிகழ்விமானநிரையேயமர்நிலம்விளங்கிடப்
பரிகள்மேவுதிரையாறுபோலவருபடைஞரும்பரவையேலவே
தரணிமீதினுறவெய்துவார்களரிதன்னைமின்னினொடுகண்டனர். (௭)

வேறு. அரிதனொடுமுடுகியடலின்முனைபவர்க
ளிரதகசதுரகமிலகவெறிகடல்கள்
வருதகமையெனவுமரசர்வரிவில்கொடு
துரிதமனதினர்கள்கணைகள்சொரிபவரே. (௮)

புகையினகையினர்கள்பொறிகளுகும்விழியர்
ககனமதிரவொலிகரியின்மிசையிலகு
மிகலர்சுரிகைகளொடெழுவுமெறிமவர்
திகிரிதிகழ்கரனைமுடுகுதிறலினரே. (௯)

துடிகளுறுமியபறைமுரசுதொகையிலக
விடிகள்வெருவவடிபடுவதுவனியுற
மிடையும்விறலினர்கள்வெடுவெடெனுமொழியர்
கொடியரிரதமிசைகுலவுகொடியினரே. (௧0)

சூலம்வலையமழுவாள்கள்கதைசுரிகை
வேல்கள்குலிசமெழுநீடுகணையும்விடு
கோல்களுடனெறிவர்கோவுளமர்பவனை
யாலமெனவடர்வர்தேரினதிரதரே. (௧௧)

வெய்யவயவர்சிலைகுனியவிசிகமழை
பெய்வருலகையனொடுதவுபெரியவனை
யைவர்சினமலியவனசமலரினுறை
தையறனைவிடுதியென்றுதகைபவரே. (௧௨)

கொடிகளிடையுடையகமலம்வருகுயிலை
விடுதிவிடுதியெனவுரைசெய்விறலினர்கள்
கடியகடுவைநுகர்கயிலையிறைபடைகொ
டிடையனிடையவெதிர்மலைவமெனுமவரே. (௧௩)

ஏகுநெறியடையினேதமறவிலகு
தோகைமலரிவைதூயவழகினுறு
மோகனிவனிரதநூறியெதிர்முடுகி
வாகைபுனைதுமெனவோதுமறவர்களே. (௧௪)

ஒருவனிவனிரதமழியினுருவதிலை
பொருவசிலையுமிதுநிகரில்புரவலர்கள்
வெருவல்வெருவலெனவுரைசெய்விறலினர்க
ளுருளுமுலையவருகரியினுயர்பவரே. (௧௫)

பரியின்வருவர்சிலர்படைகள்பலவெறிவர்
கரியின்வருவர்சிலர்கணைகள்சொரியுமவ
ரரிகளெனவருவரரசர்வளையினொலி
திரளவகிலமொடுதிசைகள்செவிடுபட. (௧௬)

எதிருமதிரதர்களுடுவினினமுமினி
யுதிருமுதிருமெனவொளிகொள்சிலையினொலி
முதிரவிடுகணைகள்வடவையெனமுடுக
வதிருமவனியுறமரவுமனலுமிழ. (௧௭)

வேறு. நெஞ்சழன்றுபடைவீரரானவர்கணீதியானநெறியொன்றிலார்
குஞ்சரங்கள்பரிதேர்களானவைகள்கொண்டுகொண்டலைவளைந்தபோல்
விஞ்சவெஞ்சிலையின்வாளியோடுகதைவேல்மழுக்கணையும்வீசிநா
ரஞ்சிவிண்ணவர்கள்போய்மறைந்தனர்களகிலமெங்கணுமதிர்ந்ததே. (௧௮)

ஆனைதேர்கள்பரியெண்ணிலாதவைகளடரவந்தெதிருமாடவர்
சோனைமாரியெனவாளிதூவியுயர்தோமரந்தொகையில்வேல்மழு
வானுமாதிரமுமறையவீசமலர்மீதுமாதுளம்வருந்திடத்
தேனுகாசுரனைமுனியுமாதவவில்வளையவெங்கணைதெரிந்தனன். (௧௯)

அன்னமானநடையாளையஞ்சலெனவோதியாழியுறுமாழியான்
மின்னுமாமுகில்விளங்கிநின்றதெனமேவிவாளிமழைவீசவே
மன்னரானவர்களிரதமோடுதளைமறியவெம்பரிகள்மதகரி
யுன்னுபோதின்முனுருண்டசெங்குருதியுவரியாகுமெனவோடவே. (௨0)

சிலையினாணினொலியுலகமேழுமுறவேகவாளிகள்செலுத்துமா
மலைகள்போலவருகரிகடேர்கள்பரிவளையவந்தெதிருமறவர்தந்
தலைகள்வானமிசைநிறையநீடுமுடறரணிவீழவனைதாமென
வலைகொள்வேலையிடையுதிரவாரிவிழவலகையுங்கழுகுமாடின. (௨௧)

சுற்றுமேவுபரிகொண்டுசூழுமவர்தூயவெங்கள்குலமானினைப்
பற்றியேகுமறிவற்றவாயர்குலம்வந்தவன்பயமுறக்கடி
தெற்றுவீர்களெனவந்தெதிர்த்தவர்களொன்றடர்த்தவனெய்வாளியா
லற்றசென்னிமாமகுடமின்னவுயரண்டமுற்றவையனந்தமால். (௨௨)

வேறு. சிலையினாறுநாணிநோசையேயொளிர்செகமுழுதும்வீடுகாலமாமெனு
மொலிகளெழநாடியோடுசாயகமுருளிரதமேவிநேருமாடவர்
தலைகளறஞாலமீதின்மாவொடுசரியினலவேழம்வீழமாசற
விலகிநிறைவாரிதோறுமேகினவிடையர்குலதீபவீசனேவவே. (௨௩)

அதிரதர்கள்மாளநீளுமாகரியடையவுடலோடுகோடுதாளற
வுதிரரதமூருமாவலோனுமெய்யொடியநிலைவாசிநாசமேயுற
வெதிரிலழல்வாளிவாளின்மாமுகிலிரியவுயராசைதோறுமேகின
சதுரன்வசுதேவன்வாழவேவருதனயன்விலின்மாரிபோலவீசவே. (௨௪)

முரன்முரியமோதுமாலினார்கணைமுடுகவுயர்போகுமாவோடானைகள்
வரைவிழுவபோல்மீதின்வீழ்வுறமணிமுடிகள்சூடிவாழும்வீரர்கள்
சிரநெரியவாளமூளையேபடிதிரளவிழிவீழநாவும்வீழ்வுற
வுரநெரியநாசிவாயிநேவுறவொடிவருடலோடுதோள்கடாள்களே. (௨௫)

கொடிகுடைகள்வீழவாசிமாகரிகுடர்புரளவீரர்தேர்கடாளற
முடிகளறமார்புமாரமோடறமுசலமறவேல்கள்வாள்கடானுதிர்
பொடிகளுறவிழ்வதேர்கள்பாரிடைப்பொறிகளுறவாசைதோறும்வாணமு
மிடியுடையனுடியோடுமாசுகமெறிகடலுள்வாழுமீசனேவவே. (௨௬)

அடியறுவதேரினுணிதானறவடியடுவபேரிகாளமோடிறு
துடியறுவவூறுவாசிநாசிகடுடையறுவவானின்மேகமேலமர்
கொடியறுவமோடுகேடியேயொளிர்குடையறுவகோலமானமாமணி
முடியறுவவீரர்தோள்கடாளறமுடுகுகணைமாயனுடைபனேவவே. (௨௭)

சுதைதருவமாதுநாதனேவியதொலைவில்பலவாளிசோனையாமென
வுததிகனலாசமூனுமாகரியுருளிரதம்வாசிமாளவோடுவ
மதிதவமும்வேணியாமனென்னார்புரமடியவெரியாகனூறும்வாரென
வதிதிமிலகோலகாலமானதவரசர்திரளாசைதோறுமோடவே. (௨௮)

தலையறுவர்மாவினேறுசூரர்கள்சரியிலுயர்தேரினேறுமாடவர்
சிலையறுவர்பாழிவாசிகாலொடுசிரமறுவமாறிலாதமாகரி
சூலமறுவவீரரானபேரினர்குலைகுலைவர்பீதியோடுமோடுவ
ரலையுறுநல்வாரிமீதினுகணையமருமருளாளன்வாளியேவவே. (௨௯)

அவனிதனில்மேவுதேர்கொடானேகோடிரவருசூரர்சூழவேயறை
பவனனிலும்வேகமானமாவோடுபடைஞர்திரள்கூடிமூடினர்தலை
குவைகள்முகிலோடுசேரமீதுறுகுருதிநதியாறுபோலவோடின
துவளைநகராளும்வீரனுமிறைதொலைவிலெயும்வாளிமாரிதூவவே. (௩0)

வேறு. ஆரியன்றனுவுந்துறமண்டினவாசையம்புவியண்டமுமிண்டிய
வாரியெங்குமலிந்தனவெங்கரிமாவினின்றுடர்வஞ்சர்மடிந்தனர்
பாரினெங்குநிறைந்தெழுசெம்புனல்பாரவங்கதுகண்டனர்விஞ்சிய
தேரர்வந்துநெருங்கியடர்ந்தவர்சீறிவெங்கணைசிந்தினர்முந்தியே. (௩௧)

சூரர்விஞ்சிநெருங்கினர்வெங்கணைதூவிவந்தடர்ந்திடமுந்திய
பேரிபம்பைகறங்கிடமங்குல்கள்பீதிகொண்டுபெயர்ந்தனசங்கொடு
தாரையெங்குமுழங்கினவண்டர்கடாமுமஞ்சினர்கண்டிமுதண்டன
வீரனம்புபொழிந்தனன்வஞ்சகர்வீறழிந்துயர்விண்டலமண்டவே. (௩௨)

தாளுடன்றலையுந்தலைதும்பிகள்சாயவங்கநெரிந்தனவெம்பரி
தோள்சிரங்கரமுந்துடையுந்துணிசூரவன்பினரென்பினுடன்றசை
மூளையுந்தியெரிந்தெழுசெம்புனல்மூரியம்பரமஞ்சமுழங்கின
வேளையன்பொடுதந்தவனின்றெதிர்வீசுவெஞ்சரநஞ்செனவிஞ்சவே. (௩௩)

வீறியெங்குமடர்ந்துமிடைந்தொளிர்வேல்முசுண்டிகைகொண்டுயர்குண்டையி
னேரியஞ்சவெறிந்தவர்வன்றலையேகவம்பரமம்புவிசெம்புன
லூறிவந்தலைமூர்துகருங்கடலோடமண்டிடுகெண்டைகளுண்டிட
றேறவஞ்சமில்கஞ்சமின்விஞ்சியதேரினின்றரிசிந்தினன்வெங்கணை. (௩௪)

வாரணங்களின்விஞ்சியெழுந்தவர்வாசியுந்திரதங்களின்வந்தவர்
பாரணங்குமெலிந்திடவெம்பரிபாயமுந்திநெருங்கினர்வென்றிகொ
டாரணங்கியகுஞ்சியர்வன்றிறல்சாரவந்தவர்தந்தலையிந்திர
னாரிணங்கிடவெங்கணும்வெங்கணையோடவுந்தினனும்பர்கடம்பரன். (௩௫)

வேறு. விண்டாரகையண்டிப்படிவீழ்ந்தலைமிடைய
வுண்டாகியகரிதேர்பரியுடன்வீரர்களுருளப்
பண்டாலிலையமர்வோன்விடுபகழித்திரள்பரவக்
கண்டானுயர்விதற்பன்றிருமகனாகியகடியோன். (௩௬)

ஒருதேரினிலிவன்வெஞ்சிலையொன்றேகொடுபொழிவான்
பரிமாகரிபடைவீரர்கள்மடியக்கணைபரப்பிப்
பொருமாறதுநலனாமெனப்புகலாநகைபுகையா
வெரியாவுறவிரதந்தனைமுடுகின்றனனெதிரோ. (௩௭)

மலைபோலுயர்கதிராமெனமகுடத்தொடும்வருமா
லலைவேலையின்விடமாமெனவிழியாலனல்சொரிவான்
சிலைஞாணொலியாலுலகுலையச்சிகியினைநேர்
கொலைவாளிகள்பலவுங்கொடுகொதியாவெதிர்வருவான். (௩௮)

படிவானகம்வெருவக்கடலிடையேபணியுமிழும்
விடமாமெனவிறுகாலையின்விடைமேல்வருமரனார்
வடிவாமெனரதமேல்வருமலைநேருருக்குமனான்
கொடியான்ககபதியாலுயர்கொடியானுடன்கூறும். (௩௯)

வெண்ணெய்க்கழுதடியுண்டுநெய்திருடித்திரிவிரகா
கண்ணிக்கயிறுடனேகழிகோலுங்கொடுகானி
னண்ணித்தனையுழல்வாயெமதுயிராகியநலமாம்
பெண்ணைக்கொடுகளவிற்பெயரிடையாபிழைசெய்தாய். (௪0)

விட்டேகுதிமடவாடனையல்லேலெனில்விடமாய்ச்
சுட்டேகுவகணையாற்சிலைதுணித்துன்னிருகரத்தைக்
கட்டேனினின்றொழுமடியார்கழலிணையிற்
பட்டேயுறுதுகளாகுவனெனவேசிலபகர்ந்தான். (௪௧)

எரியாயெழவிருகண்ணினுமிமையோர்களும்வெருவத்
தெரிவாளிகள்கொடுவெந்துயர்சிலையான்சிலசபத
முரையாவதிருறுமேறெனவுருடோர்மிசையுயர்ந்தான்
னருளார்வசுதேவன்சுதனகையோடிவையறைவான். (௪௨)

வீரற்குறுநல்வாசகம்விரித்தாயறிவிலியுன்
றேரற்றுயர்கொடியற்றெழிற்சிலையற்றிடச்செல்லுங்
காருற்றெழுசுடர்வாளிகள்கலவாமுனமினினீ
பாரிற்குதிகடிதோடெனப்பரமனுரைபகர்ந்தான். (௪௩)

அரியாகியமுதலோனிவை யறையுமுனராழல்கண்
ணெரியாயுறமுனிவானுயர்சிலைநுனெலியெழவே
விரிவாகியகடல்மாதிரம்திறையப்படிமிசையின்
சொரிமாரியினதிகத்துறுசுடராசுகஞ்சொரிந்தான். (சச)

வேறு. அத்திக்கொம்பைக்கொண்டதுமோதியறல்சால்பா
லத்திக்குளமின்னுக்கடல்செய்யச்சுதனிற்கு
மத்திக்குச்செல்வீரவிதற்பன்மகனுகத்
தத்திப்பூனுறும்பிறையேயவைமூல்கின்றுன். (சரு)

குஞ்சரம்விஞ்சுங்குண்டினமாபுரியாளுங்கோன்
வெஞ்சினநெஞ்சன்வில்கொலைவேலையிடையெய்தும்
நஞ்செனவெஞ்சிலைவெங்கணையெங்கும்விடநந்தன்
மஞ்சனுமஞ்சுவாளிகொடெய்தானவைமாற. (சசா)

அஞ்சுமுகத்தானுமெனவெய்தியகல்வாளி
னஞ்சுமுகத்தானேடிடனுகக்கணையெய்தா
னஞ்சமுகத்தான்கபதிபடைகொண்டவைநூற
வஞ்சமுகத்தானுயினன்வானத்தவராட. (சஎ)

புண்டரிகம்போல்வெம்பியபஞ்சானனமேபோற்
புண்டரிகம்போல்வந்தவிதற்பன்புதல்வன்சீர்ப்
புண்டரிகமின்னுயகன்வில்லார்ப்பொலியாற்றுன்
புண்டரிசத்துக்கொத்தசரந்தோள்புகநொந்தான். (சஅ)

கொடியாநெஞ்சன்வஞ்சங்கொண்டான்கூற்றென்ன
வடியாலேபார்வானுமடங்கவளவேகொண்
ணெடியோன்மார்பிற்புண்படவெங்கும்நிறைவாளி
நொடியோர்போதினெய்தனன்விண்ணோர்மனம்நோவ. (சகூ)

வேறு. காற்றொப்பனவிடமொப்பனகனலொப்பனகடியுங்
கூற்றொப்பனவிடியொப்பனகொடியாமுமைகொழுநன்
சேற்றத்தினுமடர்வெங்கணைவிதற்பன்சுதன்சிதற
தீற்றுக்குவைபடவாழியினறுத்தானெறிவளர்த்தான். (ருO)

பார்த்தான்விடுபடையாவையுமுறியக்கடும்பகழி
யார்த்தானுயருலகியாவையுமிமையோர்களுந்துலங்க
வார்த்தாளெளிர்வளைபூதினனுமெய்த்துமுவிடையா
கீர்த்தாயெனிலரசாகுதியெனவேகனற்கண்ணன். (ருக)

தீயோன்விடுங்கணையாவையுமறவேசிலைபகழி
மாயோன்விடுவதுகண்டெரிமறவன்சிலையதனைற்
றூயோன்மிசைநூராயிரவரிவாளிகடுரந்தான்
பேயாகியதாயாருயிர்நுகர்ந்தானவைபிழைத்தான். (ருஉ)

கொதித்தானுஙங்கொடியோனவனூறுவெங்கணைகொடிதா
னெதிர்த்தேசிலைவிடுத்தானவைதுவராபதியிறையோன்
சிதைத்தேயவனகல்மார்பிடையுறவாளிகள்செலுத்தப்
பதைத்தானுடல்விதற்பன்றிருமகனுகியபதகன். (ருரு)

உருமேறெனமுனிவானுருக்குமன்பாருலகெவையுஞ்
சருகாயிடத்துரந்தான்கதிரவன்வெம்படைதனையே
கருமாமுகிலனையானுமப்படைகொண்டொருகணத்தி
னெறியாவுறவிடுத்தானவையறவார்த்தனரிமையோர். (ருசு)

துரந்தான்சிலசுடர்வெங்கணைதூயோனவைதுணிக்க
வெறிந்தான்மனமியமன்படையெடுத்தானுலகெவையு
மரிந்தேயுறுமிதற்காற்றலையெனவிட்டனனழிகார்
குருந்தேறியவிளையோனதுகுறைத்தான்கொடும்படையால். (ருரு)

விடமாமெனக்கதமல்கிடுவிதற்பன்றிருமகனுங்
கொடியானயனழிக்கும்படைசிலைநாணுறக்குனித்தே
யிடையாவிதுதவிர்ப்பாயெனவிடுத்தானுலகெறியக்
கடல்மீதினிலடைவானுமப்படைகொண்டவைக்கரந்தான். (ருசு)

களைந்தானிவன்மலரோன்படையெனவங்கதமுறுநெஞ்
சுளைந்தானுயருலகியாவையுமிருகாலையினொடுங்க
வளர்ந்தாரழல்விழியாவெரிமடுப்போன்படைவாங்கித்
தெளிந்தான்வரிசிலைநாணுறத்தொடுத்தான்செலவிடுத்தான். (ருஎ)

காற்றுங்கொடுங்கனலுஞ்சுடர்க்கணையுங்கடுவிடமுங்
கூற்றும்பிறையெயிற்றேடெழுகூளிப்படைபலவுஞ்
சீற்றமுறுங்கரும்பூதமுமாவுஞ்சிதையாத
வாற்றமுறவொளிர்சூலமெவ்வுலகெங்கணுநிறைய. (ருஅ)

கடல்வற்றிடவரைமுற்றவுநெரியக்ககனம்பா
ரிடருற்றிடவுயிருட்கிடவருநாற்றிசைமதமா
மிடலற்றிடவெயில்மட்கிடவிபுதக்குலம்வெருவ
வுடுவுட்கிடநிலனுற்றிடுமுரகக்குலமுலைய. (ருகூ)

விடையுற்றவர்படையெங்கணும்விரிவெங்கனல்பரவத்
தடியொத்தமெல்லிடைமாமடவனமுமனந்துலங்கக்
கடலுற்றமரரிதேவியைக்கலங்காதுமின்னென்றே
சுடருற்றெழுமரனற்படைவிடவங்கவைதணித்த. (சுO)

ஆர்த்தாருயரெழில்வானவரவர்மாமலரவனி
தூர்த்தார்கடற்றுயினீங்கியமுகுந்தாவெனத்துதித்தார்
பார்த்தானுருக்குமன்வெஞ்சினம்பெருகப்பலபகழி
சேர்த்தேசெலவிடுத்தான்றிருமாறேள்சிவப்புறவே. (சுக)

விடும்பல்லவம்புயமீதுறவிதற்பன்றிருமகன்றன்
கொடுவெங்கணையமர்தூணிவில்லிரதங்குறகதமும்
மடியும்படிகவசத்தொடுமணிமார்பமுமுருவச்
சுடர்வெங்கடும்பகழித்திரள்மதுசூதனன்சொரிந்தான். (௬௨)

திருமாலிறையரிகேசவன்சிலையால்விடுபகழி
வருமாமலையெனத்தன்னுடல்நுழைந்தோடிடமாரன்
விரிவாயெழுங்குருதிப்புனல்நிலன்வீழ்ந்திடமெலிவோ
டுருளாரழிந்திடுதேர்மிசையயர்ந்தானுருக்குமமன். (௬௩)

அயர்வோடழிதேர்மேல்விழுமரசாமுருக்குமனுக்
குயிர்போகிலதுய்வானிவனுயர்மாமலர்த்திருவே
துயர்நீயினியொழிவாயெனமொழிந்தான்சுரர்துதிப்ப
வெயிலோனெனவொளிருமணியிரதந்தனைவிடுத்தான். (௬௪)

கடலிற்கடுங்காலிற்சுழியும்மாமரக்கலம்போற்
படியிற்றிகழ்வுறுதாருகன்பரிகோல்கொடுகொளுவு
முடுகக்கொடியுயரத்தனிமுதலோனவர்முன்பால்
வடிவத்தொளிர்பலபத்திரவரராமனும்வந்தான். (௬௫)

பரியேறெனவரவேயுயர்பகடெங்கணுந்நிறையத்
திரளாயுருளிரதஞ்செகதலமீதினிற்றிகழ
வரியாமெனவருபூால்வணணலைவேலையினமருங்
கருணாகரன்கமலாசினியுடன்போனதுகண்டான். (௬௬)

மின்னேடுயர்தேர்மீதினில்விடையோனிடர்கடியும்
பின்னேன்வருமெழில்கண்டனனுவகைக்கடல்பெருகு
முன்னேன்றிகழ்பலபத்திரராமன்முகிணகையான்
றன்னுவலினிரதத்திடையடைந்தானுயர்தவத்தோன். (௬௭)

பலபத்திரராமனெனுமுன்னேன்வரப்பரம
னலர்மத்தியகமலத்திணையடிவீழ்ந்திடவவனு
மலையொத்துபர்புயவீரனையணைத்தான்மலர்மகளாஞ்
சிலையொத்தமர்நுதலாடொழுமகிழ்ந்தான்றிருவுளத்தே. (௬௮)

தேருங்கரிநிரையுந்திரள்பரியுஞ்சிலைவீரர்
பாரும்வெளியிலதாயவர்ப்படைமன்னர்கடொழவே
காருந்தியகலுழக்கொடியெழுமாளையின்கலசத்
தோர்கொண்பணைமுலைபாலொடுமினிதேகிடுமெல்லை. (௬௯)

வேறு. ஆறுபோல்வளைத்துறுசெங்கரை
யூறுமார்பனுருக்குமனேர்நொடி
மாறுபோதிற்றெழுந்துமடங்கல்போற்
சீறினன்கண்ணன்சென்றனனுமென. (௭௦)

சுற்றும்பார்த்துச்சுசியுறுகண்ணினான்
பெற்றமேய்த்தவன்பெய்வளைதன்னொடு
மற்றம்பார்த்தகன்முனவன்றன்னையா
னெற்றுவேனெனப்பின்றொடர்ந்தேகினான். (௭௧)

இரிந்தசேனையையஞ்சலீரென்றுரைத்
தெரிந்தநேத்திரன்றேரினினேறினான்
றெரிந்தவார்சிலையேந்தினன்றிக்கெலாம்
விரிந்தமாக்கடல்போலவெருண்டுளான். (௭௨)

மின்னிமேனொடியரியாதவன்விஞ்சுதேர்
தன்னிலேகுவமுன்னந்தடுப்பனென்
றுன்னுபோதின்முன்னுற்றனவெம்படைச்
சின்னமூதிடச்சேனைகளார்க்கவே. (௭௩)

பிடித்தவெஞ்சிலையன்பிறழ்வன்னியன்
கடித்தபல்லினன்காய்கனற்கண்ணினன்
வெடித்தசொல்லினன்யாதவமீளெனத்
தடுத்தனன்கமலத்தடங்கண்ணவன். (௭௪)

இகல்புரிந்தங்குருக்குமனேகலு
மிகமுனிந்துயர்விற்கரத்தேந்தியே
மகதனுந்தந்தவக்கிரமன்னனுந்
தகுதியிற்சிசுபாலனுந்தாக்கினார். (௭௫)

தோலினம்பரிதேர்பிணைசூழ்ந்திடச்
சாலுவனடர்த்தானழற்கண்ணுடைக்
காலனஞ்சிடவேகதமிக்கிடுஞ்
சீலமில்லப்பவுண்டரன்சென்றனன். (௭௬)

உருக்குமன்னமர்மீளவுடன்றன
னெருக்குதாற்பரிகேள்கயத்தேரிற
முருக்குவனெனமூவுலகங்களும்
வெருக்கொளும்படிமேயினன்பால்வண்ணன். (௭௭)

அலாயுதத்தனடர்ந்தெழும்வேலையி
னிலாவுதிக்கும்நெடுங்கடலாமெனப்
புலாலளைத்தனையிற்பொடியாகவே
மெலாருமென்றுநற்றேர்கொடெதிர்த்தனர். (௭௮)

கோதில்யாதவர்கோனனிகம்நிறைந்
தோதவேலையொலியெனவார்த்தனர்
தீதினால்முயல்மன்னவன்சேனையு
மோதுமாபரித்தேருடன்மூண்டனன். (௭௯)

அதிர்ந்தபாரமிர்தாசனரஞ்சிட
வுதிர்ந்துவீழுமுடிக்களுமேற்றிடப்
பிதிர்ந்துமால்வரைவீழப்பெருங்கட
லெதிர்ந்தபோலனிகமெழுந்தார்த்தன. (அ0)

கரிகளோடுகரிகளுங்காதின
பரிகளோடுபரிகளும்பாய்ந்தன
வுருளுதேரொடுதேரினமுற்றன
வரிகொள்வீரரும்வீரருமார்த்தனர். (அக)

எதிருமாரதரொண்ணிலரெங்கணுங்
கதிர்கொள்வேல்மழுக்கன்னகங்காலவே
லதிரவீசிமுடித்தலையற்றன
ருதிரமாரிதரையினிறோடவே. (அஉ)

கதையினாலடர்வாருறுகாலன்போ
லெதிருவாரொளிர்வாளினரெங்கணுங்
குதிகொள்வார்கரிகொன்றிடக்குன்றுபோற்
சிதைகுவாருயிர்சாதகர்சேற்கவே. (அ௩)

சிலையறக்கொடிதானறத்தேரற
மலையெனக்கதிர்வாளொடுமாகரி
தலையறத்துணிசெய்தெதிர்தாக்குவா
ரலையுறப்பொருமார்கலியென்னவே. (அச)

எரிவிரித்துருடேரினெதிர்ந்துளார்
பரிபடச்சிலைநாணறப்பாகர்தன்
சிரமறக்கணைமாரிகள்சிந்துவா
ரரியெனத்தரைமீதிழிந்தாற்பரால். (அரு)

இருளுமாகரிவீரர்களெங்கணும்
வருவராலிடமும்வலமுமுறப்
பொருவர்வாளிபொழிந்துபுவியின்மே
லுருளுவார்படியின்னுதிர்முகம். (அசு)

ஆடகங்கொள்வரையெனவார்த்தெதிர்
கேடகங்கதிர்வாள்கிட்டவெட்டியே
வீடகங்கணமின்னவரம்பையர்
சூடகங்கடலங்கவளைத்தனர். (அஎ)

கற்றகற்றபடைகொடுகையினா
லெற்றியுற்றிருவோருமிறந்துற
வெற்றிமுற்றினரென்றுவிண்மாதரார்
பற்றிநற்றியணைத்துப்பரிந்தனர். (அஅ)

உருண்டதேர்கள்பரியுமுருண்டன
வுருண்டமாகரிகோட்டுதிர்முத்தின
முருண்டவீரர்முடிகளுவரியி
னுருண்டுவீழ்ந்தனவோடினசெம்புனல். (௮௯)

தவந்தனாலுயர்வாளினர்தாக்கிமெய்
சிவந்தசோரிவிளவுயிர்சேரவிண்
ணுவந்தகாரியருற்றனைத்தார்படி
கவந்தமாடினகூளிகளிக்கவே. (௯௦)

மூவராகிமுளைத்தெழுமூர்த்தியோ
னேவலேவருவீரர்களியாவரும்
பாவகாரிவருதிணிபாரிடத்
தேவர்தானவர்போரெனச்செய்தனர். (௯௧)

எதிர்ந்துமெய்துமெழுமழுத்தண்டுகொண்
டறைந்துமெண்ணிலராடவரார்த்திடத்
தறிந்துவெங்கரிமாவுடன்சாய்த்திட
முறிந்துருக்குமன்முன்னருமோடினர். (௯௨)

குஞ்சரங்கள்மறிந்திடவேகுலைந்
தஞ்சிமன்னர்களோடியலைவுற
வஞ்சநெஞ்சனுருக்குமனுமனம்
வெஞ்சரங்கொடுவந்துவிலக்கினன். (௯௩)

பேரிமாமுரசம்விண்பிளந்திடு
மாரவாரமடைந்தரவார்கலி
நீரெலாந்துகளாகநிலநெய்தூந்
தேரின்மேல்வருஞ்சியமும்போலுவான். (௯௪)

பூணிறைந்துபொலிந்திடுமார்பினான்
சேணிறைந்துயர்தேவர்திடுக்கிட
ஆணிறைந்தவுயிர்களுமுட்கிட
நாணெறிந்துலகெங்கும்நடுக்கினார். (௯௫)

யாதவப்பெருஞ்சேனைகளெங்கணும்
பீதியுற்றுநிலைத்திறப்பெயர்ந்திட
வேதனுமனமுட்கிடவெண்சங்க
மூதினனுலகங்கடுலங்கவே. (௯௬)

தெரிந்தனன்சிலையிற்கணைதிக்கெலாஞ்
சொரிந்தனனிமையோர்களுக்குற
வெரிந்திறந்தனயானைகடேர்பரி
முரிந்துமன்னர்களோடினர்முந்தியே. (௯௭)

துமிந்ததேர்கரிவீரர்கள்சேரவே
நிமிர்ந்தவாளியுதிர்த்தனிகத்துள
மமிழ்ந்து கூளிகடள்ளிதம்மார்பினிற்
றிமிர்ந்தமூளைகளெங்குஞ்சிதறவே. (௯௮)

ஆனைபட்டனதேர்நிரையற்றன
வீனமிற்பரிவீரர்களியாவரு
மூனுமற்றெனரோடியசெம்புனல்
மீனுடைக்கடல்வீழ்ந்தலைவீசிய. (௯௯)

உருக்குமன்சிரமொன்றனலாமென
நெருக்கிவெம்பரித்தேர்நிரைநீள்சயம்
வருக்கமுமறவந்தெதிர்வீரர்கள்
செருக்கறச்சிரந்தானறத்தீய்க்குமால். (௧௦௦)

ஆலமாமெனவாரழலாமெனக்
காலனுமெனக்காந்துமுருக்குமன்
சூலிமார்புரஞ்சுட்டனசெய்கைபோற்
கோலயாதவன்சேனையைக்கொன்றனன். (௧௦௧)

குண்டினுபுரிக்கோன்செய்தவீரியங்
கண்டுசேதிபன்றன்னுடன்மாகதன்
மண்டலீகரெண்சாலுவமன்னவன்
கொண்டல்போற்கொலைவாளிகுனித்தனர். (௧௦௨)

வீரனானவிதர்ப்பன்றிருமகன்
கோரமானகொடுங்கணையேவவே
சூரரானவர்அஞ்சினர்மற்றுளோர்
பாரினோடினர்பால்வண்ணன்காணவே. (௧௦௩)

உவப்பின்மொய்ம்படையாருயிரும்பரின்
றலைப்படைக்கணைசார்வுறக்கண்டன
னலைப்படுந்திருப்பாற்கடலாம்வண்ணன்
கலப்பைகொண்டெழுந்தான்கதிரஞ்சவே. (௧௦௪)

விதற்பராசன்படைத்தலைவீரர்கள்
பதைப்பநீடுபகடிறத்தேவர்க
ளுதிப்பவாரிதுப்பாகச்செஞ்சோரிவீழ்ந்
ததைப்பநீளலத்தின்னடித்தானரோ. (௧௦௫)

வேறு. பிளந்தனதகர்ந்தனபெருங்கைமதவேழம்
உலைந்தவிவுளித்திரள்களென்புமொடியுற்றே
யலைந்தனர்கள்மன்னர்துடைகாலரைகளற்று
வளர்ந்தனபிணக்குவைகள்மால்வரைகள்மான. (௧௦௬)

முறிந்தனதகர்ந்தனமுரண்டருமணித்தேர்
மறிந்தனபுரண்டனமதக்கரிகள்கைகா
லறிந்தனருருண்டனர்சகத்தலைவர்க்கி
யறிந்தவனலங்கையினெடுத்தனையவம்மா. (௧0௭)

வில்லினர்கள்வாளினர்கள்வேலினர்கள்வீர
மொல்லையிவர்தாள்கள்கரமென்புகவொடிந்தார்
பல்லொடியவாசிகள்பதைத்தபகடிற்ற
மல்லினுயர்தோளினன்வலங்கொடலமோத. (௧0௮)

பரித்திரள்படைத்தலைவர்தேர்கள்பழுதற்ற
கரித்திரள்பதைத்திடவலங்கொடுகணைத்தி
ணெரித்தனனுடற்குருதிசோர்கள்வரவேல்கொண்
டரித்தனனிலத்திடையுருக்குமனுமஞ்ச. (௧0௯)

கோடொடியுமாகரிகள்வாசிகள்குலைந்தே
விடவடிவேலினர்மடிந்திடவெகுண்டு
சாடினனலாயுதமெடுத்தனையவன்பா
ரோடியதுமானதியெனக்குருதியுற்றே. (௧௧0)

பிடித்துநிலனெற்றுவமெனச்சிலைபிதற்றி
யடர்த்தவர்வெருக்கொளவலங்கொடுசுழற்ற
புடைத்தனனெரித்தனனுடற்குருதிபொங்கப்
படுத்தனனெருக்கியபடைத்தலைவர்பம்ம. (௧௧௧)

பக்கமெதிர்மண்டியபடைத்தலைவர்பாரி
னுக்கிடவலாயுதனடித்தனனுருத்தே
மிக்கவர்களோடினர்கள்வாய்குருதிவீழக்
கக்குவர்கள்பாருழகலப்பைநெறிகாணின். (௧௧௨)

மண்டனில்மடிந்துமதமாவினர்கள்வீழக்
கண்டுமகதன்கொடியகாலனும்நடுங்கக்
கொண்டல்கள்முழங்குவதெனக்குரல்வெடிப்பத்
தண்டுகொடடர்ப்பவெதிர்தாக்கினனலத்தான். (௧௧௩)

வாரியயமற்றிடவிளித்துமலைபோலே
பாரதிரவெண்டிசைசுமந்துபசடஞ்சச்
சாரிகைதிரிந்தனர்தடித்தனரடித்தா
ராரிவனையொக்குமவரென்றமரராட (௧௧௪)

உரனுடையபால்வணனுருச்சிமகதன்றண்
டுருபிளவதாகவலமேகொடெதிர்மோதி
வளாயினிடிவீழ்வதெனமார்பிடையடிப்பத்
தரையுறவிழுந்துபினரோடிமெய்தளர்ந்தான். (௧௧௫)

சேதிபனடர்ந்துவைசிலீமுகம்விடுத்தே
மாதிரமறைப்பமதிமன்னனுமலத்தா
லேதலர்நடுங்கவிரதந்துகளதாக
மோதுதலுமோடினன்முராரிநகையெய்த. (௧௧௬)

விக்கிரமமிக்கவிடையோனெனவடர்ப்ப
வக்கிரன்மணிக்கதைதொடற்றவமர்சாஞ்சிற்
கைக்கயிலையொத்தகடவுட்கடுகடுப்ப
வுக்கிரபலப்பெயரோனிந்தவனிடைந்தான். (௧௧௭)

காலனெனவான்மறையவெங்கணைசொரிந்தே
சாலுவனடர்க்கவொளிர்சங்குநிறவண்ணன்
சிலமில்தேரினையலங்கொடுசிதைப்ப
ஞாலமிசையோடினனகைத்தனர்கள்வானோர். (௧௧௮)

காலன்விழுமார்பினுறைதகாவலர்வரத்தால்
மாலுருவமாகியபவுண்டரன்மணித்தண்
டாலமர்துடங்கலுமலாயுதனடிப்பக்
கோலமுடிபாரின்விழவோடிமெய்குலைந்தான். (௧௧௯)

அடர்ந்தமகதன்முதலினோர்கள்மிகவஞ்சித்
துடர்ந்தெழுமலாயுதனடிக்கமெய்சுருண்டு
மடைந்தகடல்மீனெனவுழன்றனர்கலங்கி
யுடைந்தவர்களோடிடவுருக்குமனுருத்தான். (௧௨௦)

வெஞ்சிலையினொலிவிசும்பினுறுவிண்ணோ
ரஞ்சவெதிர்முந்திவருமாலவிடமென்ன
விஞ்சுநெடுவாளிமழையெங்கணும்விடுத்தே
வஞ்சகனுமூதினன்வலம்புரியைமாதோ. (௧௨௧)

குண்டினபுரத்திறைவன்விட்டகொடுவாளி
யெண்டிசையுறக்கனல்மடுத்தெதிரவார்த்தான்
கண்டபர்கலப்பைகைசுழற்றிவருகாளை
யண்டர்கடுத்திடமுறிந்தவவையெல்லாம் (௧௨௨)

விட்டகணையற்றிடவெகுண்டிடுவிதற்ப
னெட்டதிசைமுற்றுலகியாவையுமடங்கச்
சுட்டனனெனக்கனலவன்படைதொடுத்தான்
சிட்டனுமலப்படையெடுத்தவைசிதைத்தான். (௧௨௩)

வெம்பினன்விதர்ப்பனருள்வீரனும்வெகுண்டே
யம்பரநிறைத்திடவையாசகம்விடுத்தா
னம்பனிடனாக்கழியும்நாரணன்முன்னோனு
மும்பர்கள்மதித்திடுகலப்பைகொடுதிர்த்தான். (௧௨௪)

எழுந்தமுகில்போற்சரமிராமன்மெய்யழுந்தப்
பொழிந்தனனுருக்குமன்விழிக்கனல்கள்பொங்க
வழுந்தருளுமுன்னிரதமாவினொடுபாக
னழிந்திடவலங்கொடுடைந்துறவடித்தான். (௧௨௫)

அதிர்த்தெழுமலாயுதனடிக்கவழிதேரோன்
குதித்தனனிலத்தினிடைகுண்டினபுரிக்கோன்
பதைத்தெழுமனத்துயரின்பால்வனார்தம்மேலே
யெதிர்த்தனன்மணிக்கதையெடுத்தெரியுநெஞ்சன். (௧௨௬)

முட்டினன்விதற்பனருள்மைந்தன்முனிவெய்திக்
கிட்டினனலத்தொடுகிளர்த்தினனிராம
னட்டமொடுசுற்றினரடித்தனர்களார்த்தே
கட்டினரிடிப்படமுழங்கினர்கலங்கார். (௧௨௭)

உருமெனவடித்திடுவரோடிடுவர்விண்ணோர்
வெருவுறவதிர்த்தவனிமீதுபலசாரி
திரிவருகுட்கிடவிழித்திடுவர்செத்திப்
பெருகிடவடர்ப்பருயர்பின்னுகனுமஞ்ச. (௧௨௮)

ஆர்த்தனர்கலப்பையுயர்தண்டுகொடறைந்தே
கார்த்தனருறுக்கினர்கள்கண்களெரிகாலப்
பார்த்தனர்நகைத்தனர்படிக்குளவரெல்லாம்
வேர்த்தனர்திசைக்கணுறுவேழமுமழிந்த. (௧௨௯)

அதிர்ந்துசெகமுற்றவுமலைந்திடவடர்ந்தங்
கெதிர்ந்துழுவலாக்கிறையலங்கொடிறவெற்றச்
சதைந்தொருநொடிக்குமுனமேதரணிதானுற்
றுதிர்ந்தனவுருக்குமனடற்கதையொடிந்து. (௧௩0)

திருக்கறுபனைக்கொடியர்சீரியுயர்தண்டை
முருக்கலுமுருத்தெதிர்முளைத்துகணெரிந்த
வுருக்குமனையுற்றிருகைபற்றியுயிரோய
நெருக்கினனுடற்குருதிவாயினிறைப்ப. (௧௩௧)

பிடித்திருகையைக்கொடுபெருத்தகல்மார்பி
னடித்தனனழற்பொறிகள்சிந்திடவலத்தோன்
படித்தலமெதிர்த்தொனிகள்பாதமுறவம்பொன்
முடித்தலைதனைத்திருகவேமுபதும்வேலை. (௧௩௨)

கண்டனனுருக்குமணிகண்கள்புனல்சோர
மண்டனிலுருக்குமன்மடிந்திடுமனத்தான்
னண்டர்கடுதிக்குமுயரச்சுதனடிக்கீழ்
குண்டினபுரிக்கொடிபணிந்துசிலகூறும். (௧௩௩)

மன்னன்வசுதேவனருள்மைந்தவருளென்றன்
முன்னவன்மடிந்திடுதல்முன்னர்முடிக்கப்போய்
மின்னியவலங்கொடியர்வீரனைவிலக்கென்
றன்னமிகுதுன்பமோடலைந்திவையறைந்தாள். (கஅச)

சஞ்சமலரிற்றிருவினுள்கயல்கொள்கண்ணி
கிஞ்சுகவிதட்கிளரும்வாயின்மொழிகேளா
வஞ்சனிறத்தரியலாயுதமெடுத்து
விஞ்சியவரைப்புயனைமேவியிவைசொல்வான். (கஅரு)

மாலவனும்நான்முகனுவாசவனும்வேலை
ஆலருகர்வாரெனினுநின்னொடமராற்றார்
சீலமெயிலாதவனையோமுனிதிதேவர்
தாலமுறுகேதனவெனவுலாதடர்ந்தான். (கஅசு)

சிங்கமிகலன்றனொடுசிறியிடலாமோ
யங்கமுறநின்னடிபடிந்துபழியெய்து
மிங்கிவனையுய்யவருளென்றனொடுமாயோன்
சங்குசிறவண்ணனடிதாழ்ந்திவையுரைத்தான். (கஅஎ)

வேலைதனில்மேவியமர்வித்தகன்விளம்பத்
தாலமுறுகேதனன்விடுத்தரணிமீதின்
சீலமறியாதுமுபறியவனுமோடச்
சாலநகையாவிபுதர்தண்மலர்சொரிந்தார். (கஅஅ)

வேறு. படியிலேபலபத்திரராமன்கை
யடியிலேவிழுந்தோடியவாண்ணமயில்
கொடியன்மானமுறச்சினங்கொண்டன
னுடியினீள்கொடித்தேர்தனிலுற்றனன். (கஅகூ)

ஏகலாதுநில்லென்றிரதத்தின்மேற்
பாகன்மேலிலங்கும்பரிதன்னின்மேல்
வேகவாளிநிறைந்திடவீசினு
னாகமேலமர்வானுநகைத்தனன். (ககூ0)

எய்தவக்கணையாவுமெரிந்திடக்
கொய்துருக்குமன்றன்கொடித்தேர்விழக்
கையினிற்சிலையுங்கண்டமாயுக
மையுறுமெய்யரிக்கணையேவினான். (ககூக)

புட்கொடித்திறலோன்கணைபொற்கமண்
ணுட்கிடப்பரித்தேர்வில்லுதிர்வுற
வெட்கமில்லவுருக்குமன்மீளவுங்
கட்கமுற்றகரத்தொடுசென்றனன். (ககூஉ)

தேரிழந்துசிலையுமிழந்தவன்
பாரிழந்தொளிர்நாந்தகம்பற்றிவா
னூரழிந்தெனமொலியுற்றிட
நீரழுந்தநெருப்பெனநின்றனன். (கசங)

அதிரமான்றலைவேலையினுலம்போ
லெதிரும்வீரவுருக்குமனைகொண்டெழுங்
கதிர்கொள்வாள்கரமீதினிற்கண்டமுற்
றதிரநீள்கணையேவினனுத்தமன். (கசச)

ஒல்லையிற்கதிர்வாளறவூற்றமு
மெல்லையிறகொடியோனிமைப்போதினின்
மல்லுறப்பொருவேனெனமாதவன்
செல்லுறற்கொடித்தேரினிற்பாய்ந்தனன். (கசரு)

தேரினின்றொளிர்சீதரன்மேனியை
யாரவாங்கிருகையினழுந்திட
வீரமில்மன்றநூவலுமியாதவ
வீரனன்றுகொலென்றுவிளம்பினன் (கசசு)

முட்டியாலமர்செய்துமுனிந்துதேர்த்
தட்டினேறிமெய்தன்னைத்தழுவிய
துட்டனனவுருக்குமன்சோர்வுறக்
கட்டினனிருகையினைக்கார்வணன். (கசஎ)

தேரின்காலுறக்கையிரண்டுஞ்சிறு
வாரினல்விசித்தேவிதர்ப்பனமகன்
சோரவீரமழித்துத்துளவணித்
தாரினானகைத்தான்றையல்நாணவே. (கசஅ)

இலருவால்வலையாழிகொண்டேந்துவா
னலகுவாளிகொடேசிகையைந்துற
வுலகுளோர்நகைசெய்யவுருக்குமன்
றலையையோர்நொடியிற்சிறைப்பித்தனன். (கசகூ)

வில்லின்மல்லினின்வீசியவல்லனென்
றெல்லையில்மொழிகூறியனைவென்று
மெல்லியாடனைமீட்குவனென்றுமுன்
சொல்லிநின்றசொல்நின்றிலசூழ்ந்தவால். (கருo)

இன்னவாசகமோதியயாதவன்
மின்னுவாள்விழியாய்விதர்ப்பனரு
ளன்னமேயுன்றன்முன்னவனுண்மையை
யுன்னுவாயென்றுரைத்துநகைத்தனன். (கருக)

பங்கம்விஞ்சவுருக்குமன்பார்மிசை
தங்கைகாணத்தலைசிகையைத்துறச்
சங்கமார்வணன்கண்டுதன்றம்பியாஞ்
செங்கண்மாலினைச்சேர்ந்திவைசெப்புவான். (௧௱௨)

பணங்கொள்மாசுணப்பாயலுளான்றனை
யணங்கினோடுயராகவறநெறி
யிணங்கலாதநவையினைத்தாயெனப்
பிணங்கினாலணங்கைக்கொள்பெருமையான் (௧௱௩)

கயிறுகொண்டுகைகட்டியதன்றிக்கம்
மயிரெலாமறப்பல்சிகைவைத்துநின்
னுயிரநாள்முனுகித்தவனாமெனுஞ்
செயலெனாய்ப்பிழைசெய்தனைநீயென்றான். (௧௱௪)

துட்டனாகினுந்துன்மதியாகினுங்
கட்டனாகினுங்கற்புடைத்தேவியாம்
வட்டமாமதியானனமங்கைக்காய்
விட்டுமாநகர்மேவுதல்நன்றென்றார் (௧௱௫)

பாசந்தானறுத்தான்பலதேவனு
மீசந்தியையெண்ணியசிந்தையான்
வாசமாமலர்மங்கைமுன்னோன்றனை
யாசுளான்மதியென்றுமகற்றென்றான். (௧௱௬)

தோகைசுந்தரிமுன்வருந்தோன்றலை
நாகமீதமர்வானைகையோடிகழ்
வாகவேசிலையுஞ்சிகையைந்தொழித்
தேசமாஞ்சிகையாக்கியியம்புவான். (௧௱௭)

சங்குசக்கரன்றானுடையான்செய்த
பங்கமெண்ணலைபங்கயமங்கைநின்
றங்கைகொண்கன்றன்னென்றுந்தவிர்ந்திடா
துங்கமாநகர்போயுறுவாயென்றான் (௧௱௮)

நாணமேநிறைநெஞ்சினனல்விரற்
கோணவேகுண்டினாபுரிசென்றிலன்
காணலான்பரிதேர்கரியாவையும்
பூணலான்கலன்பொன்முடிதாமென. (௧௱௯)

சக்கராதிபனென்றிடுந்தோறுந்தான்
கக்குவானுதிரந்தனைக்கண்டவர்
நக்குவாரெனநாணியக்கானிடை
புக்குளாலுயர்போசகடன்னகர். (௧௧௦)

சாணகந்தனிப்போசகடன்னக
ரானவில்லினில்வீரமுமஃகியே
தானிகழ்ந்திங்கறையுஞ்சபதத்தி
னூனிழந்தவுருக்குமனுற்றனன். (கக௬க)

உருக்குமனுடைந்தோடியவாறெலாம்
பெருக்கவிங்குரைசெய்தனம்பெயுயிர்
நெருக்கிவெம்முலைநீரோடயிலுவான்
றிருக்கொளும்புயன்செய்கையைச்செப்புவாம். (கக௬உ)

(உருக்குமனபசெயப்படலம் முற்றும். ஆ திருவிருத்தம் சருஅஎ.)

எஅ-வது. துவாரகாவதிப்படலம்.

தீவினையகலவைம்புலன்கள்செற்றுமெய்
நாவினிலரிகமோகாரணுவென்றே
யாவுயயவரையெடுத்தாளுக்காட்செய்வார்
சேவடியிணையிணைச்சென்னிசேர்த்துவாம். (க)

வேறு. உருக்குமனுடைந்தோடலுமும்பரோடயனும்
நெருக்கிவந்துயர்விசும்பிடைநிறைமலர்பொழிய
வரக்கர்துன்னவன்றிலங்கையாளறனிலான்
வரத்தின்செருக்கவிந்திடச்சிறிதேன்றிரூவொடுஞ்சென்றான். (உ)

உறைந்தபேரிகைமுரசுகளமலையார்கலிபோ
னிறைந்தமாபரித்தேர்களுங்கரிகளுநெருங்கி
யுறைந்தபாரினுண்டுகளெழவொலிகடறிடராய்
மறைந்தமாதிரமாயவன்றேர்மிசைவந்தான். (௩)

வளைகள்சேர்ந்திடுசவரர்தம்மகளிளைமருவு
மிரலைகிடங்கண்டரவம்வல்லியமெண்கு
வருடையாவிதமயிடம்வெஞ்சினமுறும்யாளி
திரியுங்கானிடைச்சேர்த்துமாதிருவுடன்மொழிவான். (௪)

வேறு. விழுமியபணிகளீன்றுதவவேரிலன்
கெழுமணியினங்களினொளிகிளர்ந்திடத்
தழலெனவெருவிமண்டாடியேகுதித்
துழையினமோடுவகாண்டியொண்கொடி. (ரு)

குஞ்சுகளுடனுணாதுகோதியே
யஞ்சுகமுக்கழலடைந்ததாமெனக்
கிஞ்சுகமலரனலென்றுகிட்டிலா
தஞ்சியபறவைகள்காண்டியன்னமே. (௬)

விதமுறுகூட்டினுள்மேவித்தானிடு
மிதமுறமுட்டைகீழ்வீழ்ந்ததென்னநீள்
வெதிரினம்வெடித்திடவிளங்குமுத்தினைக்
கதுமெனக்கவ்வுபுள்ளினங்கள்காண்டியால். (௭)

பொடிச்சுடுசுடத்தினிற்பொருந்திவள்ளியி
னடிச்சுவடுறக்கதமாப்பில்கலலிபங்
கெடுத்துயர்வரைமுழையிருலைநீக்கியே
கொடிச்சியர்பிரசம்வாய்கொளுவகாண்டிமின். (௮)

ஆழியினெழுந்தயருணன்சோல்கொள
வாழியொன்றுடையதேரருக்கனஞ்சிட
வேழமன்றுரித்தருள்விமலன்மேனிபோல்
வேழமொன்றெரித்திடுங்கனலைக்காண்டிமின். (௯)

சினமுறுபணிபணைநிழலிற்சென்றிட
வினமுறுகருப்பைகளிரலையீட்டங்கள்
முனிவறவல்லியநிழலில்முந்திடக்
கனலராசாளும்வெம்பாலைக்காண்டியால் (௰)

வேறு.

அருணமெய்யிடையமர்ந்தவெண்புள்ளிகணிலங்கு
மருணமவரைமிசையினின்றுள்ளியதலன்றே
ரருணன்பூந்தேவிடும்பரியுடனடரழகை
யருளுவந்தெழும்விழியுடையனங்குங்காண்டி. (௧௧)

வேலையினையமுகந்துயர்விசும்பிடையெழுந்தே
சூலுறைந்துநீர்சொரிந்திடத்திசைதொறுந்தோன்றிப்
பாலைவெம்மையாற்பயமுறப்பபோதரம்வெளுத்துச்
சீலமில்லவன்கொடையெனத்தேய்ந்தனபாராய். (௧௨)

ஈனமல்கியவுலோபியர்விபவத்தையெண்ணி
மாநிலந்தனில்வறியர்போய்ப்பெறுதலவனைபோற்
கானறண்புனலென்றுசேர்விலங்குநீர்காணா
ஆனுலர்ந்திடவுழல்வனவொண்கொடிபாராய். (௧௩)

இன்னவாறெலாந்திருவிருக்கியம்பியேயிறைவன்
றன்னிலேவினமிடைந்திடவதின்வயிற்றோன்றும்
வன்னிவாருறக்கொழுந்துவிட்டெரியுமாவனத்தை
மின்னுநேமியனிரதமேல்விறைவினிற்கடந்தான். (௧௪)

கன்னருலழுபாசினிதந்தராக்கீர்சதலி
செந்நெல்சேர்வயற்சிறந்திடுநாடுகள்சேர்ந்தே
மின்னுநேமியன்மகிழ்வுடன்விதர்ப்பர்கோன்மகளாம்
அன்னமேயினவகாண்குவாயெனமொழியறைவான். (௧௫)

ஆனிறைந்தெழச்சொரிந்தநற்பாலுடனளாவித்
தேனிறைந்தபோற்றித்திக்குமதரமெய்த்திருவே
பூனிறைந்துவான்புயல்களுந்தவழுறப்பொருந்துங்
கானிறைந்துநீள்கருங்கடல்பொருவினகாணாய். (௧௬)

அன்னமென்னடையடியினையரவிந்தமுகில்சேர்
மின்னெனுமிடைகவினுறவிளங்கியதிருவின்
முன்னவனமர்தொலைந்துதன்முடியிறக்கியபோற்
சென்னெறுன்னியகதிரினம்வளைந்திடுஞ்செயல்பார். (௧௭)

வேலுமிர்ந்தபூவாழுமார்கலியெழுவிடமுஞ்
சேலுநாலுநீலோற்பலஞ்சேர்விலோசனையே
கோலமாகியதாலங்கள்சனத்தையுட்கொண்ட
போலவேயுயர்வளையொளிர்பூவினம்பாராய். (௧௮)

மும்மதத்தெழுங்கரியினன்கோடெனமுளைத்து
விம்முகற்பயோதரங்கவினுறமிளிர்திருவே
வெம்மையுற்றவர்கருமம்போல்மதுகரம்விரியுஞ்
செம்மலற்சுவையருந்தியோவினசெயல்பாராய். (௧௯)

கொங்கைபங்கயமுகையெனக்குவிந்தொளிகொள்ளுந்
திங்கள்வேழ்கிடுந்திருமுகமுடையசெந்திருவே
தங்கமாகியதமனியத்தகடிழைமணிபோ
லெங்குமாதளைக்கனிவிரிந்தெழுவனபாராய். (௨0)

நத்திறரங்கணிரையதாய்நற்பவளத்தின்
வைத்ததாமெனுந்தசனங்களிலங்கியமடந்தாய்
சுத்தசாத்திகசுருதிகளாவனபொருவ
மெத்தமாங்கனிகீர்கிளிவிரும்புதல்பாராய். (௨௧)

அலைகொள்வேலையினமருவானரக்கர்மேல்வளைக்குஞ்
சிலையிதாமெனப்பொலிந்தெழும்புருவநற்றிருவே
விலைகொள்மாதரார்செயலெனவிளங்கிடுமலர்கள்
பலவின்மீமதுநுகர்ந்துபோமறுபதம்பாராய். (௨௨)

சேகிலாதசாகரந்தனின்முகந்துசேணிறையு
மேகமாமெனவளர்ந்தவைம்பாலொளிர்மின்னே
மாகமாளுவானயனம்போற்றோகைகள்வயங்க
நாகமீதினின்மயூரங்கள்நடிப்பனபாராய். (௨௩)

சந்தநந்துமந்தாரமுந்தானமுந்தள்ளிக்
கந்தநன்மலரெறிந்துமந்தாகினிகடுப்ப
வந்துமுந்தியநதியினினெழுசுழிமானுன்
னுந்திகண்டிவில்லாதொளிந்தோடுவபாராய். (௨௪)

தேய்விலாமதியெனத்திகழானனத்திருவின்
றூயதாகியகழுத்தினிற்றோற்றனமெனவே
யோய்விலாதுதித்திலமுதிர்த்தோடியேபயத்தின்
மேயுநீள்வலம்புரியினம்வெருத்தனபாராய். (உ௫)

வல்லையாந்திருக்காதினிற்றோடுலைமானே
யொள்ளிதானநின்விழியெழிலொக்குமென்றுயர்ந்து
துள்ளியேசரிதூங்கலைமென்றுதான்வெள்கித்
தெள்ளிதானசேலயந்தனில்மூழ்கிடுஞ்செயல்பார். (உ௬)

வாருலாவியேசுனைநிறைமணிக்கலசம்போ
லாரமல்கியபயோதரமழகியதிருநல்
லூருவாமெழிலொக்கிலமென்றுகாட்டுயர்ந்த
காருலாவியகதலிகள்கவிழ்வனகாணாய். (உ௭)

வல்லநாவலர்மொழிந்திடமதியொன்றுமில்லாப்
புல்லியோர்வரமுன்புகலாதுபோற்பொலிவால்
அல்லிமாமலரிருந்துறையணமனாய்நின்வாய்ச்
சொல்லினுணியக்கருங்குயிறூங்குவகாணாய். (உ௮)

அந்தமாகியகேசயமெங்கணுமாடக்
கந்தநாண்மலர்க்கேசரங்காலங்கள்பாடச்
சந்துமாமதக்கோடரமொருவியேதாவு
மந்திமாங்கனிசிதறுவமடக்கொடிபாராய். (உ௯)

இன்னதாயவற்புதங்களையாதவர்பெருமான்
மின்னிறுடனக்கன்பினுல்விளம்பியேவிளங்குங்
கன்னலோங்கியநாடுகள்பற்பலகடந்து
மன்னிறைன்குடதிசையலைமலியும்வாரியினை. (௩0)

சங்கநாணியகழுத்தினடாமரைமலர்மேல்
மங்கையாமவடன்னெடுமண்மிசையிழிந்து
செங்ஙனகன்சேர்ந்தவனெனவின்பத்திரண்டு
பொங்கியேயுயர்ந்தாலெனவெதிர்ந்ததுபுணரி. (௩௧)

ஊழிகாலங்களனைத்திடையுரகன்மேற்றுயின்று
வாழுமாதவனிலமிசையிழிந்துமாமலரி
னேழையோடும்வந்தானெனவிருகரமெடுத்தே
யாழிதான்றொழுதாலெனவிசிரமசைந்த. (௩௨)

மூலையதாகியேமூவுலகினுக்குமெய்ம்மூர்த்தி
விலையவாயர்தம்மனைதொறுங்கடைதயிர்வெண்ணெ
யுலையுமாயனார்தேவியோடடைந்தனனகண்டு
வலைகளவீசியேவணங்குவபோல்வரும்வாரி. (௩௩)

இன்னதாகியகருங்கடற்கோடமர்ந்திலங்கும்
புன்னைகண்டலினிழலிடைநுளைச்சியர்பொருனர்
தன்னைநாடிமுன்னவர்தருங்கலவிதன்மனத்தி
லுன்னினார்முலையணிகலனுருகிநீராக. (௩௪)

கரந்தைகைதைபுன்னாகந்தன்னிழலிடையிருந்து
வருந்தியெங்கணுநுளைச்சியர்கூடலைவளைத்தே
யரந்தையெய்திநீள்கடலினைகம்பியிற்கொழுநர்
பிரிந்திடுந்தினமெண்ணியங்கழுதுபெய்துற்றார். (௩௫)

கடலைப்பார்த்துயர்கணவனைக்காண்கிலர்காம
னடரக்காத்திடுவகைசிறிதறிகிலாதயர்வார்
படிபைப்பார்த்திழைகூடலைப்பார்த்தபாவையர்க
ளிடையைப்பார்த்தவர்கொழுநரெய்திடவெதிர்ந்தணைத்தார்.

இன்னதாகியநுளைச்சியரிலங்குசிந்துவினை
யன்னமேயிவைகாணெனக்காட்டினனதனுட்
பொன்னாஞ்சிலார்மதிலுயர்துவராயின்பொலிவை
மின்னிறுமொளிங்கண்டனன்விபுதர்கள்பெருமான். (௩௭)

உருவையொன்றுறுந்தேரினன்சசியனொறுங்கும்
பிரளையந்தனினுவுயர்பெருவரைசிவணத்
திரளயங்கொளாதியற்றுவராபதிசிறப்பத்
தரளநன்மணிக்கோபுரமெழுந்தவான்றடவி. (௩௮)

அனந்தனூர்தியாம்பிரமனொடமரர்கள்பணியும்
மனந்தன்மாதவனரவிந்தமலர்மகளுடனே
யனந்தநீர்த்துயிலமர்ந்திடவாழியின்விளங்கும்
மனந்தனீளமணிமகுடமொத்தமர்ந்தகோபுரமே. (௩௯)

தழைத்தெழுந்துயரிந்துவைத்தன்முகவெழிலாற்
பழித்தமிற்றுடன்பரமனார்வரப்பசும்பொன்னா
லிழைத்தநன்மணித்தாளமோடிலங்குகோபுரங்கள்
விழித்துவெண்ணகைசெய்வனபோலவில்வீச. (௪0)

தருணமுண்டகமலரின்மேனிநறைத்தெழுந்தையல்
கருணையங்கடலெனவளரரியுடன்கலந்தே
யருணனுந்திதேரெனவருமிரதத்தினமர
வருணர்கையெடுத்தாடியதொத்தவான்கொடிகள். (௪௧)

மின்னனாளரிதன்னுடன்மேவினளெனவே
பன்னகாதிபனுடலினையளைந்துதன்படம்வான்
மினவோங்கியேவீரையின்விளங்கியவேலும்
பொன்னின்மாமதிற்கோபுரம்புகலுமாறெளிதோ. (௪௨)

விண்டலங்கலந்தெயிலுறமின்னுகோபுரங்கள்
மண்டபங்கள்சாமீகரம்வயங்குமாளிகைகள்
கொண்டல்மண்டியபொழில்நிறைக்கொற்றமாநகரை
யண்டருந்துதிசெய்துதாம்விரும்பியேயடைவார். (சங)

முனிவர்வாசவன்முண்டகமலருறைமுதல்வ
னினியனரியிருந்தருள்பதியிதாமென்று
நினைவரோதியேசித்தமுமடைகுவமொன்றுற்
றனியிலாநலத்துவரையினெழில்சொலற்கரிதே. (சச)

இன்னதாகியவேம்பலிற்றிலங்கியநகரைக்
கன்னலினெனுமொழியுடைக்கமலநாயகியா
மின்னனுப்துவராபதியிதுவெனவிளம்பி
மன்னினன்றிருவீதியின்மாதவர்பெருமான். (சரு)

ஏசிலாதுயர்விதர்ப்பர்கோனருளுயிர்த்திரையாங்
காசுலாவியமுலையினாளுடன்கருமுகிலாம்
வாசுதேவன்மாலிரதமேல்வந்தனன்காணு
மாசையாலெழுந்தணுகினரணிநகருள்ளோர். (சசு)

அந்தணாளர்களருந்தவமுனிவர்களரசர்
மைந்தர்வள்ளியோர்மதகரிதேர்கொடிவளைய
கந்தமாமலரளகவாணுதலியர்கடிதின்
வந்துமாதிருவெழிலினைக்கண்டனர்மகிழ்ந்தார். (சஎ)

ஆடினார்கள்மாமுனிவர்சனாதிகள்பகர்ந்தே
பாடினார்குழையுறுமியாழ்த்தெரிவையர்பலரு
மூடினார்மறையறைபவர்முடுகியசகட்டைச்
சாடினானுயர்தேரின்மேற்றிருவொடுஞ்சார. (சஅ)

விடவராவணைத்துயில்கொள்வான்விதர்ப்பர்கோன்மகளோ
டடையவாசுகியமுந்துறப்பிணித்தமந்தரத்தாற்
கடையவாரியினமிழ்தெனக்கண்டவானவர்போ
லுடலெலாங்களித்தேயெழுந்தாடினருவப்பால். (சகூ)

நீலமாமணிவித்துருமத்துடனிறைந்த
கோலமாமெனவிதர்ப்பர்கோன்குமரியோடிலங்கி
மாலினாரிரதத்தின்மேலருங்கவின்வருக்க
நூலெலாந்தரும்பிரமனாற்கரிதெனநுவல்வார். (ருo)

சித்தசன்விளையுறும்வடிவுடையசீதரனுக்
கொத்தசுந்தரியுருப்பிணியுவமைவேறில்லா
ளித்தலந்தனிலெய்திடயாமுனமிழைத்த
மெய்த்தவங்கடானேதெனமகிழ்ந்துளாவிரித்தார். (ருக)

உருவினுயர்கமலமீதமர்ந்தவொண்கொடியாந்
திருவினுள்மகளாகவுந்தேவகிகுமரன்
மருகனாகவுஞ்சிறந்திடுமன்னர்கோன்விதர்ப்பன்
பெருகுமாதவமளவிலாதென்றனர்பெரியோர். (ருஉ)

தவத்துளோர்விழைவுறமழைதடுத்துமால்வரையைக்
கவித்தகையர்பாற்றூதினைவிடுத்தறன்கடந்த
அவித்தசேதிபனமரிடையழிந்திடமகிழுஞ்
சிவத்தவாயினள்சமத்தியென்றுரைத்தனர்செகத்தோர். (ருங)

கனகமாமதிலிலங்கையான்கோன்சிரங்களைந்தே
சனகமாமகளுடன்றிருவயோத்தியிற்சாருந்
தினகரன்குலத்துதித்தவன்றிறலெனத்திருவோ
டனகனேய்தினன்றுவரைமாநகரிலென்றுரைப்பார். (ருச)

வேழமாகியகுவலயாபீடத்தைவீழ்த்துச்
சூழுமாரதர்விழக்கஞ்சனுடலினைத்துகைத்த
வாழியாயமிழ்தெய்தியவணங்கினோடமர்ந்தே
வாழிவாழியென்றுரைத்தெழுந்தாடினர்மறையோர். (ருரு)

ஆயுமாமலர்ப்பொழிந்தமுதாசனராடப்
பாயுமாவிரதந்தனில்வீழ்ந்துபார்நண்ணித்
தூயமாதவர்சுருதிகள்மொழிந்திடத்துலங்குங்
கோயில்மேவினன்குடமெடுத்தாடியகோமான். (ருகா)

எழுந்தமைம்முகிலாமெனவெய்தியேதருவின்
கொழுந்துபோன்றமின்னுடன்வசுதேவனைக்குறுகித்
தழைந்தவன்பினால்வணங்கலுந்தனையனைத்தழுவி
வழிந்தகண்ணினீர்மஞ்சனமாட்டினன்மகிழ்வால். (ருஎ)

தந்தைதன்றிருவடியினிலிறைஞ்சிச்சக்கரத்தோன்
விந்தைதன்னுடன்றேவகியடிமிசைவீழச்
சிந்தையிற்களிப்பெய்திடச்செம்மலைத்திருவை
வந்துமாமலர்க்கையினால்மார்புறவணைத்தாள். (ருஅ)

அணைத்துமோந்தனளச்சுதனுச்சியையமிழ்தி
னினைத்தபாவையைமகிழ்வினால்ருகணால்நோக்கிப்
பணைத்தவார்வமோடுறவணைத்தான்படிவிசும்பின்
குணத்தினுயர்மருகியாமென்றுளங்குளிர்ந்தே. (ருகூ)

கொற்றமிஞ்சியபுனிதனிந்திரையுடன்கூடிச்
சுற்றமின்புறரோகணியடிமிசைத்தொழலும்
பற்றிமைந்தனைத்தழீயினன்பங்கயமலரி
னுற்றமின்னினையணைத்தனள்பெருங்களிப்புறவே. (சுய)

இன்னதாகியமகிழ்வுறநங்கையோடிலங்கும்
மன்னைமார்கருநுழையுறுமரவிந்தமலரின்
மின்னோடேகிமால்மண்டபமதனில்வீற்றிருந்தான்
மன்னர்மாதவர்மறையவர்மகிழ்ந்தினிதிருப்பார். (௯௧)

உக்கிரசேனனக்குரூரன்மெய்யதனால்
வரிசைமிக்குயருத்தவன்மந்திரத்தலைவர்
இலைகொள்சிந்துவிற்றிகழுமாண்டரியுடன்றிருவைக்
கலைசெயற்கரியதாயதோர்களியுறக்கண்டார். (௯௨)

அகில்மாதரார்கருப்புரத்தீபங்களேந்த
வீசினார்மலரெங்கணும்விண்ணவர்மகிழ்வோ
டாகிகூறினாரந்தணரந்தவேலையின்வாய்
வாசுதேவனைத்தரும்வசுதேவனுமறைவான். (௯௩)

மாதவத்துயர்விதர்ப்பர்கோனருடிருமகளும்
யாதவக்குலக்குமரனுமெழில்மணமிசையத்
தீதகற்றிமுகூர்த்தஞ்சேர்வேலாவினிற்செப்பன்
றோதிடக்கற்கவுயர்தவமுனிவனங்குரைப்பான். (௯௪)

காலையாகியகருமுகிலனையகண்ணற்கு
வாழிசீர்விழிவனசமாமலர்தனின்வனிதை
கோலொலாஞ்சுபமாகவேகூடுவநன்றன்
காலையாமெனவுரைத்தனனவையறுதவத்தோன். (௯௫)

சுத்தமான்மறைகற்சமாமுனியிவைசொல்லச்
சித்தமார்வமுற்றிலங்கியதேவகிதனய
னத்தினபுரத்தருமற்றுமவன்கிளையோர்க்கு
மெத்துமாமணவோலைகொடுத்தலைவிடுத்தான். (௯௬)

மைந்தனைசித்திரனுக்கும்விதர்ப்பர்கோன்மகட்கும்
மந்தமாமணக்கோலமுநாளையேயதனால்
முந்தியேகுமினென்றுதான்மொழிந்துதூதுவரை
நந்தகோபற்குமசோதைக்குநலமுறவிடுத்தான். (௯௭)

மற்றுமேபலவளாகத்துமன்னவர்தமக்குஞ்
சுற்றமாகியகிளைஞர்க்குந்தூயவேதியர்க்குங்
கொற்றமாதவன்கோகனகத்தவள்கரத்தைப்
பற்றுநாளையென்றோலைகள்விடுத்தனன்பரிவால். (௯௮)

கீதமாமெனுமொழியொளிர்கெண்டையங்கண்ணித்
தீதிலாதசெம்மலர்த்திருச்சித்திரன்றனக்கு
நீதியாமணங்கூடிடவீரவென்றே
வேதமோதியவியாசற்காள்விடுத்திடும்வேலை. (௯௯)

வேறு. அரிவென்றுமிறையினைப்பிரிந்தவனியினிணையில்
நிருபராகியேநிகரிலாவுருப்பிணிதன்னை
மருவினானெனுமொழியினைவயங்கும்பாற்கடலிற்
றிருவினுக்குரைசெய்வபோற்றினகரன்மறைந்தான். (௭௦)

அருக்கநற்குடவார்கலியழுந்திடவரசர்
நெருக்கமைக்கணின்மடந்தையர்மருங்கெலாம்நிறையச்
செருக்குமுக்கிரசேனனுஞ்சேனையுஞ்சூழப்
பொருக்கெனக்கரிவேரினின்மேற்பொன்மனைபுகுந்தான். (௭௧)

அந்தியாதனுமுனிவர்களரசர்வேதியர்கள்
சந்தியாவையுமுடித்துழீஇத்தழைத்தெழுமியாமம்
வந்துமுந்தியேவளர்ந்ததுவானமீன்மல்க
விந்துவாரியினிலவொளிபரந்திடவெழுந்தான். (௭௨)

திங்கள்கங்குலிற்சிறந்திடத்திமிரமோவிடமால்
பொங்கும்வெங்கணைச்சம்பரசூதனன்பொழிய
வங்கதச்சுடர்மணியொளிரங்கதப்புயமா
லங்கநற்றிருவிரலால்மற்றவர்துயின்றார். (௭௩)

குண்டினபுரிமன்னருள்கோமளவல்லி
யண்டர்நாயகனுடன்றுவராபதியடைந்தும்
புண்டரீகநன்முகையெனும்பூண்முலையழுந்த
மண்டியேயணையாதமல்வரைவேயுரைப்பான். (௭௪)

வேறு. மதனேகொடியாய்மலர்வாளியினு
லிதனேசுடுநீயெனவேபொழிவாய்
சுதைபோலெழுமாமதிதன்சுடரோ
விதமாயழல்வாய்வினையேனுடல்மேல். (௭௫)

இருளோதுவிசாயகலோவெதிரா
மருளோவொளியாமனமேமறவா
பொருளார்மறையேபுகல்வாயமிழ்த
மருளார்துவராபதியேயடைவார். (௭௬)

விழியோதுயிலாவிடியாதிரவு
மொழியாகடலாரொலியொண்மதனார்
பழியேமுயல்வார்கணையேபரவு
மழையோமுகில்போல்வருவார்மருவார். (௭௭)

உகமாயிரகோடியின்மேலுறவே
பகைபோலிருளேவளையாய்பகராய்
செகம்வானுகர்வார்திருமாலுருகின்
னகமேபுகல்நீயகல்கின்றிலையோ. (௭௮)

மனநீள்மயலாரழலாய்வளையத்
தனியேயுழல்வேனுயிர்தானனையா
யெனநாயகனார்வரவேயினிநீ
கனைவாருதிமேலெழுவாய்கதிரே.
வினையாமிருளேவெடியாயெனவே
யனமானடையாளமிழ்ந்தேயனையா
ணினையாவுருகாநெடியோனெனவே
மனமோமயலாலயர்வேலையின்வாய். (அ௦)
உருவாயருவாயொளியாயெழுமா
ளிநாரணனாரமுதேயனையா
டிரிவோடனையாள்மயல்சேர்செயலால்
மருவார்மலர்மேல்லணைமேல்மருவார். (அக)
மலர்வாளியினால்மதனேபொழிவா
னலையோகடலோவமராதொலியுங்
கலையோமதியோகனலேதருமால்
சிலைநேர்நுதலாளணைசேர்கிலளால். (அஉ)
படிவானிறையப்படர்வாய்திமிரக்
கொடியாய்விடிவாய்கொடியாகியவேல்
விடைமேகலையேல்விடவெண்டரள
வடமேபுனைமாமுலையாள்வரவே. (அங)
புயலோகுழலாள்பொலிவானுதலாள்
குயிலோமொழியாள்கொடியாமிடையா
ளயிலோவிழியாடனையானணுகக்
கயலார்கடல்மேல்வருவாய்கதிரோ. (அச)
குவிமாமுலையாய்மொழிகோகிலமே
துவர்வாயனமேதுடியாமிடையாய்
புவிநேரமிழ்தேபுணராயெனவே
யிவையேமொழிவானயருணெழவே. (அரு)
கடலேழுடநீள்கனகக்கிரிசேர்
படிவான்முதலாயபராபரனுந்
அடிநேரிடையாகியதூய்மொழியு
மிடராமயலெய்திடுமெல்லியின்வாய். (அசு)

வேறு. மலையினையேந்தியவாசுதேவனார்
சிலையுறுநுதலியைச்சேர்வதின்றென
அலையுறுகடலெனப்பேரியார்த்திடப்
நலனுறவெழுந்தனர்நகருள்ளாரரோ. (அஎ)

(துவாரகாவதிப்படலமுற்றிற்று. ஆ_படலம் எஅ-க்கு திருவிருத்தம் [illegible].)

முதற்புத்தகம் முடிந்தது.